D
12.11, 31.N68
31.N69. 13
2

வெளியீடு 9—12—1968]
Issued— 9—12—1968]

# தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

*திங்கட்கிழமை, 1968 மார்ச் 25*

Monday, 25th March 1968

தொகுதி XIII எண் 1

**Volume XIII—No. 1**

©
தமிழக அரசு
1969
©
GOVERNMENT OF MADRAS
1969

*சட்டப் பேரவைத் துறை*
*சென்னை-9*
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை. 50 காசுகள்]
**Price, 50 Paise]**

61442

# Index to Tamil Nadu Legislative Assembly Debates

THIRD SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

**25th, 26th, 27th, 28th and 30th March 1968.**

**Volume XIII- Nos. I to 5.**

TABLE OF CONTENTS.

*Monday, 25th March* 1968.


| | Pages |
|---|---|
| I Questions and Answers ... ... ... ... | 1–35 |
| II Calling Attention: | |
| Ownership of the Island 'Katcha Theevu' ... | 35–36 |
| III Presentation of Reports : | |
| (1) Report of the Committee of Privileges on alleged breach of privilege against Thiru V. George ... ... ... ... | 36 |
| (2) Policy Note on Madras Dairy and Milk Project, 1968–69 ... ... ... ... | 40 |
| IV Final Supplementary Statement of Expenditure for 1967–68—Presentation ... ... | 36–39 |
| V Voting on Demands for Grants 1968–69 —*cont.* | |
| Demand No. 8—Head of State, Ministers and Headquarters Staff ... ... ... | 39–132 |
| Demand No. 6—State Legislature ... ... | 39–132 |
| VI Papers laid on the Table of the House ... ... | 132–133 |

*Tuesday, 26th March 1968.*


| | PAGES |
|---|---|
| I Questions and Answers ... ... ... ... | 155–177 |
| II Statement under Rule 82 by the Chief Minister *re* clash between State Transport workers and students ... ... ... ... ... | 177–181 |
| III Adjournment Motion *re*: Students—Bus Transport workers clash ... ... ... ... | 181–183 |
| IV Calling Attention: | |
| Damage caused to paddy crops by birds in Tiruthuraipoondi area ... ... ... | 183–184 |
| V Government Motion— | |
| Report of the Privileges Committee *re*: ... alleged breach of privilege against the Member, Thiru V. George ... ... ... | 184–185 |
| VI Voting on Demands for Grants for 1969-70—cont.— | |
| Demand No. 9—District Administration and Miscellaneous ... ... ... | 185–230 |
| Demand No. 7—Elections ... ... ... | |
| Demand No. 32—Pensions .. | |
| Demand No. 36—Other Miscellaneous Compensations and Assignments ... | |
| Demand No. 45—Commuted Value of Pensions | |
| Demand No. 47—Loans and Advances by the State Government ... ... ... ... | |
| Demand No. 4—Stamps Administration | |
| Demand No. 37—Compensation to Zamindars | |
| Demand No. 21—Cinchona ... ... ... | |
| Demand No. 5—Registration Department ... | |
| Demand No. 10—Administration of Justice ... | |
| Demand No. 11—Jails ... ... ... | |
| Demand No. 22—Khadi ... ... ... | |
| VII Announcement— | |
| The Madras Appropriation (No. 2) Bill, 1968. | 230 |
| VIII Government Bill: | |
| The Madras Appropriation (No. 2) Bill, 1968 | 230–231 |
| IX Papers laid on the Table of the House ... ... | 231–232 |




*Wednesday, 27th March 1968*


| | PAGES |
|---|---|
| I Questions and Answers ... ... ... ... | 233–275 |
| II Calling Attention: | |
| (1) Postponement of recovery of loans in Tiruchirappalli district ... ... ... | 276 |
| (2) Remission of land revenue to and postponement of recovery of loan from agriculturists of Pattukkottai taluk ... .. | 276–278 |
| III Final Supplementary Statement of Expenditure for 1967-68—General Discussion ... ... | 278–320 |
| IV. Voting on final Supplementary Demands for Grants for 1967-68: | |
| Demand No. 1—Land Revenue Department. | 321 |
| Demand No. 2—Motor Vehicles Act—Administration ... ... ... ... | 321 |
| Demand No. 3—General Sales Tax and Other Taxes and Duties—Administration ... | 322 |
| Demand No. 5—Registration Department ... | 322 |
| Demand No. 6—State Legislature ... | 322 |
| Demand No. 8—Head of State, Ministers and Headquarters Staff ... ... ... ... | 322 |
| Demand No. 9—District Administration and Miscellaneous ... ... ... ... | 322 |
| Demand No. 10—Administration of Justice. | 323 |
| Demand No. 11—Jails. ... ... ... | 323 |
| Demand No. 12—Police. ... ... ... | 323 |
| Demand No. 13—Education. ... ... | 323 |
| Demand No. 14—Medical. ... ... ... | 324 |
| Demand No. 15—Public Health. ... ... | 324 |
| Demand No. 16—Agriculture. ... ... | 324 |
| Demand No. 17—Fisheries. ... ... ... | 324 |
| Demand No. 18—Animal Husbandry. ... | 325 |
| Demand No. 19—Co-operation. ... ... | 325 |
| Demand No. 21—Cinchona. ... ... ... | 325 |
| Demand No. 23—Community Development Projects, etc. ... ... ... ... | 325 |
| Demand No. 26—Irrigation. ... ... | 325 |
| Demand No. 27—Public Works—Works. ... | 326 |

*Wednesday, 27th March* 1968—*cont.*


PAGES

Voting on final Supplementary, Demands for Grants for 1967–68—*cont.*

Demand No. 28—Public Works—Establishment and Tools and Plant ... ... 326

Demand No. 29—Public Works—Grants-in-aid 326

Demand No. 30—Road Transport Schemes. 326

Demand No. 32—Pensions ... ... ... 327

Demand No. 33—Miscellaneous ... ... 327

Demand No. 34—Stationery and Printing. 327

Demand No. 36—Other Miscellaneous Compensations and Assignments. ... ... 327

Demand No. 40—Capital Outlay on Industrial Development ... ... ... ... 327

Demand No. 41—Capital Outlay on Irrigation 328

Demand No. 42—Capital Outlay on Public Works ... ... ... ... ... ... 328

Demand No. 45—Commuted Value of Pensions 328

Demand No. 46—Capital Outlay on Schemes of Government Trading ... ... ... 328

Demand No. 47—Loans and Advances by the State Government ... ... ... 329

V Announcement:

The Madras Appropriation (No. 3) Bill, 1968 329

VI Government Bill:

The Madras Appropriation (No. 3) Bill, 1968 329

VII Papers laid on the Table of the House ... ... 330–332


*Thursday, 28th March* 1968.


I Questions and Answers ... ... ... ... 373–429

II Points of Order:

(1) Intimation of absence of Speaker ... 429–432

(2) Suppression of facts in the statement made by the Chief Minister on Students-Bus Transport Workers clash ... ... 433–438

(3) Information *re* Chief Minister's visit to America ... ... ... ... 453–455

(4) Appointment of Judge for Judicial enquiry into students—bus transport workers clash ... ... ... ... 454




*Thursday, 28th March* 1968—cont.


PAGES

III Adjournment Motions:

(1) Clash in Padrivedu Meldarpakkam in Chingleput district ... ... ... 438–439

(2) Procurement in Ambasamudram taluk ... 439–440

(3) Failure of crops due to adverse seasonal conditions in Nambiyur Panchayat area in Gobichettipalayam taluk ... ... 440–441

(4) Fire outbreak in Harijan houses in Vadugakudi village in Nannilam taluk ... 441

(5) Closure and retrenchment of workers in Dharapuram Co-operative Spinning Mills ... ... ... ... ... 441–442

(6) Treatment meted out to subordinates in Collector's Office, Chingleput district 442–443

(7) Strike by House Surgeons and Medical Students ... ... ... ... ... 443–444

(8) Law and order situation in Madras City 444–451

(9) Students—Bus transport workers clash ... 451–453

IV Government Motion—

Suspension of Rule 41 (3) ... ... ... 455–458

V Calling Attention—

(1) Flood relief to agriculturists in Thanjavur district ... ... ... 455–458

(2) Collection of loans under Soil Conservation schemes in North Arcot district ... ... 458–459

VI Government Bills—

(1) The Madras Appropriation (No. 2) Bill, 1968 ... ... ... ... 459–497

(2) The Madras Appropriation (No. 3) Bill, 1968 ... ... ... ... 498

VII Papers laid on the Table of the House ... 498–503


*Saturday, 30th March* 1968.


I Questions and Answers ... ... ... 505–536

II Points of Order—

(1) Announcement *re* portions expunged from Proceedings ... ... ... ... 536–539 542

(2) Scope of discussion matters pending judicial decision ... ... ... 559–563

*Saturday, 30th March 1968*—cont.

PAGES

III Statements by Chief Minister—
(1) Students-Bus Transport Workers clash ... 548–549
(2) Opening of sick and closed textile mills ... 549–550
(3) Strike by House Surgeons and Assistant Surgeons ... ... ... ... 550–553

IV Privilege Matters—
(1) Statement of Commissioner of Police in 'Nava Mani' *re* : Students-Bus Transport Workers clash ... ... ... ... 553–555
(2) Misreporting in 'Malai Mani' *re* : proceedings of the House ... ... 555–556
(3) Publication of a Member's speech in 'Nava Sakthi' ... ... ... 556
(4) Leaflet casting reflection on the Speaker of the House. ... ... ... 556
(5) Publication in 'Malai Mani' commenting on a Member's demand for calling a meeting of the House ... ... ... 557
(6) Publication of bit notice by Avinashi Pulse Growers' Association ... ... 557–558
(7) Notification by Chief Secretary restricting entry into Fort St. George ... ... ... 558
(8) Press report about the Speaker ... ... 558–559
(9) Privilege issue against Information Minister 569
(10) Privilege issue against the Speaker ... 559

V Adjournment Motions:
(1) Anti-social elements trying to prevent maintenance of peace after Students-Bus transport workers clash in the City ... ... 564–569
(2) Strike by House Surgeons and Doctors in City and mofussil ... ... ... ... 569–570
(3) Strike by Doctors in City ... ... 570–571
(4) Fixing fair price for chillies and cotton in Tirunelveli and Ramanathapuram districts 571–572
(5) Non-payment of wages and ration rice to workers of Janakiram Spinning Mills, Rajapalayam ... ... ... ... 572–573
(6) Damage to Medical College (Men's) Hostel and loss, etc., in Veterinary College and C.N.T. Institute. ... ... ... ... 573–575



*Saturday, 30th March 1968*—*Cont.*

PAGES

VI Government Motions:
(1) Suspension of Rule 41 (3) ... ... ... 576
(2) Association of Council Members with the Committee on Estimates ... ... 609
(3) Amendment to Madras Land Reforms (Disposal of Surplus) Land Rules, 1965 618

VII. Calling Attention:
(1) Relief to weavers of Tirunelveli and Ramanathapuram districts ... ... ... 576–580
(2) Cyclone-relief in Thanjavur, Ramanathapuram and Rameswaram areas ... ... 580–584
(3) Strike by employees of Annamalai University Hostel ... ... ... ... 584–586
(4) Failure of rains, postponement of kist and loan instalments in Tirunelveli district ... 586–587
(5) Re-opening of Amaravathi Sugar Mills and stopping collection of penalty ... ... 588–590
(6) Inadequate supply of water to double-crop lands in Thanjavur district ... ... 590–591
(7) Compensation to victims of lorry accident in Kaveripuram of Mettur Constituency 592–594
(8) Rise in price of rice in scarcity taluks of North Arcot district ... ... ... 594–596
(9) Drinking-water scarcity in Ootacamund 597–598
(10) Cholera in Tiruchirappalli ... ... ... 598–599
(11) Frequent stoppage of water supply in Madurai district ... ... ... ... 599–600
(12) Food poisoning and treatment of victims in Karaikudi Municipal area ... ... 600–602

VIII Presentation of Reports:
(1) Report of the Committee on Public Accounts on the Audit Reports of the accounts of the Madras State Electricity Board for 1962–63 to 1964–65 ... ... 602
(2) Fourth report of the Committee on Estimates on Fisheries ... ... ... 602
(3) Second report of the Committee on Government Assurances ... ... ... 602
(4) Second report of the Committee on Subordinate Legislation ... ... ... ... 602
(5) Interim report of the Committee of Privileges on the privilege against Thiru T. Martin ... ... ... ... 602

*Saturday, 30th March 1968—cont.*

PAGES

IX Privilege Motion:

Recommendation of the Committee of Privileges *re*: privilege matter against Thiru T. Martin ... ... ... ... 603

X Announcements:

(1) Nomination to Business Advisory Committee ... ... ... ... ... 603

(2) Nomination to Committee on Rules ... 604

(3) Nomination to Committee on Subordinate Legislation ... ... ... ... 604–605

(4) Election to Committee of Privileges ... 605

(5) Election to House Committee ... ... 605–606

(6) Nomination to Committee on Government Assurances ... ... ... ... 606–607

(7) Election to Committee on Public Accounts 607–608

(8) Election to Committee on Estimates ... 608–609

(9) The Madras Inams (Supplementary) Amendment Bill, 1968 (L.A. Bill No. 4 of 1968) ... ... ... ... ... 611–613

(10) The Madras City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1968 (L.A. Bill No. 5 of 1968 ... ... ... ... 613

XI Government Bills:

(1) The Madras General Sales Tax (Second Amendment) Bill, 1968 (L.A. Bill No. 2 of 1968) ... ... ... ... ... 609–611

(2) The Madras Inams (Supplementary) Amendment Bill 1968 (L.A. Bill No. 4 of 1968) ... ... ... ... ... 612

(3) The Madras City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1968 (L.A. Bill No. 5 of 1968 ... ... ... ... 613–618

XII Government Resolution:

Increase of the guarantee given by Government in respect of debentures issued by the Madras Co-operative Central Land Mortgage Bank, Limited ... .. ... 618–619

XIII Papers laid on the Table of the House ... ... 619–621



## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading "Bill(s)".

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., "Committee(s)", "Council(s)", "Corporation(s)", etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

| | |
|---|---|
| A.M./Ad. Motion | ... Adjournment Motion |
| Ann. | ... Announcement |
| B.O.H. | ... Business of the House |
| C.A. | ... Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. | ... Calling Attention Statement |
| Consid. | ... Consideration stage of a Bill. This stage includes: (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. (iii) Amendment to circulate. |

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

| | | |
|---|---|---|
| Consid. Cl. | ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. | ... | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | ... | Demands for Supplementary Grants. |
| G.A. | ... | Governor's Address. |
| G.D. | ... | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. | ... | Half-hour Discussion. |
| Int. | ... | Introduction stage of a Bill. |
| L.A. | ... | Legislative Assembly. |
| L.C. | ... | Legislative Council. |
| M. | ... | Motion. |
| P.M. | ... | Privilege Motion. |
| R/Res. | ... | Resolution. |
| St. | ... | Statement. |

## தமிழக அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழக ஆளுநர்.

### சர்தார் உஜ்ஜல் சிங்.

1. மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை (முதல் அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : பொது, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட ரெவின்யூ அதிகாரிகள், துணைக் கலெக்டர்கள் ஆகியோர் குறித்த அலுவல்கள், நிதி, திட்டமிடுதல், போலீஸ், தேர்தல்கள், மதுவிலக்கு, வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், உணவு உற்பத்தி.

2. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (கல்வி, தொழில் அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : கல்வி (தொழிற் கல்வி உட்பட), ஆட்சிமொழி, தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, மின்சாரம், வேலை வாய்ப்பும், பயிற்சி அளித்தலும் கம்பெனிகள், சமய அறக் கட்டளைகளும், சட்டப் பேரவையும்.

3. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (பொதுப்பணி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: பொதுப்பணிகள், சிறப்புச் சிறு பாசன திட்ட வேலைகள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, துறைமுகங்கள்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் (உணவு வருவாய்த் துறை அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : உணவு, வரி வருவாய், வருவாய்த்துறைக் கழகம், மாவட்ட ரெவின்யூ நிறுவனங்கள், வாணிக வரிகள்.

5. மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி (விவசாய அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்வளம், காடுகள், சிங்கோனா.

6. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நல, செய்தி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: அரிசன நலன், செய்தி-விளம்பரத் துறை, எழுது-பொருள் அச்சுத் துறை, அரசாங்க அச்சகம், சினிமாப் படங்கள் சட்டம், மகளிர்-சிறுவர் நலன்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (சட்டம், கூட்டுறவு அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : சட்டம், கூட்டுறவு, நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள், பத்திரப் பதிவு, சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், பயண அனுமதிச் சீட்டுகள், சீட்டு நிதிகள் சட்டம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்) குறித்த சட்டம், எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், தொழிலாளர், வீட்டுவசதி.

8. **மாண்புமிகு** திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (சுகாதார அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : பொதுச் சுகாதாரம், மருந்துகள், இடவசதிக் கட்டுப்பாடு, அனாதை இல்லங்கள், இரவலர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, முகம்மதியர் அறக் கட்டளைகள், சரக்குகளின் விலைகள், வழங்கல் குறித்த சட்டம்.

9. **மாண்புமிகு** திரு. மா. முத்துசாமி (உள்ளாட்சி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, பஞ்சாயத்துகள், பூதான, கிராமதான இயக்கம், கதர் கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், முன்னாள் இராணுவ வீரர்கள்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF MADRAS

### Governor of Madras

SARDAR UJJAL SINGH

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. THIRU C. N. ANNADURAI (*Chief **Minister***) : *Minister in-charge of Public, General Administration, **Matters** relating to Indian Civil Service and Indian **Administrative** Service Officers, District Revenue Officers and Deputy Collectors. Finance, Planning, Police, Elections, Prohibition, Indian Overseas, Refugees and Evacuees and Food production.*

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN (*Minister for Education and Industries*) : *Minister in-charge of Education (including Technical Education), Official Language, Industries, Textiles, Yarn, Handlooms, Mines and Minerals, Iron and Steel Control, Electricity, Employment and Training, Companies, Religious Endowment and Legislature.*

3. THE HON. THIRU M. KARUNANIDHI (*Minister for Public Works*) : *Minister in-charge of Public Works, Minor Irrigation including S.M.I.P. Works, Highways, Transport, Nationalised Transport and Ports.*

4. THE HON. THIRU K. A. MATHIALAGAN (*Minister for Food and Revenue*) : *Minister in-charge of Food, Revenue, Board of Revenue, District Revenue Establishments and Commercial Taxes.*

5. THE HON. THIRU A. GOVINDASAMY (*Minister for Agriculture*) : *Minister in-charge of Agriculture, Animal Husbandry, Fisheries, Forests and Cinchona.*

6. THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU (*Minister for Harijan Welfare and Information*) : *Minister in-charge of Harijan Welfare, Information and Publicity, Stationery and Printing, Government Press, Cinematograph Act, Women's and Children's Welfare.*

7. THE HON. THIRU S. MADHAVAN (*Minister for Law and Co-operation*) : *Minister in-charge of Law, Co-operation, Courts, Prisons, Registration, Approved Schools and Vigilance Services, Passports, Legislation on Chits, Legislation on Money Lending (Rural Indebtedness), Legislation on Weights and Measures, Labour and Housing.*

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (*Minister for Public Health*) : *Minister in-charge of Public Health, Medicine, Accommodation Control, Orphanages, Beggars, Newsprint Control, wakf, Prices and Supplies of Goods Act.*

9. THE HON. THIRU M. MUTHUSWAMY (*Minister for Local Administration*) : *Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Bhoodan and Gramdan, Khadi and Village Industries, Rural Industries Project and Ex-servicemen.*

## தமிழக சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. சி. பா .ஆதித்தனார்

### பேரவைத் துணைத் தலைவர்

புலவர் கா. கோவிந்தன்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. வி. எஸ். கோவிந்தராசன்

திரு. பெ. மலைச்சாமி

திரு. ந. தருமலிங்கம்

திரு. எஸ். முருகையன்

திரு. வை. சுவாமிநாதன்

திரு. வி. கே. கோதண்டராமன்

### சட்டப் பேரவைச் செயலாளர்

திரு.. கா. அ. நடராசன், எம்.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள்

திரு. கே. எம். நாகராஜன், பி.ஏ., எல்எல்.பி.

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்எல்.பி.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி.)

திரு. ஜி. இராகவன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழக சட்டப் பேரவை

### உறுப்பினர்களின் (ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். | இராணிப்பேட்டை. |
| 2 | ஆதித்தனார், சி.பா. (பேரவைத் தலைவர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்னிராஜு, எஸ். | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, து. ப. (அரசாங்க தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்). | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. | கடலாடி (செ. வ.). |
| 8 | ஆனந்தன், மு. | ரிஷிவந்தியம் (செ.வ.). |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. | ஸ்ரீவில்லிப்புத்தூர் (செ.வ.) |
| 10 | அண்ணாமலை, சி. வி. எம். | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி.டி. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். | சோளிங்கபுரம். |
| 13 | அரங்கண்ணல், இராம. | மயிலாப்பூர் (சென்னை மாநகரம்). |
| 14 | அரசு, அ. பொ. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ். | வீரபாண்டி. |
| 17 | ஆலடி அருணா | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, எ.வி.பி. | எழும்பூர் (சென்னை மாநகரம்). |
| 19 | ஆதிமூலம், டி.எஸ். | சேரன்மகாதேவி. |
| 20 | பாலன், எம்.சி. | நாகர்கோவில். |
| 21 | பாலகிருஷ்ணன், எ.கோ. | வானூர் (செ.வ.). |
| 22 | பலராமன், இல. | கணியம்பாடி. |
| 23 | பாலசுப்பிரமணியன், செ. | பெருந்துறை. |
| 24 | பாலசுப்பிரமணியன், எ. | திண்டுக்கல். |
| 25 | பெள்ளி கௌடர், ஜெ. | கூனூர். |
| 26 | பாரதி மோகன், கோ. | குத்தாலம். |
| 27 | பூபதி, எம். | கோயம்புத்தூர்-கிழக்கு. |
| 28 | பூவராகன், கோ. | விருத்தாசலம். |
| 29 | போஜன், கே. | உதகமண்டலம். |
| 30 | சீமைச்சாமி, கரு. | மானாமதுரை. |
| 31 | சிதம்பரநாத நாடார், எ. | கொளச்சல். |
| 32 | சின்னராஜீ, சி. கே. | திருப்பத்தூர். |
| 33 | சின்னச்சாமி, மு. | ஈரோடு. |
| 34 | சின்னசாமி, வி. | ஏர்க்காடு (ஆ.வா.). |
| 35 | சித்தன், என். எஸ்.வி. | திருமங்கலம். |
| 36 | தனுஷ்கோடி, பி.எஸ். | திருவாரூர் (செ.வ.). |
| 37 | தருமலிங்கம், ந. | திருத்துறைப்பூண்டி. |
| 38 | துரைராஜ், சு.ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 39 | துரைபாண்டியன், என். | நாங்குனேரி. |
| 40 | துரைராஜ், பி. | சங்கரன்கோவில் (செ.வ.). |
| 41 | துரைசாமி, சு. | திருப்பூர். |
| 42 | துரையரசன், ஆ. | அறந்தாங்கி. |
| 43 | எட்மண்ட் பெர்னாண்டோ, ஜி. ஆர். | திருச்செந்தூர். |
| 44 | இளம்வழுதி, இரெ. | கடலூர். |
| 45 | எல்லப்பன், பி. எஸ். | அச்சரப்பாக்கம் (செ. வ.). |
| 46 | கணேசன், எல். | ஒரத்தநாடு. |
| 47 | கணேசன், எஸ். | செம்பனார்கோவில். |
| 48 | ஜார்ஜ், வ. | பத்மநாபபுரம். |
| 49 | ஞானசம்பந்தன், கோ. இர. | நாகப்பட்டினம். |
| 50 | கோமதிசங்கர தீட்சிதர், க. | அம்பாசமுத்திரம். |
| 51 | கோபால், எம். | குன்றத்தூர் (செ. வ.). |
| 52 | கோவிந்தன், கே. ஆர். | தாரமங்கலம். |
| 53 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் துணைத் தலைவர்). | செய்யாறு. |
| 54 | கோவிந்தராசன், சொ. | மதுரை சென்ட்ரல். |
| 55 | கோவிந்தராசன், சி. | நெல்லிக்குப்பம். |
| 56 | கோவிந்தராகன், வி. எஸ். | புரசவாக்கம் (சென்னை மாநகரம்). |
| 57 | கோவிந்தராசுலு, கே. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 58 | கோவிந்தராசன், ஆ. | புவனகிரி. |
| 59 | கோவிந்தசாமி, எ. (அமைச்சர்). | முகையூர். |
| 60 | ஹபிபுல்லா பேக், டாக்டர் | ஹார்பர் (சென்னை மாநகரம்). |
| 61 | ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |
| 62 | இராசரத்தினம், டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 63 | ஜேம்ஸ், ஜே. | திருவட்டார். |
| 64 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. | மதுரை-கிழக்கு. |
| 65 | ஜயராஜ், பி. | நன்னிலம் (செ. வ.). |
| 66 | ஜயராமன், கி. | சேலம்-1. |
| 67 | ஜெயராமன், பி. | பேர்ணாம்பட்டு (செ. வ.) |
| 68 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. | ஜெயங்கொண்டம் (செ.வ.). |
| 69 | கனகசபை, ரா. | சிதம்பரம். |
| 70 | கந்தசாமி கவுண்டர், செ. | அரவக்குறிச்சி. |
| 71 | கந்தசாமி, எம். | குளித்தலை. |
| 72 | கந்தசாமி படையாச்சி, மு. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 73 | கண்ணன், எம். ஆர். | பேசின் பிரிட்ஜ் (சென்னை மாநகரம்). |
| 74 | கண்ணப்பன், எம். | கிணத்துக்கடவு. |

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 75 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |
| 76 | கருணாநிதி, மு. (அமைச்சர்) .. .. | சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்). |
| 77 | கருப்பையா, ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ. வ.). |
| 78 | கருப்பையா, ஆர். .. .. .. | அரியலூர். |
| 79 | கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்). | சத்தியமங்கலம். |
| 80 | காசிராமன், நா. .. .. .. | கும்பகோணம். |
| 81 | கேசவலு, தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 82 | கிட்டப்பா, என். .. .. .. | மாயூரம். |
| 83 | கொளத்தூர் கோதண்டம் .. .. | மதுராந்தகம். |
| 84 | கோதண்டராமன், வி. கே. .. .. | குடியாத்தம். |
| 85 | கோதண்டராமையா, கே. எஸ். .. | உத்தனப்பள்ளி. |
| 86 | கிருஷ்ணமூர்த்தி, கு. .. .. .. | பழனி (செ.வ.). |
| 87 | கிருஷ்ணமூர்த்தி, சி. .. .. .. | கொடவாசல். |
| 88 | கிருஷ்ணமூர்த்தி, மு. .. .. .. | பேராவூரணி. |
| 89 | கிருஷ்ணன், அ. .. .. .. .. | மங்களூர் (செ.வ.). |
| 90 | கிருஷ்ணன், ஈ. ஆர். .. .. .. | சேலம்-2. |
| 91 | கிருட்டிணன், நா. .. .. .. | காஞ்சீபுரம். |
| 92 | கிருஷ்ணசாமி கவுண்டர், ரா. .. .. | அவிநாசி. |
| 93 | குமாரசாமி, கே. என். .. .. .. | பல்லடம். |
| 94 | குப்பம்மாள், திருமதி சு. .. .. | போளூர். |
| 95 | மாதவன், செ. (அமைச்சர்) .. .. | திருப்பத்தூர். |
| 96 | மகாதேவன், ப. .. .. .. | கன்யாகுமரி. |
| 97 | மலைச்சாமி, பெ. .. .. .. .. | மேலூர். |
| 98 | மலைக்கண்ணன், வீ. .. .. .. | இளையாங்குடி. |
| 99 | மணி, கே.பி.எஸ். .. .. .. | சீர்காழி (செ.வ.). |
| 100 | மணி, எம். எஸ். .. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 101 | மணி, வி. எஸ்.எஸ். .. .. .. | ஆத்தூர். |
| 102 | மாணிக்கவாசகம், இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 103 | மணியன், பி.எஸ். .. .. .. | சோழவந்தான். |
| 104 | மாரிமுத்து, அ. .. .. .. .. | ஆடுதுறை. |
| 105 | மாரிமுத்து, ஏ.ஆர். .. .. .. | பட்டுக்கோட்டை. |
| 106 | மாரிமுத்து, மூ. .. .. .. .. | தலைவாசல் (செ.வ.). |
| 107 | மார்டின், டி. .. .. .. .. | சாத்தான்குளம். |
| 108 | மருதாசலம், என். .. .. .. | பேரூர் (செ.வ.). |
| 109 | மதியழகன், கே. ஏ. (அமைச்சர்) .. | ஆயிரம்விளக்கு (சென்னை மாநகரம்). |
| 110 | மெய்யப்பன், சா. .. .. .. | காரைக்குடி. |
| 111 | மேத்தா, எம். .. .. .. .. | பெரியகுளம். |
| 112 | மூக்கையா தேவர், பி.கே. .. .. | உசிலம்பட்டி. |
| 113 | முனுசாமி கௌண்டர், பி.எம். .. | கிருஷ்ணகிரி. |



| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 114 | முனுசாமி, ரா.ரா. .. .. .. | மேல்மலையனூர். |
| 115 | முனியாண்டி, ஏ. .. .. .. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 116 | முனு. ஆதி .. .. .. .. | திருப்போரூர். |
| 117 | முருகையன், புலவர் க. .. .. | திருவையாறு. |
| 118 | முருகேசன், க. .. .. .. .. | பாலக்கோடு. |
| 119 | முருகையன், எஸ். .. .. .. | கலசபாக்கம். |
| 120 | முனுசாமி, செஞ்சி, வெ. .. .. | செஞ்சி. |
| 121 | முத்தையா, கே. கே. .. .. .. | கடலூர். |
| 122 | முத்தையா, மு. .. .. .. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 123 | முத்துலிங்கம், எஸ். .. .. .. | வந்தவாசி (செ.வ.). |
| 124 | முத்துசாமி, பா. க.சி. .. .. .. | பெண்ணாகரம். |
| 125 | முத்துசாமி, மா. (அமைச்சர்) .. .. | நாமக்கல். |
| 126 | முத்துச்செல்வன், பு.செ. .. .. | முசிரி. |
| 127 | நாச்சிமுத்து, நா. .. .. .. | ஒட்டன்சத்திரம். |
| 128 | நாகலிங்கம், பா. .. .. .. | பொன்னேரி (செ.வ.) |
| 129 | நாகசுந்தரம், ஆர். .. .. .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 130 | நல்லசிவன், க. ர. .. .. .. | மொடக்குறிச்சி. |
| 131 | நல்லசாமி, தோ. மு. .. .. .. | கரூர். |
| 132 | நஞ்சன், சி. .. .. .. .. | கூடலூர் (செ.வ.) |
| 133 | நரசிம்மன், ஏ. சி. .. .. .. | ஆரணி. |
| 134 | நாராயணன், இரா. .. .. .. | வரகூர். |
| 135 | நடராசன், மு. க. து. .. .. .. | லால்குடி. |
| 136 | நடராஜன், ஜி. .. .. .. .. | காட்பாடி. |
| 137 | நடராசன், ஈ. எம். .. .. .. | அந்தியூர். |
| 138 | நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர்-அவை முன்னவர்.) | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்). |
| 139 | பச்சையப்பன், எஸ். பி. .. .. | சங்கராபுரம். |
| 140 | பழனி, சி. .. .. .. .. | ஓமலூர் (செ.வ.) |
| 141 | பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம் (செ.வ.) |
| 142 | பழனிவேல் ராஜன் .. .. .. | தேனி. |
| 143 | பன்னீர்செல்வம், எம். .. .. .. | ஆம்பூர் (செ.வ.) |
| 144 | பரமசிவ கவுண்டர், பி. என். .. .. | பொங்களூர். |
| 145 | பரமசிவம், எஸ். .. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 146 | பரிசுத்த நாடார், ஏ. ஒய். எஸ். .. .. | தஞ்சாவூர். |
| 147 | பட்டாபி நாயுடு, ஏ. .. .. .. | காவேரிப்பட்டணம். |
| 148 | பீர் முஹமது, ஹாஜி. ம. மு. .. .. | மேலப்பாளையம். |
| 149 | பெரியசாமி, பெ. .. .. .. | ராசிபுரம். |
| 150 | பெருமாள், ஏ. ஆர். .. .. .. | கரியாப்பட்டி. |
| 151 | பொன்னம்பலம், புலவர் பொ. .. | திருமயம். |
| 152 | பொன்னப்ப நாடார், ஆர். .. .. | விளவங்கோடு. |
| 153 | பொன்னுமலை, தி. .. .. .. | பனமரத்துப்பட்டி. |
| 154 | ராஜா, ஏ. எம். .. .. .. .. | பவானி. |

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர் (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 155 | ராசகோபால், க. மு. | உத்திரமேரூர். |
| 156 | ராஜமன்னர், எஸ். ஏ. | வாணியம்பாடி. |
| 157 | இராசாங்கம், மா. | கம்பம். |
| 158 | ராஜாங்கம், என். | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 159 | ராஜவேலு, டி. ஏ. | திருச்செங்கோடு. |
| 160 | ராமச்சந்திர துரை, ரா. | கந்தர்வக்கோட்டை. |
| 161 | இராமச்சந்திரன், க. ந. | ஆண்டிமடம். |
| 162 | ராமச்சந்திரன், எம். ஜி. | பரங்கிமலை. |
| 163 | இராமச்சந்திரன், எஸ். | பண்ருட்டி. |
| 164 | ராமலிங்கம், எஸ். | ஸ்ரீரங்கம் (செ.வ.) |
| 165 | இராமமூர்த்தி, க. | திண்டிவனம். |
| 166 | இராமன், மு. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 167 | ராமன், ஓ. பி. | மேலூர்-தெற்கு (செ.வ.) |
| 168 | இராமராசன், வ.க. | பவானிசாகர் (செ.வ.) |
| 169 | இராமசாமி, இ. | வால்பாறை (செ.வ.) |
| 170 | ராமசாமி கவுண்டர், கே.எம். | கோபிசெட்டிப்பாளையம். |
| 171 | ராமசாமி நாயுடு, எஸ். | சாத்தூர். |
| 172 | ராமசாமி, எஸ்.ஜே. | அரக்கோணம். |
| 173 | இராசு, ஜே.எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 174 | இரத்தினசபாபதி, மு. | விளாத்திகுளம். |
| 175 | ரெத்தினதேவர், ரா. | முதுகுளத்தூர். |
| 176 | சாதிக் பாட்சா, எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 177 | சகாதேவக் கண்டர், கே. | தண்டராம்பட்டு. |
| 178 | சாமிநாதன், கே.என். | வெள்ளக்கோயில். |
| 179 | சங்கரய்யா, என். | மதுரை—மேற்கு. |
| 180 | சந்தானம், பி.எஸ். | செங்கம் (செ.வ.) |
| 181 | சாரதி, மா.பா. | வேலூர். |
| 182 | சத்தியவாணிமுத்து, டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) (சென்னை மாநகரம்) |
| 183 | சீனிவாசன், பெ. | விருதுநகர். |
| 184 | செல்லக் கவுண்டர், அ. | சேந்தமங்கலம் (ஆ.வா) |
| 185 | சேனுபதி, அ. | காங்கேயம். |
| 186 | சேதுராமன், சி. | சிவகங்கை. |
| 187 | சண்முகம், எம் | விழுப்புரம். |
| 188 | சண்முகசுந்தரம், அ.ப. | பொள்ளாச்சி. |
| 189 | சண்முகம், வி.எஸ் | விராலிமலை. |
| 190 | சிறைமீட்டான், தொ.க. | பரமக்குடி (செ.வ.) |
| 191 | சிவஞானம், ம. பொ. | தியாகராயநகர் (சென்னை மாநகரம்.) |
| 192 | சிவபெருமாள், க.ந. | ஆத்தூர். |
| 193 | சிவசாமி, மு.ச. | தூத்துக்குடி. |
| 194 | சிவசுப்பிரமணியன், எஸ். | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 195 | சோமசுந்தரம், ந. | வலங்கைமான் (செ.வ.) |
| 196 | சௌந்தரபாண்டியன், நா. | ராதாபுரம். |



| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 197 | சௌந்தரபாண்டியன், பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 198 | சௌந்தரராஜ மூப்பனர், இரா. | பாபநாசம். |
| 199 | சுந்தர பாரதி, சௌடி எஸ். | அருப்புக்கோட்டை. |
| 200 | சீனிவாசன், சு. | போடிநாயக்கனூர். |
| 201 | சுவாரெஸ், திருமதி ஏ. | நியமன உறுப்பினர். |
| 202 | சுப்பராஜா, ஏ.அ. | இராஜபாளையம். |
| 203 | சுப்பையா, ஆ.கு. | கோட்டூர் (செ.வ.) |
| 204 | சுப்பையா, கே.வி. | ஆலங்குடி. |
| 205 | சுப்பையா முதலியார், ஏ.ஆர். | கடையநல்லூர். |
| 206 | சுப்பிரமணியம், அ.லெ. | திருநெல்வேலி. |
| 207 | சுப்பிரமணிய கவுண்டர், எம். | தர்மபுரி. |
| 208 | சுப்பிரமணியம், இ.எம். | திருக்கோவிலூர். |
| 209 | சுரேந்திரன், எம். | மேட்டூர். |
| 210 | சுவாமிநாத ஒடையார், த.சி. | மன்னார்குடி. |
| 211 | சுவாமிநாதன், வை. | திருவெறும்பூர். |
| 212 | தம்பி நாயக்கர், ப.ா. | வடமதுரை. |
| 213 | தங்கப்பன், டி. | இராமநாதபுரம். |
| 214 | தவமணி தேவர், வி. | சேடப்பட்டி. |
| 215 | தீர்த்தகிரி, ந. | ஹரூர் (செ.வ.) |
| 216 | தீர்த்தகிரி கவுண்டர், தி. | ஊத்தங்கரை. |
| 217 | திம்மராய கவுண்டர், தி. சி. | நாட்ராம்பள்ளி. |
| 218 | திப்பையா, டி.டி.எஸ். | மேட்டுப்பாளையம். |
| 219 | வடிவேலு, எஸ்.கே. | தொட்டியம். |
| 220 | வரதராஜன், என். | வேடசந்தூர். |
| 221 | வேதாசலம், மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை மாநகரம் |
| 222 | வீரமணி, சி. | சங்கரி (செ.வ.) |
| 223 | வீராசாமி, ந. | ஆர்க்காடு. |
| 224 | வேலப்பன், சி. வே. | கபிலமலை. |
| 225 | வெள்ளத்துரை, ஏ. | வாசுதேவநல்லூர். |
| 226 | வேலுசாமி, பி. | சிங்காநல்லூர். |
| 227 | வெங்கடாசல தேவர், பெ. | வேதாரண்யம். |
| 228 | வெங்கடசாமி, பி. | ஹோசூர். |
| 229 | வேழவேந்தன், கா. | கும்மிடிப்பூண்டி. |
| 230 | விஜய ரகுநாத தொண்டமான், ஆர். | புதுக்கோட்டை. |
| 231 | விஜயராஜ், தா. | திருவண்ணாமலை. |
| 232 | விநாயகம், கே. | திருத்தணி. |
| 233 | விசுவநாதன், செ. கோ. | செங்கற்பட்டு. |
| 234 | வில்லியம், எம். | கிள்ளியூர். |
| 235 | வெற்றிடம் | தென்காசி |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| தொடர் எண். (1) | பெயர். (2) |
|---|---|
| 1 | அண்ணாதுரை, சி. என். (முதலமைச்சர்). |
| 2 | நாராயணசாமி முதலியார், கே. (தலைமை வழக்கறிஞர்), |

# தமிழக சட்டப் பேரவை

*திங்கட்கிழமை, 1968, மார்ச் 25.*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண் 313-லிருந்து எடுத்துக்கொள்ளலாம்.

### விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் மன்றம்

*313 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வணிக வரி Appellate Tribunal -ன் கிளைகள் கோவை, கோவை, திருச்சி, நெல்லை ஆகிய இடங்களில் துவக்கும் செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கோயம்புத்தூரில், விற்பனைவரி மேல்முறையீட்டு நடுவர் மன்றத்தின் கூடுதல் பிரிவு ஒன்று அமைப்பதற்கு ஒப்பளிப்பு வழங்கி, 1967-ம் ஆண்டு, அக்டோபர் திங்களில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளியிலும், திருநெல்வேலியிலும் மேல்முறையீட்டு நடுவர் மன்றக் கூடுதல் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கான செயற் குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது வணிகவரி அப்பலேட் டிரிபுனலில் இன்னும் தீர்ப்பு வழங்கப்படாமல் பல வழக்குகள் இருப்பதனால், மேலும் இவற்றை ஏற்படுத்துவதற்கு இனிமேலாவது அரசாங்கம் முயற்சிக்குமா ? இப்போது ஒரு அதிகாரிதான் இருக்கிறார். மூன்று அதிகாரிகளை நியமிப்பதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மேலும் சில இடங்களில் நிறுவலாம் என்று அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது. முதலிலே சேர்மென் அவர்கள் அப்பலேட் டிரிபுனலை இரண்டு இடங்களில் நிறுவலாம். ஒன்று கோயம்பத்தூரிலும் இன்னொன்று திருச்சியிலும் நிறுவலாம் என்று பரிந்துரை வழங்கினார்கள்.

தற்சமயம் கோயம்பத்தூரில்தான் நிறுவப்பட்டிருக்கிறது. ஆறு மாதங்களிலே திருச்சியிலே நிறுவவேண்டிய அவசியம் இருக்கிறதா என்பதை ஆலோசனை செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம்.

THIRU K. VINAYAKAM : Sir, does the opening of Sales Tax Appellate Tribunal offices in different centres depend upon the volume of cases that are to be decided by the Tribunal or is it because that the offices should be regionally distributed? If so, may I know whether the proposal of the Government to open new offices is justified and whether there are many cases pending? What is the inconvenience experienced by the people in going to the nearby Tribunal?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் ஏராளமான கேஸ்கள், தாவாக்கள் வீழ்ந்துவிட்டன, சென்னையில்மட்டும் இருந்தால் சரியல்ல என்பதல்ல. கோயம்பத்தூரில் நிறுவுவதன் மூலம் திருச்சி, மதுரை, திருநெல்வேலி போன்ற மாவட்டங்கள் அதோடு இணைக்கப்பட்டு, காலதாமதத்தை குறைப்பதற்காகவும் துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கோயம்பத்தூரில் இருக்கும் நடுவர் மன்றத்தைப்போல் திருநெல்வேலியிலும் ஏற்படுத்துவதற்கு இப்போது செயற்குறிப்பு இல்லை. திருச்சியிலே நிறுவலாமா என்பதைப்பற்றிய செயற்குறிப்பு ஆலோசனையில் இருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஏராளமான வழக்குகள் பெண்டிங்காக இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படிச் சொல்லுகிற காரணத்தால், மாவட்டத்திற்கு ஒன்றாக ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்போது அந்த நிலைமையில் அந்த அளவிற்கு வழக்குகள் ஆகிறது என்றால் ரொம்பவும் பலவீனமான நிலைமை இந்த வருவாய்த்துறையில் ஏற்பட்டு விட்டதாகும்.

**திரு. எம். கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, கோயம்பத்தூரில் அப்பலேட் டிரிபுனல் 6 மாதங்களாக இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு உயர் அதிகாரிதான் நியமிக்கப்பட்டிருக்கிறார். கீழுள்ள அதிகாரிகள் இன்னும் நியமிக்கப்படாமல் இருப்பதால் காலதாமதம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகையால் அவர்களை விரைவிலே நியமிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனையை குறிப்பிலே வைத்துக்கொள்ளலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மேல்முறையீடு கழகத்திற்கு முறையீட்டு செய்கிறவர்கள் ' disputed amount of Taxes ' சர்ச்சைக்குறிய



**கோவையில் உணவு பங்கீட்டு கடைகள் சோதனை**

*314 வினு.—**திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாண்புமிகு உணவு வருவாய்துறை அமைச்சர் 1967 மார்ச் மாதத்தில் கோவையில் உள்ள தானிய விநியோக கடைகளுக்குச் சென்று பார்வையிட்டாரா ?

(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(இ) 12—3—1967-ல் நான் கோவைக்குச் சென்றிருந்தபோது, கோவை நகரில் உள்ள அடியிற்கண்ட உணவு தானியப் பங்கீட்டுக் கடைகளைத் திடீரென்று பார்வையிட்டேன். அவ்வமையம் நகர உணவு தானியப் பங்கீட்டு அதிகாரியும் கோவை மாவட்ட உணவு தானியப் பங்கீட்டு அதிகாரியும் என்னுடன் வந்திருந்தனர்.

(1) அருணாசலம், உணவு தானியப் பங்கீட்டுக் கடை, புளியகுளம்.

(2) பழனிசாமி, உணவு தானியப் பங்கீட்டுக் கடை, புளியகுளம்.

(3) பாத்திமா பண்டசாலை உணவு தானியப் பங்கீட்டுக் கடை, பெரிய கடைத்தெரு.

விநிக்கப்பட்டு கடைக்காரர்களால் வைத்து வரப்படும், பதிவேடுகளில் சிலவற்றையும் அரிசியின் தரத்தையும் நான் சோதித்தேன்.

தங்களுக்குரிய பங்கீட்டு உணவுப் பொருள்களை வாங்க அங்கு வந்திருந்தவர்களை, உணவு தானியப் பங்கீட்டுக் கடைகளில் வழங்கப்படும் அரிசியின் அளவு போதுமானதாக உள்ளதா என நான் வினவினேன். அரிசி மட்டுமே வழங்கப்படுவதால் அந்த அளவு தங்களுக்குப் போதவில்லையெனச் சிலர் பதிலிறுத்தனர். உணவுப் பொருள் பங்கீட்டு அட்டை வைத்திருப்பவர்களுக்கும் கோதுமையையும் வழங்க ஏற்பாடு செய்வதாக நான் அவர்களுக்கு உறுதியளித்தேன். சில்லறை விற்பனையாளராகிய திரு. பழனிசாமி வைத்துவந்த இருப்புப் பதிவேடுகள் வைத்துவரப்பட்ட முறையில் இருந்த குறைபாடுகள் சிலவற்றை நான் எடுத்துக் காட்டினேன். பின்னர் பாத்திமா பண்டசாலைக்குச் சென்று பார்வையிட்டேன். உணவு தானியப் பங்கீட்டு அட்டை வைத்திருப்பவர்கள் தங்களுக்குரிய பங்கீட்டு உணவு தானியங்களை வாங்கிய தேதிகளைக் குறிப்பிடும் பதிவேட்டினை சில்லறை விற்பனையாளர் வைத்திருக்கவில்லை. இப் பதிவேட்டினை வைத்து வராததற்காக சில்லறை விற்பனையாளர்மீது நடவடிக்கை எடுக்குமாறு நகர உணவு தானிய பங்கீட்டு அதிகாரிக்கு நான் உத்தரவிட்டேன்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, திடீரென்று அமைச்சர் அவர்கள் அதிகாரிகளோடு தானிய விநியோக கடை

களைப் பார்வையிட்டதாகச் சொன்னார்கள். அப்படி திடீரென்று வரிகளைக் கட்டவேண்டுமென்ற தொல்லைகள் இருக்கின்றன. அப்படியில்லாமல் வேறுதுறைகளில் இருப்பதுபோல சொத்து ஜாமின் வாங்கிக்கொண்டு தொகையைக் கட்டாமல் மேல்முறையீடு செய்வதற்கு வழங்குவதற்கு வழிவகை செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படிப்பட்ட வழிவகை ஏற்கெனவே இருக்கிறது. முறையான நிலைமை இருந்தால் தான் அம்மாதிரி ஸ்டேக்கள் வழங்கப்படுகின்றன.

THIRU K. VINAYAKAM : Sir, whereas this Government is interested in effecting economy in expenditure, whereas there has been here and there unemployment due to the measures being enforced strictly, is it commensurate with the policy of this Government to open more Tribunals—Sales Tax Appellate Tribunals—since the cases that are to be decided in the Sales Tax Appellate Tribunal—are negligible when compared to the cases that are decided at the lower levels like Appellate Authorities?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் நிலைமையிலே இல்லை. ஆயிரக்கணக்கான தாவாக்கள் இருக்கின்றன. அதனால் வழக்குகள் சீக்கிரம் முடிந்தால் அரசாங்கத்திற்குக்கூட நல்லதுதான். ஒருவகையிலே சிக்கனம் என்று சொல்லுகிற நேரத்தில் வருவாய்த்துறை வருமானத்தைப் பெருக்க வாய்ப்புகள் இருக்கின்றன. அவற்றை விரிவாக்கவேண்டிய சாத்தியக்கூறுகளைப் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்பட்டால் அரசாங்கம் இதைப்பற்றி யோசனை செய்யும்.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state whether it will be possible to make the Tribunal function temporarily for some days in Tirunelveli and some days in Ramanathapuram for disposal of cases arising from the respective districts?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படி யோசனை ஒன்றும் இல்லை. திருச்சியிலே இருக்கும் அனுபவத்தையொட்டி திருநெல்வேலியிலும் அமைக்கவேண்டிய சாத்தியக்கூறுகளை அரசாங்கம் உணருகிறவகையில் நிலைமைகள் ஏற்பட்டால் அவற்றை யோசிக்கலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னால் நான் கேட்டபோது அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கவில்லை. ஆகவே இந்தக் கேள்வியை இப்போது கேட்கிறேன். அந்த டிரிபுனலில் ஒருவர்தான் இருக்கிறார். மூன்று பேர்களை நியமிப்பதற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அது இந்தக் கேள்விக்கு சம்பந்தமுடையது அல்ல. தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.



பார்க்கிறபோது எந்த முறையிலே மக்களுக்கு தான்யங்கள் வழங்கப்படுகின்றன, சரியாக வினியோகிக்கப்படுகின்றனவா என்பதையறிய அதிகாரிகள் இல்லாமல் அமைச்சர் மாறுவேடம் போட்டு போவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாறுவேடம் போட வேண்டிய நிலைமை எனக்கோ, இந்த அரசாங்கத்திற்கோ இல்லை. நேராகவே காரியங்களைக் கவனிக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in view of the irregular and unsatisfactory supply of rice in the ration shops in the Hosur taluk and other border areas, the feeling of the people there is that if the Hon. Minister for Food tours there and sees things in person, things there will improve. So, I wish to know from the Hon. Minister whether he will be kind enough to fulfil the wishes of the people there?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I can consider the hon. Member's suggestion, but anyhow that does not arise out of the main question.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** கோவை மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும், உழவு மாடுகளுக்காக வேண்டி விநியோகம் செய்கின்ற குறுணைகளை, குறுணை பர்மிட் என்று வாங்கிக்கொண்டு, அதில் பாதி அரிசியும், பாதி குறுணையும் சேர்த்து, அங்கு கொண்டுபோவதாகவும், அங்கு இம்மாதிரியான கிடங்குகளில் அதைப் பாதி குறுணையுடன் அரிசியும் வைத்திருப்பதாகவும் புகார்கள் ஏதாவது அமைச்சருக்கு வந்ததா? அப்படி வந்திருந்தால், . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா, கோவையில் உள்ள தானிய விநியோகக் கடைகளுக்குச் சென்று பார்வையிட்டதைப் பற்றியது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** குறிப்பிட்ட, தெளிவான குற்றச்சாட்டின் மீது, கேள்விகள் அமையலாம். ஆனால், உறுப்பினர் அவர்கள், புகார்ப் பண்ணையையே வைத்திருக்கிறார் என்று தோன்றுகிறது. நானும் ரொம்ப நாளாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன், ஒன்றையாவது, எங்காவது, 'இந்த ஊரில், இவர் செய்தார், இப்படி எடுத்துக்கொண்டு போனார்' என்று சொல்லுவார்களானால், அரசுக்கும், அதைக் கண்டுபிடிப்பதற்கு வசதியாக இருக்கும். நாட்டுக்கும் நலமாக இருக்கும். ஆனால், ஏதோ எல்லாம் கெட்டுவிட்டது என்று அதிருப்தியாளர்கள் பட்டியலில் இருப்பவர்கள் சொல்வதைப் போல, கேள்விகள் அமைந்திருக்கின்றனவே தவிர, இப்பொழுது கூட, "இந்த ஊரில், இந்த ஆள், இந்த விவகாரத்தில் செய்தார்களே, இதில் அரசாங்கம் தவறி விட்டதே, கவனம் வருகிறதா" என்று கேள்வி கேட்டால், நான் பதில் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும்; இந்த மன்றத்தின் மரபுக்கும் ஒரு பெருமை கொடுத்ததாக இருக்கும்.

[1968 மார்ச் 25

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்: கனம் அமைச்சர் அவர்கள் கடைகளைச் சோதனை செய்யப்போன நேரத்தில், இப்பொழுது கொடுக்கும் ரேஷன் அளவு போதவில்லை என்று முறையிட்டதாகவும், அதற்கு, கோதுமை சேர்த்துக்கொடுக்க ஏற்பாடு செய்வதாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அந்த யோசனை இது வரையில் நிறைவேற்றப்படவில்லை என்பதாகத் தெரிகிறது. ஆகையால், உடனடியாக அந்த அளவு கோதுமையோ அல்லது அரிசியோ அதிகம் சேர்த்துக் கொடுப்பதற்குச் சட்டபூர்வமான ரேஷன் முறை இருக்கும் இடங்களில் இது அவசியம். இல்லையென்றால் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்: தடைகளை மீறி, கள்ளத்தனமாக, சட்டப்பூர்வமான ரேஷன் இருக்கும் இடங்களுக்குக் கொண்டுவந்து, அங்கிருந்து மற்ற இடங்களுக்குக் கொண்டு செல்வதால் ஊழல் ஏற்படுகிறது. அதைத் தவிர்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: உறுப்பினர் அவர்களுடைய யூகம் முற்றிலும் தவறானது. 2—4—1967 முதல் 400 கிராம் கோதுமை கொடுக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 9 லட்சம் கார்டு—ஹோல்டர்ஸ் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதில் இப்பொழுது கொஞ்சம் குறைத்துவிட்டார்கள். இன்றைக்கிருக்கும் நிலை தெரியவில்லை. 400 கிராம் வாரந்தோறும் கொடுக்கப்பட்டு வந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, கோவை நகரத்தைப் போல், வேறு நகரங்களிலும் சோதனையிடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அமைச்சருடைய பொறுப்பு, ரேஷன் கடைகள் எல்லாமே சரியாக நடைபெற வேண்டும் என்பதுதான். அதற்காக அமைச்சரே எல்லா இடங்களிலும் சோதனையிடவேண்டும் என்பதும் இல்லை. சோதனை இடக்கூடாது என்பதும் இல்லை. இவைகள் அடித்தளத்திலிருந்து, ஒழுங்காகவும், சீராகவும், செம்மையாகவும், நடைபெறவேண்டும், என்பதில் மிகவும் துணிவுடனும், மிகுந்த கண்காணிப்புடனும், இந்த அரசு கவனித்துக்கொண்டு வருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: கனம் அமைச்சர் அவர்கள் இப்படி திடீரென்று கடைகளைப் பார்வையிடச் செல்லுவதற்கு முன்னால், எந்த எந்த அதிகாரிகளிடத்தில் அறிவித்தார்கள் எந்த அதிகாரிகளை கூட அழைத்துச் சென்றார்கள் ?



1968 மார்ச் 25]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இது மிகப் பழைய கேள்வியாக இருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பத்தாவது நாளிலேயே, எப்படி நிலைமை சீர்கேடாக இருக்கிறது என்பதை அறிந்துகொள்வதற்காக ஏற்படுத்திக்கொண்ட நடவடிக்கை யாகும். நான் எந்த அதிகாரியையும் அழைக்கவில்லை. நேராகப் புறப்பட்டேன். உணவு தானிய அதிகாரி அவர்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டால், அவர்கள் விவரம் சொல்வதற்கு முடியும், அவர்களிடம் சில விளக்கங்களைக் கேட்கலாம் என்பதற்காக, அவரை என்னுடைய காரில் ஏற்றிக்கொண்டேன். ஆனால், எந்த இடத்திற்கு போகிறேன் என்று அவர்களுக்கே தெரியாது. இன்ன கடை என்றும் சொல்லப்படவில்லை. நான் எங்கே போகிறேன் என்றும் அவருக்குத் தெரியாது. உண்மையான நிலைமைகள் எப்படி இருக்கின்றன என்பதைக் குறித்து விளக்கம் பெறுவதற்காக நானே ஏற்படுத்திக்கொண்ட முயற்சிதான் இது.

திருமதி வி. ப. பழனியம்மாள்: தலைவர் அவர்களே, யுகாதி பண்டிகையை முன்னிட்டு, கிராமங்களில் அரிசி போடப்படுவதாக இருக்கிறது. அதை அப்படியே தொடர்ந்து நீடிக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் இருக்கும் நெருக்கடியான நிலைமை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. சாத்தியமான வகையில், அவைகளைக் கவனிப்பதற்கு அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

திரு. கரு. சீமைச்சாமி: அமைச்சர் அவர்கள் திடீரென்று சோதனை போடும்போது, சில கணக்குகள் சரியாக இல்லை, ஸ்டாக் சரியாக இல்லை என்று சொன்னார்கள். அவர்கள்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நடவடிக்கை எடுத்து, சில ரேஷன்கார்டுகளைப் பதிவு செய்யாமல் இருந்ததற்காக, குறிப்பிட்ட கடைக்காரருக்கு இருபது ரூபாய் அபராதம் போடப்பட்டது என்று தகவல் வந்திருக்கிறது.

திரு. எம். எஸ். மணி: தலைவர் அவர்களே, இந்த அரிசிப் பங்கீட்டோடு கோதுமை மற்றும் உணவுப் பொருள்களும் பல நேரங்களில் விநியோகிக்கப்படுகின்றன. ஆனால், பொது மக்களுக்குத் தெரியாத காரணத்தால், உரிய நேரத்தில் வாங்கிக் கொள்ள முடியாமல் விட்டுவிடுகிறார்கள். அதைப் பொது மக்களுக்கு விநியோகிக்காமல், கடைக்காரர்கள் அதிக விலையில் விற்க வழிவகுப்பதாக இருக்கிறது. ஆகவே, கோதுமை, மற்ற உணவுப் பொருள்கள் கடைகளுக்கு வரும்போது, அதுபற்றி பொதுமக்களுக்கு அந்தந்த டிஸ்ட்ரிக்ட் சப்ளை ஆபீசர் ஓர் அறிக்கை விடுவாரா ?

[1968 மார்ச் 25

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அது சம்பந்தமாக யோசனையை மேற்கொண்டு, இப்போதே அப்படிப்பட்ட அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. இன்னும் நல்ல விளம்பரமான முறையில் கடைக்காரர்களே கூட, இவை கொடுக்கப்படுகின்ற நிலைமைகளை விளக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

திரு. தா. விஜயராஜ்: சர்ப்ளஸ் டிஸ்ட்ரிக்ட் என்று சொல்லும்படியான வடாற்காடு மாவட்டத்தில் என்னுடைய பகுதியில் இன்றையதினம் படி அரிசி இரண்டு ரூபாய்க்கு விற்கிறது. அங்கு உடனடியாக அமைச்சர் அவர்கள் திடீர் விஜயம் செய்து ஆவன செய்வார்களா? காரணம், நேற்று படி அரிசி 90 காசுக்கு விற்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திடீர் விஜயம் செய்து, அதற்கு ஆவன செய்ய அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கனம் உறுப்பினர் திரு. விஜயராஜ் அவர்களுடைய கருத்து முழுவதையுமே ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படி இப்பொழுது விற்கிறது என்று சொல்லுவார்களானால், அப்படி இருக்குமா என்பது, நான் ஒத்துக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது. நான் நேற்று சொன்னது அவர்களுக்கே கூடத் தெரியும். சென்ற ஆண்டு மே மாதம் 15-ந் தேதி சென்னை நகரத்திலும் கோயம்புத்தூர் நகரத்திலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுப்பது என்று தீர்மானம் செய்தோம். அதற்குள்ளாக திருவண்ணாமலையில் இருக்கும் முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தோழர்கள், அங்கு விலை மிகவும் குறைவாக இருப்பதையொட்டி, அங்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடவேண்டும் என்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை அழைத்து அங்கு ஒரு விழா ஏற்பாடு செய்வதாக இருந்தார்கள். அந்த விழாவுக்கு ஏற்பாடு செய்யும் நேரத்திலேயே, நாம் ஒரு படி அரிசியை ஒரு ரூபாய்க்கு கொடுக்கலாமா என்று கருதிக்கொண்டிருந்த நேரத்தில், உள்ளூரில், வெளிச் சந்தைகளில் விலை 90 காசு ஆகிவிட்டது. அந்த அளவுக்குத்தான் அங்கு நிலைமைகள் இருக்கின்றன. அவர்கள் இரண்டு ரூபாய் என்று சொல்வது அவ்வளவு சரியானதல்ல. அது தவறான விவரம் என்றுதான் நான் கருதுகிறேன். இருந்தாலும், அதுபற்றிய விவரங்களை என்னால் விரிவாக இந்த மன்றத்திற்கு அளிக்க முடியும்.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி: சமீபத்தில் ரேஷன் கார்டுகளும் குடும்பக் கார்டுகளும் சரிபார்க்கப்பட்டதாக அறிகிறேன். அதில் போலி கார்டுகள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: போலி ரேஷன் கார்டுகள் ஏராளமாகக் கண்டுபிடிக்கப்பட்டன. அதுபற்றித் தனிக்கேள்வி போட்டால் சொல்ல முடியும். ஆனால், ஏராளமான, பல்லாயிரக் கணக்கான போலி கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன என்பதை மட்டும் கூற முடியும்.



1968 மார்ச் 25]

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: இப்பொழுது இப்படி திடீர் என்று பார்வையிடப்போன இடங்களில் மில்காரர்கள் ஊற வைத்த அரிசியை, மோசமான நிலையில் கொடுக்கின்றார்களே, அதை அமைச்சர் அவர்கள் கண்டுபிடித்தார்களா? அது அவருடைய கவனத்திற்கு வந்ததா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று கூற முடியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இப்பொழுது உணவு வழங்குத்துறையில் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர்—அசிஸ்டெண்ட் கமிஷனர் ஆஃப் சிவில் சப்ளைஸ் என்று இதற்காகவே இருக்கிறார். க்வாலிடி கண்ட்ரோல் செய்வதற்காகவே இருக்கிறார். அவர்கள் ஏற்கெனவே சோதனை செய்து வருகிறார். அவருடைய மேற்பார்வையில், மாநிலம் முழுவதும் ஏறக்குறைய எண்பதுக்கும் மேற்பட்ட அசிஸ்டென்ட்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களோடுகூட கொஞ்சம் விறுவிறுப்பாகக் கண்காணிக்கவும், அவர்கள் இந்த முறையைச் செய்யவேண்டும் என்பதற்காக ஒரு ஏற்பாடு செய்து, அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, தவறான காரியங்கள் நடைபெறாமல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், ரைஸ்மில்காரர்களுடைய லைசன்சை ஸஸ்பெண்டு பண்ணுவதற்கும், கான்சல் செய்வதற்கும் வேறு மாதிரியான அபராதங்கள் விதிப்பதற்கும் விதிமுறைகள் இருக்கின்றன. அது கலெக்டருடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படலாம். முற்றிலும் ரெவினியூ அதிகாரிக்குச் சம்பந்தம் இல்லாத முறையில் இந்த நிலைமைகள் நடைபெறுகின்றன. நல்ல முன்னேற்றமும், இப்பொழுது சமீப காலத்தில் எடுக்கப்பட்ட இந்த முயற்சியின் விளைவாக, ஏற்பட்டிருக்கிறது.

திரு. என். மருதாசலம்: கோவையில் இரண்டு கடைகளைத்தான் அமைச்சர் அவர்கள் பார்வையிட்டதாகக் கூறினார்கள். மற்றக் கடைகளையும் பார்வையிட்டு அவர்கள் குறைபாடுகளைக் கண்டுபிடிக்க உத்தேசமுண்டா? கோவையில் பெரியநாயக்கன்பாளையம் போகும் வழியில் இரண்டு பக்கங்களிலும் அரிசிக் கடைகள் போட்டு விற்கிறார்களே, அதைக் கண்டு பிடித்து அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்க உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கோவை நகர எல்லைக்குள் வெளிச் சந்தைக்காரர்கள் அரிசி கொண்டு வரக்கூடாது என்ற தடை உத்தரவு இருப்பதால் சாமர்த்தியமாக அங்கு அரிசிக் கடைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அரிசி கிடையவே கிடையாது, பற்றாக்குறை இருக்கிறது என்பதால் இவைகள் அமைந்திருக்கின்றன.

[1968 மார்ச் 25

## எண்ணெய் வித்துக்கள் ஏற்றுமதி

* 315 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எண்ணெய் வித்துக்கள், எண்ணெய் எவ்வளவு நமது ராஜ்யத்திலிருந்து இதர ராஜ்யங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி ஆகிறது ?

(இ) 1957 முதல் 1966 வரை வருடவாரியாக எவ்வளவு ஏற்றுமதி ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) & (இ) : பேரவை முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

* 316 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1960 முதல 1966 வரை நமது ராஜ்யத்தில் கடலக்காய், எள்ளு முதலிய எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி எவ்வளவு ?

(இ) வெளி நாடுகளுக்கும், இதர ராஜ்யங்களுக்கும் ஏற்றுமதி எவ்வளவு ?

(உ) அதே போல் வெளியிலிருந்து இறக்குமதி உண்டா, விவரம் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) முதல் (உ) வரை : பேரவைமுன் விவர அறிக்கை † ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(அ) முதல் (உ) வரை : பேரவைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : விவரங்கள் கிடைக்கவில்லை என்றாலும், ரெயில் மூலம் போனது, கடல் மூலம் போனது இவற்றையெல்லாம் கணக்குப் பார்த்தால் 1965-66-ல் பத்தாயிரக் கணக்கான டன் அளவிற்கு எண்ணெய், கடலை இவை ஏற்றுமதியாகியிருக்கிறது. இவைகள் ஏற்றுமதியாவதால் இங்கு விலை உயர்ந்து இங்குள்ள மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இதைக் குறைக்கக்கூடிய அளவிற்கு அல்லது இவற்றை அனுப்பாமல் நிறுத்தும் அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1965-66 வருஷங்களில் வெளிநாடுகளுக்கு போகக் கூடாது என்ற கட்டுப்பாடு இருந்து கொண்டிருக்கிறது. விலைவாசி இறங்குகிறபோது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது, விலைவாசி உயரும்போது கட்டுப்பாடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

* 134–138-ம் பக்கங்களில் I-ம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

† 139–140-ம் பக்கங்களில் II-ம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1968 மார்ச் 25]

திரு. கே. பி. எஸ். மணி : எண்ணெய் வித்துக்கள் ஏற்றுமதி சம்பந்தப்பட்ட எல்லா நடவடிக்கைகளும் நம் மாநில சர்க்காரின் நிர்வாகப் பொறுப்பிலிருக்கிறதா அல்லது மத்திய சர்க்கார் உத்தரவிற்கிணங்க அனுப்பவேண்டிய சூழ்நிலை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சுங்க எல்லையைத் தாண்டிய பகுதிகளுக்கு மட்டும் அனுப்பும் அதிகாரம் மத்திய அரசாங்கத்தினுடைய பொறுப்பில் இருக்கிறது. மற்றபடி இராஜ்யங்களுக்கு அனுப்ப இராஜ்ய அரசாங்கம் அனுமதிக்கிறது.

THIRU B. VENKATASWAMY : May I know which areas are producing the maximum quantity of gingelly and groundnuts in our State?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வட ஆர்க்காடு, செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு, சேலம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : உற்பத்தியும் குறைந்திருக்கிறது, வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்வதும் குறைந்திருக்கிறது. அப்படியிருக்க 1965-66-லும், அதற்கு முன்னாலும் எவ்வளவு ஏற்றுமதி செய்யப்பட்டதோ அதைவிட இரண்டு மடங்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது என்றால் இதன் விளைவு என்னவது? நாம் கொடுக்கவில்லை என்பதால் அவர்களும் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள் என்று சொன்னால் போதாது. சர்ப்ளஸை நாம் வாங்குகிறோம். டெஃபிஸிட் இருக்கும்போதும் இரண்டு மடங்கு அனுப்புவது சரியா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஏற்றுமதி செய்வதைத் தடுத்திருக்கிறோமே தவிர அதை ஊக்குவிக்கவில்லை.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : இங்கிருந்து ஏற்றுமதியாகும் இந்தப் பொருள்கள் நம் தேவைக்குப் போக மிச்சமானதை ஏற்றுமதி செய்கிறார்களா? அல்லது அவர்கள் தேவைக்கு ஏற்றவாறு ஏற்றுமதி செய்கிறார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: நம் தேவைக்கு அதிகமானதைத்தான் ஏற்றுமதி செய்கிறோம். ஏற்றுமதி செய்தால் விலை உயர்வு கிடைக்கும் என்று விவசாயிகள் ஏற்றுமதி செய்வதை விரும்புகிறார்கள். ஏற்றுமதி செய்வதால் வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் அதிக விலை காரணமாக பாதிக்கப்படுகிறார்கள். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் மணிலா பயிரிடும் விவசாயிகள் ஏற்றுமதி செய்வது நல்லது என்று விரும்புகிறார்கள். பொள்ளாச்சியிலும் ஏற்றுமதி செய்யவேண்டுமென்று விரும்புகிறார்கள். அப்படிச் செய்வதால் எண்ணெய், பிண்ணாக்கு இவைகளின் விலை ஏறுகிறது. ஆகவே ஏற்றுமதி செய்வது சரியல்ல என்ற கோரிக்கையும் வருகிறது. இரண்டையும் பரிசீலனை செய்து நம் நாட்டு மக்கள் பாதிக்கப்படாத அளவில் பார்த்துக் கொள்கிறோம். இன்றைய நிலையில் ஏற்றுமதி செய்யவில்லை.

**திரு. எம். பூபதி :** எண்ணெய், எண்ணெய் வித்துக்கள் சுற்று மாநிலங்களுக்கு அனுப்புகிற அந்த வியாபாரத்தை தனிப் பட்டவர்களுக்கு விடுவதன் மூலம் விவசாயிகள் அடையும் வசதி பாதிக்கப்படுவதால் அதை சர்க்காரே எடுத்து நடத்த யோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தற்சமயம் அந்த யோசனை இல்லை. தனிப்பட்டவர்கள்தான் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்த எள் உற்பத்தி 1960-61-ல் 41,780 டன் என்றும் 1965-66-ல் 35,650 டன் என்றும் இருக்கிறதே. இப்படி கிட்டத்தட்ட 6,000 டன் குறைவுக்குக் காரணமென்ன? இந்த உற்பத்தியைப் பெருக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** மழை போன்ற மற்ற வசதிகள் இல்லை, ஊக்கம் குறைவு இவை காரணமாக உற்பத்தி குறைந்திருக்கிறது.

**திரு. தா. விஜயராஜ் :** எண்ணெய் வித்துக்களுக்குக் குறைந்த பட்ச விலையை அரசாங்கம் நிர்ணயிக்குமா ? தடை விதிக்கும் போது வசதி படைத்தவர்கள் குறைந்த விலையில் விவசாயிகளிடம் இருந்து வாங்கி பிறகு இந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்படும்போது கூடிய விலைக்கு விற்று பெரும் லாபம் அடைகிறார்கள். ஆகவே, அதற்குத் தடை விதிக்கும் நோக்கம் இருக்கிறதா அல்லது குறைந்த பட்ச விலை நிர்ணயிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. இந்தக் கேள்வியில் விலை நிர்ணயம் பற்றி எழவில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இதர மாநிலங்களில் இருக்கக் கூடிய வியாபாரிகள் நினைத்தால் இங்குள்ள மார்க்கெட்டை திடீரென்று டவுனாக்கிவிடுவது அல்லது ரெயிஸ் செய்து விடுவது என்றிருப்பதோடு கூட, இங்கிருந்து குறைந்த விலைக்கு வாங்கி வெளிநாடுகளுக்கு அனுப்பி கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார்கள். அதனால் நம் நாட்டு மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை உத்தேசித்து இதற்கு விலை நிர்ணயம் செய்ய உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் அவர்களுக்கு அளித்த பதிலைத்தான் திரு. கோதண்டராமன் அவர்களுக்கும் சொல்லவேண்டியிருக்கிறது. மூலக்கேள்வியில் இருந்து விலை நிர்ணயம் பற்றிய கேள்வி எழவில்லை. தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. கே. விநயகம் :** எண்ணெய், எண்ணெய் விதை ஏற்றுமதி ஓ.ஜி.எல்., ஓப்பன் ஜெனரல் லைசென்ஸ் அடிப்படையில் வெளி நாடுகளுக்குப் போவது அதைச் செய்ய நமக்கு எந்தவித





அதிகாரமும் இல்லை. ஏற்றுமதி செய்வதால் அன்னியச் செலாவணி நம் தேசத்திற்கு வருகிறதென்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அன்னியச் செலவாணி கிடைப்பது என்பது உண்மை. ஏற்றுமதி செய்வதால் விவசாயி களுக்கும் ஆதாயம் இருக்கிறது என்பதும் தெரியும். ஆனால் விலைவாசி கணிசமாக உயரும்போது சாப்பிடுகிறவர்கள் பாதிக்கப் படுகிறார்கள் என்ற நிலையில் உற்பத்தி குறைந்திருக்கிற நேரத்தில் அதைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. இப்போது குறைந்துதான் இருக்கிறது. நான்காவது திட்டத்தில் 5 லட்சத்து 24 ஆயிரம் கூடுதல் விளைச்சல் விளைய பாக்கேஜ் ப்ரோக்ராம் கீழ் திட்டம் வகுத்திருக்கிறோம். உற்பத்தி அதிகமாகும்போது வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும்போது விவசாயிகளுக்கும் நன்மை கிடைக்கும், அன்னிய செலாவணி கிடைக்கவும் வாய்ப்பிருக்கிறது.

### நத்தம் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 317 வினா.—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு தாழ்த்தப் பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை மாவட்டம், வேலூர் வட்டத்தைச் சேர்ந்த நத்தத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கிய போது, வீடுகள் உள்ளவர்களுக்கும் மனைகள் வழங்கப் மு.ப. 9·30.
பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இல்லை என்று சொன்னார்கள். அது என்னுடைய தொகுதியாக இருக்கும் காரணத்தால், பலருக்கு மனை வழங்கியிருக்கின்றார்கள். மீண்டும் அதை ஆய்வு செய்து அமைச்சரவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து வீடு இல்லாதவர்களுக்கு வீட்டு மனைகள் அளிக்கும் சூழ்நிலையை உருவாக்குவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அங்கு 3.4 ஏக்கர் புறம்போக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு 48 பேருக்கு பட்டா போட்டு கொடுத்திருக்கிறார்கள். அதில் 49 பேருக்கு கொடுக்கவேண்டும் என்று இருந்தது. ஒருவர் வராததால் 48 பேர் களுக்கு கொடுக்கப்பட்டது. யார் யாருக்கு கொடுக்கவேண்டும் என்ற பட்டியலை வில்லேஜ் அதிகாரியும் பஞ்சாயத்து உறுப்பினர் களும் 12 அரிசன உறுப்பினர்களும் அங்கேயிருந்து பட்டியலைத் தயாரித்திருக்கிறார்கள். வீடு இருப்பவர்களுக்கு கொடுத்ததாகக்

தகவல் இல்லை. அப்படி யாரும் புகாரும் செய்யவில்லை. ஒரு வீட்டில் திருமணமானவர்கள் பல குடும்பங்களாக இருப்பவர்கள், அவர்களுக்கு எல்லாம் தலா ஒவ்வொரு வீடாகப் பிரிக்கப்பட்டு கொடுத்திருப்பதாகத்தான் தகவல் இருக்கிறதே தவிர, வீடு இருப்பவர்களுக்குக் கொடுத்து இல்லாதவர்களுக்குக் கொடுக்கவில்லை என்ற புகார் எதுவும் இதுவரை வரவில்லை. உறுப்பினர் அவர்கள் அதுகுறித்து தகவல் தந்தால் விசாரணை நடத்தப்படும்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** சார், அரிசன மக்களுக்காக வீட்டு மனைகள் ஆர்ஜிதம் செய்யும் முறையில் நல்ல நெல் விவசாயம் செய்யக்கூடிய முதல்தரமான நன்செய் நிலங்களையும் சில சமயம் ஆர்ஜிதம் செய்துவிடுகிறார்கள். அந்த நிலையில் சொந்தக்காரர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் ஏதாவது மாற்று நிலங்களை இனாமாகக் கொடுக்க முன்வந்தால் ஏற்றுக்கொள்ள சர்க்கார் அனுமதிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அரிசன மக்களுக்கு வீடுகளுக்கான நிலம் கையகப்படுத்தும் முறை இருந்து வருகிறது. ஆனால் இப்போது உணவுக் கட்டுப்பாட்டின் காரணமாக அதிக விலையுயர்ந்த நன்செய் நிலங்களை எடுக்கக்கூடாது என்ற முறையை வகுத்திருக்கிறோம். சில மாவட்டங்களில், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் எல்லாம் நல்ல நன்செய் நிலங்கள்தான் இருக்கின்றன. விலை உயர்ந்த நிலங்கள்தான் இருக்கின்றன. புன்செய் நிலங்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. எனவே புன்செய் நிலம் கிடைக்காத இடமாக இருந்து நன்செய்தான் இருக்கிறது என்று இருந்தால், அதிலும் குறைந்த விலையில் கிடைக்குமானால் அதைக் கையகப்படுத்துகின்ற பணியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. யாராவது இனாமாக நிலம் கொடுத்தால் அதை அரசு நிச்சயமாக ஏற்கும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** ஐயா, இந்த சர்க்காருடைய இந்த புதிய கொள்கைப்படி உணவுதானிய உற்பத்தியையொட்டி நன்செய் நிலங்களை குடியிருப்பு நிலங்களாக ஆர்ஜிதம் செய்யக் கூடாது என்ற முறையை செயல் படுத்திய பிறகு இந்த ஆண்டு குடியிருப்பு நிலங்களை ஆர்ஜிதம் செய்யமுடியாத ஒரு நிலை ஏற்பட்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே, அவசியமான இடங்களில் எடுக்கலாம் என்ற ஒரு திருத்தத்தை அதற்குக் கொடுக்க அரசு முன் வருமா.?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இந்த ஆண்டு எடுக்கவில்லை என்பது சரியான கருத்து இல்லை. இந்த ஆண்டும் எடுத்திருக்கிறோம். ஆரம்பத்தில் கூறியது போல அதிக விலை உயர்ந்த நிலங்களாக இருந்தால் எடுக்கக்கூடாது என்ற முறை இருக்கிறது. ஆனால் புன்செய் நிலங்கள் கிடைக்காமல் நன்செய் நிலங்களைத்தான் எடுக்கும் நிலை இருக்கிறது என்றால் எடுத்துக்கொண்டுதான் வருகிறோம். அதற்கும் திருத்தத்தைக் கொடுத்துத்தான் புதிய முறை கையாளப்படுகிறது.



**திரு. கொளத்தூர் கோதண்டம் :** இதற்கு முன்னால் அரிசனங்களுக்கு வீட்டுக்காக 5 சென்ட் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது 3 சென்ட்தான் கொடுக்கவேண்டுமென்ற நிலை இருப்பதாகத் தெரிகிறது. அதை மாற்றி, குறைந்தது 5 சென்டாவது கொடுக்கவேண்டுமென்பதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஏற்கனவே 3 சென்ட் தான் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. பரமேஸ்வரன் கமிட்டி வந்த பிறகுதான் அது 5 சென்டாக இருக்க வேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். இந்த அடிப்படையிலே சில இடங்களில் 5 சென்ட் கொடுக்கப்படுகிறது. பெரும்பாலான இடங்களில் 3 சென்ட் தான் கொடுக்கப்படுகிறது. நிலைமையை உத்தேசித்து கையகப்படுத்துகிற நிலங்கள் அதிகமாக இருந்து அதில் அரிசன மக்கள், வேண்டியவர்கள் குறைவாக இருந்தால் 5 சென்ட் வீதம் கொடுக்கப்பட்டு வருகிறது. எனவே இப்படி 3, 4, 5 சென்ட் என்ற வகையில் இன்றைக்கு கொடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மேலூர் வட்டத்தைச் சேர்ந்த நத்தம் அரிசன மக்களுக்கு வீட்டுமனைகள் வழங்குவது பற்றி கேள்வி. அரிசனங்களுக்கு வீட்டுமனை தருவதுபற்றி அரிசன மானியக் கோரிக்கை மீது பரவலாகக் கருத்துக்கள் கூறப்பட்டு இருக்கின்றன. ஆகவே, மதுரை மாவட்டம் நத்தம் அரிசன மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதுபற்றிய கேள்விகள் கேட்குமாறு கேட்டுகொள்கிறேன்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** சார், உயர்ந்த நன்செய் நிலங்கள் ஏற்கெனவே ஆர்ஜிதம் செய்யப்பட்டு 5, 6 வருஷம் ஆகியும் இன்னும் அதிலே வீடுகள் கட்டாமல், உணவு உற்பத்தியும் தடைப்பட்டு இந்த மாதிரி தரிசாக இருக்கும் நிலங்களைப்பற்றி அரசாங்கம் என்ன கருத்து நினைக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கையகப்படுத்தியும் அவர்களுக்கு மனைகள் பிரித்துக்கொடுக்காமல் இன்று நிலங்கள் இருக்காது. கையகப்படுத்துகிறோம் என்ற அறிக்கை விட்டவுடனேயே அதற்காக பணம் ஒதுக்கப்படுகிற நேரத்திலேயே, நிலங்களை அரசாங்கத்துக்கு தர மறுத்து பல பேர்கள் வழக்கு மன்றத்தில் வழக்கு தொடர்கிறார்கள். இப்பேர்ப்பட்ட நிலை இருக்குமானால் அதைப் பட்டா செய்து கொடுக்காத நிலை இருக்கும்.

பட்டா செய்து கொடுத்து விட்டு வீடு கட்டாமல் இருக்கும் காரணங்களைச் சொல்லவிரும்புகிறேன். பணத்தை வாங்கிக் கொண்ட நிலச் சொந்தக்காரர்கள் அரிசன மக்கள் வீடு கட்ட வந்தால் காலை வெட்டுவது கையை ஒடிப்பது போன்ற பல கொடுமைகளுக்கு ஆளாக்குகிறார்கள் என்று இப்பேர்ப்பட்ட வழக்குகள் ஏராளமாக இருக்கின்றன. பணம் வாங்கிக்கொண்டு

நிலத்தை விற்றுவிட்ட பிறகு கூட அல்லது நிலத்தை அரிசனமக்களுக்கு பிரித்துக் கொடுத்துவிட்ட பிறகுகூட அவர்கள் அங்கு வந்து வீடு கட்டவோ அல்லது வேறு பல காரியங்களுக்காக இன்றைக்கு உபயோகப்படுத்த முடியாத நிலை இருப்பதாக இது போல ஏராளமாகப் புகார்கள் வருகின்றன என்பதை கனம் அங்கத்தினரவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலை இருக்குமானால், உறுப்பினர்கள் அவர்களிடம் நல்ல அறிவுரைகள் சொல்லி இந்த நிலைமை இல்லாமல் போகுமானால் உள்ளபடியே வீடுகள் கட்டிக்கொடுக்க வசதியாக இருக்கும்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** சார், அரிசன மக்களுக்காகக் குடியிருப்பு மனைகள் ஆர்ஜிதம் செய்யும்போது ஒரு வருடம் இரண்டு வருட காலம் நீடித்துக்கொண்டு போகிறது. குறுகிய நேரத்தில் ஆர்ஜிதம் செய்து அவர்களுக்கு மனை வழங்க அரசாங்கம் புது முறையில் ஒரு கொள்கையை வகுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இதில் எவ்வளவோ படிக்கட்டுக்கள் இருக்கின்றன. இடையிடையே சொந்தக்காரர்கள் தர மறுப்பது, அல்லது அவசரமாக வழக்கு மன்றத்துக்குச் சென்று விடுவது, யார்யாருக்கு உரிமை இருக்கிறது என்பதுபோன்ற பல சிக்கல்கள் ஏற்படுவதால் கையகப்படுத்தும் பணியில் சற்று தாமதமாகிறது. சிக்கல் இல்லாத இடத்தில் விரைவாகத்தான் எடுத்துக்கொள்ளப்படுகிறது. புது முறை எதுவும் கிடையாது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அரிசன நலத்துறை அமைச்சரவர்கள் சொல்லியது போல ரெவினியூ இலாகாவில் உள்ள பல விதிமுறைகள் எளிதாக்கப்பட்டு 30 ஆயிரம் ஏக்கர் வரை அஸைன் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. நேற்றுக் காலை குன்னத்தூர் பகுதியில் 92 பேர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படி வழங்கப்பட்டு வருகிறது. மந்தமாக இருந்த காரியங்கள் துரிதமாக நடைபெறுவதோடு பின்னால் தள்ளப்பட்டிருந்த அரிசனமக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்ற முறையில் விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

*Pavement dwellers in City*

* 318 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR :
THIRU N. S. V. CHITHAN :

Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether any survey has been conducted regarding the pavement dwellers in the City of Madras; and

(*b*) if so, the steps taken to improve their residential conditions?





**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) 1962-ம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்காய்வின்படி சென்னை மாநகரில் நடைபாதையில் வசிப்பவர்களின் குடும்பங்கள் 3379 உள்ளன. இவற்றில் நடைபாதையில் வசிக்கும் ஏறக்குறைய 1495 குடும்பங்களுக்கு வேறிடங்களில் வசிப்பதற்கான வசதிகள் ஏற்கனவே செய்துதரப்பட்டுள்ளன. போதுமான நிதி வசதியும், இட வசதியும் கிடைத்தவுடன் எஞ்சியுள்ளவர்களுக்கும் இவ் வசதி செய்து தரப்படும்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** குடிசைவாழ் மக்கள், நடைபாதையில் வசிக்கும் மக்கள் இவர்களுக்குப் புது வாழ்க்கையை நல்ல முறையில் அமைக்க இந்த அரசு இன்னும் அதிகமான ஊக்கத்தோடு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த அரசாங்கம் குடிசைவாழ் மக்களுக்கும், நடைபாதையில் வசிக்கிற மக்களுக்கும் நல்ல ஏராளமான திட்டங்களைக் கையில் வைத்திருக்கிறோம். அதற்குரிய ஏராளமான திட்டங்களை கையில் வைத்திருக்கிறோம். அதற்குரிய பணம்தான் கிடைக்கவில்லை. எப்போதைக்கெப்போது கிடைக்கிறதோ அப்போதெல்லாம் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்றபொழுது 1962-ம் ஆண்டு கணக்கெடுத்த விவரப்படி 3,300 குடும்பங்கள் என்று சொன்னார்கள். இன்றையதினம் நடைபாதையில் பிறந்து, நடைபாதையில் வளர்ந்து, நடைபாதையில் மடிபவர்கள் பல்லாயிரக்கணக்கான அளவில் சென்னையிலிருக்கிறார்கள். ஆகையால் விரிவான ஒரு திட்டமாகத் தீட்டி அவர்கள் வாழ்வதற்கு இடமளிக்க ஏற்பாடு செய்யுமா ? சென்னை நடைபாதையில் வசிப்பவர்களில் தொழுநோய் பிடித்தவர்கள் அதிகம் பேர் இருப்பதால் தனியாக . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கடைசிப் பகுதி வேறு கேள்வி.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 1962-ம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்காய்வின்படி சொன்னேன். ஆனால் அப்போதைக்கப்போது பரிசீலிக்கப்பட்டு "ஸ்லம் க்ளியரன்ஸ்" படி. இவர்களுக்கு இடம் தேடி வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட்டது. வசதிக்கு ஏற்றவாறு விரிவுபடுத்தப்படும்.

**திரு. என். சங்கரய்யா :** ஐயா, இந்த நடைபாதை வாசிகளில் சில குறிப்பிட்ட நோயாளிகள், குறிப்பாக தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் இருப்பதன் காரணமாகப் பொது மக்களுக்குப் பாதகம் ஏற்படுவதால் அந்தக் குடும்பங்களைப் பொறுத்தவரையில் அவர்களைத் தனியாக வாழ வைக்க இந்தத் திட்டத்திலே பிரத்யேக முயற்சி செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இது நோயுள்ளவர்களுக்கு உள்ள திட்டம் அல்ல. பொதுவாக நடைபாதையிலே வாழ்பவர்களுக்காக ஏற்பட்ட திட்டம். அப்படிப்பட்ட நோயாளிகளினால் சமுதாயத்திற்குப் பாதகம் ஏற்படாமல் இருக்க ஒரு சட்டமிருக்கிறது. அதன்படி பொதுநலத்துறை அமைச்சரவர்கள் அதைக் கவனிப்பார்கள்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவரவர்களே, நடைபாதையிலே குடியிருப்பவர்கள் பொதுவாக அவர்களுக்குத் தொழில் எங்கிருக்கிறதோ அங்கேதான் குடியிருந்தார்கள். சென்ற அரசாங்கம் அப்படிக் குடியிருந்த ஜனங்களை தூரத்திலே, அதாவது வியாசர்பாடியிலே கொண்டுபோய் விட்டது. இந்த அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்து தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்கு அந்தத் தொழிற்சாலைகள் எந்தப் பகுதியில் இருக்கின்றனவோ அந்தப் பகுதியிலே வீடு கட்டித்தர முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதிலே கனம் அங்கத்தினர் கூறுகின்ற அந்தக் கருத்துதான் இடையூறாக இருக்கிறது. நடைபாதையிலுள்ளவர்கள் தொழிற்சாலைகள் மிகுதியாக உள்ள பகுதிகளில் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வீடு கட்டித் தருவதற்கான இடம் தூரத்திலேதான் கிடைக்கிறது. ஆகையால்தான் இதில் முழுவெற்றி காண முடியவில்லை.

**திரு. எம். பூபதி:** தலைவரவர்களே, 1968-ஆம் வருஷத்திலாவது மொத்தம் எத்தனை பேர்கள் நடைபாதைவாசிகள் என்ற கணக்கை எடுப்பார்களா ? அதே சமயத்தில் மத்திய சர்க்கார், வீடு கட்டும் திட்டத்திற்காகப் பல கோடிக்கணக்கான ரூபாய் கொடுக்கின்றபோது அந்த நிதியை உபயோகப்படுத்த நமது அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 1962-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கின்படி 3379 குடும்பங்கள் என்று நான் முதலில் சொன்னேன். அவற்றில் சுமார் 1495 குடும்பங்களுக்கு இடம் கொடுத்துவிட்டோம். மத்திய சர்க்கார் நிதி கொடுப்பதாகக் கூறும் அந்தத் தகவலை எனக்கு அனுப்பினால் நல்லது. ஐந்தாண்டுத் திட்டத்தில் வீட்டு வசதிக்காக ஓரளவு ஒதுக்கப்பட்டது. நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஒதுக்கிய பணம் செலவாகி, மேலும் தாருங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். "ஸ்லம் க்ளியரன்ஸ்"ஸுக்காக அதிகப் பணம் கொடுக்கவேண்டுமென்று மாநில வீட்டு வசதி அமைச்சர்கள் மாநாட்டிலே நம் அரசாங்கத்தின் சார்பாக வற்புறுத்தப்பட்டது.

**திரு. எம். எஸ். மணி:** தலைவரவர்களே, நடைபாதையிலே வசிப்பவர்களுக்கு வேறு புதிய கட்டிடம் கட்டிக் கொடுத்து அவர்கள் அங்கே சென்ற பிறகு, அந்தக் காலியான இடத்தில் புதிய நடைபாதை வாசிகள் குடிவந்து விடுகிறார்கள் என்பது





இந்த அரசுக்குத் தெரியுமா ? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** வீட்டு வசதிப் பிரச்சனையைத் தீர்க்காதவரையில் இந்தப் பிரச்சனையும் இருந்துகொண்டுதான் இருக்கும்.

**திரு. கே. பி. எஸ். மணி:** தலைவரவர்களே, நடைபாதைவாசிகளின் பிரச்சனையைத் தீர்க்க கடந்த அரசும் கூட பரிசீலனை செய்யும்பொழுது அவர்களுக்கு வேறு இடம் கொடுக்க வசதியில்லை, இடமில்லை என்று தட்டிக்கழித்துவிட்டார்கள். அப்படியில்லாமல் நம்முடைய அரசு புதிதாக உருவாக்கிய திட்டப்படி பல அடுக்கு மாடிக்கட்டடங்களைக் கட்டி நடைபாதை வாசிகள் எங்கெங்கு வேலை செய்கிறார்களோ அங்கங்கு அவர்கள் வசிக்கும் முறையில் செய்ய திட்டங்களை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அப்படிப்பட்ட மாடி வீடுகள் கட்டுவதில், குடிசை வாழ் மக்களைப் பொறுத்தவரையில் முதலில் எடுத்துக்கொள்வது. அதை வெற்றிகரமாக முடித்துவிடுகிறோம். ஆனால் நடைபாதைவாசிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் தொழில் செய்யும் பகுதிகளில், உதாரணமாக மவுண்ட் ரோடு போன்ற பகுதிகளில் வீடு கட்டுவதற்கு இடம் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. ஆகவே வியாசர்பாடியில் குடியேற்றி வசிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

Dr. H. V. Hande: Sir, does the figure of 3,000 and odd pavement dwellers given by the Hon. Minister include a number of people who are living on the banks of the Cooum river and on the banks of so many canals? They have got thatched houses and they are practically living their whole life there. While collecting the statistics has the Government taken note whether they are employed or unemployed? In view of the grave condition of these people, will the Government take some other steps to see that many of them are rehabilitated as near their work spot as possible, as it will be impossible for them to go to their work spot from a distance of ten or twelve miles? The Minister made a statement a day or two ago about the rehabilitation of these people. Will he categorically reply as to what exactly he is going to do?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நான் முன்னாலே 1962-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட விவரத்தைச் சொன்னேன். இதில் எந்தெந்த இடத்திலுள்ள நடைபாதைவாசிகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிறபடி அவர்கள் எங்கே வேலை செய்கிறார்களோ அங்கேயே வாழ்வதற்கு வசதி செய்து கொடுத்தால் ஆதரிக்கிறார்கள் என்பது உண்மை. நம்மைப் பொறுத்தவரையில் அந்த இடத்திலேயே இடம் கிடைத்தால் அங்கேயே நிச்சயமாகச் செய்து கொடுக்கிறோம். இடம் கிடைக்காததால்தான் வியாசர்பாடி

போன்ற பல இடங்களுக்கு அழைத்துச் சென்று குடியமர்த்த வேண்டிய நிலையிருக்கிறது. எந்தெந்த இடத்திலே எந்தெந்த சந்தர்ப்பத்திலே முடியுமோ அவ்வாறு திட்டமிடுகிறோம்.

THIRU K. VINAYAKAM : The question of pavement dwellers is a very serious question as far as this State is concerned. Is the Minister aware how this kind of problem has been solved in foreign countries like America and England? Is he aware that we are not in a position to give them dwelling places at the spot where they are employed and that even if we try hard, we cannot get places to build houses for them? Much water has flowed under the bridge after 1962 and the statistics which the Minister read out are obsolete. How does the Minister purposes to solve the problem and has the D.M.K. Party in particular any special programme to solve this for which they have cried aloud from the house tops?

THE HON. THIRU C. N. ANNADURAI : We never get on top of houses much less speak aloud because we are aware of the efficacy of loudspeakers, unlike my hon. Friend.

As for the question whether such a problem exists in other countries, in some countries where cities are overcrowded, the prolem of slums exists. Even the problem of pavement dwellers has arisen in many countries. They are trying to solve it and we are trying to base our programme on their model. Dispersal of business houses and industries alone can give breathing space. As for the fact that many people are living on pavements, it shows that there is no other place for them to live in. If there had been place to live, they would have got that place and built some huts. Everyone wants to be very near his place of work and they do not have any place where they can build huts. That is why the Minister was telling that it was very difficult to find building space there.

As for the fact pointed out by a Member that they are sent five miles or ten miles away, even if we persuade them to go to some other place, they would never leave the pavements. Therefore a permanent solution to that can be found only when there is a dispersal of industries, business places and other things which are new in the thick of the town called George Town.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, நடைபாதை வாசிகள் என்கிற கொடுமை ஐந்தாண்டுகளுக்கு முன்பு, பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இன்று குறைந்திருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? நடைபாதைவாசிகளின் பிரச்சினை வேறு, குடிசைவாழ் மக்களின் பிரச்சினை வேறு. இன்று இந்த அரசு ஏற்று நடத்தும் பல திட்டங்களையெல்லாம் குடிசை வாழ் மக்கள் அங்கீகரித்து ஏற்றுக்கொள்வது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மாறி மாறி கட்சிகள் அரசின் பொறுப்பையேற்கின்ற ஜனநாயக நாட்டில்



முன்பிருந்ததைவிட சரியாக இருக்கிறது என்று முன்னாள் ஆட்சியாளர்கள் ஒத்துக்கொள்வது என்பது நாம் எதிர்பார்க்கக்கூடியது அல்ல.

(திரு. கே. வினாயகம் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரம் அதிகம் ஆகிவிட்டது.

திரு. கே. வினாயகம் : நேரம் ஆனால் அதற்கு என்ன பண்ணுவது ?

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இப்பொழுது நடைபாதையையொட்டிய ஓரங்களிலே குடிசை போடக்கூடிய நிலைமை எங்கு பார்த்தாலும் ஆரம்பிக்கப்படுகிறதே, அதை மீண்டும் சர்வே செய்து இந்த மெட்ராஸ் சிட்டியிலே, அதை ஒட்டியிருக்கக் கூடிய பகுதிகளிலே வசதி படைத்தவர்கள் பல ஏக்கர் நிலங்களை ஆக்கிரமித்திருப்பதாக சொல்லப் படுகிறதே, அதை மீண்டும் வாங்கி இது போன்ற குடிசை வாழ்மக்களுக்கும் நடைபாதை வாழ் மக்களுக்கும் கட்டிடம் கட்டிக்கொடுப்பதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பலர் நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டதாகவும் புகார்கள் வருகின்றன. அதைப் போலவே சில அரசியல் கட்சிகள், காலியாக இருக்கின்ற ஒவ்வொரு இடத்திலேயும் புதிதாக குடிசைகளைப் போட்டுக்கொள்ளுவதாகச் சொல்லி தூண்டுவதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

### திருப்பூரில் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்

* 319 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

திருப்பூரில் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட் ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. எம். கண்ணப்பன் : தலைவர் அவர்களே, திருப்பூரில் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட் ஏற்படுத்த வேண்டுமென்று அந்தப் பகுதி மக்களிடமிருந்து ஏதேனும் கோரிக்கை வந்ததா ? அப்படி கோரிக்கை ஏதேனும் வந்திருந்தால் எந்த எந்தத் தகுதி அடிப் படையில் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட் அங்கே ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட வேண்டுகோள் தரப்பட்டது. அது உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, இப்பொழுது தேவையில்லையென்று முடிவு செய்யப்பட்டது.

திரு. அ. ப. சண்முகசுந்தரம் : இப்படி புதிதாக கோர்ட்டுகள் ஆரம்பிக்கப்படுவது எந்த அடிப்படையில்? சில ஆண்டுகளுக்கு

[1968 மார்ச் 25

முன்னே ஈரோட்டில் ஒரு சிவில் சப்-கோர்ட் ஆரம்பிக்கப் பட்டதா ? அதைப் போலவே பொள்ளாச்சியிலும் ஒரு சப்-கோர்ட் ஆரம்பிக்க அரசு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்பு கிறேன்.

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* அந்த அந்தப் பகுதியிலுள்ள நீதிமன்றங்களின் வேலைப்பளுவைக் கணக்கிட்டு அதிகமான நீதி மன்றங்கள் தேவை என்று உயர்நீதிமன்றம் சொன்னால் அரசாங்கம் ஒத்துக்கொள்ளுகிறது.

*திரு. வி. கே. கோதண்டராமன் :* சார், வழக்குகள் அதிகமாக உள்ளன என்று கருதி சர்க்கார் கோர்ட்டுகள் ஏற்படுத்த வேண்டு மென்று கருதுகிறது. இருந்தாலும் வக்கீல்களுடைய அசோசி யேஷன் என்று சொல்லப்படுகின்றதே அதிலுள்ளவர்களுடைய அபிப்பிராயம் கேட்கிற காரணத்தினால், அவர்களுக்குக் குடியிருப் பதற்கு, வாழ்வதற்கு வசதி எந்த நகரத்திலே இருக்கிறதோ அங்கேதான் கோர்ட் இருக்கவேண்டுமென்று விரும்பி, வேண்டா மென்று கூறுகிறார்கள் என்பது அமைச்சருக்குத் தெரியுமா? ஆகவே, கனம் அமைச்சர் அவர்கள் எங்கெங்கெல்லாம் வழக்குகள் அதிகமாக இருக்கின்றனவோ அந்த அந்தப் பகுதிகளில் கோர்ட்டு கள் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யுமா, அதைப்போன்ற உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* அதைப்பற்றி அரசாங்கம் வழக்கறிஞர்களின் கருத்தைக் கேட்பதாகத் தெரியவில்லை. உயர்நீதி மன்றம் சொல்லுகிறபடி நீதிமன்றங்கள் துவக்கப்படுகின்றன. வழக்கறிஞர்கள் தாங்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கே இருக்கிற நீதிமன்றத்தை வேறு இடத்திற்குக் கொண்டு போகக் கூடாது என்று தான் சொல்கிறார்களே தவிர, புதிதாக வரக் கூடாது என்று பெரும்பாலும் சொல்வதில்லை. இந்தக் கேள்வி, புதிதாக நீதிமன்றங்கள் திறப்பதைப் பற்றியது.

## *Director of Indian Medicine*

* 320 *Q*.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is proposed to appoint a Director for Indian Medicine; and

(*b*) if so, the details thereof?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* (அ) & (இ) இந்திய மருத்துவத்திற்கு தனி இயக்குநர் துறை ஒன்றை ஏற்படுத்தும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது. இந்திய மருத்துவ இயக்குநர் ஒருவரை நியமிப்பது அத்துறை ஏற்படுத்திய பிறகு தான் எடுத்துக்கொள்ளப்படும்.

*திரு. கரு. சீமைச்சாமி :* தலைவர் அவர்களே, இந்திய மருத்துவத்திற்கு தனி இயக்குநர் ஏற்படுத்தும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். இந்திய மருத்துவமனை ஒன்றே ஒன்று குற்றாலத்திலே இருக்கிறது



1968 மார்ச் 25]

என்று நினைக்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு மருத்துவமனை ஏற்படுத்துவதை அரசாங்கம் யோசிக்குமா ?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* அதுபற்றி அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. சித்த மருத்துவ மனையை ஒவ்வொரு மாவட்டத்திலும் துவக்குவதற்கு அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

*திரு. பெ. மலைச்சாமி :* தலைவர் அவர்களே, இந்தத் துறைக்கு இயக்குநர் நியமிக்கின்ற காலத்தில் சித்த வைத்தியத்திற்கு ஒரு இயக்குநரை நியமிப்பது பற்றி அரசு முடிவு செய்துள்ளதா?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* அதுபற்றிய யாதொரு முடிவும் எடுக்கப்படவில்லை.

*திரு. அ. ப. சண்முகசுந்தரம் :* தலைவர் அவர்களே, சித்த மருத்துவ முறையிலே, கோவையிலே ஜி.டி. நாயுடு போன்றவர்கள் நல்ல ஆராய்ச்சிகள் எல்லாம் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கின்ற வகையிலே கோவையிலே ஒரு சித்த மருத்துவ ஆராய்ச்சிக் கூடம் ஏற்படுத்துவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* தற்போது அது போன்ற திட்டம் அரசாங்கத்திடம் இல்லை.

*திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :* 'காலேஜ் ஆப் இண்டியன் மெடிசின்' குற்றாலத்தில் ஏற்படுத்தப் போவதாக முதலில் ஜி.ஓ. போடப்பட்டது, சட்டசபையில் எல்லாம் பேசப் பட்டது. ஆனால் சட்டசபை அங்கீகாரமே இல்லாமல் திருநெல் வேலியிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆதலால், குற்றாலத்தில் பழையபடி ஆரம்பிப்பதற்கு ஏதாவது உத்தேசம் இருக்கிறதா? அல்லது ஜி.ஓ.-வே மாற்றப்பட்டு விட்டதா?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* கனம் உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால் விவரமாக பதில் அளிக்க முடியும்.

*திரு. மு. ச. சிவசாமி :* துணைத் தலைவர் அவர்களே, நியமிக்கப்பட இருக்கும் அந்தத் தனி இயக்குநர் எந்தக் கல்வியின் அடிப்படையில்—யோக்கியதாம்சத்தின் அடிப் படையில்—நியமிக்கப்பட உத்தேசம் ?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* அந்த விவரங்களை எல்லாம் அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

*திரு. வி. கே. கோதண்டராமன் :* சார், இந்திய மருத்துவம் என்பது சித்த, யுனானி, ஆயுர்வேதம் இந்த மூன்று மட்டுமா ? அல்லது அதில் ஏதாவது ஒன்றிரண்டா? அதோடு கூட ஹோமியோபதியும் சேர்ந்துள்ளதா?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* இந்த மூன்றும் என்று தான் கருதுகிறேன். ஹோமியோபதி இந்திய மருத்துவ முறையில் சேராது.

THIRU K. VINAYAKAM: Sir, what is the attitude of this Government towards the Indian System of Medicine generally? Have the Government recognised this as a branch of study worth to be pursued. Alsa, are the Government aware of the fact that this System of Medicine is not a scientifically codified system and a lot of research will have to be done and if so, what are the steps which the Government have taken either to appoint a Director or to do research work? Also, whether the treatment through this kind of medicine has borne any fruit and what are the results available with the Government?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: All these aspects are under the consideration of the Government?

திரு. மா. பா. சாரதி: தலைவர் அவர்களே, இந்த பஞ்சாயத்து ஒன்றியத்தின் மூலமாகவும், நகராட்சிகளின் மூலமாகவும் இனி மேல் ஏற்படுத்தக்கூடிய சிறிய வைத்திய ஆஸ்பத்திரிகளில் சித்த வைத்திய முறைதான் இருக்கவேண்டுமென்று கட்டளை போடப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கனம் உறுப்பினர் அவர்களுடைய நல்ல ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. என். சங்கரய்யா: ஐயா, இன்று இந்த சித்த வைத்தியர் களும் அதே போல் அவர்கள் மருந்துகள் தயாரிப்பதற்கான மூலப் பொருள்களும் நல்ல முறையில் கிடைக்கவில்லையென்று சொல்லப் படுகிறது. அரசாங்கம் இதற்கென்று ஒரு தனி இயக்குநர் ஏற்படுத்தியதற்குப் பிறகாவது இந்திய வைத்திய முறையிலே தயாரிக்கப்பட்ட மருந்துகளை நியாயமான முறையில் தயாரித்து மக்கள் நம்பிக்கையோடு வாங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

*Buses within Municipal limit*

* 321 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to allow the Municipalities to ply town buses within the Municipal areas; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம். நகராட்சி எல்லைக்குள் பேருந்துகள் ஓட்டுவதற்கான அனுமதி கேட்டு ஒரு நகராட்சி மன்றத்தின் வேண்டுகோள் வந்துள்ளது.

(இ) அது அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது.

THIRU T. MARTIN: Sir, may I request the Hon. Minister to state whether any step has been taken by this Government to amend the District Municipalities Act to provide for the municipalities running this bus service within their jurisdiction?





மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: கேள்வியினுடைய விடை யிலேயே அரசாங்கத்தினுடைய ஆலோசனையில் உள்ளது என்று பதில் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. நா. காசிராமன்: சார், எவ்வளவுதான் ஓவர்லோடு ஏற்றியும் கூட டவுன் சர்விஸ்கள் நஷ்டத்திலே தான் ஓடிக்கொண் டிருக்கிறது என்று சென்னை நகர டவுன் சர்வீஸ்கள் மூலமாக நிரூபணமாகியிருக்கிறது. ஏற்கனவே நலிவுற்ற பொருளாதார நிலையிலே இருக்கிற நககரசபைகளிடம் இதைக் கொடுப்பதற்குப் பதிலாக அவர்களுக்கு நஷ்டத்தைக் கொடுப்பதற்குப் பதிலாக, சர்க்காரே அதை ஏற்று நடத்த முன் வருமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: நகராட்சிகள் பேருந்துகளை நடத்தினால் நட்டம் வரும் என்ற கனம் உறுப்பினருடைய கருத்தும் அந்த ஆலோசனையிலே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

THIRU T. MARTIN: Mr. Deputy Speaker, Sir, the Hon. Minister has stated that only one Municipality has so far sent in an application praying for such a request. May I request the Hon. Minister to mention the name of the Municipality which has sent in such an application?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: காஞ்சீபுரம் நகராட்சி யிலிருந்து அப்படிப்பட்ட விண்ணப்பம் வந்துள்ளது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: சார், நகராட்சிகள் அப்படிப்பட்ட பஸ்களை நடத்தலாம் என்று சொல்கிறார்கள். அதைப் போலவே பஞ்சாயத்து யூனியன்களும் விரும்பினால் அந்தப் பகுதியிலே இருக்கிற பஸ்களை ஏற்று நடத்துவதற்கு அரசாங்கம் பர்மிட் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: நகராட்சிகள்பற்றிய முடிவை எடுத்தபிறகு அவசியமானால் இதுபற்றியும் பரிசீலிக்கப் படும்.

*Anti-Hindi agitation by students*

* 306 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state the circumstances under which the two students were killed in a bus accident near Coimbatore during the second week of January 1968?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: 12-1-1968-ல் மேட்டுப்பாளையம், காரமடை உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் சுமார் 150 பேர்கள், பின்னர் ரோட்டிலுள்ள காரமடையிலிருந்து சுமார் 6 மைல் தூரத்திலுள்ள தையனூர் கிராமத்திற்குச் சென்று, ஓடிக்கொண்டிருந்த வாகனங்களை நிறுத்தி, இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி செய்தனர். தனியார் வாகனம் (பஸ்) ஒன்றை நிறுத்த அவர்கள் முயற்சி செய்தனர். மாணவர்களைத் தவிர்க்க,

காரோட்டி முயற்சித்தார், ஆனால் அவரால் இயலவில்லை. அதன் விளைவாக, 4 மாணவர்கள் காயமடைந்து அவர்களில் இருவர் இறந்துவிட்டனர்.

**திரு. கே. விநாயகம் :** இந்த மாணவர்கள் இருவரும் கல்லூரி
மு.ப. 10-00 மாணவர்களா, அல்லது உயர்நிலைப் பாடசாலையிலே படிக்கிற மாணவர்களா அவர்கள் இப்படித் தடுத்து நிறுத்தும் போது ஓட்டுநர் பஸ்ஸை நிறுத்துவதற்கு முயற்சி செய்யவில்லையா? அப்படி நிறுத்தாமல் வேகமாக ஓட்டினாரா? அதன் விளைவாக ஏற்பட்ட இந்த விபத்தில் இறந்துபோன இருவர்களுடைய குடும்பத்திற்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டுள்ளதா? இம்மாதிரி தகராறு வரும்பொழுதெல்லாம் அமைச்சரோ, அரசாங்கமோ அல்லது அதிகாரிகளோ முன்கூட்டியே இந்த விபத்துகள் வராமல் இருப்பதற்கு, மாணவர்கள் கிளர்ச்சியை தூண்டிவிடாமல் இருப்பதற்கு ஏதாவது வழிவகைகள் செய்வார்களா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்களுடைய கேள்வித் தொடரிலே ஒன்று இந்த மாணவர்கள் எந்த வகுப்பில் படிப்பவர்கள் என்பது. 6-ம் படிவத்திலும், 2-ம் படிவத்திலும் படிப்பவர்கள், சிறுவர்கள். இந்த பஸ்ஸை நிறுத்தாமல் காரோட்டி வேகமாக ஓட்டிக்கொண்டு போனதாலே இந்த விபத்து நேரிட்டதாகக் கருதிக்கொண்டு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். நான் தந்த பதிலிலே, மாணவர்களைத் தவிர்க்க காரோட்டி முயற்சித்தார் என்று சொல்லியிருக்கிறேன். பஸ் வந்துகொண்டிருக்கும் பொழுது எதிரே வருபவர்களைத் தவிர்ப்பதற்கு, அந்தப் பக்கம் போகலாமா, இந்தப் பக்கம் போகலாமா என்று திருப்பியிருக்கிறார்கள். ஆனால் விபத்தைத் தடுக்க முடியாமல், மாணவர்களில் இருவர் இறந்துவிட்டனர். உறுப்பினர் அவர்களுடைய கேள்வித் தொடரில் மற்றொன்று—இந்த விபத்துகளெல்லாம் நடக்காமல் இருப்பதற்கு முன்கூட்டியே சர்க்கார் முயற்சி எடுக்குமா என்று கேட்கிறார்கள். விபத்து என்று இருக்கிற வாசகத்தின் பொருளே, முன்கூட்டியே அறிந்து கொள்ளமுடியாமல் ஏற்படுவதற்குத்தான் விபத்து என்று பெயர். விபத்துகளை முன்கூட்டியே அறிந்து சொல்வதற்கு ஜோதிடர்களால் தான் முடியும். ஆனால் அப்படிப்பட்ட ஜோதிடர்கள் இருப்பது என்பதே சந்தேகம். மேலும், மாணவர்கள் கிளர்ச்சியைத் தூண்டிவிடாமல் இருப்பார்களா என்று கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதற்கு சர்க்காருடன் ஒத்துழைக்கும்படி அவரை நான் அழைக்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்தக் குறிப்பிட்ட சம்பவம் நடந்த இடத்தில் முதல் நாளிலேயிருந்து இந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் அங்கே பஸ்களை நிறுத்தி இப்படிப்பட்ட நிலையை உண்டாக்கிக் கொண்டிருந்ததாகத் தெரியவருகிறது. ஆகவே, அப்படி பஸ்களை நிறுத்துகின்ற அந்த இடங்களில் அதிகமான மாணவர்கள் கூடி போக்குவரத்திற்கு இடைஞ்சல் செய்யாமல் இருப்பதற்கு, ஒழுங்குபடுத்துவதற்கு,



போலீஸ் யாரும் அங்கே போகாததன் காரணம் என்ன? போலீஸ் அங்கே போயிருந்தால் இந்த விபத்து தடுக்கப்பட்டிருக்கலாமா என்பதுபற்றி ஏதேனும் விசாரணை நடத்தப்பட்டதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** விபத்து காரமடையில் ஏற்பட்டது என்று பத்திரிகைச் செய்தியைப் பார்த்து தெரிந்துகொண்ட கனம் உறுப்பினர் அவர்கள் ஏற்கனவே அங்கே போலீஸ் இருந்திருந்தால் இந்த விபத்து நடைபெறாமல் தடுத்திருக்கப்படலாம் என்று கருதுகிறார்கள். இந்த விபத்து காரமடை ஊருக்கு நடுவே நடைபெறவில்லை. அங்கிருந்து ஆறு கல் தூரத்திலுள்ள ஒரு சிற்றூரில் நடந்திருக்கிறது. மாணவர்கள் கிளர்ச்சி செய்துகொண்டே போகிற வழியில் ஏற்பட்டது இது. வழி எங்கும் இப்படிப்பட்ட விபத்துகள் ஏற்படும் என்று முன்கூட்டியே அறிந்து போலீஸை நிறுத்தி, விபத்துக்களைத் தடுத்து நிறுத்துவது என்பது எந்த அரசாங்கத்தினாலும் முடியாத காரியம்.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவர் அவர்களே, இந்த இரண்டு மாணவர்கள் மீது மோதிய பஸ்ஸின் சொந்தக்காரர் யார்? பஸ் சொந்தக்காரரிடமிருந்து இறந்துபோன மாணவர்கள் குடும்பங்களுக்கு நஷ்டஈடாக ஏதாவது கொடுக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அது ஒரு தனியார் பஸ் கம்பெனி என்றுதான் நான் சொன்னேன். மற்ற விவரங்களையெல்லாம் கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்த விஷயம் அவர்களுக்கே தெளிவாகத் தெரியும்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சதர் :** தமிழ் நாட்டிலே இந்த இரண்டு மாணவர்களுடைய அநியாயமான சாவினால் மக்கள் கொதிப்பு அடைந்திருக்கிறார்கள். இம்மாதிரி அறியாத்தனமாக மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு பஸ் ஆக்ஸிடெண்டில் உயிர் துறப்பதைத் தடுப்பதற்கு, இதை நல்லமுறையில் விசாரித்து இம்மாதிரி மாணவர்களுடைய உயிர் குடிக்கப்படாமல் இருக்கக்கூடிய முறையை இந்த அரசாங்கம் வகுக்க முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் உருக்கத்தோடு கேட்டுக்கொண்ட வேண்டுகோளும், அதற்கான முறைகளும் சர்க்காரால் பரிசீலிக்கப்படும்.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, இந்த விபத்தில் இறந்துபோன இரண்டு மாணவர்களுடைய குடும்பங்களுக்கும் இந்த அமைச்சு ஏதாவது உதவி நிதி கொடுத்திருக்கிறதா? எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது? கொடுக்காமல் இருந்தால், இனிமேலாவது கொடுக்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** விபத்துகளில் ஈடுபட்டு இறந்தவர்களின் குடும்பங்களுக்கு சர்க்கார் நஷ்டஈடு தரும் பழக்கம் இல்லை. அதிலும், மோட்டார் ஏறி அதனால் இறந்துபோனவர்களுக்கு அந்த மோட்டார் கம்பெனிக்காரர்கள்

பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் மூலமாக அவர்களுக்கு நஷ்டஈடு தருவது வழக்கம். அப்படிப்பட்ட முயற்சி நடைபெற்றதாகவும், நஷ்டஈடு தரப்பட்டதாகவும் அல்லது நஷ்டஈடு தருவதற்கான தொகை விவாதிக்கப்பட்டதாகவும் சர்க்காருக்கு தகவல் இருக்கிறது.

**திரு. நா. காசிராமன்** : ஸார், இம்மாதிரி விபத்துக்களெல்லாம் கார்கள் வேகமாக வரும்பொழுது இந்தக் கிளர்ச்சியில் ஈடுபடும் மாணவர்கள் குறுக்கே நின்று தடுப்பதால் ஏற்படுகின்றன. அவர்கள் எங்கே பலாத்காரத்தில் ஈடுபடப் போகிறார்களோ என்று ஒதுக்கமாக இருக்கவேண்டியிருக்கிறது. இப்படியெல்லாம் நடப்பதைத் தவிர்ப்பதற்கு எல்லா பஸ் ஓட்டிகளும், கார் ஓட்டிகளும், லாரி ஓட்டிகளும் 'இந்தி ஒழிக, தமிழ் வாழ்க' என்று அச்சிட்டு ஒட்டிக்கொண்டால்தான் பாதுகாப்பு இருக்கும் என்று ஒட்டிக்கொண்டிருக்கிற அந்த நிலைக்கு வந்து விட்டது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : அந்த நிலைக்கு வந்துவிட்டதை அரசுகூட பார்க்கிறது. கார்களிலும், பஸ்களிலும் அம்மாதிரி ஒட்டப்படுவது குறித்து, வேறு சிலர் உண்மையிலேயே அந்த இலட்சியத்தை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று தாங்களாகக்கூட ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

* 307 *Q*.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Tamilnad Students' Anti-Hindi Council has decided to agitate against the Vividh Bharathi Hindi relays by All-India Radio?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : ஆம். கிளர்ச்சியைக் கைவிடுமாறு தமிழக மாணவர் இந்தி எதிர்ப்புக்குழு கேட்டுக் கொள்ளப்பெற்றது.

**திரு. கே. வினாயகம்** : இந்தக் கிளர்ச்சி ரேடியோவில் ஒலி பரப்பப்படுகிற அந்த விவித பாரதி இந்தி ப்ரோகிராமை எதிர்த்து கிளர்ச்சி செய்வது என்றால், எந்தவிதமாகச் செய்வதாக நினைத்தார்கள்? எப்படிச் செய்தார்கள்? அதைக் கைவிடும்படி அரசாங்கம் கேட்டுக்கொண்டதனுடைய விளைவு என்ன?

What is the *modus operandi* of the ag itation against the relay? Is it at the Delhi Centre or the Madras Centre?

The Hon. Thiru C. N. ANNADURAI : Since the agitation did not take place, I am not in a position to give the details. But what happened was this. When the Anti-Hindi agitation took various shapes, the All-India Radio Station received an anonymous letter purported to be from a student asking the Radio Station to give up the Vividh Bharathi programme and informing that, if it was not given up, the Radio Station would be damaged or something to that effect. On enquiry it was found that there was no student by that name and the letter was as anonymous as it was unauthorised.





—

**திரு. பெ. மலைச்சாமி** : தலைவர் அவர்களே, சென்னை வானொலி நிலையத்தை மதராஸ் வானொலி நிலையம் என்றும், டெல்லி ஒலிபரப்பில் தமிழ் செய்தி அறிக்கையில் ஆகாசவாணி என்றும் சொல்லப்படுகிறதே, இதை மாற்றுவதற்கு இந்த மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : இது மற்றொரு கிளர்ச்சிக்கு வழி கோலாதிருக்கும் முறையில் இந்த அரசு கிளர்ச்சிக்கு வழிகோலாதிருக்கும் முறையில் இந்த அரசு வற்புறுத்திக் கெகாண்டிருக்கிறது.

* 308 வினா.—திரு. ஆ. கு. சுப்பையா :
திரு. சோ. அழகர்சாமி :
திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : } : மாண்புமிகு

முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டில் நிகழ்ந்த இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் போது போலீஸ் துப்பாக்கிப்பிரயோகத்தினால் உயிரிழந்த மாணவர்கள் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கும் யோசனை ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் என்றால், அதன் விபரமென்ன?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : (அ) & (இ) 1965-ம் ஆண்டில் நிகழ்ந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் கொல்லப்பட்டவர்களை அண்டி வாழ்ந்த குடும்பத்தவர்க்கும், உடற் புண் பட்டோர்க்கும் கருணை இழப்பீடு (Ex-gratia compensation) வழங்குவது பற்றி இந்த அரசு ஆலோசித்து வருகிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா** : இந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் முன்னாள் அரசாங்கம் துப்பாக்கிப் பிரயோகம் செய்து உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு, உயிர் இழந்தவர்களை நம்பியிருந்தவர்களுக்கு, கூடிய விரைவில் இந்த நஷ்டஈடு கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : எவ்வளவு அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னேன்.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்** : சார், இந்த அரசாங்கம் அந்தக் குடும்பங்களுக்கு எவ்வளவு தொகை கொடுக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறது என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : எவ்வளவு அவசியமோ அவ்வளவு.

**திரு. தி. பொன்னுமலை** : தலைவர் அவர்களே, இந்த 1965-ம் ஆண்டு இந்திப் போராட்டத்தின்போது ராணுவத்தை வரவழைத்து மாணவர்கள், பொதுமக்கள் இவர்களெல்லாம் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டார்களே, அவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? அப்படிச் சுட்டுக் கொல்லப்பட்டு

எரிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்கள் என்று பொதுமக்களுடைய சந்தேகத்தைப் போக்கும் அளவில் தெரிவிக்க புதிய அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அந்த விவரங்களையெல்லாம் இப்பொது சேகரித்துக் கொடுப்பதால் எந்தப் பலனும் இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், 1965-ல் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் உண்மையிலேயே எத்தனை பேர்கள் இறந்தார்கள் எத்தனை பேர்கள் அங்கஹீனர்களானார்கள் என்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** 'அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது' என்று சொன்னால், எவ்வளவு இடங்களில், யார் யார் உயிர் இழந்தார்கள், யார் யார் எந்த ஊர்களில் உறுப்புக்களை இழந்தார்கள், யார் யார் குடும்பங்களுக்கு உதவியளிக்க வேண்டும், அவர்களுடைய பொருளாதாரநிலை என்ன, அப்படி இறந்தவர்கள் மூலம் யார் யார் குடும்ப வருவாயை இழந்திருக்கிறார்கள், அந்தக் குடும்பங்களுக்கு இப்பொழுது வேறு வருவாயே இல்லையா, என்பன போன்ற அத்தனை விவரங்களையும்தான் யோசித்துக் கொண்டிருக்கிறது என்று அந்த பகுதிக்குள்ளே அடங்கியிருக்கிறது.

**திரு. க. ர. நல்லசிவன் :** 1965-ல் நடந்த துப்பாக்கிப்பிரயோகத்தில் உண்மையிலேயே எவ்வளவு பேர்கள் செத்தார்கள் ? இந்தத் தகவல் இப்பொழுதாவது எங்களுக்குத் தெரிந்தால் நலமாக இருக்கும். ஏனென்றால், பொள்ளாச்சியில் 8 பேர்கள் இறந்தார்கள் என்பது சர்க்கார் கொடுத்த கணக்கு. ஆனால் எங்களுக்குக் கிடைத்த தகவல் 80 பேர்கள் செத்தார்கள் என்பது. என்னுடைய தொகுதியாகிய சென்னிமலையில் 6 பேர்கள் இறந்திருக்க, 2 பேர்கள் என்று சர்க்கார் அறிவித்தது. இதனால் இப்பொழுது எந்தவிதமான விளைவும் ஏற்படாது என்றாலும், விவரமாக எவ்வளவு பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பதைத் தெரிவித்தால் நலமாக இருக்கும். எங்களுடைய மன அமைதிக்காகவாவது அதைக் கொடுப்பார்களா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சர்க்காரிடத்தில் உள்ள புள்ளிவிவரங்கள் எத்தனைபேர்கள் இறந்துவிட்டார்கள், எந்த எந்தப் பகுதியில் என்பதெல்லாம் அந்தப் பகுதி அதிகாரிகள் கொடுத்திருப்பதுதான். இப்பொழுது, 8 பேர் இல்லை 80 பேர் என்கிற தகவல் கிடைத்திருக்கிறது என்று உறுப்பினர் சொன்னதுகூட, யார் யார் காணமல் போனார்கள், அவர்கள் இறந்துவிட்டிருக்கக் கூடும் என்கிற அடிப்படையில்தான். அது சர்க்காருடைய பட்டியலுக்கு அப்பாற்பட்டதாகத்தான் இருக்கும். ஆகவே, பொள்ளாச்சியில் இன்னின்னார், 'சோமசுந்தரத்தின் மகன் சின்னசாமி' 1965-ல் கிளர்ச்சியில் ஈடுபட்டவர் காணப்படவில்லை, அவர் இறந்துவிட்டிருக்கக் கூடும் என்கிற தகவல் கொடுத்தால், அதைப் பற்றி விசாரித்து, துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்திருக்கக்கூடும் என்று அறிவிக்கமுடியும்.



DR. H. V. HANDE : Sir, in continuation of the supplementary question put by the hon. Member, Thiru Nallasivam, are the Government aware that it is an unfortunate position that a number of files which would have given information that so and so people and so many people died, are missing and the Government have made a declaration on those lines. In view of the fact that they are all missing and in view of the enormous anxiety expressed from all sides of the House, will this Government apponit at least a high Police officials to find out the axact number of persons who died. We are entitled to know this information even from the previous Government and now we are entitled to know it at least from this Government. Sir, according to my information in the Salem district 170 persons died and whatever it is, we should know the exact number of persons who died . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி சுருக்கமாக இருக்கட்டும்.

DR. H. V. HANDE : So, will this Government appoint a high Police official to examine the whole matter so that we can know exactly where we stand and also the amount that has been proposed to be paid to the families of those persons who died?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I have already answered a similar question and I have stated that we can presume that so many people have died only when some complaint is made to the Government or the authorities concerned that so and so is missing from that date and therefore it is presumed that he has been shot down. No such complaint has been received and no hon. Member has made attempts to find out such details. As for the fact that a High Power Committee may be appointed to go into the matter, I think it is now too late. We had been urging while we were in the opposition even in 1955 itself that a Commission of Enquiry should have gone into the question. By now most of the evidences or most of the threads would have been cut asunder and such a Commission would not serve any useful purpose now.

THIRU K. VINAYAKAM : Sir, whereas I am in full sympathy with those who lost their lives in the agitation and whereas I also agree those unfortunate incidents could have been avoided if possible and whereas I also believe that the police took to firing purely as a matter of self-defence in many cases and in such cases blame should not be thrown over the then Government and in cases where the Police went in far excess of the powers conferred upon them, will the Government take interest and take not of such instances where those things were wantonly done and only in such cases succour will have to be given to such of those victims and what is exactly the *modus operandi* which the Government propose to take at a later stage—after a lapse of two or three years—when evidences have been destroyed and the threads of investigation are cut out . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியைப் போடுங்கள்.

திரு. கே. வினாயகம்: ஆங்கிலத்தில் போடுவதால் எல்லாம் 'பாரந்தஸிஸ்' ஆக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது தெரியும். கேளுங்கள்.

THIRU K. VINAYAKAM: Mr. Deputy Speaker, I disagree. The question can be put in one sentence with hundreds of words tagged on in parenthetical clauses. The late Mr. Churchill was famous for putting an interpellation with 700 words on the floor of the House and the Government in power got almost tired that they could not follow him . . . .

MR. DEPUTY SPEAKER: But the question must not be of excessive length.

திரு. கே. வினாயகம்: ஒரேவாக்கியத்தில் கேள்விதான் 'எக்ஸிவ்' இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 'எக்ஸஸிவ்' எது என்கிற கருத்தில் வேறுபாடு இருக்கலாம். 'எக்ஸஸிவ்' என்ன என்பதைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு எனக்குத்தான் இருக்கிறது.

திரு. கே. வினாயகம்: அதற்கெல்லாம் உரிமையைக் கொடுத்து விட்டுத்தான் ** ** அதில் என்ன தப்பு என்று அவர்களையே சொல்லச் சொல்லுங்கள்.

THE HON. THIRU A. GOVINDASAMY: Sir, the hon. Member is questioning the chair.

THIRU K. VINAYAKAM: There is nothing wrong.

THE HON. THIRU C. N. ANNADURAI: He has stated it in a lighthearted vein.

THIRU K. VINAYAKAM: We should not be so much touchy. We should have a sense of humour. We have come here on business, you have come here to rule and it is our job to question you and you cannot question us.

இப்படிப்பட்ட நிலையில் *** என்பதில் என்ன தவறு? அது நல்ல வார்த்தை. (we are bound ourselves to the ruling of the chair என்பதுதான் அதற்கு ஆங்கிலத்தில் பொருள். என்பதுதான் அதற்கு ஆங்கிலத்தில் பொருள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆங்கிலத்தில் அப்படி இருக்கலாம். ஆனால், தமிழில் வேறுவிதமாக இருக்கும். ஆகவே, அந்த வார்த்தையை சட்டசபை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் தலைமையின் கட்டளைக்கிணங்க நீக்கப்பட்டது.



திரு. கே. வினாயகம்: 'வி ஆர் பௌண்ட்' என்றால் ** என்று தானே பொருள்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த மொழி பெயர்ப்பு தெரியும். ஆங்கிலத்தில் சொல்வதற்கும், தமிழில் சொல்வதற்கும் வேற்றுமை இருக்கிறது. அது திரு. வினாயகத்திற்குத் தெரியாது. அது முறையான சொல் அல்ல என்பதால் நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுமாறு ஆணையிடுகிறேன்.

THIRU K. VINAYAKAM: Sir, what is the *modus operandi* which the Government propose to have now at this late hour to find out which is in order and which is out of order and how is the Government going to dispense justice to the parties who have lost their lives and limbs and to the parties like the police officers who were responsible for discharging their duties or carried out their duties as loyal subjects of the Government. Do the Government expect them to do otherwise if a situation of that type has arisen now.

THE HON. THIRU C. N. ANNADURAI: Sir, my hon. Friend has quoted Churchil as having made a long interpellation. Interpellations are made lengthy for three reasons. One is, as he has stated, to tire out the Government and another is—that is most important—when an hon. Member feels that he cannot put a question cogently he merely roams about and the third reason for the lengthly question is that apprehensive of not getting another chance of putting another question, he puts in too many questions. I do not know whether my hon. Friend comes under the first of the third category or comes in-between and most probably he comes in-between. Anyhow, as for the question of ocmpensation, as a lawyer he ought to have understood that the proper word is xegratia payment. But now the main question is with regard to giving ex-gratia compensation to the families who were bereaved and who were left without an earning member for their families. Therefore, the mere *modus operandi* is for this Government to find out the position of the family after the bereavement.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்த வினா எண். 309 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விருப்பத்திற்கிணங்க ஒற்றிவைக்கப்படுகிறது. அடுத்த வினா 310-க்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடையளிப்பார்கள்.

### படைக்கலன் தாங்கிய காவல் படையினர்

*310 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்திய அரசுப்பணியில் ஈடுபடுத்தப்படும் நமது மாநில படைக்கலன் தாங்கிய போலீசுப் படையினருக்கு வழங்கும் சம்பளத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறதா?

** மாண்புமிகு பேவைத் தலைமையின் கட்டளைக் கிணங்க நீக்கப்பட்டது.

[1968 மார்ச் 25

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : இந்திய அரசுப் பணியில் ஈடுபடுத்தப்படும் படைக்கலன் தாங்கிய காவல் படையினருக்காகும் செலவை நிலைமைக்கேற்ப இந்திய அரசோ சம்பந்தப்பட்ட மாநில அரசோ ஏற்றுக் கொள்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அடுத்த வினா எண். 311 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விருப்பத்திற்கிணங்க ஒற்றிவைக்கப்படுகிறது. அடுத்த வினா 312-க்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடையளிப்பார்கள்.

*Name board at former Chief Minister's residences.*

312 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the name board at the bungalow of the former Chief Minister Thiru M. Bhakthavatchalam was removed by some miscreants during the month of August 1967; and

(*b*) if so, the action taken to prevent such incidents being repeated?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : (அ) ஆம்.

(இ) இது போன்ற நிகழ்ச்சிகள் மீண்டும் நிகழா வண்ணம் அப்பகுதியில் காவல் கண்காணிப்பு முனைப்பாக்கப்பட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM : Was any investigation made in this affair to find out who exactly were the miscreants that were responsible for this kind of mischief?

THE HON. THIRU C. N. ANNADURAI : An investigation was made and the mischief-monger was not found. But the police posted there was promptly suspended for indifference and slack supervision.

DR. H. V. HANDE : Is the Government aware of the fact that my name board also was lost during the regime of the previous Government as well as the present Government?

THE HON. THIRU C. N. ANNADURAI : I am sorry to hear it. But I am glad that the hon. Member is not making much about it.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி** : தலைவர் அவர்களே, முன்னாள் முதல் அமைச்சர் அவர்களுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அதைப்போல், அதற்கு முன்னால் இருந்த முதலமைச்சர்கள் எல்லோருக்குமே போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறதா ? அல்லது இப்போது பதவிபோன முதலமைச்சர் அவர்களுக்கு மட்டும் போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதா ?



1968 மார்ச் 25]

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : போலீஸ் பாதுகாப்பு என்ற பெயரில் சமூகத்தில் உயர்நிலை வகித்துக்கொண்டிருக்கிறவர்கள், அரசாங்கத்தில் உயர்ந்த மட்டத்தில் பணியாற்றியவர்கள் ஆகியவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று அரசு கருதினால், அப்பேர்ப்பட்டவர்களுக்கு அரசு பாதுகாப்பு அளித்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும.]

## 2. கவன ஈர்ப்பு.

*கச்சத் தீவின் மீது இலங்கை அரசு உரிமை கொண்டாடல்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் ஒரு தீர்மான அறிவிக்கை கொடுத்திருக்கிறார். அவர் தற்போது இடத்தில் இல்லை. அடுத்து, திரு. ஏ. அ. சுப்பாராஜா அவர்களின் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா** : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 41-ன் கீழ், " நமது தமிழகத்தைச் சார்ந்த கச்சத் தீவை இலங்கை அரசாங்கம் உரிமை கொண்டாடுவதைக் குறித்து நமது தமிழக அரசு, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கையைப்பற்றிய " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : தலைவர் அவர்களே, கச்சத் தீவின் சொந்தம் குறித்து புது டில்லி இந்திய அரசின் வெளிவிவகார அமைச்சகம் ஏற்கெனவே ஆலோசித்து வருகிறது. கச்சத் தீவின் உடைமை உரிமை பற்றிய செய்கை விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை அதுகுறித்த ஆவணங்களுடன் அனுப்பிவைக்குமாறு இந்த அரசாங்கத்தை இந்திய அரசு கேட்டுள்ளது. இது குறித்து அறிக்கை ஒன்று இந்திய அரசுக்கு அனுப்பப்படுகிறது. இரு நாடுகளின் நலன் கருதி இதனை மேற்கொண்டு இங்கு விவாதிக்காமல் இருப்பது நல்லது.

**திரு. ஏ. அ. சுப்பராஜா** : தலைவர் அவர்களே, இன்றைய தினம் பத்திரிகைகளில் பார்க்கும்போது, கச்சத் தீவு ஏதோ இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தம் என்ற முறையில் அங்கு போர்க் கப்பல்கள் எல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற நிலைமை

[திரு. ஏ. அ. சுப்பராஜா] [1968 மார்ச் 25

இருப்பதாலே, அதற்கு வேண்டிய துரிதமான நடவடிக்கைகளை எடுக்க, தொடர்பான தஸ்தாவேஜுகளை இராமநாதபுரம் ராஜா அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்று, அனுப்பப்பட்டதா, இல்லையா என்பதை தெளிவுபடுத்த வேண்டுமென்று விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, அதே பத்திரிகைகளில் இன்னொரு செய்தியையும் படித்தேன். இரு நாடுகளின் யாத்திரிகர்களும் அந்தத் தீவிற்குச் சென்று திரு விழாவை நல்ல முறையில் கொண்டாடினார்கள். இது ஒரு அரசு களுக்கும் நல்ல தோழமை இருப்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சனையை இங்கு அதிகமாக விவாதிக்காமல் இருப்பதுதான் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தற்பொழுது திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தன்னுடைய இருப்பிடத்தில் இருக்கிறார். அவை அனுமதியளித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரும்பினால், அவருடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தை கொண்டுவந்து விடையளிக்கலாம்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நாளைய தினத்திற்கு அந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. எஸ். இராமச் சந்திரன் அவர்களுடைய கவன ஈர்ப்புத் தீர்மானம் நாளையதினம் எடுத்துக் கொள்ளப்படும்.

### 3. அறிக்கை அளித்தல்.

### (i) உறுப்பினர் திரு வ. ஜார்ஜ் மீதுள்ள உரிமை மீறல் வழக்கு பற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, அவை உரிமைக் குழுவின் அறிக்கையை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் பேரவைமுன் கொண்டுவருவார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. ஜார்ஜ் அவர்கள் பேரவைத் தலைமை மீது ஒருதலைக் குற்றம்சாட்டி, அவையின் உரிமையை மீறியதாக ஏற்பட்ட வழக்குபற்றிய அறிக்கையை அவையின் முன் வைக்கிறேன்.

### 4. 1967-68-ம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதி அறிக்கை— பேரவைமுன் வைத்தல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 1967-68-ம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகளைச் சட்டப் பேரவை முன்வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை ஆற்றுவார்.



1968 மார்ச் 25]

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டிற்குரிய இறுதித் துணை மதிப் பீடுகளைச் சட்டப் பேரவையின்கண் வைத்திட முன்வந்துள் ளேன். இத்துடன் பல்வேறு மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான விவர அறிக்கை ஒன்றும் பேரவை முன் வைக்கப் பட்டுள்ளது. இம்மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை 9 கோடியே 31 இலட்சம் ரூபாயாகும் ; இதில் 7 கோடியே 95 இலட்சம் ரூபாய் நடைமுறைக் கணக்கின்பாற் பட்டதாகும்.

கடந்த திங்களில், நடப்பு ஆண்டிற்கான முதல் துணை மதிப் பீடுகள், இப் பேரவையின்முன் வைக்கப்பட்ட தருணத்தில், இவ் வாண்டின் திருத்த மதிப்பீடுகளில் காணப்பட்ட உயர்வுகளின் கணிசமான பகுதிக்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டதை இம் மாமன்றம் நினைவுகூருமென நம்புகின்றேன். பொதுவாக, திருத்த மதிப்பீடுகள், நிதியாண்டின் முதல் நான்கு திங்கள் அல்லது சில சமயங்களில் முதல் ஆறு திங்களில் ஆகும் செலவின அடிப்படையில் அக்டோபருக்கும் டிசம்பருக்கும் இடையே தயாரிக்கப்படுகின்றன. அரசின் பற்பல துறைகள், தம்முடைய செலவினத் தேவைகளை, ஜனவரி அல்லது பிப்ரவரித் திங்களில் மறு ஆய்வு செய்து, தங்கள் மதிப்பீடுகளை அரசாங்கத்துக்கு அனுப்புகின்றன. இந்த நடைமுறையின்போது கூடுதல் நிதி வேண்டிவரும் சில வேண்டுகோள்களை நாம் ஏற்கவேண்டியுள்ளது. இவ்வாறாக, இப்போது இப்பேரவையின் முன்புள்ள இறுதித் துணை மதிப்பீடுகள், வெவ்வேறு துறைகளின் செலவினப் போக்கு களைக் குறித்து, மிக அண்மையில் மேற்கொண்ட கணிப்பின் அடிப் படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. மற்றும், அவை முந்திய ஆண்டுகளைப் போலவே. திருத்த மதிப்பீடுகளைவிடச் செலவினங் கள் ஓரளவிற்கு உயர்ந்திருப்பதையும் காட்டுகின்றன.

இப்போது வேண்டப்படும் நிதி ஒதுக்கத்தின் குறிப்பிடத்தக்க பகுதி, நமது மாநிலத்திலுள்ள பற்பல உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி மாற்றங்கள் செய்வதற்கு வகை செய்யும் முறையில் உள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் காணலாம். ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் வீட்டுவரி, உள்ளூர்த் தீர்வை, மேல்வரி (Local-cess surcharge) முதலிய வரியினங்களின் கீழ் ஈட்டிய தொகைகளுக்கு ஏற்ப, இணை மானியங்கள் வழங்குவதற்காக 33-வது கோரிக்கையின் கீழ் 50 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது. உள்ளாட்சி மன்றங்களின் சார்பில் கேளிக்கை வரியின்கீழ், எதிர்பார்க்கப்பட்டதைவிடக் கூடுதலாக அரசிற்குக் கிட்டிய தொகைக்கு இணங்க, இம் மன்றங்களுக்கு நிதி மாற்றம் செய்யும் வகையில் 36-வது கோரிக்கையின்கீழ் 78 இலட்சம் ரூபாய் வேண்டப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் பேணி வருகின்ற தாய்-சேய் நல நிலையங்களின் பொருட்டு, அவை கட்கு வழங்கவேண்டிய அதிக மானியங்களுக்காகவும் 15 இலட்சம் ரூபாய் அளவில் மீண்டும் 15-வது கோரிக்கையின்கீழ்

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 மார்ச் 25

நிதி வேண்டப்படுகிறது. புயல் காரணமாய் உள்ளாட்சி மன்றங்களின் அதிகார வரம்பிலுள்ள சாலைகளுக்கும் கட்டிடங்களுக்கும் நேரும் சேதங்களைச் செப்பனிடுவதற்காக அம் மன்றங்களுக்கு 8.5 இலட்சம் ரூபாய் 29-வது கோரிக்கையின்கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. மாநில அரசின் வழிவகை நிதி நிலையை உடனடியாகப் பாதிக்காத நிலையில் உள்ள இந்த நிதி மாற்றங்கள், உள்ளாட்சி மன்றங்களின் நிதி நிலையை வலுப்படுத்தி, அவைகளிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ள இன்றியமையா வளர்ச்சிப் பணிகளை, அவை செவ்விய முறையில் நிறைவேற்றுவதற்குத் துணை செய்யுமென்று நான் உறுதியாய் நம்புகின்றேன்.

கடுங் காற்றால் நிலை குலைந்த சிறுபாசன வாயில்களைச் சீராக்கும் செலவினங்களுக்காகத் தற்போதைய துணை மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டிருப்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் காணலாம். இச் செலவினம் ஏற்கெனவே சட்ட மன்ற அவைகளின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. புயல் காரணமாக மேற்கொள்ளவேண்டிய சீரமைப்புப் பணிகளுக்காகவும் ஏனைய செலவினங்கட்காகவும் இந்திய அரசும் சிறப்புக் கடனுதவி அளித்துள்ளது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு ஜூன் திங்களில் அறிவிக்கப்பட்ட கொள்கைகளுக்கு இணங்க, பேருந்து வழித் தடங்களை நாட்டுடைமையாக்கும் அரசுப் பணித் திட்டம், குறித்தவாறு முன்னேற்றமடைந்து வருகிறதென்பதை அறிய, இப் பேரவை களிப்பெய்துமெனக் கருதுகிறேன். இதுகாறும் 169 பேருந்து வழித் தடங்களை நாம் நாட்டுடைமையாக்கியுள்ளோம்; இவ் வழித்தடங்களில் இப்போது 256 பேருந்துகள் இயங்கி வருகின்றன. தற்போதைய துணை மதிப்பீடுகளில் 30-வது கோரிக்கையின்கீழ் வகை செய்யப்பட்டுள்ள 112 இலட்சம் ரூபாயில் பெரும்பகுதி, நாட்டுடைமையாக்கப்பட்ட இவ் வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கான செலவினைக் குறிக்கிறது. இவ் வழித்தடங்களின் வாயிலாகக் கிடைக்கும் வரவினங்களிலிருந்து இப்போது வேண்டப்படுகிற இக் கூடுதல் தொகை, முற்றிலும் சரிக்கட்டப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மூலதனக் கணக்கை நோக்கும்போது, இரசாயன உரவகைகளை வாங்குவதற்காக, உழவர்களுக்குக் கடன்கள் வழங்கும் பொருட்டு, கூடுதலாக 47.5 இலட்சம் ரூபாய் 47-வது கோரிக்கையின்கீழ் வகை செய்யப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பார்களெனத் திண்ணமாய் நம்புகின்றேன். இத் தலைப்பின் கீழ், முதற்கண் வரவு-செலவுத் திட்டத்தில் ஒரு கோடி ரூபாய் மட்டுமே வகை செய்யப்பட்டதற்கு மாறாக, இப்போது ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்க நம்மால் இயன்றுள்ளது. வருவாய் வாரியத்தின் வாயிலாகச் செயல்படுத்தப்படும் சிறு பாசனச் சிறப்புத் திட்டத்திற்கென



[திரு. சி. என். அண்ணாதுரை] 1968 மார்ச் 25]

வரவு-செலவுத் திட்டத்தில் முதற்கண் ஒதுக்கியிருந்த 108 இலட்சம் ரூபாய்க்கு எதிராக, இப்போது 165 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, இத் துறையின் முதலீட்டு அளவினை உயர்த்தியுள்ளோம். முதல் துணை மதிப்பீடுகளில் ஏற்கனவே வகை செய்யப்பட்டுள்ள கூடுதல் நிதி ஒதுக்கத்தையும், இம் மானியத்தின் மற்ற இனங்களில் ஏற்படும் சேமிப்புகளையும் ஈடு செய்த பின்னர், மேலும் மு. ப.
தேவைப்படுகிற 25 இலட்சம் ரூபாய்க்கு 41-வது கோரிக்கையின் 10-30
கீழ் நிதி ஒதுக்கம் கோரப்படுகிறது.

இத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள ஏனைய செயற்குறிப்புகளுக்கு, விவர அறிக்கையில் கொடுத்துள்ள விரிவான விளக்கக் குறிப்புகளே சாலும் என நினைக்கிறேன். எனவே, சிறப்பான வேறு விளக்கங்கள் மிகையாய் இருக்குமெனக் கூறி, இத் துணை மதிப்பீடுகளை இப்பேரவை ஏற்குமாறு வேண்டுகின்றேன்.

### 5. 1968-69-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).

#### (i) கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

" கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,12,11,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்.".

THIRU K. VINAYAKAM : Sir, 'to discuss the general policy and the visits of the Hon'ble Ministers to the constituencies of different members of the Legislature '—I move the following cut motion :—

"That the allotment of Rs. 6,12,11,000 under Demand No. 8—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Rs. 100."

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரெவின்யூ போர்டு நிலை ஆணைகளை (Standing Orders) திருத்தி அமைக்காததைப்பற்றி எடுத்துக் கூற—

கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 6,12,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்று வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1968 மார்ச் 25

**கோரிக்கை எண் 6—மாநிலச் சட்ட மன்றம்.**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

" கோரிக்கை எண் 6—மாநிலச் சட்ட மன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,95,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவை அங்கத்தினர்களுக்கு இலவசமாக இரயில்வே பாஸ் கொடுக்காததைப் பற்றி எடுத்துச் சொல்ல " கோரிக்கை எண் 6—மாநிலச் சட்ட மன்றம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 19,95,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. RAMAMOORTHI : Sir, 'to discuss about the need to provide a better equipped Legislature Library, Lobby and Canteen for the Legislators'. I move the following cut motion :—

" That the allotment of Rs. 19,95,200 under Demand No. 6.—State Legislature be reduced by Rs. 100."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு வருகின்றன.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர்களுடைய கருத்துக்களை அறிந்து பின்னர் ஏதாவது விளக்கம் தர வேண்டுமானால் தரலாம் என்று இருக்கிறேன். முன்னுரையாக ஏதுவும் சொல்வதற்கில்லை.

**3. அறிக்கை அளித்தல்—தொடர்ச்சி.**

(ii) சென்னை பால்பண்ணை—பால் வழங்கும் திட்டம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் இப்போது பால்பண்ணை—பால் வழங்கும் திட்டம் பற்றிய கொள்கை விளக்கத்தைப் பேரவைமுன் வைப்பார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை பால் பண்ணை—பால் வழங்கும் திட்டம் பற்றி 1968-69-ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பை * பேரவை நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெற வேண்டும் என்று இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

** 141-153-ம் பக்கங்களில் III-ம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1968 மார்ச் 25]

**5. 1968-69-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.**

**(ii) கோரிக்கை எண் 6—மாநிலச் சட்ட மன்றம்.**

*** திரு. டி. மார்டின் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து, அதனையொட்டி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

பாராளுமன்ற முறையை அனுசரித்து நடைபெறுகிற ஜனநாயக அமைப்பில் ஆளும் கட்சி என்று ஒரு கட்சியும், அதற்கு எதிர்த்தரப்பில் அரசு என்ற தேரை ஒழுங்காக நடத்திக் கொண்டு போவதற்கு எதிர்க்கட்சி என்று ஒரு கட்சி அமைப்பையும் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் ஆளும் கட்சி அரசு நடத்துகின்ற துறைகளில் உள்ள குற்றச்சாட்டுகளை எதிர்த் தரப்பில் இருக்கக்கூடிய கட்சி நல்ல முறையில் குற்றங்களை எடுத்துக்காட்டுவதற்கும் செவ்வனே தம் பணியைச் செய்வதற்கும் உதவியான அமைப்பு இருக்கிறதா என்று பார்த்தால் நான் இல்லையென்றே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காரணம் என்னவென்றால், ஆளும் கட்சியினர்களுக்கு அரசாங்க தலைமைச் செயலகச் செயலாளர்கள் புள்ளி விவரங்களைச் சேகரித்து அவ்வப்போது கொடுக்கிறார்கள். எதிர்க்கட்சித் தரப்பில் இருக்கிற உறுப்பினர்களுக்கு எந்தவிதமான புள்ளி விவரங்களும் அளிக்கப்படுவதில்லை. நிதி இலாக்கா தயாரித்தளிக்கிற நிதி நிலைக் குறிப்புகளில் இருந்து சில விவரங்களை அறிந்துகொள்ள வேண்டுமானால் அந்த அந்த இலாக்கா செயலாளர்களிடம் சென்று கேட்கலாம் என்றால் அவர்களால் உதவி செய்வதற்கு முடியாத அளவுக்கு அவர்களுக்கு வேறு வேலைகள் இருக்கின்றன. அன்றாட சட்டப்பேரவை நிகழ்ச்சிகளினால் அவர்களுக்கு ஓய்வு இல்லை. ஆகவே எங்களுக்கு அவர்களிடம் சென்று விளக்கம் பெற வாய்ப்பில்லை. ஆகவே சட்ட மன்றம் நடக்கிற காலத்தில் எங்களுக்கு உதவி செய்கிற தனி அமைப்பினை அரசு அமைத்துத் தரவேண்டும், அப்போதுதான் வேண்டிய நேரத்தில் தக்க விளக்கத்தைப்பெற்று நாங்கள் சரியான முறையில் பணியாற்ற உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சட்ட மன்றத் துறையில் பணியாற்றுகிற செயலாளர், உதவிச் செயலாளர்கள், மற்றும் உள்ள அலுவலர்கள் எல்லோரும் மிகவும் அன்புடன் எதிர்க்கட்சிக்காரர்களை நடத்துகிறார்கள். நாங்கள் கேள்விகள் அனுப்பியவுடனேயே நம்பர் கொடுத்து அனுப்பிவிட்டதாக எங்களுக்குத் தெரிவிக்கிறார்கள். ஆனால் இலாக்காக்களில் இருந்து அவற்றுக்குப் பதில்

அனுப்புவதில்தான் மிகுந்த காலதாமதம் ஆகிறது. அதற்கு உதாரணமாக இன்று காலையில் ஒரு கேள்விக்கு பதில் அளித்த மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் அவர்களே கூறினார்கள். கோவையில் உள்ள தானிய விநியோகக் கடைகளுக்குச் சென்று வந்து எத்தனையோ நாட்களுக்குப் பிறகு இந்தக் கேள்வி வருகிறது என்றார்கள். இப்படிக் கேள்வி கொடுத்து ஓராண்டுக்கு மேலாகியும் பதில் வரக் காலதாமதமாகிறது. உண்மையிலேயே மிகவும் முக்கியமான ஒரு பிரச்சினைபற்றிக் கேள்விகள் கேட்கின்றபொழுது அக்கேள்விகளை வெகு சீக்கிரமாக என்னிட்டு பதிவுசெய்து இந்த அவையில் வைக்கவேண்டும்; இதிலே காலதாமதம் என்ற குறையை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர்கள் என்ற தலைப்பின் கீழ் 1967-68-க்கு 5.05 இலட்சம் என்று ஒதுக்கப்பட்டு இப்பொழுது அது 8.40 இலட்சமாக செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதிகமாக 3 இலட்சம் ரூபாய் 1967-68-ல் செலவாகியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். டிராவலிங் அலவன்ஸில் 1967-68-க்கு 1 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இப்பொழுது 1 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் செலவாகியிருக்கிறது. மேலும் மற்ற (அதர்) அலவன்ஸஸ் என்ற தலைப்பின்கீழ் 1967-68-ல் 37 ஆயிரம் என்று ஒதுக்கீடு செய்து 59 ஆயிரம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. 1968-69-க்காக அதர் அலவன்ஸஸ் என்ற தலைப்பில் 6 இலட்சத்து 63 ஆயிரம் கேட்கப்பட்டிருக்கிறது. ஆக அமைச்சர்கள் அதிகமாக சம்பளம் வாங்கவில்லையென்றாலும் பாதிச் சம்பளம்தான் வாங்குகிறார்கள் என்ற உண்மை நிலை இருந்தாலும் கூட, செலவு அதிகமாகியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். டிராவலிங் அலவன்ஸஸ் என்ற தலைப்பில் 1 இலட்சத்து 10 ஆயிரம் என்று ஒதுக்கப்பட்டு அதற்கு 1 இலட்சத்து 22 ஆயிரம் என்று செலவாகியிருக்கிறது. எனவே சிக்கன நடவடிக்கைகளைச் செம்மையாகச் செய்யவேண்டுமென்று நினைக்கின்ற ஒரு அரசு தங்களுடைய செலவுகளைக் குறைத்துக் காண்பிக்கவில்லையே என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். 1967-68-ல் கார்களுக்கு ஒதுக்கப்பட்ட பணம் 30 ஆயிரம், ஆனால் 2 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவாகியிருக்கிறது. 1968-69-லே 57 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. சிறிய கார்களில் செல்லுகிறார்கள் அமைச்சர்கள் என்று பொதுமக்கள் வரவேற்கிறார்கள். ஆனால் செலவு என்னவோ அதிகமாக இருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். விமன் வெல்ஃபேர் என்ற வகையில் இந்த வருடம் அதிகமாகப் பணம் ஒதுக்கப்படவில்லையென்பதை அரசினரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். விலைவாசிகள் குறைப்புக்காக அமைக்கப்பட்ட ஒரு கமிட்டி தன்னுடைய ரிப்போர்டை அரசுக்குக் கொடுத்து விட்டதா? கொடுத்திருக்குமானால் இந்த மாமன்றத்திலே இத்தொடர் கூட்டத்திலேயே அதை வைத்திருக்கலாமே, ஏன் வைக்கவில்லை, அதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.





மேலும், சட்டமன்ற நடவடிக்கைகளை அந்த அந்த உறுப்பினர்கள் கைவசம் உடனே கொடுக்கமுடியாத காரணத்தால் டேப் ரிக்கார்ட் செய்து நடவடிக்கைகளையெல்லாம் நடப்பது போன்று அப்படியே எடுத்து வைத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிற்சில சமயங்களில் சபை நடவடிக்கைகள் என்ன நடந்தது என்று தெரிந்து கொள்ளவேண்டுமானால் மறுநாள் பேச்சுக்கள் வைக்கப்பட்டால் பார்த்துக்கொள்ள முடியும். அந்த நிலைமைத் தற்சமயம் இல்லாத காரணத்தாலே சட்டசபை நடவடிக்கைகளை டேப் ரிக்கார்டர் செய்வது நல்லது என்று கருதுகிறேன். இதைப்பற்றி கடந்த ஆட்சி காலத்தில் எதிர்க்கட்சியாக தி.மு.க. உறுப்பினர்கள் இருந்தபொழுது குறிப்பாக திரு. எம். எஸ். மணி அவர்கள் இந்தச் சபையிலே இப்படிப்பட்ட ஒரு யோசனையைக் கூறியிருக்கிறார்கள். இன்று அவர்கள் ஆளுங் கட்சியிலே இருக்கிற காரணத்தாலே அமைச்சர் அவர்களிடம் கூறி டேப் ரிக்கார்டர் சிஸ்டத்தைக் கொண்டுவருவது நல்லது. அப்பொழுது எதிர்க்கட்சியிலிருந்தபொழுது கூறியவர்கள் இப்பொழுது ஆளுங்கட்சியில் இருக்கிற நிலைமையைப் பயன்படுத்தி இந்த சிஸ்டத்தைக் கொண்டுவரவேண்டும்.

அவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றம் பிரிட்டிஷ் பாராளுமன்ற முறைப்படி இயங்கி வருகிறது. இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய பிரிவிலேஜஸ், உறுப்பினர்களுக்கு இருக்கக்கூடிய பிரிவிலேஜஸ், இந்த மாமன்றத்தால் நியமிக்கப்பட்டிருக்கின்ற கமிட்டிகளுக்கு இருக்கிற பிரிவிலேஜஸ் இவை போன்றவை இன்னும் 'கோடிபை' ஆகாமல் இருக்கின்றன. குறிப்பாக நாம் நம்முடைய அரசியல் சட்டத்தைக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிரிட்டிஷ் பாராளுமன்ற விதிமுறைகளைக் கூட 26—1—1950 வரைக்கும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் எந்த விதமான பிரிவிலேஜஸ் எந்தவிதமான அதிகாரங்கள் இருக்கின்றனவோ அதைத்தான் நாம் கடைபிடிக்கவேண்டியிருக்கிறது. நம்முடைய கான்ஸ்டிடியூஷனில் ஆர்டிக்கிள் 194-ல் குறிப்பாக சட்டசபையைப் பொறுத்த வரையில் கூறியிருக்கிறது. ஆனால் பாராளுமன்ற நடவடிக்கைகளைப் பொதுவாக இந்த நாட்டின் பிரஜை தேடிப் படிப்பது எளிதான காரியமல்ல. பாராளுமன்ற நடவடிக்கைகளில் எந்த எந்த பிரிவிலேஜஸ் 1950-க்கு முன் லண்டனில் நிர்ணயம் செய்தார்கள், எதை விட்டு விட்டார்கள், எதை நடைமுறையில் இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற விளக்கம் பொதுமக்கள் மத்தியில் இல்லை. இந்த அவையிலே உள்ள உறுப்பினர்களுக்கும் அவற்றைச் சரியாகப் புரிந்து கொள்ளமுடியாத நிலை இருக்கிறது. ஸ்டிரே இன்ஸ்டன்ஸஸ் ஆப் கேஸஸ் சிற்சில சமயங்களில் எழுப்பப்பட்டு கேஸ்களுக்கு பாராளுமன்றத் தீர்ப்பினையொட்டி முடிவு வழங்கப்படுகிறது. ஸ்டிரே இன்ஸ்டன்ஸஸ் ஆப் கேஸஸ் பற்றி ஒரு சட்டம் (லா), ஒரு அமைப்பு முறையில், உண்டாக்கப்பட்டு இன்னும் விதிமுறைகள் அமையப் பெறாமல் இருக்கிறது.

[திரு. டி. மார்டின்] [1968 மார்ச் 25

பொதுமக்கள், சபையின் கண்ணியத்தையும், உறுப்பினர்களுடைய பிரிவிலேஜஸையும் சபாநாயகருடைய பிரிவிலேஜஸையும் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக வழிமுறைகளை வகுத்துக் கொடுக்க வேண்டும். நம்முடைய அரசியல் சட்டத்தில் ஆர்ட்டிகிள் 19 என்ற விதியில் மிகவும் தெளிவாக

'Protection of certain rights re-freedom of speech'.

'All citizens shall have the right to freedom of speech and expression'.

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பேச்சு சுதந்திரத்தை அரசியல் சட்டம் பொதுமக்களுக்கு அளித்திருக்கிறது. ஆர்ட்டிகிள் 194 மெம்பர்களுக்கு பேச்சு சுதந்திரத்தை அவையில் கொடுத்திருக்கிறது. பேச்சு சுதந்திரம், எழுத்து மூலமாக வடிவமாகக் கொடுக்கப்பட்ட சுதந்திரம் எந்தவிதமாகக் குறையும் என்பதைப் பற்றி இந்த மாமன்றத்திலே விவாதித்து அதற்காக பிரிவிலேஜஸ் பற்றி ஒரு லா. எனக்ட் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆர்ட்டிகிள் 194-இல் தெளிவாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

'Powers, Privileges and Immunities of State Legislatures and their Members'.

'194 (1) Subject to the provisions of the Constitution and to the rules and standing orders regulating the procedure of the Legislature, there shall be freedom of speech in the Legislature of every State.'

(2) No number of the Legislature of a State shall be liable to any proceedings in any Court in respect of anything said or any vote given by him in the Legislature or any committee thereof, and no person shall be so liable in respect of the publication by or under the authority of a House of such a Legislature of any report, paper, votes or proceedings.

(3) In other respects, the powers, privileges and immunities of a House of the Legislature of a State, and of the members and the committees of a House of such Legislature, shall be such as may from time to time be defined by the Legislature by law, and, until so defined, shall be those of the House of Commons of the Parliament of the United Kingdom, and of its members and committees, at the commencement of this Constitution.

(4) The provisions of clauses (1), (2) and (3) shall apply in relation to persons who by virtue of this Constitution have the right to speak in, and otherwise to take part in the proceedings of, a House of the Legislature of a State or any committee thereof as they apply in relation to members of that Legislature.'

இங்கு ஆர்ட்டிகிள் 194(3) இல் குறிப்பிடப்பட்டிருக்கிறபடி இந்த லெஜிஸ்லேச்சர் தனக்குண்டான பிரிவிலேஜஸ், பவர்ஸ் இவை பற்றி விளக்கமான சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



1968 மார்ச் 25] [திரு. டி. மார்டின்]

மேலும் அதற்கான விளக்கமும் அரசியல் சட்டத்தில் ஷெட்யூல் 7— eatry 39-ல் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

'Powers, privileges and immunities of the Legislative Assembly and of the members and the committees thereof and, if there is a Legislative Council, of that Council and of the members and the committees thereof; enforcement of attendance of persons for giving evidence or producing documents before committees of the Legislature of the State.'

எனவே, அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற 'மான்டேட்டரி டியூட்டி' படிக்கு நம்முடைய அசெம்பிளி சட்ட வடிவத்தைக் கொடுக்க முன் வரவேண்டுமென்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த அமைச்சரவையைப் பற்றிப் பொதுமக்கள் மத்தியில் கட்சி சார்பாக நடக்கிறார்கள் என்ற பரவலான குற்றச்சாட்டு இருக்கிறது. குறிப்பாக, பத்திரிகைகளுக்கு அரசாங்க விளம்பரங்களைக் கொடுப்பதைப் பொறுத்தவரை பழைய அரசாங்கம் சில பத்திரிகைகளுக்குக் கொடுத்து வந்த விளம்பரங்கள் இந்த அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, நெல்லை மாவட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும், இராமநாதபுரம், மதுரை, திருச்சி போன்ற மாவட்டங்களிலும் அதிகமான மக்களால் படிக்கப்படுகின்ற தினமலர் பத்திரிகைக்குக் கொடுக்கப்பட்டு வந்த விளம்பரங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. 'தமிழ் நாடு' என்ற தனித் தமிழிலே மதுரையிலிருந்து வெளி வருகின்ற பத்திரிகைக்கு சர்க்கார் விளம்பரங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அடுத்தாற்போல், கோவையில் இருந்து வெளிவரும் 'நவ இந்தியா' பத்திரிகைக்கு விளம்பரங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. சென்னையிலிருந்து வரும் 'நவசக்தி' பத்திரிகைக்கும் சர்க்கார் விளம்பரங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இந்தப் பத்திரிகை முன்பு ஜெயிலுக்குச் சென்று கொண்டிருந்ததும் நிறுத்தப்பட்டிருக்கிறது. தினமணி, மித்திரன், நவ மணி போன்ற பத்திரிகைகளுக்குப் பெயரளவுக்கு விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்ற நிலையிலே, தினத்தந்தி, மாலை முரசு, முரசொலி, நம் நாடு, மாலை மணி போன்ற பத்திரிகைகளுக்கு அதிகமான அளவில் அரசாங்க விளம்பரங்கள் தரப்படுகின்றன. இவ்வாறு பத்திரிகைகளுக்கு சர்க்கார் விளம்பரங்கள் கொடுக்கும் போது அதற்கான தொகையை வரிப் பணத்திலிருந்துதான் கொடுக்கிறது. அரசு இவ்வாறு விளம்பரங்களைக் கொடுப்பது பற்றிய கொள்கை விளக்கத்தைக் கொடுக்கவேண்டும் இந்த இந்த அடிப்படையில்தான் பத்திரிகைகளுக்கு சர்க்கார் விளம்பரங்கள் தரப்படுகின்றன என்பது பற்றிய கொள்கை விளக்கத்தைச் சொன்னால் நலமாக இருக்கும்.

[திரு. டி. மார்டின்] [1968 மார்ச் 25

அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் பிரயாணத்திற்குச் செல்லுகின்ற போது தங்களுடைய கார்களில் தேசியக் கொடியை வைத்துச் செல்லவேண்டும். தேசியக் கொடியை வைத்துச் செல்லும்போது, அமைச்சர்கள் வருகிறார்கள் என்று சாதாரணப் பொதுமக்களும் அறிந்து கொள்ள முடியும், மற்றவர்களும் அறிந்து கொள்ள முடியும். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமைச்சர்களை வரவேற்கிறார்களோ இல்லையோ, ஒரு ஊருக்கு அமைச்சர்கள் வருகிறார்கள் என்றால் அந்த ஊரில் அமைச்சர்கள் போய்க் கொண்டிருந்தால் காரைப் பொதுமக்கள் அடையாளம் கண்டு கொள்ள தேசியக் கொடியோடு சென்றால்தான் நலமாக இருக்கும். கட்சிக் கொடியை மட்டும் வைத்துக் கொண்டு செல்லுகிறபோது கழகத்திலுள்ள பிரமுகர்கள் செல்லுகிறார்களோ என்று பொதுமக்கள் நினைக்க வேண்டியதிருக்கும். ஆகவே, அமைச்சர்கள் செல்லும்போது தேசியக் கொடியை வைத்துக் கொண்டு செல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

* திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாநிலச் சட்டமன்றம் ஆகியவற்றின் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலும், மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களாலும் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளை ஆதரிக்கும் முகத்தான் என்னுடைய சில கருத்துக்களைக் கூறிக்கொள்ள விழைகிறேன்.

கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இந்த ஓராண்டுக் காலத்தில் என்னென்ன சாதனைகளைச் செய்திருக்கிறது என்பதற்கு இந்த மாமன்றமும், வெளி உலகமும் நல்ல சாட்சிகளாக இருக்கின்றன. கழகம் உள்ளே நுழைகின்ற நேரத்திலே தான் மட்டும் உள்ளே நுழையாமல் தமிழையும் உள்ளே அழைத்துக் கொண்டு வந்தது. அதற்கு நல்ல சாட்சி---மாநில ஆளுநர் தம்முடைய உரையை ஆற்றுகின்ற நேரத்திலே, அவர் அமர்ந்திருந்த இடத்திற்கு எதிரே திருவள்ளுவர் படம் இருக்க, ஆளுநர் அவர்களும் வெண்தாடி உடையவராக இருக்க, இந்த 20-ம் நூற்றாண்டில் ஒரு திருக்குறளைக் கூறி, தமிழுக்கும், தமிழ் உலகத்திற்கும் உரிய சிறப்பைத் தந்தது நாம் எல்லாம் பெருமைபடத்தக்க செய்தியாகும்.

முன்பெல்லாம் சாதாரண ஏழை எளியவர்கள் மகஜர் எழுத வேண்டுமென்றால் ஆங்கிலத்திலேதான் எழுதப்படவேண்டும், ஆங்கிலத்திலே எழுதப்பட்டு அனுப்பப்பட்டால்தான் தனி மதிப்புப் பெறும் என்ற நிலை இருந்தது. 'தமிழக அரசு தலைமைச் செயலகம்' என்று சொல்லப்படுகின்ற இன்று, தமிழ் ஆட்சி நடைபெறுகிற காரணத்தால் எழுதப்படுகின்ற மகஜர்கள் எல்லாம் தமிழிலேயே எழுதப்பட்டு அனுப்பப்படுகின்றன. அந்த அளவுக்கு ஏழை எளியவர்களின் குறைபாடுகளைத் தீர்க்கும் அளவுக்கு ஆட்சியின் செயல் எட்டியிருக்கிறது.



1968 மார்ச் 25] [திரு. கா. வேழவேந்தன்]

(திரு. இராம. அரங்கண்ணல் தலைமை)

எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் 'அமைச்சர்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொண்டாலும் பயணப்படி கொஞ்சம் அதிகமாக இருக்கிறது' என்ற கருத்தைக் குறிப்பிட்டார்கள். இந்தியாவிலே இருக்கின்ற 17 மாநிலங்களில் முதல் முதலாகத் துணிச்சலோடு நல்ல எண்ணத்தோடு இந்த மாநில அமைச்சர்கள்தான் தங்களுடைய சம்பளத்தைக் குறைத்துக் கொண்டார்கள். பக்கத்திலேயுள்ள மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய சம்பளத்தை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்பதற்காகத் தனி விதிகளை வகுத்துக் கொண்ட நேரத்தில் தமிழக அமைச்சர்கள் தங்களுடைய சம்பளத்தைக் குறைத்துக் கொண்டதைப் பற்றி எதிர்த்தரப்பினர் ஒரு வரி பாராட்டாதது மட்டுமல்ல, பயணப்படி அதிகமாகியிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். உண்மை என்னவென்றால், நம்முடைய அமைச்சர்கள் பொறுப்பேற்ற பிறகு ஒவ்வொரு பகுதிக்கும் வந்தாக வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறார்கள். எந்தக் கட்சி உறுப்பினர் குற்றம் சாட்டுகிறாரோ அவருடைய கட்சி உறுப்பினர்களே வற்புறுத்தி அழைக்கிறார்கள். அந்த நிலையில் பத்து அழைப்பிலே ஐந்து அழைப்பையாவது தட்ட முடியாத நிலைமையில் அமைச்சர்கள் இருக்கிற காரணத்தால் கொஞ்சம் பயணப்படி அதிகமாகி இருக்கலாம். செங்கற்பட்டு மாவட்டத்தின் கோடியில் இருக்கும் திருத்தணி தொகுதிக்கு முதலமைச்சர் அவர்களை திருத்தணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வற்புறுத்தி அழைத்துச் சென்றார் என்பதை நினைவுபடுத்திக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எல்லாப் பிரச்சினைகளையும் அணுகி வரும் முறை எல்லோருக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கிறது. மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டக் கூடிய அளவிலேயே இருக்கின்றன. கோவை மில் தொழிலாளர் பிரச்சினையாக இருந்தாலும் சரி, மாணவர் பிரச்சினையாக இருந்தாலும் சரி, மற்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, சம்பந்தப்பட்டவர்களை நேரடியாக அழைத்து இரவெல்லாம் கண்விழித்து அவர்களுடன் கலந்து பேசி நிலைமையைச் சமாளிப்பதற்காக உரிய யோசனைகளையும், வழிவகைகளையும் காட்டுகின்ற காரணத்தால் அந்தப் பிரச்சினைகள் நல்ல முறையில் முடிவதோடு சுமுகமான ஆட்சி முறைக்கு வழி கோலுவதாக அமைந்திருக்கிறது என்பதை உணர முடிகிறது. ஆளுநர் அவர்கள் உரையில் கூறியுள்ளது போல் இந்தியாவிலுள்ள மற்ற எல்லா மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்திலேதான் குழப்பம் இல்லாத முறையில் சீரிய ஆட்சி அறிஞர் அண்ணாவின் தலைமையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மாநிலத்தைப் பற்றி மற்ற மாநிலங்களில் இருப்பவர்கள் எல்லாம் கூட, மத்திய அமைச்சர்கள் கூடப் பாராட்டியிருக்கிறார்கள். அதற்கு முக்கியமாக உள்ள ஒரு சில காரணங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. கா. வேழவேந்தன்] [1968 மார்ச் 25

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மதுவிலக்குப் பிரச்சினையிலே மிகவும் ஆணித்தரமாக இருக்கிற காரணத்தால் மற்றவர்கள் எல்லாம் போற்றுகிறார்கள். மதுவிலக்கிலிருந்து விதிவிலக்கு வேண்டுமென்று மற்றவர்கள் சட்டம் செய்து கொண்டிருக்கும் நேரத்தில் நம்முடைய மாநில முதல்வர் அவர்கள் துணிவோடு மதுவிலக்கைச் செயல்படுத்திக் கொண்டிருப்பதை உண்மையிலேயே பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு மிகப் பெரிய அளவில் குடிசைகள் எரிக்கப்பட்டன. எரிந்த குடிசைகளுக்கு என்ன பரிகாரம் செய்யப்போகிறார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு கோடி ரூபாய்த் திட்டத்தை ஏற்படுத்தி எரியாத வீடுகளைக் கட்டித் தருவதற்கான வழிவகைகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

அதே போல் மாணவர்கள் இங்குமங்கும் சில செயல்களில் ஈடுபட்ட நேரத்தில், மத்திய ஆட்சியை எதிர்த்து சில கிளர்ச்சிகளைச் செய்கிறோம் என்று சொன்ன நேரத்தில், சேதங்கள் நேருமோ என்று அஞ்சிக் கொண்டிருந்த நேரத்தில், குழப்பங்கள் ஏற்படாதா என்று சில பேர் நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில், முதலமைச்சர் அவர்கள் எல்லாப் பகுதி மாணவர்களையும் அழைத்து உரையாடி சமாதானம் சொன்னதோடு மட்டுமல்லாமல், நிலைமையைச் சமாளிப்பதற்காக ஜனவரி மாதம் 23-ம் தேதி சட்ட மன்றத்தைக் கூட்டி நல்ல ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி தமிழகத்தில் அமைதியான சூழ்நிலையை உருவாக்கியதை இந்த நேரத்தில் நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன்.

அமைச்சர்கள் செல்லுகின்ற நேரத்தில் ஜனநாயக முறையில் கறுப்புக்கொடி காட்டுவது முறையானது என்று சில உறுப்பினர்கள் கூறியதால் நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். முன்பெல்லாம் கறுப்புக் கொடி காட்டுவதில் கழகத்தைப் பொறுத்தவரை, எப்போது காட்டப்பட வேண்டும், யார் யார் காட்டுகிறார்கள், எந்தெந்த நேரத்தில் காட்டப் போகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் பகிரங்கமாக பத்திரிகை நிருபர்களுக்கும், பத்திரிகைகளுக்கும் அறிவித்த பிறகுதான் காட்டப்பட்டு வந்தது.

ஆனால் அண்மையில் நம் அமைச்சர்கள் செல்லும் பகுதிகளில் எல்லாம் நீண்ட நெடிய கொம்புகளை எடுத்துக் கொண்டு, முனையில் ஒரு சிறிய கொடியைக் கட்டிக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் கொம்புகளோடு வருகிறார்களா அல்லது கொடிகளோடு வருகிறார்களா என்று தெரியாத விதத்தில் ஒரு புதிய ஜனநாயக வழியை இப்போது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கையாண்டு வருகிறார்கள். இது எங்கு போய் முடியுமோ என்றதொரு சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. அதை எதிர்க்க கழகத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது அமைச்சர்களின் ஆதரவாளர்கள்



1968 மார்ச் 25] [திரு. கா. வேழவேந்தன்]

களும் நீண்ட கழிகளோடும், கம்புகளோடும் எதிரே வந்தால் சண்டைப் படக் காட்சிகளில் வரும் காட்சிபோல் உருவாகுமே என்ற பயத்தால் இந்த வழியில் இனிமேலாவது காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் செயல்படாமல் இருக்கவேண்டும் என்றும், அந்தப் பாதையில் செல்லாமல் இருக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னால் ஒரு முக்கியமான முடிவைப் பிறப்பித்தது. முன்பெல்லாம் ஒரு அமைச்சர் ஒரு மாவட்டத்திற்குப் போனால் எல்லாப் பரிவாரங்களும் உடனே வர வேண்டுமென்ற ஒரு சம்பிரதாய முறை இருந்து வந்தது. ஆனால் நம் முதலமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அறிவித்தார்கள், அமைச்சர்கள் போனால் கலெக்டர், டி.ஆர்.ஓ., ஆர்.டி.ஓ., சப்-கலெக்டர், எஸ்.பி., டி.எஸ்.பி. இவர்கள் எல்லாம் வரவேண்டியதில்லை, நாங்கள் விரும்பினால் அவர்களை அழைத்துப் பேசுவோம் என்றதொரு உத்தரவையனுப்பிய காரணத்தினால் அதிகாரிகள் அவரவர்கள் செய்ய வேண்டிய வேலைகளை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள், மக்கள் மத்தியில் அமைச்சர்கள் சென்று பிரச்சினைகளை அறிந்துகொண்டு அவற்றைத் தீர்க்கவேண்டிய முறையில் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஆண்டு நம் சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட வரவு செலவுத் திட்டம்தான் வரியில்லாமல் வெளியிடப்பட்ட வரவு செலவுத் திட்டமாகும். அதுவும் ஒரு உபரி பட்ஜட்டாகவும் இருந்தது என்பதை நினைவுபடுத்தி மற்றவர்கள் அதைப் பாராட்டுவதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, வரப்போகிற இலங்கை அகதிகளுக்காக முதலமைச்சர் அவர்கள் இப்போதே சீரிய திட்டங்களை மேற்கொண்டு அதற்கென்று தனி அலுவலர்களை நியமித்து வேண்டிய பரிகாரங்களைத் தேடுவதையும் இந்த நேரத்தில் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

இப்படி நல்லமுறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிற நம் முதலமைச்சர் அவர்களை மேலை நாடுகள் இப்போது அழைத்துக் கொண்டிருக்கின்றன. அமெரிக்க பல்கலைக்கழகம் அவர்களுக்கு டாக்டர் பட்டம் கொடுத்து சிறப்பிக்கிற காட்சியை பார்க்கிறபோது உண்மையில் நாம் பூரிப்படைகிறோம்.

மற்ற அமைச்சர்களைப் பொறுத்தவரையிலும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். நம் கல்வி-தொழில் அமைச்சர் அவர்களை நடமாடும் பல்கலைக்கழகம் என்று கழகத் தோழர்கள் பாராட்டுவார்கள். அவர்கள் பதவியேற்ற பின்னர் கணிசமானதொரு தொகையை கல்விக்காக ஒதுக்க வாதாடி இன்று பல்வேறு

கல்லூரிகள், பள்ளிகள் இவற்றை நிறுவிக்கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, தமிழ், பல்கலைக்கழகத்தில் நுழையவேண்டும் என்ற முறையில் காரண காரியத்தோடு அவர்கள் செயலாற்றிக் கொண்டு வருவது மிகவும் சிறப்புடையதாகவிருக்கிறது.

பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆங்காங்கு கருத்தரங்குகள் நடத்தியும், மாநாடுகள் நடத்தியும், தொழிலாளர் மாநாடுகள் நடத்தியும் சீரிய முறையில் சீரமைப்பு செய்து வருவதோடு, போக்குவரத்துத் துறை நட்டத்தில் ஓடிக் கொண்டிருந்ததை, 61 இலட்சம் ரூபாயில் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருந்ததை, கணிசமான அளவிற்கு; 38 இலட்சம் அளவிற்குக் குறைத்து அவற்றை ஓட்டுகிற அளவில் அவர்கள் பணி பாராட்டும் முறையில் இருக்கிறது.

உணவு அமைச்சர் அவர்களை எடுத்துக்கொண்டால், இன்று உணவுத்துறையில் ஒரு சீரான நிலையை உருவாக்கி, எங்கும் பட்டினி இல்லை, எங்கும் உணவு கிடைக்காத நிலை இல்லை என்ற நிலையை உருவாக்கி என் பகுதியில் ஒரு படி அரிசி ரூ. 1.5, ரூ. 1.10 காசுக்கு கிடைக்கிற அளவிற்கு விலை குறைந்து இன்னும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி எங்குமே கிடைக்கும் என்ற சூழ் நிலையை உருவாக்கியிருப்பதை இந்த நேரத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்து, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் உழைப்பின் காரணமாக இன்றையதினம் பல சீரிய காரியங்களைச் செய்து வருகிறார்கள். ஆங்காங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களைக் கூப்பிட்டு கட்சி சார்பில்லாமல் கருத்தரங்குகள் நடத்தி அவர்கள் யோசனைகளை எல்லாம் கேட்டு வருகிறார்கள். உரத்தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக் கொண்டு வருகிறார்கள்.

ஹரிஜன நலத் துறை அமைச்சர் அவர்களை எடுத்துக் கொண்டால் சுற்றுப்பயணம் மேற்கொள்வது மட்டுமல்ல, சீரிய பரிசுத் திட்டங்கள் மூலமாக ஆங்காங்குள்ள முக்கிய பிரதிநிதிகளையெல்லாம் அழைத்து உண்மையான தீண்டாமை ஒழிப்பு என்ற வகையில் காரியங்கள் செய்வதன் மூலம் அவர்கள் செம்மையான முறையில் பணியாற்றி வருகிறார்கள்.

சட்ட-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களை எடுத்துக் கொண்டால், அவர்களது அறையில் எந்த நேரத்திலும் தொழிலாளர் பிரதிநிதிகள், தொழிலாளர்கள் அவரை 'கெரோ' செய்வது போல் சூழ்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கும்போது எந்த அளவிற்கு அவர்களது சீரிய பணி இருக்கிறது என்பதைக் காண முடிகிறது.



மருத்துவத் துறை அமைச்சர் அவர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் திடீர் சோதனைகள் மூலமும், நல்ல கண்காணிப்பின் மூலமும் மருத்துவத்துறை நல்லமுறையில் செயல்படவேண்டுமென்று தன் பணியை ஆற்றிக்கொண்டு வருகிறார்கள்.

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை எடுத்துக் கொண்டால், எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து எதிர் காலத்தில் நல்லதொரு ஊராட்சித் துறையை ஏற்படுத்தவேண்டுமென்ற ரீதியில் ஜனநாயக ரீதியில் செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள். அவர் பொறுப்பேற்ற பிறகு கதர் விற்பனை கூட அதிகப்பட்டிருப்பது, எதையும் நான் செய்து காட்டமுடியும் என்ற ரீதியில் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது.

மொத்தத்தில் நம் சட்டமன்றத்தை எடுத்துக் கொண்டால் நம் சட்டமன்றத்தில்தான் கட்சி விட்டு கட்சி மாறும் எதிர்பாய்ச்சல் இல்லாமல், ஒருவருக்கொருவர் பூசல் இல்லாமல் நல்லமுறையில் சீரிய முறையில் நடந்து கொண்டிருக்கிறோம். திரு. மார்டின் அவர்கள் விதியைத் திருத்தவேண்டுமென்ற கருத்தைக் கூறினார்கள். நம் அரசியல் சட்டத்திற்குட்பட்ட அளவில் நாம் எப்படியெல்லாம் விதிகளைத் திருத்தமுடியுமோ அதற்குரிய ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள். அக்குழுவில் ஒரு உறுப்பினராக நானும் பலமுறை இடம் பெற்றிருக்கிறேன். ஆகவே அதில் நமக்கு வேண்டிய திருத்தங்களை நாம் மேற்கொள்ளமுடியும் என்று கூறிக் கொண்டு, நமது சட்டமன்றம் ஒரு ஜனநாயகக் கோவிலாக இருக்கிறது, அந்த மரபை மேலும் மேலும் நிலைநாட்டுவோம் என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இராம. அரங்கண்ணல்) : மொத்தம் 16 உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள். ஆகவே இனிமேல் பேசுகிற உறுப்பினர் ஒவ்வொருவரும் ஏழு நிமிடங்களுக்குள் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : தலைவர் அவர்களே, இன்று இந்த சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 6, 8 எண்ணுள்ள மானியக் கோரிக்கைகள் மீது சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். இங்கு அமைச்சர்கள், சட்டசபை போன்ற மானியங்களின் மீது எனக்கு முன் பேசிய உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள் அதிகப்படி செலவாகிறது, சிக்கனம் கையாளப்படவில்லை என்று சொன்னார்கள். அது உண்மையே. அமைச்சர்கள் பதவி ஏற்றவுடன் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாக தங்கள் சம்பளத்தைப் பாதியாகக் குறைத்துக் கொண்டது பாராட்டத் தக்கது. எல்லோரும் அதை வரவேற்றார்கள். அதோடு ஒவ்வொரு அமைச்சரும் தங்கள் துணையாளர்களாக

ஒவ்வொரு கெஸட்டெட் பி.ஏ. இருக்கவேண்டுமென்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்கள் தங்கள் சம்பளத்தை ஓரளவு குறைத்துக் கொண்டாலும் அமைச்சர்கள் இலாகாக்களில் ஓரளவு கணிசமாக செலவு அதிகமாயிற்று. எல்லா அமைச்சர்களுக்கும் கெஸட்டெட் பி.ஏ.க்கள் வேண்டுமா என்பதுபற்றி அமைச்சரவை மீண்டும் பரிசீலனை செய்வது நல்லது. அது அவசியந்தானா, அந்தச் செலவு அவசியமா என்று பார்க்கும்போது அதற்கு அவசியம் இல்லாமல் கூட இருக்கலாம். முதலமைச்சர் அவர்களுக்குள்ள வேலைப் பளுவை முன்னிட்டு அவர்களுக்கு மட்டும் ஒரு கெஸட்டெட் பி.ஏ. இருந்தால் போதாதா என்பதைப் பற்றி பரிசீலனை செய்யவேண்டும்.

அமைச்சர்களின் சுற்றுலாவிற்கு, செலவு அதிகமாகியிருக்கிறது. அமைச்சர்களை அந்தந்த மாவட்டங்களில் இருந்து அழைக்கிறார்கள், போகவேண்டும் என்பது உண்மைதான். இருந்தாலும், ஒரே மாவட்டத்திற்கு அமைச்சர்கள் திரும்பத் திரும்ப ஒரு மாதத்தில் பலமுறை டூர் செய்கிறார்கள். இது வேண்டுமா என்பதுபற்றி சிந்திக்கவேண்டும். ஒரு திங்களில் ஒரு முறை ஒரு மாவட்டத்தில் டூர் செய்தால் போதாதா என்று யோசிக்கவேண்டும். ஒரு மாவட்டத்திலேயே வாரத்திற்கு வாரம் டூர் செய்யவேண்டுமா என்பது பற்றியும் யோசிக்க வேண்டும். திருமணங்கள் என்றால் அமைச்சர்கள் குழுவே அப்படியே ஒரு கூட்டமாகச் செல்வது என்ற நியதியிருக்கிறது. அவற்றிற்கு பயணப்படி வாங்குகிறார்களா இல்லையா என்று தெரியவில்லை. இங்கு அமைச்சர்கள் தலைமையகம் இருக்கிறது. இங்கு நடக்கும் திருமணங்களுக்கு எல்லா அமைச்சர்களும் போகலாம். அமைச்சர்கள் குழு வேண்டுமானாலும் போகலாம். ஆனால் வெளியிடங்களில், தூரத்து மாவட்டங்களில் நடக்கும் திருமணங்களுக்குக்கூட போவது என்றால் அது சொந்த முறையிலா அல்லது அமைச்சர் என்ற முறையிலா என்பது குறித்து ஒரு வழி வகுக்கவேண்டும். சாதாரணமாக சுற்றுலாக் காலத்தில் நேரிடையாக பைசல் செய்கிற காரியங்கள் மிக அதிகமாக இருக்கலாம். ஆகவே ஒரு இடத்திற்குப் போனால் அவர்கள் ஒருவரின் விருந்தினராகவோ அல்லது கட்சியைச் சேர்ந்த நண்பர்களின் வீடுகளில் இருந்தாலும் ஒரு பொது மாளிகை, அல்லது சுற்றுலா பயணிகள் விடுதிகளில் தங்கி விண்ணப்பங்கள், முறையீடுகள் இவற்றைக் கேட்பது என்ற ஒரு சம்பிரதாயத்தை வைத்துக் கொள்வது நலம்.

அதேபோன்று, சென்ற ஆண்டு சட்டப்பேரவை கூடிய நாட்கள் மிகவும் குறைவு. மற்ற முன்னைய வருஷங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ஏறக்குறைய சரிபாதியாக ஆகிவிட்டது என்று கூறலாம். சபை கூடித்தான் மாநிலத்தின் அத்தனை பிரச்சனைகளையும் அலசிப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகையால்





சபை கூடும் நாட்கள் அதிகமாக இருக்க வேண்டும். 4 மாதம் 5 மாதம் இடை வெளி என்றில்லாமல் அடிக்கடி கூடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மாதாமாதம் முடியாவிட்டாலும்கூட 3 மாதத்திற்கு ஒரு முறையாவது கூடுமென்ற நிலையிருந்தால் நன்றாக இருக்கும்.

அதேபோல் கேள்விகள் கேட்பதில் சட்டசபை கூடுமென்று எதிர்பார்த்து கேள்விகள் கேட்கப்படும் நேரத்தில் 'ப்ரோரோக்' செய்யப்பட்டு 'லாப்ஸ்' ஆகி 'ரென்யூவல்'-க்கு கொடுக்கப்படும் கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்படாமலோ அல்லது பதில் அளிக்க மிகத்தாமதமோ ஏற்பட்டு விடுகிறது. 'ப்ரோரோக்' செய்யப்பட்டாலும்கூட முன்னால் கொடுக்கப்பட்ட கேள்விகள் சபை முன் வராமல் காத்திருந்தால் அந்தக் கேள்விகள் 'லாப்ஸ்' ஆகாது இந்தச் சபைக்கு வரக்கூடிய நிலைமையில் செய்தால் நன்றாக இருக்கும்.

இங்கே பணி செய்யும் சட்டப் பேரவை செயலகம் மிகத் திறமையாக வேலை செய்து வருகிறது. ஆனால் கூட்ட காலங்களில், சில வேளைகளில் நாம் மாலை வேளைகளிலும் கூடும்படியிருக்கிறது. முன்கூட்டியே எதிர்பார்க்க முடியாத நிலைமையில் சிலநாட்களில் மாலை வேளைகளில் கூட வேண்டி வருகிறது. அப்படிப்பட்ட நேரங்களில் சாதாரணமாக மின் ஏற்பாடுகளைச் செய்யும் மின்சார இலாக்காவினர், மற்றும் காவல்துறையில் உள்ளவர்கள் போன்றவர்களுக்கு ஸ்பெஷல் அலவன்ஸும், கன்வேயன்ஸ் அலவன்ஸும் கொடுக்க வேண்டும். இப்பொழுது காலை 7 மணியிலிருந்து சில நாட்களில் மாலை 7 மணி வரையிலும் காத்திருந்தாலும் சாதாரணமாக அவர்களுக்கிருக்கின்ற சம்பளத்தை வைத்துக்கொண்டுதான் தங்களுடைய செலவைச் சரிக்கட்டிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே காவல்துறை ஊழியர்கள் போன்றவர்களுக்கும், 'எலெக்ட்ரிஷியன்' போன்றவர்களுக்கும் 'கன்வேயன்ஸ் அலவன்ஸ்' கொடுப்பது மிக நன்றாகயிருக்கும், முறையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இங்கே இருக்கும் அத்தனை சிப்பந்திகளும் சட்டசபை கூடும் காலத்திலே திறம்பட பணியாற்ற வேண்டுமென்று ஒரே முறையான நிலை இருக்க வேண்டுமென்று ஒத்துக்கொள்கிறோம் . . .

(மணியடிக்கப்பட்டது)

* திரு. பு. செ. முத்துச்செல்வன் : சட்டமன்றத் தலைவரவர்களே, இன்றைய மானியக் கோரிக்கைகளாகிய சட்டமன்றம், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் ஆகிய கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சட்டமன்றம் ஜனநாயகத்தின் முக்கிய கண்களாக விளங்குகின்றன. சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை என்ற

[திரு. பு. செ. முத்துச்செல்வன்] [1968 மார்ச் 25

இரண்டு அமைப்புகளாக இந்த சட்டமன்றத் துறையிலேயிருக்கின்ற பிரதிநிதிகள் பங்கு கொண்டு ஜனநாயகத்தின் காவலர்களாக விளங்கி வருகிறார்கள். அத்தகைய ஒரு சிறிய அமைப்பைப் பெற்றிருக்கும் சட்டமன்றத்துறைக்கு ஏறத்தாழ 20 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்படுகிறது. அதற்கு இங்கே மானியக் கோரிக்கையாக வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு செலவு செய்து மக்களினுடைய நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் . இங்கே வந்து பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அந்தந்தத் தொகுதியின் நிலையையும், மக்களின் பொதுப்படையான பிரச்சினைகளையும் இவர்கள் இங்கே வந்து சொல்ல வாய்ப்பு கொடுக்கக் கூடிய சட்டமன்றத் துறை மிக அத்தியாவசியமானது. அந்த முறையில் இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓரளவு நல்ல வசதியும், வாய்ப்பும் ஏற்படுத்தித் தரப்பட்டிருக்கிறது. அந்த வசதிகளையும், வாய்ப்புகளையும் ஓரளவுக்குப் பயன்படுத்திக் கொண்டு சட்டமன்றத்திலே மக்களின் பிரச்சினையைப் பேசுவதற்கும், அமைச்சர்களிடத்திலே தெரிவித்து காரியத்தை நிறைவேற்றுவதற்கும் வாய்ப்பாக இது விளங்குகிறது. அந்த அளவிலே இந்தச் சட்டமன்றம் ஜனநாயகத்தின் கண்களாக விளங்குகிறது. அத்தகைய சட்டமன்றத் துறையிலே அதிகப்படியாகச் செலவாகிறதே என்று சொல்லி அதை நாம் விட்டுவிட முடியாது. நம்முடைய தமிழக அரசு பொறுப்பேற்ற பிறகு சட்டமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர்களைக் காண்பதற்குரிய வாய்ப்புகள் நிரம்ப ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் அமைச்சர்களைப் பார்ப்பதென்றால் அது பெரிய காரியமாக, முடியாத காரியமாக இருந்து வந்தது. இன்று சாதாரண மக்கள் எளிதிலே அமைச்சரை அணுகி அவரிடத்திலே நல்ல முறையிலே கருத்துகளைத் தெரிவித்து அவரது அன்பையும், ஆதரவையும் பெற வழிவகைகளைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். முன்பெல்லாம் அமைச்சர்களைப் போய்ப் பார்த்தால் ஏதாவது எழுதிக் கொடுத்துவிட்டுப் போ, நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று மிகவும் கோபக்கணையோடு கூட சொல்லக் கூடிய அமைச்சர்கள் இருந்ததுண்டு. ஆனால் நம்முடைய அமைச்சர்கள் மிகவும் எளிய குடும்பத்திலே நடுத்தரக் குடும்பத்திலே பிறந்து வந்திருப்பதால் அவர்கள் நல்லமுறையிலே மக்களின் பிரச்சினைகளை நன்குணர்ந்து பணியாற்றுகிறார்கள். உறுப்பினர்களின் மரியாதைக்குக் குந்தகமில்லாமலும், உறுப்பினர்களோடு நல்லமுறையிலே, அன்போடும், ஆதரவோடும் கலந்துரையாடி பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்வதைப் பற்றி இங்கு குறிப்பிட்டார்கள். முன்பெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்த அமைச்சர்களின் கணக்கை விட நம்முடைய



1968 மார்ச் 25] [திரு. பு. செ. முத்துச்செல்வன்]

அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்த செலவு அதிகம் என்று சொல்லிவிட முடியாது. மக்களிடத்திலே அதிகத் தொடர்பு கொண்டிருப்பதால் அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லி, அதைப் பாராட்டி இது ஜனநாயகத்திற்குத் தேவையான செலவு என்று சொல்லி இந்த அளவோடு முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. என். சங்கரய்யா :** சட்டசபைத் தலைவரவர்களே, இந்த மானியக்கோரிக்கைகளின்மீது பின்வரும் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

அரசாங்கத்தின் இலாக்காக்கள் தாங்கள் பரிசீலனை செய்யக் கூடிய அறிக்கைகளை மிகவும் தாமதப்படுத்துவதைத் தவிர்த்து, சுருங்கிய காலத்திலே அந்த இலாக்காக்கள் பரிசீலனை செய்து கொடுத்தால் நம்முடைய வேலைகள் பயனளிக்கும் என்று கருதுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்யும்போது பலவிடங்களில் அரசாங்கத்தினால் நடத்தப்படுகின்ற பல்வேறு நிலையங்கள் இருப்பதை அறிகிறார்கள். அப்படிப்பட்ட நிலையங்களுக்கு ஒரு உத்தரவு அனுப்பி, சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கு விஜயம் செய்யும்பொழுது அங்குள்ள அதிகாரிகளோடு தொடர்பு கொள்ளக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும். அப்படிச் செய்தால் அந்த நிலையங்களைச் சுற்றிப் பார்க்கவும், அங்கு நடந்து கொண்டிருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளவும் நலமாகவிருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இன்று நம்முடைய மாநில அரசாங்கத்திற்கு மிகவும் சிரமமாகயிருந்தாலும்கூட வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏற்படுத்தக் கூடாது என்பதில் அக்கறை காட்டுகிறோம். உதாரணமாக இப்பொழுது இந்த விவசாயத்துறையிலே "இன்டென்ஸிவ் கேட்டில் டெவலப்மெண்ட் ஸ்கீம்' அமலில் இருக்கிற பகுதிகளான கோயம்பத்தூர், செங்கற்பட்டு மாவட்டங்களில் 300 "ஸ்டாக் அட்டெண்டர்ஸ்"-களை நிறுத்தி வைக்கப்பட்ட நிலையிருக்கிறது. விவசாய அமைச்சரவர்கள் பார்த்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் 3 வருஷம் சர்வீஸிலிருந்தவர்கள், மிகவும் சாதாரணமான ஊழியர்கள். அவர்கள் வேலையிழந்ததால் அவர்களது குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன. அவர்களுக்கு மீண்டும் வேலை கொடுத்து அவர்களது வேலையில்லாத திண்டாட்டத்தைப் போக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு இந்த நிர்வாக மொழி தமிழாக வேண்டுமென்பது பற்றியும், சட்டமியற்று மொழி தமிழில் இருக்க வேண்டுமென்பது பற்றியும் எனக்கு ஒரு அனுபவம் ஏற்பட்டது. இன்றைக்கு நான், இந்த சட்டங்களை திருத்துவதற்கு

தனிப்பட்ட முறையில் ஒரு திருத்தத்தை தமிழில் கொடுத்தேன். அதற்கு சட்டமன்ற இலாகாவிடமிருந்து வந்த பதில் என்னவென்றால், சட்டங்கள் ஆங்கிலத்தில் இருப்பதனால், திருத்தங்களையும் ஆங்கிலத்தில்தான் கொடுக்க வேண்டும். அந்தத் திருத்தத்தைப் பற்றிய நோட்டீஸை மட்டும் தமிழிலே ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் திருத்தங்கள் ஆங்கிலத்தில் இருக்கவேண்டுமென்று சொல்லி அதை எனக்கே திருப்பி அனுப்பி, நான் அதை மொழி பெயர்த்து ஆங்கிலத்திலே கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். ஆனால், இன்றைக்கு தமிழ் நாடு சட்டமன்ற நடவடிக்கைகள் தமிழிலேயே நடைபெற வேண்டுமென்று இன்று நிறைய உறுப்பினர்கள் நினைக்கும்போது, தேவையான வசதிகளை, சட்டங்களைத் தமிழிலே இயற்றுவதற்குரிய வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டங்கள் தமிழில் இருந்தால்தான் திருத்தங்களையும் தமிழில் கொடுக்க முடியும். இந்தியாவிலே மற்ற மாநிலங்களிலே அவரவர்கள் தாய்மொழியில் சட்டங்கள் இயற்றுகிறார்கள். குறிப்பாக, இந்தி பேசக்கூடிய மாநிலங்களிலே அவர்கள் இந்தியிலேதான் சட்டம் இயற்றுகிறார்கள், தீர்மானங்கள் நிறைவேற்றுகிறார்கள். ஆகவே, நாம் இன்றைக்குத் தமிழிலே இயற்றுவதற்குக் காலதாமதம் செய்வோமானால் அதனால் பாதகம்தான் ஏற்படும். அவர்கள் இந்தியிலே இயற்றிக் கொண்டிருப்பார்கள், நாம் மட்டும் ஆங்கிலத்திலே இயற்றிக்கொண்டிருப்போம். அது நம்முடைய மொழி வளர்ச்சிக்கோ, அல்லது மொழி சமத்துவத்திற்கோ உதவியாக இருக்காது. ஆகவே, சட்டங்களைத் தமிழில் இயற்றுவதற்கு ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இதற்காகவே அபிஷியல் லாங்குவேஜ் கமிட்டி என்றும் அபிஷியல் லாங்குவேஜஸ் கமிஷன் என்றும், மொழி பெயர்ப்புக்காக டைரக்டர் ஆப் டிரான்ஸ்லேஷன்ஸ் என்றும் இன்னும் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சில பிரசுர கர்த்தாக்களுக்குப் பணம் கொடுப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்காகத் தமிழ் வளர்ச்சிக் கழகத்திலே பல உப குழுக்கள் இருக்கின்றன. அதே போல சட்டமன்ற நடவடிக்கைகளையும் தமிழிலேயே நடத்துவதற்கு சட்டம் இயற்றுவதற்கு தீர்மானங்கள் நிறைவேற்றுவது போன்றவைகளைத் தமிழிலேயே நடத்துவதற்கு—ஏற்பாடு செய்தால் மிகவும் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தோ, தனிப்பட்ட மனிதர்களிடமிருந்தோ அரசாங்கத்திற்கு வரக்கூடிய கடிதங்கள், புகார்கள் போன்றவைகளுக்குச் சில சமயங்களிலேதான் பதில் கிடைக்கிறது. மாநில ரீதியிலே இருக்கின்றவர்கள் இந்த செயலகத்திற்குக் கடிதங்கள் போடும் பொழுது, புகார்கள் கொடுக்கும் பொழுது உடனே அவர்களுக்கு என்ன நடவடிக்கை எடுத்தோம் என்று குறிப்பிட்டு பதில் அளிக்கவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் கடிதங்கள் போட்டால், கடிதம் வந்தது என்ற முதல் பதில்தான் வருகிறது. இதிலே என்ன முடிவு எடுக்கப்



பட்டது என்பது எங்களுக்குத் தெரியாது—தெரிய வாய்ப்பில்லை. நாங்கள் நூற்றுக்கணக்கான பிரச்சனைகளைப் பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். அந்தப் பிரச்சினைகளின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தெரிந்தால் தான், தீராத பிரச்சினைகளுக்கு என்ன நடவடிக்கை, என்ன பரிகாரம் எடுக்க முடியும் என்பதை நாங்கள் தெரிந்துகொள்ளமுடியும். ஆகவே, அரசாங்கம் எடுக்கிற நடவடிக்கைகளை, முடிவுகளை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

அதே போல், இன்றைக்கு பி.டபிள்யூ.டி. இலாகாவிலே சீரிணைப்பு ஒன்றை ஏற்படுத்தப்போவதாகத் தகவல் கொடுக்கப் பட்டது. அதே போல் ஒவ்வொரு அதிகாரிகளுடைய அதிகார வரம்புகளைப்பற்றி, அவர்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்கிறது என்பதைப்பற்றி, இன்னின்ன காரியங்களை இவர்களால் தீர்க்கமுடியும் என்பதைப்பற்றி, ஒரு பட்டியலை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் குறிப்பாகப் பொதுமக்களுக்கும் கொடுத்தால் பல பிரச்சினைகளை இன்றைக்கு நாம் தீர்க்கமுடியும். இப்பொழுதிருக்கிற காலதாமதத்தை நாம் மாற்றமுடியும். ஒரு காரியத்தைப்பற்றி இந்த கீழ்மட்ட அதிகாரியிடம் போனால் முடித்துக் கொள்ள முடியும், இதைவிடப் பெரிய காரியத்திற்கு இன்னொரு பெரிய அதிகாரியிடம் போனால் முடியும், அதுவும் முடியாவிட்டால் அமைச்சரிடம் செல்ல வேண்டுமென்ற ஒருநிலை ஏற்படும். அந்த முறையில் மக்களுக்கும் எங்களுக்கும் வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்றால் நான் கூறியதைப்போல ஒரு சுற்றறிக்கை அச்சிட்டுக் கொடுத்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, மின்சார வாரியத்தைப்பற்றி நாம் முன்பு விவாதித்தபொழுது, அதற்கு முந்திய ஆண்டுகளில் நாங்கள் குறிப்பிட்ட யோசனைகளைப் போட்டு, அதன்பேரில் என்ன என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள் என்பதையும் போட்டு ஒரு ரிப்போர்ட் சமர்ப்பித்தார்கள். அதேபோல், ஒவ்வொரு இலாகாவிலும் அந்த அந்த மானியக் கோரிக்கைகளின்போது நாங்கள் கூறிய யோசனைகளையும் அதன்பேரில் இவ்வளவு காரியங்கள் நிறைவேற்றப்பட்டன, இவ்வளவு நிறைவேற்ற முடியவில்லை என்பதைப் பற்றியும் எல்லா இலாகாக்களும் அறிக்கை சமர்ப்பிப்பார்களானால் அது ஜனநாயக மரபுக்கு—முறைக்கு—மிகவும் உகந்ததாக இருக்குமென்று சொல்லி, அதற்கு வழிசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ரெவின்யூ போர்டைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இப்பொழுது புறம்போக்கு நிலங்களையெல்லாம் அசைன்மெண்ட் செய்யும் போது மாஜி நிலச்சுவான்தார்கள், ஜமீன்தார்கள் சொந்தமில்லாத நிலங்களையெல்லாம் ஆக்கிரமித்திருக்கிறார்கள். அந்த நிலங்களைப்பற்றி பஞ்சாயத்துத் தலைவர்களுக்குத்தான் தெரியும். ஆகவே, பஞ்சாயத்துத் தலைவர்களே நேரிலே அந்தப் புறம்போக்கு நிலங்களை விவசாயிகளுக்குக் கொடுக்க

[திரு. என். சங்கரய்யா] [1968 மார்ச் 25

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்னால் ஜமீந்தார்களாக இருந்தவர்கள் அந்த நிலங்களுக்கெல்லாம் பொறுப்பேற்றுக் கொண்டு அதற்காக செலவழித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்த நிலங்களை விவசாயிகளுக்குக் கொடுக்க வழி செய்ய வேண்டும். மாஜி ஜமீந்தார்கள் பண்ணை நிலங்களை, புறம்போக்கு நிலங்களைக்கூட சொந்த நிலம் என்று ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த நிலங்களைப்பற்றி ஒரு சர்வே செய்து உண்மையிலேயே அவர்களுக்குச் சொந்தம் இல்லாத நிலங்களை எல்லாம் அங்குள்ள விவசாயிகளுக்குத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புள்ளிவிவர இலாகாவைப் பொறுத்தவரையிலும், புள்ளிவிவரங்கள் எல்லாம் கஜெட்டிலே பிரசுரிக்கப்படுகின்றன. அந்த அந்த மாவட்டத்திலே இன்று அரசினுடைய வேலைகளைச் செய்வதற்குப் பல உப குழுக்கள் இருக்கின்றன. ஜில்லா நிர்வாகம், தொழிற்சாலைகள் போன்ற பலவற்றிற்கும் இன்றைக்குப் பல உப குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து, இந்த ஸ்டாடிஸ்ட்டிக்ஸ் டிபார்ட்மெண்ட் ஒரு அறிக்கையை, அங்கீகாரம் பெற்ற புள்ளிவிவரங்களை உடனுக்குடன் கொடுத்தால் அது பயனுள்ளதாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.
2

முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு பதிலளிக்கின்ற பொழுது ஒவ்வொரு இலாகாவுக்கும் ஒவ்வொரு ஆலோசனைக் குழு இருக்க வேண்டும். சட்டமன்றத்திலே பொதுவாகத் தெரிவிக்கக்கூடிய கருத்துக்களை, அந்த அந்த இலாகாக்களைப்பற்றி, அந்த அந்த இலகாவிலே இருக்கக் கூடிய குறைபாடுகள் அல்லது, அவர்கள் எடுத்த நடவடிக்கைகளைப் பற்றி விவரமாக அறிந்து கொள்ளுவதோடு, அதைப் பற்றி யோசனைகளையும் அந்தக் குழுக்களிலே தெரிவிக்க முடியும் என்று குறிப்பிட்டார்கள். ஆகவே, அவரே குறிப்பிட்ட அந்த யோசனையை அமுலாக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது லோக் சபாவில் கூட, இந்த மாதிரி அட்வைசரி கமிட்டிகளைப் பாராளுமன்ற உறுப்பினர்களைப் போட்டு ஏற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதை இப்பொழுது அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இவ்வாறு ஆலோசனைக் குழுக்களை சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு ஏற்படுத்தினால், உண்மையிலேயே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு அமைத்தால் அவர்கள் பணிபுரியக்கூடிய நேரத்திலே, கொள்கைகளை உருவாக்குவதற்கு முன்னாலேயே அல்லது உருவாக்குகின்ற நேரத்திலே, எங்களுடைய ஆலோசனைகளை அளிக்க முடியும். அதன் மூலம் இங்கு பேசுவதோடு மட்டுமல்லாமல், அங்கும் பயன் ஏற்பட முடியும் என்று நான் கருதுகிறேன். இதை இன்று சட்டமன்றத்திலேயும் பல அங்கத்தினர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.



1968 மார்ச் 25] [திரு. என். சங்கரய்யா]

அடுத்து, இன்று சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய வேலைகளை ஒழுங்காகச் செய்வதற்கு, அவர்களுக்கு இலவசமாக பேருந்துகளிலேயும் ரயில்வேக்களிலேயும் செல்வதற்கு வழி செய்ய வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். மற்ற மாநிலங்களிலே பல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த மாதிரி இலவச பாஸ்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி அரசாங்கம் மிகவும் கவனித்து, சௌகரியமாக அங்கத்தினர்களுக்கு வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்கு இருப்பதைக் காட்டிலும் அதிக வேகமாக, சற்று லைவ்லியாக இருப்பதற்கு, சட்டமன்றம் சிறப்பாக நடைபெறுவதற்கு இப்பொழுது காலிங் அட்டென்ஷன் மோஷன் இவைகளையெல்லாம் கொடுத்தால், அதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அதே போல், நாங்கள் கொடுக்கின்ற கேள்விகள் கொடுக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானங்கள் போன்றவற்றையும் விரைவிலே அவையிலே கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்தால், நாங்கள் நல்லமுறையிலே பணிபுரிய முடியுமென்று கருதுகிறேன்.

மில்க் டிஸ்டிரிபியூஷனைப் பொறுத்தவரையில் மதுரையிலே இப்பொழுது 500 மில்லி மீட்டர் பாட்டில்கள் தான் கொடுக்கப்படுகின்றன. மக்கள் 500 மில்லி மீட்டர் வாங்கக்கூடிய அளவு சக்தி படைத்தவர்களாக இல்லை. அவர்கள் 250 மில்லி மீட்டர் பாட்டில்கள் விநியோகிக்கப்படவில்லையென்று கூறினார்கள். ஆகவே, 250 மில்லி மீட்டர் பாட்டில்கள் பால் சப்ளை செய்வதற்கு அங்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, டைரக்டர் ஆப் விஜிலன்ஸ் அண்டு ஆன்ட்டி கரப்ஷன் என்ற ஒரு துறை 18 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு இன்றைக்கு நடத்தப்பட்டு வருகிறது. அதே நேரத்தில், அதோடு கூட ஸ்டேட் விஜிலன்ஸ் கமிஷன் என்று ஒன்றும் ரூ. 6,13,000 செலவு செய்யப்பட்டு நடப்பதற்கு ஏற்பாடு செய்யபபட்டிருக்கிறது. விஜிலன்ஸ் அண்டு ஆன்டி கரப்ஷன் டிரக்டரேட் என்று ஒன்று இருக்கும்போது இந்த ஸ்டேட் விஜிலன்ஸ் கமிஷன் எதற்கு என்பதற்கு விளக்கம் கேட்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு டி.பி.-யினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் ரூ. 18,000 கிராண்டாகக் கொடுக்கிறது. இன்றைக்கு பல பேர்களுக்கு டி.பி. வரக்கூடிய காரணத்தினால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, இந்த டி.பி. நோயாளிகளுக்காக செலவு செய்வதை, அவர்களுக்கு அளிக்கின்ற கிராண்ட்டை கூடுதலாகக் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

அமைச்சர்கள் தொகுதியிலே சுற்றுப்பிரயாணம் செய்கின்ற பொழுது, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும், பொது மக்களும் தங்களுடைய குறைகளை முறையிடுவதற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்க வேண்டும்.

அதேபோல், அமைச்சர்கள் அவர்கள் வருகையைத் தெரிவித்து, மக்கள் தெரிவிக்கிற குறைகளை நீக்குவதற்கு அதிகாரிகளிடம் சொல்லி, அதனுடைய முடிவையும் உறுப்பினர்களுக்குத் தெரிவித்தால் மிகவும் நலமாக இருக்குமென்று கருதுகிறேன்.

இன்றைக்கு டிரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸுக்கு ரூ. 1,52,000 செலவு செய்யப்படுகிறது. அதே நேரத்தில் ஹாண்ட்லூம் ஸ்டாட்டிஸ்டிக்ஸுக்கு மட்டும் இன்றைக்கு ரூ. 1,20,000 செலவு செய்கிறார்கள். டிரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸுக்கு செலவிடுகின்ற அதே அளவுக்கு டிரக்டர் ஆப் ஸ்டாட்டிஸ்டிக்ஸுக்கும் செலவு செய்யப்படுகிற நிலைமை இருக்கிறது. இவ்வளவு தொகை அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இவ்வளவு செலவு செய்யப்படும் பரமக்குடி போன்ற இடங்களிலே துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. மதுரையிலே தேங்கிக் கிடக்கின்றன. இதிலே ரிசர்வ் பாங்க் உத்தரவு வேறு. அதே போல் கோவாப்பரேடிவ் சொஸைட்டிகள் இதிலே மூலதனம் போட்டிருக்கிறார்கள். அரசாங்கம் அல்லது கோவாபரேடிவ் பல நேரங்களிலே அவ்வாறு மூலதனம் போட்டிருக்கிற காரணத்தாலே, சொத்து மதிப்பீட்டுக் கணக்கிலே அதுவும் சேர்ந்து விடுகின்ற காரணத்தினால் நெசவாளர்களுக்கு இலாபம் கிடைப்பதில்லை. இதிலே 5 இலட்சம் கைத்தறியாளர்கள் சம்பந்தப்பட்டிருக்கிற காரணத்தினால் இதிலே ஆழ்ந்து கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மு. ப. 11-30 * திரு. ரா. ராமச்சந்திரதுரை : தலைவரவர்களே, இன்றைய தினம் இங்கு நடைபெறுகிற மானியக் கோரிக்கையின் மீது எங்கள் கட்சியின் சார்பாக உறுப்பினர்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளையொட்டி ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எதிர்க்கட்சி என்பது—ஜனநாயக மரபுப்படி ஆளும் கட்சியில் இருக்கின்ற குறைகளையும் நாட்டிலே நடைபெறுகின்ற பேச்சு வார்த்தைகளில் வருகின்ற சில குறைபாடுகளையும் எடுத்துக் கூறுவதற்காகத்தான் எதிர்க்கட்சி என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த மாமன்றத்தில் பேசுகின்ற நேரத்தில் ஒவ்வொரு கரியங்களுக்கும் 'இவைகளை ஆதாரத்துடன் நிரூபிக்க முடியுமா ?' என்ற கேள்வி எதிர்த்தரப்பிலிருந்து வருகிறது. அதே நேரத்தில் சட்டசபையிலே அங்கத்தினர்களுக்கு பேசுவதற்குக் கொடுக்கப்படுகின்ற நேரம் 5 நிமிடத்திலிருந்து 7 நிமிடம் வரை. இதில் அமைச்சர்கள் குறுக்கிடுவது கிட்டத்தட்ட 8 நிமிடத்திற்கு ஆகிவிடுகிறது. அந்தக் குறுக்கீடு வருவதன் காரணமாக அந்தப் பேச்சின் தொடர்பு விட்டுப் போய்விடுகிறது. எங்கள் முழுக் கருத்தையும் கூற முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது, திசை திருப்பிவிடுகிறார்கள். என்னைப் பொருத்தவரையிலும்தான் சொல்கிறேன். எதற்கெடுத்தாலும் 'குறை கூறுகிறீர்களே இதை நிரூபிக்க முடியுமா?' என்று கேட்டால், நாங்கள் ஒவ்வொரு காரியத்தையும்





எப்படி ஆதாரத்துடன் நிரூபிக்க முடியும் ? எங்களுக்கும் ஒரு ஸி.ஐ.டி. மாதம் 500 ரூபாய் சம்பளத்தில் கொடுத்து, ஒரு டேப்ரெக்கார்டர், மறைமுகமாக எடுக்கக்கூடிய கேமரா இவைகளைப் போன்று கொடுத்தால் அதை ஆதார பூர்வமாக ஓரளவு நிரூபிக்க முடியும்.

அடுத்தாற்போல் அமைச்சர்களை எம்.எல்.ஏ.-க்கள் போய்ப் பார்க்க வேண்டிய நேரத்தில், அவர்களைச் சந்திக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சி இருந்த நேரத்தில், எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் வெகு சுலபமாக அமைச்சர்களைப் போய்ப் பார்க்கக்கூடிய சூழ்நிலை இருந்தது. உதாரணமாக நான் ஒரு அமைச்சரவர்களைக் காண்பதற்காக காலை 6 மணிக்குச் சென்றேன். 10 மணி வரையில் அவர்களைப் பார்க்கமுடியவில்லை. 6 மணிக்குப் போய் கீழே உட்கார்ந்தவுடன் அரை மணி நேரம் கழித்து மாடியிலிருந்து 4 பேர்கள் வந்தார்கள். அவர்கள் சொன்னார்கள், "இங்கே இருந்தால் பார்க்கமுடியாது, மேலே போனால்தான் பார்க்கலாம்" என்று. சரி என்று மேலே போய் ஒரு மணி நேரம் காத்திருந்தேன். அப்போது உள்ளே இருந்து ஐந்தாறு பேர்கள் வந்தார்கள். அவர்கள், 'இங்கே உட்கார்ந்திருந்தால் பார்க்க முடியாது, உள்ளே போனால்தான் பார்க்க முடியும்' என்று சொன்னார்கள். சரி என்று நான் உள்ளே போனேன். அங்கே போய் உட்கார்ந்தவுடனே, அமைச்சர் வெளியே வந்து பார்த்துவிட்டு, முக்கியமான காரியமாக அங்கே பேசிக்கொண்டிருக்கிறேன், இருங்கள், இன்னும் பத்து நிமிடத்தில் வந்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனார்கள். ஆனால், அந்த நேரத்தில் உறுப்பினர் என்று அவருக்குத் தெரியுமோ தெரியாதோ. குறை சொல்லவில்லை, அங்கு நடந்த நிகழ்ச்சியைப் பற்றித்தான் சொல்கிறேன். அதே நேரத்தில் அங்குள்ள கட்சித் தோழர்கள், அமைச்சர்கள் உள்ளே இருக்கிற இடத்தில் போய்ப் பார்த்து, பேசிவிட்டு வந்துவிடுவதைக் கண்ணால் பார்த்தேன். ஆனால், கனம் முதலமைச்சரவர்கள் வீட்டுக்கு ஒரு நாள் இரவு 9 மணிக்குப் போய் இருந்தேன். உள்ளபடியே, வெளியே 50 சட்டமன்ற உறுப்பினர்கள் காத்திருந்தாலும்கூட, என்னுடைய விசிட்டிங் கார்டைப் பார்த்தவுடனே, அவர்கள் என்னை அழைத்துவிட்டார்கள். அதேபோல், பாக்கியுள்ள அமைச்சர்களையெல்லாம் அங்கத்தினர்கள் போய்ப் பார்ப்பதென்பது முடியாத ஒரு சூழ்நிலையாக இருக்கிறது. 100, 150 பேர்கள் மத்தியில் வந்து, அந்த இடத்தில் இருந்துகொண்டு, சட்ட மன்ற உறுப்பினரைப் பார்த்து, 'என்ன?' என்று கேட்கிறார்கள். நாங்கள் அந்த நேரத்தில், இன்னொரு சட்டமன்ற உறுப்பினர் மீதே குறைகூற வேண்டிய சூழ்நிலை இருந்தாலும் இருக்கலாம். பலருடைய மத்தியில் வைத்துக்கொண்டு கேட்டால், எப்படிச் சொல்ல முடியும் ? மக்கள் அதிகமாகத் தொந்தரவு கொடுப்பதால், அமைச்சர்களுக்கும் அம்மாதிரி சூழ்நிலை இருந்தாலுங்கூட, சட்டமன்றம் கூடுகிற நேரங்களில், ஒரு குறிப்பிட்ட நேரம். 2 மணியிலிருந்து 3 மணி வரை, சட்டமன்ற உறுப்பினர்களை மாத்திரம் பார்ப்பதற்கென்று, குறிப்பிட்ட நேரத்தை அவர்கள் ஒதுக்கித் தந்தால் மிகவும் நலமாக இருக்கும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

மாவட்ட நிர்வாகத்தில், உதாரணமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன் இந்த போலீஸ் நிர்வாகத்தை எடுத்துக்கொண்டால், ஒரு நிகழ்ச்சி ஒரு மாவட்டத்தில் நடந்தது. ஒரு மாவட்ட முக்கியஸ்தர், ஒரு பெரிய ஹோட்டலில் இருந்துகொண்டு, ஓரிடத்தில் கலாட்டா நடந்து, இரு தரப்பினரையும் போலீஸ்காரர்கள் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். அந்த மாவட்ட முக்கியஸ்தர், அந்த போலீஸ் சூபரின்டென்டை ஃபோன் மூலமாக, 100-150 பேர் மத்தியில் கூப்பிட்டுப் பேசினார். "திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த இவருக்கு ஏதாவது நேர்ந்தால் கழகத்திற்கே இழுக்கு வரும்; எனவே அவரை விட்டுவிட்டால் தேவலை" என்று பலருடைய மத்தியில் கூறினார்கள். முன்பு காங்கிரசார் தலையிடவில்லை என்று நான் கூறவில்லை. என்றாலும், பொறுப்பு இல்லாத நிலையில், 100-150 பேர் மத்தியில், ஒரு பொது இடத்தில் இருந்து பேசியதாகச் சில தகவல்கள் வந்தன. அதனால், தலையிடுவது என்பது எல்லா ஆட்சியிலும் இருக்கக்கூடியது என்றாலும், இம்மாதிரி மாவட்டத்தில் இருக்கும் முக்கியஸ்தர் அப்படித் தலையிடுவதால் பல இக்கட்டான காரியங்கள் எல்லாம் நேரிடுகின்றன என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நமது மதிப்பிற்குரிய திரு. ராஜாராம் நாயுடு அவர்கள், முன்பு மூன்று மாதம் எம்.எல்.சி. ஆக இல்லாத நேரத்தில், இதே மாமன்றத்தில் நமது மதிப்பிற்குரிய திரு. அன்பழகன் அவர்கள், 'எம்.எல்.சி. ஆக இல்லாத நேரத்தில் அவருக்கு வீடு கொடுத்திருக்கிறார்கள் இந்த அரசாங்கம்' என்ற கேள்வியெல்லாம் எழுந்ததுண்டு. இப்பொழுதுள்ள அமைச்சரவையிலே உள்ள அமைச்சர் ஒருவருக்கு ஒரு சொந்த வீடு இருக்கிறது, அவருடைய பெயரால். இந்த அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்படுகின்ற வீடும் இருக்கிறது. அமைச்சர் அவர்களும் அவருடைய வாழ்க்கைத் துணைவியாரும் அந்த வீட்டிலே இருக்கின்றார்கள். அவருடைய வாழ்க்கைத் துணைவியாருக்குக் கொடுக்கப்பட்ட வீட்டில், அவருடைய அண்ணனோ, தம்பியோ அங்கே இருப்பதாக வதந்தியெல்லாம் வருகிறது. வெளியிலும் இம்மாதிரியான பேச்சுக்களெல்லாம் அடிபடுகின்றன. இதெல்லாம் ஆதாரத்துடனேயே வந்திருக்கிறது. இம்மாதிரியான நிகழ்ச்சிகளெல்லாம் நடைபெறாதவாறு கவனிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதற்கு அடுத்தாற்போல், உறுப்பினர்களுக்குத் தேவையான சில விஷயங்களைப்பற்றி இங்கே கூறுவதற்கு ஆசைப்படுகிறேன். அமைச்சர்கள் சம்பளத்தைக் குறைத்துக்கொண்டதாகக் கூறினார்கள். அது பாராட்டுதலுக்குரிய விஷயம்தான். ஆனால், அவர்களுக்கு 500 ரூபாய் சம்பளமாகக் கிடைப்பதோடு, மாதா மாதம் டூர் போவகால் கிடைக்கக்கூடிய படி முதலியவைகளையெல்லாம் கணக்கிடுகின்ற நேரத்தில், அவர்களுடைய தேவையை ஓரளவு பூர்த்தி செய்து கொள்ளக் கூடிய அளவுக்கு வசதியாக இருக்கிறார்கள். மைசூர் அரசாங்கத்தை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு உறுப்பினருக்கும் மாதம் 350 ரூபாய் சம்பளம்,



நாள் படி 25 ரூபாய், இலவச ஹாஸ்டல் வசதி, இலவசமாக பஸ்ஸில் பயணம் செய்யலாம் என்று இப்படியெல்லாம் அங்கே இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். உள்ளபடியே இங்கே உள்ள சட்ட மன்ற உறுப்பினர்களில் பெரும் வசதி படைத்தவர்களும் இருக்கலாம். வசதி இல்லாதவர்களும் இருக்கலாம். உதாரணமாக எடுத்துக்கொண்டால், என்னை ஜமீந்தார் என்று எல்லோரும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஜமீந்தார் பரம்பரையில் வந்தவன்தான். ஜமீந்தார்தான். ஆனால், என்னுடைய பொருளாதாரத் துறையில் நான் ரொம்ப மந்தமானவன்தான். அதைச் சபையிலே ஒப்புக்கொள்வதைப்பற்றிப் பெரிய குற்றம் அல்ல. 250 ரூபாய் மாதச் சம்பளம் வாங்கிக்கொண்டு இருக்கிறோம் என்றாலும், அதைக்கொண்டு போய் வைத்துக்கொண்டு, பொது மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்று அங்கே போகின்ற நேரத்தில், நான்கு நாள் பொதுமக்கள் சேவை செய்யும் செலவுக்குக்கூட அந்த 250 ரூபாய் கட்டுபடியாவதில்லை. இங்கே சட்டமன்றக் கூட்டம் நடக்கும்போது, நாளொன்றுக்கு 15 ரூபாய் படி வாங்குகிறோம். அதில் இரண்டரை ரூபாய் ஹாஸ்டல் வாடகைக்கே போய்விடுகிறது. பாக்கி 12½ ரூபாய்தான். அதைக்கொண்டு டாக்ஸி சார்ஜ் செலுத்தவேண்டும், நான்கைந்து பேர்கள் வந்துவிட்டால், அவர்களுக்குக் காப்பிச் செலவு செய்ய வேண்டும், இப்படி ஒவ்வொரு உறுப்பினருக்கும் மேற்கொண்டு பத்து ரூபாயிலிருந்து 15 ரூபாய் வரைக்கும் செலவாகிக்கொண்டு வருகிறது. எனவே, மைசூர் மாநிலத்தில் கொடுப்பதைப் போல, உறுப்பினருக்கு மாதச் சம்பளம் 350 ரூபாயும், நாள் படியாக 25 ரூபாயும் கொடுக்கவேண்டும். ஹாஸ்டலில் வாடகையில்லாமல் தங்கலாம், பஸ்களில் இலவசமாகப் பயணம் செய்யலாம் என்ற வசதிகளை, சட்டமன்றக் கூட்டம் நடக்கும்போதாவது கொடுத்தால் மிகவும் நலமாக இருக்கும்.

இப்பொழுது புதிதாக ஹாஸ்டல், உறுப்பினர்களுக்காகத் திறந்திருக்கிறார்கள். பழைய விடுதியை கெஸ்ட்களுக்காக ஒதுக்கி குறையும். உறுப்பினர்கள் தங்கும் இடங்களிலேயே கெஸ்ட்களை அனுமதித்தால், அவர்கள் குளியலறைக்குள் போய் வெந்நீரைக் காலி செய்துவிடுகிறார்கள். இப்படிப் பல சிரமங்கள் இருப்பதால், கெஸ்டுகளை பழைய ஹாஸ்டலில் தங்கியிருக்கும்படியான வசதி கெஸ்டுகளை பழைய ஹாஸ்டலில் தங்கியிருக்கும்படியான வசதிகளை அவர்களுக்குச் செய்து கொடுத்து, உறுப்பினர்கள் புது ஹாஸ்டலில் தங்கியிருக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும். கெஸ்ட்களிடம் மாதம் 25 ரூபாய் வாடகை வசூலித்துக்கொண்டால் நலமாக இருக்கும்.

திரு. க. ர. நல்லசிவன் : மதிப்பிற்குரிய தலைவா அவர்களே இந்த மானியத்தின் மீது எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். புதிய அரசு வந்த பின்னால், அமைச்சர்களுக்கு அதிகப்படியான சுற்றுப்பயணம் செய்யக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. தயவுசெய்து, சுற்றுப்பயணத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால்,

அடிக்கடி சுற்றுப்பயணம் செய்வது, திருமணங்களுக்குப் போவது, ஆக இந்த இரண்டும் சேர்ந்துதான் மாண்புமிகு முதல் அமைச்சர் கடந்த ஒரு மாத காலமாக ஆஸ்பத்திரியில் இருந்ததற்குக் காரணங்கள் என்பது என்னுடைய சொந்தக் கருத்து. அது மாத்திரமல்ல, இங்கே சட்டசபை அங்கத்தினர்களைச் சந்திக்கவோ அல்லது, சட்டசபை அங்கத்தினர்கள் கடிதங்களுக்கு பதில் எழுதவோ முடியாத சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. அதற்குப் பெருவாரியான சுற்றுப்பயணங்கள்தான் காரணம். ஆகவே, அதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். முன்பு இருந்தவர்கள் சுற்றுப்பயணம் செய்தார்கள் என்றால், அதற்கு பல்வேறு காரணங்கள், பல்வேறு அடிப்படைகள். நம்மைப் பொறுத்த வரையில், நாம் இங்கே மக்களுக்குச் சேவை செய்ய வந்திருக்கிறோம்; மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வந்திருக்கிறோம். அந்த நோக்கத்தில் வந்திருக்கிறோம். ஆகவே நிச்சயமாக சுற்றுப் பயணத்தைக் குறைத்துக் கொள்ளும் காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது சட்டசபைக் கட்சிகளுக்கு காரியாலயங்கள் கொடுக்கப்படவில்லை. தயவு செய்து சட்டசபைக் கட்சிகளுக்கு, அவர்கள் தங்கள் வேலைகளை ஒழுங்காகச் செய்ய வசதியாக தனித் தனி காரியாலயங்கள் கொடுக்கப்படவேண்டும். முன்பு, கடந்த மூன்று சட்டசபைக் காலங்களிலும், ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு காரியாலயம் கொடுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது புதிய ஹாஸ்டலுக்குப் போகும்போதாவது, அப்படி காரியாலயங்கள் கொடுக்க முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டசபை நடக்க கூடிய நாட்களை அதிகப்படுத்த வேண்டும். இப்பொழுது சராசரி 100-க்கும் குறைவான நாட்களே கூடுகிறது. குறைந்தது 150 நாட்களாவது சபைக் கூட்டம் நடக்க வேண்டும். அப்படி அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்பதற்குக் காரணம், முன்பெல்லாம் சபையில் பேசாதவர்கள் அதிகமாக இருந்தார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள்தான் பேசுவார்கள். ஆளும் கட்சியில் இருப்பவர்கள் குறைவாகத்தான் பேசுவார்கள். ஆனால் இப்பொழுதோ, எல்லோருமே பேசுகிறவர்களாக வந்திருக்கிறோம். ஏனென்றால், நாம் எல்லோருமே மக்களின் அடித்தளத்தில் இருந்து வந்தவர்கள். நாம் எல்லோரும் ஒவ்வொரு பிரச்சினையிலும் பேச வேண்டியிருக்கிறது. பேசுவது பேசவேண்டும் என்பதற்காக இல்லை. பிரச்சினைகளில் கவனம் செலுத்தி, அவைகளைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக, வயிற்றிலிருந்து பேசும் அளவிற்கு, அடிமனதிலிருந்து பேசுவது காரணமாக, அதிகமான தேவை இருக்கிறது. ஆகவே சட்டசபை கூடும் நாட்களைக் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன.

கேள்விகள் போட்டால், பதில்வர அதிக நாள் ஆகிறது. நான் ஒரு குறுகிய காலக் கேள்வி கொடுத்து 10 நாட்கள் ஆகின்றன. 7 நாட்களில் கொடுக்க வேண்டிய பதில் இன்னமும் வரவில்லை.





இதையெல்லாம் கவனித்து, அந்த அந்த சட்டசபைக் கூட்டங்களிலேயே அங்கத்தினர்கள் கொடுக்கும் கேள்விகளுக்குப் பதில் கொடுக்க வேண்டும். அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது சட்டசபைத் துறையிலிருந்தும், மற்றத் துறைகளிலிருந்தும் வரக்கூடிய தஸ்தாவேஜிகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் வருகின்றன. அவற்றையெல்லாம் தமிழிலேயே கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இன்னும் ஓராண்டுக் காலத்தில் அவற்றையெல்லாம் தமிழிலேயே கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முடியுமா என்கிற பயம் இருக்கிற வரையில் முடியாது. பயம் இல்லாமல், தமிழிலேயே செய்ய முடியும் என்கிற தைரியம் இருப்பதால், சட்டங்கள், உத்தரவுகள், விதிகள் எல்லாவற்றையும் தமிழிலேயே கொடுக்க வேண்டும்.

'லோக் பால்' என்பது பற்றி சமீபத்திலே மத்திய சர்க்கார் மாநில சர்க்கார்களின் கருத்துக்களைக் கேட்டார்கள். நம்முடைய மாநில சர்க்கார் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்று சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், மத்திய சர்க்காருடைய அதிகாரத்தின் கீழ் அமைப்பு வைத்துக் கொள்ள வேண்டாம். வேறு வேறு அமைப்புக்களில் மந்திரிகள் பேரிலும், மற்றவர்களின் பேரிலும் குற்றச்சாட்டுகள் வரலாம். ஆனாலும் கூட, அந்த அமைப்பு சுதந்திரமாக மாநில அளவில் இருந்தால் நலமாக இருக்கும். அப்படிப்பட்ட அமைப்பு தேவை என்பதை அரசாங்கம் ஆராய வேண்டும். ஒரு உயர்நீதி மன்ற நீதிபதியைக் கொண்ட, தனியான சுதந்திரமாக இயங்கக் கூடிய, மத்திய சர்க்கார் கட்டுப்பாடு இல்லாத, ஒரு ஸ்தாபனத்தை அமைத்து, மாநில சர்க்கார் அமைச்சர்கள், மற்றவர்கள் பேரில் வரக்கூடிய ஊழல் குற்றம் என்றால் அதை விசாரித்துச் சொல்வதற்கான அளவில் ஒரு அமைப்பை ஏற்படுத்துவது பற்றி சர்க்கார் கருத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டசபைக் கட்டடம் பற்றிச் சொல்லும் போது, இந்தக் கட்டடம் போதாது. முன்பு பாலர் அரங்கு இருக்கும் இடத்தில் இருந்தது. அந்த இடத்திற்கே இதை மறுபடியும் மாற்ற வேண்டும். அங்கே இருந்தபோது, சட்டசபை அங்கத்தினர்களுக்கும், பார்வையாளர்களுக்கும், சுலபமாக இருந்தது. இங்கே இப்பொழுது பார்வையாளர்களை வரிசைப்படுத்தி, கால் மணி, அரை மணி என்று ஒவ்வொருவருக்கும் போட்டு, கஷ்டப்படுகிறார்கள். அங்கே ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் ஒரே சமயத்தில் இருக்க வசதியுள்ள இடம் அது. நாமெல்லாம் சாதாரண ஜனங்களுடைய பிரதிநிதிகள்; அந்த மக்கள் வோட்டர்கள் இங்கே நடவடிக்கைகளையெல்லாம் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். பாலர் அரங்கத்தில் இருந்தால் மெத்த சௌகரியமாக இருக்கும். முன் இருந்தவர்கள் என்றால், மக்கள் அவர்களைச் சந்திக்கக் கூட முடியாது. ஆனால் நாமெல்லாம்,

சாதாரண, யதார்த்த மக்களிடமிருந்து வந்திருப்பவர்கள். நமக்கு எந்தப் பயமும் தேவையில்லை. ஆகவே, இந்தச் சபையை பாலர் அரங்கிற்கே மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே வேலைபார்க்கும் போலீஸ்காரர்களுக்கு தினசரிப் படி 10 அணா என்று இருப்பது நியாயம் இல்லை. நம்முடைய படியை உயர்த்த வேண்டும் என்று நாம் கேட்கும் போது, அவர்களுக்குக் கொஞ்சம் அதிகமாகக் கொடுக்க வேண்டும். 10 அணா என்பது கேவலமாக இருக்கிறது. குறைந்தது 1 ரூபாயாவது கொடுக்க உத்தரவு இட வேண்டும்.

எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள், சட்டசபை அங்கத்தினர்களுக்கு ரூ. 250 சம்பளமும், ரூ. 15 படியும் போதுமானது அல்ல என்பதை எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, இவற்றை உயர்த்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். சாப்பாடு சுத்த மோசமாக இருக்கிறது. ஏதாவது செய்ய வேண்டும். போக்குவரத்துப் பொறுத்தவரையில், ஒன்று ரெயில் போக்குவரத்துக்கோ அல்லது பஸ் போக்குவரத்துக்கோ சலுகை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, நம்முடைய இராச்சியத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் மிக அதிகமாக இருக்கிறது. அதைத் தீர்க்க ஒரே வழி, மத்திய சர்க்காரின் ஆதரவு இல்லாமலேகூட, மாநில சர்க்காரே, படித்த படிக்காத வாலிபர்களுக்கு, காலையில் மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் குறிப்பிட்டது போல—30,000 ஏக்கர் நிலம் கொடுத்திருக்கிறோம் என்றார்கள்—அந்த வகையில் பெருமளவு நிலங்களைக் கொடுத்து, உணவு உற்பத்தியையும் பெருக்கிக் கொண்டு, வேலையில்லாத் திண்டாட்டத்தையும் தீர்க்க முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் வெகு பயங்கரமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு, மிக ஜாக்கிரதையோடு ஏற்பாடுகள் செய்ய வேண்டும், தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. ஆர். நாகசுந்தரம்: தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த அமைச்சரவை பதவி ஏற்ற ஓராண்டு காலத்தில் நிகழ்த்தியிருக்கிற சாதனைகளைப் பார்த்தால், அவை ஏராளம். இவற்றை மாற்றுக் கட்சித் தோழர்கள் பாராட்டாவிட்டாலும் கூட, மத்திய சர்க்கார் அமைச்சர்களும் மற்றவர்களும் பாராட்டிக் கொண்டு வருகிறார்கள். இதற்கு முன்னால் இருந்த அமைச்சரவை பொது மக்களை மக்களாக மதித்தது இல்லை. சாதாரணமாக மக்களோடு முகம் கொடுத்துப் பேசியதில்லை. நம்முடைய அமைச்சர்கள் இன்றைக்கு, மக்களை மக்களாகப் பாவித்து, ஆங்காங்கு அவர்களுடைய குறைகள்பற்றித் தெரிந்து கொண்டு, அதிகாரிகளிடம் கூறிப் பரிகாரம் தேட முடிந்த அளவு செய்து கொண்டிருக்கிறார்கள். கருத்தரங்குகள் நடத்தி, மக்கள்





பிரச்சினைகளை, விவசாயிகளுடைய பிரச்சினைகளை ஆராய்ந்து பரிகாரமும் காண்கிறார்கள். இது வரையில் மாவட்ட ஆட்சியாளர்கள் மாநாடுகள் ஊட்டியிலோ, சென்னையிலோதான் நடந்து கொண்டு வந்தன. ஆனால், முதன் முதலாக நம்முடைய முதல்வர், அறிஞர் அண்ணா அவர்கள், ஒரு சாதாரணமான மாவட்டத் தலைநகரில், திருச்சியில், வைத்து நடத்தியிருக்கிறார்கள். அங்கே அத்தனை அமைச்சர்களும் இருந்தபோதிலும், கொஞ்சம் கூட போலீஸ் கெடுபிடி இல்லாமல், பொதுமக்கள் சர்வ சாதாரணமாக நடமாடிக் கொண்டு இருந்தார்கள். இதற்கு முன்பெல்லாம், ஒரு மந்திரி வந்தாலே பலத்த போலீஸ் ஆர்ப்பாட்டம் இருக்கும். அத்தனை அமைச்சர்களும் அங்கே வந்திருந்தும் கூட, எந்தவிதமான இடையூறுகள் இல்லாமல், திருச்சி, நகரத்தில் நல்ல நிலைமைகள் இருந்ததைப் பொதுமக்கள் புகழ்ந்து இருப்பது, பத்திரிகைகள் வாயிலாக எல்லோரும் அறிந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இந்த அரசு எந்தப் பிரச்சினையையும், இங்குள்ள மற்றக் கட்சித் தலைவர்களையும் கலந்து ஆலோசித்து, அதன் பிறகுதான் நல்ல முடிவை எடுக்கிறது. உதாரணமாக பஞ்சாயத்து சீரமைப்புகளைப்பற்றி திரு. முருகேச முதலியார் அவர்கள் அளித்த ஆய்வுரைகளைப்பற்றி எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி, தலைவர்களை மட்டுமல்ல, அந்தந்தத் தலைவர்களின் கட்சிக் கொள்கைகளையும் எடுத்துச் சொல்லச் செய்து, அதன்பிறகு நல்ல முறையில் பரிசீலிப்போம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதற்கு முன்னாலிருந்த அரசோ, அல்லது முதலமைச்சர் அவர்களோ இம்மாதிரியான முறைகளைக் கைக்கொண்டார்களா என்று காங்கிரஸ் தோழர்களைக் கேட்கிறேன்.

இந்த மாநிலத்தில் உலகத் தமிழர் மாநாடு நடைபெற்றது, உலகச் சந்தை நடைபெற்றது, கும்பகோணத்தில் மகாமகம் நடைபெற்றது. பல இலட்சக் கணக்கான மக்கள் கூடியிருந்த இடங்களில் எல்லாம் போலீசார் எவ்வாறு நல்ல முறையில் பணியாற்றினார்கள், எவ்வளவு அமைதியாகச் சட்டம் ஒழுங்கு காக்கப்பட்டது என்பதைப்பற்றி நண்பர்கள் தெளிவாக எடுத்துப் பேசினார்கள். குறிப்பாக நண்பர் திரு. நா. காசிராமன் அவர்கள் மகாமகத் திருவிழாவின்போது நல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததைப் பற்றி மிகவும் தெளிவாகப் பாராட்டிப் பேசினார். இதற்கு முன்னால் எல்லாம், சாதாரணமாக திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களின் கச்சேரியிலே கூட, கூட்டம் அதிகமாக இருந்து போலீசார் தடியடி நடத்தினார்கள் என்ற செய்தியைத் தான் பத்திரிகைகளில் பார்ப்போம்.

1965-ல் இந்த மாநிலத்தில் ராணுவம் ஒரு வாரம் ஆட்சி புரிந்தது. 'சில போலீஸ் ஸ்டேஷன்கள் போராட்டக்காரர்களின் கைகளில்' என்றெல்லாம் பத்திரிகைகளில் செய்தி வந்தது. அப்படிப்பட்ட நிலைமையில் ஆட்சியில் அமைதி, சட்டம், ஒழுங்கு போன்றவைகள் இருக்கவில்லை. ஆனால் இன்றைய தினம்

நம்முடைய அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர், அந்தமாதிரியான சூழ்நிலைகளை மாற்றி, எந்த ஒரு கிளர்ச்சி நடந்தாலும், உயிர்ச்சேதம், பொருட்சேதம் எதுவும் இல்லாமல் கொந்தளிப்பு சூழ்நிலையை எளிதில் அடக்கி விடுகிறார்கள். காங்கிரஸ்காரர்கள் அன்றாடம் நடைபெறும் சாதாரண நிகழ்ச்சிகளைக்கூட இன்றைய தினம் பெரிது படுத்தி மிகப் பெரிய குற்றங்களாக விளம்பரப்படுத்தி வருகிறார்கள்.

“பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால்
மெய்போலும்மே, மெய்போலும்மே”

என்ற பழமொழிக்கொப்ப, சிலர் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே வருகிறார்கள். இந்தியாவின் இன்றைய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி அவர்கள்கூட ஓய்வு எடுப்பதற்காகத் தமிழகத்தில்தான் வந்து தங்கியிருந்தார். இங்கே சட்டம், ஒழுங்கு, அமைதி கெட்டுவிட்டது என்ற பொய்க் குற்றச்சாட்டுகளையெல்லாம் பொய்ப்பிக்கும் வகையில், திருமதி இந்திரா காந்தி ஓய்வு எடுக்க தக்க இடமாக, தமிழகத்தைத்தான் தேர்ந்தெடுத்தார்.

நான் ஒரு சில வேண்டுகோள்களை விடுக்க விரும்புகிறேன். சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஓர் அறையை வாடகை இல்லாமல், அல்லது மிகக் குறைந்த அளவில் 25 ரூபாய் வாடகையில் கொடுக்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். ரிகார்டுகளையெல்லாம் அடிக்கடி எடுத்துக்கொண்டுபோய் திரும்பக் கொண்டு வருவதற்கு உறுப்பினர்களுக்குச் சங்கடமாக இருக்கிறது. ஆகவே, ஓர் அறையைக் கொடுத்தால் வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உறுப்பினர்கள் ஹாஸ்டலில் போஸ்ட் ஆபீஸ் வசதி இல்லை. பத்திரிகைகளைப் படிக்க ஒரு நூல்நிலையம் அமைத்துத் தர வேண்டும். ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனித் தனியாக தொலைபேசி இருக்க வேண்டும். பத்து அறைகளுக்கு ஒரு பியூன் இருக்க வேண்டும். இதுதவிர, நாங்கள் பொது மக்களில் பலருக்கு நன்னடத்தை சர்ட்டிபிகேட் கொடுக்க வேண்டியிருக்கிறது. எங்களுக்கு லெட்டர் பேட்கள் அதிகமாகச் செலவாகின்றன. ஆகவே, ‘லெட்டர் பேட்’ போடுவதற்கான சிம்பலை எங்களிடம் கொடுத்தால், எங்களுக்குத் தேவையான பேட்கள் அச்சடித்துக்கொண்டு, சிம்பலைத் திருப்பிக் கொடுத்து விடுவோம்.

அடுத்தபடியாக, செக்ரட்டேரியட்டுக்குள் ஒருசில குறைகள் இருக்கின்றன. ஒருசில பியூன்கள் விடாமல் எங்களைத் துரத்துகின்றனர். (மணியடிக்கப்பட்டது).

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, இந்த மானியம் குறித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்வதற்கு விரும்புகிறேன். நாட்டிலே வெகு வேகமாக மாற்றங்கள் ஏற்பட்டுக்





கொண்டு வருகின்றன. அதற்கு உகந்த முறையில் இன்றைய தினம் இருக்கக்கூடிய நிர்வாக அமைப்புகளைச் சீரமைப்பதும் அவசியமாக இருந்துகொண்டிருக்கிறது. அந்த முறையில் பார்க்கும்போது, தலைமைச் செயலகத்தின் வேலைகள் எல்லாம் துரிதமாக நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டும். இல்லையானால் பல மாதங்கள், பல ஆண்டுகள் வரை ஃபைல்கள் கட்டிப் போடப்பட்டு, சில வேளைகளில் ஃபைல்கள் மறைந்து போகக்கூடிய சூழ்நிலை மேலும் ஏற்படக் கூடாது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயமாகும். தலைமை அலுவலகங்களுக்குச் சென்று அதிகாரிகளைச் சந்திக்க வேண்டுமென்று சொன்னாலும்கூட, பல நிமிடங்கள் காத்திருக்க வேண்டிய நிலையிருக்கிறது. குறைந்தபட்சம் சட்டமன்ற உறுப்பினர்கள் போனாலும்கூட உடனே அதிகாரிகளைப் பார்த்து, அதற்குரிய பதிலைப் பெறுவது என்பது கடினமான காரியம்தான். ஆகவே, பொதுமக்களுக்கும், குறிப்பாக சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் தகுந்த விளக்கங்கள் கொடுத்து, தக்க பதில்களைச் சொல்லியனுப்ப வேண்டிய விதி முறைகளை ஏற்படுத்திக் கொள்வது இந்த அரசாங்கத்திற்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் ஏற்பட்டிருக்கக்கூடிய ஜனநாயக மாற்றத்தில், கவர்னர் பதவி தேவையா என்பது நமக்கு முன்னால் எழக்கூடிய கேள்வியாகும். அது அவசியம் இல்லாதது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயமாகும். அரசாங்கம் செய்யக் கூடிய காரியங்கள் அத்தனையும் கவர்னருடைய அங்கீகாரம் பெற்றுவரக் கூடிய சூழ்நிலை இருப்பதால், சீக்கிரமாக எந்த வேலையையும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு தடங்கலாக இருக்கிறது. ஆகவே, கவர்னர் பதவியினால் அரசாங்கத்திற்கு லாபம் இல்லாதது மட்டுமல்ல, தடங்கல் ஏற்படுகிறது.

இந்த மாமன்றம் கூடி நிறைவேற்றக்கூடிய சட்டங்களையெல்லாம் சம்பிரதாயத்திற்காக விவாதிக்க மேலவை இருந்து கொண்டிருக்கிறது. இந்த மேலவை தேவையில்லாத அளவிலே இருந்து கொண்டிருக்கிறது. சில மாநிலங்களில் மேல் சபையை சிக்கனம் காரணமாக ஒழித்துவிட்டார்கள். இந்த மாநிலத்திற்கும் மேல் சபை அவசியம் இல்லை. இந்த மேலவையை நாளாவட்டத்தில் கலைத்து விடுவதற்காக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

சட்ட மன்ற உறுப்பினர்கள் இன்னும் பல செய்திகளை அறிந்து கொள்வதற்காக நூல் நிலையம் ஒன்று தேவை என்று குறிப்பிட்டார்கள். இங்கும் கூட ஒரு ‘நூல்நிலையம் இருக்கிறது. அதன் உள்ளே நுழைந்தால் நெடி எறிவிடுகிறது. வசதியாக உள்ள இடத்தில், காற்றோட்டமுள்ள இடத்தில் நூல் நிலையம் அமைக்கப்பட்டால் சட்டமன்ற உறுப்பினர்கள் பல விவரங்கள் அடங்கிய புத்தகங்களை எடுத்துப் படிப்பதற்கு வசதியாக இருக்கும்

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஹாஸ்டலிலும் நல்ல வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, அங்கும் நூல் நிலையம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்காகப் பணியாற்றக்கூடிய பியூன்களுக்கு காக்கி ஆடைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவைகளை அவர்கள் வெளுக்காமலே, அழுக்காகவே போட்டுக்கொண்டிருப்பதால் அவர்களிடம் பேசுவதற்குக் கூட அருவருப்பாக இருக்கிறது. ஆகவே, பியூன்களுக்கு நல்ல வெண்மையான, கைத்தறி ஆடைகள் கொடுத்து அவர்கள் அவைகளை அணிவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், மூன்று வருடங்களாகத் தொடர்ந்து பியூன் வேலை செய்கிறவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பக் கூடிய நிகழ்ச்சி நிரல்கள் இரவு பன்னிரண்டு மணிக்குக்கூட கிடைக்கிறது. அதற்குப் பிறகு சட்டமன்ற உறுப்பினர்கள் இதைப் படித்து நல்ல முறையில் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது எளிதல்ல என்பதைக் கவனிக்க வேண்டும். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு நல்லமுறையில் பணியாற்ற வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, நிகழ்ச்சி நிரல்களை எல்லாம் ஒருநாள் முன்னதாகக் கொடுத்தால் உதவிகரமாக இருக்கும். சம்பந்தப்பட்ட இலாகா துரிதமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

நாங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கிறபோது, நாங்கள் எந்த நோக்கத்திற்காக கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கிறோமோ அந்தக் காரியம் முடிந்துவிட்ட பிறகு, அந்த நோக்கம் மாறிவிட்ட பிறகுதான் பதில்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, இந்தப் பதில்கள் அர்த்தமில்லாமல் போகிறது. ஒரு மாதத்திற்குள்ளாவது பதில் தரவேண்டும். கவன ஈர்ப்புத் தீர்மானம் என்று சொன்னால் ஒருவாரத்திற்குள் பதில் சொல்லாமல் இருக்கிறது. நான் 5-ம் தேதி கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு எந்தவிதமான பதிலும் இல்லை. சம்பந்தப்பட்ட இலாகா அமைச்சர் அவர்கள் அதற்கு பதிலளித்துவிட்டார்கள். இம்மாதிரியான நிலைமை இருப்பது மிகவும் துரதிர்ஷ்டவசமாகும். அங்கத்தினர்கள் எந்த நோக்கத்திற்காகத் தீர்மானம் கொண்டு வருகிறார்களோ, அதை நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்வது மிகவும் அவசியமாகும். அங்காங்கு வேலைகள் துரிதமாக நடைபெறுவதற்கு அமைச்சர்களின் சுற்றுப்பிரயாணம் தூண்டுகோலாக இருக்க வேண்டும். ஆனால் அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது, இன்னும் பழைய நிலைமையிலேயே அதிகாரிகள்





எல்லாம் பின்னால் ஜீப்புகளில் சம்பந்தமில்லாமல் சுற்றி வருகிறார்கள். தேவையான அதிகாரிகள் யார் யார் வேண்டுமோ, அவர்கள் மட்டும் அமைச்சர்களுடன் வந்தால் போதுமானது. சம்பந்தமில்லாத அதிகாரிகளும் கூடவே சுற்றி வருகிறார்கள். சம்பந்தமில்லாத அதிகாரிகள் தங்கள் வேலைகளையும் செய்யாமல், அமைச்சர்களுடன் தொடர்ந்து வருவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி சம்பந்தமில்லாதவர்கள் தொடர்ந்து வரவேண்டாமென்று கண்டிப்பான உத்தரவிட வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்கின்ற நேரங்களில் ஸ்தலத்தில் இருக்கக் கூடிய எம்.எல்.ஏ.-க்கள் கலந்துகொண்டால், இன்னின்ன இடத்தில், இன்னின்ன குறைகள் இருக்கின்றன என்பதை எடுத்துச்சொல்ல முடியும். ஆகவே, ஸ்தல எம்.எல்.ஏ.-க்கள் அமைச்சர்கள் சுற்றுப்பயண நேரங்களில் கலந்து கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து, பால் விநியோகம் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை வைத்திருக்கிறார்கள். பால் விநியோகம் முன்னேற்றகரமாக, அதிக ஆதாயம் தரக்கூடியதாக இருக்கிறது. வெகு வேகமாக இந்தத் துறை வளர்ச்சி பெற்றிருப்பதற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமப்புறங்களில் உள்ள எல்லா மக்களுக்கும் பால் கிடைக்க வேண்டிய நல்ல திட்டங்களைத் தயாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னையிலே மாட்டுத் தீவனம் நல்ல முறையில் கிடைக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. அதைக் கவனித்து, இந்த அரசு கால்நடைகளுக்கு நல்ல தீவனம் கிடைக்கும்படியான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

நா ப. 12·00

* **திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, எனக்கு முன்பாகப் பேசிய கனம் அங்கத்தினர் ஒருவர் மகாமகத்தில் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளை நான் பாராட்டிக் குறிப்பிட்டிருப்பதாகச் சொன்னார்கள். உண்மையில் மகாமகத்தின்போது எல்லா அதிகாரிகளும் நல்லமுறையில் நடந்துகொண்டார்கள். எந்தவிதமான குந்தகமும் இல்லாமல் நடந்துகொண்டார்கள். போலீஸ் அதிகாரிகளும் சரி, சிவில் சப்ளை அதிகாரிகளும் சரி, மிக்க கமிஷனர் அவர்களும் சரி, அளித்த ஒத்துழைப்புக்கும், செய்திருந்த சிறப்பான ஏற்பாடுகளுக்கும் சரி, நான் மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இது ஒரு நான்-பொலிடிகல் (Non-political) திருவிழா. அரசியல் எதுவும் சம்பந்தப்படாத திருவிழா. இதில் அரசியல் குறுக்கீடுகள் எதுவும் இருப்பதற்கு இடம் இல்லை. அரசியல் குறுக்கீடு மட்டும் இல்லாமல் இருக்குமானால் எவ்வளவு செம்மையாக, எவ்வளவு ஒழுங்காக, எவ்வளவு அமைதியாக பதினைந்து, இருபது இலட்சம் பேர்கள் அடங்கிய கூட்டத்தையும் சமாளிக்க முடியும் என்பதை அதிகாரிகள் நிரூபித்துக் காட்டி விட்டார்கள். அவர்களுடைய சாமர்த்தியத்தை, அவர்களுடைய துணிவை, அவர்களுடைய ஆற்றலை

அவர்களுடைய தளரா உழைப்பை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். இவர்களை இந்த முறைப்படி அரசு நல்ல வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போலீஸ் துறையினர் அவ்வளவு பெரிய கூட்டத்தையும்—அடிதடி இல்லாது, சிறிது கூடக் குழப்பம் இல்லாது—செம்மையான முறையிலே சமாளித்தார்கள்.

இன்றைக்கு இந்த மாமன்றத்திலே பால்பண்ணை-பால் வழங்கும் திட்டம் என்கிற கொள்கை விளக்க உரையை அத்துறை அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அவரது உரைப்புத்தகத்தின் அட்டையில் மகாமகப் படம் அச்சிடப்பட்டிருக்கிறது. ஆனால் மகாமகத்தின்போது இத்துறை அந்த இடத்தில் ஆற்றிய சிறப்பான பணிகளையும் குறிப்பிட்டிருந்தால் மிகவும் நன்றாக இருக்கும். பொதுவாக தஞ்சை ஜில்லா விருந்தோம்பலுக்குப் பெயர் பெற்றது. ஆயினும் இந்தக் காலத்தில் விருந்து எவ்வளவு சிறப்பாக இருந்தாலும் காலத்தில் காப்பி இல்லை என்றால் குறைபட்டுக் கொள்கிற சூழ்நிலை ஏற்படும். அதற்கு இடம் இல்லாமல் பால் வேண்டிய அளவு, வேண்டியபோதெல்லாம் கிடைக்கும்படியாக இத்துறையினர் செய்திருந்த ஏற்பாடு மிகவும் பாராட்டத் தக்கது. முன்பு தஞ்சை மாவட்ட கலெக்டராக இருந்தவர்தான் இப்போது மில்க் கமிஷனராக இருக்கிறார். மில்க் கமிஷனராக இருந்தவர்கள் அங்கே கலெக்டராக இருக்கிறார். மகாமகத்தின் போது பால் விநியோகிக்க இந்தத் துறையினர் எடுத்துக் கொண்டிருந்த சீரிய முயற்சியைப் பார்த்தபோதுதான் சென்னையில் பால்பண்ணை இருந்ததன் அவசியத்தை எங்களால் புரிந்து கொள்ள முடிந்தது. சென்னையில் உள்ள பால்பண்ணை நல்ல முறையில் நடக்கவேண்டும். எல்லா ஜில்லா நகரங்களிலும் நிறையக் கழிவு நீர் கிடைக்கிறது. சாக்கடை வசதிகள் இருப்பதால் நிறைய புல்வெளிகள் ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டு கால் நடைகளுக்குத் தேவையான புல் தீவனத்தை உற்பத்தி செய்ய வேண்டும். அங்கங்கே பால்பண்ணைகளையும் ஏற்படுத்தினால் உபயோகமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து சட்டமன்ற அங்கத்தினர்கள் கேள்வி கொடுத்தால் அதற்கு பதில் அளிக்க வெகு நாளாகிறது. அதைப்பற்றி பல உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். நான் ஒரு ஷார்ட் நோட்டீஸ் கேள்வி கொடுத்தேன். அதற்கு பதில் இல்லை. அமைச்சர் மானியக் கோரிக்கையின் போது வேறு ஒரு சந்தர்ப்பத்தில் எனக்குத் தேவைப்பட்ட விவரத்தைச் சொன்னார்கள். ஆனால் அந்தக் கேள்விக்கு காலத்தில் பதில் கிடைத்திருந்தால் என்ன பலன் ஏற்படுமோ அது நான் கேள்வி கொடுத்த காரணத்தினால் ஏற்படவில்லை. அப்படியின்றி இனி சீக்கிரத்தில் உறுப்பினர்கள் கொடுக்கிற கேள்விகளுக்குப் பதில் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல சட்டம், ரூல்ஸ் எல்லாம ஆங்கிலத்தில் இருக்கின்றன. அவற்றுக்குத் திருத்தம் தமிழில் கொடுத்தால் வாங்கிக் கொள்வது சங்கடமாக இருப்பதாகச் சொன்னார்கள். திருத்தங்



கள் தமிழில் கொடுத்தாலும் வாங்கிக் கொள்ள வசதி இருக்க வேண்டும். அதைவிட்டு எல்லாம் தமிழ் என்று போய்விடக் கூடாது. ஆங்கிலம், தமிழ் இரண்டும் இருக்கவேண்டும். ஆங்கிலம் உலகத் தொடர்பு மொழியாக வருகிறது. சில வெஸ்டெட் இன்டெரஸ்ட் பார்டி—சட்டங்கள் எல்லாம் அந்த அந்த பிராந்திய மொழியிலேயே இருக்கவேண்டுமென்று சொன்னால் ஏற்கக் கூடாது. கூட்டாக இருக்கும்போது உள்ள வலிவு தனித் தனிக் குச்சிகளுக்குக் கிடையாது. தனித்தனிக் குச்சிபோல எல்லாம் அந்த அந்தப் பிராந்தியமொழி என்றால் தேச ஒற்றுமையே உடைந்துபோகக் கூடிய பேரபாயம் இருக்கிறது. நாட்டின் ஒற்றுமையே குலைந்து வேறு சில இண்டரெஸ்டெட் பார்டி சுபளீகரம் செய்யும் நிலை ஏற்பட்டுவிடும். இத்தகைய போக்குக்கு மொழியை வைத்து ஆதரவு கொடுக்கக்கூடாது என்று நான் சொல்கிறேன்.

அடுத்து சட்டமன்ற உறுப்பினர் நூல்நிலையத்தைப் பற்றிச் சில உறுப்பினர்கள் சொன்னார்கள். நல்ல காற்றுள்ள இடமாக இருக்க வேண்டும். மேலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நல்ல கான்டீன் வசதி இருக்கவேண்டும். நம்முடைய நிகழ்ச்சிகளை நாம் 1½ மணி என்ற அளவில் சரியாக முடிப்பதில்லை. பிற்பகல் தொடர்ந்து போகிறது. 5 மணிக்கும் வைத்துக்கொள்கிறோம். பசி வந்திடப் பத்தும் பறந்து போம் என்பார்கள். பசி நேரத்தில் உறுப்பினர் ஏதாவது கேட்க, அமைச்சர் சூடாக பதிலளிக்க கோபம் வந்துவிடும். அமைதி, சட்டசபை ஒழுங்கு வரம்பு முறை இவற்றை எல்லாம் நம்முடைய மரபுப்படி நாம் காப்பாற்றிக் கொள்ள சட்டசபை நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்டபடி முடியவேண்டும். காலங்கடந்து நடக்கிறதென்றால் கான்டீன் வசதி நல்லமுறையில் செய்துதரப்பட வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். பசி நேரத்தில் தவறி ஏதாவது ஒரு வார்த்தை சொல்ல அது தவறானதாகப் போய் விடக் கூடாது.

அமைச்சர்கள் டூர் ப்ரோக்கிராம் சில சமயம் அவர்கள் அந்த ஊருக்கு வரக்கூடிய அன்றைக்குக் கிடைக்கிறது. சில சமயம் அமைச்சர் வந்துபோன பிறகே கிடைக்கிறது. இதனால் உள்ளூரில் உள்ளவர்கள் அமைச்சர் வரும்போது நேரில் சொல்ல வேண்டிய விஷயங்களைச் சொல்ல முடியாது போகிறது. கூடுமான வரையில் டூர் ப்ரோக்கிராம் போடும்போது அமைச்சர் இந்த தேதி ஊருக்கு வருவார். அந்தத் தொகுதி உறுப்பினருக்கு ஏதாவது விசேஷம் உண்டா என்பதை முன்கூட்டியே கேட்டு அமைப்பது சரியாக இருக்கும். அப்படியே முன்கூட்டியே கலந்துகொண்டு அமைக்கப்பட்டால் பல காரியங்களுக்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். சென்னைக்கு வரமுடியாதவர்கள் அங்கே சட்டமன்ற உறுப்பினரைக் கொண்டு அமைச்சரைப் பார்த்து தங்கள் கோரிக்கைகளைத் தெரிவித்துக் கொள்ள வாய்ப்பும் வசதியும் ஏற்படும்.

[திரு. நா. காசிராமன்] [1968 மார்ச் 25

அடுத்து, சட்டசபை அங்கத்தினர்கள் எல்லாம் வாய்ப்பும் வசதியும் படைத்தவர்கள் என்று சொல்ல முடியாது. என்னை எடுத்துக்கொண்டால் நான் வேறு ஒரு ஸ்தாபனத்தோடு தொடர்பு கொண்டிருப்பதனால் எனக்குத் தேவையான விவரங்களை டைப் செய்ய, ஒன்று திரட்ட அந்த ஸ்தாபனத்தில் உள்ள ஒருவரைப் பயன் படுத்திக்கொள்ள முடியும். இந்த வசதி எல்லோருக்கும் உண்டு என்று சொல்ல முடியாது. எல்லோரும் நல்ல முறையில் தங்கள் தங்கள் பணியை ஆற்ற வேண்டுமென்றால் அவரவர்கள் சொந்த முறையில் ஒரு க்ளார்க்கை 100 ரூபாய், 120 ரூபாயில் போட்டுக் கொள்ள அரசாங்கம் வசதி செய்துதரவேண்டும். இப்போது கொடுக்கிற 250 ரூபாயில் அது சாத்தியம் இல்லை. வருகிறவர்கள், போகிறவர்கள் இந்தச் செலவு எல்லாம் இருக்கிறது. அப்படிச் செய்யவில்லை என்றால் இப்போது அதிகாரிகள் பேரில் சந்தேகம் ஏற்படுகிறதுபோல அவர்கள் பேரிலும் சந்தேகம் அடைகிற சூழ்நிலையில் கொண்டுபோய்விடும். அப்படி நடக்கிறது என்று சொல்லவில்லை. சந்தேகம் ஏற்படுகிற சூழ்நிலையில் ஏற்படும் என்பதால் அரசாங்கமே உறுப்பினர்கள் நல்லமுறையில் பணியாற்றக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று சொல்லிக்கொண்டு இந்த அளவு காலம் கொடுத்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, இவ்வளவு நாளும் பல மானியக் கோரிக்கைளை இந்தச் சபை அங்கீகரித்தது. ஆனால் இன்று வந்துள்ள மானியக் கோரிக்கைகள் தான் ஜன நாயகத்தைச் செம்மைப்படுத்துவதற்கும், ஜனநாயகத்துடன் ஒழுங்கான முறையில் தொடர்பு கொள்வதற்கும் ஏற்பாடு செய்வதாகும். ஏனென்றால் ஜனநாயகத்திலே ஓட்டுப் போடுகிறவர்களுக்கு ஓட்டுப் போடுகிற நாளிலேயே அவர்களுடைய உரிமை முடிந்துவிடுகிறது. அவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள் தான் அதற்குப் பிறகு அவர்களுடைய பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மக்களுடைய பிரதிநிதிகள் சரியான முறையில் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டுமானால் அமைச்சர்களும், மேல்மட்டத்திலுள்ள அதிகாரிகளும், அவர்களுக்கு உதவியாக இருந்தாக வேண்டும். மக்கள் பிரதிநிதிகளுடைய அபிப்பிராயங்களை அவர்கள் எப்படி மதிக்கிறார்கள் என்பதையும் பொறுத்திருக்கிறது. அப்படிப் பார்க்கும்பொழுது எல்லா மட்டத்திலேயும் அப்படி நல்ல முறையிலே இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. சில இடங்களில் சில மட்டங்களில் இருக்கிறவர்கள் ஒரு மாதிரியாக இருக்கிறார்கள். ஆனால் எல்லா மட்டங்களிலும் அந்த அளவுக்கு இருக்கிறதா என்று பார்த்தால் அந்த அளவுக்கு இருக்கிறது என்று சொல்வதற்குச் சாத்தியமில்லாமல் இருக்கிறது. உதாரணமாக முன்பு கூட ஒரு சந்தர்ப்பத்திலே நான் கூறினேன். சட்டசபை உறுப்பினர்கள் எழுதுகிற கடிதங்களுக்குச் சட்டசபை உறுப்பினர்கள் அளிக்கின்ற விண்ணப்பங்களுக்கு சரியான முறையிலே பதிலளிக்கக்கூடிய நிலையில்லை என்று முன்பு கூறினேன். அந்த நிலைதான்



1968 மார்ச் 25] [திரு. எம். சுரேந்திரன்]

இன்னும் இருக்கிறது, மாறவில்லை என்பதை நான் என்னுடைய அனுபவத்திலிருந்து சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற சட்டசபை உறுப்பினர்கள் அந்தத் தொகுதியிலே உள்ள மக்களுக்குச் சரியான முறையிலே பணியாற்ற முடியாத நிலைதான் இன்னும் இருந்து வருகிறது. அப்படி இருப்பதற்குக் காரணம் அமைச்சர்கள் என்று நான் கருதவில்லை. மேல் மட்டத்திலே இருக்கின்ற அதிகாரிகள் அவர்களுடைய பொறுப்புக்களைச் சரியாகச் செய்கிறோம் என்று கருதுகிறார்கள். ஆனால் அந்தப் பொறுப்பை கீழ் மட்டத்திலே இருக்கிறவர்கள் சரியாகச் செய்கிறார்களா என்று அவ்வப்பொழுது கண்காணித்து வந்தால்தான் நல்லது. மேல்மட்டத்திலே உள்ளவர்கள் பைல்களைப் பார்த்து ஒழுங்காகப் பார்த்து தன்னுடைய அபிப்ராயங்களையும் உத்தரவுகளையும் போடுகின்ற நிலைமை இருந்தால் நன்றாக இருக்கும். அப்படிப்பட்ட நிலைமையில்லாத நிலை இருக்கிறது. அதற்குக் காரணம் கீழே உள்ள அதிகாரிகள் எழுதி வைத்தால் அதைப் பார்க்காமலே கையெழுத்துப் போட்டு விடுகின்ற தவறான பாதை இருக்கிறது. இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் அதிகமாகக் கவனம் செலுத்தவேண்டும். ஏனென்றால் நேற்றுவரையில் இருந்த அமைச்சர்களுக்கும் இன்று இருக்கிற அமைச்சர்களுக்கும் எண்ணத்திலே, சிந்தையிலே, நடைமுறையிலே, செயலிலே, எல்லாவற்றிலும் மாறுதல்கள் இருக்கின்றன. அந்த மாறுதல் தன்மை கீழே வரைக்கும் சென்றால் தான் அந்தச் செயல்களினால் உண்டாகிற நன்மைகள் மக்களிடத்திலே செல்லும். அதற்குச் சட்டசபை உறுப்பினர்களை ஒரு கருவியாக்கி அவர்கள் மூலம் அந்த நன்மைகள் போகுமானால் உறுப்பினர்களும் மகிழ்ச்சியடைவார்கள். அந்த மக்களும் பயன் பெறுவார்கள். ஆகவே அந்த முறையிலே சரியாக நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜனநாயகத்திலே உறுப்பினர்கள் சொல்லுகின்ற கருத்துக்களையெல்லாம் ஆழ்ந்து பரிசீலிக்காமல் உதாசீனம் செய்யக் கூடாது. ஜனநாயகத்திலே நம்பிக்கை கொண்டவர்களாக நாம் இருக்கிறோம். ஜனநாயகம் என்றால் 10-க்கு 6 பேர்கள் என்று சொல்கிறார்கள் என்பது மட்டும் ஜனநாயகம் அல்ல. அப்படி இந்தச் சட்டசபை கருதாது என்று நினைக்கிறேன். எம்மாதிரி உள்ளவர்கள், எப்படி உள்ளவர்கள் இந்த சமுதாயத்திலே உள்ளவர்கள், உள்ளவர்களின் அந்தஸ்துகள் என்ன என்பதைக் கணக்கிட்டுத் தான் ஜனநாயகத்தைக் கொண்டு போகிறோம். அதற்காகத்தான் கட்டுப்பாடுகளைப் போடுகிறோம், சில நடைகளைப் போடுகிறோம். முழுமையான ஜனநாயகம் என்று சொன்னால் எந்தவிதமான கட்டுபாடும் இருக்கக் கூடாது என்று வாதம் சரியானதுதான். ஆனால் சில கட்டுப்பாடுகளும் தடைகளும் அவசியமாக இருக்கின்றன, அதனால்தான் கட்டுப்பாடுகளையும் தடைகளையும் விதிக்கிறோம். அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தைக் கவனமாக

எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சபையிலே கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சேகரிக்கும் முறையிலே மாற்றம் செய்யவேண்டும். 41-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புக் கேட்கப்பட்டால் விரைவில் பதில் கிடைப்பதில்லை. நான் இரண்டு கவன ஈர்ப்புகள் கொடுத்து வெகு நாள் ஆகிறது. இன்னும் எனக்கு அதுபற்றிச் சமாதானம் கூறப்படவில்லை. எதைக் கருதிக் கேட்கிறோமோ அதைப்பற்றிப் பதிலளிப்பதற்குள்ளாக புதிய நிலைமை மாறிவிடுகிறது. சமூகத்திலே நிகழ்ச்சிகள் வெகு வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றன, நாமும் அதோடு ஓடாவிட்டால் அது நம்மை விட்டுவிட்டு போய்விடும். நம்முடைய காரியங்களை ஓட்டிவிடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணத்தைக் குறைத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னார். என்னைப் பொறுத்தவரையில் சொல்லிக்கொள்வேன், சுற்றுப் பிரயாணம் ஜனநாயகத்திலே மிகத் தேவையானது, பேச்சு மிகத் தேவையானது. எது, எதற்கு, எப்படி என்பதிலே ஒரு வரையறை இருக்கவேண்டும். வரையறை இல்லாத போக்கு சரியான பாதையில் கொண்டுபோய்விடாது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் ஏன் செய்யவேண்டுமென்றால் ஜனங்களுடைய பிரச்சினைகளைப் போக்கவேண்டிய கட்டாயம் இருப்பதால் அவர்கள் சுற்றுப் பிரயாணம் போகத்தான் வேண்டும். அந்தத் தொகுதியைச் சேர்ந்தவர்களையும், அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களையும் சட்டசபை உறுப்பினர்களையும் சந்திப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். முதலமைச்சர் அவர்களிடம் ஒரு பிரச்னையைப் பற்றிச் சொன்னபொழுது முதலமைச்சர் அவர்கள் அங்கே வந்து கவனித்தார்கள். அந்தக் காரியத்தைப் பற்றிக் கவனத்தில் எடுத்துக் கொண்டார்கள். இப்பொழுது 11 மாதம் ஒரு வருடம் ஆகிவிட்டது, இன்னும் அந்தப் பிரச்னை தீரவில்லை. சுற்றுப் பயணம் செய்யும்பொழுது கவனப்படுத்தப்படுகின்ற காரியங்களையும் உடனுக்குடன் கவனித்தால் பிரச்சனைகள் தீரும். ஆகவே, அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப் பிரச்சினைகள் உடனுக்குடன் தீராமல் இருப்பதற்குக் காரணம் பழைய காலத்திலிருந்து வந்திருக்கின்ற பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள் இன்னும் அதிகாரிகளிடத்திலே ஊறிக்கொண்டிருக்கின்றன என்பதைச் சொல்வதற்கு வருத்தப்படுகிறேன்.

ஒரு சட்டசபை உறுப்பினர் என்று சொன்னால் அந்தத் தொகுதியிலே உள்ள மக்களின் குறைகள், விண்ணப்பங்கள், பிரச்சினைகள் ஆகியவைகளைச் சரியாகக் கவனிப்பதற்கு அவருக்கு வாய்ப்பும் வசதியும் இருக்கவேண்டும். சட்டசபை உறுப்பினர்கள் விடுதியில் தங்கினால் ஒரு மானியக் கோரிக்கையைப் படிப்பதற்கு நேரம் இல்லை, வசதியில்லை, இந்தக் காரணத்தால் சட்டசபையில்



ஏதாவது பேசுவது என்று பேசிவிட்டால் சட்டசபையிலே சரியானபடி பணியாற்றியதாக ஆகாது. சட்டசபை அங்கத்தினர்கள் விடுதியில் வசதிகள் இருக்க வேண்டும், டெலிபோன் வசதிகள் இருக்கவேண்டும், போஸ்ட் ஆபிஸ் வசதிகள் இருக்க வேண்டும், படிப்பதற்கு தனிப் பகுதி இருக்கவேண்டும். சட்டசபை நடவடிக்கைகளைச் சரியாகக் கவனிக்கவேண்டுமாயின் தேவையான இந்தச் சாதாரண வசதிகள் இருக்கவேண்டும். நம்முடைய நாடு ஏழ்மை நாடுதான், அந்த ஏழ்மை நாட்டிலே பணக் குறைவு காரணமாக எப்படி வசதிகளைச் செய்து தருவது என்று ஒரு பகுதியினர் கூறமுடியும். ஆனால் சரியாகச் சட்டசபையில் பணியாற்றவேண்டுமென்றால் அப்படிப்பட்ட சாதாரண வசதிகளைச் செய்துகொடுக்கத்தான் வேண்டும்.

எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள்—சட்டசபை உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுகிற அலவன்ஸ் மிகவும் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். நம்முடைய ராஜ்யத்தைவிட கேரளாவிலும், மைசூரிலும் அதிகமாக அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. அங்கத்தினர்களாக உள்ளவர்கள் வசதியுள்ளவர்களாக இருக்கலாம், வசதியில்லாதவர்களாக இருக்கலாம். அங்கே கொடுப்பதற்கு நியாயம் இருக்கிறது, அது சரியானது என்று இருந்தால் இங்கேயும் அதைப் போன்று ஏன் கொடுக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். கேரளாவிலே சட்டசபை உறுப்பினர்கள் தங்கும் விடுதிக்கு மாதத்திற்கு 25 ரூபாய்தான் வாங்குகிறார்கள். மைசூர் சட்டசபை அங்கத்தினர்களின் விடுதியில் கூட்டம் நடக்கும்பொழுது அவர்களுக்கு எந்தவிதமான வாடகையும் வாங்குவதில்லை. சட்டசபை நிகழ்ச்சிகள் நடக்காதபொழுது ஒரு நாளைக்கு இரண்டு பெட்கள் உள்ள ஒரு அறைக்கு 2¼ ரூபாய்தான் வாங்குகிறார்கள். அரசாங்கத்தினுடைய போக்குவரத்து ஸ்தாபனங்களிலே உறுப்பினர்கள் எங்கே போகவேண்டுமென்றாலும் எப்பொழுது போகவேண்டுமென்றாலும் பாஸ் அளித்திருக்கிறார்கள். அவர்கள் எங்கே போகவேண்டும், எப்பொழுது போகவேண்டும் என்று எழுதிக்கொடுத்துவிட்டால் போதும் பாஸ் உண்டு என்று வைத்திருக்கிறார்கள். இது ஏதோ அதிகமான தேவைகளைப்பற்றிச் சொல்கின்ற காரியம் அல்ல. சட்டசபை உறுப்பினர்கள் தங்கள் காரியங்களைச் சரியாகச் செய்வதற்கேற்ற முறையிலே ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவர்கள் செய்துகொடுப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** கனம் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை விவாதத்தின் மீது பேசும்போது ஒரு சமாசாரத்தை ரொம்பவும் வருத்தத்தோடு சொல்ல வேண்டியிருக்கிறது. சென்னை ராஜ்யம் எல்லாத் துறைகளிலும் ரொம்பவும் முன்னேறியிருக்கிறது என்று பெருமைப்படுகிறோம். ஓரளவு

வாஸ்தவந்தான். சட்டசபை நடவடிக்கைகள், சட்டசபை மெம்பர்களுக்குள்ள வசதிகள், அசெம்பிளி இலாகாவின் நடைமுறைகள் ஆகியவற்றையெல்லாம் பார்க்கும்போது மற்ற எல்லா ராஜ்யங்களையும் பார்க்கும்போது நம்முடைய ராஜ்யம் கொஞ்சம் பிற்போக்காகத்தான் இருக்கிறது. முதல் மந்திரி அவர்கள் ஓரளவு ஒத்துக் கொள்கிறார்கள் என்பது அவர்களுடைய ஜாடையிலிருந்து தெரிகிறது. டெல்லிக்கும் மற்ற ராஜ்யங்களுக்கும் போய் வருகிறவர்களுக்கு அது தெரியும். வசதிகளைக் கொஞ்சம் ஜாஸ்தி செய்து கொடுத்தால் நலமாக இருக்கும்.

நம்முடைய சட்டசபைக் கூட்டங்கள் ரொம்பவும் குறைந்த நாட்கள்தான் நடத்தப்படுகின்றன. பார்லிமெண்ட் வருஷத்தில் எட்டு மாதங்கள் நடக்கிறது. இந்தியா பூராவிலும் உலகம் பூராவிலும் உள்ள பிரச்சினைகள் இருப்பதால் ஜாஸ்தி நாட்கள் நடப்பதாக இருந்த போதிலும் சட்டசபைக் கூட்டங்கள் வருஷத்தில் 40 அல்லது 50 நாட்களே கூடுகின்ற நிலை இருப்பதைக் கொஞ்சம் அதிகமாக்க வேண்டும். எந்த ஒரு முக்கியமான பிரச்சினையாக இருந்தாலும் அதனைச் சட்டசபை முன் வைத்து அங்கீகாரம் பெற்றுத்தான் காரியங்களைச் செய்யவேண்டும்.

விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கடனை வசூலிக்கக்கூடாது, அதை ஒத்திப் போட வேண்டுமென்ற முறையில் முன்னால் இருந்த காங்கிரஸ் சர்க்கார் ஒரு சட்டத்தை, சட்டசபைக் கூட்டம் முடிந்து தாங்கள் ஊருக்குப் போனவுடனே, போட்டார்கள். 'ப்ரூட் மெஜாரிடி' இருக்கிறது என்ற நிலைமையில் அந்த மாதிரி செய்து வந்தார்கள். நீங்கள் அந்த வழிகளைப் பின்பற்றாமல் எந்தக் காரியமாக இருந்தாலும் சட்டசபை முன் வைத்து நிறைவேற்ற வேண்டும். அந்த வகையில் அதிக நாட்கள் கூட்டத்தை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வருஷம் சட்டசபை நடக்கின்ற இந்தச் சென்னையிலே, உலகத் தமிழ் மாநாட்டுக்கு வந்த கூட்டம், உலகச் சந்தைக்கு வந்த கூட்டம், கும்பகோணம் மகாமகத்திற்கு வந்த கூட்டம் எல்லாம் வந்து 'டாஷ்' ஆகி பெரிய தொல்லையாகிவிட்டது. ஒவ்வொரு நாளும் வந்து பார்க்கின்றவர்களுக்குப் பாஸ் வாங்கிக் கொடுப்பதே பெரிய தொல்லையாகப் போய்விட்டது. நாளாவட்டத்தில், முக்கியமாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் சட்டசபைக் கூட்டத்தைப் பார்க்க வேண்டுமென்று மக்கள் ஆவலாக இருக்கிறார்கள். முன்பெல்லாம் பட்டணத்திற்கு வருகின்றவர்கள் வேறு எது எதையோ பார்த்துவிட்டுப் போவார்கள். இப்போது பட்டணத்திற்கு வருகிறவர்கள் சட்டசபைக் கூட்டத்தைப் பார்க்க வேண்டுமென்பதையும் தங்களுடைய லிஸ்டில் சேர்த்துக் கொள்கிறார்கள். இந்த மனோபாவம் வளர்ந்திருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டசபை கூடும் இடத்தை பழைய இடத்திற்கு, சில்ட்ரன்ஸ் தியேட்டர் இருக்கும் இடத்திற்கு மாற்றினால் வசதியாக 500 பேர் வரை பார்க்க



முடியும். அங்கே போனால் ஏதாவது உரிமை என்று சொல்லி கோஷம் போட்டுக் கொண்டு கூட்டம் கூடுமே என்ற பயம் இருக்கலாம். அதற்கெல்லாம் பயப்படாமல் சட்டசபைக் கூட்டத்தை சில்ட்ரன்ஸ் தியேட்டரில் நடத்துவதற்கு யோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மெம்பர்களுடைய சம்பளத்தைப் பற்றிச் சொன்னார்கள். இந்தச் சட்டசபையில் உள்ள 235 பேர்களில் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு ஒழுங்காகச் செலவழித்தது நான் ஒருவன்தான் என்று நினைக்கிறேன். என்னையும் சந்தேகப்படுகின்றீர்களா? ஒவ்வொரு மெம்பர் கூறுவதைக் கேட்டால், திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே இருபதாயிரம், இருபத்தி ஐயாயிரம், ஏன் ஒன்றரை ரூபாய் கூட, அதாவது ஒன்றரை லட்சம் கூட சட்டத்திற்குப் புறம்பாகச் செலவு செய்து சட்டசபை மெம்பர்களாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்த மாதிரி நிலைமையில் பார்க்கும்போது சட்டசபை மெம்பர்களுக்கான அலவன்ஸ் என்பது சென்னை ராஜ்யத்திலேதான் ரொம்பக் குறைவாக இருக்கிறது. அந்தக் காலத்திலே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே 150 ரூபாய் என்று கொடுத்தார்கள். ஆனால் அமைச்சர்கள் துஷ்டி கேட்பதற்குக் கூட ஸ்பெஷல் பிளேனில் போய் வந்தார்கள் என்பது எனக்குத் தெரியும். ஒருகாலத்தில் அவர்கள் அனுபவித்தார்கள். அவர்கள் காலத்திலே மெம்பர்களுடைய வசதிகளுக்குத் தகுந்த நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. ராஜஸ்தான் சிறு ராஜ்யந்தான். அங்கே 15 வருஷங்களுக்கு முன்னால் இருந்தே 500 ரூபாய் சம்பளம் பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்குக் கொடுப்பதுபோல் கொடுத்து வந்தார்கள். சிட்டிங் ஃபீஸ் 30 ரூபாய். இதைச் சொல்லும்போது பயம் இல்லாமல்தான் நான் சொல்லுகிறேன். டி.எம்.கே. மந்திரிசபையினர் கூட்டங்களில் பேசும்போது 'எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்டார்கள்; அதனால் கூட்டினோம்' என்று சொல்லிவிட்டுப் போங்கள். அண்டை ராஜ்யமான கேரளாவில்—அவர்களுக்கு நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள்தான் சாப்பாட்டுக்கு அரிசி கொடுக்கிறார்கள்—200 ரூபாய் சம்பளமாக இருந்ததை 300 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். டெய்லி அலவன்ஸ் 20 ரூபாய் கொடுக்கிறார்கள். இங்கே சட்டசபைக் கூட்டம் நடக்கும்போது பியூன்களுக்கு பக்ஷீஸ் என்றே 50 ரூபாய் வரை நான் கொடுக்கிறேன். சில பேர் சிக்கனமாக இருக்கக்கூடும், எலக்ஷனில் செலவழித்த பணத்தை மிச்சப்படுத்தும் வகையில் சிக்கனமாக இருக்கக்கூடும்.

சட்டசபை மெம்பர்களுக்கு ஹாஸ்டலில் வசதியே கிடையாது. போன் வசதி கிடையாது. புது ஹாஸ்டலுக்குப் போகப் போகிறோம். அங்கே நல்ல முறையில் வசதிகள் இருக்கும் என்று நம்புகிறேன். கனம் மேட்டூர் அங்கத்தினர் அவர்கள் 'மைசூரில் ஒவ்வொரு ரூமுக்கும் ஃபோன் வசதி இருக்கிறது' என்று சொன்னார்கள். அதையெல்லாம் செய்து கொடுக்கவேண்டும். சட்டசபை மெம்பர்களுக்குச் சம்பளத்தைக் கூட்டிக் கொடுத்து விடு

வதால் மந்திரி சபைக்குக் கெட்ட பெயர் வந்து விடப் போவதில்லை. இதிலே, 'சீப் பாப்புலாரிடி' என்று சொல்லக்கூடிய அளவுக்குக் காரியங்களை நடத்திக் கொண்டு போகக் கூடாது. நியாயமாகச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ராஜாஜி அவர்கள் முதல் மந்திரியாக இருக்கும்போது சுற்றுப் பயணம் போனால் தன் கட்சிக்காரர்கள் காத்துக் கொண்டிருந்தாலும் அவர்களை விட்டு விட்டு எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களைத்தான் முதலில் கூப்பிட்டுப் பேசுவார். எதிர்க்கட்சி உறுப்பினர், கம்யூனிஸ்ட் கலியாணசுந்தரம் வந்திருக்கிறார் என்றால் உடனே கூப்பிடு என்று சொல்லி அவசரமாகக் கூப்பிட்டு தன்னுடைய பேட்டியைக் கொடுப்பார்கள். எதிர்க்கட்சிகளுடன் கலந்து பேசுவதன் மூலம் பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடியும் என்ற வகையிலேயே அவர்கள் கூப்பிடுவார்கள். தங்களுடைய கட்சியைப் பொருத்தவரை தானே அவர்களுடைய பிரதிநிதியாக இருக்கும் நிலையில் எதிர்க்கட்சிக்கு முக்கியத்தும் கொடுத்தார்கள். அந்த முறையில் இப்போது இருப்பவர்களும் எதிர்கட்சியினருக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும். நான்
பி. ப. 12-30. கூட ஒரு சமயம் அமைச்சரிடம் சென்று ஒன்றைக் கூறும் போது 'தங்களுடைய கட்சிக்காரர்களும் அதையேதான் சொல்லி விட்டுச் சென்றார்கள்' என்று கூறினார்கள். தங்களுடைய கட்சிக்காரர்கள் என்ற நிலையில் முக்கியத்துவம் கொடுத்ததாக அவர்களுடைய பேச்சில் இருந்து தென்பட்டது. கட்சிக்காரர்கள் சொல்லுவதை விட தொகுதி உறுப்பினர் சொல்லுவதிலேதான் உண்மை இருக்கும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் நாங்கள் எங்கள் தொகுதியிலுள்ள வேலைகளை நல்ல முறையில் செய்யமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது பாஸ் முறையில் ரொம்பக் கஷ்டம் இருக்கிறது. இதற்கு முன்னால் அதற்கு தனி விண்டோ கூட இருந்தது. கையெழுத்து போட்டுக் கொடுத்தால் அங்கு போய் வாங்கிக் கொள்வார்கள். இப்போது அந்த விண்டோ மூடப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. மற்ற ராஜ்யங்களில் மெம்பர்கள் கையெழுத்து போட்டுக் கொடுத்துவிட்டால் உடனே பாஸ் பெற்று நேரே சென்று சட்டசபைக் கூட்ட நடவடிக்கைகளை பார்க்க வசதியிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே அதையும் கவனிக்க வேண்டும்.

நான் அத்தி பூத்ததுபோல் விதி 41-ன் கீழ் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்தேன். அது ரொம்ப அவசரமான தீர்மானம். திருநெல்வேலி ஜில்லாவில் அம்பாசமுத்திரம் தாலுகாவில் ப்ரொக்யூர்மென்ட் என்ற அளவில் ஏற்கனவே கெடுபிடி இருந்திருக்கிறது. கெடுபிடி என்றால் தென்காசி உபதேர்தல் வரப்போகிறது. அப்போது அந்த வாடை அங்கு அடிக்கலாம்.





உணவு அமைச்சர் அவர்கள் தென்காசி உப தேர்தலின்போது அங்கு தலையைக் காட்டிவிடாதீர்கள். விதி 41-ன் கீழ் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நான் கொடுத்திருந்தேன். ஏற்கனவே அங்கு லெவி நோட்டீஸ் கொடுக்கப்பட்டும், அந்த ஜில்லா கலெக்டர் தன் சாமர்த்தியத்தையும், தப்பான நிர்வாக முறையையும் வைத்துக்கொண்டு அங்கு அடிஷனல் லெவி நோட்டீஸ் கொடுத்து அதனால் அங்குள்ள விவசாயிகள், அங்குள்ள வயல் வைத்திருப்பவர்கள் மூச்சு பிடிக்கமுடியாமல் இருக்கிறார்கள். இந்த அடிஷனல் லெவி நோட்டீஸ் பற்றிய விளக்கத்தைக் கேட்டால் ஒரு சகாயம் கிடைக்குமே என்றுதான் கொடுத்தேன். கலெக்டர் ஆபீஸுக்கு போன் செய்து கேட்டால் மறுநாள் டீட்டெயில்ஸ் கிடைக்கும் விஷயம் அது. அந்த தகவல்களை சேகரித்துக் கொடுக்க தாமதமும் ஆகாது. நான் மந்திரிமார்களை அல்லது வேறு யாரையும் குறைவாகச் சொல்லவில்லை. சில நண்பர்கள் பத்திரிகைகளில் வரட்டும் என்று கொடுக்கிறார்கள். நான் அதற்காகக் கொடுக்கவில்லை. நான் சொல்வது, எதிர்கட்சியினருக்கு நல்லவிதமான முறையில் பதில் சொல்லி ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கோ. பூவராகன் :** தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கிற இரண்டு மானியக் கோரிக்கைகள் மீது எங்கள் கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப்பிரேரணையையொட்டி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம் முதல் அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு ஆற்றிய உரையில் சிக்கன நடவடிக்கைகள் பற்றி தெள்ளத் தெளிய எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் தலைமைச் செயலகம், அதையொட்டியிருக்கிற அமைப்புகளில் இன்றையதினம் ஆகும் செலவுகளைப் பார்க்கும் போது அப்படிச் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை.

மாறாக ஒரு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள், சட்டமன்ற மேல் அவை வேண்டியதில்லை என்று. அது வேண்டுமா வேண்டாமா என்ற பிரச்சினைக்குள் போகாமல், இன்றையதினம் மேல் அவை உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்கு முயற்சி நடந்து கொண்டிருக்கிறது என்று நான் அறிகிறேன். அந்த முயற்சி நடந்து அந்தச் செலவு கூட்டப்படுவதற்கு முயற்சி எடுத்தால் எந்தளவிற்கு நாம் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கிறோம் என்று பார்க்கவேண்டும்.

(மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் தலைமை)

இன்றையதினம் அமைச்சர்கள் சிபார்சுக் கடிதங்கள் கொடுத்து அந்த சிபார்சுகள் மூலம் நியாயமாக நடக்கவேண்டிய பல வேலைகள் நடக்கவில்லை என்று சொல்கிற நிலை இருப்பதைப் பார்க்கிறோம். சாதாரண சிறிய காரியங்கள், மாறுதல்கள், பல முக்கிய

[திரு. கோ. பூவராகன்] [1968 மார்ச் 25

மான காரியங்கள் இவற்றில் தனிப்பட்ட முறையில் நபர்களுக்கு கடிதங்கள் கொடுத்து அவற்றை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி அந்த அதிகாரிகள் ஒன்றும் செய்யமுடியாததொரு சூழ்நிலை இருக்கிற நிலையும், நியாயத்திற்கு மாறாகச் செய்யக் கூடிய நிலைமை உருவாகியிருப்பதையும் பார்க்கிறோம். சென்ற ஆண்டு கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதில் பல அமைச்சர்கள் பல மாணவர்களுக்கும், பல பெற்றோர்களுக்கும், தனிப்பட்ட நபர்களுக்கும் கடிதங்கள் கொடுத்திருக்கிறார்கள். சில பேர்கள் அந்தக் கடிதங்களையெல்லாம் வாங்கி வைத்துக் கொண்டு அவற்றை விற்கக் கூடிய அளவில் நிலைமையிருந்ததைப் பார்க்கிறோம். முதல் அமைச்சர் அவர்கள் கல்லூரி முதல்வர்களை அழைத்து அவர்களிடத்திலுள்ள கடிதங்களை வரவழைத்துப் பார்த்தால் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கக்கூடும். பொதுவாக எந்த ஒரு விஷயத்திற்கும் அமைச்சர்கள் கடிதங்கள் கொடுப்பார்களானால், அப்படி கடிதங்கள் கொடுப்பது சரிதானா என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

சென்ற ஆண்டு தென் ஆற்க்காட்டில் கள்ளக்குறிச்சி வட்டாரத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. பஞ்சாயத்து கூட்டுமன்ற ஆசிரியர்களை மாற்றுவதில் ஏற்கனவே ஒரு குழு அமைக்கப்பட்டு அந்த வட்டாரத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அதில் உறுப்பினர்களாக இருந்து, ஆர்.டி.ஓ. தலைமையில் அது அமைக்கப்பட்டு, அந்தக் குழு கூடி மாறுதல் செய்தார்கள். குழுவில் உள்ள எல்லோரும் சேர்ந்து சட்டமன்ற உறுப்பினர் உள்பட மாறுதல்கள் செய்தாகிவிட்டன. அதைச் செய்து ஒரு மாதம் முடிவடைந்து விட்டது. அதற்குள் ஆசிரியர்கள் அவர்களுக்கு எங்கெங்கு மாற்றம் கொடுக்கப்பட்டதோ அந்த அந்த இடங்களுக்குச் சென்று விட்டார்கள். பின்னர் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் மாற்றியவர்களைத் திரும்பவும் அந்தக் குழு பரிசீலனை செய்து மாற்றப்படவேண்டும் என்று செய்து இதனால் பல தகராறுகள், இடைஞ்சல்கள் ஏற்பட்ட நிலையைப் பார்க்கிறோம். இது சரியான முறையல்ல. இது ஒழுங்காக நடக்குமா என்பதை நான் முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்றையதினம் வெளியிடங்களுக்குப் போய் அமைச்சர்கள் பேசுகிறார்கள். அப்படி வெளியில் சென்று பேசும்போது அவர்கள் கொடுக்கும் வாக்குறுதிகள், தாராளமாக அவர்கள் அள்ளிக் கொடுக்கும் வாக்குறுதிகள் எந்தவிதமான சங்கடங்களை, கஷ்டங்களை ஏற்படுத்தும் என்பதைப் பற்றி கவனிக்கவேண்டும்.

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி கோவை நகரத்தில் இங்கு பார்வையாளர்களாக வந்தவர்களுக்கு, அதில் கலந்து கொண்டவர்களுக்கு, ஒரு வரவேற்பு கொடுத்தார்கள். கோவை நகராட்சி அவர்களுக்கு ஒரு வரவேற்பு கொடுத்தது. பொதுவாக



1968 மார்ச் 25] [திரு. கோ. பூவராகன்]

ஒரு சம்பிரதாயம் என்னவென்றால், நகரமன்றத்தில் எந்த விழா நடந்தாலும் அதற்கு நகரமன்றத் தலைவரோ அல்லது உப தலைவரோ அல்லது அது சம்பந்தப்பட்டவர்களோதான் தலைமை தாங்குவது வழக்கம். அதற்கு மாறாக அமைச்சர் அவர்களே தலைமை தாங்கவேண்டுமென்று கலெக்டரிடம் தொலைபேசி மூலம் பேசி அந்த விழாவிற்கு அமைச்சர் அவர்கள் தலைமை தாங்க வேண்டுமென்ற ஏற்பாடு செய்யப்பட்டது. கடைசியாக விழா முடிந்த பிறகு தேசிய கீதம் பாடக்கூடாது, வேறு தமிழ்ப் பாட்டு தான் பாடவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி பிறகு அந்த நகர மன்றம் கூட்டப்பட்டு அதுபற்றி விவாதிக்கப்பட்டது. தீர்மானம் கூட நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்த முறையில் நடக்கும் என்று சொன்னால் அது சரியானமுறையாக இருக்காது. அமைச்சர் அவர்கள் இதுபற்றி விளக்கம் தெரிவிக்கவில்லை, இது வரையில்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருப்பது ரொம்பவும் உண்மைக்கு மாறானது என்பது மட்டுமல்லாமல், இந்தத் தகவல்களை அவர்கள் எங்கிருந்து பெற்றார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நான் விளக்கம் கூறவில்லை என்று சொல்கிறார்கள். இதற்கான விளக்கத்தை நான் சொல்வது அவ்வளவு பெருமையாகாது. எந்தக் குற்றமும் ஏற்படவில்லை. தவறான ஒரு செய்தியை, நகரமன்றத்தில் வேண்டுமென்றே செய்யப்பட்ட ஒரு நிலையில் மாவட்ட கலெக்டர் அதற்கு மறுப்பும் சொல்லியிருக்கிறார்கள். அது பத்திரிகைகளில் வந்திருக்கிறது. பிறகு அந்த மன்றம் வாயைத் திறக்கவும் இல்லை. அந்த விவரங்கள் தெரியாதவர்கள் அதை எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. அமைச்சர் தலைமை வகிக்கவேண்டுமென்று தொலைபேசி மூலம் சொன்னதாகச் சொன்னார்கள். அதெல்லாம் பழைய காலத்தில் உள்ள மந்திரிமார்களின் பழக்க வழக்கமாக இருக்கலாம். கோவையில் நடைபெற்ற விழாவிற்கு, உலகத் தமிழ் மாநாட்டின் வரவேற்பு கலாசாரக் குழுத் தலைவன் என்ற முறையில் அவர்களைத் தமிழ்நாடு முழுவதும் அழைத்துச் செல்லவேண்டிய பொறுப்பு எனக்கு இருந்தது. நடைபெற்ற அந்த வரவேற்பிற்கு சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் வந்தார்கள். இந்த வரவேற்பை நகரமன்றத்திலே வைத்துக்கொள்ளக் கூடாது, மக்கள் மன்றத்திலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஏற்பாடு செய்திருந்தார்கள். அங்கேயே நீங்களும் கொண்டு வந்து கொடுங்கள் என்று நகர்மன்றத்திற்குக் கூறியதை அவர்கள் ஒத்துக்கொண்டு அங்கு படித்துக்கொடுத்தார்கள். அதேபோல சென்னையிலே முதலமைச்சர் தலைமையிலே நடைபெற்ற கூட்டத்தில் மேயர் கொடுத்தார், சிதம்பரத்தில் விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலே நடந்தபோது அவ்வாறு கொடுக்கப்பட்டது. இப்படி நேரமில்லாத நேரங்களிலே, பொதுக் கூட்டங்களிலே படித்துக் கொடுப்பதுண்டு. பெரிய விளம்பரங்கள், நோட்டீஸ்கள், பல்லாயிரக்கணக்கான வால்போஸ்டர்கள் போட்டு உணவு

அமைச்சர் தலைமையில் நடைபெறும் என்று அறிவித்து, சிதம்பரம் பூங்காவில் 1½ இலட்சம் மக்கள் கலந்துகொண்டார்கள். இழிவு படுத்த வேண்டுமென்ற நோக்கத்திற்காக ஏதோ தேசிய கீதம் பாடுவதற்கு மறுப்பை நான் சொல்லிவிட்டதாகக் கூறப்படுகிறது. அப்படிப்பட்ட நிலை ஏற்படவில்லை. இதை கோயம்புத்தூரிலுள்ள 1½ இலட்சம் மக்கள் உணர்வார்கள். இவ்வாறு ஏற்படவில்லையென்றும், நான் தலைமை வகிக்க வேண்டுமென்று கலெக்டரைக் கேட்கவில்லையென்றும் ஆணித்தரமாக மறுக்கிறேன்.

தேசிய கீதத்தை மறுக்க வேண்டிய அவசியம் வரவில்லை. தப்பாக நினைத்துக் கொண்டு, கோயம்புத்தூர் நகர சபையிலே வரவேற்புக் கூட்டம் நடந்ததாகவும், அந்தக் கூட்டத்திலே அமைச்சர் உட்கார்ந்து கொண்டு நான்தான் தலைமை வகிக்க வேண்டுமென்று கூறியதாகவும் பத்திரிகைக்காரர்கள் சித்தரித்துள்ளதைக் கொண்டு அவர்கள் விளக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களை நீங்கள் இவற்றையெல்லாம் கேட்கக்கூடாது என்பதாகச் சொல்லவில்லை. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள இலட்சக்கணக்கான மக்கள் இதை உணர்வார்கள். அந்தக் கூட்டத்தில் எதிர்கட்சித் தலைவரவர்களைப் பார்க்கக் காணோம். மற்றபடி 20 எம்.எல்.ஏ.-க்கள், திரு. பூபதி, மற்றும் நண்பர் பழைய எம்.எல்.ஏ. திரு. மகாலிங்கம் அவர்களும் கலந்துகொண்டார்கள். கோயம்புத்தூர் மாவட்ட கலெக்டரவர்கள் அதற்காக என்னை விரும்பி வேண்டி அழைத்து, அதை நான் ஒப்புக்கொண்டு அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகவே, சென்றேன். அது தானே தவிர, நகரமன்றத்தில் வரவேற்பு நடந்ததுபோலவும், மந்திரி பஞ்சமாக ஆகி நகரசபைத் தலைவரின் இடத்தைப் பெற்றுக் கொண்டதைப் போலவும் சித்தரிப்பதை மறுப்பதற்காகவே கூறுகிறேன். கோவை மாவட்டக் கலெக்டரவர்கள் வெளியிட்ட அறிக்கை மறுநாளே எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அதையும் கவனித்திருக்க வேண்டும். குற்றங்களைச் சொல்லக் கூடாது என்பது அல்ல. சொல்லக்கூடிய குற்றங்கள் நல்ல ஆதாரத்தோடு, மறுக்க முடியாத அளவிற்கு இருந்தால் அத்தகைய குற்றங்கள் நேராமல் திருத்திக்கொள்வதற்கு வாய்ப்பாகயிருக்கும் என்று மாஜி அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. கோ. பூவராகன் :** கோவைக்குச் சென்றபோது நேரில் விசாரித்து அறிந்துவிட்ட பிறகுதான் இந்தத் தகவலை நான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினரவர்கள் தாம் கேள்விபட்டதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இதிலே தொடர்பு கொண்ட அமைச்சரவர்கள் அப்படி ஏதும் நடக்கவில்லை என்று அறிவித்தார்கள். தாம் அறிவித்தது மட்டுமல்லாமல், அந்தச் சம்பவத்தைப்பற்றி, தொடர்புடைய மாவட்ட கலெக்டர் அவர்களின் அறிக்கையைப் பற்றியும் குறிப்பிட்டார்கள்.





இனி நம்முடைய உறுப்பினரவர்கள் சொல்ல வேண்டியது, இவர் தொலைபேசி மூலம் கலெக்டர் அவர்களுடன் பேசினார் என்பதற்கு ஆதாரம், நான் தலைமை வகிக்க வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார் என்பதற்கு ஆதாரம், தேசிய கீதத்தை பாடக் கூடாது என்று அவர் சொன்னதற்கு ஆதாரம். இத்தகைய ஆதாரங்கள் இருக்குமானால் அதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதை விட்டு, கோவைக்குச் சென்று விசாரித்துப் பார்த்தேன் என்றால், யாரை விசாரித்தீர்கள்? சம்பவத்தோடு தொடர்புகொண்டவர்களையா, அல்லது அவர்கள் கட்சிக்காரர்களையா என்பதை விளக்கிச்சொன்னால் இதற்குக் கொஞ்சம் வலிவு ஏற்படும்.

**திரு. கோ. பூவராகன் :** இதைப்பற்றி விசாரிக்க முதலமைச்சரவர்களே யாரையாவது, நீதிபதியையாவது, நியமித்து அங்குள்ள நகரமன்ற தலைவர்கள், பொதுமக்கள் இவர்களை விசாரித்தால் உண்மை விளங்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு உறுப்பினர் குற்றச்சாட்டைச் சாட்டும் நேரத்தில் இந்த அவையிலே அமைச்சர்கள் அப்படிப்பட்ட குற்றச்சாட்டு கிடையாது என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் மரபு, விதிமுறை. எனவே அதைப்பற்றி மேலும் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அவை விதிமுறைகளுக்கு உட்பட்டுப் பேசாமலிருப்பது எங்களுக்கு வலுவுள்ளதாகக்கூட இருக்காது. உள்ளபடியே அவ்வாறு நடந்திருந்தால் அது தவறானது. அதற்குத்தக்க ஆதாரங்கள் சொல்லுவார்களேயானால் நிச்சயமாக அது களையப்பட வேண்டும். ஆனால், தொடர்ந்து பொது மேடைகளிலும், பத்திரிகைகளிலும், இந்த அவையிலும் தப்புப்பிரச்சாரமாக அமையும் வகையிலே அமைந்து இருப்பதாலே அவர்கள் எந்த ஆதாரத்தைக்கொண்டு அப்படிச் சொன்னார்கள்? உணவு அமைச்சரவர்கள் தொலைபேசி மூலம் சொன்னதாகச் சொன்னார்கள். அமைச்சரவர்கள் அப்பொழுது குழுவோடு பயணம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய அனுபவம் ஒன்றைக்கூறுகிறேன். இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னதாக தெனாலி நகரசபையில் எனக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அவருடைய இலக்கணப்படி நகரமன்றத் தலைவர்தான் தலைமை வகித்திருக்க வேண்டும். ஆனால், அங்கு அமைச்சரொருவர் தலைமையில் வரவேற்பு கொடுக்கப்பட்டது. எனவே இவர்கள் இன்னொருபடி மேலே சென்று இப்படியும் தங்கள் பிரச்சாரத்திலே சேர்த்துக்கொள்ளலாம். அதாவது, இங்கிருந்து தெனாலிக்கு அண்ணாதுரை டெலிஃபோன் செய்து, நகரமன்றத் தலைவரே தலைமை வகித்தால் அவ்வளவு

சிறப்பாக இருக்காது. ஆகவே ஒரு மந்திரியாவது தலைமை வகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதற்குப் பிறகு அண்ணாதுரை சென்றார் என்று சொன்னால் பிரச்சாரத்திற்கு இன்னும் வலுவளிக்கும் என்றால் அப்படியும் சொல்லட்டும். நீங்கள் அப்படிச் சொல்வதானால் நாங்கள், முன்னாலிருந்த அமைச்சர்கள் என்னென்ன நிகழ்ச்சிகளை எப்படியெப்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று யார்யாருக்கு சேதி சொல்லியனுப்பினார்கள் என்ற ஆதாரமற்ற புகார்களைச் சொல்ல வேண்டியிருக்கலாம், அதாவது ஆதாரமற்ற புகார்களை. ஆகையால் இந்தப் புகாரை எழுப்புவதற்கு முன்னால் தொலைபேசியில் பேசியதற்கு ஆதாரம், கலெக்டரை வற்புறுத்தியதற்கு ஆதாரம் என்று ஆதாரங்களை வைத்துக்கொண்டு பேசியிருந்தால் அது சரியாக இருந்திருக்கும். ஆனால், அவர் தம்முடைய மாலை நேரப் பிரச்சாரத்தின் முற்பகுதியை காலையிலேயே செய்து கொண்டிருக்கிறார் என்று கருதுகிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** இந்த மாதிரியான பதில்களைத்தான் சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன். இதற்கு முதலமைச்சரவர்கள் வருத்தப்பட்டுக்கொள்ளக்கூடாது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இது அவ்வளவு பொருத்தமான பதிலாக ஆகாது. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது, நகரமன்றத்திலே விவாதிக்கப்பட்டிருக்கிறது. கோவை நகரத்திலே இவ்வாறு பேசப்படுகிறது என்பதை முதலமைச்சரவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** திரும்பத் திரும்ப பத்திரிகையிலே வந்தது, பத்திரிகையிலே வந்தது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். மாவட்டக் கலெக்டர் அவர்கள் விளக்கமாக அறிக்கைவிட்டபிறகு, பத்திரிகைகள் உள்ளபடி மாவட்ட கலெக்டர் சொன்னதில் தவறு இருந்தால் அதை விளக்கி அவர்கள் எழுதியிருப்பார்கள். ஆனால் நம்முடைய கனம் உறுப்பினரவர்கள், "நான் சொல்வதைச் சொல்லிக்கொண்டேயிருப்பேன், சம்பந்தமுடையவர்கள் மறுப்பு கொடுப்பதைப் பற்றிக் கவலை இல்லை" என்ற ரீதியில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இரண்டாவது உலகப்போரில் இப்படிச் சொல்வதைத்தான் "கோயபெல்ஸ் பிரச்சாரம்" என்பார்கள். மாவட்டக் கலெக்டர் தொடர்புடையவர், அமைச்சர் தொடர்புடையவர், அவர்கள் இருவரும் இப்படி ஏதும் நடக்கவில்லை என்று சொன்னதற்குப் பிறகு திரும்பத்திரும்ப இப்படித்தான் நடந்ததாகக் கேள்விப் பட்டேன், கேள்விப்பட்டேன் என்றால், நம்முடைய கனம் உறுப்பினரவர்கள் தமக்கே அது சரியானதுதானா என்று அவைக்கு வெளியே போனபிறகாவது யோசித்துப் பார்க்க வேண்டும்





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சட்டமன்ற விதிகள் 30(3)-இல்

'If a question contains a statement, the member asking it must make himself responsible for the accuracy of the statement.'

என்றிருக்கிறது விவாதத்திற்கும் பொருந்தும். அமைச்சரவர்களின் மீது கனம் உறுப்பினரவர்கள் இப்படியொரு குற்றச்சாட்டை சாட்டும் நேரத்தில் அதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் முழு விளக்கமும் தரக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

**திரு. கோ. பூவராகன் :** முழு விளக்கம்தான் இப்பொழுது நான் கொடுத்திருப்பது. கோயபல்ஸ் பிரசாரம் செய்கிறோம் என்று சொன்னார்கள். இந்த கோயபல்ஸ் பிரசாரத்திலே கைதேர்ந்தவர்கள் அவர்கள்தான் என்பதை நான் அதிகமாக சொல்லத் தேவையில்லை. நாங்கள் கோயபல்ஸ் பிரசாரம் செய்கிறோம் என்று சொன்னார்கள். அவர்கள்தான் கோயபல்ஸ் பிரசாரம் செய்கிறார்கள் என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட கோயபல்ஸ் பிரசாரம் யார் செய்கிறார்கள் என்பதை பொதுமக்கள் நன்றாக அறிவார்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இந்தப் பிரசாரத்தை யார் செய்கிறார்கள் என்பதை பிறகு கவனித்துக்கொள்ளலாம். தொலைபேசி மூலமாக அமைச்சர் மாவட்ட கலெக்டரை அணுகி, "நான்தான் தலைமை வகிக்க வேண்டும்" என்று சொன்னார் என்பதற்கு என்ன ஆதாரம்? தேசிய கீதம் பாட வேண்டாமென்று அமைச்சர் சொன்னதற்கு என்ன ஆதாரம்?

**திரு. கோ. பூவராகன் :** தேசிய கீதம் அந்த சமயத்திலே பாடப்பட்டதா என்பதை அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். பத்திரிகையிலே அந்தச் செய்தி வந்திருக்கிறது. அந்த ஊர் மக்கள் அதைப் பற்றி பேசியிருக்கிறார்கள், சம்பந்தப்பட்டவர்கள் அதைப் பற்றி நகரமன்றத்தில் பேசி இருக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நான் உள்ளபடி முன்னாள் அமைச்சரிடத்திலே வாதிட வேண்டுமென்பதற்காக சொல்லவில்லை. இப்படிப்பட்ட தவறான தகவல்களை வைத்துக் கொண்டு இரண்டு பெரிய கேவலமான பழிகளை அமைச்சர் பேரிலே சொல்வதற்கு அவர் உடந்தையாக இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். தேசிய கீதம் பாடப்பட்டதா, இல்லையா என்பது வேறு பிரச்சினை. சில இடங்களிலே கிராமபோன் பிளேட்டு கூட போடுகிறார்கள். ஆகவே, தேசிய கீதத்தை நாங்கள் எதிர்க்கவில்லை. நாங்கள் இந்தி எதிர்ப்பாளர்களாக இருப்பதாலே தேசிய கீதத்தை எதிர்க்கிறோம் என்று தவறாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். நமக்கு இருக்கிற இரண்டு தேசிய கீதங்களும் இந்தி மொழியிலே அல்ல; வங்க மொழியிலே தான் இருக்கின்றன என்பது எங்களுக்குத் தெரியும். முன்னாள்

அமைச்சருக்கு தெரிந்திருக்குமோ இல்லையோ. தேசிய கீதத்தைப் பாடக் கூடாது என்று நாங்கள் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. அமைச்சர் அவர்கள் "நான் அப்படிச் சொல்லவில்லை" என்பதை எடுத்துச் சொல்லிவிட்டார்கள். அங்கே பாடப்பட்டதா இல்லையா என்ற கேள்வி அந்த இடத்திலே தேசிய கீதம் பாடுவதற்குப் பயிற்சி பெற்றவர்கள் இருந்திருக்கிறார்களா என்பதைப் பொருத்திருக்கிறது. எந்தப் பொது நிகழ்ச்சியிலாவது தேசிய கீதம் பாடப்படாமல் இருக்குமானால், அதை அங்கேயே மிகப் பலமாகக் கண்டிக்க கடமைப்பட்டிருக்கிறேன். கண்டிக்கவும் செய்கிறேன். ஆனால் அப்படிப்பட்ட நிகழ்ச்சி இதுவரை ஏற்படவில்லை. இவ்வளவுக்கும் அவர் சொல்லுகின்ற சமாதானம் 'பத்திரிகையிலே வந்தது'. என்பது எந்தப் பத்திரிகையில்? அன்றைக்கு அப்படி எழுதியதற்குப் பிறகு, கலெக்டருடைய விளக்கத்தைப் பெற்றதற்குப் பிறகு அதை மாற்றினார்களா? மாற்றவில்லை. கோயம்புத்தூரிலே ஒரு சிலர் பேசிக்கொண்டார்கள் என்று சொல்கிறார். யாரை அவர் சந்தித்தார்? கோயம்புத்தூரிலே நான் விசாரித்துப் பார்த்தேன், 'அப்படி எதுவும் நடக்கவில்லை' என்றார்கள். கோயம்புத்தூரிலே விசாரித்துப் பார்த்தேன், 'அப்படி நடந்தது' என்று அவரும், கோயம்புத்தூரிலே நான் விசாரித்துப் பார்த்தேன், 'அப்படி நடக்கவில்லை' என்று நானும் இருவரும் இப்படி சொல்வதற்காகவா அவையிலே இருக்கிறோம்? ஆகையால், அருள்கூர்ந்து அவரை வேண்டுகிறேன், அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தபிறகு திரும்பத் திரும்ப அதே பிரசாரத்தை நடத்துவதைத்தான் கோயபல்ஸ் பிரசாரம் என்று சொன்னேன். விளக்கம் சொன்னபிறகு திரும்பத் திரும்ப அதே பிரசாரத்தைச் செய்வது கண்டிக்கத்தக்கது என்று சொன்னதை அவர்கள் எடுத்துக்கொண்டு, 'நீ தான் கோயபல்ஸ்' என்று சொல்வது, இன்னும் பள்ளிக்கூடத்துச் சிறுவர்கள் வெளியே, 'உனக்குத்தான் புத்தியில்லை, எனக்குத்தான் புத்தியில்லை' என்று சொல்வதுபோல இருக்கிறது. அந்த வகையிலே சொல்வதற்கில்லை இது. உண்மைக்கு மாறானது என்று தெரிந்திருந்தும் திரும்பத் திரும்ப அதையே சொல்வேன் என்று சொல்வதைத் தான் கோயபல்ஸ் பிரசாரம் என்று சொல்வார்கள். மாவட்டக் கலெக்டரும் விளக்கியபிறகு திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்வதைத்தான் கோயபல்ஸ் பிரசாரம் என்று சொன்னேன். நீங்கள் அந்த பிரசாரத்திலே வெற்றிபெறவில்லை என்பதைத் தான் பொதுத் தேர்தலிலே காட்டிவிட்டீர்கள். ஆகையால் 'நாங்கள் இதிலே வல்லவர்கள்' என்று காட்டி, நீங்கள் சொன்ன அந்த பிரசார முறைதான் தவறு என்று சொல்கிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** தவறான பிரசாரம் செய்வது எங்களுடைய வழக்கம் அல்ல. இதை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்தப் பிரச்சனையை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, எனக்கு கிடைத்த தகவலைச் சொல்லுகிறேன்.



**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நான் அடிக்கடி குறுக்கிடுவதற்காக அருள் கூர்ந்து என்னை மன்னிக்கவேண்டும். அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கவில்லை என்று சொன்னார்கள். அதை உறுப்பினர் அவர்கள் கண்ணியமான முறையிலே ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களிடம் அதை மறுப்பதற்கு ஆதாரங்கள் இருந்தால், அமைச்சர் அவர்கள் இம்மாதிரி தொலைபேசியில் பேசினார் என்று சொல்ல வேண்டும். இப்பொழுது அவரிடத்திலே இருக்கிற ஆதாரம் அவர் படித்த பத்திரிகை, அவர் பேசியபோது கோயம்புத்தூரிலே உள்ள பொது மக்கள். இந்த இரண்டை ஆதாரங்களாகக் கொண்டு அமைச்சருடைய விளக்கம், மாவட்ட கலெக்டருடைய அறிக்கை, இந்த இரண்டையும் மறைத்து, இந்த இரண்டையும் ஏற்றுக் கொள்ளாமல் திரும்பத் திரும்ப அதையே சொல்வதுதான் தவறு என்று நான் குறிப்பிடுகிறேன். அமைச்சர் அவர்கள் 'நான் தொலை பேசியில் தொடர்புகொள்ளவில்லை; தலைமை வகிக்க வேண்டுமென்று நான் வற்புறுத்தவில்லை; தேசிய கீதம் பாட வேண்டாமென்று சொல்லவில்லை' என்று சொன்னார்கள். நம்முடைய முன்னாள் அமைச்சர் அவர்கள் இதை ஏற்றுக்கொள்ளுகிறேன் என்பதை அவையிலே தெரிவிப்பதுதான் கண்ணியமாக இருக்கும்.

**திரு. கோ. பூவராகன் :** விசாரிக்கவும் என்று சொல்லுகின்ற பொழுது, 'தவறான தகவல் சொல்லிவிட்டார்கள், வேண்டுமென்றே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், எங்கிருந்து கிடைத்தது, எப்படி சொன்னார்கள், இப்படி சொல்வதற்கு இந்த மன்றத்திலேயிருக்கிற உறுப்பினர்களுக்கு உரிமையில்லை' என்று சொன்னால் அது பொருத்தமாக இருக்காது. நாங்கள் தவறாக சொல்லுகிறோம், எங்கோ தவறான செய்திகளையெல்லாம் கொண்டு வந்து காலைச் செய்தியாகவும் மாலைச் செய்தியாகவும் சொல்லுகிறார்கள் என்று சொல்வது அவ்வளவு பொருந்துமா? அவர்கள் சொல்லுவது எந்த செய்திக்காக? இதை நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நான் விரும்பும் தகவல், உங்களுக்குக் கிடைத்தது சாதாரண தகவலா? அல்லது விசேஷ தகவலா? விசேஷத்திலேயே தவறு? ஆனால் அமைச்சருடைய தவறைப்பற்றி இதிலே கூறப்பட்டிருக்கிறது. அவருடைய தகவலுக்குத் தருந்தவாறு நாம் கவனிக்கவேண்டும். ஆனால், அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லுகிறார்கள், 'தலைமை வகிக்க வேண்டுமென்று நான் கலெக்டரிடத்திலே தொலைபேசியில் பேசவில்லை. அவரே என்னை அழைத்து தலைமை வகிக்கச் சொன்னார்'. என்று. அது நகராட்சிக்காக ஏற்படுத்தப்பட்ட நிகழ்ச்சி அல்ல. பொது வரவேற்பில் நகராட்சிமன்றத் தலைவர் நகராட்சி மன்ற சார்பில் வரவேற்புக் கொடுத்தார். அதைப்போல உலகத் தமிழ் மகாநாட்டின்போது மாநகராட்சி வரவேற்பும் கடற்கரை கூட்டத்திலே கொடுக்கப்பட்டது. ஆனால், 'நான் தான் தலைமை வகிக்க வேண்டுமென்று சொன்னதாகச் சொல்வது

உண்மைக்குப் புறம்பானது' என்று அமைச்சர் சொன்னார். இன்னொன்று, 'தேசிய கீதத்தைப் பாடக் கூடாது என்று நான் சொல்லவில்லை' என்றார். இந்த இரண்டையும் நம்முடைய கனம் உறுப்பினர் அவர்கள், 'அமைச்சர் இந்த விளக்கத்தை கொடுத்ததற்காக நான் உள்ளபடி மகிழ்ச்சி அடைகிறேன், அந்த இரண்டு நிகழ்ச்சிகளும் நான் எண்ணிக் கொண்டு இருந்தது போல் இல்லை; எனக்குச் சொல்லப்பட்டதைப் போல் நடைபெறவில்லை', என்று அவர் சொல்லவேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன். அந்த வகையிலே அவருக்காவது அல்லது அவர் சார்ந்திருக்கிற கட்சிக்காவது ஒரு துளியும் ஊறு விளைவிக்காது. இன்னும் சொல்லப் போனால் அவருடைய பெருமையும் அவர் கட்சியினுடைய பெருமையும் கூட இதனால் உயரும். ஏனென்றால், இது தனிப்பட்ட மதியழகன் பிரச்சினை அல்ல. 'இந்தத் தமிழக அரசை நடத்திச் செல்லுகின்ற அமைச்சர்களிலே ஒருவர் கூட்டத்திலே தலைமை வகிக்க வேண்டுமென்று தொலைபேசியிலே சொன்னார்' என்று முன்னாள் அமைச்சர் அவர்கள் சொல்லி, அது அவைக் குறிப்பிலே வந்து, அது மறுக்கப்படாமல் இருக்குமானால் அந்த அரசைப் பற்றியும் தமிழகத்தைப் பற்றியும் என்ன கருதுவார்கள் என்பதை எண்ணி, இந்த தலைமைவகிக்கின்ற பிரச்சினை, தேசிய கீதம் பாட வேண்டாமென்று நான் சொல்லவில்லை என்று அவர் சொல்வது இந்த, இரண்டையும் முன்னாள் அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்கிறேன் என்று அறிவிப்பது தான் சாலச் சிறந்ததாக இருக்கும்.

திரு. கோ. பூவராகன் : ஏற்றுக்கொள்வதாக அறிவிக்க வேண்டுமென்று விரும்புகின்றவர்கள் சொல்லுகின்ற பொழுது கிண்டலும் கேலியும் இல்லாமல் திருப்தி அளிக்கக்கூடிய பதிலாக சொல்லியிருக்கவேண்டும். அந்த முறையிலே அமைச்சர் அவர்களுடைய பதில் அமையவில்லை. அதனால் அதற்குத் தகுந்த விளக்கமும் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் மறுமுறையும் சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நான் இதைத் திரும்பத் திரும்ப சொல்வதற்குக் காரணம், உண்மைக்கு மாறான விஷயங்களை இந்த அவையிலே எடுத்து பேசக் கேட்டால் அதைக் குறித்து பின்னாலே விளக்கம் அளிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதற்காகத் தான் நான் திரும்பத் திரும்ப பேசுகிறேன். இதிலே கிண்டலும் கேலியும் இல்லாமலிருந்தால் நான் ஏற்றுக்கொண்டு இருப்பேன் என்று நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்றார்கள். அமைச்சருடைய பேச்சைப் பொறுத்த வரையில் அதிலே கிண்டலும் கேலியும் இருந்ததாக நான் உணரவில்லை; இந்த அவையினரும் உணரவில்லை. இன்னும் சொல்லப்போனால் மிகமிகத் தயக்கத்தோடு பேசினாரே என்று கூட நான் எண்ணிக் கொண்டிருந்தேன். என்னுடைய பேச்சைப் பொறுத்தவரை அதை நிரம்ப பேர் ரசித்திருக்கிறார்களே தவிர,



அதை இவரைப்போல் யாரும் தவறாக உணர்ந்துகொள்ளவில்லையென்று நான் உணருகிறேன். யாரும் அதை கேலியாக எண்ணவில்லை என்று நம்புகிறேன். கேலியும் கிண்டலும் பிடிக்கவில்லையென்றால் அவரைப் பொறுத்தவரையில் இனி பேசுகிற பொழுது, அதிலே ஈடுபடாமல் பேசக்கூட நான் பழகிக் கொள்ளுகிறேன். ஆனால், எனக்கு தேவை, அந்த இரண்டு குற்றச்சாட்டுகளும் அமைச்சராலே மறுக்கப்பட்டபிறகு, நம்முடைய முன்னாள் அமைச்சர் அவர்கள் அதை கண்ணியமாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதுதான்.

திரு. கோ. பூவராகன் : எனக்குக் கிடைக்கின்ற தகவலைச் சொல்லவேண்டிய பொறுப்பை எனக்கு ஓட்டுபோட்ட மக்கள் தந்திருக்கிறார்கள். நான் இந்த தகவலைச் சொல்லுகிறேன். பதிலளிக்கக் கடமைப்பட்டவர்கள் பதிலளிக்கிறார்கள். இதற்கு தீர்ப்பு அளிக்கவேண்டியவர்கள் வெளியே இருக்கிறார்கள். எது உண்மை, எது தவறு என்று நம்மையெல்லாம் சொல்லக்கூடியவர்கள் அங்கே, நம்மை அனுப்பியவர்கள் இருக்கிறார்கள் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தீர்ப்பு அளிக்க பி. ப.
வேண்டிய, வோட்டு அளித்த, மக்கள் சார்பில் பேசுகிறேன் என்கி 1-00.
றார்கள். அவர்களுக்கு வோட்டு அளித்த மக்களுக்கும், கோவைக்கும் நெடுந்தொலைவு. உள்ளபடியே, அவர்களிடத்திலே மிகுந்த மரியாதை உணர்ச்சியோடு கேட்டுக் கொள்கிறேன், வாதத்திற்காக கேட்கவில்லை. அமைச்சர் விளக்கம் அளித்த பிறகும் மாவட்ட ஆட்சியாளர் அறிக்கை வந்த பிறகும், அவற்றை ஏற்றுக் கொள்வதில் முன்னாள் அமைச்சருக்கு என்ன தயக்கம்?

திரு. கோ. பூவராகன் : ஒவ்வொன்றையும் விளக்கமாகச் சொல்லுகிறேன். திரும்பத் திரும்பச் சொல்ல விரும்புகிறேன்....

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள், அவர்களுக்குக் கிடைத்த தகவல் பற்றிப் பேசினார்கள். அவர் அவர்களுக்குக் கிடைக்கும் தகவல் பற்றிப் பேச எல்லோருக்கும் உரிமை உண்டு. மாண்புமிகு முதல் அமைச்சரும், அந்தத் தகவல் சரியானது இல்லை என்று குறிப்பிட்டார்கள். அப்படிச் சரியானது இல்லை என்று சொன்னார்கள். அப்படிச் சரியானது அல்ல என்பதற்கு பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன் என்று அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அவர்கள் சொல்கிறார்கள் நான் ஏற்றுக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினையை இத்துடன் முடிக்க, அமைச்சர் கொடுத்த பதிலை சரியான தகவல் என்று நான் ஏற்றுக் கொண்டு, அமைச்சர் பொறுப்பேற்றுக்கொண்டதற்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இத்துடன் இந்தப் பிரச்சினையை முடித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (ஆரவாரம்)

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** விரைவிலேயே நம்முடைய திரு. பூவராகன் அவர்கள் திரு. கருத்திருமன் அளவிற்கு உயர வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன். (பலத்த ஆரவாரம்)

**திரு. கோ. பூவராகன்:** அடுத்து, இன்றைய தினம் இந்த மானியக்கோரிக்கையின்மீது எனக்கு முன்னால் பேசிய, என் கட்சியைச் சார்ந்த ஒரு உறுப்பினர் பத்திரிகைகளுக்கு எவ்வாறு விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. விளம்பரம் கொடுக்கட்டும். ஆனால், ஒரு அமைச்சர் நடத்துகின்ற ஒரு பத்திரிகைக்கு, நம்முடைய அரசு விளம்பரங்களைக் கொடுத்திருக்கிறது. அதுவும் அந்த துறையைச் சேர்ந்த விளம்பரங்கள் ஏராளமாகக் கொடுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். அது சரியான முறையாக இருக்குமா என்பதைக் கவனிக்க வேண்டும் என்பதைத்தான் முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரே மாதத்திலே மட்டும். . . .

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார், கனம் உறுப்பினர் அவர்கள் தவறான தகவல்களையே மன்றத்தில் மேலும் மேலும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இங்கே உள்ள ஒன்பது அமைச்சர்களில் யாரோ அமைச்சர் ஒருவர் பத்திரிகை நடத்துகிறார் என்கிற தவறான தகவலைத் தெரிவிக்கிறார்கள். திரும்பத் திரும்ப இப்படி தவறான தகவல்களையே சபையில் சொல்வது ஒழுங்காக இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. கோ. பூவராகன்:** நான் சொல்கிறேன், பொறுத்து இருந்துவிட்டு, அதற்குப் பிறகு உறுப்பினர் சொல்லவேண்டும். இன்றைய தினம் அமைச்சர் நடத்துகின்ற முரசொலி பத்திரிகையில் பொதுப்பணியைத்துறை அமைச்சர் நிறுவனராக இருக்கும் அந்தப் பத்திரிகையில் சர்க்கார் விளம்பரம் கொடுப்பது தேவையா என்பதைப் பார்க்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, முரசொலி பத்திரிகையை—தலைப்பில் நிறுவனர் பெயர்கூட இல்லை என்பதை—அவர்கள் பார்த்ததாகத் தெரியவில்லை. நான் அமைச்சரான பிறகு, எனக்கும், முரசொலிப் பத்திரிகைக்கும் தொடர்பு இல்லை. இப்படித் தவறான தகவல்களையே வைத்துக் கொண்டு, கருத்துக்களை எடுத்துச் சொல்வது, அவர்களுடைய தரத்திற்கும் உகந்தது அல்ல என்பதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவிக்கிறேன்.

**திரு. கோ. பூவராகன்:** பத்திரிகையில் நிறுவனர் என்று போடவில்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன். அதே சமயத்தில்,



விளம்பரம் தேவை என்று கடிதம் ஒன்று எல்லோருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அதிலே 'ஃபௌண்டர் கருணாநிதி' என்று இருக்கிறது. 'ஃபௌண்டர்' என்றால் நிறுவனர்தானே என்பதை முதல் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஏராளமான விளம்பரங்கள் அந்தப் பத்திரிகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** 'ஃபௌண்டர் கருணாநிதி' என்று போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். காங்கிரஸ் நிறுவனத்தின் ஃபௌண்டர் டேவிட் ஹ்யூம், அதனால், காங்கிரஸ் வெள்ளைக்காரர்களுக்குச் சொந்தம் என்று பொருள்? பத்திரிகை நடத்தத் துவங்கியவர் அவர். ஆனால், அவர் அமைச்சரான பிறகு அந்தப் பத்திரிகையை நடத்துகிறார்களா என்பதுதான் இதிலே இருக்கிற பிரச்சினை.

**திரு. கோ. பூவராகன்:** பத்திரிகையிலே போடவில்லை என்று சொன்னாலும், ஒவ்வொரு விளம்பரத்திற்கும் கடிதங்கள் அனுப்பப் படுகின்றன. அது பதவியில் இருப்பதற்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லிவிட முடியாது. அதிலே போட்டிருக்கிறது, திருமதி, தயாளு அம்மாள் உரிமையாளராக இருக்கிறார்கள் என்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஏராளமான விளம்பரங்கள் கொடுக்கிறார்கள். பல் துறையைச் சேர்ந்தவர்கள், ஏற்கனவே கொடுத்தார்களா? இப்பொழுது கொடுக்கிறார்கள். இந்த துறையை பொதுப்பணித்துறை அமைச்சர் வைத்திருக்கிறார் என்பதால் இத்தனை விளம்பரங்களும் கொடுக்கப்படுகின்றன, அரசாங்க விளம்பரங்களும் ஏராளமாகக் கொடுக்கப்படுகின்றன என்பதை முதல் அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்கள் சரியான முறை என்றால் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இப்படித் தனிப்பட்ட பத்திரிகைக்கு, அமைச்சர் பொறுப்பில் இருக்கிறவருடைய சொந்தக்காரர்கள், வீட்டில் துணைவியார் நடத்தும் பத்திரிகைக்குச் சர்க்கார் விளம்பரங்கள் கொடுப்பது, பெயர் போட்டுக் கடிதம் எழுதி, விளம்பரங்கள் பெறுவது சரி என்றால், முதல் அமைச்சர் சொன்னால், ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

தொடர்ந்து இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. தென்னார்க்காடு மாவட்டத்தில் ஒரு மார்க்கெட்டிங் சொசைடி அதிலே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த, தந்தை, பிள்ளை இருவரையும் போட்டிருக்கிறார்கள். இது எப்படி முறையாக இருக்கும்? ஒரே குடும்பத்தில் இருக்கிறவர்கள், சலுகை காட்டவேண்டும் என்று செய்திருக்கிறார்கள். காட்டவேண்டியதுதான். காட்டட்டும். ஆனால், தந்தையும், பிள்ளையும் சேர்ந்து ஒரே நிறுவனத்தில் இடம் பெறுவது எவ்வளவு பொருத்தமானது ஆகும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிறது.

**திரு. கோ. பூவராகன்:** எங்கள் தலைவருடைய நேரத்தில் கொஞ்சம் எடுத்துக் கொண்டு பேச விரும்புகிறேன். இன்றைய

தினம் இவ்வாறு தவறுகள் இடம் பெற்று இருப்பதைப் பார்க்கிறோம். கல்லூரியைப் பொறுத்தவரையில். . . .

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, அரசாங்க விளம்பரங்கள் எல்லா பத்திரிகைகளுக்கும் தரப்பட்டு வருகின்றன. முரசொலி பத்திரிகைக்கு மட்டும் சலுகை கொடுக்கப்படவில்லை. பேசுகின்ற கனம் உறுப்பினர் விவரம் தெரிந்து கொண்டு, ஒழுங்காக, முறையாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோ. பூவராகன்:** அதற்கும் விவரம் வைத்திருக்கிறேன். இங்கே காட்டுகிறேன். ஒரு முழுப் பக்க விளம்பரம் முரசொலிப் பத்திரிகைக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை முதல் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் அவர்களும் பார்த்து இருப்பார்கள் என்று நினைக்கிறேன். நான் முறையாக, ஒழுங்காகத்தான், எல்லா விபரத்தோடுதான் பேசுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** முரசொலி அரசாங்க விளம்பரங்களை ஒழுங்காகப் போடுகிறது. பல பத்திரிகைகள் செய்திகளை வெளியிடுவதுகூட இல்லை என்பதையும் கனம் உறுப்பினர் அறிந்திருப்பார்கள். இது வாராந்திர மலராக, சிறப்பிதழாகப் பார்த்துக் கொடுத்திருக்கிறோம்.

**திரு. கோ. பூவராகன்:** இம்மாதிரி விளம்பரம் எல்லாப் பத்திரிகைகளுக்கும் முழுப் பக்கம் கொடுக்கத் தயாராக இருப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** பத்திரிகைகள் என்று சொல்லும் போது, எல்லாப் பத்திரிகைகளுக்கும் ஒரே மாதிரிக் கொடுக்க முடியாது. நூறு காபிகள் உள்ளவைகளுக்கு இது தேவையில்லை. லட்சக்கணக்கான மக்கள் படிக்கும் பத்திரிகைகளுக்குத்தான் அப்படிக் கொடுக்கிறோம். ஒரே மாதிரியாக எல்லாப் பத்திரிகைகளுக்கும் கொடுப்பது என்பது தான் ஓரவஞ்சனையாக இருக்கும். 'முரசொலி' லட்சக் கணக்கான மக்களால் படிக்கப்படுகிறது. அப்படி இருக்கும் போது, உறுப்பினருக்கு என்ன சந்தேகம் என்று புரியவில்லை. கட்சிகளை ஒட்டி பத்திரிகை வைத்திருப்பவர்களுக்கு விளம்பரம் தருவது முறையாகாது.

**திரு. கோ. பூவராகன்:** அவர்களே போட்டிருக்கிறார்கள், 30,920 காபிகள் என்று. அமைச்சர் ஒரு லட்சம் காபி என்கிறார்கள். ஒரு லட்சம் என்கிற செய்தி அமைச்சருக்கு எப்படிக் கிடைத்தது என்று தெரியவில்லை. விற்பனை 30,000 என்று போட்டிருப்பதை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். என்னுடைய பிரச்சினை என்னவென்றால், ஒரு நிறுவனத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த, தந்தை பிள்ளை இருவரையும் சேர்த்திருக்கிறார்கள்.



விருத்தாசலத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. கல்வி அமைச்சர் சொல்லிவிட்டார்கள், கல்லூரிக்கு 2½ இலட்சம் சேர்த்துக் கொடுத்தாகிவிட்டது; இனி கொளஞ்சியப்பர் கோவிலி லிருந்து கொடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டிருக்கிறார்கள், நானும் அனுமதி கொடுத்திருக்கிறேன் என்று. ஆனால் இன்றைய தினம் பார்க்கும்போது, அங்கே 4 லட்ச ரூபாய் வசூல் செய்ய ஏற்பாடு நடந்துகொண்டு இருக்கிறது. இப்பொழுது ஒரு தனிக் கமிட்டி போட்டிருக்கிறார்கள். அங்கே ஏற்கனவே ஒரு கமிட்டி இருக்கிறது. தனிக் கமிட்டி ஒன்று போட்டு, அதிகாரிகளை வைத்துக் கொண்டு, கெடுபிடியாக வசூல் நடக்கிறது என்பதைக் கல்வி அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அது நல்ல முறையில் அமைய வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதை உடனடியாக நிறுத்த வேண்டும். ஐந்து லட்ச ரூபாய் வந்த பிறகு வசூல் செய்வது என்றால் பொருத்தமாக அமையாது என்று சொல்லுவேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** இன்றைய தினம் பட்டாக்கள் வழங்கப்படுகின்ற மார்க்கெட்டிங் கமிட்டியிலே தந்தை, மகன் இருவரையும் சர்க்கார் போட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மகனை இந்தச் சர்க்கார் போட்டிருக்கிறது. தந்தை தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

**திரு. கோ. பூவராகன்:** மகனை எதனுடைய சார்பாகப் போட்டிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. தந்தைதான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று எனக்குத் தெரியும். அவரை விடச் சிறந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் யாரையாவது போட்டிருக்கலாம். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மகன் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதைக் கண்டு பொதுமக்கள் என்ன நினைப்பார்கள்?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** தந்தை தேர்ந்தெடுக்கப் பட்டார். மகனை இந்த சர்க்கார் போட்டது. உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று தெரிவித்துக்கொள்கிறேன். திரு. செல்வராஜ் அவர்கள் அந்தத் துறையிலே நல்ல பணியாற்றக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அவர் தேர்தலில் போட்டி. போட்டார் என்ற காரணத்திற்காக அவரைப்பற்றிக் குறையாகச் சொல்வது முறை யாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. பூவராகன்:** என்னுடன் போட்டி போட்டவர் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டாரே என்று நான் குறை சொல்லவில்லை. தேர்தலில் தோற்றவருக்கு நல்லவிதமாக ஊக்கம் கொடுங்கள், உற்சாகம் கொடுங்கள், அடுத்த தடவையும் என்னுடன் போட்டி போடச் சொல்லுங்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** இவருடன் சேர்ந்து போட்டி போட்டார் என்பதற்காக அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அவர் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

மாறான முறையில் தேர்ந்தெடுக்கப்படவில்லை. மாறான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டது என்று சொன்னால், அதற்குப் பரிகாரம் இருக்கிறது. மாறான முறை என்பதை அவர் நிரூபிக்க வேண்டுமே தவிர, அவர் கட்சிக்காரர் என்ற காரணத்திற்காக அவரை எடுத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்வதில் நியாயம் இல்லை. திரு. செல்வராஜ் அவர்களுக்கு மணிலா உற்பத்தியாளர்களைக் குறித்து அக்கறை இருக்கிறது. அவர் நல்லமுறையில் பணியாற்றுவார் என்று நாங்கள் கருதுகிறோம். நீங்கள் உங்கள் ஆட்சியில் தேர்தலில் தோற்றவர்களுக்கெல்லாம் உத்தியோகங்கள் கொடுத்திருக்கிறீர்கள், கெஜடட் ஆபீசர் பதவிகளைக் கூடக் கொடுத்திருக்கிறீர்கள்.

**திரு. கோ. பூவராகன்** : போடப்பட்ட முறை எப்படி நியாயமானது என்பதை விளக்கினால் நல்லதாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வராஜ் அவர்களைத் தேர்ந்தெடுத்தது முறைகேடானது, முறைக்கு மாறானது என்று சொன்னார்கள். முறைக்கு மாறாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால், தப்பான முறை இருந்தால் அதை அங்கத்தினர் விளக்க வேண்டுமே தவிர, மேலோட்டமாகப் பேசவேண்டாம். அதைத் தெளிவுபடுத்த வேண்டும். இல்லாவிட்டால் அந்த வார்த்தைகளை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து 'எக்ஸ்பஞ்ச்' செய்யவேண்டும்.

**திரு. கோ. பூவராகன்** : முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு, 'இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன' என்பதைக் கொண்டு வரவே இதை எடுத்துக் கூறினேன். ஒரே குடும்பத்தில் இருப்பவர்களைப் போடுவது நியாயம் என்று சொன்னால் ஏற்றுக்கொள்கிறேன். பட்டா வழங்குவதற்கு ஒரு நிகழ்ச்சி நடக்கிறது. அதற்காக அதிகாரிகள் ஏற்பாடு செய்கிறார்கள். அங்கேயே சிறப்புச் சொற்பொழிவு நடைபெறும் என்று ஒருவருடைய பெயரைப் போட்டிருக்கிறார்கள். அமைச்சருடைய நன்மையைக் கருதி இதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : என்னுடைய நன்மையைக் குறித்து நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் அமைச்சராக இருந்தபோது குறிப்பிட்ட இடத்திற்கு வேலை செய்தது தெரியாதா? நீங்கள் அப்பொழுது செய்ததெல்லாம் தெரியாதா? அவற்றையெல்லாம் மூடி மறைக்க முடியாது. (ஆரவாரம்)

**திரு. கோ. பூவராகன்** : குறிப்பிட்ட ஐந்தாண்டுகளில் பதினைந்தாயிரம் பட்டாக்களுக்கு மேல் வழங்கப்பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் எந்தந்த தாலுக்காக்களுக்கு, எப்படிப்பட்டவர்களுக்கு முறையாக வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். பட்டா வழங்கும் விழாவிற்கு அமைச்சர் போக வேண்டாம் என்று சொல்லவில்லை. தனிப்பட்ட ஒருவருக்கு இடம் கொடுத்து சிறப்புச் சொற்பொழிவு நடத்த அனுமதிப்பதைக் குறித்து ஊரிலே பலவிதமாகப் பேசுகிறார்கள். பணம் சேர்க்கிறார்கள் என்று பேசிக்கொள்கிறார்கள்.





பணம் பெறும் முறையிலே இப்படியெல்லாம் நடக்கிறது என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள். அப்படித்தான் நடக்கும் என்று சொன்னால், பொதுமக்கள் தக்க பதில் கொடுப்பார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்ற நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் ஒருசில வார்த்தைகளைச் சொல்லி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவதற்கு நேரமில்லாத காரணத்தால் முடித்துக்கொள்கிறேன்.

* * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : சபாநாயகரைப்பற்றி இந்த மன்றத்தில் குறிப்பிடக்கூடாது என்று ஒரு விதி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஐந்தாண்டுக் காலம் இந்த சபையில் அமைச்சராக இருந்தவர். அந்த முறையைப் பின்பற்றி உறுப்பினர் தன் வார்த்தைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**திரு. கோ. பூவராகன்** : சபாநாயகரைப்பற்றித் தவறாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: சபாநாயகரைப் பற்றித் தவறாகவும் சொல்லக்கூடாது, பாராட்டியும் சொல்லக் கூடாது. சபாநாயகரைப்பற்றி எதுவுமே சொல்லக்கூடாது.

**திரு. கோ. பூவராகன்** : இந்தப் புத்தகத்தில் இருப்பதை நான் படித்துக்காட்டினேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : 'இந்த இடத்திற்கு' மதிப்பு அளிக்க வேண்டுமென்ற முறையை உறுப்பினர் தெரிந்து கொள்ள வேண்டும். சபாநாயகரைப்பற்றி எந்தவிதமாகவும் பேச்சிலே குறிப்பிடக்கூடாது. உறுப்பினர் அவர்கள் இந்த விதியைப் பின்பற்ற வேண்டும். அதுபற்றிய நிகழ்ச்சிகளைச் சபை நிகழ்ச்சியிலிருந்து நீக்கிவிடவும். அடுத்து, திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் பேசுவார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி**: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார், ஓர் உறுப்பினர் மற்றோர் உறுப்பினர்மீது குற்றம் சாட்டும் நேரத்தில் குற்றச்சாட்டுக்கான பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். என்னுடைய கட்சியைச் சேர்ந்த கனம் திரு. கோ. பூவராகன் அவர்களைப்பற்றி, அமைச்சர் அவர்கள் குற்றச்சாட்டுகள் என்று சொன்னால், அதைப்பற்றி பொறுப்பு ஏற்றுக் கொள்கிறாரா? (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இது பாயின்ட் ஆஃப் ஆர்டரா?

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

விவாதம் இங்கு நடப்பது நாம் கருத்துக்களை பரிமாறிக் கொள்ள. கருத்துக்களை உறுப்பினர்கள் சொல்லலாம். அப்படிச் சொல்ல எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. விவாதத்திலே கோபம் வரலாமா ?

THIRU K. VINAYAKAM : I raise a point of order, Sir, Can any member lose temper and of all the people; why should an experienced Minister like Thiru Govindasamy lose temper ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நான் பொறுமை இழந்து விட்டதாகச் சொல்கிறார்கள். நான் எப்போதுமே பொறுமைக்குப் பெயர்போனவன். பொறுமை இழக்கக்கூடிய அளவுக்கு இன்றுமட்டுமல்ல, கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியில் சொல்லமுடியாத அளவுக்குப் பல தவறுதல்களைச் செய்திருக்கிறீர்கள். இன்றைக்கு வீணை குற்றச்சாட்டுகளை ஆதாரம் இல்லாமல் சொல்கிறீர்கள். நான் கோபப்படுவதாகச் சொல்கிறீர்கள். அந்த வார்த்தையை அவருடைய கட்சிக்காரர்களைப் பார்த்துத் திரும்பிச் சொல்ல வேண்டும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் பேசுகின்ற போது சில புள்ளி விவரங்களை எடுத்துக் கூறினார்கள். புள்ளிவிவரங்களைச் சரியாகப் பார்க்காவிட்டால் ஆபத்து ஏற்படும். பழைய அமைச்சரவையில் எட்டுப் பேர்கள் இருந்தார்கள். ஆனால் செலவு 4 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாயாக இருந்தது. இந்த ஆண்டு செலவழித்த தொகை 4 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய். ஒன்பது மந்திரிகள் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு அமைச்சருக்கு 54 ஆயிரம் ரூபாய் செலவழித்துக்கொண்டார்கள் என்றால், இந்த ஆட்சியில் ஒரு அமைச்சருக்கு 45 ஆயிரம் ரூபாய் தான் செலவாகிறது. ஆக, ஒவ்வொரு அமைச்சரும் தங்களுடைய செலவில் ஒன்பதில் இருந்து பத்தாயிரம் வரை சிக்கனப்படுத்தியிருக்கிறார்கள். இதிலே கார் வாங்குவதில் செலவு கூடியிருக்கிறது. அதற்குக் காரணம் அந்த அளவுக்கு கார்கள் மோசமாக இருக்கின்றன. 1967-68-ம் ஆண்டு தேர்தல் நடந்த வருஷம் என்பதை நினைவுபடுத்திக் கொண்டால் கார்களின் மோசமான நிலையைப் புரிந்து கொள்ள முடியும். அதுவும் அவர்களால் வந்த செலவே தவிர வேறு யாராலும் வந்த செலவு அல்ல.

நான் மாநில அரசு ஊழியராக இருந்திருக்கிறேன். கடந்த காலத்தில் நிர்வாகஸ்தர்கள் எவ்வளவு தொல்லைக்கு உள்ளாக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை என்னால் உணர்ந்து சொல்ல முடியும். என்னுடைய எட்டாண்டு காலப் பணியில் 2 ஆண்டு காலம் விருத்தாசலத்தில் இருந்தேன். என்னைப்பாராட்டாத அதிகாரிகள் இல்லை. போற்றாத மக்கள் இல்லை. . . அதே நேரத்தில் 1966-ஆம் ஆண்டு மேலதிகாரிகள் என்னை திடீரென்று அழைத்து உன்னை வேறு இடத்திற்கு மாற்றியிருக்கிறோம், உடனே சார்ஜ் கொடுத்தா விட்டு ரிலீப் ஆகவேண்டும் என்றார்கள். என்ன காரணம் என்று கேட்டதற்குச் சொல்லப்படவில்லை. "ஒன்றும் கேட்காதே.





ரெக்கார்டுகளைப்பற்றி எல்லாம் கவலைப்படாதே. உடனே உன்னை மாற்றச் சொல்லி டெலிபோன் வந்திருக்கிறது. நீ ரிலீப் ஆகிவிட்டாய் என்று டெலிபோனில் சொல்லியாக வேண்டும். அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நீ தகராறு செய்தால் எங்களுக்குத்தான் ஆபத்து" என்று தெரிவித்தார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம் சென்ற ஆட்சியிலே எப்படி அமைச்சர்கள் நிர்வாகத்தில் குறுக்கிட்டு அதிகாரிகளுக்கு சொல்லொணா இன்னல்களை விளைவித்து வந்தரீர்க்ள் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான். இந்த ஓராண்டு காலமாகத்தான் ஓரளவுக்கு அதிகாரிகள் நிம்மதியாக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது இருக்கின்ற அமைச்சர்கள் தான் தங்களுக்கு அமைச்சர்கள் என்று இல்லாமல் மாநிலம் முழுவதற்குமாக அமைச்சர்களாக இருந்து பணியாற்றி வருகிறார்கள். ஏற்கனவே அமைச்சராக இருந்த ஒருவர் விருத்தாசலத்தில் 6 லட்சம் ரூபாய் தன்னுடைய ஊருக்காக என்று ஒரு சாலையை செப்பனிட்டுக்கொள்கிற திட்டத்தை நிறைவேற்றினார்கள்—ஆள் இல்லாத ஊர். அந்த ஊருக்காக 6 லட்சம் ரூபாய் செலவிடப் பட்டது.

**திரு. கோ. பூவராகன் :** ஆள் இல்லாத ஊருக்கு 6 லட்சம் செலவிட்டதாகக் கூறுகிறார்கள். எங்கள் ஊருக்காக மட்டும் போடப்பட்ட சாலை அல்ல அது. அது எத்தனை ஊர்களை இணைக்கிறது என்று பார்க்க வேண்டும். எல்லா கிராமங்களுக்காகவும் போடப்பட்ட சாலை அது. மந்திரியாக வந்து விட்டால் தங்களுடைய தொகுதிக்கு ஒன்றுமே செய்யக்கூடாது என்கிற கொள்கை உடையவன் அல்ல நான். அந்தத் தொகுதி மக்கள் தான் நம்மையும் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சாலையே இல்லாத பல ஊர்களுக்குச் சாலைகளைப் போட்டுவிட்டு கடைசியாக தன் ஊருக்கும் வந்திருந்தால் அது அமைச்சருடைய பெருமையை நாட்டும். பாராட்டுவார்கள்.

**திரு. கோ. பூவராகன் :** சாலையே இல்லாத ஊருக்குத்தான் முதலில் போடப் பட்டது.

**திரு. எஸ். இராமசந்திரன் :** எங்கள் ஊருக்கு ரோடே கிடையாது. எங்கள் ஊரில் அவருடைய உறுப்பினர்கள் இருக்கிறார்கள். சாலையே இல்லாத ஊருக்குத்தான் முதலில் போடப்பட்டது என்றால் எங்கள் ஊருக்குப் போட்டிருக்கவேண்டும்.

**திரு. கோ. பூவராகன் :** அவரது ஊரில் சாலையே கிடையாது என்கிறார். அது சரியல்ல. அவரது ஊரில் பஞ்சாயத்து யூனியன் சாலை இருக்கிறது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அவருடைய தங்கையை எங்களுடைய ஊரில் தான் கொடுத்திருக்கிறது. தம்முடைய தங்கையைப் பார்க்கக் கூட அவர் எங்கள் ஊருக்கு வந்தது கிடையாது. வராமலேயே சாலை இருப்பதாகச் சொல்வது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் தங்களுக்குள்ள சொந்த விஷயங்களைப் பற்றி எல்லாம் இங்கே பேசுவது கூடாது. அதை அனுமதிப்பதற்கில்லை.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, நான் அவருடைய சர்விஸ் ரெக்கார்டு பற்றி மட்டும் பேசுவதற்கு அனுமதி தரவேண்டும். விதிகளில் அதற்கு இடம் இருக்கிறது என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, அங்கு ஒரு கல்லூரியை ஏற்படுத்தவேண்டுமென்று 1966–67-இல் ஒரு யோசனை பிறந்தது. உடனே ஒரு கல்லூரியை ஏற்படுத்துவதற்கு அந்தப் பிராந்தியத்தில் வசூல் செய்யவேண்டிய தொகையைக் கூட வசூல் செய்யாமல் ஒரு உயர் நிலைப் பள்ளிக்கூடத்தில் அரசினர் கல்லூரி என்ற போர்டை எழுதிமாட்டிவிட்டார்கள். இப்போது அதற்கான பணத்தைத் திரட்டியாக வேண்டிய பொறுப்பு நம் அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. பணம் கொடுப்பதற்கு அங்குள்ளவர்கள் தயாராய் இருக்கிறார்கள். ஆனாலும் பணம் கொடுக்காதே என்று சொல்லக் கூடிய சக்தி கூட அந்த வட்டாரத்தில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து அரசினர் அச்சகம் ஒன்று அந்த ஆண்டு அங்கே வந்தது. அச்சிட்டு வழங்கவேண்டிய புத்தகங்கள் விருத்தாசலத்தில் குவிந்து கிடப்பதுபோலவும், ஒரு பத்திரிகையே நடத்த அங்கே வந்தது போலவும் அது அங்கே தொடங்கப்பட்டது. இப்படி எல்லாம் இப்போதுள்ள நமது அமைச்சர்கள் செய்யாமல் நாடு நகரங்களைச் சுற்றி ஏழை எளியவர்களுடைய துயர்களைத் துடைத்து வருகிறார்கள் என்பதற்கு இவர்களைப் பாராட்டாமல் என்ன செய்வது?

சென்னையில் தீ விபத்து நடந்தது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூடக் கேட்டார்கள். இப்படி எல்லாம் தீ விபத்துக்கள் தொடர்ந்து சென்னையில் நடந்தனவே, அதைப்பற்றி விசாரணை உண்டா? அதைப்பற்றிய விசாரணை அறிக்கையை ஏன் எங்களுக்குக் கொடுக்கவில்லை, யார் அதற்குக் காரணம் என்பதாக பல சந்தர்ப்பங்களில் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். ஆனால் இன்றைய தினம் சேலத்தில் உள்ள நிலைமை என்ன? சேலத்தில் திராவிட முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்தவர்கள் வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டன. இந்த தீ விபத்துக்களைப் போலீசார் புலன் விசாரணை செய்து, சிலரைக் கைது செய்ய ப்ராசிக்யூஷன் வாரண்ட் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பத்துப் பதினைந்து நாளாகின்றன. யாரும் கைது செய்யப்படவில்லை. அதைப்பற்றி ஏன் யாரும் குறிப்பிடவில்லை?

**திரு. கோ. பூவராகன்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நீதி மன்றத்தில் வழக்கு இருக்கக்கூடிய ஒன்றைப்பற்றி சட்டமன்றத்தில் விளக்கமாகப் பேசுவது சரியான முறையாக இருக்காது. சட்டமன்ற நடவடிக்கையில் இருந்து இது நீக்கப்படவேண்டும்



என்று கோருகிறேன். இல்லை என்றால் முழுக்க முழுக்க எனக்கும் அதைப்பற்றிப் பேச உரிமை கொடுக்க வேண்டும். எப்படி நடந்தது, எதனால் நடந்தது என்று எங்களுக்கும் தெரியும், வேண்டுமென்றே ஒருவர் மீது பழிபோடுவதற்காக, கேஸ் போடுவதற்காக அந்தக் கட்சியைச் சார்ந்தவர்களே ஏற்பாடு செய்து கொண்டார்கள் என்கிற குற்றச்சாட்டை வைக்கிறேன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, சப்-ஜூடிஸ் பற்றிப் பேசமாட்டேன். சென்னையைப் பற்றிக் கண்டிக்க முன் வந்த கட்சி அங்கே ஏன் கண்டிக்கவில்லை? அங்குள்ள நிலைமையை ஏன் பார்க்க மறுக்கிறார்கள்?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். சபை முன் விவாதிக்கப்படும் மானியம் என்ன? அதில் சேலத்தைப்பற்றிப் பேசுவது முறையா என்று கேட்கிறேன்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இது மந்திரிகளைப் பற்றிப் பேசுகின்ற மானியம் ஆதலாலே, அங்கு துப்புகள் கைப்பற்றப் பட்ட பிறகும், இன்னும் யாரும் கைது செய்யப்படவில்லையாதலால், மந்திரிகள் அக்கறையோடு கவனம் செலுத்தி குற்றவாளிகளைக் கைது செய்யவேண்டும் என்று வற்புறுத்த ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் உரிமை இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** போலீசார் குற்றவாளிகளைத் தேடிக்கொண்டிருக்கிற நேரத்தில் இப்படிப் பேசலாமா என்று கேட்கிறேன்.

61442

**திரு. டி. மார்டின்:** பாயின்ட் ஆப் ஆர்டர். இந்தச் சட்டமன்றத்தில் சபாநாயகர் அவர்கள் சில நேரங்களில் கேஸ் தாக்கலானாலும் சரி, தாக்கலாகக்கூடிய நேரத்தில் இருந்தாலும் சரி இந்த மாமன்றத்தில் பேசாமல் இருப்பது நல்லது என்று கூறியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் கேசைப்பற்றிப் பேசவில்லை. அதைப்பற்றி அவர் பேசுகின்ற நேரத்தில் நானே குறுக்கிட்டுப் பேசவேண்டாம் என்று சொல்வேன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** நான் சொல்லவந்தது எல்லாம் ஏன் இதைப்பற்றி அந்தக் கட்சியினர் அக்கறை காட்டவில்லை என்பது தான்.

அடுத்தபடியாக இந்த மாமன்றத்தில் இன்னும் ஒன்று சொன்னார்கள். அதாவது தந்தையையும், மகனையும் ஒன்றாகப் போட்டால் எப்படி இருக்கும் என்றார்கள். மாமனாரும், மருமகனும் ஒன்றாக இந்த மாமன்றத்தில் இருந்திருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் காங்கிரஸ் கட்சி

யினர் மனக்கிலேசம் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகத்தான் சொல்கிறேன். நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் பதவியேற்ற பிறகு

காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.

என்ற திருக்குறளுக்கு ஒப்ப இந்த நேரத்திலும் சென்று, எல்லா ஏழை எளிய மக்களுக்கும் தொண்டாற்றி வருவதற்காக, எளிமையும், அன்பும் கொண்டிருக்கும் ஒரு பெருந்தலைவனைப் பெற்றிருக்கிறோம் என்பதற்காக இளைஞர் சமுதாயம் பெருமைப்படுகிறது, பெரு மகிழ்ச்சி கொள்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுடைய பணி நெடுநாள் நீடிக்கவேண்டுமென்று வாழ்த்து
பி. ப. 1–30. கிறோம். தமிழ்நாட்டு மக்கள் நிம்மதியாக இந்த அரசாட்சியிலே இருக்கிற மூன்று கோடி நான்கு கோடி உள்ளங்களும் அவர்களைப் பாராட்டுகின்றன என்று தெரிவித்துக்கொண்டு, இந்த மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** ஒரு விளக்கம். விருத்தாசலத்தில் பணமே சேர்க்கப்படவில்லை, ஒன்றுமே இல்லாமல் கல்லூரியைக் கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். அந்தக் கல்லூரிக்குக் கொளஞ்சியப்பர் தேவஸ்தானத்திலிருந்து 2½ லட்சம் ரூபாய் வந்து இருக்கிறது, பொதுமக்கள் 2½ லட்சம் ரூபாய் சேர்த்து கொடுத்திருக்கிறார்கள் என்று கல்வியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இப்பொழுது வசூல் செய்வதற்குக் கெடுபிடி நடந்து கொண்டிருக்கிறது, அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சேலத்தில் உள்ளவை பற்றிக் குறிப்பிடக்கூடாது. பர்சனல் எக்ஸ்ப்ளநேஷன் என்றால் உங்களைப்பற்றிச் சொல்லவேண்டுமென்றால் சொல்லவேண்டும். உங்களைப்பற்றிக் குறிப்பிடாத நேரத்தில் அதற்கு விளக்கம் அளிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. சௌடி. எஸ். சுந்தர பாரதி :** தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது ஒரு சில கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசியவர்கள் அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் அதிகமாகச் செய்வது நல்லதா அல்ல என்ற கருத்துக்களைத் தெரிவித்தார்கள். நான் சொல்லிக்கொள்வது, அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டுமென்பது மிகவும் அவசியமானது என்பதுதான், அதைப்பற்றிச் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர்கள் எந்த எந்தக் காரியங்களுக்காகச் சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டுமென்பதைப்பற்றி முடிவுசெய்து கொள்ளவேண்டிய பொறுப்பு அவர்களுக்கே இருக்கிறது. எந்தக்



காரியத்திற்காக சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளவேண்டும் என்று முடிவுசெய்யப்படுகிறதோ, அந்தக் காரியத்திற்கு நிச்சயமாக சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளவேண்டும். அமைச்சர்கள் சுற்றுப்பயணத்தை நல்ல முறையிலே செய்யவேண்டியதற்காக முடிவுகள் செய்யவேண்டிய பொறுப்பு அவர்களிடத்திலே இருக்கிறது. ஆகவே அவர்கள் செவ்வனே சுற்றுப்பிரயாணம் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

சுதந்திராக் கட்சியின் சார்பாக நான் ஒரு விஷயத்தைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஒவ்வொரு பார்ட்டியிலேயும் பேசுகிற முதல்வருக்கு அதிக நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்று சுதந்திராக் கட்சியினுடைய உறுப்பினர் பேசக்கூடிய நேரத்திலே 5 நிமிடம் மட்டும் கொடுக்கப்பட்டது . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரம் கொடுப்பது எல்லாம் சபாநாயகர் அறையிலே எதிர்க்கட்சித் தலைவரும் சபையின் முதல்வரும் அமர்ந்து பேசி முடிவு எடுக்கவேண்டியது ஆகும். அதைப்பற்றிய குறையிருந்தால், அவர்கள் கட்சித் தலைவரோடு பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சௌடி. எஸ். சுந்தர பாரதி :** நான் அதை வேண்டுகோளாகத் தான் விடுத்தேன். அதைப்பற்றிப் பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சபையிலே ஒரு குறை இருந்துகொண்டிருக்கிறது. ஒரு மெம்பர் பேசும்பொழுது நடுநடுவே அமைச்சர்கள் குறுக்கிட்டுப் பேசுகிறார்கள், அதனால் நேரம்போதாது என்று சொன்னார்கள். சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் குறுக்கிட்டுப்பேசுவது நல்லதுதான். அப்படிப் பேசினால்தான் பேச்சு நல்ல முறையிலே அமையும். மெம்பர்களுக்குக் கொடுக்கப்படுகிற நேரம் குறைவாக இருப்பதன் காரணமாக அமைச்சர்கள் குறுக்கிடுகின்ற நேரத்தைப் பேசுகிறவர்களின் நேரத்தில் கணக்கெடுத்துக்கொள்ளாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த நேரமும் கூட்டித்தான் சபாநாயகர் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

**திரு. சௌடி. எஸ். சுந்தர பாரதி :** எனக்கு முன்னாலே பேசிய அங்கத்தினர் ஒருவர் சட்டசபை உறுப்பினர்கள் விடுதிகளிலே அளிக்கப்பட வேண்டிய வசதிகள்பற்றிக் குறிப்பிட்டார்கள். புதிதாக அமைக்கப்பட்டு இருக்கிற சட்டசபை விடுதியில் ஒரு நாளைக்கு 2½ ரூபாய் என்று வசூலிப்பதைவிட்டுவிட்டு மொத்தமாக மாதத்திற்கு 25 ரூபாய் என்று வசூலிக்கவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். சட்டசபை உறுப்பினர்களைக் காணுவதற்கு வரக்கூடிய தொகுதி மக்கள் தங்குவதற்குத் தனியாக ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டும். புதிதாக கட்டப்பட்டிருக்கிற விடுதியில் எல்லா மெம்பர்களும் தங்குவதற்கு வசதி செய்து

கொடுத்த பிறகு, இப்பொழுது இருக்கக்கூடிய விடுதியிலே மற்றவர்கள், மெம்பாகளைச் சந்திக்க வருகிறவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்தால் கஷ்டங்கள் நீங்கும். நல்ல வசதியாகவும் இருக்கும், ஆகவே அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கிறன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டிலிருந்து பாஸ் கொடுப்பதைப் பற்றி இன்னும் அரசாங்கம் முடிவெடுக்காவிட்டாலும் 5, 6 எண்ணுள்ள சீட்டுகள் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பஸ் புறப்படக்கூடிய இடத்திலே இரண்டு சீட்டுக்களைக் கொடுத்து விடுவார்கள். ஆனால் போய்க்கொண்டிருக்கிற வழியிலே நடுவிலே ஒரு ஊரிலேயிருந்து யாராவது சட்ட மன்ற உறுப்பினர் செல்ல வேண்டுமென்றால், அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் பரிசீலித்து வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், நகரசபைத் தலைவர்கள் தேர்தல்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது இருக்கக்கூடிய முறையிலே அல்லாமல் நேரடியாக அவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும், அப்படிச் செய்தால்தான் அது ஜனநாயகப் பண்பிற்கு உகந்ததாக இருக்கும். அப்படிச்செய்தால், நகரசபைத் தலைவர்களும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும் எந்தவிதமான கவலையுமின்றி அவர்கள் பணியைச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கும், அதைப்பற்றிக் கவனித்து முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, நமது அரசாங்கம் பொறுப்பேற்றதற்குப் பிறகு லஞ்ச ஊழல்களைத் தடுப்பதிலே பாடுபட்டிருக்கிறார்கள் என்பதை நான் சில நேரங்களிலே சொந்த அனுபவத்திலிருந்து தெரிந்து இருக்கிறேன். இன்னும் நல்ல முறையிலே முயற்சியெடுத்து லஞ்ச ஊழல்களையும் அறவே ஒழிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இதுவரை எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, இந்த அவை முன் இருக்கும்படியான என் கட்சியின் சார்பாக இருக்கக்கூடிய வெட்டுப்பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மானியம் நாளைக்கு வருவதாக இருந்தது. இருந்தாலும் கூட நாளைக்கு இதை எடுத்துக்கொண்டிருப்போமானால், விட்டுப்போய்விடக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும் என்றுதான் இன்றைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறோம். அங்கத்தினர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள். பிரச்சினை என்னவென்றால் புது அமைச்சரவை பொறுப்பேற்று ஒரு வருடமாக செலவுகளிலே



சிக்கனம் செய்வோம், மாதிரியாக • இருப்போம் என்று சொன்னார்கள். மந்திரி பதவிகளுக்கு வருவதற்கு முன் முதல் கூட்டத்திலே சொத்துக்களின் விவரங்களை அறிவிப்போம் என்று என்று சொன்னார்கள். ?நிர்வாகத்திலேயும் பாக்கி இருக்கும்படியான நிலைகளிலேயும் காரியங்களை சீர்திருத்தம் செய்தும் சிக்கனம் எவ்வளவு தூரம் செய்யமுடியுமோ அவ்வளவும் செய்வோம் என்று அறிவித்தார்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக என்னென்ன காரியங்களைச் செய்வோம் என்று பொறுப்பேற்றுக் கொண்டார்களோ அவற்றை நிறைவேற்றவில்லை என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். முக்கியமான பிரச்சனை திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியினுடைய பிரச்சனை, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அமைச்சர்கள் சொத்துக்களைப்பற்றி அறிவிக்க வேண்டுமென்று தனிப்பட்ட தீர்மானத்தை இப்பொழுது அமைச்சராக இருக்கக்கூடிய திரு. மாதவன் அவர்கள் கொண்டு வந்தார்கள். உத்தியோகப் பற்றற்ற முறையில் அப்படிப்பட்ட தீர்மானம் கொண்டுவந்தும், இப்பொழுது அவர்களும் பொறுப்பிற்கு வந்த பிறகு ஏன் இன்னும் அதை அறிவிக்கவில்லை என்று கேட்காமல் இருக்க முடியாது. 'விஷுட் பி எபவ் சஸ்பிஷன்' என்ற மாதிரி செய்யவேண்கும். உறுப்பினர்களும் வைக்கவேண்டுமென்று சொன்னார்கள். அது அவசியமானதுதான். பல பல இடங்களிலே 30, 40 உறுப்பினர்களுக்கு பொதுமக்கள் கார்கள் வாங்கிக் கொடுத்ததாகப் பத்திரிகையிலே பார்க்கிறோம். கொடுத்தவை அன்பளிப்பு என்று சொல்லிக் கொள்ளலாம். அதிர்ஷ்ட வசமாக, அங்கத்தினர்களுக்கு அவை கிடைத்திருக்கின்றன. என்னுடைய பகுதியிலே யாருக்கும் கார் கிடைக்கவில்லை. எந்த நிலையிலே அவர்களுக்கு வந்தது என்ற முறையிலே அறிவித்தால் தான் நல்லது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை)

போன அமைச்சரவையில் இருந்தவர்கள் தவறாகச் செய்தார்கள் என்று சொன்னதற்கு அவர்கள் என்னென்ன தவறுகள் செய்தார்கள் என்று விவரமாகச் சொல்லுங்கள், உண்மையாக இருந்தால் நாங்கள் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயார் என்று சொன்னேன். அதற்கு முதலமைச்சர் அவர்கள் 'அவர் மேல் உங்களுக்கு என்ன கோபமோ ?' என்று பதில் சொன்னதுபோல் இப்போது சொல்லி தப்பித்துக்கொள்ள வேண்டாம். திட்டவட்டமாக இந்த அமைச்சரவையைக் கேட்கிறேன். அவர்கள் என்ன தவறு செய்தார்கள் என்ற அறிக்கையை இந்த மன்றத்திலே வையுங்கள். நீங்கள் அவர்கள் செய்தார்கள் என்று சொல்வதிலும், நாங்கள் நீங்கள் செய்தீர்கள் என்று சொல்லிக்கொண்டிருப்பதிலும் பிரயோசனம் இல்லை. பார்லிமெண்டில் அமர்நாத் பியாரிலால் கேசில் மதிப்பிற்குரிய சுப்பிரமணியம் அவர்கள் மீது குற்றச்சாட்டு கூறப்பட்டு

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1968 மார்ச் 25

பொது நிதிக் கமிட்டியின் முன்னால் கொண்டு வரும் நிலைமை ஏற்பட்டது. ஆனால் இரண்டு நாட்களுக்கு முன்னால் பத்திரிகையில் அவர் மீது ஒன்றும் குற்றம் இல்லை என்று செய்தி வந்திருக்கிறது. தீர்ப்பளிக்க இரண்டு வருஷங்கள் ஆகியிருக்கின்றன. பழைய அமைச்சர்களை நாங்கள் கட்டிக் காக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. அவரவர்களே காப்பாற்றிக் கொள்வார்கள் இந்த அமைச்சரவை அந்த முறையில் ஒரு அறிக்கையைக் கொண்டு வருவார்களேயானால் நலமாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

இப்போது ஆட்சியில் இருப்பவர்கள் முன்பு எதிர்க்கட்சியில் இருந்தபோது அமைச்சர்கள் ஊர் சுற்றுவது அதிகம் என்று சொன்னார்கள். ஊர் சுற்றாமல் செக்ரடேரியட்டில் இருந்து வேலை செய்ய வேண்டுமென்று அறிவுரை கூறினார்கள். இப்போது பழைய அமைச்சர்கள் எத்தனையோ பங்கு தேவலை என்று கூறும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வேறு பிரச்சினைக்குச் சென்று விட்டாலும் முன்னால் சொன்ன ஒன்றுக்காக குறிப்பிட விரும்புகிறேன். கார் பரிசளிப்பு பற்றிக் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆறு மாதத்திற்கு முன்பு கனம் சுவாமிநாதன் அவர்களுக்கு ஜீப் கார் ஒன்று காமராஜர் அவர்கள் தலைமையில் பரிசளிக்கப்பட்டது என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** யாருக்குக் கொடுத்தால் என்ன ? எல்லோரையுந்தான் சொல்லுகிறேன். எங்கள் கட்சியில் சுவாமிநாதன் ஒருவருக்குத்தான் கொடுக்கப்பட்டது. உங்கள் கட்சியில் 40, 50 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சுவாமிநாதனுக்குக் கொடுக்கப்பட்டதா என்பது பிரச்சினை அல்ல. யார் தவறாக இருந்தாலும் கணக்குக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கார் பரிசளிப்பிலே என்ன தவறு நடந்தது என்பதை விளக்கவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பரிசளித்தது தவறு என்று சொல்லவில்லை. எந்த முறையில் வந்தது என்ற சந்தேகம் ஏற்படுமாதலால் கணக்குக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சொத்து விவரங்களைத் தர வேண்டுமென்பது அமைச்சர்களைப் பொருத்தது, உறுப்பினர்களைப் பொருத்தது அல்ல. உறுப்பினர்களுக்கு கார் பரிசளிப்பது இந்தச் சொத்து விவரத்தில் வராது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு தவறான எண்ணத்தை வைத்துக் கொண்டு தன்னைக் குழப்பிக் கொள்கிறார்கள். நாங்கள் ஆளும் கட்சியான பிறகுதான் கார் பரிசளிப்பது என்ற நிலை ஏற்படவில்லை. எனக்கு



1968 மார்ச் 25] [திரு. சி. என். அண்ணாதுரை]

கார் பரிசளிக்கப்பட்டது நாலைந்து வருஷங்களுக்கு முன்னால். ஒவ்வொரு மாவட்டச் செயலாளருக்கும் ஜீப் பரிசளிக்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் நாங்கள் ஆளும் கட்சியாவதற்கு முன்னால் இருந்தே அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கட்சியினுடைய தலைவர்களுக்கு, மாவட்டச் செயலாளர்களுக்கெல்லாம் ஒவ்வொரு கட்சியிலும் வாங்கிக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இப்போது அங்கத்தினர்களாக தேர்ந்தெடுத்த பின்னர் சிலர்—பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை, முதலமைச்சர் அவர்களிடம் தனியாகப் பேசத் தயாராக இருக்கிறேன், ஆதாரங்களோடு எழுதிக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்—ஒரு அங்கத்தினர் 3 கார்களை அமைச்சர் அவர்களிடம் புள்ளி விவரத்தோடு கொடுக்கத் தயாராக இருக்கிறேன். சாதாரணமாக இருந்தவர்கள், இழிவாகச் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை, அப்படிப்பட்ட நிலைமையில் இருந்தவர்கள் இன்று மூன்று கார்களை வைத்து ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அந்த விவரத்தை அறிந்து கொள்வதிலே எனக்கு மிகவும் விருப்பம். ஆனால் அப்படிக் கணக்குப் பார்ப்பது என்றால் 15 வருடக் கணக்கைப் பார்க்கலாமா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் ஏற்கனவே சொல்லி விட்டேன். 15 வருஷக் கணக்கை, எங்கள் கட்சி ஆட்சியிலிருந்த போது நடந்த கணக்கையும் வைக்க வேண்டுமென்றுதான் விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியில் நூற்றுக்கணக்கான ஜீப்களை வாடகைக்கு வாங்குகிறார்கள், திருப்பிக் கொடுக்கிறார்கள். அங்கத்தினர்களாக வரும்போது அவர்களுடைய பொருளாதார நிலை என்ன, இப்போது அவர்களுடைய நிலை என்ன என்று பார்க்க வேண்டும். காங்கிரஸ் கட்சி . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அந்தக் கணக்கைப் பொருத்து சட்ட மன்ற உறுப்பினர்களாக வருகின்றவர்கள் எந்த அளவுக்குத் தங்களுடைய வாழ்க்கையை உயர்த்திக் கொண்டார்கள் என்ற வரலாற்றை, 15 வருஷ வரலாற்றை விசாரிக்கலாமா என்று கேட்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தாராளமாக அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது. நிச்சயமாக விசாரணை செய்யலாம். அவ்வாறு விசாரிப்பதாக இருந்தால் நான் அதற்குத் தயாராக இருக்கிறேன். விசாரிக்க வேண்டியது சர்க்கார் கடமை. நீங்கள் நல்ல முறையில் விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அமைச்சர்கள் பதவியேற்றவுடனே நாங்கள் சிக்கன நடவடிக்கையாக எங்களுடைய சம்பளத்தைக் குறைத்துக்

கொண்டோம் என்று சொன்னார்கள். ஒரு பக்கத்தில் சம்பளத்தை 500 ரூபாயாகக் குறைத்துக் கொண்டார்கள். ஆனால் பாக்கி இருக்கும் எஸ்டாப்ளிஷ்மென்ட் செலவு, மற்றச் செலவுகளைப் பார்த்தால் முன்பு இருந்ததைவிடக் குறைந்ததாகத் தெரியவில்லை. 500 ரூபாய் என்று குறைத்துக் கொண்ட எண்ணத்தைப் பாராட்டு கிறேன். தவறு என்று சொல்லவில்லை. ஆயிரம் ரூபாய் அமைச்சர்களுக்குச் சம்பளம் என்று நிர்ணயித்தது, அது அதிக மானது என்ற நிலையில் அல்ல. சாதாரணமானவர்கள் கூட இந்தப் பதவிக்கு வரலாம். வசதியுள்ளவர்கள் மட்டுமல்லாமல் வசதி இல்லாதவர்களும் அந்தப் பதவிக்கு வரலாம். அவர்களும் முடிந்த அளவுக்கு தங்களுடைய அந்தஸ்து, கவுரவம் ஆகிய வற்றைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ற முறையிலேதான் ஆயிரம் ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டதே தவிர, அதிலிருந்து அதிகமாக மிச்சப்படுத்தி தங்களுடைய குடும்பத்திற்குச் சேர்த்துக் கொள்ளச் செய்ய வேண்டுமென்பதற்காக அல்ல. அவ்வாறு சம்பளத்தைக் குறைத்துக்கொண்டு முன்மாதிரியாக இருக்கிறோம் என்று சொன்னால் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், அதே சமயத்தில் ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வைத்துக்கொண்டு பெரிய ஆடம்பர வாழ்க்கையை நடத்தி விட முடியாது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த மாதிரி நிலையில் பார்க்கும்போது பாக்கி செலவுகள், சுற்றுப்பயணச் செலவுகள் அதிகமாயிருக்கின்றன. பொதுத் தேர்தலுக்கு முன்னால் அமைச்சரவை ராஜினாமா செய்ய வேண்டுமென்றார்கள். அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை அப்போது பார்த்துக் கொள்ளலாம். ஆனால் சங்கரி இடைத் தேர்தலின்போது எல்லா மந்திரிகளும் மூன்று நாட்கள் அங்கே சுற்றுப்பயணம் வந்தார்கள். ஒன்பது அமைச்சர்களும் அங்கே இருந்தார்கள். சர்க்கார் நிலையில் போனார்களா வேறு நிலையில் போனார்களா என்று தெரியாது. அரிசனங்கள் பெட்டிஷன் கொடுத்தார்கள். நாளைக்கே பட்டா செய்து கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். முன்பு எங்களைப்பார்த்துச் சொன்ன தவறுகளை யெல்லாம் நீங்கள் பண்ணாமல் முன்மாதிரியாக இருந்து காட்ட வேண்டும் .

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பட்டா கொடுக்க வேண்டுமென்று கேட்கும்போது பட்டா செய்து கொடுக்க ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்வது தவறா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தாராளமாகக் கொடுங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. எங்களை குற்றஞ்சொல்லிக் கொண்டிருந்தீர்களே, அதையே நீங்களும் செய்து கொண்டிருக் கிறீர்களே என்றுதான் சொல்கிறேன். நிறைய இடைத் தேர்தல்கள் வரட்டும். ஏழை மக்களுக்கு நிறையக் கிடைக்கட்டும் என்றுதான் சொல்கிறேன். இடைத் தேர்தல் வந்தால்தான் அந்தப் பகுதி மக்களுக்கு ஓரளவு நன்மை கிடைக்கும். நீங்கள்





சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றியிருந்தால் நான் பாராட்டு கிறேன். ஒரு நாளைக்கு முன்னரே பிரசாரத்தை நிறுத்திவிட வேண்டுமென்று சொல்கிறோம். தேர்தலுக்கு முன் தினம்கூட இரண்டு அமைச்சர்கள் இருந்தார்கள். அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செய்ய வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஜனநாயகத்தில் அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்யவேண்டியது மிக மிக அவசியம். நான் நீலகிரி எக்ஸ்பிரசில் போகிறேன். முன்பெல்லாம் நீலகிரி எக்ஸ்பிரசில் மாதத்திற்கு ஒரு முறை வேண்டுமானால் ஒரு மந்திரி போவார். இப்போது நீலகிரி எக்ஸ்பிரசில் ஒரு மந்திரி போகிறார் என்றால் இன்னொரு மந்திரி வருகிறார் வருகிறார் என்ற நிலைதான் இருக்கிறது. அதற்காகத் தான் இந்த நீலகிரி எக்ஸ்பிரசே இருக்கிறது என்று பேசிக் கொள்கிறார்கள். நான் போகும் இடங்களில் எல்லாம் மந்திரிகள் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஒரு அமைச்சர் ஒரு இடத்தற்குப் போகும்போது ஒரு விண்ணப்பம் கொடுக்கிறார்கள். வேறு அமைச்சர் அங்கு போகும்போது வேறுவிதமான விண்ணப்பம் கொடுக்கிறார்கள். இப்படி விண்ணப்பங்களின் பேரில் எடுக்கும் நடவடிக்கைகள் மாறுபட்டவையாக இருக்கின்றன. ஆகவே வருகிற விண்ணப்பங்களை எல்லாம் முறைப்படுத்திச்செய்ய வேண்டும். ஒரு அமைச்சர் ஒரு உத்தரவு போடுகிறார், இன்னொரு அமைச்சர் இன்னொரு விதத்தில் ஒரு உத்தரவு போடு கிறார் என்ற நிலைதான் இருக்கிறது. அவர்களுக்கு அதுபற்றித் தெரியவில்லை.

அடுத்தபடியாக, இந்த சென்னை செகரட்டேரியேட்டில் வேலைகள் சீக்கிரமாக நடப்பதில்லை என்ற புகார் இருக்கிறது. அமைச்சர்களிடம் பைல்கள் போனால், அவற்றின்மீது தீர்மானம் செய்யப்படாமல், மாதக்கணக்கில் அவை தூங்கிக்கொண்டிருப்ப தாக புகார் இருக்கிறது. மந்திரிகளுக்கு சுற்றுப்பயணம் செய்து வந்த அலுப்பு. வந்தவுடன் ஓய்வு எடுத்துக்கொள்ளும் நிலை. மாதக்கணக்கில் பைல்கள் உறங்கிக் கொண்டிருக்கின்றன. உத்தரவு கள் அவ்வப்போது போடப்படவில்லை என்பதால் வேலைகள் அதிக மாக நடைபெறுவதில்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை வருத்தத்துடன் சொல்லிக்கொள்கிறேன். ஒரு பைல் இவ்வளவு நாட்களுக்குள் முடிக்கப்படவேண்டும் என்று நிலை இருக்க வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு பைல்கள் தாமதமாகிறதோ அப்போது கட்சியின் உள்நோக்கம் நிறைவேற இடம் ஏற்படுகிறது. பைல்கள் உடனுக்குடன் தீர்க்கப்பட்டால் எந்தவிதமான தலை யீடும் இருக்கமுடியாது. எவ்வளவுக்கெவ்வளவு பைல்கள் கால தாமதம் ஆகிறதோ அப்போதுதான் தலையீடுகள் வந்து, சிபார்சுகள் எல்லாம் வந்து வேறுவிதமாகப் போவதற்கு இடம் ஏற்படும். அப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, சட்டசபை. இருபது ஆண்டுகளாக ஏதாவது செய்தீர்களா, இப்போது இப்படிக் கேட்கிறீர்கள் என்று

சொல்லலாம். இப்போது சட்டசபைக் கூட்டம் 1½ மணி, 2½ மணி வரை நடக்கிறது. உணவிற்குச் செல்வதற்கு வழியில்லை, இங்கு அதற்கு சரியான ஏற்பாடும் இல்லை. லண்டனில் ஹௌஸ் ஆஃப் காமன்ஸின் அங்கத்தினர்களுக்கு வெஸ்ட் மினிஸ்ட்டர் அபேயில் தனி கான்டீன் இருக்கிறது. அங்கு அங்கத்தினர்களைத் தவிர வேறு யாரும் போக முடியாது. அங்கத்தினர்கள் அங்கு சென்று சாப்பிட்டு வர நல்ல வசதியிருக்கிறது. அந்த முறையில் ஏற்பாடுசெய்யலாம். உதவி சபாநாயகர் அவர்கள் இருக்கும் சமயத்தில் சபாநாயகர் அவர்கள் நடவடிக்கைகள் பற்றி இங்கு பேசக்கூடாது என்று சொல்வார்கள். ஆனால் இங்குள்ள நிர்வாகம்பற்றி குறை சொல்லாமல் இருக்க முடியாது. முன்னால் எவ்வளவோ கேள்விகள் வந்து பதில்களும் வந்திருக்கின்றன. காரியதரிசியிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் எந்தெந்த கேள்விகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று சொல்ல வேண்டுமே தவிர இது சபாநாயகர் அவர்கள் வரை போகும் போது காலதாமதம் ஏற்படுகிறது.

அடுத்தபடியாக, பத்திரிகையாளர்களுக்கு என்று முன்பு ஒரு ப்ரஸ் அட்வைசரி கவுன்சில் இருந்தது. நம் சபைக்கு வரும் பத்திரிகையாளர்கள் யார் யாரை உள்ளே விடலாம், அவர்கள் நிலை என்ன, அவர்களுக்கு சில உரிமைகள் உண்டு, அந்த உரிமைகள் இவைபற்றியெல்லாம் அந்த கவுன்சில் முடிவு செய்து வந்தது. இப்போது அதை ஏற்படுத்தவேயில்லை. அப்படி ஒன்று இருந்ததாகக் கூட மறந்துவிட்டோம். உரிமைகளைக் கேட்காத வரையில் அதைத் தள்ளிப் போடும் நிலை இருக்கிறது. இதுபற்றி முதல் அமைச்சர் அவர்களிடமும், லீடர் ஆஃப் தி ஹௌஸிடமும் சொல்லியிருக்கிறேன்.

சபை நடவடிக்கைகள் உடனடியாக லைப்ரரியில் வைக்கப்பட வேண்டும். அப்படி அவற்றை நூலகத்தில் வைப்பதினால் எல்லோரும் படிப்பதற்கு சௌகரியமாக இருக்கும். அதுபற்றி சில பிரச்சினைகளைக் கிளப்பினார்கள். கரெக்டெட் காப்பியா, அன் கரெக்டெட் காப்பியா என்றெல்லாம் சொன்னார்கள். கரெக்டெட் காப்பியை இரண்டு மூன்று நாட்களில் நூலகத்தில் வைத்தால் இங்கு என்னென்ன பேசியிருக்கிறோம், என்னென்ன நடந்திருக்கிறது என்பதை அறிந்துகொள்ள வசதியாக இருக்கும்.

நூலகத்தில் இப்போது இருக்கும் இடம் போதாது. அது நல்ல முறையில் விரிவான முறையில் அமைக்கப்பட வேண்டும். அங்கிருந்து காலை முதல் மாலை வரையில் படிப்பதற்கு வசதியாக இருக்கவேண்டும். அங்கு எல்லாவித வசதிகளும் இருந்தால் தான் அங்கத்தினர்கள் அங்கு சென்று படிக்க வசதியாக இருக்கும்.





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, அங்கத்தினர்கள் சலுகைகள். புது ஹாஸ்டல் இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கு அங்கத்தினர்கள் இதுவரை போகவில்லை. பணம் அதிகம் செலவழித்தும் நல்ல முறையில் அது கட்டப்படவில்லை. அது பூர்ண வசதியுடன் உள்ளதாக இல்லை.

சட்டசபை முடிந்து அங்கத்தினர்கள் ஊருக்குப் போக வேண்டுமென்றால் ரிசர்வேஷன் செய்வதில் கஷ்டம் இருக்கிறது. ஆகவே இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எழுதி இது விஷயத்தில் சட்டசபை அங்கத்தினர்களுக்கு டாப் ப்ரயாரிட்டி கொடுக்கும் வகையில் போக்குவரத்து வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அங்கத்தினர்களுக்கு ரெயில்வே பாஸ் கொடுப்பது விஷயமாக ரெயில்வே அமைச்சர் பூனச்சா அவர்கள் வந்திருந்தபோது பேசிக் கொண்டிருந்தேன். இந்த ராஜ்ய சர்க்கார் எழுதுவார்களானால் அங்கத்தினர்களுக்கு இந்த மாநிலத்தில் சுற்றுப்பயணம் செய்ய நாங்கள் ஏற்பாடு செய்து தருகிறோம் என்று வாக்குறுதியளித்தார்கள். நமக்கு ஃப்ரீ. ஆனால் சர்க்கார் பணம் கொடுக்கவேண்டும். ஆக, நமக்கு இந்த இலவச பாஸ் வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்படிச் செய்வதால் லெஜிஸ்லேச்சர் டிப்பார்ட்மெண்ட்டுக்கும் வேலை சுலபமாகயிருக்கும். கமிட்டிகளுக்கு எல்லாம் போகவேண்டியிருக்கிறது. இந்த பாஸ்களைக் கொடுத்துவிட்டால் பாக்கி அலவன்ஸ் மட்டும் போட்டுக் கொடுத்தால் போதும்.

அடுத்தபடியாக, உதவி சபாநாயகர் அவர்கள் இருக்கிறார்கள், கொறடா இருக்கிறார், லீடர் ஆஃப் ஹௌஸ் மந்திரியாக இருக்கிறார், லீடர் ஆஃப் தி அப்போஸிஷன் இருக்கிறார். எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் இதுபற்றி நான் கேட்டால் அப்படிக் கேட்பது சுயநலத்திற்காக அல்ல. எனக்கே சங்கடமாகத்தான் இருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர் பதவிக்கு யார் வேண்டுமானாலும் வரலாம். ஆகவே நான் தனிப்பட்ட முறையில் கேட்கவில்லை. எதிர்க்கட்சித் தலைவருக்கு வாடகையில்லாத முறையில் வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும். எதிர்க் கட்சித் தலைவர் என்று சொல்லும்போது கொறடாவையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் எனக்கு தினமும் 250 கடிதங்கள் வருகின்றன. அதில் பத்து அல்லது இருபது சொந்த முறையில் இருக்கலாம், சர்க்காருக்கு அனுப்பும் வகையில் சில இருக்கின்றன, அமைச்சர்களுக்கு அனுப்பும் முறையில் சில இருக்கின்றன. 150 கடிதங்களுக்காவது பதில் எழுத வேண்டியிருக்கின்றது. இதைச் சொல்லும்போது பழைய சர்க்கார் செய்ததா என்று கேட்க வேண்டாம். அவர்கள் செய்யவில்லை, நீங்களாவது செய்யுங்களேன். ஸ்டேஷனரியில் அரசாங்க கொறடாவிற்கு எம்ப்ளம் உபயோகிக்கலாம் என்றிருக்கிறது. அதே போன்று எதிர்க்கட்சித் தலைவர் உபயோகிக்கின்ற முறையிலே பேப்பர், ஸ்டேஷனரி சப்ளை செய்ய வேண்டும். மேலும் எதிர்க்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1968 மார்ச் 25

பி. ப. 2–00. கட்சித் தலைவருக்கு ஸ்டெனோகிராபர் ஒருவரை வைக்க வேண்டும். அத்தகைய சுருக்கெழுத்தாளர் இல்லை யென்றால் நிச்சயமாக ஒரு காரியததையும் செய்ய முடியாத நிலையில் இருக்கும். மேனாட்டிலே எதிர்க் கட்சித் தலைவருக்குக் கொடுக்கும்படியான சம்பளத்தைப் போன்று கொடுக்க வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தவில்லை. சில அலவன்ஸ்கள், கன்வேயன்ஸ் அலவன்ஸ் போன்றவைகளைக் கொடுக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவராகயிருக்கின்ற காரணத்தால் தமிழ்நாடு பூராவும் சுற்றவேண்டிய பொறுப்பிருக்கிறது. இவை, ஏற்கெனவேயிருந்த எதிர்க்கட்சித் தலைவர் கேட்ட கோரிக்கைகள்தான். ஏற்கெனவே எதிர்க்கட்சித் தலைவராக யிருந்தவர் இப்பொழுது அமைச்சராகயிருக்கும் காரணத்தால் நிச்சயம் ஏற்றுக்கொள்வார் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, மேடையிலே பழைய அமைச்சர்களைப் பற்றிக் கூறுவது கொஞ்சம்கூட குறைவதில்லை. அதிகமாக அதையே பேசிக்கொண்டிருப்பதில் பிரயோஜனம் இல்லை. இப்பொழுதிருக்கும்படியான நிலையில் நிர்வாகத்தை எந்த முறையிலே செம்மையாகச் செய்ய வேண்டுமோ அந்த முறையிலே செய்து மக்களுக்கு நன்மைபுரிய வேண்டும். பழையனவற்றையே பேசிக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. அதுபற்றி மக்கள் தீர்ப்பு கொடுத்து விட்டார்கள். நீங்கள் ஆளவேண்டுமென்றும், நாங்கள் எதிர்க்கட்சியிலிருக்க வேண்டுமென்றும் தீர்ப்புக் கொடுத்து விட்டார்கள்.

எனவே இருக்கும்படியான அரசியல் கசப்புகளைப் போக்கி சட்டம், அமைதி நன்றாகப் பாதுகாக்கக்கூடிய முறையில் இருக்க வேண்டும். எனவே பொதுமக்களிடமிருந்து வருகின்ற கோரிக்கைகளைத் தீர விசாரித்து, கட்சி நோக்கமில்லாமல் அதற்குரிய பரிகாரத்தை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இப்பொழுதிருக்கும்படியான நிலையிலே மந்திரிசபை அவர்கள் கட்சி நலன்களுக்காகத்தான் பயன்படுத்தப்படுகிறதே தவிர மக்கள் நலனுக்காக அல்ல என்னும்படியாக ஏகப்பட்ட புகார்கள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த நிலையை மாற்ற வேண்டும். இரண்டொரு விஷயங்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய பகுதி கோபிச்செட்டிபாளையத்தில் 'புரொக்யூர்மெண்ட்' நடைபெற்ற அளவிற்கு உடுமலைப்பேட்டையில் சரியாக நடைபெறவில்லை. நான் சொல்வதைத் தப்பாக நினைக்கக் கூடாது. அமைச்சரவர்கள் இருக்கும்படியான புள்ளிவிவரத்தை வைத்துச் சொல்லட்டும், கோபிசெட்டிபாளையத்தில் எத்தனை ஏக்கர் இருக்கிறது, அங்கு கொள்முதல் ஆனது எத்தனை மூட்டைகள் என்ற கணக்கையும், உடுமலைப்பேட்டையில் எத்தனை ஏக்கர், அங்கு கொள்முதல் ஆனது எவ்வளவு என்பதையும் காட்டி நிரூபிக்கட்டும். அதை நான் ஒப்புக் கொள்ளுகின்றேன்.



1968 மார்ச் 25]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நான் குறுக்கிடுவதற்கு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அதிருஷ்டவசமாகவோ துரதிருஷ்டவசமாகவோ கோபிச்செட்டிபாளையம் அவர்கள் இருக்கும் இடத்தைச் சார்ந்த பாகமாகவும், உடுமலைப்பேட்டை நான் பிறந்துவிட்ட பகுதியாகவும் மாறிவிட்டிருக்கிறது. போன வருஷம் உடுமலைப்பேட்டை அமராவதியில் தண்ணீர் இல்லாமல் கொள்முதலை செய்ய வேண்டாமென்ற நிலைகூட ஏற்பட்டது. அவர்களுடைய பகுதி செழுமையான பகுதி. இது அவர்களுடைய பகுதி என்பதற்காக நல்ல கொள்முதலும், இது அமைச்சருக்குச் சம்பந்தமுள்ள பகுதி என்பதால் குறைவாகவும் செய்யப்பட்டதாக அல்ல. இன்னொன்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் தடவையும் அங்கே தண்ணீர் இல்லாத நிலைமை. சாப்பாட்டிற்கே மிகவும் சிரமப்படுகிறார்கள் எங்கள் பகுதிகளிலே. எனவே இந்தத் தகவல்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவரவர்களை அருள்கூர்ந்து கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உதவி சபாநாயகரவர்களே, குற்றம் சொல்ல வேண்டுமென்பதற்காக நான் சொல்லவில்லை. அவர்கள் இந்தப் பதிலைத்தான் சொல்வார்கள் என்று தெரியும். கிடையாது என்று சுலபமாகச் சொல்லிவிடலாம். ஒரு விஷயத்தைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எங்கள் பகுதியில் வருஷாவருஷம் நல்ல வெள்ளாமை கிடையாது. 20 வருஷமாக கொள்முதல் செய்யப்படும்பொழுது எங்கள் குடும்பத்திலிருந்தும் கொடுக்கப்பட்டுதான் வருகிறது. அந்தப் பகுதியில் ஒழுங்காக கொள்முதல் நடைபெறுவதற்கான பொறுப்பை நாங்கள் தட்டிக்கழித்தால் நிச்சயமாக அங்கு இவ்வளவு கொள் முதல் இருக்காது. உடுமலைப்பேட்டை பகுதியில் கணக்குப்பிள்ளையிடம் உள்ள அடங்கல்களையெல்லாம் வைக்கட்டும். நாங்கள் சொல்வது அதைத்தான், கொள்முதல் பற்றிய ஒவ்வொரு டிமாண்ட் நோட்டீஸையும் அச்சிட்டு வையுங்கள். கொள்முதல் தீவிரமாக நடைபெறவேண்டுமென்பதற்காகக் கூறுகிறோம்.

செங்கற்பட்டு மாவட்டத்திற்கு வேண்டாமென்று சொல்லியிருந்தாலும் இருக்கலாம். குற்றம் சாட்ட வேண்டுமென்பதற்காக நாங்கள் தயாராகயில்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பழைய நாளில் நாங்கள் பேசுவது வழக்கம். அமைச்சர்கள் இருக்கிற இடத்திலே கொள்முதல் சரியாக நடைபெறவில்லை என்று பேசுவது வழக்கம். அது இப்போது உண்மையானது அல்ல. உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன். கொள்முதலானது போன வருஷம் 4, 5 மாதங்களில், உங்களாட்சியில் 3 ஆயிரம் டன்தான் செங்கற்பட்டு மாவட்டத்தில். இதை முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். உங்கள் ஆட்சியிலே 4 மாதத்திலே 3 ஆயிரம்

டன் ஆகியிருந்தது, இப்பொழுது நேற்றுவரையில் செங்கற்பட்டு மாவட்டத்தில் 33,000 டன் கொள்முதல் ஆகியிருக்கிறது.

அவர்கள் சொல்லுவது உண்மையாகயிருந்தால் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளலாம். அமைச்சர்கள் தப்பு பண்ணினால், அமைச்சர்கள் பெயராலே தப்பு பண்ணினால், அந்தத் தப்பை ஏற்றுக்கொண்டு தண்டனையை அனுபவிக்க வேண்டுமென்பது தான் ஜனநாயகம் விதித்த கட்டளை. பொதுவாக பழைய சம்பிரதாயப் பேச்சுக்களைப் பேசாமலிருப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : உதவி சபாநாயகரவர்களே, 1966-ஆம் வருஷக்கடைசியிலே பெரிய புயல் அடித்தது செங்கற்பட்டில். 1967-லும் புயல் அடித்தது, அது அரசியல் புயல். 1966-ஆம் வருஷம் அடித்த புயலினால் குட்டையிலே தண்ணீர் இல்லாமல் போய்விட்டது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சென்ற 1966 நவம்பரிலே புயலடித்தது. அதுவரையில் ஏன் கொள்முதல் செய்யவில்லை?

திரு. பி. ஜி. கருத்திருமன் : என்ன சாமி, அந்தப்புயல் இந்தப் புயல் என்று அதையே திரும்பத் திரும்பச் சொல்லுகிறீர்களே சாமி. சரி, நாங்கள் முன்பு பிரசாரம் செய்து கொண்டிருந்தோம், அதையே திருப்ப வேண்டாமென்று நமது அமைச்சரவர்கள் கூறினார்கள். அதுதான் எங்கள் வேலை. அது உங்களுக்கு நல்லதாக இருக்குமென்பதற்காகத்தான் நாங்கள் அதை ஞாபகப் படுத்துகிறோம்.

எனவே இப்பொழுதிருக்கும்படியான நிலையில் அங்கத்தினர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்தும், சிக்கன நடவடிக்கைகளை எடுத்து நடத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என்னுடைய கட்சியின் சார்பாகக் கொண்டு வந்த வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின்பேரில் உறுப்பினர்கள் எடுத்துச்சொன்ன பல்வேறு கருத்துக்களைக் குறை சொல்லுகின்ற கருத்துக்களாக மட்டும் முகலிலே எடுத்து, அவைகளைப் பிரித்துப் பார்க்கவேண்டுமென்றால் மூன்று தலைப்புகளின்கீழே கொண்டு வருகின்றேன்.

முதலாவதாக, அவர்கள் 'நீங்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொண்டு சிக்கன நடவடிக்கையிலே ஈடுபட்டதாகச் சொன்னீர்கள். ஆனால் அதிகமான அளவுக்கு சுற்றுப்பயணம் செய்வதன் மூலமாகவும், வேறு பல இலாகாக்களிலே செலவுகள் அதிகரித்திருப்பதன் மூலமும் நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் எந்த வழியிலேயும் சிக்கனமாக இல்லாமல் அதிகம் செலவாகியிருக்கிறது'





என்று குறிப்பிட்டார்கள். சிக்கனம் என்றால் அதிகச் செலவே இல்லாமல் பார்த்துக்கொள்ளுவது என்பதல்ல பொருள். இந்த வருடம் ரூ. 1,000 செலவானால் அடுத்த வருடம் ரூ. 800 ஆக அது குறையவேண்டுமென்று சிக்கனத்திற்கு ஒரு தவறான வியாக்கியானத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தவிர்க்கக்கூடிய செலவுகளைக் குறைப்பதும்—தவிர்க்கக்கூடிய செலவுகளை அடியோடு சில இனங்களில் நீக்குவதும், புதிய செலவுகள் ஏற்பட்டால் அவற்றை ஏற்றுக்கொள்ளுவதும் இரண்டும் சேர்த்துதான் சிக்கன நடவடிக்கையிலே வருமே தவிர, 'மந்திரிகள் ரூ. 1,000-லிருந்து ரூ. 500-ஆக்கியவுடன் அதிகாரிகள் தங்கள் சம்பளத்தை பாதியாக்கிக்கொள்ளுவதுதானே உண்மையான சிக்கனமாக இருக்கும்; நீங்கள் மட்டும் சம்பளத்தைக் குறைத்துக் கொள்வதனாலே என்ன பிரயோசனம், இது எப்படி சிக்கனமாகும்' என்று அவர்கள் ஒரு தப்பான விவாதத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளுகிறார்கள். அப்படிக் குறைக்கவும் அதிகாரமில்லை, அப்படியே குறைத்து விடுவதாக இருந்தாலும், அவர்களே இந்த அவையிலே சொல்லியிருக்கிறார்கள், "நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலையில்லாமல் அல்லலுக்கு ஆளாக்கிவிட்டீர்கள், அது நிரம்பப் பாவம்; ஆகையால் அவர்களுக்கு வேலை இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள்", என்று. ஆக, சங்கீதவித்துவான் ஒவ்வொரு பாட்டுக்கும் ஒவ்வொரு ராகத்தை அமைத்து மனம் செலுத்துவது போல சிக்கன நடவடிக்கை என்ற பிரச்சனை பற்றி பேசுகின்ற நேரத்தில், 'இதை ஏன் குறைக்கவில்லை? அதை ஏன் அதிகம் செலவு செய்தீர்கள்' என்று பேசுவதும், சிக்கனத்தை மேற்கொண்டால், 'சில பேர் பாதிக்கப்படுகிறார்கள்; ஐயோ, எத்தனையோ பேருக்கு வேலை போய் விட்டதே, வேலை கிடைக்காத காலம் ஆயிற்றே இது' என்று பேசுவதும் இந்த இரண்டும் வெவ்வேறு நாட்களிலே நடப்பதனால் வேண்டுமானால், அது பொருத்தமற்றது என்பது அவர்களுக்கு விளங்காமல் இருக்கலாமே தவிர, இரண்டையும் ஒன்றாகப் பார்த்தால் பொருத்தமில்லையென்பது அவர்களுக்குத் தெரியும்.

சுற்றுப்பயணத்தைப் பொறுத்தவரையில் கூட பல அங்கத்தினர்கள் 'சுற்றுப்பயணம் அதிகமாக நடத்துகிறீர்கள்' என்று குறிப்பிட்டார்கள். ஒருசில அங்கத்தினர்கள் 'சுற்றுப்பயணம் வருவது ஜனநாயகத்திலே தேவையானது, அதைக் குறைத்துக் கொள்ளாதீர்கள்' என்றார்கள். இன்னும் சில அங்கத்தினர்கள், 'சுற்றுப்பயணம் தேவைதான், ஆனால் எதெதற்கு? என்பதற்கு ஒரு வரம்புமுறை இருக்க வேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். இன்னும் சில அங்கத்தினர்கள், நம்முடைய அருப்புக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர்கள், 'எது எது பொருத்தமானது என்பதை அமைச்சர்களே ஒதுக்கிக்கொள்ள வேண்டும். அவர்களே வரையறுத்துக்கொள்ளவேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். இப்படி நான்கு வகையான கருத்துக்கள் இதிலே இருக்கின்றன என்பதை அவையிலே இருந்து கேட்டவர்

கள் உணருவார்கள், ஆகையால், சுற்றுப்பயணத்தைக் குறைக்க வேண்டுமென்று சொன்ன அங்கத்தினர்களுக்கு மதிப்பளிக்க வில்லையென்று அர்த்தம் இல்லை. எங்கோ ஒரு விளைவு ஏற்பட்டதனாலே அமைச்சர்கள் அதிகமாக சுற்றுப்பயணம் செய்யக் கூடாது; ஒரு மாதத்திலே 4 நாள்தான் போகலாம் என்று அவர்கள் எங்களுக்கு அறிவுரை சொல்லுவார்களானால் அதற்கு ஏற்றபடி நடந்துகொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் இதிலே பணம் செலவாகி விடுகிறது, செலவாகி விடுகிறது என்று அதை மட்டும் முக்கியமானதாக கருத்திலே வைத்துக்கொண்டு நம்முடைய நண்பர்கள் பேசுவது அவ்வளவு சரியானதல்ல. ஏனென்றால், 20 வருடம் அரசாண்டு கொண்டிருந்த அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்யாமலேகூட நாட்டின் நிலவரங்களை ஓரளவு ஊகித்து அறிந்து கொள்ளலாம். ஆனால், நாங்கள் புதிதாக ஆட்சிக்கு வந்தவர்கள். நீங்கள் சொல்கிறீர்கள் என்பதற்காக சுற்றுப்பயணத்தை வெகு அதிகமாகக் குறைத்துக்கொள்வோமானால் நாட்டினுடைய நிலைமைகளை ஓரளவு அறிந்து கொள்வதற்கு நாங்கள் தவறிவிட்டவர்களாவோம். சுற்றுப்பயணம் கூடாது என்று சொல்கின்ற இதே அவையிலே கூட, கந்தர்வ கோட்டையில் மாணவர்கள் கொல்லப்பட்டார்கள், அங்கே ஒரு அமைச்சராவது உடனடியாகச் சென்றிருக்கக்கூடாதா என்ற கேள்வி வந்தது. ஆகையால், சில வேளைகளில் அமைச்சர்கள் அங்கு செல்லவேண்டுமென்று நீங்களே வலியுறுத்துகிறீர்கள். சில வேளைகளில் நாங்கள் சுற்றுப்பயணம் செய்வது ஒரு சிலருக்கு சங்கடமாக இருக்கு இருக்குமானால்—சங்கடங்கள் ஏற்படுமானால்—உண்மையிலே அவர்களுடைய சங்கடத்திற்காக அல்ல; நாட்டு நிலைமையை அறிந்து கொள்வதற்காக அந்தச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் அந்தச் சுற்றுப்பயணம் அதிக அளவிற்கு வரவிடாமல் பார்த்துக்கொள்வதற்கு இனி முடியும் என்று கருதுகிறேன். ஓராண்டு நாங்கள் ஆட்சிப்பொறுப்பி லிருந்துவிட்டு, இனி அதிகமான அளவுக்கு சுற்றுப்பயணம் செய்துதான் நாட்டினுடைய நிலைமையை அறிந்து கொள்ள வேண்டுமென்ற நிலை ஓரளவுக்கு இனி குறைத்துக்கொள்ள முடியும்—கட்டுப்படுத்திக்கொள்ள முடியும் என்று நான் உள்ளபடியே கருதுகிறேன். அந்த வகையிலே நாங்கள் சுற்றுப் பயணத்தை ஓரளவுக்குக் குறைத்துக் கொள்ளுகிற நேரத்தில், சுற்றுப்பயணம் அதிகம் வேண்டுமென்ற அவர்களும் குறைபட்டுக் கொள்ளக் கூடாது. ஏற்கெனவே, சுற்றுப்பயணம் நடத்துகிற பொழுது எப்படி எப்படி நடந்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்துக்களை உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள்.

நாட்டினுடைய பல்வேறு நிலைமைகளைப்பற்றிச் சொன்னார்கள் ஆகையால் நான் பழைய நிலைமைகளைப்பற்றிச் சொல்வேனே யானால் அது உண்மையிலே முன்னாலேயிருந்த ஆட்சியைக் குறை சொல்வதற்காக அல்ல; எங்களுடைய உள்ளத்தில், எண்ணிப் பார்க்கின்றபொழுது தோன்றக்கூடிய சில கருத்துக்களை இங்கு வைக்கவேண்டும், எந்தக் கருத்தையும் இந்த அவையிலே மறைக்கக் கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். எடுத்துக் காட்டாக, நம்முடைய முன்னாள் அமைச்சர் திரு. பூவராகன் அவர்கள், அவரது தொகுதியில் நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கில் சிறப்புச்சொற்பொழிவாற்றுவதற்கு செல்வராஜ் அவர்கள் அழைக்கப்பட்டார்கள்; இது எந்த வகையில் பொருந்தும்? அமைச்சர்கள் விளக்கம் தரவேண்டுமென்று சொன்னார்கள். செல்வராஜ் என்று பேசுவதனாலே அவர் யார் என்பதையும் நாம் அறிந்துகொள்வது பொருத்தம் என்று கருதுகிறேன் அவர் ஒருமுறை இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினராக இருந்தவர். இந்த முறை நம்முடைய சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற முன்னாள் அமைச்சர் பூவராகன் அவர்களோடு போட்டி யிட்டுத் தோற்றவர். ஆகையினாலே தோற்றுப்போனவரை சிறப்புச் சொற்பொழிவாற்ற அழைக்கலாமா என்ற ஒரு எண்ணம் கேட்பவர்களுக்கு, அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த வர்களுக்குத் தோன்றியிருக்கக்கூடும். அப்படித் தோன்ற வேண்டுமென்று நினைத்துப் பேசியிருக்கலாம். அல்லது அப்படிப் பேசினால் என்ன தோன்ற முடியும் என்று அறியாமல் பேசி இருக்கலாம். தேர்தலில் தோற்றுப்போனவரை அழைத்துப் பேச லாமா என்ற எண்ணம் உறுப்பினருக்குத் தோன்றி இவ்வாறு பேசியிருக்கக் கூடும்; அல்லது தன்னுடன் போட்டியிட்டவரை பேசச் சொல்லியிருக்கலாமா? இதைப்பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்? பொதுமக்கள் மத்தியில் இவரைப்பற்றி எத்தகைய எண்ணத்தை தோன்றச் செய்திருக்க முடியும் என்பதை அறியாமல் பேசியிருக்கக்கூடும். ஆனால் தேர்தலிலே தோற்றுப்போனவர்களுக்கு சிறப்புச் சொற்பொழிவாற்ற வாய்ப்பளிப்பதா என்ற எண்ணம் சிலருக்காவது ஏற்படக்கூடும்.

1957-ல் காஞ்சிபுரத்திலே நான் வெற்றி பெற்ற பிறகு—அங்கே நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்ச்சியிலேயும், என்னுடன் போட்டி யிட்டுத் தோற்றுப்போன—எனது குடும்ப நண்பரும், அந்தப் பகுதி மக்களால் மிகவும் மதிக்கப்பட்டவருமான—டாக்டர் சீனிவாசன் அவர்கள்தான் எல்லா நிகழ்ச்சிகளிலேயும் அழைக்கப் பட்டு, அவர்தான் இருப்பார்கள். அத்தகைய நிகழ்ச்சிகளுக்கு நான் சென்றாலும் கிட்டத்தட்ட கூட்டத்தில் கூட்டமாகத்தான் இருப்பேனே தவிர, மேடையிலே இடமோ, சொற்பொழிவாற்றக் கூடிய நிலையிலோ என்னை அப்பொழுது யாரும் அழைக்கவில்லை. அதை 1957-58-ல் இந்த அவையிலே சொல்லி இருக்கிறேன். ஒரு முறை கூட எந்த ஒரு விழாவிலும் சொற்பொழிவாற்ற வருமாறு நான் அழைக்கப்பட்டதில்லை. அதிலே வேடிக்கை என்ன வென்றால், டாக்டர் சீனிவாசன் அவர்கள் என்னிடத்தில், 'இதற் கெல்லாம் உன்னை அல்லவா அழைக்கவேண்டும், என்னை அடிக்கடி வந்து கூப்பிட்டுக்கொண்டிருக்கிறார்களே' என்று குறைபட்டுக் கொள்வார். அப்படி நடக்கின்ற முறையில் அம்போக நடக்கிறார்கள்.

குளித்தலைத் தொகுதியில் நம்முடைய கருணாநிதி அவர்கள் வெற்றி பெற்றார். அவர் வெற்றி பெற்றிருந்த அந்த 5 வருடத்திலேயும் அந்த குளித்தலையில் நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அவரிடத்திலே தோற்றுப்போன காங்கிரஸ்காரர்தான் அழைக்கப்பட்டாரே தவிர, கருணாநிதி எந்த நிகழ்ச்சியை நடத்துவதற்கும் அழைக்கப்படவில்லை. எதற்காக சொல்கிறேன்? அதே முறை நாங்கள் கையாளவேண்டும் என்பதற்காக அல்ல எனக்குள்ள தயக்கம் என்னவென்றால் பூவராகன் அவர்களை நாம் அழைத்தால் வருவார்களோ மாட்டார்களோ என்பதுதான். அவரைத் தனிப்பட்ட முறையில் அல்ல, ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்துடன் ஒட்டி உறவாடிப் பழக வேண்டுமென்ற எண்ணம் யார் யாருக்கு இருக்கிறதோ, அவர்களையெல்லாம் எங்களுடைய நிகழ்ச்சிகளுக்கு நான் அழைக்கத் தவறவில்லை. வேலூரிலே நடைபெற்ற சீரணி மாநாட்டிற்கு கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த உறுப்பினரையும் அழைத்தோம்; காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களையும் அழைத்தோம். வேறு பலவிடங்களிலும் அப்படிப்பட்டவர்களை அழைத்துத்தான் நடத்துகிறோம். ஆகையால், அந்த நிகழ்ச்சிகளில்—சிறப்பு நிகழ்ச்சியோ, சாதாரண நிகழ்ச்சியோ- அவர்கள் வந்து கலந்து கொள்வதைவிட எனக்கு அதிக மகிழ்ச்சியையும் அதிக பூரிப்பையும் தருவது வேறு எதுவும் இருக்க முடியாது. காஞ்சீபுரத்திலே நடைபெற்ற சீரணி மாநாட்டிலே நம்முடைய விநாயகம் அவர்கள் —காங்கிரஸ்காரர் என்றாலும்—அங்கு உரையாற்றியதை காஞ்சீபுரத்து மக்களே பாராட்டினார்கள். அந்த முறையில் சுற்றுப் பயணங்களில், அந்த அந்தத் தொகுதியிலுள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும், கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும், அவர்களையெல்லாம் கலந்து கொள்ள, அப்படி விருப்பப்படுகிறவர்கள் என்று குறிப்பாகத் தெரிந்தால், அவர்களைக் கலந்தாலோசித்து அந்த நிகழ்ச்சிகளை ஏற்படுத்திக் கொள்வதில் நான் விருப்பம் கொண்டவன் என்று அறிவிக்கிறேன். நம்முடைய கும்பகோணம் சட்ட மன்ற உறுப்பினர் சொன்னார்கள், அமைச்சர்களைப் பார்ப்பது கஷ்டமாக இருக்கிறது பல நிகழ்ச்சிகளுக்கு வரும்போது,

**திரு. நா. காசிராமன் :** பார்ப்பதற்குக் கஷ்டம் என்று சொல்லவில்லை, வருகைபற்றி முன்கூட்டியே தெரிந்தால் பார்க்க முடியும் என்றேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** முன்னதாகத் தெரிந்தால், வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்கிறார்கள். என்னுடைய சுற்றுப்பயண நிகழ்ச்சிக் குறிப்பு அவர்களுக்குப் போய், அவர் ஊரில் இருக்கமுடியாத நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. நான் முன்னதாக அறிவிக்காமல் இல்லை. அந்த நேரத்தில் அவர்கள் வெளியூருக்குச் சென்றிருந்தால், அவர் தன் இளவலிடம்





ஒரு கடிதம் கொடுத்து, வருவதற்கில்லை என்பதற்கு வருந்துகிறேன் என்று முதல் அமைச்சரிடம் சொல்லுங்கள் என்று செய்தி அனுப்பியிருந்தார்கள். அதற்காக நான் மிகவும் நன்றி அறிதல் தெரிவிக்கிறேன். சட்ட மன்ற உறுப்பினர்களுடன் எழுதிக் கலந்தாலோசிப்பது எனக்குத் தேவை என்றே தோன்றுகிறது. ஆனால், ஒரே ஒரு சங்கடம் அதிலே வருகிறது. ஒரே நாளிலே பல நிகழ்ச்சிகளை வைத்துக் கொள்வதில், அந்த அந்த சட்ட மன்ற உறுப்பினர்கள், தங்களைச் சந்தித்துப் பேசுவதற்கும், அதிகாரிகளைக் கண்டு நிலவரங்களை விசாரிக்கவும், போதுமான காலம் கிடைக்காமல் இருக்கிறது. இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களையெல்லாம் கருத்தில் கொண்டு, அமைச்சர்களை அழைக்கும்போது, ஒரு நிகழ்ச்சியோடு முடித்துக்கொண்டு, மற்ற நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களையும், அதிகாரிகளையும் கலந்து பேசுவதற்கு நேரம் செய்து கொடுக்க வேண்டும் என்று பொதுமக்களை, நிகழ்ச்சிகளை நடத்தப் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர் இதைச் சொன்னபோது, எந்தவிதமான குறுக்கீடும் செய்யாமல், கேட்டுக் கொண்டு இருந்ததற்குக் காரணம், யாராவது சொல்லமாட்டார்களா என்று ஆவலாகப் பார்த்துக்கொண்டு இருந்தேன். அவர்கள் எடுத்துச் சொன்னது வாய்ப்பாக இருந்தது. இனி நடக்கக்கூடிய சுற்றுப்பயணங்களில் இந்த முறையை மேற்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறேன்.

இன்னொரு கருத்து எடுத்துச் சொல்லப்பட்டது. நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர்களுக்கெல்லாம்—ஏதோ ஒரு மாநிலத்தில் (திரு. கே. விநாயகம் : மைசூரில்) ரூ. 350 சம்பளம் தருவதாகவும், தினப்படி ரூ. 25 என்றும் (திரு. கே. விநாயகம் : கேரளாவில்) (குறுக்கீடு ராஜஸ்தான்)—சம்பளம் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. இதிலே உள்ளபடியே முதலிலே சிக்கன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு, அதற்குப்பிறகு இதையும் சொல்வது எப்படிப் பொருந்தி வருகிறது என்று பார்க்க வேண்டும். வெளியிலே சினிமாப்பாட்டு ஒன்று பாடுவார்கள், 'அப்பனைப் பாடும் வாயால், சுப்பனைப் பாடுவேனோ' என்று. அதுபோல, சிக்கனத்தில் சர்க்கார் கொஞ்சங்கூட அக்கறை காட்டவில்லை என்று பேசிவிட்டு, ரூ. 250 போதாது, ரூ. 350 கொடுக்க வேண்டும் என்று கேட்பது எப்படிப் பொருந்தும்? அது தேவையாக இருக்கலாம், சில பேருக்குப் போதாது. நண்பர் திரு. காசிராமன் போன்றவர்கள் ரூ. 250-ம் இல்லாமலேயே பணியாற்றலாம். கந்தர்வகோட்டை திரு. ராமச்சந்திர துரை, "என்னை 'ஜமீந்தார், ஜமீந்தார்' என்று சொல்கிறார்கள் என்றாலும், நான் சாதாரணந்தான்" என்று சொன்னார்கள். அது எனக்குத் தெரியும். பல ஜமீந்தார்கள் ஆடம்பர நிலையில் இருக்கிறார்கள், ஆனால் ஜமீன் நிலம் இல்லை. பல பேருக்கு இது தேவையாக இருக்கலாம். ஆனால், பொதுமக்கள் இன்றைய தினம் பல்வேறு முனைகளிலே அடைந்து கொண்டிருக்கும் நிலைகளை எண்ணிப்

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 மார்ச் 25

பார்க்கும் போது, நம் சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்கள் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்கிற அவல நிலை இருக்கிறது. அவர்களுக்கு அது தேவையானதுதானா என்று யோசிக்க வேண்டும். அதற்கு திரு. விநாயகம் எங்கள் பேரில் பழியைப் போட்டு விட்டு, ஏற்றிவிட்டுப் போயேன், என்கிறார்கள். அதை நான் ஏற்றுக் கொண்டால், மறுநாள் என்ன பேசுவார், "ஒரு பரீட்சை பார்த்தேன், 350 என்ன, 400 வைத்துக் கொள்ளேன், என்றார்கள்" என்று சொல்லுவார்கள்.

சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய சம்பளங்களை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று வாதாடுவது கூட பொது மக்களுடைய காதுக்குக் கசப்பாக இருக்கும். இருநூற்று ஐம்பது போதாது என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தாலும், பொதுத் தொண்டில் ஈடு பட்டிருக்கும் போது, 250 ரூபாயைக் கொண்டு பணி புரிய முடியுமா? மக்களுடைய ஆதரவின் மூலமாகத்தான், அந்த உறுதிப்பாட்டின் பேரில்தான், பொது வாழ்வில் ஈடுபடு கிறோம். வாங்கும் சம்பளம் ரூ. 250, சென்னையிலே, 300, 400 ஆகி விடும்.

அவர்களே தங்களுடைய வசதிகளைத் தேடிக்கொள்ள முடியாது என்றுதான் பொதுமக்கள் அவர்களுக்குப் பல இடங்களில் மோட்டார் வாங்கிக் கொடுக்கிறோம் என்று முன் வருகிறார்கள் என்று கருதுகிறேன். ரூ. 250 போதாது என்று அந்த உறுப்பினர் களிடம் அக்கறை கொண்டு பொதுமக்கள் நன்றாகத் தெரிந்து கொண்டு, மோட்டார் வாங்கிக் கொடுக்கிறார்கள். மோட்டார் வாங்கிக் கொடுத்தால் தொகுதியில் சுற்றுப் பயணம் செய்வார்கள், சுற்றுப்பயணம் செய்தால், தங்களுடைய கோரிக்கைகளைக் கண்டறியப் போவார்கள், என்பதற்காகத்தான் மோட்டார் வாங்கிக் கொடுக்கிறோம் என்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆனால் பொதுமக்கள் எந்த நோக்கத்தோடு மோட்டார் வாங்கிக் கொடுக்கிறார்களோ, அந்த நோக்கத்திற்கு அந்த மோட்டார் பயன் பட வேண்டும் என்று விரும்புகிறேன். பயன் படுத்தப் படும் என்பதிலும் நம்பிக்கை கொண்டு இருக்கிறேன். ஆகையினால், மோட்டார் வாங்கி 50 பேர்களுக்குக் கொடுத்திருக்கிறார்களே என்றார் திரு. கருத்திருமன். அவருக்கு மோட்டார் கொடுக்கத் தேவையில்லை. ஆனால், அவருடைய பொதுத் தொண்டைப் பாராட்டி, அவருக்கு வசதி இருந்தாலும், அவருக்கு மோட்டார் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று அவருடைய தொகுதியி லுள்ள மக்கள் முயற்சி எடுத்துக் கொண்டால், அதற்கு ஊக்கத் தையும், மரியாதையையும், என் சிறு நன்கொடையையும் கூடத் தரத் தயாராக இருக்கிறேன் என்பதைத் (ஆரவாரம்) தெளி வாகச் சொல்ல விரும்புகிறேன். ஐம்பது, அறுபது பேர்களுக்கு மோட்டார் வாங்கியிருக்கிறார்கள் என்றால், அந்த உறுப்பினர் களுக்கு மோட்டார் இல்லாமல் இருக்கிறது என்று வைத்துக் கொண்டால், ரயிலைவிட்டு இறங்குகிறார்கள். அந்தத் தொகுதியில் யாரோ ஒரு பெரிய புள்ளி வண்டி வந்து நிற்கிறது.



1968 மார்ச் 25] [திரு. சி. என். அண்ணாதுரை]

இவரைப்பார்த்த உடனே, பெரிய புள்ளிக்கு எம்.எல்.ஏ.-வைத் தெரியும், எம்.எல்.ஏ. ஆனபிறகு தெரியும் (சிரிப்பு). ஆகவே, அவா இவரைப் பார்த்து, நம் வண்டியில் ஏறுங்கள் என்கிறார். இவரும் ஏறிவிடுகிறார் என்றால், அடுத்த சட்டசபைக் கூட்டத்தில், திரு. ராமமூர்த்தி குறித்துக் கொண்டே இருந்து, திரு. சித்தன் குறித்துக் கொண்டே இருந்து, வருவார், கேட்பார், இன்ன சட்ட மன்ற உறுப்பினர், இன்ன காரில், எம்.எஸ்.பி. 648, பச்சைக் கலர் காரில் போனாரா, என்று. நாங்கள், ஆமாம் ஐயா, ஆனால், கலர் பச்சை இல்லை, அது வேறு கலர், ஊதா அல்லது நீலக் கலர் என்று சொல்லிக் கொண்டு, அவர்கள் சொன்ன செய்திகள் சரியில்லை, என்று புகார்களிலிருந்து ஒருவேளை விடுபடுவதற்காகச் சொல்லவேண்டும்.

அது மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில்—உங்களிடத்தில் கூச்சப்படத் தேவையில்லை—நாங்கள் ஆளும் கட்சி ஆன பிறகு எங்களுடைய கழகத் தோழர் கள் பராமரிப்பில் குறைந்திருக்கிறதே தவிர, தாராளம் காட்ட வில்லை. எங்களுடைய வசதியெல்லாம், 15 வருஷங்களாக எப்படி நடந்துகொண்டு வந்திருக்கிறோம் என்று பார்த்தால், பிரசாரத் திற்கு ஏதாவது வேண்டுமென்றால் சொல்லலாம், ஆனால் உங்க ளுக்கே நன்றாகத் தெரியும். அதுமட்டுமல்ல, இரண்டு மூன்று பொதுத் தேர்தல்களுக்கும் வழி வகைகள் எப்படிக் கிடைத்தது? நண்பர் திரு. காசிராமன், குடந்தையைச் சேர்ந்தவர், குடந்தை நகரத்தைப்பற்றித் தெரியும், எந்தச் செல்வந்தர்களிடத்தில் அந்த நாளில் எங்களுக்குத் தொடர்பு இருந்தது? தொடர்பு இல்லை. அந்த நாளில் என்பதால், இந்த நாளில் தொடர்பு இருக்கிறதா என்ற சந்தேகம் வந்தால், திரு. காசிராமன் போன்றவர்களுடைய தொடர்பை எண்ணிக் கொண்டு சொல்கிறேன், மூப்பனார் களுக்கும், மற்றவர்களுக்கும் எங்களுக்கும் தொடர்பு இல்லை என்பதை நன்றாக அறிவார்கள். பொதுமக்கள் கண்ணும் கருத்து மாக இருக்கிறார்கள்; ஆகவே, ரூ. 250 மிகக் குறைவானது என்று கருதாமல, அதை உயர்த்த வேண்டும் என்ற வார்த்தையை நம் முடைய உறுப்பினர்கள் விட்டுவிட வேண்டும் என்று கருதுகிறேன்.

இன்னொன்று, "அமைச்சர்கள் தங்களுடைய சொத்து விவரங்களைத் தருவதாகச் சொன்னார்களே, கொடுத்தார்களா?" பிற்பகல் 2 30
என்பது. நியாயமான கேள்விதான். சில அமைச்சர்கள் அப்படிக் கொடுக்காமல் இருப்பதற்குக் காரணம் எனக்குத் தெரியும். ஊரிலே உள்ளவர்கள் ஏதோ அமைச்சர்களுக்கு இருப்ப தாக எ[illegible]க் கொண்டிருக்கிறார்கள். உண்மையான சொத்து விவரக் கணக்கைக் கொடுத்தால், ஒருவேளை, "சே, இவ்வளவுதானா இந்த மந்திரிக்குச் சொத்து?" என்று சப்பிட்டுப் போகும் அந்த எண்ணத்திலும் விவரங்கள் கொடுக்கக் கூசிக் கொண் டிருக்கக்கூடும். என்னவாயினும், தரப்படாத ஒன்றுக்கு விளக்கம் அளிக்க நான் முற்படவில்லை. இது குறித்து மத்திய அரசு ஓர் ஒழுங்கு முறையை ( Code of Conduct ) வகுத்து, மாநில அரசுகளோடு கடிதப் போக்குவரத்துத் தொடர்பு

கொண்டிருக்கிறது. இதில் மாநில அமைச்சர்கள், மாநில முதலமைச்சர் அவர்களிடத்திலே ஒவ்வொரு வருடத்தினுடைய இறுதியிலேயும் தங்களுடைய சொத்து விவரத்தைத் தர வேண்டுமென்று குறிப்பிட்டுவிட்டு, ஏதாகிலும் அவர்கள் பேரிலே ஊழல் புகார்கள் எழுந்தால் அவற்றை மாநில முதலமைச்சரே விசாரிக்கலாம் என்றும், மாநில முதலமைச்சர் மீதே ஊழல் புகார் வந்தால் முதலமைச்சர்களையும், மற்றவர்களையும் சேர்த்து இந்தியப் பிரதம மந்திரியும், உள்துறை மந்திரியும் விசாரித்துக் கண்காணித்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரு விதியையும் இணைத்திருக்கிறார்கள். அந்த இணைப்புதான் எங்களுக்குப் பிடிக்கவில்லையென்பதை மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தி, அதை நீக்கிவிட வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். இதற்கு மத்திய சர்க்கார் சம்மதிக்குமானால் எங்கள் சொத்து விவரங்களை வெளியிடுவதில் தயக்கமில்லை. மத்திய அரசு, மாநில அரசு என்று சொல்லப்படுவதிலே, அளவிலே வேண்டுமானால் பேரரசு, சிற்றரசு என்று வித்தியாசம் இருக்கலாம். ஆனால் ஒவ்வொன்றும் அரசுகள் நிர்வாக வசதிக்காகவும், நாட்டுப் பாதுகாப்புக்காகவும், நாட்டு ஒருமைப்பாட்டுக்காகவும் மொத்தமாக இருக்கிறோமே தவிர, மற்றபடி ஒவ்வொன்றுக்கும் அரசு உரிமை இருக்கிறது. மாநில அரசுகளிலுள்ள முதலமைச்சர்களைக் கண்காணித்துப் பார்க்கின்ற பொறுப்பு மத்திய அரசின் பிரதம மந்திரிக்கு இருக்கிறதா, இருக்கலாமா? என்பதுதான் கேள்வி இதில் 'அமைச்சர்களையும், முதலமைச்சர்களையும் மத்திய அரசின் உள்நாட்டு மந்திரியும், பிரதம மந்திரியும் கண்காணிக்க வேண்டும்' என்பது--பெடரல் ஸ்ட்ரக்ச்சருக்கே—கூட்டாட்சி சமத்துவ தத்துவத்திற்கே மாறானது என்று நாங்கள் கருதுகிறோம்.

மத்தியிலும், மாநிலங்களிலும் ஒரே கட்சி ஆட்சி நடத்தினால் இப்படிச் சொல்வதற்கு நியாயம் இருக்கிறது. ஆனால் நாம் விரும்பியோ, விரும்பாமலோ மத்திய ஆட்சியிலே ஒரு கட்சியும், மாநிலங்களிலே வேறு கட்சிகளும் அரசாளுகிறபோது, மாநில முதலமைச்சர்களைப்பற்றி மத்திய அரசு உள்துறை அமைச்சரும், பிரதம மந்திரியும் விசாரணை நடத்துவார்கள் என்பது, ஆங்கிலத்தில் சொல்வார்களே, 'Sword of Damocles என்று, அதுபோல தலைக்கு மேலே ஒரு வாளைக் கட்டிக்கொண்டு இருப்பதற்குச் சமானமானதாகும். நாங்கள் இதற்கு விளக்கம் கேட்டிருக்கிறோம். மத்திய அரசிலிருந்து தக்க விளக்கம் வரும் என்கின்ற அளவிற்கு நம்பிக்கை வைத்திருக்கிறோம். அமைச்சர்கள் சொத்து விவரம் தர வேண்டுமென்பதைப்பற்றி நாங்கள் ஒத்துக் கொண்டிருக்கிறோம். சொத்து விவரம் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லும் நேரத்தில், நீங்கள் "இதுவரையில் ஏன் கொடுக்கவில்லை?" என்று கேட்பதில் கொஞ்சம் அவசரப்பட்டு விட்டீர்கள். அவர்கள்—மத்திய ஆட்சி—ஒரு வருடம் முடிந்த பிறகு சொத்து விவரம் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன கெடு தேதி—31-3-1968--முடிய இன்னும் சில நாட்கள் இருக்கின்றன. அதற்குள்ளே நீங்கள் அவசரப்பட்டுவிட்டீர்கள்! அப்படி அவசரப்பட்டதற்குக் காரணம் என்ன?



திரு. பி. ஜி. கருத்திருமன் : மானியம் வந்துவிட்டதே.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மானியம் வந்ததால் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். "சொத்து விவரத்தை நாங்கள் கேட்காமல் இருந்தால், தப்பித்துவிட்டிருப்பார்கள்" என்று நீங்கள் எடுத்துச் சொல்லியிருப்பீர்கள். நண்பர் திரு. கே. விநாயகம் அவர்கள் அப்படியெல்லாம் இருக்கக் கூடியவர் அல்ல. அவர் எப்பொழுதும் பெரும் போக்காகப் போகக் கூடியவர் (சிரிப்பு). சொத்து விவரங்களைத் தருவதில் எங்களுக்கு ஒன்றும் தயக்கம் இல்லை. நாங்கள் எப்போதும் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களிலே ஏற்றுக்கொள்கிற ஒரு கருத்தைக்கூடப் புறக்கணித்து விடமாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடைமுறைக்கு ஒத்துவராத காரணங்கள் இருக்குமானால், அவைகளை ஏற்றுக்கொள்ள இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்வேண்டும்.

அடுத்தபடியாக, பத்திரிகைகளுக்கு எல்லாம் விளம்பரங்களைக் கொடுத்ததைப்பற்றிப் புகார் சொல்லப்பட்டது. இன்று முழுவதும் புகார் மாநாடாகவே முடிந்துவிட்டது என்று சொல்லலாம். "முரசொலிக்கு ஏன் தருகிறீர்கள்?" என்று நானே என்னைக் கேட்டுக் கொண்டேன். விவரம் பார்த்தால் ஏன் தந்திருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. தினமணிக்கு நாம் விளம்பரம் கொடுத்தால், ஒரு 'காலத்துக்கு' 7 ரூபாய் ஆகிறது ; சுதேசமித்திரனுக்கு ஒரு காலத்துக்கு 4 ரூபாய் ஆகிரது ; முரசொலிக்கு 3 ரூபாய் 60 காசுகள் ஆகின்றது. ஆகையாலே மலிவு விலையில், மலிவுக் கட்டணத்தில் பெரிய விளம்பரத்தைச் செய்து மக்கள் மத்தியிலே பரப்ப வேண்டுமென்று எண்ணியிருப்பார்கள். என்ன இருந்தாலும் தாய்மார்களுக்குத்தான் தெரியும், மலிவாக இருப்பதற்கு செய்தித்துறை அமைச்சர் விளம்பரம் தந்திருக்கிறார். இது முன்னாள் அமைச்சர் அவர்களுக்குத் தெரியாததுபோல் கேட்கிறார். அவர் அமைச்சராக இருந்த நேரத்தில் 'நம் நாடு' பத்திரிகைக்கு விளம்பரம் தரவில்லை, முரசொலிக்குத் தரவில்லை 'ஏன் தரப்படவில்லை, யென்று நாங்கள் கேட்கிற நேரத்தில், 'தரமான பத்திரிகைக்குத்தான் நாங்கள் விளம்பரம் தருவோம்' என்று சொன்னார்கள். நவசக்திக்கு ,நவ இந்தியாவுக்கு ஏன் விளம்பரம் தரப்படவில்லையென்று நீங்கள் கேட்கிறபோது, நாங்களும், தரமான பத்திரிகைக்குத்தான் நாங்கள் விளம்பரம் கொடுப்போம்' என்று சொன்னால், அப்போது எங்களுடைய தரம் கெட்டுவிடுமே என்பதற்காகத்தான் அந்தப் பதிலைத் தரவில்லை (சிரிப்பு). ஆகவே, இதில் பாரபட்சம் காட்டவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களுக்குச் செய்து அளிக்கப்பட வேண்டிய வசதிகளைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர் கேட்ட பல வசதிகளைச் செய்துதர வேண்டுமென்பதில் தயக்கம் இல்லை.

அந்த வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு முன்னால், ஏற்கெனவே செய்திருக்கின்ற வசதிகளைச் சொல்வது பொருத்தமாக இருக்கும். இரண்டாயிரம் ரூபாய்ச் செலவில் மேஜை, நாற்காலி, பீரோ எல்லாம் எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. பி. ஜி. கருத்திருமன்: வாடகைக்குத்தான் கொடுத்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: வாடகை ரத்து செய்யப்பட்டுவிட்டது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: வாடகைக்குத் தந்திருப்பதாகச் சொன்னார். வாடகை இல்லை என அமைச்சர் விளக்கம் கொடுத்தார். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இதையும் சேர்த்து அவர்கள் சொல்லியிருந்தால் அவர்களுடைய பேச்சு முழு வடிவம் பெற்றிருக்கும். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டபடி அவர்களுக்கு உதவியாக, 'ஸ்டெனோகிராபர்' வைக்க வேண்டுமென்பதுதான் எங்கள் ஆசை. அது மிகவும் தேவையானது. அதற்கேற்ற அளவுக்கு நமக்குப் பொருளாதார வசதி இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அமெரிக்காவுக்குச் சென்று பார்த்து வந்திருக்கிறார். அங்கு செனேட் உறுப்பினருக்கோ, மக்கள் மன்ற உறுப்பினருக்கோ சர்க்கார் செலவிலே எந்த அளவுக்குச் செய்து தர முடியுமோ அவ்வளவு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. அது செல்வம் கொழிக்கும் நாடு. நம்மால் அந்த அளவிற்குச் செய்ய முடியாவிட்டாலும், ஓரளவுக்குச் செய்து வருகிறோம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு நாங்கள் கொடுத்திருக்கிற வசதி—வசதி என்றுகூடச் சொல்ல மாட்டேன்—மரியாதை நம்மால் முடிந்த அளவுக்குச் செய்கிறோம் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். நாங்கள் 50 பேர்களாக, எதிர்க் கட்சியில் இருந்தபோது ஒரு சிறிய அறைதான் எங்களுக்குக் கொடுக்கப்பட்டது. 'பரவாயில்லை, பஞ்சபாண்டவர்கள் சிறிய அளவிலே இருந்துதானே பிறகு யுத்தத்தில் வென்றார்கள்' என்று எண்ணிக் கொண்டேன். அவர்கள் இன்றைய தினம் 49 பேரான பிறகு 50 பேராக இருந்தபொழுது எங்களுக்குக் கொடுக்கப்பட்ட அறைக்கு அவர்களைப் போகச் சொல்லாமல், பழைய அறையையே நாங்கள் எடுத்துக்கொண்டு, அவர்கள் அன்றைக்கு வைத்திருந்த பெரிய அறையையே அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுத்திருக்கிறோம். அவர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், கீர்த்தி பெரியது அல்லவா? ஆகவேதான் அவர்களுக்குப் பெரிய அறையைக் கொடுத்துவிட்டு, நாங்கள் சிறிய அறையிலேயே இருக்கிறோம். அதையும் சேர்த்து எதிர் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருந்தால் பேச்சு முழு அளவு பெற்றிருக்கும்.

இன்றையதினம் சிக்கன நடவடிக்கைகளில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். இதனால் பல லட்சக்கணக்கான ரூபாய் குறைத்து,



தேவையற்ற செலவுகளைக் குறைக்க வேண்டுமென்பதில் எங்களுக்கு அக்கறை இருக்கிறது. இதற்கு முன்னால் மந்திரிமார்களின் வீட்டுத் தோட்டம் ஒவ்வொன்றுக்கும் ஆண்டுதோறும் 6,400 ரூபாய் செலவழிக்கப்பட்டது. தோட்டம் போட, விதை வாங்க, வேலையாட்கள் போட, பராமரிக்க என்றெல்லாம் ஆகும். 6,400 ரூபாயில் நாங்கள் 5,400 ரூபாயைக் குறைத்து விட்டு, ஆயிரம் ரூபாய் போதும் என்று சொல்லியிருக்கிறோம். எங்களால் முடிந்த அளவிற்குத்தான் நாங்கள் செய்திருக்கிறோம். பெரிய அதிகாரிகளைப் பார்த்து, "உங்கள் சம்பளம் இரண்டாயிரம் ரூபாய் ஆக இருப்பதை, சிக்கன நடவடிக்கையின் பொருட்டு ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொள்ளுங்கள்" என்று சொல்ல முடியுமா? அப்படித்தான் உத்தரவிட முடியுமா? அதற்கு சட்டமும் இடம் கொடுக்காது. அதைப்பற்றி நீங்களேகூட நாளைக்குக் கேள்வி கேட்பீர்கள். எதிர்க்கட்சித் தலைவர், "சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தஸ்து, நிலை என்ன ஆவது? 250 ரூபாய் போதுமா?" என்றார். போதாதுதான். 2,500 ரூபாய் வாங்கிக்கொண்டிருக்கிற அதிகாரிகளுக்குத் திடீர் என்று 200, 300 சம்பளம் என்று குறைத்துவிட்டால், அவர்களும் தங்கள், அந்தஸ்து என்ன ஆவது? நிலை என்ன ஆவது?" என்று கேட்பார்கள். ஆதலால் அவருக்குக் கஷ்டத்தைக் கொடுக்காமல் எனக்கும் அந்தச் சோதனையை வைக்காமல் அதைச் செய்வதற்குச் சட்டமே இடம் கொடுக்கவில்லை. ஆகையால் அந்தக் காரியத்தில் நாங்கள் ஈடுபடவில்லை.

இருக்கிற இடத்திலே பல வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்று நம்முடைய உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டார்கள். இப்போது அமைந்திருக்கிற கட்டடத்தில் 7 ப்ளோர்கள் இருக்கின்றன. அதனுடைய மொத்த பரப்பளவு ஒரு லட்சம் முப்பத்தேழாயிரத்து நாற்பது சதுர அடி. அதில் தனி அறைகள் 175 இருக்கின்றன, இரண்டுபேர் தங்கக்கூடிய அறைகள் 28 இருக்கின்றன. ஆகமொத்தம் 203 அறைகள் இருக்கின்றன.

"அங்கே வசதிகள் வேண்டாமா? ஒரு சட்ட மன்ற உறுப்பினர் காலையில் இங்கே நடக்கும் கூட்டத்திற்கு வந்தால் அப்புறம் எப்போது போக வேண்டியிருக்கிறது? நல்ல வசதிகள் அங்கே இருந்தால் தானே உறுப்பினர்கள் சௌகர்யமாக இங்கே வந்து விவாதங்களில் கலந்துகொள்ள முடியும்" என்று சொன்னார்கள். இப்போது அங்கே என்ன என்ன வசதிகள் அமைந்திருக்கின்றன என்று கேட்டேன். அங்கே இப்போது என்ன என்ன இருக்கின்றன என்றால், விளையாட்டுக் கூடம், நூல் நிலைய மண்டபம், முதல் உதவி அறை, பொருள்கள் வைக்குமிடம், லாண்டரி, முடி திருத்தகம், கார் நிற்குமிடம், அலுவலகம், தொலைபேசி, புலால் உணவு விடுதி, மரக்கறி உணவு விடுதி, மின்சாரத்தூக்கிகள், ஓய்வுக்காகவும் 7 அறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவு வசதியுடன் 63 லட்சம் ரூபாயில் இந்த எழுடுக்கு மாளிகை அமைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இவை மட்டும் அல்லாமல் குளிப்பதற்கு, சாப்பிடுவதற்கு, உட்கார்ந்து இருப்பதற்கு இருந்தால் போதுமா? எல்லா நேரமும் உட்கார்ந்தா இருக்க முடியுமா? கொஞ்சம் சாயவேண்டாமா? அதற்காக அந்த அறைகளில் கட்டில், சோபாக்கள், சாயும் நாற்காலி, சாதாரண நாற்காலி, புத்தகங்கள் வைக்க அடுக்கு, தலைமாட்டிலேயே பெட்டி—எழுந்துபோக நேரம ஆகும அலலவா—அப்படி பூட்டிக்கொண்டு படுக்க வசதியான இடத்தில் பெட்டி—உ பாய்கள், வெந்நீர் தரும் கருவி, விசிறிகள், ஷவர் பாத், கண்ணாடி—முகம் பார்க்கிற கண்ணாடிதானே (சிரிப்பு)—காட்டன் பில்லோஸ் . . . . இப்படி பல வசதிகள் செய்யப் பட்டிருக்கின்றன. அதில் இரண்டு மாதம் இருந்துவிட்டு எது உறுத்துகிறது, எது குறைகிறது என்று சொல்லுங்கள். இன்றைக்கு அந்தக் கடிடத்தில் 100 தொலை பேசிகள் இருக்கின்றன. அறைக்கு அறை தொலைபேசி வைத்துத் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நிதி நிலைமை சரியான பிறகு அது கவனிக்கப்படும். பொதுமக்களுக்கும் நாம் பதில் சொல்லியாகவேண்டும் என்பதற்காக இந்த விவரங்களைச் சொல்கிறேன். இவ்வளவு வசதிகளும் செய்து கொடுப்பதற்காக நமக்கு ஆகிற செலவு 2 லட்சத்து 48 ஆயிரத்து 75 ரூபாய். இரண்டு லட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து எழுபத்தைந்து ரூபாய் செலவு செய்து இந்த வசதிகளை எல்லாம் உறுப்பினர்களுக்குச் செய்து கொடுத்துவிட்டு, நாம் உறுப்பினர்களிடம் இருந்து வாடகையாகப் பெறுகிற பணம் 74 ஆயிரம் ரூபாய் தான். செலவு செய்வது 2 லட்சத்து 48 ஆயிரத்து 75 ரூபாய். வாடகையாக உறுப்பினர்கள் தருவது 75 ஆயிரம்தான். இது பொதுமக்கள் காதில் விழுகின்ற போது இன்னமும் இப்போதுள்ள வாடகைக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று சொல்வதை எவ்வளவு ஏற்றுக் கொள்வார்கள் என்பதை உறுப்பினர்களும் கொஞ்சம் யோசிக்க வேண்டும்.

"நாங்கள் சட்டசபை நடக்கும் நாட்களில் அந்த விடுதியில் தங்குவதற்காவது கட்டணம் இல்லாமல் செய்யவேண்டும். மைசூரில் கட்டணம் வசூலிப்பது இல்லை" என்று சொன்னார்கள். 2 லட்சம் சொச்சம் செலவிட்டு 74 ஆயிரம் ரூபாய் கட்டணம் பெறுகிற இந்த நிலையில் வாடகை இல்லாமல் இருக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். புள்ளி விவரத்தைத் தெரிந்துகொண்ட பிறகும் நீங்கள் அவ்வளவு பேர்களும் கேட்பதை என்னால் மறுக்க முடியவில்லை. ஆகவே சட்டமன்ற நடவடிக்கைகள் நடக்கும் நாட்களில் மட்டும் உறுப்பினர்கள் இந்த அறைகளில் தங்குவதற்குக் கட்டணம் இருக்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன் (ஆரவாரம்). ஆனால் சட்டமன்ற நடவடிக்கை இல்லாத நேரத்தில் அவர்கள் வருகிறபோது உறுப்பினர்கள் அந்த அறைக்கு நாள் ஒன்றுக்கு 2½ ரூபாய் வாடகை தர வேண்டும். அதிகாரிகள் வந்து தங்குவதற்குக் கேட்டால் 5 ரூபாய், அதிகாரிகளாக இல்லாமல் வேறு இடத்தில் இருந்து வருகிறவர்களுக்கு 7½ ரூபாயும் வாடகை வைக்க வேண்டுமென்று இப்போது நான்





கருதியிருக்கிறேன். (திரு. டி. எஸ். ஆதிமூலம் குறுக்கீடு) அது நாணயத்தில் இருக்கிற மறுபக்கம். உறுப்பினர்களுக்கு இந்தச் சட்ட மன்றம் நடக்கும் காலத்தில் இந்தச் சலுகையை அளிக்க நான் தயாராய் இருக்கிறேன்.

அதே நேரத்தில் மாத வாடகையை 25 ரூபாயாக்க வேண்டும். 50 ரூபாயாக இருக்கக் கூடாது என்று உறுப்பினர்களில் சிலபேர் எடுத்துச் சொன்னார்கள். அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. 25 ரூபாயாக மாத வாடகையை வைத்துவிட்டால் உறுப்பினர்கள் இங்கே மாதக்கணக்கில் தங்கி இருப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. தொகுதி வேலையைப் பார்க்கவேண்டாமா? சொந்த வேலையைப் பார்க்கவேண்டாமா? 25 ரூபாய் தானே மாத வாடகை என்பதற்காக பெண்டு பிள்ளைகள், உற்றார் உறவினர்களை விட்டு இங்கேயே மாதக்கணக்கில் தங்கியிருப்பார்களா? அதன் மூலம் வேறு யாராவது பயன்படுத்துகிற நிலைதான் ஏற்படும். ஆகவே மாத வாடகை 50 ரூபாய். புதிதாக கட்டப்பட்ட விடுதி அறைக்கு 60 ரூபாய் உயர்த்துவது என்று இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. செய்துகொடுக்கக்கூடிய சில வசதிகளை நாங்கள் செய்து கொடுத்திருக்கிறோம் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சட்டமன்றம் அதிக நாட்கள் கூட்டப்படவேண்டுமென்ற எண்ணத்தை பல உறுப்பினர்கள் சொன்னார்கள். அதை நானும் வரவேற்கிறேன். பாராளுமன்றம் கூடுகிற நாட்களைவிட நாம் கூடும் நாட்கள் மிகக் குறைவாக இருக்கின்றன. காலையில் கூட யாரோ சொன்னார்கள். நேரம் இல்லாத காரணத்தினால் இந்த மானியத்திலேயே சொல்லிவிடவேண்டும் என்கிறபோது கோபம் வந்துவிடுகிறது. கோபம் வரக் காரணம் இதுதான். என்ன என்ன சொல்லவேண்டும் என்று எண்ணிக்கொண்டு வருகிறார்களோ அதைச் சொல்வதற்கு அவசரம் இருக்கும். அது இயற்கைதான். இந்த மானியத்தில் சொல்லாவிட்டால் அப்புறம் நேரம் கிடைக்காதே என்கிற அவசரம் வருகிறது. இது பட்ஜெட் தொடராக இருப்பதனால் ஒரு குறிப்பிட்ட நாளிலே நிறைவேற்றியே தீரவேண்டும் என்று இருப்பதால் அவசரம் காட்ட வேண்டியிருக்கிறது. உறுப்பினர்கள் சட்ட மன்றத் தலைவருடன் கலந்து பேசி பல்வேறு சமயங்களில் சட்ட மன்றத்தைக் கூட்ட கருத்து தெரிவிப்பார்களானால் என் ஒப்புதல் நிச்சயமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது கூட கொஞ்சம் கொஞ்சமாக நாட்கள் கூடியே வந்திருக்கின்றன. 1962-இல் 42 நாட்கள் தான் கூடியிருக்கிறார்கள். 1963 இல் 51 நாட்கள்; 1964 இல் 54 நாட்களாகியிருக்கிறது. 1965 இல் 57 நாட்களாகியிருக்கின்றன. படிப்படியாக ஏறிக்கொண்டே வருகிறது. நம்முடைய நாளில் அதிகமாக ஏற வேண்டும். இப்போது விவாதிக்க வேண்டிய பிரச்சினைகள் பல வந்திருக்கின்றன.

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 மார்ச் 25

மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் "எங்களுக்கு அனுப்பப்படுகிற அறிக்கைகள் காலாகாலத்தில் அனுப்பப்படுவதில்லை. படித்துப் பார்த்து வந்து பேசுவதற்கு வசதிகள் இருப்பதில்லை" என்று குறிப்பிட்டார்கள். அந்த மனக்குறை எனக்கு உண்டு. அதை நிவர்த்திப்பதற்காக அலுவலகத்திலே உறுப்பினர்களுக்கு உதவி செய்வதற்கென்றே ஒரு பிரிவு வேண்டும் என்று கேட்டார்கள். ஏற்கனவே அப்படி ஒரு பிரிவு இருக்கிறது. முன்பு டைப்பிஸ்ட் ஒருவர் மட்டும் இருந்தார். இப்போது 3 பேர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய துணையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதற்காகச் செய்யப்படவேண்டிய காரியங்களைத் தொடர்ந்து செய்வதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமென்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

படிப்பகத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றிக் குறிப்பிட்டபொழுது நான் கேட்டனுப்பினேன். இப்பொழுதுள்ள புத்தகங்களில் உறுப்பினர்கள் எவ்வளவு புத்தகங்களை வாங்கிப் படிக்கிறார்கள் என்று பார்க்கின்றபொழுது அது மகிழ்ச்சியளிக்கக் கூடிய எண்ணிக்கையாக இல்லை. புத்தகம் இல்லாத குறையினாலே இப்படி இருக்கிறது என்று நான் கருதவில்லை. நம்மிடத்திலே உள்ள புத்தகங்கள், மவுண்ட் ரோடில் உள்ள படிப்பகத்திலே உள்ள புத்தகங்களையும் சேர்த்து 21,986 புத்தகங்கள் இருக்கின்றன. உறுப்பினர்களுக்கு வசதியாக இருப்பதற்காகச் சொல்வேன். என்ன என்ன புத்தகங்கள் தேவை என்று சொல்வார்களானால் சென்னையிலேயே வாங்க முடியுமானால் ஒரு வாரத்திற்குள்ளாகவும், வெளியூர்களிலிருந்து தருவிக்கவேண்டுமானால் அவற்றைத் தருவித்து படிப்பகத்திலே வைப்பதற்கு நான் ஏற்பாடு செய்வேன். அவை தக்க முறையிலே பயன்படுத்தப்படுவதற்கும் உறுப்பினர்களுக்கு உறுதுணையாகவும் இருக்குமானால் அந்த எண்ணத்தை நான் வரவேற்கிறேன்.

பத்திரிகைகளைப்பற்றி எடுத்துச்சொன்னார்கள். நாளேடு, வார ஏடு, மாத ஏடு இவை 125 இதழ்கள் இப்பொழுது வருகின்றன. இந்த 125 இதழ்கள் வந்துகொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் அதிகமாக இன்னும் தேவைப்படுகிறது என்று சொல்வார்களானால் அவற்றையும் தருவிப்பதற்கு நாங்கள் தயக்கம் காட்டமாட்டோம்.

"எங்களுக்கு 200 கடிதங்கள், 300 கடிதங்கள் என்று வருகின்றன. அதற்கெல்லாம் பதில் எழுதவேண்டுமென்றால் கஷ்டம். தாளுக்கு எங்கே போவது? பென்சிலுக்கு எங்கே போவது?" என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். உறுப்பினர்களுக்கு அவ்வப்பொழுது அவர்கள் கேட்கின்ற தால் இவைகளைக் கொடுப்பதற்குப் பதிலாக மொத்தமாக ஒரு வருடத்திற்கு 100 தாள்கள் கொண்ட பேட் 12-ம், கடிதத்திற்குரிய உறைகள் 1,200-ம் பென்சில் 12-ம், கலர் பென்சில் 6-ம், ரப்பர் 6-ம், அரையளவு வெள்ளைத்தாள்



1968 மார்ச் 25] [திரு. சி. என். அண்ணாதுரை]

இவையெல்லாம் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாணவர்களுக்குக் கொடுப்பதுபோல் இருக்கிறது என்று திரு. விநாயகம் அவர்கள் சொல்கிறார்கள். அது அந்தப் பக்கத்திலே பார்த்துக் கேட்கவேண்டிய கேள்வி. அவர் கேட்டார் நான் கொடுக்கிறேன். பாராளுமன்றத்திலே இது போன்ற வசதிகள் எல்லாம் செய்து தரப்படுகின்றன. மாணவர்களுக்குத் தரப்படுகின்ற முறையிலே அல்ல, இவையெல்லாம் உறுப்பினர்களுக்குத் தேவை. தாளிலே என்ன எழுதுகிறார்கள் என்பது முக்கியமே தவிர இதிலே செலவினம் வந்துவிடும் என்ற கருதத் தேவையில்லை. ஜனநாயகத்திலே இதுகூடச் செய்யாமல் ஜனநாயகத்தை அளிக்கமுடியும் என்று யாரும் கருதிக்கொள்ள மாட்டார்கள். மற்ற பல குறைபாடுகளைப்பற்றி நான் குறிப்பிடாததால் அவற்றை அலட்சியப்படுத்திவிட்டேன் என்று யாரும் கருதத் தேவையில்லை.

ரெயில்வே பாஸ், மோட்டார் பாஸ் பற்றிச் சொன்னார்கள். 2, 3 நாட்களாக உத்திரப் பிரதேசத்திலே மோட்டார் பாஸ், ரயில்வே பாஸ் கொடுத்து என்ன ஆகியிருக்கிறது என்பதைப் பற்றி பத்திரிகையிலே செய்தி வந்துகொண்டு இருக்கிறது. அதைப் படித்துப் பார்த்துவிட்டு அதைப்பற்றிப் பார்க்கவேண்டும். வருடத்திற்கு ஒரு இலட்சம் ஆகிறது என்று சொல்லி ஒரு மாதத்திற்கு ஒரு இலட்சம் என்று பயப்படுகிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், திரு. பூனச்சா அவர்களோடு பேசினேன், அவர்கள் சர்க்கார் கேட்டால் ஒத்துக்கொள்வேன் என்று சொன்னதாகச் சொன்னார்கள். 'எதற்கு ஒத்துக்கொள்கிறேன் என்று சொன்னால் கொடுத்து விட்டு தவணை முறையிலே நான் அதை வாங்கிக் கொள்கிறேன், அதற்குத்தான் ஒத்துக்கொண்டேன்' என்று சொல்வார்கள். செலவை மாநில சர்க்கார் ஏற்றுக் கொண்டால் நான் அதை ஏற்றுக்கொண்டு பின்னால் வாங்கிக் கொள்கிறேன் என்று சொல்வார்கள். உறுப்பினர்களுடைய உரிமை மதிக்கப்படக்கூடிய அளவில் உரிமைகளில் ஒன்றாக இருக்கிறது. மத்திய அரசினிடத்திலே இதைப்பற்றி வலியுறுத்திக் கொண்டு வருவோம். நம்முடைய கருத்திருமன் அவர்களாலே இப்படித்தான் தொல்லை. ஒரு மத்திய அமைச்சர் ஒத்துக் கொண்டார் என்று சொன்னவுடன் நான் எழுதிக் கேட்டேன். அதற்கு, "என்றைய தினம் யாரிடம் ஒத்துக் கொண்டேன்?" என்று அவரிடமிருந்து எனக்குத் திருப்பிக் கடிதம் வந்தது. 'நான் கேட்கவில்லை, எதிர்க் கட்சித் தலைவர்தான் கேட்டாராம், ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள்" என்று சொன்னேன். "விவரம் தெரியாமல் சொல்லியிருக்கிறார்கள், பணம் நீங்கள்தான் கொடுக்க வேண்டும்" என்று சொன்னார். டிக்கட்டை அவ்வப்பொழுது வாங்குவதும் மொத்தமாக அதற்காகப் பணம் வாங்கிக் கொள்வதும் ஒன்றுதான், வித்தியாசம் இல்லை. தேசியமயமாக்கப்பட்ட பஸ்கள் இலாபகரமாக நடக்கட்டும் இரண்டு வருடம்

இலாபகரமாக நடந்தால் பாஸ் கொடுப்பதிலே எந்தவிதமான நஷ்டமும் இல்லை. பாஸ்களைக் கொடுத்து விலை மதிக்க முடியாத விளம்பரத்தை உறுப்பினர் மூலம் பெறலாம். ஆனால் இலாபம் வர வேண்டும். திரு. காசிராமன் அவர்களுக்குத் தெரியும் எவ்வளவு காலத்தில் இலாபம் வருமென்று. பஸ் பாஸ் பெறுவதற்கு சர்க்காருடைய காரியத்திலே உறுப்பினர்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டு எடுத்துச் சொன்ன கருத்துக்களையெல்லாம் நல்லன வற்றை நிறைவேற்ற நிச்சயமாக கவனம் எடுத்துக் கொள்ளப் படும் என்று தெரிவித்துக் கொண்டு இதற்காகக் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக் கொண்டு இதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : On a point of information. Previously the Ministers of our State, whenever they went on a tour of the districts, used to allow the National Flag to fly on the bonnets of their cars as a symbol of respect and the people also will get to know that a dignitary is passing by. Now I find that most of the Ministers do not allow the National Flag to fly on the bonnets of their cars whenever they go on tour in the villages and districts. Is it that they do not respect the National Flag or do they think that it is *infra dig* to allow the National Flag to fly? Sometimes I find their party flag flying on the bonnets of the cars, which gives a different impression. Will the Minister give an assurance that the National Flag will be flown in the future?

THE HON. THIRU C. N. ANNADURAI : We mean no dis-respect to the National Flag because we belong to this nation. As for the fact that certain cars are not flying the National Flag, he would have seen certain cars with no flag at all because the flag staff is not attached. (Thiru K. Vinayakam : It is not our fault.). It is the fault of the manufacturer.

THIRU K. VINAYAKAM : In future?

THE HON. THIRU C. N. ANNADURAI : When I say that I am not disrespecting the Flag, 'in future' does not arise.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருந்தபொழுது எதிர்க்கட்சித்தலைவருக்குச் சில சலுகைகள் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அவை எனக்கு வரவில்லை என்பதைத்தான் சொல்லிக் கொள்கிறேன். மேஜை நாற்காலி கொடுத்ததற்கு வாடகையாக 30 ரூபாய் கொடுத்திருக்கிறேன். சில சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக பூரணமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் கேட்ட மற்ற வேண்டுகோள்களுக்கும் இணக்கமாக நடப்பார்கள் என்று நம்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது வெட்டுத் தீர்மானங்களின்மீது வாக்கெடுப்பு.

THIRU K. VINAYAKAM : If the Chief Minister promises that he will ask all the other Ministers to allow the National Flag to fly on the bonnets of their case, I have no hesitation to withdraw the cut motion.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தெளிவாகச் சொல்லுங்கள்.

THIRU K. VINAYAKAM : I want an assurance from the Chief Minister. It is only in the interests of the unity and integrity of the country that they ought to have respect for the National Flag. பி.ப 3·03.

THE HON. THIRU C. N. ANNADURAI : It may give him some secret pleasure to raise this. (Thiru K. Vinayakam : It is a national pleasure.) But he should consider the dignity of the National Flag. In no State Legislature or Parliament a member is expected to plead with the other members to respect the National Flag, because every one has respect for the Flag. Therefore an assurance is irrelevant, unnecessary and illogical.

THIRU K. VINAYAKAM : I do not press the cut motion.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. கே. விநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது. மாண்புமிகு திரு. வி.கே. கோதண்டராமன், அவருடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லையாதலால், அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

அவை முன் உள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 8 'மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்' என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,12,11,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** நமது பெருமதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் மிகவும் திறமையாகப் பேசக்கூடியவர்கள் என்பது தெரிந்த விஷயம். அங்கத்தினர்களுடைய குறைகளைக் கூறி வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டதற்கு 'பொதுமக்கள் என்ன நினைப்பார்கள்?' என்று கேட்டு மிகவும் திறமையாகப் பேசி வாயை அடைத்தார்கள். அதே நேரத்தில் அங்கத்தினர்கள் ரயிலிலோ பஸ்ஸிலோ பிரயாணம் செய்கிறபோது

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1968 மார்ச் 25

டிக்கட் வாங்கிப் பிரயாணம் செய்கிறபோது, 'இந்தச் சர்க்கார் இந்தச் சலுகையைக் கூடக் கொடுக்கவில்லையா ?' என்று சர்க்காரைக் குறை கூறக் கூடிய நிலையும் இருக்கிறது. இது போன்ற குறைகள் இருப்பதைச் சிந்தித்துப் பார்த்து அங்கத்தினர்களுக்கு ரயில்வே பாஸ் வாங்கிக் கொடுப்பதற்கு கண்டிப்பாக முயற்சி செய்யவேண்டும், முயற்சி எடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருப்பதால் நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு திரு. கோதண்டராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லையாதலால் அது, அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

அவை முன் உள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 6—'மாநிலச் சட்ட மன்றம்' என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,95,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

பி.ப. 3·00. **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிந்து நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### 6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

#### A. *Statutory Rules and Orders.*

† 114. Notification issued with G.O. Ms. No. 1723, Local Administration, dated the 21st September 1967, regarding the reservation of seats and division of wards in Walajapet Municipality of North Arcot district. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

† 115. Notification issued with G.O. Ms. No. 1711, Local Administration, dated the 20th September 1967, regarding the reservation of seats and division of wards in Colachel Municipality of Kanyakumari district. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

**† Laid on the Table of the House on 23—3—1968.**



1968 மார்ச் 25]

#### B. Reports, Notifications and other papers.

£ 81. A Review on Irrigation in Madras State, 1967–68 (Tamil).

† 82. Speech by Hon. Thiru M. Karunanidhi, Minister for Public Works while moving the Demands for Irrigation Grants, 1968-69 (English and Tamil).

@ 83. Policy Note on the Khadi and Village Industries Board, 1968-69 (English).

@ 84. Policy Note on the Registration Department (Tamil).

% 85. The brochure regarding reorganisation of the Public Works Department (Tamil).

£ Despatched to Members on 22—3—1968.
@ Despatched to Members on 23—3—1968.
% Circulated in the Chamber on 23—3—1968.

APPENDIX I.

[*Vide* answer to Starred question No. 315 at page 10 ..]

*Statement showing the export of Oilseeds from Madras State to Foreign countries as well as to other States Luring the years* 1958-59 *to* 1965-66 (*quantity in tonnes*):—

| Serial number, mode of transport and name of the commodity. | 1958-59. | 1959-60. | 1960-61. | 1961-62. | 1962-63. | 1963-64. | 1964-65. | 1965-66. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| *I. Foreign trade—* | | | | | | | | |
| Groundnut seeds .. | 138 | 1,165 | 22 | 148 | 409 | Nil. | 52 | Nil. |
| Gingelly seeds .. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. |
| Castor seeds .. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. |
| Copra .. .. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. |
| *II Coasting trade—* | | | | | | | | |
| Groundnut seeds .. | N.A. | N.A. | N.A. | 657 | 1,230 | 259 | N.A. | N.A. |
| Gingelly seeds .. | N.A. | N.A. | N.A. | Nil. | Nil. | Nil. | N.A. | N.A. |
| Castor seeds .. | N.A. | N.A. | N.A. | Nil. | Nil. | Nil. | N.A. | N.A. |
| Copra .. | N.A. | N.A. | N.A. | Nil. | Nil. | 3 | N.A. | N A. |
| *III. Railborne—* | | | | | | | | |
| Groundnut seeds .. | N.A. | N.A. | 1,544 | 4,836 | 4,943 | 6,831 | 5,864 | 12,365 |
| Gingelly seeds .. | N.A. | N.A. | N.A. | 984 | 2,459 | 291 | 208 | 90 |
| Castor seeds .. | N.A. | N.A. | N.A. | Nil. | 75 | 60 | 29 | N.A. |
| Copra (coconut) .. | N.A. | N.A. | N.A. | 7,636 | 4,733 | 3,701 | N.A. | N.A. |



*Statement showing the export of edible oils from Madras State to foreign countries as well as to other States during the years* 1958-59 *to* 1965-66. (*quantity* in *tonnes*):—

| Serial number, mode of transport and name of the commodity. | 1958-59. | 1959-60. | 1960-61. | 1961-62. | 1962-63. | 1963-64. | 1964-65. | 1965-66. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| *I. Foreign trade—* | | | | | | | | |
| Groundnut oil .. | 625 | 8,142 | 343 | 443 | 6,314 | 11,157 | 389 | Nil. |
| Gingelly oil .. | 15 | 17 | 2 | Nil. | 1 | 3 | Neg. | Nil. |
| Castor oil .. | 23 | 22 | 1,171 | 704 | 400 | 14 | 3 | 8 |
| Copra oil .. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. |
| *II. Coasting trade—* | | | | | | | | |
| Groundnut oil .. | N.A. | N.A. | N.A. | 25,109 | 26,247 | 21,008 | N.A. | N.A. |
| Gingelly oil .. | N.A. | N.A. | N.A. | 10 | 75 | 29 | N.A. | N.A. |
| Castor oil .. | N.A. | N.A. | N.A. | 2 | 1 | 4 | N.A. | N.A. |
| Copra oil .. | N.A. | N.A. | N.A. | 36 | 58 | 57 | N.A. | N.A. |
| *III. Railborne—* | | | | | | | | |
| Groundnut oil .. | N.A. | N.A. | 25,084 | 25,768 | 35,758 | 25,444 | 11,617 | 18,867 |
| Gingelly oil .. | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. |
| Castor oil .. | N.A. | N.A. | 155 | 149 | 46 | 23 | N.A. | N.A. |
| Copra oil .. | N.A. | N.A. | 13 | 29 | 20 | 15 | 53 | 252 |

NOTE:—(1) Figures for the year 1957-58 are not available. N.A.—Not available. Neg.—Negligible.

(2) Figures of coasting trade and railborne trade relate to inter-State movement within the country.

(அ) & (இ) 1958–59-ம் ஆண்டு முதல் 1965–66-ம் ஆண்டுவரை தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கும், பிற மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்த எண்ணெய் வித்துக்களைக் காட்டும் விவர அறிக்கை :—

| தொடர் எண்ணும் போக்குவரத்து முறையும் பொருட்களின் பெயரும். | 1958–59 | 1959–60 | 1960–61 | 1961–62 | 1962–63 | 1963–64 | 1964–65 | 1965–66 |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | | | | (அளவு டன்களில்) | | | | |
| **1. அயல்நாட்டு வணிகம்—** | | | | | | | | |
| வேர்க்கடலை .. .. | 138 | 1,165 | 22 | 148 | 409 | .. | 52 | .. |
| எள் .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| ஆமணக்கு .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| கொப்பரை .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| **2. கடலோர வணிகம்—** | | | | | | | | |
| வேர்க்கடலை .. .. | விபரம் கிடைக்க வில்லை. | விபரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. | 657 | 1,230 | 259 | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. |
| எள் .. .. | ,, | ,, | ,, | .. | .. | .. | ,, | ,, |
| ஆமணக்கு .. .. | ,, | ,, | ,, | .. | .. | .. | ,, | ,, |
| கொப்பரை .. .. | ,, | ,, | ,, | .. | .. | 3 | ,, | ,, |
| **3. ரயில்மூலம் செய்யும் வணிகம்—** | | | | | | | | |
| வேர்க்கடலை .. .. | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. | 1,544 | 4,836 | 4,943 | 6,831 | 5,864 | 12,365 |
| எள் .. .. | ,, | ,, | விவரம் கிடைக்க வில்லை. | 934 | 2,459 | 291 | 208 | 90 |



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **ஆமணக்கு** .. .. | ,, | ,, | ,, | .. | 75 | 60 | 29 | விவரம் கிடைக்க வில்லை. |
| கொப்பரை (தேங்காய்) .. | ,, | ,, | ,, | 7,636 | 4,733 | 3,701 | விவரம் கிடைக்க வில்லை. | ,, |

1958–59-ம் ஆண்டில் இருந்து 1965–66-ம் ஆண்டுவரை தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கும் பிற மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்ட உபயோகிக்கும் எண்ணெயைக் காட்டும் விவர அறிக்கை :—

| தொடர் எண்ணும், போக்குவரத்து முறையும், பொருட்களின் பெயரும். | 1958–59 | 1959–60 | 1960–61 | 1961–62 | 1962–63 | 1963–64 | 1964–65 | 1965–66 |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | | | | | (அளவு டன்களில்) | | | |
| **1. வெளிநாட்டு வணிகம்—** | | | | | | | | |
| வேர்க்கடலை எண்ணெய். | 625 | 8,142 | 343 | 443 | 6,314 | 11,157 | 389 | |
| நல்லெண்ணெய் .. | 15 | 17 | 2 | .. | 1 | 3 | புறக்கணிக்கக்கூடியது. | .. |
| ஆமணக்கு எண்ணெய் .. | 23 | 22 | 1,171 | 704 | 400 | 14 | 3 | 8 |
| தேங்காய் எண்ணெய் .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| **2. கடலோர வணிகம்—** | | | | | | | | |
| வேர்க்கடலை எண்ணெய் .. | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. | 25,109 | 26,247 | 21,008 | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. |
| நல்லெண்ணெய் .. | ,, | ,, | ,, | 10 | 75 | 29 | ,, | ,, |
| ஆமணக்கு எண்ணெய் .. | ,, | ,, | ,, | 2 | 1 | 4 | ,, | ,, |
| தேங்காய் எண்ணெய் .. | ,, | ,, | .. | 36 | 58 | 57 | ,, | ,, |

| தொடர் எண்ணும் போக்குவரத்து முறையும் பொருட்களின் பெயரும். (1) | 1958-59 (2) | 1959-60 (3) | 1960-61 (4) | 1961-62 (5) | 1962-63 (6) | 1963-64 (7) | 1964-65 (8) | 1965-66 (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | (அளவு டன்களில்) | | | |
| 3. ரயில்மூலம் செய்யும் வணிகம்— | | | | | | | | |
| வேர்க்கடலை எண்ணெய் .. | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. | 25,084 | 25,768 | 35,758 | 25,444 | 11,617 | 18,867 |
| நல்லெண்ணெய் .. | ,, | ,, | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க. வில்லை |
| ஆமணக்கு எண்ணெய் .. | ,, | ,, | 155 | 149 | 46 | 23 | ,, | ,, |
| தேங்காய் எண்ணெய் .. | ,, | ,, | 13 | 29 | 20 | 15 | 53 | 252 |

குறிப்பு.—(1) 1957-58-ம் ஆண்டுக்கான எண்கள் கிடைக்கவில்லை.

(2) கடலோர, ரயில்மூலம் செய்யும் வாணிபத்தின் எண்கள் நாட்டுக்குள் மாநிலங்களுக்கிடையே செய்யும் வணிகத்தைக் குறிக்கும்.



## இணைப்பு II.

[10ம் பக்கத்திலுள்ள வெளிக் குறியிட்ட வினா எண் 316-ன் விடையைக் காண்க.]

1960-61 முதல் 1965-66 வரை தமிழகத்தில் வேர்க்கடலை, எள் பயிரிடப்பட்ட பரப்பளவையும் விளைச்சலையும் காட்டும் விவர அறிக்கை.

| ஆண்டு. | | வேர்க்கடலை. | | எள். | |
|---|---|---|---|---|---|
| | | பரப்பளவு (ஹெக்டாரில்.) | விளைச்சல் (டன்களில்.) | பரப்பளவு (ஹெக்டாரில்.) | விளைச்சல் (டன்களில்.) |
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| 1960-61 | .. | 870,858 | 1,056,980 | 127,765 | 41,780 |
| 1961-62 | .. | 887 633 | 1,082,170 | 110,994 | 35,920 |
| 1962-63 | .. | 944,758 | 1,145,430 | 130,217 | 41,230 |
| 1963-64 | .. | 923,332 | 1 111,051 | 125,200 | 40,000 |
| 1964-65 | .. | 929,400 | 1,112,780 | 125,820 | 40,340 |
| 1965-66 | .. | 918,270 | 911,180 | 111,250 | 35,650 |

குறிப்பு.—வேர்க்கடலையைப் பொறுத்தவரையில் அதன் விளைச்சல் முழு வேர்க்கடலை விளைச்சலைக் குறிக்கின்றது.

1960-61 முதல் 1965-66 வரை சென்னையிலிருந்து வெளிநாடுகளுக்கும் இந்தியாவின் ஏனைய மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்ட வேர்க்கடலை, எள் இவற்றின் அளவைக் காட்டும் விவர அறிக்கை.

| ஆண்டு. | | வெளிநாடுகள். | | ஏனைய மாநிலங்கள். | |
|---|---|---|---|---|---|
| | | வேர்க்கடலை. | எள். | வேர்க்கடலை. | எள். |
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| | | | (குவிண்டாலில்) | (டன்களில்) | |
| 1960-61 | .. | 22 | இல்லை. | 978 | 932 |
| 1961-62 | .. | 148 | இல்லை. | 24,667 | 3,413 |
| 1962-63 | .. | 409 | இல்லை. | 5,377 | 2,559 |
| 1963-64 | .. | இல்லை. | இல்லை. | 6,831 | 292 |
| 1964-65 | .. | 52 | இல்லை. | 5,696 | 149 |
| 1965-66 | .. | (புள்ளி விவரம் கிடைக்கவில்லை.) | (புள்ளி விவரம் கிடைக்கவில்லை.) | 13,113 | (புள்ளி விவரம் கிடைக்கவில்லை). |

1960-61 முதல் 1965-66 வரை இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வேர்க்கடலை, எள் ஆகியவற்றின் அளவைக் காட்டும் விவர அறிக்கை (டன்களில்.)

| ஆண்டு. | | | | வேர்க்கடலை. | எள். |
|---|---|---|---|---|---|
| (1) | | | | (2) | (3) |
| 1960-61 | .. | .. | .. | 3,183 | 31,943 |
| 1961-62 | .. | .. | .. | 1,991 | 25,872 |
| 1962-63 | .. | .. | .. | 8,740 | 20,746 |
| 1963-64 | .. | .. | .. | 10,820 | 38,692 |
| 1964-65 | .. | .. | .. | 3,443 | 23,181 |
| 1965-66 | .. | .. | .. | 1,947 | (புள்ளி விவரம் கிடைக்க வில்லை.) |

1960-61 முதல் 1964-65 வரையில் வெளிநாடுகளிலிருந்து வேர்க்கடலையும் எள்ளும் இறக்குமதி செய்யப்படவில்லை. 1965-66 ஆண்டுக்கான புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை.

*Statement showing the area and production of groundnut and gingelly in Madras State from 1960-61 to 1965-66.*

| Year. | | Groundnut. | | Gingelly. | |
|---|---|---|---|---|---|
| | | Area in hectares. | Production in tonnes. | Area in hectares. | Production in tonnes. |
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| 1960–61 | .. | 870,858 | 1,056,980 | 127,765 | 41,780 |
| 1961–62 | .. | 887,633 | 1,082,170 | 110,994 | 35,920 |
| 1962–63 | .. | 944,758 | 1,145,430 | 130,217 | 41,230 |
| 1963–64 | .. | 923,332 | 1,111,051 | 125,200 | 40,000 |
| 1964–65 | .. | 929,400 | 1,112,780 | 125,820 | 40,340 |
| 1965–66 | .. | 918,270 | 911,180 | 111,250 | 35,650 |

NOTE—The producation of groundnut is in terms of nuts in shell.

*Statement showing the export of groundnut and gingelly seeds from Madras to foreign Countries and to other State in India for the years from 1960-61 to 1965-66.*

| Year. | | Foreign Countries. | | Other States. | |
|---|---|---|---|---|---|
| | | Grouudnut. | Gingelly. | Groundnut. | Gingelly. |
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| | | (QUANTITY IN QUINTALS.) | | (QUANTITY IN TONNES) | |
| 1960–61 | .. | 22 | Nil. | 978 | 932 |
| 1961–62 | .. | 148 | Nil. | 24,667 | 3,413 |
| 1962–63 | .. | 409 | Nil. | 5,377 | 2,559 |
| 1963–64 | .. | Nil. | Nil. | 6,831 | 292 |
| 1964–65 | .. | 52 | Nil. | 5,696 | 149 |
| 1965–66 | .. | N.A. | N.A. | 13,113 | N.A. |

N.A.=Not available.

*Statement showing the import of groundnuts and gingelly seeds from other States in India from 1960-61 to 1965-66 (in tonnes.)*

| Year. | | Groundnut. | Gingelly. |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 1960–61 | .. .. .. | 3,183 | 31,943 |
| 1961–62 | .. .. .. | 1,991 | 25,872 |
| 1962–63 | .. .. .. | 8,740 | 20,746 |
| 1963–64 | .. .. .. | 10,820 | 38,692 |
| 1964–65 | .. .. .. | 3,443 | 23,181 |
| 1965–66 | .. .. .. | 1,947 | N.A. |

N.A.=Not available.

There are no imports of groundnut and gingelly seeds for the period from 1960-61 to 1964-65 from the Foreign countries figures for 1965–66 are not available.





## இணைப்பு III.

[40-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]

### சென்னை பால்பண்ணை—பால் வழங்கும் திட்டம்—கொள்கை

### விளக்கக் குறிப்பு

### 1. சென்னை பால் பண்ணைத் திட்டம்

சென்னை மாநகரில் வாழும் மக்களுக்கு நல்ல தரமுள்ள பாலை வழங்கும் நோக்கத்துடன் சென்னை பால் பண்ணை பால் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. சென்னை மாநகரிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மாதவரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இத்திட்டம் நிறுவப்பட்டது. பால் பண்ணைக்கான நிலம், கட்டடங்கள், இயந்திரக் கருவிகள், பாலைச் சேகரித்து வழங்குவதற்கான வண்டிகள் உட்பட கால்நடைப் பண்ணையுடன் கூடிய நவீன வசதிகள் கொண்ட பால் பண்ணை ஒன்றை அமைப்பதற்கு ரூ. 224.70 இலட்சம் செலவாகியது. சென்னைமாநகரம் முழுவதிலும் அன்றாடம் இரு முறை பால் வழங்கும் நிலையங்களின் வாயிலாக மக்களுக்குப் பால் வழங்கும் பணியை இப்பால் பண்ணை மேற்கொண்டுள்ளது. மேலும் மருத்துவமனை போன்ற நிறுவனங்களுக்கும் இந்த பால் பண்ணை பால் வழங்குகிறது. மத்திய பால் பண்ணையைத் தவிர, இங்கு கால்நடைப் பால் பண்ணை ஒன்றும் உள்ளது. இங்கு கால்நடைகளை நியாயமான செலவில் பேணி வருவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரப்படுகிறது.

### 2. மாதவரத்திலுள்ள பால் பண்ணைத் திட்டம்.

(i) இப்பண்ணையில் 4,000 கறவை மாடுகளுக்கு இடவசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இத்துடன் பால் வற்றிய 1,000 மாடுகளுக்கும் மற்றும் கன்றுகளுக்கும் இடம் அளிக்கப் பட்டுள்ளது இப்பண்ணை எட்டு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் 500 மாடுகள் தங்க வசதி யுள்ளது. முதல் பிரிவு 1959 நவம்பர் திங்களில் முடிவு பெற்றது. ஏனைய பிரிவுகள், ஒவ்வொரு தொகுதியாக 1963 மார்ச் திங்களுக்குள் முடிக்கப் பெற்றன. உரிமைதாரர்கள் ( Licensees ) தங்குவதற்குக் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளன. எட்டு படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்றும் இக்குடியிருப்புக்குள் அமைந்துள்ளது. இதை மருத்துவத் துறையே நிர்வகித்து வருகிறது. முழு நேர மருத்துவர் ஒருவர் அன்றாட மருத்துவப் பணியைக்கவனித்துக் கொள்கிறார். இலவசமாக மாடுகளுக்கு சிகிச்சையளிப்பதும் மாடுகள் இனப் பெருக்க வசதிகளும் இப்பண்ணைக்குள்ளேயே செய்து கொடுக்கப் பட்டுள்ளன. இக்குடியிருப்பில் கால்நடை மருத்துவமனை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இத்துடன் ஒவ்வொரு பிரிவிற்கும் நியமிக்கப்பட்ட கால்நடை மருத்துவரின் பணியையும் உரிமை

தாரர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இனப்பெருக்க வசதியை அளிப்பதற்காக பண்ணைக்குள் கால்நடை வளர்ப்புத் துறை நிர்வகிக்கும் மையக் கிராம நிலையம் ( Key village centre) ஒன்றும் அமைந்துள்ளது.

பால் மரத்துப்போன கால்நடைகளைப் பேணி வருவது எப்பொழுதுமே சிக்கல் நிறைந்ததாகும். இப் பண்ணைக்குள் 100 மாடுகள் தங்கக்கூடிய இட வசதியுடன் பால் வற்றிய மாடுகளுக்கு மீட்புப் பண்ணை ( salvage farm ) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 1961-ல் சோதனை அடிப்படையில் கன்று வளர்க்கும் பிரிவு ஒன்று இப்பண்ணையில் நிறுவப்பட்டது. தற்போதுள்ளவற்றிற்குப் பதிலாக அல்லது அவற்றிற்குக் கூடுதலாக நல்ல கன்றுகள் வளர்ப்பதே இதன் நோக்கமாகும். கன்று வளர்ப்புத் திட்டத்தின்படி உரிமம் பெற்றவர்களிடமிருந்து உயர் இனக் கன்றுகளைப் பெற்று அவற்றை அரசாங்கச் செலவில் வளர்த்து, அவற்றைப் பேணிப் பாதுகாத்ததற்கு ஆகும் செலவை, விலையாக வைத்து, உரிமம் பெற்றவர்களுக்கே அவை விற்பனை செய்யப்பட்டன. இத்தகைய கன்றுகளை மாட்டுத்தொழுவங்களிலேயே கட்டி வைத்துத் தீவனம் போடப்படுவதால் இவற்றை வளர்த்து வருவதற்கான செலவு இப்பண்ணையில் அதிகமாவது தவிர்க்க முடியாததாகும். எனவே, உரிமம் பெற்றவர்கள் அக்கன்றுகளை சந்தை விலைக்குப் பெறுவது சாத்தியமாக இருப்பதற்காக உரிமம் பெற்றவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு கன்று ஒன்றுக்கு ரூ. 10 வீதம் உதவித் தொகை அனுமதிக்கப்படுகிறது. இத்தகைய சலுகைகள் அனுமதிக்கப்பட்ட பிறகும் உரிமைதாரர்கள் இவ்வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளத் தயங்கினார்கள். இதனால் இத்திட்டம் கைவிடப்பட்டது. 1967-68-ல் ஆண்டுக்கு முன்னரே சேர்த்துக் கொள்ளப்பட்ட கன்றுகளுக்கு மட்டுமே கன்று உதவி உதவி தொகைக் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. எனினும், இத்திட்டத்தின் கீழ், புதிதாக கன்றுகளைச் சேர்த்துக் கொள்ளுவது நிறுத்தி விடப்பட்டது.

(ii) இத் துறையைச் சேர்ந்த உரிமைகாரர்களுக்குக் கால்நடைத் தீவனம் கிடைக்க வகை செய்யப்படுகிறது. வாரந்தோறும் அவர்களது பாலுக்காக வழங்கப்படும் விலையில் அச்செலவு சரிக்கட்டப்படுகிறது. தீவனத்தைப் பெருமளவில் பெறுவதற்காக ஒப்பந்தங்கள் வரவழைக்கப்படுகின்றன. கோதுமைத் தவிடு போன்ற விலைக்கட்டுப்பாட்டுக்குட்பட்ட பண்டங்கள் உணவு வாரங்கல் துறை வழங்கும் பங்குவீத அடிப்படையில் கோதுமை ஆலைகளிலிருந்து ஒவ்வொரு திங்களும் பெறப்படுகின்றன.

(iii) கால்நடைகளை நல்லமுறையில் பேணி வருவதற்குப் பசுந்தழை போதிய அளவு கிடைப்பது இன்றியமையாததாகும். பிண்ணாக்கு, தவிடு போன்ற பொருள்கள் கிடைத்தாலும் குறைந்த அளவு புல், தழை, வைக்கோல் போன்றவையும் கால்நடைகளுக்குத் தேவைப்படும். பிண்ணாக்கு போன்றவற்றிற்குப் பதிலாகப் புல், தழை போன்ற தீவனங்களைக் கால் நடைகளுக்குக் கொடுப்பதால், கால்நடை வளர்ப்புச் செலவு குறையும். கிட்டத்தட்ட மூன்று மைல் தொலைவிலுள்ள கொடுங்கையூர் மாநகராட்சி கழிவு நீர்ப் பண்ணையிலிருந்து தேவையான புல் கிடைக்கிறது. அது மட்டுமன்றி, பால் பண்ணைக்குள்ளேயே 79 ஏக்கர் பரப்பளவில் துறையினர் புல் வளர்க்கும் பணியை மேற்கொண்டுள்ளனர். பிண்ணாக்கு முதலியவை போதுமான அளவு கிடைப்பதில்லை. எனவே, மிகுதியான அளவில் தீவனம் கிடைக்கச் செய்வதற்காக புல் வளர்க்கும் பரப்பளவை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. துறையினர் தங்களது பிரிவுகளிலிருந்து கிடைக்கும் கழிவு நீரையும் எருவையும் கொண்டே பெருமளவில் புல் வளர்த்தனர். புல் வளர்த்தலை விரிவுபடுத்துவதற்காக போதுமான அளவுக்கு நீர் கிடைக்காததால் பாசன வசதி செய்வதற்காக புதிய கிணறுகள் தோண்டப்படுகின்றன தீவனப் புல்வகை அதிகப் பரப்பளவில் பயிரிடப்படுவதைச் சாத்தியமாக்குவதே இதன் நோக்கமாகும்.





பண்ணைக்குள் பனை மரங்கள் ஏராளமாக வளர்ந்திருக்கின்றன. அவை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவு நிறுவனத்திற்கு மரம் ஒன்றுக்கு 50 காசு வீதம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. பழ படுவதைச் சாத்தியமாக்குவதே இதன் நோக்கமாகும்.

குறைந்த செலவில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கென 12—7—1966 முதல் இப்பண்ணையில் கால்நடைக் கலவைத் தீவனம் தயாரிக்கப்படுகின்றது. அனுபவ அடிப்படையில் சில விகிதாசாரங்களில் பிண்ணாக்கு போன்றவை கலக்கப்படுகின்றன. பண்ணையில் உள்ளவர்களும், கிராமத்திலுள்ள கால்நடை வளர்ப்பவர்களும் இந்தத் தீவனக் கலவையை விரும்பிக் கேட்கின்றனர். இதற்கென, சென்னை பால் வழங்கு சங்கத்திடமும், வேலூர் பால் வழங்கும் சங்கத்திடமும் உள்ள தீவனக் கலவைப் பிரிவுகளை பால் பண்ணைத் திட்டம் எடுத்துக்கொண்டு பயன்படுத்தி வருகிறது. இவ்விரு நிலையங்களும் பால் பண்ணையில் செயல்பட்டு வருகின்றன.

(v) கால்நடை கலவைத் தீவனம் தயாரித்து வழங்குவதற்காக மாதவரத்தில் கால்நடைத் தீவனப் பிரிவு ஒன்றை தொடக்கும் திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. உணவு உதவும் உலக நாடுகள் திட்டத்தின் மூலம் நிதி உதவி பெறும் இத் திட்டத்தின் கீழ் மதுரைப் பிரிவுக்கும் தனித் தனியாக 2,500 மெட்ரிக் டன்கள் அளவு தானியம் மூன்றாண்டுக் கால அளவுக்கு வழங்கப்படும் இத் தீவனப் பிரிவுக்குத் தேவையான தானியங்களில் 1/3 பங்கு இதன் மூலம் சரிக்கட்டப்படும். தேவைப்படும் எஞ்சிய 2/3 பங்கு தானியங்கள் அரசாங்கச் செலவில் உள்ளூரிலேயே வாங்கப்பட வேண்டும். உணவு உதவும் உலக நாடுகள் திட்டம் தானியங்களை வழங்கத் தொடங்கிவிட்டது. இத் திட்டத்திற்காக வாங்கப்பட வேண்டிய யந்திரம் குறித்த

விவரம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. உணவு உதவும் உலக நாடுகள் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட தானியங்களும் அரசாங்கம் அளிக்க வேண்டியுள்ள 2/3 பங்கு தானியங்களும் மும்முரக் கால் நடை வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளில் முழுவது மாகப் பயன்படுத்தப்பட வேண்டும். குறிப்பிட்ட ஒரு பகுதி யில் கால்நடை வளர்ப்பில் முழு கவனம் செலுத்தி பால் உற்பத்தி யைப் பெருக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

(vi) பண்ணையில் உள்ள உரியதாரர்கள் ஒவ்வொருவரும் குறைந்தது 10 மாடுகளையாவது வைத்துவர வேண்டும். 10, 20 கறவை மாடுகள் அடங்கிய பிரிவுகளுக்கு உரிமங்கள் வழங்கப்படு கின்றன. ஒவ்வொரு 10 கறவை மாடுகளுக்கும் 3 பால்வற்றிய மாடுகளையும் 3 கிடேரிக் கன்றுகளையும் வைத்துவர அவர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் அனுமதி வழங்கப்படுகிறது. மாடு ஒன்றுக்கு அன்றாடம் உரிமம் வழங்கும் கட்டணமாக 2 காசும் இட வசதிக்காக 13 காசும் வசூலிக்கப்படுகின்றது. ஓராண்டுக்கு மேலான கிடாரிக் கன்று குறித்து அது கன்று ஈனும் வரை நாள் ஒன்றுக்கு 3 காசு விதம் வசூலிக்கப்படுகின்றது. ஒரு வயதுக்கும் குறைந்த வய துடைய கன்றுகள் குறித்து கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. உரிமங்கள் பெறுவோர் பண்ணையில் குடியிருக்கும் இடத்திற்காகத் தனியாகக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது.

(vii) பண்ணையில் பாலுக்காகக் கொடுக்கப்படும் விலை.

| (1) | கோடையில் (எப்ரல் முதல் அக்டோபர் வரை.) (2) ரூ. | உபரியாகக் கிடைக்கும் போது (நவம்பர் முதல் மார்ச்சு வரை) (3) ரூ. |
|---|---|---|
| எருமைப்பால்— | | |
| 5·5 சதவீதம் கொழுப்பு கலந்தது. 9·0 சதவீதம் கொழுப்பு நீங்கிய— பிற பொருள்கள். | 0·96 | 0·92 |
| 6·0 சதவீதம் கொழுப்பு கலந்தது. 9·0 சதவீதம் கொழுப்பு நீங்கிய— பிற பொருள்கள். | 0·98 | 0·94 |
| 6·5 சதவீதம் கொழுப்பு கலந்தது. 9·0 சதவீதம் கொழுப்பு நீங்கிய— பிற பொருள்கள். | 1·00 | 0·96 |
| பசும்பால்— | | |
| 3·5 சதவீதம் கொழுப்பு கலந்தது. 8·5 சதவீதம் கொழுப்பு நீங்கிய— பிற பொருள்கள். | 0·82 | 0·82 |
| 4·0 சதவீதம் கொழுப்பு கலந்தது. 8·5 சதவீதம் கொழுப்பு நீங்கிய— பிற பொருள்கள். | 0·84 | 0·84 |
| 4·5 சதவீதம் கொழுப்பு கலந்தது. 8·5 சதவீதம் கொழுப்பு நீங்கிய— பிற பொருள்கள். | 0·86 | 0·86 |



உரிமம் பெறுபவர் ஒருவர் குறைந்த அளவு 5½ லிட்டர் பசும் பாலையும் 4 லிட்டர் எருமைப் பாலையும் இடைவிடாமல் கொடுத்து வந்தால், அவருக்கு லிட்டர் ஒன்றுக்கு 2 காசு பூரிப்பூதியம் (Bouns) அனுமதிக்கப்படுகின்றது. இந்த அளவு மாடுகளைப் பண்ணையில் சேர்த்துக் கொள்வது குறித்து நிபந்தனைகளில் விதிக்கப்பட்டதாகும். உரிமம் பெற்றுள்ளவர்கள் இந்த ஆண்டில் சராசரி நாள் ஒன்றுக்கு 2,012 லிட்டர் பால் இப்பண்ணைக்கு வழங்கு கின்றனர்.

(viii) இப்பண்ணையில் குடியேறும் உரிமைதாரர்கள் குறிப் பிட்ட குறைந்த அளவு கால்நடைகளையாவது வைத்துப் பேணி வர வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் இத் திட்டத்திற்குத் தேவையான பாலைத் தொடர்ந்து வழங்கிவர முடியும். அப்பொழு துதான் அவர்களும் கணிசமான அளவுக்குப் பொருள் ஈட்ட முடியும். அரசாங்கம் இந்த உரிமைதாரர்களிடமிருந்து பாலைக் குறிப்பிட்ட விலையில் வாங்கிக் கொள்கின்றது. எனவே கால்நடைத் தீவனத்தின் விலை ஏற்றத்திஞல் அவர்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்வது அவசியமாகும். எனவே 1965, ஆகஸ்டில் எந்த விலைக்குத் தீவனங்கள் வழங்கப்பட்டனவோ அதே விலையி லேயே கால்நடைத் தீவனங்கள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டு மென அரசாங்கம் கட்டளையிட்டுள்ளது. சந்தை விலையில் ஏற்படும் விலையேற்றம் குறித்து அரசாங்கம் உதவித்தொகை வழங்குகிறது.

(ix) 1963–64-ல் இப்பண்ணையில் முழு அளவுக்கு மாடுகள் இருந்தன. 1964 டிசம்பரிலும், 1965 ஜனவரியிலும், கோமாரி நோய் பெருவாரியாக ஏற்பட்டதன் விளைவாக ஏராளமான மாடுகள் மாண்டன. அதனுல் பல உரிமைதாரர்களுக்கு இழப்பு ஏற்பட்டது. எனவே மாடுகள் இழந்ததால் பெரிதும் பாதிக்கப் பட்ட உரிமைதாரர்களுக்குச் சில சலுகைகள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு இடவசதி குறித்து அவர்களிடமிருந்து வாடகை வசூலிப்பதை நிறுத்துதல், அவர்களுக்கு நடுத்தரக் காலக் கடன் கள் வழங்குதல், அவர்கள் அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய கடன்கள் சிலவற்றை வசூலிப்பதை நிறுத்துதல், அவர்களிட மிருந்து கன்று வளர்ப்பதற்கான கட்டணங்கள் வசூலிப்பதை நிறுத்தி வைத்தல், எருமைகளுக்குக் கூடுதலாக 250 பகல் வற்றிய பசுக்களுக்காக மீட்புப்பண்ணை வசதிகளை ஏற்படுத்துதல் ஆகிய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

(x) சென்னை மாநகரில் பாலின் விலை உயர்ந்துவிட்டதால் பால் பண்ணையில் கொடுக்கப்படும் விலையைவிட அதிக விலைக்குப் பால் விற்கலாமென்ற காரணத்தால் இப்பண்ணையிலிருந்து உரிம தாரர்கள் தொடர்ந்து பெருமளவில் வெளியேறினர். அவர்கள் விரைந்து வெளியே செல்வதற்கு கோமாரி நோய் கண்டது மற்றொரு காரணமாகும். ரூபாய் ஒரு கோடிக்குமேல் செலவு செய்து அமைக்கப்பட்ட வசதிகளை முழுதும் பயன்படுத்தும் நோக்கத்துடனும், அறிவியல் முறையில் பால் பண்ணை நடத்து

வதன் நன்மைகளைச் செய்முறையில் விளக்கிக் காட்டுவதற்காகவும் அப் பண்ணையில் அரசாங்கம் பால்பண்ணை ஒன்றை நிறுவ முடிவு செய்துள்ளது. இங்கு 4,000 கறவை மாடுகளை வைத்துப் பேணி வரலாம். இத்திட்டத்திற்கான குறைந்த அளவு பால் வழங்குவதுடன் சரியான வளர்ப்பு முறைகளையும் கால்நடை வளர்ப்பின் பிற சிறப்பான முறைகளையும் பின்பற்றி சிறந்த இனக் கால்நடைகளைப் பெருக்குவதற்கு இப்பண்ணை பயன்படும். அரசாங்கப் பால் பண்ணை முதற்கண் 500 கறவை மாடுகளையும், 150 பால் மரத்த மாடுகளையும் கொண்டு 1965 டிசம்பரில் தொடங்கப்பட்டது. இம்மாடுகள் மாநிலத்திற்குள்ளேயும் மாநிலத்திற்கு வெளியிலிருந்தும் வாங்கப்பட்டன. கன்றுகள் வளர்ப்புப் பிரிவிலிருந்து உரிய வயதடைந்த கன்றுகள் அரசாங்க பால் பண்ணைக்கு மாற்றப்பட்டன. 1967-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ந் தேதியன்றைய நிலவரப்படி அரசாங்கப் பால் பண்ணையில் 504 மாடுகள் இருந்தன. நாளடைவில் 4,000 மாடுகளைக் கொண்ட பண்ணையாக இதை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டாவது பிரிவுக்காக மாடுகளை வாங்கும் பணி இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு 1968-69-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து வாங்கப்படும். தற்போது அரசாங்கப் பால்பண்ணையில் சராசரி நாள் ஒன்றுக்கு 2,300 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது.

### 3. கிராம பால் உற்பத்தி.

(i) கோமாரி நோய் பரவிய பின்னர் இப் பண்ணையில் பால் உற்பத்தி மிகவும் குறைந்துவிட்டது. நோய் பரவுவதற்கு முன் மொத்தம் சேகரிக்கப்பட்ட பாலில் பாதி அளவு செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய அண்டை மாவட்டங்களிலுள்ள கிராமங்களிலிருந்து சேகரிக்கப்பட்டது. செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரைப் பகுதி ஆகிய இடங்களிலிருந்து முக்கியமாகப் பால் சேகரிக்கப்படுகின்றது. பண்ணையில் பால் உற்பத்தி குன்றிய காரணத்தினால், இம்மாவட்டங்களில் பால் வாங்குதல் விரிவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் (ஈரோட்டிலுள்ள பால் பண்ணைக்குக் கூடுதலாக) வேலூருக்கு அருகிலுள்ள சாத்துவச்சேரியிலும், வாணியம்பாடியிலும். குளிர்ப்பதன பொறிகள் நிறுவப்பட்டன பாலுச்செட்டிச்சத்திரம், வாலாஜாபாத் ஆகிய இடங்களில் குளிர்ப்பதன நிலையங்கள் அமைக்கப்பட்டன. தாரமங்கலத்திலும், திண்டிவனத்திலும், விழுப்புரத்திலும், நாகப்பட்டினத்திலுள்ள வேலிப்பாளையத்திலும், மாயூரத்திலுள்ள கொரநாட்டிலும், பண்ருட்டியிலும் குளிர்ப்பதன நிலையங்கள் நிறுவப்பட்டன. மாடுகளை வாங்குவதற்காக குறுகிய கால கடன்களும் நடுத்தரக் காலக் கடன்களும் வழங்கப்பட்டன. 1967-ம் ஆண்டு எப்ரல் 1-ந் தேதி முதல் டிசம்பர் 31-ந் தேதி வரையில் உரிமைதாரர்களுக்கு ரூ. 68,200 கடனுதவி வழங்கப்பட்டது. கால்நடை உரிமைதாரர்கள் அவற்றை அறிவியல்





முறைக்கேற்ப பேணி வருவதற்கு உதவி புரியவும் அவர்களுக்குத் தக்க ஆலோசனை கூறவும் பால்பண்ணை பிரிவுப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். குறிப்பாக இனப் பெருக்கத்திற்கு கால்நடை வளர்ப்புத் துறை செய்து தரும் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் உதவுவதற்கும் இப்பணியாளர் நியமிக்கப்பட்டனர். பாலைத் தரங்குறையாது வழங்குவதற்கும் சுகாதார முறையில் பால் உற்பத்தி செய்வதற்கும் விரிவுப் பணியாளர் உதவுகின்றனர். செங்கற்பட்டு, வட ஆர்க்காடு சாவூர், மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் சேகரிக்கப்படும் பாலை தொடக்க வேலையாகக் குளிரவைத்து அல்லது பாஸ்டர் முறையில் பதப்படுத்தி பால் வண்டிகளில் சென்னைக்கு எடுத்து வருகிறார்கள். உபரி பால் மட்டுமே சேகரிக்கப்பட்டு நகர்ப்புறங்களுக்கு அனுப்பப்படுகிறது. இதற்காகப் பால் உற்பத்தி வாய்ப்புகள் மதிப்பிடப்படுகின்றன.

(ii) பால் வழங்கு சங்கங்களும் அரசாங்கப் பால் வழங்கு திட்டத்தினரும் கிராமச் சங்கங்களுக்கு அளிக்கும் விலை அந்தந்த இடத்திற்கேற்ப மாறுபடுகிறது. பால் பண்ணையில் எருமைப் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 1 ரூபாய் வீதமும் பசும் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 86 காசு வீதமும் அண்மைக் காலம் வரையில் வழங்கப்பட்டு வந்தது. சென்னைப் பால் பண்ணைத் திட்டத்திற்குத் துணைப் பிரிவாக இயங்குவதும் பாஸ்டர் பக்குவ முறைப் பொறி அமைந்துள்ளதுமான ஈரோட்டுப் பகுதியிலும் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 78 காசு கொடுக்கப்படுகிறது. தஞ்சாவூரிலும் இதே விலை கொடுக்கப்படுகிறது. வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு செங்கற்பட்டு மாவட்டங்களில் எருமைப் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 80 காசு வீதமும் பசும் பால் லிட்டர் ஒன்றுக்கு 72 காசு வீதமும் கொடுக்கப்படுகிறது. மதுரை பால் பண்ணைத் திட்டத்தில் லிட்டர் ஒன்றுக்கு 80 காசு வீதம் கொடுத்துப் பால் வாங்கப்படுகிறது.

(iii) பால் உற்பத்திக்கான வாய்ப்பு உள்ளவையும் பாலைச் சேகரிப்பதற்கான உபரி பால் குறைந்த விலையில் கிடைக்கக்கூடியவையுமான கிராமப் பகுதிகளில் ஆய்வு நடத்தியதன் அடிப்படையிலேயே பால் பண்ணைகள், குளிர்ப்பதன நிலையங்கள், பெருமளவில் பாலைக் குளிரச் செய்யும் நிலையங்கள் ஆகியவை குறித்த திட்டங்கள் வகுக்கப்பட்டன. நவீன பால் குளிர்ப்பதன நிலையங்களையும் பால் பண்ணை நிலையங்களையும் நிறுவியுள்ளதனால் பால் உற்பத்தியைப் பெருக்குதவற்கு பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கமளிக்கப்படுகிறது. மேலும் நிலையான துணை வருவாய் உள்ளது. மேலும் நிலையான துணை வருவாய் கிடைக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

(iv) அந்தந்தப் பகுதிகளில் கால்நடைகளைப் பெருக்குவதற்கு வகை செய்யும் நோக்குடனேயே கறவை மாடுகளை வாங்குவதற்குக்

கடன் வழங்கப்படுகிறது. கிராமப் பகுதிகளில் உள்ள குடியான வர்கள் பால்பண்ணை நடத்துவதைத் தங்கள் முக்கிய தொழிலுடன் துணைத் தொழிலாக மேற்கொண்டால் மட்டுமே குறைந்த கிராமச் செலவிலிருந்து நலன்கள் கிடைக்கும். கடன் வாங்குவோர் தாங்கள் வாங்கிய மாடுகளைப் பால் வற்றிய காலத்தில் கடன்களுக் கென விற்றுவிடாமல் பாதுகாப்புடன் கன்றுகளையும் வளர்க்க வேண்டும். பால் கறவை முடிந்தவுடன் பெரும்பாலும் மாடுகள் விற்றுவிடப்படுகின்றன. எனவே அளிக்கப்படும் கடன் உதவியால் கறவைக் காலத்திற்கு, அதாவது 7 முதல் 8 திங்கள் வரையில் உள்ள கால அளவிற்குத்தான் நீடிக்கின்றது. இயல்பான பால் உற்பத்தி யின் அளவை நிலையாகப் பேணி வருவதற்கு ஒவ்வோர் ஆண்டும் கடன் வழங்க வேண்டியுள்ளது. நிறையப் பால் வழங்கும் உயர் இன மாடுகளை வாங்குவதற்கு நடுத்தரக் காலக் கடனும் வழங்கப் படுகிறது.

## 4. பால் வழங்கல்.

கிராமப்புறங்களிலிருந்தும் பால் பண்ணையிலிருந்தும் சேகரிக் கப்படும் பால் மாதவரம், மத்திய பால் பண்ணைக்குக் கொண்டு செல்லப்படுகிறது. அங்கு பாஸ்டர் முறையில் பக்குவப்படுத்தப் பட்டு சென்னை மாநகரில் வாழும் குடிமக்களுக்கு நகரிலுள்ள பல பணி மனைகள் மூலமாகவும் வழங்கப்படுகிறது. அன்றாடம் இரண்டு முறை குறிப்பிட்ட நேரத்தில் பால் வழங்கப்படுகிறது. மருத்துவ மனை போன்றவற்றிற்கு மொத்தமாகவும் பால் வழங்கப் படுகிறது.

பால் பண்ணைத் திட்டத்திலிருந்து பொதுமக்களுக்குப் பால் வழங்கப்படுவதற்காக சென்னை மாநகரின் பல வட்டாரங்களில் 77 பணி மனைகள் தற்போது உள்ளன.

## பொது.

மாதவரம் மத்திய பால் பண்ணை 1965–66-ல் நாள் ஒன்றுக்கு 21,700 லிட்டர் பால் உற்பத்தி செய்தது. 1966–67-ல் இந்த அளவு 25,800 ஆக அதிகரித்தது. நடப்பாண்டில், இந்த அளவு 37,800 லிட்டராக அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக 1965-66 உற்பத்தியைவிட 1967-68-ல் உற்பத்தி 70 சத விதம் அதிக ரித்துள்ளதைக் காணலாம். 1967-68-ல் இப் பால் பண்ணை வழங்கிய பாலின் விற்பனை விலை கீழ்க்கண்டவாறாகும்:—

### பால் சில்லரை விற்பனை விலை.

| | லிட்டர் ஒன்றுக்கு. | |
|---|---|---|
| | ரூ. | காசு. |
| எருமைப்பால் | 1 | 24 |
| பசும்பால் | 1 | 04 |
| பதமான பால் | 1 | 00 |



வணிகர்கள் அல்லாத தனிப்பட்டவர்களுக்கு மொத்தமாக வழங் கப்படும் பால், வணிகர்களுக்கு வழங்கப்படும் பால், தனிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு வழங்கப்படும் பால் ஆகியவற்றின் பாலின் விலை வேறுபடுகிறது. இவை குறித்து தனிப்பட்ட முறையில் செய்யப் படவேண்டிய ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டு இவற்றின் விலை முடிவு செய்யப்படுகிறது.

## 5. மதுரை பால் பாதுகாப்புத் திட்டம்.

(i) யூனிசெஃப் (UNICE F ) நிறுவன உதவியுடன் மதுரை பால் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இத் திட்டத்திற்கு மொத்தச் செலவு ரூ. 114 லட்சமாகும். இதில் யூனிசெஃப் நிறு வனம் வழங்கிய பொறிகள் முதலானவற்றின் மதிப்பாகிய ரூ. 33 லட்சமும் அடங்கும். 50,000 லிட்டர் பாலைப் பதப்படுத்தக்கூடிய பொறி ஒன்று முதற்கண் இங்கு நிறுவப்பட்டுள்ளது பின்னர் இந்த அளவினை விரிவுபடுத்துவதற்கு இதில் வசதியுள்ளது. கிராமப் பகுதிகளிலிருந்து பாலைச் சேகரித்து தலைமைப் பால் பண்ணைக்கு பால் வழங்குவதை எளிதாக்கும் பொருட்டு தற்போது விருதுநகரிலும் ஸ்ரீவில்லிப்புத்தூரிலும் திண்டுக்கல்லிலும் செயல் பட்டு வரும் குளிர்ப்பதன நிலையங்களோடு மேலும் பல இடங்களில் குளிர்ப்பதன நிலையங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ii) யூனிசெஃப் உதவித் திட்டத்தின் முக்கியக்கூறு குறைந்த கொழுப்புச் சத்துள்ள பால் மலிவு விலையில் வழங்கப்படுவதாகும். யூனிசெஃப் நிறுவனத்திடமிருந்து மானியமாகப் பெற்ற பாற் பண்ணைப் பொறிகள், கருவிகள் ஆகியவற்றின் மதிப்பைப்போல் 1½ மடங்குத் தொகை, மலிவான விலைக்குப் பால் வழங்குவதற்காக அந்த நிறுவனத்தால் உதவித் தொகையாக வழங்கப்படுகின்றது. குறைந்த வருமானத் தொகுதியினரின் உடல் நலத்திற்காக குறைந்த கொழுப்புச் சத்துள்ள பால் வழங்கப்படுகிறது. உதவித் தொகை 10 ஆண்டுக்கால அளவிற்கு வழங்கப்படும். லிட்டர் ஒன்றுக்கு 10 காசு விதம் குறைந்த விலையில் இந்தப் பால் விற்கப்படும். இந் நிலையம் இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி அவர்களால் 7—1—1967-ல் தொடங்கி வைக்கப் பட்டது. பால் பண்ணைத் திட்டத்தை 11—6—1967-ந் தேதி அன்று முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

(iii) மதுரையில் இந்த தலைமைப் பால் பண்ணை செயல்படத் தொடங்கியதிலிருந்து கிராமப் பகுதிகளிலிருந்து பாலைச் சேகரிக் கும் பணி முனைந்து செய்யப்பட்டது. ஸ்ரீவில்லிபுத்தூரிலும் விருது நகரிலும் திண்டுக்கல்லிலும் உள்ள குளிர்ப்பதன நிலையங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் பால் சேகரிக்கும் வேலை மும்முரப்படுத்தப் பட்டதனால் பால் ஏராளமாகக் கிடைக்கிறது. சேகரிக்கப்படும் பால் குளிர்ப்பதன நிலையங்களில் முதலில் பக்குவப்படுத்தப்பட்டு தலைமைப் பால் பண்ணைக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

மதுரையில் பால் விற்பனை 11—6—1967 அன்று தொடங்கப்பட்டது. பொதுமக்களின் தேவையை நிறைவேற்றுவதற்காக நகரின் பல் வேறு பகுதிகளிலும் 32 பணிமனைகள் நிறுவப்பட்டுள்ளன. தெரிந் தெடுக்கப்பட்ட குறைந்த வருவாய் தொகுதியினருக்குக் குறைந்த விலையில் வழங்கப்படும் பால் திட்டத்தை 2—10—1967 தேதியன்று மாண்புமிகு உணவு அமைச்சர் தொடங்கி வைத்தார். உபரியாக உள்ள பால் சென்னை பால் பண்ணைக்கு அனுப்பப்படுகிறது. இந்தப் பால் இதற்கெனவே தயாரிக்கப்பட்ட பால் வண்டிகளில் சென்னை மாநகருக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

(iv) மதுரை பால் பண்ணை இப்போது நாள் ஒன்றுக்கு 14,000 லிட்டர் பால் உற்பத்தி செய்து வருகிறது. இதில் 7,100 லிட்டர் பால் மதுரையிலுள்ள குறைந்த வருவாய்த் தொகுதியினர் உட்பட பொதுமக்களுக்கு விற்கப்படுகிறது. எஞ்சிய பால் மாதவரம் மத்திய பால் பண்ணைக்கு அனுப்பப்படுகிறது.

6. கூட்டுறவு.

(i) இம் மாநிலத்திலுள்ள பால் பண்ணைக் கூட்டுறவுச் சங்கங் கள் அனைத்தும் பால் உற்பத்தி-கால்நடை மேம்பாட்டு ஆணையரின் அதிகாரத்தின் கீழ் தொடர்ந்து செயல்பட்டு வந்துள்ளன. மாநிலம் முழுவதிலும் உள்ள பால் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் ஒருவர் ஆதிக்கத்தின் கீழ் வந்துள்ளதால் கால் நடை மேம்பாட்டிற்கும் பால் உற்பத்திப் பெருக்கத்திற்கும் நல்ல வாய்ப்பு ஏற்பட்டது. எங்கெங்கெல்லாம் பால் உபரியாகக் கிடைக்கிறதோ அங்கிருந் தெல்லாம் அது சேகரிக்கப்பட்டு பால் தேவைப்படும் மற்றப் பகுதி களுக்கு அனுப்பப்படுகின்றது. பால் உற்பத்தி-கால்நடை மேம் பாட்டு ஆணையர், கூட்டுறவு பால் பண்ணை-பால் வழங்கல் திட்டத் தின் கீழ் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களில் பதிவாளரின அதிகா ரங்களையுடையவராவார். இம் மாநிலத்தில் 2,632 கூட்டுறவுச் சங்கங்களும் 23 யூனியன்களும் உள்ளன. பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் கறவை மாடுகளை வாங்குவதற்காக 1—4—1967 முதல் 31—12—1967 வரை ரூ. 19.23 இலட்சம் நடுத்தரக் காலக் கடனுகவும், குறுகிய காலக் கடனுகவும் இச் சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நிறைவேற்றப் பட்ட பெருந் திட்டங்கள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டு உள்ளது:—

பாஸ்டர் பக்குவமுறைப் பொறி, திருச்சி.

திருச்சி-ஸ்ரீரங்கம் கூட்டுறவு பால் வழங்கு சங்கம் மாநில அரசாங்கத்தின் உதவியுடன் நிறுவியுள்ள பாஸ்டர் பொறி மணிக்கு 2,000 லிட்டர் பாலைப் பதப்படுத்தும். இதற்கு மாநில அரசாங்கம் பாதித் தொகையை உதவியாகவும், பாதித் தொகையைக் கடனுக வும் வழங்கியுள்ளது. இந்த இயந்திரச்சாலையை நிறுவுவதற்கு மொத்தம் ரூ. 17.2 இலட்சம் செலவாகியது. இது 4—4—1966-ஆம்





தேதியன்று செயல்படத் தொடங்கியது. இச் சங்கம் இப்போது நாளொன்றுக்கு 5,500 லிட்டர் பாலைப் பதப்படுத்துகின்றது. முதற்கண் இத் திட்டத்திற்கென தொழில் நுட்பப் பணியாளர்கள் இலவசமாக மூன்றாண்டுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளனர்.

(iii) பாஸ்டர் பக்குவமுறைப் பொறி, தஞ்சாவூர்.

மணிக்கு 2,000 லிட்டர் பாலைப் பதப்படுத்தக்கூடிய பாஸ்டர் பொறி ஒன்று தஞ்சாவூரில் உள்ள தஞ்சாவூர் கூட்டுறவு பால் வழங்கு சங்கத்தினால் நிறுவப்பட்டுள்ளது. இதற்காகச் செலவிடப் பட்ட ரூ. 17.74 இலட்சம் மாநில அரசாங்கத்தினால் பாதி உதவித் தொகையாகவும் பாதி கடனுகவும் சங்கத்திற்கு வழங்கப்பட்டது. பணிகள் அனைத்தும் முடிவடைந்து, இந்த நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. இச் சங்கத்திற்கு தொழில் நுட்பப் பணியாளர்கள் இலவசமாக மூன்று ஆண்டுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளனர். இச் சங்கம் தற்போது சுமார் அன்றாடம் 7,000 லிட்டர் பாலைப் பதப்படுத்தி வருகின்றது.

(vi) கன்னியாகுமரியில் உள்ள பொறி.

இப்பால் பக்குவ முறைப் பொறி அரசாங்கத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான மொத்தச் செலவு ரூ. 3.974 இலட்சம். இத்தொகையை பாதி உதவித் தொகை. பாதி கடன் என்ற அடிப்படையில் அரசாங்கம் வழங்கியுள்ளது. இந்த நிறு வனம் 28—4—1965 முதல் செயல்பட்டு வருகின்றது. இப்பொறி மூலம் மணிக்கு 1,000 லிட்டர் பாலைப் பதப்படுத்த முடியும். இந்த நிறுவனம் தற்போது நாளொன்றுக்கு 3,400 லிட்டர் பாலைப் பதப் படுத்தி வருகிறது.

(v) பாஸ்டர் பக்குவ முறைப் பொறி, சிதம்பரம்.

பாஸ்டர் பக்குவமுறைப்பொறி ரூ. 6 லட்சம் செலவில் நிறுவப் பட்டது. இதில் பாதி உதவித் தொகையாகவும் பாதி கடனுகவும் அரசாங்கம் வழங்கியுள்ளது. 1967-ம் வருஷம் மார்ச்சு மாதம் 1-ம் தேதி முதல் இந்த நிலையம் முறையாகச் செயல்படத் தொடங் கியது. உபரியாக உள்ள பால் சென்னை மாநகருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது, இந்த நிலையத்தில் ஒரு மணிக்கு 1,000 லிட்டர் பாலைப் பதப்படுத்த முடியும்.

இச் சங்கம் தற்போது நாளொன்றுக்கு 1,200 லிட்டர் பாலைப் பதப்படுத்தி வருகின்றது.

(vi) பாலைக் குளிரவைக்கும் நிலையம், திருப்பூர்.

திருப்பூர் கூட்டுறவு பால் வழங்கு சங்கத்தினால், ரூ. 3.545 லட்சம் செலவில் அரசாங்கத்தின் உதவியுடன் குளிரவைக்கும் நிலையம்

ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அரசாங்கம் இத்திட்டத்திற்கு பாதி உதவித் தொகையாகவும், பாதி கடனாகவும் வழங்கியுள்ளது. இந்த நிலையத்தில் மணிக்கு 1,000 லிட்டர் பாலைக் குளிரவைக்க முடியும். இந்த நிலையம் 1967-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 13-ம் தேதி முதல், முறையாகச் செயல்பட்டு வருகின்றது. இந்த நிலையம் உபரி பாலை பால் பண்ணைத் திட்டத்திற்கு வழங்குகிறது. இந்த நிலையம் தற்போது அன்றாடம் சுமார் 2,700 லிட்டர் பாலைக் குளிரவைக்கின்றது.

(vii) **உதகமண்டலம் கூட்டுறவுப் பால் வழங்கு சங்கம்.**

அதிகமாக உற்பத்தியாகும் பாலைக் கையாளுவதற்கும், கிடைக்கக்கூடிய உபரி பாலின் அளவை அதிகரிப்பதற்கும் உதகமண்டலம் கூட்டுறவு பால் வழங்கு சங்கத்திற்கு வசதியளிப்பதற்காக, அந்தச் சங்கத்திற்கு ரூ. 2.75 லட்சம் உதவித் தொகையாக அளிக்கப்பட்டுள்ளது. பாலைக் கையாளுவதற்கான பொறிகளையும், இயந்திரங்களையும் வாங்குவதற்காக இத் தொகை அளிக்கப்பட்டுள்ளது. இத் தொகையில் 50 சதவிகிதம் உதவித்தொகையாகவும் 50 சதவிகிதம் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது. உதகமண்டலம் பால் வழங்கு சங்கம் உபரி பாலை பால் பண்ணைத் திட்டத்திற்கு வழங்குகிறது. இந்தச் சங்கம் அன்றாடம் சுமார் 7,000 லிட்டர் பாலைக் கையாளுகிறது.

(viii) காரைக்குடி, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் கால்நடைத் தீவனக் கலவைப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. திருச்சியிலும் தஞ்சாவூரிலும் உள்ள பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. காரைக்குடியிலுள்ள பிரிவு விரைவில் பணியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

(ix) **கால்நடை மீட்புப் பண்ணைகள்.**

தஞ்சாவூரில் ரூ. 1.738 லட்சம் செலவில் கால்நடை மீட்புப் பண்ணை ஒன்றை அமைப்பதற்கான திட்டம் ஒன்று தஞ்சாவூர் கூட்டுறவுப் பால் வழங்கு சங்கம் செயல்படுத்தி வருகின்றது இதற்கான செலவில் 75 சதவிகிதம் கடனாகவும், 25 சதவிகிதம் உதவித் தொகையாகவும் அளிக்கப்படுகிறது. இப்பணி நிறைவேறி வருகின்றது.

(x) **தீவனப் பண்ணைகள்.**

தாமலிலும், பெருநகரிலும், தீவனப் பண்ணை ஒன்றை நிறுவும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

7. கிராமப் பால் பண்ணை விரிவுப் பணி.

(i) கறவை மாடுகளுக்கு முறையாகத் தீவனம் அளிப்பதிலும், அவற்றை வளர்ப்பதிலும் நிர்வகிப்பதிலும், கிராம மக்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு மாட்டுத் தொழுவங்கள், வண்டி போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.



(ii) கிராமப்புறங்களில் பாலைச் சேகரிக்கும் பணியை மேம்படுத்துவதற்காக, கருவிகளும், வண்டிகளும் வாங்குவதற்கு பால் வழங்கு யூனியன்களுக்கும் சங்கங்களுக்கும் கடன் உதவி அளிக்கப்பட்டது.

(iii) பால் பண்ணை விரிவுப் பணியாளர்கள், பால் உற்பத்தி நிலையங்களை அமைப்பதிலும், சுகாதார முறையில் பால் உற்பத்தி செய்வது குறித்த தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவதிலும் இச்சங்கங்களுக்கு உதவி புரிந்து வந்துள்ளனர்.

8. சென்னை பால் பண்ணைத் திட்டமும் மதுரை பால் பண்ணைத் திட்டமும் நல்ல தரமான நிலையில் உள்ள பாலை மக்களுக்கு நியாய விலையில் தொடர்ந்து வழங்கி வருகின்றன. பொது மக்களுக்கு வழங்கப்படும் பாலின் விலை இவ்வாண்டு அதிகரிக்கவில்லை. மதுரையில் பொதுமக்களுக்குத் தேவையான பால் வழங்கப்படுவதுடன் ஏழை மக்களுக்கும் சத்துள்ள நல்ல தரமான பால் குறைந்த விலைக்கு வழங்கப்படுகின்றது. சாதாரணமாக பால் அருந்த வழியின்றி வாழும் ஏழை எளியவர்கள் நல்ல தரமான பாலைக் குறைந்த விலைக்கு வாங்கி அருந்த இது அருமையானதொரு வாய்ப்பு அளிக்கின்றது.

## தமிழக சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1968 மார்ச் 26.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண்கள் 322-லிருந்து 326 வரையில் ஒத்திவைக்கப்படுகின்றன.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்

*327 வினா.—திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து பின்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் எத்தனை ?

(இ) அவைகளின் பெயர்கள் யாவை ?

(உ) அவைகள் எந்தெந்த மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ளன ?

(எ) அவைகள் மூலம் ஆண்டுதோறும் உற்பத்தி செய்யக் கூடிய சர்க்கரை எவ்வளவு டன்கள் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஏழு.

(இ) & (உ), (1) அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மடத்துக்குளம், கோவை மாவட்டம்.

(2) வட ஆற்காடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை; வடபுதுபேட் ஆம்பூர், வட ஆற்காடு மாவட்டம்.

(3) மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, படாளம், செங்கல்பட்டு மாவட்டம்.

(4) சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மோகனூர், சேலம் மாவட்டம்.

(5) கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மூங்கில் துறைப்பட்டு, தென்ஆற்காடு மாவட்டம்.

(6) நேஷனல் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, அலங்காநல்லூர், மதுரை மாவட்டம்.

(7) புதிதாக நிறுவப்படுவது; தர்மபுரி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, பாலக்கோடு, தர்மபுரி மாவட்டம்.

(எ) 108,000 மெட்ரிக் டன்கள்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்** : இந்தக் கோவை மாவட்டத்தி லுள்ள அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை பல லட்சக் கணக்கான ரூபாய் நட்டத்தில் வேலை செய்கிறது என்பதாகச் சொல்லப்படுவது வாஸ்தவமா? முன்பு இருந்த போர்டைக் கலைத்து இப்போது புதிதாக அரசாங்க அதிகாரியை வைத்து நடத்துவதன் மூலம் பல ஒழுங்கீனங்கள் நடந்து வருவது உண்மைதானா? அவற்றைப் போக்குவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நஷ்டத்தில் இருப்பது உண்மைதான். எவ்வளவு நஷ்டம் என்ற விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் தரலாம். நஷ்டம் ஏற்படுவதைத் தடுப்பதற்கு என்னென்ன செய்யலாம் என்பது பற்றி கூட்டுறவுப் பதிவாளர் அவர்களும், அங்குள்ள மானேஜிங் டைரக்டர் அவர்களும் கலந்து முயற்சி செய்து வருகிறார்கள். கரும்பு கிடைக்கின்ற அளவை அதிகமாக்குவதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கி நட்டத்தைத் தடுக்க முடியும். அதற்கான முயற்சி மேற்கொள்ளப் படும்.

**திரு. கரு. சீமைச்சாமி** : தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் எத்தனை லாபத்தில் ஓடுகின்றன? எத்தனை நட்டத்தில் ஓடுகின்றன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : மோகனூரில் இருக்கின்ற சர்க்கரை ஆலையும், ஆம்பூரிலுள்ள சர்க்கரை ஆலையும் லாபத்தில் வேலை செய்கின்றன. மற்றவை நட்டத்தில் இருக்கின்றன. அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை சமீபத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டது. கள்ளக்குறிச்சியிலுள்ள சர்க்கரை ஆலை 1967 டிசம்பரில் தான் ஆரம்பிக்கப்பட்டது. தர்மபுரியில் ஒரு சர்க்கரை ஆலை இப்போது ஆரம்பிப்பதற்கு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**திரு. கே. விநாயகம்** : பொதுவாக இம் மாநிலத்திற்கு எவ்வளவு சர்க்கரை தேவைப்படுகிறது? இப்போது நம் மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளில் எவ்வளவு சர்க்கரை உற்பத்தியாகி அதிலிருந்து நம் மாநிலத்திற்கு எவ்வளவு ஒதுக்கீடு செய்யப் படுகிறது? குறைவாக இருந்தால் அதற்கு வேண்டிய மனுக்கள் போட்டால், பிரைவேட் செக்டாராக இருந்தால் அந்த மனுக்களை ஏற்றுக் கொண்டு அனுமதி தருவார்களா? அந்த மனுக்களைக் கொடுக்கிற நேரத்தில் எந்த அடிப்படையில் போட வேண்டும்? என்னென்ன இருக்க வேண்டுமென்று அரசாங்கம் கேட்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, இப்போது புதிதாக மொத்தம் 16 சர்க்கரை ஆலைகள் தனியார் துறையிலும் பொதுத் துறையிலும் இருக்கின்றன. மேற்கொண்டு மூன்று சர்க்கரை ஆலைகள் நிறுவலாம் என்று இந்திய அரசிடம்



ஆலோசனைக்கு எழுதி அனுப்பப்பட்டிருக்கிறது. இரண்டு சர்க்கரை ஆலைகள் வட ஆர்க்காடு மாவட்டத்திலும், ஒன்று கோவை மாவட்டத்திலும் வைக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. எல்லா ஆலைகளினுடைய உற்பத்தித் திறன் எவ்வளவு என்பது தெரியவில்லை. ஆனால் 1964-65-லிருந்து 1966-67 வரை கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் எவ்வளவு உற்பத்தியாகி இருக் கிறது என்ற விவரம் இருக்கிறது. 1964-65-ல் பிழியப்பட்ட கரும்பு 3,82,914 டன், உற்பத்தியான சர்க்கரை 34,047 டன். 1965-66-ல் பிழியப்பட்ட கரும்பு 6,82,137.60 டன், சர்க்கரை உற்பத்தியானது 63,921.47 டன். 1966-67-ல் பிழியப்பட்ட கரும்பு 1,21,019.65 டன்; உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை 10,483.00 டன்.

**திரு. கே. என். சாமிநாதன்** : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே அமராவதி சர்க்கரை ஆலையில் கரும்பு அளவு ஒரு நாளில் 1250 மெட்ரிக் டன். 1966-67-ல் 102 நாட்கள் கரும்பு பிழியப் பட்டது. அதன் கணக்குபடி பார்த்தால் கரும்பு உற்பத்தியின் அளவு 1,39,439 மெட்ரிக் டன் ஆகவும், பிழியப்பட்ட கரும்பின் அளவு 57,676 மெட்ரிக் டன் ஆகவும் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. கே. என். சாமிநாதன்** : உற்பத்தியின் அளவு குறைந்த தற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, நியாய விலைக் கடைகளிலும், வெளிச் சந்தைகளிலும் விலை நிர்ணயம் செய்வது மத்திய அரசா? அல்லது மாநில அரசா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, உற்பத்தியாவது பற்றிய விவரம்தான் என்னிடம் இருக்கிறது. மற்ற விவரங்கள் மாண்புமிகு உணவு அமைச்சரிடமிருந்து அறியலாம்.

**திரு. ஏ. எம். ராஜா** : தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலை களில் கரும்பு பிழியும் திறன் அளவிற்கு 50 சதவிகிதம் குறைவாக இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? குறைகளைப் போக்க திறன் முழுவதையும் பயன்படுத்த ஏதாவது நடவடிக்கை எடுக்கப் பட்டதா? அப்படியானால் அவை யாவை?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகளிலே திறனை வளர்க்கக்கூடிய முயற்சியிலே ஈடு பட்டிருக்கிறார்கள். அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, கோயம்புத்தூர் 800 டன்னிலிருந்து 2000 டன்னுக்கு உயர்த்த வேண்டுமென்று கேட்கப்பட்டு 1,250 டன் தான் உயர்த்தலாம் என்று அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை விரிவாக்குவதற்கு அனுமதி இல்லை. இது

800 டன்னிலிருந்து 12,00 டன்னுக்கு உயர்த்த வேண்டுமென்று கேட்டிருந்தது. ஆனால் சிபாரிசு செய்யப்படவில்லை. மற்றும் ஆம்பூரிலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 800 டன்னிலிருந்து 2,000 டன்னுக்கு உயர்த்த வேண்டுமென்று கேட்டிருந்தது. இரண்டாயிரம் டன் திறனுள்ள மெஷினை அமைக்க அனுமதிக்கப்பட்டது. ஆனால் 2,250 டன்னுக்கு அதிகரிக்கக் கேட்டிருந்தது. முடிவு இந்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. மோகனூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 1,000 டன்னிலிருந்து 2,000 டன்னுக்கு அதிகரிக்கக் கேட்டிருந்தார்கள். ஆனால் 1,750 டன்னுக்குக் கேட்டிருந்தது. ஆனால் 1,250 டன்னுக்குக் கேட்டிருந்தது. ஆனால் 1,250 டன்னுக்கு சிபாரிசு செய்யப்பட்டது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I wish to know from the Hon. Minister for Industries whether he has received an Government to start a sugar mill there?
application from Hosur taluk requesting the sanction of the

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரக் குறிப்பு இப்பொழுது இல்லை. ஆனால், தர்மபுரியில் சர்க்காரால் நிறுவப்படுவதற்கான அடிப்படை ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமராவதியில் இருக்கும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை செயல்படாமல் இருந்தது, இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறதா? அல்லது, செயல்படாமலிருந்தால், அதை எடுத்து நடத்துவதற்குச் சர்க்கார் ஏதாவது முயற்சி செய்தார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சென்ற ஆண்டு அதற்குப் போதுமான அளவில் கரும்பு கிடைக்காத நிலை இருந்தது. இந்த ஆண்டு போதிய அளவில் கரும்பு கொடுப்பதற்கு அந்தப் பகுதியில் இருக்கும் மிராசுதார்களையும் மற்றவர்களையும், கரும்பு பயிரிடுகிறவர்களையும் அழைத்து, குறைந்த அளவு மட்டுமாவது கரும்பு கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தம் பேசியிருக்கிறார்கள். கூட்டுறவுப் பதிவாளர் அவர்களும் தொழிற்துறை அதிகாரிகளும் அந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். கரும்பு பிழியக் கூடிய சக்தியை அதிகப்படுத்தக் கூடிய முயற்சி இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும்.

**திரு. எஸ். முருகையன் :** வடஆர்க்காடு மாவட்டத்தில் இரண்டு சர்க்கரை ஆலைகளை அமைப்பதாகத் தெரிகிறது. போளூர் வட்டத்தில் நீண்ட நாளாகக் கரும்பு சாகுபடி செய்து கொண்டு வருகிறார்கள். போளூரிலேயே ஒரு சர்க்கரை ஆலை இல்லாததால், அவர்கள் ஆம்பூர் சர்க்கரை ஆலைக்குக் கொடுக்க வேண்டி வருகிறது. அது தூரமாக இருக்கிறது. போளூரில் ஏராளமாக கரும்பு சாகுபடி செய்யப்படுவதால், அமைக்க இருக்கும் சர்க்கரை ஆலையைப் போளூர் வட்டத்தில் அமைக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதற்கான அடிப்படைச் சூழ்நிலைகளும், அதற்கான வாய்ப்பு வசதிகளும் எப்படியும் இருக்கும் என்ற அளவுக்கு வடஆர்க்காட்டில் இரண்டு நிறுவ இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். எந்த இடத்தில் அமைப்பது, எந்த அளவு பலன் தரும் என்பதை இனிமேல் ஆராய்ந்து பரிசீலிக்கப்பட்டதற்குப் பிறகு தான், அதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைக்கப்பட்டிருக்கும் ஆலைகளைப்பற்றிக் கேள்வி கேட்க வேண்டும். இனி அமைக்கப்படவிருக்கும் ஆலைகளைப்பற்றிக் கேள்விகள் கேட்க வேண்டாம்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள்:** மத்திய சர்க்கார், சர்க்கரை ஆலைகளுக்கு 40 சதவீதம் சீனி ஒதுக்கி, அதன் மூலமாக அதிகமான லாபத்திற்கு விற்பனை செய்த போதிலும், கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அந்த ஆலை முதலாளிகள் அதிகப்படியான விலை கொடுக்காத காரணத்தால், கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு ஊக்கம் இல்லாமல், அதன் காரணமாக ஆலைகளுக்கு கரும்பு கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டு, சர்க்கரை உற்பத்தி குறைகிறது என்று கூறப்படுகிறதே, அதுபற்றி அரசு என்ன யோசனை செய்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றி வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்லக் கூடும். கரும்புக்கு எவ்வளவு விலை தர வேண்டும், எப்படித் தர வேண்டும் என்பதுபற்றியெல்லாம் அவர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சர்க்கரை உற்பத்தி செய்வதற்கு ஆலைகள் வைப்பதைப் பொறுத்துத்தான் என்னிடத்தில் தகவல்களும் விவரங்களும் இருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் கேட்ட மற்ற விவரங்களுக்கு வேளாண்மைத் துறை அமைச்சருக்குத் தனிக் கேள்வி போட்டால், அதற்கான விவரங்களைத் தர முடியும்.

**திரு. சொ. கோவிந்தராசன் :** அலங்காநல்லூரில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நல்ல முறையில் நடக்க சர்க்காரிடம் பணம் கோரப்பட்டதா? அந்தக் கோரிக்கை என்ன நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றி முழு விவரக் குறிப்பு இல்லை. கடன் கோரப்பட்டது. தேவையான அளவுக்குத் தரப்பட்டிருக்கிறது. தனிக் கேள்வி போட்டால் விவரம் முழுவதும் அளிக்கலாம்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, தென்னார்க்காடு மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டப் பகுதிகளிலிருந்தும் மதுராந்தகம் சர்க்கரை ஆலைக்குக் கரும்பு வருகிறது. பாண்டியம்பாக்கம் ஆலை தனியாக இருந்தாலுங்கூட, மதுராந்தகத்தில் இருக்கும் சர்க்கரை ஆலைக்குக் குறிப்பிட்டுள்ள நோடிஃபைட் ஏரியாவில் அதிகமாகக் கரும்பு விளைச்சல்

ஏற்படாததால், அந்த ஆலை, குறிப்பிட்ட நாட்களுக்குக் குறைவாகவே ஓடவேண்டிய நிலை இருப்பதால், தென்னார்க்காடு மாவட்டத்தில், திண்டிவனம் தாலூக்காவின் ஒரு பிர்க்காவை மதுராந்தகம் சர்க்கரை ஆலைக்கு நோட்டிஃபைட் ஏரியாவாக ஆக்கி இருக்கிறார்கள். திண்டிவனம் தாலூக்கா பூராவையும் மதுராந்தகம் சர்க்கரை ஆலைக்காக நோடிஃபை ஆக்குவதற்கு அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, படாளத்தில் இருக்கும் சர்க்கரை ஆலையைத் திரும்பவும் நடத்தி, லாபகரமாக ஆக்கும் முயற்சிகள் அத்தனையும் மாவட்டக் கலெக்டர் மூலமாகவும் மற்றவர்கள் மூலமாகவும் எடுக்கப்பட்டு வருகின்றன. உறுப்பினர் அவர்கள் கூறுவது பற்றி விவரக் குறிப்பு இல்லை. அப்படித் தேவைப்பட்டு, அதை ஊக்குவிக்கும் நிலைமை ஏற்படுமானால் அந்தக் கருத்து பரிசீலிக்கப்படும்.

**திரு. கே. என். குமாரசாமி** : கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் தனியாக வெல்லம் காய்ச்சுகிற ஆலையை அமைத்து, அதிலே 30 சதவீத சாறு, சக்கையோடு வீணாகப்போவதாகக் கேள்விப்படுகிறோம். அதைத் தடுக்க, அந்தப் பகுதிகளுக்கு ஒரு நவீன ஆலை அமைத்து, அந்த 'வேஸ்ட்'டைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரு சர்க்கரை ஆலை ஏற்பட வேண்டுமானால், அதற்கு வேண்டிய கரும்பு அந்த வட்டாரத்தை யொட்டி பகுதிகளில் பயிரிடப்பட்டிருக்க வேண்டும். வேறு பல இடங்களிலும் கரும்புகள் உற்பத்தியாகக்கூடும். ஆலை வைக்கத்தக்க அளவுக்கு நிலைமை ஏற்படமுடியாது. ஆனால், கரும்பு ஆலைகள் இருக்கும் இடங்களில் அவைகளுக்குப் பாதகம் ஏற்படும் அளவுக்கு ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ள வெல்லம் காய்ச்சும் நிலைமைகள் இல்லாத அளவுக்கு, அதற்கு அப்பாற்பட்ட பகுதிகளில் ஆலைகள் வைக்கக்கூடியவர்கள் வெல்லம் காய்ச்சும் வன்கயிருப்பதால், கண்டசாரி போன்றவைகளும் மற்றவைகளும் தயாரிப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால், குறிப்பிட்ட எல்லைக்குள் அனுமதி வழங்குவதில்லை.

### மின்துறையில் சிக்கன நடவடிக்கை

*328 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்** : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சார வாரியத்தில் சிக்கன நடவடிக்கை காரணமாக ஆள் குறைப்புத் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : (அ) ஆம்.

(இ) 7½ சதவீத பதவிகளைக் குறைக்கும் நோக்கமுள்ள சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விளைவாக, தமிழ்நாடு மின்சார ஏற்பாட்டிற்கென ஒப்பளிப்பு வழங்கப்பட்ட



14 உதவி யாளர் ( Assistants ) பதவிகளையும், 14 எழுத்தர் பதவிகளையும் நிரப்பாமல் விடப்பட்டது. மின்சார வாரியச் செயலகத்தில் உதவியாளர் பதவி யொன்றும், எழுத்தர் பதவி யொன்றும் வாரியக் கணக்குப் பிரிவில் 6 உதவியாளர் பதவிகளும், 1 எழுத்தர் பதவியும் இச் சிக்கன நடவடிக்கைகளைச் செயல் படுத்தும் வகையில் நீக்கப்பட்டன. பணிகள் நிறுத்தி விடப்பட்ட காரணத்தால், 1966-ல் 1,035, தொழிலாளர்களும், 1967-ல் 80 தொழிலாளர்களும் நிறுத்தப்பட்டனர். இயன்ற இடங்களிலெல்லாம் அவர்களுக்கு மாற்று வேலைகள் கொடுக்கப்பட்டன. ஏனையோருக்குந் தொழில் தகராறுகள் சட்டத்தின்படி இழப்பீடு வழங்கப்பட்டது.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : சம்பத்தில் வேலைப் பளுவை அதிகப்படுத்தியதன் காரணமாக, அப்படி மீண்டும் பேச்சு வார்த்தை நடத்தி, வேலைப் பளுவை அதிகப்படுத்துவதற்குப் பதிலாக, ஏற்கனவே இருந்த வேலைப் பளுவின் அடிப்படையிலேயே குறைத்து, மீண்டும் அதே சூழ்நிலை ஏற்படக்கூடிய அளவு ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகும் கூட, அதை அமல்படுத்தாத காரணத்தால், குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டதே, அது என்ன ஆயிற்று? ஒப்பந்தப்படி அமல் படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அவர்களுக்கு வேலைப் பளு அதிகமாக இருக்கிறது என்று முறையீடு இருந்தது. அதற்குப் பிறகு, குழு ஒன்று அமைக்கப்பட்டு, அதுபற்றி ஆராய்ந்து, இரு சாராரையும் கலந்து, ஒரு அறிக்கை சமர்ப்பிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை இன்னும் அரசாங்கத்தின் கைக்கு வந்து சேரவில்லை. அது வந்த பிறகு தக்க நடவடிக்கை அதன்மீது எடுக்க அரசு முன் வரும்.

**திரு. தி. பொன்னுமலை** : தற்போது எலெக்ட்ரிசிடி டிபார்ட்மெண்டில் சூபர்வைசர், லைன்மென் என்று சொல்லக்கூடியவர்களுக்கு வாகன வசதி இல்லாமல் இருக்கிறது. அதனால், அவர்கள் குறிப்பிட்ட நேரங்களில் அவர்களுடைய நிர்வாக வேலையைச் செயல்படுத்த முடிவதில்லை. உதாரணமாக, விவசாயிகளுடைய காட்டில் ஃப்யூஸ் போய்விட்டால், நான்கு மைல், ஐந்து மைல் சைக்கிளில் சென்று, கால தாமதம் ஏற்படுகிறது. அதனால் ஒரு நாளைக்குத் தொழில் கெட்டுவிடுகிறது. உடனே, அந்த அலுவலைச் செய்வதற்கு ஒரு மோட்டார் சைக்கிள் போன்ற வாகனம் ஏற்படுத்திக் கொடுக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : மூலக் கேள்வி, ஆட் குறைப்பு, சிக்கன நடவடிக்கை பற்றியது. எனவே, இந்தக் கேள்விக்கும் அதற்கும் தொடர்பு இல்லை.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, May I request the Hon. Minister to state the retirement age of the employees under the State Electricity Board.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பொதுப் பணித் துறையில் மேற்கொள்ளப்படுகிற அதே முறைதான் மின்சார வாரியத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மின்சார வாரியத்திற்குச் சிபார்சு செய்யும் நிலைமை இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மின்சார இலாக்காவில் மேற்கொண்ட சிக்கன நடவடிக்கை காரணமாக, அரசுக்கு ஆண்டொன்றுக்கு எவ்வளவு ரூபாய் மீதம் ஆகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றி விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்தச் சிக்கன நடவடிக்கையால் வேலை இழந்தவர்கள் எண்ணிக்கை எத்தனை? நிவாரணம் அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எத்தனை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலில குறிப்பிட்டேன். ஒப்பளிப்பு வழங்கப்பட்ட 14 உதவியாளர் பதவிகளும், 14 எழுத்தர் பதவிகளும் நிரப்பப்படாமல் இருக்கின்றன, சிக்கன நடவடிக்கையாக. மின்சார வாரியச் செயலகத்தில் உதவியாளர் பதவி யொன்றும், எழுத்தர் பதவியொன்றும், வாரியக் கணக்குப் பிரிவில் 6 உதவியாளர் பதவிகளும், 1 எழுத்தர் பதவியும் சில இடங்களில் வேலைகள் முடிந்துவிட்டதன் காரணமாக எடுக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1966-ல் 1,035 தொழி[illegible] தொழிலாளர்களும் நீக்கப்பட்டார்கள். அப்படியிருந்தும், வேலைவாய்ப்பு ஏற்படும் நேரத்தில் அவர்களுக்கு முதல் இடம் கொடுக்கப்பட்டு, மீண்டும் எடுத்துக் கொள்ளுகிற வாய்ப்புத் தரவேண்டும் என்று பரவலாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு மேலும், சட்டப்படி இழப்பீடு வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய எண்ணிக்கை, வழங்கப்பட்ட தொகையின் அளவு பற்றிய விவரக் குறிப்பு இல்லை.

திரு. எம். சண்முகம்: இந்த ஆள்குறைப்புத் திட்டத்தில் மின்சார இலாக்காவில் தற்போது பெருவாரியாக லஞ்ச ஊழல்கள் மலிந்து இருப்பதாகக் கூறப்படுகிறது. அப்படி லஞ்சம் பெறும் ஆட்களை இந்தச் சந்தர்ப்பத்தில் நீக்கி ஆள்குறைப்புத் திட்டத்தை நிறைவேற்ற ஆலோசனை கூற அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மின்சார வாரியம் போன்றவை பெரிய திட்டங்களை மேற்கொள்ளும்போது வேலைக்கு அதிகமான ஆட்களை வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுவதும், இத்திட்டம் முடிந்த பிறகு அதைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஏற்ற அலுவலர்கள், பொறியாளர்கள் இவர்களை மட்டும் வைத்துக் கொண்டு மற்றவர்கள் வேலை இழக்கும்படியான ஒரு சூழ்நிலை ஏற்படுவது இன்றியமையாததாக அமைந்திருக்கிறது. அப்படி அமைகிறபோது மீண்டும் வேறு ஏதாவது பகுதிகளில் வேலைகள் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டால்



நீக்கப்பட்டவர்களுக்கு முதல் சலுகை தரவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. சில பேர்கள் புறக்கணிக்கப்படுகிற சூழ்நிலை இருந்தால் அதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறபோது அது பற்றி நடவடிக்கைகள் எடுத்து அவர்களை மறுபடியும் வைத்துக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

இன்னொரு நிலை என்னவென்றால், குறிப்பிட்ட இடத்தில் நடைபெறுகிற வேலைகளுக்கு அங்குள்ளவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். 400 அல்லது 500 மைல்களுக்கு அப்பால் ஒரு தொழில் நடக்கும்போது 500 மைல்களுக்கு அப்பால் உள்ளவர்களைக் கொண்டு வந்து வைக்கும்போது அங்கு இருப்பவர்களுக்கு வாய்ப்புத் தர வேண்டுமென்று கேட்கிற அளவிற்குச் சங்கடங்கள் சில சமயங்களில் ஏற்படுகின்றன. கூடுமான வரையில் சில பல ஆண்டுகள் வேலை செய்தவர்களுக்குத் தொடர்ந்து வாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமென்று குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன. அப்படி மீறப்படுகிற நிலை ஏற்பட்டால் அவை சுட்டிக்காட்டப்படுமானால் அதுபற்றி நடவடிக்கைகள் எடுக்கலாம்.

THIRU K. VINAYAKAM: Usually in the name of effecting economy the axe falls upon the people recruited latest to the department. Would it not be proper for any department, much more so for the Electricity Department, instead of removing those who have been lately recruited, in the name of economy, to effect by economy and save a lot of money by working the Board more efficiently?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: முதலில் இந்தத் தொழிலுக்கு இன்றியமையாது தேவைப்படுகிறவர்களை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது, அவர்கள் முன்னால் இருந்தாலும் அல்லது பின்னால் சேர்க்கப்பட்டாலும். இன்றியமையாதவர்கள் அல்ல என்று வரும்போது கடைசியில் சேர்க்கப்பட்டவர்களைத் தான் எடுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. அதில் தவறு ஏற்பட்டு அது சுட்டிக்காட்டப்பட்டால் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

DR. H. V. HANDE: Sir, in the Ennore Thermal Scheme we have got a number of employees who are purely on a temporary basis. We have got also another set of employees who come under 'work charged' category or who are semi-temporary. In many cases people taken to 'work charged' category are recruited directly instead of being taken from the temporary staff. In view of the fact that direct recruitment hurts the feelings and denies chances to the temporary workers, who have already worked for a number of years, will the Government reconsider the question and recruit to the 'work charged' category from the temporary staff and in view of the serious developments that are likely to arise because of some companies taking up the Ennore Thermal Scheme, will the Government give a sense of security to the workers there?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஏற்கெனவே, வேலை பார்த்தவர்களுக்கு முதல் சலுகை தர வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. எந்த அடிப்படையில் எண்ணூரில் சேர்க்கிறார்கள்

என்பதுபற்றி விவரங்கள் இல்லை. பொதுவாக, ஏற்கனவே வேலை பார்த்தவர்கள் இடையில் நிறுத்தப்படும் நிலை ஏற்படும்போது அவர்களுக்கு முதல் சலுகை அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டு வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. தவறுகள் ஏற்பட்டால், அவை சுட்டிக்காட்டப்பட்டால் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஒப்பந்தத்தில் அதிகப்படியான ஆட்கள் நியமிக்க வேண்டுமென்று கண்டுள்ளது. அதுபோல் ஏற்படுத்தப்படவில்லை என்பது உண்மையா? அப்படியானால் உடனடியாக அதுபோன்று அதிகப்படியான ஆட்களை நியமிக்க முயற்சி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரங்கள் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

திரு. சா. ராமச்சந்திர துரை : மழைக்காலங்களில் புதுக் கோட்டை, தஞ்சை போன்ற நகரங்களில் மின்சாரம் தடைபடுகிற நேரத்தில் மின்சார டிப்பார்ட்மெண்ட்டுக்குப் போன் செய்து அல்லது ஆள் மூலம் தகவல் கொடுத்தும் அவர்கள் வருவதற்கு மூன்று நாட்கள் அல்லது நான்கு நாட்கள் ஆகிறது. அவர்களிடம் கேட்கிறபோது, ஆறு லைன்மென்கள்தான் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே இதுமாதிரியான இடங்களில் அதிக ஆட்களைப் போட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இத் துணை வினா மூல வினாவோடு தொடர்புடையது அல்ல என்றாலும் அந்தக் குற்றச்சாட்டுகள் கவனிக்கப்பட்டு என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அதை எடுக்க முயற்சி செய்கிறோம்.

திரு. ந. வீராசாமி : சிக்கன நடவடிக்கைகளின் பேரில், ஆட்குறைப்பு என்ற பெயரால் கீழ்மட்டத்தில் இருப்பவர்களைத்தான் நாம் வேலையில் இருந்து எடுக்கிறோமே தவிர, மேல் மட்டத்தில் இருப்பவர்களுக்கு இன்னும் சில பதவிகளை அதிகமாக்கிக் கொண்டே போகிறோம். இந்த நிலையைத் தவிர்க்க இந்த அரசு நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிவதோடு கூட 55 வயதுக்கு மேற்பட்ட யாருக்கும் பதவி நீடிப்பு இல்லை என்ற நிலையை உருவாக்கினால், கீழ் மட்டத்தில் இருப்பவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு அது வாய்ப்பாக இருக்கும் என்பதால் இவைபற்றி அரசு ஆராயுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி என்னென்ன செய்யலாம் என்பதுபற்றி இந்த ஆண்டு மதிப்பீட்டுக் குழு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. மதிப்பீட்டுக் குழு எந்தெந்த உயர் பதவிகளை எடுக்கலாம், எந்தெந்த கீழ் பதவிகளை எடுக்கலாம் என்பது பற்றிய விவரக் குறிப்புகளை, சிபார்சுகளை எல்லாம் தரும். அதைப் பார்த்து தக்க நடவடிக்கைகள் எடுக்கலாம். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.



## செஞ்சிக்கோட்டை

* 329 வினா.—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிங்குராஜனால் கட்டப்பட்டு இப்பொழுது பழுதடைந்த நிலையில் இருக்கும் செஞ்சிக் கோட்டையைப் பழுது பார்க்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) செஞ்சிக் கோட்டையும்,, அக் கோட்டைக்குள் இருக்கும் பிற வரலாறு நினைவுச் சின்னங்களும், இந்திய அரசாங்கத்தின், இந்திய தொல் பொருள் ஆராய்ச்சித் துறையின் பாதுகாப்பில் உள்ளன. அவை அத் துறையினால் "பாதுகாக்கப்படும் நினைவுச் சின்ன" மாகப் பேணி வரப்படுகின்றன. கோட்டையும், அதனுள் இருக்கும் பிற நினைவுச் சின்னங்களும் நல்ல நிலைமையில் இருப்பதாகவும், அதனால் உடனடியாகப் பாதுகாப்பு வேலை எதுவும் மேற்கொள்ளத் தேவை இல்லை எனவும், அவசியமான வேலைகள் எல்லாம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளன வென்றும் தேவையில்லாத செடி கொடிகளை அவ்வப்பொழுது களைந் தெறிதல் போன்ற பேணுதல் வேலைகளே மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அத் துறையின் கண்காணிப்புத் தொல்பொருட் கலைஞர் அறிவித்துள்ளார்.

(இ) இக் கேள்வி எழவில்லை.

திரு. கா. வேழவேந்தன் : திகைப்பூட்டும் மலைச்சரிவிலுள்ள இந்தக் கலை அழகுள்ள கோட்டையை மத்திய அரசு இதுவரையில் டாக்குமென்டரி படமாக எடுத்து இந்தியா முழுவதும் காட்டவில்லை. இதை மத்திய அரசுக்குத் தமிழக அரசு சிபார்சு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பல கோட்டைகளை எடுக்கும்போது இதை எடுக்காமல் விட்டிருப்பார்களா என்ற ஐயப்பாடு இருக்கிறது. அதுபற்றிய விவரங்கள் இல்லை. அப்படி எடுக்கப்படாமல் இருக்குமானால் இந்த அரசு சிபார்சு செய்யலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தேசிங்குராஜன் கோட்டையைப் போன்று வரலாற்றுப் புகழ் கொண்ட எவ்வளவு கோட்டைகள் தமிழ்நாட்டில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன? காஞ்சிபுரத்தில் பல்லவமேடு என்றிருக்கிறது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அங்குள்ள அகழியைத் தோண்டி அங்குள்ள பழைய கால வரலாற்றுச் சின்னங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்த முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: எவ்வளவு கோட்டைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்ற விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரலாம். பல்லவமேடு பற்றிச் சொன்னார்கள். தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பல இடங்களை ஆராய்ந்து கொண்டு வருகிறார்கள். இதுபற்றி ஏற்கனவே ஆராய்ந்திருக்கிறார்கள். எந்த அளவிற்கு ஆராய்ந்தார்கள், என்ன முடிவுகள் காணப்பட்டன. மேலும், ஆராயப்பட வேண்டிய நிலை இருக்கிறதா இல்லையா என்பதுபற்றிய விவரக் குறிப்புகளை அறிந்த பிறகுதான் சொல்லமுடியும். தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: செஞ்சிக்கோட்டை பற்றி மட்டும் கேள்வி கேட்கவேண்டும். பல்லவமேடு போன்றவை பற்றிக் கேட்கக் கூடாது.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி: செஞ்சிக்கோட்டை மிகவும் அதிகமான உயரத்தில் இருப்பதால் அங்கு போகக்கூடிய பார்வையாளர்கள் அங்கு போய்ச் சேரமுடியாமல் இருப்பதால் அங்கு ஒரு ரோப் வே அமைக்க இந்த அரசு சிபார்சு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட யோசனை இப்போது இல்லை. பெரும்பாலும் நடந்து போய்ப் பார்த்துவிட்டு வருவதுதான் அழகாக இருக்கிறது. ரோப்வேயில் போவது அவ்வளவு அழகாகயிருக்காது.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, இந்த செஞ்சிக்
மு. ப. கோட்டை பாதுகாப்புப்பற்றி மேற்கொண்டு அதிகமான மானியம்
9-30 வழங்குவது, 1965-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்து அதிகச் சேதம் ஏற்பட்ட பிறகு நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, மேற்கொண்டு அபிவிருத்தித் திட்டங்களை அங்கு மேற்கொள்ளவில்லை என்று தெரிகிறது. அதை மாற்றி மேற்கொண்டு அதிகமான நிதி ஒதுக்கி இப்படிப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள இந்த அரசு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்து உள்ளதா, அல்லது இனிமேல் செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தக் கோட்டைப் பாதுகாப்பின் முழுப் பொறுப்பையும் இந்திய அரசாங்க இந்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறை பார்த்துக் கொண்டிருக்கிறது. அவர்களிடம் எழுதிக் கேட்ட நோக்கில் அதற்காக வேண்டிய பழுதுகள் எல்லாம் பார்த்து முடிந்திருப்பதாகவும் தேவையில்லாத சிலபல செடிகொடிகளை அவ்வப்போது களைந்து எறிய வேண்டிய நிலை இருப்பதாகவும்தான் செயற் குறிப்பு வந்திருக்கிறது. அப்படிக் கவனிக்கப்படாத சூழ்நிலை இருந்தால் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சரவர்களின் வேண்டுகோளின்படி வினாக்கள் 330, 331, 332 ஒத்திவைக்கப்படுகின்றன.





* 333 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், நாகநல்லூர் (தொட்டியப்பட்டி) ஏரியை விவசாயப் பண்ணையாக மாற்றும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) & (இ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை வட்டம் நாகநல்லூரில், பயன்படுத்த இயலாதெனக் கைவிடப்பட்ட ஏரியில் 55 ஏக்கர் பரப்பளவில் 1962-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் அரசாங்க விதைப்பண்ணை ஒன்று தொடங்கப்பட்டது. ஆனால் இப் பண்ணையின் மண் வளமற்றிருப்பதாலும், நீரடிப்பதாலும் இதற்குப் பாசன வசதிகள் செய்யப் பெருந்தொகை செலவழிக்க வேண்டியிருப்பதாலும் இதன் ஆதாயமற்ற நிலைமை காரணமாக இந்தப் பண்ணையை அரசு உடனடியாக மூடும்படி உத்திரவிட்டது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, அமைச்சரவர்களின் பதிலில் 1962-ல் திட்டமிட்டதாகக் குறிப்பிட்டார்கள். 1962-ம் வருடம் திட்டமிட்ட இந்தப் பண்ணைத் திட்டம் நல்ல முறையில் செயல்படும் என்ற நம்பிக்கையுடன்தான் கடந்த காங்கிரஸ் அரசு செயலாற்ற முற்பட்டது. இப்போது வளம் இல்லையென்றால் அதற்கு அறிக்கை ஏதாவது வந்ததா? அதற்கு யார் காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: என்னுடைய பதிலிலேயே எதற்காக மூடப்பட்டது என்ற விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பயன்படாத ஏரி ஒன்றில் 55 ஏக்கர் பரப்புள்ள நிலத்தை எடுத்தோம். அது ஏரி என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். நீர் அடிக்கக்கூடிய பகுதி, தண்ணீர் தேங்கக்கூடிய பகுதி, மண்வளம் இல்லாத பகுதி, அரசாங்கம் அவசரப்பட்டு ஏதாவது இடம் கிடைக்க வேண்டும் என்ற நிலையில் ஒரு 55 ஏக்கர் நிலத்தை எடுக்கிறபோது இப்படி 50 ஏக்கர் உள்ளவற்றை ட்வின் பண்ணை என்றும் 25 ஏக்கர் உள்ளவற்றை ஸிங்கிள் பண்ணை என்றும் சொல்வார்கள்—இந்த 55 ஏக்கர் நிலத்தை அவசரப்பட்டு எடுத்ததன் விளைவாக தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டு அதன் விளைவாகத்தான் மூட உத்திரவு போடப்பட்டதே தவிர ஆதாயம் இருக்குமானால், விளைச்சல் இருக்குமானால் மூடப்பட வேண்டிய அவசியம் இருந்திருக்காது. தொடர்ந்து நட்டத்தில் ஓடுவதால், அங்கு நீர் வளம் இல்லாததால், பாசன வசதிக்கு குளித்தலை கட்டளை வாய்க்காலில் இருந்து பைப் மூலம் 6 பர்லாங்குக்கு அப்பாலிருந்து மூடிய பைப்பில் தண்ணீர் கொண்டு வர வேண்டியிருக்கிறது. இங்கு புஞ்சைதான் பயிரிடுகிறார்கள் அது பலனளிக்காததால், பெரும் நட்டம் ஏற்பட்டதால் இது கைவிடப்பட்டது.

[1968 மார்ச் 26

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, மாநிலத்தில் மொத்தம் எத்தனை விதைப் பண்ணைகள் இருக்கின்றன ? அவைகளை மாவட்டவாரியாக அமைச்சரவர்கள் சொல்வார்களா ? மொத்தத்தில் எத்தனை விதைப் பண்ணைகள் லாபத்தில் நடக்கின்றன, எத்தனை நட்டத்தில் நடக்கின்றன. அப்படி நட்டத்தில் நடக்கும் விதைப் பண்ணைகளை இலாபகரமாக ஆக்குவதற்கு அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்போது மாவட்டவாரியாகப் பிரித்துச் சொல்வதற்குக் காலதாமதம் ஆகும். இடையிடையில் பல பண்ணைகள் இருக்கின்றன. பெயர் இருக்கிறதே தவிர மாவட்டவாரியாகத் தகவல் இல்லை. மொத்தமாக இப்போது 70 பண்ணைகள்தான் இயங்குகின்றன. கடந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைய பண்ணைகள் திறந்தார்கள். திறந்த பண்ணைகள் பலவும் மூடியவை போக இப்போது 70 தான் இயங்குகின்றன. அவைகளில் இப்போது 45 பண்ணைகள் இலாபகரமாகவும் 25 பண்ணைகள் நட்டத்திலும் நடந்து கொண்டிருக்கின்றன. நட்டத்திலே நடப்பதற்குக் காரணம் சர்க்கார் புறம்போக்கு நிலங்களை எல்லாம் விதைப் பண்ணைகளுக்காக எடுத்தார்கள். அந்த 25-ல் 16 பண்ணைகள் சர்க்கார் புறம்போக்கு நிலத்திலும், 9 பண்ணைகள் வாங்கப்பட்ட நிலத்திலும் இருக்கின்றன. தரமான நல்ல நிலத்தை வாங்காததனால் அவசரப்பட்டுத் தரமான இடமா என்று பார்க்காததனால் அதிக நட்டம் ஏற்பட்டு இருக்கிறது. இந்த நட்டத்தை யெல்லாம் போக்கி நல்ல அளவிலே கொண்டுவர லாபகரமாக இயங்க முயற்சிகள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து நட்டத்தில் இருந்து வரக்கூடிய நிலை இருக்குமானால் மோசமான பண்ணைகளை மூடுகிற நிலையைத்தான் அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை விதைப் பண்ணைகள் குறித்து மாநில அளவில் இரண்டு பகுதிகளாக, தென் மாநிலத்தில் ஒரு பகுதியும் வட மாநிலத்தில் ஒரு பகுதியுமாக இரண்டு கூட்டங்கள் கூட்டி, அதுசம்பந்தமாக ஆராய்ச்சியாளர்களை யெல்லாம் அழைத்து எதனால் நட்டம் ஏற்படுகிறது என்று பரிசீலனை செய்து பார்க்கிறார்கள். இப்போது அங்கே பணியாற்றும் மானேஜர்களுக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லாத அளவுக்கு, விதைப் பண்ணைகளைக் கண்காணிக்கும் அளவுக்குப் பொருளாதார வசதி இல்லாததால், தனியார் பண்ணைகளில் கூலி அதிகமாக இருப்பதாலும், சர்க்கார் பண்ணைகளில் கூலி குறைவாக இருப்பதாலும், தனியார் பண்ணைகளில் பகல் உணவு கொடுப்பதாலும், சர்க்கார் பண்ணைகளில் இந்த நிலை இல்லாததாலும் இன்றையதினம் உற்பத்தி எல்லாம் குறைந்திருக்கிறது. அதனால்தான் நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்று தகவல் வந்திருக்கிறது. அதையெல்லாம் திருத்தி அமைப்பதற்கான முயற்சிகள்—மானேஜர்களுக்குக் கூடுதலான அதிகாரமும், கூடுதலான பணவசதியும், அவசரம் அவசரமாக அவர்களிடமிருந்து கடிதம் வந்தால் உடனடியாகக் கவனிக்க வேண்டிய ஏற்பாடுகள் புதிதாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.



1968 மார்ச் 26]

## படிப்பு உதவிப் பணம் பெற வருமான வரம்பு

*334 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்காலர்ஷிப் வழங்குவதில் பெற்றோர்களின் வருட உச்ச வருமானம் ரூ. 2,000 என்றுள்ள விதியிலிருந்து ஹரிஜனங்களுக்கு விலக்கு அளிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தமிழக அரசு, அரிசன நலத்துறையினர் உதவித் தொகை வழங்குவதற்கான வருட வருமான உச்சவரம்பு 1967-68-ஆம் ஆண்டு முதல் ரூ. 1,500-லிருந்து ரூ 2,000-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. மேற்படி வருமான வரம்பை இன்னும் அதிகரிக்கவோ அல்லது எந்தப் பிரிவினருக்கும் விலக்கு அளிக்கவோ உத்தேசம் இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சபாநாயகரவர்களே, இந்த புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வருவார்கள் என்று சொன்னார்கள். அரிஜன பெற்றோர்களின் வருஷ வருமான உச்சவரம்பு 1,500 என்று இருப்பதிலிருந்து விதிவிலக்கு அளிக்க இனிமேலாவது இந்த அரசாங்கம் பரிசீலிக்குமா ? அப்படி இல்லையென்றால் இந்திய அரசு ஸ்காலர்ஷிப் வழங்குவதில் 300 என்று வருமானம் இருப்பதை, அதையாவது அமைத்துக் கொடுக்க அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ரூ. 1,500 லிருந்து ரூ. 2,000 என்று உயர்த்தியதே புரட்சிகரமான மாறுதல் தான். இந்திய அரசு உதவி செய்யவேண்டும், அதிகப்படியான தொகை ஒதுக்கவேண்டும் என்ற கேள்வி இப்போது எழவில்லை. அதையும் உயர்த்துவதற்கு இந்த அரசு சிபாரிசு செய்யும்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, நமது அரசு பொறுப்பேற்ற பிறகு ரூ. 1,500-ல் இருந்து ரூ. 2,000 என்று வருமான அளவை உயர்த்தியது மகிழ்ச்சிகரமான செய்தி. அதே சமயத்தில் மத்திய சர்க்கார் கொடுக்கின்ற அந்த உதவி மானியம் வருமானத்தை அடிப்படையாக வைத்துக் கொடுக்கிறார்கள். அந்த வருமானத்தை வைத்து இங்கு கேட்டால் மாநில சர்க்காரில் உள்ளவர்கள் இல்லை என்று கூறுகிறார்கள். அங்கே கேட்டால் வருமானத்தை அடிப்படையாக வைத்துக் கொடுக்கிறார்கள் என்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது ஒரு சிலருக்குப் பாதகம் ஏற்படுகிறது. ஆகவே, மத்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி இந்த நிலையை ஒரு நிலையாகச் செய்ய முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரிசன மக்களுக்கு மத்திய சர்க்கார் ஒதுக்குகிற தொகையில் அந்த வருமான எல்லையை முன்னிட்டு ஒதுக்கப்படவில்லை. அதே போன்று ஆதிவாசிகளுக்கு ஒதுக்கப்படுகிற தொகையும் வருமான

எல்லையின் மீது ஒதுக்கப்படவில்லை. வேறு பல சமுதாயங்களுக்கு இந்த ஷெட்யூல்ட் காஸ்ட் வகுப்பினரைச் சேர்ந்தவர்களும் படிக்க வெளிநாடுகளுக்கும் செல்லும்போது ஸ்டடி டூருக்குப் போக வெளிநாடுகளுக்குச் செல்லும்போது அதற்காக வருமான எல்லை 300 ரூபாய் என்றிருக்கிறது. இது எல்லா சமூக மக்களுக்கும் தரப் படவேண்டும் என்ற எண்ணத்தோடு 'லோ இன்கம் க்ரூப்' என்ற வகையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை சமூக அடிப் படையில் அல்ல, பொருளாதார அடிப்படையில் ஒதுக்கப்பட்டிருக் கிறது. அந்த அடிப்படையில் வருமான எல்லை 300 ரூபாய் என்றி ருக்கிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா:** ஐயா, நமது அரசாங்கம் பொறுப் பேற்ற பிறகு 1,500 ரூபாயை 2,000 ரூபாயாக ஆக்கியிருப்பது பாராட்டுதற்குரியது. அதைப் போலவே வருஷ வருமானம் 300 ரூபாயாகயிருந்தால்தான் மத்திய சர்க்காரின் உதவி கிடைக்கும் என்பதை 600 ரூபாயாக உயர்த்த அரசாங்கம் ஆலோசிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தொகை உயர்த்தப்பட வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக் கொண்டாலும் உயர்த்தக்கூடிய அதிகாரம் நமக்கில்லை, மத்திய சர்க்கார்தான் உயர்த்த வேண்டும். அதற்குச் சிபாரிசு செய்து கொண்டு வருகிறது.

**திரு. எம். பூபதி:** தலைவரவர்களே, இந்த மாநில சர்க்கார் ஸ்காலர்சிப் பெற 1,500 ரூபாயாகவிருந்ததை 2,000 ரூபாயாக உயர்த் தியிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் 2,000 ரூபாய் என்றிருந் தால் மாதம் 170 ரூபாய் பெறுகின்ற ஆசிரியர்கள், குமாஸ்தாக்கள், தொழிலாளர்களில் பல்லாயிரக்கணக்கானவர்கள் இந்த ஸ்காலர்சிப் பெற ரூபாய் 2,000 என்று இருப்பதால் ஏற்படக்கூடிய, நற்பலன் களை பெற முடியாமலிருக்கின்ற காரணத்தினால் அதை உயர்த்தி மாற்றியமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இந்த வருட வருமான எல்லையை 3,000 ரூபாயாக ஆக்கவேண்டுமென்று ஒரு கோரிக்கை ஏற்கெனவே இருந்து வருகிறது. அதை வைத்துப் பரிசீலனை செய்தோம். ஆனால் இன்றிருக்கும் நிதிநிலை சூழ்நிலையில் 2,000 ரூபாய் வரைதான் தரமுடியுமென்று ஒத்துக் கொள்ளப்பட்டது. மேலும் ஒதுக்குவது குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. கே. விநாயகம்:** சமூகத்திலே கடைசிக் கட்டத்திலே இருப் பவர்கள் அரிசனங்கள். அதற்குமேலே பிற்பட்டவர்கள். அதற்கு மேலே முற்பட்டவர்கள் என்று இருப்பதால் பிற்பட்டவர்களுக்கும் ஒரே சலுகை, அரிசனங்களுக்கும் ஒரே சலுகை. இந்த வருமான எல்லையைப் பொறுத்தவரையில் இப்படியிருப்பது அரிசனங் களுக்குப் பிரத்தியேகமாகச் செய்வதாகக் கருதப்படமாட்டாது. ஆகையால் அரிசனங்களுக்காகச் சலுகை கொடுக்க வேண்டுமென்ற



எண்ணம் கொண்டுள்ள இந்தச் சர்க்கார் வருமான எல்லையே யில்லாமல், அரிசனங்களின் பிள்ளைகளுக்கு, பெற்றோர்கள் எவ் வளவு சம்பாதித்தாலும் அதைப்பற்றிக் கவலையில்லாமல், அவர் களுக்கு எல்லா வசதிகளும், கல்வி முதலியன எல்லாம் "ஃபவர் ஃபோரின் ஸ்டடீஸ்" கொடுக்க முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இப்பொழுது அரிசனங்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு எவ்வளவு பேருக்கு வேண்டுமானாலும் தரப்பட்டு வருகிறது. ஆனால் வருமான எல்லையோ, வேறு எந்தத் தகுதியோ பாராட்டாமல் இருக்க முடியாது. மாநில சர்க்காரும் தருகிறது, மத்திய சர்க் காரும் தருகிறது. ஆனால் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத்தான் மத்திய சர்க்கார் தரவில்லை. மாநில சர்க்கார் மாத்திரம் கொடுக் கிறது.

**திரு. என். ராஜாங்கம்:** தலைவரவர்களே, மாநில சர்க்கார் கொடுக்கும் அந்த உதவிப் பணத்திற்கும் மத்திய சர்க்கார் கொடுக் கிற உதவிப் பணத்திற்கும் வேறுபாடு என்ன? ஏதாவது வேறு பாடு இருந்தால் வருமான வேறுபாடு இருக்கலாம். இந்த வேறுபாட்டின் அடிப்படையில் இந்த இரண்டு சர்க்காரும் உதவிப் பணம் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குக் கொடுக்கிறது. அதுபோலவே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் கொடுக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தாழ்த்தப் பட்ட மக்களுக்கு இனத்தின அடிப்படையிலே மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் தருகிறது. பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு மத்திய சர்க்கார் தரவில்லை. மாநில சர்க்கார் மாத்திரம் தருகிறது. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் தர வேண்டுமென்ற எண்ணத்தால் இனத்தை அடிப்படையாக வைக்காமல் வருமானத்தை அடிப் படையாக வைத்து ரூ. 300, ரூ. 500 என்ற வருமான எல்லையை வைத்து அந்தச் சலுகைகளைத் தருகிறது. இனத்தை அடிப்படை யாக வைத்து அரிசனங்களுக்கு இரண்டு அரசாங்கங்களும் உதவிக் கொண்டு வருகின்றன.

**திரு. கே. என். குமாரசாமி:** சார், ரூ. 2,000 வரைக்கும் வரு மானம் வந்தால் சலுகை அளிக்கிறது. மில்களில் வேலை செய்யக் கூடிய அரிசனத் தோழர்கள் ஒரு வருஷத்தில் 240 நாள் வேலை செய்தால் அவர்களுக்கு 1,630 ரூபாய் வருகிறது. முன்னூற்றுப் பன்னிரெண்டு நாள் வேலை செய்தால் 2,256 ரூபாய் வருகிறது. அப்படி 312 நாள் வேலை செய்து 2,256 ரூபாய் வாங்கினாலும், 240 நாள் வேலை செய்து 1,680 ரூபாய் பெற்ற கணக்கிலே அவர்களுக்குச் சலுகை கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இந்த வருமான எல்லை சம்பளத்தின் மீது மாத்திரமல்ல. வருமானம் எந்த வகையிலே, எப்படி வந்தாலும் ரூ. 2,000-க்கு மேற்படாமல் இருக்க வேண்டும். அது வீட்டு வாடகையிலோ, அல்லது

வியாபாரத்திலோ எப்படியோ வரலாம். அதேபோல் 30 நாள், 28 நாள் வேலை செய்வதைப்பற்றி கணக்கில்லாமல் வருஷத்திற்கு 2,000 ரூபாய் எல்லை என்று வைக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM: On a point of order, Sir. The Minister is giving a wrong reply to the House. The question is whether the Harijan students, the annual income of whose parents is more than Rs. 2,000 will be given scholarships. In answer to my supplementary question the Minister said that there was no income limit for grant of scholarship to Harijan students. They are contradictory. Either the one must be correct or the other must be correct. Which of them is correct?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: நான் சொன்னதை கனம் அங்கத்தினர் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. நான் தமிழில்தான் பேசுகிறேன். ஒருவேளை ஆங்கிலத்தில் சொன்னால் தான் புரியுமோ, என்னவோ. நான் அப்படிச் சொல்லவில்லை.

திரு. கே. விநாயகம்: ஆங்கிலத்தில்தான் சொல்லுங்களேன்.

(பதில் இல்லை)

*Office of Sessions Judge, Madurai*

*335 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(a) whether the Office of the Sessions Judge, Madurai has been shifted from the present place at Thirumalainaicken Mahal: and

(b) if so, the reason therefor?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) திருமலை நாயக்கர் மகாலிலுள்ள அலுவலகங்களில் சில பிரிவுகள் ஒரு அறையிலிருந்து வேறு அறைக்கு மாற்றப்பட்டபோதிலும், இந்த அலுவலகங்கள் திருமலை நாயக்கர் மகாலிலேயே செயல்பட்டு வருகின்றன.

(இ) இவ் வினா எழவில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: தலைவரவர்களே, திருமலை நாயக்கர் மகாலிலிருந்து செஷன்ஸ் கோர்ட்டை மாற்ற, அந்த மகால் மிகவும் பழுதான நிலைமையிலிருப்பதால் என்ற காரணத்தைக் காட்டி வேறு பகுதிகளிலே மற்ற அலுவலகங்களை வைப்பதால் அதற்கு அபாயம் ஏற்படாதா என்று உத்தேசம் பண்ணி, திருமலை நாயக்கன் மகாலிலிருந்து எல்லா அலுவலகங்களையும் மாற்ற இந்த அரசாங்கம் முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, எந்த அலுவலகமும் இப்பொழுது மாற்றப்படவில்லை. அங்கே சிலவிடங்கள் மராமத்துப்பட்டிருக்கின்றன. புது நீதி மன்றம் கட்டப்பட்டு வருகிறது. அதற்குப் பிறகு எல்லா அலுவலகமும் மாற்றப்படும்.



திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவரவர்களே, பண்டைத் தமிழகக் கட்டிடக் கலைக்குச் சான்றாகவும், இன்றைய பொறியியல் துறைக்குச் சவாலாகவும் விளங்கும் இந்த மகாலில் அரசின் அலுவலகங்கள் செயல்படுவதால் அதன் அழகு கெடுகிறது. மேலும் அங்கு அடிக்கடி பழுது ஏற்படுவதால் அதைக் கவனிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ததா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த மகாலைப் பழுது பார்த்து நல்ல முறையில் வைக்க நூறு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது, நீதி மன்றம் மாற்றப்பட்டவுடன் அந்த வேலை துவங்கும்.

திரு. கரு. சீமைச்சாமி: இந்த நீதிமன்றத்திற்குப் புதிதாகக் கட்டிடம் கட்டிக் கொண்டிருப்பதாகக் கூறினாகள். அந்தக் கட்டிடம் எப்போது கட்டப்பட்டு நீதிமன்றம் அங்கே மாற்றப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நமது அங்கத்தினர் சமீபத்தில் மதுரைக்குச் சென்றிருப்பார் என எண்ணுகிறேன்: மிக விரைவாக வேலை நடந்து வருகிறது. ஜூன் மாதத்திற்குள் 'கிரவுண்ட் ஃப்ளோர்' மட்டும் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கிறேன்.

*Government Ophthalmic Hospital, Madras*

*336 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) is it a fact that the Government Ophthalmic Hospital in Madras is kept in a most insanitary condition; and

(b) if so, the steps taken to improve it?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM: Is the Minister aware of the fact that many "letters to the editor" appeared in the Press regarding the insanitary condition of this Hospital and has the Minister at least once visited the hospital at least after any giving notice of the question? It is still in a very sad state. Will the Government rectify the defecti n the intersets of the atients, in the interests of the people and in the interests of the party in power instead of evading a proper answer to my question?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி நேரத்தில் "இவேடிங் தி கொஸ்டின்" என்றெல்லாம் சொல்லக் கூடாது. கேள்வியாகக் கேளுங்கள்.

THIRU K. VINAYAKAM: He can evade, I have a right to say that he is evading.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டுகள் இருக்கக் கூடாது என்று விதியிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பத்திரிகைகளில் இதுபோன்ற கோரிக்கை வந்திருப்பது எனக்குத் தெரியாது. கனம் உறுப்பினர் கேள்விக்கு முன்னாலேயே நான் அங்கு சென்றிருக்கிறேன்.

I have made a surprise visit to the Government Ophthalmic Hospital on 8th February 1968 at 11 a.m. and found the condition satisfactory.

8—2—1968-ஆம் தேதியன்று நானாகவே சென்று "ஆப்தல்மிக்" ஹாஸ்பிடலையும் பார்த்திருக்கிறேன். நான் பார்த்த அளவில் குறை யில்லை.

THIRU K. VINAYAKAM : On a point of personal explanation. Please take my original question. It was put not in February but much earlier. Only after several "letters to the editor" appeared in the Press, I put the question. It is not as if I want to quarrel with the Minister. Will he take my allegation into consideration and see whether the malady can be remedied?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்பதற்கு முன்னேயே நான் போய்ப் பார்த்தேன்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : சார், மத்திய சர்க்கார் சுகாதார அமைச்சர் திரு. சந்திரசேகரன் அவர்கள் கூட சென்னையிலே ஒரு விழாவில் பேசும்பொழுது சென்னையிலுள்ள ஆஸ்பத்திரிகளில் சுகாதார முறை சரியாகயில்லை, அவைகளை யெல்லாம் சீர்படுத்த வேண்டுமென்று சொன்னாரே அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றி எனக்குத் தெரியாது. கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னால் அது பற்றிக் கவனிக்கப்படும்.

DR. H. V. HANDE : Sir, the complaint with regard to the Government Ophthalmic Hospital which my hon. Friend, Thiru Vinayakam, has raised, is a chronic one. It has been there for the past 10 or 15 years. In fact three years ago there was a facsimile printed in the 'Indian Express' in that regard. The officers there insisted upon the income certificate and even if a serious patient goes there and if he does not produce an income certificate, his case is not attended to immediately and there is enormous delay, about which we have raised questions in the Legislature. Now that the new Ministry has assumed office, will the Hon. Minister give an assurance or tell us whether he will take particular interest in this Hospital especially in view of the fact that there has been a chronic complaint on the working of the hospital?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The main question is about the sanitary conditions of the hospital,





திரு. டி. மார்டின் : டெபுடி ஸ்பீக்கர் சார், அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்ற நேரத்தில், பத்திரிகையிலே வந்தது தெரியாது என்று கூறினார்கள். நம்முடைய அரசில் இன்பர்மேஷன் டிபார்ட்மெண்ட் என்று ஒரு டிபார்ட்மெண்ட் இருக்கிறது. (மாண்புமிகு பேரவை முன்னவர் தலைவர் மணி அடித்தார்). I am putting the question அதிலிருந்து அமைச்சர் அவர்களுக்கு அவருடைய இலாக்கா சம்பந்தப்பட்ட முறையில் பத்திரிகையில் வருகின்ற செய்தியைத் தெரிவித்துள்ளார்களா என்று மட்டும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய செய்திகளாக இருந்தால், அது அவசியமாகத் தெரிவிக்கப் பட்டுத்தான் வருகிறது.

### மாம்பலம் ரயில் நிலையத்தருகில் சுரங்கப்பாதை

* 337 வினா.—திரு. வை. சுவாமிநாதன், திரு. நா. காசிராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

பழைய மாம்பலத்தில் உள்ள லேக் வியூ சாலையையும் புதிய மாம்பலத்தில் உள்ள துரைசாமி சாலையையும் இணைக்கும் ரோடின் இடையில் உள்ள ரெயில்வே கேட்டின் கீழ் ஒரு சுரங்கப் பாதை (Sub-way) அமைக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஆம்.

திரு. நா. காசிராமன் : சார், இந்தச் சுரங்கப் பாதைகள் அமைப்பதற்குக் கார்ப்பரேஷனுக்குக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு? அதற்காக ஒதுக்கப்பட்ட தொகைகூடச் செலவழிக்கப்படவில்லை என்று அப்ரோப்ரியேஷன் அக்கவுண்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை உபயோகப்படுத்தி, அந்தச் சுரங்கப் பாதைகளை வெகு விரைவிலே அமைக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அந்தச் சுரங்கப் பாதையை 9 அடி உயரத்தில் கட்டுவதாக முன்னாலே திட்டமிடப்பட்டிருக் கிறது. அதை 12 அடி உயரத்தில் கட்டினால் போக்குவரத்து வண்டிகளும் செல்லக்கூடிய முறையில் இருக்கும் என்று திருத்திய மதிப் பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இதற்காக 25 லட்சம் ரூபாய் செலவிடப்படும் என்று மதிப்பிடப்பட்டபோது, மாநகராட்சி மன்றம் பாதியை ஏற்றுக் கொள்ளுவதாகவும் அரசாங்கம் பாதியை ஏற்றுக்கொள்ளுவதாகவும் முடிவு செய்யப்பட்டு, அந்த வேலையைச் செய்கின்ற பொறுப்பு மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்

பட்டிருக்கிறது. ஏற்கனவே, ரூ. 3,50,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்த ஆண்டிலும் அதே அளவு தொகை கொடுக்கப்போவதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE: Sir, will the Hon. Minister tell us the exact stage at which the matter is, whether any survey work has been completed and whether any work has actually been started and also the number of years within which the Ministry expects this sub-way to be completed?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அதுபற்றிய முழு விவரம் இல்லை. இருந்தாலும் நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக ரூ. 39,673.98 பைசாக்கள் செலுத்தி, நிலத்தை வாங்கியிருக்கிறார்கள். இப்பொழுது 12 அடி அளவு உயரமாக மாற்ற வேண்டுமென்ற முறை இருப்பதனாலே மேலும் இரண்டு பக்கங்களிலேயும் நிலத்தைக் கையகப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. வேலைகள் துரிதமாக நடைபெறும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், சுரங்கப் பாதைகளுக்கு உள்ளே திரம்ப அசிங்கமாக, நாற்றம் அடிக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? மழைக் காலத்தில் மழைத் தண்ணீர் தேங்கக்கூடிய அளவுக்கும் நிலைமை இருக்கிறது. இதை எல்லாம் நல்ல முறையில் அரசு கவனிக்குமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இந்தச் சுரங்கப்பாதை இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. கட்டி முடித்த பிறகு அதிலே அசுத்தம் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும்.

**திரு. நா. காசிராமன்:** சார், முன்பு 3½ இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. மறுபடியும் அதே தொகை கொடுக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். அந்தத் தொகை எந்த ஆண்டு கொடுக்கப்பட்டது, வேலை எப்பொழுது தொடங்கும் என்று கூற முடியுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இதுவரை 3.50 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்தத் தேதியிலே கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதற்கான விவரம் இல்லை. இப்பொழுது இந்தக் கையகப்படுத்துவதற்கான வேலைகள் எல்லாம் முடிந்தவுடன், இதர வேலைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** தலைவர் அவர்களே, இந்த சப்-வே கட்டுவதற்கு அரசாங்கம் சென்னை மாநகராட்சியுடன் சேர்ந்து ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ரெயில்வே டிபார்ட்மெண்டிடம் பங்குத் தொகை கேட்கப்பட்டதா? கேட்கவில்லையென்றால் இனியாகிலும் கேட்பதற்கு உத்தேசம் உண்டா?



**திரு. எம். சண்முகம்:** இப்படிப் பல முக்கிய நகரங்களின் ஊடே ரெயில்வே பாதைகள் செல்லுகின்ற காரணத்தால், ரெயில் செல்லுகின்ற இதுபோன்ற பகுதிகளில் சப்-வே ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடம் நம்முடைய அமைச்சர் அவர்கள் வற்புறுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இது அந்த அந்த இடங்களிலிருந்து வருகின்ற வேண்டுகோள்களைப் பொறுத்துப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண்கள் 322, 323, 324, 325, 326 ஆகியவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்குட்பட்டு ஒத்திவைக்கப்படுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருப்பதால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. முதலமைச்சரின் விளக்கவுரை

### அரசு போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, பேரவையின் 82-வது விதியின்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திற்கு ஓர் அறிக்கையை அளிப்பார்கள்.

***மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** தலைவர் அவர்களே, 82-வது விதியின்படி அவைமுன், வருந்தத்தக்க நிகழ்ச்சித் தொடர் ஒன்று பற்றி எடுத்துரைக்க விரும்புகிறேன்.

நேற்று மாலை, அரசு பேருந்தில் பயணம் செய்த சட்டக் கல்லூரி மாணவருக்கும் கண்டக்டர், டிரைவருக்கும் கைகலப்பு ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து சட்டக் கல்லூரி உணவு விடுதிக்குள், பேருந்தைத் தள்ளிச் சென்று மாணவர்கள் வைத்துக் கொண்டனர்.

மாணவருக்கும் பஸ் கண்டக்டர், டிரைவருக்கும் ஏற்பட்ட கைகலப்புத் தொடர்ந்தது.

ஒரு கண்டக்டரும் டிரைவரும் தாக்குதலுக்கு ஆளாகி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.

இதன் தொடர்பாக பேருந்து டிரைவர்களும் கண்டக்டர்களும், வேலை நிறுத்தம் செய்தனர். பேருந்துகளைப் பாதையிலே ஆங்காங்கு விட்டுவிட்டு, தாக்குதலை விசாரிக்க வேண்டுமென்று ஊர்வலம் சென்றனர்.

அதிலே ஒரு பிரிவினர் முதலமைச்சர் இல்லம் சென்று, தாக்குதலைப்பற்றிய கண்டனத்தைத் தெரிவித்தனர்.

[1968 மார்ச் 26

[திரு. சி. என். அண்ணாதுரை]

இந்த வருந்தத்தக்க நிகழ்ச்சி குறித்த தகவல் கிடைத்தவுடன், முதலமைச்சர் இல்லத்தில் எல்லா அமைச்சர்களும் நிலைமைபற்றி விவாதிக்கக் கூடியிருந்தனர்.

முதலமைச்சர் இல்லம் வந்த தொழிலாளர்களை எல்லா அமைச்சர்களும் சந்தித்தனர். நடைபெற்றது குறித்து தக்க விசாரணை நடைபெறும் என்றும், நியாயம் கிடைக்கு மென்றும் முதலமைச்சர் உறுதி கூறி, தொழிலாளர்களை அமைதி காத்துத்தரும்படி வேண்டுகோள் விடுத்தார். தொழிலாளர்களும் சம்மதம் தெரிவித்து விட்டுச் சென்றனர்.

இதற்கிடையில் போக்குவரத்துத்துறை அதிகாரிகளும் போலீஸ் மேல் மட்ட அதிகாரிகளும் தொழிலாளர்களைக் கண்டு பேசி, நீதி கிடைத்திடச் செய்வதாக வாக்களித்து பாதையிலே விடப்பட்ட பஸ்களை, தலைமையகத்துக்குக் கொண்டு சேர்க்கும்படி கேட்டுக் கொண்டனர். தொழிலாளர்கள் அதன்படியே பல பஸ்களைக் கொண்டு வந்து சேர்த்தனர்.

மாணவர்கள், பிடித்து வைத்துக் கொண்ட பேருந்தைத் தர மறுத்து விட்டனர்.

கெல்லீஸ் பக்கத்திலே நிறுத்தி வைக்கப்பட்ட பஸ்களைக் கொண்டுவர, வேறு இரண்டு பஸ்களில் தொழிலாளர்கள் சென்ற போது, மீண்டும் மாணவர்களுக்கும தொழிலாளர்களுக்கும் கைகலப்பு ஏற்பட்டது.

உணவு விடுதிக்குள்ளே இந்தக் கைகலப்பு ஏற்பட்டதில், இரண்டு தொழிலாளர்களும் இரண்டு மாணவர்களும் காயமுற்றனர். அனைவரும் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.

தாக்குதலுக்கு ஆளான தொழிலாளர்களில் ஒருவர், மருத்துவ மனையில் இறந்துவிட்டார் என்ற நெஞ்சுருக்கும் செய்தியைக் கூற நேரிட்டிருக்கிறது. என்னோடு சேர்ந்து இந்த அவை, தன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளும் என்று நம்புகிறேன்.

தாக்குதலை யொட்டி தொழிலாளர்கள் சட்டக் கல்லூரி மாணவர் விடுதிக்கு அருகில் திரண்டு விட்டனர். விடுதிக்குள்ளே உள்ள மாணவர்களுக்கும் வெளியே நின்றிருந்த தொழிலாளர்களுக்கும் இடையில் பயங்கரமான மோதுதல் ஏற்படாதிருக்க ஐ.ஜி. அவர்களும் கமிஷனர் அவர்களும் அங்கேயே இருந்து அமைதியை நிலை நாட்ட மிகுந்த அக்கறை காட்டிப் பணியாற்றினர். ஆனால் அமைதி ஏற்படாதது மட்டுமல்லாமல், நிமிடத்துக்கு நிமிடம் நிலைமை மோசமாகிக் கொண்டு வந்தது.

எனவே விடியற் காலை 3 மணி அளவில் பொதுப்பணித் துறை அமைச்சர் கருணாநிதி, அமைச்சர்கள் முத்துசாமி, கோவிந்தசாமி ஆகியோர் அந்த இடத்திற்குச் சென்றனர்.

தொழிலாளர்களிடம் அமைச்சர் கருணாநிதி நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறித்து விசாரணை நடத்தப்படும், நீதி நிலைநாட்டப் படும், குற்றம் இழைத்தவர்கள் மீது நடவடிக்கை மேற்



1968 மார்ச் 26] [திரு. சி. என். அண்ணாதுரை]

கொள்ளப்படும் என்று உறுதி அளித்து அமைதியை நிலைநாட்டும் படி வேண்டிக் கேட்டுக் கொண்டார். தொழிலாளர்கள், கலைந்து செல்ல மறுத்ததுடன், தாக்கிய மாணவர்களை உடனடியாகத் தண்டிக்க வேண்டுமென்று வலியுறுத்தினர். முறைப்படி காரியம் நடைபெறும் என்று அமைச்சர் அளித்த வாக்குறுதி தொழிலாளர்களுக்குத் திருப்தி அளிக்க வில்லை. கூட்டம் கலைய வில்லை.

இது போன்றே சென்னை மருத்துவக் கல்லூரி விடுதி அருகிலும் கவலையூட்டத்தக்க நிலைமை வளர்ந்தது. கலைக் கல்லூரி விடுதி அருகிலேயும் நிலைமை கவலைக்கிடமானதாக வடிவமெடுத்தது.

கூட்டத்தைக் கலைத்து அமைதியை நிலைநாட்டும் பணியில், ஐ.ஜி. அவர்களும் கமிஷனர் அவர்களும் ஈடுபட்டனர்.

தடியடி, கண்ணீர்ப் புகை ஆகியவை மூலம் கூட்டத்தைக் கலைத்திட, போலீஸ் அதிகாரிகள் முயற்சித்தனர்.

இதற்கு இடையில் இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சி தலைவர் களான, சட்ட மன்ற உறுப்பினர்கள் திரு. கோதண்டராமனையும், கோவிந்தராஜன் அவர்களையும் வரவழைத்து நிலைமைபற்றி முதலமைச்சர் எடுத்துக் கூறி, தொழிலாளர்களைக் கலைந்து போகும்படிச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டு கெல்லீஸ் சென்று தொழிலாளர்களிடம் பேசி அமைதியை நிலைநாட்டப் பணியாற்றினர். இந்தப் பிரச்னையில் அவர்கள் காட்டிய அக்கறைக்காகவும், திறமைக்காகவும் இந்த அரசு தன் நன்றி கலந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஆனால் அவர்களின் வேண்டுகோளும் தொழிலாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இரவு முழுவதும், அமைச்சர்கள் இந்த துக்ககரமான நிகழ்ச்சி, பயங்கர அளவு செல்லாதிருக்க வேண்டுமென்ற கவலையுடன் கவனம் செலுத்தினர்.

நிலைமை சீர்திருந்துவதற்கு இந்த அவையினர் எனக்கும் அரசுக்கும் துணை நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இது கட்சிப் பூசலாகவோ, இலட்சிய மோதுதலாகவோ கூட அமையவில்லை. எனவே சமுக நலத்திலும், நீதி நேர்மையிலும், ஒழுங்கு அமைதியிலும், நாட்டம் கொண்டுள்ள பொறுப்பிலுள்ள அவையினர் தங்கள் மேலான துணையினை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெஞ்சுருக்கத் தக்க முறையில் தொழிலாளர் தோழர் ஒருவர் மரணமடைந்தது குறித்து எவரும் ஆற்றொணாத் துக்க மடைவார்கள் என்ற போதிலும் இது குறித்த உணர்ச்சி மேலும் அமைதி கெடுவதற்கான முறையில் அமைந்திடாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறித்து ஒரு நீதி விசாரணை நடத்துவது என்று இந்த அரசு முடிவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைதியையும் நீதியையும் நிலைநாட்டுவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

போலீஸ் துறையின் புலனாய்வு நடைபெறும் என்பதையும் சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்வதிலே தயக்கமோ, தாட்சண்யமோ காட்டப்பட மாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, இது சம்பந்தமாக நாங்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். முதல் அமைச்சர் அவர்கள்
மு. ப. 10-00 மிகவும் பிரத்தியட்சமாக இருக்கும்படியான நிலையை எடுத்துக் கூறியிருக்கிறார்கள், மிகவும் உருக்கத்துடன் ஒரு செய்தியை எடுத்துக் கூறினார்கள். இறந்த தோழருக்கு என் சார்பாகவும், என்னுடைய கட்சியின் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபத்தை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு சுமுகமான நிலைமை ஏற்பட வேண்டுமென்பதற்காக, சமூகப் பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே, என்னுடைய சார்பாகவும், என்னுடைய கட்சியின் சார்பாகவும் ஒரு சுமுகமான நிலை ஏற்படுவதற்கு முதல் அமைச்சர் அவர்களுக்கு நாங்கள் நிச்சயமாக உதவி தருகிறோம். அதில் எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரே ஒரு விஷயத்தை மட்டும் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நிலைமை எப்படியோ கட்டுக்கு அடங்காமல் போய்விட்டது. மருத்துவக் கல்லூரி விடுதியிலும், வெடரினரி காலேஜ் விடுதியிலும் நிலைமை மோசமாக இருப்பதாகத் தெரிகிறது. இப்பொழுது கூட ஒரு போன் வந்தது. வெடரினரி காலேஜில் புகுந்து ஒரு சிலர் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்னும்படியான செய்தி வந்திருக்கிறது. தயவு செய்து, மாணவர் விடுதிகளில் யாரும், எத்தகைய சக்தியும் புகுந்து தொல்லை கொடுக்காமல் இருக்கும்படியான நிலையை அவர்கள் ஏற்படுத்த வேண்டும் என்பது நான் என்னுடைய வேண்டுகோள். நம்முடைய நாட்டில் நிலைமை மிகவும் கீழே போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்தப் பொறுப்பு எல்லோருக்கும் இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதுமாதிரி தவறு செய்யும்பொழுது யார் தவறு செய்தாலும் சரி, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக மருத்துவக் கல்லூரி விடுதியில் சிலர் புகுந்து அநாகரிகமான நிலையிலே நடந்து கொள்வது தடுக்கப்பட வேண்டும். வெடரினரி காலேஜிலும் புகுந்து அப்படிச் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. உடனே போலீஸுக்குத் தகவல் கொடுத்து மாணவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளித்து, அமைதியை நிலைநாட்ட சகலமான நடவடிக்கைகளையும் முதல் அமைச்சர் அவர்கள் எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன எல்லா நடவடிக்கைகளும் நல்ல முறையிலே எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த



நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டே இருக்கிற நேரத்தில் பல்வேறுவகையான புகார்கள் வந்தபடி இருக்கின்றன. அவைகளெல்லாம் உண்மையா என்று அவ்வப்பொழுது கண்டறிந்து கொண்டிருக்கிறோம். நான் இன்னொன்று எடுத்துச் சொல்ல வந்தேன். ஆனால் அதில் குறிப்பிடப்பட்டிருப்பதைச் சொல்வதற்கு துக்ககரமான நிகழ்ச்சியைப்பற்றி சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, இயற்கையாகவே தவறிவிட்டது. அது என்னவென்றால், மக்கள் அமைதியாக இருக்கவேண்டும், இதற்குத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சமூகத்திற்கு உறுதி அளிக்கின்ற முறையில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் மட்டுமல்ல, இந்த நாட்டினுடைய பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற எல்லா கட்சித் தலைவர்களும், பிறகு, மாலை ஒரு மணி சுமாருக்கு நாம் எல்லோரும் கூடி, கலந்து பேசி, பொது மக்களுக்கு ஒரு வேண்டுகோளாக ஒரு அறிக்கை வெளியிடுதல் வேண்டும். ஆகவே, அதைப்பற்றி உங்களுடன் கலந்து பேசுவதற்கு உங்களை நான் அன்போடு அழைக்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : முதல் அமைச்சர் அவர்கள் அழைப்பை பூரணமாக எல்லாக் கட்சியினரும் ஏற்றுக்கொண்டு, சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு எல்லாவிதமான முயற்சிகளையும் நாங்கள் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்று நான் உறுதி அளிக்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, after hearing the speech of our Chief Minister about the incidents that took place in the City of Madras and agreeing with his views expressed on the floor of this House, I suggest that we may show our respect to the departed soul—I am not concerned with whoever the person concerned may be. Somebody died on account of the disturbance. I move that this House may show respect to the departed soul in whatever from the Government think fit. It is open to the Government to suggest the form. I suggest that this House may stand in silence for one minute as a mark of respect to the departed soul.

The Members stood in silence for one minute as a mark of respect to the departed soul.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

#### அரசு போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது இந்த நிகழ்ச்சியை ஒட்டி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்; திரு. செ. பாலசுப்பிரமணியன், திரு. கே. போஜன், திரு. கே. என். குமாரசாமி, திரு. வி. கே. கோதண்டராமன், திரு. ரா. ராமசந்திர துரை, திரு. க. இராமமூர்த்தி ஆகியோர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய அறிக்கைக்குப் பிறகு இது தேவைதானா என்பதை

அவர்களே அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர்கள் அந்தத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டால் நலமாக இருக்கும்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: ஏற்கனவே இதைப்பற்றி நான் சொல்லியிருக்கிறேன். முதல் அமைச்சர் அவர்களுடைய அறிக்கைக்குப் பிறகு அது தேவையில்லை. ஏனென்றால், இன்னும் நிலைமையைக் குழப்பாமல் இருக்கவேண்டும்.

திரு. செ. பாலசுப்பிரமணியன்: முதல் அமைச்சர் அவர்களுடைய அறிக்கைக்குப் பிறகு நான் என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

திரு. கே. போஜன்: முதல் அமைச்சர் அவர்களுடைய அறிக்கையைக் கேட்டபிறகு நான் என்னுடைய தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: முதல் அமைச்சர் அவர்கள் அவர்களுடைய நடவடிக்கை அறிக்கையை வாசித்தார்கள். சமூகத்தில் அமைதி நிலவுவதற்கான சகலவிதமான நடவடிக்கைகளையும் தீர்க்க ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் ஒரு நிலைமையில், அவர்களுடைய உருக்கமான வேண்டுகோளுக்கிணங்க என்னுடைய தீர்மானத்தை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன்.

திரு. ரா. ராமச்சந்திர துரை: கனம் முதல் அமைச்சர் அவர்கள் அறிக்கையைக் கேட்ட பிறகு, நிச்சயம் அதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு ஆவன செய்வார்கள் என்ற நம்பிக்கையில் என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தை திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்தக் குழப்பமான சூழ்நிலையைத் தீர்ப்பதற்கு எடுத்துள்ள முயற்சிகளைக் கேட்ட பிறகு, அவர்களுக்கு உறுதுணையாக நிற்கின்ற முறையிலே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: நானும் என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் திரும்பப்பெற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன்: இந்த மாணவர் கோரிக்கைகளின்மீது விவாதம் செய்வதைவிட இப்பொழுது இந்த அவையை ஒத்தி வைத்துவிட்டு இன்றைக்கு மாலையிலே இது சம்பந்தமாக விவாதம் வைத்துக்கொண்டாலும் சரி அல்லது நாளைக்கு தள்ளிப் போட்டாலும் சரி; இப்பொழுதே இந்தக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டினால் அமைதியை நிலைநாட்டக்கூடிய



அளவுக்கு அதிலே கவனம் செலுத்துவதற்கு உதவியாக இருக்கும் என்பது என்னுடைய ஆலோசனை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: விவாதத்தைத் தொடங்கி சில உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கலாம். அதற்கு மத்தியிலே தலைவர்கள் போய் முதல் அமைச்சர் அவர்களுடன் கலந்து தக்க முடிவுகள் எடுக்கலாம.

### 4. கவன ஈர்ப்பு.

### திருத்துறைப்பூண்டி வட்டத்தில் பறவைகளினால் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம்.

திரு. ந. தருமலிங்கம்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டம் முழுவதிலுமுள்ள நஞ்சை நிலங்களில் விளைந்துள்ள தானியங்களை (நெற்கதிர் மணிகளை) "சிறவி" என்ற கொடுமையான பறவைகள் கூட்டம் கூட்டமாக வந்து அழித்து நாசம் செய்து வருவதைத் தடுக்கும் முறையில் எந்த விதமான கட்டுப்பாடுமின்றி இந்த சிறவிப் பறவைகளை பிடித்துக் கொள்ள விவசாயிகளுக்கு அனுமதியளிக்க வேண்டிய அவசியம் பற்றிய அவசரமும் பொது முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் திருத்துறைப் பூண்டி தாலுக்கா தலைஞாயர் பஞ்சாயத்து ஒன்றியப் பகுதிகளில் நெற்பயிர்களை, சிறவி, சம்புக்கோழி, உள்ளான் முதலிய பறவைகள் சேதப்படுத்துகின்றன என்றும், அவைகளைச் சுடுவதற்கும், பிடிப்பதற்கும், அவரிக்காடு, வாட்டாகுடி, ஓரடியம்பலம் கிராம மக்கள் அரசினிடம் அனுமதி கோரியிருந்தார்கள். இந்தப் பறவை இனங்களால் சேதப்படுத்தப்பட்ட இடத்தை, சேர்ந்து பார்வையிட விவசாய கூட்டு நெறியாளர், சென்னை மாநில வன விலங்கு அலுவலர், தஞ்சை மாவட்ட வருவாய் அலுவலர் இவர்கட்கு அரசு உத்தரவு அனுப்பியது. இவர்கள் அந்த இடத்தை 25—2—1968 அன்று பார்வையிட்டார்கள். திரு. தருமலிங்கம், எம்.எல்.ஏ., தலைஞாயர் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர், தலைஞாயர், வண்டல் கிராமங்களைச் சேர்ந்த முக்கிய விவசாயிகளும் அதிகாரிகள் பார்வையிடும்போது உடன் இருந்தார்கள். அதிகாரிகளால் ஓர் அறிக்கை அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதிகாரிகளும் திரு. தருமலிங்கம் அவர்களும் சேர்ந்து அரசாங்கத்திற்குக் கீழ்க்கண்ட சிபாரிசுகளை அனுப்பியிருக்கின்றனர்.

(1) கீழ்க்கண்ட பறவைகள் அறுவடை காலத்தில் (நவம்பர் முதல் பிப்ரவரி வரை) நெல்வயல்களில் பயிர்களுக்குச் சேதம் விளைவித்தால் அவைகளை விரட்டுவதற்கும், வலைவைத்துப் பிடிப்பதற்கும் அல்லது சுடுவதற்கோ சலுகை கொடுக்க வேண்டும்.

(அ) சிறவி.
(ஆ) சம்புக்கோழி.
(இ) உள்ளான்.

(2) இந்தப் பறவைகளை விற்பனை செய்வதற்கு தலைஞாயர், வேதாரண்யம், முத்துப்பேட்டை பஞ்சாயத்து ஒன்றிப்பு எல்லைகளுக்கு வெளியே கொண்டுபோகக்கூடாது.

(3) இந்தச் சலுகையை தவறான முறையில் பயன்படுத்தாமலிருப்பதற்காக, சட்டப் பேரவை உறுப்பினர், பஞ்சாயத்து ஒன்றிப்புகளின் தலைவர்கள், கிராமப் பெருமக்கள், வனவிலங்கு பணியாளர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று அமைக்க வேண்டும்.

(4) விவசாயத் துறை பொறுத்தமட்டில் பறவையினங்களைப் பற்றிய ஆராய்ச்சி நடத்த இந்திய விவசாய ஆராய்ச்சி மன்றத்தால் ஊக்குவிக்கப்படுகின்ற ஒரு திட்டம் உள்ளது. இந்த ஆராய்ச்சி மற்ற இடங்களோடு தலைஞாயரிலும் நடத்தப்பட வேண்டும்.

(5) இந்தச் சலுகைகளை 1968-69 பருவ காலத்தில் அமல் நடத்த வேண்டும். 1969 மார்ச் மாதத்தில் மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்தச் சிபாரிசுகளை அரசு ஒப்புக்கொண்டுள்ளது. கூடிய விரைவில் உத்தரவு பிறப்பிக்கப்படும்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* அடுத்து, 41-வது விதியின்கீழ் திரு. எம். சுரேந்திரன் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரக் கூடிய தீர்மானம் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

5. அரசினர் தீர்மானம்.

**உறுப்பினர் திரு. வ. ஜார்ஜ் மீதான வழக்குபற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கையை ஏற்றல்.**

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* அடுத்து, அவையுரிமைக் குழுவின் அறிக்கை அவைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்று மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கோருவார்.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:* தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. ஜார்ஜ் அவர்கள் பேரவையின் உரிமையை மீறியதாக ஏற்பட்ட வழக்குபற்றி 25—3—1968-ம் நாளன்று இப்பேரவைக்கு அளிக்கப்பட்ட அவையுரிமைக் குழுவின் அறிக்கை சட்டப் பேரவையின் 191 (b) விதியின்கீழ் அவைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அறிக்கை அவைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:* தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"அவையுரிமைக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்டப் பேரவையின் 191 (1) விதியின்கீழ் இப் பேரவை இசைந்து ஏற்றுக்கொள்கிறது."





DR. H. V. HANDE: Sir, I want to suggest briefly one or two points in this connection.

Firstly, whenever Members get up and there is some confusion in the House, the request I make on behalf of my Party is that the Members be given some chance to express themselves in the House itself. If every case of this type is developed to the level of this case, unnecessarily the feelings of the Members will be very much aroused and unnecessarily we will be giving importance to these small things. That is why I suggest, without commenting upon the conduct of the Speaker for whom we have got the highest respect, that whenever such incidents occur hereafter, they need not be developed to the extent of referring the matter to the Committee and printing a report, etc. Then we will have to speak in fear of being caught. Once a Speaker gives a ruling, we cannot question it. This is my request to the House.

A privilege motion was given notice of by Thiru S. Balasubramanian and Thiru K. M. Ramaswami Gounder about the comments on a speech made by Thiru R. Krishnasamy Gounder. It has not yet been taken up. We feel that it is a very important privilege issue.

In connection with this motion, I thought I could offer my suggestions for the consideration of the Leader of the House.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:* தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் கூறுகின்ற கருத்துக்களின் அடிப்படையிலேதான் எந்த ஒரு பிரச்சினை வந்தாலும், நமது நடைமுறையையொட்டிய எண்ணங்கள், நல்ல மரபுகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்த முடிவுகளை எடுக்கிறார்கள். கனம் உறுப்பினர் அவர்களும் அவையின் மரபுகளைக் காப்பாற்றுகின்ற வகையில் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லி வருகிறார்கள். உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனைகள் அவைத் தலைவரின் கவனத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**6. 1968-69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.**

கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும்.

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:* தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 9—'மாவட்ட நிர்வாகமும், பல்வகையும்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 16,90,15,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

THIRU K. VINAYAKAM : Sir, to discuss about the general policy and the desirability of effecting some changes in the general set up, I move the cut motion standing in my name :

"That the allotment of Rs. 16,90, 15,100 under Demand No. 9—District Administration and Miscellaneous be reduced by Rs. 100."

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, கிராம முன்சீப், கர்ணம் ஆகிய பதவிகளை ஒழித்துவிட்டு, புதிய கிராம ஊழியர்களை ஏற்படுத்துவதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 9—'மாவட்ட நிர்வாகமும், பல்வகையும்' என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 16,90,15,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் முறையாக செயல்பட வேண்டும், குறைந்த பட்சம் மாதம் இரண்டு நாட்களாவது கூட்டம் நடைபெற வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 9—'மாவட்ட நிர்வாகமும், பல்வகையும்' என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 16,90,15,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நிதிக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, முன்னுரையாக எதையும் கூற நான் விரும்பவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லுகின்ற கருத்துக்களைக் கேட்டு, அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்றால், பதிலையும் விளக்கத்தையும் இறுதியில் கூறலாம் என்று கருதுகிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, while moving the cut motion I am generally satisfied with the set up of the District Administration as it is.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்றையதினம் விவாதம் பகல் 1 மணிக்கு முடியும். ஆகவே, பேசுகின்ற உறுப்பினர்கள் தங்கள் எண்ணிக்கையையும், நேரத்தையும் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : I entirely agree with the Deputy Speaker. The situation also is not very satisfactory when we are discussing this Demand. I will suggest a few changes for the consideration of the Chief Minister and it is up to the Government to see whether they are same suggestions and could be implemented properly. As it is, there is division of power between



the Collector and the District Revenue Officer. Some aspects are given to the Collector and some aspects are given to the District Revenue Officer. This is a very happy change and the work of the department is running very smoothly as far as revenue matters are concerned.

But of late a new innovation has been invented and it is now called a 'Public Grievance Day' and usually Monday happens to be the day when the District Collector or the District Revenue Officer or any other officer are supposed to be at the Headquarters to hear grievances from the public. It goes on very well and smoothly—unless some extraordinary incidents occur or some urgent matters take away these officers from the Headquarters. But when such a contingency arises, I only want the Collector to leave instructions to a responsible officer who must at least be there to tell visitors 'so and so have gone away and so they are not in a position to see you. Please come tomorrow'. At least the Personal Assistant must be entrusted with the work of taking away the memoranda or petition given to them even if they could not take a decision over them. Now that practice is not in vogue and visitors go disappointed and they have to come back on some other day to meet the head of the district. That must be avoided.

Sir, I have also heard some reports that the officers at the District Headquarters keep on touring almost for about 20 days in a month and they could not be made to stay at the headquarters for a longer period. This also, if it is possible, should be minimised. I do not suggest that there should be no tour at all and that is not possible. I suggest that if an enquiry is to be made at Kancheepuram and also another enquiry at Sevilimedu—the Chief Minister knows the topography very well—the Collector need not go to Kancheepuram on one day and to Sevilimedu on another day. After all, Sevilimedu is only a mile away from Kancheepuram and he can attend to his work in both the places on the same day. Such kind of economics will have to be effected in the interest of the administration and in the interest of the general set-up of things.

Sir, the more important suggestion that I want to make is that we have got the hereditary system and one strata of that system could be easily abolished. For instance, at the top there is a District Collector and at the bottom there is the Tahsildar and in-between there is another set-up known as Revenue Divisional Officers. Each of these institutions is tagged on to two or three taluks together and one responsible officer namely R.D.O or the Deputy Collector is made in charge of those two or three taluks. What happens actually is when a paper is sent from the Collector, it will have to go to the R.D.O. first and then to the Tahsildar who sends it to the Revenue Inspector or the official concerned. This takes a long time and usually the decision which the Tahsildar takes is concurrent by the R.D.O. —sometimes they differ also and then it comes in the reverse orders to the Collector. This means an inordinate delay of say six months or even one year.

[Thiru K. Vinayakam] [1968 மார்ச் 26]

So, I suggest that a new method should be introduced by which a paper should be disposed of within 20 or 30 days by the officer at the Headquarters and for that purpose in the general set-up, the cadre of the Revenue Divisional Officer may be abolished. At the same time I want to say that they should not be thrown out of work and they should be absorbed in some other way but it is a cumbersome procedure. Straight from the village, the villager should have contact with the Tahsildar and from the Tahsildar his paper should come straight to the Collector and this kind of conduit pipe should be avoided—the R.D.O.'s office standing in-between.

Now I come to the hereditary system of village officers. The revenue collection system was conceived by Thodarmall and it was later on developed by Akbar and then by the British regime and then by us. My impression is that the village officers like karnam are the foundation-stones for the entire structure of our Revenue Department and now whatever they say is taken for granted as almost a truth, a gospel truth and the Collector agrees with their decision, as also R.D.O., Tahsildar and the Board of Revenue and also the Revenue Department. Such being the case, I can understand the predicament of our Hon. Ministers when they have to deviate from the deceision of these village officers. So, I would suggest that this system of village officers including karnam must be completely abolished. Of course, they have done very good service and I admit that they have been pillars of the administration but that system is not now so useful. I almost view it as an anachronism in the modern set-up. Instead of that system, I suggest that two or three revenue villages must be grouped together and then a Government servant must be made responsible call him a village karnam or by any other nomenclature and it does not matter. This Government servant may be an Upper Division Clerk or a Lower Division Clerk and he must be in charge of two or three villages. This may look a bit fantastic but there is no other remedy. What happens is this. Suppose I put a question, how many cattle heads are there in my constituency, Tirutani. Before the Hon. Minister gives an answer, he must send my question to the Collector first and then ultimately to the village munsif and the village karnam. The karnam has got his own Adangal account—his own Bible. These records are obsolete and whatever they say is final. If they say there are 242 heads of cattle, who checks it up ? Even land revenue records are all manufactured by the village karnam or the village munsif and I deliberately use the word 'manufacture' because I know that before the jamabhandhi takes place, these village officers join together and tally their accounts and the jamabhandi officer relies on them.

In this connection, I want to point out that many poramboke lands are in the possession of somebody and pattas would have been given to them but accounts will show that they are still Government poramboke lands. So, these poor officers are guided by the records given to them by the village officers. They are



1968 மார்ச் 26] [Thiru K. Vinayakam]

mostly semi-Government or honorary servants and we have abolished the hereditary system. Still there is a wrangle for capturing those offices and the concerned people view the post of the village munsif much more than the post of a Cabinet Minister in the Government. That is the position in the village. He is considered to be a demi-god and so in some cases they even go to the extent of appealing to the High Court and the Supreme Court also.

Now, these officers depend on old records. They are not transferable and the Government cannot punish them. They can levy a fine of two or three rupees only. That is why I suggest to the Hon. Chief Minister—I know he is in a confused mood and he cannot bestow much attention to it now—that a new set-up will have to be brought in. According to that set-up, he should be a responsible Government servant at the village level. Just like any other Government servant, he must come to the office at 10 o'clock and work till 5 o'clock and hear the complaints of the villagers and then give all the information required by them instead of the villagers going after the village munsif or karnam who may be elusive and may not be available at all times. This Government servant is a responsible man. He knows he is governed by (மு. ப. 10-30) rules, he knows he is subject to transfer and he know that he will have to earn his increment. This suggestion may be worked out and if found feasible, we can bring in such a change. At the village level this Government servant at the village chavadi or wherever his office is located must have all statistics with him. I know many landlords living in Madras who own lands in villages. They do not know which piece of land belongs to them and what its patta number is. When the village munsif comes to Madras, they give him some money towards land revenue. He says he will send a receipt. He may even pocket the money. That should not take place. If a Government servant is responsible for all these things, we can tone up the administration. That is my intention in making the suggestion. If this is a sane suggestion, let the Cabinet consider it.

The cadre of Revenue Divisional Officers should be abolished straightaway. From the village there must be the taluk office, from the taluk office the District Collector's office, and from the District Collector's office there must be the Board of Revenue.

I come from Chingleput. Chingleput is a big district with many ancient monuments like those in Mahabalipuram and Kancheepuram. Even the air port is in my district. The result is whichever dignitary comes to Madras, the Collector of my district will have to wait and receive him at the air port. Whether the dignitary comes from the north, south, east or west the Collector is taken away with the result that the administration suffers. I made this suggestion when the present Chief Minister was in the Opposition and he appreciated it. I do not know whether he will put it in a concrete form. A Reception Officer in the cadre

[Thiru K. Vinayakam] [1968 மார்ச் 26

of Deputy Collector must be appointed for receiving the distinguished visitor, taking them round to Tirukalikundram, etc., giving them tea and then packing them off. A separate revenue official should be put on this work. In the interests of administration, a separate Reception Officer will have to be appointed for this purpose.

Lately I have received a lot of complaints regarding the use of Government officials for purposes like collection of donations, funds for Small Savings Scheme and subscriptions towards loans. This is highly derogatory to the interest of our administration. Donations we will have to collect. I do not know what *modus operandi* the Government is going to adopt. That is its business and I am not interested in it. The Tahsildar, Revenue Divisional Officer, District Supply Officer and Taluk Supply Officer are put on this work, because they are in a position to deliver something and make collections for the Small Savings Scheme, etc. Please for God's sake don't put these officers on this kind of job. Let them be kept aloof from the collection work. You must conceive of some other idea for making the collection. The Taluk Supply Officer is in a position to give some rationed commodities to a ration shop or a dealer. His position is such that he can terrorise and blackmail any man not for his own interest, I admit, but in the interest of the Government, Government servants should not be asked to do this work. That is my view. This has happened and the Government must scrupulously avoid such things.

When the Congress Party was in power, there was a move to shift the headquarters of the Chingleput District to Kancheepuram. I put a question on the floor of this House and the Chief Minister, an adept in answering questions, a versatile genius who could avoid answering questions, so managed as not to give me a direct answer. Now is the proper time for me to raise the subject. The District Congress Committee and the Congress Party went into the question and finally decided that it was not prudent or proper to shift the headquarters and they dropped it. Now that our Chief Minister comes from Kancheepuram, there is a wide rumour that simply because he became the Chief Minister he wants the glory of shifting the headquarters from Saidapet to Kancheepuram. I do not think our Chief Minister will walk into that kind of trap. He is an able man and he will avoid that kind of criticism. A person living in Gummidipundi will have to travel all the way to Madras and then go to Kancheepuram. Similarly a person in Madurantakam will have to travel a long distance. We suggest that the headquarters may be retained in Nandanam itself. Now we go to the Collector's office and if our purpose is not fulfilled, we go to the Board of Revenue and from there to the Secretariat. This is possible because all these offices are situated in the same place. It is prudent and politically sensible and also in the interest of getting a fair name for the Chief Minister the headquarters should not be shifted from Nandanam to Kancheepuram. With these words I resume my seat.



1968 மார்ச் 26]

THIRU R. N. RANGANATHAN: Mr. Deputy Speaker, when I support the Demand for District Administration, at the outset it is my duty to meet an allegation made by the Congress section of the public namely that there is interference in the day to-day administration by the D.M.K. party men. I may recall to the concerned Members that before the Hon. Chief Minister assumed power, he has drawn a distinction between what is State, what is Government and what is party, imposed water-tight compartmentalism and has told his partymen that they should not interfere with the day to day administration. We can afford to ignore the allegation if certain professional politicians or seasonal politicians or certain partymen dropped by the D.M.K. Party made the allegation. But I find respectable persons like Mr. C. Subramaniam and Mr. K. Kamaraj coming out with the allegation that due to political overenthusiasm D.M.K. Partymen are interfering in the day to day administration. I can quote hundreds of examples from the Congress Ministry as to how officials were called or even ordered to come to the homes of Congress Party people and things got done. On the other hand I can give concrete examples to show that during the past one year of administration there was absolutely no interference, not the least of it. After the D.M.K. Ministry assumed power, in April 1967 a group of fifty people were arrested by the Vigilance Cell of the Civil Supplies Department in North Arcot district for illicit transport of rice. They approached the local M.L.A. and said that they were transporting rice within the taluk. The concerned D.M.K. M.L.A. said that he could not interfere in the matter because it was a case of prosecution which had to be decided by a court of law but that, if they were so interested, they could approach the Food Minister or the Chief Minister. They met the Hon. Chief Minister. He heard their representation and said that the case had to be decided by a court of law and so he could not ask the Collector to interfere in the matter and not to proceed with the prosecution. The Collector sanctioned the prosecution and those people were convicted to pay a fine of Thirty-five rupees or so and the sale proceeds of the rice were confiscated by the Government.

Another example I can cite. Even the people who have encroached upon the poramboke lands and who have come out in support of the Ruling Party, were ordered to be evicted by the officials and so there is absolutely no interference in the administration. What sort of interference and in what sense the Congress people say that there is interference, we are still to understand. When Thiru Subramaniam was asked to state specifically instances of interference on the part of the party people, he had given a statement saying that he found a large group of D.M.K. people in the corridors and verandahs of the Secretariat and other offices. I fail to understand how the D.M.K. party people or any other party people going to the Secretariat or other offices for making representations to the concerned officers will amount to interference at all. There should be an understanding

[Thiru R. N. Ranganathan] [1968 மார்ச் 26

with regard to the difference between the representation to the officer and the interference with the administration. If a particular officer is persuaded to do a thing which he is not bound to do as per law, then it could be called an interference in the administration. I cannot explain it any more and the Hon. Chief Minister will do it more effectively.

Coming to the present set-up of the administration, I find that there is absolutely no need for any drastic or dramatic changes to do. Now the administration is functioning without any considerable set-back. As regards administrative reports of the three committees appointed in 1954, 1964 and recently, arguments have been advanced for he bifurcation of the unwieldy districts but we must consider whether there is any justification for the bifurcation and also the financial commitments that such a bifurcation would involve. For example, the Dharmapuri district was newly formed and nearly a crore of rupees was spent for the formation of that district. The benefit that is expected out of the formation of such a new district is still to be assessed.

Then the inordinate delay on the part of the officials has been complained of and my hon. Friend, Thiru Vinayakam, has been saying that the petitions and representations of the people are not disposed of as early as possible. I would submit that the conduct of administration may be cumbersome but at the same time it has been scientifically developed and systematically evolved by generations of people and it has withstood the test of time. Though the procedure is slow it is quite secure and real relief is given to the people ultimately.

With regard to the office of the Collector, there have been suggestions that the name of the Collector should be changed because it is an old name. It has been suggested that he should be designated as the District Administrative Officer in consonance with the office which he is now holding. My submission is that since the Collector is always associated with the Revenue Department and the revenue people claim more relationship and affinity towards the Collector by saying that he is the district officer connected with the Revenue Department and whereas we hold the Collector responsible for all the departments within the district, all the district officers like the Deputy Inspector of Schools and District Agriculture Officer should be associated with the Collector and he should be in over-all supervision of all the departments in the district and he should be more or less an all-powerful figure within the district. In this connection, I wish to point out that the Collector is also the Road Transport Authority and the Road Transport Authority should be an officer with a judimind and a judicial discretion to consider rules re. grant of permits. Collectors are no doubt Indian Administrative Officers but the powers of the Road Transport Authority regarding the sanction of routes should be conferred upon a person not below the rank of a Subordinate Judge or a District Judge. Then only justice with regard to the proper functioning of the Road Transport system can be meted out.



1968 மார்ச் 26] [Thiru R. N. Ranganathan]

Now, the Electricity Board and also the Central Co-operative Bank are not under the control of the Collector. In the District Development Council, we are not in a position to question any of the activities of the Central Co-operative Bank. Similarly even though the Electricity Board deputes a certain officer, the Collector is not able to have effective control over the activities of the Electricity Board within the district. No doubt under the Madras Electricity Act, the Electricity Board is an autonomous body but when there is a meeting of the District Development Council consisting of non-officials and officials at least an officer not below the rank of a Superintending Engineer should be there and he should be made answerable to the points expressed in the District Development Council

With regard to the District Development Council, some opinions are being expressed that an official like the Collector should not be the President of the District Development Council. My submission is that if a non-official is to be elected as the President of the District Development Council we will be retracing our steps back to the old District Board and all the vices connected with that institution. Now, the Collector is a non-partisan and he would be a proper person to preside over the District Development Council. But on the other hand, the District Development Council can be reorganised in such a way that it could appear like an Assembly where non-officials can question the activities of the officials and the officials can answer them. Some proceedure has to be evolved with regard to that aspect of the matter.

Now, with regard to the R.D.O's Office, the hon. Member Thiru Vinayakam, has been complaining that the R.D.O. is merely functioning as a revenue post-office and the letters and communications received from the Tahsildar's Office are sent to the Collector for orders. It is not so. The present system is otherwise. The R.D.O. is an ex-officio First-Class Magistrate who is deciding certain cases under Section 145 of the Criminal Procedure Code whenever there is a breach of peace and when the local police seek his help. Similarly in regard to the implementation of the Cultivating Tenants Protection Act, if there is a litigation between the landlord and the tenant, it is the R.D.O. who decides the question of eviction. In this connection, I want to point out that in view of the stay order with regard to the cases filed by the landlord against the tenant either for collection of arrears of waram or 'Kandayam' or for eviction, the landlord is now prevented from taking any action in the matter and that has worked as a hardship in respect of certain land holdings to the extent of two or three acres. There should be relaxation and exemption should be given to certain extent of land outside the total area of the land which the landlord has leased to the tenant.

Then with regard to the complaint that the tahsildars are acting on the reports that they received from the village munsif and karnam, tahsildars are also exercising discretion and sometimes they are not acting on the reports sent by them. Now that

[Thiru R. N. Ranganathan] [1968 மார்ச் 26

the taluk has been divided into firkas the revenue inspector has now got over-all supervision over the village officers and the misdeeds of the village officers are then and there checked by the revenue inspector. It is open to the revenue inspector to make out a report to the tahsildar.

Then, with regard to assignments, there is inordinate delay and even after two or three years assignment has not been made. In this connection, I would submit that there is a lacuna in the Madras Panchayats Act of 1958 particularly with regard to section 76 of the Act. Probably at the time of drafting of the Act, by oversight, unassessed wastelands have been left out. Unassessed waste lands are within the jurisdiction of the panchayat board and the panchayat board has got power over unassessed waste lands.

The Collector is not empowered to withdraw unassessed waste lands from the purview of the panchayat board and grant assignment. While in respect of the other categories of porambokes power is granted to the Collector, contro over unassessed waste land is not within the power of the Collector. That is why large extents of unassessed waste land remain unassigned. The power of the panchayat is a recommendatory power and even if such a recommendation is made by the panchayat board, the Collector is not in a position to assign the land.

My Friend (Thiru K. Vinayakam), went to the extent of saying that the posts of Village Officers should be completely abolished. Even though the present set-up is a combination of the Moghul system and the British system as Mr. Vinayakam, pointed out, Village Munsiffs and Karnams are doing a great service to the Revenue Department, especially in the wake of the rural development work that is going on to-day, and their services are really to be counted. Even if we make the Village Officers full time government servants, I very much doubt whether it will produce the effect we want. In their representations the Village Officers say that they do not want their service to be made full time. Recently I had the opportunity of addressing a Village Officers Conference in North Arcot district. When I posed a question to them, they said that they did not want full-time service, but at the same time wanted their troubles to be reduced. If their service is made full time service, minimum general educational qualification will have to be prescribed and service rules will have to be framed. In regard to collection of land revenue, the present Village Munsifs are doing good work, whereas full time servants will sit tight on the table and will not worry about collection at all. The present set up of Village Officers requires some reformation, but their posts need not be abolished. That is my view.

With regard to assignment of land and transfer of patta, no doubt there are numerous complaints from the public. My suggestion is that a special officer for assignment of land and transfer of patta may be appointed. That will achieve the object of



1968 மார்ச் 26] [Thiru R. N. Ranganathan]

decentralisation of the powers of the Tahsildar and the Special Officer can take immediate measures needed to solve the problem. That is my submission.

Notice of demand for land revenue is not given to the land-holders. With respect to house tax levied by the panchayat board, demand notice is served on the house-owners. Demand notice for land revenue also should be given. With these words I conclude my speech.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இனிப் பேசுகின்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஐந்து நிமிஷங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. சௌடி. எஸ். சுந்திரபாரதி: தலைவர் அவர்களே, நேற்று இரவும், இன்றும் நடந்த, நடக்கிற விஷயத்தைப் பற்றி நமது முதல் அமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கையின் காரணமாக இதயமும், உள்ளமும் கலங்கி இருக்கின்ற இந்த நேரத்தில் கடமையின் நிமித்தம் இந்த விவாதத்தை நடத்திக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் என்னுடைய கருத்துக்கள் ஒன்றிரண்டைக் கூற விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு திரு. விநாயகம் அவர்கள், மாவட்டத்தின் தலைநகரம் எங்கிருக்கவேண்டும் என்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதிலே எனக்குள்ள ஒரு சிறிய கருத்து வேறுபாட்டை ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள், செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் அதன் தலைநகரம் சென்னையிலே இருப்பது மிகவும் நல்லது, உகந்தது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரும் அந்தந்த மாவட்டத்தோடு இணைந்த ஒரு பகுதியில் தான், புதிய இடமாக இருந்தாலும் சரி, இருக்க வேண்டும். அப்போதுதான் அந்த மாவட்டத்திலே தொழில் முன்னேற்றமும் மற்ற முன்னேற்றங்களும் ஏற்பட உதவியாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை அந்த மக்கள் ஏழைகளாக இருந்தாலும் கூட மிகவும் பெருந்தன்மையோடு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையின் காரணமாக இதுகாறும் அந்த மாவட்டத்தின் தலைநகரம் மதுரையாகவே இருந்து வருகிறது. அந்த மாவட்டத்தின் தலைநகரை அந்த மாவட்டத்திலேயே உள்ள ஒரு இடத்தில் ஏற்படுத்த வேண்டுமென்ற கிளர்ச்சி இப்போது அந்த மக்கள் மத்தியில் இருந்து வருகிறது. ஆகவே. அந்த மாவட்டத்திலேயே ஒரு இடத்தில், அது புதிய இடமாக இருந்தாலும் சரி, குக்கிராமமாக இருந்தாலும் சரி, ஆளே இல்லாத இடமாக இருந்தாலும் சரி, அங்கேயே தலைநகரை அமைப்பதன் மூலந்தான் அந்தப் பகுதி மக்களுக்கு வாழ்வளிப்பதற்கும். தொழில் பெருக்கத்திற்கும் நலமாக இருக்கும். இப்போது மதுரையைத் தலைநகராக வைத்திருப்பதால் அங்கு இடநெருக்கடி போன்ற பல கஷ்டங்கள் இருக்கின்றன. மதுரைக்குப் போய் வருவது இராமநாதபுரம் மக்களுக்கு வசதியாக இருந்தாலும் கூட, இதிலே சிரமத்தைப் பார்க்காது இராமநாதபுரம்

[திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி] [1968 மார்ச் 26

மாவட்டத்திலேயே தலைமைப்பீடம் இருக்கவேண்டுமென்றுதான் மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். ஆகவே, தலைநகரை இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஒரு இடத்திற்கு மாற்றுவதற்கு முயற்சியில் ஈடுபட்டு இப்போதே நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்த அளவில் ஜில்லா கலெக்டர் ஆபீஸ் நிர்வாகம், தாலுகா ஆபீஸ் நிர்வாகம் எல்லாம் பழைய முறையிலேதான் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்ற முடியாது என்று உறுப்பினர்கள் பலரும் கருத்துத் தெரிவித்தார்கள். இந்த நிலையை மாற்ற முடியாது என்பது உண்மையாக இருந்தாலும் கூட, விவசாய மக்களும் மற்றவர்களும் அடிக்கடி அங்கே செல்ல வேண்டிய நிலைமை இருப்பதால், மற்ற அலுவலகங்களில் ரிசப்ஷனிஸ்ட் இருப்பதுபோல் அங்கும் வரவேற்பாளர்கள் இருந்தால் விவசாயிகளுக்கு வழிகாட்டியாக இருந்து உதவ முடியும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. மு. ச. சிவசாமி : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கை மீது ஒருசில வார்த்தைகளை நான் கூற விரும்புகிறேன்.

மாவட்ட நிர்வாகத்தை எடுத்துக் கொண்டால் அங்கே டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில் என்று இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் நார்த் சவுத் என்றோ அல்லது ஈஸ்ட் வெஸ்ட் என்றோ இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். உண்மையில், கடந்த ஓராண்டுக் காலத்தில் டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டத்தில் கலந்து கொண்ட அனுபவத்தின் மீது கூறுகிறேன்—அதனால் நாட்டுக்கோ, நாட்டு மக்களுக்கோ நன்மை எதுவும் இல்லை. அதனால் சர்க்கார் பணம் வீணாகச் செலவாகிறதே தவிர, எந்தவிதமான பலனும் இருப்பதாகத் தெரியவில்லை. சுருங்கச் சொன்னால் அது டிஸ்ட்ரிக்ட் இன்பர்மேஷன் ஆபீசாகத்தான் இருக்கிறது. அங்கே கலெக்டர் சொல்லுகின்ற விவரங்களைப் பஞ்சாயத்து ஒன்றியங்களின் தலைவர்களும், சட்ட மன்ற உறுப்பினர்களும் கேட்டு வரவேண்டிய நிலையில் இருக்கிறதே தவிர, எம்.எல்.ஏ.-க்களோ, ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களோ சொல்லுகின்ற கருத்துக்கள் அங்கே ஏற்றுக் கொள்ளப்படுகின்றனவா என்றால் இல்லை.

மு. ப. 11-00 சிறிது துணிச்சலான உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை ஓங்கிச் சொன்னால் உடனே கலெக்டர் உட்கார் என்று சொல்லக் கூடிய நேரங்களை எல்லாம் நான் அங்கு பார்த்திருக்கிறேன். ஆகவே டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில் என்றிருப்பதை, ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களையும், சட்ட மன்ற உறுப்பினர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு குழுவாக அமைத்து அந்தக் குழுவிற்கு இவர்களில் ஒருவரைத் தலைவராக [illegible] கருத்தை மாவட்ட [illegible] மன்றங்களுக்கும், தமிழக அரசுக்கும் தெரியப்படுத்தக் கூடிய அளவிற்கு ஒரு நிலை



1968 மார்ச் 26] [திரு. மு. ச. சிவசாமி]

இருந்தால் அந்தக் கவுன்சிலினால் நாட்டுக்கும் அரசுக்கும் நன்மையிருக்குமே தவிர இப்போதுள்ள நிலை இருக்குமானால் அதில் எந்தவிதமான நன்மையும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் எங்கள் திருநெல்வேலி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அது மிகப் பெரியதொரு மாவட்டமாக இருக்கிறது. நிர்வாகத் துறையில் தெற்கு வடக்கு என்று இப்போதே இருக்கிறது. அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து இன்று இப்போதுள்ள திருநெல்வேலி தலைநகரமாகவும், அடுத்து ஒன்று, திருநெல்வேலி வடக்கு என்றிருக்கிற பகுதியை தனியாகப் பிரித்து தூத்துக்குடியைத் தலைநகரமாகவும் வைத்து இப்படி அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து வைத்தோமானால் நிர்வாக வேலைகள் உடனுக்குடன் கவனிக்கத்தக்க முறையில் இயங்குவதற்கு ஏதுவாகவிருக்கும். இதை தமிழக அரசு கவனிக்க வேண்டும். இப்போதே நெல்லையில் உள்ள, தலைநகரிலுள்ள அரசாங்க மருத்துவ மனையை, மாவட்ட மருத்துவ மனையை தூத்துக்குடிக்கு மாற்ற முடிவு செய்திருக்கிறார்கள். அது ஏப்ரல் திங்களில் வருகிறது. இப்படி மிகப் பெரிய அலுவலகங்கள் எல்லாம் தூத்துக்குடியில் இருக்கிறது. தென் கோடியில் மாவட்ட தலைநகரம் இருப்பதால் வட கோடியில் உள்ள மக்கள் அங்கு சென்று வர கால தாமதமும், பண விரயமும் ஆகிறது. ஆகவே, திருநெல்வேலி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒன்றை நெல்லையிலும், இன்னொன்றை தூத்துக்குடியிலும் வைத்தால் நாட்டு மக்களுக்குப் பயன் கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்படுத்த முடியும்.

இன்றைய நிலையில் நான் கர்ணங்களைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்று அரசாங்கத்தின் ஆணிவேராக இருக்கக்கூடியவர்கள் கர்ணங்கள்தான். அது பரம்பரை சொத்தாக இருந்து வருகிறது. எந்தக் கிராமத்தை எடுத்துக் கொண்டாலும் அவர்கள் வீட்டில் உட்கார்ந்து கொண்டு இன்னின்ன நன்செய்யில் இவ்வளவு இவ்வளவு கோட்டை விளைகிறது என்று அவர்கள் கொடுக்கிற அடங்கல் கணக்கை வைத்துத்தான் இன்றைய தினம் கொள்முதல் நடந்து வருகிறது. அவர்கள் செய்து வரும் அட்டூழியங்கள் இந்த அரசிலாவது குறைந்திருக்கிறதா என்றால் இல்லை. ஒரு ஏட்டு ஏக்கர் நன்செய்யில் 100 மூட்டை விளைகிறது என்றால் அதில் ஒன்றுமே விளையவில்லை என்று கணக்கு எழுதி வைக்கிறார்கள். அப்படி எழுதி வைப்பதால் அவர்களிடமிருந்து கொள்முதல் செய்வதில்லை என்ற நிலைதான் இருக்கிறது. அவர்களுக்கு ஆகாதவர்களிடம் அதிகம் விளையவில்லை என்றாலும் 60 மூட்டை என்று எழுதி வைத்து விடுகிறார்கள். அப்படி கணக்குக் கொடுக்கும்போது அவர்களிடமிருந்து அடாவடியாக கொள்முதல் செய்யும் நிலை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே இது பரம்பரை உத்தியோகமாக இருப்பதை மாற்றியமைத்து ஒரு வோயர் மனிதன் [illegible] போட்டு அவர் இரண்டு ஆண்டுகள் ஒரு கிராமத்தில் வேலை பார்த்தால் பின்னர் அவரை வேறு ஒரு கிராமத்திற்கு மாற்றுகிற அளவில்

இதை மாற்றியமைத்தால் அரசுக்கு உண்மையான புள்ளி விவரங்கள் கிடைக்கும். அதனால் விவசாயிகளும் நன்மை அடையும் ஒரு நிலையை ஏற்படுத்த முடியும். ஆகவே இந்த பரம்பரை பரம்பரையாக வரும் பதவியை துணிச்சலுடன் எடுத்து விட்டு கர்ணங்களுக்குப் பதிலாக L. D. C.-க்களை நியமித்து அவர்களை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றும் முறையில் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஓய்வூதியங்கள் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்றையதினம் பலர் ரூபாய் 8, 10, 15 என்று ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள். அதைப் பெறுவதற்கு அவர்கள் திருநெல்வேலி போய்வர வேண்டியிருக்கிறது. அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய ஓய்வூதியத்தில் கால் பங்கு பஸ்ஸுக்கும், சாப்பாடு செலவிற்கும் போய் விடுகிறது. ஆகவே குறைந்த ஓய்வூதியம் பெறுகிறவர்களுக்கு அரசாங்கம் நேரடியாக எம்.ஓ. மூலம் அனுப்பினால் குறைந்த ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு நன்மை ஏற்படும்.

அடுத்து, நகராட்சி மன்றங்களை எடுத்துக் கொண்டால் நகராட்சி மன்றங்களில் வேலை பார்க்கிற ஆசிரியர்களுக்கு இன்றைய தினம் ஓய்வூதியம் இருக்கிறது. ஆனால் நகராட்சி மன்றங்களில் வேலை பார்க்கிற க்ளார்க்குகளுக்கு ஓய்வூதியம் இல்லை. ஆக இப்படி ஒரு பாகுபாடு இருக்கிறது. அந்தப் பாகுபாட்டை நீக்கும் வகையில் நகராட்சி மன்றங்களில் வேலை பார்க்கக் கூடிய எல்லோருக்கும் ஓய்வூதியம் கொடுக்கக்கூடிய ஒரு திட்டத்தை தமிழக அரசு உடனடியாகக் கவனிக்க வேண்டும். ஒரே அலுவலகத்தில், ஒரே டிப்பார்ட்மென்டில் ஒருவர் க்ளார்க்காக வேலை பார்க்கிறார், ஒருவர் ஆசிரியராக வேலை பார்க்கிறார். ஆனால் ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் உண்டு, க்ளார்க்குகள், பில் கலெக்டர் போன்றவர்களுக்கு ஓய்வூதியம் இல்லை என்ற நிலை இருப்பது ஒருவருக்கு சாதகமாகவும், ஒருவருக்குப் பாதகமாகவும் இருக்கக் கூடிய நிலைமையை மாற்றியமைக்க உடனடியாகத் தமிழக அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. செ. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது நான் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்தையொட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த மன்றத்தில் நிறைவேற்றப்படுகிற சட்டங்கள், தீர்மானங்கள், இந்த அரசு எடுக்கிற முடிவுகள் இவற்றையெல்லாம் நடைமுறைக்குக் கொண்டுவந்து, அவற்றின் பலனை மக்கள் பெறச் செய்வது இந்த ஜில்லா நிர்வாகம்தான். ஆகவே இந்த ஜில்லா நிர்வாக இயந்திரம் ஒழுங்கான இயந்திரமாக இருந்தால்தான், நல்ல திறமையான இயந்திரமாக இருந்தால்தான் நாம் எந்தச் சட்டங்களை நிறைவேற்றுகிறோமோ, நாம் மக்களின் நலனை உத்தேசித்து என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கிறோமோ, அதன் பலன் மக்களுக்குப் போய்ச் சேர முடியும். ஆனால் இன்றைய



நிலையில், இன்றைய அடிப்படையில் ஜில்லா நிர்வாகம் அந்த முறையில் இருக்கிறதா என்றால், நான் வருத்தத்துடன் சொல்லிக் கொள்கிறேன். அப்படி இல்லை. இதற்குக் காரணம் என்னவென்றால், இந்த நிர்வாகம் பழைமையான முறையில்தான் இருக்கிறது, இந்த நிர்வாகம் சரியான முறையில் அமைக்கப்படவில்லை.

உதாரணமாக, இன்று ரெவின்யூ கிராமங்களை எடுத்துக் கொண்டால் 40 சதுர மைல்கள் உள்ள கிராமங்கள் இருப்பதும் எனக்குத் தெரியும், நான்கைந்து சதுர மைல்கள் உள்ள கிராமங்கள் இருப்பதும் எனக்குத் தெரியும். 10,000 ரூபாய்க்கு மேல் வருமானம் வரக்கூடிய கிராமங்களும் இருக்கின்றன. மணியக்காரர், கர்ணம், தோட்டி தலையாரி இவர்களுக்கு சம்பளம் கொடுக்கக்கூட கட்டுப்படியாகாத கிராமங்களும் இருக்கின்றன. இவைகள் எல்லாம் முன்பு பழைய காலத்தில் ஏற்படுத்தப்பட்ட முறைகள். ஆகவே சீரான அடிப்படையில், விஸ்தீரணம், வருமானம் இவற்றை அடிப்படையாக வைத்து கிராமங்கள் அமைக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, தாலுகா நிர்வாகம். சமீபத்தில் கோவை ஜில்லா கலெக்டர் மந்திரிசபைக்கு ஒரு யோசனை சொல்லியிருந்தார்கள் என்று கேள்விப்பட்டேன். தாலுக்காக்களை எல்லாம் சிறிதாக்கி—திரு. முருகேச முதலியார் ரிப்போர்ட்டில் கூட அது இருக்கிறது—பஞ்சாயத்து யூனியன் அளவில் வைத்து தாசில்தாரை கஸெட்டட் ஆபீசராக ஆக்கவேண்டும். அதன் மூலம் ஜனநாயக அமைப்பையும் இணைத்து, நிர்வாக அமைப்பையும் இணைத்துச் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கதொரு யோசனை.

திரு. விநாயகம் அவர்கள் சொன்னதுபோல் இந்த ஆர்.டி.ஓ. இருப்பதற்கு எந்தவிதமான அவசியமும் இல்லை. அது ஒரு போஸ்ட் ஆபீஸ் மாதிரிதான் இருக்கிறது. சென்ற தடவை கூட இந்த மானியத்தின் மீது நான் பேசியபோது இதைக் கூறியிருக்கிறேன். அது தேவையே இல்லை.

அடுத்தபடியாக, ஜில்லா நிர்வாகம். ஜில்லாக் கலெக்டரிடம் அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன: அவருக்குள்ள அதிகாரங்கள் 37, 40 என்று வரிசையாக பட்டியல் கொடுக்கிறார்கள். அதைப் பார்த்தால் கலெக்டர் தன் அதிகாரங்களில் முழுக் கவனத்தையும் செலுத்த முடியாததொரு நிலைதான் இருக்கிறது. திடீரென்று ஒரு வேலை வருகிறது, அவர் போய் விடுகிறார். உதாரணமாக, மக்களின் குறைகளைக் கவனிக்க, பெட்டிஷன்ஸ் வாங்கும் தினம் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த நாட்களில் வெகு நாட்கள் அவர்கள் அங்கு இருப்பதேயில்லை. ஆகவே அவரைப் பார்க்க வருபவர்கள் பார்க்க முடியாமல் திரும்பிப் போகவேண்டியிருக்கிறது. ஆகவே, துணிந்து இவற்றையெல்லாம் மாற்றியமைக்கவேண்டும்.

சில சமயங்களில் அதிகாரிகளை நியமித்து அவர்களிடம் அறிக்கைகள் கேட்டு, அவர்கள் அறிக்கைகள் கொடுத்த பிறகும் அவற்றை நடைமுறையில் கொண்டு வருவதற்குத் தயக்கம் காட்டு

ஞர்கள். முருகேச முதலியார் கமிட்டி அறிக்கையை அவர்கள் கஷ்டப்பட்டு சமர்ப்பித்தார்கள். எல்லாக் கட்சித் தலைவர்களின் அபிப்பிராயங்களையும் கேட்டார்கள். அதை இன்னும் நடைமுறைக்குக் கொண்டு வந்ததாகக் காணேம்.

நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நேரமாகி விட்டது. ஒரு சின்ன யோசனையை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். ரீ ஆர்கனைசேஷன் ஆஃப் வில்லேஜ். நகர்ப் புறங்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை. கிராமங்களைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கும் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிஃபார்ம்ஸ் கமிஷன் போல், நிர்வாக சீர்திருத்த கமிஷன் என்ற முறையில் ஒரு கமிஷன் அமைத்து கிராமங்களை எப்படி சீர்திருத்தியமைப்பது, தாலூகாக்களை எப்படி சீர்திருத்தியமைப்பது, மாவட்டங்களைக் கூட எப்படி சிறிய மாவட்டங்களாக அமைப்பது, இவற்றின் நிர்வாகத் திறமையை எப்படி அதிகப்படுத்துவது, மக்களின் மீது செலுத்தப்படுகிற அதிகாரப் பளுவை எப்படிக் குறைப்பது, சிக்கனத்தை எப்படி ஏற்படுத்துவது இவற்றைப் பற்றியெல்லாம் ஆராய ஒரு கமிஷன் ஏற்படுத்த வேண்டும். அதில் ஐ.ஸி.எஸ். அதிகாரிகளைப் போட்டால் போதாது. அதிகாரிகளைப் போட்டால் அதிகார வர்க்கக்கோணையில் தான் அவர்கள் ரிப்போர்ட் கொடுப்பார்களே தவிர மக்கள் கஷ்டத்தையனுசரித்து ரிப்போர்ட் கொடுக்க மாட்டார்கள். ஆகவே, கூட்டுறவுத் துறையிலே சந்தானம் கமிட்டி போட்ட மாதிரி, நமது மாநிலத்திற்கு "அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரீஃபார்ம்ஸ் கமிஷன்" என்ற அடிப்படையில் ஒரு கமிஷன் போட வேண்டும். கிராம கர்ணம், மணியம் போன்ற பதவிகளை ஒழித்து விட்டு எல்.டி.சி.-க்களைப் போட்டு அவர்களிடம் பஞ்சாயத்துகளின் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் ஒழிக்கப்பட வேண்டும். தாலுக்கா கவுன்ஸில்கள் ஏற்படுத்தி—பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் வேண்டாம்—அதற்கு தாசில்தாரே பொறுப்பாகச் செய்து, ஜில்லா மட்டத்தில் டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் பொறுப்புக்கு கலெக்டராகவும் இருக்கச் செய்ய வேண்டும். அந்த அடிப்படையிலே அறிக்கை சமர்ப்பிக்க ஒரு கமிஷனைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து நானும் சில வார்த்தைகள் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

இப்பொழுது மாவட்ட நிர்வாகத்திலேயிருக்கின்ற பழைய முறைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று உறுப்பினர்கள் கூறினார்கள். நானும் அதை ஆதரிக்கிறேன். இப்பொழுது நடைபெறுகின்ற டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்ஸில் கூட்டங்கள் ஏதோ ஒரு சம்பிரதாயத்திற்காகத்தான் நடைபெறுகின்றனவே தவிர அவைகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எந்தவிதமான மதிப்பு மில்லை. அந்தக் கூட்டங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சட்ட மன்றம் நடப்பதைப்பற்றிக்கூடக் கவலைப்படாமல் அந்த



நாட்களிலே அந்தக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்கிருர்கள் அப்பொழுது எங்களால் கலந்துகொள்ள முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே நாங்களும் கலந்து கொள்ளக்கூடிய சூழ்நிலையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

என்னுடைய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரத்தை மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌடி. சுந்தரபாரதி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைவிட, பெரிய மாவட்டமாக இருக்கின்ற இராமநாதபுரம் மாவட்டத்தை நிர்வாக அமைப்பில் இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன். நம்முடைய மாநிலத்திலேயே இயற்கையின் சாபத்திற்கு ஆளான மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம். அங்குள்ள வறட்சியினால் அந்த மாவட்டத்திலிருக்கும் மக்கள் எவ்வளவு இன்னல்கள் அடைகிருர்கள், எவ்வளவு ஏழ்மையில் வாழ்கிருர்கள் என்பதை இங்கேயிருக்கிற மாண்புமிகு அமைச்சர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் ஒப்புக்கொள்வார்கள். எனவே அந்த மாவட்டத்தைப்பற்றித் தனிக் கவனம் செலுத்தி அதை இரண்டாகப் பிரித்து, தனி அதிகாரிகளை நியமித்து, நிர்வாகச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். தனிக் கவனம் செலுத்தி அந்த மாவட்ட மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அந்த மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு ஆண்டுக்காண்டு நஷ்டம் வருகிறதே தவிர எந்தவித இலாபமும் வருவதில்லை. இருக்கிற தொழில் வளம் சாத்தூர், சிவகாசி, விருதுநகர் போன்ற 3, 4 நகரங்களைச் சுற்றிலும் இருக்கிறதே தவிர அங்குள்ள கிராம மக்களுக்கு விமோசனமோ, அபிவிருத்தியோ இதுவரையில் ஏற்படவில்லை. அரசாங்கம் அதற்கு ஏதாவது செய்ய வேண்டும். எவ்வளவு பணம் செலவானாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல், அந்த மாவட்டத்தை மற்ற மாவட்டங்களோடு ஒப்பிடாமல், அதற்கு உடனடியாக அரசாங்கம் கருணைகூர்ந்து தனி தொகையை ஒதுக்கி அதைச் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இன்றைக்கிருக்கும் நிலையில் உள்ளாட்சி தேர்தல் பற்றி ஒரு வார்த்தை குறிப்பிட விரும்புகிறேன். பல பஞ்சாயத்துக்களை பழைய அரசாங்கம் பிரித்திருப்பது முற்றிலும் அரசியல் நோக்கத்தைப் பொறுத்திருப்பதை நாம் மறந்து விடக்கூடாது. காங்கிரஸ் வெற்றிபெற வேண்டுமென்ற நோக்கத்தோடு பல பஞ்சாயத்துக்களைப் பிரித்தும், அல்லது இணைத்தும் இருப்பதை உடனடியாக இப்பொழுது உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் கவனித்து, அதன் பிறகு தேர்தல்களை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பஞ்சாயத்து யூனியன் தேர்தல்களை இப்பொழுதிருக்கிற முறைப்படி இல்லாமல் நேரடித் தேர்தலாக, வாக்காளர்களே நேரடியாக வாக்களிக்கும் முறையில் அதை நடத்தினுல்

[திரு. பெ. சீனிவாசன்]

இப்பொழுது நடைபெறும் தேர்தல்களில் இருக்கிற பண நடமாட்டம், கொலை, கொள்ளை முதலிய குற்றங்கள் நடைபெறாமல் பாதுகாத்துக்கொள்ள முடியும். இப்பொழுது நடைபெறும் தேர்தல்களில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் தலைவரும் குறைந்த அளவு 1½ இலட்சம், 2 இலட்சம் செலவு செய்து வருகிறார்கள். சிலர் எப்படியாவது பதவிக் காலத்தில் அந்தப் பணத்தை, பொது மக்களுடைய வரியிலிருந்து எப்படியாவது சம்பாதித்துக் கொள்கிறார்கள். இதனால் குறிப்பிட்ட சில தலைவர்களுக்குத்தான் சலுகைகள் கிடைக்கிறதே தவிர, நாட்டு மக்களுக்குக் கிடைக்கவில்லை. எனவே அந்த முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்த மாவட்டத்திலேயே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களைச் சரிவரக் கேட்டு அவைகளை அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதில்லை. மேற்கு இராமநாதபுரத்தில் 6 சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கிருக்கின்ற வரட்சியான சூழ்நிலையைச் சுட்டிக் காட்டி, கலெக்டரவர்களுக்கும், அமைச்சரவர்களுக்கும் விண்ணப்பம் கொடுத்தால், அதன்பேரில் அமைச்சரவர்கள் கேட்ட கேள்விகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள், இருக்கின்ற நிலைக்கு நேர்மாறான அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அங்கே பாலைவனமாகயிருக்கும் நிலைமைக்கு மாறாக வளமாகயிருக்கிறது என்று கொடுத்திருப்பாரோ என்று அஞ்சுகிறேன். அதனாலே வரிவஜா கிடைக்கவில்லை, கடன் வசூல் தள்ளி வைக்கப்படவில்லை. அங்குள்ள மக்கள் கண்ணீர் வெள்ளத்தை வடித்துக் கொண்டிருந்தார்கள். ஏதோ இயற்கை காட்டிய கருணையினால் ஓரிரு வாரங்கள் நல்ல மழை பொழிந்ததால் அவர்கள் உயிரோடு வாழக்கூடிய அருகதை அடைந்திருக்கிறார்கள். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொது நடவடிக்கைகளில் சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்தை ஏற்றுக் கொள்ளும் முறையில் அவர்களுக்கு அரசாங்கம் ஆலோசனை கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நாங்கள் மக்களின் பிரதிநிதிகள். பொதுமக்களின் காரியங்களை எடுத்து வருகின்ற நேரத்தில் அவர்கள் காட்டும் அலட்சியம் மக்கள் மத்தியில் ஏமாற்றத்தை உண்டு பண்ணி விடுகிறது. இதை நீக்குவதற்கு, சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கை என்ன, அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் எழுத்து மூலம் என்ன பதிலைத் தந்தார் என்பதற்கு அரசாங்கம் கட்டளையிட்டு கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். தனிப்பட்ட சலுகைகளுக்காக சென்றோமென்றால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மறுக்கலாம். ஆனால் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு மாவட்ட எம்.எல்.ஏ.-க்கள் சென்றால் மாவட்ட ஆட்சித் தலைவரும் அதில் ஒத்துழைத்தால் குறிப்பிட்ட சில பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமென்று குறிப்பிட்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகின்றேன். வணக்கம், நன்றி.



1968 மார்ச் 26].

திரு. ஆர். கருப்பையா: தலைவரவர்களே, இந்த மாவட்ட நிர்வாகத்தின் மீது என்னுடைய கட்சிக்காரர் கொண்டு வந்துள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

இன்று மாவட்ட நிர்வாகம் ஒழுங்கான முறையில் நடந்தால் தான் நமது அரசாங்கம் நன்றாக நடைபெறும். அது பொது மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் தொடர்புடைய பாலமாக அமைந்துள்ளது என்றால் அதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். அது நல்லமுறையிலே நடைபெறுவதற்கு அங்குள்ளவர்கள் அதற்குத் தகுந்தமுறையிலே நடக்க வேண்டும். ஆனால் திருச்சி மாவட்டத்தில பல நிகழ்ச்சிகள் நடந்த வண்ணம் இருக்கின்றன. இனிமேலாவது அவ்வாறு நடக்காமல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொறுப்பையேற்று ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாவட்ட நிர்வாகப் பொறுப்பிலேயுள்ள கலெக்டர்களை ஒரு ஆண்டுக்கு ஒருமுறையோ அல்லது ஒரு ஆண்டுக்கு இருமுறையோ மாற்றுவது என்பது தகுந்த காரியமாக இருக்காது. ஏனென்றால் ஒரு கலெக்டர் வந்து அந்த மாவட்டத்தின் நிலையைப் புரிந்துகொள்ளவே ஒரு ஆண்டு ஆகிறது. எனவே குறைந்தது 3 ஆண்டுகளாவது ஒரு கலெக்டர் ஒரு மாவட்டத்தின் பொறுப்புகளைச் செய்ய இந்த வாய்ப்புகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாவட்ட நிர்வாகத்திலிருக்கின்ற மாவட்ட வளர்ச்சி மன்றத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த மன்றம், சட்டமன்ற உறுப்பினர்கள் தீர்மானங்கள் கொடுத்தால் அதன் மீது ஒன்றுமே செயல்படுவதில்லை. ஏனென்றால் நாங்கள் கொண்டு போகும் தீர்மானத்தை படிப்பதோடு நிறுத்திவிடுகிறார்கள். எனவே மாவட்ட மன்றத்திற்குத் தலைவராக உறுப்பினர்களில் ஒருவர்தான் வர வேண்டுமென்றும், உறுப்பினர்கள் கொண்ட மன்றத்திற்கு அதிகாரி தலைவராக இருப்பது அவ்வளவு பொருத்தமுடையதாக வில்லை என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்பொழுதெல்லாம் கலெக்டர்கள், நாடகங்களுக்கு, சினிமா நடிகைகள் நடிக்கும் நாடகங்களுக்கு தலைமை வகிப்பது அவர்கள் வகிக்கும் பதவிக்கும், பொறுப்புக்கும் உகந்ததாக இருக்கவில்லை என்று கருதுகிறேன். கலெக்டர் பதவி மிகவும் பொறுப்பான பதவி. அவர்கள் கண்ட கண்ட இடங்களில் கலந்து கொள்ளாமல் அவர்களுக்கிருக்கின்ற பண்பாட்டினைக் காப்பாற்றிக்கொள்ளும் வகையில் இந்த அரசு அமையவேண்டும்.

எங்கள் மாவட்டமான திருச்சி மாவட்டம் மிகப்பெரிய மாவட்டம். அவசியம் அதை இரண்டாகப் பிரித்தால் நல்லமுறையிலே செயல்கள் நடைபெற இயலும். அரியலூரைப் பொறுத்தவரையில் கல்வியையும், விவசாயத்தையும் பொறுத்தவரையில் துணை மாவட்டமாக அமைத்துச் செயல்படுகிறது. மிகப் பின்தங்கிய பகுதியாக இருக்கிற அரியலூருக்கு ஒரு தனி அதிகாரியை நியமித்து, துரிதமாக செயல்படுகின்ற சூழ்நிலையை ஏற்படுத்த

வேண்டும். இப்பொழுது இருக்கிற அதிகாரியால் அதையும் சேர்த்து செயல்பட முடியவில்லை. ஆகவே அங்கு செயல்கள் சரியாக நடைபெற நமது அரசு தனி அதிகாரி ஒருவரை நியமித்து வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அரிசனங்களுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டும் அந்த மனுக்கள் 4 ஆண்டுகள், 5 ஆண்டுகள் அப்படியே இருக்கின்றன. இவைகளையெல்லாம் கவனிக்கவேண்டுமானால் தனி அதிகாரியை ஏற்படுத்த வேண்டும். அரியலூர் வட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கு தனி அலுவலகமே இல்லை. ஆனால் அரியலூர் வட்டம் தனியாகப் பிரிந்திருக்கிறது. அந்த அரியலூர் வட்டத்திற்கு தனி அலுவலகம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய நிலையிலே விலேஜ் முனிசீப்களும், கணக்குப்பிள்ளைகளும் அங்கே முழு நேர ஊழியர்களாகத்தான் வேலை செய்து வில்லை. பார்ட்டைம் ஊழியர்களாகத்தான் வேலை செய்து வருகிறார்கள். அவர்கள் இப்பொழுது பொறுப்பாகவும் முறையாகவும் கூட்டுறவாகவும் பிரித்து வேலை செய்கிறார்கள். அவர்களுடைய நிலை இப்பொழுது மிகவும் மோசமாக இருக்கிறது. ஏனென்றால் வேலை ஆட்களை மிரட்டுவதைப்போல் அவர்களை அதிகாரிகள் மிரட்டுகிறார்கள். அந்த நிலை இல்லாதிருக்க வழி செய்யவேண்டும்.

அடுத்து, என் பகுதியிலே இப்பொழுது கொள்முதல் மிகத் தீவிரமாக நடைபெறுகிறது. என்னுடைய பகுதியில் எலலா பயிர்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று பல நாட்களாக சொல்லப்பட்டு வருகிறது. புள்ளம்பாடி பாசன பகுதியில் மழை இல்லாத காரணத்தால், திருமழப்பாடி, ஏளந்தைகுடம், காமரசவல்லி, ஏலாக்குறிச்சி, கிழக்கா வட்டாங்குறிச்சி போன்ற பகுதிகளில் விளைச்சலே கிடையாது. அங்கு இது போன்ற நிலை இருப்பதை மாற்ற வேண்டும். அங்கு விவசாயிகளிடத்தில் சோதனை செய்து, எங்கு செல்கிறாய், ஏன் செல்கிறாய் என்று கேட்டு அதிகாரிகள் மிகவும் மிரட்டுகிறார்கள். அவர்களை வேலைக்காரர்களைப் போல் இப்பொழுது மிரட்டுகிறார்கள்—மதிக்கிறார்கள். எனவே, இந்த நிலையைப் போக்கவேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. வி. எம். அண்ணாமலை:** சட்டமன்றத் தலைவர் அவர்களே மாவட்ட ஆட்சி மன்ற நிர்வாகம் குறித்தும், ஒரு மாவட்டம் எந்த வகையிலே தன்னுடைய ஆட்சி முறையை அமைத்துக் கொண்டால் மக்களின் குறைகளை எளிதாக்குகின்ற வகையிலே செயல்பட முடியும் என்பதைப் பற்றிய கருத்துக்களையும் எனக்கு முன்பு பேசிய கனம் உறுப்பினர்கள் மிகமிக அழுத்தமாக எடுத்துக் கூறினார்கள். பொதுவாக, குறிப்பிட்ட கருத்துக்களில் மிக மேலோங்கியிருந்த கருத்து மாவட்ட வளர்ச்சி மன்றங்களைப் பற்றியது. மாவட்ட வளர்ச்சி மன்றங்கள், திருமணங்களின்போது தம்பதிகள் மாலை மாற்றுகின்ற சடங்கு எப்படியோ, அந்த சடங்கு போன்ற முறையிலே தான் இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





கிராமப் புறங்களிலே பெரும்பெரும் சாலைகள் எல்லாம் ஊராட்சி ஒன்றியங்களில் பொறுப்பிலே விடப்பட்டிருக்கின்றன. பெரும் சாலைகளை—சாலைச் செலவுகளை ஏற்று நடத்துகின்ற அளவுக்கு அதற்குப் பெரிய வசதிகள் அளிக்கப்பட்டிருக்கிறதா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. இவற்றையெல்லாம் போககுவதற்கு மாவட்ட வளர்ச்சி மன்றங்களிலே எடுத்துச் சொல்கின்ற நேரத்தில், நமது பெருமதிப்பிற்குரிய உறுப்பினர்கள் எடுத்துக் கூறியதைப் போல, அது வெறும் திருமணச் சடங்காகவே இது வரையிலும் இருந்து வருகிறது என்பதை நான் மிகப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக, நான் அறிந்த வரையிலும், வகையிலும் இன்று நிச்சயமாக கிராமப் புறத்திலே, வாடி, வதங்கிச் செல்கின்ற ஏழைகளுக்குப் பல பகுதிகளிலே நடைபாதைகள் இல்லாமல் இருக்கின்றன. உழவர் பெருமக்கள் குறைகளையும் கோரிக்கைகளையும் தீர்க்க வேண்டுமென்று நாம் கருதுகிறோம் என்று சொன்னால், ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஒவ்வொரு தலைமை அலுவலரைப் போட்டு, ஒவ்வொரு வட்டத்திலும் தலைமை அலுவலகத்தில் அவர் வந்து அந்த அந்த வட்டத்திலே இருக்கிற மக்களது குறைகளையும் கோரிக்கைகளையும் ஏற்று உடனுக்குடன் பரிசீலனை செய்கின்ற முறையிலே நடைமுறைப் படுத்தப்படுமானால் நிச்சயமாக இன்றைய தினம் உள்ள கோரிக்கைகளிலே 50 சத விகிதத்தை உடனுக்குடன் குறைப்பதற்கு நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ள முடியும்.

ஒரு கிராம விவசாயி தன்னுடைய நிலத்திற்கு பம்ப் செட் போட வேண்டுமென்ற காரணத்தினால் ஊராட்சி ஒன்றியத்திற்கு மெஷின்கள் வாங்குவதற்கு மனு செய்து கொள்ளுகிறான். அங்கே மனு போட்டுவிட்டு அடுத்து மின்சார வாரியத்திற்கு மனு போடுகிறான். பம்ப் செட் போட்டதற்குப் பிறகு 'நீ போய் மின்சார இணைப்பைப் பெற்றுக்கொள்' என்று ஆணையாளர் கூறுகிறார். ஆகவே மின்சார வாரியத்திற்குச் சென்றால், 'நீ மின் பொறி சம்பந்தப்பட்ட கருவிகளைப் பொறுத்தி விட்டு வா' என்று சொல்லுகிறார்கள். இப்படியே காலதாமதம் செய்துகொண்டே போகிறார்கள். கடைசியிலே அவர்கள் 6 திங்கள், 8 திங்கள் என்று திங்களை ஏற்றிக் கொண்டே செல்கிறார்கள். விவசாயிகளுடைய ஏற்றங்களுக்கு வேண்டிய மின்சாரத்தை அவர்களாலே உடனுக்குடன் பெறமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

இங்கு நமது மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி கொறடா அவர்கள் செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரத்தை ஏதோ காஞ்சிபுரத்திற்கு எடுத்துச் செல்வதாகச் சொன்னார்கள். இந்த சமயத்தில் சுருக்கமாக நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு காஞ்சிபுரத்தின் தலைவராக இருந்தவர் காங்கிரசிலே அதிகமான பற்றும் பாசமும், அந்தஸ்தும் கொண்டவர். அவருடைய காலத்தில் நமது தமிழகத்துக்கு திரு. காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார். அந்த நோக்கில் ஒரு தீர்மானத்தைப் போட்டு செங்கற்பட்டு மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்கதும், அதிகமாக மக்கள் தொகை

உள்ளதுமான காஞ்சிபுரம் மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையில் உள்ளது; அதனுடைய வேலைகளை முடிக்கவேண்டுமென்றால் நந்தனம் செல்லவேண்டியதாக இருக்கிறது. ஆகையால் செங்கற்பட்டு மாவட்டத்துத் தலைமை அலுவலகத்தை மாற்றியாக வேண்டுமென்று தூதுக் குழுவையும் ஏற்படுத்தி, அதிலே என்னையும் ஒருவராகப் போட்டிருந்தார்கள். அப்பொழுதே அவர்கள் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள், ஆதரித்து இருக்கிறார்கள், வாக்குறுதி தந்தார்கள் என்பதை நான் எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்கு நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். காரணம் அவர்களுடைய தலைவரே தந்த வாக்குறுதியை இவர்கள் மீறமாட்டார்கள், அதை நிறைவேற்ற குறுக்கிடமாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். இந்த அளவுக்கு இருந்தாலும் சென்னையை ஒட்டிய பகுதிகளிலே காஞ்சிபுரம் இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய பெரிய நகரமாக இருந்தாலும் அந்த நகரத்திலே தொழில் வளம் இல்லாமலிருக்கிற காரணத்தால், மக்கள் வாழ வழி தெரியாமல் அல்லல்படுகிறார்கள்—அவதிப்படுகிறார்கள். ஆகையினாலே தனியார் துறை நிறுவனங்களாக இருந்தாலும், அல்லது அரசினுடைய பொறுப்பிலே உடைய, ஏற்படுத்தப்படுகின்ற நிறுவனங்களாக இருந்தாலும், மக்கள் ஜனத்தொகை அடிப்படையிலே வைத்து, நீண்ட நெடுங்காலமாக வரலாற்றுச் சிறப்பைப் பெற்றிருக்கின்ற தன்மையில் அங்கு ஏற்படுத்துகின்ற வகையில் தமிழக அரசு செயல்படவேண்டும் என்றும், பெரும் அளவில் அங்கு தொழில் வளத்தை ஏற்படுத்துவதற்கு முனைய வேண்டுமென்றும் கூறி என்னுடைய கருத்தை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. என். மருதாசலம்: உதவி சபாநாயகர் அவர்களே, இன்று முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். மணியக்காரர் பேச்சின்படி தான் இன்றைக்கு நிர்வாகமே இருக்கிறது. மணியக்காரர் கையெழுத்து போட்டவுடனே நடக்கிற அந்த முறைதான் நடந்துகொண்டு இருக்கிறதே தவிர, வேறு எந்தவிதமான முறையும் இல்லை. மணியக்காரர்களை இன்றைக்கு நிரந்தர வேலைக்காரர்களாக வைத்துக்கொண்டு அவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக் கொடுக்கவேண்டும். அப்படி நிரந்தர வேலைக்காரர்களாக ஆக்கி, சம்பளத்தை உயர்த்திக் கொடுக்கின்ற நோக்கில் ஒரு கிராமத்திலேயிலிருந்து இன்னொரு கிராமத்திற்கு மாற்றுகிற முறையையும் வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி இருந்தால்தான் மணியக்காரர்கள் முறையாக வேலை செய்வார்கள்.

ரெவின்யூ டிபார்ட்மென்டைப் பொறுத்த வரையில் இன்றைக்கு கலெக்டரிடத்திலோ, அல்லது தாசில்தாரிடத்திலோ போய் ஒரு விண்ணப்பம் கொடுத்தால் எந்தவிதமான பதிலும் கிடைப்பதில்லை. இன்றைய தினம் ஒரு விண்ணப்பத்தை சாதாரண மக்கள் கொடுத்தாலும் சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்தாலும் அதற்கு பதில் கொடுப்பதில்லை. அந்த விண்ணப்பத்திற்கு உடனடியாக





உண்டா இல்லையா என்று இரண்டிலொரு பதிலை அனுப்ப வேண்டும். அப்பொழுதுதான் அதற்கு மேல் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைப் பற்றி தெரிந்துகொள்ள முடியும்.

அடுத்தபடியாக, 60 வயதானவர்களுக்கு ஒரு பென்ஷன் கொடுப்பதாகப் போன காங்கிரஸ் அரசாங்கத்திலே திட்டம் வந்தது. அந்த பென்ஷன் இப்பொழுது கொடுப்பதே இல்லை. ஏதாவது விண்ணப்பத்தை எழுதிக் கொடுத்தால், அதை மணியக்காரரும் வந்து பார்ப்பதில்லை. கணக்குப்பிள்ளையும் வந்து பார்ப்பதில்லை. அதைப் பற்றி கவனிப்பதும் இல்லை. ஆகவே, உடனடியாக அந்த விண்ணப்பகாரர்களுக்கு பென்ஷன் கொடுக்கும் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு உதவி ஊதியம் பெறுகின்ற நிலையிலுள்ள உபாத்தியாயர்களுக்கு விலைவாசி உயர்வுக்குத் தக்கபடி உயர்த்திக் கொடுக்க வேண்டும். இன்றைக்கு விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறது. விலைவாசி உயர்வுக்கு ஏற்றபடி அவர்களுடைய ஊதியத்தையும் உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நகரசபையிலே வேலை செய்கின்ற எழுத்தர்களுக்கு பென்ஷன் தரவேண்டுமென்று ஏற்கனவே பலபேர்கள் கூறியிருக்கிறார்கள். இப்படி நகரசபை எழுத்தர்களுக்கும் பென்ஷன் தரவேண்டுமென்று கோவை நகரசபையிலே தீர்மானம் போடப்பட்டு அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதன்பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கிறது என்று தெரியவில்லை. ஆகையால் இந்த எழுத்தர்களுக்கு உடனடியாக பென்ஷன் தருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். மு. ப. 11-30

பல இடங்களில் கூட்டங்கள் போடுகிறார்கள். அப்படி கூட்டங்கள் போடுவதற்காக போலீஸில் அனுமதி வாங்கவேண்டும். அதற்காக ஒரு ரூபாய் ஸ்டாம்ப் ஒட்ட வேண்டும். இரண்டு ரூபாய் டெபாசிட் கட்டவேண்டும். 7 நாட்களுக்குள்ளாக கூட்டம் நடத்தவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அப்படி இல்லாமல் ஒரு கூட்டம் போடவேண்டும் என்று போலீஸ் ஸ்டேஷனில் எழுதிக் கொடுத்தால் அப்போதே கூட்டத்திற்கான அனுமதி தரவேண்டும். அந்த முறையைக் கையாள்வதற்கு அரசாங்கம் முற்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த மாவட்ட ஆட்சியாளர்கள் முறையாக நடந்து கொள்ள வேண்டுமென்று பல அங்கத்தினர்கள் பேசினார்கள் என்றால், அது மாவட்ட ஆட்சியாளர்கள் மீது குறை சொல்வதற்காக அல்ல. அவர்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்திவிட்டால் அவர்கள் ஒழுங்காக நடந்துகொள்வார்கள். வேலையும் முறையாக நடக்கும். மக்கள் அவர்கள் பேரில் நம்பிக்கை கொள்ளும் அளவுக்கு அவர்கள் நடந்து கொள்ளவேண்டும். அதற்கு மாறாக நடந்து கொள்ளுபவர்கள் மீது அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து மக்களுக்குள்ள குறைபாடுகளைத் தீர்ப்பதற்கான வகையில் அவர்கள் நடந்து கொள்ளச் செய்யவேண்டும் என்று கேட்டு என் உரையை முடிக்கிறேன்.

* திரு. எஸ். ஜே. ராமசாமி: சட்டமன்றத் தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாவட்டங்கள், வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில் எப்படிப் பிரிக்கப்பட்டிருந்தனவோ அப்படியே இன்னும் இருந்து கொண்டிருக்கின்றன. இப்போதுள்ள மாவட்டங்களில் சில சிறியவையாகவும், சில பெரியவையாகவும் இருக்கின்றன. தாலுக்காக்களை எடுத்துக் கொண்டாலும் சில தாலுக்காக்கள் பெரியனவாகவும் சில சிறியனவாகவும் இருக்கின்றன. இதையெல்லாம் அரசாங்கம் நல்ல முறையில் கவனத்தில் வைத்துக் கொண்டு புனராலோசனை செய்யவேண்டும். இதெல்லாம் பல வருஷங்களாகச் சொல்லிக் கொண்டு வரக்கூடிய விஷயங்கள்தான், இதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வருவதில் பயன் இல்லை. இந்த மாவட்டங்களை மாற்றியமைக்க வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். வடார்க்காடு மாவட்டம் மிகப் பெரிய மாவட்டம். செங்கற்பட்டு மாவட்டம் சிறிய மாவட்டம். வடார்க்காடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய சில தாலுக்காக்களை எடுத்து செங்கற்பட்டு மாவட்டத்தோடு சேர்த்து இரு மாவட்டங்களையும் சீர்செய்ய வேண்டும். இதை ஏன் சொல்கிறேன் என்றால், ஒரே மாவட்டத்தின் ஒரு தாலுக்காவிலிருந்து இன்னொரு தாலுக்காவிற்கு நெல் எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்றால், இடையிலே வருகிறது, இன்னொரு மாவட்டம். இதற்காக இந்த மாவட்டத்திலும் பர்மிட் வாங்க வேண்டும் இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் பரிசீலனை செய்து மாவட்டங்களின் எல்லைகளைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராம மணியங்களைப் பொறுத்தவரையில், இசும்பு முறையை எடுத்து விடுவது நல்லது. கிராம மணியங்களை இசும்பாக வைத்துக் கொள்வது அவ்வளவு நல்ல முறை ஆகாது. இசும்பு பாத்தியம் என்றால் ஒருவர் தொடர்ந்து தவறு செய்து கொண்டிருந்தாலும், அவரை இன்னொரு இடத்திற்கு மாற்ற முடியாது. தங்களை ஒன்றும் செய்ய முடியாது என்று இசும்பு பாத்தியத்தை உள்ளவர்கள் தவறு செய்து கொண்டு இருக்கிறார்கள் ஆகவே, இசும்பு முறையை எடுத்துவிட்டு ஒருவரை ஒரே ஊரில் தொடர்ந்து இருக்கும்படியான நிலைமை இல்லாமல், ஒரு ஜில்லாவுக்குள்ளேயே வேறொரு ஊருக்கு மாற்ற வேண்டும். இசும்பு முறையை எடுத்து விட்டால் மிக நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மணியக்காரர், கணக்கப்பிள்ளை செய்கிற தவறுகள்தான் அரசாங்கத்தின் மீதும் குறை சொல்லக் காரணமாக இருக்கின்றன. மணியக்காரர், கர்ணம் தவறு செய்தால் யாரைப் பாதிக்கும்? அரசாங்கத்தைத்தான் பாதிக்கும். கிராம மக்களிடத்தில் லஞ்சம் வாங்குகிறார்கள் என்ற குற்றச்சாட்டு கிராம மணியம், கணக்கப்





பிள்ளை மீது வருவதற்குக் காரணம், இசும்பு முறை இன்னும் இருந்து கொண்டிருப்பதுதான். ஆகவே, இசும்பு முறையை எடுத்துவிட்டு, அவர்களுக்கு நல்ல ஊதியம் கொடுத்து ஒவ்வொரு ஊராக மாற்றல் செய்ய வேண்டும். இந்த இசும்பு முறையை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கௌன்சிலுக்கு யார் தலைவராக இருக்க வேண்டும் என்பதைப்பற்றி பல அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டினார்கள். நம்முடைய மாநிலத்தில் கலெக்டர்தான் அதற்குத் தலைவராக இருக்கிறார். ஆனால் ஆந்திர மாநிலத்தில் கலெக்டர் தலைவராக இருப்பது கிடையாது. அங்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் தலைவராக இருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக இருந்தாலும் சரி, எம்.எல்.ஏ.-ஆக இருந்தாலும் சரி, எம்.பி. யாக இருந்தாலும் சரி வருஷத்திற்கு வருஷம் தேர்தல் நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள்தான் டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கௌன்சிலுக்குத் தலைவராக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு கலெக்டர் தலைவராக இருப்பதால் அவர்களுக்கு அதிகாரங்களைப் பொறுத்தவரையில் நிர்வாகத்தின் கண்ணோட்டத்திலேயே போகிறது. அதிகாரிகள் தவறு செய்தால் கூட நடவடிக்கை எடுக்க இவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள். ஆகவே கலெக்டர்தான் தலைவராக இருக்க வேண்டும் என்ற நிலைமையை மாற்றி உறுப்பினர்களால் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள்தான் மாவட்ட அபிவிருத்தி மன்றத்திற்குத் தலைவராக இருக்க வேண்டுமென்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

துண்டு நிலங்களை ஒன்றாகச் சேர்க்க வேண்டும். சில கிராமங்களில் ஆற்றுக்கால் பாய்ச்சலில் வரக்கூடிய நிலங்கள் சிதறுண்டு இருக்கின்றன. துண்டு நிலங்களை ஒன்று சேர்க்க வேண்டும், கன்ஸாலிடேஷன் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்றுக்கால் பாய்ச்சலின் கீழ் வரும் புஞ்சை நிலங்கள் இருந்தாலும் சில நிலங்களுக்கு ஆற்றுக்கால் மூலமாகப் பாசனம் கிடைப்பதில்லை. ஆற்றுக்கால் பாய்ச்சல் ஓரளவோடு நின்று திரும்பிப் போய் விடுகிறது. மேடிட்ட பகுதிகளில் பம்புசெட்டைப் போட்டு தண்ணீரை உறிஞ்சி விடுகிறார்கள். அதனால் கசக்காலை நம்ப வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட நிலங்களுக்கு ஆற்றுக்கால் பாய்ச்சல் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட நஞ்சை நிலங்களுக்கும் தீர்வை 18 ரூபாய் என்று போடப்பட்டு இருக்கிறது. அந்த நிலங்களுக்கு நஞ்சைத் தீர்வையை எடுத்துவிட்டுப் புஞ்சைத் தீர்வையாகப் போட வேண்டும். கசக்கால் தண்ணீர் பாயாமல் இருப்பதால் அந்த நிலங்களுக்குப் புஞ்சைத் தீர்வைதான் விதிக்க வேண்டுமேதவிர அதை நஞ்சை என்று சொல்லி நஞ்சைத் தீர்வை போடுவதில் பயன் இல்லை. ஒரு ஏக்கருக்கு 18 ரூபாய், 20 ரூபாய் தீர்வை என்றால் எப்பேர்ப்பட்ட விவசாயியாலும் அதைத் தாங்க முடியாது. ரொம்ப வசதி படைத்தவர்கள் கூட ஏக்கருக்கு 20 ரூபாய் என்றால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது. ஆகவே, இப்படிப்பட்ட நஞ்சை நிலங்களுக்கும் புஞ்சைத் தீர்வையே

விதிக்க வேண்டும். பாய்ச்சல் இல்லாததால் அப்படிப்பட்ட நிலங்களைக் கட்டாயமாகப் புஞ்சைத் தீர்வைக்கு மாற்ற வேண்டும் என்று வற்புறுத்தி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஜமாபந்தி முறையில் சில மாறுதல்கள் தேவை. பெடிஷன்கள் போட்டால் உடனடியாகத் தீர்ப்பது இல்லை. தள்ளிக் கொண்டே போகிறது. ஜாயிண்ட் பட்டாக்களை தனிப் பட்டா ஆக்க வேண்டும் என்று விவசாயி மனுப் போட்டால் உடனே பிரித்துக் கொடுக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் நான்கு பேர்கள் இருந்து, எல்லோருக்கும் சேர்ந்தாற்போல் கூட்டுப் பட்டாவாக இருப்பதை தனித்தனி பட்டாவாக கொடுக்க வேண்டுமென்று மனுச் செய்து கொள்ளும்போது அதைப் பிரித்துக் கொடுக்க வேண்டும், கூட்டுப் பட்டாவாக இருந்தால் ஒவ்வொருவரும் தனித்தனியாகக் கடன் வாங்குவதில் கஷ்டம் ஏற்படும். எலக்ட்ரிக் பம்புசெட்டுக்கள் வாங்குவதற்கும், மற்ற உதவிகளை அரசாங்கத்திலிருந்து பெறுவதற்கும் தனிப் பட்டா அவசியம் ஆகிறது. ஆகவே உடனடியாக இந்தக் கூட்டுப் பட்டாவைத் திருத்தி தனிப் பட்டாவாகச் செய்ய வேண்டும் என்று தாசில்தார் உடனடியாக கிராம கர்ணங்களுக்கு இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்: அவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கையின் பேரில் நான் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். "மாவட்ட ஆளுநரிடம் குவிந்துள்ள அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கவேண்டும்" என்பதைக் குறித்து விவாதிக்க என்ற வெட்டுப் பிரேரணையை நான் கொடுத்திருக்கிறேன்.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை)

எனக்கு முன் பேசிய உறுப்பினர் ஒருவர் நூற்றுக்கணக்கில் இல்லையென்றாலும், 37 அதிகாரங்கள் மாவட்ட ஆளுநரிடம் இருக்கின்றன என்று சொன்னார்கள். அப்படியே அதிகாரங்கள் குவிந்து கொண்டு போவதால் ஒருவரால் அதைப் பார்க்க முடியாது. அவர்களுக்கு உதவியாளராக கெஸடெட் ஆபிசர் அந்தஸ்தில் பல பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பலர் அப்படி பி. ஏ. ஆக வந்து அமர்கிறார்கள். அவர்களிடம்தான் கலெக்டருடைய அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்க வேண்டியிருக்கிறது. அதற்காக, பெரிய மாவட்டங்களை ஓரளவு 'பைபர்கேட்' செய்து கொடுத்தால், அந்த அதிகாரம் பரவலாக இருக்கும். மாவட்டங்களைப் பிரித்து அமைப்பதன் காரணமாக, இப்பொழுது செலவாவதைவிட அதிகச் செலவு ஆகும். ஆதலின் இயன்ற அளவுக்கு அதிகாரங்களை எப்படிப் பகிர்ந்து கொடுப்பது என்பதைப் பற்றித்தான் யோசிக்க வேண்டும். கலெக்டருக்கு உள்ள அதிகாரத்தில் அதிகப் பங்கு ரெவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு வர வேண்டும். தர்க்காஸ்தை விநியோகம் செய்வது போன்ற சிறிய சிறிய விஷயங்களுக்குப் பல கடிதங்கள் பல மட்டங்களில் அதிகா-





ரத்தைப் பகிர்ந்து கொடுப்பதென்பது மிக எளிதான காரியம். இன்று நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிற மிக துக்ககரமான நிலைக்கு ஒரு எடுத்துக் காட்டு, சாதாரணமான முறையைக் கையாண்டு நேற்று செங்கற்பட்டு மாவட்ட கெசட் பதிவில்லாத அத்தனை உத்தியோகஸ்தர்களும் காஷுவல் லீவ் போட்டு விட்டதாகக் கேள்விப்படுகிறேன். அங்குள்ள ஆளுநருடைய பி.ஏ. (ஜெனரல்), மற்ற அதிகாரிகளை மரியாதையற்ற முறையில், மிகக் கேவலமாக நடத்தியதால், மரியாதைக் குறைவைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில், சுயமரியாதை கெடுவதைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில், அவர்கள் விடுமுறை போட்டுத் தங்களுடைய கஷ்டங்களை தாங்கள் அனுபவித்து வருகின்ற நிலையை, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடத்தில் வந்து எடுத்துக் கூறி, அதற்குப் பரிகாரம் தேடியதாகக் கேள்விப்பட்டேன். அது ஒரு காலத்தில் 20 ஆண்டுகளுக்கு முன்பாக நடந்து இருக்கலாம். விடுதலை அடைந்ததற்குப் பிறகு, நம்முடைய உத்தியோகஸ்தர்கள் எந்த மட்டத்திலிருந்தாலும் சரி, கீழ் மட்டத்தில் இருந்தாலும் சரி, உயர் மட்டத்திலிருந்தாலும் சரி, மிக உயர் மட்டத்திலிருந்தாலும் சரி, எல்லோரும் நாட்டுக்குப் பணி செய்கின்றவர்கள், சம்பளம் வாங்குபவர்களாக இருந்தாலும் சரி, சம்பளம் வாங்காதவர்களாக இருந்தாலும் சரி நாட்டின் பொதுப் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் என்ற முறையில் நடத்தப்பட வேண்டும். முன்காலத்தில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் 'உங்கள் கீழ்ப்படிதல் உள்ள (yours Obediently) என்று போட்டுக்கொண்டிருந்ததை உங்கள் உண்மையுள்ள (yours faithfully என்று மாற்றி திருத்தம் கொண்டுவரப்பட்டது. அவர்கள் நிர்வாகத்தில் தோளோடு தோள் கொடுத்துப் பணியாற்றுபவர்கள், எல்லோரும் அந்தஸ்து உடையவர்கள் என்ற ஒரு நிலையை, ஓர் எண்ணத்தை, ஓர் உணர்ச்சியை அவர்களிடையே உண்டாக்க வேண்டும். ஆளுநர் இருந்தால், ஆளுநருக்குக் கீழே உதவி ஆளுநர்கள் இருந்தால் அவர்களுக்குக் கீழே கெஜட் பதிவு இல்லாத சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இருந்தால், அவர்களெல்லாம் கவுரவமாக நடத்தப்பட வேண்டும். அடிமைகளைப் போன்று அவர்களை நடத்தக் கூடாது. வீட்டு வேலையாட்களைக் கூட மிகவும் கவுரவமான முறையில் நடத்த வேண்டும் என்று சொல்கிறோம். முதன் முதலில் மாகாண சுயாட்சி வந்தவுடனேயே சேவகர்களை "பியூன்" என்று அழைக்கக் கூடாது, பெயர் சொல்லித்தான் அழைக்க வேண்டும் என்று அன்று ப்ரீமியராக இருந்த ராஜாஜி அவர்கள் உத்தரவு பிறப்பித்ததாகத் தெரிகிறது. அவைகளெல்லாம் நாளடைவில் நடைமுறையில் மறைந்து போய்விட்டது. இன்றைக்கு ஆண்டான், அடிமை என்ற நிலையில்தான் கீழ்மட்டத்தில் இருக்கக்கூடிய உத்தியோகஸ்தர்கள் இருக்க வேண்டியிருக்கிறது. அதற்குக் காரணம் இந்த பெர்ஸனல் ஃபைல்கள் தான். அது சம்பந்தமாக ஒரு முக்கியமான திருத்தம் செய்ய வேண்டும். பெர்ஸனல் ஃபைல், கான்பிடென்ஷியல் ஃபைல் என்று வைத்துக் கொண்டிருப்பதால், அதிகமாக "காக்காய்" பிடிப்பவர்களுக்குத் தான், அதாவது மேலதிகாரிகளிடம் கொஞ்சி, குலாவி,

[திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்] [1968 மார்ச் 26

அவர்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்துகொடுப்பவர்களுக்குத்தான் சலுகை, சௌகரியம் எல்லாம் கொடுக்கப்படுகிறதே தவிர, உண்மையாக சேவை செய்பவர்களுக்கு, சேவை ஆர்வம் கொண்டவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் இல்லாமல் அவர்கள் பாதிக்கப்படுகிற நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. வெளி நாடுகளில், பிரான்ஸ் போன்ற நாடுகளில் பெர்ஸனல் ஃபைல்களுக்கு மாறாக, ஒரு நிர்வாக நடுவர் (அட்மினிஸ்டிரேடிவ் ட்ரிப்யூனல்) என்ற அமைப்பை வைத்து, அவ்வப்பொழுது அந்தப் பணியாளர்களுடைய நிலைமையை, அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களைக் கேட்டு, அவர்களுடைய குறைகளைத் தீர்த்து வைக்கிறார்கள். அந்த மாதிரி ஒரு நிலையை நாம் இங்கு ஏற்படுத்த வேண்டும். நிர்வாக நடுவர் (அட்மினிஸ்டிரேடிவ் ட்ரிப்யூனல்) என்பது ஒரு முக்கியமான அம்சமாக மாவட்ட ஆளுகையிலே அமைய வேண்டும்.

அடுத்தபடியாக, ஒரு முக்கியமான விஷயம். ஃபைல்கள் பைசல் ஆகாமல் வெகு நாட்களுக்குத் தேங்கிக் கிடக்கின்றன. இந்த முறையை நாம் சீரமைக்க வேண்டும். ஒரு மாவட்டத்தில் கார்டு ஸிஸ்டம் என்று ஒன்றை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதாவது யார் விண்ணப்பம் கொடுத்தாலும் யார் மனுக் கொடுத்தாலும், அவர்களுக்கு கார்டில் ஒரு தேதி குறிப்பிடப்பட்டு, இத்தனை நாட்களுக்குள் விஷயம் முடிவடையும் என்று அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. அம்மாதிரி கார்டு ஸிஸ்டத்தை மற்ற எல்லா மாவட்டங்களிலும் நடைமுறைக்குக் கொண்டு வந்தால் பேப்பர்களைத் துரிதமாகத் பைசல் செய்வதற்கு மிகவும் உதவியாக இருக்கும். ஆகவே, கார்டு ஸிஸ்டத்தை மற்ற மாவட்டங்களிலும் அமுல் நடத்தியோ அல்லது முறையைக் கையாண்டோ சீர்திருத்தங்கள் செய்து, எல்லா மாவட்டங்களிலும் துரிதமாகப் பேப்பர்கள் பைசலாவதற்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கே. சகாதேவக் கண்டர்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மாவட்ட நிர்வாகம் பற்றி என்னுடைய கட்சியின் சார்பாகக் கொண்டு வந்திருக்கக்கூடிய வெட்டுப் பிரேரணையை ஆதரித்து எனது கருத்துக்களைக் கூற முன்வருகிறேன். இந்த மாவட்ட நிர்வாகம் நல்ல முறையில் நடக்க வேண்டுமென்றால், சீர்பட வேண்டுமென்றால், மக்கள் தேவை பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்றால், மக்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொன்னால், வட ஆர்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று நான் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அது 11 தாலுக்காக்களைக் கொண்ட பெரிய ஜில்லாவாக இருக்கிற காரணத்தினால், அங்கு மக்களிடமிருந்து வரக்கூடிய மனுக்கள் பரிசீலனை செய்யப்படாமல் அப்படியே தேங்கிக் கிடக்கின்றன. அவைகள் தக்க முறையில் துரிதமாகப் பரிசீலனை செய்யப்பட்டு ஆவன செய்ய முடியவில்லை என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.



1968 மார்ச் 26] [திரு. கே. சகாதேவக் கண்டர்]

எங்கள் மாவட்ட ஆட்சியாளர் புதியதாக ஒரு திட்டத்தை ஆரம்பித்து நடத்திக் கொண்டுவருவது மிகவும் வரவேற்கத்தக்கது. கிராமங்கள் வாரியாக சென்று, கிராம மக்கள் கொடுக்கக்கூடிய மனுக்களை அங்கேயே பரிசிலனை செய்து ஆவன செய்வதாகக் கேள்விப்படுகிறேன். மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது என்னவென்றால், இந்த முறையைப் பின்பற்றி, தாலூக்காவிலுள்ள குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டுமானால் அது பல ஆண்டுகள் பிடிக்கும். ஆகவேதான் இந்த ஜில்லாவை இரண்டாகப் பிரித்தால், மக்களுக்குச் சேவை செய்வதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படும், மக்களுக்குச் சௌகரியம் ஏற்படும் என்பதை மிகவும் வற்புறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

இரண்டாவதாக இந்த ஜமாபந்தி முறையை அடியோடு ஒழிக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் தாலுகா ஆபீசில் ஜமாபந்தி நடக்கிறது. கிராம அதிகாரிகளுக்கு அதனால் மிகவும் சிரமமான நிலைமை உண்டாகிறது. ரூபாய் 100, 200 செலவு செய்ய வேண்டிய நிலைமை வருகிறது. வீட்டை விட்டு வந்து அங்கேயே குடியிருக்க வேண்டிய நிலைமைதான் ஏற்படுகிறது. ஆகவே, இந்த முறையை அடியோடு மாற்றி, நல்ல முறையில், ஆதாயமாக இருக்கக்கூடிய முறையில், செலவு இல்லாத முறையில், பொது மக்களுக்கும் சௌகரியமாக இருக்கும் முறையில், யூனியன் வாரியாகப் பிரித்து இதை நடத்துவதற்கு வழிவகைகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சுமார் 50 மைல், 60 மைல் தூரத்திலிருந்து வந்து, கட்டு சாத மூட்டையைக் கட்டிக்கொண்டு வந்து, அங்கு இரண்டு, மூன்று நாட்கள் தங்கி மனுக்களைக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதை நான் கண்கூடாகப் பார்க்கிறேன். கொடுக்கப்பட்ட மனுக்களில் 100-க்கு 99 மனுக்கள் அப்பொழுது பரிசீலிக்கப்படவில்லை. தணிக்கை அதிகாரி மனுதாரரைக் கூப்பிட்டு, 'தாசில்கார் ஊருக்கு வருவார். நீங்கள் போகலாம்' என்று சொல்லி விடுகிறார். பல ஆண்டுகள் ஆகியும் தாசில்தார் ஊருக்கு வருவதில்லை. அந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்படுவதுமில்லை. ஏனெனில் நிறைய வேலை இருக்கிறது, வேலை அதிகமாகிவிட்டது என்று சொல்கிறார்கள்.

மேலும், சிக்கனத்தை யொட்டி சில அதிகாரிகள் நீக்கப்பட்டு விட்டார்கள் என்றும் சொல்லப்படுகிறது. மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, முடிவு கூறப்படாமலேயே நூற்றுக்கணக்கான மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றன. உதாரணமாகச் சொல்லப் போனால் நானே ஒரு மனு பட்டா பிரிவினைக்காகக் கொடுத்தேன். ஸப்-டிவிஷன் பீஸ் கூடக் கட்டிவிட்டேன் அந்த மனு இப்பொழுது எங்கே இருக்கிறது என்று கூடத் தெரியவில்லை, இம்மாதிரி பல ஆயிரக்கணக்கான மனுக்கள் பைசல் செய்யப்படாமலேயே இருக்கின்றன. உதாரணத்திற்கு மற்றொன்று சொல்வேன். கிராம மக்கள், 25 வீடு இல்லாத ஏழை மக்கள், வீட்டு மனைக்காக நிலம் ஸாரி செய்து கொடுக்க வேண்டும் என்று 10 ஆண்டுகளுக்கு

[திரு. கே. சகாதேவக் கவுண்டர்] [1968 மார்ச் 26

முன்பு ஒரு மனு எழுதிக் கொடுத்தேன். அடைமானம் செய்து கொடுப்பதற்கான மனுவை 1962-ல் கொடுத்தேன். பிறகு 1963, 1964, 1965, 1966, 1967, இப்படி பல வருஷங்கள் ஆகிவிட்டன. ஒவ்வொரு ஆண்டும் ஒரு மனுக் கொடுத்திருக்கிறேன். ஆனால் இன்றைய தேதி வரையில் அந்த மனுக்கள் எந்த நிலையில் இருந்து வருகின்றன என்பதைக் கூட புரிந்துகொள்ள முடியவில்லை. அதிகாரிகளைக் கேட்டால் சப்-டிவிஷன் செய்யப்பட வேண்டும், சர்க்கார் தரிசாக இருப்பதை கிராம நத்தமாக மாற்ற வேண்டும். பிறகுதான் அடைமானம் செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். மக்களுடைய கோரிக்கைகள் இப்படிப் பல ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல், நீடித்துக் கொண்டே போகின்றன. கிராம மக்களிடமிருந்து வருகிற இப்படிப்பட்ட மனுக்களையெல்லாம் சீக்கிரமாகப் பரிசீலனை செய்து முடிவு செய்வதற்கு, ஒவ்வொரு தாலூகா ஆபிசிலும் ஒரு ஸ்பெஷல் சர்வேயர் நியமனம் செய்தால் மிகவும் நலமாக இருக்கும், மக்களுக்கு உள்ள சங்கடமான நிலைமை நீக்குவதற்கு உதவியாக இருக்கும் என்று வற்புறுத்திச் சொல்லிக் கொள்கிறேன். ஒவ்வொரு தாலூகா ஆபிசிலும் ஒரு ஸ்பெஷல் சர்வேயரைப் போட்டால் சப்-டிவிஷன் செய்வது அடைமானம் செய்வது போன்ற காரியங்களைத் துரிதமாகச் செய்து கொடுக்க முடியும்.

அப்படியாக, இன்று இருக்கும்படியான நிலைமையில் ஒரு வாட்ச்மென்னாக இருந்தால்கூட அவனுக்குச் சம்பளம் ஓரளவுக்கு அதிகமாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், அதைவிடக் குறைந்த அளவில் கிராம உத்தியோகஸ்தர்கள் சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை வருத்தத்துடன் சொல்லிக்கொள்கிறேன். முன்பெல்லாம் அவர்கள் 6 மாத காலம் வசூல் செய்வார்கள், மற்ற 6 மாதம் நிம்மதியாக இருப்பார்கள். ஆனால் இப்பொழுதெல்லாம் முழுநேர உத்தியோகஸ்தர்களாகத்தான் அவர்கள் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு ஓய்வு கிடையாது. ஆகவே, அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்து, கிராம உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராம சிப்பந்திகள் தோட்டி, தலையாரி ஆகியோர்கள் சாதாரணமாக அடிக்கடி வரி வசூலுக்கு உதவியாகச் செல்கிறார்கள். அவர்களை கிராமத்திலுள்ளவர்களுக்குத் தெரியாத நிலைமை ஏற்படுகிறது, சரியாக கிராம மக்கள் அவர்களை யார் என்று புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, அரசாங்கம் அப்படிப்பட்ட கிராம சிப்பந்திகளுக்குச் சீருடை வழங்க வேண்டும் என்று மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மக்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால், குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமென்றால், மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்றால், மக்களுக்கு நிலம் அடைமானம் செய்துகொடுக்க வேண்டுமென்றால், மக்க



1968 மார்ச் 26] [திரு. கே. சகாதேவக் கவுண்டர்]

ளுடைய தேவையைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்றால், இந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்று மீண்டும், மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. சின்னசாமி:** மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மாவட்ட நிர்வாக மானியக் கோரிக்கையை ஆதரித்து அதன்மீது சில கருத்துக்களை அவையின் முன் வைக்கிறேன். மாவட்டத்தின் முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாக இருப்பது கிராமம். அந்தக் கிராமத்தில் கிராம முன்சீப்களாக, கணக்குப் பிள்ளைகளாகப் பணியாற்றுகிறவர்களை அறவே எடுத்து விட்டு வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வண்ணம் எழுத்தர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வரி வசூலுக்கு உறுதுணையாக இருக்கிற தலையாரி, வெட்டியான் களுக்குச் சம்பளத்தை உயர்த்திக் கொடுத்து நிர்வாகம் நல்ல முறையில் நடைபெற ஆவன செய்யும்படிக் கேட்டுக் கொள்கிறேன், கணக்குப்பிள்ளைகளின் தொல்லைக்கு பொதுமக்கள் பிள்ளைகளாகி விடுகிறார்கள்.

நாமக்கல் வட்டாட்சி அலுவலகத்தில் ஓராண்டுக் காலம் பணியாற்றியவன் என்ற முறையில் சொல்கிறேன் வட்டாட்சி அலுவலகங்களில் எழுத்தர் குறைவாக இருக்கிறார்கள். வேலையோ அதிகம். அதனால் வேலைகள் தேங்கிவிடுகின்றன என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆண்டுதோறும் ஜமாபந்தி நடக்கும்போது எங்கெங்கே பட்டா வழங்க வேண்டும் என்று மனு வந்திருக்கிறதோ அங்கு கோட்டாட்சித் தலைவரோ, வட்டாட்சித் தலைவரோ நேரில் நிலப் பகுதிகளைப் பார்த்து விரைவாகப் பட்டா வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்ட நல அதிகாரி அடிக்கடி மாறுவதால் புதிய மாவட்ட நல அதிகாரி வந்து சேருவதற்குள் மாதக் கணக்கில் ஆகின்றன என்பதால் நிர்வாகம் பாதிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்தில் மாவட்ட நல அலுவலகம், மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்திற்கு அருகாமையில் இல்லாமல் எங்கோ ஒரு மூலையில் இருக்கிறது. எனவே, மாவட்ட நல அதிகாரி அலுவலகத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அருகாமையில் இருக்க ஆவன செய்யும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

வாரத்தில் ஒரு நாள் மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்டத்திலுள்ள முக்கியமான இடங்களுக்குச் சென்று பொதுமக்களின் குறைகளைக் கேட்க செய்யும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

மலேரியா இலாகாவில் பணியாற்றுகிறவர்களை நிரந்தரமாக நியமிக்க வேண்டும்.

ஆசிரியர்களை அதிகாரிகள் அடிக்கடி மாற்றுவதைத் தவிர்க்க வேண்டும். அதுமட்டுமல்ல. ஆசிரியர்களாகப் பணியாற்றும் கணவன் மனைவி இருவரையும் ஒரே இடத்தில் பணியாற்ற வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவு வழங்கும் அலுவலகத்தில் பணியாற்றும் அதிகாரிகள் பல ஆண்டுக் கணக்கில் ஒரே இடத்தில் இருக்கிறார்கள். அவர்களை மாற்றினால் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் ஆணையாளர்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஓம்னி பஸ்களில் கண்டக்டர்களை நியமிக்க வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப் பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் யூனியன் என்ஜினியர் ஒருவர்தான் இருக்கிறார். இதனால் வேலை பாதிக்கிறது. இன்னும் ஒரு ஏ.இ. நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள் எந்த ஊரின் பெயரால் எந்த இடத்தில் இயங்குகிறதோ அங்கேயே இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தை மூன்று மாதங் களுக்கு ஒரு தடவை அந்த மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு தொகுதியிலும் கூட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாகம் நல்ல முறையில் நடைபெற மாவட்ட போக்குவரத்து அதிகாரிகளை ஆண்டுக்கு ஒரு முறை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, இந்த மானியத் தின்மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பேசிய நண்பர்களெல்லாம், கிராம கர்ணம், மணியக்காரர்கள் நல்ல விதத் திலே செயல்படவில்லை, மோசமான நிலையில் இருக்கிறார்கள் என் பதைச் சொன்னார்கள். இன்றைக்கு இருக்கும் நிலையில் ஆர்.டி.ஓ. அஸிஸ்டெண்ட் கலெக்டர் இவர்கள் ஆபீசில் போஸ்டாபீஸ் போன்றுதான் வேலை பார்க்கிறார்கள். வரக்கூடிய அத்தனையையும் மேலே கலெக்டர் ஆபீசுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். பட்டா மாற்றுதல் சம்பந்தமாக, கிராம கணக்குப் பிள்ளை, ரெவின்யு இன்ஸ்பெக்டர், தாசில்தார் என்றுதான் போக வேண்டி இருக்கிறது. இந்த நிலையில் குறைந்தது 5 வருஷம் ஆகிறது. சுருக்கமாக ஆர்.டி.ஓ., அஸிஸ்டெண்ட் கலெக்டர் இவர் களுக்கு வேறு வேலையே இருக்கக் கூடாது. மக்களுடைய மனுக்கள், விண்ணப்பங்கள் இவற்றின் மீது தாங்களாகவே நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். அதை உடனடியாக அமைக்க வேண்டும் என்று அரசாங்கத்தி லிருந்து அறிக்கை விட வேண்டும். அப்படிச் செய்தால் நல்ல விதத்தில் நடைபெற சாத்தியமாக இருக்கும்.





சிவில் சப்ளை டிபார்ட்மெண்டில் பெரிய சிக்கலான நிலைகள் இருக்கின்றன. டாலுக் சப்ளை ஆபீசர்கள், மில்லர்கள், பொது மக்கள் கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஆகிய இந்த மூன்றுக்கும் இடையில் கஷ்டப்படுகிறார்கள். மில்லரிடம் நல்ல அரிசி என்று கேட்டால், டான்-ஓவர் சரியாக இல்லை என்கிறார். பொது மக்கள் மோசமாக இருக்கிறது என்கிறார்கள், அவர்கள் அப்படிச் சொன் னால் அந்த அரிசியும் கிடைக்காது என்று விளக்க வேண்டியிருக் கிறது. ஆகவே, இந்த டி.எஸ்.ஓ.க்கள் மிகுந்த கவனத்தோடு கண் காணித்துக் கொண்டு இருக்க வேண்டியிருக்கிறது. இதிலே மில் களைக் கண்டித்து நல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

முனிசிபல் எலெக்ஷன்களைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால், சேர்மன் பதவி ஏற்ற நாளிலிருந்து கவுன்சிலர்களை சரிக் கட்டத்தான் சரியாக இருக்கிறது. அவர்கள் பதவி வகிப்பது மூன்று ஆண்டுகள் தான். இதிலே கெட்டிக்கார சேர்மனாக இருந் தால், பேப்பர் வேட்டையாடி, பேப்பர் ஹண்டிங் என்று சொல் வார்கள், அம்மாதிரிச் செய்து, செயல் பட்டால் ஏதாவது செய்ய முடியும். அவரும் அப்படிச் செய்யவில்லை என்றால் ஒன்றும் நடக்காது. எந்த எந்த இடங்களில் பைப் வைக்க வேண்டும், எங்கெங்கே லைட் போடவேண்டும், எங்கெல்லாம், ரோடு போட வேண்டும் என்கிறதையெல்லாம் பார்க்க வேண்டும். இப்படி வேலைகளை எடுக்கும்போது, கவுன்சிலருக்கு இவ்வளவு என்று பிரித்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்தக் கோட்டா முறை இல்லாவிட்டால், நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரும். இதை யெல்லாம் மனதில் கொண்டு, அமைச்சர் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரும் போது, நேரிடையாகவே, பஞ்சாயத்து யூனியன் சேர்மன், முனிசிபல் சேர்மன் இவர்கள் தேர்ந்தெடுக்கும் முறையைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பத்திரப் பதிவு முறையில் கஷ்டங்கள் இருக்கின்றன. மூன்று தாளில் கொடுத்தால், அதை அப்படியே செய்தார்கள் என்பதில்லை. அதனால் ஜனங்களுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது. கொடுக்கும் பத்தி ரத்தில் சப்-ரெஜிஸ்ட்ரார் பார்த்துத் திருத்தினார் என்றால், அதை மறுபடியும் அடித்துக் கொண்டு வந்து கொடுக்க வேண்டியிருக் கிறது. வேலை ஒன்றுக்கு இரண்டு மடங்கு ஆகிறது. பேப்பரும் கிடைக்கவில்லை, வேலையும் அதிகமாகிறது. ஆகையினால், நல்ல விதத்திலே இயங்கும் வகையில் இதை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. ஈ. எம். நடராசன்:** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன். தற்போதுள்ள பிர்க்காக்கள், தாலுக்காக்கள், மாவட்டங் கள் இவை யெல்லாம் என்றோ ஏற்படுத்திய அமைப்பில் இருக் கிறது. இன்றைக்கு உள்ள நிலைகளைப் பார்க்கும் போது அவை ஏற்றதாக இல்லை. மாவட்டத்தின் மையத்தில் மாவட்டத் தலைநகர் அமையவில்லை. பல மாவட்டங்களுக்கும் இப்படித்தான் இருக்

கிறது. அநேகமாக ஒரு ஓரப் பக்கத்தில் இருக்கிறது. எங்கள் கோவை மாவட்டத்தில், கோவை நகரம் ஒரு ஓரத்தில் இருக்கிறது. அதனால் பல்வேறு இடைஞ்சல்களுக்கு மக்கள் ஆளாகிறார்கள். கோவையின் மையமான திருப்பூரை தலைநகரை மாற்ற வேண்டும் என்று நம் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன். மாவட்டம் பெரியதா, சிறியதா என்று பார்க்காமல், பரப்பளவு, ஜனத்தொகை இவற்றை அடிப்படையாகக் கொண்டு, எல்லைகளை மாற்றியமைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

நே. ப. 12·00 அடுத்தபடியாக, மாவட்ட ஆட்சித் தலைவர்களைப்பற்றிச் சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெள்ளையன் காலத்தில் மாவட்டத்தில் வரி வசூல் செய்கின்ற அதிகாரிகளாகவும், அவர்களுடைய ஏஜெண்டுகளாகவும் இருந்து பொதுமக்களைக் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். இன்றையதினம் பொது மக்களின் நன்மையைக் கருதி, கவர்ன்மெண்ட் சர்வெண்ட்ஸ் என்ற நிலையில் வேலை செய்து வருகிறார்கள். இதை உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தப்படியாக, ஜமாபந்தியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இது ஒரு வேடிக்கையான விஷயம். ஆண்டு முழுவதும் நடக்கும் காரியங்களை மே, ஜூன் மாதங்களில் கூடுகின்ற ஜமாபந்தி ஆபீசர் தீர்த்துவிட முடியும் என்று நினைப்பது சரியல்ல. வசூல் நிலவரத்தைச் சீர் செய்யவும், கணக்குகளைத் தணிக்கை செய்யவும் ஜமாபந்தி தேவையென்று ஒரு சிலர் கூறுகிறார்கள். ஆடிட் செய்வது போதும் என்று கருதுகிறேன். மேலும் கிராம முன்சீப், கர்ணம் போன்றவர்கள் தகுதியில்லாதவர்களும் பரம்பரைப் பாத்யதை உரிமையில் வருகிறார்கள். இவர்கள் அனைவரையும் நீக்கிவிட்டு, புதிதாக நேர்மையானவர்களையும், தகுதியுடையவர்களையும் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கோவை மாவட்டம் தற்சமயம் ஜனத்தொகையிலும், பரப்பளவிலும் பெரியதாக இருக்கிறது. அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பவானி, கோபி, இவைகளைக் கொண்டு ஒரு மாவட்டமாக்க வேண்டும். தமிழக வரலாற்றில் ஒரு புதிய திருப்பம் ஏற்படுத்திய தந்தை பெரியார் அவர்கள் பிறந்த ஈரோடு நகரத்தைப் புதிய மாவட்டத்தின் தலைநகராக அமைக்க வேண்டுமென்று கூறி, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : தலைவர் அவர்களே, இப்போது இந்த மானியத்தின்மீது கொடுத்திருக்கும் வெட்டுப்பிரேரணையைப்பற்றிப் பேசுவதற்கு முன்னால், மிகவும் முக்கியமான சில சம்பவங்கள், சில நிகழ்ச்சிகள், மனத்திற்குக் கஷ்டத்தைத் தரக்கூடிய நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருப்பதைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் மிகவும் உருக்கத்துடன் குறிப்பிட்டு, சட்டம், அமைதி, ஒழுங்கு காக்கப்பட வேண்டிய சூழ்நிலைகளைப்பற்றி விளக்கமாகச் சொன்னார்கள்.





நான் என்னுடைய அறையிலே இருந்த சமயத்தில், தொலை பேசி மூலமாகத் திடுக்கிடும்படியான தகவல்கள் வந்துகொண்டிருந்தன. குறிப்பாக, மாணவர்கள் விடுதியிலே இருந்து வெளியே வர முடியாமல், சாப்பாடுகூட இல்லாமல், தங்கியிருப்பதற்குப் போதிய பாதுகாப்பு இல்லாமல், தங்கள் உடைமைக்கும் உயிருக்கும் பாதுகாப்பு இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று எனக்கு சுமார் ஐம்பது டெலிபோன் 'கால்' கள் வந்தன. அதுமட்டுமல்ல, மாணவர்கள் கல்லூரிகளுக்குப் போக முடியாமல் இருக்கிறார்கள். பஸ் போக்குவரத்து பூராவும் ஸ்தம்பித்துவிட்டது. கனம் சட்ட மன்ற அங்கத்தினர்கள்கூட சட்டசபைக்கு வர முடியாத நிலைமை வெளியில் இருந்து கொண்டிருக்கிறது.

என்னுடைய கட்சியைப் பொறுத்தவரையில், இந்த அவசரமான சூழ்நிலை வெளியிலே இருக்கும் நிலையில் சட்டசபைகூட நடக்க வேண்டுமா? சென்னையில் பதட்டமான நிலை இருந்து கொண்டிருக்கும்போது, சட்டசபை நடவடிக்கைகளை ஒத்தி வைத்துவிட்டு, சட்டம், அமைதி, ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று கருதினோம். ஆனால் பகல் ஒரு மணிக்குள் சட்டசபை நிகழ்ச்சிகள் முடிவடையும் நிலையில் இருப்பதால், எதிர்க்கட்சி என்ற நிலையில் பொறுப்புக்களை உணர்ந்து, முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு அனுதாபமும், அன்பும் காட்டுகிறாரோ அந்த அளவில் நாங்களும் பங்குகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த மன்றத்தில் இருக்கிறோம். நேற்றைய தினம் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து இதைத் தடுத்து நிறுத்தி இருக்கலாம். குறிப்பிட்ட இடங்களுக்கெல்லாம் போலீஸ் பாதுகாப்புக் கொடுத்திருக்கலாம். மாணவர்களுக்குத் தக்க போலீஸ் பாதுகாப்புக் கொடுத்திருக்கலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இந்த மாவட்ட நிர்வாகத் துறை மானியத்தைப்பற்றிப் பேசுகின்ற நேரத்தில் இவைகளைப்பற்றிப் பேசுவது சம்பந்தமில்லையென்று சொன்னாலும், இது மிகவும் அவசியமான விஷயமாகும். சட்டம், அமைதி குலைந்திருக்கும்படியான விஷயம். இவைகள் எல்லாம் வெறும் புகார்கள் அல்ல. புலி வருகிறது, புலி வருகிறது என்ற நிலை போய், இப்போது நிஜமான புலியே வந்துவிட்டது. ஆகவே, அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை மணிக்கணக்கில் அல்ல, நிமிஷக்கணக்கில் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சட்டம், ஒழுங்கு, அமைதி காக்க வேண்டிய பொறுப்பு சர்க்காருக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குழந்தைகள் எல்லோரும் எங்கேயோ படித்துக் கொண்டிருக்கிறார்கள், எப்படி இருக்கிறார்களோ என்று வெளியூர்களிலுள்ள பெற்றோர்களும் பயந்து கொண்டிருக்கிறார்கள். எந்த இடத்தில் எது நடக்கும் என்று தெரியாத அளவில் அச்சுறுத்தல்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1963 மார்ச் 26

நடந்து கொண்டிருக்கிறது. ஒரு மாணவர் தான் பட்ட கஷ்டங்களையெல்லாம் கண்ணீருடன் சொல்லியதைப் பார்த்து நான் மிகுந்த கவலையடைந்தேன். பெற்றோர்கள் இனிமேல் தங்கள் குழந்தைகளைக் கல்லூரிகளுக்கு அனுப்புவார்களா? உடைமைக்கும், உயிருக்கும் ஆபத்தில்லாமல் சர்க்கார் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா? பொதுமக்களுடைய சார்பாக இந்தப் பிரச்சினையை அணுகி, தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து, சட்டம், அமைதியைக் காக்க வேண்டுமென்று சொல்லி, அதற்கு மேல் ஒன்றும் பேச முடியாத நிலையில் இருக்கிறேன். உடனடியாக நிர்வாகச் சீர்திருத்த வேலைகளையும், தக்க நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகம் பற்றிய இந்த மானிய விவாதத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல மேலான யோசனைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாவட்ட நிர்வாகம் இன்னும் சீராகவும், செம்மையாகவும் நடைபெற வேண்டுமென்பதையும், மாவட்ட நிர்வாகத்தைத்தான் நம்முடைய அரசு மையமாகக் கொண்டிருக்கிறது என்பதையும் அடிப்படையான கருத்தாக மேற்கொண்டு, பல மேலான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களின் அடிப்படையில்தான், இந்தப் புதிய அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, இந்த மாவட்ட நிர்வாகத்திலே ஒரு பெரிய மாறுதலும், மக்களுக்கு நல்ல நம்பிக்கை ஏற்படக்கூடிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது என்ற கருத்தினை எல்லோருமே ஏற்றுக்கொள்வர்.

வெளியிலே இருக்கின்ற நிலைமை நமக்கு இடம் கொடுக்காமல் இருந்தாலும்கூட, உறுப்பினர்கள் எல்லோரும் மிகத் தெளிவாகத் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். பொதுவாக ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். ரெவின்யூத் துறைதான் மற்ற எல்லாத் துறைகளுக்கும் மையமாக விளங்குகிறது. ரெவின்யூத் துறையிலிருந்துதான் பல துறைகள் கிளைகளாகப் பிரிந்து செயலாற்றுகின்றன. ரெவின்யூத் துறையைப்பற்றி பொதுப்படையாக 'மந்தமாகச் செயல்படுகிறது' என்ற அபகீர்த்தி ஏற்பட்டிருக்கிறதே தவிர, உண்மையிலேயே சரியாகத்தான், ஒழுங்காகத்தான், செம்மையாகத்தான் தன்னுடைய செயல்களைச் செய்து கொண்டு வருகின்றது. காப்புக் கடன் மூலமாக மிகத் தெளிவாகச் செயல்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை யாருமே மறுக்க மாட்டார்கள்.

வெளி மாநிலங்களில் நடைபெறுகின்ற நிர்வாகம்பற்றி அறிய எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. அப்படி வாய்ப்புக் கிடைத்த நேரத்தில், அந்த மாநிலங்களின் நிர்வாக அமைப்புக்களோடு சென்னை மாநிலத்தின் நிர்வாக அமைப்பை ஒப்பிட்டுப் பார்த்தேன். எவ்வகையில் பார்த்தாலும் சென்னை மாநிலத்தின்



1968 மார்ச் 26] [திரு. கே. ஏ. மதியழகன்]

நிர்வாக அமைப்பு மேல் நிலையிலேயே இருந்து வருகிறது. முன்னால் இருந்த அரசாங்கத்திலும் இதில் குறைபாடுகள் ஏற்பட்டன என்று சொல்ல முடியாது. சென்னை மாநிலத்திலே இருக்கக்கூடிய நிர்வாக இயந்திரம் திறமையானது. இன்னும் முழுமையாக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில்தான் உறுப்பினர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்திருப்பார்கள்.

நம்முடைய மாவட்டங்கள் எல்லாம் பிரிக்கப்பட வேண்டுமென்று ஒரு சாரார் சொல்கிறார்கள். 'இப்பொழுது இருப்பவை அப்படியே இருக்கலாம்' என்று ஒரு சிலர் சொல்கிறார்கள். இரண்டுக்கும் மையமான கருத்தைத்தான் இந்த அரசு எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. மேலும், சரித்திர, பூகோள சம்பந்தமாக இருப்பவைகளையெல்லாம் உடனடியாகப் பிரிப்பது என்பதும் சாத்தியமல்ல. மேலும் 4 தாலுக்காக்கள், 6 தாலுக்காக்கள் இவைகளைக் கொண்டு மாவட்டம் பிரிக்கப்பட வேண்டுமென்று சொல்வதும் சரியல்ல. ஏற்பட்டுவிட்ட சூழ்நிலைகளின் காரணமாக முன்னால் இருப்பவை அப்படியேதான் இருக்க வேண்டுமென்று கூறி, அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதும் இந்த அரசினுடைய கருத்து அல்ல.

அடுத்தபடியாக, தர்மபுரி மாவட்டம் என்று தனியாக ஒரு மாவட்டம் அண்மையில் பிரிக்கப்பட்டது. முன்னால் இருந்த அரசாங்கம் அதற்கான முயற்சிகளைச் செய்து, தனி மாவட்டமாகப் பிரித்தது. அதற்காக சுமார் 1 கோடி ரூபாய் அளவிற்குச் செலவிடப்பட்டது அவசியமா? இது ஆதாயமான முறையா என்று கனம் உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள்கூடக் கேட்டார்கள். பணவகையில் ஆதாயம் அற்ற தன்மை என்றாலும்கூட சேலம் மாவட்டத்தில் புறக்கணிக்கப்பட்ட வடகோடியில் இருந்த தர்மபுரி தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்டவுடன் அங்கே நல்ல அபிவிருத்தி வேலைகள் நடைபெறுகின்றன. ஆகவே இது நல்ல தோற்றுவாயாக இருக்கிறது என்பதை நம்மால் தெரிந்துகொள்ள முடிகிறது.

அதேமாதிரி எல்லா மாவட்டங்களையும் பிரிக்க வேண்டும். பரப்பளவைக் குறைக்க வேண்டும் என்பதுபற்றி பல கமிட்டிகள் பரிந்துரைகளைக் கொடுத்திருக்கின்றன. நிர்வாகச் சீர்திருத்தக் கமிட்டியும் சிபார்சு செய்திருக்கிறார்கள். சமீபத்தில் புதிய அரசு ஏற்பட்ட பிறகு மதிப்பீட்டுக் குழுவும்—டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷன் என்பதை நிகழ்ச்சி நிரலிலே ஒன்றாக வைத்துக் கொண்டு இதைப்பற்றிப் பரிசீலனை செய்து சிபார்சு செய்திருக்கிறது. அது இன்னமும் அரசின் கவனத்திற்கு வரவில்லை என்றாலும், இது பற்றி நல்ல முறையில் பரிசீலனை செய்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன.

ஆனால் பொதுவாக ஒரு தலைநகரம் வேறு சாதாரண உணர்வு காரணமாக ஏற்படுவதைவிட மாவட்ட கலெக்டரை மையமாகக் கொண்டு நிர்வாக வசதியை முன்னிட்டே செயல்பட்டு வருகிறது.

முன்பு ஒருமுறை கூட மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மாவட்டக் கலெக்டர்கள் இளைஞர்களாகவும்—விறுவிறுப்பாக, சுறுசுறுப்பாகப் பணியாற்றக் கூடியவர்களாகவும் அமைந்திருக்கிறார்கள் என்று சொன்னார். அரசின் கொள்கைகள் எல்லாம் அவர்களை மையமாகக் கொண்டே செயலாற்றப்பட வேண்டியனவாக இருக்கின்றன. மாவட்ட கலெக்டர்கள் சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கலெக்டர்களைப் பாராட்டியதுபோல இந்த நேரத்தில் நானும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாவட்டங்களில் சட்டத்தையும், அமைதியையும், பாதுகாப்பதிலே நிர்வாகத்தைத் திறமையாகக் கொண்டு செல்வதிலே மிக்க உயிர்நாடியாக நின்று சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். அதுவும் உணவு நெருக்கடி மிகுந்த காலத்தில்—கொள்முதலையே கைவிட்டு விடலாமா என்பதைப்பற்றி கொள்கை பூர்வமாக முடிவு எடுக்க வேண்டிய நேரத்தில் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நல்ல முறையில் எவ்வித புகார்களுக்கும் இடம் கொடுக்காத வகையில் கொள்முதல் செய்து 8½ லட்சம் டன்னைச் சேகரித்துத் தந்தார்கள். அதுபோலவே மழைக் காலத்தில் தஞ்சை மாவட்ட கலெக்டர் கொள்முதல் செய்கிற தானியங்களைப் பற்றாக்குறை மாவட்டங்களான கோயம்புத்தூர், சேலம், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற மாவட்டக் கலெக்டர்கள் உடனுக்குடன் தங்கள் மாவட்டங்களுக்கு எடுத்துச் சென்று பாதுகாக்கவும், மக்களுக்கு விநியோகிக்கவும் நல்ல ஏற்பாடுகளைச் செய்தார்கள். அவர்களுடைய திறமையை இந்த நேரத்தில் பாராட்டி, அந்த நிர்வாக இயந்திரத்தையும் பாராட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து, தரிசு நிலங்கள் கொடுப்பதுபற்றிச் சொன்னார்கள். அதிக அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். ஒவ்வொரு தாலுக்காவிலும் 500 மனுக்களுக்கு மேல் இரண்டாயிரம் மனுக்கள்வரை வருகிறபோது தனியாகவே அதிகாரிகளைப் போட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நான் முன்பே ரெவின்யூ மானியக் கோரிக்கையின்மீது பேசுகிறபோது குறிப்பிட்டேன். கடந்த ஆண்டு வரையிலும் 30 ஆயிரம் ஏக்கரா தரிசு நிலங்கள் தமிழ்நாட்டில் 17 ஆயிரம் குடும்பங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு 50 ஆயிரம் ஏக்கரா தரிசு நிலங்கள் சாகுபடிக்கும், வீட்டு மனைக்கும் வழங்கும் குறியீட்டெண்ணை வைத்துக்கொண்டு காரியங்கள் செய்ய வேண்டுமென்று சொல்லி நடைமுறைகள்கூட எளிதாக்கப்பட்டிருக்கின்றன என்று இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அரக்கோணம் உறுப்பினர் கூட ஜாயின்ட் பட்டாவை தனிப் பட்டாவாக ஆக்க வேண்டும் என்று சொன்னார்கள். இப்போது திட்டவட்டமாக செங்கல்பட்டு மாவட்டத்தில் முன்னோடித் திட்டமாக ஜாயின்ட் பட்டாவை தனிப் பட்டாவாக ஆக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.





நமது மாண்புமிகு விநாயகம் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் கிராமக் கணக்குப்பிள்ளை, மணியக்காரர் இவர்களை பரம்பரை பாத்யதையை வைத்து நியமிப்பதை எடுத்து அரசாங்க அதிகாரியாகவே போட்டுவிட வேண்டும் என்று சொன்னார். இதில் இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கின்றன. பரம்பரை பாத்யதை வைத்துப் போடுவதில் பலவிதமான இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. அவற்றை நீக்கிவிட வேண்டும் என்பது முதலாவது கருத்து. அவர்களைச் சர்க்கார் அதிகாரி என்று மட்டும் கருதக் கூடாது. கிராமத்தில் செல்வாக்காக இருக்கிறார்கள். கிராம வாழ்வில், வளர்ச்சியில் அவர்களும் பங்கெடுத்துக் கொள்கிற நிலையில் அவர்களை விட்டுவிட வேண்டும் என்பது. இதைப் பற்றி ஆராய்வதற்காக முன்னால் இருந்த அரசாங்கம் பெருமதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம், திரு. மாணிக்கவேலு நாயகர் அவர்களைக் கொண்ட கமிட்டியைப் போட்டது. அந்தக் கமிட்டியினர் திரு. விநாயகம் அவர்கள் சொன்ன பாணியிலேயே இப்போது இருக்கிற முறையை மாற்றி ஒரு கிராமத்திற்கு என்று இல்லாமல் இரண்டு, மூன்று கிராமங்களைச் சேர்த்து ஒரு கணக்குப்பிள்ளை என்று போடலாம் என்று சிபார்சு செய்தார்கள். அந்தச் சிபார்சை முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. அதற்கும் பொருத்தமான சில காரணங்களைச் சொன்னார்கள். இப்போது 20 ஆயிரம் பேர் இருக்கிறார்கள் என்றால் அவர்களை ரெவின்யூ இலாக்கா சிற்றுத்தியோகஸ்தர்களாக ஆக்கிவிட்டால் நிர்வாகம் நல்லமுறையில் செயல்படுமா? அவர்களை வெளியேற்றுவதனால் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினை வேறு ரூபத்தில் தாக்காதா? முறையாக கிராமச் செல்வாக்கோடு அவர்கள் திறமையாக பணியாற்றுவதைப்போல அப்போது காரியங்கள் நடக்குமா என்பதாக எல்லாம் கூறி முடிவு செய்யாமல் விட்டுவிட்டார்கள். இப்போதுள்ள முதல் அமைச்சர் அவர்களுக்குத்தான் இதற்கும் ஒரு பரிகாரம் தேடித்தர வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இந்த வேலைகளுக்குப் பரம்பரை பாத்யதை கொண்டாடக் கூடாது என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. அதன் காரணமாக ஒரு பரபரப்பான சூழ்நிலையே ஏற்பட்டது. யாருக்கும் வேலை இருக்காது என்று அவர்கள் எல்லோரும் கிளர்ச்சி செய்யும்படியான நிலைமை கூட ஏற்பட்டது. பரம்பரை பாத்யதை கொண்டாடக் கூடாது என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. என்றாலும் ஒரு ஊரில் இரண்டு பேர் அந்த உத்தியோகத்திற்குள்ள க்வாலிபிகேஷனோடு விண்ணப்பித்துக் கொண்டால் பரம்பரை முறையில் வந்த ஒருவர் அவர்களிடையே இருந்தால் அவருக்குப் ப்ரிபரன்ஸ் கொடுக்கலாம் என்ற முறையில் நடவடிக்கை எடுக்கலாமா என்பதைப்பற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

பொதுவாக, கொள்கை அடிப்படையில் எல்லோரையும் அரசாங்க சிப்பந்திகள் என்ற நிலைக்கு ஆக்கிவிடலாம் என்றால் நிதி இலாக்கா ஆண்டிற்கு மூன்று நான்கு கோடிக்குத் தேவைப்படும் என்கிறார்கள். நம்முடைய நிதி நிலைமையையும் நாம்

[திரு. கே. ஏ. மதியழகன்] [1968 மார்ச் 26

கணக்கில் எடுத்துக் கொண்டுதான் இதுபற்றி ஆழ்ந்து கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் அவற்றிற்கு மத்தியிலே கூட துரிதப்படுத்தவும் அவர்களுக்கும் சில நன்மைகளை அளிக்கவும் அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறவும் கிராம மக்கள் உணவு உற்பத்தியிலேயும் பொருளாதார அபிவிருத்தியிலேயும் முக்கியமாக இருக்கிறார்கள், கிராமங்கள் அதற்குக் கேந்திரமாக இருக்கின்றன, ஆகவே அந்த வகையில் கிராம அதிகாரிகளின் நம்பிக்கையைப் பெறுவதற்கும் அவர்கள் தங்களுடைய குறைகளையும் கோரிக்கைகளையும் பழைய ஆட்சியிலிருந்தே சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவற்றையும் நிறைவேற்றுவதற்கான முறைகளும் கவனிக்கப்பட்டு வருகின்றன. மேலதிகாரிகளினாலே சில கிராம அதிகாரிகள் பழி வாங்கப்படுகிறார்கள், சாதாரணமான காரியங்களுக்குக்கூட ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டது. ஆந்திரப் பிரதேசத்தில்கூட இது பற்றிய நிலைமைகள் ஆராயப்பட்டு அந்த விதிகளை யெல்லாம் மாற்றியிருக்கிறார்கள். சாதாரண காரியங்களுக்குக்கூட சஸ்பெண்ட் செய்வது, வேலை நீக்கம் செய்வது இவையெல்லாம் அவர்களுடைய விருப்பு வெறுப்புக்காகச் செய்யக் கூடாது என்ற நிலைமையைக் கொண்டுவர அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலனை செய்துகொண்டு வருகிறது. கிராம முன்சிப்களிடையே, சமூகத்திலே நல்ல வகையிலே மக்களிடையே க்ஷேம நல சர்க்காராக நல்வாழ்விற்காக அமைக்கப்பட்டிருக்கிற அரசு இது என்று அவர்களுடைய எண்ணத்திலே கொள்கையிலே மாற்றம் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் செங்கற்பட்டு கலெக்டர் பிரத்யேகமாக ஆகாய விமான வரவேற்புக்காகச் சென்று விடுகிறார்கள், அவருடைய வேலைகள் கவனிக்கப்படுவது இல்லை என்று குறிப்பிட்டார்கள். எப்பொழுதும் அவர்கள் அங்கே இல்லையென்றாலும் அவர்களுக்கு அடுத்தபடியாக இருக்கிறவர்கள் கவனிக்கிறார்கள் என்ற நிலைமை இருந்தாலும் அதனுடைய நன்மை தீமை பற்றிய நிலைமைகளை யோசிக்கலாம். அதற்கு ஓர் ஆர்.டி.ஓ. போடலாம் என்பதைப்பற்றி யோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, ஆர்.டி.ஓக்கள் பற்றிச் சொன்னார்கள். தனித் தனியாகப் பிரச்சினைகளைப் பிரித்துக் கொண்டு பார்த்தால் நன்றாக இருக்காது. ஆர்.டி.ஓக்கள் இருக்க வேண்டும், அவர்கள் திறமையாகவும் தெளிவாகவும் சில காரியங்களைச் செய்கிறார்கள் என்று திரு. ரங்கநாதன் போன்றவர்கள் சொன்னார்கள். அதைப் பற்றியெல்லாம் இந்த அரசாங்கம் இன்றும் பரிசீலனை செய்கின்ற முறையிலே நிலைமைகளை யெல்லாம் ஆராய்ந்து அந்த அமைப்பிலேயே குறை இருக்கிறதா அல்லது அமைப்பிலே உள்ள முறைகளிலே குறைகள் இருக்கின்றனவா என்பதைப்பற்றி யோசித்து வருகிற வேளையில் திடீரென்று இதிலே மாறுதல்கள் செய்தால் அதனுடைய விளைவுகள் பயங்கரமாக இருக்குமென்பதால் அதைப்பற்றி இந்தச் சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறது.



1968 மார்ச் 26] [திரு. கே. ஏ. மதியழகன்]

தாசில்தார் மட்டும் போட்டுவிடலாம் என்று சொன்னார்கள். நேரடியாக இருக்கலாம், மற்ற ரெவின்யூ வேலைகளுக்கு மட்டும் ஆர்.டி.ஓக்கள் இருக்கலாம் என்று பல்வேறு மாதிரியான கருத்துக்கள் நடமாடுகின்றன. இவற்றை யெல்லாம் நல்ல முறையிலே பரிசீலிப்பதற்கு அனுபவத்திலிருந்து செய்வதற்கு இந்த அரசுக்கு வாய்ப்பு இருக்க வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராம உத்தியோகஸ்தர்கள் பற்றி பல மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய நலன்களில் பாதுகாப்புக்களில் அக்கறை கொண்டிருக்கிறோம். அவர்கள் சாதாரணமாக உத்தியோகஸ்தர்களாகக் கருதப்படுவதில்லை என்று நன்றாகச் சொன்னார்கள் திரு. விநாயகம் அவர்கள். மந்திரிகள் அளவுக்கு அவர்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். சம்பளம் என்பதைப் பெரிதாக எதிர்பார்க்காமல் அந்த அந்த ஊர்களுக்கு அமைச்சர்கள் என்ற வகையிலே சம்பளம் வாங்காத கௌரவமான அமைச்சர்களாக அவர்கள் இருக்கிறார்கள் அவர்கள் சாதாரணமாக ஹைகோர்ட்டிலேயே வியாஜ்யம் என்ற அளவுக்குக்கூடப் போகிறார்கள். பல்லாயிரக் கணக்கான கிராமங்களிலே சில சுபாவங்கள் இருக்கிற காரணத்தாலே அது அவர்களுடைய அந்தஸ்துக்கு ஒரு அறிகுறி என்ற காரணத்தாலே நாம் அதைப்பற்றி பெரிதுபடுத்தக் கூடாது. சமூக அந்தஸ்துக்கும் நன்மை செய்கிற காரியங்கள் நடந்து கொண்டிருக்கிற நேரத்திலே அவர்களுடைய குறைகளையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு கிராம உத்தியோகஸ்தர்கள் எல்லாம் சேர்ந்து மற்றவர்களுக்குத் தலைமை நிலையங்கள் இருக்கின்றதைப் போன்று, அவர்களுக்கும் தலைமை நிலையம் வேண்டுமென்று கேட்டார்கள். அவர்களுக்குப் பாரபட்சம் காட்டாமல் கிராம இல்லம் என்பது மாதிரி அரசினர் தோட்டத்திலோ வேறு எங்கேயோ இரண்டு ஏக்கர் நிலம் அதற்காகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டதற்கிணங்க மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அனுமதியோடு நிலத்தை அவர்களுக்குக் கொடுக்கலாம், அதற்காக ஆவன செய்யலாம் என்ற வாக்குறுதியை அவர்களுக்கு அளித்திருக்கிறேன்.—அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறுவதற்காக நம்முடைய நிர்வாகத்திலே அவர்கள் பொதுமான நல்ல ஒத்துழைப்பைத் தருவதற்காக என்.ஜி.ஓ.க்களுக்குக் கொடுத்திருப்பதைப் போல் சென்னை நகரிலே—கிராமத்தான் கிராமத்திலே இருக்கிறான் என்று சொல்லாத அளவுக்கு அவர்கள் தூர தொலைவிலே இருக்கிறார்கள். அவர்கள் அவர்களுடைய கோரிக்கைகளை வைப்பதற்கு ஏற்ற முறையில்—கவர்னர் அவர்கள் மாளிகையிருந்த அரசினர் தோட்டத்திலே இடம் கொடுக்க இருப்பது நாட்டிலே அவர்களுக்குச் சிறப்பான அம்சம் இருக்கிறது என்ற வகையிலே ஏற்பாடுகளைச் செய்து வருகிற நிலைமை இருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

[1968 மார்ச் 26 [திரு. கே. ஏ. மதியழகன்]

மற்றப் பல கருத்துக்களை யெல்லாம் எடுத்துரைத்தார்கள். எல்லாக் கருத்துக்களையும் குறித்து வைத்துக் கொண்டு அவற்றின் அடிப்படையில் பரிசீலனை நடைபெறுவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில உறுப்பினர்கள் நிர்வாகத்திலே தலையீடு இருக்கிறது என்று சொன்னார்கள். பொதுவாக ஒரு ஆண்டுக் காலத்திற்குள் மக்களுடைய நம்பிக்கையைப் பெற்றிருக்கிற அரசாக இருக்கிறது. அதிகாரிகள் என்றால் மேட்டுக் குடியினருக்குத்தான் காரியங்கள் அனுகூலமாகும் என்ற நிலைமை மாறி அதிகாரிகள், அவர்களும் சேவை செய்வதற்காகத் தாரதம்மியம் அற்ற முறையிலே, ஏற்றத் தாழ்வில்லாத முறையிலே சமுதாயத்தினுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பணியினை, நிர்வாகத்திலே ஆற்றவேண்டிய பணியினை உணர்ந்திருக்கிறார்கள் என்ற அளவிலே அவர்களுடைய சுபாவமும் மாறியிருக்கிறது.

பெருங் காரியங்களுக்கு நன்கொடைகள், லோன்கள் வசூல் செய்கிறார்கள் என்பதைப்பற்றி யெல்லாம் சொன்னார்கள். இவை யெல்லாம் கூடுமானவரையில் நடைபெறவில்லையென்றாலும் திரு. விநாயகம் அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டும். இவை யெல்லாம் விட்ட குறை தொட்ட குறை என்ற அளவிலே இல்லாமல் இருக்கிறது. முன்னாலே எல்லாம் அதிகாரிகள் தோரணையைக் காட்டி வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். இந்த அரசாங்கம் வந்த பிறகு இப்பொழுது அப்படியல்ல. ஒவ்வொரு குடிமகனும் அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவத்திலே—நான்கு கோடி மக்கள் இருக்கிறார்கள்—தன்னுடைய எண்ணங்கள், ஆர்வங்கள் இவற்றை வைத்து இருபது வருடங்களாக கண்டுவந்த கனவுகள் எல்லாம் நடைமுறைபடுத்தப்படுகிற காரியங்களிலே தங்களுடைய ஏகோபித்த பங்கை எடுத்துக் கொள்கிற காரணத்தாலே அதிகாரிகள் தலையிடுகிறார்கள் என்ற எண்ணமே ஏற்படாத அளவுக்கு இன்றைய தினம் எந்த அரசினிடத்திலேயும் இல்லாத அளவுக்குத் தமிழக அரசினிடத்திலே அவர்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அதனுடைய வடிவங்களாகத்தான் மாவட்ட நிர்வாகமும் மற்றவையும் செயல்பட்டு வருகின்றன.

பல புகார்கள் சொன்னார்கள். குடியானவனையும் தொழிலாளியையும் உணர்ந்துகொள்ளக்கூடிய அதிகாரிகள்தான் இருக்கிறார்கள், அந்த உணர்ச்சி வளர்ந்துவரக்கூடிய நல்ல சூழ்நிலை இருக்கிறது என்று கூறிக் கொண்டு இந்த மானியத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்கள் எல்லாம் குறித்து வைக்கப்பட்டிருக்கின்றன, அதற்கு நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள் என்று கூறி வெட்டுப் பிரேரணைகளை யெல்லாம் வற்புறுத்தாமல் இந்த வாக்குறுதியின் அடிப்படையிலே மானியங்களை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பிலே வேண்டிக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

12-30 திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்... தன்னிலை விளக்கம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'ஆர்.டி.ஓ. பதவியை



1968 மார்ச் 26] [திரு. பெ. சீனிவாசன்]

ரத்து செய்ய வேண்டும்' என்று நான் சொன்னதாகக் குறிப்பிட்டார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திலே அதிகமான ஆர்.டி.ஓ.க்கள் தேவை, அவர்கள் என்னுடைய மாவட்டத்தில் ரொம்ப அருமையாகப் பணியாற்றுகிறார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நீங்கள் கூறவில்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் கூறினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. விநாயகம், திரு. செ. பாலசுப்பிரமணியன், திரு. என். வரதராஜன் ஆகியோர் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால் அவை, பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட்டனவாகக் கருதப்படுகின்றன.

அவை முன் உள்ள கேள்வி:

**கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும்.**

"கோரிக்கை எண் 9—'மாவட்ட நிர்வாகமும், பல்வகையும்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 16,90,15,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 7—தேர்தல்கள்.**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 7—'தேர்தல்கள்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,15, 600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள்.**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 32—'ஓய்வூதியங்கள்' என்ற தலைப்பின் கீழ் ரூ. 3 83,49,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 33—பல்வகை.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 33—'பல்வகை' என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,86,76,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 36—'ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,27,13,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 45—ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 45—'ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,10,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

கோரிக்கை எண் 47—'மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 34,39,42,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



### கோரிக்கை எண் 4—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 4—'முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 20,10,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 37—ஜமீந்தார்களுக்கு இழப்பீடு.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 37—'ஜமீந்தார்களுக்கு இழப்பீடு' என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,84,00,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 21—சின்கோனா.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 21—'சின்கோனா' என்ற தலைப்பின்கீழ் ரூ 46,52,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத்துறை.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 5—'பத்திரப் பதிவுத்துறை' என்ற தலைப்பின்கீழ் ரூ. 82,29,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,21,49,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

[1968 மார்ச் 26

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 11—'சிறைச்சாலைகள்' என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,20,72,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 22—கதர்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 22—'கதர்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 17,40,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

7. அறிவிப்பு.

தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண் 2) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தமிழ்நாடு 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண் 2) மசோதாவை இந்தப் பேரவைக்கு கொண்டு வருவதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

8. அரசினர் மசோதா.

**தமிழ்நாடு 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண் 2) மசோதா.**

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண் 2) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இந்த மசோதாவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.



[1968 மார்ச் 26 [திரு. கே. ஏ. மதியழகன்]

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவில் முடிவுற்று மீண்டும் நாளைக் காலை 9 மணிக்கு பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது பி. ப. 12-38

9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

* 116. Notification issued with G..O. Ms. No. 2261, Revenue, dated the 30th December 1967, making an amendment to the item 5 in the Third Schedule of the Madras General Sales Tax Act, 1959 and exempting from the tax payable on all sales of palm jaggery. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]

* 117. Notification issued with G.O. Ms. No. 2219, L.A, dated the 20th November 1967, regarding reservation of seats and division of wards in the Rasipuram Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Muncipalities Act, 1920 (Madras Act V of 1920).]

* 118. Notification issued with G.O. Ms. No. 2229, L.A., dated the 1st December 1967, regarding the reservation of seats and division of wards in Melapalayam Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

* 119. Notification issued with G.O. Ms. No. 2267, L.A., dated the 7th December 1967, regarding the reservation of seats and division of wards in Sankarankoil Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

* 120. Notification issued with G.O. Ms. No. 2306, L.A., dated the 14th December 1967, regarding the reservation of seats and division of wards in Salem Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

* 121. Notification issued with G.O. Ms. No. 2307, L.A., dated the 14th December 1967, regarding the reservation of seats and division of wards in Tiruchirappalli Municipality. [Laid on the Table of the Houce under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

* 122. Notification issued with G.O. Ms. No. 2308, L.A., dated the 14th December 1967, regarding the reservation of seats and division of wards in Coimbatore Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

*123. Notification issued with G.O. Ms. No. 2309, L.A., dated the 14th December 1967, regarding the reservation of seats and division of wards in Madurai Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

124. Annual Financial Statement for 1968-69 and Supplementary Financial Statement for 1967-68 of the Madras State Electricity Board. [Laid on the Table of the House under sub-section (3) of section 61 of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948).]

B. *Reports, Notifications and other papers.*

†86. Policy Note on Madras Dairy and Milk Project 1968-69 (English and Tamil).

‡87. Policy Note on Demand No. 4—Stamp Administration (Tamil).

88. Speech by Hon. Thiru K. A. Mathialagan, Minister for Food on Demand No. 4—Stamp Administration (Tamil).

89. Speech on the Demand No. 5—Registration Department (Tamil).

*90. The Report and Proceedings of the Committee of Privileges on the case in regard to the alleged breach of privilege against the Hon. Member Thiru V. George with regard to alleged imputation of partiality to the Chair.

*91. Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year 1967-68 (English and Tamil).

*92. Notice of demands for Grants for Further Expenditure in the year 1967-68 (English and Tamil).

§93. Speech of Hon. Chief Minister presenting the Final Supplementary Estimate for the year 1967-68 (English and Tamil).

---

* Laid on the Table of the House on 25—3—1968.
† Despatched to Members on 23—3—1968.
‡ Despatched to Members on 25—3—1968.
§ Circulated to Members on 25—3—1968.

## தமிழக சட்டப் பேரவை.

### புதன்கிழமை, 1966 மார்ச் 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண்கள் 322-இலிருந்து 326 வரை ஒத்திவைக்கப்படுகின்றன.

### நத்தத்தில் கடலை எண்ணெய் ஆலை

*338 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் வட்டம் நத்தத்தில் கடலை எண்ணெய் ஆலை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கடலை எண்ணெய் ஆலை நிறுவும் செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்திடம் இல்லை.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, இந்தப் பகுதிகளில் புன்செய் நிலங்கள் அதிகமாக இருப்பதால் நிலக்கடலை உற்பத்தி இந்த மாவட்டத்திலே அதிகமாக இருக்கிறது. எனவே, பெரிய ஆலை ஒன்று நிறுவாவிட்டாலும் சிறிய ஆலையை நிறுவுவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அரசாங்கத்தின் தரப்பில் எண்ணெய் ஆலை எதுவும் வைக்கப்படவில்லை. தனியார் தான் நடத்தி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல் எண்ணெய் ஆலை வைப்பதற்கு யாராவது முன்வருவார்களேயானால் அதற்கான ஆதரவு தர அரசு முயலலாம். அதற்கு லைசென்ஸ் எடுக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, தனியார் யாராவது முன்வருவார்களேயானால் தக்க ஆதரவு அரசு தரலாம்.

**திரு. பி. எஸ். மணியன் :** சில இடங்களில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக இத்தகைய எண்ணெய் பிழியும் ஆலைகள் அமைக்கப்பட்டு நல்லவிதமாக செயல்பட்டு வருகின்றன. ஆகவே, கூட்டுறவு சங்கங்கள் மூலமாக இத்தகைய ஆலைகளை நிறுவுவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கூட்டுறவு முறையில் ஆரம்பிப்பதற்கு ஆங்காங்கே உள்ளவர்கள் முயற்சி செய்வார்களேயானால், அதற்குத் தக்க முயற்சி செய்யலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, வனஸ்பதி தயாரிப்பதற்கு கடலை எண்ணெய் உபயோகப்படுகிறது. நாட்டிலே வனஸ்பதி மிக அதிகமாக உபயோகப்படுகிற காரணத்தால் எண்ணெய் ஆலையைத் தொடங்குவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட உத்தேசம் இப்போது இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, காட்பாடியிலே ஒரு எண்ணெய் ஆலை ஆரம்பிப்பதற்காக 10 லட்சம் ரூபாய் கடன் கொடுக்கப்பட்டும், பத்து ஆண்டுகளாகியும் இன்னும் நடைபெறாமல் இருக்கிறது. கொடுத்த கடன் திருப்பி வாங்கப் பட்டதா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மேலூர் பற்றியது மூலக்கேள்வி. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. எம். சண்முகம் : தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வனஸ்பதி தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் துவக்கப்படவில்லை. தனியார் துறையிலே ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. அரசாங்கமே அதற்கு 15 இலட்சம் கடன் கொடுத்தும் வசூல் ஆகாமல் இருக்கிறது. ஆகையால், அரசாங்கம் அந்தத் தொழிற்சாலையை ஏற்று நடத்துவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், விவரம் அறிந்து பதிலளிக்கலாம்.

## திருச்செந்தூர் வட்டத்தில் காகித உற்பத்தி ஆலை

* 339 வினா.—திரு. டி. மார்டின் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர் தாலுக்காவிலுள்ள சாத்தான்குளத்திலும், பரமன்குறிச்சியிலும் பேப்பர் தொழிற்சாலை மாநில சர்க்காரின் பொறுப்பில் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், திருநெல்வேலி மாவட்டத்திலே சாத்தான்குளம் பகுதியிலே, கன்னியாகுமரி குலசேகரம் பகுதியிலே தொழில்கள் எதுவும் இல்லாமல் மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கின்றன. அங்கே பேப்பர் தொழிற்சாலை



துவங்குவதற்கு மூலப்பொருள்கள் கிடைக்கின்றன. அங்கே தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நெல்லை மாவட்டத்தில் முன்பே இரண்டு காகிதத் தொழிற்சாலைகள் இருந்துவருகின்றன. இப்போது காகிதத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை திருப்திகரமான அளவிலே லாபம் தரக்கூடிய அளவிலே இல்லாமல் நட்டத்திற்கு ஆளாகின்றன. காகித விலையை நிர்ணயிக்கும் பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது. உற்பத்திச் செலவு அதிகமாகும் காரணத்தாலே இப்போது ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்திருக்கிற சேஷசாயி ஆலை கூட எதிர்பார்த்த அளவிற்குப் பலன் பெற முடியாத அளவு இருக்கிறது. இரண்டு தொழிசாலைகளிலே ஒன்றுதான் நடைபெறுகிறது. இன்னொன்று அனுமதி கேட்டிருக்கிறார்கள். அதுகூட 35 டன் என்ற அளவிலே இல்லாமல் 10 டன் அளவிலே ஆரம்பிக்கலாமா என்று முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். பாபநாசம் பகுதியிலே அந்த ஆலை நிறுவப்படுகிற நிலையிலே மேலும் காகிதத் தொழிற்சாலை நிறுவுவதற்கு உத்தேசம் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தஞ்சையிலே வைக்கோலும், மூங்கிலும் அதிகமாகக் கிடைப்பதனாலே, அங்கே பேப்பர் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே அரசுக்குள்ள சங்கடமான சூழ்நிலையைக் கூறியிருக்கிறேன். வைக்கோலையும் மூங்கில்களையும் பல்வேறு வகையில் பயன்படுத்துகின்ற சூழ்நிலையில் காகிதத் தொழிற்சாலை ஆரம்பித்தால் அவைகளை அதற்காகவே எடுத்துக் கொண்டு விட்டால், மாட்டுத் தீவனம், வீடு கட்டுதல் போன்றவற்றிற்கு மிகவும் சங்கடம் ஏற்படும். சேஷசாயி ஆரம்பித்திருப்பது காடுகள் நிறைந்த இடமாக இருந்தாலும், ஒரு ஆண்டிற்கான மூங்கில் போதுமான அளவு கிடைப்பதில்லை.

திரு. கே. சகாதேவக் கண்டர் : வட ஆர்க்காடு மாவட்டத்தில் செங்கம் தாலுக்காவில் எந்த விதமான தொழிற்சாலைகளும் கிடையாது. மலைப்பகுதிகளாகவும் காடுகளாகவும் இருக்கின்றன. ஆகவே, சாத்தனூர் அணைப்பகுதியிலே ஒரு பேப்பர் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதன் பிற்பட்ட தன்மையை நோக்கி, வேறு தொழிற்சாலை அமைப்பதுபற்றி யோசிக்கலாம். அங்கு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம் என்ற நிலைமை ஏற்படாது. அங்கே உள்ள அடிப்படைக் கோட்பாடுகளை வைத்து ஆராய்ந்து தக்க முடிவு எடுக்க வேண்டும்.

திரு. ந. தருமலிங்கம் : பேப்பர் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு வேண்டிய மூலப்பொருள்கள் என்னென்ன என்று அறிய விரும்புகிறேன்.

[1968 மார்ச் 27

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சாதாரணமாக மூங்கிலிலிருந்து செய்கிறார்கள். நீத்துக்கோரைகள் அபரிதமாகக் கிடைத்தாலும் அவைகள் வேறு பல்வேறு வகைகளிலே பயன்படுத்தியதுபோக, மீதம் இருப்பதைத்தான் காகிதத் தொழிற்சாலைக்குப் பயன்படுத்தலாம். இப்போது காகிதத் தொழிற்சாலை லாபகரமாக நடக்கக்கூடிய நிலைமை நம்பிக்கையூட்டக்கூடிய வகையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ஆ. கருப்பையா :** தனிப்பட்டவர்கள் சிறிய காகிதத் தொழிற்சாலை ஆரம்பித்தால் எத்தனை சதவிகிதம் சர்க்கார் கடன் தரும் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, யாராவது முன்வந்தால் எவ்வளவு கொடுக்கலாம் என்று விதி முறைகள் இருக்கின்றன. அதற்குட்பட்டு வருவார்களானால் செய்யலாம். ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு நிறைவேற்ற முடியாமல் இருக்கிறார்கள். இதிலிருந்து அது நம்பிக்கையூட்டக் கூடியதாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** கருப்பஞ் சக்கையிலே இருந்து காகிதம் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லுகிறார்களே, அதைப்பற்றி அரசு பரிசிலித்ததா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, செய்யலாம் என்றாலும், காகிதத் தொழிற்சாலைக்கு, காகிதம் செய்ய வேண்டிய அளவிற்கு கருப்பஞ்சக்கை கிடைக்குமா என்பது யோசிக்க வேண்டிய ஒன்றாகும்.

**திரு. டி. மார்டின் :** நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர் தாலுக்காவில் சாத்தான்குளம் சப்-தாலுக்காவில் ஏராளமான உடைமரங்கள் காகிதத்திற்கு வேண்டிய மூலப்பொருள்கள் அதிகமாகக் கிடைக்கிற காரணத்தாலும், இலங்கையிலிருந்து பலர் வரக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தாலும் இலங்கையிலிருந்து வருகிறவர்களில் தனிப்பட்டவர்கள் ஒரு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு முன்வந்தால் அதற்கு ஊக்கம் கொடுத்து நிறுவுவதற்கு வழிசெய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டதுபோல் அங்கே ஒரு தொழிற்சாலை நடைபெற்று வருகிறது. மற்றொரு தொழிற்சாலை நடத்துவதற்கு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதுபோல் அங்கே ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு யாராவது முன்வந்தால் அதை அரசு பரிசீலனை செய்யலாம்.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, கார்டுபோர்டுகள் செய்வதற்கு வேண்டிய புல்கள் பவானிசாகரில் இருப்பதாகத் தெரிகிறது. அங்கே கார்டுபோர்டுகள், பேப்பர்கள் செய்யக்கூடிய



1968 மார்ச் 27]

தொழிற்சாலை தனியார்கள் நடத்த முடியாத நிலையில் இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறதா ? அவர்கள் கடனுக்கு மனு கொடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பவானிசாகரைப் பற்றிய குறிப்பு இல்லை. அதைப்பற்றி கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால் ஆராய்ந்து சொல்லப்படும்.

### பரீட்சை முறை

* **339-அ வினா.—வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) S. S. L. C. முதல் கல்லூரி படிப்புவரை கேள்வித் தாள்களை முன் கூட்டியே கொடுத்துவிட்டு புத்தகங்களையும் பார்த்து பரீட்சை எழுதும் முறையை அமுலில் கொண்டுவர தமிழக அரசு திட்டமிட்டு இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இப்போதே ரெவினியூ டெஸ்ட் போன்ற பரீட்சைகளிலும், சட்டக் கல்லூரியில் படிக்கக்கூடிய மாணவர்கள் எழுதக்கூடிய பரீட்சைகளிலும், ஒரு சில பகுதிகளோ அல்லது எல்லாப் பகுதிகளுமோ—இப்படிக் கேள்வித் தாள்களைக் கையில் கொடுத்து, புத்தகங்களையும் வைத்துக் கொண்டு, விடை அளிக்கலாம் என்கிற அளவுக்கு முறைகள் இருந்தும், சிலர் பாஸ் செய்கிறார்கள். பலர் பாஸ் செய்வது கிடையாது. ஆகவே, அதே போன்று, இதில் என் அந்த முறையைக் கொண்டுவரக்கூடாது ? கொண்டு வராததற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எப்படி இருக்கிறது என்பதற்கு முழு விவரக் குறிப்பு இல்லை. சாதாரணமாக, பரீட்சை என்பது—அவர்கள் கற்றுக்கொண்டதை நினைவில் வைத்திருக்கிறார்களா, அதுபற்றி ஆராய்ந்து, மறுபடியும் வெளிப்படுத்துகிற ஆற்றல் பெற்றிருக்கிறார்களா என்பதுதான் இப்போது பரீட்சை நடத்துவதனுடைய முக்கிய நோக்கம். அதுவும்கூட, பாடப் புத்தகத்தில் 80 பக்கங்கள் இருந்தால், அதில் ஆசிரியர் ஒரு அறுபது பக்கங்கள் சொல்லிக் கொடுக்கவும் அதில் 40 பக்கங்களில் சென்ற ஆண்டிலும் அதற்கு முந்திய ஆண்டிலும் கேள்வி கேட்கப்பட்டிருக்குமாதலால், அவை தள்ளப்பட்டு, மீதி இருபது பக்கங்கள், கேள்விகள் கேட்கும் பகுதியாக இருக்கும். அதிலும், வரக்கூடிய கேள்விகள் பதினைந்து பக்கமாகவும், அதுவும், இந்த ஆண்டு 35 மார்க் எடுப்பதற்கு எட்டு பக்கங்களைப் படித்தால் போதும், அதை நினைவுபடுத்திக் கொண்டால் போதும் என்ற நிலையில் பரீட்சை எழுதி மறுபடியும் மறந்துவிடும் நிலை

இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, புத்தகங்களைப் பார்த்து எழுதலாம் என்றால், நினைவில் எதையும் வைத்துக் கொள்ளாமல், பார்த்து எழுதும் நிலைமை வரும்போது, இன்னும் தரம்தான் குறையும்.

சட்டக் கல்லூரியைப்பற்றிச் சொன்னார்கள். அது எப்படி இருக்கிறது என்ற விவரக் குறிப்பு இப்போது இல்லை. அவர் சொல்கிறபடி அப்படிப்பட்ட நிலைமை இல்லை என்றே குறிப்பிடு கிறார்கள். பரீட்சை எழுதுகிற முறையில், நினைவிலே, எவ்வளவு தங்குகிறது, எவ்வளவு அறிந்துகொண்டிருக்கிறார்கள், புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் முக்கியம். ஆகவே, இந்த முறையை மாற்றுவதற்கில்லை.

**திரு. கே. விநாயகம்:** இந்த நாட்டிலும் சரி, இந்த உலகத்தில் எந்த நாட்டிலும், எங்கும், இதுமாதிரி புத்தகங்களையும் கொடுத்து கேள்வித் தாள்களையும் கொடுத்து, பக்கத்திலே இருந்துகொண்டு ஆசிரியர்கள், இதைத்தான் எழுதவேண்டும் என்று சொல்லுகிற முறை இல்லை. சட்டத் துறையில் மாத்திரம்தான் புத்தகங்களை வைத்துக் கொண்டு டெஸ்ட்கள் எழுதலாம் என்று இருக்கிறதே தவிர, எஃப்.எல்., பி.எல்., எம்.எல். பரீட்சைகளிலும் பார் கவுன்சில் எக்ஸாமினேஷன் எழுதுகிறவர்களும், அதுவும் அப்ப ரெண்டிஸாகப் போகிறவர்கள். 'பேர் ஆக்ட்'டைப் பயன் கொள்ளுவது கூட தவறு, அது கூட சரியான முறை இல்லை என்று கருதுகிறார்கள். அதையும் நீக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றி அந்தத் துறையிலுள்ள வல்லுநர்கள்தான் ஆராய்ந்து தக்க முடிவு கூற வேண்டும்.

DR. H. V. HANDE: Whereas the present examination system in our country, especially in our State, is outmoded and is not of the modern type, will this Government examine the possibility of having a new system of examination with several reference books so that the examiner will be able to find out what the student knows and not what the student does not know as is done in Japan, America and other modern countries where a number of reference books are given and a pencil also is given to mark or tick off the correct answer? The whole thing is fed into a machine and there is no question of influence. Especially in view of the fact that there is frequently the difficulty of the question paper leaking out, will this Government examine the possibility of having a model system of examination as in some other countries by giving a number of reference books so that the examiner will be able to know what the student knows and not what he does not know?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மாணவர்களுடைய அறிவுத் திறமையையும், ஆற்றல் திறமையையும் அளந்து பார்ப் பதற்கு எப்படி எப்படி முறைகளைக் கையாளலாம் என்பதற்குப்



பல்வேறு பல்கலைக் கழகங்கள், பல்வேறு முறைகளைக் கையாண்டு வருகின்றன. சிலபல முறைகளை மிகவாகக் கொண்டும், மற்றும் சிலபல முறைகளைக் குறைவாகக் கொண்டும் பயின்று வருகிறார்கள். ஆனால், கல்வி வல்லுநர்கள், பல்கலைக் கழகத்தில் இருக்கும் பேராசிரியர்கள், துணைவேந்தர்கள் பலரும், பல முறைகளை ஆராய்ந்து, இந்த நாட்டுக்கு ஏற்ற முறைதான் வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். பட்டமளிப்புச் சொற்பொழிவாற்றும் பேறிஞர்கள் பலரும், ஆண்டுதோறும், எந்த முறை வரவேண்டும், நல்லதொரு முறை வரவேண்டும் என்று எடுத்துக் கூறுகிறார்கள். வல்லுநர்கள் ஆராய்ந்து பார்த்து, தக்க முடிவு காணலாம் என்று கருதுகிறார்கள். இரண்டு கருத்து இருக்கிறது. ஒன்று—ஆண்டுக் கடைசியில் பரீட்சை வைத்து, ஒரு வார காலத்திற்கு முன்னால், படித்துவிட்டு, அதை எழுதிவிட்டு வரும் ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு, அறிவை அளந்து பார்க்கக்கூடாது என்பது. ஆண்டு முழுவதும் உள்ள நிலைமையைக் கணக்கில் கொண்டு அறிவுத் திறனை அளந்து பார்க்கவேண்டும் என்பது மற்றொன்று. ஆக, இப்படி இரண்டுவிதக் கருத்துக்கள் கூறப்படுகின்றன. இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து, எதை ஏற்றுக்கொண்டாலும், அதிலும் ஒரு தவறு ஏற்படுகிறது. ஆண்டு முழுதும் இருக்கிற அறிவுத் திறன், ஆற்றல் திறன் அடிப்படையில் மாணவர்களைக் கணக்கிடுவதென்றால், அந்த மாணவனுக்கும் ஆசிரியருக்கும் இருக்கும் அன்புத் தொடர்பையும், உறவையும் பொருத்து, அவன் வெற்றி பெறுவதும், வெற்றி பெறாமல் போவதும் அமையும். இறுதியில் வைப்பது என்றால், நன்றாகவே படித்துக் கொண்டு வருகின்ற மாணவன், பரீட்சைக்கு ஒரு வாரத்திற்கு முன் டைபாய்டு ஜுரத்தில் அடிபட்டு, அந்த நிலையில் அவன் பரீட்சை எழுதி, 15, 20 மார்க்குகள்தான் வாங்கினான் என்ற நிலைமை ஏற்படக்கூடும். அதை வைத்துக் கொண்டு, அவனுடைய அறிவாற்றல் முழுவதையும் கணக்கிட முடியாமல் இருக்கும். கோதாரி கமிஷன் இதுபற்றி ஆராய்ந்து, 'இன்டர்னல் அசெஸ்மெண்ட்' என்று சொல்லப்படுகிற, ஆண்டு முழுதும் இருக்கும் திறமையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று யோசனை கூறியிருக்கிறது. அதை எஜுகேஷன் கன்சல்டேடிவ் கமிட்டியில் வைத்து ஆராய்ந்து இந்த மாநிலத்திற்கு எப்படிப்பட்ட முறையைப் படிப்படியாகக் கொள்ளலாம் என்பதுபற்றி இந்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. தக்க முடிவு அந்த வகையில் காணலாம்.

**திரு. ஆலடி அருணா:** மாணவர்களின் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் வளர்க்கும் வகையில், ஒரு குறிப்பிட்ட அளவு மதிப்பெண்களை இறுதி ஆண்டுத் தேர்வில் இணைக்கும் வகையில் அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனை இப்பொழுது இல்லை. நான் முதலில் கூறியபடி, ஆங்காங்கு இருக்கும் ஆசிரியர் பண்பையும், அவர் களுடைய தன்மையையும் பொருத்து இது அமையும். நன்றாகப்

படிக்கக்கூடிய மாணவனையும் நிறுத்தவேண்டும் என்று ஓர் ஆசிரியர் நினைத்துவிட்டால், நிறுத்திவிடலாம். ஒரு மாணவனைத் தூக்கிவிட வேண்டும் என்றாலும், அந்த அளவுக்கு மார்க் கொடுத்து தூக்கிவிடக் கூடிய நிலை ஏற்படும். ஆகவே, இதுபற்றி ஆராய்ந்துதான், நீடித்து இருக்கும் தக்கதொரு முடிவை நாம் எடுத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** தேர்வு பெறுவதற்கு, முழுக்க முழுக்க பரீட்சை எழுதுவதை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டிராமல், 50 சதவிகிதம் மதிப்பெண்கள் மாத்திரம் பரீட்சைக்கு என்று ஒதுக்கிவிட்டு, பாக்கி 50 சதவிகிதம் மதிப்பெண்கள் மாணவர்கள் நடத்தை, வகுப்பில் அவர்கள் காட்டும் நிட்சண்யம், ஆகியவைகளுக்கு ஒதுக்கக்கூடிய திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட ஒரு வினாவுக்குப் பதிலளித்திருக்கிறார்களே.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதைத்தான் நான் முதலில் சொன்னேன். அந்த வகையில் சிந்தித்துப் பார்த்து தக்க முடிவு எடுக்கலாம் என்பது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்க நினைத்ததை நண்பர்கள் கேட்டு விட்டதால் நான் கேட்கவில்லை.

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் ஸ்பீக்கர், சார். தமிழகத்தில் உள்ள ஊட்டியில் இருக்கக்கூடிய கலைக் கல்லூரியில் இந்த வருஷம், முதல் வருஷ பி.ஏ. வகுப்பில் பரீட்சை இல்லாமல் மாணவர்கள் பாஸ் செய்திருப்பதாகவும் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் கேட்பது இந்தக் கேள்வியில் வராது.

THIRU K. S. KOTHANDARAMIAH : If the supervision system is introduced in the schools, it will reduce the boredom and monotony of examinations and the boys will be able to do better in the examinations and their worry will be reduced and so will the Hon. Minister consult education experts on the introduction of supervisory system in the schools?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் கூறினேன். அதுபற்றித்தான் ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம். அதுபற்றி ஆராய்ந்து, வல்லுநர்களைக் கலந்துகொண்டு, கல்வி ஆலோசனைக் குழுவிலும், கலந்துரைக் குழுவிலும் வைத்து, அதுபற்றி தக்க முடிவு எடுத்து, அடுத்த ஆண்டு, அதற்கு அடுத்த ஆண்டு, தொடர்ந்து நடைமுறைப்படுத்திப் பார்க்கலாம் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது.



**திரு. க. இராமமூர்த்தி :** இந்தத் தேர்வைப் பொறுத்தவரையில், சில பாடங்களில் விடைகள் அடங்கிய புத்தகங்களை வைத்துக் கொண்டுகூட தேர்வு எழுதி, நம்முடைய மாணவர்கள தவறி விடுகிறார்கள் என்ற தவறான கருத்து இருக்கிறது. ஆனால், உண்மையிலேயே தேர்வுகளை எழுதும் நேரத்தில், அவர்களுக்குக் குறிப்புப் புத்தகங்கள்தான் தரப்படுகின்றன என்பதை அரசு விளக்கி, பொது மக்களிடையே இருக்கும் தவறான எண்ணத்தை மாற்றுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தேர்வு எழுதுகிறவாகளுக்குக் குறிப்புப் புத்தகங்களோ, புத்தகங்களோ தருவதில்லை. விடைத்தாள்கள்தான தரப்படுகின்றன. அதிலே பெயரைக்கூட எழுதககூடாது, நம்பர் மட்டும்தான் போடவேண்டும் என்ற விதிமுறை இருக்கிறது. புத்தகங்கள், குறிப்புகள் எதுவும் தருவதில்லை.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** இந்த எஸ். எஸ். எல்.சி. பரீட்சையில் ஒரு நாளில் இரண்டு பாடங்களுக்கு பரீட்சை வைக்கிறார்கள். காலை ஒரு நேரம், மாலை ஒரு நேரம் என்று வைக்கிறார்கள். அது மிகவும் கடினமாக இருக்கிறது. ஆகவே, ஒரு நாளைக்கு ஒரு பரீட்சை என்று வைப்பதற்கு அரசு யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பல ஆண்டுகளாக இந்த முறை தொடர்ந்து இருந்து வருகிறது. மேலும் சென்டர்களை குறிப்பிட்ட இடங்களில் அமைத்து விட்ட காரணத்தினால் வெளி ஊர் மாணவர்கள் நாலைந்து தினங்கள் ஒரு குறிப்பிட்ட ஊரில் தங்கி இரண்டு வேளைகள் பரீட்சை எழுத வேண்டியிருக்கிறது. ஒரு பரீட்சை என்றால் எட்டு, ஒன்பது நாட்கள் இருக்க வேண்டியிருக்கும். அதுபற்றிக்கூட ஆராயலாம். ஆனால் இந்த ஆண்டு அதிகமாக கடினமாகயிராது. 4, 5 தேதிகளில் தேர்வு நடைபெறுகிறது. 6, 7, 8 விடுமுறை நாட்கள். 9-ம் தேதி தேர்வு இருக்கிறது. 10-ம் தேதி விடுமுறை. 11-ம் தேதி தேர்வு எழுதுகிறார்கள். பின்னர் விடுமுறை வருகிறது. இந்த ஆண்டு நெருக்கடியிருக்காது. இதுபற்றி ஆராய்ந்து தேவையானால் தக்க முடிவு எடுக்கலாம்.

**திரு. கே. விநாயகம் :** இந்தக் கல்வித்துறையில் அப்போதைக்கப் போது நிபுணர்கள் கூறுகின்ற யோசனைகளையெல்லாம் கையாண்டு அதே நேரத்தில் அப்போதைக்கப்போது புதிய புதிய கல்வி அமைச்சர்கள் எல்லாம் வந்து அவர்கள் கூறுகிற யோசனைகளை எல்லாம் அதில் புகுத்தி புதிய முறை, புதிய முறை என்றெல்லாம் சொல்லி புதிய முறைகளை எல்லாம் உள்ளே போட்டு இப்படியெல்லாம் செய்து, இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்த கல்வித்திறன் இப்போது ரொம்பக் கீழே போய்விட்டது என்ற எண்ணம் மக்களிடம் பரவலாக இருந்துவருகிறது. ஆகவே இந்த அரசாங்கம் இனியாவது இதில் தலையிடாமல் இதே முறையை ஐந்து வருடங்

களுக்கு வைத்து இது பயன் தருகிறதா இல்லையா என்று பார்ப்பதற்கு உறுதியோடு நிற்பதற்கு சர்க்கார் ஒரு வாக்குறுதி தருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலையிடு கூடாது என்பதுதான் இந்த அரசின் நோக்கம். நான் சென்ற ஒரு வருட காலமாக இதுபற்றி பலவிடங்களில் தெளிவாகச் சொல்லி வந்திருக்கிறேன். ஆனால் இந்த மன்றமும், மற்றவர்களும் இந்த நாட்டின் கல்வி எப்படியிருக்கவேண்டும் என்று பொதுப்படையாக எடுத்துச் சொல்ல, மொழி எப்படியிருக்க வேண்டும், பாடங்கள் எப்படியிருக்க வேண்டும், எப்படி அறிவைப் பெற வேண்டும் என்ற ஆவலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்கான வழிவகைகள் என்ன, சிலபஸ் என்ன, முறைகள் என்ன என்று வகுக்கவேண்டிய முழுப் பொறுப்பும் பல்கலைக் கழகம், வல்லுநர்கள் இவர்களிடம் இருக்கிறது. என் விருப்பம் எப்படி இருந்தாலும் நானாக நுழைக்காமல் கல்வி வல்லுநர்கள் யோசனையையும், மற்றவர்கள் யோசனைகளையும், இந்த மன்றத்தில் கூறப்படும் கருத்துக்களையும் தெரிவிக்கிறோம். பொதுவாக பரீட்சை எப்படி எப்படி இருக்கலாம் என்பதுபற்றி பல கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இதன் அடிப்படையில் இக்கருத்துக்களை வல்லுநர்களிடம் தெரிவித்து, இதற்கு வழிவகைகள் என்ன என்று கூறுங்கள். தமிழ் பாடமொழியாக இருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். இதற்கு என்ன செய்யலாம், எப்படிச் செய்யலாம் என்று வல்லுநர்களைக் கேட்டு செய்கிற நிலைதான் இருக்கிறது. இப்படிச் சொல்லிக் கொடுங்கள், அல்லது பாடப் புத்தகங்கள் இப்படி இருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்ல நமக்கு உரிமை இல்லை. என்ன செய்யலாம் என்று யோசனை சொல்ல நமக்கு உரிமையுண்டு. எப்படியிருக்க வேண்டும் என்பது வல்லுநர்கள் பார்த்து அந்த முறையில் நடந்து வருகிறது. அந்த முறைதான் மேற்கொள்ளப்படுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** நம் மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது, அந்த நாளிலிருந்து இந்த நாள் வரை வருடா வருடம் கேள்வித் தாள்கள் வெளியாகிறது. அதைப் பார்த்து பரீட்சை எழுதுகிறார்கள் என்று புகார்கள் வந்து கொண்டேயிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இங்கிலீஷில் ஐந்து நிமிடங்களுக்கு மேல் கேள்வி கேட்கிறார்கள். அதை அனுமதிக்கிறீர்கள். ஆனால் தமிழில் கேட்கும்போது இப்படிச் சொல்கிறீர்கள். தமிழ் பிடிக்கவில்லை போல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படியொன்றும் இல்லை.





**திரு. வி. கே. கோதண்டராமன் :** அதை உத்தேசித்து இதை மீண்டும் புனர்பரிசீலனை செய்ய உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்தக் குறைபாடுகள் எல்லாம் ஏற்படாமல் என்ன செய்யலாம் என்பது பற்றி சில பல முறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன அந்த முறைகள் என்ன என்று சொல்வது அவ்வளவு உசிதமாக இருக்காது.

**திரு. டி. மார்டின் :** அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து புத்தகத்தை வைத்து பரீட்சை எழுதுவது, அல்லது புத்தகம் இல்லாமல் பட்சை எழுதுவது என்பது ஒரு பக்கமிருந்தாலும் இப்போதுள்ள பரபரப்பான சூழ்நிலையில் இந்தப் பரீட்சையை தள்ளிப்போடும் உத்தேசம் ஏதாவது உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தப் பரீட்சையைப் பொறுத்தவரையில் முடிவு செய்ய வேண்டியது பல்கலைக் கழகமும், அந்தந்த கல்லூரி முதல்வர்களையும் பொறுத்து அமைந்த ஒன்றாகும். கால் பரீட்சை, அரைப் பரீட்சை, இறுதிப் பரீட்சை என்பது முதல்வர்களும், பப்ளிக் எக்ஸாமினேஷன் பல்கலைக் கழகமும் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. அரசாங்கம் தலையிட்டு எதையும் செய்வதற்கில்லை. யோசனை சொல்லலாம். ஆனால் இப்போது யோசனை சொல்வதற்கில்லை. பல்கலைக் கழகமும், கல்லூரி முதல்வர்களும் தக்க முறைகளை ஆங்காங்கு மேற்கொள்வார்கள்.

உயர்தொடக்கப் பள்ளிகளில் கைத்தொழில் கல்வி

* 339-இ வினா.—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர் தொடக்கப்பள்ளிகளில் பயிற்றுவிக்கும் கைத்தொழில் கல்வி முறையினைக் கைவிடுவதற்குரிய திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இந்த வினாவிற்கு இடமில்லை.

**திரு. பெ. மலைச்சாமி :** தமிழகத்தில் உள்ள எவ்வளவு பள்ளிக் கூடங்களில் இத்தகைய கைத்தொழில் கல்வி கற்பிக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எவ்வளவு பள்ளிகளில் என்பது பற்றிய விவரக் குறிப்பு இல்லை. பொதுவாக பெரும்பாலான பள்ளிகளில் இந்தக் கைத்தொழில் பிரிவு இருக்கிறது. 1, 2, 3-ல் எழு பீரியடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. 4-ல் வாரத்திற்கு, நான்கு பீரியடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. 5-ல் நான்கு, 6-ல் நான்கு, 7-ல் நான்கு, 8-ல் நான்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கின்றன. பல இடங்களில் அந்தந்த இடத்திற்குத் தகுந்தாற்போல் பலவகையான பிரிவுகள் வைத்திருக்கிறார்கள்; சில விடங்களில் சில பிரிவுகள் மட்டும் வைத்திருக்கிறார்கள்.

[1968 மார்ச் 27

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த பார்ட் டைம் க்ராஃப்ட் டீச்சர்சை முழு நேர ஊழியர்களாக அமர்த்த அரசுக்கு உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கைத்தொழில் கற்பிக்கும் ஆசிரியர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்ற விண்ணப்பத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களை முழுநேர ஊழியர்களாக ஆக்கவேண்டுமென்றால் அதற்கேற்றபடி பாடதிட்டங்கள், மற்ற முறைகள் எல்லாம் வகுக்கப்பட வேண்டும். அப்படி அவர்களை முழுநேர ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்றால் பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். கைத்தொழில் பயிற்சியின் முழுப் பலனையும் பெறவேண்டுமென்றால் பல மாற்றங்களைச் செய்ய வேண்டியிருக்கும். கைத்தொழில் ஆசிரியர்களைக் கூப்பிட்டு வைத்துக் கேட்டு தக்க முடிவுகள் எடுக்கலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறது. அவர்களை முழுநேர ஊழியர்களாக ஆக்கவேண்டுமென்று அவர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள். இன்னும் அதுபற்றி முடிவு செய்யவில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** கைத்தொழில் கல்வி முறையில் என்னென்ன மாதிரியான கல்வி போதிக்கப்படுகிறது ? ஒவ்வொரு ஆண்டும் அந்தப் போதனையின் பலன் மதிப்பிடப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பொதுவாக தச்சுத் தொழில், பாய் முடைதல், கார்டனிங், போன்ற பல்வேறு தொழில்கள் அதில் வருகின்றன. அதுபற்றி ஆராய்ந்தவர்களும், மற்றவர்களும் கொடுத்திருக்கும் ரிப்போர்ட்களில் இருந்து கைத்தொழில் பயிற்சி அளிப்பதன் அடிப்படை நோக்கம் நிறைவேற்றப்படாத முறையில்தான் இருக்கிறது என்று அறிகிறோம். ஆகவே அது முழு அளவில் நிறைவேற, முழு அளவில் பயன்பட என்ன செய்யலாம் என்பதுபற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம். தையல், இசை, பெயிண்டிங், ட்ராயிங் போன்றவைகளை சில பள்ளிகளில் வைத்திருக்கிறார்கள். அதற்கென்று ஒன்றிரண்டு பீரியடுகள் ஒதுக்கப்பட்டு, ஒன்றிரண்டு பிரியடுகளை க்ராப்ட்ஸ்க்கு ஒதுக்கியிருக்கிறார்கள். தொழில் பயிற்சி பெறுவது அவர்கள் அன்றாட வாழ்க்கைக்கு பயன்படும் அளவில் அது பற்றிய அறிவு ஏற்படும் அளவில் எந்த வகையில் மாற்றலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. ஜெ. பெள்ளி கௌடர் :** கைத்தொழில் கல்வி பயிற்றுவிக்கும் பள்ளிகள் நம் மாநிலத்தில் எவ்வளவு மொத்தத்தில் இருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக்கேள்வி வேண்டும்.

**திரு. கே. போஜன் :** இப்போது உயர் தொடக்கப் பள்ளிகளில் சொல்லிக் கொடுக்கப்படும் கைத்தொழில் பயிற்சி மாணவர்களுக்கு



1968 மார்ச் 27]

பிற்காலத்தில் உபயோகமாக இருக்கும் என்பதால் எல்லாத் தொடக்கப் பள்ளிகளிலும் இதை விரிவுபடுத்தும் உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பெரும்பாலான பள்ளிகளில் இருக்கின்றன. இருக்கிற பள்ளிகளில், இருக்கிற முறை திருப்திகரமாக இல்லை. அதை பள்ளித் தலைமை ஆசிரியர்களும் சொல்கிறார்கள். இந்த கைத்தொழில் போதிப்பதில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களும், எங்கள் நோக்கம் நிறைவேற்றப்படும் முறையில் இது இல்லை, முழுநேரமாக்குவதினால்தான் பயன்பட முடியும் என்று கூறியிருக்கிறார்கள். இதுபற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஆராய்ந்த பிறகு தக்க முடிவுகள் எடுக்கலாம்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** உயர் தொடக்கப் பள்ளிகளிலும் அதற்கு மேல்படிப்பிலும் தேர்வு அடைந்தவர்கள் வேலையில்லாமல் இருக்கும்போது கைத்தொழில் கல்வி முறையை இன்னும் எல்லாப் பள்ளிகளிலும் அதிகரிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதனால் நல்ல பலன் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டால் எல்லாப் பள்ளிகளிலும் விரிவுபடுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுக்கலாம். இதைக் கற்பது வேலை வாங்கித் தருவதற்காக அல்ல. நான்கு பீரியடுகளில் இரண்டு பீரியடுகள் பெயிண்டிங், டிராயிங் என்று போய்விடுகிறது. எட்டாவது வகுப்பு படித்துவிட்டு ஜூனியர் டெக்னிக்கல் ஸ்கூலில் சேரலாம். அதற்கு மேல் பாலிடெக்னிக்கிற்கு போகலாம். பின்னர் பீ.எஸ்ஸி.-க்கு போக வாய்ப்பிருக்கிறது. டிப்ளமா கோர்ஸ்க்கு போகலாம், என்ஜினியரிங் கோர்ஸ்க்கு போகலாம். கருவிகளைப் பிடித்து தொழில் செய்ய வேண்டுமென்ற மனப்பான்மை ஏற்பட, கைத்தொழிலில் ஈடுபட வேண்டுமென்ற மனப்பான்மை ஏற்படுகிற அளவில்தான் அந்தப் பயிற்சி இருக்கிறது. ஒரு தொழிலில் ஈடுபடுகிற அளவிற்கு, ஒரு தொழிலை உருவாக்கக்கூடிய அளவிற்கு திறனை இதிலிருந்து பெற்றுவிட முடியாது.

**திரு. பெ. சீனிவாசன் :** சார், இந்த விஞ்ஞான யுகத்தில் இளம் முற்பகல் 9-30
மாணவர்கள் உள்ளங்களில் புதுமை எண்ணங்கள் வரவேண்டும். புரட்சிகரமான எண்ணங்கள் வரவேண்டும். ஆனால் இன்று நம் நாட்டில், விஞ்ஞான வளர்ச்சியில் தேய்ந்துபோன தொழிலாக இருக்கிற கைத்தறித் தொழில், பாய்முடைதல், தச்சுத்தொழில் இவை போன்றவற்றால் இளைஞர்கள் உள்ளத்தில் அந்தத் தொழில்களில் ஆர்வத்தை உண்டாக்க வேண்டுமா ? அது எதிர்காலத்தில் நம்முடைய மாணவர்களின் உள்ளத்தில் விஞ்ஞான மனப்பான்மையை ஏற்படுத்துமா ? இன்றைய முறை அதைத் தடுக்காதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலில் கூறியபடி தொழில் செய்ய வேண்டும், கை கால்களைப் பயன்படுத்தி உடல் உழைப்பு ஏற்பட வேண்டும் என்ற ஊக்கத்தைத் தருவதற்காகத்தான், இந்தக் கைத்தொழில் பயிற்சி வைக்கப்பட்டிருக்கிறதே தவிர, பாய் முடைகிறவர்கள் எதிர்காலத்தில் பாய் முடையப் போவார்கள் என்றோ, தச்சு வேலை செய்கிறவர்கள் எதிர்காலத்தில் தச்சு வேலை செய்யப் போவார்கள் என்றோ, எண்ணம் இல்லை. எளிமையாக கைகூடி வருகிற அளவில் செய்யப்படுகிற தொழிலாக இருக்கிறது. நவீன காலத்தில் ஃபிட்டர்கள் மெகானிக்ஸ் போன்றவர்கள் வேண்டுமெனில் லேத் மெஷின்ஸ் வைக்கவேண்டும், அதைச் சொல்லிக் கொடுக்க 250 ரூபாயில் ஒரு ஆசிரியரைப் போடவேண்டும். இரண்டு மெஷின்கள் வைக்க வேண்டும். உறுப்பினர்கள் கருதுகிறபடி விஞ்ஞான அறிவு முழுவதும் இந்தப் பருவத்தில் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்றால் அது எளிதில் வராது. அதற்காகத்தான், பிறகு கைத்தொழில்கள் பயில்வதற்காக பாலிடெக்னிக், ஐ.ஐ.டி. போன்றவற்றைப் பற்றிக் கொள்ளவும், தொழில் செய்யவேண்டும் என்ற ஊக்கத்தை தருவதற்கான விதத்தில் இந்தக் கல்வி முறை போதிக்கப்படுகிறது.

**திரு. என். வரதராஜன் :** கைத்தொழில் கல்வியை கைவிடவில்லை என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். திண்டுக்கல்லில் மரியம்மைப் பள்ளிக்கூடத்தில் டெக்ஸ்டைல் பிரிவை எடுத்துவிட வேண்டும் என்று மாவட்ட கல்வி அதிகாரி உத்திரவிட்டிருக்கிறார்களே, அது மறுபரிசீலனை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இது ஒரு குறிப்பிட்ட பள்ளியில் ஏற்பட்ட நிகழ்ச்சி. என்ன அடிப்படையில் நடைபெற்றது என்று தெரியவில்லை. அதுபற்றி தனிக் கேள்வி போட்டால், விவரம் அறிந்து கூறலாம்.

THIRU K. VINAYAKAM : Sir, is it a fact that this Government has no faith in Basic Education and if so, will the Government scrap the entire system of craft-centred education in the primary stages and does the Government think that this money spent on fantastic methods and faddist theory is a criminal waste which could profitably be made a saving to the Government?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்த ஆதாரக் கல்வி முறையைப் புகுத்தியவர்களே அதன் நடைமுறையைப் பார்த்துவிட்டு அது வெற்றி தரவில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள். ஆதாரக் கல்வி முறையை ஆராய்ந்த கோத்தாரிக் குழு அறிக்கையில் ஆதாரக் கல்வி என்பது, இன்று நாட்டில் வளர்ந்து வருகிற மனப்பான்மைக்கு, உலக வளர்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது பொருந்தி வரவில்லை என்று கூறியிருக்கிறது. ஆதாரக் கல்வியின் முக்கிய நோக்கத்தை மற்ற பொதுக் கல்வி முறையோடு சேர்த்து அமால்கமேட் செய்யலாம். இதற்கு என்று தனிப்பயிற்சி வேண்டாமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசுக்கும் நம்பிக்கை இல்லை. நல்ல





வருமானம், வசதிகளை மற்றவர்கள் தருவார்களானால், எந்த முறையாக இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். நம் மாநிலத்தில் ஒரு குழுவினர் அதுபற்றி ஆராய்ந்து அதனால் எதிர்பார்க்கப்பட்ட பலன் ஏற்படவில்லை, சூழ்நிலை அதற்கேற்ப இல்லை, மக்கள் விருப்பம் அதற்கேற்ப இல்லை, ஆகவே அதில் நாம் வெற்றிபெற முடியவில்லை என்று கூறியிருக்கிறார்கள். அதன் கருத்தை சாதாரண பொதுக் கல்வித்துறையில் புகுத்தலாம். ஏற்றுக் கொள்ளலாம் என்று கருத்தும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் சிலபல முறைகள் பொதுக் கல்வியோடு இணைக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. பெ. மலைச்சாமி:** தற்போது வேலை இழந்திருக்கிற இந்தி ஆசிரியர்களுக்கு கைத்தொழில் பயிற்சி தந்து அவர்களை கைத்தொழில் ஆசிரியர்கள் ஆக நியமிக்கிற எண்ணம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவரவர்கள் விருப்பத்திற்கேற்ப, அவரவர்களுக்கு இருக்கிற ஆற்றலுக்கேற்ப, எதில் எதில் ஈர்த்துக் கொள்ளலாமோ, அதில் ஈர்த்துக் கொள்ளலாம். கைத்தொழில் பயிற்சி பெற்றிருந்து அதைச் செய்ய முன்வந்தால் அவர்களுக்கு அந்த வாய்ப்பு தரலாம்.

வால்பாறையில் பெண்களுக்கு உயர்நிலைப்பள்ளி

* 339-உ. வினா.—**திரு. இ. ராமசாமி :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை அரசினர் உயர்தரப்பள்ளியில் சுமார் 2,000-க்கும் அதிகமான மாணவ மாணவிகள் படித்து வருவதால், அங்கு பெண்களுக்கு தனியாக ஒரு உயர்தரப் பள்ளி நடத்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. இ. ராமசாமி :** வால்பாறை அரசினர் உயர்நிலைப்பள்ளியில் 2000-த்துக்கு அதிகமான மாணவ மாணவிகள் ஒன்றாகப் படிப்பதால் கல்வியில் தரக் குறைவும் ஒழுக்கக் கேடும் ஏற்படுவதற்கு ஏதுவாக இருப்பதால், பெண்களுக்கென தனியாக ஒரு உயர்தரப்பள்ளி ஆரம்பிக்க அரசு இனிமேலாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** வால்பாறைப் பகுதியில் சேக்ரட் ஹார்ட் கர்ல்ஸ் ஹைஸ்கூல் இருந்து வருகிறது. அதில் 203 பெண்கள் பயின்று வருகிறார்கள். அரசினர் கழகப் பள்ளியில் 590 பெண்கள் பயின்று வருகிறார்கள். ஆகவே அங்கு ஒரு பெண்கள் பள்ளி வைக்கவேண்டும் என்று விண்ணப்பம் ஏதுவும் அந்தப் பகுதியில் இருந்து அரசினருக்கு வரவில்லை. ஒரு

பெண்கள் பள்ளி வைப்பதற்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் அளவுக்கு கட்டிட வசதி, இட வசதி மற்றவைகள் எல்லாம் தேடித்தருகிற முயற்சியில் உறுப்பினர் அவர்கள் ஈடுபட்டு நிபந்தனைகளை எல்லாம் நிறைவேற்றித்தர முன் வருவார்களானால், ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி வைப்பதுபற்றி யோசிக்கலாம். ஆண்கள் பள்ளியில் 590 பெண்கள் பயின்று வருகிறார்கள். இன்னொரு பெண்கள் பள்ளியில் 203 பெண்கள் பயின்று வருகிறார்கள். அதில் வேண்டுமானால் போகலாம். இனி ஒரு பள்ளி ஆரம்பிக்கவேண்டுமென்றால், அடிப்படை நிபந்தனைகளை நிறைவேற்ற முன்வந்தால் அதைப்பற்றி யோசிக்கலாம்.

*New Ration Cards for residents in Coimbatore*

* 340 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether the City Rationing Officer, Coimbatore city is making arrangements to distribute new ration cards to the residents of Coimbatore city?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கோயம்புத்தூர் நகரவாசிகளுக்கு புதிய உணவுப் பங்கீட்டுக் கார்டுகள் வழங்கப்பட்டுவிட்டன.

THIRU K. VINAYAKAM: May I know the number of cards distributed and how does it compare with the number that is existing in the City of Madras?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கோவைக்கும் அதற்கும் பொருத்தம் பார்ப்பது சரியல்ல. கோவையில் ஏறக்குறைய 9 லட்சம் மக்களுக்கு மேல் ரேஷன் கார்டு முறையின் கீழ் வருகிறார்கள். இப்போது ஏறக்குறைய ஒரு லட்சம் அறுபதினாயிரம் புதுக் கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. சென்னை நகரம் பற்றிய தகவல் தற்சமயம் என்னிடம் இல்லை. ஆனால் சென்னை நகரத்தில் ஏறக்குறைய முப்பது இலட்சம் மக்கள் இந்த உணவுப் பங்கீட்டு முறையில் அனுகூலத்தைப் பெறுகிறார்கள்.

DR. H. V. HANDE: What is the off take of rice per month in Coimbatore city, are the residents in the suburbs of Coimbatore also included in the figure that the Hon. Minister gave, what is the quantity of ration allowed and is there any representation from the people that they want more rice?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பொதுவாக ஏறக்குறைய 4 ஆயிரம் டன் அளவில் கோவைக்கு ரேஷன் கார்டு முறையில் வருகிறது. 1400 கிராம் கொடுக்கப்படுகிறது. இந்திய சர்க்கார் அவ்வளவுதான் கொடுக்கவேண்டும் என்று உத்திரவு போட்டிருக்கிறார்கள், இந்தியா முழுவதும் கன்ஸ்யூம் செய்ய வேண்டுமென்று. 400 கிராம் கோதுமை கொடுத்தால் சரியாகிவிடும். சில வேளைகளில் வருகிறது. சில வேளைகளில் வருவதில்லை.



திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : கோவை நகரில் ரேஷன பற்றாக்குறை இருக்கும்போது ஒரு படி அரிசி வேண்டுமானால், பஸ் ஏறி வெளியே சென்று வாங்கி வரவேண்டிய நிலைமை இருக்கிறது. இந்நிலை எப்போது மாறும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஏன் அந்த நிலை வந்தது என்பது என்னைவிட அங்கத்தினர் அவர்களுக்குப் புரியும். கோவை நகரத்தில் நாம் சட்டபூர்வமான ரேஷன் வைத்திருக்கிறோம். சட்டபூர்வமான ரேஷன் வைத்திருக்கிறோம் என்றால், வெளிச் சந்தையில் யாரும் விற்கக்கூடாது. அவர்களுக்கு உணவு தானியம் கொடுக்கிற பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதுதான் அதன் பொருள். கோவை நகரில் ஏராளமான அரிசி ஆலைகள் உண்டு. அங்கிருந்து கள்ளக் கடத்தல் மூலம் வெளி மாநிலங்களுக்குப் போவதாக ஆதாரங்கள் இருந்ததால் இந்தத் தடை உத்திரவு விதிக்கப்பட்டது. எல்லோரும் கள்ளக் கடத்தலில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்லவில்லை. அங்கத்தினர் ஏன் தடையுத்திரவு போட வேண்டும் என்று கேட்டார்கள். அங்கத்தினர்களைப் போன்றவர்கள் ப்ளாக் லிஸ்ட்-ல் உள்ளவர்களைக் கண்டுபிடித்துக் கொடுக்க முயற்சிக்கிறோம் என்று உத்திரவாதம் அளித்தால், கோவை நகரத்திற்கு உள்ளேயே அரிசி நடமாட்ட உத்திரவைத் தளர்த்துவதற்கான யோசனைகளைப் பரிசிலனை செய்யலாம் என்று நான் அங்கத்தினர் அவர்களிடம் சொன்னேன். மற்றவர்களிடமும் சொன்னேன். இதுவரையில் அதற்கான எந்தவித முயற்சியும் எடுக்காத அளவில் அவர்களை எல்லாம் ஒரு கட்டுப்பாட்டுக்கு உள்ளே கொண்டுவர இயலாத நிலையில் அரசாங்க கருத்தை அங்கத்தினர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : கோவை நகரத்திலே ரேஷன் அளவில் கொடுக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் அதைத் தொடர்ந்த பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் குடும்பக் கார்டு சிஸ்டத்தின் மூலம் ரேஷன் போடுகிறார்கள். எனவே அவர்களுக்கும் கட்டாய ரேஷன் அளவுக்கு அவர்களது அளவை உயர்த்திக் கொடுக்க சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இரண்டு மாதிரி இருக்கிறது. இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது. இந்தச் சிக்கல் ஏற்படுவது இயற்கை. கோயம்புத்தூரைச் சுற்றியுள்ள பிராந்தியங்களில் தொழில் பிராந்தியங்கள் இருக்கின்றன. சிங்காநல்லூர் பகுதி, பேரூர் முனிஸிபாலிடி, பேரூர் பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் சுமார் 10 இலட்சம் மக்கள் ரேஷன் முறையில் வருகிறார்கள். இந்த இடத்திற்குள்ளேயே இருக்கும் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குத் தொழிற்சாலைகளிலேயே கார்டு மூலம் முழு ரேஷன் கிடைக்கிறது. ஆனால் வெளியிலே உள்ள அவர்களுக்கு மட்டும் கொடுத்தால்

[1968 மார்ச் 27

மாண்புமிகு உறுப்பினரவர்களேகூட, "வெளியிலே பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு மட்டும் இவ்வளவு ரேஷன் கொடுக்கிறீர்கள், மற்றவர்களுக்கு மட்டும் ஏன் குறைவாக இருக்கிறது" என்று இப்படியெல்லாம் கேட்கக்கூடிய கேள்விகள் எழும். இருந்தாலும் நாம் கொடுத்தாக வேண்டிய பிரச்சினையிருந்தால், சாதகமாக யோசிக்க கலெக்டரவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** பாயின்ட் ஆஃப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன் சார், வெளியே போவதைத் தடுக்க நீங்கள் துணைபுரிந்தால் அதை நிறுத்தி விடலாம் என்று . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பர்சனல் எக்ஸ்பிளனேஷன் என்றால், உங்களைப் பற்றியிருந்தால் சொல்ல வேண்டும்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** அமைச்சரவர்களுக்கு ஒரு விளக்கம் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் வேறு கேள்வியாக வேண்டுமானால் கேளுங்கள்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** கேள்வியாகக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்களைக் கூப்பிடும் போது கேளுங்கள்.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவரவர்களே, சில கிராமங்களில் விளைவு பற்றாக்குறையாக இருப்பதால், அங்கு பஞ்ச நிலைமையாக இருக்கிறது. கோயம்புத்தூர் நகரத்திலுள்ளதைப் போல பற்றாக் குறையாக இருக்கும் கிராமங்களுக்கு, கிழ்ப்பளூர் போன்ற இடங்களுக்கு நெல்லாகக் கொடுத்தாலும் சரி, வேறு தானியமாகக் கொடுத்தாலும் சரி, அவ்வாறு உணவுப் பொருள்களைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்தந்த ஊர்களுக்குத் தகுந்த மாதிரி முடிவுகள் எடுக்கப்படுகின்றன. 1½ கோடி மக்களுக்கு குடும்பக்கார்டு முறை மூலம் உணவு தானிய விநியோக முறை நடைபெற்று வருகிறது. கோயம்புத்தூருக்கு என்று சில பிரத்தியேக குணங்கள் இருக்கின்றன, சென்னை நகரத்திற்கு என்று சில பிரத்தியேக குணங்கள் இருக்கின்றன, கிராமங்களுக்கு என்று சில பிரத்தியேக குணங்கள் இருக்கின்றன. அதற்குத் தகுந்த மாதிரி முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், கோயம்புத்தூரிலே உணவுப் பொருள் நடமாட்டத்திற்குத் தடை உத்தரவு போட வேண்டுமா, இல்லையா என்பது பிரச்சினை அல்ல. அங்கு விற்கும் உணவுப் பொருள்களின் அளவை உயர்த்தினால் வெளியே போவது தானாகவே நின்றுவிடும். எனவே வெளியே விற்காமல் பார்த்துக் கொள்ளும் வகையில் ரேஷனை அதிகப்படுத்த வேண்டும். அதைச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?



1968 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்தக் கோரிக்கையை நெடுநாளாகச் சொல்லிக் கொண்டே வருகிறார்கள். ஆனால் இவ்வளவுதான் உயர்ந்த பட்சமாகக் கொடுக்க வேண்டுமென்பதற்கான வரம்பை இந்திய அரசாங்கம் விதித்திருக்கிறது. இது ஓரளவு போதுமானது என்பது அரசாங்கத்தின் கருத்து. கோதுமை மட்டும் கிடைத்து விட்டால், இதைச் சரிக்கட்டி விடலாம். ஆனால் அவர்கள் சொல்லுவதற்கும் அங்கேயிருக்கும் தடை உத்தரவுக்கும் வேறுபாடுகள் இருக்கின்றன. கள்ளக்கடத்தல், பிளாக் மார்க்கெட் மூலமாகக் கோயம்புத்தூரிலிருந்து கேரளாவிற்குச் செல்வதைத் தடுக்க வேண்டுமென்று தனிப்பட்ட வெளிச் சந்தைக்குப் போகக் கூடாது என்று அமலில் இருக்கிறது.

**திரு. எம். கண்ணப்பன் :** தலைவரவர்களே, கோவை நகரத்தில் கார்டுகளுக்கு வழங்கப்படும் அரிசியைத் தனிப்பட்ட வியாபாரிகளிடத்திலே வாங்குவதால், சில நேரங்களில் புகார்கள் வருகின்றன. அதை மாற்றி அரசாங்க கோடவுன்களில் சேகரித்து வைத்து வழங்கும் திட்டம் உண்டா ? அப்படியிருந்தால் எப்பொழுது அமலுக்கு வரும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஏற்கெனவேயே பழைய அரசாங்கம் கோயம்புத்தூர் நகரத்திலே சில மொத்த வியாபாரிகளிடத்தில், ஹோல்சேலர்களிடத்தில் வைத்திருந்தது. அவர்களை ரத்து செய்து அரசாங்கமே நேர்முகமாக அந்தப் பொறுப்பையேற்க உத்தரவு ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டு அமல் படுத்தப்படுகிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவரவர்களே, இந்த ஆண்டு நெல் கணிசமாக விளைந்திருக்கிறது. கட்டாய ரேஷனை வைத்திருந்த காங்கிரஸ் ஆளும் ஆந்திர மாநிலத்திலே கட்டாய ரேஷனை எடுத்து விட்டார்கள். அதைப் போலவே நமது சென்னை நகரிலும், கோயம்புத்தூரிலும் எடுக்க அமைச்சரவர்கள் உத்தேசிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆந்திராவின் நிலைமை வேறு, இங்கே நிலைமை வேறு. ஆந்திராவின் விசாகப்பட்டினத்திலும், தலைநகரமான ஹைதராபாத்திலும் ரேஷன் முறை அமலிலிருந்து, அதையேகூட நிர்வாகத்திலே இடைஞ்சல்கள் தோன்றுவதையொட்டி, அந்தப் பொறுப்பை எடுத்துக் கொள்ள வேண்டாமென்ற நிலையிலே அங்கு எடுத்தார்கள். ஆந்திரா மாநில உணவு அமைச்சரவர்களே என்னிடத்திலே கூறினார்கள். எனவே இதையும், அதையும் பொருத்தம் பார்ப்பது சரியல்ல.

THIRU K. VINAYAKAM : Sir, whereas it is rumoured that in the Coimbatore city many bogus cards have been manufactured and also fictitious names of persons have got into the valid ration cards, have the Government carried out any periodical check-up or inspection of those cards? As the Hon. Chief Minister has stated on one occasion on the floor of the House, even in the city

of Madras there are many bogus cards manufactured and the fictitious names of two or three persons have crept into a person's valid ration card without his knowledge. So, will the Government come forward to check such kind of mistakes and malpractices and then rectify them?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஏற்கெனவே இந்த மன்றத்திற்குத் தெரிவித்தேன். கோயம்புத்தூர் நகரிலும், சென்னை நகரிலும் பல்லாயிரக்கணக்கான போலி கார்டுகள் இருந்தன. ஒரே வீட்டிலே 4 பேர் இருந்தால் 8 பேர் என்றும், உயிரோடில்லாதவர்கள் எல்லாம் இருப்பவர்கள் போன்றும் இருந்தன. இத்தகைய போலிக் கார்டுகள் களையப்பட்டிருக்கின்றன. அதோடு மீண்டும் சீர்திருத்த முயற்சிகள் தீவிரமாக ஏற்பட்டு, அதற்காகப் புதிதாகப் பணியாளர்கள் கூட நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆசிரியப் பெருமக்களும் ஊர்க்காவல் படையினரும் இதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள். சென்னை நகரத்தில் பல்லாயிரக்கணக்கான போலிக் கார்டுகள் இதன் மூலம் களையப்பட்டிருக்கின்றன.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, கோவை நகரத்திலே புதிய கார்டுகள் எப்பொழுது வழங்கப்பட்டன? இதற்கு முன்ப எவ்வளவு கார்டுகள் கொடுக்கப்பட்டன? புதிதாகக் கார்டுகள் கொடுப்பதன் மூலம் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறதா? அல்லது குறைந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதுபற்றி விவரமான தகவல் என்னிடத்தில் இல்லை. முன்பு 1960-ஆம் வருஷம் எடுக்கப்பட்டது. ஆனால் அதற்கும் இப்பொழுதிருக்கும் நிலைக்கும் சம்பந்தமில்லை. முப்பது இலட்சம் மக்கள் உணவுப் பங்கீட்டு முறையினால் சென்னை நகரத்தில் நன்மை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவரவர்களே, கேரளாவிற்குப் போவதைத் தடுக்க நாங்கள் முயற்சியெடுக்காததால், அவ்வாறு அனுமதிக்கப்படவில்லை என்று உணவு அமைச்சரவர்கள் கூறினார்கள். ஊரைச்சுற்றி வெளியே வந்து வந்து ஏழை மக்கள் வாங்கிக்கொண்டு போகிறார்கள். "நீங்கள் வெளியே போவதைத் தடுக்க என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்" என்று கேட்டார்கள். அங்கு 'செக் போஸ்டுகள்' இருக்கும்பொழுது நாங்கள் போய் பிடிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** செக் போஸ்டுகள் இருந்தும் நாங்கள் போட்ட நிபந்தனையைப்பற்றி அங்கத்தினர் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. கோயம்புத்தூர் நகர மக்களுக்கு இன்னும் கொஞ்சம் அரிசி வேண்டுமென்ற சௌகரியத்தைக் கெடுப்பதற்காக இந்தத் தடைஉத்திரவு போடப்படவில்லை. கோயம்புத்தூர் நகருக்கு பல பெரிய அரிசி ஆலைகள்



இருக்கின்றன. அந்த பெரிய அரிசி ஆலைகளுக்கும் கேரள மாநில எல்லைக்கும் 42 மைல் தூரம்தான் இருக்கிறது. வெளியிலேயிருக்கிற தாலுக்காக்களிலும், மற்ற இடங்களிலிருந்தும் கோயம்புத்தூரிலிருக்கிற அந்த அரிசி ஆலைகளுக்குக் கள்ளத்தனமாக அரிசி கொண்டு வந்து, அதை ஒரு ப்ளேசாக ஆக்கிக் கொண்டு கள்ளக் கடத்தலுக்கு ஒரு நிறுவனமாகவும் அதை ஒரு தளமாகவும் ஆக்குவதற்குத் தூண்டி விடக்கூடாது. இப்படி, அத்தகைய தடை உத்திரவு போடாமல் இருந்திருந்தால், சோதனை போடாமல் இருந்திருந்தால், சோதனைச் சாவடிகளுக்கும் அதிகாரிகளுக்கும் சிரமமாக இருக்கும். ஆகலால்தான் இந்த தடையுத்திரவு அமலில் இருக்கிறது. நிலைமைகள் சீராகி, இந்த மாதிரி ஏற்படாது என்று தெரிந்தால், உடனே கோயம்புத்தூர் முழுவதுமே இந்த தடை உத்திரவு அகற்றப்படும். கனம் அங்கத்தினர் அவர்களிடத்திலே கூட நான் சொன்னேன். எல்லோரும் தப்பு பண்ணுகிறார்கள் என்று சொல்லவில்லை. 100 வியாபாரிகள், 4 அரிசி ஆலைக்காரர்கள் அந்தமாதிரி பண்ணுகிறார்கள் என்றால், அந்த 4 அரிசி ஆலைக்காரர்கள் என்று சொன்னதும் அதை அரிசி ஆலைக்காரர்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் போன்ற பொது ஊழியர்களும் அதில் சிரத்தை காட்ட முன் வரவில்லை. செக் போஸ்டோடு அதற்குத் துணை புரிகிற ஒரு நடவடிக்கையாகத் தான், நெல், அரிசியை எடுத்துக் கொண்டு போவதற்குத் தடை உத்திரவு கோயம்புத்தூர் நகரத்தைச் சுற்றி போடப்பட்டிருக்கிறது.

Dr. H. V. HANDE: On a point of order. Is it in order on the part of the Minister to request the Member to supply the information? Whenever this Member has supplied information such as for instance in the issue of permits and licences for puffed rice, the view or advice of the Member was completely flouted by the Minister. In spite of that, how can the Minister ask the Member to give information? If the Minister is prepared to take the co-operation of the Member, he is completely prepared to give it.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தச் சபையினுடைய நடைமுறைகளிலே ஏதாவது மாறுபாடு இருந்தால், அதைப் பற்றித்தான் இங்கே பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாமே தவிர, அமைச்சருடைய போக்கு பற்றியெல்லாம் இங்கே பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது முறையாகாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE: It is perfectly in order. My point of order is whether it is in order for the Hon. Minister to put a poser of this type during question hour. I am very clear about it.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் ஹாண்டே அவர்கள் விவகாரத்தை முதலிலே புரிந்து கொள்ள வேண்டும். இதிலே உறுப்பினர் அவர்கள் சொல்வதுதான் ஆக

[1968 மார்ச் 27

வேண்டுமென்றும் இல்லை. நான் அதை விளக்கிவிடுகிறேன் என்று சொல்லக்கூடாது என்றும் இல்லை. அதேமாதிரி உறுப்பினர்கள் இன்று கெட்ட காரியங்கள் செய் என்று சொல்கிறார்கள் என்றால், அதையே அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் அர்த்தம் இல்லை. இதிலே இருக்கிற விவரங்களும் உறுப்பினர் கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நல்லது செய்வதற்காகத் தான் இது செய்யப்படுகிறது. கோவையிலே ஏன் அரிசியை விடவில்லை என்பது ஒரு வாதம். அரசாங்கம் காரணத்தை எடுத்துச் சொல்லுகிறது. என்ன காரணத்திற்காக இருக்கிறதோ, அந்தக் காரணம் நிறைவேற்றப்படாமல் இருக்குமானால், அந்த நிலைகளைப்பற்றி பரிசீலிக்கலாம். கோயம்புத்தூர் அரிசி ஆலைக்காரர்களும், வியாபாரிகளும் சேர்ந்து ஒரு கூட்டம் நடத்தினார்கள். அதற்கு கனம் அங்கத்தினர்தான் தலைமை வகித்தார்கள். அவர்களே பேசினார்கள். எல்லோருமாக சேர்ந்து முடிவு செய்யப்பட்டது. அதனுடைய அடிப்படையில் தான் நான் கேட்டேனே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் பொறுப்பு உண்டு—நல்ல காரியங்களுக்கும் பொறுப்பு உண்டு. கெட்ட காரியங்களுக்கும் பொறுப்பு உண்டு. கெட்ட காரியங்களை நாங்கள் சொல்ல மாட்டோம் என்று சொல்வது சரியானதல்ல. நான் சொன்னது ஒழுங்கானதுதான், முறையானதுதான். உள்ளே விட்டுவிட்டாலும் அங்கே இந்தமாதிரியான பிளாக் மார்க்கெட் வியாபாரிகள், வியாபார தளங்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளும். எல்லோரும் இதிலே ஈடுபடுகிறார்கள் என்றும் சொல்ல முடியாது. நான்கு பேர்கள் அந்தமாதிரி இருக்கலாம். அரசாங்கத்திற்குத்தான் சிரமமே தவிர, இந்த மாதிரி பிளாக் மார்க்கெட் லிஸ்டை உங்களுடைய சங்கத்திடம் கேட்டோம். கோயம்புத்தூர் வியாபாரிகளைக் கேட்ட நேரத்தில் இதுவரையிலும் அது வரவில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களிடத்திலே நல்ல செல்வாக்கு உடையவர்கள். அவருக்கு அங்கே நல்ல மரியாதை உண்டு. அவருக்கு அவர்களிடத்திலே அக்கறை உண்டு. இதனால், பொது நன்மையை முன்னிட்டு இந்தக் காரியத்தைச் செய்தால் கோயம்புத்தூர் மக்களுக்கும் நன்மை செய்யலாம். நீங்கள் செய்ய முன் வாருங்கள் என்று சொன்னால் அது ஒழுங்கீனமான காரணத்தால் அல்ல என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொன்று. ஏதோ சொன்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் . . .

DR. H. V. HANDE : We are prepared to give-

THE HON. THIRU K. A. MATHIALAGAN : We are also prepared to substantiate our stand.

மாண்புமிகு உறுப்பினர்கள் எத்தனையோ கெடுதலான விண்ணப்பங்கள் கொடுக்கிறார்கள். எது எது நியாயமானதோ, எது எது சட்டவரம்புக்குக் கட்டுப்பட்டுள்ளதோ, அந்த விண்ணப்பங்களைத்தான் ஏற்றுக்கொள்ள முடியும். சட்ட வரம்புக்கு உட்படாத எதைக் கொடுத்தாலும், எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும், எதிர்க்கட்சிக்காரர்களாக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அதை நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கம் மறுத்துத்தான் தீரும்.



1968 மார்ச் 27]

(திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். நான் கேட்பதெல்லாம்-டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறார்களா ? ஒழுங்குப் பிரச்சினை என்பது என்ன என்று தெளிவாக நம்முடைய விதிகளில் இருக்கிறது :

A point of order shall relate to the interpretation or enforcement of these rules or such Articles of the Constitution as regulate the business of the House and shall raise a question which is within the cognizance of the Speaker.

ஆகவே, அமைச்சர்கள் விளக்கம் கொடுப்பதற்கும், உறுப்பினர்கள் விளக்கம் கொடுப்பதற்கும் இந்த சபையினுடைய நடைமுறையிலே எந்தவிதமான மாறுபாடும் இருப்பதற்கில்லை. ஆகவே, அதுபற்றி ஒழுங்குப் பிரச்சினையை ஆராயாமல் இங்கே எழுப்ப வேண்டாமென்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன். ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பும்போது ஆராய்ந்து எழுப்பவேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். ஆகவே, ஆராய்ந்து பார்க்காமல், ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவதற்கு உரிமை இல்லையா என்ற கேள்வியைக் கேட்கவேண்டாம் எது எதெற்கு எழுப்ப வேண்டுமென்பதை மட்டும் தெரிந்து எழுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

### விவசாயப் பொருள்கள்மேல் செஸ் வரி

* 341 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

எந்தெந்த விவசாயப் பொருள்களின் மீது செஸ் வரி போடப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஒழுங்கு முறை வாணிகக் களங்களிலோ அல்லது அதைச் சுற்றியுள்ள குறிப்பிட்ட வாணிக இடங்களிலோ வாங்கப்படும் அல்லது விற்கப்படும் குறிப்பிட்ட விவசாயப் பொருள்களுக்கு, செஸ் வரி வசூலிக்கப்படுகிறது. மேலும், ஒவ்வொரு சர்க்கரை ஆலைக்குள் கொண்டுவரப்படும் கரும்பிற்கு, டன் ஒன்றுக்கு ரூ. 5 விதம் சர்க்கரை ஆலையினிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இதில் விவசாயப் பொருள் என்று சொல்லக் கூடிய நேரத்திலே, உணவுப் பொருள்களுக்கு வசூல் செய்யக்கூடிய செஸ் வரி நீக்கப்படுமா—எடுக்கப்படுமா ?

[1968 மார்ச் 27

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** வியாபாரப் பொருள்கள் என்ற தலைப்பில் வருகின்ற இனங்களுக்கு விதிவிலக்கு அளிப்பதற்கில்லை. வியாபார விளைபொருள்கள் என்ற அடிப்படையில் இன்றைய தினம் வேர்க்கடலை, பருத்தி, புகையிலை, மஞ்சள், முந்திரி, தேங்காய், எள், மிளகாய் போன்ற பொருள்கள் உள்ளடங்கும். இதிலே உணவுக்காக உபயோகிக்கக்கூடிய பொருள்களும் அடங்கி இருக்கின்றன. இருந்தாலும் அவைகள் எல்லாம் வியாபாரப் பொருள்களாகக் கருதப்படுகிற காரணத்தாலே செஸ் வரியிலிருந்து அவைகளுக்கு விலக்கு அளிக்க முடியாது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, இந்த செஸ் வரி மார்க்கெட்டிங் யார்டிலே வசூலிக்கப்படுகிறதா, அல்லது வெளியிலே வசூலிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். வெளியிலே வசூலிக்கப்பட்டால், அதை வேண்டாமென்று சொல்லி யார்டுக்குள் வருவதற்கு மட்டும் வசூலிப்பதற்கு அரசாங்கம் உத்திரவு போடுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இன்றைக்கு இருக்கின்ற நிலை விளைச்சல் காலங்களிலே மார்க்கெட் கமிட்டியிலும் அதைச் சுற்றியுள்ள 5 மைல் அளவுக்கும் இவைகளுக்கு வசூலிக்கப்படுகிறது. அவை மார்க்கெட்டிங் கமிட்டிக்கு வரவில்லையென்ற காரணத்தினால், 5 மைல் சுற்றளவுக்கும் அதை வாங்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த மிளகாய், தேங்காய், வேர்க்கடலை ஆகியவை அத்தியாவசிய உணவுப் பொருள்களாக இருப்பதால், அவைகளையெல்லாம் வியாபாரப் பொருள்கள் என்பதை விட்டுவிட்டு, அவைகளை உணவுப் பொருள்கள் என்று செய்து—கிளாஸிபிகேஷன் செய்து—விதிகளைத் திருத்த இந்த அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நான் ஆரம்பத்திலேயே திரு. கோதண்டராமன் அவர்களுக்குத் தெளிவாகத்தான் சொன்னேன். அவை உணவுப் பொருள்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் இவை வியாபாரப் பொருள்களாகவும் இருக்கிற காரணத்தால், செஸ் வரி வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. விவசாயிகளுக்கு இதனாலே ஆதாயம் கிடைக்கவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான் இந்தக் காரியம் செய்யப்படுகிறது. இதை விலக்கி விட்டால் தனிப்பட்ட வியாபாரிகள் அதிகப்படியான இலாபத்தை அடைவார்கள். மார்க்கெட்டிங் கமிட்டிக்கு வேண்டிய நிர்வாகச் செலவுகளையெல்லாம் ஏற்கவேண்டி இருக்கிறது. விவசாயிகளுக்கு நன்மை செய்துகொண்டு வருகிற காரணத்தாலே இது அவசியமாக இருந்து வருகிறது. இவைகளுக்கெல்லாம் விதி விலக்கு அளித்து விட்டால், இந்த மார்க்கெட்டிங் கமிட்டியை கைவிட வேண்டி வரும். மார்க்கெட்டிங் கமிட்டியை



1968 மார்ச் 27]

மூடி விட்டால், அதிலே வேலை செய்யக்கூடியவர்கள் வேலை வாய்ப்பை இழந்துவிடுவார்கள். பிறகு அவர்களுக்கு வேறு வேலை தருவார்களா என்று கேட்கவேண்டிவரும்.

**திரு. வி. டி. அண்ணாமலை :** மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விவசாயப் பொருள்களுக்கு செஸ் வசூலிப்பதாகச் சொன்னார்கள். வேர்க்கடலைதான் விவசாயப் பொருள், வேர்க்கடலையிலிருந்து உற்பத்தியாகிற நிலக்கடலை பயிர் வியாபாரப் பொருள் இல்லை, அதுவும் உற்பத்தி செய்கிற பொருள் என்ற முறையிலே அதற்கு செஸ் வசூலிப்பதுபோல, கரும்பிலிருந்து உற்பத்தியாகிற வெல்லத்திற்கு செஸ் விதிக்கப்பட்டு அதிகமாக வசூல் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

மு. பகல் 10 0

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதுபற்றியும் இப்பொழுது அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, I rise on a point of order. During question-hour, hon. Members try to catch the eye of the Chair if they want to put a question. Of course, we try our best and sometimes we try to catch your eye but is elusive. This is the practice followed in every Parliament and in every Legislature. Is it in order for any hon. Member to run to the seat of the Chair and almost scratch him and also say 'Please call me' and then run back to his seat and later on for the Chair to give him an opportunity to put a question. If that is in order, then everybody would be running to your seat and making your attention fall upon them. Is that in order?

THE HON. THIRU C. N. ANNADURAI : I would like to know how the inference is drawn by the hon. Member that the other hon. Member rushed to the Speaker's seat only for this purpose. He might have gone there for some other purpose.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்கள் சபாநாயகருடைய கவனத்தை ஈர்ப்பதற்காக அவருடைய இடத்திற்கு வருவது முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மாணவர்களுக்கான அரசினர் இல்லங்கள்

* 342 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசினர் மாணவர்களுக்கான ஹாஸ்டல்களில், அரிசன மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டவைகளுள் காலியாக உள்ள இடங்களில் பின்னிலை வகுப்பு (Backward) மாணவர்களைச் சேர்க்கச் செய்யும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இல்லை.

* 343 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

[1968 மார்ச் 27

**பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கான ஹாஸ்டல்களில் எந்த வகுப்பு விகிதாச்சாரப்படி மாணவர்களை சேர்க்கப்படுகிறது ?**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பின்னிலை வகுப்பினருக்காக ஹரிஜன நலத்துறையினால் நடத்தப்படும் அரசாங்க இல்லங்களில் பின்வரும் விகிதப்படி மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள் :—

| | | |
|---|---|---|
| பின்னிலை வகுப்பினர் | .. | 65 சதவிகிதம். |
| ஹரிஜனங்கள் | .. | 25 சதவிகிதம். |
| முன்னிலை வகுப்பினர் | .. | 10 சதவிகிதம். |

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அவைத்தலைவர் அவர்களே, அரிசன மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் நிரப்பப்படவில்லையானால், அந்த இடங்கள் வீணாகத்தான் போகின்றன, அதைப் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு ஒதுக்கிக் கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? ஒரு சில விடுதிகளில் பின்தங்கிய வகுப்பினர்கள் இருந்தும் சேர்க்கப்படவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதற்கு என்ன காரணம் என்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பின்னிலை வகுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் 65 சதவிகிதம். அந்த மாணவர்கள் வந்து சேரவில்லையென்றால், அந்த இடங்களுக்கு வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள், அரிசனங்கள் அல்லது முன்னிலை வகுப்பு மாணவர்கள்—அதிலும் அரிசனங்களுக்கு முதலிடம் தரப்படுகிறது—சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். சில காலங்களில் அந்தந்த நிலைமைக்கு உத்தேசித்த வகையில் மாவட்ட நல அதிகாரிகளே சில மாணவர்களைத் தகுதிக்கு ஏற்றவாறு சேர்த்துக்கொள்கிறார்கள். நிரந்தரமாக சேர்க்கப்படாததற்குக் காரணம், அவரவர்களுக்கு என்று ஒதுக்கப்படுகிற சதவிகிதம் மாணவர்கள் பிறகு, அடுத்த ஆண்டு வரலாம் என்ற காரணத்தினால், அவர்களுக்கு நிரந்தரமாக இடம் தரப்படவில்லை. ஆனால், ஒரு ஆண்டில் குறிப்பிட்ட மாணவர்கள் வரவில்லை என்றால், அந்த ஆண்டுக்கு மாத்திரம் தங்கி படிப்பதற்குள்ள மாணவர்கள் வந்தால், அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** பின்தங்கிய வகுப்பினர் மாணவர்களுக்காக ஹாஸ்டல்களில் கொடுக்கக்கூடிய விகிதாசாரத்தை மாற்றி அமைக்கும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உண்டா ? பின்தங்கிய மாணவர்கள், அரிசன மாணவர்கள் எத்தனை பேர்கள் விண்ணப்பித்துக் கொண்டிருந்தாலும், அத்தனை மாணவர்களையும் சேர்த்துக்கொள்ளக்கூடிய முறையில் அரசாங்கம் உத்தரவிடுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பின்தங்கிய வகுப்பினர்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஒரு விகிதாச்சாரம் இருக்கிறது. அந்த விகிதாச்சாரத்திற்கேற்ற வகையில் மாணவர்கள் வரவில்லை என்றால், அந்த இடங்கள் காலியாக



1968 மார்ச் 27]

இருந்தால், அந்த இடங்களில் அரிசன மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அரிசன மாணவர்கள் வரவில்லை என்றால், முன்னிலை வகுப்பினர்களைச் சேர்ந்த மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ஆனால், அவர்களுக்கு நிரந்தரமாக இடம் தரமுடியாது. அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற விகிதாசார இடங்கள் அரிசன மாணவர்கள் ஹாஸ்டலில் 75 சத விகிதம், பின்னிலை வகுப்பு மாணவர்கள் ஹாஸ்டலில் 65 சத விகிதம், அவர்களுக்கு முதலிடம் தரப்படுகிறது. இந்த விகிதாசாரத்தில் தவறு ஏற்படுமேயானால், நாம் எந்த நோக்கத்தோடு இந்த மாணவர்களுக்குச் சலுகை அளித்து முதலிடம் கொடுக்க வேண்டும் என்று கருதினோமோ, அனைவரும் கலந்து ஹாஸ்டல்களில் தங்க வேண்டும் என்ற பெரிய நோக்கத்தோடு அம்மாதிரி ஒரு விகிதாசாரத்தை ஏற்படுத்தினோமோ, அது இடையிலே கெட்டுவிடும் என்ற காரணத்தினால், அவர்களுக்கு நிரந்தரமாக இடம் கொடுக்கப்படவில்லை.

**திரு. ஏ. முனியாண்டி :** தலைவர் அவர்களே, அரசாங்கத்தினால், நடத்தப்படுகிற மாணவர் இல்லங்களில் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை வார்டனாக நியமிக்கிறார்கள். ஆனால் அரிசன சேவாசங்க விடுதிகளில் மட்டும் தகுதியற்றவர்களைப் பொதுவாக 5-வது, 6-வது படித்தவர்களை வார்டனாக நியமிக்கிறார்கள். அந்த நிலைமை மாற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அப்படிப்பட்ட தவறான முறையில் நியமிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கத்திற்குத் தகவல் இருக்கவில்லை. அப்படிப்பட்ட தகவலை அரசாங்கத்திற்குக் கொடுத்தால், அதுபற்றிப் பரிசிலனை செய்து நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அரிசன மாணவர்களுக் கென்று ஒதுக்கப்பட்ட இடங்களில் காலியாக உள்ள இடங்களுக்குப் பின் தங்கிய வகுப்பினர்களை ஓராண்டு காலத்திற்குச் சேர்த்துக் கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். திருமங்கலத்தில் அந்த மாதிரி காலி இடம் இருந்தும், நான் அமைச்சர் அவர்களுக்கு அதைப்பற்றி நேரில் தெரிவித்தும், எழுதியும், சேர்த்துக் கொள்ளப்படவில்லை. காரணம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அரிசன மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற இடங்களில் பின்தங்கிய மாணவர்கள் எத்தனை பேர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்ற எண்ணிக்கை சரியாகத் தரப்படவில்லை. 9 பேர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்பதாக என் நினைவுக்கு வருகிறது. ஆனால், அரிசன மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் காலியாக இருக்கிற இடங்களில் பின்தங்கிய வகுப்பினரைச் சார்ந்த மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்று அனுமதியளிக்கப்பட்டு, அரசாங்கச் சார்பிலே தாக்கீது அனுப்பப்பட்டது. என்ன காரணத்தினால் சேர்க்கப்படவில்லை என்பது தெரியவில்லை. நான் இனி அதைப்பற்றி விசாரணை நடத்துகிறேன்.

[1968 மார்ச் 27

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** அரிசன மாணவர்கள் சேருவதற்கு விண்ணப்பங்கள் இல்லாத இடங்களில் பிற்பட்ட வகுப்பு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்கள். பிற்பட்ட மாணவர்கள் மிகவும் ஏழைகளாக இருக்கிற காரணத்தினால், அரிசன மாணவர்கள் சேருவதற்கு மனு கொடுக்காத கேஸ்களில் பிற்பட்ட மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்கம் ஏன் அனுமதிக்கக் கூடாது என்பதைத் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** நான் அப்படி அனுமதிக்கவில்லை என்று சொல்லவில்லை. அனுமதிப்பதற்கு முறை இருக்கிறது. ஆனால், அந்த மாணவர்கள் எத்தனை ஆண்டுகள் படிக்கக்கூடிய மாணவர்கள் என்பதை அறிந்து, ஒருகால் அவர்கள் தொடர்ந்து 2, 3 ஆண்டுகள் படிக்கக் கூடியவர்களாக இருந்தால், அவர்களை ஹாஸ்டலில் சேர்த்துக் கொண்டு ஓராண்டு மட்டும் தங்குவதற்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டு, பிறகு மற்ற 2, 3 ஆண்டுகளுக்கு வெளியே போகச் சொல்வது முறையல்ல. இந்த முறை நிரந்தரமாக்கப்பட்டால் இன்னின்ன நிலைக்கு இன்னின்ன மக்களுக்கு இவ்வளவு விகிதாசாரம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிற முறை கெட்டுவிடும். எனவே, ஓராண்டு காலம் வரையிலே மட்டும் அந்த இடத்தில் தங்கி படிக்கக்கூடிய பின்னிலை மாணவர்களாக இருந்தால்; அப்பேர்ப்பட்டவர்கள் ஓராண்டுக் காலத்திற்கு மாத்திரம் ஹாஸ்டலில் தங்கி படிப்பதற்கு இடம் தரப்படுகிறது.

**திரு. என். ராஜாங்கம்:** இம்மாதிரி ஹாஸ்டல்களில் ஒவ்வொரு வகுப்பினருக்கும் ஒரு விகிதாசாரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிற்பட்ட மாணவர்கள், அரிசன மாணவர்கள், முற்பட்ட மாணவர்கள் என்று இவர்களுக்கு விகிதசாரம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு ஒரு காலம் இருக்கிறது. பள்ளிக்கூடத்தில் சேருவதற்கு ஒரு காலவரையறை இருப்பது போல, விடுதிகளில் சேருவதற்கும் ஒரு காலவரையறை இருக்கிறது. எந்தச் சமூகத்தினருக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் காலியாக இருக்கின்றனவோ, அந்த இடங்களை வேறு சமூகத்தினரைக் கொண்டு நிரப்ப உடனே கலெக்டர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அரசாங்கம் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளாமல் கலெக்டர்களின் டிஸ்கிரஷனுக்கு விட்டுவிட வேண்டும். ஒரு விடுதியில் அரிசன மாணவர்களுக்கு, பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடங்கள் நிரப்பப்படாமலேயே அப்படியே இருந்து விட்டால், அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் உபயோகப் படுத்தப்படாமல் நஷ்டமாகிறது. ஆகவே, அதுமாதிரி சிக்கல்கள் உள்ள இடங்களை நிரப்புவதற்கு கலெக்டர்கள் உடனே கவனித்து, நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது கேள்வியல்ல.



1968 மார்ச் 27]

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** மாவட்ட நல அதிகாரிகள் இவைகளையெல்லாம் கண்காணித்து வருகிறார்கள். விடுதியில் மாணவர்கள் சேருவதற்கு ஒரு குறிப்பிட்ட காலவரையறைதான் இருக்கிறது. அந்தக் காலவரையறைக்குள் அந்த மாணவர்கள் வந்து சேரவில்லை என்றால், வேறு சமூகத்தவர்கள் சேருவதற்கு முன் வந்தால், அதைக் கண்காணித்து ஆவன செய்யக்கூடிய அளவுக்கு மாவட்ட நல அதிகாரிகள் பொறுப் போடு நடந்து கொள்ளுகிறார்கள். குறிப்பிட்ட ஹாஸ்டலைப்பற்றி ஏதாவது தவறு ஏற்பட்டிருந்தால், அது அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டுவரப்பட்டால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப் படும்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்:** அவைத்தலைவர் அவர்களே, அரிசன ஹாஸ்டல்களிலே அதிகமான அரிசன மாணவர்கள் சேருவதற்கு வருஷா வருஷம் இன்றைக்கு முன்வருகிறார்கள். ஒரு அரிசன ஹாஸ்டலுக்குக் கொடுக்கிற அட்மிஷன் நம்பரைவிட, அதிகமான அரிசன மாணவர்கள் வருஷா வருஷம் சேருவதற்கு முன்வந்தால், அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு இந்த அரசாங்கம் என்ன விதி வைத்திருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அதைப் பற்றித் தனிப்பட்ட விதி என்று ஒன்றும் கிடையாது. எல்லோருக்கும் ஒதுக்கப்படுகிற தொகையைக் குறித்துத்தான் விதிகள் இருக்கின்றன. அந்தந்த கருதிகள், நிலைமைகளை அனுசரித்து, அந்த ஹாஸ்டலில் அதிகமான அரிசன மாணவர்கள் வரக்கூடிய நிலைமை இருந்தால், அடுத்த ஆண்டு அந்த நிலைமையை உத்தேசித்து அதிக நிதியை ஒதுக்கி, மேலும் பல மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வாய்ப்புகள் இருக்கின்றன. அப்படி பல விடுதிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டும் இருக்கிறது. ஆனால், ஜாதி வித்தியாசத்தை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில், இப்படி அரிசனங்கள், பின் தங்கிய வகுப்பினரைச் சேர்ந்தவர்கள், முற்போக்குச் சமூகத்தினரைச் சேர்ந்தவர்கள் இவர்கள் எல்லோருக்கும் இடம் தர வேண்டும் என்று சில விகிதாசாரங்களை ஒதுக்கியிருக்கிறோம். இந்த விகிதாசாரத்தில் இடையிலே குறைவு ஏற்பட்டால் நிறைவு செய்து கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், கூடுமான வரையில் இந்த விகிதாசாரம் குறையக் கூடாது என்ற நோக்கத்தில்தான் இன்றைக்கு இவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவர் அவர்களே, கிராமப்புறங் களில், நகர பஞ்சாயத்துக்களால், கொடவாசல், கொரடாச்சேரி, போன்ற இடங்களில் நடத்தப்படுகின்ற அரிசன ஹாஸ்டல்களில் மொத்த மாணவர்கள் விகிதாசாரத்தை உயர்த்த, அங்கே சில வசதிகள் அதிகமாக இருப்பதால், இந்தப் புதிய ஆண்டில் திட்டம் ஏதாவது அரசாங்கத்திடம் இருக்கிறதா?

[1968 மார்ச் 27

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, சில வேலைகளில் தனிப்பட்டவர்கள்கூட விடுதிகள் நடத்துகிறார்கள். அதிலே நல்ல முன்னேற்றமோ அல்லது மாணவர்களுக்குத் தேவையான வசதிகளோ தரப்படவில்லை என்கிற காரணங்களால் அப்படிப்பட்டவைகளை ஆண்டுக்காண்டு அரசாங்கம் கைப்பற்றிக் கொண்டு இருக்கிறது. அரசாங்கமே பொறுப்பேற்று நடத்தும் விடுதிகளில் மாவட்ட நல அதிகாரிகளும், கலெக்டர்களும் மேற்பார்வை பார்க்கிறார்கள். ஏதாவது குறைபாடுகள் இருக்குமானால், அவற்றை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் பரிசீலனை செய்யலாம்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** தலைவர் அவர்களே, அரிசன மாணவர் விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் புள்ளி கூடுதலாக இருப்பதால், ஊட்டச் சத்துக் குறைவான உணவுகளே பரிமாறப்படுகின்றன. ஆகவே, வாழ்க்கைச் செலவுப் புள்ளி கூடும் அடிப்படையில் கொடுக்கப்படும் தொகையைக் கூடுதலாக்கிக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அதை உத்தேசித்துத்தான், பள்ளி மாணவர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு 18 ரூபாய் என்று இருந்ததை 19 ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. இந்த முறையை பட்ஜட் அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்து, இதற்காக ரூபாய் 3 லட்சம் ஒதுக்கியிருப்பதையும் தெரிவித்தார்கள். நீண்டகாலமாக அத்தகைய அவசியம் இருந்தும் திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகுதான் ஒதுக்கியிருக்கிறது. அதன்மூலம் பூர்த்தியாகிவிட்டது என்று சொல்லிவிட முடியாது. ஆனால், 20 ஆண்டு காலமாக உயர்த்தாமல் இருந்த நிலையை மாற்றிக் குறைந்த அளவில் ஒரு ரூபாய் உயர்த்தியிருக்கிறோம். மேலும் உயர்த்த வேண்டும் என்கிற எண்ணமும் இருக்கிறது.

## மில் தொழிலாளர்களுக்கு அகவிலைப்படி

* 344 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மில் தொழிலாளர்களின் பஞ்சப்படியைக் குறைப்பதாக சர்க்காருக்குத் தகவல் உண்டா ?

(இ) ஆம் என்றால், சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.



1968 மார்ச் 27]

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், என் கேள்வி வரும் போதெல்லாம் ஒரே ஒரு உதவிக் கேள்விக்குத்தான் அனுமதிக்கிறீர்கள். தயவு செய்து இந்த மாதிரிக் கேள்வி நேரத்திலே, மூலக் கேள்வி போட்டவர்களுக்கு அதிகமாக உதவிக் கேள்விகள் போட அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோதண்டராமனுக்குத்தான் அதிகமாக வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. டி. மார்டின்:** அவர்கள் கேள்விகள்தான் அதிகமாக வந்திருக்கின்றன. நாங்கள் கொடுத்ததெல்லாம் இன்னும் வரவில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், நடைமுறையிலே தொழிலாளிகள் பழி வாங்கப்படுவது, இந்தப் பஞ்சப்படியைக் குறைப்பதாலேயே. அது சம்பந்தமாக அமைச்சரிடமும், அதிகாரிகளிடமும், கன்சிலியேஷன் நடைபெறக்கூடிய காலங்களில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பஞ்சப்படியைக் குறைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்களே, அது சம்பந்தமாக இன்றைக்கு அமைச்சரவர்களுடைய கருத்து என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அமைச்சருக்குத் தனிப்பட்ட கருத்து எதுவும் கிடையாது. பஞ்சப்படியைக் குறைக்க வேண்டும் என்று பொதுவாக இங்கே சொல்லப்படவில்லை. குறிப்பாக, மந்தம் ஏற்பட்டிருப்பதால், அங்கே உள்ள தொழிலாளிகள், முதலாளிகள், ஒவ்வொருவரும் விட்டுக் கொடுத்து தொடர்ந்து நடத்த வேண்டியதுபற்றி ஆலோசனைகள் கூறப்படுகின்றன. அதிலே இதுவும் ஒன்று.

**திரு. எம். சுரேந்திரன்:** பஞ்சப்படிப் புள்ளி விவரங்கள் தயாரிப்பதிலேயே தகராறு இருக்கிறது என்று புகார் செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். இன்றைய வாழ்க்கைப் புள்ளி உயர்ந்து கொண்டே போகும் நிலையில், சராசரி பஞ்சப்படியை உயர்த்த வேண்டும் என்பதை அரசாங்கம் புரிந்து கொண்டு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** வாழ்க்கைப் புள்ளி உயர, அதன் விளைவாக விலைவாசி ஏற்றம், அதன் விளைவாக தொழிலாளர்களுக்குப் பஞ்சப்படி உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை வருகிறது. அது நியாயமான கோரிக்கை இல்லை என்று சொல்ல முடியாது. அதே சமயத்தில், விலைவாசிகள் ஏறிக் கொண்டே இருக்க, வாழ்க்கைப் புள்ளி உயர்ந்து கொண்டே போக, ஒவ்வொரு தொழிற்சாலையையும் நடத்துகிறவர்களுக்கு, கொடுக்க, 'கபாஸிடி டு பே' இருக்க வேண்டும் என்றும் வாதாடப்படுகிறது. அப்படி இரண்டு வாதங்களும் இருக்கின்றன.

**திரு. கே. என். குமாரசாமி:** பஞ்சப்படியைக் குறைக்க வேண்டும் என்பதைப்பற்றி ஆலை முதலாளிகள், ஏற்கனவே தொழில் சங்கங்களைக் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் கேட்கும் முறை தவறானது என்று அரசாங்கத்திடம் தொழிற்சங்கத் தலைவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதன்பேரில் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தப் பிரச்சினை 1966-லிருந்து, தென்னிந்திய மில் சொந்தக்காரர்கள் சார்பில் சொல்லப்பட்டு வருகிறது. தொழிலாளர்கள் சார்பில், விலைவாசிகள் இருக்கும் நிலையில், பஞ்சப்படி குறைக்கப்பட்டால் வாழ்க்கை பாதிக்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மில் ஓனர்கள் சார்பில் தொழிலில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது, பொருள்கள் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று வாதம் செய்யப்படுகிறது. அதைப்பற்றி இரண்டு தரப்பினரும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி முடிவு காண வேண்டும்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, பொதுவாக கடந்த 10 ஆண்டுக் காலமாகவே, விலைவாசிப் புள்ளி உயர்ந்து கொண்டே போய், சராசரி லாப விகிதமும் ஒரே மாதிரி இருக்க வில்லை. ஆகவே, பஞ்சப்படி அதிகமாக அளிக்க வேண்டும் என்ற வாதத்தையும் சமீபத்திலே மத்திய அமைச்சர் திரு. மொரார்ஜி நிராகரித்திருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? பேச்சு நடத்த அடிப்படை வேற்றுமை அதுதான் என்று ஏற்றுக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கேள்வியிலேயே பதில் இருக்கிறது. வாழ்க்கைப் புள்ளி உயர்வால் சராசரி லாபம் அப்படியே இருக்கவில்லை. அதுதான் அதற்குப் பதில்.

*Erskine Hospital at Madurai*

* 345 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR. Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the attention of the Government has been drawn to the criticism in the Municipal Council, Madurai, about the administration of the Erskine Hospital; and

(*b*) the action taken thereon?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) கேள்வியின் இந்த உட் பிரிவில் கூறப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அது அரசின் பார்வைக்கு வரும்பொழுது ஓர் ஊராட்சி மன்றம் அவ்வாறு குற்றம் சாட்டுவது ஒழுங்குதானா என்பது பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: உதவித் தலைவர் அவர்களே, எர்ஸ்கின் ஆஸ்பத்திரி மதுரை மக்களுக்கு மிகவும் அவசியமானது என்பதால், அந்த ஆஸ்பத்திரிக் குறைகளை மதுரை முனிசிபாலிடியார் அரசாங்கத்திற்குத் தெரிவித்திருப்பதை சபைக்கு வைக்க முன் வருவார்களா? மதுரை ஆஸ்பத்திரிக் குறைகளை உடனடியாகத் தீர்ப்பதன் மூலமாக, தமிழ் நாட்டில் எல்லா ஆஸ்பத்திரிகளின் குறைகளையும் தீர்க்கப்பட்டதாக இருக்கும். ஆகவே, அந்தக் குறைபாடுகளைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?





மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல, மதுரை நகராட்சி மன்றம் அரசாங்கத்தின் கவனத்திற்கு எந்த விதமான குற்றச்சாட்டுகளையும் கொண்டுவர வில்லை. கனம் உறுப்பினர் குற்றச்சாட்டுகள் ஏதாவது இருந்து, அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

**உயர்நிலைக் குழுவின் அறிக்கை**

* 322 வினா.—திரு. கரு. சீமைச்சாமி:
திரு. கே. விநாயகம்:
திரு. வி. கே. கோதண்டராமன்:
திரு. ஆ. கு. சுப்பையா.
திரு. க. இராமமூர்த்தி:
திரு. என். சங்கரய்யா:
திரு. எ. சிதம்பரநாத நாடார்:
திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்:
திரு. சி. கோவிந்தராசன்:
} மாண்புமிகு

முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்கம் ஏற்படுத்தி இருக்கும் உயர்மட்ட கமிட்டி (High Power Committee) அளித்திருக்கும் பரிந்துரைகளின் விபரங்கள் யாவை?

(இ) அவற்றுள், எத்தனை பரிந்துரைகள் இதுவரை செயலாக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: (அ) & (இ) இது பற்றி சபைமுன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி: தலைவர் அவர்களே, சிக்கன-நிர்வாகச் சீரமைப்பு உயர்நிலைக் குழு குறிப்பிட்ட 13 பரிந்துரைகளைச் சொல்லியிருக்கிறது. அவைகளில் எதை எதை அரசாங்கம் ஏற்று நடத்தியிருக்கிறது? இதனால் நிர்வாகச் செலவு எவ்வளவு மிச்சமாகியிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: விரிவான அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்ற பரிந்துரைகளில் எவை எவைகளைச் செயல்முறைக்குக் கொண்டுவர முடியுமோ, அவைகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு ஈடுபட்டிருக்கிறதென்பதையும், இனியும் ஈடுபடும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Thiru K. VINAYAKAM: Sir, since the subjects considered by the High Power Committee are so important and the remedies suggested by them are also very revoluntionary in character and since the Government have partially accepted those recommendations for execution, will the Chair be pleased to allot half-hour for discussion on this matter?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி கேளுங்கள்.

---

[a] 333-360-ம் பக்கங்களில் I, I-அ இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளது.

[1968 மார்ச் 27

THIRU K. VINAYAKAM : Sir, in response to the suggestion of the Hon. Deputy Speaker, I will put a question. May I know what is the experience of this Government after adopting the recommendations of the High Power Committee and what is the useful purpose those recommendations have served so far?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, the hon. Member cannot expect the Government of one year's standing to have any rich experience. We are getting experience.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, விவர அறிக்கையாக ஒரு புத்தகம் தரப்பட்டிருக்கிறது. இதைக் கொஞ்சம் ஒரு நாள் முன்னதாகக் கொடுத்தால் படித்துப் பார்த்து கேள்விகள் கேட்க நலமாக இருக்கும். இந்தப் புத்தகத்தின் 22-வது பக்கத்தில், இக் குழு இதுவரையில் செய்துள்ள பரிவுரைகளினால் 9 இடங்களிலும் சேர்த்து மிச்சமாகும் என எதிர்பார்க்கப்படும் தொகை ரூபாய் 1 கோடியே 5 லட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை இந்த அரசு ஏற்றுக் கொண்டு விட்டார்களா? இது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டதா? அப்படி நடைமுறைக்குக் கொண்டுவராவிட்டால் காரணம் என்ன? ஏன் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை என்பதைக் குறித்து இந்த அறிக்கையில் ஏன் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு முறை ஒரு கேள்விதான் போடலாம். நீங்கள் ஒரு முறையில் எத்தனை கேள்விகள் போடுவது?

திரு. வி. கே. கோதண்டராமன்: நீங்கள் ஒரு முறைதானே சந்தர்ப்பம் அளிக்கிறீர்கள். குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டால் 1 கோடியே 5 லட்சம் ரூபாய் மீதமாகும் அல்லவா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: தலைவர் அவர்களே, நண்பர் 22-வது பக்கத்தைப்பற்றிச் சொல்வதற்கு முன்னால், 21-வது பக்கத்தைப் பார்த்திருந்தால் விவரம் தெரியும். 21-வது பக்கத்தில், "குழுவின் மேற்சொன்ன பரிவுரையை ஏற்றுக் கொண்டு அரசாங்கம் 1966, மார்ச் மாதம் 1-ம் தேதி முதற் கொண்டு இவ் வேலைத் திட்டத்தை விட்டுவிடுமாறு ஆணையிட்டுள்ளது. இதனால் அரசாங்கத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு 35 ஆயிரம் ரூபாய் மிச்சமாகும்" என்று சொல்லியிருக்கிறது. சில பரிவுரைகளை அமல்படுத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டியினுடைய ரிப்போர்ட் புரட்சிகரமான மாற்றங்களைச் சுட்டிக் காட்டி, சிறப்பு செய்திருக்கிற காரணத்தால், தொடங்கிவிட்ட சிபாரிசுகள் நீங்கலாக, மற்ற சிபாரிசுகளை அமல்படுத்துவதற்கு முன்பாக இந்த அரசு எல்லாக் கட்சித் தலைவர்களையும் கலந்து ஆலோசித்து முடிவு எடுக்குமா?



1968 மார்ச் 27]

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அது எனக்கு மிகவும் விருப்பமான காரியம். அதுபற்றி நான் ஆலோசிக்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, இந்தச் சிபாரிசுகளை நிறைவேற்றுவதன் காரணமாக சாதாரண அரசாங்க ஊழியர்களுக்கு, வேலையிலிருந்து எடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டால், அந்த ஊழியர்களுக்கு மாற்று வேலைகள் கொடுக்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பொதுவாகவே, நிரந்தரமான முறையில் வேலையில் இருப்பவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டால், வேறு வேலைக்கு மாற்றப்படுவதும், வேலையிலே நீடித்து இருக்கும்படியான நிலைமையை உண்டாக்கித் தருவதும் தான் சர்க்காரின் கொள்கையாக இருந்து வருகிறது.

திரு. க. கோமதிசங்கர திட்சிதர் : தலைவர் அவர்களே, இந்த 'ஹை பவர் கமிட்டி' செய்துள்ள சிபாரிசுகளில் முக்கியமானவைகளை உடனடியாக அமல் செய்தால் இந்த ஆட்சி முறை நல்ல முறையில் சீர்திருந்தும் என்ற காரணத்தால், இதை நன்கு கவனித்து உடனடியாக அமல் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இது நான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருப்பதாக அறிவித்தேன். மேலும் பல உறுப்பினர்கள் இதே முறையில் கேள்வி கேட்காமல் இருப்பதற்காக, அறிக்கையைப் படித்துக் காட்டுகிறேன். 1965-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் சிக்கன—நிர்வாகச் சீரமைப்பு உயர்நிலைக் குழு ஒன்றை அரசு நிறுவியது. இக் குழு 1966 மார்ச் திங்களில் தனது தொடக்க அறிக்கையைப் பணிந்தனுப்பியது. இந்த அறிக்கை 1966 மார்ச் 29-ம் நாளன்று சட்ட மன்றத்தில் வைக்கப்பட்டது. தகுந்த பல தொடர்புடைய கருத்துரைகள் கிடைத்து இருக்கின்றன. அதை ஆராய்வதில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

## மதுரை மாவட்டத்தில் அரசு ஊழியர்கள் குறைப்பு

* 323 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசாங்கத்தின் ஆள் குறைப்பு சிக்கன நடவடிக்கையின் காரணமாக எத்தனை அரசாங்க ஊழியர்கள், மதுரை மாவட்டத்தில் மட்டும் வேலை இழந்திருக்கின்றார்கள்?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : எழுபத்தொன்று.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, இந்த வேலை இழப்பு செய்யப்பட்டவர்கள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள்? எத்தனை ஆண்டுகளாக வேலை பார்த்தவர்கள்? திரும்ப அவர்களை எப்போது வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படும்? அரசாங்கத்திற்கு இதனால் எவ்வளவு பணம் மிச்சமாகும்?

[1968 மார்ச் 27

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** தலைவர் அவர்களே, வேலை இழப்பு ஏற்பட்டவர்கள் 71 பேருடைய விவரம் பின்வருமாறு:—

| | |
|---|---|
| போலீஸ் கான்ஸ்டேபிள்கள் | 4 |
| கடைநிலை ஊழியர்கள் | 7 |
| வாட்ச்மேன்கள் | 2 |
| எழுத்தர்கள் | 50 |
| செகண்டரி கிரேடு அசிஸ்டெண்ட்ஸ் | 2 |
| என்ஜினியரிங் சூப்பர்வைசர்கள் | 5 |
| அசிஸ்டெண்ட் கமர்சியல் டாக்ஸ் அதிகாரி | 1 |
| மொத்தம் . . | 71 |

இவர்களிலே 50 எழுத்தர்களில் 49 பேர் ரிஜிஸ்ட்ரேஷன் டிபார்ட்மெண்டில் இருந்தவர்கள். அவர்கள் அந்த டிபார்ட்மெண்டில் வேலை இழந்தார்களே தவிர, அவர்கள் பிறகு ரெவின்யூ டிபார்ட்மெண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். ஆனால், அந்தத் துறையில் தற்காலிகமாக வேலையில் வைக்கப்பட்டவர்கள் இதன் காரணமாக வேலையிழந்திருப்பார்கள். இவர்கள் எல்லாம் எத்தனை வருடம் வேலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

THIRU K. VINAYAKAM: Sir, may I know whether this measure of economy which resulted in the retrenchment of many people was effected after this party came into power and if so, has the Hon. Chief Minister got in his possession information about the number of retrenched persons in other districts and also the total number of persons retrenched after this party came into power?

THE HON. THIRU C. N. ANNADURAI. Sir, that needs a separate question to gather all the information but in a general way I may answer it. The hon. Member has asked, whether this thing was done after the party came into power. No party can do it without coming into power.

THIRU K. VINAYAKAM: Sir, arising out of the answer given by the Hon. Chief Minister, I want a categorical answer to my question. Was this axe laid on these persons by this Government or by the previous Government?

THE HON. THIRU C. N. ANNADURAI: The particular instance referred to was done by this Government but retrenchment and reorganisation is a general and continuous process. If what my hon. Friend infers is that this Government have retrenched so many people, we have got a list of instances to prove that the previous Government also had indulged in retrenchment.



1968 மார்ச் 27]

*Disciplinary action for corruption charges*

* 324 Q.—THIRU S. RAMACHANDRAN : THIRU K. CHEEMAICHAMY : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of Government officers and servants against whom disciplinary action was taken for corruption charges during the period 1965–66; and

(b) the details thereof, district-war?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) 1965-66-ஆம் ஆண்டில் லஞ்சம் வாங்கியதாகக் குற்றம்சாட்டப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட அரசாங்க அதிகாரிகள் அரசாங்கப் பணியாளர்கள் ஆகியோரின் எண்ணிக்கை பின் வருமாறு :—

| ஆண்டு. | அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகள். | அரசிதழ் பதிவுபெறாத அலுவலர். | மொத்தம். |
|---|---|---|---|
| 1965 | 4 | 20 | 24 |
| 1966 | 9 | 25 | 34 |

150 ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளம் பெறுபவர்கள் பற்றிய விவரங்களே மேலே கொடுக்கப்பட்டுள்ளன. திங்களொன்றுக்கு 150 ரூபாய்க்கும் குறைவாகச் சம்பளம் வாங்குவோர் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிப்பதில் ஏற்படும் காலச் செலவையும் உழைப்பையும் கருதும்போது அவற்றால் கிட்டும் பொது நலன் ஏற்ற அளவாக இல்லை.

(இ) மாவட்ட வாரியான விவரங்கள் அவையின் முன் வைக்கப்பட்டுள்ளன.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, லஞ்ச ஊழல் குற்றங்களில் அதிகாரிகள் குறைவாகவும், ஊழியர்கள் அதிகமாகவும் இருக்கிறார்கள். லஞ்சம் வாங்குவதற்கு அதிகாரிகளே ஊழியர்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள், மாட்டிக் கொள்கிறபோதும் ஊழியர்களே மாட்டிக் கொள்கிறார்கள் என்கிற கருத்து பரவலாக இருக்கிறது. ஆகவே லஞ்ச ஊழல் புலனாய்வு விசாரணை செய்கிறபோது விரிவான முறையில் செய்வதற்கு இந்த அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன். முற்பகல் 10–30

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் இதில் ஊழியர்களே அதிகமாக இருக்கிறார்களே, அதிகாரிகள் இல்லையே என்று குறிப்பிட்டார்கள். அதிகாரிகள் அதிகமான எண்ணிக்கையில் இருக்க வேண்டும், அவர்களை எப்படியாவது பிடிக்க வேண்டும் என்பது சரியான கருத்து அல்ல. நடைமுறையில் அவரவர்கள் செய்கிற குற்றங்களுக்குப் புலனாய்வு செய்யப்பட்டு மெய்ப்பிக்கின்ற நிலையில் அவர்கள் பேரில்

* 361-368-ம் பக்கங்களில் II-ம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1968 மார்ச் 27

(மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை)

நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மெய்ப்பிக்கின்ற நிலையில் நடவடிக்கை எடுத்துக் கொள்கிறபோது ஊழியர்கள், அதிகாரிகள் என்று பாகுபாடு செய்வது பொருத்தமில்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** சமீபத்தில் உயர் நீதி மன்றத்தில் ஒரு லஞ்சக் குற்ற வழக்கில் போலீசார்கள் வேண்டு மென்றே வழக்குப் போட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டு அந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகாவது இனி இதுபோன்று நடவடிக்கை எடுப்பதில் கவனத்தோடு அதிகாரிகள் இருக்க வேண்டு மென்று உத்தரவிடுவார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இது விஷயத்தில் அரசு நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு கவனத்தோடு இருக்க வேண்டும் என்பதுகூட இல்லை. எப்போதும் கவனத்தோடு இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறது.

**திரு. மு. ச. சிவசாமி :** போலீஸ் அதிகாரிகள் மீது லஞ்ச ஊழல் புகார் செய்தால் விஜிலன்ஸ் அதிகாரிகள் காலதாமதம் செய்து கவனம் செலுத்தாமல் இருக்கிறார்கள். இதைப் போக்க அரசு உடன் கவனம் செலுத்துமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதுபோன்ற குற்றச்சாட்டுக்கு எங்களிடம் ஆதாரம் இல்லை. ஆயினும் விஜிலன்ஸ் அதிகாரிகள் லஞ்ச ஊழல் குற்றங்களை விசாரிப்பதில் நீண்ட நாள் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை உணர்ந்து விரைவு படுத்த வேண்டும் என்பதைப்பற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. விரைவாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற காரணத்தினால் தவறான முடிவுகள் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதிலும் அரசுக்குக் கவனம் இருக்கிறது.

**திரு. சா. மெய்யப்பன் :** லஞ்ச ஊழல் புகார்களில் 5 ரூபாய், 50 ரூபாய் என்று இப்படிக் குறைவாக வாங்கப்பட்டவர்கள்தான் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள், இதற்கு அதிகமாக லஞ்சம் வாங்கு கிறவர்களே இல்லை என்று அர்த்தமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இதற்கு உடனடியாக ஏதாவது பதில் சொல்ல வேண்டுமானால் எப்போதும் அதிகமான அளவுக்குத் தவறு செய்கிறவர்கள் அதைக் கண்டுபிடிப்பதற்கான தடயங்களை அழித்துவிடக்கூடிய ஆற்றல் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லலாம். ஆனாலும் குறைவாக வாங்கினார்களா, அதிகமாக வாங்கினார்களா என்பது அல்ல பிரச்சினை. எத்தனை பேருடைய குற்றங்கள் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, மெய்ப்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதுதான் பிரச்சினை.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** லஞ்சக் குற்றத்திற்காக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள் 1965-இல் 4 கெஜெடெட் ஆபீசர்கள், 1966-இல் 9 கெஜடெட் ஆபீசர்கள் என்று பதில் சொன்னார்கள். அவர்கள் எந்த எந்த இலாக்காக்களைச் சேர்ந்தவர்கள் என்று அறிய விரும்புகிறேன்.



1968 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதற்கான விவரம் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துச் சொல்லப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** லஞ்ச ஊழல் குற்றம் சாட்டப்பட்டு, மெய்ப்பிக்கப்பட்டவர்களின் மீது—டிஸ்மிஸ் செய்யப்படுதலோ அல்லது வேறு ஏதாவது கடும் தண்டனை அளிக்கப்படுதலோ அன்றி கட்டாய ஓய்வு என்ற முறையில் அவர்களை விட்டுவிடுவது சரியா? அந்த முறை நீடிக்கப்படலாமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதுபற்றி அரசு இதுவரை யோசிக்கவில்லை. கனம் உறுப்பினர் சொல்வது சரிதானா என்பது இனித்தான் யோசிக்கப்படும்.

**திரு. டி. மார்டின் :** லஞ்சக் குற்றங்களை போலீசார்கள் ‘டிகாய்’ Witness முறை வைத்துப் பிடிக்கிறார்கள். இது சரியல்ல. வாங்காதவர்கள்கூட இவர்கள் ‘டிகாய்’ முறையில் கொடுக்க முயற்சிக்கிறபோது சபலத்தில் ஏமாந்து மாட்டிக் கொள்கிறார்கள். இனிமேல் இந்த முறையைக் கையாளாமல் இருப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மாண்புமிகு உறுப்பினர் டிராப் முறையைப்பற்றிச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். முறைப்படி குற்றத்தை நிரூபிப்பதற்கான தடையங்களைத்தான் புலனாய்கிறார்கள். அதுவும் போதாது, குற்றத்தை நிரூபிப்பதற்குத் தக்க ஆதாரம் வேண்டும் என்கிறபோது இந்த முறையையும் கையாள்கிறார்கள். இது வேண்டுமென்றே பிடிக்கப்பட்டது என்று வாதாடச் சந்தர்ப்பம் இருக்கிறது. நீதி மன்றத்திற்குப் போகவும் சந்தர்ப்பம் இருக்கிறது.

**உள்ளாட்சித் துறை அமைச்சர் தேவகோட்டைக்கு வருகை**

* 325 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 16—10—1967-ல் தேவகோட்டைக்கு விஜயம் செய்தபோது மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கு கருப்புக் கொடி காட்டப்பட்டதா ?

(இ) எந்தக் கட்சியினர் கருப்புக் கொடி காட்டினர் ?

(உ) அதற்கான காரணங்கள் யாவை ?

(எ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) முதல் (எ) வரை—16—10—1967-ல் உள்ளாட்சித் துறை அமைச்சர் தேவகோட்டை சென்றிருந்தபோது, மற்றொரு கட்சியைச் சேர்ந்த தனிநபர் வீட்டில் பகல் உணவுக்கு ஏற்பாடாயிற்று. இந்த ஏற்பாடு, தலத்திலுள்ள சில தி.மு.க. உறுப்பினர்களுக்குப் பிடிக்கவில்லை. அமைச்சர் உணவுக்காக அந்தத் தனிநபர்

(மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை)

வீட்டிற்குச் சென்ற சமயம், ஓர் உறுப்பினர் கருப்புக் கொடி காட்டினார். அமைச்சர் சமாதானம் கூறிய பிறகு, அந்த உறுப்பினர்கள் அமைச்சருக்குக் கருப்புக் கொடி காட்டுவதை மேற்கொள்ளவில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்த உறுப்பினர்கள் அமைச்சர் அவர்கள் சமாதானம் சொல்லியும் போகவில்லை. அமைச்சர் ரெவின்யூ அதிகாரிகளை விட்டு சமாதானப்படுத்தச் சொன்ன போதே அவர்கள் சென்றார்கள் என்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எதனால் சமாதானம் அடைந்து சென்றார்கள் என்பது தெரியாது. அமைச்சர் அவர்கள் தானே நேரில் சமாதானம் சொன்னதான காரணத்தைக் கேட்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

அமைச்சர்களுக்கான நடைமுறை விதிகள் தொகுப்பு

* 326 வினா.—திரு. ஆ. கு. சுப்பையா : } மாண்புமிகு முதல்
திரு. சோ. அழகர்சாமி : }
அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லஞ்ச ஒழிப்புக் கமிட்டி (சந்தானம் கமிட்டி) செய்துள்ள சிபார்சுகளின் அடிப்படையில், அமைச்சர்கள் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுங்கு முறை விதிகள் தயாரிக்கும் நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது ?

(இ) அதன் விபரங்கள் யாவை ?

(உ) எப்போது முதற் கொண்டு அமலுக்கு வரும்?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) மத்திய அமைச்சர்களுக்கு வகுக்கப்பட்டுள்ள நடத்தை விதித் தொகுப்பைப் போன்று நமது மாநில அரசும், அமைச்சர்கள் நடத்தை விதித் தொகுப்பு ஒன்றை வகுத்துள்ளது.

(இ) இந்த விதித் தொகுப்பு 27—7—1965-ல் சட்டசபை முன்பும், 30—7—1965-ல் சட்டமன்றத்தின் முன்பும் வைக்கப் பட்டது. 11—8—1965-ம் தேதியுள்ள தமிழக அரசிதழிலும் இவ் விதித் தொகுப்பு வெளியிடப்பட்டது. இதன் நகல் ஒன்று @ சபை முன் வைக்கப்பட்டுள்ளது.

(உ) அமைச்சர்கள் நடத்தை விதித் தொகுப்பு 10—5—1965 முதல் செயலுக்கு வந்தது.

**திரு. கே. விநாயகம் :** அமைச்சர்கள் நடத்தை விதித் தொகுப்பு —கோட் ஆப் காண்டெக்ட் ஃபார் மினிஸ்டர்ஸ்—நேற்று காலையில் மேசைமீது வைக்கப்பட்டது. நேற்று அதைப் படிக்கிற சூழ்நிலை இல்லை. அதில் அமைச்சர்கள் எந்த எந்த முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்று வகுக்கப்பட்டிருக்கிறதோ அதுபோல நடந்து கொள்கிறார்களா என்று கேட்கிறேன்.

* 369-371-ம் பக்கங்களில் III-ம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இதற்கு முன்னாலே நான் ஒரு பதில் அளித்திருக்கிறேன். 1965-இல் இருந்து இது நடைமுறையில் இருந்து வருகிறது. இதுபற்றி இப்போது மத்திய அரசுடன் கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது என்று ஏற்கனவே நான் சொன்னேன். ஊழல் குற்றச்சாட்டுகள் அமைச்சர்கள் மீது வந்தால் அவர்கள் தங்கள் தங்கள் சொத்து விவரங்களைத் தனித்தனியாகத் தரவேண்டும், ஒவ்வோர் ஆண்டும் தரப்பட வேண்டும், முதல் அமைச்சரைப் பற்றிய விசாரணையை மத்திய அரசோ, மத்திய பிரதம அமைச்சரோ விசாரிக்க வேண்டும் என்பது சரியா என்பதுபற்றி எல்லாம் கடிதப்போக்கு வரத்து நடந்து கொண்டிருக்கிறது.

**திரு. கே. விநாயகம் :** இந்த கோட் ஆப் காண்டெக்ட் ஃபார் மினிஸ்டர்ஸ் என்பதிலே மந்திரிகள் வெளியூர்களுக்குப் போகிற போது தங்களுக்குத் தெரிந்தவர்கள், கட்சிப் பிரமுகர்கள் வீட்டுக்குப் போகக் கூடாது. அதனால் கட்சி நலனுக்காக தனிப் பட்டவர்களின் நலனுக்காக காரியம் செய்வது போன்ற தவறான கருத்து ஏற்பட்டுவிடும் என்ற அளவிலாவது தம் சகா அமைச்சர் களுக்குத் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கூடுமான வரையில் பொது நிகழ்ச்சிகளில் அமைச்சர்கள் கலந்து கொள்ளச் செல்கிற போது கட்சிப் பிரமுகர்கள் இல்லங்களுக்குச் செல்லாமல் இருப்பது நல்லது. கனம் உறுப்பினர் அமைச்சர்களானவுடனே சிறிய காலத்திற்குத்தான் விருந்து அழைப்புக்கள் இருக்கும். பிறகு இருக்காது. ஆனாலும் ஒரு கட்சிப் பிரமுகர் பஞ்சாயத்து யூனியன் தலைவராகவோ, பள்ளிக்கூட கட்டட நிதிக் குழுத் தலைவ ராகவோ இருந்து, அவருடைய விழாவுக்குச் சென்றுவிட்டு அவரது இல்லத்தில் நடைபெறுகிற விருந்துக்கு, "நான் வர மாட்டேன், விநாயகம் கோபப்படுவார்" என்று சொல்லி வருவது சரியாக இருக்காது என்று கருதுகிறேன்.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்த அமைச்சர்கள் மீது இருந்த குற்றச்சாட்டு—கட்சித் தொண்டர்கள் அழைத்தால் வருவது இல்லை, முதலாளிகள் அழைத்தால்தான் வருவது என்ற குற்றச்சாட்டு இருந்தது. அந்தக் குற்றச்சாட்டு நம்முடைய அரசுக்கு ஏற்படாமல் இருக்க கழகத் தொண்டர்கள் விருந்துக்கு அழைத்தால் வருவதிலே தவறு என்ன இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** முன்னாலே இருந்த அமைச்சர்கள் மேலே என்ன குற்றச்சாட்டு இருந்தது என்பது எனக்குத் தெரியாது. அப்படிப் பரவலாகப் பேசிக் கொண்டிருக் கிறார்கள். அப்படிக் கருதிக்கொண்டிருக்கிறார்கள். முற்பகுதியைப் பற்றி என்னிடம் தகவல்கள் இல்லாததாலே பிற்பகுதிக்குப் பதில் அளிப்பது அவ்வளவு தக்கதல்ல என்றாலும் அவர்கள் முதலாளிகள் அழைத்தால் செல்கிறார்களா என்பதற்கு இடம் இல்லை. அவர்கள்

இப்பொழுது கேள்வி கேட்ட விஷயம்தான் என்னிடம் அறிவிக்கப் பட்டிருக்கிறதே தவிர என்னிடத்திலே அதற்கான சான்றுகள் இல்லை.

DR. H. V. HANDE: Sir, whereas Caesar's wife must be above suspicion and whereas the Hon. Chief Minister has stated day before yesterday that the State Government were not prepared for the Central surveillance on this matter, will this Government give us a categorical assurance whether they are going to insist on the annual declaration of assets of not only Hon. Ministers and hon. Members but also their wives or husbands as the case may be and their close relatives also?

THE HON. THIRU C. N. ANNADURAI: Sir, I have already stated that we are thinking on that line and these assets will be declared and given to the Chief Minister and we will conform to the details thereof.

திரு. ஆலடி அருணா: தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்தில் குடியரசுத் தலைவர், மாநில ஆளுநர், வெளிநாட்டுத் தூதுவர்கள் இவர்களுக்கு மட்டுமே தனிச் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. மன்றத்திலே உள்ள கோட் ஆப் கான்டெக்ட்டில் பிரதம அமைச்சர் பற்றியும், துணைப் பிரதமர் அமைச்சர் பற்றியும், சபாநாயகர் பற்றியும் குற்றம் செய்தால் அதைப்பற்றி என்ன என்று குறிப்பிடவில்லை. ஆகவே அதைத் திருத்தக்கூடிய வகையில் மத்திய அரசுக்கு இந்த அரசு ஆலோசனை சொல்ல முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இப்பொழுது நாம் விவாதித்துக் கொண்டிருப்பது இந்த மாநிலத்திலே உள்ள அரசைப் பற்றியதும் அதிலே உள்ள அமைச்சர்களைப் பற்றியதும்.

திரு. கரு. சீமைச்சாமி: தலைவர் அவர்களே, அமைச்சர்களுக்கான நடைமுறை விதிகள் என்பதிலே The Mi. ister should not accept valuable gifts என்று இருக்கிறது. சென்ற அமைச்சரவையில் அமைச்சர்களாக இருந்தவர்கள் விலையுயர்ந்த பரிசுகளை எத்தனை பெற்றிருக்கிறார்கள் என்ற விவரம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: பொதுவாக வேல்யுபிள் கிப்ட்ஸ் என்று இருக்கிறது. இதைப்பற்றிக்கூட மத்திய அரசிலிருந்து விளக்கங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. 300 ரூபாய்க்குக் குறைவாக—தொகை சரியாக நினைவில் இல்லை, சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்—உள்ளதை வைத்துக் கொள்ளலாம். 300 ரூபாய்க்கு மேற்பட்டதாக பரிசுப் பொருள்கள் இருந்தால் அவற்றை அரசிடம் கொடுத்துவிட வேண்டும். அந்தப் பொருள்களை அவர்களே வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினால் அந்தப் பொருள்களின் விலை 300 ரூபாய்க்கு மேற்படுமானால் 300 ரூபாய்க்கும் பொருள்களின் விலைக்கும் இடையேயுள்ள



[திரு. சி. என். அண்ணாதுரை]

தொகையைக் கொடுத்துவிட்டு அந்தப் பரிசுப் பொருள்களை வைத்துக் கொள்ளலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் அமைச்சர்களுக்கு வருகின்ற பரிசுப் பொருள்களாக இருப்பது சில மணி நேரம் வரை மணம் அளிக்கும் மாலைகள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

THIRU K. VINAYAKAM: Sir. I wanted a discussion on the paper placed on the table of the House. Sir, is the Hon. Minister aware of the fact that the ex-Prime Minister of India, the late Thiru Jawaharlal Nehru when he was alive, had laid down a code that whatever gift he had received when he was Prime Minister should be sent back to the Treasury and emulating her father's example, the Lady who is now the Prime Minister, also sent the necklace she received from the King of a foreign country to the treasury but since there was a delay of about three months in sending the necklace a series of interpellations were put on the floor of the Parliament? So, will the Hon Ministers of our State also, whenever they receive gifts in kind—apart from the scented rose garlands and handloom cloth—like 'Kedayam' sword and 'Kreedam', they should send them to the Treasury or exchequer of our State?

THE HON. THIRU C. N. ANNADURAI: There is no need to issue special instructions. Through my reply here Ministers can get instructions. Any gift that they receive and which is of the value of more than Rs. 300 should be given to the treasury and they have been orally instructed also.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்விகள் முடிவுற்றன என்று கூறியதற்குப் பிறகு திரு. விநாயகம் அவர்கள் எழுந்து அரைமணி விவாதத்திற்கு நிற்கிறேன் என்று சொல்லிவிட்டுக் கேள்வியைக் கேட்டிருப்பது முறையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, the hon. Member, Thiru Vinayakam, has asked a question which has absolutely no connection with the State Government. In view of the fact that the Prime Minister wants to have surveillance over the Hon. Chief Minister's assets, has the Hon. Chief Minister also asked the Prime Minister, what she has done about the 'Mini' coat given to her?

THE HON. THIRU C. N. ANNADURAI: The hon. Member gave an illustration, I think, based on the information that he has got.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு.

### (i) திருச்சி மாவட்டத்தில் கடன் வசூலைத் தள்ளி வைத்தல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து 41-வது விதியின்கீழ் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு திரு. நாராயணன் அவர்கள் ஒரு அவசரமும், பொது முக்கியமும் வாய்ந்த காரியத்தைக் கொண்டு வருவார்.

**திரு. இரா. நாராயணன் :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ் அவசரமும் பொது முக்கியமும் வாய்ந்த காரியத்தை வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"திருச்சி மாவட்டம், அரியலூர், வேப்பூர், பெரம்பலூர், ஆலத்தியூர், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம்; செந்துறை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் விவசாயிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையில் மோட்டார் பம்புசெட் வாங்கி மின்சார இணைப்புக் கிடைக்காததால் பயன்படுத்த இயலாமல் வைத்துள்ளதாலும், அந்தக் கடன் தொகையை அதிகாரிகள் தற்போது வசூலிப்பதால் அவர்கள் அவதியுறுவதாலும் கடன் வசூலை ஓராண்டுக் காலம் தள்ளிப் போட வேண்டியதன் அவசியம்".

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (1) கடன் வாங்கியவரது கணக்கில் விசை யேற்றங்கள் வழங்கியது குறித்துக் கடைசியாகப் பற்றெழுதப்படுகிற தேதியிலிருந்து பன்னிரண்டு திங்கள்களுக்குக் குறையாமலும் பதினெட்டுத் திங்கள்களுக்கு மேற்படாமலும் உள்ள கால அளவின் போது கடனின் முதல் தவணையைத் திருப்பிச் செலுத்துவதற்கு மின்சார மோட்டார் விசையேற்றங்களை வழங்கல் குறித்த விதிகளின் 8-வது விதி வகை செய்கிறது. தற்போது செயலில் உள்ள ஆணைகளின்படி, மின்சார விசை யேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்குவதில் மாநில மின்சார வாரியம் தாமதம் செய்வதெனக் கடனை வழங்கும் அதிகாரி மனநிறைவடையும் நேர்வுகளில், முதல் தவணையைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலத்தை 12 திங்கள்கள் வரையில் மேற்கொண்டும் நீட்டிக்கலாம்.

(2) அரியலூர் கோட்டத்தில் உள்ள பெரும்பாலான பகுதிகள் விருத்தாசலம் மின்சார ஏற்பாட்டின் கீழ் உள்ளன. இந்த ஏற்பாட்டின் கீழ் உள்ள இடங்களில் விசை யேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படாத நேர்வுகளில் முதல் தவணைத் தொகையை வசூலிக்க வேண்டாம் என்று வருவாய்க் கோட்ட அதிகாரிகளுக்கும், தாசில்தார்களுக்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டக் கலெக்டர் இப்போது கட்டளைகள் பிறப்பித்துள்ளார்.



### (ii) பட்டுக்கோட்டைத் தாலுக்காவில் விவசாயிகளுக்கு வரிவஜா, கடன் ஒத்திவைப்பு போன்ற உதவிகள் செய்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திரு. எம். சுரேந்திரன் அவர்கள்ஒரு அவசரமும், பொது முக்கியமும் வாய்ந்த காரியத்தைக் கொண்டு வருவார்.

**திரு. எம். சுரேந்திரன் :** ஐயா, பட்டுக்கோட்டை தாலூகா கடைமடை பகுதிகளான தாமரங்கோட்டை, அத்திவெட்டி, பிச்சனக்காடு, கிருஷ்ணபுரம், கல்யாண ஓடை, தம்பிக்கோட்டை; மறவக்காடு, பரக்கலக் கோட்டை, மஞ்சவயல், செங்கப்படுத்தான் காடு, இராசியக் காடு, சுந்தரநாயகிபுரம், நரசிங்கபுரம், கருங்குளம், கரிசங்காடு, அதிராம்பட்டினம், இராசமடம்; ஏரிபுறகரை, மகிழங்கோட்டை, நொக்காவிக்காடு, சேண்டாகோட்டை, பள்ளிகொண்டான், முதல்சேரி, புதுக்கோட்டை, பழஞ்சூர், மழவேணிர்காடு, துவரங்குறிச்சி, அணைக்காடு, பொன்னவராயக் கோட்டை, மன்னங்காடு, சாசங்காடு ஆகிய கிராம விவசாயிகளுக்கு ஜனவரியிலிருந்து பாசனத்துக்குத் தண்ணீர் கிடைக்காததால் அவர்களின் விவசாயம் கெட்டுப் பெருங் கஷ்டங்களுக்குள்ளாகியிருக்கிறார்கள். இவர்களுக்கு வரிவஜா, கடன் ஒத்திவைப்புப் போன்ற உதவிகள் செய்வது குறித்து அவசரமும் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த பட்டுக்கோட்டை வட்டத்தில் உள்ள சில கிராமங்களுக்குப் போதிய பாசன நீர் கிடைக்காததாலும் அதன் காரணமாக விளைச்சல் தவறியதாலும் அக் கிராமங்களில் உள்ள உழவர்களுக்கு நேரிட்டுள்ள துன்பத்தைப் போக்கும் வகையில் நிலவரியைத் தள்ளுபடி செய்தல், கடன் வசூலை ஒத்தி வைத்தல் போன்ற உதவிகளை அளிக்க வேண்டும் என்று நாட்ட ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நிலவரியைத் தள்ளுபடி செய்தல்.**—மேட்டூர் அணையில் நீர்த் தேக்கம் குறைந்த அளவில் இருந்த காரணத்தினால், தாளடிப் பயிர்களுக்கு, முக்கியமான கடைமடைப் பகுதிகளில் இருந்த தாளடிப் பயிர்களுக்குப் போதிய நீர் வழங்கப்படவில்லை. ஆகவே சில பகுதிகளில் பயிர்கள் விளையாமல் சாவியாகி விட்டன. இருந்த போதிலும் எல்லா இடங்களிலுமே பயிர்கள் சாவியாகிவிடவில்லை. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று ஆய்வு செய்யவும், அவசியமானால் இப்போது பணியாற்றி வரும் சிறப்புப் பணியாளர்கள் அனைவரையும் இக் காரியத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டு பயிர்களை அறுவடை செய்யுமுன் பயிர் மதிப்பீடு செய்யுமாறும் மறு பயிர் மதிப்பீடு செய்து முடிக்குமாறும் கலெக்டர் தன்னுடைய சார்நிலை அதிகாரிகளுக்கு ஏற்கெனவே கட்டளைகள் அனுப்பியுள்ளார்கள். தகுதியுடையோர் அனைவருக்கும் விரைவில் வரித் தள்ளுபடி வழங்கும்படி கோட்ட அதிகாரிகளுக்கும் கட்டளை அனுப்பப்பட்டுள்ளது. பட்டுக்கோட்டை வட்டத்தில் ஏறத்தாழ 30,000 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்ட தாளடிப் பயிரில் இதுவரை 15,000 ஏக்கர் பரப்பில் மட்டுமே

அறுவடையாகியுள்ளது. பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு விதிகளின்படி விரைவில் வரித் தள்ளுபடி வழங்கும் பொருட்டு எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கடன் வசூலை ஒத்திவைத்தல்.**—ஒரு சில பகுதிகளில் மட்டுமே தாளடிப் பயிர் சாவியாகிவிட்டன. ஏனைய பகுதிகளில் போதிய தண்ணீர் கிடைக்காத காரணத்தினால் விளைச்சல் குறைந்துள்ளது. தவிர, பாசனத்திற்குப் போதிய அளவில் தண்ணீர் கிடைக்காததால் சில பகுதிகளில் இரண்டாம் போகம் பயிர் மட்டுமே பாதிக்கப்பட்டது. அவ்விடங்களில் முதல் போகம் நன்றாகவே விளைந்து அறுவடை செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், போதிய நீர் கிடைக்காத காரணத்தினால் பெருமளவில் அல்லது எல்லா இடங்களிலுமே பரவலாகப் பயிர் சாவியாகிவிட்டது என்று சொல்வதற்கு இயலாது. ஆகவே, கடன் தவணைகள் வசூல் முழுவதையும் ஒத்திவைக்க வேண்டிய நியாயமில்லை என்றாலும், குறிப்பாக இடர்ப்பாட்டிற்குட்பட்டவர்கள் குறித்து தகுதி அடிப்படையில் ஆலோசனை செய்து பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 3. 1967-68-ம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதிக் கோரிக்கைமீது பொது விவாதம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றும் ஒரு மணிக்கு வாக்கெடுப்பு நடைபெற வேண்டியிருப்பதால் முதலில் பேசுகிற உறுப்பினர் பத்து நிமிடங்களும், மற்ற உறுப்பினர்கள் ஐந்து நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொள்ள வேண்டாம்.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, போலீஸ் மானியத்திற்கு அறிவிக்கை கொடுக்கப்பட்டிருக்கும் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தையொட்டி என் பேச்சைத் துவங்க விரும்புகிறேன். என் வெட்டுத் தீர்மானம் என்னவென்றால்—

" To discuss the failure of the Police to quell the outbreak of violence promptly when it broke out in the city of Madras on and from 25th March 1968, I move " that the allotment of Rs. 31,43,900 under Demand No. 12—Police be reduced by Re. 1 ".

இந்த மன்றத்தில் இந்த உரையைத் துவங்குகிறபோது நேற்றும், நேற்றைய முன்தினமும் நடைபெற்ற துக்ககரமான நிகழ்ச்சிகளும் அதன் விளைவுகளும், இங்கு இந்த அவையில் நம் முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவையினருக்கும், மாநில மக்களுக்கும் விடுத்த அறிக்கை, இவை அத்தனையையும் மனதில் கொண்டு மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு பேச விழைகிறேன். அதே நேரத்தில் இந்த நிகழ்ச்சிகளைப் பொறுத்த வரையில் ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். 25-ம் தேதி மாலையில் நகரத்தில் ஏதோ சிறு சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அந்த நிகழ்ச்சிகள் ஆரம்பித்த உடனே தக்க முறையில் அவைகள் தீர்க்கப்பட்டிருக்குமானால் அல்லது தகுந்த முறையில் போலீஸ் தலையிட்டு, ஆட்சியினர் தலையிட்டு அதைத் தீர்த்திருப்பார்களானால்,



அல்லது சட்டம்—ஒழுங்குமுறை சாதாரணமாக நடைபெற வேண்டிய முறையில் நடைபெற்றிருக்குமானால் அந்தச் சம்பவங்கள் சாதாரணச் சம்பவங்களாக முடிந்து போயிருக்கும். ஆனால் அதைத் தீர்க்காத வகையில் அந்தச் சம்பவங்கள் வளர்ந்து பரவலாகி, விரிவடைந்து மிகப் பயங்கரமான விளைவுகளை இந்த மாநில தலை நகரில் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நாம் மறந்து விட முடியாது. ஒன்றை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த காலத்தில் எங்கள் கட்சியைச் சார்ந்த தலைவர்கள் பலர் பலவிடங்களில் பேசி வந்தோம். எங்களைக் குற்றவாளிகளாக இந்த அவையில் நிறுத்திக்கூடச் சொன்னார்கள். நீங்கள் பேசுகிற நேரத்தில் எல்லாம் போலீஸின் கரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்று பேசுகிறீர்களே, இது என்ன நியாயம், இது முறையா என்று சொன்னார்கள். நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது நேற்றையதினம் போலீஸார் இருந்தார்களா என்று சந்தேகிக்க வேண்டிய நிலை இருந்தது. யாருக்கு வலு இருக்கிறதோ அவர்கள் வைத்ததுதான் சட்டம் என்ற நிலை நம் தலைநகரில் இருந்ததை நாம் மறந்துவிட முடியாது. எங்கள் தலைவர் திரு. காமராஜ் அவர்கள் இந்த மாநிலம் முழுமையும் பற்றிச் சொல்லும்போது சட்டம் ஒழுங்காகப் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கான முறையில் எதையும் செய்யுங்கள், நாங்கள் உற்ற துணையாக இருக்கிறோம் என்று வலியுறுத்திச் சொல்லி வந்தார்கள். சமீபத்தில் கூட ஒரு நிகழ்ச்சியைப்பற்றிச் சொன்னார்கள். புதுக்கோட்டை அருகில் தனிப்பட்டவர் ஒருவர் ஒரு போலீஸ் அதிகாரியை செருப்பால் அடித்து அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதுபற்றிய விவரங்களை முதல் அமைச்சர் அவர்களிடம் தந்தார்கள். அதன் பிறகு எங்களுக்குக் கிடைத்திருக்கும் தகவல்கள், யார் குற்றம் செய்தார்களோ அவர் மீது சரியான முறையில் தகுந்த முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதாகும். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஓரளவு நாம் பொறுத்துக் கொள்கிற நிலையில், அதிகாரிகள் உடனடியாக ரீ ஆக்ட் செய்யாத நிலையில் அதிகாரிகளின் கரங்கள், கட்டுண்டிருக்கிறது என்பதற்காகத் தான் இதைச்சொல்லும்போது தலைவர் காமராஜ் பதவி போனதால், மாங்கல்யம் இழந்துவிட்டதால் இப்படியெல்லாம் பேசுகிறார்கள் என்று கூறுவதும், எங்கள் சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது அவர்கள் தான் கொதிப்படைந்திருக்கிறார்களே, நீங்கள் ஏன் அதைச் சொல்கிறீர்கள் என்று சொல்கிற நிலையும், எங்கள் தலைவர் சம்பத் அவர்களும், கவிஞர் கண்ணதாசன் அவர்களும் பேசும்போது இவர்கள் புதுக் காங்கிரஸ்காரர்கள் . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். துணை மானியக் கோரிக்கையின்மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் எதுபற்றி கூறப்பட்டிருக்கிறதோ அதுபற்றித்தான் விவாதம் நடைபெற வேண்டும். வேண்டுமானால் சிறிது கூடுதலாகப் போகலாம். ஆனால் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்ற கட்சித் தலைவரவர்களும் நம் முதல்

[திரு. கே. ஏ. மதியழகன்] [1968 மார்ச் 27

அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சென்னை நகரில் ஏற்பட்டிருக்கிற சில நிலைமைகளில்—இது அரசியலுக்கு அப்பாற்பட்டது, இது ஒரு சமுதாயப் பிரச்சினை—நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்பும்போது இப்படிப் பட்ட விவாதத்தை இந்த மன்றத்தில் அனுமதிக்கலாமா? விதி முறைகளின்படி இது சரியா? எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் சம்மதத்தைப் பெற்றுத்தான் பேசுகிறாரா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுவாக எந்தெந்தத் துறைக்கு மானியம் கேட்கப்பட்டிருக்கிறதோ அது பற்றி மட்டும்தான் பேச வேண்டும். இங்கு போலீஸ் என்ற 12-வது நிதிக் கோரிக்கையின் கீழ் போலீஸ், ஸிட்டி எக்ஸிக்யூட்டிவ் ஃபோர்ஸ் என்றிருப்பதால் அதுபற்றிப் பேசுவது முறைதான்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சப்பிளிமெண்டரி
மூற் பகல் 11-00 கிராண்ட்மீது பேசும்பொழுது ஒரு வரம்பிற்கு உட்பட்டு நிற்க வேண்டும். அவ்வாறு ஒரு வரம்பிற்கு உட்பட்டு பேச வேண்டுமே தவிர சட்டம், அமைதியைப் பற்றிப் பேசுவது என்பது அல்ல. அதையும் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அமைச்சரவர்கள், எதிர்க் கட்சித் தலைவரின் உடன்பாட்டின்மீது பேசினரா என்று கேட்டார்கள். அவர்கள் பேசும்பொழுது எந்தவிதமான உணர்ச்சியையும் தூண்டி விடாத முறையிலே பொதுவாகத்தான் பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன். நீதி விசாரணை என்று போட்டுவிட்டார்கள். அதன் பிறகு அமைச்சரவர்கள் சில கருத்துக்களைச் சொல்லியிருக் கிறார்கள். ஆகவே, பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கும் இருக்கிறது. சில அமைச்சர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருப்பதால் காங்கிரசின் நிலை என்ன, எங்கள் கருத்துக்கள் என்ன என்பதையும் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கும் இருக்கிறது. வன்முறைகளைத் தூண்டி விட வேண்டா மென்ற நிலைதான் இருக்கிறது.

Mr. DEPUTY SPEAKER : If an Appropriation Bill is in pursuance of a supplementary grant in respect of an existing service, the discussions shall be confined to the items constituting the same and no discussion shall be raised on the original grant nor the policy underlying it save in so far as it may be necessary to explain or illustrate a particular item under discussion.

ஆகவே பொதுவான விவாதத்தை மானியக் கோரிக்கையின் போது எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மேலும் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றிப் பலதரப்பட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் அமைதியான நிலையை உருவாக்க வேண்டுமென்று கூறியிருக் கிறார்கள். எனவே, இதை விரிவுபடுத்திப் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்ளு ன்றேன்.



1968 மார்ச் 27]

திரு. க. இராமமூர்த்தி : என்னுடைய வெட்டுத்தீர்மானத்தின் நோக்கமே இந்தப் பிரச்சினையை எந்த அளவுக்குப் பேசலாம் என்பதைத் தெளிவுபடுத்துவதாக இருக்கிறது. அதைவிட்டு வேறு விவாதத்தில் இறங்க விரும்பவில்லை. அமைதியைப் பொறுத்தவரையில் இந்த அவையிலே நல்லமுறையில் முடிவெடுக் கப்பட வேண்டுமென்று இந்த அரசுக்கும், முதலமைச்சரவர் களுக்கும் எங்கள் கட்சியினர் பூரண ஒத்துழைப்பு கொடுத்திருக் கிறோம். அவ்வாறு எங்கள் கட்சி ஒத்துக்கொண்டதையே எங்கள் கட்சியின் பலவீனமாகக் காட்ட சில பத்திரிகைகள் திருப்பப் பட்டிருக்கிறது என்பதையும், இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மீண்டும், மீண்டும் அதைப்பற்றியே பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்ளு கின்றேன்.

திரு. க. இராமமூர்த்தி : வன்முறை நிகழ்ச்சிகளைப்பற்றி ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். முதலமைச்சரவர்களின் அறிக் கையில், 25-ம் தேதி நடந்த நிகழ்ச்சிகள் குறித்து ஒரு நீதி விசாரணை நடத்தப்போவதாக அறிவித்திருந்தார்கள்.

The Hon. Thiru K. A. MATHIALAGAN : Is it order?

திரு. க. இராமமூர்த்தி : நான் சொல்வதெல்லாம் ஒரு நிகழ்ச்சியை மட்டும் நீதிவிசாரணைக்கு அனுப்பக்கூடாது. யார் தவறு செய்திருந்தாலும் . . .

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : உதவி சபாநாயக ரவர்களே, விதிமுறையைப் படித்துக் காட்டினீர்கள். அனுமதி யிருந்தால் தாராளமாக அனுமதிக்க உங்களுக்கு அதிகார முள்ளது. அதைப்பற்றிச் சொல்லவில்லை. உபமானியக் கோரிக்கை யின் போது இப்படிப்பட்ட பொதுவான விவாதத்தை எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். அதன்படி இருக்கிறதா என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : துணை மானியக் கோரிக்கையின்போது எதையெதைப்பற்றிப் பேசலாம் என்று தலைவரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். உறுப்பினரும் அதை உணர்ந்து பேசுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதோடு தொடர்புபடுத்திக்கொண்டு வேறு பல பிரச்சினைகளைப் பேசு கிறார்கள். அந்தப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசும்பொழுது அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம், நாம் மேற் கொண்டிருக்கும் அமைதியை நிலைநாட்ட வேண்டுமென்ற நோக்கத்திற்கு ஏற்ப அமைய வேண்டும். ஒரு கட்சியின்மீது இன்னொரு கட்சி குற்றம்சாட்டிப் பேச வேண்டுமென்று கருதினால் அதற்கு நிரம்ப நாட்கள் கிடைக்கும். ஆனால் இப்பொழுதிருக்கும் சூழ்நிலையில் அவைகள் தேவையில்லை என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவரவர்களே, இந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய 'Termes of reference' இன்னும் கொஞ்சம் விரிவாகவும், விளக்கமாகவும் இருந்தால் நல்லது. அமைதியை நிலை நாட்டுவதற்கு உறுதுணையாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மீண்டும் மீண்டும் இதைப்பற்றிப் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். ஒருமுறை தீர்ப்பு கொடுத்தபிறகு அதேமுறையில் செல்வது உறுப்பினருக்கு முறையாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மேலும், பொறுப்போடு உறுப்பினரவர்கள் சொன்னதற்குப் பாராட்டைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மீண்டும் இதைப்பற்றிப் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** அந்தப் பாராட்டை ஏற்றுக் கொள்ளுகிறேன். அதேநேரத்தில், ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தோம், விவாதத்திலே பேசலாம் என்பதற்காக அது நிராகரிக்கப்பட்டது. அதேநேரத்தில் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் முறையில் என்னுடைய பேச்சுக்கள் ஏதாவது இருந்தால் அவற்றை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்ல வரவில்லை. அதுவரையிலும் எப்படிச் செய்ய வேண்டுமென்று சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விதிமுறைகளில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதன்படியே இருக்க வேண்டும். பொதுவான விவாதம் இருக்கக்கூடாது.

**திரு. க. இராமமூர்த்தி:** என்னுடைய வெட்டுத்தீர்மானமே. . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அமைதியை நிலைநாட்டுவதை யொட்டித்தான் பேசுவார்கள் என்பதில் நம்பிக்கை உண்டு. ஏன் இதைப்பற்றிப் பேச வேண்டாமென்று கேட்கிறேன் என்றால், அவர் அதைப் பேசுவது விவாதத்தைக் கிளப்பிவிடும். வேறு பலர் அதற்குப் பதிலளிக்க வேண்டுமென்ற முறையில் பேசுவார்கள். அவர்கள் எதிர்பார்க்கின்ற நிலைக்கு மாறாகவே இந்தப் பிரச்சினையே விவாதத்திற்கு வந்துவிடும். அதற்காகத்தான் கட்டுப்படுத்திக்கொண்டு இந்த விவரங்களைப் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேனே தவிர, இந்த அவையிலேயே விவாதிக்கப்படக் கூடாத விஷயம் என்று சொல்லவில்லை.

நீதி விசாரணைபற்றிக் குறிப்பிட்டார்கள். அவர் கருத்து சொன்னால் பதிலளிக்கக்கூடிய முறையில் மற்ற உறுப்பினர்கள் "இல்லை, இல்லை, இது இது இப்படி இப்படித்தான் இருக்க வேண்டும்" என்று சொல்வார்கள். அதனால் இப்பொழுது எடுத்திருக்கும் துணை மதிப்பீடுகள் பின்னணிக்குப் போய்விடும்.



தலைவரவர்கள் படித்துக்காட்டிய விதிமுறைகளின்படி, தலைப்புகளின் அடிப்படையில் பேசத்தான் விவாதங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, மற்ற விவரங்களை எடுத்துப் பேசுவதால் அது எல்லோரும் பேசும் பேச்சாக அமைந்து விடும். ஒருவர் ஆரம்பித்தால் எல்லோருமே அதையே பேசிக்கொண்டிருப்பார்கள். இந்த அவையின் விவாதத்தைத் தொடங்கி வைக்கிறோம் என்ற முறையில், ஆங்கிலத்தில் சொல்வார்கள், 'We should set the tone to the debate' அந்த முறையிலே துணைமதிப்பீடுகளைப் பேச வேண்டுமென்று விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சிகள் ஏதோ ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை மட்டும் விசாரணை செய்யும் நிகழ்ச்சியாக அமைந்துவிடாமல், இதனோடு தொடர்புடைய எல்லா நிகழ்ச்சிகளும் ஒரு நிகழ்ச்சியாக இருக்க வேண்டுமென்பதை நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்திலே துணை மானியத்தைப் பொறுத்தவரையில் இன்னொன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன், அதைச் சொல்ல வேண்டிய தவிர்க்க முடியாத நிலை இருக்கிறது. சர்க்காருக்குச் சொந்தமான அரசாங்க பேருந்து வண்டிகள் அரசாங்கத் துறையினரின் அனுமதியின்றி வெளியே நடமாடியிருக்கின்றன. நேற்று, நேற்று முன்தினம் நடைபெற்றிருக்கிறது. அது எப்படி ஏற்பட்டது, ஏன் ஏற்பட்டது? அதனைத் தடுத்து நிறுத்த முடியாத நிலைமையிலா நாம் இருக்கிறோம்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவரவர்களே, "அப்ஸ்ட்ரக்ட்" ஆகக்கூடிய முறையில், விவாதத்தில் இல்லாத விஷயத்தையே திரும்பத்திரும்பச் சொல்லி, இந்த மன்றத்தின் நேரத்தை வீணாக்கிக்கொண்டிருப்பது ஒழுங்குப் பிரச்சினை ஆகும். இந்த மன்றத்தின் நடவடிக்கைகளைத் தவறான முறையிலே தடைப்படுத்த வேண்டுமென்பதற்காக திரும்பத் திரும்பத் அதையே சொல்லிக்கொண்டிருப்பதுபற்றி தாங்கள் தீர்ப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவாதத்தில் இல்லாத ஒன்றை எடுத்துக்கொண்டு அதையே திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பதால் இந்த மன்றத்தின் விலை மதிக்க முடியாத நேரம் போய்விடுகிறது. அதற்குத் தாங்கள் தீர்ப்பளிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். விதிகளைப் படித்துக் காட்டியிருக்கிறேன். தொடர்ந்து அப்படியே பேசுவது முறையாகாது. அப்படிப் பேசுவதற்கு இடமேற்பட்டால் அனுமதி மறுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்த மானியத்திற்குத் தேவையானதை மட்டும் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே நான் வேண்டுமென்றே இந்தச் சபையினுடைய நடவடிக்கைகளைத் தடுக்கவேண்டுமென்று

[திரு. க. இராமமூர்த்தி] [1968 மார்ச் 27

அவ்வாறு பேசுவதாகக் குற்றம் சாட்டினார். இது நியாயமா? இப்படிப்பட்ட குற்றச்சாட்டு செய்யலாமா? இதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அந்த குற்றச்சாட்டை சபையினுடைய நடவடிக்கையிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : ஒரு உறுப்பினர் பல முறை திரும்பத் திரும்ப சபாநாயகர் அவர்கள் இப்படி நடக்கக்கூடாது என்று கூறியும், அதே முறையிலே நடந்துகொள்கிறார் என்று சொன்னால், இந்த மன்றத்திலே இருக்கிற எந்த உறுப்பினருக்கும் அதைச் சுட்டிக்காட்டுவதற்கு உரிமை இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி** : சுட்டிக்காட்டுவது என்பது வேறு; குற்றம் சாட்டுவது என்பது வேறு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : எதைச் சொல்வதற்கு நீங்கள் எழுந்தீர்கள்? பேசுவதற்கு உரிமை இருக்கிறது என்று எழுந்தீர்களா? உரிமைப் பிரச்சினைக்காக எழுந்தீர்களா?

**திரு. க. இராமமூர்த்தி** : இரண்டுக்காகவும் எழுந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அதுபற்றி என்னைக் கேட்டு விட்டுத்தான் நீங்கள் எழவேண்டும்.

THIRU K. VINAYAKAM : He is on his legs. As soon as the Hon. Deputy Speaker sits, he resumes his speech.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : நீங்கள் எதைச் சொல்லிவிட்டு எழுந்தீர்கள்? அதைச் சொல்லுங்கள்.

THIRU K. VINAYAKAM : On a point of order. The Deputy Speaker said 'எதற்காக எழுந்தீர்கள்' The Member is on his legs. He wants to resume his speech. If you want a great disturbance here, you are simply purchasing it.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இந்த உறுப்பினர் பேசுவதற்கு உரிமை உடையவர், பேசுவதற்காக எழுந்திருக்கிறார் என்பதை நானே ஏற்றுக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக் கையைப்பற்றிப் பேசாமல், அமைச்சர் அவர்கள் கூறினார், அதிலே உரிமைப் பிரச்சினை இருக்கிறது, ஒழுங்குப் பிரச்சினை இருக்கிறது என்ற முறையிலே பேசுவது முறையல்ல என்பதுதான் நான் கூறுவது. இப்பொழுது அவர் பேசுவது மானியக் கோரிக்கை யைப்பற்றி அல்ல என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடு) எழுந்த வுடனே அவர் பேசியது மானியக் கோரிக்கையைப்பற்றி அல்ல; எழுந்தவுடனே அவர் ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புகிறார். அந்த முறை ஒழுங்கானதுதானா என்று கேட்கிறேன்.



1968 மார்ச் 27]

THIRU J. JAMES : The hon. Member said that he was permitted to speak on the point raised in his adjournment motion during the debate. On that ground he is talking. I want to get a ruling from the Chair whether he is not in order in view of the fact that he was permitted to speak on this.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அந்த விதி இருந்தாலும் நம்முடைய சட்டமன்ற விதிகளை ஒட்டித்தான் பேச வேண்டும். சட்டமன்ற விதிகள், 'துணை மானியக் கோரிக்கையின் மீது எதெதற்கு மானியம் கேட்கப்பட்டிருக்கிறதோ அதைப் பற்றித்தான் பேச வேண்டும்' என்று இருக்கிறது. ஆகவே, அதைப்பற்றி இங்கே பேசுவதுதான் முறை. அதைத் தவிர வேறு எதையும் பேசக் கூடாது; பேசுவது முறையாக இருக்காது.

THIRU J. JAMES : On a point of order. The Member has been given written permission to speak on this subject. On the basis of that permission he is talking. When he is speaking on the basis of the written permission granted by the Chair, is he not in order?

THE HON. THIRU C. N. ANNADURAI : Whatever may be the permission given by the Speaker on this subject, I have issued a general appeal to this House and to outside through an all-party appeal that we should try to co-operate with one another in maintaining not only order but also the climate. By talking here extensively about that problem we will be vitiating this climate. That is my appeal. That is why I appeal to the Members not to talk about it. I am not concerned with his right to speak or otherwise. I am more concerned with maintaining the rights of Members. But when we are all interested in maintaining a healthy climate now, it is not good—I do not say it is wrong—it is not good to talk about it.

THIRU K. VINAYAKAM : While appreciating the views expressed by the Chief Minister we are all one with him—the procedure, as I observed, looked as if the Deputy Speaker as well as the House were trying to *stifle* a single Member from expressing his views. That is the objection we are having. If you appeal to him and then allow him to speak and if he continues to speak in the same strain, that is different. It looks as if we are trying to baulk the Member from expressing his views.

THE HON. THIRU C. N. ANNADURAI : There is no attempt at all to stifle the hon. Member Mr. Ramamoorthy or any other Member. We are n r capable of it nor are you so weak as to succumb to stifling. I am perfectly aware of it. It is only to maintain a healthy climate that I want all Members, not only Mr. Ramamoorthy, to avoid discussion about this thing.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : இப்பொழுது உதவி மானியக் கோரிக்கையின்மீது எது எது பேசுவது, எது எது பேசவேண்டாமென்று குறிப்பிட்டார்கள். ஆனால் அதிலேயே போலீஸ்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1968 மார்ச் 27.

எண்ணும்படியான டிமாண்டும் இருக்கிறது. இதை விவாதிப்
பதற்குக் காரணத்தைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.
எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லோரும் சேர்ந்து இன்று நாட்டிலே
இருக்கும்படியான நிலையைச் சீர்படுத்துவதற்கு முதலமைச்சர்
அவர்கள் கொடுத்தவேண்டுகோளை ஏற்றுக்கொண்டதாக நாங்கள்
சொன்னோம். அதைப்பற்றி ஒன்றும் இப்பொழுது சொல்லவில்லை.
முதலமைச்சர் அவர்கள் அறிக்கை தந்ததற்குப் பிறகு, நீதி
விசாரணை என்று சொன்னதற்குப் பிறகு, சில அமைச்சர்கள்
பேசும்படியான பேச்சுக்கள் வந்திருக்கின்றன. எங்கள் கட்சி
யைச் சேர்ந்தவர்கள்கூட இது மாதிரி தப்பபிப்பிராயம் வேண்டா
மென்றுதான் சொல்கிறார்கள். சட்டம், ஒழுங்கு, அமைதி
பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் வெட்டுத்
தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். நான்கூட ஒரு ஒத்திவைப்புத்
தீர்மானம் கொடுத்தேன். ஆகையால் ஒரு விஷயத்தை நான்
சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த சட்டம், அமைதி,
பாதுகாப்பு நிச்சயமாக இருக்க வேண்டும். இதிலே நாம் உணர்ச்
சியைச் செலுத்துவோமேயானால், சில விவரங்களைச் சொல்லுவத
னாலே சட்டம், அமைதி பாதுகாக்கப்படாமல், காக்கப்படாமல்
இருக்குமானால் எந்தக் கட்சியாக இருந்தாலும் அதைப்பற்றி
சொல்லக் கூடாது. எந்தக் கட்சியாக இருந்தாலும் சட்டம்,
அமைதி ஒழுங்கின் மேல்தான் இருக்கமுடியுமே தவிர, அதை
விட்டுவிட்டு எந்தக் கட்சியும் ஆளமுடியாது. நடந்த காரியங்களை
யெல்லாம் தொடர்ந்து அமைச்சர் பேசும்படியான சந்தர்ப்பத்
திலே 'நாங்கள் மாணவர்கள் பக்கம் இல்லையென்று நீங்கள்
சொல்லுகிறீர்களே' என்று சொன்னார்கள்—நினைக்கிறார்கள்.
மாணவர்களை இன்றைக்கு சுடு என்றெல்லாம் பேசி வந்திருப்பத
னாலே சில விவரமான கருத்துக்களை அவர்கள் சொல்லவேண்டிய
நிலை ஏற்பட்டிருக்கிறது. நோக்கம் அதுதான்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்
சார், நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்
கிறேன். அதையொட்டி நான் பேசிக்கொண்டிருக்கிறேன். சில
நிலைமைகளை விரிவாகவோ, அல்லது கூடுமானவரை விவரங்
களையோபற்றிப் பேச வேண்டாமென்று முதலமைச்சர் அவர்கள்
சொன்னார்கள். அவர்களுடைய உணர்வுக்கு நான் மதிப்பளிக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் என்னுடைய வெட்டுத் தீர்மா
னத்தை வலியுறுத்தி நான் பேசுகின்றபொழுது, கொள்கைக்குப்
புறம்பாக, நடக்கின்ற நிகழ்ச்சிகளுக்குப் புறம்பாகப் பேசு
கின்றேன், வேண்டுமென்றே பேசுகின்றேன் என்று குற்றம்
சாட்டினார். ஆகையால், அமைச்சர் அவர்கள் அளித்த அந்தக்
குற்றச் சாட்டை நாங்கள் சபை நடவடிக்கைகளிலிருந்து நீக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**ஓர் உறுப்பினர் :** பாயிண்ட் ஆப் ஆர்டர் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் ஏற்கனவே
சொல்லியிருக்கிறேன். சபாநாயகர் அவர்கள் சொல்லியபிறகும்
உறுப்பினர் அவர்கள் நடந்து கொள்ளுகின்ற முறை சரியானதல்ல.



1968 மார்ச் 27] [பேரவைத் துணைத் தலைவர்]

விதி முறைகளை எடுத்துக்காட்டியபிறகும், அதற்கு மாறாகவே
நடந்துகொள்வது முறை அல்ல என்று சுட்டிக்காட்டிய பிறகும்,
அந்த முறையிலேயே தொடர்ந்து செல்வதானால், அது இந்தச்
சபையினுடைய நிகழ்ச்சிகளைத் தடைசெய்வதற்காகத்தான்
கருதப்படும். அதை இந்த மன்றத்திலே இருக்கிற எந்த உறுப்
பினரும் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறார். அவர்
களுக்கு உரிமை இருக்கிறது. இதே முறையில் நடந்துகொண்
டிருந்தால் அதைத் தடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதை
வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள் இந்த மானியத்தில் போலீஸ் இருக்கிறது என்று
சொன்னார்கள். The additional appropriation is required to meet
the expendi ture on City Compensatory Allowance. என்று
சொல்லியிருக்கிறது. அந்தப் பொருள்பற்றி மட்டும்தான் பேச
வேண்டுமே தவிர, போலீசைப்பற்றி எல்லாவற்றையும் பேசுவது
முறையாகாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.
ஆகவே அந்த மானியக்கோரிக்கையைப்பற்றி மாத்திரம் நீங்கள்
பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வதை
யொட்டிப் பேச வேண்டுமென்றால் நான் மறுபடியும் பேச முடியும்.
சம்பளம் பெறுகின்றார்கள், ஆனால் அவர்கள் வேலை செய்யவில்லை
என்று நான் பேச முடியும். ஆனால், இந்தச் சபையினுடைய
உணர்வுகளுக்கு நான் மதிப்பளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் நிதிக்
கோரிக்கைமீது பேசப் போகிறீர்களா? அல்லது தொடர்ந்து
இதே மாதிரி நீங்கள் 'பர்ஸ்யூ' பண்ணப்போகிறீர்களா என்று
தெரியவேண்டும், நீங்கள் அப்படியே தொடர்ந்து போவீர்கள்
என்றால், நான், பேசாதிருக்கின்ற நிலைமையை உண்டாக்க முடியும்
என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சபைத் தலைவர்
அவர்களே, சபையினுடைய நடவடிக்கைகளிலே எந்த எந்தப்
பொருள்பற்றி எந்த எந்த வகையில் பேசவேண்டுமென்றெல்லாம்
விதிமுறைகள் இருக்கின்றன. ஆகவே, ஜெனரல் டிஸ்கஷனில்
எப்படிப் பேசவேண்டுமென்று சில விதிமுறைகள் இருக்கின்றன.
அந்த அந்தத் துறை பற்றிய மானியக் கோரிக்கைகளுக்குச் சில
விதி முறைகள் இருக்கின்றன. துணை மதிப்பீடுகள் என்றவுடன்
இந்த அளவிலேதான் பேச வேண்டுமென்று விதிமுறை இருக்
கிறது. ஒழுங்கு பிரச்சினைபற்றிப் பேசுவதற்கு விதிமுறை இருக்
கிறது. இந்த மானிய கோரிக்கை, ஜெனரல் டிஸ்கஷன் ஆகிய
இவற்றிலெல்லாம் சொல்ல முடியாதவற்றைச் சொல்வதற்கு நானே
அப்ரோப்பிரியேஷன் வரும்பொழுது வாய்ப்பு இருக்கிறது.
ஆகவே, துணை மதிப்பீடுகளின் போது அதோடு ஒட்டியதைப்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 மார்ச் 27

பேசுவதற்கு வாய்ப்பு இருக்கின்றபொழுது அதையொட்டி
கருத்துக் கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும். அவர்
கூறியதற்கு வாய்ப்பு நாளையே இருக்கிற காரணத்தால் அதுபற்றி
நாளை பேசலாம். அதையொட்டி இப்பொழுது பேசுவது
நல்லதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: கனம் அமைச்சர் அவர்கள்
கூறினார்கள், 'இப்பொழுது பேசக் கூடாது, நாளைக்குப் பேசலாம்
என்று. இன்றைக்குப் பேசுவதும் ஒன்றுதான், நாளைக்குப் பேசு
வதும் ஒன்றுதான். (குறுக்கீடு) தயவுசெய்து என்னுடைய
கருத்தைச் சொல்லிவிடுகிறேன். நீதி விசாரணைக்கு விட்டதற்குப்
பிறகு, இந்த நகரத்திலே அமைதி நிலைநாட்டப்பட வேண்டு
மென்பதற்குப் பிறகு, மீண்டும் இதே போன்று தொடரக் கூடிய
அளவுக்கு ஆரம்பிப்பது தவறு என்பதைத் திட்டவட்டமாகச்
சொல்லியாக வேண்டும். அப்படிப் பேசக்கூடிய நிலைமை இருக்கு
மானால், அது நீதி விசாரணைக்கும் அதனுடைய விதிகளுக்கும்
நேர் விரோதமாக நாம் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் ஆகும்.
இந்த நகரத்திலே இன்றைக்கு அமைதியை நிலைநாட்டுவதற்குப்
பதிலாக மேலும் குழப்பத்தை உண்டாக்கக்கூடிய அளவுக்கு இது
வழி ஏற்படுத்தும் என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ள
துடன் இது போன்றதை இன்றைக்கு மாத்திரம் அல்ல; நாளைக்கும்
பேசக் கூடாது என்றுதான் நான் கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: தலைவர் அவர்களே,
நான் இப்படி ஒரு பொது விவாதமாக ஆகிவிடும் என்பதைச்
சுட்டிக் காட்டிதான் இந்தப் பிரச்சினைபற்றிப் பேச வேண்டா
மென்று உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் இப்
பொழுதுதான் துணை மதிப்பீடுகளைப்பற்றி பேசத் தொடங்கியிருக்
கிறார்கள். அதையே தொடர்ந்து பேசவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: இன்னும் 5 நிமிட நேரம். தலைவர்
அவர்களே, இப்பொழுது நான் பேசுகின்ற வாக்கியத்தை முடிக்
கின்ற அளவுக்கு அதுவரையும் பாயிண்ட் ஆப் ஆர்டர் வராது
என்று நினைக்கிறேன்.

'What are the terms of reference referred for the judicial
enquiry? அதைத் தெளிவாக முதலமைச்சர் அவர்கள் சொல்ல
வேண்டுமென்பதுதான் என்னுடைய கட்சியின், குறிப்பாக என்
னுடைய கோரிக்கை. ஏனென்றால், ஒரு நிகழ்ச்சியா, பல நிகழ்ச்
சியா? எல்லா சம்பவங்களுக்கும் இந்த நீதி விசாரணையா
என்பதைத் தெளிவாக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய
கோரிக்கை. ஏனென்றால், போலீசுக்காகச் செலவிடப்படும்
தொகை பற்றி சந்தேகம் ஏற்படுகிறது. மக்களுக்கு பொது
வாகவே, தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கான நிகழ்ச்சிகள் நடை
பெற்றிருக்கின்றன—கோயம்புத்தூர் நிகழ்ச்சி, மற்ற மற்ற நிகழ்ச்
சிகள், இன்னும் இங்கே நடைபெற்ற நிகழ்ச்சி இவற்றையெல்லாம்
பார்க்கும்போது, அவர்களுக்கு நிதியே ஒதுக்க வேண்டுமா என்று



1968 மார்ச் 27] [திரு. க. இராமமூர்த்தி]

சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இதைச் சொல்லும்
போது, அவர்களை ஏதோ கூலிக்காரர்கள் என்று சொல்கிறேன்
என்பதல்ல பொருள். அவர்கள் முழுமையாகக் கடமையைச்
செய்யும் அளவிற்கு அரசு பாதுகாப்புக் கொடுக்கும் முறையில்
இருக்க வேண்டும். அரசின் கொள்கை அந்த வகையில் அமைய
வேண்டும்.

அது மட்டுமல்ல, எந்தப் பகுதி மக்களாக இருந்தாலும், சிறு
பான்மையோர்கள் பாதிக்கப்படும்போது, போலீசார் தலையிடு
வதற்குத் தயங்கக் கூடாது. இதைச் சொன்னால், காங்கிரஸ்காரர்
கள் கூடச் சொல்கிறார்கள் என்று கேலியாகச் சொல்வது அவ்
வளவு சரியாக இருக்காது. அது தக்க பதிலும் ஆகாது. உற்ற
நேரத்தில் போலீசார் தலையிட்டால்தான் பயங்கரமான விளைவுகள்
வராமல் பார்த்துக்கொள்ள முடியும்.

அதே போல், நீதி மன்றங்களிலே நீதிபதிகளும், வழக்கறிஞர்
களும், அதிருப்தி அடையும் முறையில், வெறுப்பு அடையும் முறை
யில் இருக்கிறது. எல்லா வழக்கறிஞர்களுக்கும் பாதுகாப்புக்
கிடைக்கும் வகையில் நீதி நிர்வாகம் நடைபெறவேண்டும்.
டெல்லியில் ஒரு நீதிபதி குத்தப்பட்டார். அங்கே சர்க்கார் பாது
காப்புத்தரவில்லை. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இங்கேயும் நடக்கக்
கூடாது, நடந்ததாகச் சொல்லவில்லை. ஆனால் முன்கூட்டியே
சர்க்கார் கண்காணித்துப் பரிகாரத்தையும் காணவேண்டும் என்று
இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

சுகாதாரம், மருத்துவம் இவைபற்றிப் பேசும்போது, கடந்த
இரண்டு நாட்களாக நடைபெறுகின்ற வார்டுபாய்ஸ் ஸ்ட்ரைக்
பற்றிக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. இம்மாதிரி வார்டுபாய்ஸ்,
ட்ரான்ஸ்போர்டு ஆபரேடர்கள் இவர்களெல்லாம் நாட்டுக்கு
அவசியமானவர்கள் என்று செய்து, அவர்கள் திடீரென்று
விரும்பும்போதெல்லாம் ஸ்ட்ரைக் செய்வது முறையாகாது என்று
அப்படிப்பட்டவற்றைத் தடுக்கும் முறையில், அவற்றைச் சட்ட
விரோதமானவை என்று செய்ய ஒரு சட்டமே கொண்டுவந்து
அவற்றைத் தடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, எங்கள்
கட்சியின் சார்பில் கொண்டுவந்துள்ள வெட்டுத் தீர்மானத்தை
ஆதரித்து என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. இரா. நாராயணன்: தலைவர் அவர்களே, ஆளும்
கட்சியின் சார்பில் கொண்டுவந்துள்ள மானியக் கோரிக்கைகளை
ஆதரித்துச் சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது
மாவட்டங்களில் இருக்கின்ற கலெக்டர்கள் சில காரியங்களில்
தலைமை தாங்க ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தக் காரியங்களை எதிர்க்
கட்சியில் இருக்கிறவர்கள், தலைமை தாங்கக் கூடாது கலெக்டர்கள்
என்று குறை சொல்கிறார்கள். ஏற்கனவே இருந்த அரசில்
காங்கிரஸ்காரர்கள் செய்த கொடுமையைவிட இப்பொழுது ஆளும்
கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாவட்டக்

[திரு. இரா. நாராயணன்]. [1968 மார்ச் 27

கலெக்டர்கள் எந்தவிதமான குறைகளையும் செய்யவில்லை என்பதை இந்த மாமன்றத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், ஆளும கட்சியாக இருந்த காங்கிரஸ்காரர்கள் இந்த நாட்டில் பலவிதமாக மக்களை வாட்டி வதைக்கும் முறையில் அதிகாரிகளை நடத்தி வந்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு மக்கள் விரும்பி ஒவ்வொரு பொதுக் காரியத்திற்கும் கலெக்டரிடத்தில் போய் சொல்லும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது திருச்சி மாவட்டத்தில் ஏறக்குறைய 36 லட்சம் ரூபாய் வசூல் செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒரு கல்லூரி ஏற்படுத்தவேண்டும் என்று விரும்புகிறோம். அந்த அளவில் அறிஞர் அண்ணா அவர்கள், கல்லூரியைக் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை விவசாயிகள் நன்மையடையும் முறையில் விதிமுறைகளைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகள் நாட்டிலே ஊமைகளாக, ஏழை எளியவர்களாக இருந்து கொண்டு வாடி வதங்குகிறார்கள். விவசாயிகள்தான் நாட்டின் முதுகெலும்பு என்பதும் இந்த அரசாங்கத்திற்குத் தெரியும். விவசாயிகளுக்கு உதவியாகப் பலவிதமான கடன்களையும் கொடுத்து, சட்ட அமைச்சர் கூட்டுறவு முறையில் பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள்.

தாசில்தார் மட்டத்தில் இருப்பவர்கள் அதிகப்படியாக இருக்கிறார்கள். உதாரணமாக, லோன்ஸ் தாசில்தார், அடமான தாசில்தார், ஹெட்குவார்ட்டஸ் தாசில்தார் என்று இப்படிப் பல்வேறு தாசில்தார்கள் இருக்கிறார்கள். சிக்கன முறையைக் கையாண்டு, ஒரே ஒரு தாசில்தார்மட்டும் இருந்தால் போதுமானது என்று செய்ய வேண்டும். இப்படிப் பல பேர்களைப் பல பெயர்களால் வைத்து, காங்கிரஸ் ஆட்சியில், பலருக்கும் உத்தியோகம் கொடுக்க வேண்டும் என்று வேண்டியவர்களுக்கு என்று இப்படிப் பல தாசில்தார்களை ஏற்படுத்தினார்கள். இப்படி ஏற்படுத்தப்பட்ட அதிகாரிகள் ஏழை மக்களுக்காக, அதிலும், அரிசன மக்களுக்காக எந்தவிதமான காரியமும் செய்யவில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அண்ணா அவர்கள் சொன்னமாதிரி, அதிகாரிகளுக்கு இன்னும் மனத்திருத்தம் ஏற்படவில்லை. உண்மையாகவே சொல்கிறேன்—சில ஸ்தாபனங்களில் உள்ள அதிகாரிகள் இன்று நம் கட்சிகளை பூசணப்படுத்தவேண்டும், நம் அரசாங்கத்தைக் குலைக்கவேண்டும் என்ற எண்ணத்தை மனத்திலே வைத்துக்கொண்டு, ஜாதி வித்தியாசத்தை வைத்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-30 திரு. கே. வினாயகம் : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், தாங்கள் விதிகளைப் படித்து, இந்த மானியக் கோரிக்கையில் வருகிற விஷயத்தைப்பற்றித்தான் பேசலாம் என்று சொன்னீர்கள். அதைப் புரிந்துகொண்டு நாங்கள், எங்கள் அங்கத்தினர்களையும் அவ்வாறு பேசவேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். ஆனால் இப்போது கனம் உறுப்பினர் பேசும்போது



1968 மார்ச் 27] [திரு. கே. வினாயகம்]

காங்கிரஸ் கொடுங்கோல் ஆட்சியில் எப்படி நடந்தது, வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக காங்கிரஸ்காரர்கள் ஏதோ செய்தார்கள் என்றெல்லாம் குறிப்பிடுகிறாரே, இதுவா இப்பொழுது பேரவைமுன் விவாதத்தில் இருக்கும் விஷயம்? காங்கிரஸ் ஆட்சி எதைச் செய்தது, அண்ணா ஆட்சி எதைச் செய்தது என்பதையெல்லாம் விட்டுவிட்டு, மானியக் கோரிக்கையை ஒட்டிய விஷயங்களைப் பேச வேண்டும், மற்றவற்றைப் பேசக்கூடாது என்று உறுப்பினர் அவர்களுக்குத் தாங்கள் உத்திரவிடலாமே?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் திரு. ராமமூர்த்தி அவர்களுக்கு எடுத்துச்சொன்னது எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும், குறிப்பாக ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் பொருந்தும. நான் வேறொரு உறுப்பினரிடத்தில் உரையாடிக்கொண்டிருந்ததால் அதைக் கவனிக்கவில்லை. இனி அவ்வாறு பேசாமல், உறுப்பினர்கள் நான் முன்னே எடுத்துச் சொல்லிக் கொண்ட வேண்டுகோளுக்கிணங்கப் பேசவேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. நாராயணன் : இப்போது தாசில்தார் அவர்கள் ஏழை மக்களுக்கு நில அடைமானம் செய்யாமல் பல தொந்தரவுகளைச் செய்து வருகிறார்கள். அவர்களுக்காகத் தனி தாசில்தார் நியமித்தும் அவர்கள் நல்ல முறையில் பயன்படவில்லை. ஏனென்றால், இப்போது சாதாரணமாக ஒரு ஆபீஸில் மூன்று உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். அந்த நிலைமை கூடாது என்பதுதான் என்னுடைய கருத்தும்கூட. இப்போது ஒரு வட்டத்திற்கு ஒரு ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் இருக்கிறார். அவருக்குக்கீழ் இருக்கும் பல ஆபீசர்கள் வேலை செய்கிறார்கள். தாசில்தார் எல்லாக் கிராமங்களுக்கும் போய் அங்குள்ள குறைபாடுகளைப் பார்த்து வந்து, நிலைமையைச் சரி செய்யத் தவறிவிடுகிறார்கள். ஆகையால் இந்தச் சிக்கனச் செலவை முன்னிட்டு நான் சொல்வதெல்லாம் ஒரு உத்தியோகத்திலே இரண்டு உத்தியோகஸ்தர்கள் என்ற இருக்கிற முறையைக் கண்டிப்பாக நீக்கவேண்டும். ஆனால் அவர்கள் ஆள்குறைப்பு நேரிடும் என்று சொல்வார்கள். அதனால் சிக்கனம் இல்லாமல் செலவு செய்யமுடியாது என்று கூறி எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த உதவி மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நாட்டில் எங்கு பார்த்தாலும் கலப்படங்கள் அதிகமாகி அடிக்கடி ஏராளமான மரணங்கள் ஏற்படுவது கண்கூடாக இருக்கிறது. அது பரவலாகி, எங்கு பார்த்தாலும் கலப்படம் செய்தால் லாபம் சம்பாதிக்கலாம், அதனால் வாழலாம் என்ற ஒரு சிலருடைய சுய நலத்தினால் இந்தமாதிரி ஒரு மோசமானநிலை நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. இதை இந்த அரசு உடனடியாகத் தடுத்தாகவேண்டும்.

[திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்] [1968 மார்ச் 27

ஏற்கனவே இருந்த அரசு இதைக் கவனிக்காமல் விட்ட காரணத்தினால் மிக அதிகமாக வளர்ந்து இது இன்று மோசமான நிலையை நாட்டில் உண்டாக்கியிருக்கிறது. ஆகவே அதைக் கண்டிப்பாகத் தடைசெய்வதற்கு இந்த அரசு நல்ல முறைகளைக் கையாள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கவேண்டும், கலப்படம் செய்கிறவர்களுக்கு ஜென்ம தண்டனை கொடுப்பதோடு அவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டால்தான் இதைத் தடுக்க முடியும். ஆகவே, இதை இந்த அரசு உன்னிப்பாகக் கவனித்துத் தடை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கிராமப்புறங்களில் எல்லாம் சூதாட்டம் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. இதைச் சட்டத்தின் பெயரால் ஆரம்பிக்கிறார்கள். இந்த சூதாட்ட கிளப் இதற்கு முன்பு எல்லாம் மெட்ராஸ் போன்ற நகரங்களில்தான் இருந்தது. மெட்ராஸ் போன்ற பெரிய நகரங்களில் இருந்தால், அது பலருக்கும் தெரியாமல் இருக்கும், ஒரு சிலர் அதில் போய்ச் சேருவார்கள், அதனால் சிரமம் இல்லாமல் இருக்கும். இப்போது கிராமங்களில் சூதாட்ட கிளப் ஆரம்பிக்கப்பட்டு இதனால் கிராமத்திலிருக்கிற இளைஞர்கள் எல்லாம் சூதாட்டத்திற்குச் சென்று பல மோசமான நிலைகளை அடையும் நிலை ஏற்படுகிறது. கிராமங்களில் சூதாட்ட கிளப்களில் சட்டதிட்டங்களை அனுசரிப்பதே இல்லை. தாராளமாக மது ஏராளமாக புழங்குகிறது. இன்னும் விரும்பத்தகாத காரியங்கள் எல்லாம் நடைபெறுவதற்கும் ஏதுவாக இருக்கிறது. ஆகவே, இதை உடனடியாகத் தடை செய்யவேண்டும். தடை செய்தால்தான் கிராமங்களில் இருக்கிற இளைஞர்கள் ஒழுக்க சீலர்களாக இருக்கமுடியும். ஆகவே, இதை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் மதுவைப்பற்றி பேசும்போதெல்லாம் 'உங்கள் கட்சிக் கொள்கை என்ன' என்று கேட்கக்கூடிய நிலை இருக்கிறது. எங்கள் கட்சிக் கொள்கையின்படி மதுவை ரத்துசெய்யவேண்டும் என்றுதான் நினைக்கிறோம். அதே நேரத்தில் மது ஏராளமாக அதிகரித்துக்கொண்டு இருக்கிறதே, வீடுவீடாகப் பெருகிக் கொண்டு வருகிறதே என்றுதான் வருத்தப்படுகிறோம். எங்கு பார்த்தாலும் இந்த சீசனில் சாராயம் காய்ச்சுவதும், கள் இறக்குவதும் அதிகமாகி இருக்கிறது. போலீஸ் அதிகாரிகள் இதைக் கண்காணிக்கமுடியாத அளவுக்கு வந்துவிட்டது. எந்தப் பனைமரத்தைப் பார்த்தாலும், கள் இல்லாத பனைமரமே கிடையாது. பதநீர் இறக்குவதாகச் சொல்லி, கள் இறக்குகிறார்கள். டவுனில் எப்படி இருக்கிறதோ—கிராமங்களில் ரொம்ப மோசமாக இருக்கிறது. கிராமப்புறங்களில் சென்றால் நான்கு பேர்கள் குடித்துவிட்டு உருளும்நிலை பார்க்கக்கூடியதாக இருக்கிறது. அங்கு ஜனத்தொகை அதிகம் இல்லாத காரணத்தால் கிராமப்புறங்களில் நான்கு பேர் குடித்துவிட்டு உள்ளே வந்தால் அது எல்லோருக்கும் தெரிந்துவிடுகிறது. கிராமங்களில் இம்மாதிரி மோசமான நிலை



1968 மார்ச் 27] [திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்]

இருக்கிறது. இதைத் தடை செய்வதற்கு முற்பட வேண்டும். பதநீர் என்ற பெயரால், கள் இறக்கப்படுவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்னென்ன செய்யவேண்டுமோ, அதையெல்லாம் செய்யவேண்டும். இதனால் இப்போது ஏற்பட்டிருக்கிற நிலை பெண்கள் கூட வெளியே நடமாடுவதற்குப் பயமாக இருக்கிறது. இந்த ஃபார்மஸி என்ற கடைகள் எங்கு பார்த்தாலும் திறக்கப்பட்டு, கள்ளுக் கடைகளையும் தாண்டிப் போய்க்கொண்டே இருக்கிறது. சாராயத்தைக் குடித்துக்கொண்டே வருகிறவர்கள் இந்த ஃபார்மஸியிலும் போய் கொஞ்சம் குடித்துவிட்டு, அந்த ரசீதை வாங்கிக்கொண்டு, நான் சட்டப்பூர்வமாகத்தான் குடிக்கிறேன் என்று சொல்லும் நிலை இருக்கிறது. அதையும் நல்ல முறையில் யோசனைசெய்து, இந்த அரசாங்கம் முடிவு எடுத்து இந்த ஃபார்மஸிகளையே தடை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். லஞ்ச ஊழல் நாட்டில் பெருகிக்கொண்டேபோகிறது. குறைந்த பாடாக இல்லை. ஒவ்வொரு இலாகாவிலும் இந்த லஞ்ச ஊழல் பரவிக்கொண்டே வருகிறது. லஞ்ச இலாகா அதிகாரிகள் நல்ல முறையில் கண்காணிப்பது இல்லை. அதனால் லஞ்சம் இல்லாத ஒரு டிபார்ட்மெண்டாவது இருக்கிறதா என்று துருவித் துருவிப் பார்த்தாலும்கூட கண்டுபிடிக்க முடியாத நிலை இன்று இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது.)

* திரு. க. மு. ராசகோபால்: தலைவரவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, வேளாண்மையில் விவசாயப் பெருங்குடிமக்கள் நல்ல முறையில் விவசாயம் செய்து வரத்தக்க அளவுக்குப் பாதுகாப்பு, கிட்டத்தட்ட 20, 25 ஆண்டுக் காலமாகவே நல்ல முறையில் இல்லை, என்பது அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. இதற்கு முன்னால் வள்ளுவன் சொன்னதாகக்கூட சொல்லியிருக்கிறார்கள்.

" உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் "

என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு உழவனுடைய நிலைமை மற்ற எல்லோருடைய பின்னாலும் செல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் உழுபவன் பின்னால் கைகூப்பிக் கொண்டுவந்த மக்கள் இன்றைக்கு எந்த அதிகாரி பின்னால் செல்ல வேண்டுமோ அந்த அளவுக்குச் சென்றாலும், அவர்களுடைய வேலை நல்ல முறையில் நடைபெறவில்லை. நீர்ப்பாசன வசதியை எடுத்துக்கொண்டால் 1966-ல் ஏற்பட்ட புயல், வெள்ளம் காரணமாக ஏரிகள் பல உடைப்பெடுத்தன. என்னுடைய தொகுதியிலும் அப்படிப் பல ஏரிகள் உடைப்பெடுத்தன. அந்த ஏரிகளில் ஒரு சிலவற்றில் மண் கொட்டியிருக்கிறார்கள். ஆனால் மண் சரியாகக் கொட்டாத காரணத்தால், போன ஆண்டு பெய்த பெரு மழையினால் மீண்டும் உடைப்பு எடுத்துவிட்டதால், விவசாயத்தை நம்பி வாழக்கூடிய மக்கள் ஒரு போகம்கூட எடுக்க முடியாத நிலை இருக்கிறது.

[திரு. க. மு. ராசகோபால்] [1968 மார்ச் 27

இரண்டாவது போகம் வரக்கூடிய நேரத்தில் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள ஏரிகளில் எல்லாம் நீர்வற்றிவிடக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. அறுவடைக்குத் தண்ணீர் கிடைக்காமல் பயிர்கள் சாவியாகப் போகக்கூடிய நிலைமை இருக்கிறது.

அடுத்தபடியாக, மின்சாரம் வேண்டுமென்று இந்த நாட்டிலே விவசாயப்பெருங்குடி மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் ஆனால் இன்றையதினம் மின்சாரம் நல்லமுறையில் விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கிடைப்பதில்லை. அவர்கள் ஐந்தாறு ஆண்டுகளாகப் பதிவு செய்திருந்தும், அவர்களுடைய பம்புசெட்டுகளுக்கு இணைப்பு செய்துகொடுப்பதற்கான விதிமுறைகளைத் தளர்த்தவில்லை. பல காரணங்களைச் சொல்லிக்கொண்டு விவசாயிகளை இங்குமங்குமாக அலைக்கழித்துக்கொண்டிருக்கிறார்கள். விவசாயி ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்குச் செல்ல வேண்டும். பின்னர் கணக்கப்பிள்ளையிலிருந்து தாசில்தார் வரைக்கும் சென்று, பிறகு கலெக்டரைப் பார்க்க வேண்டும், பாலாறு நற்சான்றிதழ் அடைய. அதேபோல மின்சார போர்டுக்குப் போனால் அங்கே அளவு எடுப்பதற்கு ஒரு டிபார்ட்மெண்ட், பர்மிட் கொடுக்க வேறு டிபார்ட்மெண்ட் இப்படி விவசாயி அவர்கள் சொல்லும் இடங்களில் எல்லாம் அலைந்து திரிந்து விவரம் கேட்கும் நிலைமை இருந்து வருகிறது. இதை அரசு கவனித்து நல்லபடியாக விவசாய மக்கள் மின்சாரம் பெற ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, கிராமங்களுக்கு நல்ல பாதை வசதிகள் கிடையாது. ஊராட்சி மன்றங்களுக்கு அதிக வருவாய் இல்லாத காரணத்தினால், நல்ல பாதைகளை அமைக்க முடியவில்லை. நகரசபைகளில் இருக்கும் ரோடுகளில் எல்லாம் தார் போடப்பட்டு உள்ளது. கிராமங்களில் சாதாரண நல்ல பாதைகூட இல்லாமல் இருக்கின்றது. 'எல்லோரும் இந்த நாட்டு மன்னர்' என்று வாயாரப் பேசுகின்றோம். மழைகாலங்களில் பெருவெள்ளம் ஏற்படுகின்றபோது, கிராம மக்கள் பெரிதும் அவதிப்படுகிறார்கள்.

அடுத்தபடியாக, மருத்துவத்தை எடுத்துக்கொண்டால், மருத்துவத் துறைக்கு கோடிக்கணக்கான ரூபாய் செலவாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் செலவழிக்கும் பணம் முழுவதும் பெரிய நகரங்களுக்குச் செலவழிக்கப்படுகின்றது. சிற்றூர்களிலே மருத்துவ வசதிகள் கிடையாது. ஏதாவது வைத்திய வசதி பெறவேண்டுமானால். கிராம மக்கள் அருகில் இருக்கும் நகரங்களுக்கே செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. அப்படி நகரங்களுக்குப் போக வேண்டுமானால், நல்ல ரோடு வசதிகள் கிடையாது. வடகிழக்குப் பருவக்காற்று வீசும் காலங்களில், அதாவது வருஷத்தில் மூன்று நான்கு மாதங்கள், ஆறுகளில் வெள்ளம் ஏற்படுகின்றது. கிராம மக்கள் ஆற்றைக் கடந்து, அக்கரைக்கு வர முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கரையைத் தாண்டி வரவேண்டுமென்றால் 30, 40 மைல் தூரம் சுற்றிக்கொண்டு வர



1968 மார்ச் 27] [திரு. க. மு. ராசகோபால்]

வேண்டும். எந்த ஊரிலிருந்தாவது பிரசவ சிகிச்சைக்காக நகரத்திற்குப் போகவேண்டுமென்றால், வெள்ளகாலங்களில் ஆற்றைக் கடக்க முடியாமல், சில சமயங்களில் துர்மரணம் ஏற்படுகின்ற நிலைமைகளும் உண்டாகின்றன. போன ஆண்டும் இதைப்பற்றிப் பேசினேன். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஏதாவது வழி பிறக்கும் என்று எதிர்பார்த்தேன். ஒன்றும் இல்லை. அரசாங்கம் கிராம மக்கள் விஷயத்தில் அக்கறை எடுத்துக்கொண்டு வைத்திய வசதிகள் கிடைக்க வழி செய்யவேண்டும்.

கூட்டுறவு நல்ல முறையில் பணியாற்றவில்லை. கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகக் கொடுக்கப்படும் பணம் ஒழுங்கான முறையில் விவசாயிகளுக்குப் போய்ச் சேருவதில்லை. மேலும், கூட்டுறவுத் தலைவர்கள் தங்களுடைய உறவினர்களையும், நண்பர்களையும் கையெழுத்து வாங்கியோ வாங்காமலோ மெம்பர்களாகச் சேர்த்துக்கொண்டு, பல ஊழல் புகார்களுக்கு இடம் அளித்து வருகிறார்கள். எனது தொகுதியில் பல ஊழல் புகார்கள் நடந்திருக்கின்றன. எனது தொகுதியில் அடுத்த பெரும்பாக்கம் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மீது 2 லட்சத்து 62 ரூபாய்க்கு ஊழல் புகார் இருக்கிறது. சில இடங்களில் பணத்தைக் கையாடல் செய்துவிட்டு தலைவர்கள் விஷம் குடித்து இறந்துவிட்டிருக்கக்கூடிய நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. இருளர் இனத்தைச் சேர்ந்தவர்களும் ஆதி திராவிட மக்கள் மீதும் பணம் கட்டவேண்டிய நிலைமை இருக்கிறது. சில இடங்களில் விஷயங்கள் மூடிமறைக்கப்படுகின்றன. ஊழல் செய்தவர்கள்மீது இது வரையில் எந்தவித விசாரணையோ, நடவடிக்கையோ எடுத்துக் கொள்ளப்படவில்லை. அரசு தக்க கவனம் செலுத்தி ஊழல் புகார்கள் ஏற்படாதவாறு தடுக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமப்புறங்களில் நல்ல கல்வி வசதி கிடையாது. கிராமங்களில் ஓரிரு பள்ளிகள் எங்கேயோ ஒரு பக்கத்தில் இருக்கின்றன. உயர்நிலைப்பள்ளிக்குச் சென்று படிக்க வேண்டுமானால், கிராமத்திலிருந்து பத்து, பதினைந்து மைல் தூரம் நடந்து போய்ப் படிக்க வேண்டியிருக்கிறது. இடையில் ஆறுகள் இருப்பதால், மழைக்காலங்களில் ஆற்றைத் தாண்டிச் செல்ல சரியான பாலங்களும், ரோடுகளும் இல்லை. ஆகவே, அரசாங்கம் கிராமப்புற மக்களின் கல்வி வசதிகளை அதிகப்படுத்த ஆங்காங்கு பள்ளி நிறுவி தூரத்தைக் குறைக்க வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளை அதிகமாக ஏற்படுத்தித் தந்து நல்ல கல்வி வசதிகளைப் பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

அடுத்து, நீதிமன்றத்தைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் பார்மலியைப் பற்றியும், வார்னீஷ் குடிப்பது பற்றியும் தெளிவாகப் பேசினார்கள். வார்னீஷ் குடிக்கிறவர்களைப் பிடிக்கிறார்களே தவிர, வார்னீஷ் வைத்திருப்பவர்களைப் பிடித்துத் தண்டிப்பதில்லை.

[திரு. க. மு. இராசகோபால்] [1968 மார்ச் 27

மேலும் சென்னை போன்ற நகரங்களில் சாராயம், வார்னீஷ் குடித்தவர்களுக்கு 10 ரூபாய், 15 ரூபாய் அளவில்தான் அபராதம் விதிக்கிறார்கள். ஆனால் கிராமப்புறங்களில் இதே குற்றத்திற்கு 40 ரூபாய், 50 ரூபாய் அளவில் அபராதம் விதிக்கிறார்கள். ஒரே குற்றத்திற்காக விதிக்கப்படும் தீர்ப்பு நகரத்திற்கு ஒரு மாதிரியாகவும், கிராமப்புறங்களுக்கு வேறு மாதிரியாகவும் இருப்பது ஏன்? நகரத்திற்கு ஒரு நீதி, கிராமத்திற்கு ஒரு நீதியா? நீதிபதிகள் நியாயத்தை நிலை நாட்ட வேண்டாமா? ஆகவே, அரசு இதில் கவனம் செலுத்தி, சட்டத்தை நியாயமான முறையில் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.) இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கொ. இரா. ஞானசம்பந்தன்: தலைவர் அவர்களே, விவசாயிகள் பெரும்பாலான குத்தகை பாக்கிக்காக வெளியேற்றப்படுகின்ற அபாயகரமான சூழ்நிலை இருக்கிறது. விவசாயிகள் வெளியேற்றப்படாமல் இருக்க, சர்க்கார் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் பல இடங்களில் சரியாக விளைச்சல் இல்லாத காரணத்தால் அவர்களுக்கு கோவாபரேடிவ் லோன், சர்க்கார் லோன் போன்றவைகள் திரும்பக்கொடுப்பதிலே சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே விவசாயிகளிடமிருந்து இத்தகைய கடன்களை வசூலிப்பதைத் தள்ளிவைக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஜில்லா அபிவிருத்தி மன்றங்களை பணம் சாங்ஷன் செய்யக்கூடிய ஓர் அமைப்பாக மாற்றுவது உபயோககரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சிறையைப் பொறுத்தவரையில் ஜன்ம தண்டனை பெற்றவர்கள் 14 வருஷங்களுக்கு மேலாகியும் விடுதலை செய்யப்படாமல் இருக்கிறார்கள். பெண்கள் சிறைச்சாலையிலும் ஜன்ம தண்டனை பெற்றவர்கள் இருக்கிறார்கள். அதுசம்பந்தமாக அரசு துரிதமாகப் பரிசீலனை செய்து அப்பேர்ப்பட்டவர்களை விடுதலை செய்வதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெண்களைப் பொறுத்தவரையில் பத்து வருஷத்திற்கு மேல் இருந்தால் அவர்களை விடுதலை செய்யலாம் என்பதை இந்த அரசு அனுதாபத்தோடு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மீனவர்களுக்கு சகாய விலையில் நைலான் நூல் கொடுக்கப்பட்டு வந்ததை, அவசரகாலத்தை முன்னிட்டு நிறுத்தி விட்டார்கள். இப்போது அவசரநிலைமை நீங்கிவிட்ட காரணத்தால், மீண்டும் சகாயவிலையில் நைலான் நூல், நைலான் வலைகள் மீனவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஜில்லா நிர்வாகம் எல்லாம் சர்க்காரின் கொள்கைகளை அமல் நடத்தக்கூடிய பாதையிலே நடக்க வேண்டுமென்பதை அழுத்தந்திருத்தமாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சில



1968 மார்ச் 27] [திரு. கொ. இரா. ஞானசம்பந்தன்]

இடங்களில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக, தஞ்சை மாவட்டத்தில் முத்தரப்பு மாநாடு கூடிப் பேச வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்தவுடன் கூட்டப்படாததால் பல அசம்பாவிதங்கள் ஏற்பட்டன. இந்தக் காலதாமதத்தால்தான் நாம் விரும்பியோ, விரும்பாமலோ சில அசம்பாவிதத்தால் ஏற்படுகின்றன. சர்க்காரின் கொள்கையை அமல்படுத்தும் விதத்தில் ஜில்லா நிர்வாகம் நடக்க வேண்டுமென்பதில் கண்காணிப்பு இருந்துவர வேண்டும்.

ஜில்லா நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் எம். எல். ஏ.-க்கள் ரெப்ரசன்ட் பண்ணினாலும் அது சரியாக நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எஸ். தனுஷ்கோடி ஒரு தடவை ஜில்லா ஆபீசரிடம் ரெப்ரசன்ட் செய்தபோது, "இது செய்யாவிட்டால் சர்க்காரே விழுந்துவிடுமா?" என்று சொன்னார்கள். சர்க்காருடைய கொள்கை எந்த அளவிற்கு இருக்கிறதோ, அந்த அளவிற்கு அமல்நடத்தக்கூடிய அளவிலே ஜில்லா நிர்வாகம் இருக்க வேண்டும்.

இன்றையதினம் பொதுமக்கள் எழுதக்கூடிய கடிதங்களுக்குத் தக்க பதில் எழுதும் முறையை தலைமைச் செயலகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பதில் எழுதுவது நல்லது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். முடிவு எடுப்பதற்குத் தாமதமானாலும் கூட, 'உங்களுடைய கடிதம் கிடைத்தது. தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்கிறோம்' என்ற அளவிலாவது உடனடியாக பதில் எழுத வேண்டும்.

அடுத்தபடியாக ஒரு விஷயம். அங்கத்தினர்களின் முகவரி மாற்றம் ஏற்படுகின்ற நேரங்களில், அதைச் சரிபடுத்தி, உரிய முகவரியில் தபால்கள் சேருவதற்கு வழி செய்ய வேண்டும். என்னுடைய முகவரி மாற்றத்தைப்பற்றி சட்டப்பேரவையின் செயலாளர் அவர்கூட இரண்டு, மூன்று மெமோரண்டம் எழுதி எல்லா இலாக்காக்களுக்கும் அனுப்பினார்கள். இன்றும் எழுதுபொருள் அச்சுத்துறை அமல்படுத்தவில்லை. அவ்வப்பொழுது ஏற்படக்கூடிய மாற்றங்களைப் பொறுத்தவரையில், எழுதக்கூடிய கடிதங்களுக்குப் பதில் எழுதக்கூடிய விவரம் நல்ல முறையில் நடைபெறவேண்டும்.

அடுத்து, போலீஸுக்குள்ள எல்லா வசதிகளும் ஃபயர் பிரிகேடியர்ஸ்க்கும் வழங்க வேண்டும். மற்றும் சிறையில் இருக்கக்கூடிய வார்டர்களுக்கு, போலீஸ்காரர்களுக்கு உள்ளதுபோல், சம்பளம், படி முதலிய வசதிகளைச் செய்து தருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். இன்றையதினம் சிறையிலே 'லீகோ' நிலக்கரி பற்றாக்குறையாக இருக்கிறது என்ற குறை தயாரிக்க முடியவில்லை என்ற புகாரும் இருக்கிறது. ஆகவே, 'லீகோ'வின் அளவை உயர்த்துவதற்கு அரசாங்கம் வழிசெய்ய வேண்டும்.

சுகாதாரத்தைப் பொறுத்தவரையில், எல்லா இடங்களிலும் சுகாதார வசதிகளைச் செய்யக்கூடிய அவசர ஏற்பாடுகள் தேவை. தஞ்சை மாவட்டத்தில் நாகையில் ஜில்லா மருத்துவமனை இருக்கிறது. மழை பெய்தால் பேஷண்டுகள் எல்லாம் வெளியே போக வேண்டியிருக்கிறது. ஆகவே, நாகப்பட்டினம் மருத்துவமனையை நல்ல முறையில் திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு தக்க கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, ஜமாபந்தி முறையை எடுத்துவிட்டு, கணக்குகளை ஆடிட் செய்வது என்ற முறையை ஏற்படுத்த வேண்டும். இதனால் ஏற்படக்கூடிய காலதாமதத்தையும், பண விரயத்தையும் தவிர்க்க முடியும் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். சண்முகம்:** தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையின் மீது எனது இரண்டொரு கருத்துக்களைச் சொல்லி கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, காவல் துறை தான் ஆட்சித் துறையிலே மிக முக்கியமான ஒரு கட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கும் ஒரு துறையாகும். ஆனால், இது செயல்படுவதுபற்றி பொது மக்களிடமிருந்து நாம் கேள்விப்படும் குறைபாடுகள் தாங்கக்கூடிய ஒரு நிலைமையில் உள்ளதாக இல்லை என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். போலீஸ் இலாகா பாதுகாப்பிற்காக ஏற்பட்டது என்றாலும் கூட, இன்றைக்கு அனுபவ முறையிலே பார்க்கிறபொழுது மக்களிடமிருந்து வரும் குறைபாடுகள் என்னவென்றால், மிகவும் பாதகத்தை உண்டாக்கக் கூடிய நிலையிலேதான் போலீஸ் இலாகாவிலுள்ள அலுவலர்கள் செயல்படுகிறார்கள் என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் சொல்லித் தான் தீரவேண்டிய நிலைமையில் இருக்கிறேன். போலீஸ் இலாகாவினால் இந்த ஆட்சித் துறைக்கு ஒரு கெட்ட பெயர் உண்டாகும் நிலைமை இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்று உதாரணமாக மதுவிலக்கு திட்டத்தை எடுத்துக் கொண்டால், காங்கிரஸ் ஆட்சியில் அவர்கள் மதுவிலக்கை அமுலாக்க எடுத்த முயற்சிகளை அவர்களே கைவிடக்கூடிய நிலைமையில் இருந்தாலும் கூட, இன்று இந்த ஆட்சி மதுவிலக்கு திட்டத்தை ஆதரித்து, நல்ல முறையில் அதை செயல்படுத்துவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள் இருந்தாலும், நல்ல பெயரை உண்டாக்கக் கூடிய அளவில் போலீஸ் துறையினர் செயல்படவில்லை என்பதை சொல்லிக்கொள்ளவேண்டிய நிலைமை இருக்கிறது. அரசாங்கத்திற்கு ஒரு கெட்ட பெயர் உண்டாக்கக்கூடிய அளவில்தான் போலீஸ் துறையினர் செயல்படுகிறார்கள், மது விலக்குத் திட்டத்தைப் பொறுத்த வரையில் அவர்களுடைய ஈடுபாடுகள் நல்ல முறையில் இல்லை. மது பயன்படுத்துவதை போலீஸ் இலாகா அதிகாரிகளே ஒன்றாக இருந்து நடத்துவதாகக் கூட பல குறைபாடுகள் என்னிடம் தினந்தோறும் சொல்லப்பட்டு வருகிறது.



இதைப் பற்றி போலீஸ் இலாகாவினரிடம் சொல்லியும், இந்தக் குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும் என்று சொல்லியும் கூட, அதில் அவர்கள் கவனம் செலுத்தவில்லை. இந்தத் துறையிலே போலீஸ்காரர்கள் நடந்துகொள்வது பற்றி தினந்தோறும் பல குறைபாடுகள் வந்து கொண்டே இருக்கின்றன. அவர்கள் அதை ஆதரிப்பதாக மக்களிடையே குறையும் இருக்கிறது.

இப்படிப்பட்ட இன்னும் பல குறைகள் இருந்தாலும், லஞ்ச ஊழல், போலீஸ் இலாகாவிலே மிக அதிகமாக இருக்கிறது என்று தெரிகிறது. மக்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வதற்குப் பதிலாக, லஞ்சத்தை எதிர்பார்த்து அவர்கள் செய்யும் இடர்பாடுகள் மிகவும் சகிக்கமுடியாத நிலைமையில் இருந்து வருகிறது என்பதை நான் எடுத்துத்தான் சொல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் நிவர்த்திக்க அரசு மிகுந்த கவனம் செலுத்தவேண்டிய நிலைமையிலே, இன்று அவர்களுக்காக விஜிலன்ஸ் இலாகா என்று ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. போலீஸ் இலாகாவிலிருந்தவரையே விஜிலன்ஸ் இலாகாவிலும் ஈடுபடச் செய்தால், அவர் தொடர்புற்ற ஒரு இலாகாவாக போலீஸ் இலாகா இருப்பதால் அவர் சரிவர செயல்பட முடியாத நிலைமை ஏற்படும். ஆகவே, அந்த விஜிலன்ஸ் இலாகாவுக்கு தனிப்பட்ட முறையில் ஒருவரை ஏற்பாடு செய்து போலீஸ் இலாகாவினரை கண்காணிக்க வழிவகைகள் செய்வது மிகநல் முக்கிய கடமை என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், கிராமங்களில் அமைக்கப்பட்டிருக்கும் பள்ளிகளில் ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் இல்லாத நிலைமை இருந்துகொண்டு வருகிறது. பெரும்பாலும் ஆசிரியர்கள் அங்கே தங்குவதில்லை. தங்களுடைய சொந்த ஊர்களிலிருந்து பள்ளிகளுக்குச் செல்லக்கூடிய நிலைமை இருப்பதால், பள்ளிகளுக்கு அவர்கள் காலாகாலத்தில் வந்து பாடம் சொல்லிக் கொடுப்பது என்பது நடைபெறவில்லை. இந்தக் குறைபாடுகள் பல ஊர்களில் இருந்துவருகிறது ஆகவே, ஆசிரியர்கள் குடியிருப்பதற்கு வேண்டிய வசதிகளை அங்காங்கு பள்ளிகள் இருக்கும் ஊர்களிலேயே செய்துகொடுத்தால்தான், அவர்கள் நல்ல முறையில் செயல்பட்டு, பள்ளிகள் ஒழுங்கான முறையில் நடைபெற முடியும். இந்த வகையிலே வேண்டிய மானியத் தொகை ஒதுக்கவேண்டியது மிகவும் முக்கியம் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(திரு. வி. கே. கோதண்டராமன் தலைமை)

பொது சுகாதார நிலையங்கள், சென்டர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிற இடங்களில் பெரும்பாலும் டாக்டர்கள், மற்றும் மருத்துவ சிப்பந்திகள் தங்குவதற்கு இட வசதி இல்லாததினால், அன்றாடம்

[திரு. எம். சண்முகம்] [1968 மார்ச் 27

அவர்கள் குறித்த சில மணி நேரம் திறந்து வைத்துவிட்டு, போய் வந்துகொண்டிருக்கிருர்கள். எனவே, அவர்கள் மருத்துவ நிலையங்களில் வரும் நோயாளிகளை முழுவதும் கவனிக்கத் தக்க நிலைமை இல்லை. ஆகவே, பொது சுகாதார நிலையங்களிலே கூடுமான வரையில் அதைச் சேர்ந்தவர்கள் அங்கேயே தங்கியிருக்க குடியிருப்பு வசதிகள் உண்டாக்கித் தருவதற்கு வழிவகைகள் செய்தால், உண்மையிலேயே சுகாதார நிலையங்கள் ஒழுங்காக மக்களுக்குப் பயன்படக் கூடிய நிலைமை ஏற்படும். அதற்கு வேண்டிய மானியத்தொகை ஒதுக்கவேண்டியது மிகவும் முக்கியம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, விழுப்புரம் அரசாங்க மருத்துவச்சாலை பல 100 ஆண்டுகளுக்கு முன்பாக ஏற்பட்டது. ஆனால், கட்டடம் பழைய முறையிலேயே, அந்த நிலைமையிலே தான் இருந்துவருகிறது. விழுப்புரம் அபிவிருத்தி அடைந்து வருகிற நகரம். புதிய கட்டடம் அமைத்து, வேண்டிய புதிய வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே ஒரு எக்ஸ்ரே பிளாண்டு அமைக்க வேண்டும் என்று பலமுறை கேட்டுக்கொண்டும், இது வரையில் அமைக்கப்படவில்லை. அதை உடனடியாகச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கண்டமானடி ஆரம்ப சுகாதார மருத்துவமனைக்கு கட்டடம் கட்டுவதற்கு அரசினர் அனுமதி கொடுத்திருந்தும், பழையபடி ஒரே கட்டடத்தில்தான் இருந்துகொண்டு வருகிறது. அதற்கு மெயின் ரோடில் ஒரு நல்ல கட்டடம் கட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்வதில் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத் துறையில் பல பலன்கள் பெறுவதற்காக அரசு பல உதவிகளைத் தருவதற்கு ஏற்பாடு செய்திருந்தாலும் கூட, பல துறைகளிலிருந்து உதவி பெறுவது என்பது சரியான முறையாகாது, நல்ல முறையில் பயன்படவில்லை. பல துன்பங்களுக்கும், தொல்லைகளுக்கும் அவர்கள் ஆளாகவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. கடன்கள் பெறுதல், பொறுக்கு விதை பெறுவது, உரம் பெறுவது, மானியம் பெறுவது, விவசாயக் கருவிகள் பெறுவது இவைகளெல்லாம் பல துறைகளிலிருந்து பெறவேண்டிய நிலைமை இருந்தால், விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய வகையில் இல்லை. ஆகவேதான் விவசாயிகளுக்கென்று ஒவ்வொரு வட்ட தலைநகரத்திலும் விவசாயிகள் இல்லம் என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி, எல்லா உதவிகளையும் அந்த ஒரு இடத்திலிருந்து பெறுவதற்கு வழிவகைகள் செய்தால்தான் சரியான முறையாக இருக்கும். உண்மையில் விவசாயிகள் அதன் மூலம் நல்ல பயன் அடைவார்கள். ஆகவே, அவர்கள் எல்லா உதவிகளையும் ஒரே இடத்தில், ஒரே அமைப்பின் மூலமாகப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும், அதற்கு உண்மையான கவனம் செலுத்தவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



1968 மார்ச் 27] [திரு. எம். சண்முகம்]

நெல் கொள்முதல் விஷயத்தில் அரசு நேரடியாகக் கொள்முதல் செய்யும் திட்டத்தை மேற்கொண்டால் விவசாயிகளுக்கு நலமாக இருக்கும், அவர்கள் நன்மை பெறமுடியும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

போதுமான கிடங்கு வசதிகள் இல்லாததினுல், விவசாயிகள் தங்களுடைய இருப்பை வைப்பதற்கு வழியில்லாத நிலைமையில், தங்களுடைய நெல்லை சரியான காலத்தில் சரியான விலைக்கு விற்க முடிவதில்லை. ஆகவே, கிடங்கு வசதிகள் போதுமான அளவுக்கு அமைத்துக்கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உரம் வைப்பதற்கு கிடங்கு வசதி இல்லாத காரணத்தினுல், ஒழுங்கான முறையில் அவைகள் வைக்கப்பட்டு சுலபமாக, உடனடியாக விவசாயிகள் பெறுவதற்கு வழி இல்லாமல் இருக்கும் நிலைமை இருக்கிறது. ஆகவே, அதற்கும் கிடங்கு வசதி செய்து கொடுக்கவேண்டும்.

கிராமங்களில் போக்குவரத்து வசதிகளில் கவனம் செலுத்துவது மிகவும் குறைவாக இருக்கிறது. சிலவர்களுக்கு இன்னும் வண்டிகள் போய்வருவதற்கே போதுமான வழிப்பாதைகள் இல்லாத நிலை இருக்கிறது. அவைகளிலெல்லாம் அந்த இலாகா தான் கவனம் செலுத்தி, கூடுமான்வரையில் சீரான வண்டிப் போக்குவரத்திற்கு வேண்டிய அளவுக்காவது நிலங்களை வாங்கி பாதைகளை அமைப்பதை முதல் கடமையாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறிய பாசன திட்டங்களைப் பொறுத்தவரையில், சமீப புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சில இடங்களில் கூட இன்னும் மராமத்து செய்யப்படாத நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அதனுல் சாகுபடி நிலங்களெல்லாம் ஒருபோக சாகுபடியை இழக்க வேண்டிய நிலைமை சில இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அவைகளில் உடனடியாக கவனம் செலுத்தி, மராமத்து செய்வதற்கான ஏற்பாடுகளை துரிதமாகச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராமங்களில் குடி மராமத்துமுறை முற்காலத்தில் இருந்தது. அதை இப்பொழுது அமுலுக்குக் கொண்டுவரக்கூடிய நிலை இல்லை. கிராமங்களிலுள்ளவர்கள் வறுமையினுல் வாடுவதால், குடிமராமத்து வேலையை அவர்களால் கவனிக்க முடியவில்லை. கால்வாய்களையும் துரஸ்து செய்வதை அரசாங்கமே மேற்கொள்ள வழிவகை செய்யவேண்டும். அநேக கால்வாய்கள் குடிமராமத்து செய்யப்படாததினுல், தூர்ந்துபோய் விட்டிருக்கின்றன. குடிமராமத்து இன்னும் அமுலில் இருக்கிறது என்ற ஒரு நிலைமை இருப்பதினுல், அவைகள் மராமத்து செய்யப்படாமலேயே இருந்து வருகின்றன. ஆகவே, பாசன வசதிகள் மிகவும் குன்றிப் போய்விட்டன. அரசே இதை மேற்கொள்ளவேண்டிய நிலைமைதான் கிராமங்களில் இருந்து கொண்டுவருகிறது. ஆகவே, அந்த மராமத்து திட்டத்தை அரசே தன்னுடைய மேற்பார்வையில் மேற்கொண்டு பாழடைந்து

இடக்கும் கால்வாய்களையெல்லாம் ஆராய்ந்து செய்வதற்கு வழிவகைகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

நண் பகல் 12—00 * திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையின் மீது சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சர்க்கார் தரப்பிலேயே தொழிலை நிர்வகிக்கின்ற பூரணமான பொறுப்பை ஏற்றுக்கொள்கிற நிலை உருவாக வேண்டும். தேசத்தில் ஏற்படுகிற தொழில்கள் பணமுடக்கடியின் காரணமாக ஸ்தம்பிக்கிற நிலைமை ஏற்படாதிருக்க சர்க்காரே ஏற்று நடத்துகின்ற நிலைமையை உருவாக்குவதன் மூலமாகத்தான் இந்தப்பிரச்சனைக்குத் தீர்வு காணமுடியும்.

இன்றையதினம் பாங்குகள், நிதி கார்ப்பரேஷன்கள் எல்லாம் லாப நோக்கோடு கடன் கொடுக்கிறார்களே தவிர அந்தத் தொழில் நல்ல முறையில் வளரவேண்டுமென்ற நிலைமை இல்லை. அந்த பாங்குகள், நிதிக்கார்ப்பரேஷன்கள் எல்லாம் அரசின் கட்டுப்பாட்டுக்கு வரவேண்டும். இல்லையென்றால் அதுவே தொழில்கள் ஏற்படுவதற்குத் தடையாக இருக்கும். குறிப்பாக லோகநாதன் கமிட்டி சிபார்சு செய்தும், பல தொழில்களுக்குச் சர்க்கார் காரண்டி கொடுத்தும் அவற்றுக்கு இவை நிதி உதவி அளிக்க மறுக்கிறது. ஆகவே இதைக் காட்டிபோ நம்முடைய தமிழக அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கான நிலைமையை உருவாக்குவது நல்லது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமங்களில் இருக்கிற பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன்கள் இவற்றின் வருவாயை நாம் உயர்த்தியாக வேண்டும். அப்போதுதான் கிராமங்களின் குடிநீர், சுகாதாரம், கல்வி, ரோடு போன்றவற்றை அவர்களால் மேம்படுத்த முடியும். ஆகவே அவர்களுடைய வருவாயை அதிகப்படுத்த சினிமாக்கொட்டகைகள், பஸ்கள் போன்றவற்றை நடத்த அவர்கள் முன்வந்தால் அதற்கு நாம் அனுமதி அளிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுடைய வருவாய் பெருக சந்தர்ப்பம் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து. பெருவாரியான கைத்தறித் தொழிலாளர்கள் கைத்தறி மூலம் கூலி உயர்வு கிடைக்காமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கைத்தறித் துறையில் உள்ளவர்களுக்கு 12 ஆயிரம் விசைத்தறிகளைப் பகுத்துவதாக இருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த விசைத்தறிகளை கைத்தறி நெசவாளர்களுக்குக் கூட்டுறவுத்துறையில் வழங்கி அவர்களுடைய கூலியையும், வாழ்வையும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித்துணிகள் தேங்கிக் கிடப்பதன் மூலம் அந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. வெளிநாடுகளில் இவற்றுக்கு மார்க்கெட் கண்டுபிடித்து எப்படியாவது ஏற்றுமதி செய்வதற்கான வழிவகைகளைக் காணவேண்டும் என்று





தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தை ஏற்று நடத்துகின்ற பொறுப்பை அரசே எடுத்துக்கொள்ளுமானால் நல்ல தீர்வு காணமுடியும். கணிசமான வருவாயும் கிடைக்கும். கைத்தறித் தொழிலாளர்களுடைய வாழ்வை வளப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக்கொடுக்க முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் விவசாய அபிவிருத்தி செய்யவேண்டுமென்று சொன்னால் ஆங்காங்கு இருக்கிற முழு அளவு பயன்படுகிற பெரிய திட்டமாக இருந்தாலும் சரி, சிறிய திட்டமாக இருந்தாலும் சரி, தயக்கம் இல்லாமல் எடுத்து நடத்த முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் .

அடுத்து, தரிசாகக் கிடக்கிற புறம்போக்கு நிலங்களையும், நிலவுச்சவரம்புச் சட்டத்தின் அடிப்படையில் கிடைக்கிற நிலங்களையும் எடுத்து உழைக்கின்ற நிலம் இல்லாத விவசாயிகளுக்குக் கொடுக்க அரசு முன்வரவேண்டும். அப்போதுதான் உணவுத்துறையில் தன்னிறைவு காண்பதோடு பெருமளவு உபரி ஏற்படக்கூடிய அளவில் உற்பத்தியைப் பெருக்க முடியும்.

கல்வி சம்பந்தப்பட்ட மட்டில் மாணவர்களுக்கு பிற்காலத்தில் தொழில்களைத் தாங்களே நடத்துவதற்கு வாய்ப்பான கல்வியை, அந்தச் சக்தியை அவர்களிடத்தில் ஏற்படுத்தும்படியான கல்வியைப் போதிக்கவேண்டும். வெறும் குமாஸ்தாக்களாக வரக்கூடிய தகுதியைமட்டும் அளிக்கிற கல்வி முறையை மாற்ற வேண்டும். விஞ்ஞானத் துறையில் நல்ல வளர்ச்சி கண்டிருக்கிற நாடுகளில் எல்லாம் இதுபோன்ற கல்வி முறைகள் தான்—தாங்களாகவே தொழிலை நடத்துகின்ற சக்தியை அளிக்கின்ற கல்வி முறையைத்தான்—அளிக்கிறார்கள். இத்துறையிலும் நமது தமிழக அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து, தமிழ்நாட்டு மக்கள் வேலையில்லாமல் வருடா வருடம் வந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பது என்பது கடினமான காரியம். இருந்தாலும் கூடுமான வரையில் சமாளித்தாக வேண்டும். அதற்காக ஒரு கமிட்டியைப் போட்டு எந்த எந்தத் துறையில் வேலைவாய்ப்புக்களை அதிகப்படுத்தி, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முயற்சி எடுத்துக்கொள்ளலாம் என்பதைப்பற்றி இந்த அரசு பரிசிலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச சந்தர்ப்பம் தந்ததற்காக நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஒட்டி. எனது கருத்துக்கள் சிலவற்றை இந்த அவையில் கூற விரும்புகிறேன். சட்டமும், ஒழுங்கும், அமைதியும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் ஆளும் கட்சியில் இருப்பவர்களுக்குள்ள

அக்கறையைப் போன்று, எதிர்க்கட்சியில் உள்ளவர்களுக்கும் இருக்கிறது என்பதை உணர்ந்து முதன் மந்திரி அவர்கள் செயல்பட்டிருப்பது குறித்து முதன்முதலாக தங்கள் மூலமாக நான் என்னுடைய கருத்து ஒன்றைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

நேற்றைய, அதற்கு முந்தின தினங்களில் சென்னையில் நடந்திருக்கும்படியான பரபரப்பான சம்பவங்களைக் குறித்து சென்னை நகரில் இருக்கிற நிலைமையைப் பார்க்கிறபோது முதல் அமைச்சர் அவர்கள் உன்னிப்பாகக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக இன்றைய தினம் மாணவர்கள் அவர்களுடைய விடுதிகளில் இல்லாமல் தெருக் தெருவாய் அலைகிறார்கள். வெளி ஊரில் இருந்து வந்து விடுதியில் தங்கியிருக்கக்கூடிய எல்லா மாணவர்களுக்கும் சென்னையில் தங்க இடம் இருக்கிறது என்று சொல்ல முடியாது. தொழிலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிற நேரத்தில் மாணவர்களும் நல்லமுறையில் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை அரசாங்கம் உணர வேண்டும். இன்றைக்கு விடுதிகளை விட்டு வெளியேற்றப்பட்டிருக்கிற அவர்கள் சென்னை நகரில் தெருத் தெருவாய்த் திரிகின்ற நிலை இருக்கிறது. காரணம், அவர்கள் எல்லோரும் வெளியூரில் இருந்து வந்தவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இடையில் குறுக்கிட்டுச் சொல்லிவிடுவது நல்லது என்று கருதுகிறேன். இரண்டு நாட்களாக மாணவர்களுக்கும் ஆங்காங்கு பெரிய அதிகாரிகளின் மூலமாக தக்க உதவிகளும், பாதுகாப்பும் அளிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும் ஏதாவது இடர்ப்பாடுகள் இருந்தாலும் அது கவனிக்கப்பட்டு வசதிகள் செய்துதரக்கூடிய நிலைமையில் இருக்கிறோம் என்று குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. டி. மார்டின் :** சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் எல்லா மாணவர்களும் வந்து சேரவில்லை என்ற நிலைமை இருக்கிறது. மாணவர்கள் எல்லோரும் பாதுகாப்பாக அந்த விடுதிக்கு வந்து சேர்ந்துவிட்டார்கள் என்ற ஒரு அறிவிப்பை அரசு கொடுக்கவேண்டும். அப்போதுதான் வெளியூரில் இருக்கக்கூடிய அவர்களுடைய பெற்றோர்களுக்கு நிம்மதி ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படும். தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டியதுதான். அதே நேரத்தில் மாணவர்களுக்கும் பாதுகாப்புக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வருகிற ஆண்டில் மெடிகல் கல்லூரிக்கு மாணவர்கள் எந்த அடிப்படையில் பொறுக்கி எடுக்கப்படுவார்கள் என்பது பற்றிய அறிக்கையை இந்த அரசு மக்கள் மத்தியில் கொடுக்க வேண்டும். கடந்த ஆண்டு சரியான முறையில் தேர்ந்தெடுக்கப்படாததும், அதன்பேரில் மாணவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்றதும், முன்பு நிராகரிக்கப்பட்ட மாணவர்களிலேயே சிலர்



திரும்பவும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று தீர்ப்பு அளிக்கப்பட்டதையும் நினைவில் வைத்துக்கொண்டு அவ்வாறு வேறுபாடு காட்டாத நிலையில் இவ்வாண்டு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை வகுத்து அதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் ஒன்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மருத்துவக் கல்லூரிக்கு ஆள் சேர்க்கின்ற நிலையில் பெற்றோர்களைப் பற்றிய விவரம், எஸ்.எஸ்.எல்.சி. மார்க்குகள், பி.யு.சி. மார்க்குகள், நேர்முகத் தேர்வு மார்க்குகள் ஆகியவைபற்றி அறிக்கை வெளியிட வேண்டும். அந்தவிதமாக வெளியிட்டால்தான் பெற்றோர்களுக்கு, நீதியாக தேர்வு நடந்ததா என்பதைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கும்.

மேலும், உயர்நீதி மன்றத்தில் வேலை செய்கிறவர்களுக்கு செக்ரடேரியட்டில் வேலை செய்கிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் கொடுக்கப்படவேண்டும். அது அவர்களுடைய நீண்டநாளைய கோரிக்கை. அப்படிக் கொடுப்பது அந்த ஊழியர்களுக்குப் பெரும் நன்மை செய்ததாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் ஒரு விந்தை என்னவென்றால், உயர்நீதி மன்றத்திலே ரூல்ஸ் கமிட்டி செகரட்டரி என்று ஒரு பதவி இருக்கிறது, அது ஒரு உயர்ந்த பதவி. அவருக்குக் கீழே வேலைசெய்யும் குமாஸ்தாக்களுக்குள்ள ஊதியம் கூட அவருக்குக் கிடைக்கவில்லை. ஏதோ ஹானரோரியம் என்று வாங்கினாலும்கூட அவருடைய வேலைப் பளுவை நினைத்து அவருக்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்குபற்றி எனக்கு முன்னால் பேசிய எதிர்க்கட்சி நண்பர்களும் ஆளுங்கட்சி உறுப்பினர்களும் கூறினார்கள். ஏதோ துர்ப்பாக்கியமான நிலையில் இருக்கிறதோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. குற்றமற்ற ஒருவனை டாக்டரிடம் அழைத்துச் செல்கிறார்கள், டாக்டரிடம் சொல்லி சர்டிபிகேட் வாங்கப்படுகிறது. அவனை நீதிபதிமுன் கொண்டு நிறுத்துகிறார்கள். நீதிபதி சர்டிபிகேட்டுக்கும் ஆளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று விடுதலை செய்துவிடுகிறார்கள். என்னுடைய தொகுதியிலே சாத்தான்குளம் டவுனிலே நடந்திருக்கிறது, இரண்டு வழக்குகள் இந்த விதமாக. யாரோ ஒருவரை கோர்ட்டிற்கு அழைத்துச் சென்று நிறுத்தி விடுகிறார்கள், நீதிபதி அவர்கள் சர்டிபிகேட்டைப் பார்த்ததும் நிற்கக்கூடிய ஆளுக்கும் சர்ட்டிபிகேட்டுக்கும் சம்பந்தமில்லை என்று சொல்லி விடுதலை செய்திருக்கிறார்கள்.

சென்னையிலே தமிழக அரசின் பேருந்துகள் எல்லாம் ஏதாவது மோதல் அல்லது சிக்கலான சந்தர்ப்பங்களிலே ஓடாமலே அந்தந்த இடங்களிலே நிறுத்தப்பட்டு அங்கங்கேயே பேருந்து ஊழியர்கள் இறங்கிவிடுகிறார்கள். அந்தவிதமாக நிறுத்தாமல் பொது மக்களுக்கு எந்தவிதமான இடைஞ்சலும் துன்பமும் ஏற்படாமலே

அந்தந்த டெப்போக்களில் பேருந்துகளைச் சேர்த்துவிட்டு தங்களுடைய கோரிக்கைகளை அரசுக்குச் சொல்லுகின்ற முறையிலே பணிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தந்த இடங்களிலேயே பேருந்துகளை நிறுத்திவிட்டால் நஷ்டம் ஏற்படுகிறது, அது நம்முடைய நஷ்டம்தான். ஆகவே அந்தவிதமான இழப்பு ஏற்படாத வகையில் இந்த ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்கள் தங்கள் தங்கள் விடுதிகளுக்குச் செல்லாமல் யார் யார் அலைந்து கொண்டிருக்கிறார்களோ அதைப்பற்றி பகிரங்கமாக ஒரு அறிக்கை விட்டு அவர்களை விடுதியில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். மாணவர்கள் துணிமணிகளை இழந்திருக்கிறார்கள், பொருள்களையும் இழந்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தங்களுடைய பெற்றோர்களிடமிருந்து வாய்ப்பும் வசதியும் வருவதற்கு முன்பாகவே அரசு அவற்றைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** சட்டசபை மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிற துணை மானியக் கோரிக்கையின்மீது சில வார்த்தைகளை இந்த மாமன்றத்திலே கூறுவதற்குக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆம்பூர் நகரம் ஏறத்தாழ 50 ஆயிரம் மக்கள் வசிக்கின்ற நகரம். அங்கே நெசவாளர்களும் பீடித் தொழிலாளர்களும் தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களும் வாசம் செய்கிறார்கள். அவர்கள் அங்கு இருக்கிற நகர மன்றத்தின் மூலமாக பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று தீர்மானம் போட்டு மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே கோரிக்கையைச் சமர்ப்பித்து இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை உடனடியாக அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆம்பூர் தொகுதியைப் பொறுத்தவரையிலும் ஏற்கனவே காட்டு இலாகாவாலே மேலரசன்பட்டு என்ற காட்டில் ஒரு அணையைக் கட்டுவதற்கு சர்க்காருடைய பரிசீலனையில் திட்டம் இருந்து வருகிறது. அதைக் கட்டுவதினாலே 1,600 ஏக்கர் நிலம் தரிசு நிலமாகக் கிடக்கின்ற நிலம் சாகுபடியாகக்கூடிய நிலமாவதற்கு வழி ஏற்படும். ஆகவே அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆம்பூர் தொகுதியிலே அகரம் என்ற ஆற்றைக் கடக்கிற பஸ்கள் 10 பஸ்கள் கடந்துசெல்கிற நிலைமை இருக்கிறது. மழை காலத்திலே தண்ணீர் வந்து விட்டால் அந்த ஆற்றைக் கடந்து செல்வதற்குக் கிட்டத்தட்ட 10 மைல் கடந்து சென்று போய் உணவுப்பொருள்களை வாங்கிக்கொண்டு வந்து குடும்பம் நடத்தக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே அந்த மேம்பாலத்தை கட்டுவதற்குத் திட்டம் இருந்தும்கூட அது செய்யப்படவில்லை. அதை உடனடியாகச் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.





ஆம்பூர் தொகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களும் பீடித் தொழிலாளர்களும் வாசம் செய்கிற இடத்திலே நியாய விலைக் கடைகளை அதிகமாக ஏற்படுத்தவேண்டுமென்றும் அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்திலே அரிசன நல இலாகா அதிகாரிகளை அணுகி தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பட்டா வழங்குவதிலேயும், வீட்டு மனைகள் வழங்குவதிலேயும் உள்ள பிரச்சனைகளுக்காக அவர்களைப் பார்க்கிறபோதும், பிணம் எடுத்துச்செல்வதற்கும் இடம் இல்லாமல் இருக்கிற பிரச்சனையிலும் அவர்களை அணுகுகிற நேரத்திலே அவர்கள் சரியாகச் செயல்படவில்லை. வீட்டு மனைகளுக்கு வேண்டிய மனுக்களை செய்தும்கூட ஆம்பூர் தொகுதியிலே 30 கிராமங்களிலே வீட்டுவசதியின்றி மக்கள் வாசம் செய்கிற நிலையிலே, மனிதாபிமானங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் என்ற நிலையில் அவர்கள் காட்சியளிக்கக்கூடிய நிலையிலே வீட்டு மனைகளைப் பற்றிய பிரச்னையும், சுடுகாட்டுப் பிரச்னையும், சவம் எடுத்துச் செல்வதற்கு வழியில்லாத பிரச்சனையும் பெரும்பாலும் இருந்து வருகிறது. இதையெல்லாம் தீர்ப்பதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது நம்முடைய தமிழக சர்க்கார் பொறுப்பேற்ற பிறகு இந்த அரிசன நல இலாகாவிலே உள்ள அதிகாரிகளை மாற்றுதல் செய்து அந்த நிலைமை உண்டாக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். ஏழை அரிசன மக்கள் அதிகாரிகளை அணுகி அவர்களுடைய கோரிக்கைகளைப்பற்றிக் கேட்க முடியாத அளவுக்கு ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி அவர்களுக்கு பதில் சொல்லாமல் வெளியே அனுப்புவது என்பதைத் தான் முதல் கட்டமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நல்லமுறையிலே செயல்படவேண்டும். நல்ல முறையிலே பணியாற்ற வேண்டும் என்பதற்கு உடனடியாக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாக்கப் பாளையம், கீழ்முறை, பெரியான்குப்பம் போன்ற கிராமங்களிலே அரிசன நலத் துறை அதிகாரிகளோடு போய் நான் பார்க்கிற நேரத்திலே அவர்கள் வசிக்கின்ற இடம் பன்றிகள் வசிக்கிற பகுதியாகத்தான் இருப்பதைப் பார்த்தேன். நானும் சட்ட மன்ற உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களும் சென்று பார்த்தோம். இவற்றைப் போக்குவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே உடனடியாக அதைக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த துணை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. அ. லெ. சுப்பிரமணியம் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த துணை மானியத்தை வரவேற்று ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சென்ற கூட்டத்தொடரிலேயும் இந்தக் கூட்டத்தொடரிலேயும் காங்கிரஸ் கட்சி நண்பர்கள் எல்லோரும், தி. மு. க. அரசாங்க பட்ஜெட் கிராம மக்களுக்கு நன்மை செய்யக்கூடியதாக இல்லை என்ற குற்றச்சாட்டை பலமாகக் கூறி வந்தார்கள். அந்தக் குற்றச்சாட்டை மறுக்கிற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த பட்ஜெட் கிராம மக்களுக்கு உகந்த பட்ஜெட் என்று தெளிவாகச் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற இந்த துணை மானியத்தைப் பார்க்கிற நோக்கிலே அதை உணர முடியும்.

ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் வரி வசூலிக்கின்ற பொழுது அதற்குக் கூடுதலாக 30 சத வீதம் மாச்சிங் கிராண்ட் ஆகத் தந்திருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் பேணி வருகின்ற தாய்சேய் நல விடுதிகளுக்காக 15 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதேபோல் ஊராட்சி ஒன்றியங்களின் சாலைகளை அமைப்பதற்காக 8.5 லட்சம் அதிகமாக ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். கடுங்காற்றால் நிலைகுலைந்துபோன சிறுபாசன வாயில்களைச் சீராக்குவதற்காக அதிக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. நீர்ப்பாசனத்திற்காக 108 லட்சத்திலிருந்து 165 லட்சமாக அதிகமாக ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். உரம் வாங்குவதற்காக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு 47.5 லட்சம் ரூபாய் அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் ஒன்றாகப் பார்க்கிறபோது கிராம மக்களுக்குப் பயன்படுகிறவை தானே தவிர இவையெல்லாம் நகர மக்களுக்காக இல்லை என்பதை காங்கிரஸ் நண்பர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடுங்காற்றால் நிலைகுலைந்துபோன சிறுபாசன வாயில்களைச் சீரமைப்பச் செய்கின்ற நிலையிலே இருக்கிறோம். மத்திய அரசாங்கம் சென்ற முறை புயலாலே பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சில லட்சம் ரூபாய் கடன் தந்திருக்கிறார்கள், பொற்கொல்லர்களுக்குக் கடன் தந்திருக்கிறார்கள். அவையெல்லாம் மானியம் என்று நினைக்கிறோம், ஆனால் அவை மானியமல்ல கடனைத்தான் தந்திருக்கிறார்கள். ஆனால் இந்த அரசு கிராம மக்களிடத்திலே எப்பொழுதும் பரிவோடு நடந்திருக்கிறது. இதையெல்லாம் பார்க்கிறபோது இந்த அரசு கிராம மக்களுக்கு அதிகமாகச் செய்திருக்கிறது என்பது தெளிவாகிறது என்பதை காங்கிரஸ் நண்பர்களுக்கு மிகத் தெளிவாக எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இன்னொரு முக்கிய பிரச்சினையை நான் இந்த மன்றத்தில் முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மத்திய அரசாங்க ஊழியர்கள் தங்கள் கையெழுத்தைக் கூட தமிழில் போட உரிமையற்றவர்களாக இருக்கிறார்கள். திருநெல்வேலியில் அஞ்சல் துறையில் வேலை செய்பவர்கள் தங்கள் கையொப்பத்தை ஆங்கிலத்தில் இருப்பதை மாற்றி தமிழில் போட வேண்டுமென்ற கோரிக்கைகளை எழுப்பினார்கள். மேலேயிருந்த அதிகாரி, ஏன் நீங்கள் திடீரென்று ஆங்கிலத்தில் இருப்பதை



தமிழில் மாற்றவேண்டுமென்று கேட்கிறீர்கள் என்று கேட்டதற்குப் பதிலாக அவர்கள், தமிழில் கையெழுத்து இடுவது எங்கள் பிறப்புரிமை என்று திரும்ப பதில் அனுப்பினார்கள். அதற்கு பி. எம். ஜி. அவர்கள், எம்.எஸ்.டி.ஸி.எ./4/89/67, பி.ஸி.டி. டேட்டட் 6—3—1968 என்ற ஒரு சுற்றறிக்கையில் குறிப்பிட்டிருப்பது.

In the absence of a specific provision in the rules permitting Central Government officials to sign official documents in the regional language, the request for permission to change the signature from English to Tamil cannot be granted.

என்பதாகும். அவர்களுக்கு தங்கள் கையெழுத்துக்களை தாய் மொழியாகிய தமிழில் போட உரிமையில்லையா என்று வருத்தத்துடன் கேட்கிறேன்

அடுத்து, இந்தி ஆசிரியர்கள் பற்றி ஒரு வார்த்தை. நம்மிடமிருந்து மானியம் பெறக் கூடிய பள்ளிகளில் உள்ள இந்தி ஆசிரியர்களை மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு இந்தி பாடம் சொல்லிக் கொடுக்க அமர்த்தியிருக்கிறார்கள், பார்ட் டைமாக. அதற்கு அவர்கள் சம்பளம் வாங்குகிறார்கள். அவர்களை முழு நேர ஆசிரியர்களாக்கி இந்திய சர்க்காரே அவர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினால் இங்குள்ள இந்தி ஆசிரியர்களுக்கு வேலை கொடுத்ததுபோலவும் ஆகும், அவர்களுக்கு சம்பளம் கொடுக்கும் செலவு மத்திய அரசையும் சாரும்.

அடுத்து, லாரி ப்ரோக்கர்ஸ் லைசென்ஸ் பற்றியதாகும். இப்போது லாரி புரோக்கர்கள் ஒருவிதக் கட்டுப்பாடும் இல்லாமல் அதிகப்படியான பளுவை லாரிகளில் ஏற்றிச் செல்லுகிறார்கள். ஆகவே, லாரி ப்ரோக்கர்ஸ் லைசென்ஸ் என்று வைத்துவிட்டால் அவர்களையும் நம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவும் முடியும், நமக்கு அதனால் நிதியும் கிடைக்கும். அரசாங்க ஊழியர்களுக்கு ஜீப்ஸ் கொடுப்பதற்குப் பதிலாக அம்பாசிடர் கார் கொடுத்தால் செலவும் குறையும் என்று கூறி எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தலைவர் அவர்களே, இந்த துணை மானியக் கோரிக்கைகள் மீது பேசக் கிடைத்த வாய்ப்புக்கு என் நன்றி. பல துறைகளில் பல மாறுபட்ட செயல்கள் நடந்தாலும் குறிப்பாக விற்பனை வரி பொறுத்தமட்டில் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். எங்கு பார்த்தாலும் செக் போஸ்ட்களிலும், இந்த இலாகாவைச் சேர்ந்தவர்களும் செய்கிற அட்டூழியங்களும் அக்கிரமங்களும் உண்மையில் சகிக்கமுடியாத அளவில் இருக்கின்றன. நேர்மையில்லாதவர்களிடம் காசை வாங்கிக் கொண்டு விட்டுவிடுகிறார்கள், லாரி லாரியாக லோட்ஸ் போகின்றன. ஆனால் ஏழைகளிடம், நியாயத்திற்கும் சட்டத்திற்கும் கட்டுப்பட்டு போகிறவர்களைத் தடுத்து சட்ட ரீதியாக கொள்ளை அடிக்கிறார்கள். கேட்டு ஏதாவது கொடுக்க மறுத்தால் சட்டப்படியே ரசீது கொடுத்துக் கூட பணம் வாங்குகிறார்கள்.

இந்தமாதிரி ரசீது கொடுத்து வாங்குவது தவறு, அது சட்ட விரோதமானது என்று கடிதம் எழுதி அதிகாரிகளோடு வாதாட வாய்ப்புள்ளவர்களுக்குத்தான் அதைத் திரும்பப் பெற முடிகிறது. பலருக்கு அத்தகைய வாய்ப்பில்லாமல் பணத்தை இழந்துவிட்டுப் போகும் நிலையில் இருக்கிறார்கள். அப்படி அக்கிரமமாக வாங்கி பின்னர் எழுதிக் கேட்டு திரும்பப் பெற்றிருக்கிறார்கள் பல நூற்றுக் கணக்கான பேர்கள். அப்படி எழுதியும் திரும்பப் பணம் கிடைப்பதற்கு அதிக காலதாமதமாகிறது. அதிகப்படியாக வாங்கிய தொகையைத் திரும்பப் பெறுவதற்கு பல ஆண்டு காலமாகிறது. நியாயமாக ஒருவர் கணக்கை வைத்திருந்தாலும் டேர்ன் ஓவரில் கால் பங்கு கூட்டி விடுகிறார்கள். இப்படி நேர்மையாக நடப்பவர்களை நேர்மையாக நடக்கவொட்டாமல் தடுப்பதைத் தடுக்கவேண்டும்.

கோவையில் அரிசி சப்ளையில் உள்ள சில ஊழல்கள் பற்றிச் சொன்னேன். கேரளத்திற்கு போவதை தடுத்து நிறுத்தும் முறையில் நீங்கள் துணை புரிந்தால் நகரத்திற்குள் அரிசி விற்பதற்கு வாய்ப்பளிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நகரத்திற்கு வெளியே இருப்பது கேரளத்திற்குப் போவதை எப்படித் தடுக்கமுடியும் என்று என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை. ஏழை எளியவர்கள் இரண்டு படி அரிசி வேண்டுமென்றால் நகரத்திற்கு வெளியே போய் வாங்கக்கூடிய துர்ப்பாக்கியகரமான நிலை இருக்கிறது. இந்நிலை எவ்வளவு ஆண்டு காலம் இருக்குமோ தெரியவில்லை. எவ்வளவு சொன்னாலும் இதைப் பற்றிக் கவனிப்பதேயில்லை. இந்த ஆட்சி மீது குற்றஞ்சாட்ட வேண்டுமென்று நாங்கள் கூறவில்லை. மக்கள் நல்லமுறையில் சந்தோஷமாக வாழவேண்டுமென்ற வகையில்தான், அப்பழுக்கில்லாத வகையில்தான் வேண்டுகோள் விடுக்கிறோம். அதிகாரிகளிடம் இதுபற்றி ஏன் சொல்லவில்லை என்று கேட்பார்கள். அமைச்சர்களுக்கு, பல அக்கிரமங்கள் பற்றி கடிதம் எழுதியனுப்பினாலும் பதில் வரும் வழக்கம் இல்லை. சட்டமன்ற உறுப்பினர்களை மக்களின் பிரதிநிதிகள் என்று மதித்து எங்கள் கடிதங்களுக்கு பதில் எழுதவேண்டுமென்று கெஞ்சிக் கேட்டு எழுதினாலும் பதில் வருவதில்லை. பாராளுமன்றத்தில் 700-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இருந்தாலும் அவர்களிடம் இருந்து செல்லும் கடிதங்களுக்கு நான்கு தினங்களுக்குள் பதில் வருவதாக அறிகிறேன். இங்கு பதில் வருமோ வராதோ என்ற நிலைதான் இருக்கிறது. ஆகவே எங்களை மக்களைப் போல் மதித்து எங்கள் கடிதங்களுக்கு ஒரு பதிலாவது கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு சிவப்பு லைட் எரிவதால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

**திரு. ஆ. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, இந்த துணை மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம் அரசாங்கம் கல்வி, விவசாயம், தொழில், இவற்றிற்காக இந்த ஆண்டு பல கோடி ரூபாய் ஒதுக்கி, மேலும் பல கோடி ரூபாய் இந்த துணை மானியக் கோரிக்கை மூலம்





ஒதுக்குவதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன். என் தொகுதியில் சிதம்பரம் வட்டத்தில் குரியாமங்கலம் வாய்க்காலை வெட்டித் தருவதாக எங்கள் பகுதியில் நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கில் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். ஆனால் அந்த வேலை இதுவரை நடைபெறவில்லை. அதை உடனடியாக இந்த ஆண்டே செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியில் வெள்ளாறு என்ற ஆறு ஓடுகிறது. மழைக் காலத்தில் வெள்ளம் பெருகிவிடுவதனால் இரண்டு பக்கங்களிலும் வெள்ளம் புரண்டோடுவதால், விவசாயிகள் நன்கு விவசாயம் செய்து அறுவடை செய்யும் காலத்தில் வெள்ளம் வயல்களில் புகுந்து விடுவதால் அறுவடை பாதிக்கப்பட்டு விவசாயிகள் பல தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். ஆகவே உடனடியாக அதன் இரண்டு கரைகளிலும் தடுப்பு அணைகள் போட்டு விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஆறு ஓடுவதால் ஓரத்தூர், சாத்தான்குடி, மேலமுங்கிடி கிராமங்களில் உடைப்பு எடுத்து அங்குள்ள வீடுகளை அழித்துக் கொண்டு வருகிறது. ஆகவே அங்குள்ள அந்த ஆற்றுக் கரைகளுக்கு தடுப்புச் சுவர்கள் போட்டு அந்த வீடுகள் அழிந்துவிடாமல் தடுக்க வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியில் பல ஏரிகள் இருக்கின்றன. சிறிய பாசனம் என்ற தலைப்பின்கீழ் அந்த ஏரிகள் இயங்குகின்றன. 10, 15 ஆண்டுகளுக்கு முன்பாக பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அந்த ஏரிகளின் மூலம் பாசன வசதி பெற்று விவசாய அபிவிருத்தி அதிகமாக இருந்து வந்திருக்கிறது. இப்போது அவைகளை பலர் ஆக்கிரமித்திருப்பதால் அந்த ஏரிகள் தூர்ந்துபோய் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்கள் சாகுபடி வசதி இல்லாமலிருக்கின்றன. ஆகவே அதைக் கண்காணித்து அந்த ஏரிகளை எடுத்து நல்ல முறையில் வெட்டிக் கொடுத்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் நீர்பாசனம் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும். பிற்பகல் 12-30
பஞ்சாயத்து யூனியனிலுள்ள சில ரோடுகள் பஞ்சாயத்து யூனியன் தலைவராலே புறக்கணிக்கப்பட்டு சில கிராமங்களுக்கு பாதை வசதி இல்லாமலிருக்கிறது. குறிப்பாக என் தொகுதியிலே பரங்கிப்பேட்டை யூனியனைச் சேர்ந்த சில கிராமங்கள் நடைபாதை வசதி இல்லாமல் நீண்ட நெடுங்காலமாக இருக்கின்றன. அதை நம் தமிழக அரசு, கூட்டுமன்ற ஆணையாளருக்கு, அது போன்ற ரோடு வசதியில்லாத ஊர்களுக்கு முன் அறிவிப்பு கொடுத்து உடனடியாக நடைபாதை செய்து கொடுக்க வேண்டுமென்று நான் மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மற்றும் என் பகுதியிலே மீனவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அந்த மீனவர் பகுதியிலுள்ள இடங்களுக்கு ரோடு வசதியே கிடையாது. அவர்களுக்கு ஏதாவது உடல்நலக் குறைவு என்றால் அவர்கள் பிணத்தைக் கொண்டு செல்வது போல கட்டிலிலே தூக்கிக்கொண்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லக்கூடிய

நிலையிருக்கிறது. அதையும் தமிழக அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இப்பொழுது விவசாயிகளுக்கு நல்ல முறையில் சிதம்பரம் வட்டத்திலே உரம் கிடைக்கச் செய்தமைக்காக தமிழக அரசை விவசாயிகள் மனப்பூர்வமாக பாராட்டுவார்கள் என்று கூறி, நானும் விவசாயி என்ற முறையில் நமது தமிழக அரசைப் பாராட்டி, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவரவர்களே, அவையின்முன் வைக்கப்பட்டிருக்கும்படியான 1967-68-ம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகளிலே என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த வருஷம் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை ஏற்பட்ட பின்னால் துணை மதிப்பீடுகள் இரண்டாவது தரமாக வைக்கப்படுகிறது. ஏற்கனவே ஒரு சப்ளிமெண்டரி கிராண்ட் 40 கோடி ரூபாய் அளவிலே வைக்கப்பட்டது. இப்பொழுது இரண்டாம் தரமாக, 24 பகுதிகளிலே வைத்திருக்கிறார்கள். துணை மதிப்பீடுகள் என்றால் பட்ஜெட் தயாரிக்கும்போது எதிர்பார்க்காமல் பிறகு செலவினங்கள் ஏற்படுமேயானால் அதை வைத்தால் மிக்க நன்றாகயிருக்கும். முதல் சப்ளிமெண்டரி கிராண்ட் வந்தபொழுது 39 கோடி ரூபாய், மறுபடியும் 9 கோடி ரூபாய் வந்திருக்கிறது என்றால் பட்ஜெட் தயாரிக்கும்பொழுது எதிர்பார்க்காமல், எதிர்பாராது இருக்கும்படியான நிலைமை ஏற்பட்டால் வரவேற்கலாம். ஆனால் சாதாரண நடைமுறை விஷயங்களில் அதிகப்படியான செலவு ஏற்பட்டு உபமானியக் கோரிக்கையிலே வைப்பது அவ்வளவு பொருத்தமுடையதல்ல. எதிர்பாராத செலவுகளுக்காக வந்தால், பட்ஜெட் நல்லவிதத்திலே தயாரித்திருந்தார்கள் என்ற பெருமையைப் பெற்றவர்களாவீர்கள். ஆனால் இப்பொழுது அந்த பெருமை இல்லை என்பதைக் குறித்துச் சொல்வதற்காக அல்ல. இதுமாதிரி அவ்வப்பொழுது "டோக்கன் கிராண்ட்" என்று வைத்துக்கொண்டு அதிகமாகச் செலவு செய்தால், சர்க்கார் நினைத்தால், இதுபோல லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாயை விரயம் செய்யும்படியான சூழ்நிலை ஏற்படும் என்பதற்காகத்தான் கூற விரும்புகிறேன். சப்ளிமெண்டரி கிராண்ட், முதல் பட்ஜெட்டின் 10 சதவிகிதம் அல்லது 15 சதவிகிதம் இருக்கலாம். ஆனால் இப்பொழுது 30 சதவிகிதம், 40 சதவிகிதம் வந்திருப்பது மிகவும் வருந்துவதற்குரிய விஷயம் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயத்தைப்பற்றி அதிகம் துணை மதிப்பீட்டில் கொடுத்திருக்கிறார்கள். விவசாயத்தைப் பொறுத்தவரையில் பாசன வசதியைப் பெறலாம். வரவேற்கத்தக்க அம்சம்தான். விவசாயத்திலே முற்போக்கு இருக்கும்படியான அளவிற்கு அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தாலும், அவர்களுக்கு





ஊக்கம் அதிகமாகக் காட்டவேண்டும். விவசாயிகள் பாசன வசதிகள் கேட்கும்பொழுது விவசாயிகளுக்கு நேரடியாகப் போகும்படியான நிலை இருக்க வேண்டும். ஆனால் இப்பொழுது கொள்முதல் திட்டம்—மீண்டும், மீண்டும் இதையே வற்புறுத்துகிறேனே என்று நினைக்கக்கூடாது—நேர்மையாக இன்றைக்கு இவ்வளவுதான் என்று அமைக்க வேண்டும். "அவெய்லபிள் மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ்"-க்கு 8, 9 இலட்சம் போட்டிருக்க வேண்டும். அப்பொழுது ஆதரவு கொடுக்கத் தயாராகயிருக்கிறோம். எல்லோருக்கும், ஜில்லாவிற்கு ஜில்லா வித்தியாசமில்லாமல் "அவெய்லபிள் மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ்" வாங்கிக்கொள்ளலாம். சீராக அமைய வேண்டுமென்பதற்காக சிறு விவசாயிகளுக்கு அதிகமாக தொந்தரவு இல்லாமலிருக்க வேண்டுமென்று ஒரு ஏக்கர் வரை விட்டுவிட்டோம் என்று சொல்கிறார்கள். எனக்கு இதுபற்றி ஏகப்பட்ட புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதை நீக்கவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேமாதிரி இப்பொழுதிருக்கும் திட்டங்கள் முன்கூட்டியே போட்ட பாசன வசதிகளுக்காக வாய்க்கால்களுக்காக இருக்க வேண்டும். சமுதாய நலத் திட்டங்களைப் பொறுத்தவரையில் அபிவிருத்தி தடைப்பட்டிருக்கின்றது. முன்பு அதை வைத்ததன் அடிப்படை நோக்கமே கிராம மக்கள் வாழ்க்கையை உயர்த்தவும், அவ்வாறு உயர்த்தி உற்பத்தியைப் பெருக்கவும், சமூக ஊழியர்களைப் போட்டு தீண்டாமையை ஒழிக்கவும் ஏற்பட்ட நல்ல திட்டம். அந்தத் திட்டத்திலே சுணக்கம் ஏற்பட்டிருப்பது குறித்து வருந்துகிறேன. சுகாதார நிலையம் என்ற அந்தப் பகுதிக்கு 15 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. குடும்பக் கட்டுப்பாட்டிற்காக மத்திய சர்க்காரிலே பல லட்சக்கணக்கான ரூபாய் கொடுக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஒரு அம்மையார் 20,000 ரூபாய் நன்கொடையாகத தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சரவர்களுக்குக்கூட விண்ணப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பூமி நன்கொடை, 20,000 ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார்கள். அதைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

எவ்வளவு பெரிய திட்டங்களிருந்தாலும்கூட அவை நிறைவேற சட்டம், அமைதி நன்றாக இருக்க வேண்டும். மீண்டும், மீண்டும் வற்புறுத்திச் சொல்லுகிறேன் என்னும்படியான நிலையில் முதலமைச்சரவர்கள் அதைத் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது. சட்டம், அமைதி, ஒழுங்கு நிலையாகயிருந்தால்தான் எந்தச் சர்க்காரும் நன்கு நடைபெற ஏதுவாக இருக்கும். திராவிட முன்னேற்றக் கழக அரசாயினும் சரியே, காங்கிரஸ் கட்சியின் அரசாயினும் சரியே, எந்தச் சர்க்காராகயிருந்தாலும் போடும்படியான திட்டங்கள் மக்களுக்குப் பயன்படும் அளவில் இருக்க வேண்டுமென்றால் சட்டம், அமைதி பாதுகாக்கப்பட வேண்டும். அவ்வாறு பாதுகாப்பதிலே எங்களுடைய பூரணமான

ஒத்துழைப்பைத் தரவிருக்கிறோம். மக்களின் நலன் மிகவும் முக்கியமானது. அவர்கள் நன்கு வாழவேண்டும், அவர்களுக்கு நல்ல பாதுகாப்பு இருக்க வேண்டும். அவர்களுக்கு நம்பிக்கை யிருக்க வேண்டும். அதற்கு பூரணமாக ஒத்துழைக்கத் தயாராக யிருக்கிறோம்.

நேற்று முதலமைச்சரவர்கள் உருக்கமான வேண்டுகோளைக் கொடுத்தார்கள். உடனடியாக நாங்கள் பூரணமாக ஆதரவு கொடுக்கத் தயாராகவிருக்கிறோம் என்றோம். எங்களுடைய கட்சி யின் வேண்டுகோள் என்னவென்றால், சட்டம், அமைதி காப்பதில் யாராகயிருந்தாலும் கண்டிப்பாக பாதுகாக்கப்படவேண்டும், உறுதியாக இருக்க வேண்டும் என்பதே. சில சில சந்தர்ப்பங்களில் கொள்கை, திட்டம்பற்றி அமைச்சர்கள் பேசும்படியான பேச்சுக்கள் மாறி மாறி வருகின்றன. அப்பொழுது சந்தேகம் ஏற்படக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. நேற்று முன் தினம் துக்ககரமான நிகழ்ச்சி நடந்தது. உடனே நீதி விசாரணைபற்றிக் கூறியதை நாங்கள் ஏற்றுக் கொண்டோம். நீதி விசாரணை எப்பொழுது என்று அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னொரு விஷயம். நகரத்திலே ஏற்பட்டிருக்கும் சில நிகழ்ச்சிகள்பற்றிக் கூற விரும்புகிறேன். நேற்று ஒரு இடத்திலே பார்த்தேன். இதற்கும் நீதி விசாரணைக்கும் சம்பந்தம் இல்லை யென்றாலும் தகவல்களைக் கூற விரும்புகிறேன். என் மனம் அதைப் பார்த்து கஷ்டப்பட்டது. அந்த மாணவர்களைப் பார்த்து கண் கலங்கினேன். மருத்துவக் கல்லூரியிலே பார்த்தபொழுது 37 அறைகள் பூரணமாகத் தூள் தூளாக்கப்பட்டிருந்தன. அவர்கள் வைத்திருந்த புத்தகங்கள், ரூபாய் 100 மதிப்புள்ள புத்தகங்கள், கிழிக்கப்பட்டு, எரிக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய பொருள்கள் எல்லாம் சுருட்டப்பட்டன. ரூ. 30,000, ரூ. 40,000 மதிப்புள்ள சொத்துக்கள் நேற்று இரவு சேதப்பட்டிருந்ததை நான் போய்ப் பார்த்தேன். விஷயத்தைச் சொல்வதற்காக நான் சொல்கிறேன். நான் நேரிலே போய் பார்த்தபொழுது நிரம்ப மாணவர்கள், 50 மாணவர்கள் தலையிலே அடிபட்டு, கட்டப்பட்டு, மூக்கிலே உடைபட்டு, இந்தமாதிரி நிலையில் இருந்தார்கள். எனக்கும் முதலமைச்சருக்கும், அமைச்சர்களுக்கும் எல்லோருக்கும் குழந்தைகள் இருக்கிறார்கள். நாம் குழந்தைகளை வளர்க்கும் படியான நிலையிலே இருக்கிறோம். அந்தக் குழந்தைகள் கதறும்போது என்னால் தாங்கவே முடியவில்லை. அவர்கள் சாப் பிடவே இல்லை ஒரு நாள் பூராவும். நான் குற்றச்சாட்டு சாட்டு வதாக தயவுசெய்து எண்ண வேண்டாம். ஏதோ ஒரு கூட்டம் இந்தமாதிரி நிகழ்ச்சிகளிலே புகுந்திருக்கிறார்கள். மாணவர் விடுதியிலே புகுந்து, கீழேயுள்ள 37 அறைகளைத் தாக்கி இருக்கி றார்கள். அப்பொழுது போலீஸ்காரர்கள் என்ன செய்து கொண் டிருந்தார்கள்? அங்கே அவர்கள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?





நடவடிக்கை எடுக்காதவர்கள் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது? போலீஸ்காரர்கள் நடவடிக்கை எடுத்திருந்தால், இந்தச் சம்பவங்களை நிச்சயமாகத் தடுத்து நிறுத்தி இருக்க முடியும் என்பதற்காகச் சொல்லுகிறேன்.

இன்றைய தினம் மாணவர்கள் விடுதியிலே நடந்தது நாளைக்கு என்னுடைய அறையிலே நடக்கலாம், அங்கத்தினர்களுடைய வீட் டிலே நடக்கலாம். நான் காவல் துறைக்கு இன்னும் பலம் கொடுக்கவேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறேன். பொறுப்பிலுள் ளவன் என்ற முறையில் சொல்லுகிறேன். அந்தக் குழந்தைகள் எல்லாம் பாதுகாப்பு கேட்டுக் கதறினார்கள். அந்த நிலையில் எல்லா அமைச்சர்கள் வீடுகளுக்கும் டெலிபோன் செய்தார்களாம். அப்படியிருந்தும் அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்புமில்லை என்று சொன்னார்கள். இன்றைய தினம் நீங்கள் மெட்ராஸ் மெடிக்கல் காலேஜ் ஹாஸ்டலுக்குப் போய் பார்த்தீர்களானால் ஒரு அறையிலே இரத்தம் சிந்தியிருப்பதைப் பார்க்கலாம். குழந்தை களை அப்படி அடித்து இருக்கிறார்கள். அவர்கள் படுத்திருக்கும் போது மேலே ஏறி மிதித்திருக்கிறார்கள். எந்தக் காலியாக இருந் தாலும் நாம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். நம் குழந் தைகளைப் பார்க்க வேண்டுமென்பதற்காக நான் சென்றபொழுது என்னுடைய மனத்தாங்கலை அடக்க முடியவில்லை. படிக்க வந்த குழந்தைகள் நாளைக்கு பரீட்சைக்குப் போக இருக்கிறார்கள். ரெக்கார்டு புக் எல்லாம் கிழிக்கப்பட்டிருக்கிறது. நூற்றுக்கணக் கான புத்தகங்கள் எல்லாம் கிழிக்கப்பட்டிருக்கின்றன. உடமைகள் எல்லாம் உடைக்கப்பட்டன. தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். காங்கிரஸ்காரர்கள் குற்றச்சாட்டு சாட்டுவதற்காக சொல்ல வில்லை. தகவலுக்காகச் சொல்கிறேன். ஒவ்வொரு சமயத்திலும் இதைத்தான் சொல்வேன். இது தலைநகரத்திலே நடந்திருக்கிறது.

நான் சொல்வது என்னவென்றால், போலீசை பார்த்து, அவர் கள் இந்தக் காரியத்தை நடத்த வேண்டுமென்ற முறையிலே தயவு செய்து இனிமேல் உத்தரவு போடுங்கள் என்பதுதான். சட்டம், அமைதி பாதுகாக்கப்படுவதற்கு பூரண நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதற்காக இதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதற்கு நாங்கள் ஒத்துழைக்கிறோம். இன்னொரு விஷயத்தைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒத்திவைப்புப் பிரேரணை கொடுத்தேன். நீங்கள் செய்வதற்கு எங்களுடைய கட்சி ஒத்துழைப்பை பூரணமாக அளிக்கிறோம் என்றுகூடச் சொன் னோம். என்னுடைய கட்சி அங்கத்தினர்கள்கூட நிகழ்ச்சிகளைப் பற்றி சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் அதைப் பேசிக் குழப்ப வேண்டாமென்று சொன்னார்கள். ஏற்றுக் கொண்டோம். நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன். நேரம் அதிகமாகி இருக்கலாம். இருந்தாலுங்கூட நான் கொடுத்த உடனே எனக்கு எழுத்து மூலமாக பதில் வந்திருக்கிறது. உதவி சபாநாயகர் அவர்கள் அந்த விஷயத்தைப்பற்றி பேச வேண்டாமென்று

சொன்னார்கள். அதைப்பற்றி ஒன்றும் பேசவில்லை. எந்தக் காரியமாக இருந்தாலும் அது அர்ஜண்ட் பப்ளிக் இம்ப்பார்ட்டன்ஸ் ஆக இருந்தால், முக்கியமானதாக இருந்தால், அதைப்பற்றி சொல்ல வேண்டும்.

'To discuss about the occurrence which took place on 26th morning in the premises of Madras Medical College Hostel which led to looting, damage of properties and severe injuries to students and the failure of the Government to . . .'.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை கொடுத்து, அதற்கு தீர்ப்பு சபாநாயகர் அறையிலேயே கொடுத்துவிட்ட பிறகு அதைப்பற்றி இந்த மன்றத்திலே கொண்டு வருவது நம்முடைய விதிப்படி முறையல்ல. அதைக் கொண்டு வரவேண்டாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் அதைக் கொண்டு வரவில்லை. அதற்குக் கொடுத்த பதிலை நான் படிக்க விரும்புகிறேன். நீங்கள் சொல்ல வேண்டாமென்பதை நான் சொல்லவில்லை.

'. . . secondly there is an opportunity for you to speak to-day on the subject in the course of the discussion on the Final Supplementary Statement of Expenditure for 1967-68. . .'

என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. 'இந்த விஷயத்தைப்பற்றி நீங்கள் பேசலாம்' என்றுதான் எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். இது எப்படி என்றால் சாவித்திரிக்கு குழந்தை வரம் கொடுத்து விட்ட பிறகு—அதாவது பதிலுக்காக அல்ல; உதாரணத்திற்காகச் சொல்கிறேன்—'நீங்கள் பேசலாம் அந்த விஷயத்தைப்பற்றி' என்று சொன்னதற்காக சொல்கிறேன். எந்தவிதமான பாதகம் செய்வதற்காகவும் சொல்லவில்லை. இப்படி போட்டிருக்கின்றீர்கள். சந்தர்ப்பம் இருப்பதனால் போலீஸ் மாலியம் பற்றிய விவாதம் என்னும்படியான நிலை வந்ததனால்தான் நாங்கள் பேசுகிறோம். இது எதிர்பாராத விஷயம். முதலமைச்சர் அவர்களைக் கூட கேட்டேன், இதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டுமென்று கேட்டார்கள். பரிபூரணமாக நாங்கள் ஒத்துழைப்புத் தருகிறோம் என்று நான் சொன்னேன். நான் சொன்னது எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்க வேண்டாமா? சில பத்திரிகைகள் நான் சொன்ன விஷயத்தை தாண்டி விடுவதாகப் போட்டார்கள். சில பத்திரிகைகள் பெரிதாகப் போட்டார்கள். சிலர் நான் முதல் அமைச்சருக்குக் கொடுத்த ஆதரவை போடவேயில்லை. அது நல்லதா? பத்திரிகை தருமத்திற்கு ஏற்றதா? அது அவர்களது தரத்தைக் காட்டிக் கொள்ளுகிறது. அவர்கள் எந்த நிலையிலே இருக்கிறார்கள் என்பதை பொதுமக்கள் தீர்மானம் செய்து கொள்வார்கள். முதலமைச்சர் அவர்கள் சொல்லும் பொழுது. நாங்களும் சேர்ந்து ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுக்கின்ற சமயத்திலே எல்லாவற்றையும் போடவேண்டும். அதுதான் எல்லாவற்றிற்கும் அனுகூலமாக இருக்கும். சிலவற்றிலே போட்டு, சில பத்திரிகைகளிலே போடவில்லையென்றால் அது பத்திரிகை





தருமத்திற்கு ஏற்றதாக இருக்காது. அப்படி வந்திருக்கும்படியான பத்திரிகைகள் தங்களுக்குள்ள பொறுப்பை உணர வேண்டும், உணர்ந்து செயலிலே ஈடுபடவேண்டும். இவைகளிலெல்லாம் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்கு என்னுடைய கருத்தை எடுத்துச் சொல்லி, எங்கள் கட்சியின் சார்பாக சட்டம், அமைதியைப் பாதுகாப்பதற்கு நாங்கள் பூரணமாக ஒத்துழைக்கிறோம் என்று கூறி, அதைத் திட்டவட்டமாகச் செய்ய வேண்டுமென்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, பொதுவாக இறுதித் துணை மதிப்பீடுகள்மீது விவாதம் இன்றைய தினம் நடைபெற்றதைப் போல் மிக விளக்கமான முறையில் பல கருத்துக்களை எடுத்துச் சொல்வதே தேவையில்லையென்று முன்னாலேயெல்லாம் கருதிக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. ஆனால், இன்றைய தினம் மிக விளக்கமான அளவிலே இந்த இறுதித் துணை மதிப்பீடுகளைப் பற்றி பல உறுப்பினர்கள் கருத்துக்களை தெரிவித்து இருக்கிறார்கள். தங்களிடத்திலே நேரிடியாக தொடர்புடையவர்கள் அல்ல என்றாலும் அவர்களுடைய மனதிலே இன்றைய தினம் ஊடுருவிக் கொண்டிருக்கிற பல உணர்ச்சிவயப் படக்கூடிய கருத்துக்களைப் பற்றியும் நிகழ்ச்சிகளைப் பற்றியும் உறுப்பினர்கள், அதிலே குறிப்பாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இவைகளில் எல்லாம் இந்த அரசு. அவர்களுக்கு எந்த அளவுக்கு உணர்ச்சி இருக்கின்றதோ, அதிலே எந்த அளவுக்கும் குறைவாக உணர்ச்சி படைத்திருக்கிறது என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்றே நான் நம்புகிறேன்.

இப்பொழுது மாணவர் விடுதிகளிலே பல்வேறு வகையான இடுக்கண்களும், இன்னல்களும் ஏற்பட்டிருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்லி, அதை இந்த அரசு கவனிக்கத் தவறிவிட்டது —அல்லது கவனிக்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். சில மாதங்களுக்கு முன்னாலே மாணவர்களுக்கு எதா ஏற்பட்டாலும் இந்த அரசு உடனடியாகப் போய் துணை நிற்கிறது; மாணவர்கள் எதைச் சொன்னாலும் இந்த அரசு உடனடியாக அவர்கள் பக்கம் செல்கிறது; மாணவர்கள் வற்புறுத்தின உடனே கேட்டு விடுகிறது என்றெல்லாம் அவர்கள் சொன்னார்கள். மாணவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக நாங்கள் சில தீர்மானங்களையே நிறைவேற்றினோம். அதுவே தவறு என்றுகூட நம்முடைய காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசினார்கள். என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், மாணவர்களுடைய மனதிலே வாட்டக்கூடிய பிரச்சினைபற்றி இந்த அரசு அவர்கள் சொல்வதை கேட்கத் தயங்கவில்லை என்றுகூட கூறினேன். அதைப்போலவே அன்றும் இன்றும் மாணவர்கள், தொழிலாளர்கள், சமூகத்தினுடைய பிற பகுதிகளைச் சேர்ந்த யாராக இருந்தாலும், அவர்கள் சொல்லு

இன்ற கருத்துக்களை, நியாயமாக இருந்தால் இந்த அரசு ஏற்றுக் கொள்ளுவதும், அவர்களிலே யாருக்காவது இடுக்கண் ஏற்பட்டால் அதைத் தடுப்பதும், அவர்களிலே ஒருவருக்கொருவர் ஏதாவது மோதுதல் ஏற்பட்டால் அதைத் தடுப்பதற்கான முயற்சிகளையும், அது நம்மையும் மீறி நடக்குமானால் அது பயங்கரமான அளவுக்கு நடைபெறாத அளவுக்கு தடுக்க நல்ல நடவடிக்கை எடுப்பதும், அதற்குப் பிறகு நீதி நிலைநாட்டப்படுவதிலே, ஆறுதல் அளிக்கப் படுவதிலே இந்த அரசு தன்னுடைய கடமையைச் செய்யும் என்பதை நான் இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்லிக் கொள்கிறேன். ஆகையால், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சில தகவல்களைத்தான் என்னிடத்தில் தந்தார்கள் என்று நான் கொள்கிறேனே தவிர, இந்த அரசு சில காரியங்களைச் செய்யவில்லை என்று சொல்லவில்லை என்று நான் கருதுகிறேன். நடவடிக்கைகள் மின்னல் வேகத்திலே நடந்துகொண்டிருக்கிற நேரத்தில், எந்த அரசும், தன்னுடைய ஒரு கட்டத்திலே இருந்து இன்னொரு கட்டத்திற்கு போவதற்கிடையில், அதைத் தடுத்து நிறுத்துவது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. இப்பொழுது விளக்கு இருந்தால், அதன் ஒளி குறைகிறபொழுது எண்ணெய் ஊற்றலாம்; அது மங்குகிறபொழுது தூண்டிவிடலாம். இப்பொழுது மின்னல் வருகின்றபொழுது அந்த மின்னலுடைய விளைவை நம்மாலே கட்டுப்படுத்த முடியவில்லை. அதேபோல நிகழ்ச்சிகள் மின்னல் வேகத்தில் நடக்கும்போது, முன்கூட்டியே ஏன் விளைவுகளைக் குறைக்க முடியவில்லை என்று வாதாடுவது உண்மையிலேயே வாதாடும் முறைக்கு ஏற்றதாகக்கூட இருக்காது. எந்த அரசும், குழப்ப நிலையை, கலவர நிலையை, வன்முறையை, பரவட்டும், வேடிக்கை பார்க்கலாம் என்று இருக்காது. அதிலும் நான் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற நாளில் எந்த முறையில் மன உளைச்சல், மன வேதனை அடையக்கூடியவன் என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மன்ற உறுப்பினர்களும் நன்கு அறிவார்கள். போலீஸ் துறையில் உள்ள பெரிய அதிகாரிகள் இந்த இரண்டு மூன்று நாட்களாக, உள்ளபடியே நான் அறிந்த அளவில், மிகுந்த பொறுப்பு உணர்ச்சியோடு எந்த நிகழ்ச்சியும் பரவாத வகையில், அதிகமாகாத வகையில் முயற்சிகள் எடுத்து பணியாற்றியிருக்கிறார்கள். வன்முறைகள் நடந்து விட்டன. ஏன் நடந்தன, எதனால் நடந்தன, எந்த எந்த வகைகளில் தடுத்திருக்க முடியும் என்பதையெல்லாம் பற்றி ஆராய நீதி விசாரணையின்போது சான்றுகள் கேட்கப்படும் என்று நம்புகிறேன். அந்த நீதி விசாரணையின் 'டர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸ்' எப்படியிருக்கிறது என்றெல்லாம் கேட்டார்கள். அதைப்பற்றி இன்னும் வரையறுக்கப்படவில்லை. கூடுமானவரையில் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கி இருக்கும் என்பதில் உறுப்பினர்களுக்கு எந்தவிதமான ஐயப்பாடும் இருக்கத் தேவையில்லை.

மற்றபடி, துணை மதிப்பீடுகளைப் பொறுத்த வரையில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், ஏன் இரண்டு தடவைகள் கொண்டு வர



வேண்டும், பட்ஜட் போடுவதில் கொஞ்சம் திறமைக் குறைவு என்று ஏற்படவில்லையா என்று சொன்னார்கள். இது பட்ஜெட் போடுவதில் திறமைக் குறைவு ஏற்பட்டதால் இல்லை; இவற்றிற்கான அவசியம் என்ன என்று என்னுடைய உரையிலே கொடுக்கப் பட்டிருக்கின்றது. இரண்டாவது முறையாக இறுதித் துணை மதிப்பீடு இப்பொழுதுதான் புதிதாக வருகிறது என்பதில்லை. இதற்கு முன் இல்லையா என்பதைச் சொல்ல வேண்டும் என்று கருதுகிறேன். திரு. விநாயகம் சொல்லலாம், முன்னால் நடந்தது இருக்கட்டும், இப்போது என்ன நிலை என்பார்கள். அந்தப் பக்கத்தில் இருப்பதாலேயே, குறை காணவேண்டும் என்கிற தத்துவத்திற்கு வேண்டுமானால் அது சரியாக இருக்குமே தவிர மற்றபடி சரியாக இருக்காது. அவர்கள், மற்றவர்கள் ஒரே துணை மதிப்பீடு, ஸப்ளிமெண்டரி பட்ஜெட் போட முடிந்தது, உங்களால் முடியவில்லையே என்று நாட்டில் அவர்கள் வாதம் ஒரு எண்ணத்தை ஏற்படுத்திவிடுமோ எனக் கருதி அப்படி ஏற்படாததற்கு இதைச் சொல்ல வேண்டும். இதற்கு முன்னால் துணை மதிப்பீடுகள் பலமுறைகள் தரப்பட்டிருக்கின்றன. சில ஆண்டுகளில் இரண்டு முறைகளும், சில ஆண்டுகளில் மூன்று முறைகளும், இன்னும் சில ஆண்டுகளில் நான்கு முறைகளும்கூட கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அதிக அனுபவம் பெறாத நாங்கள் இரண்டு முறை கொடுத்திருக்கிறோம். ஆகையினால், உள்ளபடியே ஏதோ பட்ஜெட் தயாரிப்பதிலே கவனக் குறைவு ஏற்பட்டுவிட்டது என்பதல்ல. நம்முடைய மாநில நிதிநிலை அறிக்கை மட்டுமல்ல, பொதுவாகவே எல்லா இடத்திலேயும் இந்தக் குறைபாடு சொல்லப் படுவது உண்டு. 'முதலிலே இவ்வளவு வரும் என்கிறார்கள், பின்னால் அதிகமாக வருகிறது; இவ்வளவு செலவாகும் என்கிறார்கள், ஆனால் பிறகு அதிகமாகச் செலவு செய்திருக்கிறார்கள்' என்று சொல்கிறார்கள். 'அதிலே ஒரு நிர்ணயம் இல்லையா, இதை யெல்லாம் முன்கூட்டியே அறிந்திருக்க முடியாதா' என்று எங்கேயும் கேட்கிறார்கள். நான் அதைக் கேட்ட நேரத்திலே, அப்பொழுது நிதி அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் கொடுத்த அறிவிப்பு திருப்தி கொடுத்தது. ஆகவே, அதை மேற்கோளாகக் காட்டுகிறேன். நான் எதிர்க் கட்சியில் இருந்த போது சொன்னதை இன்றைய தினம் எதிர்க் கட்சியாக இருப்பவர்கள் எடுத்துச் சொல்கிறார்கள், அவர்கள் ஆளும் கட்சியாக இருந்தபோது சொன்னதை இப்பொழுது ஆளும் கட்சியாக இருக்கும் நான் சொல்லலாம் என்று சொல்வதாக, அந்த முறையில் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. அவர்கள் அளித்த பதில் அப்பொழுதே எனக்கு மிகுந்த திருப்தி கொடுத்ததால், அது நியாயமான பதில் என்று சொல்ல விரும்புகிறேன். எப்பொழுதும் ஒரு அரசு, நிதிநிலை அறிக்கை தயாரிக்கும்போது கொஞ்சம் 'ப்ரீதிங் ஸ்பேஸ்' கொடுத்து இப்படியும், அப்படியும் உலாவுவதற்கு இடம் வைத்து, அறுதியிட்டு, இறுதியாக, சொல்வதில்லை. "இந்த வகையில் 15 கோடி ரூபாய் செலவழிக்கப்படும்" என்று அறுதியிட்டு விடுவோமானால், அதற்கு மேல் செலவழிக்கக்கூடாது

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 மார்ச் 27

என்றெல்லாம் சொல்லப்படுமேயானால், இடையே பல காரியங்களுக்கு நமக்குத் தேவை வரும்போது, நல்லவகையில் பணியாற்ற வசதி கிடைககாமல் போய்விடும் என்பதால்தான் இந்த முறை இருக்கிறது. அப்படி, இந்த துணை மதிப்பீடு எந்த வகைகளில் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்றும், தொகைகள் தவறான காரியங்களுக்கு செலவழிக்கப்படவில்லை, கொடுக்க நியாயம் இருக்கிறது என்கிற விளக்கங்களெல்லாம், விவரமாகக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அதிலே, இந்த இறுதித் துணை மதிப்பீடுகள், 'வெவ்வேறு துறைகளின் செலவினப் போக்குகளைக் குறித்து, மிக அண்மையில் மேற்கொண்ட கணிப்பின் அடிப்படையில் தயாரிக்கப் பட்டுள்ளது' என்று குறிப்பிட்டிருக்கிறேன். 'லேடஸ்ட் பொஸிஷன்' கணக்குப் பார்க்கப்பட்டு இந்த விவரங்கள் தரப் பட்டிருக்கின்றன. இதிலே திருத்த மதிப்பீடுகளை விட செலவினங்கள் ஓரளவிற்கு உயர்ந்திருப்பதையும் காட்டுகின்றன. அப்படி உயர்ந்ததற்குக் காரணம் இல்லாமல் இல்லை. காரணம், நிரம்ப இருக்கிறது. அதிகமான செலவெல்லாம் ஒரு முக்கியமான துறையில் ஏற்பட்டிருக்கிறது. ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் வீட்டு வரி, உள்ளூர்த் தீர்வை மேல் வரி, முதலிய வரியினங்களின்கீழ் ஈட்டிய தொகைகளுக்கு ஏற்ப, இணை மானியங்கள் வழங்குவதற்காக ரூ. 50 லட்சம் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. மேச்சிங் கிராண்ட் கொடுப்பதை ஒப்புக் கொண்டிருக்கிறது. அது விதிப்படி தரப்படுகிறது. எந்த அரசானாலும், இவற்றை அதிகச் செலவு என்று சொல்ல மாட்டார்கள். இன்னொரு இடத்தில் செலவு, தாய்-சேய் நல நிலையங்களின் பொருட்டு. அவைகளுக்கு வழங்க வேண்டிய அதிக மானியங்களுக்காக 15 லட்சம் ரூபாய் நிதி தரப்படுகிறது. அது நியாயமாகத் தரப்பட வேண்டியது என்பதில் யாருக்கும் ஐயப்பாடும் இருக்காது. வேண்டுமானால், சில உறுப்பினர்கள் பேசியதிலிருந்து, வசதி இருந்திருக்குமானால், இந்தத் துறைக்கு இன்னும் அதிகம் கொடுத்திருக்க வேண்டும் என்றுதான் ஏற்படும். இன்னொரு இனம், உள்ளாட்சி மன்றங்களின் சாலைகளுக்கும், கட்டடங்களுக்கும் ஏற்படும் சேதங்களைச் செப்பனிடுவதற்காக, ரூ. 8.5 லட்சம் அதிகம் கொடுக்கப்படுகிறது. அதே போல, இரசாயன உரம் வாங்குவதற்காக, உழவர்களுக்குக் கடன் வழங்க ரூ. 47.5 இலட்சம் கொடுக்கப்படுகிறது. பொதுவாகவே, இந்தத் தலைப்பின்கீழ், முன்னாலே ஒரு கோடி ரூபாய்க்கு ஏற்பாடு செய்ததற்கு மாறாக, இப்பொழுது இரண்டு கோடி ரூபாய்க்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. வருவாய் வாரியத்தின் வாயிலாகச் செயல் படுத்தப்படும் சிறு பாசனச் சிறப்புத் திட்டத்திற்கென்று, முன்னாலே 108 இலட்சம் ரூபாய்க்கு வழி செய்ததற்கு மாறாக, இப்பொழுது. அது போதாது என்ற காரணத்தால், 165 இலட்சம் ரூபாய் ஒதுக்க வேண்டும் என்று செய்திருப்பதன் காரணத்தால் அதிகமாகியிருக்கிறது. இவற்றை அவையின் முன் கூறியிருக்கிறேன். இவையெல்லாம் நியாயமான, தேவையான, மரபை



1968 மார்ச் 27] [திரு. சி. என். அண்ணாதுரை]

யொட்டித் தரப்படுகின்ற துணை மதிப்பீடுகள். ஆகவே இவற்றை அவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இனி எல்லா கோரிக்கைகளையும் ஒருசேர வாக்கெடுப்புக்கு விடலாம் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்கத் தவறியதன் காரணம் என்ன வென்றால், நான் சொல்லாமலேயே என் கோரிக்கையை ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையின் பேரில்தான். என்னுடைய நம்பிக்கை வீண் போகாது என்றாலும், அவர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நிதிக் கோரிக்கைகளை ஒரு சேர வாக்கெடுப்புக்கு விடலாம். ஒரு மணியாகிறதனால், வெட்டுத் தீர்மானங்களை இப்பொழுது எடுக்கத் தேவையில்லை.

### 4. 1967-68-ம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு.

#### கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது அவை முன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,04,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

#### கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 67,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,21,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

*நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.*

**கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத் துறை.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

*நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.*

**கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,47,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

*நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.*

**கோரிக்கை எண்8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண்8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 58,41,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

*நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.*

**கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —



"கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,11,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

*நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.*

**கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 13,86,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

*நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.*

**கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள்.**

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,80,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

*நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.*

**கோரிக்கை எண் 12—காவல் துறை.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண். 12—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,43,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

*நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.*

**கோரிக்கை எண். 13—கல்வி.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 14—மருத்துவம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 19,35,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 40,82,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 16—வேளாண்மை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 17—மீனளம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 90,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



கோரிக்கை எண் 18—விலங்கின வளர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 18—விலங்கின வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 19—கூட்டுறவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 21—சின்கோனா.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 21—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ரூ. 16,79,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 26—பாசனம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1 81 21,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 27—பொதுப் பணிகள்—பணிகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 27—பொதுப் பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 19,60,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 28—பொதுப் பணிகள்—பணியாளரும் கருவிகளும், இயந்திர சாதனங்களும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 28—பொதுப் பணிகள்—பணியாளரும் கருவிகளும், இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 24,18,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 29—பொதுப் பணிகள்—உதவி மானியங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 29—பொதுப் பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 16,06,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 30—மோட்டார் போக்குவரத்து திட்டங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 30—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,11,55,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."



நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 30,32,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 33—பல்வகை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 75,10,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 34—எழுதுபொருள்—அச்சுத்துறை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 34—எழுதுபொருள்—அச்சுத்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,50,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 78,26,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 24,83,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 42—பொதுப் பணிகள் மூலதனச் செலவுகள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 42—பொதுப் பணிகள் மூலதனச் செலவுகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 45—ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 45—ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,90,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 46—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவைமுன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 46—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."



நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவை முன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 85,31,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

5. அறிவிப்பு.

தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண் 3) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதாவை, இந்தப் பேரவைக்குக் கொண்டு வருவதற்கும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேன்மைமிகு கவர்னர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இந்த மசோதாவை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அறிமுகப்படுத்த அனுமதி கோருவார்கள்.

6. அரசினர் மசோதா.

தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண் 3) மசோதா.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண். 3) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை காலை 9 மணியளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A Statutory Rules and Orders.

+ 125. Notification issued with G.O. Ms. No. 2030, L.A., dated the 3rd November 1967, regarding the reservation of seats and division of wards in Tiruchengode Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

+ 126. Notification issued with G.O. Ms. No. 2094, L.A., dated the 16th November 1967, regarding the reservation of seats and division of wards in Ootacamund Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

+ 127. Notification issued with G.O. Ms. No. 2095, L.A., dated the 16th November 1967, regarding the reservation of seats and division of wards in Vellore Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

+ 128. Notification issued with G.O. Ms. No. 2098, L.A., dated the 16th November 1967, regarding the reservation of seats and division of wards in Virudhunagar Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

+ 129. Notification issued with G.O. Ms. No. 2124, L.A., dated the 21st November 1967, regarding the reservation of seats and division of wards in Tenkasi Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

+ 130. Notification issued with G.O. Ms. No. 2127, L.A., dated the 21st November 1967, regarding the reservation of seats and division of wards in Karaikudi Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

+ 131. Notification issued with G.O. Ms. No. 2129, L.A., dated the 1st November 1967, regarding the reservation of seats and division of wards in Rajapalayam Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

+ 132. Notification issued with G.O. Ms. No. 2143, L.A., dated the 23rd November 1967, regarding the reservation of seats and division of wards in Srirangam Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]



+133. Notification issued with G.O. Ms. No. 2158, L.A., dated the 23rd November 1967, regarding the reservation of seats and division of wards in Tiruppur Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

+ 134. Notification issued with G.O. Ms. No. 2159, L.A., dated the 23rd November 1967, regarding the reservation of seats and division of wards in Thanjavur Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

+ 135. Notification issued with G.O. Ms. No. 2160, L.A., dated the 23rd November 1967, regarding the reservation of seats and division of wards in Pudukkottai Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

+ 136. Notification issued with G.O. Ms. No. 2161, L.A., dated the 23rd November 1967, regarding the reservation of seats and division of wards in Cumbum Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

+ 137. Notification issued with G.O. Ms. No. 2163, L.A., dated the 23rd November 1967, regarding the reservation of seats and division of wards in Srivilliputtur Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

+ 138. Notification issued with G.O. Ms. No. 2164, L.A., dated the 23rd November 1967, regarding the reservation of seats and division of wards in Vaniyambadi Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

+ 139. Notification issued with G.O. Ms. No. 2165, L.A., dated the 23rd November 1967, regarding the reservation of seats and division of wards in Cuddalore Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madas Act V of 1920).]

+ 140. Notification issued with G.O. Ms. No. 2166, L.A., dated the 23rd November 1967, regarding the reservation of seats and division of wards in Tiruvannamalai Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

+ 141. Notification issued with G.O. Ms. No. 2167, L.A., dated the 23rd November 1967, regarding the reservation of seats and division of wards in Palani Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

+ 142. Notification issued with G.O. Ms. No. 2183, L.A., dated the 25th November 1967, regarding the reservation of seats and division of wards in Udumalpet Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

+ 143. Notification issued with G.O. Ms. No. 2188, L.A., dated the 27th November 1967, regarding the reservation of seats and division of wards in Kadayanallur Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

## Reports, Notifications and Other Papers.

@ 94. A Note on the Madras Cinchona Department. (Tamil)

@ 95. Policy Note on the Khadi and Village Industries Board, 1968–69 (Tamil).

@ 96. Housing in Madras State, 1967–68 (English).

---

+ Laid on the Table of the House on 26th March 1968.
@ Despatched to Members on 25th March 1968.



## இணைப்பு

[265-ம் பக்கத்தில் 322-ம் எண்ணுள்ள வினாவிற்கான விடையைக் காண்க]

1965-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் சிக்கன-நிர்வாகச் சீரமைப்பு உயர்நிலைக்குழு ஒன்றை அரசு நிறுவியது. இக் குழு 1966 மார்ச் திங்களில் தனது தொடக்க அறிக்கையைப் பணிந்தனுப்பியது. இந்த அறிக்கை 1966 மார்ச் 29-ம் நாளன்று சட்டமன்றத்தில் வைக்கப்பட்டது. இந்த அறிக்கையில் கண்டுள்ள குறிப்பிட்ட பரிந்துரைகள் கீழ்க்கண்டவாறாகும்:—

(1) தலைமைச் செயலகத்தின் தேர்ந்தெடுத்த சில துறைகளில் அதிகாரிகளே வேலையை எடுத்து முடிக்கும் முறையினைச் செயலுக்குக் கொண்டு வருதல்;

(2) எல்லா அலுவலகங்களிலும் எழுத்தர்களின் எண்ணிக்கையை 7½ சதவீதம் குறைத்தல்;

(3) அரசாங்க அலுவலகங்களில் கடைநிலை ஊழியரை நியமிப்பதற்குரிய அளவுகோலை மாற்றியமைத்தல்;

(4) பயணப்படி, சில்லறைச் செலவு ஆகியவற்றில் சிக்கனம்;

(5) மருத்துவ, சுகாதாரத் துறைகளை ஒருங்கிணைத்து மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம் ஒன்றைத் தனியாக அமைத்தல்;

(6) தலைமைச் செயலக நிலையில், தொழில்-தொழிலாளர்-கூட்டுறவுத் துறையிலிருந்து, "கூட்டுறவினை" வேளாண்மைத் துறைக்கு மாற்றுவது; கிடங்குக் கார்பொரேஷன் மீது மேலாதிக்க உரிமையை உணவுத் துறைச் செயலாளருக்கு மாற்றுவது; வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் என்னும் பொருளைத் தொழில்-தொழிலாளர்-வீட்டு வசதித்துறையிலேயே வைத்துக் கொள்வது;

(7). எடைகள்-அளவைகள் துறையைத் தொழிலாளர் துறையுடன் இணைத்தல்;

(8) கட்டட வேலைத் திட்டங்களில் சிக்கனம் செய்வதன் வாய்ப்புகளை ஆராய்வதற்காகத் துணைக்குழு ஒன்றினை அமைத்தல்;

(9) வேளாண்மை வருமான வரித்துறையைச் சீரமைத்தல்;

(10) சென்னை மாநகரில் துறையினர் நியாய விலைக் கடைகள் மூலமாக விறகு பகிர்ந்தளிப்பதைக் கைவிடுதல்;

(11) திட்ட வளர்ச்சி (தொழில்) அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைத்தல்;

(12) பத்திரப் பதிவுத் துறையைச் சீரமைத்தல்;

(13) திட்ட வளர்ச்சி (கூட்டுறவு) அதிகாரிகளின் பதவியைத் தரம் குறைத்தல்.

இப்பரிந்துரைகள் அனைத்தையும் அரசு ஏற்றுக்கொண்டு முதல் 11 இனங்கள் குறித்து ஆணைப் பிறப்பித்துள்ளது. இந்த பரிவுரைகள் ஒவ்வொன்றின் முக்கியமான கூறுகள் அடங்கியுள்ள, குழுவின் தொடக்க அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 12-வது, 13-வது பரிவுரைகளையும் அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆனால், அதிகமாக பத்திரப் பதிவு வேலை நடைபெறும், சென்னை-செங்கற்பட்டு, வடார்க்காடு, மதுரை, இராமநாதபுரம் ஆகிய நான்கு பத்திரப் பதிவு மாவட்டங்கள் ஒவ்வொன்றையும் இரண்டாகப் பிரிப்பதைப் பொறுத்தவரை, 12-ம் எண் பரிவுரையை நிறைவேற்றுவது தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 13-வது எண் பரிவுரையைப் பொறுத்தவரையில் அண்மையில் ஆணை வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2. தொடக்க அறிக்கையைப் பணித்தனுப்பிய பின்னர், இக் குழு பலமுறை கூடியது. இக்கூட்டங்களிலே இக் குழு செய்த பரிவுரைகளின் சிறு குறிப்பு ஒன்று அரசு ஏற்றுக்கொண்ட வகையில் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

(i) **கல்லூரி புகுமுக வகுப்பில் தேசீய மாணவர் படையில் மாணவர் சேருவதை விருப்பத்தேர்வுக்கு விடுதல் :**—கல்லூரி புகுமுக வகுப்பில் சேருகிற மாணவர்களில் பெரும்பாலோர் தமது படிப்பை மேற்கொண்டு தொடருவதில்லை. எனவே, அவர்கள் அனைவருக்கும் ஓராண்டு காலத்திற்கு மட்டும் தேசீய மாணவர் படையில் பயிற்சியளிப்பதற்குப் பணம் செலவிடுவது விரயமேயாகும். தேசீய மாணவர் படையில் சேருவதை விருப்பத் தேர்வுக்கு உட்பட்டதாக்கினால், தொடர்ந்து கல்லூரியில் படிக்க விரும்புகிறவர்கள் மட்டும் அதில் சேருவார்கள். இதனை ஆராய்ந்த உயர்நிலைக் குழு, கல்லூரிப் புகுமுக வகுப்பின் தேசிய மாணவர் படைப் பயிற்சி கட்டாயமாக இருப்பதற்குப் பதிலாக, அதில் சேருவது மாணவர் விருப்பத்தைப் பொறுத்ததாக இருக்க வேண்டுமெனப் பரிந்துரைத்துள்ளது. குழுவின் மேற்கூறிய பரிவுரையை அரசு ஏற்றுக்கொண்டு, தக்க ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. இவ் வகையில் ரூபாய் 12 லட்சம் செலவு மிச்சமாகும்.

ii) **தல நிதி தணிக்கைத் துறையை சீரமைத்தல் :**—தல நிதி தணிக்கைத் துறையில், தணிக்கை பரிவுகளிடையே அவைகளுடைய அலுவல்களை ஒட்டி முதற்கண் வேலை வகுக்கப்பட்டது. இப்பிரிவுகளின் அதிகாரவரம்பு பரவலாகப் பல இடங்களில் செயல்பட்டதால், அவைகளின் வேலையை அரசிதழ் பதிவு பெற்றவர் மேற்பார்வையிடுவது இயலாத ஒன்றாகிவிட்டது. அந்த அதிகாரிகள் பரவலாகப் பல இடங்களில் தொடர்ந்து சுற்றுப் பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்ததால், கணிசமான கால அளவு விரயமாகி அவர்கள் அலுவல் வேலையைக் கவனிப்பதற்குப் போதிய நேரம் இல்லாதிருந்தது. மேலும் தணிக்கைப் பிரிவுகள் தத்தமது வேலைகளை மட்டுமே செய்து கொண்டிருந்ததால், ஒரு பிரிவிலுள்ள பணியாளர்களை அத்துறையைச் சேர்ந்த மற்றொரு பிரிவிற்கு மாற்றுங்கால், அவர்கள் புதிய பிரிவின் வேலையைச் செய்வது கடினமாயிருந்தது. இந்தக் குறைபாடுகளையெல்லாம் நீக்கும்பொருட்டு தணிக்கை அலுவலகங்களை மாவட்ட அடிப்படையில் தொகுதியாக்க வேண்டுமென்றும், தொழில் அடிப்படையில் அன்றி பரப்பு அடிப்படையில் அவர்கள் பணியை வகுக்க வேண்டும் என்றும் உயர்நிலைக் குழு பரிந்துரைத்தது.





எனினும், அரசு வணிகத் திட்டத் தணிக்கைப் பிரிவு, கோயில், தணிக்கைப் பிரிவு, கல்வித் தணிக்கைப் பிரிவு ஆகியவற்றின் சிறப்புத் தன்மையை முன்னிட்டு, அந்தப் பிரிவுகளில் மட்டும் தொழில் அடிப்படையில் பணி வகுத்திருப்பதைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளலாம் என்று இக் குழு கூறியது. இப் பரிவுரையை அரசு ஏற்றுக்கொண்டு, அவ்வண்ணமே ஆணை வெளியிட்டுள்ளது.

(iii) **கட்டிட வேலைத் திட்டத்தில் ஓரளவு நிலையான கட்டிடங்களை மேற்கொள்ளுதல்.**—கட்டிட வேலைத் திட்டத்திற்குச் செய்யும் முதலீட்டினைக் குறைக்கும்பொருட்டு, தாற்காலிக அல்லது ஓரளவு நிலையான கட்டிடங்களைக் கட்டுவதன் வாய்ப்பினைச் சென்னையிலுள்ள மேற்பார்வைப் பொறியாளரின் செயற்குழு ஆராய்ந்தது. சில வரையறைகளுக்கு உட்பட்டு, இயன்ற இடங்களில் எல்லாம் ஓரளவு நிலையான கட்டிடங்களையே கட்டவேண்டும் என இச் செயற்குழு பரிந்துரைத்தது. ஓரளவு நிலையான கட்டிடங்கள் 15 ஆண்டுகள் மட்டுமே நிலைத்திருக்குமாதலால் இவ்வாறு வரையறை விதிக்கப்பட்டது. நிலையான கட்டிடம் கட்டுவதற்கு ஆகும் செலவில் பாதிச் செலவே ஓரளவு நிலையான கட்டிடங்களுக்கு ஆகும் ஆதலால், செயற்குழு இவ்வாறு பரிந்துரைத்தது. இதனை ஆராய்ந்த உயர்நிலைக் குழு, செலவு குறைவாக ஆகிற, ஓரளவு நிலையான கட்டிடங்களையே அரசு கட்டவேண்டும் எனப் பரிந்துரைத்தது. நிலையான கட்டிடம் கட்டுவதற்குச் சதுர அடிக்கு 25 ரூபாய் செலவாகும்போது, கனம் குறைந்த சுவர்களும் மேலே கல்நார் கூரையும் கொண்ட ஓரளவு நிலையான கட்டிடம் கட்டுவதற்குச் சதுர அடிக்கு 12 ரூபாய் மட்டுமே செலவாகும் என்றும், இதனால் கட்டிட வேலைத் திட்ட முதலீட்டில் 50 சத வீதம் மிச்சமாகும் என்றும் குழு குறிப்பிட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் இத்தகைய கட்டிடங்கள் திருச்சிராப்பள்ளி அரசினர் கலைக் கல்லூரிக்கும் செங்கற்பட்டு மருத்துவ மனைக்கும் கட்டப்பட்டு, செலவு மிச்சமாயிற்று. கிராமப் பகுதிகளில், குறிப்பாக கல்லூரிகளுக்கும், பள்ளிகளுக்கும், கால்நடை வளர்ச்சித் துறைக்கும், கிராம வளர்ச்சித் துறைக்கும், வேளாண்மைத் துறைக்கும், இத்தகைய கட்டிடங்கள் கட்டுவது மிகப் பொருத்தமாகும் என உயர்நிலைக் குழு வலியுறுத்திக் கூறியது. உயர்நிலைக் குழுவின் இந்தப் பரிவுரைகளை அரசு ஏற்றுக்கொண்டது. சில கட்டிட வேலைத் திட்டங்களிலே ஓரளவு நிலையான கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## இணைப்பு

**சிக்கன நிர்வாகச் சீரமைப்பு உயர்நிலைக் குழு இதுவரை செய்துள்ள பரிந்துரைகள் குறித்து 1966 மார்ச்சு 29-ம் தேதி அன்று சட்டமன்றத்தில் வைக்கப்பட்ட விவர அறிக்கை.**

சிக்கன-நிர்வாகச் சீரமைப்பு உயர்நிலைக் குழு நிதித் துறையின் 1965 செப்டம்பர் 15-ம் தேதியுள்ள 1016 எண் அரசு ஆணையில் நிறுவப்பட்டது. அரசின் பல்வேறு துறைகளும் தன்னாட்சி மன்றங்களும் செயல்படுவதை ஆய்வு செய்து, சிக்கன நடவடிக்கைகளைக்

கூறுவதற்காகவும் செயல் திறனைப் பெருக்குவதற்கு ஏற்ற வகையில் நிர்வாகச் சீரமைப்பினைக் குறிப்பிட்டுக் கூறுவதற்கும் இக் குழு நிறுவப்பட்டது. இக் குழு பின்வரும் பணிகளை ஆராயும் :—

(i) அரசின் பல்வேறு துறைகளின் அமைப்பினை ஆய்வு செய்து பல நிலைகளில் சீரமைப்பு வாயிலாகவும் வேலைமுறைகளை மாற்றியமைப்பதன் மூலமாகவும் செலவில் சிக்கனம் செய்யும் வாய்ப்புகளை மதிப்பிடும்;

(ii) பல்வேறு துறைகளிலும் பணியாளர்களை வேலைக் கமர்த்துவதில் கடைப்பிடிக்கும் கோட்பாடுகளைச் சீர்தூக்கிப் பார்த்து, அவசியமானவிடத்து அவற்றை மாற்றியமைக்க வழிகோலும் ;

(iii) பற்பல துறைகளிலும் செலவுப் பெருக்கங்களின் போக்கினை முக்கியமாக, பணியாளர் சம்பளம், சில்லறைச் செலவினம், பயணப்படி, இன்னோரன்ன செலவுகள் பெருகுவதன் போக்கினை ஆய்வு செய்து அவற்றைச் சிக்கனப்படுத்துவதற்கு வழிவகை கோலும். இவ்வாறு செய்யும்போது, திட்டத்தின்கீழ் வராத செலவினங்களையும் தொடர்ந்து பேணுதல் மட்டும் செய்யப் படும் தன்மை வாய்ந்த வளர்ச்சிச் செலவினங்களையும் நன்கு கட்டுப்படுத்தும் அவசியத்தைக் கருத்தில் கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால்தான் திட்டத்திற்குப் போதிய நிதி வசதி தாராளமாகக் கிடைக்கும் ;

(iv) பல்வேறு துறைகளின் பெருங் கட்டடத் திட்டங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, கட்டடங்களின் கட்டுமானச் செலவைச் சிக்கனப்படுத்துவதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளைக் கூறும். வடிவமைப்புகளையும் விவரக் குறிப்புகளையும் தக்கவாறு மாற்றியமைத்தல், மதிப்பீடுகளைத் தயாரித்தல், ஒப்பளிப்பு வழங்குதல், ஆய்வு செய்தல் ஆகியவற்றிற்கான நடைமுறைகளை மேம்படுத்தல் முதலியவை அத்தகைய நடவடிக்கைகளாகும்;

(v) அரசாங்கத் துறைகளில் தேவைப்படும் பல்வேறு பொருள்களுக்கும் சாதனங்களுக்கும் தேவைப் பட்டியல் தயாரித்து அவற்றை வாங்குதல், சேமித்து வைத்தல் ஆகியவை பற்றி இப்போதுள்ள நடைமுறையை ஆய்ந்து பார்த்து, தக்க மாற்றங்களைக் கூறும் ;

(vi) உதவித் தொகை, உதவி மானியங்கள் ஆகியவற்றைக் கொடுப்பதற்கு இப்போது உள்ள முறைகளைச் சீர்தூக்கிப் பார்த்து, அவற்றைத் தொடர்ந்து வைத்துக்கொள்வது அவசியமா இல்லையா என்பதை முடிவு செய்யும் ;

(vii) அலுவல்களைப் பல்வேறு நிலைகளிலுள்ள அலுவலகங்களிடையே மேலும் செம்மையான வகையில் பகிர்ந்தளிப்பது மூலம் நிர்வாகத்தில் சிக்கனம் ஏற்படுத்த முடியுமா என்பதைக் குறிப்பாக ஆய்வு செய்யும் ; இதைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள நிர்வாக நிதி அதிகாரப் பிரிவினை முறையைச் சீர்தூக்கிப் பார்க்கும்.





2. எனவே, செலவில் சிக்கனம் செய்வதன் வாய்ப்புகளை ஆராய்வது மட்டுமன்றி, நடைமுறைகளையும், பழக்க வழக்கங்களையும் சீர்செய்வதிலும் இக் குழு அக்கறை கொண்டுள்ளது. கால நீட்டங்களைக் குறைத்து, செயல் திறனை மேம்படுத்தினால், செலவழித்த பணத்திற்கு நல்ல பலன் காண முடியும். இவ்வகையில் பார்த்தோமானால், இக் குழு செய்த சில பரிவுரைகளின் பயனாக, கூடுதல் செலவு ஏற்படக்கூடும். ஆனால், மேம்பாடடைந்த செயல் திறனை நோக்குமிடத்து, இடைநிகழ்வாக ஏற்படும் செலவு ஒரு பொருட்டாக இருக்காது.

3. சிக்கனம்-சீரமைப்பு பற்றிய சிக்கல்களை விரிவான முறையில் பகுத்தாராயும்பொருட்டு, புள்ளி விவரங்களைத் திரட்டுவதற்காக, விரிவான வினாப் பட்டி ஒன்று தயாரிக்கப்பட்டு துறைகள் அனைத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது. கட்டட வேலைத் திட்டங்களின் பல்வேறு கூறுகளும் அடங்கும் வகையில் தனிப்பட்ட வினாப் பட்டியல் ஒன்றும் தயாரிக்கப்பட்டு, பொறியியல் துறைகள் அனைத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது. இந்த வினாப் பட்டிகளின் படிகளை இணைப்பிலே காணலாம். பற்பல துறைகளிலிருந்தும் பதில்கள் வந்துள்ளன. இதுவரை இக் குழு மூன்று முறை கூடி, முக்கியமான பரிவுரைகள் சிலவற்றை வகுத்துள்ளது.

4. இக் குழுவின் பரிவுரைகள் சிலவற்றைச் செயல் படுத்தும் போது, சிலவகைப் பணியாளர் கூடுதலாய் இருப்பர். என்றாலும், சில காலமாகப் பணியாற்றி வருகிற பணியாளர்களுக்கு இடர்ப்பாடு எதனையும் ஏற்படுத்தக் கூடாது என்ற நோக்கில், அந்தப் பணியாளர்கள் அவர்களுடைய பதவிகளிலே மிகைப் பணியாளர்களாக இருத்திக் கொள்ளப்பட்டு, அதே துறையிலோ, பிற துறையிலோ காலி நேரிடும்போது அப்பதவிகளில் நிலையாக அமர்த்தப்படுவர். மிக அண்மைக் காலத்திலே வேலையில் சேர்ந்துள்ளவர்கள் மட்டுமே, அதாவது கடந்த ஓராண்டுக் காலத்தில் வேலைக்கு வந்துள்ளவர்கள் மட்டுமே வேலை நீக்கம் செய்யப்படுவர். கூடுதலாக உள்ள பணியாளர்களை இவ்வாறு மறுவேலையில் அமர்த்துவதற்கு சில காலம் ஆகுமாதலால், குழுவின் பரிவுரையை நிறைவேற்றுவதால் முன்னர் குறிப்பிட்டவாறு செலவு மிச்சம் உடனடியாக ஏற்பட்டுவிடாது.

5. உயர்நிலைக் குழு இதுவரை செய்துள்ள பரிவுரைகள் பொதுவாக இருவகைப்படும் :—

(a) அரசு அலுவலகங்கள் அனைத்திற்குமே பொருந்தத்தக்க பொதுவான பரிவுரைகள் ;

(b) தனிப்பட்ட துறைகளின் சிறப்புச் சிக்கல்களுக்குப் பொருந்தத்தக்க பரிவுரைகள் ;

இந்த இரண்டு பெருந்தலைப்புகளின்கீழ் ஆய்வுக்கு மேற்கொள்ளப்பட்ட பல்வேறு சிக்கல்களும் அவற்றின் மீது குழு செய்த பரிவுரைகளும் கீழே சுருக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன.

]1963 மார்ச் 27

## I. அரசு அலுவலகங்கள் அனைத்திற்குமே பொருந்தத்தக்க பொதுவான பரிவுரைகள்.

6. தேர்ந்தெடுத்த துறைகளில் அதிகாரிகளே வேலைகளை எடுத்து முடிக்கும் முறை.—தற்போதைய நிர்வாக அமைப்பிலே எதிலும் விரைந்து முடிவெடுக்க முடியவில்லை என்றும், ஒருவர் பார்த்து மற்றொருவர் அதைச் சரிப்பார்த்து மூன்றாமவர் மேல் பார்த்து பணி புரியும் முறை பல நிலைகளிலும் செயலில் உள்ளது என பலகாலும் வலியுறுத்திக் கூறப்படுகிறது. ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதால், அரசின் பொறுப்புகள் பல்கிப் பெருகியுள்ளன. தற்போதைய நிர்வாகம் பெரும்பாலும் 'வளர்ச்சிக் கண்ணோட்டத்திலேயே' நடைபெற்று வருகிறது. எனவே, அரசுத் துறைகளிலே குறிப்பாக உயர்நிலைகளிலே எதிலும் முடிவெடுத்தலை விரைந்து செய்யவேண்டுவது அவசியமாகும். இவ்வகையிலே அதிகாரியே வேலையை எடுத்து முடிக்கும் முறை அரசு அலுவல்களை விரைந்து முடிப்பதற்கு உறுதுணையாய் இருக்குமென எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இப்போதுள்ள நிர்வாக முறை பன்னெடுங்காலமாக வளர்ந்து உருவாகியுள்ளது. அதில் திடீரென எந்த மாற்றத்தையும் செய்வதற்கில்லை. அத்தகைய மாற்றத்தைச் செய்ய முடியுமானாலும், அதனால் முன்னரே பணியில் உள்ளோர் இன்னல் உறுவர். மேலும் பொதுமக்களிடமிருந்து ஏராளமான முறையீடுகளில் நாட்டம் செலுத்த வேண்டியிருக்கிற ஒரு துறையிலே, இதன் காரணமாக வழக்கமான வேலை மிகுந்துள்ள ஒரு துறையிலே, அதிகாரியே வேலையை எடுத்து முடிக்கும் முறை சிக்கனமாகவும் இருக்காது; செயலுக்கு வருவதும் எளிதல்ல. என்றாலும் கூட, தலைமைச் செயலகத்தின் சில துறைகளிலாவது தற்போதைய அமைப்பு முறையை ஓரளவு மாற்றுவது வேண்டப்படத்தக்க, செய்து முடிக்கப்படத்தக்க ஒன்றாகும். அப்போதுதான் முக்கியமான செயற் குறிப்பு ஒவ்வொன்றும் தொடக்கத்திலேயே அதிகாரி ஒருவரால் பார்க்கப்பட்டு அவரது நேரடி மேற்பார்வையின் கீழ் விரைந்து முடிவுறும். இந்தக் குறுகிய வரையரைக்குள் இத்தகைய திட்டம் உருவாக்கப்பட்டு, இப்போதுள்ள பணியாளர் எவரையும் வேலை நீக்கம் செய்யாமல் நிறைவேற்றப்படும். தலைமைச் செயலகத்தில் நிதித்துறை, தொழில்-தொழிலாளர் கூட்டுறவுத் துறை, பொதுத் துறையின் பொதுப் (பணி) பிரிவு, ஆகியவற்றில் இந்த முறையினைச் செயலுக்குக் கொண்டுவரலாமென குழு பரிந்துரைத்தது. மற்றத் துறைகளை விட இந்தத் துறைகளில் இம்முறையைச் செயலுக்குக் கொண்டு வருவதற்கு வாய்ப்பு மிகுதியாக உள்ளதே இதற்குக் காரணம். இம் முறையை மேற்கொள்வதால் அதிகாரிகளின் எண்ணிக்கையை ஓரளவு உயர்த்த வேண்டி வந்தாலும், கீழ்நிலைகளில் பெருமளவு செலவு மிச்சப்படும் எனக் குழு கருதுகிறது. நிதித் துறையில் இந்த முறையை மேற்கொள்ளுவதற்குத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இதனால் இத்துறையின் செலவு 10 சத வீதம் மிச்சப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ள பணியாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படமாட்டார்கள் என்பது உறுதியாவதுடன், இம் முறையை மேற்கொள்வதால், தக்க பணியாளர்களுக்குப் பதவி உயர்வதற்கான வாய்ப்புகள் பெருகும் என்பதும் இத் திட்டத்தின் மற்றொரு சிறப்புக் கூறாகும்.



1968 மார்ச் 27]

7. தொழில் நுட்பப் பணியாளர் நீங்கலான பிற பணியாளர் குறித்துச் சிக்கன நடவடிக்கை:—இரண்டாவது, மூன்றாவது திட்டக்கால அளவுகளில், பணியாளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளது. அரசு அலுவல்களின் முக்கியத்துவம் அதிகரித்ததாலும், அரசு அலுவல்களின் செயல் வரம்பு அதிகரித்ததாலும் பணியாளர்களின் எண்ணிக்கை உயர்ந்துவிட்டது எனக் கருதிய போதிலும், பணியாளர்களை, அதுவும் குறிப்பாகத் தொழில் நுட்பப் பணியாளர்கள் நீங்கலாக ஏனைய பணியாளர்களைக் குறைக்க வேண்டும் என்று குழு கருதியது. எனவே, எழுத்தர் பணியாளர் போன்ற தொழில் நுட்பப் பணியாளர் நீங்கலான ஏனைய பணியாளர்களில் 7½ சதவிகிதத்தினரைக் குறைப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து, குறைத்து சுமார் ரூபாய் 30 லட்சம் நடைமுதல் சேமிப்பைப் பெறுவதை உறுதிப்படுத்தும்படி அக் குழுவினர் பரிவுரை செய்துள்ளனர். ஒவ்வொரு துறையுடனும் விரிவான விவாதங்கள் நடத்தி அடுத்த ஓரிரு திங்கள்களுக்குள் உருவான செயற் குறிப்புகள் தயாரிக்கப்படும். ஓராண்டும் அதற்கு மேற்பட்டும் பணி புரிந்தவர்களுக்கு எந்த இடர்ப்பாடும் நேராதபடி அரசு கவனமாகப் பார்த்துக்கொள்ளும். ஒவ்வொரு துறையிலும் தேவைக்கு மேற்பட்டுள்ள பணியாளர்கள் குறித்துக் கணக்கெடுத்து, திட்ட வேலைகளுக்காகவும், உணவுப் பங்கீடு போன்ற இன்றியமையா வேலைத் திட்டங்களுக்கும் புதிதாக ஒப்பளிப்பு வழங்கியுள்ள பதவிகளில் அவர்களை அமர்த்திக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

8. கடைநிலை ஊழியர்களை வேலைக்கமர்த்துவது குறித்து நடைமுறையை மாற்றி அமைத்தல்:—அதைப் போன்றே, கடைநிலை ஊழியர்களை வேலைக்கமர்த்துவதற்காகத் தற்போதுள்ள நடைமுறையை மாற்றி அமைக்க வேண்டுமென குழு பரிவுரை செய்துள்ளது. தற்போது கீழ்க்கண்ட நடைமுறை செயலில் உள்ளது—

7—10 அல்லது அதற்குக் குறைவான அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகள் உள்ள அலுவலகங்களுக்கு (ஏவலர்கள், சிற்றெழுத்தர்கள் நீங்கலாக) இரண்டு ஏவலர்கள். கூடுதலான ஒவ்வொரு எட்டு அரசிதழ்ப் பதிவு பெறாத அதிகாரிகளுக்கும், கூடுதலாக ஒரு ஏவலர். அந்த எண்ணிக்கைக்குக் குறைவானவர்களுக்கென எந்த ஏவலரும் அனுமதிக்கப்படுவதில்லை. தலைமைச் செயலகத்தில், ஒவ்வொரு இரண்டு பிரிவுகளுக்கும் ஒரு ஏவலர் என்றபடி, ஏவலர்கள் வேலைக்கமர்த்தப்படலாம்.

தலைமைச் செயலகத் துறைகள் நீங்கலான ஏனைய அலுவலகங்களில் இதைவிட தாராளமான நடைமுறையை மேற்கொள்வதில் எந்தவிதச் சிறப்பான நியாயமும் இல்லை என்பதால், தலைமைச் செயலகம் நீங்கலான ஏனைய அலுவலகங்களில், அரசிதழ் பதிவுப் பெறாத ஒவ்வொரு பத்து அதிகாரிகளுக்கும் ஒரு ஏவலர் அமர்த்தப்படலாம் என்று குழு பரிவுரை செய்துள்ளது. எனினும், அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகளின் மொத்த எண்ணிக்கை பதினைந்து ஆகிவிட்டவுடன், இரண்டாவது ஏவலர் நியமிக்கப்படுவார். குழுவின் இப் பரிவுரையைச் செயல்

படுத்தினால், தற்போதுள்ள 17,000 ஏவலாளர்களில், 2.000 ஏவலர்கள் தேவைக்கு மிகுதி எனக் கருதப்படுவர். அதன் விளைவாக ஆண்டுதோறும் சுமார் ரூ. 20 லட்சம் சேமிப்பு கிடைக்கும். இவர்களைப் பொறுத்தவரையில் கூட உதவியாளர்கள், எழுத்தர்கள் குறித்துச் செய்யப்பட்டதுபோல், 1965 அக்டோபர் 1-ம் நாளுக்குப் பிறகு முதன் முதலாக தாற்காலிகமாய் நியமிக்கப்பட்டவர்கள் மட்டுமே பணியிலிருந்து நீக்கப்படுவர். எஞ்சியுள்ள மிகுதியாகக் கருதப்படுபவர்கள் தொடர்ந்து பணியில் வைத்துக் கொள்ளப்பட்டு, அவர்களது துறைகளிலோ, பிற துறைகளிலோ காலி இடங்கள் ஏற்படும்போது அக் காலி இடங்களில் அமர்த்தப்படுவர்.

**9. பயணப்படி, சில்லறைச் செலவுகள் குறித்த சிக்கன நடவடிக்கை.**—பயணப்படிச் செலவில் 5 சத விகிதத்தையும் அலுவலகச் சில்லறைச் செலவில் 10 சத விகிதத்தையும் குறைக்க அரசு முயற்சி மேற்கொள்ளும். 1966-67 வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் இந்தக் குறைப்புகள் ஏற்கெனவே எதிரொலிக்கின்றன, இம் மதிப்பீடுகளில் கண்டிப்பாகச் செயல்படுத்தும்படி துறைத் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுவர். இதன் விளைவாக, ஆண்டொன்றுக்குக் குறைந்தது ரூ. 25 லட்சம் சேமிப்புக் கிடைக்கவேண்டும்.

## II. தனித்தனி துறைகள் குறித்த பரிவுரைகள்

**10. மருத்துவ, பொது சுகாதாரத் துறைகளை ஒருங்கிணைத்தல்:—** மருத்துவத் துறையையும் பொதுச் சுகாதாரத் துறையையும் இணைப்பது குறித்து அரசு நெடுநாளாகவே ஆய்வு செய்து வந்துள்ளது. மருத்துவத் துறையையும் பொதுச் சுகாதாரத் துறையையும் இணைத்துச் சீரமைப்பதற்கு ஆதரவாக, கீழ்க்கண்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன :—

(i) மருத்துவர்களை வேலைக்குத் தேர்ந்தெடுப்பதில் குறிப்பாக இடர்ப்பாடுகள் உள்ளன.

(ii) மருத்துவத் துறையும், பொதுச் சுகாதாரத் துறையும் இணைந்து செயல்படாததன் காரணமாக, கிராமப் பகுதிகளில் மருத்துவ உதவி அளிப்பது, குறிப்பாக ஆரம்பச் சுகாதார நிலையங்களை நிறுவும் திட்டம் தடைப்பட்டுள்ளது.

(iii) குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைச் செயல்படுத்துவதில், மாநில அளவில் பணியாளர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க வேண்டி வந்தது. ஏனெனில், இரண்டு துறைகளும் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் குறித்து நாட்டம் செலுத்துகின்றன. மாநில அளவில் ஒருங்கிணைந்த நிர்வாகத்தின்கீழ் இத் திட்டத்தைச் செவ்விய முறையில் செயல்படுத்துவது இயலும்.

(iv) மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதன் விளைவாக, நுணுக்கமாக மேற்பார்வையிடுவதைக் குறித்தும் ஆலோசனைகள் கூறுவது குறித்தும் கூடுதலான பொறுப்புகள் ஏற்பட்டுள்ளன.



11. கடந்த சில ஆண்டுகளாக, இரண்டு துறைகளையும் ஒருங்கிணைக்கும்படி இந்திய அரசு அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளது. மாநில, மாவட்ட, வட்ட, வட்டார அளவுகளில் இரு பணிகளையும் முழுவதும் ஒருங்கிணைப்பது சரியானது என்று இந்திய அரசு கருதியது. அதே சமயத்தில், மருத்துவக் கல்வி குறித்த சிக்கல்களைக் கவனித்துக் கொள்ள தனிப் பொறுப்பு வகிக்கும் ஒரு இயக்குநர் தேவை என்று பல்கலைக் கழகம் வலியுறுத்தி வந்துள்ளது. இக் கருத்துக்கள் குறித்தும், கடந்த காலத்தில் வல்லுனர் குழுக்கள் பல தெரிவித்த கருத்துக்களையும் பரிசீலித்துப் பார்த்து, மருத்துவத் துறையையும் பொதுச் சுகாதாரத் துறையையும் இணைக்கும்படியும் மருத்துவக் கல்விக்காக ஒரு தனித்துறையை நிறுவும்படியும் உயர் நிலைக் குழு பரிவுரை செய்துள்ளது. கற்பிக்கும் மருத்துவ மனைகளின் நிர்வாகம், மருத்துவக் கல்வி இயக்குநர் மேற்பார்வையின்கீழ் வரும். இரு துறைகளுக்கும் சிவில் உதவி மருத்துவரின் அளவில் நியமனங்கள் செய்யப்பட வேண்டுமென்றும், தற்போதைக்கு இரு துறைகளுக்கும் இடையே பணியாளர்கள் பரிமாறிக் கொள்ளப்பட வேண்டும் என்று அக் குழு மேலும் பரிவுரை செய்துள்ளது. மாவட்ட அளவில், பெரிய மருத்துவ மனைகளின் நிர்வாகம், சிவில் மருத்துவர்களின் தரத்திலுள்ள கண்காணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் குழு கூறியுள்ளது. ஆரம்பச் சுகாதார நிலையம், வட்ட மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனை அல்லாத பிற மருத்துவமனைகள், சுகாதாரப் பணிகள் ஆகியவற்றின் நிர்வாகத்திற்கென ஒவ்வொரு வளர்ச்சி மாவட்டத்திற்கும் மாவட்டச் சுகாதாரப் பணி அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக விவரங்களைத் தயாரிக்கவும், இடைக்காலத்தில் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளைச் சமாளிக்க ஆலோசனைகளைக் கூறும்படியும், கல்வி-பொதுச் சுகாதாரத் துறைச் செயலாளரை இக் குழு கேட்டுக் கொண்டுள்ளது.

**12. தலைமைச் செயலக அளவில் தொழில்-தொழிலாளர் கூட்டுறவுத் துறையிலிருந்து "கூட்டுறவை" வேளாண்மைத் துறைக்கு மாற்றுவது :**—தற்போது கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் வேளாண்மைக் கடன், வேளாண்மை விற்பனை, பயன் கொள்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், பண்ணைக் கூட்டுறவுச் சங்கங்கள், வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், பல்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றைக் கவனித்துக் கொள்கிறார். கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள், பால் கூட்டுறவுச் சங்கங்கள், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றைச் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் கவனித்துக் கொள்கின்றனர். வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் நீங்கலாக, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், வேளாண்மைத் துறையில் உள்ள கூட்டுறவு இயக்கத்தை முக்கியமாக கவனித்து வருகிறார். வேளாண்மைத் துறையும் கூட்டுறவுத் துறையும் இன்னும் அதிக அளவில் இணைந்து செயல்பட

*1968 மார்ச் 27]*

வேண்டுமென்று குழு கருதியது. இந்த நோக்கத்துடன் தலைமைச் செயலகத்தில் தொழில்-தொழிலாளர் கூட்டுறவுத் துறையிலிருந்து "கூட்டுறவை" வேளாண்மைத் துறைக்கு மாற்ற வேண்டுமென்று குழு பரிவுரை செய்துள்ளது.

13. கிடங்குகளைக் கட்டுவது இப்போது கொள்முதல் திட்டத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதால், மாநிலக் கிடங்குக் கார்ப்பொரேஷன் உணவுத்துறைச் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் கொண்டுவர வேண்டுமென்றும் குழு பரிவுரை செய்துள்ளது. தொழில்-தொழிலாளர் கூட்டுறவுத் துறை இணை நெறியாளருக்குப் பதிலாக, உணவுத் துறைச் செயலாளர் தமது அலுவல் காரணமாக கார்பொரேஷனின் தலைவராய் இருக்க வேண்டும் என்றும் குழு பரிவுரை செய்துள்ளது.

14. வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், வீட்டு வசதி வாரியத் தலைவரின் மேற்பார்வைக்கு மாற்றப் படவேண்டும் என்றும், இது காரியத்திற்காக வீட்டு வசதி வாரியத் தலைவர், தமது அலுவல் காரணமாக, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளராக நியமிக்கப்பட வேண்டுமென்றும் குழு மேலும் பரிவுரை செய்துள்ளது.

குழுவின் மேற்சொன்ன பரிவுரைகளை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. அவற்றைச் செயல்படுத்துவதற்கான விவரங்கள் தயாரிக்கப் பட்டு வருகின்றன.

15. **கட்டிட வேலைத் திட்டங்கள் குறித்துச் சிக்கன நடவடிக்கைக்கான வாய்ப்புகளை ஆய்வதற்காகத் துணைக்குழு ஒன்றை அமைத்தல் :—** திட்ட வேலைகள், திட்டத்தில் சேராத வேலை திட்டங்கள் குறித்த செலவின் பெரும்பகுதி, கட்டிட வேலைத் திட்டங்கள் குறித்ததாகும்: தற்போதுள்ள குறிப்பீடுகளையும், நடைமுறைகளையும் மேம்படுத்துவதன் மூலம், கட்டிட வேலைகளின் செலவுகளை கணிசமான அளவுக்குப் பணத்தை மிச்சப்படுத்த வகை செய்யப்பட வேண்டும். விலை குறைவான மாற்றுப் பொருள்களை பயன்படுத்துவதன் மூலமும் செலவுகளைக் குறைக்கலாம். எனவே, ஒரு தனிப்பட்ட துணைக் குழுவை நியமிக்கும்படி உயர் அதிகாரக்குழு பரிவுரை செய்துள்ளது. திட்ட ஆலோசகர், பொதுப் பணித் துறைச் செயலாளர், தலைமைப் பொறியாளர்களில் ஒருவர் தனியார் துறையிலிருந்து திறமை மிக்க ஒரு சில பொறியாளர்கள் ஆகியோர் அந்தத் துணைக் குழுவில் உறுப்பினர்களாய் இருப்பர். இந்திய அரசு நிறுவியுள்ள குழுக்கள் கட்டிடங்கள் கட்டுவதில் சிக்கன முறையை மேற்கொள்வது குறித்து ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளை இக் குழு வழிகாட்டியாகக் கொள்வதுடன், இது குறித்த எல்லாக் கூறுகளையும் பரிசீலனை செய்த பிறகு, உயர் அதிகாரக் குழுவின் ஏற்புக்காகத் தனது கருத்துக்கள் அடங்கிய செயற் குறிப்புகளை அனுப்பும். துணைக் குழுவை நிறுவுவதற்கான நடவடிக்கை முடிக்கப்பட்டு வருகிறது.



*1968 மார்ச் 27*

16. **எடைகள்—அளவைகள் துறையை எடுத்து விடுதல் :—** 1958-ம் ஆண்டு, தமிழக எடைகள்-அளவைகள் (செயல்படுத்தல்) சட்டத்தின்கீழ், 1963 ஏப்ரல் 1 முதல், மெட்ரிக் அளவைகளைப் பயன்படுத்துவது இம் மாநிலம் முழுவதும் கட்டாயம் ஆக்கப்பட்டது. மெட்ரிக் எடைகளை பயன்படுத்தும் முறை படிப்படியாகக் கொண்டுவரப்பட்டு, 1964 ஏப்ரல் 1-ம் நாளுக்குள், இம் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டது. மெட்ரிக் எடைகளையும் அளவைகளையும் பயன்படுத்துவது குறித்து மக்களுக்கு நேரிடையாக ஆலோசனை கூறும் பணியைத் துறை ஏறக்குறைய முடித்து விட்டது எனக் கூறலாம். எடைகள், அளவைகளின் மேல் உள்ள முத்திரைகளைச் சரி பார்த்தல், மேற்படிச் சட்டத்தைச் செயல்படுத்தல் ஆகிய வேலைகளைத்தான் அது இப்போது கவனித்து வருகிறது. தொழிலாளர் துறையிலும், எடைகள்-அளவைகள் துறையிலும் தற்போது செயலில் உள்ள அமைப்பைப் பரிசீலனை செய்த உயர் அதிகாரக் குழு, சில கருத்துக்களை வெளியிட்டது. தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர்களும், எடைகள்-அளவைகள் ஆய்வாளரும், நகரப்பகுதிகளில் உள்ள ஒரே மாதிரியான நிறுவனங்களைப் பார்வையிட வேண்டி இருப்பதால், இரு பணிகளையும் ஒருங்கிணைப்பது பயனுள்ளதாகும் என்று அக் குழு கருத்து தெரிவித்தது. எனவே இரு துறைகளையும் இணைப்பது மூலம் இரு துறைகளின் வேலைகளையும் தொழிலாளர் துறை அதிகாரிகளே மேற்கொள்ளலாம் என்று குழுவினர் பரிவுரை செய்தனர். இந்தப் பரிவுரையைச் செயலுக்குக் கொண்டுவர வேண்டுமானால், தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரது அதிகார வரம்பை மாற்றி அமைக்க வேண்டி இருக்கும். சில தரங்களில் பணியாளர்களின் எண்ணிக்கையைக் கூடுதலாக்க வேண்டியிருக்கும். அப்போது கூட, இரு துறைகளுக்கும் சேர்ந்து தற்போதுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் குறைந்த எண்ணிக்கையுள்ள பணியாளர்களுடன் இணைந்த துறையை நிர்வகிக்க இயலும். இரு துறைகளையும் இணைப்பது மூலம், ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ. 5 லட்சம் சேமிப்பு கிட்டும்.

17. **பத்திரப் பதிவுத் துறையைச் சீரமைத்தல் :—** பத்திரப் பதிவிற்காகக் கொடுத்துக் கொள்ளப்படும் பத்திரங்கள் தற்போது இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன :—

(அ) துணைப் பதிவாளர் அலுவலகத்தில் வைத்து வரப்படும் புத்தகங்களில் படி எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய பத்திரங்கள்.

(ஆ) 1958-ம் ஆண்டு இந்தியப் பத்திரப் பதிவுச் சட்டத்தின் 69 (1) பிரிவின்கீழ் உருவாக்கப்பட்டுள்ள விதிகளைச் சேர்ந்த 114-வது விதியின்கீழ் படிகள் கொடுத்துக்கொள்ளப்படும் பத்திரங்கள். இப் பத்திரங்களைப் பொறுத்தவரையில், துணைப் பதிவாளர் அலுவலகங்களில் வைத்து வரப்படும் புத்தகங்களில் படிகள் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

பின்னர்ச் சொல்லிய நடைமுறை, 114-வது விதியில் கூறியுள்ள தாற்காலிகத் தன்மை வாய்ந்த பத்திரங்கள், குத்தகைப் பத்திரங்கள் போன்றவை குறித்து மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றது. கூட்டுறவுச் சங்கங்கள், நில அடைமான வங்கிகள் குறித்த பெரும்பாலான பத்திரங்கள் இந்த வகையின்கீழ் வரும். பதிவு செய்யப்படும் சுமார் 10 லட்சம் பத்திரங்களில், சுமார் 1 லட்சம பத்திரங்கள் இந்த வகையின்கீழ் வருகின்றன. எஞ்சியுள்ள 9 லட்சம் பத்திரங்களைப் பொறுத்த வரையில், பத்திரங்களின் படிகள் எடுத்தெழுதிக் கொள்ளப்படுகின்றன. பத்திரப் பதிவுத் துறைத் தலைவருடன் விவாதங்கள் நடத்திய பிறகு, எல்லாப் பத்திரங்கள் குறித்தும், பத்திரங்களின் படிகளைக் கொடுத்துக் கொள்ளும் நடைமுறை மேற்கொள்ளப்படலாம் என்று முடிவு செய்துள்ளது. கட்சிக்காரர்கள் சான்று கூறப்பட்ட படிகளைத்தான் கொடுக்கிறார்கள் என்பதாலும் பத்திரப் பதிவு அதிகாரிகள் அவற்றை ஒப்பிட்டுச் சரி பார்க்கிறார்கள் என்பதாலும், தற்போது செயலில் உள்ள முறையில் ஏற்படக்கூடிய எந்தப் பிழையும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளப்படும். பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட பிறகு, அவற்றை விரைவில் கட்சிக்காரர்கள் திரும்பப் பெறுபவர். எனவே, எல்லா வகைப் பத்திரங்களுக்கும் பத்திரங்களின் படிகளைக் கொடுத்துக்கொள்ளும் நடைமுறையை நீட்டிக்க வேண்டும் என்று குழு பரிவுரை செய்துள்ளது. மூலப் பத்திரங்களில் எழுதியுள்ளவற்றைப் படி எடுக்கும் புத்தகத்தில் எழுதிக் கொள்வதற்காகவென்றே நியமிக்கப்பட்டுள்ள சுமார் 550 எழுத்தர்களும் படி எழுதுவோரும் தேவைக்கு மேற்பட்ட பணியாளர்களாகக் கருதப்படுவர். ஏற்கெனவேயுள்ள பணியாளர்கள் வேலையிலிருந்து எடுபடாத விதத்தில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும். தேவைக்கு மேற்பட்ட பணியாளர்களைத் தகுந்த வேறு பணிகளில் அமர்த்திய பிறகு, ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ 9.5 லட்சம் சேமிப்பு கிடைக்கும்.

18. பத்திரப் பதிவுத் துறையில் பதவி உயர்வுகளுக்கான வாய்ப்புகள் கிடையாதென்பதைக் கருத்தில் கொண்டு பத்திரப் பதிவு அலுவலகங்களின் ஆய்வாளர்ப் பதவிகளை ரூ. 900----50—1,100 சம்பள வீதத்தில் பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவர் பதவியாக மாற்ற வேண்டும் என்று குழு பரிவுரை செய்துள்ளது. மாவட்டப் பதிவாளர்களை விட அதிகமான சம்பள விதத்தில் நான்கு வட்டார அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று குழு பரிவுரை செய்துள்ளது. எல்லாத் துணைப்பதிவாளர் அலுவலகங்களையும் மேலும் முறையாக வந்து பார்வையிடுவதில் பத்திரப் பதிவுத் துறைத் தலைவருக்கு அவர்கள் உதவி புரிவர். சென்னை-செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, மதுரை, இராமநாதபுரம் ஆகிய நான்கு பெரிய பத்திரப் பதிவு மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்று குழு பரிவுரை செய்துள்ளது. 1967-68 ஆண்டிற்காக இது இரண்டாம் பாக வேலைத் திட்டமாகக் கருதப்படும். இச் செயற் குறிப்புகளைச் செயல்படுத்துவதன் மூலம் பத்திரப் பதிவுத் துறையில் பதவி உயர்வு வாய்ப்புகள் பெருகும்.



1968 மார்ச் 27]

19. வேளாண்மை வருமானவரித் துறையின் அமைப்பைச் சீரமைத்தல் :—வேளாண்மை வருமானவரி மூலம் தற்போது ஆண்டொன்றுக்குச் சராசரி சுமார் 140 லட்சம் வசூல் கிடைக்கிறது. இதில் சுமார் ரூ. 90 லட்சம் மலைத் தோட்டங்களிலிருந்து கிடைக்கிறது. எஞ்சியுள்ள ரூ. 50 லட்சம் மலைத் தோட்டங்கள் அல்லாத பகுதிகளிலிருந்து கிடைக்கிறது. வேளாண்மை வருமானவரித் துறையின் நிர்வாகத்திற்காக இப்போது சுமார் ரூ. 15 லட்சம் செலவாகிறது. இதில் மலைத் தோட்டங்கள் சம்பந்தமான வேலையைக் கவனிக்கும் பணியாளர்களுக்காக மட்டும் சுமார் ரூ. 3 லட்சம் செலவாகிறது. மலைத் தோட்டங்கள் மூலம் கிடைக்கும் தொகை ரூ. 90 லட்சம் என்றிருக்க செலவு மூன்று சதவீதம்தான் ஆகிறது என்பதை இதிலிருந்து அறியலாம். அதற்கு மாறாக, மலைத் தோட்டம் அல்லாத பகுதிகள் குறித்த வேலையைக் கவனிக்கும் பணியாளர்களுக்காகச் சுமார் 12 லட்சம் அல்லது வசூல்களில் 24 சதவீதம் செலவாகிறது.

20. மலைத் தோட்டங்கள் அல்லாத பகுதிகளில் வரி விதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 40,000 ஆகும். இதில் 28,000-க்கு மேற்பட்டவர்கள் தீர்வை இணக்கம் செய்து கொள்கின்றனர். சுமார் 12,000 பேர் மட்டுமே விவரக் கணக்குகள் அனுப்புகின்றனர். இந்த 12,000 பேர்களில்கூட, சுமார் 1,500 பேருக்கு, விவரக் கணக்குகளை பெற்றுக்கொண்ட பிறகு, விலக்களிக்கப்படுகின்றது. தற்போதைய நடைமுறையின்படி, தீர்வை இணக்கம் செய்துகொள்வது குறித்த ஆணைகள் ஆண்டுதோறும் பிறப்பிக்கப்படுகின்றன. தீர்வை இணக்கம் செய்து கொள்வது குறித்த ஆணைகள் ஒருமுறை பிறப்பிக்கப்பட்டால் மூன்று ஆண்டுகளுக்குச் செயலில் இருக்க வேண்டும் என்று வேளாண்மை வருமான வரி ஆணையர் கூறியுள்ளார்.

21. ஆணையரின் செயற் குறிப்பு மூலமாக ஒரு முக்கிய பயன் கிட்டும். அதாவது, துறையினர் பிறப்பிக்கும் இணக்க ஆணைகளின் எண்ணிக்கை தற்போது உள்ளதில் 1/3 ஆகக் குறையும். வேலைப் பளு குறைவதற்கு இவ்வாறு வாய்ப்பு உள்ளதால், சுமார் ரூ. 50 லட்சம் தொகையை வசூலிக்க சுமார் ரூ. 12 லட்சம் செலவில் தற்போதுள்ள பணியாளர்களை வைத்து வருவது பொருத்தமா என்ற வினா எழுந்துள்ளது இயற்கையே. வட்ட, பிர்க்கா அளவில் வருவாய்த் துறையைச் சேர்ந்த முறையான பணியாளர்களிடம் இந்த வேலையை ஒப்படைக்கலாம் என்று கருதப்படுகிறது. இதனால், அப்பணியாளர்களது வேலைப் பொறுப்பு கூடுதலாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. அத்துடன் வருவாய்க் கோட்ட அதிகாரிகள், தமது அலுவல் காரணமாக, வேளாண்மை வருமான வரி உதவி ஆணையர்களாகச் செயலாற்ற அதிகாரம் பெறுவர். இந்தச் செயற் குறிப்புகளை முழுவதும் செயற்படுத்தினால், ஆண்டுதோறும் சுமார் ரூ. 6 லட்சம் சேமிப்புக் கிடைக்கும்.

இச் சிக்கல்களையெல்லாம் கவனமாக ஆராய்ந்த இக் குழு தோட்டப் பகுதிகளல்லாத பகுதிகளைப் பொறுத்தவரையில்

த்தின் முழு ஏற்பையும் தெரிவித்துள்ளது. மலைத் தோட்டப் பகுதிகளில் தற்போதைய ஏற்பாடுகள் தொடர்ந்து செயலில் இருந்து வரும்.

22. உணவு, வேளாண்மைத் துறை நடத்தி வந்த நியாய விலைக் கடைகள் மூலம் சென்னை மாநகரில் விறகு விற்கும் திட்டத்தைக் கைவிடுதல் :—உணவு-வேளாண்மைத் துறை, 1962 டிசம்பர் திங்கள் 31-ந் தேதி அன்று வெளியிட்ட 3988-ம் எண் அரசாங்க ஆணையில், சென்னை மாநகரில் நியாய விலைக் கடைகள் மூலம் விறகு விற்பனை ஏற்பாட்டுக்கு வகை செய்யும் திட்டத்துக்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. நியாய விலையில் மக்களுக்கு விறகு கிடைக்க வகை செய்து அதன் மூலம் நகரில் விறகு விலை ஏற்றத்தைத் தடுப்பதே இதன் நோக்கமாகும். இத் திட்டத்தின் கீழ் நகரின் பல்வேறு பகுதிகளில் எட்டு நியாய விலைக் கடைகள் தொடங்கப்பட்டன. இந்த எட்டுக் கடைகளில், மூன்று கடைகள் போதிய வியாபாரம் இல்லாதபடியால் ஏற்கெனவே மூடப்பட்டு விட்டன.

சென்னை மாநகரில் விறகுப் பற்றுக்குறை வெகுவாக நிலவிய போது இவ் வேலைத் திட்டம் தொடங்கப்பட்டது. இத் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றுவது குறித்து உயர் அதிகாரக் குழு விரிவாகப் பரிசீலனை செய்தது ; நகரில் தற்போது விறகுப் பற்றுக்குறை இராத காரணத்தினால் இவ் வேலைத் திட்டத்தைக் கைவிடலாம் என இக் குழு பரிவுரை செய்துள்ளது.

குழுவின் மேற்சொன்ன பரிவுரையை ஏற்றுக்கொண்டுள்ள அரசாங்கம் 1966 மார்ச் 1-ம் தேதி முதற்கொண்டு இவ் வேலைத் திட்டத்தை விட்டுவிடுமாறு ஆணையிட்டுள்ளது. இதனால் அரசாங்கத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 85,000 மிச்சமாகும்.

23. திட்ட வளர்ச்சி அதிகாரிகள் (தொழில்) எண்ணிக்கையைக் குறைத்தலும் திட்ட வளர்ச்சி அதிகாரிகள் (கூட்டுறவு) பதவிகளைத் தரம் குறைத்தலும் :—தற்போது சமுதாய வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் (தொழில்) திட்ட வளர்ச்சி அதிகாரி ஒருவர் உள்ளார். இவர்களின வேலையின் அளவைக் கணக்கிட்டுப் பார்த்ததில் (தொழில்) திட்ட வளர்ச்சி அதிகாரிகளின் எண்ணிக்கையை 50 சத வீதம் குறைக்க அரசாங்கம் முடிவு செய்தது. அதாவது இனி ஒவ்வொரு இரண்டு வட்டாரங்களுக்கும் ஒரு (தொழில்) திட்ட வளர்ச்சி அதிகாரிதான் இருப்பார். வட்டாரங்களில் (கூட்டுறவு) திட்ட வளர்ச்சி அதிகாரியின் பதவியைக் கூட்டுறவுச் சங்கங்களின் முதுநிலை இன்ஸ்பெக்டர் பதவிக்குத் தரம் குறைக்கவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. ஆனால் கூட்டுறவுத் துணைப் பதிவாளரது பதவி தொடர்ந்து இருக்க வேண்டிய அவசியம் உள்ள அளவுக்கு வேலை அதிகமாக இருக்கும் வட்டாரங்களில் இப் பதவிகள் தொடர்ந்து இருக்கும். இம் முடிவுகளினால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 8 லட்சம் மிச்சமாகும்.





### இக்குழு இதுவரையில் செய்துள்ள பரிவுரைகளினால் மிச்சமாகும் என எதிர்பார்க்கப்படும் தொகை.

| தொடர் எண்ணும் இனமும். | ஆண்டு ஒன்றுக்கு மிச்சமாகக்கூடிய தொகை. (ரூபாய்) |
|---|---|
| 1 பயணப்படி, அலுவலகச் சில்லறை செலவினங்கள் ஆகியவற்றில் சிக்கனம். | 25,00,000 |
| 2 எலவர்கள் நியமனம் குறித்த வரையறைகளை மாற்றுதல். | 20,00,000 |
| 3 தொழில் நுட்பப் பணியாளர்களை எண்ணிக்கையைக் குறைத்தல். | 30,00,000 |
| 4 சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் அரசாங்க விறகுக் கடைகளை மூடுதல். | 85,000 |
| 5 எடைகள், அளவைகள் துறையை எடுத்துவிட்டு, அந்நினைத் தொழிலாளர் துறையுடன் இணைத்தல். | 5,00,000 |
| 6 வேளாண்மை வருமானவரித் துறையைச் சீரமைத்தல். | 6,00,000 |
| 7 பத்திரப் பதிவுத் துறையைச் சீரமைத்தல் .. | 9,50,000 |
| 8 திட்ட வளர்ச்சி அதிகாரிகள் (தொழில்) எண்ணிக்கையைக் குறைத்தலும், திட்ட வளர்ச்சி அதிகாரிகள் (கூட்டுறவு) பதவிகளை தரம் குறைத்தலும். | 8,00,000 |
| 9 நிதித் துறையில் அதிகாரிகள் அளவில் தொடங்கி நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். | 65,000 |
| மொத்தம் .. | 1,05,00,000 |

## பிற்சேர்க்கை I.

தமிழ்நாடு அரசாங்கம்.

**அரசாங்க ஆணை எண் : 1016, நிதித் துறை, தேதி 1965 செப்டம்பர் 15.**

*[நிர்வாகம்—சிக்கனமும் சீரமைப்பும்—விசாரணை—குழு நியமனம்—ஆணையிடப்பட்டது.]*

**ஆணை எண் : 1016, நிதித் துறை, தேதி 1965 செப்டம்பர் 15.**

தேசியத் திட்டத்தின் குறிக்கோள்களை ஒட்டி தமிழகத்தின் நான்காவது திட்டம், உற்பத்தித் துறைகளில் பெருமளவு முதலீடு செய்வதன் மூலமும், சமுதாயப் பணிகளை விரிவுபடுத்துவதன் மூலமும் நாட்டின் வளர்ச்சிக்கு வழிகோல முனைகின்றது. தற்போது வகுக்கப்பட்டுள்ள திட்டக் கண்ணோட்டத்தின்படிப் பார்த்தால், குறிப்பாக நாட்டின் பாதுகாப்புக்கான தேவைகளைக்

கணக்கிட்டுப் பார்க்கையில் வீண்செலவைத் தவிர்ப்பதன்மூலம் பொதுத் துறையிலும், தனியார் துறையிலும், மிகுந்த கட்டுப் பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கருதப்படுகிறது. இத்தகைய கட்டுப்பாடு குறித்த கொள்கையின் முக்கிய கூறுக, நிர்வாகச் செலவு அதிகரித்துக் கொண்டு வருவதைத் தடுப்பது அவசியமென வலியுறுத்தப்பட் டுள்ளது. ஐந்தாண்டுத் திட்ட வேலைகளின் விளைவாக அரசின் அலுவல்கள் பெருமளவுக்கு விரிவடைந்துள்ளதை ஒட்டி எல்லா நிலைகளிலும், செயல்பட்டு வரும் தொழில் நுட்பப் பணியாளர், பிற பணியாளர்களின் எண்ணிக்கை ஏராளமான அளவுக்கு அதிகரித் துள்ளது. சம்பள விதங்களும், அகவிலைப்படி விதங்களும், அடுத் தடுத்து அதிகரிக்கப்பட்டதன் விளைவாகவும் நிர்வாகச் செலவு அதிகரித்துள்ளது. ஆங்காங்கே புதிய துறைகள் ஏற்படுத்தப்பட் டுள்ளன; புதிய பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. பணியாளர்களை மேற்கொண்டும் அதிகரிக்கவேண்டிய அவசியம் இருக்கக்கூடிய இந் நிலையில் துறைகள் சிக்கனமாகவும், திறம்படவும் செயல்படும் முறையில் பல்வேறு துறைகளின் நிர்வாக அமைப்பை ஆய்ந்து சீரமைப்பது சாலச் சிறந்ததாகும். வேலை அளவை மாற்றி யமைத்தல், நடைமுறையைச் சீரமைத்தல், பல்வேறு நிலைகளில் உள்ள அதிகார மன்றங்களுக்கு நிதி அதிகாரங்களையும், நிர்வாக அதிகாரங்களையும், பிரித்துக் கொடுத்தல் ஆகியவை குறித்து தற் போதுள்ள நடைமுறையை ஆய்ந்து அறிதல் ஆகிய நடவடிக்கை கள் மூலமாக இச் சீரமைப்புப் பணி மேற்கொள்ளப்படலாம்.

2. திட்டச் செலவில் பெரும்பகுதி, கட்டிடங்களுக்காகச் செய்யப்படுகிறது. வரி வடிவங்களையும், குறிப்பீடுகளையும் மாற்றி அமைத்தல் மூலமாகவும், மதிப்பீடுகளைத் தயாரித்தல், பரிசீலனை செய்தல், அவற்றிற்கு ஒப்பளிப்பு வழங்குதல் ஆகியவை குறித்து தற்போதுள்ள நடைமுறைகளை மேம்படுத்துவதன் மூலமாகவும், இத் துறையிலும் சிக்கன முறையைக் கொண்டுவர முடியும். நாட்டின் பாதுகாப்புக்காகவும், பாதுகாப்பு வேலையைச் சார்ந்த உற்பத்தி வேலைக்காகவும், பாதுகாக்கப்படவேண்டிய பற்றாக் குறைப் பொருள்களைப் பயன்படுத்துவதில் சிக்கனத்தைக் கையாள்வது மிகவும் இன்றியமையாததாகும்.

3. வளர்ச்சித் துறைகளுக்கான செலவில் கணிசமான பகுதி குறித்து உதவித் தொகைகளும், மானியங்களும் வழங்கப்படு கின்றன. அரசாங்கக் கொள்கை குறித்த முக்கியமான சில பணிகளை நிறைவேற்ற உதவித் தொகைகளும், மானியங்களும், மிகவும் அவசியமானவை என்றாலும், அவை தவறாகப் பயன் படுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகளை அறவே அகற்ற அப் பணிகள் குறித்து அவ்வப்போது ஆய்வு செய்யவேண்டியது அவசியமாகும். எந்த நன்மை பெறுவதற்காக உதவித் தொகைகள் வழங்கப்பட்டனவோ, அந்த நன்மை ஏற்பட்டிருந்தால், இவ் வுதவித் தொகைகளை நிறுத்திவிட வேண்டும்.

4. நிர்வாகத்தில் சிக்கன முறையை கொண்டுவருவது குறித்த இக் கூறுகளும் இது தொடர்பான பிற கூறுகளும் சிக்கனம்-





நிர்வாகச் சீரமைப்பு குறித்த உயர் அதிகாரக் குழு ஒன்றினால் ஆராயப்படவேண்டும் எனவும் இக் குழுவின் அலுவல்கள் பின் வருவனவாக இருக்கலாம் என்றும் அரசாங்கம் கருதுகிறது :—

(i) அரசாங்கத்தின் பல்வேறு துறைகளின் அமைப்பை ஆய்வு செய்யவும், பல்வேறு நிலைகளில் சீரமைப்பு மூலமாகவும், வேலை முறைகளை மாற்றியமைப்பதன் மூலமாகவும், செலவில் சிக்கன முறைகளைக் கையாள்வதற்கான சாத்தியக்கூறுகளை கண்டறிதல்;

(ii) பல்வேறு துறைகளில் பணியாளர் நியமனத்திற்கான அடிப்படையை ஆராய்தலும் அவசியமான இடங்களில் இந்த அடிப்படையை மாற்றியமைக்க ஆலோசனை வழங்குதலும்;

(iii) பல்வேறு துறைகளில் குறிப்பாக பணியாளர், சில்லரைச் செலவுகள், பயணப்படி ஆகியவை குறித்த செலவு அதிகரிப்பை ஆய்ந்தறிதலும் அவற்றைக் குறைப்பதற்கு வழிவகைகள் குறித்து ஆலோசனை கூறுதலும்; இயல்பான செலவுகளையும் பேணுதல் தன்மைவாய்ந்த வளர்ச்சிப் பணிச் செலவுகளையும் அதிகரிக்காமல் கண்காணிப்பில் வைத்து அதன்மூலம் திட்டப் பணிகளுக்கு அதிக அளவு நிதி கிடைக்க வகை செய்தலும் ;

(vi) பல்வேறு துறைகளின் பெரிய கட்டிட வேலைகளை ஆய்வு செய்து, கட்டிட அமைப்பு, குறிப்பீடுகள் ஆகியவற்றைத் தக்கவாறு மாற்றியமைப்பதன்மூலமும் மதிப்பீடுகளைத் தயா ரித்தல், அவற்றிற்கு ஒப்பளிப்பு வழங்குதல், ஆய்வு செய்தல் ஆகியவை குறித்த நடைமுறைகளை மேம்பாடு செய்வதன் மூலமும் கட்டிடங்களுக்கானச் செலவை குறைப்பதற்கு வழிவகைகள் வகுத்தலும்;

(v) அரசாங்கத் துறைகளில் பல்வேறு வகையைச் சேர்ந்த பொருள்கள், கருவிகள் ஆகியவற்றைச் சேகரித்து வைப்பதற்கான தற்போதைய நடைமுறையை பரிசீலனை செய்து இந்த நடை முறையை மேம்படுத்த ஆலோசனை வழங்குதல்;

(vi) செயலிலுள்ள உதவித் தொகைகள், மானியங்கள் அமைப்பை ஆய்ந்தறிந்து அவற்றை மேற்கொண்டும் நீட்டிக்க வேண்டுமா அல்லவா என்பது குறித்து முடிவு செய்தல்;

(vii) பல்வேறு நிலைகளில் அலுவலகங்களிடையே அலுவல்களை மேற்கொண்டும், சீரான முறையில் பகிர்ந்தளிப்பதன் மூலமாக நிர்வாகத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முடியுமா என்பது பற்றி ஆய்வு செய்யவும், இதற்கான நிர்வாக அதிகாரங்கள் நிதி குறித்த அதிகாரங்கள் அதிகாரப் பிரிவினைபற்றிய தற்போதைய அமைப்பை ஆய்ந்தறிதலும்.

தமிழக மின்சார வாரியம், மாநில வீட்டு வசதி வாரியம் போன்ற அரசாங்கத்தின் அதிகாரத்தின்கீழ் செயல்பட்டு வரும் சுயேச்சை மன்றங்களின் அமைப்பு குறித்தும் இக்குழு ஆராயும்.

[1968 மார்ச் 27

5. இக் குழுவின் உறுப்பினர்கள் வருமாறு :—திரு. மீ. பக்தவத்சலம் அவர்கள்—முதலமைச்சர், திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள்—தொழில் அமைச்சர், திரு. வி. ராமையா அவர்கள்—உணவு அமைச்சர், திரு. டி. ஏ. வர்கீஸ், ஐ.சி.எஸ்., அவர்கள், நிதித் துறைச் செயலாளராகிய திரு. கா. ராமச்சந்திரன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் இக் குழுவின் உறுப்பினர்-செயலாளராகப் பணியாற்றுவார்.

6. இக்குழுவின் வேலையைக் கவனிக்க நிதித் துறையில் துணைச் செயலாளர் பதவி ஒன்றை ஏற்படுத்துவதற்குத் தனியாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இப் புதிய பதவியில், தற்போது சேலம் கலெக்டராக உள்ள திரு. கே. பி. கீதாகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ். அவர்கள் நிதித் துறை துணைச் செயலாளராக நியமிக்கப்படுவார். இவர் இக்குழுவின் இணைச் செயலாளராகவும் பணியாற்றுவார்.

7. இக் குழு தன் பணியைச் செவ்வனே நிறைவேற்ற எல்லா உதவியையும் வழங்குமாறு அரசாங்கச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், கலெக்டர்கள், ஆகியோர் வேண்டப்படுகின்றனர். இக் குழுவின் பணிக்குத் தொடர்பான தகவல்கள், கருத்துக்கள், ஆகியவற்றை அனுப்புமாறு இக் குழு கேட்டுக்கொண்டால் அவை உடனடியாக அனுப்பப்பட வேண்டும். அப்போதுதான் இக் குழு தன் பணியை திட்டப்படி முடிக்க முடியும்.

8. இக் குழுவிற்கானச் செலவு "புதுப் பணியைச்" சேர்ந்ததாகும். இச் செலவுக்காகச் சட்டப் பேரவையின் ஒப்பளிப்பு துணை மதிப்பீட்டின்மூலம் நாளடைவில் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்பளிப்பை முன்னோக்கி இச் செலவிற்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்தொகை ஒன்று வழங்கப்படும். சட்டப் பேரவையில் துணை மதிப்பீடுகள் வைக்கப்படக்கூடிய தோராயத் தேதி வரையில் இக் குழுவிற்கான செலவு குறித்து எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்தொகை ஒன்றை நிதித் துறை (B.G.) வழங்கும்.

## பிற்சேர்க்கை II.

### துறைகள் அனைத்துக்கும் அனுப்பப்பட்டுள்ள பொதுவான வினாப்பட்டியல்.

1. தங்கள் துறையின் தற்போதைய அமைப்பு என்ன? பணியாளர் எண்ணிக்கை, மேற்பார்வை அமைப்பு (விளக்கப் படத்துடன்) ஒவ்வொரு நிலையில் செய்யப்படும் வேலை குறித்த விவரங்கள் ஆகியவற்றை விளக்கமாகத் தருக. இக் காரியத்திற்காக பிரிவு கடைசி அலகாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். பிரிவைச் சேர்ந்த பணியாளர்கள், VI -வகுப்பைச் சேர்ந்த ஊழியர்கள் ஆகியவை குறித்த விவரங்கள் தனி இணைப்பாகக் கொடுக்கப்படவேண்டும்.



1968 மார்ச் 27]

2. கோப்பு ( file ) ஒவ்வொன்றும், பல நிலைகளில் அனுப்பப்படவேண்டியுள்ளதென்றும் பல நேர்வுகளில் அடுத்தடுத்து வரும் இரு நிலைகளில் குறிப்பெழுதும் முறையில் அதிக வேறுபாடில்லை என்பதும் பொதுவான குறைகளில் ஒன்றாகும்—

(a) உங்கள் துறையில் ஒரு நிலையிலிருந்து கோப்புகளை மேல்நிலை அதிகாரிகளுக்கு நேரடியாக அனுப்ப வாய்ப்புள்ளதா?

(b) எந்தெந்த இனங்கள் குறித்து நேரடியாகக் கோப்புகளை அனுப்பும் முறையை மேற்கொள்ள முடியும்?

(c) இந்த இனங்கள் ஒவ்வொன்றும் குறித்தும் எந்தெந்த நிலைகளை விட்டுவிடலாம்?

3. கடந்த சில ஆண்டுகளில் எழுத்தர் பணியாளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இத்தகைய பணியாளர்களை அதிக அளவில் குறைப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்பதில் ஐயமில்லை—

(a) தற்போதுள்ள வேலை நிலைமையை ஒட்டி, தங்கள் துறையில் எழுத்தர் பணியாளரை எந்த அளவுக்குக் குறைக்க முடியும்?

(b) வழக்கமான பொருள்கள் நீங்கலாக, பிற முக்கியமான பொருள்கள் பற்றியே கவனிக்கும் பிரிவுகளிலும், பிற துறைகள் அல்லது சார்நிலை அலுவலகங்கள் அனுப்பும் செயற்குறிப்புகள் மட்டுமே கவனிக்கப்படும். பிரிவுகளிலும் இச் செயற்குறிப்புகள் குறித்து, குறிப்பெழுதுவதற்காகக் கீழ் பிரிவு எழுத்தர் அல்லது மேல் பிரிவு எழுத்தர்களை வைத்துக்கொள்ளுவது அவசியமில்லை. இத்தகைய நேர்வுகளில் கண்காணிப்பாளரே நேரடியாகக் குறிப்பெழுதினால் போதும். தனிப் பதிவேடுகள் முதலியவற்றை வைத்து வர அவருக்கு உதவக் கீழ் பிரிவு எழுத்தர் ஒருவர் இருந்தால் போதும். இத்தகைய பிரிவுகள் "முன்னோடிப் பிரிவுகளென" அழைக்கப்படுகின்றன. இவை இந்திய அரசு அலுவலகங்களில் திறம்படச் செயல்பட்டு வருகின்றன.

(i) தங்கள் துறையில் இத்தகைய முன்னோடிப் பிரிவுகளைத் தொடங்க வாய்ப்புள்ளதா? எந்தெந்த வேலை குறித்து இத்தகைய முன்னோடிப் பிரிவுகளைத் தொடங்க முடியும்?

(ii) இத்தகைய முன்னோடிப் பிரிவுகளைத் தொடங்குவதன் மூலம் எந்த அளவுக்கு எழுத்தர் பணியாளர்களைக் குறைக்க முடியும்?

4. (a) தங்கள் துறையில் நிர்வாக, தொழில் நுட்பப் பணியாளர் நியமனம் குறித்துக் கோட்பாடுகள் முடிவு செய்யப்பட்டுள்ளனவா?

(b) ஆம், எனில், அக் கோட்பாடுகளைக் குறிப்பிடவும்; இக் கோட்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைகளின் எண், தேதி ஆகியவற்றையும் குறிப்பிடவும்.

( ) இக் கோட்பாடுகள் பல ஆண்டுகளுக்குமுன் வகுக்கப்பட்டிருக்கலாம். எனவே பெரிதும் மாறுபட்டுள்ள இன்றைய சூழ்நிலையில் அவை பொருத்தமற்றவையாக இருக்கலாம். இக் கோட்பாடுகளை மாற்றியமைக்க உங்களது திட்டவட்டமான ஆலோசனைகள் என்ன?

5. திட்ட வேலைகள் ஏராளமான அளவில் நிறைவேற்றப்பட்டு வருவதனால் பெருமளவில் புதுவகைப் பதவிகள் கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளன. இவை ஒவ்வொன்றிற்காகவும் தனித்தனியான விதிகள் வகுக்கப்படவேண்டும். இவ்வகைத் தனி விதிகளை வகுப்பதற்குச் சிறிது காலம் ஆகும். மேலும், இதற்குக் கணிசமான அளவுக்கு எழுத்து வேலையும் தேவைப்படுகிறது. இதனால் அப் பதவியை வகிப்பவர்களுக்கு இடர் ஏற்படுகின்றது. எனவே, இத்தகைய பல்வேறு சம்பள விதங்கள் சில பொதுவகைப்பாடுகளின்கீழ் கொண்டுவரப்பட்டால் இச்சிக்கலுக்குத் தீர்வு காணமுடியும் (எடுத்துக்காட்டாக வருவாய்த் துறையில் மூன்று பதவிகள் உள்ளன. துணைத் தாசில்தார்கள், தாசில்தார்கள், துணைக் கலெக்டர்கள். புதிய பதவி ஒன்று ஏற்படுத்தப்படும்போது அது "தனி துணைக் கலெக்டர்" அல்லது "தனித் தாசில்தார்" என்று அழைக்கப்படுகின்றது).

(a) கடந்த பத்து ஆண்டுகளில் உங்கள் துறையில் புதிதாக ஏற்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பதவிகள் யாவை?

( ) இப் பதவிகளில் எவை குறித்து இன்னும் தனிப்பட்ட விதிகள் வகுக்கப்படவில்லை?

(c) பல்வேறு வகையைச் சேர்ந்த இப் பதவிகளை ஒரு சில பொதுவகைகளின்கீழ் கொண்டுவரத் தங்களது திட்டவட்டமான பரிவுரைகள் யாவை?

6. (a) தங்கள் துறையில் செயலிலுள்ள நடைமுறைபற்றி—நிர்வாக, நிதி ஆகியவை குறித்த நடைமுறைகள்—விரிவாக விளக்கவும்.

( ) இந்த நடைமுறைகளை எளிதாக்கத் தங்களது ஆலோசனை என்ன?

(c) கீழ்நிலையிலுள்ள அதிகாரிகளுக்கு எந்த அளவுக்கு அதிகாரங்களைப் (நிர்வாகம், நிதி குறித்த அதிகாரங்களை) பிரித்துக் கொடுக்கலாம்? உங்கள் ஆலோசனை திட்டவட்டமான அடிப்படையில் அமையவேண்டும்.

(d) தங்கள் பொறுப்பிலுள்ள துறைத் தலைவர்களுக்கு நிர்வாகம், நிதி குறித்த அதிகாரங்களை அதிக அளவில் பிரித்துக் கொடுப்பது குறித்து தங்கள் திட்டவட்டமான பரிவுரைகள் யாவை?

7. தங்கள் துறையின் இயல்பான அலுவல்களை நிறைவேற்றுகையில் செயலகத்தைச் சேர்ந்த பிற துறைகளுடனும் (நிதித் துறை, சட்டத் துறை) துறைத் தலைவர்களுடனும் தங்களுக்குத்



தொடர்பு ஏற்படலாம். இத்துறைகள் மேற்கொண்டுவரும் நடைமுறையில் மாறுதல் ஏதேனும் செய்யவேண்டுமென நீங்கள் ஆலோசனை கூறுகிறீர்களா? அதாவது உங்கள் துறையின் பணி விரைவில் முடிவுபெற வகைசெய்யும் மாறுதல்கள் அத்துறைகளில் செய்யப்படவேண்டுமென்று நீங்கள் ஆலோசனை கூறுகிறீர்களா? குறிப்பாக, நிதி அதிகாரங்கள் எந்த அளவிற்கு அதிகமாகப் பிரித்துக் கொடுக்கப்படவேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்கள்?

8. (a) தங்கள் துறையினால் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களைப் போன்ற திட்டங்கள் பிற துறைகளினாலும் செயல்படுத்தப்பட்டு வரலாம். இத்தகைய திட்டங்கள் குறித்த விரிவான பட்டியல் ஒன்றைத் தரவும்.

(b) ஒன்றுக்கொன்று தொடர்புள்ள வேலைத் திட்டங்கள் அனைத்தும் ஒரே துறையினால் செயல்படுத்தப்படுவது நிர்வாக முறையில் சிறந்ததாக இருக்கலாம். 8. (a) வினாவின்கீழ் வரும் வேலை திட்டங்களுள் எது முழுவதும் நிறைவேற்றப்படுவதற்காகத் தங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமெனத் தாங்கள் விரும்புகிறீர்கள்? இப்போது உங்களால் நிறைவேற்றப்பட்டுவரும் திட்டங்களுள் எவ்வேலைத் திட்டம் அதேமாதிரியான வேலைத் திட்டங்களை நிறைவேற்றிவரும் பிறத் துறைகளிடம் ஒப்படைக்கப்படவேண்டுமென தாங்கள் பரிவுரை செய்கிறீர்கள்?

9. (a) தாங்கள் நிறைவேற்றிவரும் வேலைத் திட்டங்களில் எந்தெந்த வேலைத் திட்டங்களுக்கு உதவித் தொகை வேண்டும்? இத்தகைய திட்டங்கள் அனைத்தையும் குறிப்பிடுக.

(b) உதவித்தொகை என்றால் என்ன? அது எப்போது கொண்டுவரப்பட்டது? இந்த உதவித் தொகை கொண்டுவரப்பட்டதற்கான காரணங்களை விரிவாக விளக்கவும்.

(c) ஒரு திட்டத்தை மக்கள் பாராட்டும் அளவிற்குப் பரப்ப வேண்டுமானால் அதுகுறித்து உதவித்தொகை வழங்கப்பட வேண்டும். உதவித்தொகை வழங்கப்படுவதனால் இவ்வேலைத் திட்டம் நிறைவேற்றப்படுவதும் எளிதாகின்றது. சில வேலைத் திட்டங்கள் குறித்து இந்த உதவித்தொகை வழங்கப்படுவது தற்போது தேவையில்லாமல் இருக்கலாம். இத்தகைய நேர்வுகளில் இந்த உதவித்தொகையை அறவே எடுத்துவிட முடியாவிடினும், உதவித் தொகையின் அளவைக் குறைக்கவாவது முடியும். இது குறித்து உங்களது பரிவுரைகள் யாவை? எந்தெந்த வேலைத் திட்டங்கள் குறித்து உதவித் தொகை குறைக்கப்படலாம்? எந்த அளவிற்கு உதவித் தொகை குறைக்கப்படலாம்?

10. (a) பல்வேறு வகைப் பொருள்கள், கருவிகளைப் பெறுவதற்கான தேவைப் பட்டியல் தயாரித்தல், கொள்முதல் செய்தல், சேகரித்து வைத்தல் குறித்து தற்போது தங்கள் துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடைமுறை யாது?

(b) இந்நடைமுறையை எளிதாக்கவும், மேம்படுத்தவும் தங்கள் ஆலோசனை என்ன ?

11. கடந்த சில ஆண்டுகளில் ஏதாவதொரு திட்டம் குறித்து தங்கள் துறைக்காகக் கட்டடங்கள் கட்டுவதற்கான பல வேலைத் திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. கட்டட வேலைத் திட்டங்கள் பலவற்றில் இட வசதிக்கான தேவைகள் குறித்து அதிக அளவு மதிப்பிடப்பட்டுள்ளன என்றும் செலவை அதிகரிக்கும் சில கூறுகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. இதுபற்றி அடிக்கடி குறை காணப்படுகின்றது. அண்மையில் சில ஆண்டுகளில் தங்கள் துறைக்காகக் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் அனைத்தையும் பரிசிலனை செய்யவும், இடவசதி குறித்து மிகைப்படுத்தப்பட்டுள்ள நேர்வுகளையும், கட்டட வேலைபாடுகள் எந்த அளவுக்குத் தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்பதையும் குறிப்பிடவும். மதிப்பீடுகளையும் தரைப் படங்களையும் தயாரிக்கையில் இந்த இரண்டு கூறுகளையும் கருத்தில் கொண்டிருந்தால் தோராயமாக எந்த அளவுக்குச் செலவு மிச்சமாகியிருக்கும் ?

12. பொதுவான கருத்துகள் எவையேனும் சொல்ல விரும்புகின்றீர்களா ?

பிறசேர்க்கை III.

**பொறியியல் துறைகள் அனைத்துக்கும் அனுப்பப்பட்ட கேள்விப் பட்டியல்.**

1. (a) உங்கள் துறையில் நிர்வாக, தொழில் நுட்ப, அல்லது எழுத்தர் பணியாளர்களை வேலைக்கு அமர்த்த விதிகள் எவையேனும் உள்ளனவா ? ஆம் எனில், அவற்றை, அவை நிச்சயிக்கப்பட்ட ஆணைகளுடன் கொடுக்கவும்.

(b) மேற்படி விதிகள், நெடு நாட்களுக்கு முன்னர் நிச்சயிக்கப் பெற்றவையாயிருக்கலாம் ; மாறி வரும் தற்போதைய சூழ்நிலைகளுக்கு அவை ஏற்பப் பொருத்தமாயிரா. எனவே, அவற்றைத் திருத்தியமைக்கும் வகையில் நீங்கள் கூறும் யோசனை யாது ? உங்களுடைய திட்டவட்டமான பரிவுரைகளைக் கொடுக்கவும்.

(c) தமிழ்நாட்டில் டிப்ளோமா பெற்றவர்களைவிடப் பொறியியல் பட்டதாரிகளின் எண்ணிக்கை மிக அதிகம் எனவும், டிப்ளோமா பெற்றவர்கள் செய்யக்கூடிய வேலையினங்களைச் செய்ய இவ்வுயர் பயிற்சி அதிகாரிகள் பயன்படுத்தப்படுகிறார்கள் எனவும் அடிக்கடிக் கூறப்படுகிறது :—

(i) உங்கள் துறையில் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கும் பட்டதாரிகள் எண்ணிக்கைக்கும் டிப்ளோமா பெற்றோர் எண்ணிக்கைக்கும் உள்ள விதாசாரம் யாது?

(ii) அதை ஏனைய மாநிலங்களின் அல்லது ஏனைய துறைகளின் விகிதத்துடன் ஒப்பிட்டுக் கூறவும் ?





(iii) இப்பொழுது பட்டதாரி ஒருவரால் செய்யப்படக்கூடிய ஏதேனும் ஒரு பணி, டிப்ளோமா பெற்றவர் ஒருவரால் செய்யப்பட முடியும் என நீங்கள் நினைக்கிறீர்களா? அப்படியானால் அத்தகைய பணியினங்களைப் பட்டியல்படுத்தி, அதன்மூலம் எத்தனை பட்டதாரிகளை விடுவிக்கலாம் எவ்வளவு பணம் மிச்சமாகும் என்பதைக் கணக்கிடவும்.

(iv) உங்கள் துறையில் ஏற்றுக்கொள்ள நீங்கள் பரிந்துரைக்கும் பயனுறுதி வாய்ந்த விகிதம் யாது ?

2. பொதுப் பணித் துறைகளும், கணக்கு விதித் தொகுப்பும் நெடு நாட்களுக்குமுன் வகுக்கப்பெற்றவை; பொருள்களின் விலைகளும், வேலைப் பளுவும் அதிகரித்துள்ளமையால் விதிகள், விதிமுறைகள் சிலவற்றைப் பின்பற்றுவது மிகவும் கடினமாக உள்ளது.

(a) தற்போதைய விதிகளில் எவற்றையேனும் திருத்தி அமைக்கவேண்டும் என நீங்கள் கருதுகிறீர்களா? ஆம் எனில், உங்களுடைய திட்டவட்டமான பரிவுரைகளைக் கூறவும்.

(b) தற்பொழுது பொதுவாக நிச்சயிக்கப்பட்டுள்ள தரங்களும், விவரக் குறிப்பீடுகளும் மாநில முழுவதற்கும் பயன்படக் கூடியவை. வெவ்வேறு பகுதிகளுக்கும் நோக்கங்களுக்குமுரிய தேவைகளுக்குப் பொருந்துகிறபடி வெவ்வேறு விவரக் குறிப்பீடுகளைப் பயன்படுத்துவது நலம் என்று நீங்கள் கருதுகிறீர்களா? (எடுத்துக்காட்டாக, வண்டிப் போக்குவரத்து அதிகமில்லாத கிராமப் பகுதியில், கப்பிச்சாலை, வண்டிப் போக்குவரத்து அதிகமான பகுதியில் போடும் சாலையைவிடக் குறைவான செலவில் அமைக்கலாம்.) நீங்கள் இவ்வாறு எண்ணினால், உங்களுடைய திட்டவட்டமான பரிவுரைகளைக் கூறவும்.

3. (a) கீழ் நிலைகளில் கூடுதல் அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் அதாவது (நிர்வாக, தொழில் நுட்ப, நிதி) அதிகாரங்களைக் கீழ் நிலைகளில் பகிர்ந்தளிக்கவேண்டும் என நீங்கள் யோசனை கூறுகிறீர்களா? திட்டவட்டமான பரிவுரைகளைக் கூறவும்.

(b) பொறியாளர்கள், ஏனைய தொழில் நுட்பப் பணியாளர்கள் ஆகியோரின் நேரத்தில் பெரும்பகுதி எழுத்துப் பணியிலும், நிர்வாகப் பணியிலுமே கழிந்து விடுகிறது என அடிக்கடி புகார் கூறப்படுகிறது. நீங்களும் இவ்வாறு எண்ணுகிறீர்களா ? ஆம் எனில், அவர்களுக்கு இப்பணிகளிலிருந்து விடுதலை அளிக்க நீங்கள் கூறும் பரிவுரைகள் யாவை ?

4. பல கட்டடங்களில் குறட்டுப் பகுதி அதிக இறக்கமாக இருப்பதால் பெருந் தொகையைச் செலவழிப்பது அவசியமாகிறது. கட்டடங்களின் பணிகளைச் செய்யும் செலவும் மிகவும் அதிகமாகி உள்ளது. உங்களுடைய துறையால் அண்மையில்

கட்டப்பட்ட முக்கியமான பன்னிரண்டு கட்டடங்களின் வடிவமைப்புகள், செலவுகள் முதலியவற்றை நன்கு ஆராய்ந்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிக்கவும்:—

(a) தரைப்பரப்புகளின் தேவை கூடுதலாக மதிப்பிடப்பட்டுள்ளதா ?

(b) கட்டடக்கலின் பணிகளுக்குரியச் செலவு அதிகமாக உள்ளதா? மேற்படி பன்னிரண்டு கட்டடங்களுக்குமுரிய மொத்தச் செலவில் கட்டடக்கலின் பணிகளுக்குரிய செலவின் சதவீதக் கணக்கைக் குறிப்பிட்டால் நலம்.

(c) குறிப்பிட்ட ஒரு கட்டடத்தில் கட்டடக்கலின் பணிகளுக்கு பேரளவு எத்தனை சதவீதம் ஒதுக்கப்படலாம் என நீங்கள் கருதுகிறீர்கள் ?

(d) தாழ்வாரங்கள், இடைகழிகள், படிக்கட்டுகள் முதலியவற்றிற்காக அதிகமான இடம் வீணக்கப்படுகிறதா? தேவையற்ற, வீணை முறையில் அவை கட்டப்படுவதைக் குறைக்க வகை யாது?

(e) கட்டடங்கள் கட்டுவதற்காக நிலம் அதிகமான அளவில் கையகப்படுத்தப்படுகின்றதா? வளாகப் பகுதிக்குத் தேவையான பகுதியைக் குறைக்கும் வாய்ப்பு உளதா?

5. அரசாங்கம் மேற்கொள்ளும் கட்டிடப் பணிகளில் குறிப்பிட்ட தொகை ஒதுக்கம் மிகவும் அதிகம் என்று பொதுவாகப் புகார் கூறப்படுகின்றது.

(a) கட்டட நுணுக்கத்தில் முக்கிய இனங்கள் குறித்த விவரக்குறிப்பீடுகள் யாவை ?

(b) இவை எப்பொழுது நிச்சயிக்கப்பட்டன? ஆணையின் எண், தேதி முதலிய விவரங்களைக் குறிப்பிடவும்.

(c) இந்தக் குறிப்பீடுகளில், எவற்றிலாவது, மாற்றம் செய்யப்படும் குறிப்பிட்ட தொகை ஒதுக்கங்களைக் குறைக்கும் குறிப்பீடுகள் எவையேனும் உண்டா ? ஆம் எனில், எந்த அளவுக்கு? இதனுல் பணமாகவும், முக்கிய பொருள்களாகவும் எவ்வளவு மிச்சப்படுத்தப்படும் ?

(d) உங்களுடைய துறையில் நிச்சயிக்கப்பட்டுள்ள விவரக் குறிப்பீடுகளுக்கும் தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மேற்கொள்ளும் விவரக் குறிப்பீடுகளுக்கும் வேறுபாடுகள் யாவை ? இயன்றால் ஒப்பீட்டு விவர அறிக்கைகள் வழங்கவும்.

(e) திட்ட வேலைகளின் குழு ஒன்று திட்ட ஆலோசக் குழுவால் அமைக்கப்பட்டது. அது, பற்றவைப்பு பகுதிகளையும், குழாய்க் கட்டுமானங்களையும் கூடுதலாகப் பயன்படுத்துவதனுல், பணமாகவும், இரும்பு, உருக்கு போன்ற உலோகங்களாகவும் கணிசமான அளவு மிச்சப்படுத்தலாம் என சுட்டிக்காட்டியுள்ளது. நமது மாநிலத்தில் இந்தப் பரிவுரையை எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ளலாம் ? அதனுல் எவ்வளவு மிச்சமாகும் ?



(f) தற்பொழுது பயன்படுத்தப்படும் பல பொருள்களுக்குப் பதிலாக மலிவான பொருள்களைப் பயன்படுத்துவது சாத்தியமாக இருக்கலாம். இது குறித்து உங்களுடைய திட்டவட்டமான பரிவுரைகள் யாவை ? இம் முறையைப் பின்பற்றுவதனுல், பொருள்களாகவும் பணமாகவும் எவ்வளவு மிச்சப்படுத்தலாம் என நீங்கள் கணக்கிடுகிறீர்கள் ?

(g) கட்டடங்களின் புறச்சுவர்களுக்குக் காரை பூசுவதை விட்டு கண்கவரும் வண்ணச் சாந்துகளைப் பூசலாம் என அண்மையில் யோசனை கூறப்பட்டது. இதை எந்த அளவுக்கு நிறைவேற்றலாம்? அதனுல் பணமும் பொருளும் எவ்வளவு மிச்சமாகும் ?

6. (a உங்களுடைய துறையில் தற்பொழுது செயற்படும் வீதங்கள் யாவை ?

(b) வெளிச்சந்தையில் முக்கிய பொருள்களின் விலை வீதங்களுக்கும் அவற்றிற்கும் வேறுபாடு யாது? விவரங்களுடன் ஒப்பிட்டு விவர அறிக்கை ஒன்றைக் கொடுக்கவும்.

(c) பொருள்கள் முதலியவற்றின் விலைவாசி உயர்வைக் கணக்கில்கொண்டு, வீதங்கள் ஆண்டுக்காண்டு அதிகரிக்கப்படுகின்றன. இருந்தும், ஒப்பந்தக்காரர்களுடைய வீதங்கள் அட்டவணை வீதங்களைவிட அதிகமாகவே உள்ளன. அட்டவணை வீதங்களை அதிகரிக்கும்பொழுது தவருன முறையில் செயலாற்றுவதனுல் இவ்வாறு ஏற்படுகிறதா? அல்லது ஒப்பந்தக்காரர்கள் அனைவரும் ஒன்று கூடி உயர்ந்த வீதத்தை நிச்சயிப்பதனுலா? காரணம், பிந்தியது என நீங்கள் எண்ணினுல், அட்டவணை வீதங்களை ஒப்பந்தக்காரர்கள் பின்பற்றுமாறு செய்ய நீங்கள் கூறும் திட்டவட்டமான பரிவுரைகள் யாவை ?

7. ஒப்பந்தக்காரர் தற்பொழுது முதலில் பிணைத் தொகையைச் செலுத்த வேண்டியுள்ளது. செய்த வேலைக்குப் பணம் பெறுவதற்கும் அவர் நீண்ட காலம் காத்திருக்கவேண்டிய தவிர்க்க இயலாத நிலை ஏற்படுகிறது. அவர் கூடுதல் வட்டி வீதங்களில் தொகை கடன் வாங்குவதால், அடுத்த முறை ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்படும்போது, அவர் உயர்ந்த வீதங்களையே கூறுகிறார். செய்த வேலைக்கு விரைவில் பணம் கிடைத்துவிட்டால், ஒப்பந்தப்புள்ளி வீதங்களைக் கணிசமான அளவுக்குக் குறைப்பதற்கு இயலும். நிறுவனங்கள்மூலம் நியாயமான வட்டி வீதங்களில் கடன் வழங்க பொருத்தமான தக்க ஏற்பாடுகளை வகுத்து வைத்தாலும் மேற்கூறியது சாத்தியமாகும்.

(a) செய்த பணிக்குத் தொகை செலுத்த உங்கள் துறையில் நீங்கள் பின்பற்றும் நடைமுறை யாது?

(b) அந்த நடைமுறையைத் துரிதப்படுத்த நீங்கள் வழங்கும் திட்டவட்டமான பரிவுரைகள் யாவை ?

(c) ஒப்பந்தக்காரர்கள் நியாயமான வட்டி வீதங்களில் கடன் பெற வகைசெய்ய நீங்கள் கூறும் முறைகள் யாவை ?

8. பெரிய தொழில்களில், மேற்பார்வை, நிர்வாகச் செலவுகள் முதலியவற்றில் எப்பொழுதும் செலவு கணிசமான அளவு குறைவாகவே இருக்கிறது. சிறு தொகுதியைவிட அத்தகைய பெரிய நிறுவனங்கள் சிறந்த வசதிகளைப் பெற்றிருக்க முடியும். கட்டடச் செயல் முறைகளைப் பொறுத்தவரையில், சென்னையில், பெரிய ஒப்பந்தக்காரர்களைவிடச் சிறிய ஒப்பந்தக்காரர்களுக்கே ஊக்கமும் ஆக்கமும் அளிக்கப்பட்டு அவர்கள் வளர்ச்சியடைகின்றனர்.

(a) பெரிய ஒப்பந்தக்காரர்களிடமே எல்லாப் பணிகளும் ஒப்படைக்கப்படுவது பலன்தரக் கூடியதும், சிக்கனம் வாய்ந்ததுமான நடைமுறை என நீங்கள் எண்ணுகிறீர்களா? இதுகுறித்துத் திட்டவட்டமான உங்கள் பரிவுரைகளை எழுதவும்.

(b) கட்டடம் கட்டுவதற்குரிய மொத்தத் தொகையையும் ஒரே ஒப்பந்தக்காரரிடம் கொடுத்து, வேலை ஒப்படைக்கப்பட்ட நாளிலிருந்து பூர்த்தியாகும்வரை தலையிடாமல் இறுதியில் அளவுகளைச் சரிபார்க்கும் முறையைப் பின்பற்றுவது நடைமுறைக்கு இயன்ற கருத்து என நீங்கள் நினைக்கின்றீர்களா?

9. கடந்த பத்தாண்டுகளில் துறையில் மேற்கொண்ட கட்டடப் பணிகளைப் பரிசீலனைசெய்து அவற்றில் ஒப்பந்தக்காரர்கள், ஒப்பந்தப் புள்ளி வரவழைக்கப்பட்டபோது ஒப்பந்தக்காரர்கள் அதிகமான விலைக் குறிப்பீடுகள் குறிப்பிட்டு, பிறகு அவற்றைத் துறை குறைந்த செலவில் கட்டி முடித்த கட்டடப் பணிகளைப் பட்டியல்படுத்தவும். கட்டடப் பணிகளைத் துறை அவ்வப்போது மேற்கொண்டால், மலிவாக அவற்றைக் கட்டலாம் என்ற பொதுவான கருத்து நிலவுகிறது. ஒப்பந்தக்காரர்கள் கூடுதல் செலவுடன் விவரக் குறிப்புக்களை அனுப்பினால், துறையே அப்பணியை மேற்கொள்ளும் என அவர்களுக்கு இது தெளிவுறக் காட்டுகிறது நீங்கள் இக்கருத்தை ஆதரிக்கிறீர்களா? உங்களுடைய பரிவுரைகளைக் கூறவும்.

10. ஒரு புதுப் பணிக்கு அனுமதி அளிக்கப்படும்பொழுது அப்பணிக்குரிய மொத்த மதிப்பீட்டுக்குத்தான் ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது. ஆண்டுவாரிச் செலவு அதில் குறிப்பிடப்பட்டிராது. குறிப்பிட்ட ஒரு பணியின் செலவு, மொத்த நிதி ஒதுக்கீடு, ஏனைய பணிகளுக்குரிய செலவின் அளவு, நிதி எதுவும் ஒதுக்கப்படாமல் அந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய பணிகள் இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, பணியின் செலவு பகுத்துக் குறிக்கப்படுகின்றன. இதன் விளைவாக, கிடைத்துள்ள நிதி, பல வேலையினங்களுக்காகப் பிரிக்கப்படுகின்றது; எனவே, ஒப்பந்தக்காரர் குறிப்பிட்ட ஆண்டுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறியாமலேயே விடப்படுகிறார். ஒரு பணிக்குரிய ஆண்டுவாரி ஒதுக்கீடுகள் இவ்வளவு என்று அந்தப் பணிக்கு அனுமதி வழங்கப்படும்பொழுதே முடிவுசெய்து, அவ்வாறு ஒதுக்கியுள்ள தொகைகள் தவிர்க்க இயலாத சூழ்நிலைகளிலன்றி மற்றப்படி மாற்றப்படவேமாட்டா என்பதை உறுதிப்படுத்திவிடுவது



சிறந்த முறை என நீங்கள் எண்ணுகிறீர்களா? இந்த முறையால் ஒப்பந்தக்காரருக்குக் குறிப்பிட்ட ஆண்டில் முடிக்கப்பட வேண்டிய வேலை குறித்துத் தெளிவாக அறிவிப்பதுடன் (அவர் அதற்குத்தக்கவாறு செயலாற்ற இது உதவுகிறது.) பல்வேறு வேலை இனங்களுக்குரிய செலவும் ஒழுங்கான முறையில் முறைப்படுத்தப்படுகிறது எனவும் அவருக்கு உணர்த்துகிறது. இதுபற்றி உங்களுடைய கருத்து யாது ?

11. உங்களுடைய துறையில் கீழ்க்கண்டவற்றில் தற்பொழுது பின்பற்றப்படும் நடைமுறை யாது ?

(a) திட்டங்களையும் மதிப்பீடுகளையும் தயாரித்தல்.

(b) நிர்வாக தொழில் நுட்ப அனுமதி வழங்கப்படுதல்.

செயற் குறிப்புகளை முடிவு செய்யும் கால அளவு குறைக்கப்படும் வகையில் நடைமுறையைச் சீரமைக்க நீங்கள் என்ன யோசனையைக் கூறுகிறீர்கள்?

பல நேர்வுகளில் திட்டங்களையும் மதிப்பீடுகளையும் மாற்றியமைப்பதனால் கணிசமான கால அளவு வீணாக்கப்படுகிறது. இதனால், ஒப்பந்தக்காரர்களுக்கு அவர்களுடைய வேலையை இடையூறின்றித் தொடர்ந்து செய்ய இயலவில்லை. ஏனெனில், கட்டடப் பணியைத் தொடங்கிய பின்னுங்கூட அதில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என யோசனை கூறப்படுகிறது. வேலையை ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்குமுன் கட்டட அமைப்பைப்பற்றி இறுதியாக முடிவு செய்து கொடுத்து விடுவதனால், அவர் யாருடைய இடையீடும் இன்றி வேலை செய்ய இயலும். தாமதத்தைத் தவிர்க்க இது மிகச் சிறந்த ஒரு வழியாகும். இதுபற்றி நீங்கள் வழங்கும் திட்டவட்டமான பரிவுரைகள் யாவை?

12. சாலைகள் குறித்த வேலைத் திட்ட விவரங்கள் நெடு நாட்களுக்கு முன் முடிவு செய்யப்பட்டவை. அப்பொழுது வண்டிப் போக்குவரத்து நெரிசல் இப்பொழுது உள்ளது போல் இல்லாமல் சாதாரணமாக இருந்தது. வண்டிப் போக்குவரத்து நெரிசல் மிகவும் அதிகமாகிவிட்டிருப்பதைக் கருத்தில் கொண்டு மேற்கூறிய விவரக் குறிப்பீடுகளை (செறிவான மேற்பரப்புகளை அமைத்தல்) அதிகரிக்கும் திட்டம் உண்டா? இதனால் தொடக்கச் செலவு கூடுதலாக இருப்பினும் பேணுதல் செலவில் கணிசமான அளவு மிச்சப்படுமல்லவா? இது குறித்து நீங்கள் வழங்கும் திட்டவட்டமான பரிவுரைகள் யாவை?

13. பல்வேறு பாகங்களைத் தரப்படுத்துவதனால் செலவில் சிக்கனம் ஏற்படுகிறது. கட்டடங்களின் எந்தெந்தப் பாகங்களைத் தரப்படுத்தலாம் என நீங்கள் கருதுகிறீர்கள். அத்தகைய தரப்படுத்திய பாகங்களுக்கு நீங்கள் நிச்சயிக்கும் விவரக் குறிப்பீடுகள் யாவை?

14. (a) உங்கள் துறையில் பல்வேறு சரக்குகளையும் சாதனங்களையும் கோர, கொள்முதல் செய்ய, சேமித்து வைக்க நீங்கள் தற்பொழுது பின்பற்றும் நடைமுறை யாது?

(b) இந்த நடைமுறையைச் சீரமைக்க நீங்கள் அளிக்கும் திட்டவட்டமான பரிவுரைகள் யாவை?

(c) உங்களிடம் தற்பொழுது சேமிப்பில் இருக்கும் பொருள்கள், சரக்குகள் இவற்றின் மொத்த மதிப்பு யாது? இவ்வாண்டு மேற்கொண்ட கட்டடப் பணிகளின் அளவோடு அவற்றை எப்படி ஒப்பிட்டுக் காட்டுவீர்கள்? அத்தகைய இருப்பில் குறைவு ஏற்பட்டுள்ளதா?

15. ஏதேனும் பொதுக் கருத்துக்கள் இருப்பின், அவை.



## APPENDIX II.

[*Vide* **answer to starred** question No. 324 on **page 269.**]

**NUMBER OF GOVERNMENT OFFICERS AND SERVANTS AGAINST WHOM DISCIPLINARY ACTION WAS TAKEN FOR CORRUPTION CHARGES DURING THE PERIOD 1965 DISTRICT-WAR.**

| District. | Dismissed. | | Removed. | | Compulsorily Retired. | | Reduced in Rank. | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Gazetted Officers. | Non-Gazetted Officers. | Gazetted Officers. | Non-Gazetted Officers. | Gazetted Officers. | Non-Gazetted Officers. | Gazetted Officers. | Non-Gazetted Officers. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. Madras City | 2 | .. | .. | 1 | .. | .. | .. | 1 |
| 2. Chingleput | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 3. North Arcot | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 4. South Arcot | .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 |
| 5. Thanjavur | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. |
| 6. Tiruchirappalli | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. |
| 7. Madurai Urban | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. |
| 8. Madurai North | .. | 1 | .. | 1 | .. | .. | .. | .. |
| 9. Tirunelveli | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. |
| 10. Ramanathapuram | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 11. Kanyakumari | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 12. Coimbatore | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. |
| 13. Salem | .. | 2 | .. | 1 | .. | .. | .. | 1 |
| 14. The Nilgiris | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| Total .. | 2 | 5 | 1 | 4 | .. | 2 | .. | 3 |

| District | Increment Postponed. Gazetted Officers. (10) | Non-Gazetted Officers. (11) | Censure and Lesser Punishments. Gazetted Officers. (12) | Non-Gazetted Officers. (13) | Cut in Pension. Gazetted Officers. (14) | Non-Gazetted Officers. (15) |
|---|---|---|---|---|---|---|
| 1. Madras City .. .. | .. | .. | .. | 3 | .. | 1 |
| 2. Chingleput .. .. | .. | .. | .. | .. | .. | .. |
| 3. North Arcot .. | .. | .. | .. | .. | .. | 1 |
| 4. South Arcot .. | .. | .. | .. | .. | .. | .. |
| 5. Thanjavur .. .. | .. | .. | .. | .. | .. | .. |
| 6. Tiruchirappalli .. | .. | .. | .. | .. | .. | .. |
| 7. Madurai Urban .. | .. | .. | .. | .. | .. | .. |
| 8. Madurai North .. | .. | .. | .. | .. | .. | .. |
| 9. Tirunelveli .. .. | .. | .. | .. | .. | .. | .. |
| 10. Ramanathapuram .. | .. | .. | .. | .. | .. | .. |
| 11. Kanyakumari .. | .. | .. | .. | .. | .. | .. |
| 12. Coimbatore .. | .. | .. | .. | 1 | 1 | .. |
| 13. Salem .. .. | .. | .. | .. | .. | .. | .. |
| 14. The Nilgiris .. | .. | .. | .. | .. | .. | .. |
| Total .. | .. | .. | .. | 4 | 1 | 2 |



NUMBER OF GOVERNMENT OFFICERS AND SERVANTS AGAINST WHOM DISCIPLINARY ACTION WAS TAKEN FOR CORRUPTION CHARGS DURING THE PERIOD 1966 DISTRICT-WAR.

| District. (1) | Dismissed. Gazetted Officers. (2) | Non Gazetted Officers. (3) | Removed. Gazetted Officers. (4) | Non Gazetted Officers. (5) | Compulsorily Retired. Gazetted Officers. (6) | Non Gazetted Officers. (7) | Reduced in Rank. Gazetted Officers. (8) | Non Gazetted Officers. (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. Madras City .. .. .. | .. | .. | .. | .. | 2 | .. | .. | .. |
| 2. Chingleput .. .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 3. North Arcot .. .. .. | .. | 2 | .. | .. | .. | 1 | .. | .. |
| 4. South Arcot .. .. .. | .. | 1 | .. | .. | .. | 1 | .. | .. |
| 5. Thanjauvr .. .. .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 1 |
| 6. Tiruchirappalli .. .. .. | .. | 1 | .. | 1 | .. | .. | .. | .. |
| 7. Madurai Urban .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 8. Madurai North .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 9. Tirunelveli .. .. .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. |
| 10. Ramanathapuram .. .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. |
| 11. Kanyakumari .. .. | .. | 2 | .. | 1 | .. | .. | .. | .. |
| 12. Coimbatore .. .. .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. |
| 13. Salem .. .. .. | 1 | 5 | .. | 1 | .. | 1 | .. | .. |
| 14. The Nilgiris .. .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| Total .. | 1 | 13 | .. | 3 | 2 | 4 | 1 | 1 |

| District. | Increment Postponed. |  | Censure and Lesser Punishments. |  | Cut in Pension. |  |
|---|---|---|---|---|---|---|
|  | Gazetted Officers. | Non-Gazetted Officers. | Gazetted Officers. | Non-Gazetted Officers. | Gazetted Officers. | Non-Gazetted Officers. |
|  | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| 1. Madras City .. | .. | .. | 2 | 1 | .. | .. |
| 2. Chingleput .. .. | .. | .. | .. | .. | .. | .. |
| 3. North Arcot .. | .. | .. | 1 | .. | .. | .. |
| 4. South Arcot .. | .. | .. | .. | .. | .. | .. |
| 5. Thanjavur .. .. | .. | .. | .. | .. | .. | .. |
| 6. Tiruchirappalli .. | .. | .. | 1 | .. | .. | .. |
| 7. Madurai Urban .. | .. | .. | 1 | .. | .. | .. |
| 8. Madurai North .. | .. | .. | .. | .. | .. | .. |
| 9. Tirunelveli .. .. | .. | .. | .. | .. | .. | .. |
| 10. Ramanathapuram .. | .. | .. | .. | 1 | .. | .. |
| 11. Kanyakumari .. | .. | .. | .. | .. | .. | .. |
| 12. Coimbatore .. .. | .. | .. | .. | 1 | .. | 1 |
| 13. Salem .. .. | .. | .. | .. | .. | .. | .. |
| 14. The Nilgiris .. | .. | .. | .. | .. | .. | .. |
| Total .. | .. | .. | 5 | 3 | .. | 1 |



1965-ம் ஆண்டில் லஞ்சம் வாங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட அரசாங்க அதிகாரிகள், அரசாங்கப் பணியாளர்கள் ஆகியோரின் மாவட்டவாரி எண்ணிக்கை.

| மாவட்டம். | நீக்கப்பட்டவர்கள். |  | விலக்கப்பட்டவர்கள். |  | கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டவர்கள். |  | பதவி தாழ்த்தப்பட்டவர்கள். |  |
|---|---|---|---|---|---|---|---|---|
|  | அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர். | அரசிதழ் பதிவு பெறாத அலுவலர். | அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர். | அரசிதழ் பதிவு பெறாத அலுவலர். | அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர். | அரசிதழ் பதிவு பெறாத அலுவலர். | அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர். | அரசிதழ் பதிவு பெறாத அலுவலர். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. சென்னை மாநகரம் .. | 2 | .. | .. | 1 | .. | .. | .. | 1 |
| 2. செங்கற்பட்டு .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 3. வட ஆர்க்காடு .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 4. தென் ஆர்க்காடு .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 5. தஞ்சாவூர் .. .. | .. | 1 | .. | .. | .. | 1 | .. | 1 |
| 6. திருச்சிராப்பள்ளி .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. |
| 7. மதுரை—நகர்ப்பகுதி .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. |
| 8. மதுரை—வடக்கு .. .. | .. | 1 | .. | 1 | .. | .. | .. | .. |
| 9. திருநெல்வேலி .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 10. இராமநாதபுரம் .. .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. |
| 11. கன்னியாகுமரி .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 12. கோயம்புத்தூர் .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 13. சேலம் .. .. | .. | 2 | .. | 1 | .. | .. | .. | .. |
| 14. நீலகிரி .. .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 |
| மொத்தம் .. | 2 | 5 | 1 | 4 | .. | 2 | .. | 3 |

| மாவட்டம். | | சம்பளத்தில் உயர்வு ஒத்தி போடப்பட்டவர்கள். | | கண்டிக்கப்பட்டவர்கள், அதற்கும் குறைவான தண்டனை அளிக்கப்பட்டவர்கள். | | ஓய்வூதியத் தொகை குறைக்கப்பட்டவர்கள். | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர். | அரசிதழ் பதிவு பெறாத அலுவலர். | அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர். | அரசிதழ் பதிவு பெறாத அலுவலர். | அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர். | அரசிதழ் பதிவு பெறாத அலுவலர். |
| | | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| 1. சென்னை மாநகரம் | .. | .. | .. | .. | 3 | .. | 1 |
| 2. செங்கற்பட்டு | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 3. வட ஆர்க்காடு | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 4. தென் ஆர்க்காடு | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| 5. தஞ்சாவூர் | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 6. திருச்சிராப்பள்ளி | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 7. மதுரை—நகர்ப்பகுதி | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 8. மதுரை—வடக்கு | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 9. திருநெல்வேலி | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 10. இராமநாதபுரம் | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 11. கன்னியாகுமரி | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 12. கோயம்புத்தூர் | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 13. சேலம் | .. | .. | .. | .. | 1 | 1 | .. |
| 14. நீலகிரி | .. | .. | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் | .. | .. | .. | .. | 4 | 1 | 2 |



1966-ம் ஆண்டில் லஞ்சம் வாங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட அரசாங்க அதிகாரிகள், அரசாங்கப் பணியாளர்கள் ஆகியோரின் மாவட்டவாரி எண்ணிக்கை.

| மாவட்டம். | | நீக்கப்பட்டவர்கள். | | விலக்கப்பட்டவர்கள். | | கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டவர்கள். | | பதவி தாழ்த்தப்பட்டவர்கள். | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர். | அரசிதழ் பதிவு பெறாத அலுவலர். | அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர். | அரசிதழ் பதிவு பெறாத அலுவலர். | அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர். | அரசிதழ் பதிவு பெறாத அலுவலர். | அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர். | அரசிதழ் பதிவு பெறாத அலுவலர். |
| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. சென்னை மாநகரம் | .. | .. | .. | .. | .. | 2 | .. | .. | .. |
| 2. செங்கற்பட்டு | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 3. வட ஆர்க்காடு | .. | .. | 2 | .. | .. | .. | 1 | .. | .. |
| 4. தென் ஆர்க்காடு | .. | .. | 1 | .. | .. | .. | 1 | .. | .. |
| 5. தஞ்சாவூர் | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 1 |
| 6. திருச்சிராப்பள்ளி | .. | .. | 1 | .. | 1 | .. | .. | .. | .. |
| 7. மதுரை—நகர்ப்பகுதி | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 8. மதுரை—வடக்கு | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 9. திருநெல்வேலி | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. |
| 10. இராமநாதபுரம் | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. |
| 11. கன்னியாகுமரி | .. | .. | 2 | .. | 1 | .. | .. | .. | .. |
| 12. கோயம்புத்தூர் | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. |
| 13. சேலம் | .. | 1 | 5 | .. | 1 | .. | 1 | .. | .. |
| 14. நீலகிரி | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் | .. | 1 | 13 | .. | 3 | 2 | 4 | 1 | 1 |

[1968 மார்ச் 27

| மாவட்டம். | | சம்பள உயர்வு நிறுத்தி போடப்பட்டவர்கள். | | கண்டிக்கப்பட்டவர்கள், அதற்கும் குறைவான தண்டனை அளிக்கப்பட்டவர்கள். | | ஓய்வூதியத் தொகை குறைக்கப்பட்டவர்கள். | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர். | அரசிதழ் பதிவு பெறாத அலுவலர். | அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர். | அரசிதழ் பதிவு பெறாத அலுவலர். | அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர். | அரசிதழ் பதிவு பெறாத அலுவலர். |
| | | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| 1. சென்னை மாநகரம் | .. | .. | .. | 2 | 1 | .. | .. |
| 2. செங்கற்பட்டு | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 3. வட ஆர்க்காடு | .. | .. | .. | 1 | .. | .. | .. |
| 4. தென் ஆர்க்காடு | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 5. தஞ்சாவூர் | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 6. திருச்சிராப்பள்ளி | .. | .. | .. | 1 | .. | .. | .. |
| 7. மதுரை—நகர்ப்பகுதி | .. | .. | .. | 1 | .. | .. | .. |
| 8. மதுரை—வடக்கு | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 9. திருநெல்வேலி | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 10. இராமநாதபுரம் | .. | .. | .. | .. | 1 | .. | .. |
| 11. கன்னியாகுமரி | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 12. கோயம்புத்தூர் | .. | .. | .. | .. | 1 | .. | 1 |
| 13. சேலம் | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 14. நீலகிரி | .. | .. | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் | .. | .. | .. | 5 | 3 | .. | 1 |



1968 மார்ச் 27]

APPENDIX III.

[*Vide* answer to starred question No. 326 on page 272.]

## PUBLIC (SPECIAL) DEPARTMENT.

### G.O. No. 934, 10th May 1965.

Ministers—Code of conduct for Ministers—Prescribed.

READ—the following papers :—

From the Government of India, Ministry of Home Affairs, D.O. No. 1/9445/64-HM, dated 29th October 1964.

From the Government of India, Ministry of Home Affairs, letter No. 43/92/64-AVD, dated 17th December 1964.

**Order—No. 934, Public (Spacial), dated 10th May 1965.**

In addition to the observance of the provisions of the Constitution, the Representation of the People Act, 1951, and any other law for the time being in force, a person, before taking office as a Minister shall—

(*a*) disclose to the Chief Minister details of the assets and liabilities, and of business interests, of himself and of members of his family. The details to be disclosed shall consist of particulars of all immovable property and the total approximate value of (i) shares and debentures, (ii) cash holdings and (iii) jewellery;

(*b*) several connections, short of divesting himself of the ownership, with the conduct and management of any business in which he was interested before his appointment as Minister; and

(*c*) with regard to a business concern which supplies goods or services to the Government or to undertakings of the Government (excepting in the usual course of trade or business and at standard or marked rates) or whose business primarily depends on licences, permits, quotas, leases, etc., received or to be received from the Government divest himself of all his interests in the said business and also of the management thereof :

Provided, however, that he may transfer in the case of (*b*) his interest in the management, and in the case of (*c*) both ownership and management, to any adult member of his family or adult relative, other than his wife (or husband as the case may be) who was prior to his appointment as Minister associated with the conduct or management or ownership of the said business. The question of divesting himself of his interests would not arise in case of holding of shares in public limited companies except where the Chief Minister considers that the nature or extent of his holding is such that it is likely to embarras him in the discharge of his official duties.

2. After taking office and so long as he remains in office, the Minister shall—

(*a*) furnish annually by the 31st March to the Chief Minister a declaration regarding his assets and liabilities;

(*b*) refrain from buying from, or selling to, the Government any immovable property except where such property is compulsorily acquired by the Government in the usual course;

(*c*) refrain from starting, or joining, any business;

(*d*) ensure that the members of his family do not start, or participate in, business concerns, engaged in supplying goods or services to the Government or to undertakings under the Government (excepting in the usual course of trade or business and at standard or marked rates) or dependent primarily on grant of licences, permits, quotas, leases, etc., from the Government; and

(*e*) report the matter to the Chief Minister, if any member of his family sets up, or joins in the conduct and management of, any other business.

3. No Minister should—

(*a*) personally, or through a member of his family, accept contributions for any purpose, whether political, charitable or otherwise, if any purpose, or cheque intended for a registered society, or a charitable body, or an institution recognised by a public authority; or a political party is presented to him, he should pass it on as soon as possible to the organisation for which it is intended;

(*b*) associate himself with the raising of funds except for the benefit of (i) a registered society, or a charitable body, or an institution recognised by a public authority and (ii) a political party. He should, however, ensure that such contributions are sent to a specified office bearer, etc., of the society or body or institution or party concerned and not to him. Nothing hereinbefore shall prevent a Minister from being associated with the operation or disbursement of funds raised as above.

4. A Minister should—

(*a*) not accept valuable gifts except from close relatives, and he or members of his family should not accept any gifts at all from any person with whom he may have official dealings;

(*b*) not, nor permit a member of his family to contact debts of a nature likely to embarass or influence him in the discharge of his official duties.

5. A Minister should—

(*a*) while on official tour, as far as practicable, stay in accommodation belonging to himself, or maintained by Government, Government undertakings, public bodies or institutions (such as circuit houses, dak bungalows, etc.) or in recognised hotels, and

(*b*) discourage otentation or lavishness in parties given to him.



6. The authority for ensuring the observance of the Code of Conduct will be the Prime Minister and the Union Home Minister in the case of the Chief Minister, and the Union Home Minister and the Chief Minister in the case of other Ministers. The said authority would follow such procedure as it might deem fit, according to the facts and circumstances of each case, for dealing with or determining alleged or suspected breach of this Code.

*Explanation.*—In this Code, a Minister's family shall include his wife (or the husband, as the case may be) not legally separated from him (or her), minor children and any other person related by blood or marriage to, and wholly dependent, on the Minister.

## தமிழக சட்டப் பேரவை

### வியாழக்கிழமை, 1968 மார்ச் 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனர் அவர்கள தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

#### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 340-லிருந்து 349 வரையில் தள்ளிவைக்கப்படுகின்றன.

*Admission to Professional Colleges*

* 350 *Q.*—THIRU K. VINAYAKAM:
THIRU A. K. SUBBIAH:
THIRU K. B. S. MANI:
THIRU K. RAMAMOORTHY
Will the Hon. the

Minister for Education and Industries be pleased to state—

(*a*) the policy of the Government in respect of admission of students to the various professional colleges (i.e., Medical, Engineering, Teaching, Agriculture, Polytechnics, etc.);

(*b*) whether it is proposed to retain the existing practice of giving representation to Scheduled Castes, Backward Communities and Forward Communities according to their respective educational backwardness; and

(*c*) if not, whether it is proposed to admit students to the professional courses on purely merit basis?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) 1966-67-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொள்கையே பொதுவாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

(இ) அரிசனங்களுக்காகவும் பழங்குடி மக்களுக்காகவும் 16 சத விகிதமும், பிற்பட்டவர்களுக்கு 25 சத விகிதமும் ஒதுக்கப்பட்ட வகுப்பினருக்காக 25 சதவீதமும் இடங்கள் முன்போல தொடர்ந்து ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

(உ) மாணவர்கள் முன்போலவே தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எல்லா வகுப்பினரும் போட்டியிடுவதற்குரிய 59 சதவீத இடங்களுக்கு அரிசன மாணவர்கள், பழங்குடி மக்கள் (மிகப் பின்தங்கிய வகுப்பினர் உட்பட) பின் தங்கிய வகுப்பு மாணவர்கள் ஆகியோரும் ஏனைய வகுப்பு மாணவர்களோடு போட்டியிடலாம்.

[1968 மார்ச் 28

THIRU K. VINAYAKAM: Sir, in view of the recent judgment by the Supreme Court that no selection should be made on the basis of district-wise allotment, what is the new proposal which the Government have got? Will all the candidates' applications be pooled together and the candidates' merits will be considered or whether they will devise any other means to achieve the same ends as have been achieved earlier? Will the Government place on the Table of this House the entire cards, that is, how many have applied, how many were selected, how many were rejected and on what grounds they were selected and on what grounds they were rejected?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, தொழிலியல் கல்லூரி போன்றவைகளுக்கு மாணவர்கள் சேர்ப்பதிலே, இவற்றிலே சேருகிறவர்கள் அதிகமாக இருப்பதினாலே பரவலாக்கப்படவேண்டுமென்ற எண்ணம் வந்து எல்லா மாவட்டங்களிலுள்ளவர்களும் பெறவேண்டும் என்பதற்காக இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. தலைமை உயர்நீதி மன்றம் 16 சத விகிதம் தாழ்ந்தப் பட்டவர்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் ஒதுக்குவதைப்பற்றியும், 25 சதவிகிதம் பிற்பட்டவர்களுக்கு ஒதுக்குவதைப்பற்றியும் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. மாவட்டங்கள் வாரியாக இடங்கள் ஒதுக்கப்படுவது தவறு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நோக்கம் நிறைவேறுகின்ற வகையில் என்ன செய்யலாம் என்பது பற்றி சட்டச்செயலாளர் அவர்கள் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். மாவட்டங்கள் அந்த அளவிலே சட்டத்திற்கு உட்பட்டு வரக்கூடிய முறையில் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். எல்லா நிலையினருக்கும் சம பங்கு ஒதுக்கக்கூடிய வகையில் சமுதாயத்தில் ஒரு சூழ்நிலை ஏற்பட்டால்தான் சமூக நீதி கிடைக்கும் என்று அறிந்து அதை எந்த அளவிற்கு நிறைவேற்ற முடியும் என்ற அளவிலே ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். விரைவிலே ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** ஐயா, விகிதாசார அடிப்படையில் ஒதுக்கக்கூடிய ஸ்தானங்களில் எல்லாம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 16 சதவிகிதம் என்றும், பிற்பட்டவர்களுக்கு 25 சத விகிதம் என்றும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மற்ற புள்ளிவிவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

**திரு. கே. பி. எஸ். மணி:** ஐயா, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 16 சதவீதமும் (மிகப் பின் தங்கிய வகுப்பினர் உட்பட) பின் தங்கியிருக்கிறது. சரியாக ஒதுக்கப்படவில்லை என்ற புகார் பரவலாக இருக்கிறது. அதைச் சர்க்கார் சரிப்படுத்தி கடந்த ஆண்டில் எந்த அளவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றிய விவரத்தை வெளியிடுவார்களா? அரசாங்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரப்படி அவர்களுக்கு 9 சத விகிதம் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?



1968 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தாழ்த்தப்பட்டவர்களுக்கு 16 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விண்ணப்பங்கள் எத்தனை வந்திருக்கின்றனவோ அத்தனைக்கும் ஒதுக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் வந்திருக்குமானால் அவைகளையும் சேர்த்துக் கொண்டிருக்கமுடியும். பிற்பட்ட வகுப்பினருக்கு 25 சத விகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களுக்கு மெரிட் முதலியவற்றைப் பார்த்து மற்ற வகைகளிலும் மொத்தத்தில் 46 சத விகிதம் 47 சத விகிதம் இடங்கள் தாக்கூடிய அளவிற்கு இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்குக் குறைவு என்றால் விண்ணப்பங்கள் செய்தவர்களுடைய எண்ணிக்கை குறைவு என்று பொருள்.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரிகளுக்கான தேர்வு முறையிலே மிகப் பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்தவர்களுக்கு பின்தங்கிய வகுப்பினர் என்ற பொதுப்படையான அடிப்படையில்தான் தேர்வுகள் நடைபெறுகின்ற காரணத்தால் மோஸ்ட் பாக்வார்டைச் சேர்ந்தவர்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லாத நிலைமை இருக்கிறது. அதைப் போக்குவதற்கு அவர்களுக்கு குறிப்பிட்ட சத விகிதம் என்ற அளவிலே ஒதுக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பினரோடு சேர்த்துத்தான் மிகப் பின்தங்கிய வகுப்பினர்களும் கணக்கிடப்படுகிறார்கள். அப்படிக் கணக்கிடும் போது, மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கு முதல் சலுகை அளித்து, பிறகு பின்தங்கிய வகுப்பினருக்கு அளிக்கும் காரணத்தால், அதற்கென்று தனி சதவீதம் ஒதுக்கும் நிலை இல்லை.

**திரு. செ.. பாலசுப்பிரமணியன்:** சுப்ரீம் கோட் தீர்ப்பின் விளைவாக, நகரங்களில் இருப்பவர்களுக்கு மாத்திரம் இனிமேல் இம்மாதிரி கல்லூரிகளில் அட்மிஷன் கிடைக்கும். அது மாத்திரமல்ல. உத்தியோகங்களில் உள்ளவர்கள், ஆங்கிலம் படித்து, கல்வியிலே மிகவும் முன்னேறி இருக்கிறவர்கள் ஆகிய இப்படிப்பட்டோரின் பிள்ளைகளுக்குத்தான் அங்கே அட்மிஷன் கிடைக்கும் நிலை ஏற்பட்டிருப்பதால், கிராமப் புறங்களில் அதிகம் கல்வி பெறாத பெற்றோர்களின் பிள்ளைகளுக்கும் அட்மிஷன் கிடைக்கும் வகையில் புதியதொரு உத்தரவைப் போடும்போது, அதைப் போடுவதற்கு முன்பு, சபையிலுள்ள சகல கட்சியினரையும் கலந்தாலோசித்துவிட்டு, அரசாங்கம் போடுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** நான் முதலில் குறிப்பிட்டபடி, தலைமை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு மீறப்படாத வகையிலும், ஏற்கனவே கொண்டிருந்த கொள்கையை நிறைவேற்றும் வகையிலும், என்னென்ன முறைகளை மேற்கொள்ளலாம் என்று ஆராயப்பட்டு வருகிறது. அந்த வகையில் ஆராயப்படும்

[1968 மார்ச் 28

நேரத்தில், அவசியப்பட்டால், உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற படி, மற்றக் கட்சியினரையும் கலந்துகொண்டு செய்வதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கவேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கான உத்தரவைச் சர்க்கார் பிறப்பித்துள்ளதா? அப்படியென்றால், அதற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அன்றே ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது குறிப்பிட்டது போன்று, இந்தியா முழுவதும் கிட்டத்தட்ட 27 ஆயிரம், 28 ஆயிரம் மாணவர்கள், பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கப்படும் சூழ்நிலை இருக்கும் காரணத்தாலும், இப்பொழுது தேர்வுபெற்றுப் பட்டம் பெற்று வந்திருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்காத காரணத்தாலும், சேர்க்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை 30 சத வீதம் குறைத்துவிடலாம் என்ற கருத்தை இந்திய கல்வி அமைச்சர் அவர்கள், நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது எந்த முடிவு எடுத்தாலும், ஐந்தாண்டு காலத்திற்குப் பிறகுதான், பாதிக்கப்படும் சூழ்நிலை வரக்கூடும். ஐந்தாண்டுக் காலத்திற்குப் பிறகு வேலை வாய்ப்பு அதிகரித்தாலும் அதிகரிக்கக்கூடும், இப்பொழுதுள்ள மந்த நிலையே அப்பொழுதும் நீடித்திருக்கும் என்று சொல்லுவதற்கில்லை. 30 சத வீதம் குறைக்கவேண்டும் என்று அவர்கள் சொன்ன அந்த அளவுக்குப் போகாமல், 120 மாணவர்களைத்தான் சேர்க்கலாம் என்ற நிலை இருந்த இடத்தில், 180 மாணவர்கள் வரையிலும் கூடச் சேர்க்கலாம் என்று சிலபல இடங்களில் செய்திருந்ததை மட்டும் குறைக்கலாமா என்ற எண்ணம் ஆராயப்பட்டு வருகிறது. அடுத்து, பி.எஸ்சி. படித்துவிட்டு வருகிறவர்களுக்கு பொறியியல் கல்லூரியில் மூன்று ஆண்டு படிப்பு சொல்லிக் கொடுக்கிறோம். அதற்கு 260 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்டவர்கள் மூன்றாண்டுகளுக்குள் பொறியியற் பட்டப் படிப்பிற்குரிய அறிவாற்றலைப் பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மூன்று ஆண்டுப் படிப்பு என்று இருப்பதை நான்கு ஆண்டுகளாக்கினால் நல்லது என்றும் தெரிவிக்கப்படுகிறது. அப்படியென்றால், மூன்றாண்டு பி.எஸ்சி. பட்டப் படிப்புக்கும், நான்காண்டு பி.ஈ. பட்டப் படிப்புக்கும், ஆக ஏழாண்டுகள் மாணவர்கள் செலவிட வேண்டிய வரும். பி.எஸ்சி. படித்துவிட்டு, பொறியியல் கல்லூரிகளில் சேர வருகிறவர்களைச் சேர்த்துக் கொள்ளாமல் இருக்கலாமா என்ற ஆலோசனை இருந்து வருகிறது. இந்திய கல்வி அமைச்சர் தெரிவித்தபடி, 30 சத வீதம் நாம் குறைக்கவேண்டிய அவசியம் இல்லாவிட்டாலும், நெருக்கடி இருக்கிற இடங்களில் கொஞ்சம் குறைப்பதன் மூலம் நிலைமையைச் சமாளிக்க முயற்சி செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் இன்று அதிகமாக இருக்கின்றன. மூல வினா கொடுத்த உறுப்பினர் ஒவ்வொருவரும்



1968 மார்ச் 28]

ஒரு துணை வினா கேட்கலாம் என்று அனுமதிப்பதாக இருந்தாலுங்கூட, இன்றைக்கு வினா-விடை நேரம் முடிந்துவிடும்.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. I understand the difficulty we are now facing. There are many questions which will have to be answered and most of them happen to be important questions. Such being the case, the Hon. Speaker may be kind enough to extend the question hour by one hour more. But that does not mean that we should be prevented from asking supplementary questions. The Hon. Speaker will appreciate my difficulty also. This is a question which relates to the admission to the colleges. This is a very important affair and people are watching us and people are interested in these things. There is the ruling of the Supreme Court and we have got to respect that ruling and we must also achieve our objective. So please take the Cabinet into your confidence and ask them whether they are satisfied with the disposal of this question in this summary way?

MR. SPEAKER : There is a rule observed in the House of Commons, which we are bound to follow when our own rules are silent and that is what is stated in Article 194 of the Constitution. The hon. Member knows it well, as an advocate. The procedure which is being enforced in the House of Commons is that the person who asks the main question is allowed one supplementary question. Therefore, one supplementary question is allowed to the person who puts the main question. It is not as though some injustice is being done. I take the sense of the House in this matter and it may be necessary to postpone some of the questions because there are two Appropriation Bills to be considered and there is very little time for them unless the hon. Members agree to sit in the afternoon also. Is the hon. Member willing?

THIRU K. VINAYAKAM : That is left to the Hon. Speaker. If the Hon. Speaker wants us to sit in the afternoon, we will sit.

Now arising from your exposition that one supplementary question will be allowed to the hon. Member who has put the main question, the Hon. Speaker must have shut down all other supplementaries but you have been kind enough to ask other hon. Members who are not authors of this question to put supplementary questions. If you had shut out all others except the four hon. Members who had put the main question, I would have accepted it.

MR. SPEAKER : I take the sense of the House. We are not enforcing the rule, unless the House agrees.

THIRU J. JAMES : Sir, on a point of order. The Hon. Speaker has referred to the procedure followed in the House of Commons, but our sub-rule (1) of Rule 38 says—

'Any member may put a supplementary question for the purpose of further elucidating any matter of fact regarding which an answer has been given to a starred question.'

MR. SPEAKER : I know that rule by heart. The same rule further says that when a sufficient or reasonable number of questions have been put, the Speaker may disallow further supplementary questions. The question is, what is a sufficient number. In the Mother of Parliaments the sufficient number is regarded as one and the opportunity is given to the person who has put the main question. But I see the sense of the House and therefore I will allow some more supplementary questions to be put.

THIRU K. VINAYAKAM : Thank you very much for conceding our point.

*திரு. சா. மெய்யப்பன் :* சார், ஆன்ய பாயிண்ட், ஆப் ஆர்டர்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது பாயின்ட் ஆப் லா போன்றது அல்ல. இது நடைமுறையை ஒட்டிய கேள்வியாக இருக்கவேண்டும். இப்போது உங்களுடைய நடைமுறைக் கேள்வியைச் சொல்லுங்கள்.

*திரு. சா. மெய்யப்பன் :* இப்போது அநேகமாக எல்லாக் கட்சி களுக்கும் உபகேள்வி அனுமதித்துவிட்டீர்கள். சுதந்திராக் கட்சிக்கு அளிக்கப்படவில்லை. ஆகவே ஒரு உபகேள்வி அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* கடைசியில் நீங்கள் எண்ணிப் பார்த்தீர்களானால் எந்த எந்தக் கட்சிக்கு எவ்வளவு கொடுக்க வேண்டுமோ அதைவிட அதிகமாகக் கொடுக்கப்பட்டிருப்பது தெரியும். இறுதியில் பாருங்கள்.

*திரு. சா. மெய்யப்பன் :* நான் கையை ஆரம்பத்தில் இருந்தே தூக்கிக்கொண்டு இருந்தேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* முதலில் கையைத் தூக்கின வருக்குத்தான் முதலில் வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்று சொல்ல முடியாது.

*திரு. எம். சுரேந்திரன் :* தலைவர் அவர்களே, உபகேள்வி அனு மதிக்கப்படுகிறபோது கேள்வி கேட்கிற தன்மை உடையவர் களுக்கு சில கேள்விகள் அதிகம் தரவேண்டும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அந்தத் தன்மையையும் கவனத்தில் எடுத்துக் கொண்டுதான் துணை வினுக்கள் போட அனுமதி அளிக்கப்படுகின்றது. அதன் காரணமாகத்தான் சில உறுப்பினர்கள் அதிக துணை வினுக்கள் போட முடிகிறது.

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :* தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட் கூட்டத்தொடர் இன்னும் இரண்டொரு நாட்களில் முடிவடைய இருக்கிறது. அதன் காரணமாக உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் இருந்தாலும், ஆளும் கட்சியில் இருந்தாலும் துணை வினுக்கள் போடவேண்டும் என்கிற ஆர்வம் மிகுதி உடைய வர்களாக இருப்பது இயல்பு. சட்டப்பேரவை விதிமுறைகளுக்கு இணங்க தங்கள் ஆணையை உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்



என்றாலும் அவர்களுடைய கருத்தை முறையிடாக வைத்து சிறி தளவு தாராளமாக துணைக் கேள்விகள் கேட்பதற்கு வசதியான நிலையைத் தாங்கள் ஏற்படுத்தித்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :* மருத்துவக் கல்லூரி போன்றவை களுக்கு மாவட்ட வாரியாக இடம் ஒதுக்குவது சரியல்ல என்று தீர்ப்பு அளிக்கப்பட்டுவிட்டதன் காரணமாக நியாயமான அடிப் படையில் இடம் ஒதுக்க ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்ற அரசு முன் வருமா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னேன். தலைமை நீதிமன்றம் தீர்ப்பு அளித்த பிறகு அதை மீறி சட்டம் இயற்ற முடியாது. தலைமை நீதி மன்றத்தின் தீர்ப்பை அனுசரித்துப் போகிற முறையிலும், நாம் கொண்டிருக்கிற நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளுகிற வகையிலும் எவ்வாறு செயல் படலாம் என்பதைப்பற்றித்தான் சட்டத்துறை செயலாளரும், மற்றத்துறை செயலாளர்களும் ஆராய்ந்துகொண் டிருக்கிறார்கள். அவர்கள் ஆராய்ந்த பிறகு தக்க முடிவு எடுக்க அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது.

*திரு. சா. மெய்யப்பன் :* தொழில் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு பின்னணி வகுப்பினர்கள் என்று ஒருசிலர் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். அதில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சேர்க்கப்படவில்லை. அவர்களையும் பின்னணி வகுப்பில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:* பிற்பட்ட வகுப் பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்று இப்போது தரப்பட் டிருக்கிற பட்டியலின் அடிப்படையிலேயே மாணவர்களுக்கு இடம் கொடுக்கிற தன்மை கவனிக்கப்படவேண்டியதாக இருக்கிறது.

*திரு. எ. பாலசுப்பிரமணியன் :* இதில் ஒரு கொள்கை ரீதியான பிரச்சினை அடங்கியிருப்பதால் கட்டில் குட்டை என்பதற்காக காலை வெட்டு என்று சொல்வதைப்போல புதிதாக கட்டில் பண்ணு வதற்கு முயற்சி எடுக்கப்படாமல் இப்போதுள்ள சமுதாய அமைப்புக்குள்ளேயே தீர்வு காண விழைகின்ற போக்கில் வர வேண்டியிருக்கிறது. அப்பேர்ப்பட்ட கொள்கையை நிராகரித்து தேவையான, அதிகமான என்ஜினியர்களை உண்டாக்கவும், அவர் களுக்கான வேலைவாய்ப்பை ஏற்படுத்தித்தருவதுமே சரியாக இருக்கும் என்பதில் அமைச்சர் அவர்களின் கருத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* அதுபற்றி எல்லாம் ஆராய வேண்டியிருக்கிறது. மாணவர்களிடம் இருந்தும் வேலை வாய்ப்புக் குறைகின்ற நிலையில் பல புகார்கள் வருகின்றன. வேலை வாய்ப்பை இப்போதுள்ளவர்களுக்கே ஏற்படுத்தித்தர

ஓய்வு வயதை 50 ஆக வைத்துவிடவேண்டும் என்றும், பல புதிய கல்லூரிகளை ஏற்படுத்தக்கூடாது என்றும், இருக்கிற இடங்களையும் குறைக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் 30 சதவீதம் குறைத்துவிடவேண்டும் என்று சொல்கிறபோது நாம் எதிர்காலத்தை மனதில் வைத்தே 30 சதவீதம் என்று குறைக்கவேண்டிய அவசியம் இல்லை. இப்போதே 120 இடங்கள் உள்ள இடத்தில் நாம் 160, 180 என்று வைத்திருக்கிறோம். அப்போபட்ட இடங்களில் சிறிதளவு குறைக்கவே யோசித்துக்கொண்டிருக்கிறோம். இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் 30 சதவீதம் என்ற அளவுக்கு பெரும் அளவு வெட்டை ஏற்படுத்த விரும்பவில்லை.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** அரிஜனங்களுக்காக ஒதுக்கப்படுகிற 16 சத வீதம் ஸ்தானம் கூட தொழில் கல்லூரிகளுக்கு இடம் அளிப்பதிலும், உத்தியோக உயர்வு அளிப்பதிலும் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்ற கருத்து அந்தச் சமூகத்தினரின் மத்தியில் நடமாடிக்கொண்டிருக்கிறதே, அதைப் பரிசீலிக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கல்லூரிகளைப் பொறுத்தவரையில் 16 சதவீதம் என்பது உன்னிப்பாகக் கவனிக்கப்படுகிறது. பி.யு.சி. பாஸ் செய்தால் போதும் என்ற அளவு க்வாலிபிகேஷன் வைக்கப்பட்டிருக்கிறது. சிறிதளவு ஏற்றத் தாழ்வு இருக்கலாமே தவிர புறக்கணிக்கப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ :** நெல்லை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் இங்கேயுள்ள மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நூற்றுக்கு நூறு கிருஸ்துவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பிற்பட்டவர்களாக இருந்தாலும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. சென்ற ஆண்டு நெல்லை, இராமநாதபுரம் மாவட்ட மீனவ சமுதாயத்தினர் ஒருவர் கூட வைத்தியக் கல்லூரியில் இடம் பெறவில்லை. அவர்களுக்கும் ஆண்டுதோறும் இத்தனை இடங்கள் என்று ஒதுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலே குறிப்பிட்டபடி கொடுக்கப்பட்டிருக்கிற பட்டியல் அடிப்படையில் இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. அவர்களையும் அந்தப் பட்டியலில் சேர்ப்பது என்பது தனிப்பட ஆராயவேண்டிய பிரச்சினை.

**திரு. எம். சுரேந்திரன் :** தொழில் கல்லூரியில் படித்துப பட்டம் பெற்றவர்களுக்கு உடனே வேலை கிடைப்பது என்பது பல்வேறு அம்சங்களைப் பொறுத்திருக்கிறது. கல்லூரியில் படிப்பதன் மூலம் சமுதாயத்தின் தரம் உயர்கிறது. அதைவிட்டு கல்லூரிகளை மூடுவது என்கிற கண்ணோட்டம் சரியானது அல்ல என்று அரசு நினைக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கல்லூரிகள் எதையும் மூடுகிற பிரச்சினையே எழவில்லை. நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி இருக்கிற இடங்களைக் குறைப்பதுபற்றித்தான் அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை 1,600, 1,700 இடங்கள் தான் இருக்கின்றன. இவற்றில் 260 அல்லது 300 இடங்கள் தான் குறைக்கும்படியான நிலைமை ஏற்படும். 30 சத விகிதம் என்ற அளவில் குறைக்கிற நோக்கத்தைக் கூட நம் அரசு கொள்ளவில்லை.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, வைத்தியக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி போன்ற இடங்களில் பின்தங்கிய மைனாரிடி முஸ்லிம் சமூகத்தினருக்கு உண்மையான ஜனவிகிதாச்சார அடிப்படையில் ஒதுக்கப்பட வேண்டிய இடங்கள் கூட ஒதுக்கப்படவில்லை என்கிற நிலை இருந்து வருகிறது. வருங்காலத்திலாவது அந்தக் குறையை நிவர்த்திக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போது தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடி மக்கள், பின்தங்கிய வகுப்பினர், மிகவும் பின்தங்கிய வகுப்பினர் என்ற அடிப்படையில் இடங்கள் ஒதுக்கப்படுகிறதே தவிர ஒவ்வொரு வகுப்பினரையும் பொறுத்து ஒதுக்கும் முறை இப்போது இல்லை.

THIRU K. VINAYAKAM : Whereas there is a general clamour for seats from the students, whereas the Government is not able to meet their demand and whereas the entire question depends upon the law of supply and demand, will the Government think of the possibility of having shift system in Medical and Engineering colleges or will the Government think of opening two or three more colleges in spite of the heavy expenditure that is involved in executing this programme?

THE HON. THIRU C. N. ANNADURAI : The question now raised is with regard to the proposal to reduce the number of seats in the Engineering colleges. This Government does not view the problem in the manner in which some others view that there is no need for more engineers at all. As a matter of fact, as the hon. Member Mr. Surendran pointed out, even if there is difficulty in finding jobs for them, more men getting into medicine and engineering courses will raise the tone of society. This Government realises that if students, who after studying for so many years, come out with high hopes from the colleges find themselves unemployed, naturally they feel frustrated. The whole difficulty arises in this way. When the Fourth Five-Year Plan was thought about, the framers of the Plan thought that there would be employment opportunities for engineers to a larger extent. Accordingly the institutions were asked to carry on the programme of training the engineering students. Since the Fourth Five-Year Plan did not fructify or was not given the final shape, employment opportunities for engineering students have been curtailed and the Central Government asked the State

Governments to reduce the number of seats by thirty per cent. The proposal for reduction by thirty per cent is not a State Government proposal; it came from the Central Government. We are not agreeable to that. In a way what the Members on the Opposition side and the Members on the Ministerial side think is identical or similar. We do not want reduction. But the Central Government is urging us to reduce the number of seats, because they are afraid that more and more unemployed engineers will not be conducive.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவரவர்களே, தொழில்
முற்பகல் 9-30 கல்லூரிகளில் தகுதி அடிப்படையில் சேர்க்காத மாணவர்களில் 1962-ல் இருந்து 1968 வரை எத்தனை மாணவர்கள் தொழில் கல்லூரிகளில் தேர்வு பெறாமல் வெளியேறி இருக்கிறார்கள் என்ற புள்ளி விவரத்தை அரசு தருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றி விவரம் இல்லை, தனிக் கேள்வி போடவும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** சார், தற்போது மருத்துவக் கல்லூரி தேர்வு பற்றி பொது மக்களிடத்தில் அவ்வளவு திருப்திகரமான எண்ணம் இல்லை. அதற்கு ஒரு காரணம் இன்டர்வியூவுக்கு அதிகம் மார்க்கு வைத்து, மாணவர்கள் கல்லூரிகளில் பெறுகிற மார்க்ஸ்க்கு அதிகம் மதிப்புக் கொடுக்காமல் தேர்வு நடத்துகிறார்கள் என்ற வதந்தி இருப்பதால் இனிமேல் நடக்கும் தேர்வுகளில் கல்லூரிகளில் மாணவர்கள் பெறும் மார்க்குகளுக்கு அதிகம் மதிப்புக் கொடுத்து இன்டர்வியூவுக்குக் கொடுக்கின்ற மார்க்கை குறைக்க அரசு முற்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போது அவர்கள் எந்தப் பாடங்களில் எண்கள் வாங்கியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறதோ அவற்றில் 200 எண்களும் இன்டர்வியூவிற்காக 75 எண் என்றும் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஸப்ஜெக்டைவிட ஒன்றும் அதிகமாக இல்லை. மெரிட் என்பது பரீட்சையில் வாங்குகின்ற மார்க்கை மட்டுமே வைத்துக்கொள்ளக் கூடாது என்றும் சமுதாயத்திலிருக்கும் நிலைமைகள், அவர்களுடைய ஸ்போர்ட்ஸ் ஆக்டிவிட்டீஸ், ஆப்டிட்யூட் போன்றவைகளை எல்லாம் சேர்த்தால்தான் மெரிட் வரும் என்ற அடிப்படையில் 75 மார்க்குகள் போடுகிறார்கள். 75 மார்க்குகளில் 25—25—25 என்று தனித்தனியாகப் பிரித்து ஸ்போர்ட்ஸ்-க்கு 25, ஆப்டிட்யூட்-க்கு 25, மற்றவைகளுக்கு 25 என்று மூன்று வகையாக பிரிக்கப்பட்டு 75 தான் தரப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நான் இன்னொரு விளக்கத்தையும் இணைக்க விரும்புகிறேன். இந்த இன்டர்வியூவுக்கு உள்ள மார்க்குகள், பாடங்களுக்கு உள்ள மார்க்குகள் என்ற இந்த பாகுபாடு, எதற்காக இன்டர்வியூவுக்கு அதிக மார்க்குகள் வைத்திருக்கிறார்கள் என்பதுபற்றி அவர்கள் விளக்கம்



கொடுத்தார்கள். இன்டர்வியூவுக்கு அதிகம் மார்க்கு வைத்திருப்பது இந்த அரசு வந்தபிறகு நடந்த காரியம் அல்ல, நீண்ட நெடுங்காலமாக இருந்துகொண்டு வருகிற முறை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், தொழில் கல்லூரிகளில் படித்துத் தேர்வுபெற்ற மாணவர்களை இதுவரையில் மத்திய அரசு வெளிநாடுகளுக்குச் செல்ல அனுமதித்துக்கொண்டிருந்தது. அதைக் கட்டுப்படுத்திய காரணத்தால்தான் இதுபோன்ற நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று சொல்லப்படுகிறது உண்மையா? இது விஷயமாக மத்திய சர்க்காரிடத்தில் நமது அரசு எடுத்துக் காட்டி உள்ளார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஆண்டுக்கு ஆண்டு எத்தனை மாணவர்கள் தங்களுடைய தேர்வு முடிந்த பிறகு வெளிநாடுகளுக்கு வேலைக்குப் போகிறார்கள், அது ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறதா அல்லது வளர்ந்து வருகிறதா என்ற விவரங்கள் இப்போது இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், எந்தெந்த ஆண்டில் எவ்வளவு பேர்கள் வெளிநாடுகளுக்கு போய் இருக்கிறார்கள், அது குறைந்திருக்கிறதா அல்லது வளர்ந்திருக்கிறதா என்று சொல்ல முடியும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி, இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர், திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவில் போன்ற பகுதிகளில் இருந்து இதுவரை தொழில் கல்லூரிக்கு ஒரு மாணவர்கூட சேர்க்கப்படவில்லை என்று தெரிய வருகிறது. அந்தப் பகுதிகள் மிகவும் பின்தங்கிய பகுதிகளாக இருப்பதால் அங்குள்ளவர்களுக்கு தொழில் கல்லூரிகளில் சேருவதற்கான விதிகளை தளர்த்தும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சில பகுதிகள் நீண்ட காலமாகவே பிற்படுத்தப்பட்ட பகுதிகளாக இருக்கின்றன என்று மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும்போது பிரதேசவாரியாக சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறினோம். சுப்ரீம் கோர்ட் பிரதேச பாகுபாடு காட்டக் கூடாது என்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். நண்பரவர்கள் சொல்கிற முறையில் இதுவரை தொழில் கல்லூரிகளில் யாருமே இடம் பெறாது இருக்கிற பகுதிகள் என்ற காரணத்திற்காக அவர்களுக்கு தனிச் சலுகைகள் தரவேண்டும் என்று நாம் திட்டமிட்டால் அது வழக்கு மன்றத்தில் நிற்குமா என்பது ஐயப்பாடுக்கு உரியது. ஆனால் அங்கத்தினர் அவர்கள் எடுத்துச் சொல்லிய விஷயத்தில் எங்களுக்கு அக்கறை இருக்கிறது.

**திரு. ஏ. எம். ராஜா :** பள்ளிகளில் வருட இறுதியில் நடத்தும் தேர்வுகள் மூலம் கிடைக்கும் மார்க்குகள் உண்மையாக மாணவர்களின் திறமையை வெளிப்படுத்துவதாக இல்லை. ஆகவே, பொறுக்குக் குழுக்கள் அமைத்து தேர்வு நடத்தும்போது அதற்கு 75 மார்க்கு என்றிருப்பதை 150 அல்லது 200 மார்க்காக உயர்த்த இந்த அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஏற்கனவே 150 மார்க்குகள் என்று இருந்து, அது 75 ஆக படிப்படியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த எண்ணை உயர்த்துவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் இல்லை.

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, I rise on a point of clarification. On this question we have taken more than 40 minutes. Even for discussing an important matter we have only half-hour discussion. If you are going to allow supplementary questions for every main question at this rate, it will take 12 hours to dispose of all the questions. Wherever a suggestion is made that you should be liberal in this matter, you are too liberal. I am not questioning your ruling but we are in a delicate position. Of course, hon. Members should have the right to put questions but at the same time you should control it. Also, are you going to allow 234 Members to put supplementary questions? There should be a maximum limit of 5 or 10 minutes fixed for each question. Otherwise, we will be wasting public money.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன கருத்தை எல்லா உறுப்பினர்களும் கடைப்பிடிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

### புதிய கலைக் கல்லூரிகள்

* 351 வினா— திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968-69-ஆம் கல்வி ஆண்டிலிருந்து எத்தனை கலைக் கல்லூரிகள் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

(இ) இவற்றில் ஆடவர், மகளிர்களுக்கான கல்லூரிகள் முறையே எத்தனை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆறு கலைக் கல்லூரிகள்.

(இ) இதற்கான முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

**திரு. பெ. மலைச்சாமி :** இப்போது தொடங்க உத்தேசிக்கப்படும் 6 கலைக் கல்லூரிகள் எந்தெந்த மாவட்டத்தில், எந்தெந்த ஊர்களில் தொடங்கப்படும் என்று கூற முடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அது பற்றிய இடங்கள் முடிவு செய்யப்படவில்லை. 6 கல்லூரிகள் வேண்டுமென்று அக்டோபர் மாதத்தில் பல்கலைக் கழகத் துணை வேந்தருக்கு எழுதிவிட வேண்டும். இந்த ஆண்டு நிதிநிலையைப் பொறுத்து 6 ஆரம்பிக்கலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆரம்பிக்கிற இடங்களை பல்கலைக் கழகத்தின் குழு வருமானால் அது ஆராய்ந்து பார்த்து நிபந்தனைகளை நிறைவேற்றுகிற அளவில் வருகிற முதல் 6 இடங்கள் தேர்ந்தெடுக்கப்படலாம். இந்த ஆண்டு நிதி நிலைமையைப் பொறுத்து 6 தான் வைக்கலாமென்று இருக்கிறது. இடங்கள் இனிமேல்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.



**திரு. இல. பலராமன் :** 6 கல்லூரிகள் அடுத்த ஆண்டு வரலாமென்று அமைச்சரவர்கள் கூறினார்கள். இந்த 6 கல்லூரிகளில் இரண்டு கல்லூரிகளைக் கல்வியில் பின்தங்கி இருக்கக்கூடிய மாவட்டமான வட ஆர்க்காடு மாவட்டத்தில் அரக்கோணத்தில் ஒரு கல்லூரியும், வேலூரில் ஒரு பெண்கள் கல்லூரியும் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா ? அங்குள்ள மக்களிடமிருந்து பல மனுக்கள் வருகின்றன. இவை பரிசீலிக்கப்பட்டுள்ளனவா ?

**மாண்புமிகு திரு . சி. என். அண்ணாதுரை :** வட ஆர்க்காடு மாவட்டத்தில் வாலாஜா நகரத்தில் ஒரு பெண்கள் கல்லூரி ஏற்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டியிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. மூக்கையா தேவர் அவர்கள் ஒரு கல்லூரி ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கல்லூரிக்கு அனுமதி கொடுக்கப்பட்டுவிட்டதா, கொடுக்கப்படவில்லையென்றால், கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதைப்பற்றி நம்முடைய கனம் உறுப்பினர் திரு. மூக்கையா தேவர் அவர்கள் என்னிடத்திலே பேசிக்கொண்டு வந்திருக்கிறார்கள். தனியார் ஆரம்பிக்க இருக்கிற அந்தக் கல்லூரிக்கு நன்கொடைகள் எல்லாம் தாராளமாக வரவேண்டும், வரும் என்று அவர்கள் தெரிவித்தார்கள். என்னுடைய ஒத்துழைப்பும் நண்பர்கள் மூலமாக இருக்கும் என்பதையும் தெரிவித்திருக்கிறேன்.

**திரு. பி. எஸ். மணியன் :** தலைவர் அவர்களே, இனிமேல் புதிய கல்லூரிகளைத் துவக்குகின்ற காலத்திலே நகரப்புறங்களிலே அதிகமாகத் துவக்கப்பட்டு வருவதை விட்டுவிட்டு கிராமப்புறங்களிலே துவக்குவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** வட ஆற்காடு மாவட்டத்திலே வாலாஜா நகரத்திலே துவக்கப்பட இருக்கிற கல்லூரியைப் பொறுத்தவரையில் அந் நகரம் பெரிய நகரங்களுக்கும், சிற்றூர்களுக்கும் இடையே உள்ள இடம்தான். அப்படிப்பட்ட இடங்களில் ஏற்கனவே கல்லூரிகள் திறக்கப்பட்டு பணியாற்றிக்கொண்டு வருகின்றன.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, திண்டிவனத்திலே ஒரு கலைக் கல்லூரியை ஆரம்பிப்பதற்காக மிகத் துரிதமான அளவிலே நிதி வசூல் செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. விவசாய அமைச்சர் அவர்கள்கூட அந்தக் கமிட்டியைக் கலந்து வேலையைத் துரிதப்படுத்தச் சொல்லியிருக்கிறார்கள். வசூலாகிக்கொண்டிருக்கிற 5 லட்ச ரூபாய் சேர ஒரு சில நாட்கள் 31-ம் தேதிக்கு மேல் 4 அல்லது 5 நாட்கள் அல்லது ஒரு வார தாமதம் ஏற்படலாம். அப்படித் தாமதம் இருந்தாலும், அதைப் பொருட்படுத்தாமல் வருகின்ற கல்வி ஆண்டிலே அந்தக் கல்லூரியைத் திண்டிவனத்திலே துவக்குவதற்கு அரசு அனுமதி வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இது குறித்து லைக் கல்லூரி நிதிக் குழுவினரும் கல்வியமைச்சரும் கலந்து கலந்து பேசினால், ஒரு சுமுகமான முடிவு ஏற்படுவதற்கு வழி இருக்கும். ஆகையினாலே, கல்வியமைச்சர் அவர்களிடத்திலே அந்தக் குழுவினர் வந்து பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோ. இரா. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, நாகையில் ஆண்டவர் கல்லூரி ஒன்று ஆரம்பிப்பதற்காக பிரமுகர்கள் முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். 6 கல்லூரிகள் வர இருப்பதால், அவற்றிலே ஒரு கல்லூரி நாகைக்குக் கொடுப்பதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்த ஆண்டவர் அறநிலையத்தின் சார்பாக ஆரம்பிக்க இருக்கிறார்களா அல்லது அரசாங்கத்தின் மூலமாக ஆரம்பிக்கச் சொல்கிறார்களா என்பது தெரியவில்லை. சொல்லப்படுகின்ற நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்களா என்பதைப்பற்றிய விவரக் குறிப்புகள் இன்னும் வரவில்லை. வந்தால் அதைப்பற்றி ஆராயலாம்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் உயர்நிலைப் பள்ளிகள் பெண்களுக்காக ஏராளமாக இருக்கின்றன. ஆகவே பெண்கள் கல்லூரி ஒன்று அங்கே துவக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும் கல்வியமைச்சர் அவர்களிடத்திலும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அதற்காக நிதியும், அதிகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அந்த நகர மன்றமும் 18 ஏக்கர் நிலம் ஒதுக்கியிருக்கிறது. அந்த நிலத்தினுடைய கிரயம் போக 5 லட்ச ரூபாய் பிரிக்க வேண்டுமா அல்லது அதையும் சேர்த்து 5 லட்சம் ரூபாய் பிரிக்க வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** முன்பே ஒரு உறுப்பினருக்குப் பதிலளித்தபடி இப்படிப்பட்ட—டெடெய்ல்ஸ்—விவரங்களைத் தனியாக அமைச்சரிடத்தில் கலந்து தெரிந்து கொள்ளலாம்.

**திரு. பி. எம். முனுசாமி கவுண்டர் :** அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் பல புதிய கலைக் கல்லூரிகள் ஆரம்பிக்க இருப்பதாகச் சொன்னார்கள். அது வரவேற்கவேண்டிய விஷயம். ஆனால் பல கல்லூரிகளில் அவை ஆரம்பிக்கப்பட்டு குறிப்பாக கிருஷ்ணகிரியிலுள்ள கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 3, 4 ஆண்டுகள் ஆக நடந்துகொண்டு வருகிறது, போதுமான வசதிகள் இல்லை, கட்டடம் இல்லை, டெம்பரரி ஷெட்டில்தான் இருக்கிறது. இது போன்று பல கல்லூரிகள் மாவட்டங்களிலே இருந்து வருகின்றன. இந்த நிலையைப் போக்கிய பிறகு, மற்ற ஹாஸ்டல் வசதிகளைச் செய்து கொடுத்த பிறகு புதிய கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?



**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் சொல்வது—ஆரம்பிக்கப்பட்டிருக்கிற எல்லாப் கல்லூரிகளிலும் எல்லா வசதிகளையும் ஏற்படுத்திய பிறகு புதிய கல்லூரிகளை ஆரம்பிக்கலாம் என்பது. பெரும்பாலும் இந்த அவையிலேயும் அவைக்கு வெளியிலேயும் பலரும் வரவேற்கத்தக்க கருத்தாக அக் கருத்து இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். கண்ணப்பன் :** கோவை மாவட்டத்திலே உடுமலையிலே தனியார் கல்லூரி, விசாலாட்சி மகளிர் கல்லூரியிலே கடந்த நான்கு மாதங்களாக சம்பளமே கொடுக்கவில்லை என்ற புகார்கள் அந்த ஆசிரியர்களிடமிருந்து வந்திருக்கிறதா ? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இது கல்லூரி ஆரம்பிக்கப்படுவதைப்பற்றிய கேள்வி. தனிக்கேள்வி போட்டால் பதிலளிக்கலாம்.

**திரு. வ. ஜார்ஜ் :** நமது மாநிலத்திலே அரசினர் கல்லூரியே இல்லாத மாவட்டம் குமரி மாவட்டம். ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு அரசாங்கக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதிகமான அளவுக்கு கல்லூரிகள் மக்கள் எண்ணிக்கையையும் நிலப்பரப்பையும் பொறுத்து இருப்பது அந்த மாவட்டத்தில் தான். எழுத்தறிவு அதிகமாகப் பெற்றிருப்பவர்களும் அதிகமாக இருக்கிறார்கள். சட்ட மன்றத்திற்கு வந்திருக்கிற உறுப்பினர்கள் எல்லோருமே வழக்கறிஞர்களாக இருக்கக்கூடிய அந்த அளவுக்கு சூழ்நிலை இருக்கிறது. அதற்காக அரசினர் கல்லூரி வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அதற்கான வாய்ப்பும் அவசியமும் இருக்குமானால், அதுபற்றி அப்பொழுது யோசிக்கலாம்.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலிருக்கும் காமராஜ் கல்லூரிக்கு மத்திய சர்க்காருக்குச் சொந்தமான இடம் ஒன்றைக் கேட்கிற நேரத்திலே அதற்குக் கிரயம் இல்லாமல் அதை இனமாகக் கொடுக்கவேண்டுமென்று தமிழக அரசு சிபார்சு செய்திருக்கிறது. அதோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் டெல்லியில் இதைப்பற்றி நேரடியாகச் சொல்லி அந்த இடத்தை இனமாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னது உண்மையா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நேரடியாகக் கேட்டுக் கொண்டது உண்மை. இரண்டு நாட்களுக்கு முன்னாலே அதைப் பற்றி வலியுறுத்தி மத்திய அரசுக்கு கவனப்படுத்தி ஒரு கடிதமும் அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** கோவை மாவட்டத்திலே கோபிசெட்டிபாளையத்தில் ஆண்கள் கல்லூரி இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படுவதாக இருக்கிறது. அங்கே 25 மைல் சுற்றளவில் பெண்கள் கல்லூரியே இல்லை. ஆண்கள் கல்லூரி ஆரம்பிக்கப் படுகிறபொழுது புகுமுக வகுப்பிலே பெண்களைச் சேர்க்கக் கூடாது என்ற நிபந்தனை இருக்கிறது. அந்த நிபந்தனையை மேற்கொண்டால், பெண்கள் அந்தக் கல்லூரியில் சேரமுடியாத குந்தகம் இருக்கும். ஆகவே அந்த விதியைத் தளர்த்துவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஆண்கள் கல்லூரிகளிலே புகுமுக வகுப்பிலே பெண்களைச் சேர்க்கப்படக்கூடாது என்று வலியுறுத்தி வருகிறார்கள் அதைப்பற்றிப் பல்கலைக்கழகம்தான் முடிவு செய்யவேண்டும். வேறு பல இடங்களில் பெண்கள் சேர்க்கப்படவேண்டும் என்ற கருத்தும் சொல்லப்பட்டு வருகிறது. துணைவேந்தர் அவர்கள் கொள்கையளவிலே அதை மறுத்து வருகிறார்கள். பி.ஏ., பி.எஸ்ஸி. போன்ற வகுப்பில் சேரலாம், ஆனால் புகுமுக வகுப்பிலே சேர்த்துக் கொள்வது விரும்பத்தக்கது அல்ல என்ற கருத்தைப் பல்கலைக் கழகம் சொல்லிக்கொண்டு வருகிறது. அதனிடத்தில் இந்தக் கருத்தும் சொல்லப்பட்டு வருகிறது.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, அந்த 6 கல்லூரி களிலே போதனாமொழியாக தமிழ் இருக்குமா அல்லது ஆங்கிலம் இருக்குமா அல்லது இரண்டுமே இருக்குமா ? அந்த ஆறு கல்லூரிகளில் ஒரு கல்லூரியை திருவரம்பூரில் ஏற்படுத்துவதற்கு ஏற்ற முறையில் அந்த ஊரும் இடம் பெற்றிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** திருவரம்பூர் என்ற ஊரும் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் நிபந்தனைகள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதைப் பொறுத்துத் தான் ஆரம்பிக்க சூழ்நிலை இருக்கும். மற்ற அரசினர் பள்ளிகள் இப்பொழு எப்படிப் பணியாற்றுகின்றனவோ, அந்த அடிப்படை யிலேதான் புதிய கல்லூரிகளும் பணியாற்றும்.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், நெல்லை மாவட்டத்திலும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் மாணவர்கள் கல்லூரிகள் இருக்கின்றன. நெல்லையில் St. Francis Xavier's College, St. John's College, தூத்துக்குடியில் St. Mary's College, V.O.C. College, ஆகிய கல்லூரிகளில் மாணவ மாணவிகளை அதிகமாய்ச் சேர்க்க அரசு உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதிகமாக மாணவி யரைச் சேர்ப்பதற்கு இட நெருக்கடி இருக்குமானால், அதைப் பற்றிக் கவனித்துத் தக்க ஏற்பாடுகளைச் செய்யலாம்.



**திரு. ஏ. சிதம்பரநாத நாடார் :** கல்வி அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் கலைக் கல்லூரிகள் பல இருக்கின்ற காரணத்தினால் தற்போது அங்கு காலேஜ்கள் புதிதாகத் திறப்ப தற்கு அவசியமில்லை என்ற தோரணையில் பேசினார்கள். உண்மை தான், அதை வரவேற்கிறேன். இருந்தாலும் அங்குள்ள மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்து தேர்ந்த பிறகு புதுமுக வகுப்பில் சேருவதற்கு இடம் கிடைக்காமல் திண்டாடுவது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** திறக்கவேண்டிய அவசியமில்லை என்று சொல்ல வரவில்லை. அங்குள்ள நிலைமையைச் சுட்டிக்காட்டி, வேறு ஒரு அரசினர் கல்லூரி ஆரம்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு நிபந்தனைகளை நிறைவேற்றும் சூழ்நிலை ஏற்படு மானால், ஆராயலாம் என்றுதான் குறிப்பிட்டேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அரசினர் கல்லூரிகளில் மாணவர்கள் எந்த அடிப்படையில் சேர்க்கப்படுகிறார்களோ, அந்த அடிப்படையில் தனியார் துறைக் கல்லூரிகளில் சேர்க்கப்படு வதில்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, எல்லாக் கல்லூரிகளிலும் ஒரே அடிப்படையில் மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்ற அளவிற்கு தனியார் கல்லூரிகளுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோர்களைச் சேர்க்கிற விதியை நிறைவேற்ற வேண்டுமென்ற கட்டளையைத்தான் தனியார் துறைக் கல்லூரிகளுக்கு இட முடியுமே தவிர, இந்த அமைப்பில், இப்படி இப்படிக் கொடுக்கவேண்டுமென்று கட்டுப்படுத்துகிற உரிமை இல்லை. பல்கலைக் கழகம் அவ்வப்பொழுது அவர்களுக்குக் கூறி வருகிறது. ஒரே முறையைத்தான் கையாள வேண்டுமென்று வற்புறுத்தக்கூடிய சூழ்நிலை இல்லை. இந்தத் திட்டத்தை மட்டுமே வற்புறுத்துகிறது, நாம் நிதி உதவி செய்வதால் 16 சதவிகிதம் இவர் களுக்குக் கொடுக்கவேண்டுமென்றும், 25 சத விகிதம் பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கவேண்டுமென்றும் மட்டும் வற்புறுத்தி வருகிறோம்.

**திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் :** தர்மபுரி மாவட்டத்தில் இரண்டு கலைக் கல்லூரிகள் உள்ளன. தர்மபுரி மாவட்டம் சமீபத்தில் சேலம் மாவட்டத்திலிருந்து பிரிந்த மாவட்டம், அது ஒரு பின் தங்கிய மாவட்டம். அங்கு பெண்கள் கல்லூரி இல்லை. ஆகவே அங்குள்ள கல்லூரிகளில் பெண்களும் சேர்ந்து படிக்க—கோ எஜு கேஷன்—யூனிவர்சிட்டி கமிஷனிடம் சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே பெண்களும் அந்தக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க அரசாங்கம் உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் ஏற்கனவே கூறியுள்ளபடி இதுபற்றி பல்கலைக்கழகம்தான் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள்

புகுமுக வகுப்பில் சேர்ப்பதற்கு மறுத்துவருகிறார்கள். ஆனால் பி.ஏ., பி.எஸ்ஸி., வகுப்புகளில் சேர்ப்பதற்கு அனுமதித்து வருகிறார்கள். இதுபற்றி பல ஊர்களிலிருந்து பல விண்ணப்பங்கள் வருவதால், அதைக் கவனிக்க வேண்டுமென்றுகூட, எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. மீண்டும் அதுபற்றிக் கலந்து ஆலோசிக்கவும் இருக்கிறது.

*Language Instruction in High Schools*

* 352 *Q.*—THIRU K. VINAYAKAM : }
THIRU N. KASIRAMAN : } Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have recently modified the orders of language instruction in high schools; and

(*b*) whether it is a fact that under Part II, advanced Tamil or Hindi, or any other Indian language, not covered by Part I may be taken by the student?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம். 1968-ம் வருடம் ஜனவரி 24-ம் தேதி முதல் இருமொழித் திட்டம் கீழ்க் கண்டவாறு செயலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது :—

பகுதி அ: வட்டார மொழி அல்லது தாய்மொழி (தாய் மொழி வட்டார மொழியினின்று வேறுபட்டதாக இருப்பின்);

பிரிவு இ: ஆங்கிலம் அல்லது இந்திய மொழியல்லாத மற்றொரு மொழி.

(இ) மும்மொழித் திட்டத்திலிருந்து பகுதி II அகற்றப் பட்டுவிட்டது.

**திரு. கே. விநாயகம் :** இந்த மும்மொழித் திட்டத்தை அகற்றி விட்டு இரண்டு மொழித் திட்டம் என்று நாம் ஏற்றுக்கொண்ட பிறகு இந்தியே படிக்கக்கூடாது என்ற விதி பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பப்பட்டதா ? இந்திக்கு பதில் இந்தி பேசுகிறவர்கள் என்ன மொழியை எடுத்துக் கொள்ள வகை செய்து தரப்பட்டிருக்கிறது ? சிறப்புத் தமிழ் என்று சொல்லி இங்கிருந்து உத்தரவு போட்டு விட்டால் மட்டும் சிறப்புத் தமிழ் அங்கு கற்றுக் கொடுக்க என்ன வகை செய்யப்பட்டிருக்கிறது ? இதில், இதற்கு வேண்டிய சிலபஸ், இதற்கு வேண்டிய டெக்ஸ்ட் புக்ஸ் போன்றவை இன்னும் தயாரிக்கப்படவில்லை என்ற புகார் இருந்துவருகிறது. இது உண்மைதானா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சென்ற ஆண்டு ஜூலை திங்களிலிருந்து இந்த இருமொழித் திட்டம் வருவது வரை மும்மொழித் திட்டம் இருந்தது. இந்தி அல்லது வேறு ஒரு இந்திய மொழி என்றிருந்தது. அட்வான்ஸ் தமிழ், சிறப்புத் தமிழ், அல்லது இந்தி அல்லது வேறு ஒரு இந்திய மொழி என்று ஆக்கப்பட்டு தமிழ் புகுத்தப்பட்டது. அதிலும் ஒரு பிரிவு செய்யுள், உரைநடை, மொழிபெயர்ப்பு என்று தரப்பட்டிருந்தது. இறுதியில் மார்க்ஸ் வாங்கவேண்டிய அவசியமில்லை, எழுதினால்



போதும் என்று இரண்டாவது பிரிவு இருந்து அதில் இது வருகிறது. இரு மொழித் திட்டத்தில் இரண்டாவது பிரிவு அகன்றுவிடுவதால் சிலபஸ் அல்லது சிறப்புத் தமிழ் என்று எந்த ஏற்பாடும் இப்போது தேவையில்லையென்ற நிலை ஏற்பட்டுவிட்டது. முதல்மொழி தமிழ் அல்லது வேறு தாய்மொழி. இரண்டாவது, ஆங்கிலம் அல்லது வேறு இந்திய மொழி அல்லாத வேறு ஒரு மொழி என்று ஆக்கிவிட்டதால் இரண்டாவது பார்ட் போய் விட்டது. இந்தியைப் பயிற்சி மொழியாக, பாடமொழியாகக் கொண்ட இரண்டு ஹைஸ்கூல்ஸ் சென்னையில் இருந்து வருகின்றன. அங்கு எடுக்கப்படவில்லை. இந்தியே சொல்லிக் கொடுக்கக் கூடாது என்ற உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

DR. H. V. HANDE : Sir, in view of the fact that there are a number of people who study minority languages in the Madras State, will this Government reconsider the necessity of giving an opportunity to study the minority languages like Telugu, Kannada and Malayalam and also will this Government give adequate security to those Hindi Pandits who are likely to be thrown out of employment?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளுக்கு குறைந்தது 15 மாணவர்கள் அளவிற்கு இருந்தால் அதை ஏற்றுப் படிப்பவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. தெலுங்கு, கன்னடம் சொல்லிக் கொடுக்கும் பள்ளிகள் இருக்கின்றன. கோவை, பொள்ளாச்சி போன்ற இடங்களில் மலையாளம் சொல்லிக் கொடுக்கும் பள்ளிகள் இருக்கின்றன. அப்படிச் சொல்லிக் கொடுப்பதற்கு வாய்ப்பு தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது. இந்தி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு மாற்று வேலை தருகிற பொறுப்பை ஏற்றுக்கொண்டு அவரவர்கள் தகுதிக்கேற்ப, பி.ஏ., பி.டி. என்றிருந்தால் அதில் எடுத்துக் கொண்டு எந்தெந்த முறையில் ஈர்த்துக் கொள்ள முடியுமோ அப்படி அவர்கள் சம்பளம் பாதிக்கப்படாமல், அவர்கள் சர்வீஸ் பாதிக்கப்படாமல் முறைப்படி ஊதியம் தரப்படுகிற முறையில் ஏற்றுக்கொள்ள மாற்றுத் திட்டங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அந்த முறையில் அவர்கள் ஈர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

**திரு. நா. காசிராமன் :** ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் திருச்சியில் கூடிய இந்தி பண்டிட்ஸ் கான்பரன்ஸில் இந்தப் புதிய ஜி.ஓ. காரணமாக சுமார் 2,500 பண்டிட்ஸ் வேலையிழக்கக் கூடிய நிலையிலுள்ள அவர்கள் அச்சத்தைத் தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது அரசாங் கத்திற்குத் தெரியுமா? அந்த அச்சத்தை அகற்ற ஆற்றப் போகும் செயல் என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆகஸ்ட் மாதத்தில் அந்த தீர்மானத்தைப் போட்டார்கள். அப்போது அந்த நிலை ஏற்படவில்லை. இரண்டு மொழித் திட்டம் வந்தபிறகுதான்

ஜனவரிக்குப் பிறகுதான் அந்த நிலை வந்தது. இந்தி பண்டிட்ஸ் யாரும் வேலை இழக்கமாட்டார்கள். அவர்களை வெளியே அனுப்புகிற சூழ்நிலை ஏற்படாது, அவர்கள் தகுதி, திறமைக் கேற்ற வகையில் ஈர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஆனால் அதில் அதில் டெம்பரரி, ஆறு ஏழு மாதங்கள் பணியாற்றியவர்கள், அன் க்வாலிபைட் என்று சேர்த்திருக்கிறார்கள். அவர்களை ஒரு வருடத்திற்குப் பின் மேலும் மேலும் எடுத்துக்கொள்கிற அளவிற்கு ஆண்டு இறுதியில் நோட்டீஸ் கொடுத்தனுப்பும் நிலை தான் இருக்கிறது. ஏற்கனவே வேலையில் இருப்பவர்கள், யாருக்கும் வேலைக்குப் பாதகம் ஏற்படாது, அந்த அளவிற்கு ஈர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இந்தி பற்றி, முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அவர்கள் திருச்சியில் பேசும் போது கல்வி அமைச்சர் அவர்கள் இந்திதான் இணைப்பு மொழி என்று சொல்லி மத்திய அரசுக்குத் தகவல் அளித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்களே, அதுபற்றி அரசாங்கத்தின் கருத்து என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஏற்கனவே மும் மொழித் திட்டம் இருந்தபோது முதலில் சொன்னபடி இருந்தது. அட்வான்ஸ் தமிழ், அல்லது இந்தி அல்லாத வேறு ஒரு இந்திய மொழி என்று திட்டம் இருந்தது. மும்மொழித் திட்டம் இருக்கிற வகையில் இந்தி விருப்ப பாடமாக இருந்தது. இரு மொழித் திட்டம் வருவதுவரை மும்மொழித் திட்டம் இருந்தது. பிறகு திட்டவட்டமாக முடிவு எடுத்து இருமொழித் திட்டம் என்று நிறைவேற்றிய பிறகு அந்தப் பிரச்னைக்கு இடமில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இந்தி ஆசிரியர்களுக்கு இப்போது வேலை யில்லை. அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறதா ? அல்லது அவர்களுக்கு மாற்று வேலைகள் கொடுக்கப்பட் டிருக்கிறதா ? எவ்வளவு பேர்களுக்கு மாற்று வேலைகள் கொடுக்கப் பட்டிருக்கிறது ? எவ்வளவு பேர்கள் வேலை இல்லாமலிருக் கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஏற்கனவே சொன்ன படி அவர்களுக்குச் சம்பளம் தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது. மாற்று வேலைகள் அவரவர்கள் தகுதி திறமைக்கேற்ப என்னென்ன தகுதிகள் பெற்றிருக்கிறார்கள் என்று பார்த்து சில பேர்களுக்கு சில சலுகைகள் அளித்து, சில பேர்கள் ஆசிரியர் பயிற்சி பெற்று அந்த வேலைக்குப் போக விரும்புகிறார்கள் என்றால், அதற்கான வாய்ப்பு தரலாம் என்று சொல்லப்படுகிறது. செகண்டரி கிரேடிற்குப் போக விரும்புகிறவர்களுக்கு அதற்குரிய வாய்ப்பு தரப்படுகிறது. ஆக எல்லாம் கலந்து ஆலோசித்து எந்த எந்த வகையில் ஈர்த்துக் கொள்ளமுடியும் என்பது சில நாட்கள் கழித்துத்தான் தெரியவரும். அப்போதுதான் எவ்வளவு பேர்களுக்கு என்னென்ன மாற்றுவேலைகள் கொடுக்கப்பட்டிருக் கின்றன என்பதைச் சொல்லமுடியும்.



**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** சபாநாயகரவர்களே, இந்தி ஆசிரியர்களுக்குத் தகுந்த வேலை கொடுக்காத காரணத்தால், பள்ளியில் அவர்கள் சும்மாவே உட்கார்ந்திருக்கிறார்கள். சும்மா இருந்தாலும் சம்பளம் கொடுக்க இந்த அரசாங்கம் பொறுப் பெடுத்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அவர்கள் சும்மாயிருந்தாலும் ஏதாவது ஒரு வேலை கொடுக்கலாம் என்று இருக்கிறது. இல்லாவிட்டால் அவர்களை வெளியேற்ற வேண்டும். வெளியேற்றினால் ஏன் வெளியேற்றினீர்கள் என்று கேட்பார்கள். ஆகவே இருப்பதை நாம் சமாளித்துத்தான் தீர வேண்டும். ஆசிரியர்கள் வகுப்புக்கு வராவிட்டால் அந்த வகுப்பைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு வருகிறது. அவர்கள் தகுந்த வேலை செய்துகொண்டுதான் வருகிறார்கள்.

**திரு. பெ. சீனிவாசன்:** சார், இந்தி ஆசிரியர்களாக இன்று இருப்பவர்கள் கடந்த கால அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைப் பயன்படுத்தி இந்தி படித்தவர்கள். இன்று ஆட்சியிலே இருக்கும் கட்சியினர் இந்தி ஆசிரியர்களுக்குக் காரண கர்த்தாக்கள் அல்ல. எனவே அந்த ஆசிரியர்களுக்கு வேலை தேடித் தரும் பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்படி சிபாரிசு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அது ஒரு தவறான கொள்கையாகும். நம்முடைய அரசாங்கத்தினால் நியமிக்கப் பட்டவர்கள் வேலையிழக்க நேரிட்டால், அதைக் கவனிக்கும் பொறுப்பு நம்முடைய அரசுக்கு இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகரவர்களே, அமைச்சரவர் கள் பதில் சொல்லிக்கொண்டிருந்த சமயத்தில் மத்திய சர்க்காருக்கு அனுப்பியதாகக் கூறும் அந்த மெமோரண்டத்திலே இன்றைய சர்க்காரின் நிலையை விளக்கியிருக்கிறார்களா, அல்லது பழைய சர்க்காரின் நிலை விளக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மெமோரண்டத்திலே, 1948-ஆம் ஆண்டிலேயிருந்து எடுக்கப்பட்ட கொள்கை, மாறி வந்திருக்கும் நிலை, துவக்கத்திலிருந்து அரசின் பொறுப்பு என்னவாகயிருந்தது என்பதையும், அட்வான்ஸ் தமிழ் புகுத்தியிருப்பதையும் சொல்லி அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அந்த மெமோரண்டத்தில் இந்தி தான் 100, 200 வருஷ காலங்களில் வரும் என்று குறிப்பிடப் பட்டிருந்தது தெரியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தி வருவதாக இருந்தால் big if என்று போட்டு, 100, 200 வருஷங் களுக்கு 'லிங்க் லாங்குவேஜ்' வேண்டும். அதற்கு ஆங்கிலம்

வேண்டுமென்பதை வற்புறுத்திச் சொல்லவேண்டும். அப்படியே இந்தி வருவதாக வைத்துக்கொண்டால் 100, 200 ஆண்டுகள் ஆகும். அப்படிப்பட்ட நிலைமை வரும்வரை ஆங்கிலம் இருந்துதான் தீர வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இருமொழி என்று திட்டவட்டமாக வர வேண்டிய அவசியமேற்பட்டிருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகரவர்களே, அமைச்சரவர்கள், இந்திதான் வர முடியும், Hindi shall come இந்திதான் இறுதிமொழி என்னும்படியாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ளுகிறாரா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்கள் வினாவைப் புரிந்து கொள்ளாமல் பதில் சொன்னார் என்று கொள்ளக்கூடாது. புரிந்து கொண்டுதான் அந்தப் பதிலைச் சொன்னார் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. கே. என். குமாரசாமி: சார், என்.சி.சி. மாணவர்களுக்கு ஆங்கிலத்தில்தான் கட்டளைச் சொற்கள் இருக்கவேண்டுமென்று தமிழக சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எழுதிற்று. மத்திய சர்க்கார் இது இராணுவம் சம்பந்தப்பட்ட பிரச்சனை என்று சொல்லி இந்தியில்தான் இருக்கவேண்டுமென்று கூறி அது நிராகரிக்கப்பட்டதாகப் பத்திரிகையில் வந்திருக்கிறது. அது சம்பந்தமாக அரசு என்ன கருதுகிறது ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பத்திரிகையிலே வந்த செய்தித் தலைப்பை வைத்துக்கொண்டு உறுப்பினரவர்கள் கேட்கிறார்கள். இந்த அரசு எழுதியதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து ஒரு பதில் கடிதம் வந்திருக்கிறது. அதிலே அவர்கள், எல்லாமே ஆங்கிலத்திலே தான் பெரும்பாலும் இருக்கிறது, 10, 15 சொற்கள் இந்தியில் இருக்கிறது, அதில் தவறு இல்லை, எனவே அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று எனக்கு எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதம் சர்க்காரின் கவனத்திலிருக்கிறது. உரிய பதில் உரிய நேரத்தில் அனுப்பப்படும்.

திரு. கே. விநாயகம் : சார், போன சர்க்காரின் கொள்கையைத்தான், அதன் அடிப்படையிலேதான் தயார் செய்து ஆகஸ்ட் மாதத்தில் அனுப்பப்பட்டது என்பதைவிட, இந்தச் சட்டசபையிலே ஒரு தீர்மானத்தைப் போட்டு இந்தி படிக்கக்கூடாது, எடுத்துவிட்டோம் என்பது பற்றி மத்திய சர்க்காருக்கு எழுதினார்களா, எழுதியிருந்தால் என்ன பதில் வந்திருக்கிறது ? இப்பொழுது sizable quantity மாணவர்கள் இந்தியும் படிக்க வேண்டுமென்று முன் வந்தால் அவர்கள் படிப்பதற்கு வசதி செய்து தர முடியுமா ?





மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மொழித் திட்டத்தை ஏற்றுக்கொண்ட பிறகு அதுகுறித்து மத்திய சர்க்காருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுகுறித்து, நீங்கள் மும்மொழிதான் படிக்கவேண்டும், இருமொழிதான் படிக்கவேண்டுமென்று சொல்லவில்லை. ஏனென்றால் கல்வி மாநில சம்பந்தப்பட்டது என்பதாலே அது குறித்து ஏதும் சொல்லவில்லை. மற்றொரு வினா திரு. விநாயகம் கேட்பது, குறிப்பிடுகிற அளவு மாணவர்கள் இந்தி பேச வேண்டும், இந்தி படிக்க வேண்டுமென்று விரும்பினால், என்ன செய்வீர்கள் என்பதாகும். இந்தி படிக்கத்தான் வேண்டுமென்று சொல்லும் மாணவர்கள் தொகை அதிகமாக வளர்ந்தால் காங்கிரஸ் அரசு வரும். அவர்கள் அதற்கேற்ற வேலைகளைச் செய்வார்கள். (குறுக்கீடு) முன்பு காங்கிரஸ் அரசாண்ட போதும் 15, 20 வருஷ காலம் இருந்திருக்கிறேன். மறுபடியும் இருப்பதால் கூச்சப்படப் போவதில்லை, தவறு இல்லை.

Thiru K. S. KOTHANDARAMIAH : With regard to linguistic minorities, our Hon. Chief Minister was kind enough to give the assurance that he would implement the decisions of the Zonal Council. May I request the Hon. Chief Minister to state whether he will issue an official clarification at an early date so that the doubts and suspicions in the minds of the linguistic minorities may be removed?

The Hon. Thiru C. N. ANNADURAI : I will consider all aspects of the problem which I have explained in this House and this Government will scrupulously follow the Zonal Council's resolution.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகரவர்களே, ஏற்கெனவே நான் உங்களிடத்திலே சொல்லிவிட்டேன். இரண்டு கேள்விகளுக்கு இவ்வளவு நேரம் ஆகிவிட்டது என்றால் வெளியிலே இருப்பவர்கள் என்ன நினைப்பார்கள் ? கேள்வி நேரம் முடியும் வரையில் எல்லோருக்கும் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டியதுதான். ஒவ்வொரு கேள்விக்கும் ஐந்து, பத்து நிமிஷங்களுக்கு மேல் இருக்கக்கூடாது என்னும்படியான நிலையில் முடிவெடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று நிதி ஒதுக்கு மசோதாவைத் தவிர வேறு அலுவல் எதும் இல்லை. அதற்கு அதிக நேரம் பிடிக்கும்போல் இருக்கிறதா ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஒற்றிவைப்புத் தீர்மானங்கள், உரிமைப்பிரச்சினைகள் நிறைய இருக்கின்றன. இன்னும் ஒருநாள் அசெம்பிளி இருக்கிறது. நீங்கள் எந்தத் தீர்ப்பு கொடுப்பதானாலும் ஆட்சேபனை இல்லை. ஆனால் கேள்வி நேரத்திலேயே நேரத்தைப் போக்கிவிட்டால் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் வராமலே போவதற்குச் சந்தர்ப்பமாகிவிடுமோ என்று சந்தேகப்படுகிறேன்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், சட்டசபைக் கூட்டம் முடிவுறும் தறுவாயில் இருக்கிறது. அதனால் கேள்வி நேரத்திற்கு அதிகமாக நேரத்தை ஒதுக்க வேண்டுமென்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். அதை வரவேற்று அவருக்கு நன்றி தெரிவித்து அதைப் பயன்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அவ்வாறு கூடாது என்று சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. எப்பொழுதும் சட்டசபைக் கூட்டங்கள் முடிய இரண்டு நாள், ஒரு நாள் இருக்கும் பொழுது 2 மணி நேரம் கேள்விகளுக்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. எனவே இதைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டுமே தவிர, கூடாது என்பது அவ்வளவு உசிதமாக இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகரவர்களே, 3 மணி நேரம் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். அதைப்பற்றி ஒன்றும் இல்லை. ஆனால் 2 கேள்விகளுக்கு 1 மணி என்றால் பாக்கி கேள்விகளுக்கு எவ்வளவு நேரம் ஆகும்? நீங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் நடத்திச் செல்லுங்கள். அதை வேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் எங்களுக்கும் பொறுப்பு உண்டு. 2 கேள்விகளுக்கு இவ்வளவு நேரமானால், பாக்கி கேள்விகளுக்கு எவ்வளவு நேரம் என்பதற்காகத்தான் சொல்கிறேன். நீங்கள் நடத்துவதைப்பற்றி ஒன்றுமில்லை, நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 'நான் பிரதான எதிர்க்கட்சித் தலைவர். ஆகையால் எனக்கு பொறுப்பு உண்டு' என்ற வகையில் சொல்கிறார் என்று சொன்னால், மற்ற கட்சித் தலைவர்களாக இருக்கக் கூடியவர்கள் பொறுப்பில்லாதவர்கள் என்பதா பொருள்? ஆகையால் தயவு செய்து—மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களும் இங்கே இருக்கிறார்கள்—பொறுப்புள்ளவர்கள் என்பதை உணர்ந்து இப்படி பேச வேண்டாமென்று தாழ்மையோடு தங்களின் மூலமாக அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஒருவர் பொறுப்புள்ளவர், பாக்கி இருக்கிறவர்கள் பொறுப்பு இல்லாதவர்கள் என்று அல்ல. அந்த முறையில், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் எனக்குத்தான் உரிமை உண்டு என்று தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டணியில் சேர்ந்து, அவர்களுடன் சேர்ந்து ஓட்டு போட்டவர்கள் இங்கே வந்து பேசுவது எந்த அளவு நியாயம் என்று நான் கேட்கிறேன். எதிர்க்கட்சித் தலைவன் என்ற முறையில் எதற்கெடுத்தாலும் என்னைத்தான் கேட்கவேண்டியிருக்கிறது.

I am the Leader of the Opposition and no other person in this House has got the right of the Hon. Learler of the Opposition.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** தலைவர் அவர்களே, 'முதலமைச்சர் அவர்கள் அதிக நேரம் கொடுத்ததை உபயோகித்து, அதிகம் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு வாய்ப்பளித்திருக்கிறார்கள் : ஆகவே, அதற்கு நான் நன்றி



சொல்ல வேண்டும், அதைப் பிரயோஜனப் படுத்த வேண்டும்' என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லவேண்டுமென்று நான் சொன்னதற்கு முதலமைச்சருக்கு அவர் நன்றி சொல்வதற்கு பதிலாக, எதையோ புரிந்துகொண்டு இந்த நிலைமையில் மற்ற அங்கத்தினர்களுக்கும், கட்சித் தலைவர்களுக்கும், கட்சிக் கொள்கைகளுக்கும் அதன்மூலம் மக்களுக்கும் பங்கம் ஏற்படுத்துகின்ற முறையில் அவர்கள் பேசுவது உசிதமானதாக ஆகாது என்றும் அதன்மீது தாங்கள் தீர்ப்பு கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. கே. பி. எஸ். மணி அவர்கள் எழுந்தார்கள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குடியரசுக் கட்சியின் சார்பாக அவர்கள் பேசுகிறார்கள்.

திரு. கே. பி. எஸ். மணி : நன்றி, சார்.

**திரு. கே. வினாயகம் :** அது மாதிரி ஒரு கட்சி இருக்கிறதா என்று கேட்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி :** தலைவர் அவர்களே, குடியரசுக் கட்சி போல் ஒரு கட்சி இருக்கிறதா என்று கேட்கிறார்கள். காங்கிரஸ் கட்சியை விட அது பெரிய கட்சி என்று நான் சபாநாயகர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் கேள்வி கேட்கவில்லை. தங்களுடைய பாயிண்ட் ஆப் ஆர்டரை சொல்லுங்கள்.

**திரு. கே. பி. எஸ். மணி :** பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 'நான் தான் எதிர்க்கட்சித் தலைவர்' என்று சொன்னார்கள். அவர்கள் பிரதான எதிர்க்கட்சி மொழிப் பிரச்சினையிலே என்ன செய்தது? ஆகையால் மற்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் சரியானவர்கள் அல்ல, எதிர்க்கட்சித் தலைவர்கள் அல்ல என்று இழித்தும் பழித்தும் கூறுவது இந்த சபையினுடைய எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு இழுக்குத் தேடுவதாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** 1957-ல் இங்கே திராவிட முன்னேற்றக் கழகம் 15 பேரோடு இருந்த காலத்தில், அப்பொழுது திரு. வி. கே. இராமசாமி முதலியார் அவர்கள் தலைமையில் அதை விட அதிக எண்ணிக்கையுள்ளவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தார்கள். அப்பொழுது அவர் தான் எதிர்க்கட்சித் தலைவர் என்ற அதிகார உரிமையோடு இருந்தார். என்னையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக தலைவர் என்றுதான் சொல்வார்கள். ஆகையால், அவையில் 'பிரதான எதிர்க்கட்சி, எதிர்க்கட்சித் தலைவர்' என்ற மரபு அனுசரிக்கப்படுகிறது. அந்த முறையிலே தான் நம்முடைய கனம் கருத்திருமன் அவர்கள், 'நான் எதிர்க்கட்சித் தலைவர்' என்று தெரிவித்துள்ளார்கள். வேறுபல எதிர்க்கட்சித் தலைவர்கள், தலைவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஆனால் அதிகாரபூர்வமான எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில்

இன்றையதினம் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே இருக்கிற திரு. கருத்திருமன் அவர்கள்தான் இருக்கிறார்கள். அதனாலே வேறு பல கட்சியிலே உள்ளவர்கள் பங்கப்படுத்தப்பட்டார்கள், அல்லது குறைவுபடுத்தப்பட்டார்கள் என்பது நியாயமான வாதம் ஆகாது. யார் அதிக எண்ணிக்கையோடு இருக்கிறார்கள், அல்லது எந்த எதிர்க்கட்சி அதிக எண்ணிக்கையோடு உள்ளதோ அதன் தலைவரைத்தான் எதிர்க்கட்சித் தலைவர் என்று சொல்லவேண்டும். பாராளுமன்றத்தில், எதிர்க்கட்சித் தலைவர்கள் என்று சொல்லுகின்ற அளவுக்கு எண்ணிக்கை உள்ள முறையிலே அப்படிப்பட்ட பல கட்சிகள் முன்னாலே எல்லாம் இல்லாமல் இருந்தது. இப்பொழுது சில கட்சிகளுக்கு எண்ணிக்கை இருப்பதனாலே எதிர்க்கட்சித் தலைவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, பாராளுமன்ற மரபுப்படி அதிக உறுப்பினர்கள் கொண்ட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர் என்பதைப்பற்றி இங்கே கேள்வி இல்லை. அவர்களுக்குச் சந்தேகம் இருந்தால் அதைப்பற்றி அவர்கள் சொல்லிக் கொள்ளட்டும். நமக்கு சந்தேகம் இல்லை. ஆனால், எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்தால் நல்லது, கெட்டது. அதற்காகத்தான் நாங்கள் வந்திருக்கிறோம். அவர்கள் நினைப்பது தவறானது.

**ஓர் உறுப்பினர் :** இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்லவே.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** பாயிண்ட் ஆப் எக்ஸ்ப்ளனேஷன். ஸ்பீக்கர் அலவ் பண்ணி நான் பேசிக்கொண்டிருக்கிறேன். இரண்டாவதாக, நான் கூற வருவது என்னவென்றால், தங்களுக்குத் தான் பொறுப்பு இருக்கிறது, மற்றவர்களுக்குப் பொறுப்பு இல்லை என்று 'இம்பிளை' பண்ணுகிற விதத்தில் பேசி இருக்கிறார், என்பது தான். அவர்களுக்குள்ள தனி அந்தஸ்தை யாரும் கேள்வி கேட்கவில்லை. இங்குள்ள அனைவருக்கும், எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும், சுயேச்சை உறுப்பினர்களுக்கும் உரிமை உண்டு என்பதை மனதில் கொண்டால் தான் சுயேச்சைக்கு இடம் இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. வி. கே. கோதண்டராமன் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தங்களுடைய தலைவர் கூறிவிட்ட பிறகு தாங்கள் பேசவேண்டுமென்ற நிலைமை இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** எங்கள் தலைவர் அவர்கள் மிகச் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள். (குறுக்கீடு) தலைவர் அவர்கள் பேசினார்கள், இல்லையென்று நான் சொல்லவில்லையே. எனக்கும் ஒரு அபிப்பிராயத்தை சொல்ல வேண்டியதிருக்கிறது. சார், இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பு உடையவர் என்று சொன்னவுடன் மற்றவர்களுக்கு பொறுப்பில்லையா என்று கேட்டபொழுது, 'நான்தான் பிரதான எதிர்க் கட்சித் தலைவர், மற்றவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஓட்டுப் போட்டவர்கள், எதிர்க்கட்சி இல்லை' என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன். இன்றைக்கு எதிர்க்கட்சி என்று சொன்னோமேயானால் யார் உண்மையிலேயே மக்களுடைய குரலை, உண்மையான குரலைக் கிளப்புகிறார்களோ அவர்கள்தான் எதிர்க் கட்சிக்காரர்கள் ஆவார்கள்.





THIRU K. VINAYAKAM: Sir, it is a fantastic statement. Are we not elected by the people and are we reactionary forces? These things should not be allowed in the House. This should be expunged.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** * * * என்று சொல்லியிருக்கின்ற பகுதி நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும்.

(திரு. க. இராமமூர்த்தி எழுந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுடைய தலைவர் சொல்வதை நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** மற்றவர்கள் எல்லாம் கேட்கவில்லை. ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், தலைவர் அவர்களே, 'நாங்கள் பிரதான எதிர்க்கட்சி, நான் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலே எனக்குத்தான் அந்த உரிமை இருக்கிறது' என்று எங்கள் தலைவர் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் எங்களுடைய கடமையைப் பற்றி சொல்லுகின்ற நேரத்திலே மற்றவர்கள் கடமையைச் செய்யவில்லை என்று சொல்லவில்லை. எங்களுடைய பொறுப்பைப் பற்றித்தான் அவர்கள் சொன்னார்கள். அவர்களைப் பற்றி நாங்கள் சொல்ல முடியாது. எங்களைப்பற்றி நாங்கள்தான் சொல்லவேண்டும்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** பாயின்ட் ஆப் ஆர்டர். அப்படிச் சொல்வது சரியல்ல. ** என்ற அந்தப் பகுதியை எடுத்துவிட வேண்டுமென்று சொல்கின்றபொழு, 'கூட்டணியைக் கொண்டு ஓட்டுப் போட்டு வந்தவர்கள்' என்ற அந்த பகுதியையும் எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது 4, 5 பேர் கொண்டவர்கள் எல்லாம் ஒரு கட்சியா என்று கேட்கிறார்கள். அதையும் நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது அவை உரிமைப் பிரச்சினையை எழுப்புகின்றது. அங்கத்தினர்களுடைய பிரிவிலெஜை வையலேட் செய்வதாகப்படுகிறது. அவர்கள் மூன்று பேர்களைக் கொண்டாலும் இரண்டு பேர்களைக் கொண்டாலும் கட்சி தான். அந்த வார்த்தைகளை குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU J. JAMES: That is a fact.

---

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

[1968 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நான்கு, ஐந்து பேர்களை என்று சொன்னது தங்களுடைய கட்சியைக் குறிப்பிடவில்லை யென்று சொல்கிருர்கள். நானும் கருதுகிறேன். நானே சொல்கிறேன்.

(திரு. பி. ஜி. கருத்திருமன் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : உணர்ச்சி அதிகமாக இருக்கக் கூடாது. பொறுமையோடு தான் காரியங்களை நடத்திக் கொண்டு போகவேண்டும். 'பொறுமை' என்று எழுதி வைத்திருக்கிறேன். 'பொறுமை' என்று எழுதப்பட்டிருக்கிற இந்த சிட்டைக் கூட (பேரவைக்குக் காட்டி) வைத்திருக்கிறேன். ஏனென்ருல் பொறுமை வேண்டும் இன்றைக்கு. அதற்காகத்தான் எழுதி வைத்திருக்கிறேன். அடுத்த வினு . . .

(ஹாஜி ம. மு. பீர். முஹம்மது எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : கொஞ்சம் பொறுங்கள்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது** : தன்னிலை விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : தன்னிலை விளக்கம் தங்களைப் பற்றியதாகவே இருக்க வேண்டும். மற்றவர்களைப் பற்றி சொல்லக் கூடாது.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது** : பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய கட்சிகள், சிறுபான்மையினர் ஆகியோருக்கு எந்த அளவுக்கு இந்த நாட்டில் மதிப்பளிக்கப்பட வேண்டுமென்று நம்முடைய மதிப்பிற்குரிய உயர் திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள் ஒரு விளக்கம் கூறியிருக்கிருர்கள். "கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் ஆகியவை செம்மையான ஜனநாயகத்திற்கு இன்றியமையாதவை. எனவே சிறுபான்மையினர் கருத்தை மதிக்க வேண்டும். உண்மையில் ஜனநாயகத்தில் எப்பொழுதும் எதிர்க்கட்சி இருக்கும். அது எண்ணிக்கையில் வலுவில்லாததாய் இருக்கலாம். அதனுல் அதற்கு அரசியல் மதி நுட்பம் இல்லை என்ருகாது" என்று அவர்கள் கூறியிருக்கிருர்கள். ஆதலால், எண்ணிக்கையில் சிறுபான்மையினராகிய நாங்கள் வலுவில்லாதவர்களாய் இருக்கலாம். ஆனுல், அரசியல் மதி நுட்பம் எங்களிடம் அதிகம் இருக்கிறது என்பதை நினைவில் கொண்டு, எங்களுக்கு மதிப்பளிக்காத முறையில் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறக் கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நான் சொன்ன அளவில் தான் இருக்கிறது. அதைத் தான் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் பொறுப்புள்ள ஒரு தலைவர் சொன்னதை ஆதாரமாகக் காட்டியிருக்கிறீர்கள். நன்றி.

### பரப்பலாறு, பொருந்தலாறு அணைக்கட்டு திட்டங்கள்

*330 **வினு.—திரு. கரு. சீமைச்சாமி** : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் பழனித் தாலுகாவில் உள்ள பரப்பலாறு, பொருந்தலாறு அணைக்கட்டு திட்டம் எப்போது மேற்கொள்ளப் படும்?



1968 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் குறித்து, அவ்வத்துறைத் தலைவர்களுடன் கலந்து ஆராயப்பட்டு வருகின்றன. இவ்வேலைத் திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கு முன்பு திட்டக் குழுவின் தொழில் நுட்ப ஒப்புதலைப் பெற வேண்டியுள்ளது.

**திரு. கரு. சீமைச்சாமி** : தலைவர் அவர்களே, இந்த வேலைத் திட்டத்தினுடைய மதிப்பீடு என்ன? இந்த வேலைத் திட்டத்தை நிறைவேற்றினுல், எத்தனை ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற முடியும் என்பதைச் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இதன் மூலம் எதிர்பார்க்கப் படுகிற கொள் அளவு 167 கோடி கன அடியாகும், புதியதாக பாசனத்திற்கு வருவது 1,090 ஏக்கராவாகவும், ஏற்கெனவே இருக்கிற பாசனத்தை உறுதிப்படுத்துவது 1,323 ஏக்கராவாகவும் இருக்கும். இதில் ஒரு டன்னுக்கு செலவு ரூ. 3,000-க்கு மேலாகிறது. அதாவது ரூ. 5,081 என்கின்ற அளவுக்கு ஒரு டன்னுக்கு செலவு ஆகிறது. இதற்காகப் போடப்பட்டிருக்கிற மொத்த மதிப்பீடு ரூ. 35.57 இலட்சமாகும்.

**திரு. நா. காசிராமன்** : இந்தத் திட்டத்தை நிறைவேற்றினுல் எத்தனை அளவு உணவுப் பொருள்கள் நமக்கு அதிகமாகக் கிடைக்கும் என்று உத்தேசமாகக் கணக்கிடப்பட்டிருக்கிறதா என்பதைக் கூற முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : எழுநூறு டன் கூடுதல் உற்பத்தி கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

### *Motor Vehicles Taxation Sub-Inspectors, etc.*

*331 *Q.*—THIRU N. KASIRAMAN. Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that some posts of Motor Vehicles Taxation Sub-Inspectors, Head constables and constables have been abolished with effect from 31st August 1967;

(*b*) the date from which these posts were in existence; and

(*c*) the probable savings on this account?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : (அ) மோட்டார் வண்டிகள் வரி வசூல் குறித்த பணியில் நியமிக்கப்பட்டிருந்த 14 உதவி இன்ஸ்பெக்டர்களும் 20 தலைமைக் காவலர்களும் 1—9—1967 அன்று முற்பகல் முதற்கொண்டு வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

(இ) பேரவை முன் விவர அறிக்கையொன்று @ வைக்கப் பட்டுள்ளது.

(உ) தோராயமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 95,490 மிச்சமாகும்.

**திரு. நா. காசிராமன்** : 1931-ம் வருஷத்திலிருந்தே 14 ஸப்-இன்ஸ்பெக்டர்கள், 20 ஹெட் கான்ஸ்டபிள்கள் இருந்து மோட்டார் வாகனங்கள் வரி ஏய்த்தல், வேகமாக செல்லுதல், கள்ளக் கடத்தல் ஆகியவைகளைச் செக் செய்து, இந்தக் குற்றங்

@ 499-503ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது

களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இப்பொழுது வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதனால் 14 ப்ளஸ் 20, ஆக 34 பேர்கள் வேலை இழப்பதுமட்டு மல்லாமல், குற்றங்கள் சரிவரக் கண்காணிக்கப்பட முடியாத நிலைமையும் ஏற்படுவதன் காரணமாக மறுபடியும் இதை மறு பரிசீலனை செய்து, அதுமாதிரி ஒரு ஸ்குவாடை நியமிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வரி ஏய்த்தலைக் கண்டு பிடிப்பதற்கு இப்பொழுது போக்குவரத்துத் துறையிலுள்ள மோட்டார் வெஹிகிள்ஸ் இன்ஸ்பெக்டர்கள் என்ற பொறுப்பி லுள்ளவர்களே போதுமானதாகும் என்று நாம் முடிவு செய்திருக் கிறோம். வேறு பல காரியங்கள், தவறுகள் நடைபெறுகின்றன என்றால், அவைகளை ஹெட் கான்ஸ்டேபிள்களுக்கு மேலுள்ள அதிகாரத்திலுள்ள காவல் துறையினர் கண்காணித்துக்கொள்ள லாம் என்ற நிலைமையும் இருப்பதனால், வீண்செலவு என்ற அளவில் ஏறத்தாழ ரூ. 1 லட்சம் ஆகிறது என்ற நிலையில் அது நிறுத்தப்பட்டுள்ளது.

**திரு. பி. எம். முனுசாமி கவுண்டர் :** மோட்டார் வாகனங்களை செக் செய்வதற்கு செக் ரிப்போர்ட்டு, மோட்டார் வெஹிகில்ஸ் இன்ஸ்பெக்டர்களே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஸீரியல் நம்பர் என்பது கிடையாது. ஒருவர் குற்றம் செய்தவுடன் அதைச் செக் ரிபோர்ட்டில் எழுதிவிட்டு, மறுபடியும் முதலாளி களிடமிருந்து பணம் வாங்கிக்கொண்டு அதைப் பிய்த்து எரிகிற அம்மாதிரி முறையும் நடந்துகொண்டு வருகிறது. இந்தத் தவறைப் போக்குவதற்கு செக் ரிபோர்ட்டு புஸ்தகத்தை சர்க்காரே அச்சடித்துக் கொடுக்க வேண்டும். தற்பொழுது எப்படி இருக் கிறது என்றால், பஸ் முதலாளிகளிடத்தில் செக் புஸ்தகத்தை அச்சடித்துக் கொண்டுவருகிறார்கள். இப்படி நடப்பதைத் தவிர்ப்பதற்கு, லஞ்ச ஊழலைத் தவிர்ப்பதற்கு மோட்டார் வாக னங்கள் செக் ரிப்போர்ட்டு புஸ்தகத்தை ஸீரியல் நம்பர் வைத்து அரசாங்கமே சப்ளை செய்ய முடியுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது பற்றி ஆராய்ந்து உறுப்பினர் கூறுவது உண்மையானால், உரிய நடவடிக்கை எடுக்கப் படும்.

**திரு. நா. காசிராமன் :** மோட்டார் வாகனப் போக்குவரத்து அதிகம் இல்லாத 1931-ம் வருஷத்திலிருந்து இந்தப் பதவிகளுக்கு அவசியம் உணரப்பட்டு, வருஷா வருஷத்திற்கு ஏற்றபடி இந்தப் பதவிகள் நியமிக்கப்பட்டு வருகின்றன. அப்படியிருக்கும் பொழுது இந்தப் பதவிகள் ஸுபர்ஃப்ளுவஸ், ஸர்ப்ளஸ், என்று கருதுவதற்குத் தகுந்த காரணம் ஏதாவது உண்டா? மறுபடியும் இதைப்பற்றிப் புனராலோசனை செய்ய சர்க்கார் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவசியம் உணரப்பட்ட அளவுக்குப் பயன் அதிகம் இல்லை.



## பொதுப்பணித் துறை வரைவாளர்கள்

*332 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு **பொதுப்பணித் துறை** அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இம் மாநிலத்தில் தற்போது பொதுப்பணித் துறையில் ஓய்வு பெற்ற வேலை நீட்டிப்பு கொடுக்கப்பட்டிருக்கும் Draftsmen, Head Draftsmen முறையே எத்தனை பேர்கள்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சென்னை, பொதுப்பணித் துறையின் பணியிலிருந்து ஓய்வு பெற்று, நடப்பாண்டில் மீண்டும் வேலைக்கமர்த்தப்பட்ட வரைவாளர்கள், தலைமை வரைவாளர்கள் இவர்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு—

| | |
|---|---|
| வரைவாளர்—தரம் 1 . . . | 3 |
| வரைவாளர்—தரம் 2 . . . | 1 |
| தலைமை வரைவாளர் . . . | 1 |

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** சபாநாயகர் அவர்களே, இப்படி வேலை நீடிப்பு கொடுத்து ஓய்வு பெற்றவர்களை வேலையில் வைத்துக்கொண்டிருப்பதால், உத்தியோக உயர்வை எதிர் பார்க்கும் வாலிபர்களாக இருப்பவர்கள் மனம் ஒடிந்து, உத்தி யோகத்தில் சலிப்பு அடைந்திருப்பது சர்க்காருக்குத் தெரியுமா? ஆமெனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** யாருக்கும், நூற்றுக்கணக் கான பேர்களுக்கு வேலை நீடிப்புத் தரப்படவில்லை. ஒரு ஐந்து பேர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. இந்த வரைவாளர்கள் திறமை யானவர்களாக இருக்கவேண்டும் என்ற காரணத்தினால் இந்த ஐந்து பேர்களுக்கு பொறியாளர் இந்த ஆண்டில் வேலை நீடிப்பு தந்திருக்கிறார்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்தப் பொதுப்பணித் துறையில் டிராஃப்ட்ஸ்மென்னாக வேலை செய்பவர்கள் அதிகம் என்ற பெயரால் வேலையிலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது ஓய்வு பெற்றவர்களுக்கு வேலை கொடுப்பது முறையா? ஆகவே, அதற்குப் பதிலாக வேலை யிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு வேலை கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வேலையிலிருந்து யாரும் நீக்கப்படவில்லை. தகுதிபெறாதவர்கள், அன்குவாலிபைட் என்ற அளவிலே 35 பேர்கள் வேலையிலே வைத்துக்கொள்ளப்பட முடியாத சூழ்நிலை இருந்தது. ஆனால், அரசு உடனே தலையிட்டு, அந்த 35 பேர்களையும் வேலை நீக்கம் செய்யாமல் இருக்கும்படி பொறியாளருக்கு அறிவித்திருப்பதன் மூலம், அவர்கள் இப்பொழுது வேலையில் இருந்து வருகிறார்கள்.

[1968 மார்ச் 28

### படி அரிசி ஒரு ரூபாய்

*353 வினா.—திரு. கெ. இர. ஞானசம்பந்தன்:

திரு. ஏ. சிதம்பரநாத நாடார் :

திரு. ஏ. எம். இராஜா :

திரு. எஸ். இராமச்சந்திரன் :

திரு. இல. பலராமன் :

திரு. பி. வெங்கடசாமி.

திரு. வி. கே. கோதண்டராமன் :

திரு. ஆர். பொன்னப்ப நாடார் :

திரு. என். எஸ். வி. சித்தன் :

திரு. கரு. சீமைச்சாமி :

திரு. நா. காசிராமன் :

மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மாநிலம் முழுதும் தட்டுப்பாடு இல்லாமலும், ரூபாய்க்கு ஒரு படி விலையிலும் அரிசி கிடைக்கச் செய்ய அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கடந்த ஆண்டு 8.5 லட்சம் டன்கள் உணவு தானியங்கள் கொள்முதல் செய்யப்பட்டது. படியரிசித் திட்டம் பல்வேறு கட்டங்களிலும், பல்வேறு இடங்களிலும், ஏறக்குறைய 45 லட்சம் மக்களுக்குப் பயன் அளிக்கும் முறையில் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. முதல் கட்டமாக, சென்னை நகரத்தில் 30 இலட்சம் மக்களுக்கு இந்தப் படி அரிசித் திட்டம் 1967, மே மாதம் முதல் அமுல் படுத்தப்பட்டிருக்கிறது. இரண்டாவது கட்டமாக, ஜூலை, பத்தாந்தேதி முதல் சென்னை நகரத்திலும், கோயம்புத்தூர் நகரத்திலும், கல்வி நிறுவனங்கள் நடத்தும் ஆஸ்டல்கள், உயர்நிலைப்பள்ளி ஆஸ்டல்கள், அரசாங்க ஆஸ்டல்கள், அரிசன நலத்துறை மாணவர் உணவு விடுதிகள், இன்னும் அறநிலையங்கள் சார்பில் நடத்தப்படும் அனாதை இல்லங்கள், இவைகளோடுகூட சென்னை நகரம், கோவை நகரம் இவ்விடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகள், இங்கெல்லாம் படி அரிசித் திட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது கட்டமாக, சென்னைக்கு அண்மையிலுள்ள, 47 புற நகரங்களுக்கு, 6 இலட்சம் மக்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்கத்தில் இருக்கிற ஏறக்குறைய 124 இலட்சம் மக்களுக்கு, குடும்பக் கார்டு முறையின் கீழ் கொண்டு வரப்பட்டு கொடுக்கப்படுகிறது. இந்தக் காரியங்களோடு, கொள்முதல் திட்டம் தவறாக ஆகாதபடி, கடந்த ஆண்டு 8.5 இலட்சம் டன்கள் உணவு தானியம் கொள்முதல் செய்யப்பட்டு, சீராகவும் செம்மையாகவும் தட்டுப்பாடு இல்லாமல் நடந்து, அதன் விளைவாக, விலைவாசிகள் பெரும் வீழ்ச்சி அடையச்



1968 மார்ச் 28]

மாநாட்டில் 5 இலட்சம் டன்கள் கொள்முதல் செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. இன்று வரை 3.5 லட்சம் டன் வெற்றிகரமாக கொள்முதல் செய்து சீராகவும், செம்மையாகவும் காரியங்களைச் செய்து கொண்டு வருகிறோம். இவற்றின் காரணமாக விலைவாசிகள் இறங்கி அரிசி விலையில் 10 புள்ளி குறையும் அளவு இறங்குமுகமாக இருப்பதை இந்த மாமன்றமும், தமிழகமும் அறியும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** கொள்முதல் செய்யும் சமயங்களில், விவசாயிகளிடமிருந்து நிர்ணயித்த கொள்கைக்கு புறம்பாக, நெல் அளக்கும் சம்பிரதாயம் நடப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** உறுப்பினர்களுக்குத் தெரிந்திருக்கும் விவரங்களெல்லாம் சர்க்காருக்குத் தெரியும் என்று எதிர்பார்க்க முடியாது.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவர் அவர்களே, ஏற்கனவே, பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களுக்கு நோட்டுக்கள் அடித்திருந்தும், இன்றைக்கு 290 கோடி ரூபாய்க்கு புதிதாக நோட்டு அடிக்கப் போவதாக மத்திய சர்க்கார் முடிவு செய்திருப்பதால், விலைவாசி இன்னும் ஏராளமாக ஏறப்போவது தவிர்க்க முடியாத ஒன்று என்பதை உணர்ந்து அடிப்படைத் தேவையான உணவுப் பொருள்களைக் குறைந்த விலையில் கொடுக்க, இந்திய அரசு தமிழக அரசுக்கு உதவிகள் செய்து, தொகைகள் கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்று வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உதவி கேட்டும் கொடுக்கவில்லை. முதலமைச்சர் வற்புறுத்தினார்கள். ஆனால், இன்று வரை அது விழலுக்கு இறைத்த நீராகத்தான் இருக்கிறது.

**திரு. எஸ். இராமசந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த ரூபாய்க்கு ஒரு படியரிசி என்ற திட்டத்தின் மூலம், அத்தியாவசியமான உணவுப் பொருள்களின் விலைகள் குறைந்திருக்கின்றன. பண வீக்கக் கொள்கையின் விஷச் சக்கரத்தை நிறுத்தப் பயன் பட்டது அது. என் பகுதியில் கடாம்புலியூர் என்கிற இடத்தில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகையினால், இந்திய சர்க்காரிடமிருந்து உணவுப் பொருள்களுக்கு, இந்தப் பண வீக்கத்தைத் தடுப்பதற்காக, எல்லா இடங்களிலும் இந்த திட்டத்தை அமுலாக்க, அவர்களிடமிருந்து கொள்கை ரீதியில், உதவித் தொகை பெற முயற்சிக்கப்படுமா என்று அறியலாமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இது போன்ற கேள்விக்கு முன்னால் அமைச்சர் பதில் சொன்னார்கள். பொதுவாகவே, பணவீக்கம் தடுக்கப்பட வேண்டும், குறைக்கப்பட வேண்டும் என்று மத்திய சர்க்காரும் கவலையாக இருக்கிறது. அவர்களையும் மீறி பண வீக்கம் ஏற்பட்டுக் கொண்டு வருவதையும் பொருளாதார நிபுணர்கள் வலியுறுத்திக்கொண்டு வருகிறார்கள்.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, தற்போது, அரசாங்கத்தின் உத்தரவுப்படி 10 படி அரிசி எங்கும் கொண்டு போகலாம் என்று இருந்தும்கூட, வடார்க்காடு மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் 10 படி அரிசியைக்கூட அரசாங்க அதிகாரிகள் பறிமுதல் செய்யக்கூடிய நிலைகள் இருக்கின்றன. அதைத் தடுத்து அரசாங்கம் உத்தரவு போடுமா? பாதிக்கப்பட்ட மக்கள் முறையிடுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படிப்பட்ட தவறான, தாறுமாறான தகவல் தெரியாது. அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU B. VENKATASWAMY : Sir, will the Government come forward to give rupee-a-measure rice first to rural areas where there is no purchasing power and also is it a fact that the raw rice consumers are not getting the rupee-a-measure rice at Madras and Coimbatore and if so, may I know the reasons for that?

THE HON. THIRU C. N. ANNADURAI : I have once before explained the rationale behind the rupee-a-measure scheme in this House. It is not the intention of the Government to carry it over throughout the State because I have already stated in this House that there are vulnerable areas where the purchasing power is very high and areas where due to the purchasing power, food-grains may migrate. All these have been taken into consideration when certain zones were created as coming under informal rationing or formal rationing. The extension of the rupee-a-measure rice scheme will be within this framework.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சார், கன்யாகுமரி ஜில்லாவிலே, அது கம்மிப்பகுதியாக இருந்து, வாழ்க்கைப் புள்ளிகள் அதிகமாக இருக்கிறது என்கிற காரணத்தால், ரூபாய்க்கு ஒரு படியரிசித் திட்டத்தை அந்தப் பகுதிக்கு விஸ்தரிக்கப்படவும், அதோடு பார்டர் ஏரியாக்களை சீல் செய்வதற்கும் அரசாங்கம் என்ன நடவடிக்கை மேற்கொள்ளும் என்று அறியலாமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கன்யாகுமரி மாவட்டத்தில், இப்பொழுதே எல்லா இடங்களிலும் முழுக்க முழுக்க குடும்பக் கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. விளவங்கோடு தாலுகாப் பகுதியில், சோதனைச் சாவடிகள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்னும் கடல் மூலமாக படகுகள் கூட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு படகு இருக்கிறது என்றால் ஒன்பது படகுகள் போய்விடும். அங்கே மிகுந்த கவனம் செலுத்தப் பட்டு வருகிறது. விளவங்கோடு பகுதியில் சற்று அதிகமாகவே அளவு கொடுக்கப்படுகிறது என்பதை உறுப்பினர் அறிவார்கள். ஆனால் அங்கே ஒரு வீடு கேரளத்திலும், ஒரு வீடு தமிழ் நாட்டிலும், ஒரே வீதியில் இருக்கும் நிலைமைகள் இருப்பதால், எப்பொழுதும் விலை அதிகமாகவே இருக்கிறது. ரூ. 6, ரூ. 7 ஒரு படிக்கு என்று கூட இருக்கிறது. அங்கும் சாத்தியமான நடவடிக்கைகளில் சர்க்கார் கவனம் செலுத்தி வருகிறது.





**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் படியரிசித் திட்டம் தேர்தல் முன்னாலும், பின்னாலும் அமைச்சர்களால் பேசப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் மக்கள் எல்லா இடங்களிலும் இது பற்றி ஆவலாக இருக்கிறார்கள். ஆகவே, திட்டவட்டமாக எந்தத் தேதியிலிருந்து எந்தெந்த பகுதிகளுக்கு இந்தத் திட்டம் அமுலுக்கு வரும் என்று தெரிவிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அது தேர்தலுக்கு முன்னால் சொல்லியிருந்தாலும், இப்பொழுது தெளிவாக்கப்பட்டிருந்தாலும், சிறிது நேரத்திற்கு முன் நான் குறிப்பிட்டது போல, அந்த 'ஃப்ரேம் ஒர்க்-ன்' இடையே, எல்லை கட்டப்பட்டிருக்கிறது. விஸ்தரிக்க, திட்டவட்டமாக இன்னின்ன தேதியில், இன்னின்ன இடத்தில் போடப்படும் என்று சொல்வதற்கேற்ற முறையில் கொள்முதல், பண வசதி, என்னென்ன அவசியமோ அவைபற்றிய நிலை திட்டவட்டமாகச் சொல்வதற்கு இல்லாததால், அப்படி வசதிகள் கிடைத்தவுடன், தயங்காமல் விஸ்தரிக்கப்படும்.

**திரு. நா. காசிராமன் :** சார், இந்தப் படியரிசித் திட்டம் சென்னை, கோவை போன்ற இண்டஸ்ட்ரியல் நகரங்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எப்படி இண்டஸ்ட்ரியல் பொருள்கள் அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கன்செஷன் விலையில் கொடுக்கப்படுகிறதோ, அதேபோல, விவசாயப் பொருள்களை, நிலமற்ற விவசாயிகளுக்கும், இந்தத் திட்டம் பயன்படும் அளவில் விஸ்தரிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அரசாங்கத்திற்கு அந்த உத்தேசம் இல்லை.

DR. H. V. HANDE : Sir, arising out of the answer given by the Hon. Chief Minister that the Ministry is not in a position to say the exact date when they would extend the rupee-a-measure rice scheme, I want to point out that the Ministry must be definitely having some sort of vague or rough idea as to the extra expenditure that is likely to be incurred in the current year if the scheme is to be extended throughout the State? Will the Hon. Chief Minister give details about it?

THE HON. THIRU C. N. ANNADURAI : This has already been mentioned in the Budget but that does not depend on finances alone and it depends upon increased production and our ability in procurement. Therefore, we have got no definite date-line. The hon. Member himself asked me to give vague information about it but I do not think that before this august House vague information could be given.

**திரு. கே. போஜன் :** தலைவரவர்களே, குடும்பக் கார்டு கொடுத்திருக்கிறவர்களுக்கு மட்டும் படியரிசித் திட்டத்தை விஸ்தரிப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் பதிலில் கூறினார்கள். நீலகிரி மாவட்டத்தில் சுமார் 50 லட்சம் ஜனங்களுக்குக் குடும்பக் கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. நீலகிரி மாவட்டம் நெல் விளையாத மாவட்டமாக இருக்கிற காரணத்தால், படியரிசித் திட்டம் விஸ்தரிக்கும்போது, நீலகிரி மாவட்டத்திற்கு முதலிடம் கொடுக்கப்படுமா?

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :* இருக்கிற மாவட்டங்கள் எல்லாவற்றையும் விட நீலகிரி மாவட்டத்தையும், கன்னியாகுமரி மாவட்டத்தையும் பற்றித்தான் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. முன்னாலிருந்த அரசாங்கத்தைவிட இப்போது 200 கிராம் அதிக அளவில் உணவு தானியம் அந்த மாவட்ட மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது. எந்த வரம்புக்குள் படியரிசித் திட்டத்தை அமல்படுத்துவது என்பதைக் குறித்து முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் அறிவித்திருக்கிறார்கள்.

*திரு. ஆலடி அருணா :* தலைவரவர்களே, தமிழக அரசின் படி அரிசித் திட்டத்தின் காரணமாக உணவுப் பொருள்களின் விலை வீழ்ச்சியுற்றிருக்கிறது. ஆனால், குறிப்பிட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அரசியல் பகைமையின் காரணமாக பட்டினி கேட்டு பானையைத் தொங்கவிடுகிறார்கள். இவர்கள் எல்லாம் ஒரு காலத்தில் 'எலிக்கறியைச் சாப்பிடுங்கள்' என்று பொதுமக்களுக்கு உபதேசம் செய்தவர்கள். ஆகவே, இவர்கள் தொங்க விட்டிருக்கும் பானைகளில் எல்லாம் எலிகளை நிரப்ப அரசு முன் வருமா?

(திரு. கே. விநாயகம் எழுந்தார்.)

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* நான் இந்த வினாவை 31 (5) விதியின்படி அனுமதிக்க முடியாது.

THIRU K. VINAYAKAM : I am questioning the very question of the hon. Member. Did any responsible Minister from the Congress Party say it? Please expunge the entire question from the proceedings.

MR. SPEAKER : There is no need for expunging, I am disallowing the question. Under Rule 31 (5) ironical questions are not permitted.

THIRU K. VINAYAKAM : Sir, apart from the logic or rationale behind the able argument of the Chief Minister in refusing to extend this rupee-a-measure rice scheme to the entire State, did not the Chief Minister or his colleagues, before they came to power, give the assurance that he or they will give this rupee-a-measure rice only to areas in which the Congress Ministry introduced statutory rationing and did they modify the statement by saying that unless the Central Government helps, unless the situation improves, unless there is increase in food production they will not be able to give it? Is it not a discrimination economically between man and man who voted for the party in power?

THE HON. THIRU C. N. ANNADURAI : I have great confidence in the intelligence of the public to draw proper conclusions when a statement is made by any party. When I said that this one rupee-a-measure scheme would be implemented, the people know that this scheme is a corollary of the rationing system, that it is based on the rationale of the rationing scheme itself.





*திரு. ரா. ராமச்சந்திர துரை :* தலைவரவர்களே, மாநிலம் பூராவும் படியரிசித் திட்டத்தை அமல் நடத்தாவிட்டாலும், கனம் முதலமைச்சர் அவர்கள் கூறியபடி இத்திட்டத்தை நிறைவேற்றுகிற நேரத்தில், கொள்முதல் விலை நிர்ணயம் செய்வதில் மாற்றம் இருக்குமா? அப்படியானால் எந்நிலையில்?

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :* கொள்முதல் விலையைப்பற்றி இந்த அவையிலே அடிக்கடி பேசப்பட்டு வருகின்றது. கனம் உறுப்பினர் கேட்டதாலே ஒரு தகவலைத் தர விரும்புகிறேன். கொள்முதல் விலை என்பது, எல்லா மாநிலங்களும் மத்திய அரசுடன் கூடி, அதற்கு முன்னால் பிரச்சினை குறித்து நிபுணர்களின் அபிப்பிராயங்களைக் கலந்து, நிர்ணயிக்கப்படுகிறது. அதற்கேற்ற முறையில்தான் கொள்முதல் விலை கொடுத்துக் கொண்டு வருகிறோம். அதில் மாற்றம் இருக்குமா என்று கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இரண்டும் இருக்கலாம்—அதிகமாகவும் இருக்கலாம், குறைச்சலாகவும் இருக்கலாம்—பொதுவான அபிப்பிராயம், கொள்முதல் விலை அதிகமாக்கப்பட வேண்டுமென்பது. இது அடிக்கடி எதிர்க்கட்சிகளால் வலியுறுத்தப்படுகின்றது. அது சம்பந்தமான பிரச்சினையைக் குறித்து இப்போது எனக்குக் கிடைத்த ஒரு தகவலைச் சொல்ல விரும்புகிறேன்.

The Union Food Minister Mr. Jagjivan Ram said in Bangalore on March 24 that there would be no upward revision of procurement prices and control on the movement of foodgrains would stay. There was no intention of increasing the procurement price when prices were sharply falling, he told a meeting of Congress workers here. They told him that in many places the support price was very nearly the procurement price. Jagjivan Ram said that the procurement price fixed by the Government was on the high side.

*திரு. பி. ஜி. கருத்திருமன் :* பேரவைத் தலைவரவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் கூறியதை எடுத்துச் சொன்னார்கள். அதே திரு. ஜகஜீவன்ராம் அவர்களே, இன்னொரு மாநிலத்திலே அதிகமான விலை வைத்திருப்பதை ஏற்றுக்கொண்டார்கள் என்பது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா? விலையைக் குறைக்க, விவசாயிகளுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காக அவர் சொல்லியிருப்பார் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :* மத்திய உணவு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் மார்ச் 24-ம் தேதி, பெங்களூரில் காங்கிரஸ் ஊழியர் கூட்டத்திலே சொன்னதைத் தான் எடுத்துக் காட்டினேன். வேறு ஒரு ஊரிலே, வேறு மாதிரிப் பேசினார் என்று சொல்வது பொருத்தமல்ல. பொதுப்படையாகவும், அவர்கள் தொடர்ந்தும் பல இடங்களில் அதேவிதமான கருத்தைத்தான் சொல்லி வந்திருக்கிறார்கள்.

THIRU K. VINAYAKAM : While I do not deny the satisfaction which our Chief Minister dervies by quoting from what the Union Minister for Food belonging to my Party said, did not

the same Minister say that this one rupee-a-measure scheme is a fantastic idea which, if continued, will land this Government in a financial mess?

THE HON. THIRU C. N. ANNADURAI: I am thankful to the Union Minister for asking me to be cautious. I am cautious and I am introducing it on a phased programme.

**திரு. என். துரைபாண்டியன்**. தலைவரவர்களே, படியரிசித் திட்டத்தைப் பட்டணங்களில் மட்டும் விஸ்தரித்து, கிராமப்புறங்களைப்பற்றி அக்கறை கொள்ளாத நிலை இருந்துவருகிறது. அதே சமயத்தில் கடந்த அரசாங்கம் திருநெல்வேலி மாவட்டத்தில் எல்லா கிராமங்களுக்கும் ரேஷன் கொடுத்து வந்தது. ஆனால், தற்போது பல கிராமங்களுக்கு உள்ள ரேஷன் அளவுகூடக் கொடுக்கப்படவில்லை. கிராமங்களில் நெல், புல் விளைவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**. நெல், புல் விளைவதில்லையா? என்று வினா வடிவத்தில் கேளுங்கள்.

**திரு. என். துரைபாண்டியன்**. அந்தக் கிராமங்களுக்காகிலும், சாதாரண ரேஷனாகிலும் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை**. உணவு உற்பத்தி நிலை திருப்திகரமானதும், கொள்முதல் எதிர்பார்த்தது தாராளமாகக் கிடைக்க ஆரம்பித்ததும், கனம் உறுப்பினர் சொன்ன யோசனை கவனிக்கப்படும்.

**திரு. எஸ். முருகையன்**. தலைவரவர்களே, மத்திய உணவு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள், முன்னால் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் பிறந்தநாள் விழாவிலே கலந்து கொண்டபோது, தமிழக அரசின் படியரிசித் திட்டத்தைப் பாராட்டி, 'மற்ற மாநிலங்களுக்கும் இத்திட்டத்தை அமல்படுத்த ஆலோசனை கூறுவேன்' என்று சொன்னது இந்த அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை**: படியரிசித் திட்டம் என்பது ஏழை, எளியவர்களுக்கு, வலிவற்றவர்களுக்கு என்ற பொதுத் தத்துவத்தை, மத்திய அமைச்சர் மட்டுமல்ல, யாருமே மறுக்க மாட்டார்கள். மத்திய உணவு அமைச்சர் அவர்கள், இத்திட்டம் பொருளாதார நெருக்கடியிலே கொண்டு விட்டுவிடுமோ என்ற கவலையும் தெரிவித்திருக்கிறார்கள். நான் மத்திய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற கவலையையும், எச்சரிக்கையையும் கவனத்தில் கொண்டிருக்கிறேன். இந்த மாநிலத்தின் நிலைமைக்கேற்றபடி எப்படி எப்படிச் செய்ய வேண்டுமென்பதைப்பற்றி யோசித்து பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்வேன் என்பதை மத்திய உணவு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வ. ஜார்ஜ்**: தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் படியரிசித் திட்டத்தை எல்லா இடங்களுக்கும் விஸ்தரிப்பது என்பதை ஒத்துக் கொள்ளவில்லையென்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். குமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், வாரத்திற்கு 1,800 கிராம் உணவுப் பொருள்கள் என்று கணக்கிட்டி



ருக்கிறார்கள். இது சுமார் 6 அவுன்ஸ் இருக்கும். ஆனால் உண்மையில் கொடுக்கப்படுவது 3 அவுன்ஸ்தான் இருக்கும். இப்படிப்பட்ட நிலைமையிருப்பதால் பொதுமக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அப்படித் தரும்போது எடை குறைவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? 6 அவுன்ஸ் தானியமாவது ஒழுங்காகக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை**: தலைவரவர்களே, இப்படிப்பட்ட குறைபாடுகள் இருப்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, தகுதியான சான்று கொடுக்கப்பட்டால் திருத்தி அமைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்**: படியரிசித் திட்டம் வரவேற்கத் தக்கது என்றாலும், எல்லா இடங்களுக்கும் அதை விஸ்தரிக்க முடியாமல் இருப்பதை உணர்ந்து கோவை மாவட்டத்தில் மிகவும் பஞ்சப் பிரதேசமாக இருக்கிற காங்கேயம், பல்லடம், பெருந்துறை போன்ற நெசவாளர்கள் வாழ்கின்ற பகுதிகளிலாவது குடும்பக் கார்டு முறையில் விநியோகிக்க—பஞ்ச நிலைமை மாறி, விளைச்சல் ஏற்படுகிற வரையிலாவது தற்காலிகமாகக் கொடுக்க—அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை**: ஏதாவது இடம் பஞ்சப் பிரதேசமாக இருக்கிறது என்று மாவட்ட கலெக்டர்களின் ஆய்வுக்குப் பிறகு அறிவிக்கப்பட்டால் இதுபோன்ற நடவடிக்கைகள் மட்டும் அல்ல, வேறுபல நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**திரு. க. இராமமூர்த்தி**: படியரிசித் திட்டத்தின் கொள்கையே ஏழை எளியவர்களுக்கு உதவுவது என்று தெரிவித்தார்கள். ஆனால் நடைமுறையில் இரட்டை வருவாய், அதிகச் சம்பளம் பெறக்கூடியவர்கள் வாழ்கின்ற சென்னை, கோவை போன்ற நகரங்களில் தான் அமல்நடத்தப்படுகிறது. இதை ரத்து செய்து குறைந்த வருவாய் உள்ள கிராமப் பகுதிகளுக்கு இதை ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை**: ஏற்கனவே ஒரு முறை இந்த அவையில் நான் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த அந்தக் கட்சியின் கொள்கை அடிப்படையில் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. கனம் உறுப்பினர் குறிப்பிட்டது அவருடைய கட்சியின் கொள்கையாக இருக்கலாம். ஆனால் இந்தத் திட்டம் நாங்கள் மேற்கொண்டிருக்கிற கொள்கை அடிப்படையில் வகுக்கப்பட்டிருக்கிறது.

(திரு. ஆலடி. அருணா பேரவைத் தலைவரின் இருக்கைக்கு வந்தார்.)

THIRU K. VINAYAKAM: Sir, yesterday our able Deputy Speaker gave a ruling that it is not in order for an hon. Member to run from his seat to the Chair, scratch him and then pull him instead of catching the eye of the Chair. After saying to the Chair that his name should be called, he goes back to his seat.

Then the Chair calls him and he puts the question. On this point I raised a point of order and the Chair ruled that it is not proper for the hon. Member to run to the seat of the Chair. If that is allowed, there will be a rush to the seat of the Chair and everybody would be round you and a learner person like my hon. Friend, Thiru Ramamurthy will run faster than myself to go to your seat. What happened yesterday has also happened to-day and there must be some kind of order. Please give your ruling.

Mr. SPEAKER : It is not in order to come to the seat of the Chair. Hon. Members should only try to catch the eye of the Speaker.

**திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, அரசாங்கம் கௌரவத்தைப் பாராமல் படி அரிசி திட்டத்தைக் கைவிடவேண்டு மென்று பெருமதிப்பிற்குறிய காங்கிரஸ் தலைவர் காமராஜர் குறிப் பிட்டிருக்கிறார்கள். ஆனால் அவருடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் படி அரிசித் திட்டத்தை எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கவேண்டும் என்கிறார்கள். அவர்களுடைய கட்சித் தலைவரின் கருத்தையே அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, புத்தி சொல்ல அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. எஸ். அண்ணாதுரை :** காங்கிரஸ் தலைவர் எனக்குச் சங்கடம் வரக்கூடாது என்பதற்காக அந்த யோசனை யைத் தெரிவித்தார்கள். இவர்கள் எனக்குச் சங்கடம் வரவேண்டும் என்பதற்காக இந்த யோசனையைச் சொல்லுகிறார்கள். இந்த இரண்டு யோசனைகளையுமே நான் எந்த அளவு கவனிக்க வேண்டுமோ அந்த அளவு கவனிக்கிறேன்.

## வீரிய ஒட்டுக் கம்பு சாகுபடி

* 354 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினா விற்கு விடையளிப்பாரா—

எச். பி. 1 ரகம் வீரிய ஒட்டுக் கம்பு விவசாயத்தைத் தீவிரப் படுத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** வீரிய ஒட்டுக் கம்பு சாகுபடி ஒவ்வொரு பருவத்திலும் அதிகப் படுத்த, தக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** வீரிய ஒட்டுக் கம்பு, வீரிய ஒட்டுச் சோளம் என்பவை மிகுந்த பலனைக் கொடுக்கின்ற போதி லும், தரமான விதை கிடைப்பதில்லை, விதை கிடைத்தாலும் பூச்சி மருந்துகள் கிடைப்பதில்லை, தேவையான உரங்கள் கிடைப்ப தில்லை. இவைகளைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** கனம் உறுப்பினர் குறிப் பிட்டதுபோல வீரிய ஒட்டுக் கம்பு, வீரிய ஒட்டுச் சோளம் நல்ல பலன் அளிக்கிறது என்ற காரணத்தினால்தான் அதிகப்படியான



திலங்களில் சாகுபடிக்குக் கொண்டுவர முயற்சிக்கிறோம். இவற்றுக் குத் தான் காலத்தில் உரம், பூச்சி மருந்து எல்லாம் கொடுக்கப் படவேண்டும் என்று உத்தரவு இருக்கிறது. எந்தப் பகுதியில் கிடைக்கவில்லை என்பதை குறிப்பாக எடுத்துச் சொன்னார்கள் என்றால் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** இப்போது கொடுக்கப்பட்டு வருகிற வீரிய ஒட்டுக் கம்பு விதையானது தனியார் கம்பெனிகளில் தயாரிக்கப்பட்டு கொடுக்கப்படுவதால் பலவிடங்களில் கெட்டுப் போய் முளைக்காமல் போகிறது. மேலும் ஒரு கிலோ 10 ரூபாய் என்ற அடிப்படையில் ஒரு கோட்டை ஆயிரம் ரூபாயாகிவிடுகிறது. ஆகவே இந்த விதையை சர்க்கார் பண்ணையிலே தயார் செய்து மலிவான விலையில் கொடுத்து உதவ அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** ஆரம்பத்தில் விவசாய இலாக்கா மூலமாகவே உற்பத்திசெய்து கொடுக்கப்பட்டது. அதன்பிறகு அமோக விளைச்சலில் நல்ல அனுபவம் பெற்ற தனிப் பட்ட விவசாயிகள் மூலமாக உற்பத்தி செய்யப்பட்டு கொடுக்கப் படுகிறது. அதுவும் உற்பத்தியான விதையை அவர்கள் நேரிடை யாக விற்காமல் விவசாய விதைக் கார்ப்பரேஷனிடத்தில் க்வாலிடி சர்டிபிகேட் பெற்றே விற்கவேண்டும் என்ற கட்டளை இருக்கிறது. சர்டிபிகேட் வாங்கப்படாத விதையை வாங்கி, அது முளைக்காமல் போயிற்றோ என்னவோ. அதோடு ஒரு ஏக்கராவுக்கு 1½ கிலோ விதைதான் தேவை. அதற்கு 15 ரூபாய்தான் ஆகும். அதில் இருந்து கிடைக்கிற பலனோடு ஒப்பிடப்பார்க்கும்போது இதை அதிகமான விலை என்று விவசாயிகள் சொல்லவில்லை.

**திரு. நா. சௌந்தரபாண்டியன்:** கடந்த ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் வீரிய ஒட்டு விதை நல்ல முறையில் சாகுபடி செய்யப்பட்டு நல்ல வேளாண்மை கண்டிருக்கிறது. இந்த ஆண்டும் அதுபோலவே அங்கே சாகுபடிக்கு விதைகள் கொடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** இந்த மாநிலத்தில் வீரிய ஒட்டுக் கம்பு சாகுபடியில் திருநெல்வேலி மாவட்டம் நான்காவது இடத்தைச் சிறப்பாகப் பெற்றிருக்கிறது. இந்த ஆண்டு கூட 15 ஆயிரம் ஏக்கராவில் கம்பு உற்பத்தி செய்யவேண்டும் என்பதற்கான நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, இந்த வீரிய ஒட்டுக் கம்பு அதிகம் பரவாமல் இருப்பதற்குக் காரணமே லிட்டர் 1 ரூபாய் சாதாரண கம்பு என்றால் இது லிட்டர் 9 ரூபாயாக இருக் கிறது. ஆகவே விலையைக் குறைத்துக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** இது தரமான விதையாக இருக்கிற காரணத்தினால் விலை சற்றுக் கூடுதலாக இருக்கிறது. நான் முன்பே குறிப்பிட்டதுபோல ஒரு ஏக்கராவுக்கு 15 ரூபாய் தான் செலவாகும். அதனால் உற்பத்தியாகக்கூடிய அளவோடு பார்க்கிறபோது இது அதிகம் என்று விவசாயிகள் சொல்லவில்லை.

**திரு. எம். சண்முகம் :** வீரிய ஒட்டுக் கம்பானது 1967-68-ஆம் ஆண்டில் எவ்வளவு ஏக்கராக்களில் சாகுபடி செய்யப்பட்டது? 1968-69-இல் எவ்வளவு ஏக்கராக்களில் சாகுபடி செய்ய இருக்கிறது?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** 1967-68-ல் 43,800 ஏக்கராக்களில் சாகுபடி செய்யப்பட்டது. 1968-69-ல் மேலும் ஒரு 50,000 ஏக்கராவுக்கு விஸ்தரித்து மொத்தம் 93,000 ஏக்கராக்களில் சாகுபடி செய்ய திட்டம் தீட்டப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** தலைவர் அவர்களே, இந்த வீரிய விதைத் தானியங்களிலே குறிப்பாக கம்பு அநேகமாக ஒழுங்காக இருப்பதில்லை. நேஷனல் சீட் கார்ப்பரேஷன் மூலமாக சர்டிபிகேட் கொடுக்க ஏற்பாடு செய்தாலும்கூட பல முறைகளிலே நேர்மை யில்லாமல் இருப்பதாலே அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? பெரும்பாலும் இதிலே தவறு நடக்கிறது, அதனால் இதை விவசாயம் செய்யக்கூடிய குடியானவர்கள் ஏமாந்துவிட்டார்கள் என்பதை நான் என் அனுபவத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ .கோவிந்தசாமி :** திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் அனுபவமுள்ள விவசாயி என்பதை உணர்கிறேன். அவர்கள் அரசாங்கம் எதைச் சொன்னாலும் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருக்கிறவர்ளே. தேசிய விதைக் கார்ப்பரேஷன் தான் குவாலிடி சர்டிபிகேட் கொடுக்க தகுதியுள்ள ஸ்தாபனமாக இருக்கிறது. அந்த ஸ்தாபனத்தையே சந்தேகக் கண்ணோடு பார்க்கிறபோது அதைப்பற்றிப் பரிசீலனை செய்யலாம். திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் தரமான விதைகளை எப்படி உற்பத்தி செய்யலாம் என்பதற்கு ஆலோசனை சொல்லவேண்டும். அரசாங்கம் எதைச் சொன்னாலும் அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளாத காரணத்தாலே அவர்கள் இதையும் எதிர்த்து வருகிறார்கள்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** அரசாங்கம் சொல்கிற எதையும் ஏற்றுக்கொள்வதில்லை நான் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வீரிய விதை உற்பத்தி செய்கின்ற முறையைப்பற்றி என் அனுபவத்தின் மூலமாக மறுமுறையும் சொல்ல விரும்புகிறேன். அந்த ஸ்தாபனத்தின் மூலம் ஒழுங்காகச் செய்யப்படவில்லை, ஆகவே, அவர்களை ஒழுங்காக செய்யச் சொல்வதற்கு, செய்யவேண்டாமென்று சொல்லவில்லை, அவர்களைக் கண்காணிக்க வேண்டும் என்ற முறையில் தான் சொன்னேன், நான் குறை சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தன்னைப்பற்றிய விளக்கம்தான் அவர்கள் சொன்னார்கள், அரசாங்கம் சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னார்கள்.



**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போலவே வீரிய கம்பு உற்பத்தியாளர்கள் தரமான விதை உற்பத்தி செய்வதற்கு திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் யோசனை கூறுவதாய் இருந்தாலும் அதைப் பரிசீலனை செய்து தேசிய விதை கார்ப்பரேஷன் மூலம் அது சரியாக செய்யப் படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

**திரு. க. ர. நல்லசிவன் :** வீரிய சோளம், கம்பு இவை அதிகமான ருசியும் மணமும் சத்தும் உடையவையாக இருக்கின்றன. ஆனால் மார்க்கெட்டிலே போதுமான அளவுக்கு எடுபடுவதில்லை. அதனாலே உற்பத்தி வேகமாகப் பெருகவில்லை. ஆகவே, இவற்றையெல்லாம் விசேஷமாக விளம்பரம் செய்யக்கூடிய முறையில் விசேஷ நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் உறுப்பினர் கூறுவது உண்மைதான். விலை அதிகமாக இருக்கிற காரணத்தால் ஒரு கிலோவுக்கு 10 ரூபாய்க்கு விற்கக்கூடிய நிலைமை இருப்பதால் வாங்குவதற்குத் தயங்குகிறார்கள். சில பேர்கள் வாங்கியும் விவசாயம் செய்கிறார்கள். அதன் காரணமாகத்தான் 43 ஆயிரம் ஏக்கர் உற்பத்தி செய்யப்பட்டது, இப்பொழுது 93 ஆயிரம் ஏக்கராக உயர்ந்திருக்கிறது. விவசாயக் கருத்தரங்குகளிலும், கால்நடைக் கருத்தரங்குகளிலும் இவைபற்றிச் சொல்வதற்கும், விவசாயிகள் நேரடியாக இவைபற்றித் தெரிந்துகொள்வதற்கும், விளம்பரங்கள் செய்துவருகிறோம். ருசியான கம்பாக இருப்பதால் விவசாயிகள் இதை விரும்பிச் சாப்பிடுகிற முறையில் உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இது உப பொருளாகவும் இருக்கிறது.

### சந்தைக்குழு ஊழியர்களுக்கு இலவச மருத்துவ உதவி

*355 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மார்க்கெட்டிங் கமிட்டி சிப்பந்திகளுக்கு இலவச மருத்துவ உதவி கொடுக்கப்படுகிறதா?

(இ) இல்லை என்றால் காரணம்?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) இல்லை.

(இ) சந்தைக் குழு ஊழியர்களின் ஊழிய நிபந்தனைகளை முறைப்படுத்துகிற விதிகளில் இச்சலுகைக்குரிய விதித்துறை எதுவும் இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஊதியமும் குறைவு. மற்ற சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கொடுப்பதைவிட அவர்களுக்கு ஊதியம் குறைவாகக் கொடுக்கப் படுகிறது. அப்படி இருக்கும்பொழுது இந்த சலுகைகூட இல்லாத அளவுக்கு இருக்குமானால் அவர்கள் எவ்வளவு பெரிய அளவுக்கு பாதிக்கப்படுகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இனிமேலாவது என். ஜி ஓ-க்கள் எப்படிப்

பார்க்கப்படுகிறார்களோ அதைப்போல சம்பள உயர்வு, மருத்துவ உதவி இவையெல்லாம் அவர்களுக்குக் கிடைக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** கனம் உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை என்பதை நான் ஆட்சேபிக்கவில்லை, அதற்குவேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிற அடிப்படையில் 1—5—1966-ல், 3—5—1966-ல் தஞ்சாவூரில் மார்க்கெட் கமிட்டித் தலைவர்களும், உபதலைவர்களும், செயலாளர்களும் மாநாடு கூடி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஒவ்வொரு ஊழியருக்கும் ஆண்டு ஒன்றுக்கு 75 ரூபாய் மேற்கொண்டு வழங்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி விவசாயத்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பினார்கள். அதைப் பரிசீலனை செய்து அவர்கள் சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். சர்க்கார் அதைப் பரிவோடு கவனித்துக்கொண்டிருக்கிறது. அது இல்லை என்பது அர்த்தம் இல்லை. அவர்களுடைய பிரச்சனை கவனத்தில் இருந்து வருகிறது. விரைவிலே அதைப்பற்றிய முடிவு எடுக்கப்படும்.

## தொழிலாளர் கல்வித் திட்டம்

*356 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் உள்ள நூற்பு ஆலைகளில் 'தொழிலாளர் கல்வித் திட்டம்' எத்தனை ஆலைகளில் அமுல் நடத்தப் பட்டுள்ளது ?

(இ) மதுரையில் உள்ள சில ஆலைகளில் நடத்தப்பட்டு வந்த இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) தமிழகத்தில் 98 நூற்பு ஆலைகளில் தொழிலாளர் கல்வித்திட்டம் அமுல் நடத்தப் பட்டுள்ளது.

(இ) நூற்புத் தொழிலில் உள்ள பொருளாதார மந்த நிலையின் காரணமாக ஆலை நிர்வாகிகள் தொழிலாளர் கல்வித் திட்டத்திற்கு தற்பொழுது போதுமான ஊக்கம் அளிப்பதற்கு வசதியில்லாதிருப்பதால் மதுரையில் சில ஆலைகளில் இத்திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர் கல்வித் திட்டம் மிகப் பயன் அளிக்கக்கூடிய திட்டம். இனிமேலாவது அந்த முறையிலே தொடர்ந்து கல்வி யளிப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இது மத்திய அரசு அமைத்த திட்டம். மாநில அரசின் ஒத்துழைப்போடு முத்தரப்பினரும் ஈடுபட்டு நடத்தி வருகிறார்கள். கட்டாயப் படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு யோசனை இல்லை.





**திரு. ஜே. ஜேம்ஸ்:** தொழிலாளர் கல்வித் திட்டம் மூலமாக அங்கங்கே சில தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு மீண்டும், மீண்டும் அங்கங்கே வகுப்புகள் நடத்தி எல்லாத் தொழிலாளர்களுமே இந்தத் திட்டத்தின் பயனைப் பெறக்கூடிய வகையில் அரசாங்கம் திட்டம் வகுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்பொழுது அந்தத் திட்டம் இல்லை.

**திரு. மா. பா. சாரதி:** தலைவர் அவர்களே, நமது சர்க்கார் நடத்தும் எல்லா கூட்டுறவு நூற்பாலைகளிலும் இந்தக் கல்வித் திட்டத்தை விஸ்தரிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எங்கெங்கே முடியுமோ அங்கெல்லாம் விஸ்தரிக்கப்படுகிறது.

## திருச்சி நகரத்திற்கு சாக்கடை அமைப்புத் திட்டம்

*357 வினா.—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரத்தில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

(இ) அதற்காக அரசாங்கம் கடனாகவோ, மான்யமாகவோ எவ்வளவு கொடுக்க உத்தேசித்துள்ளது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) & (இ): திருச்சிராப்பள்ளி வடிகால் திட்டத்திற்கு புலனாய்வு வேலைகள் முடிந்துவிட்டன. இந்தத் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரால் இப்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றன. மதிப்பீடுகளுக்கு அரசு ஒப்புதல் அளித்த பிறகு இந்தத் திட்டம் நிதி நிலைமையைப் பொறுத்து வேலை துவங்கப்படும்.

திட்டத்திற்குப் பண உதவி கொடுப்பதுபற்றி ஒப்புதல் அளிக்கும் சமயம் கவனிக்கப்படும்.

**திரு. வை. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, நெடுங்காலப் பிரச்சனையாக இருந்துவருகிற இந்தப் பாதாள சாக்கடைத் திட்டத்தை அரசாங்கம் முழு முயற்சி செய்து விரைவிலே நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதுபற்றிப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

**திரு. நா. காசிராமன்:** சார், திருச்சிக்கு உண்டான இந்தப் பாதாள சாக்கடைத் திட்டத்தை அமல்செய்யும்பொழுது அந்தச் சாக்கடையிலிருந்து வரும் கழிவு நீரைக்கொண்டு புல், கறிகாய்கள் உற்பத்தி செய்வதற்கான திட்டத்தையும் இந்தத் திட்டத்தோடு கையோடு சேர்த்துப் போடுவதன் மூலம் இந்தச் சாக்கடை

திட்டத்திற்காக ஆகின்ற வருஷாந்திர செலவுகளில் ஒரு பகுதியை அது சரிக்கட்டக் கூடிய வாய்ப்பு இருக்கும். ஆகவே அதையும் சேர்த்து எடுத்துக் கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கனம் அங்கத்தினர் அவர்களுடைய யோசனையைப் பரிசிலனைசெய்யலாம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** திருச்சி பாதாள சாக்கடைத் திட்டத்தைப்பற்றிய கேள்வியாக இருந்தாலும் இம்மாதிரி வேறு மாவட்டங்களின் தலைநகரங்களில் எந்த எந்த இடங்களிலே இப்படிப்பட்ட திட்டம் இருக்கிறது? இருந்தால் சொல்லுங்கள். இல்லை யென்றால் வேண்டாம்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வதுபற்றி இப்பொழுது விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

## *Electricity Loan Bonds*

* 358 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any Government order to the Panchayat Union Commissioners to collect loans to 5-1/2 per cent Electricity Loan Bonds and Small Savings Certificates from the ryots who are getting improvement loans from the Blocks?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இல்லை.

THIRU B. VENKATASWAMY: From the answer given by the Hon. Minister I come to know that there is no such Government order. But the District Collectors insist on the collection at the time of granting the loan and the Panchayat Union Commissioners mercilessly demand two hundred or three hundred rupees from those who apply for the loan and they reject the applications if they refuse to give the amount. Will the Government issue strict orders not to harass the poor ryots?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அப்படி விவசாயிகளை கட்டாயப் படுத்தக்கூடாது என்ற உத்திரவு ஏற்கனவே இருக்கிறதென்றாலும். எங்கேயாவது அப்படிப்பட்ட சிக்கல் இருப்பதாகக் குறிப்பிட்டுக் காட்டினால் அதுபற்றி விசாரிக்கப்படும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** எலக்ட்ரிசிட்டி லோன்ஸ், ஸ்மால் சேவிங்க்ஸ் இவற்றிற்காக பஞ்சாயத்து நிதியிலிருந்து வசூல் செய்ய ஒவ்வொரு ப்ளாக் கமிஷனர் வருகிறார்கள். ப்ரசிடென்ட்டிடம் கேட்டு டெப்பாசிட்டில் எவ்வளவு இருக்கிறதோ அதில் 80 சத வீதம் ஒதுக்கவேண்டுமென்று கையெழுத்து வாங்கிப் போகிறார்கள். கமிஷனர் நேரில் வந்து கேட்கும்போது பஞ்சாயத்து தலைவர்கள் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விடுகிறார்கள். ட்ரெஷரியில் பஞ்சாயத்து நிதி இருக்கிறது. ஒரு ஹெட்டிலிருந்து இன்னொரு ஹெட்டுக்குக் கொண்டு போகக் கூடாது என்று ஒரு ஜி.ஓ. இருக்கிறது. அதற்கு முரணாக, தங்கள்



குறிக்கோள் நிறைவேறவேண்டுமென்று கமிஷனர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அதை நிறுத்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா? பஞ்சாயத்து சேவிங்ஸில் 90 சத வீதம் இப்படி போடப்பட்டு விடுவதால் அபிவிருத்தி வேலைகள் எல்லாம் நடத்த முடியவில்லை. ஆகவே, இந்த முறையை நிறுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அப்படிப்பட்ட நிலையிருக்குமானால் அதுபற்றி ஆராயப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, with regard to these loans, the teachers are sometimes coerced to make their contributions. So, will the Hon. Minister for Local Administration see that these things do not take place?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அரசாங்கம் வெளியிட்டிருக்கக்கூடிய கடன்களை வசூலிக்க அவரவர்கள் முயற்சி எடுக்கிறார்கள். யாராவது கட்டாயப்படுத்தி அந்தக் காரியங்களைச் செய்கிறார்கள் என்ற குறையிருந்தால் குறிப்பிட்டு எழுதியனுப்பினால் அது பற்றி விசாரிக்கப்படும்.

**திரு. நா. காசிராமன்:** இந்த மாதிரி எலக்ட்ரிசிட்டி பாண்ட்ஸ் போன்ற ஸ்டேட் லோன்ஸ் வசூலிக்கிறபோது பொருளாதாரத்தில் நலிவுற்றிருக்கும் நகரசபைகளிடமிருந்து வசூல் செய்யாமல் இருக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இந்தியாவின் பொருளாதாரமே நலிவுற்றுத்தானிருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** அரசாங்கக் கடன்களை வசூலிக்கிற நேரத்தில் அக்காமடேஷன் என்ற முறையில் குறிப்பிட்ட வட்டி விகிதத்தை மட்டும் கடன் கொடுப்பவர்கள் கொடுத்தால் போதும், அதற்கான வட்டி விகிதத்தை மட்டும் கொடுத்துவிட்டால் மற்ற இடங்களில் இருந்து வேறுவிதமாக அட்ஜஸ்ட் செய்து கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். அதனால் லேவாதேவி செய்கிறவர்கள், அல்லது பாங்குகள் இத்துறையில் அதிகப்படியான வட்டி விகிதம் பெறுகிற அளவில் இன்றையதினம் பல இடங்களில் வசூல் செய்யப்படுகிறது. வசதியுள்ளவர்கள் 100 ரூபாய் கடன் என்றால் 100 ரூபாய் கடன் கொடுக்கும் முறையை வைத்துக்கொண்டு, இப்படி அக்காமடேட் செய்கிறோம் என்று வைத்துக் கொண்டு 100 ரூபாய்க்கு ஐந்து ரூபாய் என்று வாங்கிக் கொண்டு அது கடனாகவும் இல்லாமல் தானமாகக் கொடுக்கும் நிலை இருக்கிறது. அதைப் பரிசீலித்து அந்த முறையை நிறுத்த அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அதுபற்றி அரசுக்குத் தகவல் இல்லை.

THIRU K. VINAYAKAM: Sir, whereas I am convinced that there is no definite Government order directing the Commissioner of the Panchayat Unions to assist in the collection of these loans,

is the Hon. Minister aware of the fact that almost all the Commissioners and the employees of the panchayat unions were put on the job for this purpose? The Hon. Minister has asked us to give a list of such cases. If there is one or two it is possible to give it but it is not so. Almost all of them have done it.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** கடன் வசூலிப்பதில் அவர்கள் ஈடுபடவில்லை என்று மறுக்கவில்லை. ஆனால் கட்டாயப்படுத்தி, தொல்லைப்படுத்தி வசூலிக்கவில்லை என்றுதான் விடை கூறினேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** இந்த வசூல்களில் டார்கெட் ஃபிக்ஸ் செய்வதால் இந்த விளைவு வருகிறது. அதை முற்றிலும் நிறுத்துவதற்கு வழிவகை செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** திட்டமிட்டுத்தானே இவ்வளவு கடன் என்று வசூலிக்கவேண்டும்.

**திரு. இல. பலராமன்:** பஞ்சாயத்து யூனியன்களில் இருந்து ஆணையர்கள் மூலமாக சிறுசேமிப்பு போன்றவற்றிற்கு வசூல் செய்யும்போது ஆசிரியர்கள் ப்ராவிடன்ட் பண்டிலிருந்து லோன் எடுத்து சிறுசேமிப்பு போன்றவற்றிற்கு வழங்குவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆணையர்கள் தூண்டி இப்படி வசூலிப்பது முறையா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஆசிரியர்கள் விரும்பினால் அவர்கள் பீ.எஃப். நிதியிலிருந்து இப்படி மாற்றிச் செய்வதில் தவறு ஒன்றுமில்லை.

**திரு. பி. எம். முனுசாமி கவுண்டர்:** இந்த 5½ சத வீதம்லோன், அல்லது ஸ்மால் சேவிங்ஸ் என்று எந்த லோன் வந்தாலும் கமிஷனருக்குத்தான் முதல் உத்தரவு வருகிறது. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, அப்படி சர்க்காரிலிருந்து எந்தவித உத்தரவும் போடுவதில்லை என்று சொல்கிறார்கள். அது உண்மையாக இருக்கலாம். அந்த அந்த மாவட்ட கலெக்டர்களுக்கு உத்தரவு போட்டு, அவர்கள் கூட்டம் கூட்டி, கமிஷனர்களை அழைத்து, அவர்களிடம் அதை ஒப்படைத்து, உடனடியாக வசூல் செய்ய வேண்டுமென்று டார்கெட் பிக்ஸ் செய்து விடுகிறார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒவ்வொரு ஜீப் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஜீப் வசூலிப்பதற்காகத்தான் பயன்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? ஆகவே, அந்த ஜீப்பின், செலவு எந்த இனத்தில் போகிறது.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அரசாங்கம் வசூலிக்கிற இது போன்ற கடன்கள் அத்தனையும் சமுதாய நலத் திட்டங்கள் போன்று நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்தப்படுகிற காரியமாகும். அதை வசூலிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளும்போது அவர்கள் கீழ் உள்ள ஆணையர்கள் மட்டுமல்ல, பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களும் அதற்காகப் பாடுபடுகிறார்கள். அந்த முறையில் ஜீப் உபயோகப்படுத்தப்படும் என்றால், அது அரசாங்கத்தின் நன்மைக்காகத்தான் பயன்படுத்தப்படுகிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டேகால் மணிநேரம் ஆகியிருக்கிறது. முதல் அமைச்சர் அவர்களிடம் கேட்கவேண்டிய வினாக்கள் நான்கு இருக்கின்றன, முக்கியமான வினாக்கள். இறுதித் துணை வினாவை திரு. துரைபாண்டியன் அவர்கள் கேட்பார்கள்.

**திரு. என். துரைபாண்டியன்:** எலக்ட்ரிசிட்டி லோன்ஸ், ஸ்மால் சேவிங்க்ஸ் போன்றவை எல்லாம் ஏழை விவசாயிகளிடமிருந்துதான் வாங்கப்படுகின்றன. கிணற்றுக்கு லோன் வேண்டுமென்று அப்ளிகேஷன் கொடுத்திருப்பவர்கள், பம்ப் செட்டுக்கு லோன் வேண்டுமென்று அப்ளிகேஷன் கொடுத்திருப்பவர்கள், இவர்களை அணுகித்தான் கமிஷனர், அதிகாரிகள் போன்றவர்கள் கடன் வாங்குகிறார்களென்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படித் தெரியவந்தால் இனிமேலாவது விவசாயிகளிடமிருந்து லோன் கேளாமல் இருக்க உத்தரவிட அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** யாரும் கட்டாயப்படுத்தி வசூலிக்கக்கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் அறிக்கையாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, தள்ளி வைக்கப்பட்ட வினாக்கள். வினா 346.

## *Government Stenographers*

* 346 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government in regard to the revision of scales of pay of State Government Stenographers to be on a par with the Central Government Stenographers; and

(*b*) whether the Stenographers of State Government have any chances of promotion in the Departments?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:**

(அ) இல்லை.

(இ) தமிழ் நாட்டுத் தலைமைச்செயலகப் பணியில் (Madras Secretariat Service) உதவியாளர்கள் பிரிவில் ஏற்படும் ஒவ்வொரு ஏழு காலி இடங்களில் கடைசிக் காலியிடம், சுருக்கெழுத்தர்கள், தமிழ்த் தட்டெழுத்தர்கள் உட்படத் தட்டெழுத்தர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பதன்மூலம் நிரப்பப்படல் வேண்டும். தமிழ் நாட்டு நிலைப்பணியில் (Madras Ministerial Service) சுருக்கெழுத்தர்கள் உட்படத் தட்டெழுத்தர்கள்—உதவியாளர்களாக நியமிக்கப்படுவதற்கு வேண்டிய முழுத் தகுதியுடையவர்களாக இருப்பின் அவர்கள் உதவியாளர்களாகப் பதவி உயர்வு பெற முடியும். ஆனால் அதற்கு விழுக்காடு எதுவும் குறிப்பிடப்படவில்லை.

THIRU K. VINAYAKAM: Sir, the work of the Stenographers being a highly technical and efficient one and whereas there are no opportunities open to them to come up in their service, is the Hon. Chief Minister aware that so far none have been promoted

to a better post? Also, is he aware of the fact that the Stenographers employed in the Central Government offices in the City of Madras are drawing more salary when compared to the Stenographers employed in our State Government offices in the City of Madras?

THE HON. THIRU C. N. ANNADURAI: I may tell my hon. Friend that the ratio has not been fixed.

THIRU K. VINAYAKAM: Will the Hon. Chief Minister be pleased to state how many Stenographers went up to a higher cadre?

THE HON. THIRU C. N. ANNADURAI: I do not have the exact figure.

*திரு. நா. வீராசாமி:* தலைவரவர்களே, இருபதாண்டு காலமாக இந்த நாட்டை ஆண்டவர்கள் இரண்டு முறை சம்பள விகிதங்களை அரசாங்க ஊழியர்களுக்கு மாற்றியிருக்கிறார்கள். ஏழு முறை அகவிலைப்படி அலவன்ஸ் மாற்றியிருக்கிறார்கள். ஆனால் இந்த சுருக்கெழுத்தாளர்கள் 210 ரூபாய் அடிப்படைச் சம்பளம் வாங்குவில்லை, எதையும் மாற்றவில்லை. நிலைமை எப்படியிருக்கிறது என்றால், மத்திய சர்க்காரில் ஹையர் கிரேடு தேர்ச்சிபெற்ற சுருக்கெழுத்தாளர்களின் அடிப்படைச் சம்பளத்தையும் மாற்றகிறார்கள். ஆனால் மாநில அரசாங்கத்தில் வேலைசெய்யும் சுருக்கெழுத்தாளர்கள் 90 ரூபாய் வாங்குகிறார்கள். கார்ப்பொரேஷனில் கூட அடிப்படை சம்பளமாக 100 ரூபாய் இருக்கிறது. குறைந்த பட்சம் அந்தக் கார்ப்பொரேஷனில் கொடுக்கப்படக் கூடிய சம்பளமாவது அரசாங்க ஸ்டெனோகிராஃபர்களுக்குக் கொடுக்கப்படுமா?

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:* தலைவரவர்களே, தமிழ்நாடு செக்ரெடேரியட் அசோஸியேஷன் மூலமாக கனம் உறுப்பினரவர்கள் சொல்லும் கருத்தும், வேண்டுகோளும் பெறப்பட்டிருக்கிறது. அது இப்பொழுது சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது.

*திரு. நா. வீராசாமி:* தலைவரவர்களே, இந்தப் பதவிகள் விவகாரத்தில் 'கிளார்க்குகள்' ஆகப் பணியாற்றுபவர்களில் மூன்று பேருக்கு பதவி உயர்வு கொடுத்தால் நான்காவதாக ஸ்டெனோகிராஃபர்களுக்குக் கொடுக்கிறார்கள், ஒருசில அலுவலகங்களில். இன்னும் சில அலுவலகங்களில் ஐந்து எழுத்தர்களுக்குக் கொடுத்தவுடனே ஆறாவதாக ஸ்டெனோகிராஃபர்களுக்குக் கொடுக்கிறார்கள். இன்னும் சிலவற்றில், "நீ கிளார்க்காக இரண்டு ஆண்டுகள் பணி புரிந்தால்தான் 'அசிஸ்டெண்ட்' பதவி கொடுக்க முடியும்" என்று சொல்லும் நிலையில் இருக்கிறது. அதை மாற்றி எல்லோருக்கும் ஒரே விதமான முறையில் பதவி உயர்வு கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:* இதைப்பற்றியும் சர்க்காரிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். அதாவது,



The typists, steno-typists and Tamil typists have requested that they should be promoted in the ratio of 1:4, that is out of every five vacancies in the category of Assistants one should be filled up by promotion from among them. This request also is under consideration.

*திரு. வி. கே. கோதண்டராமன்:* சார், முந்தியிருந்ததைவிட இப்பொழுது சுருக்கெழுத்தாளர்களை அதிகப்படுத்தியுள்ளதா? ஒரு சில கட்சிகளுக்குச் சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பப்படுவதும், ஒரு சில கட்சிக் கூட்டங்களுக்கு அனுப்பாமலும் இருக்கும் நிலை இருக்கிறது. அவ்வாறு ஒரு சில கட்சிக் கூட்டங்களுக்கு அனுப்பாமலிருப்பதால் பேசாத பேச்சுக்களைப் பேசியதாகப்போட்டு தவறான எண்ணத்தை உண்டாக்கக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பது முதலமைச்சரவர்களுக்குத் தெரியுமா? ஆகவே எல்லாக் கட்சிகளுலிக்கும் சுருக்கெழுத்தாளர்களை அனுப்ப ஏற்பாடு செய்யுமா?

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:* கூட்டங்களுக்குப் போய் குறிப்பெடுக்கிற சுருக்கெழுத்தாளர்களைப் பற்றிய கேள்வி அல்ல இது. இது ஸ்டெனோகிராஃபர்களைப் பற்றிய கேள்வி.

*Denaturants*

* 347 Q.—THIRU N. KASIRAMAN:
THIRU V. K. KOTHANDARAMAN:
Will the Hon. Chief Minister be pleased to state—

(a) whether the Government have permitted Messrs. E.I.D. Parry Limited, Madras under Madras Denatured Spirit Methyl Alcohol and Varnish (French Polish) Rules, the use of 1.5 litres of light caoutchoucine to the exclusion of pyridine bases for every 98.5 litres of spirit;

(b) the effect of human consumption of Alcohol mixed with Pyridine and Alcohol mixed with Caoutchoucine; and

(c) whether Pyridine mixed Alcohol is dangerous or Alcohol mixed caoutchoucine is dangerous?

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:* இது குறித்துப் பல முறைகள் விளக்கம் தரப்பட்டிருக்கிறது. இப்பொழுதும் இதற்குப் பதில் தருகிறேன்.

(அ) ஆம்.

(இ) சாதாரண இயல்பு மாற்றிகள், நீர்த்த காவுட்ஷின், பைரிடின் காரங்கள் ஆகியவை மனிதருக்குத் தீங்கு விளைப்பதில்லை. ஆனால் அவை சாராயத்திற்கு ஒரு வித அருவருப்பான நாற்றத்தை மட்டும் அளிக்கின்றன. எனவே, ஓரளவு காவுட்ஷின் கலந்த சாராயத்தை உட்கொள்வதால் மனிதருக்கு எவ்வித ஊறும் விளையாது.

(உ) இவை இரண்டும் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கக் கூடியவை அல்ல.

**திரு. நா. காசிராமன்:** சார், உப கேள்வி கேட்பதற்கு முன்னதாக ஒரு சிறிய விஷயத்தைச் சொல்லிவிட்டுக் கேட்கிறேன். ‘பிரிடின் பேஸ்’ என்பது ஒரு பெட்ரோலியம் ப்ராடெக்ட். கடோசின் என்பது இந்தியா ரப்பரின் ஒரு டிஸ்டிலேட்டட் ப்ராடக்ட் ‘பிரிடின் பேஸ்’ என்ற விஷமானது இரத்த அழுத்தத்தைக் குறைக்கும். இந்த விஷமானது எலுமிச்சம் பழத்திலுள்ள ‘சிட்ரிக் ஆஸிட்டி’னால் முறிபடக்கூடும். இவ்வாறு எலுமிச்சம்பழம் பிழிந்து சாப்பிட்டவர்கள் முன்பெல்லாம் பாதிக்கப்படாமல் இருந்தார்கள் என்பதையும், அவ்வாறு கடோசின் முறிபடாமல் இருந்து அதனால் கெடுதல் ஏற்படுகிறது என்பதையும், அரசினரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** கனம் உறுப்பினரவர்கள் சொன்ன தகவல்கள், இரண்டு பொருள்களின் தன்மை பற்றிய விளக்கங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், இந்த இரண்டிலுமே கெடுதல் உண்டாக்கக்கூடிய தன்மை இல்லை என்று கனம் முதல் அமைச்சரவர்கள் கூறினார்கள். அப்படியென்றால் சமீபத்திலே மிகப் பெரிய அளவுக்கு, குடித்துவிட்டு பல பேர் இறக்கக்கூடிய நிலை ஏற்பட்டதே அதற்கு அடிப்படைக் காரணம் என்ன? மீண்டும் புனராலோசனை செய்து இது இதனால் கெடுதல் ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இப்பொழுது நாம் இவைகளை வாங்கிக் குடித்தவர்களைப்பற்றிப் பேசவில்லை. இதிலே உள்ள பொருள்கள் எப்படிப்பட்ட தன்மையுடையது என்று கேட்கப்பட்டதற்கு விளக்கம் தரப்பட்டது. இதைக் குடித்துச் சிலபேர் இறந்திருக்கிறார்களே, அது எதனாலே என்று உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். அதில் ஆராய்ந்து ‘மெதிசின்’ என்ற மற்றொரு பொருள் கலக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள்.

**திரு. கே. விநாயகம்:** இருபதாண்டு காலமாக இவ்விதமாக இதைத்தான் சேர்த்துச் செய்யவேண்டுமென்ற முறையில் வழக்கமாகச் செய்துகூட இருபதாண்டு காலமாக ‘ஸ்பிரிட்’ குடித்து ஒருவரும் சாகவில்லை என்று சொல்லப்படுகிறதே. ஆனால் அண்ணா ஆட்சி வந்தபிறகு 600 பேர் இதைச் சாப்பிட்டுச் செத்தார்கள், இதற்குப் பிரத்தியேகக் காரணம் ஏதாவது இருக்கிறதா? அரசியல் காரணங்கள் ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அரசியல் காரணங்கள் எதுவுமில்லை. ஆனால் அன்போடு அண்ணா ஆட்சியிலே இப்படி ஏற்பட்டு விட்டதே என்று கூறியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய ஆட்சியில் இப்படி ஏற்படக் கூடாது என்று அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.





**திரு. முனு. ஆதி:** தலைவரவர்களே, இந்த உத்தரவு எந்த அரசாங்கத்தால் போடப்பட்டது? எதனால் விஷம் சேர்க்கப் பட்டது என்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிடுவது தெரியுமா? அப்படிக் கூறினால் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அதைப்பற்றி ஏற்கெனவே இந்த அவையிலே விளக்கப்பட்டிருக்கிறது. வழக்கத்திலுள்ள உத்தரவு படிப்படியாக முறைப்படி போடப்பட்டதே தவிர இது நாங்கள் வந்த பிறகு புதிதாகக் கொண்டு போய்ப் போடப்படவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகரவர்களே, 200 பேர் இறந்தது வாஸ்தவம். இதைக் கேட்க எனக்கு உரிமை உண்டு. எதிர்க்கட்சி மீது குற்றச்சாட்டு சாட்டுவதை ஏற்றுக் கொள்கிறார்களா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** எதிர்க்கட்சி பேரிலே குற்றம் சாட்டவேண்டுமென்று கருதினால் நானே சாட்டுவேன்.

**திரு. நா. காசிராமன்:** சார், இந்த ஸ்பிரிட்டிற்கு இயற்கையை மாற்றுவதிலே தவறு இல்லை. அதற்கு உத்தரவு கொடுக்க வேண்டியதுதான். ஆனால் இதிலுள்ள விஷம் பற்றி அறிவிக்கப் பட்டிருக்க வேண்டும். உதாரணமாக 2, 3 வருஷங்களுக்கு முன்னால் விருதுநகரில் எண்ணெய் வியாபாரம் செய்தவர்கள் ரப்பர் கொட்டை எண்ணெய் கலந்து விற்றார்கள். அதைச் சாப்பிட்டவர்கள் கண்கெட்டு, உடல் நலம் கெட்டார்கள் என்று பேப்பரிலே வந்திருந்தது. இதே இயல்பு மாற்றியை சாராயத்திலே கலந்ததாலே கெடுதல் ஏற்பட்டது. இதை ஜனங்களுக்குத் தெரிவித்து இம்மாதிரி சாராயத்தை அருந்தக்கூடாது என்று பிரச்சாரம் செய்து நல்வழிப்படுத்த ஆவன முயற்சிகள் எடுத்துக் கொள்ள அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இது விஷயமாக அதிகமான விவாதம் வேண்டாமென்று கூறுவதற்குக் காரணமே இப்படியிப்படிச் செய்தால் கெடுதல் என்று சொல்வதன் மூலம், சரி ஆபத்தில்லை, முறைப்படி முறைகளைக் கையாளலாம் என்று ஆர்வம் கொள்வார்கள் என்பதால்தான். தக்க பிரசாரத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கூறியதை நான் வரவேற்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** சார், அரிஷ்டம் தயார் செய்ய அனுமதி வழங்கப்படுகிறது. விற்பனை செய்யவும் அனுமதி கொடுத்திருக்கிறோம். அதை வாங்கிச் சாப்பிடுபவர்கள் எங்கு போய் வாங்கிச் சாப்பிடுகிறார்களோ அங்கு போலீஸ்காரர்கள் காவல் இருந்து பிடித்துக்கொண்டு வழக்குகள் வந்து ஜெயிலுக்குப் போக வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. அவைகளை மாற்ற அரசாங்கம், அரிஷ்டத்திற்கு லைசென்ஸ் கேன்ஸல் செய்யவோ, அல்லது அரிஷ்டம் அருந்தியிருந்தால் தாங்கள் அரிஷ்டம் அருந்தியிருக்கிறோம் என்று சொல்லும்படியான நிலையில் அவர்களை விட்டுவிடச் சொல்லும்படியான உத்தரவோ பிறப்பிக்க முன் வருவார்களா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** இப்படிப்பட்ட அரிஷ்டத்தைப்பற்றிய பிரச்சினையல்ல இது. அதுபற்றி விவரமாக அறிவிக்க வேண்டுமென்ருல் தனிக்கேள்வி போடலாம். இப்பொழுது இருக்கும் நிலையில் அரிஷ்டத்தைத் தடுக்கவோ, குறைப்பதற்கோ அல்லது அதனுல் கெடுதல் ஏற்படாமல் பார்ப்பதற்கோ சட்டம் எந்த அளவுக்கு இடம் கொடுக்கிறது என்று அரசு ஆராய்கிறது.

* 348 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have recently prohibited the sale of denatured spirit even to registered medical practitioners; and

(*b*) if so, when the ban on the sale of spirit will be lifted?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** (அ) இயல்பு மாற்றப்பட்ட சாராயம், வார்னிஷ் இவைகளின் விற்பனை முழுமையாக தடை செய்யப்பட்டதனுலும் வார்னிஷ், சாராய வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த கடைகள் மூடி முத்திரையிடப்பட்டதாலும் மருத்துவர்களுக்கும் இச் சாராயம் கிடைக்கவில்லை.

(இ) இந்த வகைச் சாராய விற்பனை மீது விதிக்கப்பட்டிருந்த தடை 1967-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 5-ந் தேதி முதல் நீக்கப்பட்டுவிட்டது.

**திரு. கே. விஞயகம் :** சார், சமீபத்தில் ஏற்பட்ட இந்த விபத்தின் காரணமாக, இந்த ஸ்பிரிட் எல்லாம் அவர்கள் குடித்து, இறந்ததால், ஸ்பிரிட் எந்தவிதமான வியாபாரத்திற்கும் பயன்படுத்தக்கூடாது என்று பொதுவாக ஒரு விதி போட்டதனுல் மருத்துவர்களுக்கு—இன்ஜெக்ஷன் போட ஸ்பிரிட் அத்தியாவசியமாக இருக்கிறது—ஸ்பிரிட் கிடைக்காமல் இருந்தது. அந்த ட்யூரேஷனில் பல நோயாளிகள் இன்ஜெக்ஷன் போட்டுக் கொள்ள முடியாமல், எத்தனையோ பேர் இறந்து போனதாகச் சொல்லப்படுகிறதே, அந்த இறந்துபோனவர்களின் எண்ணிக்கை முதலமைச்சரவர்களுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** 'இறந்து போனதாகச் சொல்லப்படுகிறது' என்று கனம் உறுப்பினரவர்கள் சொன்னுர்கள். அவர்களுக்கேகூட யாரோ சொல்லியிருக்கிருர்கள். அவர்களை விசாரித்தால் எண்ணிக்கையைச் சொல்லுவார்கள். ஆனுல் இதில் ஒரு பரபரப்பு ஏற்பட்டபோது, அதைத் தடுப்பதற்கு இந்த முறை கையாளப்பட்டது. அதிலே ஏற்படக் கூடிய சிக்கல்கள் அறிவிக்கப்பட்டதும் அந்தத் தடை நீக்கப்பட்டது.

DR. H. V. HANDE : Sir, I am also a Registered Medical Practitioner using spirit for giving injections. Does the Hon. Chief Minister know that that difficulty was there for only a few days and that crisis was over? Now-a-days we are getting spirit for giving injections without any difficulty. Even if there is no spirit available, we can use tincture or iodine or even dettol. There are so many other alternatives.





(No reply).

THIRU K. VINAYAKAM : Is the Hon. Chief Minister aware of the fact that by not using spirit but using another substance called tincture or iodine has the hon. Member who himself is a medical practitioner got liberty to kill patients in such a way?

DR. H. V. HANDE : Sir, on a point of personal explanation. This is a very damaging statement on all the doctors who are using iodine when they do not get spirit. As the main consideration for the doctors is to protect patients, I would request the hon. Member not to make a damaging statement on our entire tribe of doctors.

**திரு. நா. காசிராமன் :** இயல்பு மாற்றப்பட்ட ஸ்பிரிட்களைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் முன்பு சொன்னபோது "இயல்பு மாற்றப்பட்ட சரக்கு வெளிநாட்டில் இருந்து வந்தது" என்று சொன்னுர்கள். மற்ருெரு பொருள் கிடைக்காததன் காரணமாக கடோசின் உபயோகப்படுத்தப்பட்டது. இயல்பு மாற்றப்பட்ட ஸ்பிரிட்களை விற்கும்போதோ அல்லது ஸ்பிரிட்டினுல் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்கும்போதோ கண்ணுக்கு நன்ருகப் புலப்படும் வண்ணம் 'ஸ்கல் அண்ட் போன்' படத்தைப் போட்டு, 'இது விஷம், அருந்திஞல் மரணம் சம்பவிக்கும்' என்ற குறிப்பை எழுதித்தான் விற்கவேண்டும் என்று விற்பனை செய்பவர்களுக்கு அறிவிக்கப்படுமா? அவ்வாறு செய்ய விற்பனையாளர்கள் கட்டாயப்படுத்தப்படுவார்களா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** இரண்டு பொருள்களும் விஷப்பொருள் அல்லவென்று இருப்பதால் அதற்குப் போட முடியாது. ஆனுல் மெதில், ஆல்கஹால் இவைகளை விற்கிற போது 'ஸ்கல் அண்ட் போன்' படம் போடலாம்.

## *Obscene Models*

* 349 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon the Chief Minister be pleased to state the steps taken by the Government to prohibit exhibition of obscene models in tailoring shops etc., in the State and particularly in Madras city?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** சென்னை மாநகரத்திலோ அல்லது இம்மாநிலத்தின் பிற இடங்களிலோ ஆபாசமான மாதிரி உருவங்கள் (Model) தையற் கடைகளில் வைக்கப்பட்டிருப்பது அரசாங்கத்தின் நாட்டத்திற்கு வரவில்லையாதலால் இவ்விஞ எழவில்லை.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவரவர்களே, இம்மாதிரி ஆபாச விளம்பர மாடல்கள் தொங்கவிடப்படுவதால் பெண்களுக்கு அவமரியாதை செய்வதோடு பால் உணர்ச்சியை ஊட்டுவதாகவும் இருக்கிறது. ஆகவே, கடுமையான நடவடிக்கை எடுத்து, இம்மாதிரி ஆபாசமான மாடல்கள் போட்டு விளம்பரம் செய்யப்படாமல் இருக்க அதைத் தடை செய்ய அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஆபாசமான போஸ்டர்கள், ஆபாசமான உருவங்கள் இவைகளெல்லாம் காட்டப்படுவது, சமூகத்தில் மிருக உணர்ச்சியைத் தூண்டக்கூடும் என்று கனம் உறுப்பினர் சொல்வதை இந்த அரசு, 'ஆம்' என்று ஏற்றுக் கொள்கிறது. அப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் அவைகளைத் தடுப்பதற்காக நல்வழிப் பிரசாரம் நடத்தப்படவேண்டும் என்றும் விரும்புகிறது. அதற்கு, சட்டத்திற்கு உட்பட்டு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ அவைகளை நாங்கள் எடுத்துக்கொண்டு வருகிறோம்.

THIRU K. VINAYAKAM : Sir, is the Hon. Chief Minister aware of the fact that the busts that are exhibited in the tailor's shop are only just models made out of earth and they are actually not models of women. So, what is the necessity for the Government to take action to prevent such kind of exhibits of ordinary tastes and what is the harm done?

THE HON. THIRU C. N. ANNADURAI : I am glad that the hon. Member considers it to be not so harmful. As a matter of fact my own feeling is that it creates more irritation than attraction. There is also the judgment of the Supreme Court that these tailor's models cannot come under the provision of Section 292 of the Indian Penal Code.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இதுபோன்று தையல் நிலையங்களின் முன்னால் ஆபாசமான விளம்பரங்கள் வைத்திருப்பது என்பது உண்மை. இதுபோன்ற இடங்களில் நண்பர் விநாயகம் போன்ற வாலிபர்கள் நான்கு பேர் ஜாலியாக அதைப் போய் பார்ப்பது வழக்கம். அப்படியிருக்க நமது மதிப்பிற்குரிய திரு. கோமதிசங்கர தீட்சிதர் எப்போதிருந்து வாலிபராக மாறினார் என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எனக்கு அதுபற்றித் தெரியாது என்றாலும், திரு. விநாயகம் அவர்களுக்கு வாலிபப் பருவம் தங்களால் தரப்படுவது எனக்கு ரொம்ப வியப்பாக இருக்கிறது. நல்ல பேரன் பேத்திகளைப் பெற்றெடுத்திருப்பவர்கள். அவர் தோற்றத்தினால் வாலிபரைப்போன்று இருக்கவேண்டும் என்று ஒவ்வொரு நாளும் முயற்சி எடுத்துக் கொள்கிறாரே தவிர காலம் அந்த முயற்சியை குலைத்துக்கொண்டே வருவதை நான் பார்க்கிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவரவர்களே, கோவில்களிலும் மற்றும் பழங்காலச் சின்னங்களிலும் இப்போது சொல்லப்படுகிற சுவரொட்டிகள், விளம்பரங்களை விட அதிக ஆபாசமான விக்கிரகங்கள் இருக்கின்றனவே, அவைகளை மியூஸியத்திலும் கூட வைத்திருக்கிறார்களே, அம்மாதிரியானவைகளை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அவைகள் தொழுகைக்கு வைக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, அவைகளிலிருந்து மிருக உணர்ச்சி பரவ வேண்டும் என்ற எண்ணத்தோடு அல்ல. அவைகளைப் பார்த்தால், மிருக உணர்ச்சி பாவி விடுமோ என்ற ஐயப்பாடு கொண்டவர்கள் அருகே நெருங்காமல் இருப்பது நல்லது. (சிரிப்பு)





**ஹாஜி ம. மு. பீர்முஹம்மது :** பேரவைத் தலைவரவர்களே, பஸ் போக்குவரத்து அதிகமாக இருக்கின்ற சாலைகளில் ஆபாசமான போஸ்டர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதால் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். உடனடியாக பஸ் போக்குவரத்து அதிகமாக உள்ள சாலைகளிலாவது ஆபாச விளம்பரங்கள் இடம் பெறாமல் அரசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** போக்குவரத்து அதிகமாக உள்ள, மக்கள் நடமாட்டம் அதிகமாகவுள்ள இடத்தில் வைக்கவேண்டும் என்பதுதான் விளம்பரத்தினுடைய நோக்கமாக இருக்கும். ஆகையால், விபத்து ஏற்படும் என்ற காரணம் காட்டி, அவைகளைத் தடுக்கவேண்டும் என்ற தேவையில்லை. அப்படிப்பட்ட ஆபாசமான போஸ்டர்களை வெளியிடுவது மக்களுக்குக் காட்டுவது, அவர்களுடைய ஒழுக்கத்தைக் கெடுத்து விடும் என்ற முறையில் பிரசாரம் அமைவது நல்லது.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** சார், இந்த ஆபாசமான போஸ்டர்கள் வந்த பிறகு தமிழ்நாட்டினுடைய பண்பாடே குறைந்து கொண்டு வருகிறது. ஆகவே, இந்தத் தமிழக அரசு, இதிலே ரொம்ப கவனம் செலுத்தி இந்த மாதிரி ஆபாசமான போஸ்டர்கள் எல்லாம் இனிமேல் வெளியே வராதபடி தமிழ் நாட்டினுடைய ஒழுக்கத்தைக் காப்பாற்றுகிற முறையில் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** போஸ்டர்கள் வந்ததனால் தமிழ்நாட்டுப் பண்பாடு கெட்டுவிட்டது என்று நான் சொல்வதற்கில்லை. தமிழ்நாட்டுப் பண்பாடு கெட்டுவிட்டதால் இப்படிப்பட்ட போஸ்டர்களெல்லாம் போடுகிறார்கள் என்றுதான் நான் கொள்ளுகிறேன். அந்தப் பண்பாடு நல்ல நிலையில் இருப்பதற்கு எல்லோரும் நல்வழிப் பிரசாரத்தில் ஈடுபடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. வினா-விடைகளுக்கே ஏறக்குறைய இரண்டே முக்கால் மணி நேரம் ஆகிவிட்டது. எனவே, அடுத்த அலுவலை இப்போது எடுத்துக்கொள்ளலாம்.

*[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]*

## 2. நடைமுறைக் கேள்விகள்

### (i) பேரவைத் தலைவர் அவைக்கு வராதது குறித்து அவைக்கு அறிவிக்கப்படாமை.

THIRU K. VINAYAKAM : On a point of order, Mr. Speaker. The Speaker was away from this House for some days past. He may have some valid reasons as to why he was away from this House. But there is a convention that somebody will have to announce the absence of the Speaker. Even though the business could be carried on as usual by the Deputy Speaker, a convention has been laid down in Parliament as well as in this House. I will quote a small sentence from a book bearing the title

[Thiru K. Vinayakam]

"Mr. Speaker, Sir" written by Grahan Cawthorne: "The Speaker is the only man who is indispensable to the House of Commons". That means no business can be carried on without the presence of the Speaker under ordinary circumstances. Under ordinary circumstances the Speaker is expected to preside over this august House. We are only sorry that we missed your presence in this House. When we were carrying on our business, we felt for your absence very much. I quote a few lines from May's Parliamentary Practice:

"When the Speaker is absent, the Serjeant, accompanied by the Chaplain, enters the House with the mace, which he places upon the table. The Clerk informs the House of the Speaker's unavoidable absence".

Whenever the Speaker could not make himself available to preside over this House, the Secretary will have to announce that our Speaker is away on some urgent business. It should not be political business. It should be your own business and only on that ground you will be away. We cherish your job of presiding over this House and bringing credit to us.

"Should the Speaker be unavoidably absent, an announcement to that effect is made by the Clerk as soon as the Mace has been placed on the Table".

Explaining away by saying that there is no Mace here and therefore we need not follow the practice will not suffice. When your distinguished predecessor Mr. J. Sivashanmugam Pillai was the Speaker—I was in the Opposition then—once he was away and came after three or four days. He was away certainly not on political work but on personal work. On the first day he was absent, Mr. R. V. Krishna Ayyar stood up and made the announcement that the Speaker was unavoidably absent and that the House would not mind his absence. That is the procedure laid down in Parliament in Lok Sabha and in the other legislatures. I would like to have some light thrown on your absence—I do not want an explanation, it is too much to expect an explanation from the Speaker—why an announcement was not made, what the urgent business was which took you away from this House and whether it is political work. The Speaker may simply say that he is a Speaker here only and he is a partyman outside. That is your business. We should emulate the Speaker in Delhi. When Mr. Sanjeeva Reddi was made Speaker, he announced publicly that he was no more a Congressman and that he would be a Speaker till the day he was asked to get out. We invited him to the session of the All India Congress Committee at Hyderabad. He being one of the leaders and dignitaries, we asked him "Why don't you attend as a simple ordinary visitor?" He refused to attend and said that he was a Speaker and not a partyman. It is your field and you can do whatever you want. If you want to maintain the good tradition, Mr. Sanjeeva Reddi must be followed. I entirely leave it to you.



[Thiru K. Vinayakam]

But how did it happen that the Secretary of this House did not announce that you were kept away from this House? I would like to have some light thrown on this.

MR. SPEAKER: I am very much obliged to the hon. Member Mr. Vinayakam for the compliments he paid to me. Nothing is more pleasing to me than to be told by hon. Members that I have been discharging my duties to their satisfaction.

Regarding the point why my absence was not announced, our Rules do not say that an announcement should be made. Rule 6 provides that, when the Speaker is absent, the Deputy Speaker shall preside. Whether the Speaker is absent or present you can see by looking at the Chair.

THIRU K. VINAYAKAM: Our rules are perfect. But the scope of our rules is limited. Whenever our rules are silent on any subject, we follow the Lok Sabha. But because it is in the north—we have got an aversion to the north—we follow the procedure of the House of Commons. When our rules are silent, we must follow the rules adopted in the House of Commons. It is only for your guidance. You may set up a high tradition so that those who come after you may say: "There was one Mr. Adityan and he did wonderful work". That is all my interest.

THE HON. THIRU C. N. ANNADURAI: I may add to what the hon. Member said that an announcement of that sort will add to the pep of the House. If the rules do not stipulate an announcement, there is no harm in introducing a convention or even in amending the rules.

DR. H. V. HANDE: In the absence of the Speaker, there is another problem and that is about instructions to the Deputy Speaker. A number of privilege motions and adjournment motions are placed with the Speaker. The House would like to know whether the Speaker gives clear instructions about the motions which will have to be taken up. Some of the motions are not taken up at all. The absence of the Speaker gives considerable anxiety to the Members and I fully share the view of Mr. Vinayakam. We would like to know what happened to the privilege motion given notice of by Mr. S. Balasubramanian and Mr. K. M. Ramaswami Gounder with regard to a comment on a speech of Mr. R. Krishnasamy Gounder.

Another request we make in this House. The Speaker should as far as possible keep himself away from politics. Mr. Sanjeeva Reddi's example should be emulated. There is no question and there can be no two opinions about it. I am quite sure that all the 235 members will share the view that the Speaker must as far as possible keep out of party politics, especially in an election campaign, and that is also the opinion of many people outside. May we request—we need not go into the past—that the Speaker will not indulge in party politics so that the respect and tradition of this House will be completely maintained? We are not in the position of the Lok Sabha. Here we are very critical.

MR. SPEAKER : The hon. Member cannot discuss the conduct of the Speaker here. There are three things—conduct of the President, conduct of the Governor and the conduct of the Speaker—which cannot be discussed. Therefore, I must certainly observe the rules.

Regarding the powers of the Deputy Speaker, that is provided in Rule 7. When the Speaker is absent and the Deputy Speaker presides over this House, he shall have the same powers as the Speaker, not a little bit less than the powers of the Speaker. He has got the fullest powers and that is provided in the rules.

**திரு. க. இராமமூர்த்தி :** கனம் சபாநாயகர் அவர்களே, தாங்கள் இங்கே இருக்கிற நேரத்திலே நாங்கள் எங்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுக்கிறோம். நீங்கள் உங்களுடைய அறையிலேயே அனுமதி அளித்து இந்தச் சபையில் படிக்கலாம், வாசிக்கலாம் என்று சொல்கிறீர்கள். உதாரணமாக நான் ஜாக்பாட் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு உங்களுடைய அனுமதியைப் பெற்றிருந்தேன். ஆனால், உதவி சபாநாயகர் அவர்களுக்கு நீங்கள் எனக்கு அனுமதி அளித்தது தெரிந்திருக்காத காரணத்தினால் என்று நினைக்கிறேன், எனக்கு அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை சபையிலே எழுப்புவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு விட்டது. ஒரு முறை செகரடரியிடம் கொடுத்து, சபாநாயகர் அவர்களை நேரில் சந்தித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து, அதை அவர்கள் அனுமதித்த பிறகு திடீரென்று எனக்கு பிறகு அனுமதி மறுக்கப்படுகிறது. அதற்கான விவரங்கள் உதவி சபாநாயகருக்கு அளிக்கப்படாத நிலையிலே எங்களுடைய உரிமைகள் பாதிக்கப்பட்டு, நாங்கள் எங்களுடைய கடமைகளைச் சரிவர நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படுகிறது. இதைத் தீர்ப்பதற்கு சபாநாயகர் அவர்கள் தகுந்த முறையில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** துணைப் பேரவைத் தலைவர் அவையிலே தலைவராகப் பணியாற்றுகிறபொழுது, அவர்களுக்கு பேரவைத் தலைவருக்குரிய எல்லா உரிமைகளும் இருக்கின்றன என்று 7-வது விதி சொல்லுகிற காரணத்தினால், அவர்கள் அப்பொழுது என்ன செய்தார்கள் என்பதையும் இந்தப் பேரவை விவாதிக்க முடியாது. அதைப்பற்றி தனியாக என்ன செய்ய வேண்டும் என்று "மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டிஸ்" என்ற புத்தகத்தில் இருக்கிறது. அதில் 350-ம் பக்கத்தை நான் அடிக்கடி வாசித்துக் காட்டியிருக்கிறேன். தனியாக வந்து பேசலாம், அதைத் தீர்த்துக் கொள்ளலாம். அதைப்பற்றி நீங்கள் இங்கே பேச வேண்டாம்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஜாக்பாட் பிரச்னை பற்றி கனம் உறுப்பினர் அவர்களுக்கு அதிகமான அக்கறை இருக்குமானால், அது பற்றிய விவரம் நாளையோ, மறு நாளோ கொடுக்கிறேன். நான் அதைப் படித்ததாக எனக்கு நினைவு. அதற்கான விளக்கங்கள் அளிக்கப்படும்.



(ii) அரசு போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்—மாணவர் கைகலப்பு பற்றிய முதலமைச்சர் விளக்க உரையில் முழுத் தகவல் தரப்படாமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, நடைமுறைக் கேள்வி ஒன்றை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்புவார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இரண்டு நாட்களுக்கு முன்னால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் விளக்கம் சொல்லி விடுகிறேன். காரணம், சில உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்பொழுது பேசலாமா என்று வினவுவது எனக்குத் தெரிகிறது. இதுதான் நடைமுறை கேள்வி நேரம் முடிந்த பிறகு எதிர்க்கட்சித் தலைவர் எழுந்து, இனிமேல் என்ன நடக்கப் தெரிகிறது. இதுதான் நடைமுறை. கேள்வி நேரம் முடிந்த லாம். பாயிண்டு ஆஃப் ஆர்டர் என்றால், சட்ட ஒழுங்குபற்றி என்பது அல்ல. அஜெண்டா என்ன? என்ன நடக்கப்போகிறது என்று அவர்கள் கேட்கலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முந்தாநாள் 26-ம் தேதி முதல் அமைச்சர் அவர்கள் 82-வது விதியின் கீழ் ஒரு அறிக்கையை சமர்ப்பித்தார்கள். அந்த அறிக்கையில் சென்னையில் நடைபெற்ற சில கலவரங்களைக் குறித்துப் பேசி, அதுபற்றி நீதி விசாரணைக்கு ஏற்றுக்கொள்வதாகவும் சொன்னார். அதற்குப் பின்னாலே, அதாவது அவர் அறிக்கை விட்டதற்குப் பின்னாலே சில நிகழ்ச்சிகள், அதைவிட மிகவும் மோசமான, துக்ககரமான, வருந்தத்தக்க, மிகவும் கஷ்டமான நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. அப்படி நடந்திருந்தும் கூட, நேற்று உபமானியக் கோரிக்கையின் மீது நான் பேசினபொழுது அந்த சந்தர்ப்பத்திலே அதைப்பற்றி எடுத்துச் சொல்லியும் கூட, தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகளை இந்த அவையின் முன்னால் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வைக்கவில்லை. இங்கே வைக்காதது மட்டுமல்ல, மேலவையில் இங்கே வைக்காத சில நிகழ்ச்சிகளை அங்கே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

'The Hon'ble Chief Minister has not taken this House into confidence by not disclosing the facts of opening fire on the students by the Police within the precincts of the Madras Veterinary College Hostel, C.N.T. Institute and at Vepery Police station on 26th March 1968 as a result of which a number of students sustained serious injuries out of whom a few are on the verge of death.

While this House is in session and though there was a discussion on this subject on 27th March 1968 and even though ample opportunities were there for the Hon'ble Chief Minister to disclose these facts, he 'failed to do so deliberately which amounts to suppression of facts. . .'

[திரு. பி. ஜி. கருத்திருமன்]

எத்தனையோ நிகழ்ச்சிகள், துப்பாக்கிச்சூடு நடந்திருக்கின்றன. அதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நாங்கள் போய் படிக்கும் மாணவர்களைப் பார்த்தால், அவர்கள் இருக்கும் படியான நிலையைக் கேட்டு வருத்தப்படக்கூடிய நிலையிலே இருக்கிறது. சபை நடக்கும்படியான சமயத்தில் இதுமாதிரி விஷயங்களை முதல் அமைச்சர் அவர்கள் ஏன் இந்தச் சபையில் அறிவிக்காமல் இருக்கவேண்டும் ? இந்தச் சபையில் என் அவர்கள் நம்பிக்கை கொள்ளாமல் இருக்கவேண்டும் ? மேல் சபையில் மட்டும் அவைகளைப் பற்றி ஏன் சொல்ல வேண்டும் ?

அத்துடன் சில நிகழ்ச்சிகள் தொடர்ந்து வருகின்றன. மாணவர்கள் விடுதிகள் சோதனை செய்யப்படவேண்டும் என்று கூட உத்தரவு போடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இது சாதாரணமான விஷயம் அல்ல. மேலும், கொந்தளிப்பான நிலையில் மாணவர்கள் இருக்கும்படியான சந்தர்ப்பத்தில் இதுமாதிரி சோதனை செய்யும்படியான அளவில் சர்க்கார் உத்தரவு போட்டிருப்பதாகத் தெரிகிறது. ' நாங்கள் படிக்கிறவர்கள், எங்களுக்கு வேண்டிய மருத்துவக் கல்லூரிப் படிப்புக்கு வேண்டிய அறுவை சிகிச்சைக்கான சாதனங்கள் வைத்துக்கொண்டிருப்பதைக் கூட தவறாக எடுத்துக்கொள்ளக்கூடிய நிலை ஏற்படலாம்' என்று மாணவர்கள் மிகவும் பீதி கொண்டிருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சிகளைப்பற்றி சட்டசபையில் தகவல் கொடுக்கப்படவில்லை. மாணவர்கள் பாதுகாப்பு பாதுகாப்பு என்று இரவு பகலாக போன் செய்து கொண்டிருக்கிறார்கள். போலீஸ் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று அலறிக்கொண்டிருக்கிறார்கள். எத்தனையோ மாணவர்கள் நிர்க்கதியாக வீதியிலே நின்றுகொண்டு போவதற்கு இடமில்லாமல் வெளியில் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப்பொழுது முதல் அமைச்சர் அவர்கள் முன்பு 82-வது விதியின் கீழ் விளக்கவுரை கொடுத்ததற்கு மேல் ஏதாவது கூடுதலாக அல்லது மாறுதலாகக் கொடுக்கிறார்களா என்று கேட்கிறீர்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : எனக்கு பேசுவதற்கு பூரண உரிமை அளிக்கப்படவேண்டும். நான் பேசியதற்குப் பிறகு முதல் அமைச்சர் அவர்களுக்கு பதில் அளிப்பதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது. அமைச்சர்கள் சொல்வதை மீறியும் நடந்த காரியங்களை இந்த அவைக்கு ஏன் தெரியப்படுத்தவில்லை ? என்ன காரணம் என்று உங்கள் மூலமாக முதல் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். எங்கள் மீது அல்லது இந்த அவையின் மீது முதல் அமைச்சர் அவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்களா, இல்லையா? அதற்கான விளக்கம் மட்டுமல்ல, மற்றபடி தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகளை ஏன் இந்த அவைக்குத் தெரிவிக்கவில்லை என்பதை முதல் அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்து கொள்ள விரும்புகிறேன்.



MR. SPEAKER : Perhaps the hon. Leader of the Opposition wants to know whether the Hon. Chief Minister wants to make any additions or corrections or alterations to his statement under Rule 82.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : தலைவர் அவர்களே, நான் இந்த அவையிலே 82-வது விதியின் கீழ் கொடுத்த அறிக்கையில் அந்த நேரம் வரையிலே எனக்குக் கிடைத்த சில தகவல்களை கொடுத்தேன். அதற்குப் பிறகு எனக்குக் கிடைத்த தகவல்களை மேலவைக்கு போகின்ற நேரத்தில் அங்குள்ள எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேள்வி கேட்டபொழுது அந்த அவையில் குறிப்பிட்டேன். துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றி குறிப்பிட்டேன். இந்த அவைக்கு அதைச் சொல்லாமல் அந்த அவைக்கு மட்டும் சொல்லவேண்டும் என்ற எண்ணத்தோடோ அல்லது இந்த அவைக்கு எனக்குத் தெரிந்த தகவல்களைக் கொடுக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காகவோ, அதனை நான் மறைக்கவும் இல்லை, குறைக்கவுமில்லை. இந்த இரண்டு அவையின்மீதும் எனக்கு மிகுந்த மரியாதை உண்டு என்பதை எல்லோரும் அறிவார்கள். நான் இந்த அவையிலே உள்ளவர்களுடைய ஒத்துழைப்பையெல்லாம் நாடுகிறபொழுது, சில விஷயங்களை வேண்டுமென்றே மறைப்பேன் என்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எண்ணிப்பார்ப்பது கூட எனக்குச் சங்கடமாக இருக்கிறது. எனக்கு அந்த நேரத்தில் கிடைத்த தகவல் அளவுக்குக் கொடுத்தேன். மற்ற தகவல்களைக் கொடுக்கமுடியாமல் போய்விட்டது பற்றி நான் உள்ளபடியே வருந்துகிறேன். மாணவர்கள் பாதுகாப்பு கேட்கக்கூடிய நிலையிலே இருப்பதாகவும், பல நிகழ்ச்சிகள் தொடர்ந்து ஏற்பட்டிருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். மாணவர்களுக்கு, நான் இந்த அவையிலே சொல்வதன் மூலம், உறுதியாக எல்லாவிதமான பாதுகாப்பும் ஆறுதலும் அளிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாணவர்களுக்கு ஆறுதல் அளிக்காமல், பாதுகாப்பு அளிக்காமல் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தை இந்த அரசு நடத்துகிறவர்கள் யாருமே கருதமாட்டார்கள். எந்த அரசை நடத்துகிறவர்களும் அப்படிப்பட்ட எண்ணம் கொள்ளமாட்டார்கள் என்பது நாடு அறிந்த உண்மை. நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் கொண்டிருப்பது போல மாணவ சமுதாயத்திலே எண்ணம் பரவியிருக்குமேயானால், தாழ்மையுணர்ச்சியோடு, பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், அவர்களுடைய நலனில் எனக்கு மிகுந்த அக்கறை உண்டு என்பதால், உரிய பாதுகாப்பை, ஆறுதலைத் தேடிக் கொடுப்பதில் தயக்கம் காட்ட மாட்டேன்.

மற்றபடி, இந்த அவையில் நம்பிக்கையில்லை, நம்பிக்கையில்லை' என்று நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார்கள். தனிப்பட்ட முறையிலும் சரி, காங்கிரஸ் கட்சியில் ஒரு பிரமுகர்

[திரு. சி. என். அண்ணாதுரை]

என்ற முறையிலும் சரி, இந்த அவையின் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களிடத்தில், ஏன் அவை உறுப்பினர்கள் ஒவ்வொருவரிடத்திலும், மொத்தமாகவும், மிகுந்த நம்பிக்கை உண்டு. ஏதோ, நம்பிக்கை குறைவினால் செய்தேன் என்ற எண்ணம் கூட எதிர்க் கட்சித் தலைவருக்கு தோன்ற வேண்டாம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அன்றைய தினம் பரபரப்பான சூழ்நிலை இருந்தது. அவர்களே கூட, வேறு பிரச்னைமீது பேச முடியாமல், தழுதழுத்த குரலிலே, பேச முடியாமல் நிறுத்திக்கொண்டார்கள். நானும் ஏறக்குறைய அந்த நிலையிலேதான் இருந்தேன். உடனுக்குடன் விவரங்கள், தகவல்கள் வராத காரணத்தால், நான் பேசிய போது, துப்பாக்கிப் பிரயோகம் பற்றி முழுத் தகவல், என்னிடத்தில் தரப்படாததாலும் நான் அதைச் சொல்லமுடியவில்லையே தவிர, அவர்கள் குறிப்பிட்டபடி, மறைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இல்லை, அல்லது இந்த அவைக்குச் சொல்லாமல், மேல் அவையில் சொல்லவேண்டும் என்ற எண்ணத்தில் அல்ல. தகவல் கிடைக்கும் போது, எந்தத்தகவல் கிடைத்தாலும், உடனுக்குடன் இந்த அவையிலே சொல்வது இந்த அவைக்கு கொடுக்கின்ற மரியாதை உணர்ச்சியால் மட்டுமல்ல, இந்த அவையின் நடைமுறையிலிருந்து நான் வழுவமாட்டேன் என்று உறுதியும் அளிக்குமாறு இதை எனக்கு ஞாபகப் படுத்தியதற்காக நன்றி தெரிவிக்கிறேன்.

**திரு. கே. விநாயகம் :** சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். ஸ்டேட்மென்ட் நம் முதலமைச்சர் அவருக்குக் கிடைத்த தகவலை வைத்துக் கொடுத்தார்கள் என்பது சரி. ஆனால், ஸ்டேட்மென்ட் படிக்கும்போது 10-30 மணி. துப்பாக்கிச் சூடு நடந்தது பின்னால், அதைப்பற்றி எங்களுக்குத் தெரிந்தவரையில், அது பிற்பகல் 3 மணிக்கு நடந்திருக்கிறது. அந்த நாள் நிகழ்ச்சியைப் பொறுத்த வரையில் எந்தவிதமான அபிப்பிராயபேதமும் இல்லை. நேற்று நாம் கூடினோமே; இதே இனத்தின்மேல் குறிப்பிட்டோமே; இப்படியெல்லாம் நடந்திருந்தும், எங்களுக்கு ஒன்றுகூடத் தெரிவிக்கவில்லையே; நாங்கள் பத்திரிகைகளில் படித்துத்தான் தெரிந்து கொண்டோமே தவிர, அமைச்சரவர்கள், துப்பாக்கிச் சூடு சுட்டார்கள், எத்தனை பேர்களுக்கு காயம் பட்டது, என்ன நிலையில் இருக்கிறார்கள், எத்தனை பேர்கள் பாதிக்கப்பட்டார்கள், எவ்வளவு மாணவர்கள் இறந்து போயிருக்கிறார்கள் என்பதையெல்லாம் பற்றி எங்களிடம் சொல்லவில்லை. அதற்கான ஃபோட்டோக்கள் இருக்கின்றன. அவற்றைக் காட்டக் கூடாது என்று விதியிருக்கிறது. அதனால் காட்டவில்லை . எங்கேயோ ரூபாய் நோட்டுக்களை அவையில் போட்டார்களே அப்படி இங்கே போட முடியாது என்று விதி இருக்கிறது. I am not interested in demonstrative politics ஆனால், இந்த விவரங்களெல்லாம், எங்களிடத்தில் வேண்டுமென்றே இந்தத் தகவல்களைக் கொடுக்கக்கூடாது என்றிருந்தது தர்மம் இல்லை என்றுதான் சொல்கிறேன். அது 'லப்ரெஷன் ஆஃப் பாக்ட்ஸ்'. அதற்கென்ன சொல்கிறார்கள்?



**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதுதான் சொன்னேன். அன்றையதினம் பரபரப்பான சூழ்நிலை இருந்தது. அன்றையதினம் முழுத்தகவல் கிடைக்காததால்தானே தவிர மறைக்க வேண்டும் என்ற எண்ணம் துளிகூட கிடையாது. இந்த அவைக்குச் சொல்லக்கூடாது என்ற எண்ணம் துளியும் கிடையாது. அப்படிப்பட்ட எண்ணத்தை எதிர்க் கட்சித் தலைவரோ, மற்றவர்களோ கொண்டிருந்தால் அருள்கூர்ந்து அதை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தகவல் கிடைக்கக் கிடைக்க சொல்லப்பட வேண்டும் என்பது பாராளுமன்றத்திற்கு ஏற்றது, தேவையானது, நியாயமானது என்பதை முழுக்க முழுக்க ஒத்துக்கொள்கிறேன், ஆதரிக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கும் பிரச்சினையில் இரண்டு விஷயங்களை விட்டு விட்டார்கள். மாணவர்கள் விடுதிகளில் சோதனையிடவேண்டும் என்று உத்தரவு போட்டிருப்பதாக சொல்லப்படுவது பற்றியும் காயப்பட்ட, அடிபட்ட ஏழை மாணவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கவும் என்ன ஏற்பாடுகள் சர்க்கார் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றியும் சொல்ல வேண்டும். சோதனை செய்ய வேண்டும் என்று உத்தரவு போட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதனால் மாணவர்கள் பரபரப்பு அடைந்திருக்கிறார்கள். பயம் அடைந்திருக்கிறார்கள். போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் அவர்களுக்கும் மனக் கசப்பு ஏற்பட்டதால், நாளைக்கு கல்லூரிக்குப் போகும்போது, மனக் கசப்பு காரணமாக எதுவும் ஏற்படாதவண்ணம், மீண்டும் சீர்திருத்தம் செய்து, நல்ல எண்ணம் ஏற்பட என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கடைசியாகச் சொன்னதை முதலாவதாக எடுத்துக் கொள்கிறேன். சகஜமான சூழ்நிலையை ஏற்படுத்த, மாணவர்கள் பிரதிநிதிகள், போக்குவரத்துத் தொழிலாளர்கள் பிரதிநிதிகள், நம்முடைய அரசாங்கப் பிரதிநிதிகள், மற்ற பல கட்சித் தலைவர்களும், விருப்பப் படுகிறவர்கள், அவர்கள், எல்லோருமே உட்கார்ந்து பகை உணர்ச்சிகள் பரவாமல், உண்டாகாமல் இருப்பதற்காக என்று நல்ல சமரசமான நிலை ஏற்படச் செய்யவேண்டும் என்று அரசு கவனித்துக் கொண்டிருக்கிறது. அதற்குரிய முறைகளை அரசு மேற்கொள்ளும் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்று, சேதப்பட்ட பொருள்களுக்கு நட்ட ஈடு தரப்படுமா என்று கேட்டார்கள். உள்ளபடியே சேதங்கள் ஏற்பட்டிருந்தாலும், இழப்புகள் ஏற்பட்டிருந்தாலும், நல்ல முறையில் நட்ட ஈடு கொடுக்கப்பட வேண்டும் என்கிற விதியை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. விவரங்கள் சேகரிக்கப்படும்போது தயக்கம் காட்டப்படமாட்டாது என்பதைத் தெரிவிக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இன்னொன்று, மாணவர்கள் விடுதிகளில் சோதனை போடும்படி சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்களா ? அதுபற்றி என்ன நிலை ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதற்கான தகவல் என்னிடத்தில் இல்லை. நண்பர் சொன்னதற்குப் பிறகுதான் அதைப் பற்றி நான் விசாரிக்க வேண்டும்.

### 3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, ஒற்றிவைப்புத் தீர்மானங்கள். 13 தீர்மானங்களுக்கு முன் அறிவிக்கைகள் வந்திருக்கின்றன. அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம். முதலாவதாக திரு. ஜார்ஜ் அவர்கள்.

#### (i) பாதிரிவேடு-மேல்டர்பாக்கத்தில் நடந்த நிகழ்ச்சி

THIRU V. GEORGE : Mr. Speaker, I may be permitted to move the adjournment motion, given notice by me, under Rule 42 of the Assembly Rules, viz.,

"that the business of the House be adjourned to discuss a matter of urgent public importance, viz., the incident on the 18th and 19th March 1968 between the villagers, students and teachers of Padirvedu Meldarpakkam in Chingleput district".

MR. SPEAKER : Please explain how it is beyond the ordinary administration of the Government.

**திரு. வ. ஜார்ஜ் :** அவைத் தலைவர் அவர்களே, மாதர்பாக்கம் என்ற இடத்தில், போர்டு உயர்நிலைப் பாடசாலையில், தெலுங்கு பேசக்கூடிய மாணவர்களும், ஆசிரியர்களும் அதிகமாக இருக்கிறார்கள். சுமார் மூன்றில் இரண்டு பங்கு தெலுங்கு பேசுபவர்கள். ஊர் மக்களும் தெலுங்கு பேசுபவர்கள்தான் அதிகம். பாடசாலையில் உள்ள 34 ஆசிரியர்களில் 8 பேர்கள்தான் தமிழ் ஆசிரியர்கள், பாக்கி 26 பேர்களும் தெலுங்கு பேசுபவர்கள். இந்த நிலையில் மொழி உணர்ச்சி காரணமாக 18—3—1968 அன்று அங்குள்ள பாடசாலையில் பணியாற்றும் ட்ராயிங் மாஸ்டர் அவர்களையும், மாணவர்களையும் உதைத்தார்கள், தமிழ் ஆசிரியர்களும் மாணவர்களும் மறுநாள் 19—3—1968 அன்று ஊரில் உள்ள ஆட்களும் சேர்ந்து கொண்டு, அபாயமான ஆயுதங்களை வைத்துக் கொண்டு காயங்களை ஏற்படுத்தியதன் காரணமாக, பல ஆசிரியர்களும் அந்த இடத்தை விட்டு ஓடி பாதுகாப்பு தேட வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்கள் போலீஸ் ஸ்டேஷனில் பாதுகாப்பு தேடினார்கள். இது சாதாரணமாக நிர்வாகத்தில் நடக்கக்கூடிய காரியம் இல்லை. இது அசாதாரணமான, முக்கியத்துவம் வாய்ந்த விஷயம். ஆகவே சபையின் அலுவல்களை ஒத்தி வைத்து இந்த விஷயத்தை விவாதிக்க வேண்டும். இந்த நிலைகள் பரிசீலிக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, இந்தச் சம்பவம் நடைபெற்றதாக கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வது செங்கற்பட்டு மாவட்டத்தைப் பற்றியது.



கனம் உறுப்பினர் அவர்கள் அந்த ஊர் பெயரைக்கூட தவறாகக் குறிப்பிட்டார்கள். அவருக்கு அந்த ஊர் பெயரைச் சொல்லிக் கூடப் பழக்கம் இல்லைபோல் தெரிகிறது. எனக்கு அந்த ஊர் பழக்கமானது. இப்படிப்பட்ட சம்பவங்கள் அசாதாரமான சம்பவங்கள் என்று உறுப்பினர் குறிப்பிட்டார். உள்ளபடியே, சாதாரண சம்பவங்களில், விரும்பத்தகாத சம்பவங்களில் எல்லாம் சர்க்காருடைய சாதாரண நிர்வாகத்தின்கீழ் வரக்கூடியவைகளுக்கு சர்க்கார் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தச் சம்பவம் அரசினுடைய நிர்வாகத்திற்குட்பட்ட காரியமாக இருக்கிறது. ஆகையால் இந்தச் சம்பவம் பற்றி அரசு நடவடிக்கை எடுக்க முடியும்.

'The matter must involve more than the ordinary administration of the law'. ஆகவே, 50 (viii) விதியின்கீழ் இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

#### (ii) அம்பாசமுத்திரம் வட்டத்தில் நெல் கொள்முதல் முறை

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளில் 42-வது விதியின்கீழ் அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த கீழ்க்கண்ட விஷயத்தைப்பற்றி விவாதிக்க சபையை ஒற்றிவைக்கக் கோரி ஓர் முன்னறிக்கை கொடுத்திருக்கிறேன்.

"திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம் தாலுகாவில் தற்போது நெல் கொள்முதல் செய்யும் முறைபற்றி விவாதிக்க வேண்டும்."

தலைவர் அவர்களே, சுருக்கமாக இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அம்பாசமுத்திரம் தாலுக்காவில் உள்ள விவசாயிகளுக்கு லெவி நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் 8 தாலுக்காக்களுக்கும் மொத்தமாக 40 ஆயிரம் டன் கொள்முதல் செய்யப்பட வேண்டுமென்று தீர்மானித்து, அதில் அம்பாசமுத்திரம் தாலுக்காவில் மட்டும் 9,500 டன் என்று சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது. அம்பாசமுத்திரம் தாலுக்காவில் ஏராளமான அளவில் கொள்முதல் ஆகிக்கொண்டிருக்கையில் மேலும் கொள்முதல் செய்வதற்காக இரண்டாவது தடவையாக லெவி நோட்டீஸ் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு விவசாயியையும் கட்டாயப்படுத்தி கொள்முதல் செய்ய சர்க்கார் ஏஜெண்டுகளும், அதிகாரிகளும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். லெவிக்கு ஒழுங்காக நெல்லை விவசாயிகள் கொடுத்தபோதிலும், மீண்டும் மீண்டும் அவர்களிடத்திலே இருந்து நெல்லை எடுத்துக் கொண்டு போகும்படியான நிலையில் அதிகாரிகள் கெடுபிடி செய்து வருகிறார்கள். அம்பாசமுத்திரம் பகுதி, சேரன்மாதேவி பகுதி

எல்லாம் இதனால் ஸ்தம்பித்திருக்கின்றன. அந்தப் பகுதி விவசாயிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, அங்குள்ள துன்பங்களையும், அதிகாரிகளின் கெடுபிடிகளையும் பற்றி விவாதிப்பதற்கு இந்தச் சபையை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாக இருப்பதால் இதற்கு அனுமதி மறுக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

## (iii) நம்பியூர் பஞ்சாயத்து ஒன்றியத்தில் பருவ மழையின்மையும் விளைச்சலின்மையும்

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 42-வது விதியின்படி, கீழ்க்காணும் அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த பிரச்சினை குறித்து விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கக் கோரி ஓர் முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன்.

"கோவை மாவட்டம் கோபி வட்டம், நம்பியூர் பஞ்சாயத்து ஒன்றியத்தில் பருவமழை தவறியதன் காரணமாக தோட்டக்கால் புன்செய்ப் பயிர்கள் விளைச்சலின்றி கரிவு ஏற்பட்டு, அப்பகுதி மக்கள் வேலை வாய்ப்பு இழந்துள்ள நிலைபற்றி விவாதிக்க வேண்டும்".

தலைவர் அவர்களே, இந்த நம்பியூர் ஒன்றியம் என்பது பஞ்சப் பிரதேசமாக நோட்டிபிகேஷன் செய்யப்பட்டது. இது அவனாசி, பல்லடம் என்ற இரண்டு தாலுக்காக்களை ஒட்டியது. இவைகளை விட மிக வறட்சியுள்ள பிரதேசம். அங்கே மக்கள் அவதிப்படுவதாகவும், உடனடி நிவாரணம் செய்ய வேண்டுமென்றும் நிலவரி மானியக் கோரிக்கையின்போதும் நான் எடுத்துச் சொன்னேன். ஆனால் அந்த நிவாரணத்தை உடனடியாகச் செய்வதில் தயக்கம் காட்டுகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடி நிவாரண வேலைகளைச் செய்யாமல் தள்ளிப் போட்டுக் கொண்டே வருகிறார். நம்பியூர் பிர்க்கா விவசாயிகள் சங்கச் செயலாளரிடமிருந்து எனக்கு ஒரு உருக்கமான கடிதம் வந்திருக்கிறது. அங்கே மக்கள் பட்டினி கிடந்து சாகக்கூடிய நிலைமையில் உள்ளார்கள் என்றும், விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுவதாகவும், தொழிலாளிகள், அரிசனங்கள் ஆகிய எல்லோரும் பட்டினி கிடக்கிறார்கள் என்றும் அதில் எழுதப்பட்டிருந்தது. இந்த நிலையை இந்த அரசு விரும்பாது என்பது தெரியும். அங்கே வாழும் மனிதர்களுக்கு எல்லாம் அடிப்படையான தேவையாகிய உணவு கிடைக்கும் வகையில் நிவாரணம் செய்ய வேண்டும். அவனாசி, பல்லடம் தாலுக்காக்கள் இதையொட்டியிருப்பதால், இவைகளை பஞ்சப் பிரதேசங்கள் என்று அறிவித்திருப்பதுபோல் இந்தப் பகுதியையும் பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, உடனடியான நிவாரணங்களைச் செய்ய அரசு முன்வரவேண்டும். இதில் நிர்வாக இடைஞ்சல்கள் இருந்தாலும் நிவர்த்திக்க அதற்கு தக்க



ஏற்பாடுகள் செய்ய வேண்டும். சாதாரணமாகச் செய்கின்ற குடும்பக் கார்டு முறையில் ரேஷன் வழங்க உடனடியாக சர்க்கார் ஆணை பிறப்பிக்க வேண்டும். ஆகவே, இந்தப் பிரச்சினையைத் தொடர்ந்து பரிசீலனை செய்து விவாதிக்க இந்த சபையின் அலுவல்களை அரை மணி நேரம் ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே தான் விவாதத்தில் இதைப்பற்றிக் கூறியதாக இப்போதுதான் சொன்னார். இதைப்பற்றி பேரவையிலே முன்னாலே பேசியிருக்கிறார். It shall not revive discussion of a matter which has been discussed in the same session என்ற முறையில் தள்ளிவிடும்படியான காரியமாக இருந்திருக்கிறது. சட்டப் பேரவை விதி 68 (3) உள்விதி (6), இது ஏற்கெனவே பேரவையில் பேசியது என்று சொல்லிவிட்ட காரணத்தால் இதை அனுமதிக்க முடியாத நிலையில் இருக்கிறேன்.

## (iv) வடுககுடி கிராம அரிசனங்கள் குடிசைகளுக்குத் தீவைப்பு

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 42-வது விதியின்படி கீழ்க்கண்ட அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க, சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கக் கோரி ஓர் முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன்.

"நன்னிலம் தாலுக்கா, வடுககுடி கிராமத்திலுள்ள அரிசன மக்களின் குடிசைகளுக்கு தீ வைத்ததன் விளைவாக எல்லாக் குடிசைகளும் எரிந்து சாம்பலாகி அதனால் அரிசன மக்கள் பாதிக்கப்பட்டுள்ளது பற்றி விவாதிக்க வேண்டி, சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமாக கோருகிறேன்."

தலைவர் அவர்களே, வடுககுடி கிராமத்திலுள்ள அரிசன சேரி மக்களின் குடிசைகள் எல்லாம் தீ விபத்தால் சாம்பலாகி, மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக விவாதிப்பது நல்லது என்று கருதுகிறேன். ஆகவே, இந்த அவையினுடைய நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது சாதாரண நிர்வாகத்திற்குட்பட்ட காரியமாதலால், 50 (viii) விதியின்படி இதை அனுமதிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (v) தாராபுரம் கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டதும் தொழிலாளர் வேலை இழப்பும்

**திரு. எம். பூபதி:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 42-ன்படி கீழ்காணும் அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க சட்டப் பேரவையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கக் கோரி முன்னறிவிக்கை கொடுத்துள்ளேன்.

"கோவை ஜில்லா, தாராபுரத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலையை மூடி 450-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை இழந்துள்ள அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த இந்த பிரச்சினையைப் பற்றி சட்டப் பேரவையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்கக் கோருகிறேன்."

தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற நிர்வாகம் சாதாரண முதலாளிகளால் நடத்தப்படவில்லை. கூட்டுறவால் நடத்தப்படுகின்ற ஒரு ஸ்தாபனம். அவர்களே இப்படிப்பட்ட பேச்சு வார்த்தைகளை நடத்தி, பிரச்சினையைப்பற்றி முடிவு எடுக்க வேண்டியவர்கள். சர்க்கார் இலாக்காவினர் சமரசம் செய்து வைத்து, லேபர் ஆபீசர் தலையிட்டு, பேசி முடிவு செய்து ஏற்றுக் கொண்டவைகளையும் அமல்படுத்த முடியாது என்று சொல்லி மில்லை மூடிவிட்டார்கள். அதன் விளைவாக அங்கு ஒரு மோசமான நிலைமை ஏற்பட்டுள்ளது. தொழிலாளர்களின் மத்தியில் ஆத்திரமும், அதிருப்தியும் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக அவை நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது அரசின் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாக இருப்பதால் இதற்கு அனுமதி கொடுக்க மறுக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## (vi) செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் அலுவலக ஊழியர்கள் நடத்தப்பட்ட விதம்

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 42-வதின்கீழ் அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயமாகிய, "செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் ஆபீசில் வேலை பார்க்கும் ஊழியர்களை தவறான முறையில் நடத்தியதைப்பற்றி விவாதிக்க பேரவையின் அலுவலை ஒத்தி வைக்கக் கோரி முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன்.

செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் ஆபீசில் வேலை பார்க்கும் ஊழியர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னால் திங்கட்கிழமை அன்று கலெக்டருடைய பி.எ. அவர்கள் தங்களைக் கேவலமான முறையில் நடத்துகின்றார் என்ற காரணத்திற்காக ப்யூன் தவிர—சிரஸ்தார்களில் இருந்து எல்லா ஊழியர்களும் ஒரு நாள் காஷுவல் லீவ் போட்டுவிட்டு வேலைக்கே போகாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படியென்றால் அவர் ஊழியர்களை எவ்வளவு கேவலமான முறையில் நடத்தி வந்திருந்தால் அவ்வளவு ஆத்திரமும், ஆவேசமும், அதிருப்தி மனப்பான்மையும் ஏற்பட்டிருக்கும் என்பது புரிகிறது. இது சம்பந்தமாக கலெக்டரிடத்தில் கூறியிருக்கிறார்கள், சீப் செக்ரட்டரியிடத்தில் கூறியிருக்கிறார்கள், ரெவின்யூ அமைச்சரிடத்திலும், சீப்மினிஸ்டரிடத்திலும் கூறியிருக்கிறார்கள். இந்த நிலை தொடர்ந்தால் மாநிலம் முழுவதும் பரவி விடுமோ என்கிற அச்சம் ஏற்படுகிறது. மேலும், அந்த பி.எ.,





அவர்கள் இந்த அரசினிடத்தில் நல்லெண்ணம் படைத்தவர் அல்ல என்றும் தெரிகிறது. இது மிக முக்கியமான சம்பவம். ஆகவே இதைப்பற்றி விவாதிக்க இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் குறிப்பிட்ட சம்பவம் பற்றிய விவரம் என்னிடத்திலும் தரப் பட்டிருக்கிறது. அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்ற காரணத்தினால் இது இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டிய பிரச்சினை அல்ல என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது அரசின் சாதாரண நிர்வாகத்திற்குள் வருகிற காரணத்தினால், இதற்கு அனுமதி கொடுக்க மறுக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## (vii) சென்னை பொது மருத்துவ மனை ஹவுஸ் சர்ஜன்கள், மருத்துவக் கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம்

THIRU J. JAMES : Sir, I have given notice of the following adjournment motion—

"That the business of the House do stand adjourned to discuss a definite matter of urgent public importance namely the decision taken by the House Surgeons of the General Hospital and the students of Medical Colleges in the City to go on strike from today indefinitely".

தலைவர் அவர்களே, இந்தச் சம்பவங்கள் பற்றிய விவரம் இரண்டு தினங்களுக்கு முன் சபையில் வந்தது. நான் குறிப்பிட்டுள்ள இந்த விஷயம் இன்று காலையில் 7 மணி முதல் நடைபெற்று வருகிற ஒன்றாகும். பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களிடம் தொழிலாளர்கள் வந்து முறையிட்டபோது அவர்களிடம் "உங்கள் பேரில் கண்ணீர் புகைதான் விட்டிருக்கிறேன். மாணவர்களைச் சுட்டு இருக்கிறேன்" எனக் கூறியதாக பத்திரிகையில் வந்திருந்தது. அதன் காரணமாக மாணவர்களிடையே மனக்கசப்பு வளர்ந்து பல்வேறு கல்லூரிகளில் மன அமைதி இன்மை ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக இன்று முதல் ஹவுஸ் சர்ஜன்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். இது சாதாரண விஷயம் அல்ல. நிர்வாகத்திற்கு உட்பட்டதும் அல்லாத நிலைமை போய்விட்டது. ஆகவே இந்தச் சட்ட மன்றத்தை ஒத்திவைத்து விவாதிக்க கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் தொழிலாளர்களின் மத்தியில் பேசிய பேச்சு பத்திரிகைகளில் முழு அளவிலும் சரியான முறையிலும் வெளியிடப்படவில்லை என்பதை பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கை மூலமாகவே தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் பேசியதாக பத்திரிகையில்

1968 மார்ச் 28] [Thiru J. James]

வந்த தவறான செய்தியை வைத்துக்கொண்டு அவர்கள் மன வருத்தம் அடைந்திருக்கிறார்கள். இந்த அரசு தங்களுக்குச் சரியான பாதுகாப்பைத் தரவில்லை, தங்கள் பக்கத்தில் பரிவு காட்டவில்லை என்கிற அவர்களது மன உளைச்சல் தவறு என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசுக்கு மாணவ சமுதாயத்திடம் எப்போதும் பரிவு இருக்கிறது. அவர்களுக்கு இடையூறு நேராது தடுக்க வேண்டுமென்று கண்ணும் கருத்துமாக இருக்கிறது என்பதை வலியுறுத்திச் சொல்கிறேன்.

மற்றபடி ஹவுஸ் சர்ஜன் வேலைநிறுத்தம்பற்றி அந்தத் துறை அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் கவனம் செலுத்திக் கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன. சர்க்கார் இது விஷயத்தில் கவனம் செலுத்திக் கொண்டிருப்பதால் இந்த அவையை ஒத்தி வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது அரசின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டதாகையால் இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

MR. SPEAKER: Is Dr. Hande withdrawing notice of the adjournment motion regarding the dismantling of the railway line between Pamban and Dhanushkodi?

DR. H. V. HANDE: Yes, Sir, I am withdrawing the notice.

## (viii) சென்னை மாநகரத்தில் நிலவிய ஆபத்தான சட்ட, ஒழுங்கு நிலவரம்

DR. H. V. HANDE: I have given notice of the following adjournment motion—

"That the business of this House be adjourned to discuss a matter of urgent public importance namely the law and order situation which has attained serious dimensions since two days". I request you to adjourn the business of this House to discuss this important thing so that we can arrive at some measures to be taken to avoid recurrence of such situations. I shall very briefly explain the situation in which this adjournment motion had to be tabled. Even though the Chief Minister has been giving assurances, the students are still very much worried. My misfortune is that the entire thing has happened practically in my constituency, the Park Town constituency. The Medical College students were victims of violence in their hostel which is in my constituency. Veterinary College where firing took place is also in my constituency. Chengalraya Naicker Technical Institute also is in my constituency. My only request is that we want to discuss the whole thing threadbare. Firing is not



1968 மார்ச் 28] [Dr. H. V. Hande]

an ordinary thing and in addition the facts that were supplied by the Chief Minister were incorrect. Last night I and my distinguished friend Dr. Santhosham had the misfortune of going to the General Hospital and seeing the patients. In the hospital we discovered that a student of the Chengalraya Naicker Technical Institute called Puvi Arasu residing at No. 1, Narayanappa Naicken Garden Street, 6th Lane, had two bullet shots. The Chief Minister did not tell us that firing took place. He has got a bullet shot in the tibia and the bullet has been removed. But there is another bullet which has not yet been removed. The Veterinary College students are very much upset and they are in a very, very horrible position.

MR. SPEAKER: I did not want to interrupt you when you were raising the matter. Please remember that you must not give your opinion about any matter which has been referred for judicial decision. Rule 67 says: A member while speaking must not give his opinion about or refer to any matter on which a judicial decision is pending.

DR. H. V. HANDE: Judicial enquiry is not a judicial decision. Action cannot be taken immediately on the basis of the finding in a judicial enquiry. A case will have to be filed and then only the matter will come under '*sub judice*' I have discussed this matter with eminent Advocates. I am prepared to challenge the Speaker on this issue.

MR. SPEAKER: Please don't challenge me. You keep your temper. You are not supposed to challenge the Speaker.

DR. H. V. HANDE: I am sorry. I did not mean that. I withdraw the challenge.

MR. SPEAKER: I would ask you again. It is a very delicate matter. You should not refer to any matter on which a judicial decision is pending. The matter has been referred for judicial decision. You are a doctor. You may not know the Law of Contempt, which operates not from the moment the case starts, but from the moment the possibility of a judicial enquiry arises. The Law of Contempt with which we are now concerned starts
பி. ப. from the time when the possibility of the enquiry arises and the
12-30 possibility has already arisen.

DR. H. V. HANDE: Sir, I have discussed this matter with eminent and distinguished lawyers who have concurred with my view on this matter. First of all, *sub judice* means ..........

MR. SPEAKER: Let the hon. Member please read the rule Does it say *sub judice*? The hon. Member has taken the oath to abide by the Constitution and the rules made under the Constitution must be observed. He is talking about *sub judice*. In the rules it is stated that a Member while speaking must not give his opinion or refer to any matter on which a judicial decision is pending. I have already explained when a judicial

[Mr. Speaker] [1968 மார்ச் 28

matter is supposed to be pending, and according to the Law of Contempt the hon. Member should not say anything which would prejudice the enquiry one way or the other. He should not say anything the moment the possibility of enquiry arises. The hon. Member is talking about *sub judice*. *Sub judice* is different.

DR. H. V. HANDE : I will explain it and I request the Chair to give me a patient hearing. A judicial decision is different from a judicial enquiry.

MR. SPEAKER : When the decision is pending . . . .

DR. H. V. HANDE : Sir, I request you to permit me to explain my point. Have I no right to explain it?

MR. SPEAKER : Let the hon. Member resume his seat. Let us discuss this matter calmly. Let the hon. Member please read the rules. I have not stated that the enquiry is pending. I have stated that the decision is pending. The expression 'decision is pending' means that until that decision is given, the hon. Member should not mention anything about it and the moment the decision is given it is open to him to say anything.

DR. H. V. HANDE : Sir, I will explain the meaning of the expression 'judicial decision'. When a matter goes before the court and the judges have to give a decision on it, then it becomes a judicial decision but a judicial enquiry is not like that. That is my only request.

MR. SPEAKER : I hold that I am on very, very firm ground that a judicial enquiry is the thing contemplated for the purpose of procedure not only in the House of Commons but also in this House. The judicial enquiry now contemplated comes under this.

DR. H. V. HANDE : Sir, according to the rules I have no right to question the ruling of the Hon. Speaker.

MR. SPEAKER : I will explain it. I have written 'பொறுமை'.

நான் எனக்கு முன்னாலே 'பொறுமை', 'பொறுமை' என்று எழுதி வைத்திருக்கிறேன். அதை நான் அடிக்கடி பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆகையினால் எனக்கு ஒன்றும் கோபம் இல்லை. விதிகள் எல்லாவற்றையும் படித்துப் பார்த்தால் அதில் 'சப்-ஜுடிஸ்' வருகிற இடங்கள் தெரியும். விதி 31 (9)-ஐயும், விதி 68 (3) (viii) ஐயும் பாருங்கள். 'சப் ஜுடிஸ்' என்று வருகிறது. ஆகவே 'சப்-ஜுடிஸ்' என்ற சொல் விதி 67 (1)-ல் பயன்படுத்தப்பட வில்லையென்பதைக் கவனியுங்கள். இங்கே 'சுட்டான்', 'செத்தான்' என்று சொன்னால் நீதிபதிக்கு அது முன்கூட்டியே ஒருசார்பான கருத்தைத் தெரிவிக்கக்கூடியதாக இருக்கும். ஆகையால் அதைப்பற்றிச் சொல்லவேண்டாம், நீதிபதியின் தீர்ப்பு வந்தபிறகு பேசலாம்.



1968 மார்ச் 28]

* THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Sir, on a point of order. A judicial decision can be given only when a matter is *sub judice*. Only when the court is seized of the matter, the question of giving a decision comes in. So, if a matter is not *sub judice*, no decision can be given. Now the question is whether this matter is *sub judice* or not. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்தாற்போல் "சப் ஜுடிஸ்" வந்திருக்கிறது, அதையும் படித்துப் பாருங்கள்.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Whatever it is, unless the matter is *sub judice* no judicial decision can be given.

My second point is that the matter which has been referred to for judicial enquiry is with regard to what happened on the 26th instant only and the incidents which took place yesterday and today have not been referred for judicial enquiry. So, the other incidents which happened after the 26th instant can be discussed in this House, even assuming for the purpose of argument that the matter relating to the incidents which took place on the 26th instant is *sub judice* and my view is that it does not come under Law of Contempt.

MR. SPEAKER : Do not confuse between a case pending in a court and the enquiry which is contemplated here.

நீதி விசாரணை நடக்கும் என்று அறிவித்த பிறகு, தப்பாகவோ தவறாகவோ, தெரிந்தோ, தெரியாமலோ நியாயத்தைக் கெடுத்து விடக்கூடாது, நீதியை, நேர்மையை கெடுத்துவிடக்கூடாது என்ற முறையில்தான் அந்த விதியைப் பரவலாகச் செய்திருக்கிறார்கள். அதைப்பற்றியெல்லாம் என்னுடைய அறைக்கு வந்தால் விரிவாக எடுத்துச் சொல்லமுடியும். விரிவாக இங்கு நான் சொல்லவில்லை. பேசுங்கள், பேசும்பொழுது இதுமாதிரியில்லாமல் விசாரணையைப் பாதிக்காத கருத்தாகச் சொல்லுங்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, இப்பொழுது குறிப்பிட்ட மேட்டர் சப் ஜுடிஸா என்பதுதான். அப்படியில்லை. Apart from the question whether this is a matter which is *sub judice* or a matter for judicial enquiry, we read in the Press that one Thiru Somasundaram was appointed to go into the matter That is not a matter on which we should act. It must first be published in the *Fort. St. George Gazette* that so and so has been appointed to go into the matter and that has not taken place. I am sure, the Hon. Chief Minister who is ** enough to accept. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்ற வார்த்தை சரியல்ல, அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடவேண்டும்.

THIRU K. VINAYAKAM : Yes, Sir, I will alter it as 'kind enough'.

MR. SPEAKER : The word ** would be removed from the proceedings.

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

[1968 மார்ச் 28

திரு. கே. விநாயகம் : அந்த வார்த்தையை வேண்டுமானால் எடுத்துவிடுங்கள்.

Sir, I know he is an honest man.

Now, my point of order is that it is only when a person has been given a job and the terms of reference and the necessary records have been sent to him and he has started the enquiry, the matter becomes *sub judice*. Till that period this matter is the public property of anybody and hon. Members have got every right to talk about it on the floor of the House. That is my contention. What is your ruling?

THE HON. THIRU C. N. ANNADURAI : I am not concerned with the strong words used by my hon. Friend Mr. Vinayakam. I know sometimes he gets excited a little and at other times he pretends to be excited but is not really excited.

As for his appeal to the Speaker, I leave it to the Speaker.

DR. H. V. HANDE : I shall continue. I do not want to question the ruling of the Speaker.

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. My point of order is on a different point not concerned with the ruling. Your ruling comes in only when a person has been appointed, the matter is referred to him and he is set on the job. My information is that nobody has been appointed and nobody has been asked to go into the question. Therefore there is no question of a judicial enquiry and '*sub judice*'.

THE HON. THIRU C. N. ANNADURAI : On this point I think the hon. Member can take my word. A Judge has been appointed. But the moment I made the announcement the process starts and appointing somebody is a matter of routine or detail. I do not know about the legality. There seems to be too much discussion about law. I know some rudiments of law, but not details about law. To my lay mind it appears that the moment an announcement is made that a judicial enquiry will be set up, the process starts and it does not matter whether the name of the person to be appointed is given or not. But even in that matter I may tell my hon. Friend that a Judge has been appointed.

DR. H. V. HANDE : I am glad about the categorical answer given by the Chief Minister. The terms of reference to the judicial enquiry should include the incidents that took place before the announcement. The setting up of the judicial enquiry was announced at 10-30 or 11 o' clock yesterday morning. Before that the students actually had no protection. That is the whole difficulty.

THE HON. THIRU C. N. ANNADURAI : The terms of reference to the judicial enquiry will include all these incidents also. It is not as if one or two incidents only are to be enquired into. I have said in my statement in Tamil 'nigazhcithtodar'—the chain of incidents that took place. It will be all inclusive and



1968 மார்ச் 28] [Thiru C. N. Annadurai]

I may assure my hon. Friend that the incidents that he has made reference to will also be included in the enquiry. I am not going to leave out any one incident; everything will be enquired into.

DR. H. V. HANDE : The House Surgeons are about to go on a strike as a result of this. They are so much dissatisfied and the position is so grave. I will be very grateful if the Chief Minister comes with me to the Veterinary College Hostel and the Medical College Hostel. The boys have absolutely broken down. The whole thing has been smashed. It is better we give some sort of orders to the police authorities. I will quote one sentence from the editorial in 'The Hindu', dated 28th March 1968 : 'If every time there are outbursts of violence and intimidation, the police are found to be ineffective or slow to safeguard the safety of person and property until long after the damage has been done, to whom is the citizen to turn for protection?' This is a very, very touchy point. About two hundred people collected The Commissioner of Police was standing there. Wash basins were broken and watches were taken away. Yesterday when the statement of the Chief Minister was made, I did not question but wanted to encourage the Chief Minister for whom I have got the greatest respect. When he should have known that they had not shot in the air, should we not be supplied with such information? We are entitled to know the honest truth. I request the Chief Minister to visit the hospital. The condition of one boy is very serious and the Medical College students are very much broken down. I request the Chief Minister to go there with me and also to the Veterinary College Hostel and the Chengalraya Naicker Technical Institute. Only if we adjourn the business of the House, we will be able to find out why exactly the Commissioner of Police did not take any Police though he knew full well. The photo in 'The Hindu' shows that one man is picking a stone and another man is having a stick in his hand and the Commissioner of Police is asking him not to do anything. This is the sin committed by the Commissioner of Police. The boys completely depend upon us. These boys have so much uneasy feeling that we should save them and boost their morale. A number of telephone calls including trunk calls from the parents of the boys are being received and I am completely broken down. I beg of the Chief Minister to come with me and see that the boys' morale is boosted. It is not to disturb the business of the Government that I have tabled this motion. The boys have used me as a tool to communicate this to the Chief Minister. They like him as a father and an elder brother and their affection is there. I request the Chief Minister to come to the hospital and see that the boys' morale is boosted. I want the adjournment of the business of this House.

THE HON. THIRU C. N. ANNADURAI : I am very much in agreement with the hon. Members of this House that the students are now thinking that this Government or individually myself have let them down. I am quite confident that this feeling will not last for many days. I have got the fullest sympathy

for them. As the hon. Member Dr. Hande said, they are affectionate towards me. During times of stress and strain, such feelings are bound to be vitiated by illogical thinking. I would submit to this House that I will do everything possible within my power to relieve the affliction to which the students have been put.

As for the remark that all the facts were not presented, I have already said that the information I got was incomplete, I am yet gathering all the information and when I get a full account, I will take the House into my confidence and present it.

My hon. Friend has said that I should go with him to the Hospital and see the students. Even yesterday night myself and Dr. Ramamurthi, who is attending on these students, were thinking of going there. But the hospital authorities and Mr. Ramamurthi himself said that the students were so infuriated that they did not even want to see me. They have put up some placards 'we do not want to see the Ministers' or such other things. I know that the affection that they have got towards me cannot be annihilated all of a sudden in this manner. I feel very, very sorry that this estrangement, however temporary it might be, has taken place and I will try to regain their affection and confidence not by mere words but by attending to their needs and going to their succour in every possible way. When they are very excited and when they think that they have been let down, I would request the hon. Member Dr. Hande to think over his proposal again and let him meet the students and ask them whether I can come and meet them. I want very much to meet them. As a matter of fact I am getting telephonic information every half an hour about their condition and I have instructed all the medical authorities to bestow their most delicate attention for the recovery of those students.

I am in full sympathy with the plight of the students and I can assure the students through this House that nothing would be wanting in me to go to their succour and to remove their affliction. Yet I must say that today they believe or they have been led to believe that I have let them down. I think truth will dawn on them very soon and they will realise that.

The hon. Member has stated that he has been shocked to hear about these incidents. I may say that I was also shocked and dazed and I cannot find out the chain of events that took place two days ago and I am still gathering information about it. But let me assure the hon. Member, this House and the students outside that I still continue to have my affection for them and I believe their affection towards me will not be damaged by these incidents. I will do what all that lies in my power to go to their succour and to remove their affliction and also to find out the damages done to them bodily, their property and their dignity. No stone will be left unturned until the truth is brought out and that is the purpose for which a judicial enquiry has been set up. Therefore, I would request the hon. Member not to press for the adjournment of the House because everything possible is being



done by the Government and by me individually. I will take every one of the hon. Members into confidence and if they want me to do a particular thing they may instruct me to do it and they can guide me in this matter and I am always at their disposal. So, I do not think that there is any necessity for the adjournment of this House.

MR. SPEAKER: After the statement made by the Hon. Chief Minister, I hold that it is not necessary to adjourn the business of the House to discuss this matter.

கடைசியாக திரு. மார்டின் அவர்கள் அவர்களுடைய ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவரும்போது, டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு 67-வது விதியின்கீழ் சொன்ன தீர்ப்பை அனுசரித்து, அந்த விதியைக் கடைப்பிடித்து, ஏதாவது விளக்கம் தெரிவிக்க வேண்டுமென்றால் விதிக்கு உட்பட்டு தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

## (ix) சென்னையில் மாணவர்கள்-அரசு பேருந்து தொழிலாளர்கள் மோதல்

திரு. டி. மார்டின்: ஸ்பீக்கர் சார், தங்கள் அனுமதியின் பேரில், தமிழகச் சட்டப்பேரவையின் 42-வது விதியின்படி கீழ்க்கண்ட அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கக் கோரி முன்னறிவிக்கை கொடுத்துள்ளேன்:

"சென்னையில் 25—3—1968-லும் 26—3—1968-லும் மாணவர்களுக்கும் தமிழக அரசின் பேருந்து தொழிலாளர்களுக்கும் நடந்த மோதல்".

தலைவரவர்களே, ஏற்கெனவே கொடுத்த தீர்ப்பைப்பற்றிக் கூறினீர்கள். அந்தத் தீர்ப்பை என் கவனத்தில் வைத்துத்தான் நானும் என்னுடைய இந்த மோஷனைக் குறித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மாணவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் நடந்த போராட்டம் ஒரு பக்கம் இருக்கட்டும். அதில் குற்றவாளி யார், அல்லது யார் தவறிழைத்தவர்கள் என்பது பற்றி நீதி விசாரணை நடத்தட்டும். இந்த மாமன்றத்திலே நேற்று, நாங்கள் மாணவர்களுக்குப் பாதுகாப்புத் தரப்படவில்லை, மாணவர்களுடைய விடுதிகளிலிருந்து மாணவர்கள் எல்லோரும் வெளியே சென்றிருக்கிறார்கள். போலீஸ் பாதுகாப்பு போட்டும் பாதுகாப்பு கொடுக்கப்படாத நிலையில் சட்டக்கல்லூரி மாணவர்கள் விடுதியிலேயிருந்து வெளியே சென்றுவிட்டார்கள். திரும்பிச் செல்லுவதற்கு அச்சப்படுகிறார்கள். வெளியூரிலிருந்து வந்த மாணவர்கள் நிலை என்ன, அவர்கள் எங்கே, எவ்வாறு இடம் பெறுவார்கள் என்று கேட்டோம். அதே நிலைதான் இன்றும் நீடித்துக் கொண்டிருக்கிறது. இந்த மாணவர்கள் விடுதியிலேயிருந்து வெளியே சென்ற மாணவர்கள் எத்தனை பேர்கள், அவர்கள் நிலைமை என்ன என்பதுபற்றி எந்தவிதமான விவரமும் தரப்படவில்லை. குறிப்

[திரு. டி. மார்டின்] [1968 மார்ச் 28

பாக, விடுதிகளில் இருந்த மாணவர்களுடைய பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளின் நிலை என்ன, அவர்களுக்கு என்ன நேர்ந்தது, என்று தெரியாத நிலையில் வெளியூர்களில் இருக்கிறார்கள். துப்பாக்கிச் சூட்டினாலும், வேறு எந்தத் தாக்குதலினாலும் காயம் பட்டவர்கள் எத்தனை பேர் என்ற புள்ளிவிவரங்கள், எத்தனை பேர்கள் எந்தவிதத்தில் காயம் அடைந்தார்கள், துப்பாக்கிச் சூட்டினால் காயம் அடைந்தார்களா, இல்லையென்றால் வேறுவிதத்தில் தாக்குதலுக்கு ஆளானார்களா, சாதாரண காயம் எத்தனைபேருக்கு கடுங்காயம் எத்தனைபேருக்கு என்ற விவரங்கள், எத்தனை பேர்களுக்கு ஆஸ்பத்திரிகளில் உதவி செய்து கொடுக்கப்படுகிறது என்ற விவரங்களைச் சர்க்கார் முக்கியமாக அளிக்க வேண்டும். வெளியூர்களில் இருக்கின்ற பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகள் எப்படியிருக்கிறார்களோ என்று நினைக்கிறார்கள். காரணம், இந்த மாதிரியான சம்பவத்தில் மாணவர்கள் சிலர் இறந்து விட்டார்களோ என்று அச்சப்படக்கூடிய நிலைமை பொது மக்களிடையே பரவலாகப் பேசப்படுகிறது. இதையெல்லாம் நீக்குமுகத்தான் அரசு இந்தப் புள்ளிவிவரங்களைக் கொடுக்க வேண்டும். தொழிலாளர்களாக இருந்தாலும் சரி,, அதைப்பற்றி நல்ல விவரங்களைத் தரவேண்டும். இந்த மாதிரியான புள்ளி விவரங்களைத் தருவதால் நீதி விசாரணைக்குக் குந்தகம் ஏற்படாது.

மேலும் ஒன்று, மாணவர்களின் இல்லங்களில் தீ வைக்கப் பட்டது, பொருள்கள் நாசப்படுத்தப்பட்டன, படித்துக் கொண்டிருந்த புத்தகங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன, நோட்ஸ்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன, இப்படியிருந்தால் அவர்கள் எந்தவிதமாகப் பரீட்சைக்குத் தயார் செய்துகொண்டு வருவார்கள் என்பதை அரசு ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒற்றிவைப்புப் பிரேரணையை நாங்கள் கொடுக்கும்பொழு, சாதாரண நடைமுறையில் இது வரவில்லை என்பதுதான் என் கருத்து. அப்படி வந்திருந்தால், இது நடைமுறை காரியத்திற்குட்பட்டது, இதற்கு இன்னின்ன செய்திருக்கிறோம் என்று சொல்லி இருக்கலாம். அந்தவிதத்தில் சொல்லத் தவறிவிட்டதால் இதைப்பற்றி மாணவர்கள் சமுதாயத்திற்காகவும், மாணவர்களை சென்னைக்கு அனுப்பிய வெளியூர் பெற்றோர் சமுதாயத்திற்காகவும் நான் இந்த அவையில் இந்தப் பிரச்சினையைக் கொண்டுவந்து விவாதிப்பதற்கு சபை அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவரவர்களே, கனம் மார்டின் அவர்கள் மாணவர்களிலே யார்யாருக்கு, எந்தவிதமான விபத்துக்கள், இடுக்கண்கள் ஏற்பட்டன, சொத்து இழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்ற புள்ளிவிவரத்தை அவைக்குத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அது நியாயமான கோரிக்கை. அந்தப் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டுத் தரப்படும்.



1968 மார்ச் 28]

[மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை]

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவரவர்களே; அவர்கள் கேட்ட விவரங்கள், அவர்கள் கூறியபடி நீதி விசாரணைக்குக் குந்தகமில்லாத முறையில் தரப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நேற்றே கொடுத்திருக்கலாமே என்று அவர்கள் கேட்காவிட்டாலும் இயற்கையாக இந்த எண்ணம் எழும். நேற்றையதினம் காலையிலே இந்த அவையும், பிற்பகலிலே மேலவையும், அது முடிந்தவுடனே கோவையில் தொழிலாளர்கள் முதலாளிமார்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட கூட்டமும் ஆக இவை முடிவதற்கு இரவு ஒரு மணியாயிற்று. ஆகையால்தான் இந்த விவரங்களை யெல்லாம் உடனடியாகத் தேவையென்ற கேட்டுப் பெற இயலாமற்போய்விட்டது. இன்று இந்த விவரங்களைக் கேட்டு எவ்வளவு விரைவில் கிடைக்கிறதோ அவ்வளவு விரைவிலே அந்தப் புள்ளிவிவரங்களை, சம்பவங்களில் ஏற்பட்ட சொத்து இழப்பீடுகள், மாணவர்களில் யார் துப்பாக்கிச் சூட்டிற்கு ஆளானார்கள், யார் தாக்குதலுக்கு ஆளானார்கள், யாருக்கு சாதாரண காயம், யாருக்கு அதிகமான காயம் என்ற இந்த விவரங்களெல்லாம் சேகரித்துத் தரப்படும்.

அதைப்போலவே பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஆறுதல் அளிப்பதற்குக் கனம் உறுப்பினரவர்கள் என்னென்ன விதத்திலே ஆறுதல் அளிக்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னாலும் அந்த முறையிலே அந்த மாணவர்களுக்கு ஆறுதல் அளிக்கவும், சொத்து இழப்பீடுகளுக்கு ஈடு செய்யும் முறையில் உதவி அளிக்கவும் தயாராக இந்த அரசு இருக்கிறது. இந்த அளவிற்கு நடைமுறையிலே இவைகளெல்லாம் செய்யக்கூடிய விஷயங்களாக இருப்பதால் அவையை ஒற்றிவைக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உரைக்குப் பிறகு—விளக்க உரைக்குப் பிறகு—இப் பேரவையை இதற்காக ஒத்திவைக்கத் தேவையில்லையென்று நான் கருதுகிறேன்.

2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

(iii) முதலமைச்சரின் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் குறித்து அவைக்கு அறிவிக்கப்படாமை.

THIRU K. VINAYAKAM : I raise a point of order. This House has been meeting for the past one month and we are coming almost to the end. There is a healthy convention or practice adopted by the Ministers in all democratic countries. Whenever they take important decisions on policy or whenever they want to make statements on matters of policy, that should be made on the floor of the Legislature and not outside. On a former occasion about six months back I catalogued a list about Ministers making their policy statements outside. The Chief Minister said that they were novices in the art of administration and that they

would maintain healthy conventions in future. That is what we were given to understand. Now we understand from the Press that he is going to America. (Interruption). You had better tutor the Chief Minister to answer me. The Law Minister tells me that it is not a policy. Does the Law Minister know that so far the Chief Minister has not gone out of India? This trip to America is a landmark in his life. He is going to America, Japan, Los Angles, Hollywood, etc. This is a very important event at any rate in his life. I would take it as a credit if I were taken along with him. That is a different matter. It is nothing but fairness, it is nothing but justice and he owes a duty to this House that he should announce it on the floor of this House. This is not a serious matter.

Thiru K. VINAYAKAM : As regards the judicial enquiry, under the Commission of Enquiry Act of 1952 a Judge has to be appointed. Is not the Chief Minister bound to make this announcement on the floor of this House? Should we learn it from the Press that Mr. Somasundaram is going to conduct the enquiry? The Chief Minister is showing scant courtesy to this House. In a quick current of events, we forget sometimes. After all our Chief Minister is also a human being and he is likely to forget. But this kind of statement must be made on the floor of this House. Will this at least be taken for future guidance?

The Hon. Thiru C. N. ANNADURAI : As for the appointment of a judicial officer, it was only this morning that the papers came to me. He should be in the know of things as to how Government papers move from one table to another. There was delay only in that way. If I had not made that statement in the House, it was not with the intention of not being courteous to the Members. I have got the greatest courtesy for the Members and their courtesy towards me is so sweet that they want to know my every movement.

The hon. Member Mr. Vinayakam referred to my American trip said that this was a historic event and that this was the first time that I would be going out of India. Three years ago I had gone to Japan, Cambodia and other places. I have been invited by the American Government and by the Yale University and the programmes are being finalised. The date of starting the programme in the United States and the programme in Japan are being finalised. When these things are finalised, I will certainly make the announcement in the House because I would like to carry with me not two or three shirts and dhoties but your goodwill. Without your good wishes I am nothing in foreign countries, and with your good wishes I will be welcomed and I may be guided by your good wishes. The fact that I have not made an announcement in the House is due only to the fact that the programme has not yet been finalised. I have accepted the invitation. As soon as I accepted the invitation and even before my addressing them, my hon. Friend raised the question and in the reply I thought that I was making that announcement. He



said that I am going to the United States and asked what arrangements were going to be made to look after my portfolio, whether new Ministers were going to be appointed and what were the names of those lucky members. As soon as the details are worked out I will certainly take the House into my confidence because I need not only your confidence but also your goodwill.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று நான்கு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் உள்ளன. இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்குமேல் ஒரு நாளைக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்று விதி இருக்கிறது. அந்த விதியைத் தளர்த்துவதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

### 4. அரசினர் தீர்மானம்

### பேரவை விதி 41 (3) தளர்த்தப்படுதல்

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, "சட்டப்பேரவையின் 41(3)-வது விதியின்கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்று உள்ளதை இன்று தளர்த்த வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இனி, கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. முதலில் திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள்.

### 5. கவன ஈர்ப்பு

### (i) தஞ்சை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம்

**திரு. ஆ. கு. சுப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரமும் பொது முக்கியமும் வாய்ந்த காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் பெரும் மழை பெய்து ஆறுகள் உடைப்பால் கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கி சாகுபடியான பயிர்கள், தானியங்கள் சேதமடைந்தும், வீடுகள் இடிந்தும் விவசாயிகளுக்குப் பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிலவரி ரத்து செய்யவும் குத்தகையைக் குறைத்தும் வீடு இழந்தவர்களுக்கு நிவாரணமளிக்கவும் சர்க்கார் கடனை ஒத்திவைக்கவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 1967, டிசம்பர் திங்கள் முதல் வாரத்தில் பெய்த பெரு மழையின் காரணமாக ஆறுகள் உடைப் பெடுத்தன. கிராமங்களில் வெள்ளம் புகுந்து பயிர்களும் வீடுகளும் சேதமடைந்தன. குடியானவர்களுக்கு விரயம் நேரிட்டது; எனவே நிலவரித் தள்ளுபடி, கடன் தவணைகள் வசூல் ஒத்திவைப்பு போன்ற துயர் தணிப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவேண்டுமென நாட்ட ஈர்ப்பு அறிவிப்பில் கூறப் பட்டுள்ளது.

1967 டிசம்பர் திங்கள் 7-ம் நாள் முதற்கொண்டு 9-ம் நாள் வரையில் தஞ்சை மாவட்டத்தில் பெருமழை பெய்தது; கடும் புயல் வீசியது. பெரும்பாலும் வெண்ணாறு பாசனத் திட்டத்தைச் சேர்ந்த ஆறுகளிலும் கால்வாய்களிலும் வெள்ளப் பெருக் கெடுத்தது. இதன் விளைவாக, பல இடங்களில் உடைப்புகள் ஏற்பட்டன. அறந்தாங்கி, ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை ஆகிய வட்டங்களிலுள்ள ஏரிகள் நிரம்பி வழிந்தன. ஏறத்தாழ எல்லா ஏரிகளுமே உடைப்பெடுத்துக் கொண்டன. சாலைகளிலும் உடைப்பு ஏற்பட்டது; உடைப்புகளின் விளைவாக பெருவாரியான நெல் வயல்கள் நீரில் மூழ்கின. ஆனால், வெள்ளநீர் சிறிது சிறிதாக வடிந்தது. நாம் அஞ்சிய அளவுக்குப் பயிர்களுக்குக் கடும் சேதம் ஏற்படவில்லை. உடைப்புகள் அனைத்தும் மூடப்பட்டு விட்டன.

*நிலவரித் தள்ளுபடி.*—வெள்ளத்தினாலும் புயலினாலும் பாதிக்கப் பட்ட வயல்களை நேரில் சென்று பார்வையிட்டு, தகுந்த நேர்வு களில் வரித்தள்ளுபடி வழங்க ஏற்பாடு செய்யுமாறு தஞ்சை மாவட்டக் கலெக்டர் சார்நிலை அதிகாரிகளுக்கு ஏற்கெனவே ஆணைகள் பிறப்பித்துள்ளார்.

**பயிரிடும் குத்தகைக்காரர்களுக்குச் சாதகமாகக் குத்தகைத் தொகையைக் குறைத்தல்.**— தமிழ் நாடு 1956-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) சட்டத்தின் 5(2) பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளபடி, சீர்கேடான பருவ நிலைகளினால் குறிப்பாக எப்பயிரின் மொத்த விளைச்சல் 25 சத வீதத்திற்கும் மேற்பட்டு குறைகிறதோ, நிலக்கிழார் அப் பயிருக்கு அந்த நிலம் குறித்து அக் கால அளவுக்காக, பயிரிடும் குத்தகைக் காரர் தமக்குச் செலுத்த வேண்டிய நியாயவாரத்தை தகுந்த விகிதாச்சாரத்தில் குறைத்துக் கொள்ளக் கடமைப்பட்டவராவார். இம்மாநிலத்தில் "பொதுப் பொறுப்பான்மைக் கழகங்களினால்" பேணிவரப்படும் நிலங்களுக்கான குத்தகைக்காரர்கள் குறித்தும் தமிழ்நாடு 1961-ம் ஆண்டு பொதுப் பொறுப்பாண்மை கழகங்கள் (உழவு நிலங்கள் நிர்வாகத்தினை முறைப் படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 57/1961) 2(25) பிரிவில் இதே மாதிரியான விதித்துறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே, சீர்கேடான பருவ நிலைகளினால் ஊறு ஏற்பட்டுள்ள தனிப்பட்ட குத்தகைக் காரர்கள், சூழ்நிலைக்கேற்ப நிலக்கிழாரை, அல்லது பொதுப் பொறுப்பாண்மைக் கழகத்தை அல்லது குத்தகை நீதிமன்றத்தை



அணுகி துயர்தணிப்புக்கு வகை செய்யுமாறு வேண்டலாம். ஒவ்வொரு குத்தகைக்காரருக்கும் அவரவர் சூழ்நிலைக்கேற்ப எந்த அளவுக்குத் துயர் தணிப்பு வழங்கலாம் என்பதுபற்றி குத்தகை நீதிமன்றம் முடிவுசெய்யும். எனவே, குத்தகைக்காரர்கள் செலுத்த வேண்டிய நியாய வாரத்தைத் தள்ளுபடி செய்வதற்கு அரசாங்கத்திற்கு எத்தகைய சூழ்நிலையிலும் அதிகாரம் கிடையாது. ஆகவே அரசாங்கம் இதில் தலையிட முடியாது. மேலும், குத்தகைத் தொகை நிலுவையாகவுள்ளது என்னும் காரணத்தினாலேயே குத்தகைக்காரர்களை நிலத்திலிருந்து வெளியேற்றக் கூடாதென்று தமிழ்நாடு 1966-ம் ஆண்டு 11-வது சட்டம் அதாவது தமிழ்நாடு 1966-ம் ஆண்டு சாகுபடிக் குத்தகைக் காரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பு அளித்தல்) சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இது தாற்காலிகமான நடவடிக்கையாகும். இச்சட்டம் 1966-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 19-ம் நாள் முதற்கொண்டு இரண்டாண்டுகளாகச் செயலிலிருந்து வருகின்றது.

*சேதமடைந்த வீடுகளை மீண்டும் கட்டிக்கொள்வதற்கான துயர் தணிப்புத் தொகை வழங்குதல்.*—ஏறத்தாழ 8,705 வீடுகள் முழுதும் சேதமடைந்தன. 19,849 வீடுகள் ஓரளவுக்குச் சேதமடைந்தன. வீடிழந்தோருக்கு ரொக்க உதவியாக ரூ. 4,71,895 வழங்கப் பட்டது. அவர்களுக்கு "ஆடை" மானியமாக ரூ. 3,510 வழங்கப் பட்டது. இவை தவிர, உணவு வழங்குவதற்காக ரூ. 5,913.15 செலவு செய்யப்பட்டது. மேலும், வெள்ளத்தினால் சூழப்பட்ட பகுதிகளி லிருந்து மக்களை வெளியேற்றுவதற்கான செலவு போன்ற தொடர்பான செலவுகளுக்காக ரூ. 9,726.44 செலவிடப்பட்டது. 6,227.37 ஏக்கர் பரப்பளவு சம்பாப் பயிரும் 9,810.19 ஏக்கர் தாளடிப் பயிரும் நீரில் மூழ்கின என்றும், 2,588.97 ஏக்கர் பரப்பளவில் சம்பாப்பயிரும் 38.47 ஏக்கர் பரப்பளவில் தாளடிப்பயிரும் வெள்ளம் காரணமாக மணல், அடித்துவிட்டதென்றும் மதிப்பிடப் படுகிறது. தாளடிப்பயிரை மீண்டும் பயிரிடுவதற்காக விதைகள் உரங்கள் உருவில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 60-க்கு மேற்படாத வட்டி யில்லாக் கடன் வழங்குவதற்காக ரூ. 1 லட்சம் ஒதுக்க அரசாங்கம் ஒப்புதல் வழங்கியுள்ளது. வருவாய்த்துறை 1968, ஜனவரி 5-ம் நாளன்று வெளியிட்ட 17-ம் எண். அரசாங்க ஆணையில் இந்த ஒப்புதல் வழங்கப்பட்டது. மணல் அடித்த நிலங்களைப் பண்படுத்துவதற்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 200-க்கு மேற்படாத வகையில் கடன் வழங்குவது குறித்து ரூ. 50,000 ஒதுக்கவும் அரசாங்கம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

**கடன் தவணை வசூலை ஒத்தி வைத்தல்.**—ஆறுகள், கால்வாய்கள், ஏரிகள் ஆகியவை பெருமளவில் உடைப்பெடுத்த இடங்களில் மட்டுந்தான் பயிர்களுக்குச் சேதமேற்பட்டது. பயிர்கள் நீரில் மூழ்கிய இடங்களில் வெள்ளநீர் சிறிதுசிறிதாக வடித்துவிட்டது. மேலும், இம் மாவட்டத்தின் மொத்த நன்செய் நிலப்பரப்பளவு

1968 மார்ச் 28] [திரு. கே. ஏ. மதியழகன்]

9,84,275.61 ஏக்கர் ஆகும். இதில் 18,662 ஏக்கர் பரப்பளவே வெள்ளத்தினாலும் புயலினாலும் பாதிக்கப்பட்டது. இம் மாவட்டத்தின் மொத்த நன்செய் நிலப்பரப்பளவுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் சேதமடைந்த பயிர் நிலங்களின் பரப்பளவு அவ்வளவு கணிசமானதல்ல. எனவே, மேற்சொன்ன விதிகளின் கீழ் கடன் தவணை வசூலை முழுவதும் நிறுத்தி வைக்குமாறு ஆணையிடும் அளவுக்குப் பயிர்கள் பரவலாகச் சேதமடைந்துள்ளன என்று சொல்ல முடியாது. ஆயினும், பெருமளவில் பயிர்ச் சேதம் ஏற்பட்ட குடியானவர்களின் மனுக்கள் அவற்றின் தகுதிகளுக்கிணங்க ஆய்வு செய்யப்பட்டு அவை குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## (ii) வடாற்காடு மாவட்டத்தில் மண் வளப் பாதுகாப்புக் கடன் கால கெடுவுக்கு முன் வசூலிக்கப்படுதல்.

திரு. எஸ். முருகையன் : வடாற்காடு மாவட்டத்தில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்குக் கடன் வழங்கி மண் பாதுகாப்புத் திட்டத்தை நிறைவேற்றிவிட்டு பணத்தை வசூலிக்கும் காலக் கெடுவுக்கு முன்பாகவே வசூல் செய்வதில் அதிகாரிகள் துரிதப்படுத்துவதனால் அந்த வசூலை நிறுத்தி வைக்க வேண்டுமென்பதைப்பற்றி அவசரமும் பொது முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1956-ம் ஆண்டு முதல் வட ஆர்க்காடு மாவட்டத்தின் கீழ்க்கண்ட வட்டங்களில் மண்வளப் பாதுகாப்பு வேலைகள் நிறைவேற்றப்பட்டன:—

(1) வேலூர்
(2) வாலாஜா
(3) திருவண்ணாமலை
(4) போளூர்
(5) குடியாத்தம்
(6) திருப்பத்தூர்

மண்வளப் பாதுகாப்பு வேலை முடிவடைந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அதற்காகச் செலவிடப்பட்ட தொகையில் உழவர்களின் பங்கு சமமான 20 ஆண்டுத் தவணைகளில் வசூலிக்கப்பட்டு வருகிறது. தனிப்பட்ட உழவர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய தொகையினைக் குறிக்கும் உரிமைகள், பொறுப்புகள் குறித்த பதிவேடு வேளாண்மைத் துறையினால் இறுதி செய்யப்பட்ட பிறகு அத் தொகை வருவாய்த்துறை அதிகாரிகளால் வசூலிக்கப்படுகிறது.

குடியாத்தம் தாசில்தார் தவிர ஏனைய தாசில்தார்கள் அனைவரும் செலுத்த வேண்டிய தவணைத் தொகையை வசூலிப்ப



1968 மார்ச் 28] [திரு. ஏ. கோவிந்தசாமி]

தற்காக 1-ம் எண் கோரிக்கை விடுத்துள்ளனர். வசூலிக்கப்பட வேண்டிய காலத்திற்கு முன்னர் தவணைத் தொகையைச் செலுத்தும்படியாக எந்த நேர்விலும், உழவர்கள் கேட்கப்படவில்லை.

1—4—1968 அன்று கட்ட வேண்டிய தவணைத் தொகையைக் குடியாத்தம் தாசில்தார் மட்டுமே தனது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு 1933-ம் ஆண்டு நில மேம்பாடு உழவர்களுக்குக் கடன் வழங்குதல் (பொது) விதிகளின் திருத்தத்திற்கிணங்க ஒவ்வொரு நேர்விலும் கடன் வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரி, அசலையும் வட்டியையும், செலுத்துவதற்கு நிச்சயிக்கப்பட்ட ஆண்டுத் தவணைத் தேதி ஓர் ஆண்டில் நிலவரி செலுத்துவதற்குரிய முதல் தேதியாக இயன்றவரை இருக்க வேண்டும். அத் தேதியே அம் மாவட்டத்தில் உள்ள கடன்கள் அனைத்திற்கும் திருப்பிச் செலுத்தும் தேதியாக இருக்க வேண்டும். இத் திருத்தத்தின்படி, ஒவ்வொரு பசலியிலும் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் ஏப்ரல் ஆகிய கிஸ்தி மாதங்களில் நிலுவையாகச் செலுத்தப்பட வேண்டிய கடன் தவணைகள் அனைத்தும் ஜனவரி கிஸ்தியிலேயே செலுத்தப்பட வேண்டியவையாகக் கருதப்பட்டு வசூலிக்கப்பட செலுத்தப்பட வேண்டியவையாகக் கருதப்பட்டு வசூலிக்கப்பட வேண்டும். இந்த அடிப்படையில்தான் குடியாத்தம் தாசில்தார் 1—4—1968-ல் செலுத்தப்பட வேண்டிய தவணைத் தொகையைக் குறிப்பிட்டிருக்கவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கருதுகிறார். மண்வளப்பாதுகாப்புக் கடன்கள், தக்காவிக் கடன்களின்கீழ் வராததால் மேற்கூறிய கட்டளைகள் அந்த நேர்விற்குப் பொருந்தா என்றும், 1—4—1968 அன்று செலுத்த வேண்டிய தவணையை அது செலுத்த வேண்டிய தேதிக்குப் பின்னர் வசூலிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 1—4—1968-ல் சேர வேண்டிய தவணையைக் குறித்து அனுப்பியுள்ள கோரிக்கைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறும் குடியாத்தம் தாசில்தாருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டளையிட்டுள்ளார். தவணைத் தொகை கட்டப்பட வேண்டிய தேதிக்கு இன்னும் சில நாட்களே உள்ளதால் தொகை ஏதேனும் ஏற்கனவே வசூலிக்கப்பட்டிருந்தால், அதனை 1—4—1968-ல் செலுத்த வேண்டிய தவணைத் தொகைக்கு முன்பணமாக வசூலிக்கப்பட்ட தொகையெனக் கருதிக் கொள்ள வேண்டும் என்று அவர் கட்டளையிட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களும் பேரவையின் அனுமதியுடன் 30—3—1968 அன்று எடுத்துக்கொள்ளப்படும்.

## 6. அரசினர் மசோதாக்கள்

### (i) தமிழ்நாடு 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண் 2) மசோதா

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பின்வரும் தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண் 2) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 6/68) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்'.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண். 2) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 6/68) இப்பொழுது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான தொடர் கூட்டத்தினுடைய முடிவைக் குறிப்பிடுகின்ற வகையில் இன்றையதினம் இந்த நிதி ஒதுக்கு மசோதாவை விவாதிக்கின்ற நிலைமையில் நாம் இருக்கிறோம். இன்றையதினம் இந்த விவாதத்தில் கலந்துகொள்கிற நேரத்தில், இந்த அவை சென்ற ஆண்டு எத்தகைய குதூகலமான சூழ்நிலையிலே முதல் அமைச்சர் அவர்களுக்கு இந்த நிதி ஒதுக்கு மசோதாவை நிறைவேற்றித் தந்தோம் என்பதையும், அதே நேரத்தில் இன்றைய தினம் எவ்வளவு வேதனையோடு நிதி ஒதுக்க மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதையும் நான் நினைவுபடுத்திக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

இந்த நிதி தூக்கத்தைச் செய்து முதல் அமைச்சர் அவர்களிடம் இவ்வளவு பெரிய தொகையை இந்த நாட்டினுடைய நன்மைக்காக, எதிர்காலத்திற்காக, வருங்காலத்திற்காக அளிக்கின்ற இந்த நேரத்தில் இந்த அவைக்கும், இந்த அரசுக்கும், இங்கே இருக்கிற எல்லோருக்கும் இருக்கிற மிகப் பெரிய கடமை இந்தப் பணம் தக்க முறையிலே, நல்ல முறையிலே செலவழிக்கப் படுகிறதா என்பதுதான். அதனைப் பொறுத்தவரையில் நம்முடைய எண்ணங்கள் எப்படி இருந்தாலும் ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய நிர்வாகத்தில் இருக்கின்ற போலீஸ் துறையைப் பொறுத்தவரையில், ஒரு பெரிய குறையைச் சொல்லாமல் இருக்க முடியாது. நம்முடைய போலீஸ் துறையைப் பொறுத்தவரையில் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் நடந்துகொண்டிருக்கிற முறையைப் பார்க்கும்போது, அது போலீசின், நாட்டினுடைய 'மொரால்', தரத்தைக் குறைவுபடுத்துவதாக இருக்கிறது, என்பதை அறிவிக்காமல் இருக்க முடியாது. சென்ற ஆண்டு, சென்னை நகரிலே பல இடங்களிலே தீ விபத்து ஏற்பட்டது. அதைப் பற்றி முதல் அமைச்சர் அவையில் அறிக்கை கொடுத்தார்கள். அதற்குப் பிறகு நம்முடைய போலீஸ் துறை அதிகாரிகள், அரசியல் வாதிகளைப் போல, தங்களை நினைத்துக் கொண்டு, பத்திரிகை நிருபர்களை அழைத்து வைத்துக் கொண்டு, நிகழ்ச்சிகளுக்கு அரசியல் உருவம் கொடுக்கும் வகையில் ஒரு அறிக்கையில், தன் எண்ணங்களை வெளியிட்டார்கள். அறியாமல், தெரியாமல் நடந்து விட்டதா என்றால் இல்லை. நேற்றையதினம்கூட போலீஸ் கமிஷனர் மறுபடியும் சென்னையில்



நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிக்கூட, பத்திரிகை நிருபர்களை வைத்துக் கொண்டு, அவரே ஒரு அறிக்கை தந்திருக்கிறார்; குறிப்புகள் தந்திருக்கிறார்கள். முதல் அமைச்சர் பொறுப்புணர்ச்சியோடு இந்த அவையிலே குறிப்பிட்ட நிகழ்ச்சிபற்றி ஜுடிஷியல் என்க்வயரிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் பிறகு எல்லா அரசியல் கட்சிகளும், முதல் அமைச்சருடைய கரங்களை வலுப்படுத்த வேண்டும் என்று செயல்பட்டிருக்கும் நேரத்தில், இந்தப் போலீஸ் அதிகாரிகள் ஏதோ அரசியல் வாதிகள் போல் அவர்களாக பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுப்பது, ஏதோ அவர்கள் தனியாக இந்த அவைக்கும், முதல் அமைச்சருக்கும் அப்பாற்பட்டவர்கள் போலும், மேலானவர்கள் போலும் நினைத்துக்கொண்டு, அறிக்கை வெளியிடும் நிலைமை இருக்கிறது.

இன்னொரு முக்கியமான நிலைபற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் சில மாதங்களுக்கு முன்பு, இங்கே வார்னிஷ் குடித்து செத்தவர்களைப் பற்றி நினைவு படுத்த விரும்புகிறேன். அப்பொழுது நடந்தது என்ன என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டியது என்னுடைய கடமை என்று நினைக்கிறேன். மது விலக்குச் சட்டத்தின் சில பிரிவுகள், இந்தியன் பீனல் கோடின் உட்பிரிவுகள் நடைமுறைக்கு வாராது, தவறு செய்தவர்கள்மீது நிச்சயமாக உபயோகித்து நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது, குற்றச்சாட்டுகள், கேஸ்கள் போடப்படமாட்டாது, நீங்கள் எல்லாம் தைரியமாக எங்களிடம் வரவேண்டும் என்று போலீசார் அறிக்கை விடுத்தார்கள். அதிலே இருக்கும் மனிதத் தன்மையை நான் உணர்கிறேன். அந்த உயர்ந்த சேவையை வரவேற்கிறேன். "வாருங்கள், மன்னிப்புக் கொடுக்கிறோம், வைத்தியம் செய்கிறோம்' என்று சொன்னார்கள் என்றால், அப்படிச் சொல்லலாம். அப்படிச் செய்வதுதான் மனிதத் தன்மை, ஆனால் செய்வது யார் என்பதில்தான் விளக்கம் தேவை. இந்த அரசு அந்த விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். குறிப்பிட்ட சட்டத்தை அமுல் படுத்துவதோ, அமுல் படுத்தாமல் இருப்பதோ, சில நாட்களுக்கு அல்லது சிலபல காலத்திற்கு, அல்லது ஒரு மணி நேரத்திற்கு என்றாலும் நிறுத்தி வைப்பது, தள்ளி வைப்பது என்பதெல்லாம் அரசுக்கு இருக்கும் உரிமையே அல்லாது, அதிகாரிகள் செய்யக் கூடாது, செய்ய முடியாது. அப்படிச் செய்ய ஆரம்பித்தால் நாட்டில் அமைதி இருக்காது. ஆனால் நம்முடைய மாநிலத்தில் இந்த நாட்டில் இதுவரையில் இல்லாத நிகழ்ச்சிகள் நடைபெற்று இருக்கின்றன. படிப்படியாக இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அதிகாரிகள் எங்கோ சென்றுகொண்டு இருக்கிறார்கள். அரசின் பிடியிலிருந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அரசைத் திருப்திபடுத்த வேண்டும் என்று, அனுமதியில்லாமலே கூட, அவர்களே ஆர்வத்தில், அறியாமலேகூட, நாட்டுக்கு பாதகத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கிறேன்.

அடுத்து, சென்னை நகரில் இரண்டு மூன்று நாட்களாக நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி அதிகமாகக் குறிப்பிட விரும்பவில்லை. அதைப்பற்றி நீதிவிசாரணை இருக்கிறது. ஆனால் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையில் பேசினார்கள், முதல் அமைச்சரிடமும் சொன்னார்கள். அரசாங்க பஸ்கள் யாருடைய அனுமதியின் பேரில், டெப்போவிலிருந்து வெளியே சென்றன என்று கேட்டேன். அன்றைய தினம் வெளியே இருந்திருக்கின்றன. அவை எந்த முறையில் வெளியே எடுக்கப் பட்டன என்க்தற்கான தெளிவான நிலைகள் தெரியவில்லை. அப்படிச் சொல்லாமல் இருப்பதால் மக்கள் அதிகமாக வெறுப்பு அடைகிறார்கள். சட்டத்தைத் தளர்த்திக் கொண்டே போனால், அதிகமாக எண்ணிக்கை சட்டங்களை நிறுத்திவைக்க வேண்டும் என்கிற நிலைகள் ஏற்படும். அது அவைக்கு, நாட்டுக்கு நல்லதல்ல என்பதை எடுத்துச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை, என் கட்சியின் சார்பில்.

இன்னொரு நிகழ்ச்சி. பற்பல நிகழ்ச்சிகள் மாணவர்களைப் பொறுத்தவரையில், தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் நடந்திருக்கின்றன. அதிலே பெரிய கொடுமை, கடந்த இரண்டு நாட்களாக, சென்னை நகரிலே மாணவர்கள் போல இருந்தவர்களும், சிறிய பிள்ளைகளும்—என்னைக் கூட சிலர் சொன்னார்கள், தனியே போகாதே என்று 10, 12 வயதிற் குட்பட்ட குழந்தைகள், அதுவும் பெண் குழந்தைகள், யாராவது கையில் புத்தகம் வைத்துக் கொண்டு போனால், அவர்களை யெல்லாம், அடித்திருக்கிறார்கள். அவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்காமல், போலீஸ்காரர்கள் சும்மா இருந்திருக்கிறார்கள். போட்டோக்களைப் பார்த்தோம். இந்து பத்திரிகையில் போட்டோவைப் பார்த்தோம். இந்தியன் எக்ஸ்ப்ரஸ் பத்திரிகையில் போட்டோவைப் பார்த்தோம். மிகத் தெளிவாக இருக்கிறது. அந்த அளவிற்கு போலீஸ்காரர்கள் செயலற்று இருந்திருக்கிறார்கள். நீதி விசாரணை நடக்க இருக்கிறது. எனக்கு இருக்கும் குறை எல்லாம், முதல் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம், மாணவர்கள் தரப்பில், தொழிலாளர்கள் தரப்பில் நடந்த நிகழ்ச்சிகளுக்கு மட்டும் என்று இல்லாமல், இந்த நீதி விசாரணை போலீஸ் நிர்வாகத்தைப் பற்றிய நீதி விசாரணையாக இருக்க வேண்டும் என்பது தான் அந்த வகையில் செய்யப்படவேண்டும் அவர்கள் பக்கத்தில் இருந்திருக்கிறார்கள். அதிலே பல தொழிலாளர்கள் கைத்தடியோடு நின்று கொண்டு தயாராக இருக்கிறார்கள். ஆனால் போலீஸ் அதிகாரிகள் என்ன செய்தார்கள் என்பதை போட்டோக்களைப் பார்த்தாலே தெளிவாகத் தெரிகிறது. அவர்கள் என்ன செய்தார்கள்? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? ஏன் சமாளிக்கவில்லை? ஏன் தவிர்க்கவில்லை என்பதை யெல்லாம் சொல்ல வேண்டும். போலீசார் தலையிட்டு, அவர்கள் வன்முறையில் ஈடுபடவில்லை என்பது வேறு, முயற்சி எடுத்துத் தடுக்கவில்லை என்பது வேறு. ஆகவே, இந்த நீதி விசாரணை, போலீஸ் துறையையே நீதி விசாரணை செய்ய வேண்டும் என்று பணிவோடு என் கட்சியின் சார்பில் வலியுறுத்த விரும்புகிறேன்.





இன்னொன்று. ஒரு பெரிய கொடுமையான நிகழ்ச்சி நடந்திருக்கிறது. ஒரு பக்கத்திலே எப்படியும் இறந்தவர்களுக்கு நிச்சயமாக அனுதாபம் இருக்கிறது. அதே போல இறக்கக் கூடிய நிலையில் அடிபட்டவர்களுக்கும் அனுதாபம் காட்டக் கூடாது என்று திரும்பி விடக் கூடாது. கடந்த கால நிகழ்ச்சிகளிலே பல இடங்களிலே குத்துயிராகக் கிடந்த மாணவர்களை உடனடியாக எடுத்துச் செல்லக் கூட ஆம்புலன்ஸ் வண்டி அதிகமான தாமதத்திற்குப் பிறகுதான் சென்று இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். போலீஸ் அதிகாரிகள் பார்த்துக் கொண்டே இருந்திருக்கிறார்கள். ஆகவே, மறுமுறையும் வலியுறுத்துவது என்னவென்றால், இந்த நீதி விசாரணை, மாணவர்களைப் பற்றிய நிகழ்ச்சிகளுக்காகவோ, ஆஸ்டல் மாணவர்கள், பஸ் தொழிலாளர்கள் இவர்கள் பற்றியதாகவோ மட்டும் இருக்கக் கூடாது. போலீஸ் நீதி விசாரணையாக இது இருக்க வேண்டும் என்பதை, மறு முறையும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய ஜில்லா கலெக்டர்கள் மிக உயர்ந்த அளவில் வைக்கப்பபட்டிருக்கிறார்கள். அவர்கள் கடந்த காலத்தில் உலகத் தமிழ் மாநாட்டிற்காக வசூல் செய்தார்கள். அவர்கள் அப்படி ஈடுபட்டதை குறைவாகச் சொல்லத் தயாராக இல்லை. அதன் சாதக பாதகங்களை விவாதித்து விட்டோம். ஆனால் ஒன்றைமட்டும் சொல்ல விரும்புகிறேன். பெரிய அளவில் தொகைகளை வசூல் செய்திருக்கிறார்கள். அவை எந்த வகைகளில் செலவழிக்கப் பட்டன, ஒதுக்கிடுகள் செய்யப் பட்டன என்பது ஒருபுறம் இருக்க, அவ்வளவு பெரிய தொகைகளை வசூல் செய்தபோது, மாவட்டக் கலெக்டர்கள் வசூல் செய்வதில் உறுதுணையாக இருந்திருக்கிறார்கள். ஆனால், அதற்கான கணக்குகள் கொடுக்கப் படவில்லை. எங்கே என்று கேட்டால், காங்கிரஸ்காரர்கள் கொடுத்தார்களா என்று கேட்பது முறையல்ல. அதிகமான பணத்தை நம்முடைய அதிகாரிகள் ஒத்துழைத்து வசூல் செய்திருக்கும் போது, அதற்கான கணக்குகள் ஒழுங்கான முறையில், கொடுத்தால்தான் பொது மக்களிடையில் நம்பிக்கை ஏற்படும். அதைப் பற்றி விளக்கங்களைக் கேட்டபோது, அது அரசாங்கக் குழுவினால் நடத்தப் படவில்லை என்று சொன்னார்கள். அம்மாதிரியான குறைகள் தனிப்பட்ட குழுவினால் ஏற்பட்டபொழுதுகூட அதில் அரசு தலையிடுவதற்கு இல்லை யென்ற பதில்தான் கிடைத்தது. இன்றையதினம் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் வரையிலும், இத்தனைக்குப் பிறகும் நம்முடைய பணம் பொறுப்பான முறையில் செலவு செய்யப்படவில்லை, கணக்கை ஒப்படைக்கவில்லை. ஒப்படைக்க முடியாத நிலை இருக்கிறதா? கணக்கை ஒப்படைக்க வேண்டுமென்று வலியுறுத்தி, நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** முடியாத நிலை ஒன்றும் இல்லை. அடுத்த மாதம் 5-ம் தேதியன்று எல்லா குழுக்களும் கூடி அவரவர்கள் வைத்திருக்கின்ற கணக்கைச் சரிபார்த்து,
பி. ப. 1-30 பொதுவாக கணக்கு விவரங்கள் பரிசீலனைக்கு வருகின்றன.

**திரு. க. இராமமூர்த்தி :** முதலமைச்சர் அவர்களுடைய விளக்
கத்திற்கு நன்றி. தாமதமானது என்பதைச் சொல்லி, இத்துடன்
அதை நிறுத்திக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நாட்டினுடைய குடிமகன் என்ற
முறையில், தேசியத்திலே ஒற்றுமை உணர்வு யாருக்கு, எந்த
அளவு இருக்கிறது என்பதைப் பிரித்துச் சொல்ல முடியாது.
ஒற்றுமை உணர்வு இருக்கிறதா, இல்லையா என்று ஆராய நான்
விரும்பவில்லை. முதலமைச்சர் அவர்களுடைய உள்ளத்தைப்
பொறுத்தவரையில் எனக்கு நம்பிக்கையிருக்கிறது. எல்லோருக்
கும் இதை எடுத்துச் சொல்லி உண்டாக்க முடியாது; ஒருவர்
சொல்லி பிறருக்கு ஏற்படுவது அல்ல. நான் ஒன்றைத் தெரிவித்
துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர்களின்
கார்களில் தேசியக்கொடி பறந்தால் பொருத்தமாக இருக்கும்.
இப்போதும் சில கார்களில் பறந்துகொண்டிருக்கிறது. எல்லா
அமைச்சர்களின் கார்களிலும் தேசியக்கொடி பறந்தாகவேண்டும்.
இது ஏதோ காங்கிரஸ்காரன் சொல்லுகிறான் என்ற முறையில்
எடுத்துக் கொள்ளக்கூடாது. ஒருவேளை இந்த அமைச்சர்
களுக்கு ஒற்றுமையில் நம்பிக்கையில்லையோ என்ற எண்ணம்
மற்றவர்களுக்கு ஏற்படக்கூடாதே என்ற எண்ணத்தினால்தான்
நான் இதைக் கூறுகிறேன். காங்கிரஸ்காரர்கள் சொல்லி, நாம்
செய்வதா என்று ஒரு கௌரவப் பிரச்சினையாகக் கொள்ளாமல்
எல்லா அமைச்சர்களும் தங்கள் கார்களில் தேசியக் கொடியைப்
பறக்கவிட வேண்டும். தேசியக் கொடி பறந்தால் மிகவும் பெரு
மையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய நகரத்திற்கு, அல்லது நம்முடைய
மாநிலத்திற்கு குடியரசுத் தலைவர், குடியரசு உதவித் தலைவர்,
மற்றப் பிரமுகர்கள் வருகின்ற நேரங்களில் சட்டமன்ற உறுப்பினர்
களையும் விழாக்களில் பங்குபெறச் செய்து அவர்களை அறிமுகப்
படுத்தி வைக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு
அறிமுகப்படுத்தி வைக்கின்ற வாய்ப்பினைத் தேடித் தருவது மிக
மிக அவசியம், இது மிகவும் நல்ல முறையும் ஆகும். ஆனால்
கடந்த ஜனவரி மாதத்தில் குடியரசுத் தலைவர் அவர்கள் உலகத்
தமிழர் மாநாட்டிற்கு வந்திருந்த நேரத்தில், சட்டமன்ற உறுப்
பினர்களைக் கலந்துரையாடுகின்ற வாய்ப்பு குடியரசுத் தலைவருக்கு
அமைத்துத் தரப்படவில்லை. என்ன காரணத்தாலோ சட்ட
மன்ற உறுப்பினர்களுக்கு அந்த நேரத்தில் உரிய அந்தஸ்து, உரிய
மரியாதை, உரிய வாய்ப்பு அளிக்கப்படவில்லை. இனிமேலா
கிலும், சட்டமன்ற உறுப்பினர்கள் இம்மாதிரி உதாசீனப்படுத்தப்
பட மாட்டார்கள் என்ற உறுதியை அளிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய குடியரசு உதவித் தலைவர் அவர்கள் கூட
இரண்டொரு நாட்களுக்கு முன் நம் மாநிலத்திற்கு வந்தார். அவர்
மீனம்பாக்கம் விமானநிலையத்தில் வந்திறங்கியபோது நம்முடைய



அமைச்சர்கள் வரவேற்றிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய
முதலமைச்சர் அவர்கள் போய் வரவேற்றிருந்தால் இன்னும் சிறப்
பாக இருந்திருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
அவர் ஏதோ மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் போலவோ, அவ
மரியாதை செய்வதுபோலவோ இருக்கும் என்று சந்தேகப்படும்
படியான எண்ணம் பொதுமக்களின் மத்தியில் ஏற்படக்கூடாதே
என்பதற்காக இதை நான் சொல்லுகிறேன். எங்களைப் பொறுத்த
வரையில் உங்களுக்கு மாற்றுக் கட்சிகளை மதிக்கும் எண்ணம் இருக்
கிறது என்பது தெரியும். ஆனால் எதையும் தெரியாதவர்களுக்கு
வேறு மாதிரியான எண்ணம் வரக்கூடாதே என்பதற்காகச்
சொல்லுகிறேன். ஆகவே, இனிமேல் நம்முடைய முதலமைச்சர்
அவர்கள், தனக்கிருக்கும் சங்கடங்களை ஒதுக்கிவிட்டு, நேரில்
சென்று வரவேற்றால் சிறப்பாக இருக்கும் என்பதை மட்டும்
தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்களுடைய
சங்கடங்கள் எனக்கு நன்றாகத் தெரியும். அவர் அண்மையில்
ஆஸ்பத்திரியிலிருந்து வந்திருக்கிறார், அடிக்கடி அங்கு போய்
உடல் நலனைச் சோதித்துக் கொள்ள வேண்டும். இருப்பினும்,
முக்கியமான தலைவர்கள் வரும்போது நேரில் செல்வது பொருத்த
மாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, உலகத் தமிழர் மாநாட்டையொட்டி ஒரு தபால்
தலை வெளியிடப்பட்டது. டெல்லிக்கு அனுப்பப்பட்ட தபால்
எப்படி மாற்றி அனுப்பப்பட்டது? தபால் தலை விளக்கம்
ஆங்கிலத்திலே அனுப்பப்பட்டதா? அரசாங்கத் துறைகள்
ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலையில் செயல்படுகின்றன.
எழுதியது ஒருவர், டைப் செய்தவர் ஒருவர், டிஸ்பேச் செய்தவர்
ஒருவர் என்ற நிலையில் போய்விட்டது. கேட்டால், விசாரணை
செய்து சொல்லுகிறேன் என்று அமைச்சர் அவர்கள் பதிலளித்
தார்கள். தபால் தலையில் ஆரம்பித்த விஷயம் இப்போது நீதிபதி
நியமனத்தில் கொண்டு வந்து முடிந்திருக்கிறது. முக்கியமான
விவகாரத்தைக்கூட ரகசியமாக வைத்துக்கொள்ள முடிய
வில்லை. ரகசியங்கள் நல்ல முறையில் காக்கப்படவில்லை. இனிமேல்
இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படக்கூடாது; இது இந்தச் சபையி
னுடைய உரிமையைப் பாதிக்கிறது. தவறுதலாக நடந்து
விட்டது என்று சொல்ல முடியவில்லை. ஸ்டாம்பு பிரச்சினையால்
நம்முடைய மாநிலத்தின் கௌரவமே தாழ்ந்துவிட்டது.
கீழ்மட்டத்திலோ, உயர்மட்டத்திலோ இருக்கின்ற அதிகாரிகள்
செய்கின்ற தவறுகளினால் இந்த அரசின் கௌரவமும், மாநிலத்
தின் அந்தஸ்தும் கெட்டுவிடுகின்றது. நீதிபதி நியமனத்தைக்
கொண்டு பார்த்தால், நாம் எங்கே போய்க்கொண்டிருக்கிறோம்
என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. இந்த விஷயங்களை நாம்
தெளிவாகவும் விரிவாகவும் ஆராய்ந்து யோசிக்க வேண்டும்.

அடுத்தபடியாக கிராமப் பஞ்சாயத்துக்களைப் பொறுத்த
வரையில், பல இடங்களிலே பஞ்சாயத்துத் தலைவர்கள் பதவி
நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். பதவி நீக்குபவர்களைப்

பொறுத்தவரையில், அவர்கள் மீது இடையிலே நம்பிக்கையில்லையென்றால் நீக்கிவிடுகிறார்கள். ஆனால் நீக்கிவிடுவதற்கான கெஜட் பப்ளிகேஷன் உடனடியாகச் செய்வதில்லை. தலைவர்கள் வலிவு உள்ளவர்களாக இருந்தால், அதற்குள் யார் யாரைப் பார்க்க வேண்டுமோ, அவர்களைப் பார்த்து, தனக்குச் சாதகமாக இருப்பதற்காக, கெஜட் பப்ளிகேஷன் வருவதற்கு மாதக் கணக்கில் நாட்களைத் தள்ளிக்கொண்டு போகிறார்கள். கெஜட் பப்ளிகேஷன் வரும் வரைக்கும் அவர் தலைவராகவே இருந்து வருகிறார். ஆகவே, அரசு உடனடியாக கெஜட் பப்ளிகேஷனில் கவனம் செலுத்தி, பதவி நீக்கம் செய்யப்பட்டவர்களின் விஷயத்தில் கடுமையாக நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய பகுதியில் திண்டிவனம் தாலுக்காவில் ஊரல் என்ற கிராமத்தில் பஞ்சாயத்துத் தலைவர் பதவி நீக்கம் செய்யப்பட்ட பிறகு கெஜட் பப்ளிகேஷன் வராமல் நாட்களைத் தள்ளிக் கொண்டே போகிற நிலைமை இருக்கிறது. கெஜட் பப்ளிகேஷன் வருவதைத் தள்ளி வைப்பதற்காகப் பலவிதமான பிரயத்தனங்கள் முடிந்த அளவில் நடக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, அரசு கெஜட் பப்ளிகேஷன் விஷயத்திலும், பஞ்சாயத்துத் தலைவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டவர்கள் விஷயத்திலும் தகுந்த கவனம் செலுத்தி தக்க நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குப் பிறகு அது செல்லுமா செல்லாதா என்பதைப்பற்றி கோர்ட்டுகள்தான் தீர்மானிக்க வேண்டும். ஆனால் அதிகாரிகளே அதை ஆராய்வதாகச் சொல்லி கெஜெட் பப்ளிகேஷனை நிறுத்தி வைப்பது, காலங் கடத்திக் கொண்டே வருவது என்பது சரியல்ல. இதுபோல எங்கள் திண்டிவனம் பகுதியில் ஊரால் பஞ்சாயத்தைப் பொறுத்து நடந்து வருகிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, என்னுடைய பகுதியில் வீடூர் கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்தைப் பொறுத்தவரையில் ஹரிஜனங்களுக்கும், மற்ற இந்துக்களுக்கும் உள்ள மாச்சரியம் பெரிய அளவில் வளர்ந்துவிட்டது. இன்னமும் பகைமை அவர்களிடம் தீரவில்லை என்றாலும் ஓராண்டுக் காலத்திற்குப் பிறகு இப்போது சிறிதளவு அமைதி அந்தப் பகுதியில் நிலவுகிறது. இருதரப்பாருமே துணையின்றிப் போவதற்குப் பயம். அதிகாரிகள் வருகிறார்கள். கலெக்டர்கள் வருகிறார்கள். ஆயினும் அரசியல் தலையீடுகளின் காரணமாக அங்கு ஒரு சுமுகமான நிலையை உண்டாக்க முடியவில்லை. இது போன்ற நிலையில்லாது அமைதியான நிலைமையை இந்த அரசு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தப் பெரிய தொகையை முதல் அமைச்சர் அவர்களிடம் ஒப்படைக்கிறோம். எப்போதும் எங்களுடைய ஒத்துழைப்பையும் தருகிறோம். நகரத்தில் ஏற்பட்ட தீ விபத்துகளுக்கு முன்பு நாங்கள்தான்.



காரணம் என அரசியல் பகையை வைத்துச் சொன்னார்களே அதுபோல நாங்கள் அரசியல் பகை காரணமாக எந்தக் குற்றச் சாட்டையும் வைக்கவில்லை. எங்கள் பொறுப்பை உணர்ந்து செயல்படுகிறோம். ஆளும் கட்சியினரும் எங்களுடன் ஒத்துழைக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது குடியரசுத் துணைத் தலைவர் அவர்களை வரவேற்க நான் செல்லாதது—அவர் அளவிலே சந்தேகத்தை எழுப்பவில்லை என்றாலும் மற்றவர்களுக்கு அதிருப்தியை அளிக்கக் கூடும் என்றார்கள். நான் போக முடியாததற்கான காரணங்களைக் கூடச் சொன்னார்கள். குடியரசுத் துணைத் தலைவர் அவர்களிடத்தில் எனக்கு அதிக மதிப்பும், மரியாதையும் உண்டு என்பதை இதற்கு முன் பல முறை அவரை வரவேற்க நான் சென்றிருப்பதில் இருந்து தெரியும். அப்பேர்ப்பட்ட சந்தேகம் வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **திரு. டி. எஸ். ஆதிமூலம் :** தலைவரவர்களே, இந்த வருஷ வரவு-செலவுத் திட்டத்தைப் பார்க்கிறபோது ரொம்பவும் அதிர்ச்சியாக இருக்கிறது. அதிர்ச்சி எதனால் என்று சொன்னால் கடந்த ஏழெட்டு வருஷங்களில் வருமானம் எவ்வளவு வேகமாகச் சர்க்காருக்குக் கூடிக்கொண்டே வந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது தான். குறிப்பாக 1960-இல் அரசாங்கத்திற்கு 80 கோடி ரூபாய்தான் வருமானம் என்றால் எட்டு வருஷங்கள் கழித்து இன்றைக்கு 248 கோடி ரூபாய் வருவாய் வருகிறது. இது எதனாலே, இது தேசத்தின் அபிவிருத்தியா? அல்லது பலவிதமாக விலைவாசிகள் கூடி வந்திருப்பதனால் ஏற்படுகிற போலிப் பணமா என்பதைக் கவனிக்க வேண்டும். வருமானம் பெருகிக் கொண்டே வந்து, அதன்மூலம் விலைவாசிகள் பெருகி சர்க்கார் சிப்பந்திகளுக்கும், மற்றவர்களுக்கும் டி.ஏ.வை உயர்த்துவது, சம்பளத்தை உயர்த்துவது என்றே ஆகி, பெரிய துன்பத்தை அடையக் கூடாது. இதை முதல் அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டால் நல்லது.

அடுத்து, இந்த பட்ஜெட்டில் அதிகமான வருமானம் இருந்தாலும் அபிவிருத்தி வேலைகளுக்குக் குறைவாகத்தான் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்வதற்குக் கஷ்டமாக இருக்கிறது. உதாரணமாக திருநெல்வேலி ஜில்லாவில் இரண்டு நீர்ப்பாசனத் திட்ட வேலைகள் நடக்கின்றன. ராமா நதித் திட்டம், கருணை ஆறு திட்டம் ஆகிய இந்த இரண்டு அணைத் திட்டங்களுக்கும் பத்து லட்சம், பத்து லட்சம், என்று 20 லட்ச ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த 20 லட்சம் ரூபாயை வைத்துக்கொண்டு என்ன செய்வது ? ரோடு போடுகிற வேலை, சில ப்ளாண்ட்ஸ் அண்டு டூல்ஸ், சிப்பந்திகள் சம்பளம் இவற்றுக்கே சரியாகிவிடும், இந்த நான்கு வருஷத்தில் கூட வேலை முடிகிற வாய்ப்பு ஏற்படாது. இந்த முறையில், விவசாய அபிவிருத்தி ஏற்படவேண்டும் என்று சொல்கிற காலத்தில், நடப்பது நல்லதா

என்பதை யோசிக்கவேண்டும். நல்ல வேளையாக மராமத்திலாக்கா மந்திரி அவர்களும் இங்கிருக்கிறார்கள். ஆகவே கூடுமான வரையில் 50 லட்சம் ரூபாயாவது ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், அபிவிருத்தி வேலைகளுக்கு ஜாஸ்தி பணம் ஒதுக்கப்படவில்லை என்பதற்கு இன்னும் ஒரு சிறிய உதாரணத்தைக் காட்ட விரும்புகிறேன். இந்த ராஜ்யம் பூராவிலும் உள்ள பஞ்சாயத்து யூனியன் ரோடுகளை எடுத்துக்கொள்வதில் 300 மைல் நீளமுள்ள ரோடுகளை எடுத்துக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ராஜ்யத்தில் 375 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. ஒரு யூனியனுக்கு ஒரு மைல் ரோடு கூட எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். பட்டினவாசிகளுக்குத்தான் எல்லா வசதிகளும் செய்யப்படுகின்றன. கிராமாந்திரங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. பட்டினத்தில் உள்ளவர்களுக்கு வசதி செய்யவேண்டியது அவசியம் தான். அதே நேரத்தில் கிராமாந்திரங்கள் அதிகமான அளவுக்குப் புறக்கணிக்கப்படக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் இதற்கெல்லாம் பணக் கஷ்டம் என்ற ஒரு வார்த்தையைச் சொல்ல ஆரம்பிப்பீர்கள். பணக் கஷ்டத்தைக் கூடுமானவரையில் சமாளிக்க முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம் தீவிரமாகக் கவனம் செலுத்தினால் சமாளிக்கலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

முருகேச முதலியார் அவர்களுடைய ரிப்போர்ட், பஞ்சாயத்து முறைகள் எப்படி இருக்கவேண்டுமென்று வழிசொல்லக்கூடிய அளவில் இருக்கிறது. அது சட்டசபை மெம்பர்களுக்குத் தரப்படவும் இல்லை, அதை அமல் நடத்துவதற்கும் யோசனை இல்லை. அதில் பார்த்தால், வேண்டாத உத்தியோகங்கள் இருக்கின்றன, அவற்றையெல்லாம் கணிசமாகக் குறைக்கலாம் என்றும், பஞ்சாயத்து யூனியன் நல்ல முறையில் இயங்குவதற்கு உருப்படியான யோசனைகளையும் அதிலே சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற முறை, கிராமாந்திர மக்கள் எதிர்பார்த்த அளவுக்குச் சேவை செய்வதாக இல்லை. முருகேச முதலியார் ரிப்போர்ட், கிராமாந்தியங்களுக்கு, முக்கியமாக விவசாயிகளுக்கு, நன்மை செய்யக்கூடிய சில நல்ல அம்சங்களைக் கொண்டிருக்கிறது. பணச் சிக்கனம் என்று சொல்லுகிறபோது ஸ்லீப்பிங் ஆபீசர்ஸ் சும்மா உட்கார்ந்துகொண்டு சம்பளம் வாங்கும் அதிகாரிகளை எடுத்து விடலாம். அதைச் செய்வதற்குத் தைரியம் வேண்டும். சில பேர்களை எடுத்து விட்டால் என்ன விளைவுகள் வரும், காங்கிரசாலே சோஷியல் வெல்பேர் ஒர்க்கர்கள் அவர்களுக்கு வேண்டியவர்கள் சேர்க்கப்பட்டிருந்தால் அந்த வேலைகளை எடுத்துவிடுகிறபோது காங்கிரஸ் நண்பர்கள் வருத்தப்பட்டுக் கொள்வார்களே என்றெல்லாம் நினைத்துக்கொண்டு இந்த ரிப்போர்ட்டை ஒரு வருஷம் கழித்துப் பார்த்துக்கொள்ளலாம் என்ற முறையில் முதலமைச்சர் அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.





அந்த ரிப்போர்ட் ஒரு நல்ல ரிப்போர்ட். அதை எல்லோருக்கும் கொடுத்து அதை அமல் நடத்தி சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டால் அதன்மூலம் சர்க்காருக்கு அதிகத் தொகை மிச்சப்படும். சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட் நாள்பட விரிந்துகொண்டே போகிறது. எங்கே பார்த்தாலும், நான் இதைச் சொல்கிறபோது மிகவும் வேதனையோடு சொல்கிறேன்.

நமது முதலமைச்சர் அவர்கள் 2, 3, நாட்களாக ரொம்பவும் வேதனையோடு இருக்கிறார்கள். இந்த தர்மர் ஆட்சியில்—தர்மகர்த்தா என்று நான் முகஸ்துதிக்காகச் சொல்லவில்லை—தர்மகர்த்தாவாக இருக்கக்கூடிய அவர்கள் அமெரிக்கா போகக்கூடிய இந்த நேரத்திலே, மாணவர்கள் துன்பத்தைக் கண்டு வேதனைப்படுகிற நேரத்திலே, அதையும் நான் பார்த்துக்கொண்டு இருப்பதால் நானும் மிகவும் வேதனைக்கு ஆளாயிருக்கிறேன். இருந்தாலும் நிர்வாக விஷயங்களிலே நாங்கள் சொல்லவேண்டிய நிர்ப்பந்தங்கள் வருகின்றன.

சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட் மூலம் அநேக கஷ்டங்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாயை அந்த பூதம் விழுங்கிக் கொண்டிருக்கிறது. பறக்கின்றன ஜீப்கள், புராக்யூர்மெண்ட் தாசில்தார்கள் என்று அம்பாசமுத்திரத்திலே அரை டஜன் தாசில்தார்கள் 10 ஜீப்களைப் போட்டுக்கொண்டு விரட்டுகிறார்கள். மீண்டும் மீண்டும் இதை நான் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. இந்தப் பிரச்சினையைப்பற்றி கடைசித் தடவையாகப் பேசிவிடுவது என்று தீர்மானித்திருக்கிறேன். இந்த சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டை எடுத்துவிட்டு சிக்கனம் செய்யுங்கள். முதலில் வந்த பொழுது சிக்கனம் செய்தீர்கள், ரெவின்யூ டிபார்ட்மெண்டிலே கைவைத்தீர்கள். அது நல்லமுறையிலே இயங்கக்கூடிய டிபார்ட்மெண்ட். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் திருந்தச் சொல்லவில்லை. மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னீர்கள். காலையிலும் சொன்னேன், இப்பொழுதும் சொல்கிறேன் என்று சொன்னீர்கள். மீண்டும் மீண்டும் ஒன்றைப்பற்றிச் சொல்லக்கூடாது என்பது நம்முடைய 85-வது விதி. ஆகவே தாங்கள் அடுத்த கருத்தைச் சொல்லுங்கள்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட்டில் சிக்கனம் செய்யலாம். சிக்கனத்திற்கு சில கொள்கைகளையும் நடைமுறைகளையும் மாற்றியமைக்கவேண்டும். அப்படி மாற்றினால் தான் மக்கள் தாராளமான முறையில் தகுந்த மாதிரியான அரிசியோ நெல்லோ வாங்கி உபயோகிக்க முடியும். ஆகவே நடைமுறைகளைத் தளர்த்தவேண்டும்.

நம்முடைய ராஜ்யத்திலே உள்ள ரைஸ்மில் சொந்தக்காரர்கள் ஒரு யோசனையைத் தெரிவித்திருப்பதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். அவர்களை இலகுவாக கொள்முதல் செய்யச் சொல்ல

லாம். திருநெல்வேலி, மதுரையில் நடக்கிற கொள்முதல்பற்றிய கஷ்டங்களை தி.மு.க. நண்பர்கள் இங்கே வந்து சரியாகச் சொல்லவில்லை என்று நினைக்கிறேன். ரைஸ்மில்காரர்களை 5 லட்சம் அல்லது 6 லட்சம் டன் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்துவிட்டு மற்ற ஆர்டரைத் தளர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிகக்னம் மிகவும் அவசியம். அதையும் செய்ய வேண்டும். ரேஷன் சரியாகப் போடுவதும் இல்லை. தற்பொழுது ஒரு ஜில்லாவில் 1,000 கிராமங்கள் இருக்கின்றன. 300, 400 கிராமங்களுக்குத்தான் ரேஷன் கிடைக்கிறது. மீதி 600 கிராமங்களில் என்ன செய்வார்கள்? 10 நாட்களுக்குமுன் ஒரு சம்பவம் ஏற்பட்டது. அதை நான் ரொம்பவும் புண்பட்ட மனத்தோடு சொல்லிக்கொள்கிறேன். ஒரு பனையேறி, அவன் பனையேறித்தான் ஜீவனம் செய்யவேண்டுமென்ற நிலையில் உள்ள ஒருவர், எப்படியோ கடன் வாங்கி, சாப்பாட்டுக்கு வேண்டுமே என்று ஒரு கோட்டை நெல்—எங்கள் ஜில்லாவிலே ஒரு கோட்டை என்று சொல்வார்கள்—சர்க்கார் விலையை விட 10 ரூபாய் அதிகமாக கோட்டைக்குக் கொடுத்து 71 ரூபாய் வீதம் விலைக்கு வாங்கி வீட்டில் கொண்டுபோய் வைத்தான். அவனுக்கு ஒரே சந்தோஷம். கடன் 100 ரூபாய் எங்கேயோ போய் கேட்டு இருக்கிறான், கிடைத்துவிட்டது. அவன் ஆறு மாதங்களுக்குக் குழந்தை குட்டிகளோடு அதை வைத்துக்கொண்டு சாப்பிடலாம் என்று வைத்திருந்தான். இது ப்ரொக்யூர்மெண்ட் தாசில்தாருக்குத் தெரிந்தது, மூன்று கோட்டை நெல் இருக்கிறது என்று சொல்லி அங்கேசென்றார்கள். மூன்று கோட்டை நெல் இருந்தால் அவர்களுக்கு என்ன என்று கேட்கிறேன். சாப்பாட்டுக்குத் தானே வாங்கி வைத்திருக்கிறார்கள்? உடனே ஜீப்பைக் கொண்டு போய் வீட்டுக்குள் நுழைந்து, அந்த வீட்டுக்குள் நுழைந்த தாசில்தாரை செல்ப்-டிபென்ஸ்க்காக என்ன செய்து இருந்தாலும் குற்றமாகுமா, அந்த தாசில்தாரை, அந்த ஆளை உதைத்திருக்க வேண்டும், நெல்லைப் பறிமுதல் செய்து கொண்டுபோய் விட்டார்கள். ஏழை பனையேறி அழுதுகொண்டு என்னிடம் வந்து சொன்னான். நான் முதலமைச்சரிடம் சொல்லி உனக்காக உதவி செய்கிறேன் என்று சொன்னேன். சாப்பாட்டுக்கு ரேஷன் கொடுப்பதும் இல்லை, அதே நேரத்திலே நெல்லை விலைக்கு வாங்கி சாப்பாட்டுக்காக வைத்தால் அதையும் பறித்துக்கொண்டு போய் விட்டால் என்ன செய்வது? இன்றைக்கு அவர்களுடைய பெண்டு பிள்ளைகள் அவ்வளவு பெரும் பட்டினி . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** கனம் உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, அந்த அதிகாரியை உதைத்து இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** இந்த விஷயத்தில் நான் வலியுறுத்துவதற்காக அவ்வளவு தூரம் சொன்னது. அப்படி இயற்கை உடையவன் அல்ல நான். என்னை யார் அடிக்க வந்தாலும் நான் அடி வாங்கிக்கொள்வேன். அந்த வார்த்தையைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு நான் பெருமை அடைகிறேன். நிலைமையி



னுடைய வேகம் அப்படி இருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்காகத்தான் அப்படிச் சொன்னேன். அந்த ஏழையை நீங்கள் காப்பாற்ற வேண்டும்.

இது விஷயமாக சாவதானமாக மனு கொடுக்கிறேன். அவன் பி. ப. 2-00
நெல்லைப் பிடுங்கிக் கொண்டது மட்டுமல்லாமல் அவன் பேரில் க்ரிமினல் ப்ரொசீடிங்க்ஸ் எடுக்கப் போகிறார்களாம். "ஏன் சர்க்காரின் விலையை விட பத்து ரூபாய் கூடுதல் விலைக்கு வாங்கினாய்" என்று அவனுக்கு ரேஷன் கொடுக்கவில்லை. பின் அவன் என்ன மண்ணையா தின்னுவான்? நெல் தொகையை நான் சாக்காரிடம் சொல்லி வாங்கித் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். எங்கள் ஜில்லா கலெக்டரிடமிருந்து நியாயம் பெறமுடியாது என்று எனக்குத் தெரியும். சர்க்கார் சட்டதிட்டங்களுக்கு கட்டுப் பட்டு நடப்பதோடு மட்டுமல்ல, அவர் கொஞ்சம் கடுமையான ஆளாக இருக்கிறார். அவன் சாப்பாட்டுக்குக் கஷ்டப்படுகிறானே என்று நான் நெல் வாங்கித் தருகிறேன் என்று சொல்லியிருக் கிறேன். அப்படி அவனிடம் சமாதானம் சொல்லாவிட்டால் அவன் தற்கொலை கூட செய்து கொண்டிருப்பான். நடப்பு இப்படி இருக் கிறது. கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் சொல்லிவிட்டேன். அங்கு லெவி நோட்டீஸ் கொடுத்து நெல்லை எடுத்துக் கொண்டு, பின்னரும் இரண்டாவது லெவி நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அம்பா சமுத்திரம் தாலுகாவில் (ஹாரெஸ்மெண்ட்) துன்பங்கள் கடுமை யாக இருக்கின்றன. ஒன்றைக் குறிப்பிட்டு விட்டு முடித்துக் கொள்கிறேன். காலையிலிருந்து ஒன்றுமே சாப்பிடவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சாப்பிடவில்லையானால், சீக்கிரமாக முடிக்கலாமே.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** திருநெல்வேலி கலெக்டர் பற்றி ஏழெட்டு நாட்களுக்கு முன்பு கூட முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒரு தந்தி கொடுத்திருந்தேன். Concocting Criminal Case என்று நான் கூட டெஃபமேஷன் கேசில் பிரதிவாதியாக இருந்து தப்பியிருக்கிறேன். கலெக்டரைப் பற்றி இவ்வளவு கடுமையாகச் சொல்கிறேனே, நான் அரசியலுக்கு லாயக்கில்லை என்று நீங்கள் சந்தேகப்படலாம். நிலைமை அவ்வளவு மோசமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Concocting Criminal Case உங்கள்பேரிலா?

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** எங்கள் ஊரில் தொகுதியில் உள்ள பெரிய மனிதர்கள்பேரில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொந்தக் காரியங்களைப் பற்றிச் சொல்லக் கூடாது.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** கல்லிடைக்குறிச்சி பஞ்சாயத்து போர்ட் ஈ.ஓ. (E.O.) வை அங்கு போடக்கூடாது என்பது தாவா, அந்த ஈ.ஓ. இரண்டு வருடங்களுக்கு முன்னால் கல்லிடைக்குறிச்சி

பஞ்சாயத்து போர்டில் இருந்தார். மூன்று மாதத்தில் தகராறு. உடனே ஆர்.டி.ஓ. (R.D.O.) விசாரணை (என்கொயரி). அதன் பேரில் இதே கலெக்டர் அவரை வேறு ஒரு ஊருக்கு மாற்றி விட்டார். அவர் இரண்டு வருடங்களில் ஆறு சென்டர்களுக்கு மாற்றப்பட்டு ஏழாவதாக ஆறுமுகனேரிக்குப் போனார். அங்கும் தகராறு பின் அதுபற்றி திரு. எட்மண்ட் அவர்கள் அதை சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வந்து, இங்கிருந்து ஒரு ஸ்பெஷல் ஆபீசர் போய் விசாரித்து, பின்னர் கலெக்டருக்கு ஒரு ஆர்டர் போடப்பட்டது. அவரை எங்கேயாவது மாற்றி விடுங்கள் என்று. கல்லிடைக்குறிச்சி பஞ்சாயத்து போர்ட் பிரசிடென்ட் எம்.ஏ. படித்தவர். எம். ஏ. படித்தவர் இதற்கு வந்திருக்கக்கூடாது. நான்காம் க்ளாஸ் அல்லது ஐந்தாம் க்ளாஸ் படித்துவிட்டு பிரசிடெண்டாக வந்திருக்க வேண்டும். கலெக்டருக்கும் அந்த பிரசிடென்ட்டுக்கும் அபிப்பிராய வித்தியாசம். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவர், நம் முதல் அமைச்சர் அவர்கள் அங்கு வந்திருந்தபோது அவர்களுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார். தி.மு.க. பொதுச் செயலாளர் என்ற முறையில் அவர்கள் கல்லிடைக்குறிச்சிக்கு வந்திருந்தபோது வரவேற்புப் பத்திரம் கொடுத்தார். அந்தக் காலத்தில் இந்த கலெக்டருக்கு காங்கிரஸ் பேரில் ஒரு அட்டாச்மென்ட் இருந்தது. அப்படி இருந்ததில் தப்பில்லை. அப்போது அப்படியிருந்தார், இப்போது இப்படி இருக்கிறார். அதில் அவருக்கு பிரஸிடென்ட்பேரில் ஒரு துவேஷம். ஃபயர் ரிலீப் பண்ட் (Fire Relief Fund)-க்காக முதல் அமைச்சர் அவர்கள் கல்லிடைக் குறிச்சிக்கு வந்திருந்தபோது அந்த பஞ்சாயத்து போர்ட் பிரசிடென்டுக்கு ஒரு ஆசை, எப்படியாவது தாமே சீப் மினிஸ்டரிடம் செக்கை பிரசென்ட் பண்ணவேண்டுமென்று. கலெக்டர் அவருடைய பி.ஏ.-யை அனுப்பி, 'செக்கை வாங்கி வா' என்று சொல்லி அனுப்பினார். அதற்கு இவர் தாமே கொடுக்கப் போவதாகச் சொல்லிவிட்டார். அதற்காக, இந்த பிரசிடெண்ட் 'இன்டிஃபரன்ட்' (Indifferent) ஆக நடந்துகொள்கிறார் என்று ஒரு துவேஷம். அந்த ஈ.ஓ.-வை பழையபடி கல்லிடைக்குறிச்சிக்கு போட்டார். அங்கு அந்த ஈ.ஓ.-வை போடவேண்டாமென்று தி.மு.க. அம்பாசமுத்திரம் தாலுகா செயலாளர் அவர்களும், இன்னும் சில முக்கியஸ்தர்களும் கலெக்டரைக் கேட்டுக்கொண்டார்கள். உடனே கலெக்டர் பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டார். நான் சர்க்காரிடம் தகவல் கொடுத்து டிஸம்பரில் அவரை கோயம்புத்தூருக்கு 'டிரான்ஸ்பர்' (Transfer) செய்தார்கள். பல டி.ஓ.-எழுதியாகிவிட்டது. பின்னர், அங்குள்ள, தி.மு.க.-வைச் சேர்ந்த மெம்பர்களுக்கு, தாலுகா செயலாளர் உள்பட பஞ்சாயத்து பிரசிடெண்டாக வரவேண்டுமென்று நாக்கில் ஜலம் ஊறிற்று. சமீபத்தில்தான் சுதந்திரா தி.மு.க. கூட்டணி என்றிருந்தது. ஆனால் இப்போது அவர்கள் மண்டல காங்கிரஸ் கமிட்டி தலைவரிடம் சென்று எனக்கு நான்கு மெம்பர்களைக் கொடுங்கள் என்று கேட்டு, பிறமனர் பிறமனர் அல்லாதார் என்ற பிரச்சினையைக் கிளப்பி எப்படியாவது அந்த பிரசிடென்டை ஒழித்துக்கட்டிவிடுகிறேன் என்று சொல்லி தி.மு.க. தாலுகா செயலாளர், வேறு கழக மெம்பர்கள் சிலர், ஒரு அட்வகேட் இவர்கள்



எல்லாம் சதி செய்கிறார்கள். பிரசிடெண்ட் என்னிடம் வந்து பழையபடி சொன்னார். ஈ.ஓ.-வை மாற்றவேண்டுமென்று நான் சொன்னேன். 'போமய்யா, பிரசிடெண்ட் பதவியை ராஜிநாமா செய்துவிட்டுப் போங்கள்' என்று. நீங்கள் வசதி படைத்தவர். விவசாயத்தில் நல்ல விவரங்களைத் தெரிந்தவர், நல்ல படித்தவர், வேண்டுமானால் விவசாய அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்களிடம் சொல்லி அமெரிக்காவிற்குப் போய் விவசாய ஆராய்ச்சி செய்வதற்கு உங்களுக்கு ஒரு பாஸ்போர்ட் வாங்கித் தருகிறேன் என்று சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த கல்லிடைக்குறிச்சி விவகாரத்தையெல்லாம் பற்றி இங்கு சொல்லவேண்டாம்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** இந்த விஷயம் உங்களுக்கும் தெரியுமே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எனக்கு தெரிந்தால் கூட, தெரியும், தெரியாது என்று சொல்லமுடியாது. எனக்குப் பேச உரிமை கிடையாது.

Rule 66 of the Assembly Rules says: Every speech must be strictly relevant to the matter before the Assembly.

விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கிற காரியத்திற்கு ஒட்டியதாக இருக்கவேண்டும் என்று விதியிருக்கிறது.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** புருஷன் பெண்டாட்டி உறவைப் பற்றிக்கூட சொல்லலாம் என்றிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது பொது விவாதத்தில்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** சீஃப் மினிஸ்டர் அவர்கள் இங்கிருக்கும்போது விவரங்களைச் சொல்லலாம் என்று சொல்கிறேன். எல்லாவற்றையும் சொல்லியாகிவிட்டது. இனியும் இரண்டு வார்த்தைகளோடு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** புருஷன்-பெண்டாட்டி உறவைப் பற்றி இங்கு பேசலாம் என்று விதியிருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கிடையாது. நீங்கள் பேசத் தொடங்கி 21 நிமிடங்களாகி விட்டன. நீங்கள் பேசிக்கொண்டேயிருப்பதால் எவ்வளவு நேரமாயிற்று என்று உங்களுக்குத் தெரியவில்லை.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** முதல் அமைச்சர் அவர்களிடம் அந்த பஞ்சாயத்து போர்ட் பிரசிடெண்ட் விஷயம் பேசவேண்டுமென்று இருந்தேன். எனக்கு அவர்களோடு தொடர்பு கொள்ள

[திரு. டி. எஸ். ஆதிமூலம்] [1968 மார்ச் 28

நோமில்லை. முதல் அமைச்சர் அவர்களுக்கு இப்போதுள்ள வேதனைக்கிடையில் வேண்டாமென்று விட்டுவிட்டேன். ஒரு ஈ.ஓ. விஷயத்தில் டி.எம்.கே. (D.M.K.) முக்கியஸ்தர்கள், ஒரு அட்வகேட், தாலுகா செயலாளர் இவர்கள் அனாவசியமாக தலையிட்டு, D.R.D. ஆர்டர் போட்டும், ஈ.ஓ.-க்கள் எழுதியும் கலெக்டர் அதைப் பற்றி சட்டை செய்யாமல் இருப்பதும், அந்த பிரசிடெண்ட் பேரில் ஒரு க்ரிமினல் கேஸ் ஏற்பாடு செய்வதற்கும் உள்ள நிலைமை அங்கிருக்கிறது. அங்குள்ள பஞ்சாயத்து போர்ட் மெம்பர்கள் சிலர், சில முக்கியஸ்தர்கள், பழைய பஞ்சாயத்து போர்ட் பிரசிடெண்ட்டு இவர்கள் பேரில் ஒரு பெட்டிஷன் எழுதி கையெழுத்து போட்டு புகார் செய்திருக்கிறார்கள். பெப்ரவரி 23-ல் ஒரு தந்தி போனது. மார்ச் 6-ல் ஜில்லா கலெக்டர் ப்ரொக்யூர்மெண்ட் ப்ரோக்ரஸ் (Procurement Progress)-ஐப் பார்க்க அம்பாசமுத்திரம் போனார். அப்போது அவரை சில டி.எம்.கே. முக்கியஸ்தர்கள் சந்தித்து, தீவிர நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று புகார் சொல்லியிருக்கிறார்கள். எஃப்.ஐ.ஆர். போட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். கலெக்டர் தலையிட்டு F.I.R. போடப்பட்டது. இப்படி ஒரு கலெக்டர் நடந்து கொண்டால் மக்கள் எப்படி வாழமுடியும்? நான் சொன்ன புகார்களை நேரிலே அழைத்து முழு விபரத்தையும் கேளுங்கள். நான் யாரைச் சொல்லுகிறேன் என்பது கனம் முதலமைச்சருக்குத் தெரிந்திருக்கும். என்னையும், அந்த ஆளையும் வைத்து, "என்னய்யா. இவர் இப்படி உளறுகிறாரே, வாஸ்தவம்தானா" என்று கேளுங்கள். இப்படி ஜில்லா கலெக்டர் 3 வருஷங்களாக எங்கள் ஜில்லாவில் இருந்தாகிவிட்டது. ரெவின்யூ போர்டிலிருந்து இன்ஸ்பெக்ஷனுக்குப் போனயிடத்திலே சில புகார்கள். அதுபற்றி ரிப்போர்ட் கேட்டால் வழக்கமாக இதையே 3 வருஷமாக செய்து கொண்டு வருகிறார்கள் என்று எழுதுகிறார். ஊழல்கள் நடந்தும் கலெக்டர் மூன்று வருஷமாக கண்டிஷன் செய்யவில்லை. இதற்கு முன் இரண்டு வருஷமாக நடவடிக்கை எடுக்கவில்லை. சில சிப்பந்திகள் கூட சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள், ரெவின்யூ போர்டு உத்தியோகஸ்தர்கள் என்று கேள்விப்படுகிறேன். சர்க்கார் அதிகாரிகள் யாரையும் குறை சொல்வது யோக்கியதை அல்ல, மரியாதையாகாது என்பதை நான் உணர்வேன். கல்லிடைக்குறிச்சி E.O. விஷயத்தில் பிராமணர்-பிராமணர் அல்லாதவர் என்றெல்லாம் உங்கள் D.M.K. ஆட்கள் பேசிக்கொண்டார்கள். ஆகவே பிரசிடெண்ட் பதவியை ராஜினாமா செய்தாகிவிட்டது. ஆதலால் இப்பொழுது பஞ்சாயத்து போர்டு விஷயத்தைத் தள்ளுங்கள். ஜில்லா கலெக்டரை மாற்றி நல்ல ஜில்லா கலெக்டரைத் தரும்படி கேட்டுக்கொண்டு வணக்கத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் எல்லா விஷயங்களையும் சுருக்காகக் கூறி ஐந்து நிமிடங்களுக்குள் முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.



1968 மார்ச் 28]

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இப்பொழுது எல்லோருக்கும் பசி நேரம். நான் ரொம்ப இரத்தினச் சுருக்க மாகச் சில முக்கியமான விஷயங்களைப்பற்றி மட்டும் கூறி முடித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்பொழுது நம் முன்னால் இருக்கக்கூடியது நிதி ஒதுக்கு மசோதா. அப்படியென்றால், ஒரு மாத காலத்திலே ஒவ்வொரு மானியக் கோரிக்கையின் பெயராலும் பல கோடிக் கணக்கான ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம், ஒட்டு மொத்தமாகச் சேர்த்து இன்று அமைச்சர் அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, இந்தப் பணத்தை நல்ல முறையில், நேர்மையாக, ஒழுங்காக, வேண்டியவர், வேண்டாதவர் என்று பார்க்காமல் இந்த நாட்டை நல்ல முறையிலே செப்பனிடக்கூடிய தன்மையிலே இந்த நாடு முன்னேற்றக்கூடிய அளவிற்கு காரியத்திலே ஈடுபடவேண்டுமென்ற அளவுக்கு அந்தப் பணத்தை ஒப்படைக்கும் தினம், கடைசி தினம். ஆகவே, இந்த நிதி ஒதுக்க மசோதாவை நிறைவேற்றக் கூடிய காலத்திலே, ஒரு வருஷத்திற்கு மேலாகிறது புதிய அமைச்சரவை பதவியேற்றுக்கொண்டு. இந்தக் காலத்திற்குப் பிறகு, நாமெல்லாம் கவலையோடு கவனிக்கக்கூடிய மிக முக்கியமான பிரச்சினை, மாணவர்களுக்கும், தொழிலாளிகளுக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய குழப்பமான, நெருக்கடியான பிரச்சினை. இந்த நேரத்தில்தான் இந்த அமைச்சரவையும் இந்தப் பிரச்சினையிலே நேர்மையான முறையிலே நல்ல கண்ணோட்டத்தோடு தீர்வு காண வேண்டும், அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்று எண்ணி நீதி விசாரணையும் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அதைப் பாராட்டக்கூடிய அதே நேரத்தில், இதற்கு பல மாதங்கள் வரலாம். ஒரு மாதம் நீங்கள் தொழிலாளர்களுக்கு மாத்திரம்தான் சாதகமான முறையில் அணுகுகிறீர்கள், இன்னொரு மாதம் மாணவர்களுக்கு மட்டுமே சாதகமான முறையில் அணுகுகிறீர்கள், பார்வையிடுகிறீர்கள் என்று சொல்லக்கூடும். நான் பார்ப்பதெல்லாம், இரண்டு கண்கள் எப்படியிருக்கின்றனவோ அதைப்போல் மாணவர்களாயினும் சரி, தொழிலாளர்களாயினும் சரி. தொழிலாளர்கள் வயிற்றிலே பிறந்தவர்கள்தான் இந்த மாணவர்கள். விவசாயிகள் வயிற்றிலே பிறந்தவர்கள்தான் இந்த மாணவர்கள். அவர்கள் வேறு, இவர்கள் வேறு என்று பார்க்கக்கூடிய அளவிற்கு நிலைமை கிடையவே கிடையாது. இன்று நம் வயிற்றிலே பிறந்தவர்கள், நம் குடும்பத்திலே சேர்ந்த நம் பிள்ளைகளே, நம் சகோதரர்களே ஐந்தாறு பேர்கள் இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் மத்தியிலே பல குறைபாடுகள் ஏற்படுவது உண்டு. அப்படிக் குறைபாடுகள் ஏற்படக்கூடிய நேரத்திலே அதைத் திருத்துவதற்காக வேண்டி எப்படி எந்த அளவுக்கு முயற்சிகள் எடுத்துக்கொள்கிறோமோ அதேபோன்றுதான் இந்தக் குடும்பத்திற்குச் சம்பந்தப்பட்டவர்கள் என்கிற அடிப்படையிலேதான் நேர்மையாக நீதியைச் செலுத்தக்கூடிய தன்மையிலே, இந்த அமைதியை மீண்டும் கலைக்கும் வண்ணம் இதுபோன்ற ஒரு குழப்பம் ஏற்படாத தன்மையிலும், அமைதியை நிலைநாட்டும் அளவிலேயும் கவனம் செலுத்தக்கூடிய அளவிலே கவனம் செலுத்தியிருக்கிறார்கள் என்பதையறிந்து பாராட்டாமல் இருக்கவே முடியாது.

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1968 மார்ச் 28

ஆகவே, மேலும் அந்தக் குழப்பம் ஏற்படாத அளவுக்கு அமைதியை நிலைநாட்டுவதற்கு வேண்டிய முயற்சி செய்து கொண்டிருக்கக்கூடிய அதே நேரத்திலே அமைதியை நிலைநாட்ட முடியாத தன்மையிலே அதற்கும் பல கேடுகள் வரலாம். இருந்தாலும் அவ்வளவையும் கண்டு தயக்கம் கொள்ளாமல் தைரியமாக இருந்து இதில் கவனம் செலுத்தி கண்டிப்பாக ஒற்றுமையை நிலைநாட்டக்கூடிய அளவிற்குச் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும். அது மாணவர்களாகயிருந்தாலும் சரி, தொழிலாளிகளாகயிருந்தாலும் சரி அல்லது வேறு எந்த அதிகாரிகளாகயிருந்தாலும சரி, டிரான்ஸ்போர்ட் அதிகாரியானாலும் சரி, போலீஸ் அதிகாரியாகயிருந்தாலும் சரி, போலீஸ்காரராக இருந்தாலும் சரி யாராக இருந்தாலும் சரி, அந்த அளவிற்கு யார் காரணஸ்தர்களாகயிருந்திருக்கிறார்கள், அது ஏற்படாமல் தடுப்பதற்கு முயற்சிகள் எடுத்திருக்கிறார்களா, இல்லையா என்பதிலெல்லாம்கூட கவனம் செலுத்தப்பட வேண்டும். அதிகாரிகளை மட்டுமல்ல, மாணவர்களை மட்டுமல்ல, தொழிலாளர்களை மட்டுமல்ல, அரசியல் கட்சி சார்பிலே இருக்கக்கூடியவர்கள்கூட அமைதியை நிலை நாட்ட எந்த அளவுக்கு கவனம் செலுத்தியிருக்கிறார்கள் அல்லது அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தக்கூடிய முறையில் ஈடுபட்டிருக்கிறார்களா என்பதைக் கண்டறியவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது என் வேண்டுகோள். ஆகவே, அதில் தீவிர கவனம் செலுத்தி நீதி விசாரணையிலே நல்ல முறையிலே கவனம் செலுத்த வேண்டுமென்று தாழ்மையோடு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், இந்த தினத்தில் இப்படிப் பணத்தை ஒதுக்கி உங்கள் கையிலே ஒப்படைக்கும்பொழுது இதை நல்லமுறையில் செலவழிக்கப் பயன்படுத்த வேண்டுமே தவிர, ஊதாரித்தனத்திற்காக எடுக்கக்கூடாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஊழல் தன்மை ஏற்பட்டுக்கொண்டிருக்கக் கூடாது. ஆனால் அமைச்சர்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அமைச்சர்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்றாலும் இதுபோன்று ஊழல்கள் ஏற்படக்கூடிய நேரத்திலே அதைச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரும் நேரத்தில் அதில் நல்லமுறையிலே விசாரணை செய்து தீவிர நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய நிலைமையில்லாத காரணத்தினால்தான் ஊழல்கள் மேலும் மேலும் வளர்ந்துகொண்டே போகக்கூடிய நிலையிருக்கிறது. உதாரணமாக 1957-வது வருஷத்திலிருந்து 1962-வது வருஷம் வரை இதே சட்டப்பேரவையில் நான் அங்கத்தினராகயிருந்த காலத்திலே, அந்த நாளிலேயிருந்து அதற்குபிறகு ஏற்பட்டிருக்கக்கூடிய ஊழல்கள் ஒன்றல்ல, இரண்டல்ல. குறிப்பாக மீன் இலாக்காவிலே கொடுத்திருக்கும் படகுகள், ஒருவருக்கு 4, 5 படகுகள், கொடுக்கப்பட்டு பணமே இதுவரையிலே வசூல் செய்ய முடியா நிலைமை. சுமார் 20 இலட்சம் வசூல் செய்யவே கிடையாது. 58-வது ஆண்டிலே ஒரு படகு பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் படகு எங்கேயிருக்கிறது என்று தெரியாத அளவுக்கு இருக்கிறது. இது போன்ற ஊழல் ஒன்றல்ல; இரண்டல்ல; இதை



1968 மார்ச் 28] [திரு. வி. கே. கோதண்டராமன்]

இப்படி வருஷக்கணக்கிலே 10 வருஷம், 15 வருஷம் என்று நீடிக்கவிட்டு அதற்குப் பிறகு ஆடிட்டிற்கு வந்தபிறகு, 'அவர்கள் இறந்து விட்டார்கள், ஆகவே, தள்ளுபடி செய்யப்படுகிறது' என்கிற அளவுக்குப் போகுமானால் ஒரு பக்கத்திலே போதுமான அளவுக்கு நிதி வசதி போதாது என்று சொல்வதும், மறுபக்கத்தில் இப்படி இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்கள் ஊழல் காரணமாக செலவாகக்கூடிய அளவுக்கு இருக்குமானால், இதனுடைய விளைவு என்ன ஆகும் என்பதைப் பற்றி நமது மதிப்பிற்குரிய மீன் இலாகா அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்றும் அதில் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று ஐஸ் பாக்டரிகள் 6 இடத்திலே இருக்கின்றன. அந்த ஐஸ் பாக்டரிகளில் எந்த அளவுக்கு, எவ்வளவு கபாசிட்டி உற்பத்தி செய்யப்பட வேண்டும்? அதே போன்று மீன் குளிர் பதன சாதனங்கள் 6 இடத்தில் இருக்கின்றன. அது எந்த அளவுக்கு இன்றைக்கு உற்பத்திச் செய்யப்படவேண்டும்? அதனுடைய கபாசிட்டி என்ன? 100 சதவிகிதம் உற்பத்தி செய்கின்ற அளவுக்கு இருக்கிற இடத்தில் 5 சதவிகிதம்தான் உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கு இருக்கிறது. 5 சதவிகிதம் அளவுதான் அந்த மீன் குளிர் பதன சாதனத்திலே வைக்கக் கூடிய அளவுக்கு இருந்து வருகிறது. இந்த அளவுக்கு இருக்குமானால் அதில் என்ன கண்காணிப்பு இருக்கிறது? அதைத் தொடர்ந்து வைத்துக் கொண்டே பணத்தை வீண் விரயம் செய்ய வேண்டிய அளவுக்கு இருக்கவேண்டுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. மார்க்கட் ரேட்டில் ஐஸ் ஒரு கிலோ 8 பைசா. இங்கே எவ்வளவு கொடுக்கப்படுகிறது? ரூ. 1-க்கு மேல் அடக்கம். மேட்டூரிலே வருஷத்திற்கு 1¾ இலட்சம் ரூபாய்கள் செலவு செய்யப்படுகிறது. வருவதோ 1 இலட்சம் ரூபாய். இன்னும் இதே நிலை இருக்கிறது. இப்படி ஒவ்வொரு டிபார்ட்மெண்டிலும் பார்ப்போமானால் இன்றைக்கு ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன என்பதை இந்த நேரத்திலே அமைச்சரவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதுபோன்று வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும். இன்றைக்கு எல்லாத் துறையிலும் 55 வயதிற்கு மேலே எக்ஸ்டெண்ட் பண்ணாத அளவுக்கு இருந்தால்தான் படித்தவர்களுக்கு வேலை கொடுக்க முடியும் என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இப்பொழுது விவசாய அபிவிருத்தியைச் செய்து உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பதற்காக அத்தியாவசியமான பல நீர்த்தேக்கங்களை கட்டுகின்ற முயற்சியில் 10 திட்டங்கள் எடுத்துக்கொண்டதற்காக வேண்டி இந்த நீர்ப்பாசன இலாகா அமைச்சர் திரு. கருணாநிதி அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால் பணம் இல்லை, இல்லை என்பதுதான் அவர்களுடைய கவலை. அந்தப் பணத்திற்கு வழி கண்டுபிடித்தாக வேண்டும். எந்த எந்த விஷயத்திலே சீராக இருக்கவேண்டுமென்பதைப் பார்க்கவேண்டும். ஏனென்றால் ஜீவநாடி போன்றது விவசாயம்தான். அந்த விவசாயிகளுக்கு வேண்டியது

நீர்ப்பாசனம்தான். ஆகவே, அதில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். இதிலே அதிகமாக செலவு செய்யக்கூடிய அளவுக்கு நாம் நிலைமையை ஏற்படுத்த வேண்டும். எங்கெல்லாம் விவசாயம் இருக்கின்றதோ அங்கெல்லாம், அதிலும் குறிப்பாக இந்த ஜெனரல் நீர்த் தேக்கங்களுக்கு ரூ. 3,000-க்கு மேல் செலவு செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ரூ. 1,000 அளவிலே பல இடங்களிலே நீர்த் தேக்கங்கள் கட்டக் கூடிய அளவுக்கு இன்றைக்கு நிலைமைகள் இருக்கின்றன. அதையெல்லாம் கட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சனை மிகவும் முக்கியமான பிரச்சனை, நீண்ட நெடுநாளைய பிரச்சனை. மத்திய சர்க்கார் உதவி கிடைக்கிறது, கிடைக்கவில்லையென்பது ஒரு பக்கத்திலே இருந்தாலும்—கைத்தறித் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மத்திய சர்க்கார் உதவி செய்யுமா, செய்யாதா என்பது ஒரு பக்கத்திலே இருந்தாலும், உற்பத்தி செய்யக்கூடிய அந்த நூலை—அந்த நூல் ஆலைகளினுடைய ரேட்டுக்கு குறைந்த விலைக்குக் கொடுத்தாலே போதும். ஓரளவு அந்த நெசவுத் தொழிலாளர்களுடைய தரம் உயர முடியும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்றுதான் பீடி தொழில்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு நாம் நிதி ஒதுக்கீடு செய்கிறோம். ஏற்கெனவே, கோரி கேட்கப்பட்டு--வழங்கப்பட்டதை ஒதுக்கீடு செய்கிறோம். அந்த ஒதுக்கீட்டின் போது பொதுவாக—அதிக நேரம் பேசுவதில்லை. ஏற்கெனவே, விஷயங்களைப்பற்றிப் பேசி முடிந்தாகிவிட்டது. ஏற்கெனவே, எவ்வளவு நிதி கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் செய்திருக்கிறோம். அதை இன்று ஒதுக்கீடு செய்ய வேண்டும். பொதுவாக, ஒரு மணி நேரத்திற்கு மேல் இந்த ஒதுக்கீடு மசோதாவின் மீது விவாதம் இருப்பதில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** அடுத்தபடியாக அங்கத்தினர்களுக்கு இருக்கக்கூடிய வசதி. ஹாஸ்டல்—அது நிரம்ப மோசமாக இருக்கிறது. சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால் சத்திரம் மாதிரி இருக்கிறது. அங்கே இருக்கிற புல், பூண்டு செடியாக இருந்தாலும் சரி, அல்லது எந்த வசதியை எடுத்துக் கொண்டாலும் சரி ஏற்கெனவே இருந்த ஆட்கள் எண்ணிக்கை பாதியாக வெட்டப்பட்டிருக்கிறது. இதுபோன்ற வசதிகள் மிக மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தால்—அதற்கு ஆயிரம் காரணங்கள் இருந்தாலும் அங்கங்கே நேராகப் பார்க்கிற நமக்கு விஷயங்கள் தெரியும். அங்கே கொசு அதிகமாக இருக்கிறது. அதைப்போக்க வேண்டும். நல்ல வசதியைக் கொடுக்க வேண்டும். அரசியல் கட்சிகளுக்கு அங்கே ஒரு ஆபீஸ் ரூம் கேட்டார்கள். கொடுக்கிறோம் கொடுக்கிறோம் என்று சொல்லி ஒரு வருஷம் ஆயிற்று. அது இன்னும் கொடுக்கப்படவில்லை.



உடனடியாக அது கொடுக்கப்பட வேண்டும். அங்கே எங்கள் கட்சியிலே 2 வீடு வேண்டுமென்று கேட்டார்கள். எங்கள் கட்சியிலே 7, 8 பேர் கேட்டும் இன்னும் ஒரு வீடு கூடக் கொடுக்கவில்லை. அதேபோன்று 'லாபியிலே' அரசியல் கட்சி சம்பந்தப்பட்ட பத்திரிகைகள் அத்தனையையும், அது எந்தக் கட்சி பத்திரிகையாக இருந்தாலும் அதை அங்கே போட்டு நாங்கள் படிப்பதற்கு வசதி செய்துதர வேண்டும். அங்கே எங்கள் கட்சிப் பத்திரிகையைப் போடவேண்டும். அதற்குச் செலவாகும் என்றால், வருஷத்திற்கு ரூ. 10, ரூ. 15 ஆகும். இப்பொழுது எங்கள் கட்சியினுடைய பத்திரிகையை வாங்குவதற்குப் பணம் இல்லையென்று சொன்னால், அதனால் மறுக்கக்கூடிய நிலை இருக்குமானால், எங்கள் கருத்தைப் படிக்கக் கூடாது, பார்க்கக் கூடாது, தெரிந்து கொள்ளக் கூடாது என்கிற அளவுக்கு இருக்குமோ என்கிற அளவுக்கு சந்தேகப்படக்கூடிய அளவுக்கு இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து அவைகளையும் கணக்கெடுத்து நல்ல முறையிலே நிர்வாகத்தை நடைபெறச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

* **ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவை ஆதரித்துப் பேசுவதற்கு முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் எனக்கு அனுமதியளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் சார்பில் கூட்டங்கள் நடைபெறுகின்றன. அப்படி நடைபெறுகின்ற நேரத்தில் திருநெல்வேலி மாவட்டம் இரண்டு பகுதியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு கூட்டங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் பங்குகொள்ளக்கூடிய ஒரு நிலை இல்லை. என்னுடைய தொகுதியில் இருக்கிற மூன்று ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் ஒரு பகுதியிலும், ஒரு ஊராட்சி ஒன்றியம் வேறு பகுதியிலும் இருக்கிறது. நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கலந்துகொள்ளுகின்றபொழுது, ஒரு ஊராட்சி ஒன்றியத்தைப் பற்றிய நடவடிக்கைகளில் பங்குகொள்ள முடியாத நிலையில் என்னுடைய சேவை முடக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு பகுதிகளிலும் பங்கு பெறக்கூடிய அளவுக்கு நம்முடைய சட்டத்தில் திருத்தம் கொடுப்பதன் மூலம் எனது சேவையை, என்னைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்கள் அனைவருக்கும் கிடைக்கச் செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

குளங்களைப் பொறுத்தவரையில் 3, 4 குளங்கள் சேர்ந்து நிறைந்த பின்னர் 5-வது குளத்திற்கு தண்ணீர் வரக்கூடிய அளவுக்கு சில குளங்களின் நிலைகள் இருக்கின்றன. 6 பர்லாங், 7 பர்லாங் தூரம் பிரதான கால்வாயிலிருந்து தனிக் கால்வாயை வெட்டிக் கொண்டு வந்து விட்டால், சில குளங்களுக்கு நேரடியாகத் தண்ணீர் வரக்கூடிய நிலை இருக்கிறது. 4, 5 குளங்கள் ஒன்றன்பின் ஒன்று நிரம்பியதற்குப் பிறகு விவசாயம் செய்வது என்பது குளத்துத் தண்ணீரை அடிப்படையாக வைத்து

விவசாயம் செய்கின்றவர்களுக்கு பெரிய நெருக்கடியாக இருக்கிறது. இது போன்ற நெருக்கடி என்னுடைய தொகுதியில் பொன்னைக்குடி குளத்தை அடிப்படையாக வைத்து எழுந்திருக்கிறது. அது ஒரு பெரிய குளம். அந்தக் குளம் நிறைந்துதான் கொங்கண்தான் பாறை குளம் போன்ற குளங்களுக்குத் தண்ணீர் வரவேண்டிய நிலை இருக்கிறது. அதனால் பெரிய குளங்கள் நிறைந்து அதனுடைய மருகால் வழியாக குளங்களுக்குத் தண்ணீர் வரவேண்டுமென்ற நிலையை மாற்றித் தனிக் கால்வாய் ஏற்பாடு செய்தால், ஒவ்வொரு குளத்திலும் தண்ணீர் நிறைந்து விவசாயம் சிறப்பாகச் செய்வதற்கு வாய்ப்பிருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கேள்வி-பதில் நேரத்தில் நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், நாகூர் ஆண்டகைக் கலைக் கல்லூரியைப் பற்றிக் கூறினார்கள். அந்த நாகூர் ஆண்டகைக் கலைக் கல்லூரியைத் துவக்குவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாகூர் தர்காவினுடைய சார்பில் ஒரு தொகை தருவார்கள். முஸ்லிம் பிரமுகர்கள் இடம் நன்கொடை வசூலிக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வருகின்ற கல்வி ஆண்டில் துவக்க இருக்கின்ற 6 புதிய கல்லூரிகளில் ஒன்றாக இந்த நாகூர் ஆண்டகைக் கலைக் கல்லூரியைத் துவக்க வேண்டும். நாகப்பட்டினம், மன்னார்க்குடி, திருத்துறைப்பூண்டி ஆகிய பகுதிகளில் கல்லூரிகள் எதுவும் இல்லை. அதனால், அந்தப் பகுதியிலேயே நாகூர் ஆண்டகைக் கலைக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு அனுமதி கொடுக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு போலீஸ் இலாகாவிலும், பிற இலாக்காக்களிலும் முஸ்லிம் உத்தியோகஸ்தர்களைப் பொறுத்து தொடர்ந்து ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. சென்ற அரசைக் குறை சொல்ல வேண்டும் என்ற அடிப்படையில் நான் சொல்லவில்லை. நாங்கள் முஸ்லிமாக இருக்கிறோம் என்ற அடிப்படையில் எங்களது சமூகத்தைச் சேர்ந்த பல உத்தியோகஸ்தர்களுக்கு ஸீனியாரிடியும் திறமையும் இருந்தும் கூட, அவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுக்காமல் தொடர்ந்து நிறுத்தப்பட்டிருக்கிறது. முதல் அமைச்சரான தாங்கள் இந்தத் துறைக்கு வந்ததற்கு அப்புறமும், இதுபோன்ற நிலையில்தான் இன்னும் வைத்திருக்கிறார்கள். ஆகவே, புதிய அரசு,எங்களது சமூகத்தின்மீது வைத்துள்ள அன்பை அடிப்படையாக வைத்து மட்டும் நான் கேட்கவில்லை, நீதியையும் நேர்மையையும் அடிப்படையாக வைத்துக் கேட்கிறேன். எந்த எந்த இலாக்காக்களில் ஸீனியாரிடி இருந்தும், திறமை இருந்தும் எங்களது சமூகத்தினர் புறக்கணிக்கப்பட்டு, அவர்களுக்கு உத்தியோக உயர்வு தராமல் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு கமிஷன் நியமித்து விசாரணை செய்து நீதி தரவேண்டும் என்று பணிவோடு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், விடுதலை அடைந்த காலத்திலிருந்து எங்களுடைய சமூகத்திற்குத் தொடர்ந்து செய்து வருகிற ஒரு அநீதியை நாங்கள் பல்வேறு நிலைகளில் எடுத்துக் கூறினோம். அது கேட்கப்





படவில்லை. அதே நேரத்தில் புறக்கணிக்கப்பட்டு, மீண்டும் மீண்டும் அந்த நிலை உத்தியோகத் துறையைப் பொறுத்தவரையில் இந்த நாட்டிலே நிலைநாட்டப்பட்டு வந்து இருக்கிற காரணத்தினால், விசேஷமாக நம்முடைய அரசு இந்தத் துறையிலே கவனம் செலுத்தி ஒரு கமிஷனை நியமித்துப் பரிசீலனை செய்து, எங்களது சமூக உத்தியோகஸ்தர்களுக்கு நீதி தரவேண்டுமென்று மீண்டும் கூறி, என்னுடைய உரையை நிறைவுபடுத்திக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அடுத்து, திரு. நல்லசிவன் அவர்கள் சொல்லவேண்டிய கருத்துக்களை இரண்டு அல்லது மூன்று நிமிடங்களுக்குள் கூறி முடித்துக்கொள்வார்கள்.

**திரு. க. ர. நல்லசிவன்** : கடந்த ஒரு வருஷ காலமாக இந்த அரசு குறைந்த அளவு பலாத்காரத்தை உபயோகித்து, சட்டம், அமைதியைப் பாதுகாக்க முயற்சி எடுத்துக்கொண்டுவருவதை உண்மையிலேயே மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அதே நேரத்தில் பலாத்காரத்தை உபயோகப்படுத்தாமலேயே சமூகத்தில் சட்டம் அமைதியை எப்படிப் பாதுகாக்க முடியும் என்ற கருத்தை இன்னொரு சாரார் சொல்லிவருவதையும் நாம் பார்க்கிறோம். கடந்த இரண்டு, மூன்று நாட்களில், என் கடந்த ஒரு வருஷ காலத்தில் ஐந்து, ஆறு சம்பவங்கள் நடந்திருப்பதைப் பார்த்தால், ஏதோ இவைகள் ஒரு தனிப்பட்ட சம்பவங்கள் என்ற அளவில் தான் கருதவேண்டியிருக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம் என்ன? சமூகத்தில் அடித்தளத்தில் பெரிய மாறுதல்கள் வேண்டும். இதற்குக் காரணம் ஒரு இயக்கம், அதனுடைய விளைவினால் தான் இவைகளெல்லாம் ஏற்படுகிறது என்று நாங்கள் கருதுகிறோம். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இது போன்ற சந்தர்ப்பங்களில் மிகக் குறைந்த அளவில் பலாத்காரத்தை உபயோகப்படுத்தி, இவைகளையெல்லாம் ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கருதுகிறார்கள். அதே நோக்கத்தில் தான் தன்னுடைய கடமைகளை ஆற்றிக்கொண்டுவருகிறார்கள். இந்த ராஜ்யத்தில் மட்டும்தான் இம்மாதிரி நிலை என்பது இல்லை. அகில இந்தியாவிலும், எல்லா ராஜ்யங்களிலும் இதுமாதிரி நிலை வளர்ந்துகொண்டிருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இன்றைக்கு காந்தியடிகள் போன்ற ஒரு தலைவர் இல்லை. நாம் அத்தனை பேர்களும் கட்சிபாகுபாடு இல்லாமல் முயற்சி எடுத்துக் கொண்டால்தான் இந்த நிலையிலிருந்து நாம் விடுபட முடியும். ஆனால் நிலைமை அப்படியில்லை. தொழிலாளர்கள் கிளர்ச்சி, மாணவர்கள் கிளர்ச்சி, விவசாயிகளின் கிளர்ச்சி என்று பல்வேறு துறையில் கிளர்ச்சி வளர்ந்துகொண்டிருக்கிறது. இந்த நிலைமைகளெல்லாம் மாறவேண்டுமென்றால், கல்வித் துறையில் ஒரு அடிப்படை மாற்றம் ஏற்படவேண்டும். பொறுப்பு உணர்ச்சியோடு சுருசுருப்பாக வேலை செய்தால் தான் நாடு முன்னேற முடியும் என்பதுபோன்ற கருத்துக்களை மாணவர்கள் மனதில் பதிய வைக்கவேண்டும். கல்வி அடிப்படையில் மாற்றம் வேண்டும்.

இரண்டாவதாக, சமத்வம் ஏற்படவேண்டும். சமூகத்தில் காணப்படுகிற மேலே இருக்கிற வியாதி உள்ளே இருக்கக்கூடிய வெளித்தோற்றம் தான். இதை நினைவில் கொண்டு, சமத்துவத்தை ஏற்படுத்தும்படியான நடவடிக்கைகளை நாம் எவ்வளவு வேகமாக எடுத்துக்கொள்கிறோமோ, அந்த அளவுக்குத் தான் நாடு முன்னேற முடியும், அந்த அடிப்படையில் சமநிலை ஏற்பட்டால் நிச்சயம் அமைதி ஏற்படும், கலவரமற்ற நிலையை உண்டு பண்ணமுடியும்.

அடுத்து, இன்னொரு விஷயத்தைச் சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். 1952-ம் ஆண்டு நமது மூதறிஞர் திரு. ராஜகோபாலாச்சாரி அவர்கள் முதலமைச்சராக பதவியிலிருந்த காலத்தில் மராமத்து இலாகாவைப்பற்றி ஒரு வார்த்தை சொன்னார்கள். அதை நான் மதிப்பிற்குரிய மராமத்து அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கோவை ஜில்லாவிலே மேல் பவானி என்று ஒரு திட்டத்தைப்போட்டு அதற்கென்று பணமும் ஒதுக்கப்பட்டது. அதிலே வேடிக்கையான நிலை என்னவென்றால், பவானி என்று ஒரு ஆறு இருக்கிறது. அந்த ஆற்றில் கீழ்பவானித் திட்டம் போடப்பட்டு 2,07,000 ஏக்கரா பாசனத்திற்குக் கொண்டுவரப்படலாம் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் 1,80,000 ஏக்கராவுக்குத் தான் பாசன வசதி கிடைத்திருக்கிறது. இன்னும் 27,000 ஏக்கராவுக்கு பாசனவசதி கிடைக்கவில்லை. ஆனால், அதே தண்ணீரை வைத்துக் கொண்டு இன்னும் 25,000 ஏக்கருக்கு தண்ணீர் வழங்குவதற்கு இப்பொழுது திட்டம் போடப்படுகிறது. அது இந்த சர்க்கார் வந்ததற்குப் பின்னால் செய்த தவறு என்று நான் சொல்ல வரவில்லை. முன்பிருந்தவர்கள் இதைச் செய்துவிட்டார்கள். இருந்தாலும்கூட, இதில் இந்த சர்க்கார் ஜாக்கிரதையாக கவனித்து, பரிசீலனை செய்து, வேலையில் இறங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் அவர்களுக்கு தண்ணீரும் கொடுக்கவேண்டும். அதற்கு வழி என்ன? முன்பிருந்த பழைய வாய்க்கால்களில் உபயோகப்படுத்தக்கூடிய தண்ணீரைக் கட்டுப் படுத்துவதன் மூலம், சிக்கனப்படுத்துவதன் மூலம் புதியதாக புஞ்சைப் பகுதிகளுக்குத் தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்யலாம். கீழ் பவானி பிரதேசத்தில், ஆங்காங்கு தண்ணீர் இல்லாமல் பஞ்சப் பிரதேசமாகக் காட்சி அளிக்கிறது. அதற்குப் பாதகம் இல்லாமல், பஞ்சைப் பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுக்கக் கூடிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்றால், பழைய கால்வாய்களைச் சீர்திருத்தம் செய்து, தண்ணீரை மிச்சப் படுத்தி அதற்குத் தண்ணீர் வழங்குவது தான் நலமாக இருக்கும். ஆகவே, இந்தத் திட்டத்தை அரசாங்கம் நல்ல முறையிலே பரிசீலனை செய்து, ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : Mr. Speaker, Sir, I wish to say a few words regarding the Appropriation Bill that is now before this House. Firstly, I would make a few observations regarding the law and order situation that is now prevailing in



the State. We have been repeatedly saying on the floor of this House and outside that there is deterioration of law and order in the State and we have been accused both in the Press and here that the Congress Party people are inciting the students and other persons to acts of violence. But I may submit that there is no foundation for this accusation because it is usually a section of the Press that has always been accusing the Congress Party of inciting violence but I do not want to make mention of the papers which are indulging in this act. Suffice it for me to say that even yesterday, it has been brought to the notice of the Hon. Chief Minister that a particular paper, even after our hon. Leader of the Opposition has co-operated with the Government in the matter of issuing a statement for keeping peace and maintaining law and order within the Madras State, has stated that the Congress Party is behind all the mischief and they have been just inciting violence. That should not be the attitude of the Press and we are all very responsible citizens and confidence has been reposed in us and we should be very careful in the matter of discharging all our duties. The law and order situation is highly inflammatory. Of course, this has been going on for a pretty long time and the incidents that have happened on the 25th and on the subsequent days are the subject-matter of enquiry and I do not want to dwell at length on it because that would prejudice the decision of the judge who is to be appointed by the Government to enquire into the matter. But these details ought to have been first mentioned in this House before it was announced to the Press. To-day we saw in the newspapers that one Thiru. B. S. Somasundaram is to be appointed as the judge to enquire into the matter. My submission is, that fact ought to have been mentioned first before this House and the House should have been taken into confidence. I do not want to say anything further in that regard.

The next point that I want to emphasise is with regard to the Consultative Committee which has been announced by the Hon. Chief Minister, I think, in the July session of the Assembly. What has happened to that Consultative Committee? I am sure that it has proved to be abortive and it has not seen the light of the day. I would very much wish that the Government should give an assurance on the floor of the House that they would keep up their word.

Another point which I would mention is the Prohibition policy. I am glad that this Government also are wedded to Prohibition and we welcome it. But one other submission which I want to make is that Prohibition is not strictly enforced especially in the rural areas where illicit distillation and boot-legging is the order of the day. Now, I think, the morale of the Police regarding the detection of prohibition offences and the maintenance of law and order is at the lowest ebb and they are not acting up to the standards that are expected of them in the matter of the maintenance of law and order and they are not taking quick decisions.

The Chief Minister was pleased to say that incidents happened in a lightning manner. The police people are also on the spot, but they fail to take prompt action.

There is one another charge which I would like to make with regard to the police force. Many incidents happen in many places and prompt and quick action will have to be taken. Magistrates and Police officers are empowered under the Criminal Procedure Code to take prompt action. I think the police authorities will be well advised if they invoke the provisions of the law and take prompt action so that occurrence of similar incidents may be averted. When public property and life are in hazard, timely action is called for. I hope the Chief Minister will issue necessary instructions so that the police may act with the utmost vigilance and promptness that is becoming of them.

My next point is with regard to food policy. The Hon. Food Minister has been saying that the food position has improved. So far as Madras is concerned, we should have a separate food zone. The food zone that is now existing should be maintained. We should not enlarge the scope of the food zone. Another point which I want to emphasise is that inter-district movement of foodgrains should be allowed. When the food situation has, according to the Food Minister, improved, no harm will occur if inter-district movement is allowed. I am sure the price of foodgrains will fall if inter-district movement is allowed.

Yet another point which I want to say is regarding industrial policy. Recession has set in in industries. Entrepreneurs are willing to enter the industrial field, and a healthy climate should be maintained so that there will be scope for investment. There is this recession or retarding of progress. Government should take prompt steps to avert this calamity. I do not say that the Government has not taken any steps. The Government has appointed a committee to go into the question of the sick textile mills. Prompt action has been taken. From 1st April 1968 some textile mills are going to be closed and the Government should take prompt action. I understand that the Chief Minister has been discussing this with the mill-owners and other people concerned. Spinning and other mills should be made to continue to work. There should be a healthy climate so that there will be peace in the industrial and other sectors. Trade unions are very active. Politicians have captured the trade union movement and they are creating mischief in the industrial field. That can be seen from the strikes and so many other things that have happened in the past. I do not want to dwell at length on the industrial and labour unrest that is mounting in this country. Sufficient steps should be taken for averting all those things. I am sure that this Government will move the Central Government in the matter of running of the textile mills in the Coimbatore area.



Another point which I want to say is with regard to taking steps for running composite mills. We have started co-operative spinning mills. These units are not functioning very properly and many of them are running at a loss. The Government will be well advised to appoint a high power committee just like the committee appointed to go into the working of the sugar mills. The committee can go into the working of these mills and also enquire about the feasibility of starting composite mills.

I think we should think of having powerlooms. Maharashtra has stolen a march over us and is dumping its goods in Madras and other parts of India. We should think of streamlining in the light of the development that is taking place in other States. I think this matter also will be taken into consideration by the Chief Minister for the future.

We have granted considerable sums of money under various heads. We hope that the Chief Minister will take effective steps to see that the budget allotments are spent within the budget year. We have got a grievance that in certain areas only committed works, works sanctioned by the previous Ministry, are being executed. New works are found wanting in our district. I am sure that the few works that have been sanctioned will receive attention at the hands of the Chief Minister and justice meted out to all sections of the people.

I do not want to take up the time of this honourable House any longer. I hope that the Chief Minister will take prompt steps to restore law and order and see that a healthy climate is created for the workers as well as the students. Some of the students are now despairing. I have had occasion to see some of the incidents and also the students. They are now fear-stricken and panicky. The Chief Minister should take prompt and effective steps to allay their fears so that there may not be any untoward incident when the schools and colleges re-open. It is time that the students also turn a new leaf in their life. I am sure that both the workers and the students will create a healthy climate so that law and order may be maintained and we all may live in peace.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு பற்றிப் போதுமான கொள்கை விளக்கங்கள் பொது விவாதத்தின்போது பெருமளவிற்கு எடுத்துக் கூறப்பட்டு விட்ட காரணத்தால், இப்பொழுது கொள்கை விவாதங்கள் நடை பெறுவது இல்லை. ஆனால், இவ்வளவு பெரிய தொகையைக் கொடுக்கும் போது, அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற நிலையில் எங்களிடத்தில் கொடுக்கும்போது புத்திமதிகளைப் பெரிய அளவில் தரவேண்டும் என்று கருதி அவ்விதம் செய்வதில் தவறு இல்லை. ஏனென்றால் நாங்கள் எந்த அளவிற்கு இந்த அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறோமோ, அந்த அளவிற்கு அவர்களும் இந்த அரசு சுமுகமாக, செம்மையாக, நடத்தப்பட வேண்டும் என்று கவலை கொள்வதில் பொறுப்புள்ளவர்கள், கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களை மிகுந்த

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 மார்ச் 28

கவனத்தோடு கேட்டுக் கொண்டு, நடைமுறைக்குக் கொண்டு வரக் கூடியவைகள் எவை எவை என்று பரிசீலனை செய்ய வேண்டும்.

பொதுவாகப் பேசியவர்கள் மூன்று முக்கியமான கருத்துக்களை வலியுறுத்தினார்கள். சட்டம் பாதுகாக்கப்படவேண்டும். ஒழுங்கும் அமைதியும் நிலைநாட்டப் படவேண்டும். அது ஒன்று. இரண்டாவது கருத்து, இந்த அரசு கட்சி அரசாக மாறிவிடக் கூடாது. மூன்றாவது கருத்து, நான் இந்த அரசை நடத்திச் செல்லும்போது, இன்னின்னதைச் செய்ய வேண்டும் என்று யோசனைகளைச் சொல்லும் போது, கருத்துக்களெல்லாம் சொல்லப் பட்டன. மூன்றாவது கருத்தை முதலாவதாக எடுத்துக் கொள்வதானால், இன்னின்னதைச் செய்ய வேண்டும் என்று உறுப்பினர்கள் சொல்லிக் கொண்டு வந்த பல கருத்துக்களை, திட்டங்களை, மற்றவைகளை எல்லாம் சொல்லுகிற நேரத்திலே, இவைகளையெல்லாமா சொல்லுவது என்ற எரிச்சல் உணர்ச்சியோ, மற்ற மற்ற உணர்ச்சியோ ஏற்படவில்லை. ஆனால், அந்தக் கருத்துக்களைச் சொல்கிறபோது, ஒருவர் கருத்து, இன்னொருவர் கருத்துக்கு வேறுபட்டதாக இருந்தது, ஒருமித்த கருத்தாக நாட்டைப் பொறுத்த வரையில் அமையவில்லை என்பதை உணர்கிறேன். குறிப்பாக, உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், கட்டுப்பாடுகளை நீக்கிவிட்டால், விலைகள் வீழ்ச்சியடையும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. இன்னொரு கட்சியின் கருத்து. இப்பொழுது இருக்கும் கட்டுப்பாடு போதாது. இன்னும் அதிகமான அளவிற்கு கட்டுப்பாடு இருந்தால்தான் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று கருத்து இருக்கிறது.

இந்த இரண்டு வகையான கருத்துக்களையெல்லாம் அவையிலே உள்ள உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். எந்தக் கருத்தின் பக்கத்திலே போய் நிற்பது, எந்தக் கருத்தை முதலில் எடுத்துக் கொள்வது அவசரம் அவசரமாக முடிவு எடுப்பதற்குப் பதிலாக, நாட்டிலே எந்தக் கருத்து பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் யோசித்துப் பார்த்துத்தான் முடிவுக்கு வர முடியும். உண்மையான பிரச்சினையைச் சரியான முறையில் தீர்க்க எந்தக் கருத்து சரியானது என்பதை யோசித்துப் பார்த்துத் தான் சர்க்கார் ஒரு முடிவுக்கு வர வேண்டும். சட்டத்தைப் பொறுத்த வரையில், சமாதானம், அமைதி, ஒழுங்கை நிலைநாட்டுவதைப் பொறுத்தவரையில், கனம் திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் பிராம்ப்ட் ஆக்ஷன் தேவை என்று சொன்னார்கள். பிராம்ப்ட் ஆக்ஷன் என்பதற்கும், ஹேஸ்டி ஆக்ஷன் என்பதற்கும் இடையே இருப்பது மெல்லிய கோடுதான். பிராம்ப்ட் என்ற சொல்லுக்கும், ஹேஸ்டி என்ற சொல்லுக்கும் இடையேயுள்ள மெல்லிய கோட்டைச் சர்க்காரை நடத்துகிறவர்கள் மிகுந்த பொறுப்பு உணர்ச்சியோடு பார்க்க வேண்டும். பிராம்ப்ட் ஆக்ஷன் என்ற சாதாரண வார்த்தையைத்தான் உறுப்பினர் சொன்னார் என்றாலும், அதில் பல பிராந்தியங்களின் மந்திரிசபைகளின் வளர்ச்சியும், வீழ்ச்சியும், சமுதாயத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் அடங்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியபடி நிகழ்ச்சிகள் மின்னல் வேகத்தில் நடைபெறும்போது,



1968 மார்ச் 28] [திரு. சி. என். அண்ணாதுரை]

ஒரு நிகழ்ச்சி தடுக்கப்படுமுன்னே இன்னொரு நிகழ்ச்சி ஏற்பட்டு, அந்நிகழ்ச்சி தடுக்கப்படுமுன்னே பிறிதொரு நிகழ்ச்சி ஏற்பட்டு, இப்படி நிகழ்ச்சிகள் சிறியதாகத் துவங்கியவை பேருருவமாகக் கொள்கின்ற நேரத்தில், பிராம்ப்ட் ஆக்ஷன் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்பது எளிதான காரியம் அல்ல. இதனால் பிராம்ப்ட் ஆக்ஷன் கூடாது என்ற கருத்தை நான் கொண்டிருக்கிறேன் என்று யாரும் நினைக்கக் கூடாது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படுகிறபோது—என்னுடைய அறிவுக்கு எட்டிய மட்டில்—அந்த நிகழ்ச்சி பெரிதாகாமல், விரிவுபடாமல், வளர விடாமல் தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். பல உறுப்பினர்கள், அதிகாரிகள் சரியான முறையில் ஒத்துழைப்பு அளித்திருக்கிறார்களா என்ற ஐயம் தெரிவித்தார்கள். பிராம்ப்ட் என்பது அவர்களுக்கும்கூட உள்ள பிரச்சினை. எந்த இடத்தில், எந்த நேரத்தில், எந்தமாதிரி நடவடிக்கை எடுப்பது என்ற முடிவை எடுக்கிறபோது, முடிவுக்கு அவர்களே பொறுப்பாளிகளாகி விடுகிறார்கள். எதனாலும் அவர்கள் காரியங்களைச் செய்யத் தவறியிருக்கிறார்களா என்பதுதான் பிரச்சினை. செய்த காரியங்களில், தவறான காரியங்களாக ஏதாவது அமைந்திருக்கின்றனவா என்பவைகள் எல்லாம் நிகழ்ச்சிகளையொட்டி நடத்தப்படவிருக்கிற விசாரணை மூலமாக, அதிலிருந்து கிடைக்கிற பாடங்களைக் கருத்திற்கொண்டு, அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இனிமேல் நடைபெறாமல் தடுக்கவும், நிலைமைகளைக் கட்டுப்படுத்தவும் அல்லது அறவே ஏற்படாமல் செய்வதற்கும் வழிவகை காண வேண்டும். திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் பேசுகின்றபோது, "இந்த மாநிலத்தில் மட்டுமல்ல, எல்லா மாநிலங்களிலும் இந்தியா முழுவதிலும் இம்மாதிரியான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன" என்றார். இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தின் பல்வேறு நாடுகளிலும்கூட வன்முறைச் செயல்கள், கொதிப்படைந்தவுடனே ஆரவாரங்கள், ஆர்ப்பாட்டங்கள், மோதல்கள் எல்லாம் நடைபெறுவதை நாம் பார்க்கிறோம், ஆனால் இதுவரையிலும் நடைபெற்ற கிளர்ச்சியோ, ஆர்ப்பாட்டமோ, மோதலோ தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்த அரசு எடுத்த நடவடிக்கைக்கு எதிராக வந்தவையா என்றால் இல்லை. "இந்த சர்க்கார் இந்தக் காரியத்தைச் செய்தார்கள், இது எங்களுக்குப் பாதகமாக இருக்கிறது, ஆகவே, நாங்கள் கிளர்ந்தெழுந்திருக்கிறோம், சர்க்கார் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது, அது எங்களுக்குப் பாதகம் அளிக்கிறது, சர்க்கார் இந்த அக்கிரமத்தைச் செய்தது; ஆகவே, நாங்கள் ஆத்திரம் அடைந்திருக்கிறோம்" என்று கூறத்தக்க நிலையில் இப்போது வரவில்லை.

தொடர்ச்சியாக நடைபெற்றிருக்கிற இந்த நிகழ்ச்சியை எடுத்துக் கொண்டாலும், சமூகத்தில் இரு சாராருக்கிடையில் ஏற்பட்டிருக்கின்ற பகையுணர்ச்சி கிளர்ச்சிகளாக வெடித்திருக்கின்றன. சில இடங்களில் சிறியதாகத் துவங்கிய நிகழ்ச்சி வளர்ந்து, பெரிதாக மாறியிருக்கின்றன. ஒரு சாராருடைய உரிமைக்கும், இன்னொரு சாராருடைய உரிமைக்கும் மோதல்கள் ஏற்படுகிற போது கிளர்ச்சிகளாக மாறிவிடுகின்றன. இவைகள் எல்லாம்

நடக்கக் கூடாது என்பதில் மிகுந்த கவலை கொண்டிருக்கிறேன். இதுவரையிலும் ஏற்பட்டுவிட்ட நிகழ்ச்சிக்கு, பெயரளவுக்காகிலும் சர்க்கார் செய்ததாக இந்தக் கிளர்ச்சிகள், சர்க்கார் நடவடிக்கை காரணமாக இந்தப் பயங்கரங்கள் ஏற்பட்டன என்ற சொல் வராத அளவுக்கு நாங்கள் நடந்துகொண்டிருக்கிறோம்.

THIRU K. VINAYAKAM: Not only commission, but also omission.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இந்த ஒமிஷன் என்பதிலேதான் பிராம்ப்ட் ஆக்‌ஷன் வருகிறது. எந்தச் சர்க்காரும் கையைக் கட்டிக்கொண்டு, எது வேண்டுமானாலும் நடக்கட்டும் என்று இருந்துவிடாது. அப்படி இருந்துவிட்டால், அது சர்க்காராக இருக்க முடியாது. என்னைப் பொறுத்தவரையில் அவ்வப்பொழுது நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னால், முன்கூட்டியே கிளர்ச்சிகள் தோன்றும் என்பதற்குச் சிறு ஜாடை தோன்றினாலும் கூட உடனடியாக அந்த இடத்தில்—அந்த இடம் என்பது பூகோள ரீதியான இருப்பிடத்தைச் சொல்லவில்லை—அந்தப் பிரச்சினையில் என்னை நான் ஈடுபடுத்திக் கொள்கிறேன். தொழிலாளர் வேலை நிறுத்தங்கள், மாணவர்கள் சம்பந்தமான கிளர்ச்சிகள் எங்காகிலும் ஏற்படும் என்ற அறிகுறிகள் தென்படுமானால், சம்பந்தப்பட்டவர்களை உடனடியாக அழைத்துப் பேசி, கிளர்ச்சிகள் ஏற்படாமல் தடுக்க என்னாலான அளவுக்கு முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறேன். பல தடவை பிரச்சினைகள் ஏற்படும்போது, தொடர்புடையவர்களின் ஒத்துழைப்பின்மூலம் ஓரளவு வெற்றியும் எனக்குக் கிடைத்திருக்கிறது.

நண்பர் திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் கோயம்புத்தூரிலே பல ஆலைகளை மூடிவிட்டதைப்பற்றிச் சொன்னார்கள். தொழிலாளர் தலைவர்கள், "மூடப்பட்ட ஆலைகளை நீங்கள் திறக்க வேண்டும். இதை நீங்கள் செய்யாவிட்டால் நாங்கள் கிளர்ச்சி செய்வோம்" என்று சொன்னபோது பிராம்ப்ட் ஆக்‌ஷன் எடுக்கப்பட்டிருக்கிறது. இதை நான் எடுத்துக்காட்டாகச் சொல்கிறேன். "எக்சைஸ் வரி அதிகமாகிவிட்டது. எங்களுக்கு நஷ்டம் வந்துவிட்டது. ஆகவே, ஆலைகளை மூடுகிறோம்" என்று கூறி மத்திய அரசின் போக்கைக் கண்டிக்கும் வகையில் ஆலை முதலாளிகள் தங்கள் திட்டத்தை அறிவித்தார்கள். தொழிலாளர்கள், "நாங்கள் கிளர்ச்சியில் ஈடுபடவில்லை. மூடப்பட்ட ஆலைகளைத் திறக்கமாட்டேன் என்கிறார்களே, மத்திய அரசும் கைகொடுக்கவில்லை, மாநில அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகள் போதுமானதாக இல்லை" என்று சொல்கிறார்கள். நாங்கள் புதிதாகச் சட்டம் போட்டு, அதனால் ஆலைகளுக்கு நஷ்டம் ஏற்பட்டு கிளர்ச்சி வந்ததா என்றால் இல்லை. தொழிலாளருக்காக ஏதாவது சட்டம் போட்டு அதனால் ஆத்திரமடைந்து கிளர்ச்சி செய்தார்களா என்றால் இல்லை. எந்த இடத்தில் தகராறு ஏற்பட்டாலும், கருத்துவேற்றுமை ஏற்பட்டாலும், எந்தப் பக்கத்தில் நியாயம் இருக்கிறதென்று கண்டறிந்து, நியாயத்தின் பக்கத்திலே நாங்கள் செயலாற்றுகிறோம். அவர்களுக்குள்ளே இருக்கின்ற பிரச்சினையைத் தீர்த்துவைக்க நான் முயற்சி எடுத்துக்கொள்கிறேன். இதுவும் சர்க்காரின் நடவடிக்கையினால் ஏற்பட்டது அல்ல. அதே நேரத்தில் திரு. கே. விநாயகம் அவர்கள் சொன்னபடி கவனிக்காமல் இருந்துவிடுவோமா—கிரைம் ஆஃப் ஒமிஷன் என்றால், இல்லையென்பதற்கு, நிரூபச் சான்றுகளை என்னால் தரமுடியும். இப்போது நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மாணவர்களுக்குப் போதுமான பாதுகாப்புத் தரப்படவில்லை, ஆறுதல் தரப்படவில்லை என்ற பேச்சுக்களுக்குத் திரும்பத் திரும்பப் பதில் சொன்னேன். மறுபடியும் அதை உறுப்பினர்கள் எடுத்துப் பேசியதாலே எனக்கு வருத்தம் இல்லை. நீங்கள் திரும்பத் திரும்பச் சொல்லச் சொல்ல, நிலைமைகளை விளக்கி, மாணவர்களுக்கு விளக்கம் தருவதற்கு எனக்குச் சந்தர்ப்பங்கள் கிடைக்கிறதே என்று மகிழ்கிறேன். இன்றையதினமும் திட்டவட்டமாக நான் சொல்லுகிறேன். நிகழ்ச்சிகள் நடைபெறுவது உடனுக்குடன் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு வேளையிலும், ஒவ்வொரு விவகாரத்தையும் தடுத்து நிறுத்துவதற்கும், பரிகாரம் தேடுவதற்கும், ஆறுதல் அளிப்பதற்கும், நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கும் முயற்சியை நன்முறையில் எடுத்துக்கொள்வேன். கவனிக்காமல் விட்டுவிட்டேன் என்ற நிலை என்னைப் பொறுத்தவரையில், அரசைப் பொறுத்தவரையில் இல்லை. அதைவிட எனக்கு வேறு என்னதான் வேலை? அதற்காகவே நான் அரசுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறேன். பொதுமக்களிடத்தில் 35 ஆண்டுகளாகப் பழகிய பொதுத் தொண்டன் என்ற முறையில், நாட்டில் கிளர்ச்சி எங்கேயாவது நடந்தால் நமக்கென்ன? சமூகத்தில் மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கும் எந்தக் கேடு பாடாவது வரட்டும் என்று சும்மாயிருப்பேன் என்று யாராவது நினைப்பார்களேயானால் 35 ஆண்டுகளாக நான் பொது வாழ்க்கையில் பொதுத் துறையில் இருந்திருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 35 ஆண்டுகள்கூட வேண்டாம், 35 நாட்கள் கூட இருந்திருக்க முடியாது. ஆகையால் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் போதுமானவையாக இல்லை என்று சுட்டிக்காட்டுங்கள், வரவேற்கிறோம். எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளில் நீங்கள் இன்ன இன்ன மாதிரியாகச் செய்திருக்கலாம் என்று சொல்லுங்கள், அதை நாங்கள் சிந்தித்துப் பார்க்கிறோம். இனி இன்ன இன்ன வகையில் செய்யலாம் என்று சொல்லுங்கள், ஆராய்ந்து பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், மாணவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதிலே எதுவுமே செய்யாமல் விட்டுவிட்டோம் என்று அருள்கூர்ந்து இந்த நிகழ்ச்சி நேரத்தில் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையைமட்டும் வைத்துக் கொண்டு பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மாணவர்கள் என் விஷயத்தில் அருவருப்போ, ஆயாசமோ, வெறுப்போ கொள்வதை நான் வாழ்க்கையில் பெரிய களங்கமாகக் கொள்வேன். முப்பத்து ஐந்து ஆண்டுகளாக நான் அவர்களுடைய நல்லெண்ணத்தையும், அன்பையும் பெற்றுக்கொண்டு வந்திருப்பவன். கேவலம் என்னுடைய அறிவீனத்தின் காரணமாக அவர்களுடைய

நல்லுணர்ச்சியை இழந்துவிட்டேன் என்றோ, அன்பினை இழந்துவிட்டேன் என்றோ நீங்கள் கருதுவீர்களானால் அது தவறு என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைய தினம் மாணவர் சமுதாயத்தில் பரவலாக அப்படிப்பட்ட அருவருப்பு உணர்ச்சியோ, வெறுப்புணர்ச்சியோ இருக்குமென்று தோன்றினால் அவற்றை எல்லாம் நீக்கிக்கொள்ளவேண்டுமென்று மாணவ சமுதாயத்தினரைக் கேட்டுக்கொள்வதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்காகப் பேசுகின்ற நண்பர்கள் வாயிலாகவும் எடுத்துச் சொல்லிக்கொள்வேன், அப்படிப்பட்ட புறக்கணிப்பு எண்ணம் என்னிடத்தில் ஒரு துளியும் வராது. சமூகத்தில் எந்தப் பகுதியினரையும் புறக்கணித்துக்கொண்டு ஒரு அரசு நடக்காது. அரசை நடத்துகின்ற கட்சியும் இருக்காது. கட்சியில் உள்ள தொண்டர்களும் இருக்க முடியாது. அது இன்றியமையாத கடமை. தவிர்க்க முடியாத பொறுப்பு. ஆகையால் இந்தச் சிறிய பொறுப்பில்கூட நான் தவறு இழைத்திருப்பேன் என்று வாதிடுவதற்காகக்கூட நீங்கள் எண்ண வேண்டாம். அப்படி யாராவது எண்ணினால் அதுதான் எனக்கு மிகுந்த வேதனையைத் தரும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் யாரும் அப்படி எண்ணவில்லை. எல்லா உறுப்பினர்களும், கட்சித் தோழர்களும் என்னிடத்தில் உள்ள அன்பினைத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். ஒருவர், இருவர் மாணவர்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசினிடத்தில் இது அருவருப்பை உண்டாக்கும் என்பதற்காகப் பேசுவார்கள் என்றால்—அப்படிப்பட்ட உறுப்பினர்கள் இதுவரை பேசியவர்களில் யாரும் இல்லை என்பதை நான் தெளிவாக உணர்கிறேன்—யாராகிலும் அப்படிப்பட்ட எண்ணம் கொண்டிருப்பார்களேயானால், நான் கேட்டுக்கொள்ளுவேன் இந்த ஒரு காரியத்திற்காக நீங்கள் நாட்டிலே உள்ள குழப்பமான நிலையைத் தடுத்து சகஜ நிலைமையை உண்டாக்குவதற்கு உங்களுடைய மேலான கருத்துக்களைச் சொல்லாமல் விட்டுவிடாதீர்கள். இதன்மூலம் திராவிட முன்னேற்றக் கழகத்தினிடத்திலோ, திராவிட முன்னேற்றக் கழக அரசினிடத்திலோ அருவருப்பு உணர்ச்சியோ, வெறுப்போ உண்டாகிறது என்றாலும் இன்றைக்கு ஏற்பட்டுவிட்ட நிலைமைகளைச் சீர்படுத்துவதற்கு உங்களது மேலான யோசனைகளைத் தருவது முக்கிய பொறுப்பாகும். இந்த அடிப்படையில் சில உறுப்பினர்கள் சொன்னார்கள்—அவர்களுடைய பெயர்கள் நினைவுக்கு வரவில்லை—தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளையும், மாணவர்களுடைய பிரதிநிதிகளையும் சேர்த்து உட்கார வைத்துப் பேச வேண்டும் என்பதாக. நான் முன்பே குறிப்பிட்டதுபோல சகஜ நிலை திரும்பிய பிறகுதான் இதற்கான முறையில் பணியாற்ற வேண்டும். அப்படிப் பணியாற்றுகிறபோதுகூட நான் மட்டும் அல்ல, எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் உடன் இருப்பது நல்லது. காரணம் ஆட்சியை ஒரு அரசியல் கட்சிதான் நடத்துகிறது என்றாலும், நிர்வாகத்தில் எல்லா அரசியல் கட்சிகளுக்கும் பொறுப்பு இருக்கின்றது. நாங்கள் அரசின் உள்வாயில்படியில் இருக்கலாம். நீங்கள் பக்க வாயில்படியில் இருக்கலாம். ஆயினும் அரசின் கோட்டைக்குள்தான் எல்லாக் கட்சிகளும் இருக்கின்றன. ஆகவே எல்லோரும் சேர்ந்து மாணவர்கள், தொழிலாளர் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி இது விஷயமாக என்ன என்ன காரியங்கள் செய்யலாம், எதனால் பகை ஏற்படுகிறது, இதை நீக்குவதற்கு என்ன என்ன வழிகளைக் காணலாம் என்பதைப்பற்றிப் பேசுவதில் நான் பெரிதும் விருப்பம் உள்ளவன் என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்போதும் அந்த விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இதைச் சொல்கிறபோது வன்முறைகள், கிளர்ச்சிகள், தடியடிப்பிரயோகம், துப்பாக்கிச் சூடுகள், பொதுச் சொத்துக்களுக்கு நாசங்கள், உயிர் பலியிடப்படுவது ஆகியவை இந்த மாநில அரசு பதவியேற்றுக்கொண்ட பிறகுதான் ஏற்படுகின்றன என்பது அல்ல. அப்படி இருக்குமானால் அது எங்கள் திறமைக் குறைவினால் ஏற்படுவதாகச் சொல்லிவிடலாம். இதற்கு முன்னாலும் பலபல சந்தர்ப்பங்களில் இந்த மாநிலத்திலேயும் ஏற்பட்டிருக்கின்றன, பிற மாநிலங்களிலும் ஏற்பட்டு வருகின்றன. இதைச் சொல்வதனாலேயே இங்கேயும் நடக்கட்டும் என்ற பொறுப்பற்ற முறையில் சொல்லவில்லை. காலத்தின் கோளாறு அப்படி இருக்கிறது. பத்து வருடத்திற்கு முன்னாலே எது எதற்குக் கிளர்ச்சிகள் நடக்காதோ, அது அதற்கு இப்போது நடக்கின்றன. எது எதிலே கோபம் வராதோ அது அதிலே தற்போது கோபம் வருகிறது. நேற்றைய தினம் கோபம் வராததற்குக்கூட இன்றைய தினம் கோபம் வருகிறது. நண்பர் திரு. விநாயகத்தை இன்று காலையிலே பார்த்தவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். சமூகத்தில் கோபதாப உணர்ச்சிகள் நீக்கப்பட வேண்டும். இந்த நேரத்தில் தான் மகாத்மா காந்தி அவர்களைப் போன்றவர் ஒருவர் நம்மிடையே இல்லையே என்று ஒருவர் குறிப்பிட்டார். மகாத்மா காந்தி அவர்கள் இருந்தபோதே அவர் கால்நடையாக, வன்முறைச் செயல்கள் நடந்த ஒவ்வொரு இடத்திற்கும் சென்று, இவ்வாறு ஒருவருக்கொருவர் மோதிக்கொள்வதைத் தவிர்க்கவேண்டும் என்று சொன்னார். கேட்கவில்லை. அவரையே வன்முறைச் செயலினால் கொன்றார்கள். அவர் ஒருவராக இருந்து செய்ய முற்பட்ட காரியத்தைத்தான் இன்றைக்கு நாம் பலராக இருந்து மக்களிடையே தோன்றும் ஆத்திர உணர்ச்சியைக் குறைப்பதற்கு வழிகாணவேண்டும்.



ஒரு உதாரணத்தை எடுத்துக்கொள்ளுங்கள். டெல்லி வழக்கு மன்றம் நடைபெறுகிறது. பிரதம நீதிபதியும், மற்ற நீதிபதிகளும் உட்கார்ந்து இருக்கிறார்கள். ஒருவன் ஒரு நீதிபதியைக் கத்தியினால் குத்துகிறான். அவர் கீழே பாய்ந்து விழுகிறார், இது முன்னாலே கேள்விப்படக்கூடிய நிகழ்ச்சியா? அங்கே நிகழ்ச்சி நடந்தவுடனேயே அங்குள்ள ஆட்சியின் திறமைக் குறைவினால் ஏற்பட்டது என்பதான அவசரமான முடிவுக்கு வர முடியுமா? அங்கே நடந்ததாலே இங்கேயும் நடக்கலாம் என்று வாதாடவில்லை. பிற மாநிலங்களில் எல்லாம் ஆத்திர உணர்ச்சி தலைதூக்கி தாண்டவமாடிய காலத்தில் எல்லாம், நம் மாநிலத்தில் அமைதி நிலவி வந்திருக்கிறது. இந்தியாவின் பல பாகங்களில் வகுப்புக்

கலவர உணர்ச்சி தறிகெட்டு நின்றபோதுகூட தமிழ்நாட்டில் அமைதி நிலவி வந்திருக்கிறது. அந்தப் பண்பாடு சீர்குலைந்து வருவதை நான் வருத்தத்தோடு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசியல் இலாபங்களுக்காக இந்தப் பண்பாட்டைக் குலைப்பதை யாரும் இனி அனுமதிக்க மாட்டார்கள்.

தமிழ்நாட்டில் தடியடி, துப்பாக்கிப்பிரயோகம் நிகழ்கிறபோது நீங்கள் அவற்றைச் சற்று ஆராய்ந்து பார்த்தால், முதலில் தெரியக் கூடிய உண்மை சர்க்காருக்கு எதிராக நடத்தப்படுகிற கிளர்ச்சிகள் சம்பந்தமானது ஒன்றுகூட வந்ததில்லை, சமூகத்தில் ஒரு சாராருககும், இன்னொரு சாராருக்கும் வருகிற மோதல் காரணமாக ஏற்பட்டிருக்கலாம். மொழிப் பிரச்சினை காரணமாக நடந்தது என்றால், அதுவும் மத்திய சர்க்காரின் நடவடிக்கையில் இங்குள்ள மாணவர்களின் மனதில் ஏற்பட்ட உளைச்சல் காரணமாக ஏற்பட்ட போராட்டத்தின் விளைவாகும். ஆட்சிமொழிச் சட்டம் நாங்கள் கொண்டு வந்தது அல்ல. மத்திய அரசு கொண்டு வந்தது. அந்த நேரத்திலும்கூட சமூகத்தின் எந்தப் பகுதியினரும் பாதிக்கப்படக்கூடாது என்ற நீதியின் அடிப்படையில் நாஙகள் நின்றிருந்திருக்கிறோம். இன்றைக்கு மாணவர்கள் எங்களிடத்தில் அருவருப்போ, வெறுப்போ அடைகிறார்கள் என்றால் அதை எண்ணிப்பார்க்கிறபோதே நான் வருத்தம் அடைகிறேன். 6 திங்களுக்கு முன்பாக, "நாங்கள் மாணவர்களை அடக்கவில்லை, அவர்களை இஷ்டப்படி நடக்கவிட்டுவிட்டோம், ரயில்வே சொத்துக்கு நஷ்டம் ஏற்பட்டாலும், பொதுச் சொத்துக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் நாங்கள் பாதுகாப்பு அளிக்கவில்லை, மாணவர்கள் பக்கத்திலே இந்த அரசும் கட்சி சேர்ந்துவிட்டது" என்று காங்கிரஸ் தரப்பில் இருந்து எடுத்துச் சொல்லிவந்தார்கள். இன்றைக்கு மாணவர்களைப் பாதுகாக்கவில்லை, மாணவர்களைப் புறக்கணித்துவிட்டார்கள் என்று பேசுகிறார்கள். இந்த இரண்டையும் சேர்த்துப் பார்க்கிறபோது எவை எவைகளில் எந்த அளவுக்குச் செல்லவேண்டும் என்பதைப்பற்றி ஒரு அறுதியிட்டுக்கொண்டு நாங்கள் பணியாற்றுகிறோமே தவிர, இந்த அரசு இன்னார் பக்கத்தில் சார்ந்துவிட்டது. இன்னாரைப் புறக்கணித்துவிட்டது என்கிற நிலை இல்லை என்பதை ஒருவகையாக உறுப்பினர்கள் சொன்னதில் இருந்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

மூன்று நான்கு மாதங்கள்வரையில் இந்தி மொழி விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் காட்டுகின்ற போக்கு அவர்கள் மாணவர்களுக்கு விரோதிகள் என்று கருதக்கூடிய சூழ்நிலை இருந்தது. இன்றைக்கு அவர்கள் மாணவர்களுடைய நண்பர்கள் என்று கருதக்கூடிய சூழ்நிலை ஒரு வேளை ஏற்படுமானால் அதைத் தவறு என்று கருதமாட்டேன். அதற்காகவே மாணவர்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசினிடத்தில் பகையுணர்ச்சி வந்துவிட்டது என்ற எண்ணத்தில் சொல்லாமல் திரு. விநாயகம் அவர்கள் சொன்னார்களே, (Sizable Section) என்பதுபோல



இந்தி வேண்டும் என்று கேட்டால் என்ன, அப்படிச் சொல்லக் கூடிய மாணவர்களின் தொகை மிகப் பெரிய அளவுக்கு ஏற்படுமானால் அடுத்து காங்கிரஸ் அரசைக் கொண்டுவருவதற்கு அவர்களே முயற்சிசெய்வார்கள், காங்கிரஸ் அரசு வரும், அதிலே நீங்கள் அந்தக் காரியத்தைக் கவனிக்கலாம் என்று சொன்னேன். எப்படியாகிலும் அரசை நடத்தவேண்டுமென்ற அளவில் ஆக்ட்ஸ் ஆப் கமிஷன்ஸ் அன்ட் ஒமிஷன்ஸ் இவற்றில் ஈடுபடக்கூடியவன் அல்ல நான் என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் திரும்பத் திரும்ப பலர் அதைச் சொன்னதாலே நான் மறுபடியும் இதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மாணவர்களுக்கு என்ன என்ன கேடுகள் ஏற்பட்டன என்ற புள்ளிவிவரங்கள் சேகரித்துத் தகவல்களையெல்லாம் அறிந்து அதன் மூலம் அவர்களுக்குப் பாதுகாப்பும், ஆறுதலும், இழப்பு இருக்குமானால் பரிகாரமும் தேடிக்கொடுத்துவிட்டு சகஜ நிலைமை திரும்பியவுடன், ஒரு பகுதியில் தொழிலாளர்களையும் மற்றொரு பகுதியில் மாணவர்களையும் சமூகத்திலே ஒன்றுபடுத்தி ஏற்றவகையில் எல்லோரும் செயல்பட முயற்சி செய்வேன் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு குறைபாடுகளைப்பற்றிச் சொன்னவர்களிலே ஒருவராகிலும் தேவையற்ற திட்டத்தைப் போட்டிருக்கிறீர்கள், இருபது கோடி ரூபாய் மூலதனம் போட்டுவிட்டீர்கள், அதனாலே சர்க்காருக்குப் பாதகம் வரப்போகிறது என்று யாரும் சொல்லவில்லை. அப்படிச் சொல்லாததற்கு அவர்கள் இரண்டு சமாதானங்கள் சொல்லலாம். எது பணம், அதையால்தான் சொல்லவில்லை என்று அவசரப்பட்டு அடித்துப்பேசவேண்டுமென்று நண்பர் திரு. விநயகத்தைப் போன்றவர்கள் கேட்டுவிடலாம். ஆனால் அவரே கொஞ்சம் யோசித்துப் பார்ப்பாரானால் இருக்கின்ற பணத்திலே ஐந்து வருடங்களுக்கு ஆஸ்பத்திரிகளுக்குப் பணம் வேண்டாம், அதிலே பத்துக் கோடி ரூபாய் எடுத்து ஆரம்பிக்கலாம் என்று அவசரப்பட்டு செய்யவேண்டுமென்று இருந்தால் செய்யலாம். கேடுகள், தவறுகள் எவையும் யாரும் எடுத்துக்காட்டாததால் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். யார் பேசுகின்றபொழுதிலும் என்ன என்ன வேலைகளிலே விரயங்கள் ஏற்பட்டன, ஆயிரம் கிணறுகள் தோண்டினீர்கள் அதிலே 900 கிணறுகளில் தண்ணீர் இல்லை, 200 வீடுகள் கட்டினீர்கள் 190 வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட ஒரு வாரத்திற்குள்ளேயே இடிந்து விட்டன, பெரு நஷ்டம், விரயம் இருந்தது என்று யாரும் சொல்லவில்லை. காரணம், அப்படி நடக்காத முறையில் நாங்கள் மிக ஜாக்கிரதையாக நடந்திருக்கிறோம் என்பதுதான். எதிர்க்கட்சியினர் நீங்கள் ஜாக்கிரதையாக நடத்துகிறீர்கள், பண விரயம் ஏற்படவில்லை என்று ஒத்துக்கொள்வார்களானால் ஜனநாயகத்திலே கிடைக்கமுடியாத ஒரு பெரிய பரிசை நான் எதிர்பார்க்கிறேன் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட பரிசுகள்கூட ஜனநாயகத்திலே கிடைக்கக்கூடிய காலம் வரும் என்று நம்புகிறேன்.

சிற்சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினார்கள். அதிகாரிகள் அமல்படுத்துவதிலே கெடுபிடி காட்டினார்கள் என்று சொன்னார்கள். எனக்கே அவர்கள் கெடுபிடி காட்டினார்கள் என்று தோன்றத்தக்க அளவுக்கு திரு. ஆதிமூலம் அவர்கள் சொன்னார்கள். நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருக்கின்றன, ஆங்கிலத்திலே அதர் சைட் ஆப் தி மெடல் ஆர் தி அதர் சைட் ஆப் தி காய்ன் என்று சொல்வார்கள். இரண்டையும் தட்டிப்பார்த்துதான் இது செல்லத்தக்கதா இல்லையா என்று சொல்லமுடியுமே தவிர, அவர் தட்டிக் காட்டுகிறபோது அது செல்லக்கூடியதாகத்தான் தோன்றும். அது தட்டுவதிலே உள்ள பக்குவத்தினாலே செல்லத்தக்கது என்று சொல்லமுடியும். எனக்கு காது கொஞ்சம் மந்தப்பட்டிருந்தாலும், புத்தி மந்தப்படவில்லை என்று நினைக்கிறேன். ஆகவே அவர்கள் சொல்வது உண்மையாக இருக்குமானால் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கொண்டு எல்லா நிர்வாகக் குறைபாடுகளையும் நீக்குவதற்கு முயற்சியெடுத்துக்கொள்வேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. விநாயகம் அவர்கள் இந்த அவையிலே உள்ள முறைகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஒத்துக் கொள்வதிலே எனக்குக் கூச்சம் ஒன்றுமில்லை, அதிலே தவறுமில்லை. மேலெழுந்தவாரியாகச் சில தகவல்தான் எனக்குத் தெரியுமே தவிர, விதிமுறைகளைப் பற்றிய டீடெயல்ஸ் எனக்கு அதிகமாகத் தெரியாது, நான் படிக்கவும் இல்லை. மேலெழுந்தவாரியாகத் தெரியவேண்டுமென்றும் டீடெயல்ஸ்க்குள் அதிகமாகச் செல்லக்கூடாது என்றும் சொல்லுவார்கள். எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு வழக்கறிஞர், அவர்கள் அதை அறிவார்கள். தாம் நடத்துகின்ற வழக்குகளைத் தாம் குறிப்பிட்ட சில குறிப்புகளை வைத்துக்கொண்டு மற்றவற்றைத் தம்முடைய ஜூனியர்களிடம் கொடுத்து சேகரித்து வையுங்கள் என்று சொல்வார்கள். அதை வைத்துக்கொண்டு வழக்கு மன்றத்திற்குச் சென்று வழக்காடுவார்கள். அப்படி அதிகாரிகள் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதில் போதுமானதாக இல்லாவிட்டாலும், குறையுடையதாக இருந்தாலும், அதைப்பற்றி யாராகிலும் சுட்டிக் காட்டினால் அதைத் திருத்திக் கொள்வதற்கு நாங்கள் எப்பொழுதும் தயாராக இருக்கிறோம்.

அமெரிக்காவிற்குப் போவதைப்பற்றி முன்கூட்டியே சொல்லவில்லை, நீதிபதி நியமிப்பதைப்பற்றி முன்கூட்டியே இங்கே சொல்லவில்லை. பத்திரிகையிலே வந்துவிட்டதே என்று சொன்னார்கள். பத்திரிகையிலே முன்கூட்டியே வந்துவிடுவதுதான் பத்திரிகை தொழிலின் ரகசியம். பத்திரிகை நிருபர்களை அழைத்து சோமசுந்தரத்தை நியமித்திருக்கிறேன் என்று சொல்லிவிட்டு இந்த அவைக்குச் சொல்லாமலிருந்தால் திரு. விநாயகம் அவர்கள் சொல்வது முழுதும் பொருத்தமாக இருக்கும். பத்திரிகையைப் பற்றிச் சொல்லும்பொழுது வடமொழியோடு கலந்த தமிழிலே



சொல்லுவார்கள் 'ஹேஷ்யம்' என்று, ஆங்கிலத்திலே 'ஸ்கூப்' என்று சொல்லுவார்கள். கதவோரத்திலே சோமசுந்தரம் என்று காதில் விழுந்துவிட்டால் அவராகத்தான் இருக்கும் என்று அப்படித்தான் போடுவார்கள். அது தொழிலிலே காட்டக்கூடிய திறமை. நானும் அந்தத் தொழிலிலே ஈடுபட்டவன் என்ற முறையிலே நான் அதைப் பழிக்கவில்லை. திரு. விநாயகம் அவர்கள் பத்திரிகையிலே படித்தேன் என்று சொன்னார்கள், நானே பத்திரிகையிலே அதைப் படித்தேன், இன்னும் முடிவாகவில்லையே, சோமசுந்தரம் என்று போட்டிருக்கிறதே என்று நினைத்தேன். சட்ட அமைச்சராலே யோசனை தரப்பட்டு, இந்த அவைக்குக் காலையிலே, உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று, கொண்டுவரப்பட்டது, உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சர்க்காருடைய நடவடிக்கைகளையெல்லாம் மற்றவர்களுக்குக் காட்டுவது என்பது விதியா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. காட்டப்படக்கூடாது. காட்டப்படுமானால் கையெழுத்திட்ட தேதியைக்கூட காட்டிவிடலாம். இந்த அவையில் பேசுவதற்குத் தேவையில்லாமல் இருந்திருக்கும். ஆகவே முன்கூட்டிச் சொல்வதிலே எனக்குத் துளியும் தயக்கம் இல்லை.

அமெரிக்கப் பயணம்பற்றி விவரங்கள் சேகரிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டேன். சில காரியங்களைச் செய்யவேண்டுமென்கிற நிலை வருகிறபோது வெகு எளிதாகவோ வெகு விரைவாகவோ முடித்துவிடுகின்ற பழக்கம் இல்லை. அந்த முறைகளிலே எந்த எந்த ஊர்களிலே எவ்வளவு நாட்கள் தங்குவது என்ற விவரங்கள் சேகரிக்கப்படவில்லை. விவரங்களிலே லாஸ் ஏஞ்சல்ஸ், ஹாலிவுட், ஹவாய், ஹோனலுலு என்றெல்லாம் சொன்னார்கள். நான் போனால் என்ன என்ன காண்பீர்கள் என்று கேட்பது அவசியம். திரு. விநாயகம் அவர்கள், அவரையும் அழைத்துக்கொண்டு போனால் மகிழ்ச்சியடைவேன் என்று சொன்னார்கள். வழித்துணைக்கு அவரைவிடச் சிறந்த துணை யாரும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமெரிக்க அரசு அனுமதி தந்தால் அவரையும் அழைத்துச் செல்வேன். வெளிநாட்டுத் தலைவர்களுக்கு நான் ஒன்று தெரிவித்துக்கொள்வேன். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களை அழைக்கின்ற நேரத்திலே எதிர்க் கட்சியிலிருந்து ஒருவரையும் அழைப்பதுதான் ஜனநாயகப் பண்பு ஆகும், அப்படி அழைக்கவேண்டுமென்று பரிந்துரைக்க விரும்புகிறேன். அங்கே சென்று காணக்கூடிய காட்சிகள், பெறக்கூடிய பாடங்கள் இவற்றைப்பற்றிக் கலந்துரையாட முடியுமென்று நான் நம்புகிறேன்.

ஆனால் அந்தப் பயணத்தின் பிறகு மிகுந்த பெரிய மாற்றங்களையெல்லாம் என்னால் செய்ய முடியும் என்று முன்கூட்டியே நான் சொல்வதாக நீங்களாகவே எடுத்துக்கொண்டு, மூன்று மாதங்களுக்குப்பின், அமெரிக்கா போய்விட்டு வந்தாயே என்னவாகிவிட்டது என்று கேட்காதீர்கள். சில பெரிய பலன்கள் நடைபெற்றுவிடும் என்று நான் கருதவில்லை. முன்கூட்டிச் சொல்லவும் இல்லை. அந்த எண்ணம் என் உள்ளத்தின் அடிவாரத்தில்

இருந்தது. எனக்கு ஒரு எண்ணம் தோன்றிற்று. அமெரிக்காவிற்குப் போகப் போகிறேன் என்று சொன்னவுடனே நம் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வேறு வழியில் எண்ணிக்கொண்டு, அவனவன் அரிசிக்கு அலைகிறான், தண்ணீர் இல்லாமல் அலைகிறான். உழவுத்தொழிலில் கஷ்டமிருக்கிறது இப்போது என்ன அமெரிக்காவில் வேலை என்று கேட்டாலும் கேட்கலாமோ என்ற கூச்ச உணர்ச்சிகூட இருந்தது. அவையை அவமதிக்க வேண்டுமென்ற உணர்ச்சியல்ல. அமெரிக்கா போகிறேன், அமெரிக்கா போகிறேன் என்று சொல்வதன்மூலம் நீங்களே ஒரு கற்பனையை உருவாக்கி அங்கு போய்வந்த பிறகு இன்னின்னது நடக்குமா என்று கேட்டு, அதற்குப் பிறகு பயணம் புறப்படுவதற்கு முன்னால் இப்படிச் சொன்னீர்களே, சாதித்தீர்களா என்று கேட்கக்கூடும். உதாரணமாக, ஒரு உறுப்பினர் கேட்கலாம், அமெரிக்காவிலிருந்து இங்கு சேலம் இரும்பாலைக்காக ஏதாவது இயந்திரங்கள் தருவித்துத் தருவீர்களா என்று. எப்படி நான் அதற்குப் பதில் அளிக்க எப்படி அவைகளை நான் திட்டமிட்டுச் சொல்லமுடியும்? ஆகவே நான் அங்கு போய் விட்டு வருவதன் மூலம் எந்தப் பலன் கிடைப்பதாயிருந்தாலும் அந்தப் பலன்களை, உங்களைக் கலந்து ஆலோசித்து அந்தப் பலன்களைப் பெறுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்வேன். அந்தப் பிரச்சினைகள் ஒருபுறமிருக்க திரு. விநாயகம் அவர்கள் சொன்னார்கள், என்னையும் அழைத்தால் வருவேன் என்று. அவரை அழைக்கச் செல்ல முடியாவிட்டாலும் அவரிடம் தனியாக நான் போய்விட்டு வந்த பிறகு அங்கு கண்ட பல சுவையான காட்சிகள்பற்றிய—எனக்கோ அவருக்கோ தேவையில்லாதவைகளைக் கூட—எல்லா விவரங்களையும் சொல்லத் தயாராயிருக்கிறேன். ஆனால் அதற்கான வாய்ப்புகளை நான் ஏற்படுத்திக் கொள்வதாகயில்லை. ஆகவே என் பயணம் பற்றி முன்னால் சொல்லாததை அவையைக் குறைத்து மதிப்பிட்டேன் என்ற வகையில் கொள்ளாமல் விவரங்கள் சேகரிக்க முடியாததால் சொல்லவில்லை என்று கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு மற்றபடி உறுப்பினர்கள் இங்கு எடுத்துரைத்த நல்ல பல கருத்துக்களைக் கவனத்தோடும், அக்கறையோடும் பார்த்து தக்கதைச் செய்வோம் என்று வாக்களித்து இந்த நிதி ஒதுக்கீட்டைத் தந்தருளும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. விநாயகம் :** எதையாவது பேசவேண்டுமென்று எழுந்து கொள்வது என்பதும் இல்லை, எதையாவது சொல்லிவிட்டு சந்தோஷப்படவேண்டும் என்று எழுந்திருப்பதும் இல்லை. முதல் அமைச்சர் அவர்கள் பேசும்போதே நான் குறுக்கிட்டிருக்கலாம். ஆனால் அவர்கள் உருக்கமாக, விமர்சையாக சொல்லும்போது அதைத் தடுக்கக்கூடாது என்றிருந்தேன். அரசாங்கம் ஏதாவது நடவடிக்கைகள் எடுத்து அதன் விளைவாக இப்போதுள்ள தொல்லைகள் எல்லாம் ஏற்பட்டிருந்தால் எங்களை பொறுப்பாளிகள் என்று சொல்லலாம் என்று சொன்னார்கள். 'labour unrest' or student unrest or whatever trouble' ஏதாவதாகயிருந்தாலும் நீங்கள்



நடவடிக்கை எதுவும் எடுக்காதிருந்ததன் விளைவுதான் இது, இன்று நாட்டிலுள்ள கொந்தளிப்பு. நல்லமுறையில் போலீஸ் துறையில் பணியாற்றிக்கொண்டிருந்தவர்களை எல்லாம் செயலற்று போகச் செய்துவிட்டீர்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் ஊரில் என்ன பரவியிருக்கிறது என்றால், அண்ணா ஆட்சி வந்தால் எவரும் அரசாங்கத்தை மதிக்கவேண்டியதில்லை, யாரும் சட்டத்திற்கு அடங்கவேண்டியதில்லை, எதையும் செய்யலாம் என்ற ஒரு எண்ணம் பரவலாக வளர்ந்து அதற்கு உடந்தையாக போலீஸ்காரர்களும் நாங்கள் ஒன்றும் செய்யமாட்டோம் என்ற நிலையில் இருக்கிறார்கள். நான் ஏற்கனவே கேட்டேன், நீங்கள் ஏதாவது ஸீக்ரட் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்திருக்கிறீர்களா என்று. இல்லை என்று அவர்கள் சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நீங்களும் அப்படி ஒன்றும் கொடுக்கவில்லை, அவர்களும் ஒன்றும் செய்வதில்லை என்றால் நாடு என்ன கதிக்காவது ?

' By omission on your part you have made the Police Department almost helpless spectators in these incidents '

இதற்கு ஏதாவது வழி செய்யமுடியுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதைத்தான் சொல்கிறேன். நீங்கள் சொல்வது ஒன்றுக்கு ஒன்று முரணாக இருப்பதால் இரண்டையும் நாங்கள் கவனிக்கவேண்டும். போலீஸ் துறையைச் செயலற்றதாக ஆக்கிவிட்டோம் என்பது திரு. விநாயகம் அவர்கள் குற்றச்சாட்டு. அவர்கள் கட்சியைச் சார்ந்த இராமமூர்த்தி அவர்களின் குற்றச்சாட்டு, போலீஸ் அக்கிரமங்கள் நடந்துவிட்டன, அதை நீங்கள் விசாரியுங்கள் என்பது. ஆக, ஒரே கட்சியைச் சார்ந்த இரண்டு உறுப்பினர்கள் இரண்டு கருத்துக்களை வைத்துக் கொண்டிருப்பதில் தவறு இல்லை, ஆனால் இந்த இரண்டு கருத்துக்களையும் நான் ஆராய்ந்து பார்த்துத்தான் அதில் எது நியாயம் என்று ஏற்றுக்கொள்ளமுடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன் உள்ள கேள்வி "தமிழ்நாடு 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண் 2) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 6/68) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இரண்டாம் பிரிவு, அட்டவணை முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இந்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா சட்டமாக்கப்பட்டது.

(ii) தமிழ்நாடு 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண் 3) மசோதா

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண் 3) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 7(68) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இரண்டாம் பிரிவு, அட்டவணை, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இந்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா சட்டமாக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுறுகின்றன. நாளை விடுமுறை. எனவே 30-3-1968-ம் தேதி காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பி. ப. 3-28 பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. *Statutory Rules and Orders.*

144. Notification issued with G.O. Ms. No. 2191, Revenue, dated the 19th December 1967, exempting from the liability to the Madras Entertainments Tax Rules, 1939, as subsequently amended. [Laid on the Table of the House under section 16 (4) of the Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of 1939)].

145. Notification issued with G.O. Ms. No. 2187, Revenue, dated the 19th December 1967, exemptnig from the liability to Tax payable under the Madras General Sales Tax Act, 1959, on the sale of goods by the Daya Sadan: [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959)].

B. *Reports, Notifications and other papers.*

†97. The Madras Appropriation (No. 2) Bill, 1968 (L.A. Bill No. 6 of 1968).

†Despatched to Members on 26th March 1968.



[*VIDE* ANSWER TO STARRED QUESTION No. 331 ON PAGE 401.]

*Statement showing the details of Police staff employed for motor vehicles taxation work disbanded with effect from 1st September 1967 forenoon.*

| District. | Sub-Inspector. | Head Constable. | Government Order in which the posts were first sanctioned. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 North Arcot .. | 1 | 2 | Sub-Inspector in G.O. Ms. No. 2589, Home, dated 3rd June 1950. Head Constables in G.O. Ms. No. 207, Public (Police), dated 11th April 1931. |
| 2 South Arcot .. | .. | 1 | G.O. Ms. No. 207, Public (Police), dated 11th April 1931. |
| 3 Chingleput .. | 1 | 1 | G.O. Ms. No. 207, Public (Police), dated 11th April 1931. |
| 4 Coimbatore .. | 1 | 2 | G.O. Ms. No. 207, Public (Police), dated 11th April 1931. |
| 5 Dharmapuri .. | 1 | 1 | G.O. Ms. No. 3036, Home, dated 25th August 1965. |
| 6 Kanyakumari .. | 1 | 2 | G.O. Ms. No. 3414, Home, dated 6th December 1956. |
| 7 Madurai North.. | 1 | 1 | Sub-Inspector in G.O. Ms. No. 5002, Home, dated 23rd November 1950. Head Constable in G.O. Ms. No. 3359, Home, dated 20th September 1965. |
| 8 Madurai Urban.. | 1 | 1 | G.O. Ms. No. 207, Public (Police), dated 11th April 1931. |
| 9 The Nilgiris. .. | 2 | 2 | One Sub-Inspector and two Head Constables in G.O. Ms. No. 3036, Home, dated 25th August 1965. Another Sub-Inspector in G.O. Ms. No. 3027, Home, dated 1st September 1961. |

| District. | Sub-Inspector. | Head Constable. | Government Order in which the posts were first sanctioned. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 10 Ramanathapuram | 1 | 2 | One Sub-Inspector and one Head Constable in G.O. Ms. No. 207, Public (Police), dated 11th April 1931. Another Head Constable in G.O. Ms. No. 3360, Home, dated 20th September 1965. |
| 11 Salem .. | 1 | 1 | Sub-Inspector sanctioned in G.O. Ms. No. 1695, Home, dated 10th May 1962. Two Head Constables originally sanctioned in G.O. Ms. No. 207, Public (Police), dated 11th April 1931 reduced to one in G.O. Ms. No. 3036, Home, dated 25th August 1965. |
| 12 Thanjavur .. | 1 | 1 | G.O. Ms. No. 207, Public (Police), dated 11th April 1931. |
| 13 Tiruchirappalli. | 1 | 2 | G.O. Ms. No. 207. Public (Police), dated 11th April 1931. |
| 14 Tirunelveli. .. | 1 | 1 | Two Head Constables were originally sanctioned in G.O. Ms. No. 207, Public (Police), dated 11th April 1931. One post was replaced by one post of Sub-Inspector in G.O. Ms. No. 2780, Home, dated 6th October 1955. |
| Total | 14 | 20 | |



மோட்டார் வண்டிகள் வரி வசூல் வேலை குறித்து நியமிக்கப்பட்டிருந்த காவல் துறைப் பணியாளரில் 1967ம் வருடம் செப்டம்பர் மாதம் 1-ம் தேதி முற்பகல் முதற்கொண்டு வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களின் விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை.

| மாவட்டம். | உதவி இன்ஸ்பெக்டர். | தலைமைக் காவலர். | இப்பதவிகள் முதன் முதலாக எந்த அரசாங்க ஆணையின் கீழ் ஏற்படுத்தப்பட்டன என்பது. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 வட ஆர்க்காடு .. | 1 | 2 | உதவி இன்ஸ்பெக்டர் பதவி அரசாங்க ஆணை எண் 2589, உள்துறை, 1950-ம் வருடம் ஜூன் மாதம் 3-ம் தேதி, தலைமைக் காவலர் பதவி, அரசாங்க ஆணை எண் 207, பொது (காவல்) 1931-ம் வருடம் ஏப்ரல் மாதம் 11-ம் தேதி. |
| 2 தென் ஆர்க்காடு.. | .. | 1 | அரசாங்க ஆணை எண் 207, பொது (காவல்), 1931-ம் வருடம் ஏப்ரல் மாதம் 11-ம் தேதி. |
| 3 செங்கற்பட்டு | 1 | 1 | அரசாங்க ஆணை எண் 207, பொது (காவல்), 1931-ம் வருடம் ஏப்ரல் மாதம் 11-ம் தேதி. |
| 4 கோயம்புத்தூர் | 1 | 2 | அரசாங்க ஆணை எண் 207, பொது (காவல்), 1931-ம் வருடம் ஏப்ரல் மாதம் 11-ம் தேதி. |
| 5 தருமபுரி .. | 1 | 1 | அரசாங்க ஆணை எண் 3036. உள்துறை, 1965-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 25-ம் தேதி. |
| 6 கன்னியாகுமரி .. | 1 | 2 | அரசாங்க ஆணை எண் 3414, உள்துறை, 1956-ம் வருடம் டிசம்பர் மாதம் 6-ம் தேதி |
| 7 மதுரை [வடக்கு] | 1 | 1 | உதவி ஆய்வாளர் பதவி, அரசாங்க ஆணை எண் 5002, உள்துறை, 1950-ம் வருடம் நவம்பர் மாதம் 23-ம் தேதி தலைமைக் காவலர் பதவி, அரசாங்க ஆணை எண் 3359, உள்துறை, 1965-ம் வருடம் செப்டம்பர் மாதம் 20-ம் தேதி. |
| 8 மதுரை நகர்ப்பகுதி. | 1 | 1 | அரசாங்க ஆணை எண் 207, பொது (காவல்), 1931-ம் வருடம் ஏப்ரல் மாதம் 11ம் தேதி. |

TAMIL NADU

| மாவட்டம். | உதவி இன்ஸ்பெக்டர். | தலைமைக் காவலர். | இப்பதவிகள் முதன் முதலாக எந்த அரசாங்க ஆணையின் கீழ் ஏற்படுத்தப்பட்டன என்பது. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 9 நீலகிரி .. .. | 2 | 2 | உதவி இன்ஸ்பெக்டர் பதவி ஒன்றும் தலைமைக் காவலர் பதவி இரண்டும் உள்துறை, 1965-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 25-ம் தேதி அன்று வெளியிட்ட 3036-ம் எண் அரசாங்க ஆணையில் ஏற்படுத்தப்பட்டன. மற்றொரு உதவி இன்ஸ்பெக்டர் உள்துறை, 1961-ம் வருடம் செப்டம்பர் மாதம் 1-ம் தேதி அன்று வெளியிட்ட 3027-ம் அரசாங்க ஆணையில் ஏற்படுத்தப்பட்டது. |
| 10 இராமநாதபுரம் ... | 1 | 2 | உதவி இன்ஸ்பெக்டர் பதவி ஒன்றும் தலைமைக் காவலர் பதவி ஒன்றும் பொதுக் காவல் துறையில், 1931-ம் வருடம் ஏப்ரல் மாதம் 11-ம் தேதியுள்ள 207-ம் எண் அரசாங்க ஆணையில் ஏற்படுத்தப்பட்டன. மற்றொரு தலைமைக் காவலர் பதவி அரசாங்க ஆணை எண் 3360, உள்துறை, 1965-ம் வருடம் செப்டம்பர் மாதம் 20-ந் தேதி. |
| 11 சேலம் .. .. | 1 | 1 | உதவி ஆய்வாளர் பதவி அரசாங்க ஆணை எண் 1695, உள்துறை,1962-ம் வருடம் மே மாதம் 10-ம் தேதி இரண்டு தலைமை காவலர் பதவி முதலில் பொதுக் காவல் துறையில் 1931-ம் வருடம் ஏப்ரல் மாதம்11-ம் தேதியன்று வெளியிடப்பட்ட 207-ம் எண் அரசாங்க ஆணையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. பின்னர் இந்த எண்ணிக்கை உள்துறை, 1965-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 25-ம் தேதி அன்று வெளியிட்ட 3036-ம் எண் அரசாங்க ஆணையில் ஒன்றாகக் குறைக்கப்பட்டது. |
| 12 தஞ்சாவூர் .. .. | 1 | 1 | அரசாங்க ஆணை எண் 207, பொது (காவல்), 1931-ம் வருடம் ஏப்ரல் மாதம் 11-ம் தேதி. |



1968 மார்ச் 28]

| மாவட்டம். | உதவி இன்ஸ்பெக்டர். | தலைமைக் காவலர். | இப்பதவிகள் முதன் முதலாக எந்த அரசாங்க ஆணையின் கீழ் ஏற்படுத்தப்பட்டன என்பது. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 13 திருச்சிராப்பள்ளி .. | 1 | 2 | அரசாங்க ஆணை எண் 207, பொது (காவல்), 1931-ம் வருடம் ஏப்ரல் மாதம் 11-ம் தேதி. |
| 14 திருநெல்வேலி .. | 1 | 1 | பொது (காவல்) துறை, 1931-ம் வருடம் ஏப்ரல் மாதம் 11-ம் தேதி அன்று வெளியிட்ட 207-ம் எண் அரசாங்க ஆணையில் முதலில் இரண்டு தலைமைக் காவலர் பதவிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. ஆனால் உள்துறை, 1955-ம் வருடம் அக்டோபர் மாதம் 6-ம் தேதி அன்று வெளியிட்ட 2780-ம் எண் அரசாங்க ஆணையினால் இப்பதவிகளில் ஒன்றுக்குப் பதிலாக உதவி இன்ஸ்பெக்டர் பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. |
| மொத்தம் .. | 14 | 20 | |

# தமிழக சட்டப் பேரவை

**சனிக்கிழமை, 1968 மார்ச் 30.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 359 தள்ளிவைக்கப் படுகிறது.

### தியாகிகளின் பிள்ளைகளுக்கு சலுகைகள்

* 360 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசியல் தியாகிகளின் பிள்ளைகளின் படிப்பிற்கு மத்திய, ராஜ்ய சர்க்காரால் கொடுக்கப்பட்டுவரும் சலுகைகள் முறையே என்னென்ன ?

(இ) இச்சலுகை எல்லாப் பிள்ளைகளுக்கும் வழங்கப்படுகிறதா ? அல்லது குறிப்பிட்ட அளவுக்கானவர்களுக்கு மட்டும் தான் வழங்கப்படுகிறதா ?

(உ) பின்தங்கிய வகுப்பினருக்கு மத்திய சர்க்கார் கொடுக்கும் ஸ்காலர்ஷிப்புக்கும் இதற்குமுள்ள வித்தியாசமென்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) முதல் (உ) வரை : சபை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த அறிக்கையில் கண்டுள்ளபடி தியாகிகளினுடைய பிள்ளைகள், ஸ்வீகாரப் பிள்ளைகள், இறந்துபோனவர்களுடைய பிள்ளைகள் படிக்க வேண்டுமென்று சொன்னால் கல்லூரிகளிலே தொழில் கல்லூரி அல்லது கலைக் கல்லூரியிலே படிப்பதற்கு ஆண்டு ஒன்றுக்கு 385 ரூபாய் கொடுப்பதாகக் கண்டுள்ளது. உண்டுறை விடுதிக்கே மாதம் ஒன்றுக்கு ரூ. 100 கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையிலே மூன்று மாதத்திற்கு அதைக்கொடுத்துவிட்டு மற்ற 7 மாதங்களுக்கு கொடுக்கப்படாததால் ஏழைகளாக இருக்கக்கூடிய தியாகிகளினுடைய பிள்ளைகள் எப்படி படிக்க முடியும். ஆகையால் அவர்களுக்கு ஆகிற செலவு அவ்வளவையும் ஏற்றுக்கொள்வதற்கு மத்திய சர்க்காரை வற்புறுத்த இந்த சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

---

* 620–625-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை மத்திய அரசு வகுத்து மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பாதித் தொகையை மத்திய அரசும் பாதித் தொகையை மாநில அரசும் ஏற்றுக்கொள்கின்றன. இந்தத் திட்டத்தின்மீதுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதை உயர்த்தவேண்டுமானால் மத்திய சர்க்கார் மறுபடியும் திட்டத்தைத் தீட்டி பரிந்துரை செய்யவேண்டிய நிலைமை இருக்கும். இந்த அரசு மத்திய அரசுக்கு தெரிவிக்கலாமே தவிர நடைமுறைப்படுத்த இயலாது.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** அரசியல் தியாகிகள் ஒருசிலர் தண்டிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள் ; வேறு சிலர் வருஷக்கணக்கிலே ரிமாண்டிலேயிருந்து வெளியே வந்தவர்கள். அப்படி ரிமாண்டிலே இருந்து வெளியே வந்தவர்களும் அரசியல் தியாகிகள் என்று ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள் என்று அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அரசியல் தியாகிகளினுடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சம்பளச் சலுகையைப்பற்றிய விவரங்கள்தான் இருக்கின்றன. எந்த வகையில் தியாகிகளினுடைய பட்டியல் தயாரிக்கப்படுகிறது என்ற விவரக்குறிப்பு இல்லை. தனிக்கேள்வி கேட்டால் பதில் அளிக்கப்படும்.

MR. SPEAKER : Hon. Member Thiru K. Vinayakam may now put his supplementary question without too many preambles. Because, we are hard pressed for time today.

THIRU K. VINAYAKAM : Who are considered as political sufferers? Are they those who have suffered during the struggle for Independence or those who have suffered during all kinds of political struggles that have been carried on after attaining Independence? Will the Hon. Minister be pleased to tell me what types of concessions are given to the children of such kinds of political sufferers?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அரசியல் தியாகிகளாக எந்த அடிப்படையில், எந்தக் கணக்கில் எடுக்கப்படுகிறார்கள் என்ற விவரக்குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும். எந்தெந்தப் போராட்டங்களில் ஈடுபட்டார்கள் என்ற விவரக்குறிப்பு இல்லை. உதவித் தொகையைப் பொறுத்தவரை பாதியை மாநில அரசும், பாதியை மத்திய அரசும் ஏற்றுக்கொள்கின்றன.

**திரு. எம். எஸ். மணி :** அரசியல் தியாகிகளுக்கு பென்ஷன் கொடுக்கப்பட்டுவருகிறதே—பென்ஷன் பெறுகிற தியாகிகளுடைய குழந்தைகளுக்கு கல்விச் சலுகை உண்டா ? அப்படி அந்தத் தியாகிகள் மறைந்துவிட்டால் அவர்களுடைய குழந்தைகளுக்கு அப்படிப்பட்ட சலுகை கொடுக்கப்படுமா ?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மறைந்தவர்களுடைய பிள்ளைகளுக்கும் அப்படிப்பட்ட சலுகைகள் தரப்படுகின்றன.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே ஈடுபட்டு சிறு தண்டனை பெற்றவர்களும் இந்தத் தியாகிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்களா ? அவர்களுடைய குழந்தைகளுக்கும் இந்தச் சலுகைகள் கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முன்பு முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சேர்க்கப்படவில்லை என்று. ஏற்கெனவே சேர்க்கப்பட்டிருப்பவர்களுக்குக் கொடுத்தால் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** யார் யார் தியாகிகள் என்ற கணக்கு எடுக்கப்படும்போது அவர்கள் எத்தனை ஆண்டுகள் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள் என்ற கணக்கு வைத்து எடுக்கப்படுகிறதா ? சில பேர்கள் சிறைக்குச் சென்றிருந்தும்கூட ரிகார்டுகள் இல்லாததால் அந்தச் சலுகைகள் மறுக்கப்படுகிறதா ? அவர்களுடைய குழந்தைகள் வேலைக்குச் செல்லுகிற நேரத்திலே ஏதாவது சலுகைகள் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முதலிலேயே நான் குறிப்பிட்டேன், எந்த அடிப்படையில் அந்தப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது என்ற விவரக்குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** அரசியல் தியாகிகள் பட்டியலிலே எவ்வளவு எண்ணிக்கை இருக்கின்றன ? இன்னும் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. பி. எஸ். மணியன் :** காங்கிரஸ் கட்சி நடத்திய போராட்டங்களிலே ஈடுபட்டவர்கள் என்று கருதப்படுகிறவர்கள்தான் அரசியல் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள். இது போன்று திராவிட முன்னேற்றக் கழகம் விலைவாசிப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம் முதலிய போராட்டங்களில் ஈடுபட்டு பாதுகாப்புச் சட்டப்படி நீண்ட நாட்களாகக் கைதியாக வைக்கப்பட்டுள்ளவர்களுடைய குழந்தைகளுக்கும் கல்விச் சலுகை அளிக்க சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கட்சிக் கண்ணோக்கு இல்லை. இந்திய விடுதலைப் போராட்டம் என்ற வகையில் ஈடுபட்டவர்களுக்குச் சலுகை தரப்படுகிறது. போராட்டத்தின் தன்மையைக்கொண்டு இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டவர்கள் பற்றியும் குறிப்பிட்டார்கள். முதல் அமைச்சர் அவர்கள், அவர்களை இதில் சேர்க்கவேண்டிய அவசியமில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**திரு. பெ. மலைச்சாமி :** கடந்த கால போராட்டங்களிலே ஈடுபட்டவர்கள், காங்கிரஸ் கட்சியிலே இருப்பவர்கள் மட்டும் அரசியல் தியாகிகள் என்று கருதப்படுகிறார்களா ? அல்லது மற்றக் கட்சியிலே இருப்பவர்களும் அரசியல் தியாகிகள் என்ற பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இதுபற்றிய குற்றச் சாட்டும் உண்டு. விவரங்கள் தெரிந்தால்தான் பதில் சொல்லலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** கன்யாகுமரி ஜில்லாவிலே திரு-கொச்சி தாய்த் தமிழகத்தோடு சேரவேண்டுமென்று கட்சிப் பாகுபாடின்றி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 11 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகளுக்கும் நன்மைகள் வழங்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே கொடுக்கப்பட்ட பட்டியலில் உள்ளவர்களுக்குத்தான் சலுகைகள் வழங்கப்படுகின்றன. புதிதாகச் சேர்க்கப்படவில்லை.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவர் அவர்களே, இந்தியா சுதந்திரம் பெறுவதற்குத் தியாகம் செய்துள்ள தியாகிகளினுடைய குழந்தைகளுக்கு அளிக்கவேண்டிய ஸ்காலர்ஷிப் கன்செஷன்களை, சலுகைகளை, ஒருவிதமான தடங்கலும் இல்லாமல், அதிகமாக அளிப்பதற்கு மத்திய அரசுக்கு இந்த அரசு சிபார்சு செய்து, அவைகளைத் தியாகிகளுடைய குழந்தைகள் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எல்லா மாநிலங்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவில்தான் மத்திய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதில் மத்திய அரசு பாதித் தொகை தருகிறது. நாம் பாதித் தொகை தருகிறோம். ஏற்கனவே இதை உயர்த்துவதற்கு முயற்சிகள் செய்தோம். ஆனால், அவர்களுக்கு இருக்கும் நிதிநிலை அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தான் தரப்படும் என்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, வினா எண் 361 எடுத்துக்கொள்ளப்படும்.



(திரு. கே. விநாயகம் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைக்கு அலுவல்கள் அதிகமாக இருக்கும் காரணத்தால், பத்து நிமிட நேரத்தில் ஒவ்வொரு வினாவையும் முடித்துக்கொள்ளலாம் என்று கருது கிறேன்.

(திரு. வி. கே. கோதண்டராமன் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாவை இரத்தினச் சுருக்க மாகக் கேளுங்கள். வினா எண் 360-க்கு இன்னும் ஒன்றிரண்டு துணை வினாக்களை அனுமதிக்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தியாகிகளுடைய குழந்தைகள் எல்லோருக்குமே ஆரம்பக்கல்வி முதற்கொண்டு கல்லூரிப் படிப்பு வரையில் இலவசக் கல்வி கொடுக்கின்றோம் என்று காங்கிரஸ்காரர்கள் பிரசாரம் செய்தார்கள். ஆனால், ஆண்டொன்றுக்கு நான்கைந்து பேர்களுக்கு மட்டிலுமேதான் இந்த இலவசக் கல்விச் சலுகை அளிக்கப்பட்டது என்பது உண்மையா? இதிலே கூட, இந்த எண்ணிக்கை வரையறுக்கப் பட்டதனால் படிப்பை நீடிப்பதற்குத் தொகை வேண்டும் என்று கேட்போருக்கெல்லாம் அதைக் கொடுப்பதிற்கில்லை என்ற நிலை உள்ளது. ஆகவே, 1960-ஆம் ஆண்டு முதற்கொண்டு இதுவரையில் ஆண்டொன்றுக்கு எத்தனை பேர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதைச் சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தியாகிகள் என்று விண்ணப்பித்துக்கொள்ளும்போது, ஏழ்மை நிலை, மாணவர்களுடைய தகுதி, திறமை, படிப்பு, ஆகியவைகளைக் கணக்கெடுத்து, குறிப்பிட்ட அளவுக்குத்தான் மத்திய அரசு தொகை ஒதுக்குகிற காரணத்தால், அந்த அளவுக்குத்தான் தந்து வருகிறது. அந்த அடிப்படையில், உயர்நிலைப்பள்ளிகளில் 8 முதல் 10-வது வகுப்பு வரையில் படிக்கின்ற மாணவர்களைப் பொறுத்த வரையில், ஆண்டொன்றுக்கு 48 பேர்களுக்கு ஸ்காலர்ஷிப் உதவித் தொகை தரப்படுகிறது. 11-வது வகுப்பு அல்லது புகுமுக வகுப்பில் படிக்கின்றவர்களைப் பொறுத்தவரையில், 36 பேர் களுக்குத் தரப்படுகிறது. டிகிரி வகுப்பில் படிக்கின்றவர்களைப் பொறுத்தவரையில், 20 பேர்களுக்கு, ஆண்டொன்றுக்கு, தரப்படு கிறது. பாலிடெக்னிக்கில் படிக்கின்றவர்களுக்கு 6 பேர்களுக்கும், தொழில் கல்லூரிகளில் 14 பேர்களுக்கும், தொழில் பள்ளிகளில் 20 பேர்களுக்கும் தரப்படுகிறது.

THIRU K. VINAYAKAM : Is the Government aware of the distinction between the two terms 'political sufferer' and 'political agitator'? Such of those who worked hard and agitated for the liberation of the country are termed as 'political sufferers' whereas those who took part in the Anti-Hindi and anti-price rise movements are only 'political agitators'. Has the Government got an exhaustive list of political sufferers and, as some of them have been left out, will the Government compile a new list including them also and thus go to their succour?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 'பொலிடிகல் ஸஃபரர்ஸ்' என்றும், 'பொலிடிகல் அஜிடேட்டர்ஸ்' என்றும் உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். எதை அரசியல் போராட்டமாகக் கருதி, அதில் ஈடுபட்டவர்களைத் தியாகிகள் பட்டியலில் சேர்ப்பது என்பதில் கட்சிக்குக் கட்சி கருத்து வேறுபாடும் மற்றவைகளும் இருக்கக்கூடும். இப்பொழுது இருப்பது, ஏற்கனவே எடுத்த பட்டியல் அடிப்படையில் தரப்படுகிற வகைகள் தான். அதில் யார் யாரை எடுப்பது என்பதில் ஒவ்வொரு கட்சியும், தாங்கள் எடுத்துக்கொள்ளுகிற ஒவ்வொரு போராட்டமும் அரசியல் ரீதியில் இருக்கிறது என்று வாதிடுவதற்கு அவரவர்களுக்கு தக்க காரண காரியங்கள் இருக்கக் கூடும். இப்பொழுது இருக்கிற தியாகிகள் பட்டியலின் அடிப்படையில்தான் தரப்படுகிறது.

### *N.C.C. Units*

* 361 Q.—THIRU K. VINAYAKAM :
THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR :
THIRU S. DURAISAMY :
} Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether it is proposed to reduce the number of N.C.C. Units in the State to the barest minimum; and

(*b*) if so, the reasons therefor?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) : 1967-68 கல்வி ஆண்டிலிருந்து கல்லூரிப் புகுமுக வகுப்புகளில் தேசிய மாணவர் படைப்பயிற்சி நீக்கப்பட்டு பட்டப்படிப்பு வகுப்புகளில் இரண்டு ஆண்டுகளுக்கு மட்டும் கட்டாயமாக்கப் பட்டுள்ளது. இதன் விளைவாக, தமிழ் நாட்டில் உள்ள தேசிய மாணவர் படைப்பிரிவுகளின் எண்ணிக்கை ஓரளவு குறைந் துள்ளது.

THIRU K. VINAYAKAM : What is the object or motive which prompted this Government to reduce the N.C.C units to the barest minimum? Is it the aversion which they have got to Hindi command or is it that they do not want our young men to take to those avocations?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய அறிக்கையின் பேரில்தான் இந்த எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது. பி.யு.சி.யி.-ல் வேண்டாம் என்றும், டிகிரி வகுப்பில் மூன்று ஆண்டுகளுக்கு வேண்டாம், இரண்டு ஆண்டுகள் இருந்தால் போதும் என்றும், மத்திய அரசு சொன்னதையொட்டி, இப்பொழுது இதைக் கட்டாயப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றும், என்.சி.சி. என்றும், கேம்ஸ்





என்றும் இரண்டாகப் பிரித்து, என்.சி.சி.-ஐ விரும்பி எடுத்துக் கொள்ளுகிறவர்கள் எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, எண்ணிக்கைக் குறைவுக்குக் காரணம், மத்திய அரசி னுடைய அறிக்கைதான். எல்லா மாநிலங்களிலுமே இந்த முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவர் அவர்களே, என்.சி.சி. பயிற்சியின் மூலமாக மாணவர்கள் நல்ல டிஸிப்ளினையும் பண்பாடு களையும் பெறுவதற்கு வசதி ஏற்படுவதனாலும், நாட்டிற்கு வரக் கூடிய அபாயத்தைத் தடுப்பதற்கு இத்தகைய பயிற்சி பெற்ற மாணவர்கள் அவசியம் என்பதனாலும், அவர்களுடைய தொகையைக் குறைக்காமல், அதிகமான மாணவர்களுக்கு என்.சி.சி. பயிற்சி அளிக்கும் ஏற்பாட்டை இந்த அரசு செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, என்.சி.சி.-யைப் பொறுத்த வரையில், மத்திய அரசு தான் முடிவு செய்து எவ்வளவு பேருக்குத் தரலாம், எப்படி என்ற முறை வகுக்கிறது. அதிலே முன்பு 85 யூனிட்கள் இருந்தன. இப்பொழுது பி.யு.சி-யில் என்.சி.சி-ஐ எடுப்பதன் காரணமாகவும், டிகிரி கோர்சில் இரண்டு வகுப்புகளில் மட்டும் கட்டாயப்படுத்துகிற சூழ்நிலை இருப்பதனாலும், 65 யூனிட்கள் இருக்கின்றன. முன்பு, 1966-67-இல், 70,775 பேர்கள் இருந்தார்கள். இப்பொழுது, 1967-68-இல், 44,575 பேர்கள் இருக்கிறார்கள்.

**திரு. சு. துரைசாமி :** அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்ற போது, மத்திய அரசினுடைய குறிப்புகளை ஓரளவு வைத்துத்தான் என்.சி.சி. குறைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். பொதுவாக, நாட்டுக்குப் பாதுகாப்பு தேடுவதற்கும் நம்முடைய மாணவர்கள் நல்ல ஒழுக்கமுள்ளவர்களாகவும், நல்ல பண்பாடு உள்ளவர்களாகவும் வளர்க்கப்படுவதற்கு என்.சி.சி. பயிற்சி மிகவும் தேவைப்படுகிறது. ஆகவே, உயர்நிலைப்பள்ளியில் கிட்டத்தட்ட 9-வது வகுப்பிலிருந்து என்.சி.சி. பயிற்சி அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அத்துடன், மாணவர்கள், அவர்கள் விரும்புகின்ற மொழியில், அதாவது, ஆங்கிலத்தில், அதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்படவேண்டும் என்றும், தமிழகத்தில் இருக்கும் எல்லா மாணவ சமுதாயத்தினரும் விரும்பினாலும், அப்படிப்பட்ட மாணவர்களுடைய விருப்பத்திற்கு நேர்மாறாக மத்திய அரசு இருப்பதாய்த் தெரிய வருகிறதே, அந்த மத்திய அரசுக்கு நமது அமைச்சரவை எடுத்துச்சொல்லி, மாணவர் களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு ஏதாவது ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** என்.சி.சி. பயிற்சிக் கான அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் ஆகியவர்களை அனுப்பு கின்ற பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால், என்.சி.சி.-க்கு ஏற்படுகிற செலவுகளையெல்லாம் அந்தந்த

மாநில அரசு ஏற்றுக்கொள்ளவேண்டியவர்கள். அண்மையில் கூடிய கல்வியமைச்சர்கள் மாநாட்டில், எல்லா மாநிலங்களினுடைய கல்வி அமைச்சர்களும், "இதனுடைய முழுச் செலவையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்வதாக இருந்தால் எல்லா வகுப்புகளிலும் கட்டாயமாக வைக்கலாம்" என்று கருத்துத் தெரிவித்தார்கள். அப்படியானால், கட்டாயமாக வைக்கலாம், இல்லையென்றால், இஷ்டபூர்வமாக வைத்து, யார் யார் உள்ளபடியே விரும்பிக் கற்று, அந்தப் பணிக்குச் செல்கிறார்களோ, அவர்களுக்கு வைத்துக்கொள்ளவேண்டிய அளவுக்குத் தளர்த்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். அப்படிக் கல்வி அமைச்சர்கள் மாநாட்டில், அத்தனை மாநிலக் கல்வி அமைச்சர்களும் கேட்டுக் கொண்டதன் பேரில், அதை இஷ்ட பாடமாக்கி, கேம்ஸ் என்றும், என்.சி.சி. என்றும் இரண்டாகப் பிரிக்கலாம் என்றும், மத்திய அரசே முழுச் செலவையும் ஏற்றுக்கொள்வதாக இருந்தால், எல்லா மாநிலங்களிலும் கட்டாயமாக எல்லா வகுப்புகளுக்கும் எல்லாப் பிரிவுகளுக்கும் வைக்கலாம் என்றும் முடிவுக்கு வந்தார்கள்.

DR. H. V. HANDE: After the misunderstanding between the State Government and the Central Government with regard to whether the words of command should be in Hindi or English, which has been the bone of contention, and the Centre having refused to adopt the command in English and insisting upon the State Government that the words should be only in Hindi, if this Government is going to remove the N.C.C., will it not be a very serious handicap to the boys of Tamilnad who would like to join the Army, Air Force and Navy and as a large number of persons who are joining these forces are from the Punjab, Maharashtra and other States?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, என்.சி.சி.-ஐப் பொறுத்த வரையில் பயிற்சி தேவை என்பதை அத்தனை பேரும் உணர்கிறோம். இந்த அரசாங்கமும் உணர்கிறது. ஆனால், ஆணைச் சொற்களைப் பொறுத்த வரையில், மத்திய அரசாங்கத்திற்கு எழுதிற்று. முதலமைச்சர் அவர்கள் அன்று எடுத்துத் தெரிவித்தது போன்று, பெரும்பாலான சொற்கள் ஆங்கிலத்தில்தான் இருக்கின்றன. குறிப்பிட்ட ஒருசில சொற்களே இந்தியில் இருக்கின்றன. மறுபடியும் பரிசிலனை செய்ய வேண்டும் என்று எழுதியிருக்கிறார்கள். அது இனிமேல்தான் பரிசீலிக்கப் படவேண்டும். அதற்குப் பிறகு, முடிவு எடுத்துத்தான் மத்திய அரசுக்குத் தெரிவிக்கவேண்டிய நிலை இருக்கிறது. என்.சி.சி. பயிற்சி தேவை என்பதை இந்த அரசு உணர்கிறது.

திரு. டி. மார்டின்: ஸ்பீக்கர் சார், மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான சுற்றறிக்கையில், 'நோட்டி பிகேஷனில்' என்.சி.சி.-யில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு மார்க் அளிப்பதாக இருக்கிறது. என்.சி.சி.-யை பி.யு.சி.-யில் குறைக்கும் நேரத்தில் 'மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்படும் நேரத்தில் என்.சி.சி.-யில் பயிற்சி பெற்றவர்களுக்கு மார்க் அளிக்கப்படும்' என்ற அந்த விதியை நீக்க அரசாங்கம் முன் வருமா?





மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சென்ற ஆண்டுக்கு முதலாண்டு என்.சி.சி., மாணவர்களுக்குக் கட்டாயமாக இருக்கும் நிலை இருந்தது. அதனால் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் நிலை இருந்தது. சென்ற ஆண்டு அது இல்லாததால் மருத்துவக் கல்லூரிகளுக்குச் சேர்க்கும்பொழுது இந்தப் பிரிவு நீக்கப்படத் தான் வேண்டிவரும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, என்.சி.சி.-யைப் பொறுத்த வரையில் உயர்நிலைப் பள்ளியானாலும் சரி, கல்லூரி யானாலும் சரி, இரண்டாண்டுகள் குறைந்தபட்சம் இந்தப் பயிற்சி யெடுத்தால்தான் 'சீனியர் சர்ட்டிபிகேட்' பெற முடியும். ஆகவே, பி.யூ.சி. ஓராண்டாக இருப்பதால், என்.சி.சி. தேவை இல்லை என்று வலியுறுத்தப்பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதை உணர்ந்துதான் சென்ற ஆண்டே பி.யூ.சி.-யில் இல்லாமல் ஆக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* 362 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the N.C.C. Contingent from Madras State has annexed the coveted inter-directorate banner at the annual N.C.C. rally and competitions held in Delhi on the eve of the Republic Day celebrations; and

(b) whether the State Contingent has also won the distinction by winning two first prizes and two third prizes for individual performances?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ), (ஆ): ஆம்.

THIRU K. VINAYAKAM: Sir, will the Hon. Minister be pleased to give details of the awards obtained by our boys? Also in view of the wonderful performance which they have made at Delhi, will the Government reconsider the possibility of renewing the N.C.C. training in spite of the fact that we are against the Hindi commands and whereas the number of Hindi commands is negligible—10 or 15 commands—will the Government seriously take up this matter and renew the N.C.C. training at least from the next academic year?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த ஆண்டு 26—1—1968 குடியரசு நாளன்று 2 ஆபீசர்களும், 84 கேடட்ஸ் மாணவர்களும் அந்த விழாவிலே கலந்து கொண்டார்கள். அதற்கு 43,871 ரூபாய் செலவு ஏற்பட்டது. 'Inter-Directorate Banner for 1968' இந்த ஆண்டு தமிழகத்திற்குக்

கிடைத்திருக்கிறது. அது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. 'All India Best Senior Division Cadet' என்பது கோவை பி.எஸ்.ஜி. ஆர்ட்ஸ் கல்லூரியைச் சேர்ந்த தாஜுதீன் என்பவருக்குக் கிடைத்தது. 1964-ஆம் ஆண்டு 'All India Junior Division Cadet Trophy' என்ற தன்மையும் முதலாவதாக இவருக்கே கிடைத்தது. இந்த ஆண்டு 'All India Junior Division Girl Cadets' Trophy' செல்வி மீனு குருட்டராவுக்கு கிடைத்தது. கோவை நிர்மலா கல்லூரியைச் சேர்ந்த இராணிக்கு 'Best All India Senior Division Girl Trophy' கிடைத்திருக்கிறது. திருச்சியைச் சேர்ந்த ஜேகப் வர்கீஸுக்கு 'Best All India Junior Division Boy Cadet Trophy' கிடைத்திருக்கிறது. இது தவிர, ஜூனியர் பிரிவில், 'Shooting championship event' இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. 'Line-dressing competition' இல் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. (குறுக்கீடு.) முதலிலே குறிப்பிட்டபடி ஆங்கிலத்திலே இருக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. அதை மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். மறுபடியும் என்ன முடிவு வருகிறது என்பதைப்பற்றி ஆராய வேண்டும். நம் முடிவு வேறு என்னென்ன வகைகளை ஏற்படுத்தும் என்பது பரிசீலனையில் இருக்கிறது.

## தமிழ்நாடு சிறு தொழில் கார்ப்பரேஷன்

* 363 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்காரால் நடத்தப்பட்டு வந்த இஞ்ஜினீரிங் தொழிற் சாலைகளெல்லாம் Madras State Small Industries Corporation என்கிற பெயரால் ஏற்று நடத்தப்படுகின்றனவா ? அதன் காரணம் என்ன ?

(இ) அதற்கு போர்டு அமைக்கப்பட்டுள்ளதா ? அதன் அங்கத்தினர்கள் யார் யார் ? எத்தனை ஆண்டுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். முதல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின்போது துவக்கப்பட்ட அரசாங்கச் சிறு தொழில் உற்பத்தி பணிப்பிரிவுகள் வாணிக முறைகளில் நடத்தப்படக்கூடிய நிலையை அடைந்து விட்டன. இந்தத் தொழிற் பிரிவுகளை வாணிக அடிப்படையில் நடத்தும் நோக்கத்துடனும், அவற்றின் உற்பத்தித்திறனை உயர்த்தும் பொருட்டும், அவை நிர்வகிக்கப்படும் முறையைச் செம்மைப் படுத்தும் பொருட்டும், 1—12—1965 முதல் அவற்றைத் தமிழ்நாடு சிறு தொழில் கார்ப்பரேஷன் லிமிடெட் என்னும் நிறுவனத்தின் மேலாதிக்கத்துக்கு அரசாங்கம் மாற்றியது.



(இ) அரசாங்கத்துக்கு முழுவதும் சொந்தமாகிய இக் கார்ப்பரேஷனின் இயக்குநர் வாரியத்தில் கீழ்க்கண்ட அரசாங்க அதிகாரிகள் ஐவர் உறுப்பினர்களாவர் :—

1. தொழில், தொழிலாளர் வீட்டு வசதித்துறை செயலாளர் . . தலைவர்
2. நிதித் துறைச் செயலாளர் . . இயக்குநர்
3. தொழில், தொழிலாளர் வீட்டு வசதித் (சிறு தொழில்கள்) துறைச் செயலாளர் . . இயக்குநர்
4. சென்னை-5-ல் தொழிலாளர் வாணிகத் துறை இயக்குநர் . . இயக்குநர்
5. நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சிறு தொழில்கள் கார்ப்பரேஷன் லிமிடெட் இயக்குநர்

இந்த இயக்குநர்களை அரசாங்கம் நியமிக்கின்றது. அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. வாரியத்தில் உள்ள இயக்குநர்களின் பதவிக் காலம் வரையறுக்கப்படவில்லை. ஆனால், இயக்குநர் எவரையும் எச்சமயத்திலும் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் அரசாங்கத்துக்கு உண்டு.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்தத் தொழில்கள் அபிவிருத்தி ஏற்பட வேண்டும், உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்னும் காரணத்திற்காக வேண்டி இப்படி கார்ப்பரேஷனாக மாற்றியதற்குப் பிறகு எந்த அளவிற்கு அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது, எந்த அளவுக்கு உற்பத்தித் திறமை ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடியுமா ? அதே நேரத்தில் காலவரையறையின்றி இதில் 5 அதிகாரிகளைக் கொண்ட ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது, இது முறைதானா ? இதற்குக் காலவரையறை இருக்க வேண்டாமா ? ஆகவே தொழில் நுணுக்கங்கள் தெரிந்த மற்ற வெளியார்களையும் இருக்க வைப்பதன் மூலமாகத்தானே அதை அபிவிருத்தி செய்ய முடியும் ? இதில் சர்க்காரின் கருத்து என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1—12—1965-இலிருந்து இது பணியாற்றி வருகிறது. 31—3—1967 வரை சுமார் 150 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் உற்பத்தியாயின. 1966-67-இல் 479 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் உற்பத்தியாயின. 1965-66-ல் 13.68 இலட்சம் ரூபாய் மொத்தத்தில் இலாபம் கிடைத்தது. 1966-67-இல் 12.83 இலட்சம் ரூபாய் லாபம். ஆக, இதை வைத்துத்தான் கணக்கிட வேண்டியிருக்கிறது. மற்ற வகைகளில் எப்படி என்பது பற்றிக் குழு அமைத்து ஆராயலாமா என்பது பரிசீலனையில் இருக்கிறது. காலவரையறை பற்றிக் கேட்டார்கள். இதில் இருப்பவர்கள் அதிகாரிகளாகயிருப்பதால் யார் அந்த இடத்திற்கு வந்தாலும்,

போனாலும் உறுப்பினர்களாக இருப்பார்கள். தனியார்களையும் அதிகாரமற்றவர்களையும் இதிலே இணைத்துக்கொள்வதனால் பலன் ஏற்படுமா என்பதை இனி ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** அந்தக் குழுவில் தொழில் வல்லுநர்கள் சேர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. இலாபகரமான திட்டங்கள் உருவாக்க வேண்டுமென்ற காரணத்தினால் அந்த வழியில் நடத்துவதற்குச் சர்க்கார் யோசிக்குமா ? இன்று வரையும் மொத்தத்தில் நஷ்டமேற்பட்டதாகத் தெரிகிறது. தனிக் கமிட்டி நிறுவி என்ன காரணத்தினால் அந்த நஷ்டம் ஏற்பட்டது என்று கண்டு, அதற்குப் பரிகாரம் செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தனியாக அதிகாரப் பற்றற்றவர்களை இணைப்பதுபற்றி இனி யோசிக்க வேண்டும். இதைப்பற்றிச் சீர்படுத்த, செம்மைப் படுத்த என்ன செய்யலாம் என்பதை அரசு யோசிக்கிறது. தனிக் குழு அமைப்பதன்மூலம் இதையெல்லாம் சரிப்படுத்த முடியும் என்ற நிலை ஏற்பட்டால் அப்படிப்பட்ட குழு அமைப்பதற்கு முயற்சியெடுக்கலாம்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், இப்படிப்பட்ட சிறுதொழில் கார்ப்பரேஷனில் இருக்கின்ற தொழிலாளர்களுக்கும், மூலதனத் திற்கும் எவ்வளவு சதம் இருக்க வேண்டுமோ அதற்கும் அதிகமாக அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்த அதிகாரிகளின் பளுவினால் படிப்படியாக நஷ்டம் ஏற்படுகிறது என்றும், கொள்முதல் விற்பனையில் ஊழல் இருக்கிறது என்றும் பல பேர்கள் சொல்லிக்கொள்கிறார்கள். இது சம்பந்தமாகத் தீவிர நடவடிக்கை எடுக்காவிட்டால் அது இன்னும் மிகவும் க்ஷீணதசை அடைந்து தொழிலாளர்கள் பலரை நிறுத்த நேரிடும் என்று சொல்லப்படுவதை அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் கண்டறிந்து, அதிலே அதிகமான அதிகாரிகள் இருப்பார்களேயானால் சிக்கனப்படுத்தும் முறையில் அதிகமானவர்களை நீக்கவும், செம்மைப்படுத்தவும் ஆராய்ந்துகொண்டிருக்கிறது.

முற்பகல். 9-30. **திரு. கி. பாலசுப்பிரமணியன் :** தலைவரவர்களே, சமீபத்தில் இந்தச் சிறுதொழில் கார்ப்பரேஷனின்கீழ் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு வேஜ் போர்ட் சிபாரிசின் அடிப்படையில் இடைக்கால நிவாரணமாகக் கிடைத்த 40 பைசாவில் பஞ்சப்படி 28 காசு அட்ஜஸ்ட் செய்து 12 காசுதான் தருகிறார்கள். இதனால் தொழிலாளர்களுக்கிடையில் பெரிய கசப்பு உணர்ச்சி பரவி வருவதாகத் தெரிகிறது. ஆகவே, அதைச் சீர் செய்ய என்ன உத்தேசம் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக்குறிப்பு எனக்கு வரவில்லை. வந்தால் அது பற்றி ஆராயலாம்.





**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** இந்தக் கார்ப்பரேஷன் அமைப்பில் என்ஜினியரிங் தொழில் மட்டும்தான் வந்திருக்கிறது. மற்ற ஃபாக்டரிகள், தச்சுத் தொழில்கள் போன்ற தொழில்கள் எல்லாம் இருக்கின்றன இவைகளுக்கு எல்லாம் இப்படி ஒரு கார்ப்பரேஷன் அமைக்க உத்தேசம் உண்டா ? அப்படி அமைப்பதன் நோக்கம் லாபகரமான வியாபார நோக்கமா அல்லது வேறு ஏதாவது நோக்கமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சிறு தொழில்களில் எஞ்சினியரிங் தொழில் மட்டுமல்ல, தச்சுத் தொழில் மற்றவைகள் எல்லாம் ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் என்ற அளவில் வருகிற 67 தொழில்கள் 1-12-1965 வரை எடுத்துக்கொள்ளப்பட்டன. வணிக நோக்கத்தின் அடிப்படையில் அதிக வருமானம் தேடித்தரும் வகையில் தனிக் கார்ப்பரேஷனாக அமைக்கப்பட்டது. இதில் பணி செய்கிற நோக்கத்தோடு சிலபல தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதன் குறிப்பைத்தான் தொழில் மானியக் கோரிக்கை மீது பேசும்போது கிட்டத்தட்ட 23, 24 யூனிட்கள் பணி நோக்கத்தின் அடிப்படையில் வைத்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்றும் அவற்றில் நாம் அதிகமான லாபத்தை எதிர்பார்க்க முடியாது என்றும் கூறினேன். லாபத்தை அதிகமாக்கும் நோக்கத்தின் அடிப்படையில்தான் தொழில் கார்ப்பரேஷன் அமைக்கப் படுகிறது.

(திரு. வி. கே. கோதண்டராமன் எழுந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு மணி நேரத்தில் 60 துணை வினாக்களுக்குத்தான் பதில் சொல்ல முடியும். எனவே, ஒரே உறுப்பினருக்குப் பல துணை வினாக்கள் அனுமதிக்க நேரம் இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், என் கேள்வி கார்ப்பரேஷன் அமைப்பதற்கு முன்னால் எந்த அளவு உற்பத்தி இருந்ததோ அதைவிட கார்ப்பரேஷன் அமைத்ததற்குப் பிறகு குறைந்துவிட்டது, திறமை குறைந்துவிட்டது என்பதுதான். வருஷா வருஷம் எந்த அளவுக்கு உற்பத்தி இருக்கிறது என்பது பற்றி மட்டும் அமைச்சரவர்கள் பதில் அளித்தார்கள். அப்படி உற்பத்தி குறைந்திருப்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய முழு விவரக்குறிப்பு என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

**பாலங்கள்**

* 364 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலத்துக்கு மேற்கே 2 மைலில் உள்ள கண்டு குளத்துக்கு அருகே உள்ள ரோட்டின் குறுக்காக மிகக் குறுகலாக உள்ள பாலத்தை அகலப்படுத்திக் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

[1968 மார்ச் 30

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இத்தகைய செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்த ரோட்டின் இடையில் ஜிக்-ஜாக் என்று சொல்வது போன்று இரட்டை வளைவு உள்ள பாலமாக அமைந்திருப்பதால், அநேகம் விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இனிமேலாவது முயற்சி எடுத்து அதைச் சரி செய்ய உத்தேசிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் வேலை எடுக்கப்படவில்லை. ஆகவே, எந்த முயற்சியும் இப்போது எடுப்பதற்கு இல்லை.

* 365 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have decided to widen the narrow bridge across the Kodamuratti river on the Tiruchirappalli-Coimbatore Highway; and

(*b*) if so, what is its estimate and when it would be taken up for execution?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) திருச்சிராப்பள்ளி-கோயம்புத்தூர் சாலையின் 0/7-8 மைலில் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்தை அகலப்படுத்துவதற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(இ) ஒப்பந்தக்காரர் இவ்வேலைக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு விட்டார். அவர் இந்த வேலையைச் சிறிது காலத்தில் தொடங்குவார்.

**திரு. கே. வினாயகம் :** இந்த வேலைக்கு எவ்வளவு எஸ்டிமேட் போடப்பட்டது, எவ்வளவு நாட்களுக்குள் இந்த வேலையை முடித்து பொதுமக்களின் உபயோகத்துக்காக இந்தப் பாலத்தைத் தரமுடியும் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதற்காக 8 இலட்சம் ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டு இருக்கிறது. 1964-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் அரசு ஒப்புதல் அளித்தது. ஆனால் இது வரையில் அந்த வேலை ஆரம்பிக்கப்படாமல் இருந்தது. 1967-ல் இந்த வேலைக்கான மதிப்பீடுகள் எல்லாம் ஒப்புக் கொள்ளப்பட்டு இப்போது வேலை தொடங்குகிற நிலையில் இருக்கிறது.

* 366 *Q.*—THIRU A. CHIDAMBARANATHA NADAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is a proposal to put up a bridge across Manakudy lake linking Kanyakumari-Kovalam road and Kottar-Manakudy road; and

(*b*) if so, the estimated cost of the work and when it will be taken up for execution?



1968 மார்ச் 30]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) அத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** மணக்குடி காயலின் பக்கத்தில் கீழ் மணக்குடி, மேல் மணக்குடி என்ற மீனவ கிராமங்கள் இருக்கின்றன. அவர்கள் மீனுக்கு உப்பு கொண்டுவருவதற்கும், மாணவர்கள் ஆங்காங்கு செல்வதற்கும், தொழிலாளர்கள் பக்கத்து கிராமங்களுக்குச் செல்வதற்கும் வசதியில்லாத காரணத்தால் தினம் தினம் நீந்திச் செல்கிற நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த நிலையை உணர்ந்து ஒரு நல்ல நடவடிக்கை எடுத்து இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த நிலையையும் உணருகிறோம், அதே நேரத்தில் நிதி நிலையையும் உணருகிறோம்.

* 367 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் டவுனிலிருந்து அண்ணாமலைநகர் செல்லும் பாதையில் உள்ள ரெயில் பாதையின் குறுக்கே ஒரு மேம்பாலம் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவ்வித திட்டம் ஒன்றும் அரசின் கவனத்தில் இல்லை.

(திரு. கே. வினாயகம் எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சிவசுப்பிரமணியன் அவர்கள் கேட்கவேண்டிய வினாவை திரு. வினாயகம் அவர்கள் கேட்கிறார்களா ?

THIRU K. VINAYAKAM : You trapped me very well, Mr. Speaker.

சார், இந்தப் பாலத்தைக் கட்டுவதற்காக எவ்வளவு எஸ்டிமேட் போடப்பட்டது? அதற்காக மத்திய சர்க்காரிலிருந்து எவ்வளவு தரப்படுகிறது? நம் சர்க்காரிலிருந்து எதாவது தரப்படுமா? அப்படி இருந்தால் அந்தத் தொகையைச் சொல்லி எப்போது அந்த வேலையை எடுத்துக்கொள்வார்கள் என்று சொல்வார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதற்காக 10 இலட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தச் சாலையின் ஒரு பகுதி அண்ணாமலைநகரைச் சேர்ந்தது. ஒரு பகுதி சிதம்பரம் நகராட்சியைச் சேர்ந்தது. இடையில் உள்ள ரயில்வே பாதை மத்திய சர்க்காரைச் சேர்ந்தது. மூன்று பேர்களும் ஒத்து வந்த பிறகுதான் இந்தக் காரியம் நடைபெற வேண்டும்.

*Supply of kerosene*

* 368. *Q.*—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the steps taken by the Government to ensure adequate supply of kerosene in the State?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Since April, 1966, the Government of India have been fixing companywise State quotas of kerosene oil to be supplied to this State. There are five major oil companies, viz., (i) Indian Oil Corporation, (ii) Hindustan Organisers, (iii) Burmah Shell, (iv) ESSO and (v) Caltex who supply kerosene to this State. The monthly quota for this State has been fixed at 21,400 tonnes or 27,509 kilo litres. The Commissioner of Civil Supplies in turn draws a district-wise programme based on the requirements of each district and sub-allocates the monthly quota among the various districts according to their respective requirements. The internal distribution of kerosene in each district is left to be dealt with by the Collectors. They keep a close watch over the actual movements into their districts and report short-falls, if any, to the Commissioner of Civil Supplies who in turn gets in touch with the Oil Companies, whenever necessary, to tone up the distribution arrangements and to supply the quantity allotted in time. As regards arrangements made for supply of kerosene for agricultural purposes, the Oil Companies have promised to give top priority and the Collectors have been asked to issue permanent identity cards to bonafide agriculturists owning pumpsets, tractors, etc. As for industrial purposes, permits are being issued liberally. The monthly quota allotted to this State is quite sufficient to meet the needs of both urban and rural areas and also the various industries in the State. For the past one year or so, the supply position of kerosene has been quite satisfactory and also there is no scarcity anywhere in the State at present. The steps taken by Government have ensured a fairly regular and adequate supply of kerosene throughout the State without giving room for complaints from the consumers.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** இந்த 21,400 டன் என்று எந்த அடிப்படையில் இந்திய சர்க்கார் ஃபிக்ஸ் செய்கிறார்கள் என்று அறியலாமா? திடீர் திடீரென்று கொஞ்ச நாளாக இந்தத் தட்டுப்பாடு ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சமீப காலத்தில் அப்படி எந்தத் தட்டுப்பாடும் ஏற்படவில்லை. சில கப்பல்கள் வருவதில் தாமதம் ஏற்படுவதால் ஏற்பட்ட தட்டுப்பாடுகளே தவிர, இருக்கிற நிலைமை என்னவென்றால் போதுமானதாக இருக்கிறது என்பது மட்டுமல்ல. கெரோஸினை ரேஷன் ஆர்ட்டிகளில் ஒன்றாகச் சேர்த்திருந்தோம். இப்போது தாராளமாக உள்ள கெரோசின் கையிருப்பை உத்தேசித்து நம் தமிழக அரசு 9—9—1967 முதல்



இந்த கெரோஸின் ரேஷன் ஆர்ட்டிகிளில் ஒன்று என்ற பட்டியலில் இருந்து நீக்கிவிட்டு சாதாரணப் பொருளில் ஒன்றாக ஆக்கியது. இடையில் ஏற்பட்ட தட்டுப்பாடு கப்பலில் வருவது, துறைமுகத்தில் இறக்குவது இந்த மாதிரி காரியங்களால் ஏற்பட்ட தாமதமாக இருக்கலாம்.

THIRU K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that there was a great scarcity of kerosene in the City of Madras during the later portion of November last year and is he also aware of the fact that the kerosene that is available in the State is being utilised by the lorry drivers instead of the diesel oil and thus depriving the Government of the sales tax that would be got out of the sale of diesel oil? Also, it is only due to that kind of change-over to the consumption of kerosene by the lorry drivers which results in this kind of dire scarcity in the City and also in case of scarcity, kerosene is rushed first to meet the needs of the City and whereas mofussil areas are awfully neglected. Are the Government aware of these things?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The Government are aware of some delay but certainly it is not correct to say that there was an alarming situation or there was scarcity of kerosene. That is only an allegation, I can say.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்:** தலைவரவர்களே, தமிழகத்திற்குப் போதுமான மண்ணெண்ணெய் வந்திருந்தும் இந்தத் துறையில் வியாபாரம் செய்யும் கம்பெனிகள் வேண்டுமென்றே நெருக்கடியை உண்டாக்கும் முறையிலே கூடுதலான விலைக்கு விற்று அதிக இலாபம் அடைய வேண்டுமென்ற நோக்கத்தோடு ரெயில்வேக்களில் வரும் மண்ணெண்ணெய் வேகன்களை உடனுக்குடன் அன்லோடு செய்யாமல் இருப்பதன் காரணமாக இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது இந்த அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கருத்து முற்றிலும் தவறானது. நெருக்கடி இருக்கிறது என்பது முற்றிலும் தவறானது. இதற்கு நெருக்கடி இல்லை என்ற காரணத்தினால்தான், இதை ரேஷன் ஆர்ட்டிகிள் பட்டியலிலிருந்து 9—9—1967-லிருந்து நீக்கியிருக்கிறோம். சில இடங்களிலே அதைக் கொஞ்சம் அதிகமான விலைக்கு விற்கிறார்கள். கடைகளிலே 50 பைசா என்றால், கட்டை வண்டிகளிலே விற்கிறவர்கள் 55 பைசா என்று விற்கிறார்கள். இதை ஒரே விலையில் விற்கவேண்டுமென்ற முறையில்தான் அவ்வப்பொழுது அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல், ஒரு குறிப்பிட்ட விலையை பெட்ரோலியம் அண்டு கெமிக்கல்ஸ் நிர்ணயிக்கிறார்கள். அவர்கள்தான் இந்த அடிப்படை விலையை நிர்ணயித்திருக்கிறார்கள். அந்தக் குறிப்பிட்ட விலைக்குமேல் மண்ணெண்ணெய் விலை போகக்கூடாது என்பதை நிர்ணயிக்க வேண்டுமென்பதற்காகத்தான் கலெக்டர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை மிகுந்த விழிப்புடன் கண்காணித்துக்கொண்டு வருகிறார்கள். எங்காவது அம்மாதிரி

நடைபெறுகிறது என்பதை தனிப்பட்ட முறையில் வியாபாரிகள் அப்படி செய்கிறார்கள் என்பதை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவாரானால், அரசாங்கம் நிச்சயம் கவனிக்கும்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவரவர்களே, இந்த மண்ணெண்ணெயினுடைய உற்பத்தி விலை எவ்வளவு, அல்லது இறக்குமதி விலை எவ்வளவு, அதற்கு விதிக்கப்பட்டிருக்கின்ற வரி எவ்வளவு என்று சொல்ல முடியுமா? அதோடு விவசாயிகள் உபயோகிக்கின்ற இயந்திரங்கள், டிராக்டர்கள் ஆகியவற்றிற்கு உபயோகிக்கின்ற இந்த மண்ணெண்ணெய்க்கு வரி விலக்கு அளிக்க முடியுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** 50 பைசா என்று விற்கப்படுகிறது. சில இடங்களிலே கொஞ்சம் அதிகமாகவும் விற்கப்படுகிறது. ஆனால், குறிப்பிட்ட விலைக்கு மேல் விற்காமல் பாரப்பதற்கு கலெக்டர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் நின்றுகொண்டிருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். நான் தெளிவாகச் சொல்லுகிறேன். நீங்கள் போட்ட வினாவைத் தெரிந்துகொண்டுதான் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள் என்றுதான் நீங்கள் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மூல வினாவுக்கும் இந்த வினாவுக்கும் எவ்வளவு பொருத்தம் இருக்கிறதோ, அந்த அளவுக்குத்தான் நான் பதில் சொல்லியிருக்கிறேன். அவர் கேட்ட கேள்விக்கும் இந்த மூல வினாவுக்கும் கொஞ்சம்கூடப் பொருத்தம் கிடையாது. அதை விட்டுவிட்டு, ‘நான் சொன்ன கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை. அதைப் புரிந்துகொண்டு சொல்லவில்லை; அல்லது ஏதோ சொல்லி இருக்கிறார்கள்’ என்று நான் சொன்னதற்குப் பொருள் சொல்லக் கூடாது. அவர்கள் கேட்ட கேள்வியைப்பற்றி தனிக்கேள்வி போட்டால் நான் விவரமாகப் பதில் சொல்லமுடியும்.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவரவர்களே, சில மாதங்களாக அரியலூர், திருமலைப்பாறை ஆகிய இடங்களில் வாராவாரம் மண்ணெண்ணெய் விலையை ஒரு டின்னுக்கு ரூ. 10, ரூ. 13 ரூ. 15 என்று உயர்த்திக்கொண்டே போகிறார்கள். நியாயமான விலையை விட அதிகமாக கூடுதலான விலைக்கு விற்கிறார்கள். அது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இந்த நிலையை நீக்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஒரே சீராகத்தான் விற்கிறது என்பதுதான் அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிற தகவல்.



**திரு. வி. டி. அண்ணாமலை :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய், வட ஆர்க்காடு கோவாப்ரேடிவ் சொஸைட்டிக்குக் கொடுக்கப்பட்டு, அதை வைப்பதற்கு இடம் இல்லாத காரணத்தால் தனியாக சித்தூரில் விற்கப்படுகிறது என்பது தெரியுமா? ஆகவே, எந்தெந்த இடங்களில் கெரோசின் எண்ணெய் வைப்பதற்கு இடம் இருக்கிறதோ, அந்த இடங்களுக்கு மட்டும் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இவ்வளவு பெரிய பயங்கரமான தவறு நடந்திருப்பதை இவ்வளவு நாட்களாக அரசின் கவனத்திற்கோ, அல்லது அமைச்சரின் கவனத்திற்கோ கொண்டு வந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட காரியங்களை அவர்கள் வெகு விரைவாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால் அரசாங்கத்திற்கும் நல்லதாக இருக்கும், பொது மக்களுக்கும் நல்லதாக இருக்கும்.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவரவர்களே, இலட்சக்கணக்கான விவசாயிகள் இன்றைக்கு இயந்திரம் வைத்து விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மின்சாரம்கூட போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் மண்ணெண்ணெய் வாங்கும்போது குறிப்பிட்ட நேரங்களிலே குறிப்பிட்ட அளவுக்குத்தான் கிடைக்கிறது. ஆகவே, அவர்களுக்கு கார்டு முறையில் போதுமான அளவு மண்ணெண்ணெய் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படித்தான் இப்பொழுது நிலைமை இருக்கிறது. வேளாண்மைத் துறையிலே ஈடுபட்டவர்கள், டிராக்டர்கள் இன்னும் பம்ப் செட்டுகள் ஆகியவற்றை வைத்திருப்பவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டுமென்று குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்காக, இந்த கம்பெனிகள், எண்ணெய் நிறுவனங்கள் பிரத்தியேகமாகக் கவனிக்க வேண்டுமென்று குறிப்புகள் போடப்பட்டிருக்கின்றன. அவைகள் கவனிக்கப்பட்டும் வருகின்றன. நடைமுறையில் ஏதாவது இடைஞ்சல் இருக்குமானால், அதைக் குறிப்பிட்டு அங்கத்தினர் அவர்கள், கவனத்திற்குக் கொண்டு வருவாரானால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது.

**திரு. சி. கோவிந்தராசன் :** தலைவரவர்களே, டீசல் எண்ணெயுடன் மண்ணெண்ணெய் கலக்கப்படுகிறது. இதன்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்கிற விவரம் அறிய முடியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது, பல கலப்படங்கள் செய்யப்படுவதைப் போல், ஒரு கலப்படம். சாதாரணமாக, கலப்படங்களுக்கு என்ன என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறதோ, அந்தந்த நடவடிக்கைகள் இதற்கும் எடுக்கப்படுகிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவரவர்களே, ஏழைகள் உபயோகிக்கக்கூடிய இந்த மண்ணெண்ணெய் ஒரு லிட்டர் 54 காசாக விற்கப்படுகிறது. இதைக் குறைக்க அரசாங்கத்திடம் திட்டம் ஏதேனும் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இது ஒரு நியாயமான விலையாகத்தான் கருதப்படுகிறது. எப்படி அவர்களுக்கு இந்த எண்ணம் வந்தது என்பது ஆச்சரியமாக இருக்கிறது.

ஏ. டி. டி-27 ரக நெல்

* 369 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்:
திரு. என். எஸ். வி. சித்தன்:
} மாண்புமிகு

வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏ.டி.டி. 27 ஆடுதுறை என்கிற நெல் ஏக்கராவுக்கு எவ்வளவு உற்பத்தி ஆகிறது?

(இ) நமது ராஜ்யத்தில் மேற்படி நெல் எத்தனை ஏக்கராவில் எந்த ஆண்டு முதல் விவசாயம் செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) ஏக்கர் ஒன்றுக்கு சராசரி உற்பத்தி 1,826 கிலோ (உலரா நிலையில்) 1,607 கிலோ (உலர்ந்த நிலையில்).

(இ) இந்த ரக நெல் நமது மாநிலத்தில் 1964-65-லிருந்து பயிரிடப்பட்டது. ஆனால் 1966-67-ல் இந்த நெல் பயிரிடப்பட்டது. ஆனால் 1966-67-ல் இந்த நெல் பயிரிடப்பட்ட பரப்பளவு 2,79,355 ஏக்கராவாக உயர்ந்துள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், மாவட்டவாரியாக எவ்வளவு ஏக்கர் உற்பத்தி ஆகின்றது? அப்படி உற்பத்தி அதிகப்படியாக ஆகக்கூடிய மாவட்டங்களுக்கு அதிகப்படியான சலுகைகளைக் கொடுத்து, உற்சாகப்படுத்தி, மேலும் உற்பத்தியைப் பெருக்குவதிலே கனம் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: தஞ்சை மாவட்டத்தில் தான் அதிகமாக உற்பத்தி. 1966-67-ல் டிசம்பர் முடிய வந்துள்ள கணக்கை நான் வெளியிடுகின்றேன்.



| | மாவட்டத்தின் பெயர். | விளைச்சல் செய்யப்பட்ட பரப்பளவு ஏக்கரில். | சராசரி நெல் விளைச்சல் (ஏக்கர் ஒன்றுக்கு கிலோ கணக்கில்). | | மாவட்டத்தில் கிடைத்த அதிக அளவு விளைச்சல் ஏக்கர் ஒன்றுக்கு கிலோகிராம் கணக்கில். |
|---|---|---|---|---|---|
| | | | உலராத நிலையில். | உலர்ந்த நிலையில். | |
| | (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | தஞ்சாவூர் | 1,99,060 | 1,511 | 1,330 | 2,900 |
| 2. | திருச்சிராப்பள்ளி | 28,037 | 1,717 | 1,511 | 3,424 |
| 3. | மதுரை | 5,448 | 1,828 | 1,609 | 4,300 |
| 4. | திருநெல்வேலி | 17,176 | 1,764 | 1,552 | 2,575 |
| 5. | கோயம்புத்தூர் | 6,049 | 1,824 | 1,605 | 3,983 |
| 6. | சேலம் | 2,795 | 1,759 | 1,548 | 3,225 |
| 7. | தருமபுரி | 315 | 2,841 | 2,500 | (சேலத்திற்கும் தருமபுர்க்கும் பொதுவானது) |
| 8. | செங்கற்பட்டு | 5,458 | 1,656 | 1,457 | 3,300 |
| 9. | வட ஆர்க்காடு | 4,051 | 2,080 | 1,830 | 4,184 |
| 10. | தென் ஆர்க்காடு | 10,966 | 1,280 | 1,126 | 3,375 |
| | ஆக, | 2,79,355 | | | |
| | | மாநிலச் சராசரி | 1,826 | 1,607 | .. |

அதிகமாக உற்பத்தி ஆகக்கூடிய தஞ்சை மாவட்டத்திற்கு வேண்டிய சலுகைகளை, எங்கெங்கே ஏ.டி.டி. 27 நெல் பயிரிடப்படுகிறதோ, அங்கெல்லாம் அதற்கான, தேவையான இரசாயன உரம், அவர்களுக்கு வேண்டிய கடன் வசதி, மற்ற சலுகைகள் எல்லாம் செய்து கொடுப்பதன் மூலம்தான் கூடுதலான உற்பத்தி கிடைத்திருக்கிறது. நிச்சயமாக அவர்களுக்குத் தேவையான இரசாயன உரத்தைத் தேவையான அளவுக்குக் கொடுக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது. அதோடு உரத் தட்டுப்பாடு இல்லாமல் உரம் வழங்கப்படுகிறது. அதை, விவசாயிகள் அவர்களுக்கு அளித்த முதல் சலுகையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். தஞ்சையைப் பொறுத்தவரையிலும் உரத் தட்டுப்பாடு இல்லையென்ற சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறோம் என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இது நல்ல விளைச்சல் தரக்கூடிய ஒரு நெல், இது இலாபகாமாக இருப்பதால் இதனை உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு தனிப்பட்ட முறையில் ஏதாவது சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவா? தஞ்சை மாவட்டத்திலுள்ளதைப் போல், எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். அதிகப்படியான விளைச்சல் தருவதால், தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்ல, எல்லா மாவட்டங்களுக்கும் இந்தச் சலுகை வழங்கப்படுகிறது. தனிச் சலுகை தரப்படுகிறதா என்றால், இந்த அமோக விளைச்சல் கொடுக்கக்கூடிய நெல்லை பயிர் செய்கின்ற எல்லா விவசாயிகளுக்கும் தேவையான உரம் காலாகாலத்தில் வழங்கப்படுகிறது. எந்த இடத்திலாவது ஏதாவது குறைபாடு இருந்தால், அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அது கவனிக்கப்படும். குறிப்பாக தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்த ஆண்டிற்கு வேண்டிய உரம் கூட பாதுகாப்பாக முன்கூட்டியே தேக்கி வைத்திருக்கிறோம். மற்ற மாவட்டங்களிலும் ஏ.டி.டி. 27 பயிரிடுகிறார்கள். 1964-65-ல் 200 ஏக்கராவாக இருந்தது. 1968-69-ல் 20 இலட்சம் ஏக்கராவாக உயர இருக்கிறது என்ற நற்செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளே விரும்பி, இதனுடைய அமோக விளைச்சலை உணர்ந்து, இதைச் சாகுபடி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் முதலில், 200 ஏக்கராவாக இருந்தது, அடுத்த ஆண்டில் 5,000 ஏக்கராவாக உயர்ந்து, மாநிலம் முழுவதும் 1966-67-ல் 2 இலட்சம் ஏக்கராவாக பெருகி வந்திருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உண்டாகியிருக்கிறது. ஐ.ஆர். 8 என்ற ரகமும் அமோக விளைச்சல் கொடுக்கக்கூடியது. ஸி.ஓ. 25, 29 போன்ற ரகங்களும் அமோக விளைச்சல் தரக்கூடியவை. 1968-69-ல் 25 இலட்சம் ஏக்காரவில் உற்பத்தி செய்ய வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. ஸி.ஓ. 25, 26, 29 ஆகியவைகளை இந்த ஆண்டிலேதான் மத்திய சர்க்கார் உயர் ரகமாக அங்கீகரித்திருக்கிறது.

**திரு. வை. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, ஏ.டி.டி. 27 ரகத்தை கோடை சாகுபடி செய்தால் விளைச்சல் சரியாக இல்லாமல் நஷ்டம் ஏற்படுகிறது. இதைக் குறித்து அரசு ஆராய்ச்சி செய்து விவசாயிகளுக்கு நல்ல யோசனை கூற உத்தேசமுண்டா? விவசாயிகளுக்கு வேண்டிய உரத்தைக் கடனாக கொடுக்கிறார்கள் என்று சொன்னால், கூட்டுறவு சொசைடி மூலம் கடனாக வழங்கும்பொழுது, கடனைத் திருப்பிக் கொடுக்கும் சமயத்தில் நெல்லாகத்தான் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். இம்மாதிரி இல்லாமல் பணமாகக் கொடுத்தாலும் அதை வாங்கிக் கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** இப்பொழுது மழை காலத்தில், குளிர் காலத்தில் ஏ.டி.டி. 27 பயிரிட வேண்டும் என்று விவசாயிகளுக்கு அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள் விவரம் தெரிந்த விவசாயிகள் அந்தக் காலத்தில்தான் பயிரிடுகிறார்கள். தவறுதலான காலத்தில் பயிரிட்டால், உண்மையில் நஷ்டம்தான் ஏற்பட்டிருக்கும். ஆகவே, அரசாங்கத்தின்மீது பழி போடுவதாக இருக்க முடியாது, அங்கத்தினர் அவர்கள் பணமாக கொடுப்பதற்கு அனுமதிக்க வேண்டும், நெல்லாகக் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். நெல்லைத் தேக்கி வைத்து என்ன செய்யப்





போகிறார்கள்? கூடுதலான விலைக்கு விற்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அவர்கள் அப்படி நினைக்கக்கூடும். அரசாங்கத்தினிடமிருந்து வேண்டிய உரத்தை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற நிலையிலே நெல்லாகத் திருப்பிக் கொடுப்பதில் சங்கடம் ஒன்றும் இருக்க முடியாது. நெல்லாகக் கொடுக்க முன் வர வேண்டும். பணமாகக் கொடுப்போம் என்ற கருத்தை வலியுறுத்தாமல் இருப்பது நல்லது.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் காலாகாலத்தில் விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து தேவையுள்ள எருக்களையும் கொடுத்து, ஏ.டி.டி. 27 அதிகமாக விளைச்சல் தந்திருந்தாலும், இந்த ஆண்டு முதல் போகத்தில் நல்ல விளைச்சல் கண்டிருந்தாலும், இரண்டாவது போகத்தில் விளைச்சல் குறைவாக இருப்பதினால் தொல்லைப்படுகிறார்கள். ஆகவே, ஏ.டி.டி. 27 ரகத்தை உற்பத்தி செய்து கஷ்டப்பட்டு அதிக விளைச்சல் காட்டிய தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு இருபோக சாகுபடிக்கு ஏதாவது தீர்வை தள்ளிக்கொடுக்கக்கூடிய யோசனை சர்க்காருக்கு உண்டா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் இரண்டாவது போக சாகுபடியில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்குத் தண்ணீர்த் தீர்வை தள்ளிக் கொடுக்கப்படுகிறது.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** இந்த ஏ.டி.டி. 27 பற்றிப் பிரமாதமாக அட்வெர்டைஸ்மெண்டு பண்ணப்படுகிறது. இதை நான் பரீட்சார்த்தமாக விவசாயம் செய்து பார்த்திருக்கிறேன். ஜூன், ஜூலை மாதத்தில் நாற்றுவிட்டால் ஒழிய மற்ற மாதங்களில் நாற்றுவிட்டால் பிரயோசனம் இல்லை. அட்வெர்டைஸ்மெண்டை நம்பி விவசாயிகள் ஏ.டி.டி. 27 ரக நெல்லை உற்பத்தி செய்து, மிகவும் மோசமான நிலையில் கண்டுமுதல் கண்டிருக்கிறார்கள். ஆகவே, எந்த எந்த மாதத்தில் இதை நாற்று விட்டால் பிரயோசனமாக இருக்கும் என்பதை மட்டும் அரசாங்கம் இதுபற்றித் தெரியாதவர்களுக்குத் தெரியும்படி செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** இந்தக் கேள்விக்குப் பதில் கனம் அங்கத்தினருடைய கேள்வியிலேயே புரிகிறது. ஜூன், ஜூலையில் தான் நடவேண்டும். பட்டம் தவறி நட்டால், நட்டம் ஏற்படும் என்று சொந்த அனுபவத்தைக் கொண்டு சொல்கிறார், அவர் சரியான முறையைக் கையாண்டிருக்கிறார்; அப்படி இருக்கும்பொழுது என்ன கஷ்டம் வந்தது என்று தெரியவில்லை. தண்ணீர் போதுமான அளவு பாய்ச்சாததால் அம்மாதிரி நிலை ஏற்பட்டிருக்கலாம், அல்லது, தேவையான ரசாயன உரம் போடப்படாத சூழ்நிலையால் ஏற்பட்டிருக்கலாம். என்ன காரணம் என்று தெரியவில்லை. ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில்தான் பயிரிட வேண்டும் என்று விளம்பரம் செய்யப்படுகிறது. விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகளும் சொல்லி வருகிறார்கள், கிராம சேவக்குகளும் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு மேலாக சட்ட

மன்ற உறுப்பினர்களும் இந்த ரக நெல் பயிரிட்டால் கூடுதலான விளைச்சல் கிடைக்கும் என்று பொதுக் கூட்டங்களிலும் பேச வேண்டும். நாட்டினுடைய நலனைக் கருதி இம்மாதிரி பிரசாரம் செய்யவேண்டும். இம்மாதிரி அவர்கள் பிரசாரம் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. மழை காலத்தில் அல்லது குளிர் காலத்தில் சாகுபடி செய்தால் பாதகம் ஏற்படாது. மற்றக் காலத்தில் கண்டிப்பாகப் பயிரிடக்கூடாது என்ற நிலையைப் பற்றிச் சொல்ல வேண்டும். இந்த ரகம் நல்ல அமோக விளைச்சலைத் தந்திருக்கிறது. சென்ற ஆண்டு காலாகாலத்தில் மழை இல்லாது நின்று போனாலும் அமோக விளைச்சல் கிடைத்திருக்கிறது. ஒரு போக சாகுபடி, இருபோக சாகுபடியில் அமோக விளைச்சல் கிடைத்திருக்கிறது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் கூடுதலாக விளைச்சல் கிடைத்ததால், உணவுத் தட்டுப்பாட்டைத் தவிர்க்க முடிந்தது. ஏக்கரா அடிப்படையில் பார்த்தால், ஏ.டி.டி. 27 1964-65-ல் 200 ஏக்கராக இருந்தது, இன்றைக்கு 2 இலட்சம் ஏக்கராகப் பெருகியிருக்கிறது. ஆகவே, விவசாயிகள் இந்த ரகத்தை விளைவித்தால் அதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என்பதை உணர்ந்து அதிகமாகப் பயிரிடுவதற்கு முன்வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கிறது.

**திரு. எம். கண்ணப்பன்** : ஏ.டி.டி. 27 நெல் எப்படி அதிகப்படியான மகசூல் தருகிறதோ அதைவிட அதிகமாக ஐ.ஆர். 8 நெல் தருகிறது. சமீபத்தில் ஐ.ஆர். 8 ரகத்தைக் கோவை பெரிய நாயக்கன் பாளையத்தில் ஒரு விவசாயி உற்பத்தி செய்து காட்டி இருக்கிறார். ஏ.டி.டி. 27 பற்றி விவசாயிகள் மத்தியில் எந்த அளவுக்கு விளம்பரம் செய்யப்படுகிறதோ, அந்த அளவுக்கு ஐ.ஆர். 8 ரகத்தைப்பற்றி விளம்பரம் தற்சமயம் இல்லை. ஆகவே, அந்த ரகத்தைப்பற்றியும் விளம்பரம் செய்வதற்கான நடவடிக்கையை இந்த அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : ஐ.ஆர். 8 ரகம் நெல் ஏ.டி.டி. 27 ரகத்தைவிடக் கூடுதலாக விளைச்சல் தரக்கூடியது என்பதைச் சர்க்கார் உணர்ந்திருக்கிறது. விவசாயிகளும் இதை உணர்ந்து பல இடங்களில் பரவலாகச் சாகுபடி செய்து வருகிறார்கள். ஏ.டி.டி. 27 எந்த அளவு அதிகமான பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறதோ, அந்த அளவுக்கு ஐ.ஆர். 8 ரகத்தைச் செய்ய முடியாத நிலை இருக்கிறது. ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், நான்கு ஏக்கர் வைத்துக் கொண்டிருக்கும் தனிப்பட்ட விவசாயிகள், தமிழகத்தில் இருக்கக்கூடியவர்கள் அந்த ரகத்தை விளைச்சல் செய்து, அதிகமாகக் கண்டு முதல் கண்டிருக்கிறார்கள். ஐ.ஆர். 8 ரகத்திற்கு ஏ.டி.டி. 27 ரகத்தைவிட கூடுதலான உரம் கொடுக்க வேண்டியிருக்கிறது, ஐ.ஆர். 8 ரகத்திற்குக் கூடுதலான நாட்களும் ஆகிறது. வடிகால் வசதி இல்லாத இடங்களில் சாகுபடி செய்தால் பாதகம் ஏற்படுகிறது. ஏ.டி.டி. 27 ரகத்திற்கு வியாதி வருவதைக் காட்டிலும் ஐ.ஆர். 8 ரகத்திற்குக் கடுமையான வியாதி வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அது சம்பந்தமாக



ஆராய்ச்சி செய்து அந்த நோயைத் தடுப்பதற்கு வேண்டிய வழிமுறைகளைக் கண்டு வைத்திருக்கிறார்கள். வடிகால் இல்லாத இடங்களில் சாகுபடி செய்தால் பாதகம் ஏற்படுகிறது. கோவை மாவட்டத்தைப் போல மற்ற மாவட்டங்களில் ஐ.ஆர். 8 கூடுதலான விளைச்சல் தருவது தெரிய வருகிறது. அதையும் ஊக்குவிக்கும் முறையில் அரசாங்கம் பிரசாரம் செய்துவருகிறது.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது** : பேரவைத் தலைவர் அவர்களே, அமோக விளைச்சலைத் தருகின்ற ஏ.டி.டி. 27 போன்று, அம்பா சமுத்திரம் விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில், அம்பை. 5 என்று நினைக்கிறேன், அதனுடைய எண் சரியாக நினைவில் இல்லை, அதை கார் சம்பா என்று எங்கள் பகுதியில் கூறுகிறார்கள், அது கூடுதலான விளைவைக் கொடுக்கிறது என்கிற காரணத்தால், அது மாநிலம் முழுவதும் விளம்பரம் செய்யப் படுமா, அதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமா ? மு. ப. 10-00

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : அம்பாசமுத்திரம் நெல் உயர்ந்த ரகம்தான், அதை நவரப் பட்டத்தில் உபயோகிக்க வேண்டும் என்று 1,000 டன் விதை நெல் வாங்க உத்தரவு இடப்பட்டிருக்கிறது. அதற்குக் கூடுதலான நாள்கள் ஆவதால், தண்ணீர்த் தட்டுப்பாடு வரும்போது பாதிக்கப்படும் என்பதால், நவரப் பட்டத்தில் போட ஏற்பாடு செய்யப்படுகிறது. அம்பா சமுத்திரம் 5 சாகுபடிக்கு ஊக்கம் கொடுக்க வேண்டியதுதான். தஞ்சை மாவட்டத்தில் நவரப் பட்டத்தில் அம்பாசமுத்திரம் 5 என்பது உபயோகிக்கப்படும்; அதுபற்றித் திரு. சுப்பையா முதலியார் அவர்களைக் கேட்டால் முழு விவரமும் கொடுப்பார்கள்.

**திரு. என். துரைபாண்டியன்** : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில், திருச்செந்தூர் முதலிய பகுதிகளில் மணல் பாங்கான இடங்களில், ஏ.டி.டி. 27 நல்ல விளைச்சல் கண்டிருக்கிறது. மாவட்ட கலெக்டர் அந்தப் பகுதியில், ஒரு ஏக்கருக்கு 5,000 ரூபாய் வரை கடன் கொடுக்கலாம் என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஆகவே, அந்த வகையில் உடனடியாகக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : மாவட்ட கலெக்டர் எந்த அடிப்படையில் ரூ. 5,000 கொடுக்கலாம் என்று முடிவு செய்தார்கள் என்கிற தகவல் இல்லை. கலெக்டர் அவர்கள் சிபாரிசு பற்றி யோசிக்க வேண்டும் என்றால், எந்தக் காரணத்தால் கூடுதலாகக் கொடுக்க முடிவு செய்தார்கள் என்பது தெரிய வேண்டும்.

(திரு. என். துரைபாண்டியன் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : என்ன? தன்னிலை விளக்கமா?

**திரு. என். துரைபாண்டியன்** : எந்த அடிப்படை என்று கேட்டார்கள். அதற்குப் பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்கள் கேள்வி கேட்பது, நீங்கள் பதில் சொல்வது என்பது இப்பொழுது இல்லை. நீங்கள் வலதுகைப் பக்கம் முன் வரிசையில் உட்காரும்போது, பதில் சொல்லும் உரிமை உண்டு.

**திரு. என். துரைபாண்டியன் :** சீக்கிரமே வந்துவிடுகிறோம்.

**திரு. கொளத்துதூர் கோதண்டம் :** ஏ.டி.டி. 27 பயிர் செய்பவர்களுக்கு ரசாயன உரம் கொடுக்க எப்படி விதிகள் அமுல் செய்யப்படுகின்றனவோ, அதேபோல ஏ.டி.டி. 27 பயிர் செய்யப்படும் அத்தனை வயல்களுக்கும் பூச்சி மருந்து அடிக்க வேண்டும் என்று சர்க்காரே, பஞ்சாயத்து யூனியன் மூலமாகவும், விவசாய இலாகா மூலமாகவும், அடிக்கச் செய்து, அப்படிச் செய்வதற்கு ஆன செலவுப் பணத்தை, அடுத்த கிஸ்திப் பணத்தோடு வசூல் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பூச்சி மருந்து தெளிப்பதும் கட்டாயம் தேவை. உயர் ரக நெல்லுக்கு பூச்சிகள் வருவது இயற்கை. ஏக காலத்தில் நடவு நட்டால், ஏரோப்ளேன் மூலமாக மருந்து அடிப்பது சுலபமாக இருக்கும். அந்த வகையில் செய்தால் அடுத்த ஆண்டில் கிஸ்தியோடு வசூல் செய்ய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் தஞ்சை மாவட்டத்தில் அப்படி ஏக காலத்தில் நடுவதில்லை. இப்பொழுது பெரும்பாலும் பூச்சி மருந்து பவர் ஸ்ப்ரேயர் மூலமாகத்தான் அடிக்கப்படுகிறது. ஏக காலத்தில் நடவு நட்டிருந்தால் ஏரோப்ளேன் மூலமாக அடித்து பின்னால் வசூல் செய்து கொள்ளலாம். ரசாயன உரம் போல பூச்சி மருந்தும் முக்கியமானது என்பதை உணர்ந்திருக்கிறோம்.

**திரு. கே. என். குமாரசாமி :** சார், தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் பல சலுகைகள் அளிக்கப்படுகின்றன. அதேபோல, ராகி, சோளம், கம்பு இவற்றிற்கும் கோவைப் பகுதியிலே அமுல் நடத்த அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் உறுப்பினர் புஞ்சைப் பயிர் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். நேற்றைய தினம் பதில் சொல்லும் போது அது பற்றி விரிவாகச் சொல்லப்பட்டது. அதைக் கவனித்திருந்தால், விளக்கம் கிடைத்திருக்கும்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில், ஏடிடி. 27 ரகத்தை உற்பத்தி செய்வதில் அதிகமாக ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்குக் காலத்தில் தண்ணீர் இல்லாமல், விதை பாவ முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அதற்காக சமுதாயக் கிணறுகள் அமைத்து, விதை விடுவதற்கு உதவியாக இருக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்ய சர்க்கார் முன்வருமா? அதோடு பூச்சி மருந்துகள் அடிக்க கருவிகள் கிடைக்கவில்லை என்பதால், ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும், ஒரு பவர் ஸ்ப்ரேயர் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று அந்த வகையில் முயற்சிக்குமா என்றும் கேட்டுக் கொள்கிறேன்.





**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தஞ்சை மாவட்டத்தில், சமுதாயக் கிணறுகள் வேண்டும் என்று கோரிக்கை சில பகுதிகளிலிருந்து வந்திருக்கிறது. கனம் உறுப்பினர் போன்றவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டால், பஞ்சாயத்துத் தலைவர் மற்றவர்கள் எல்லோரும் சேர்ந்து அப்படிக் கிணறுகள் வேண்டும் என்று கேட்டால், அது பரிசீலனை செய்யப்படும். திரு. முருகையன் ஒரு கிணறு வேண்டும் என்று கடந்த ஐந்தாண்டு காலமாக முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். சரியான சூழ்நிலை இல்லாததால் அது நடக்கவில்லை. இரண்டொரு இடங்களிலிருந்து தான் கோரிக்கை, தஞ்சையிலிருந்து வந்திருப்பதால், இன்னும் அதிகமாக வேண்டும் என்று, பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், விவசாயிகள், எல்லோரும் முயற்சி எடுத்துக் கொண்டால், யோசித்து நடவடிக்கை எடுக்கலாம். இரண்டாவதாக, பவர் ஸ்ப்ரேயர் வேண்டும் என்று கேட்டார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் பவர் ஸ்ப்ரேயர் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஒன்றல்ல, நான்கு வாங்கி வைத்து, விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எந்த யூனியனாவது அப்படி வாங்கி வைக்கவில்லை என்று தகவல் கொடுத்தால், அது கவனிக்கப்படும். பொது நிதியிலிருந்து வாங்கி வைக்க வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

### *Wild Life Week*

* 370 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether during the wild life week in October 1967, wild animals from the Madras Zoo were taken out in procession through the streets of Madras City; and

(*b*) if so, the object of such procession?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) ஆம்.

(இ) வன விலங்குகளைப் பாதுகாப்பதில் பொது மக்களிடையே ஆர்வ மூட்டுவதும் நமது மாநிலத்திலுள்ள வன விலங்குகள்பால் அவர்களுக்குள்ள கடமைகளையும் பொறுப்புகளையும் நினைவுறுத்துவதும் அதன் நோக்கமாகும்.

**திரு. கே. விநாயகம் :** சார், சென்னை மாநகராட்சி நடத்துகிற வன விலங்கு விழாவில், வீதிகளில் கூண்டில் வைத்து, மிருகக் காட்சி நடத்துகிறார்கள். நான் ஒரு ஆண் சிறுத்தை தந்திருக்கிறேன். நம்முடைய நண்பர் திரு. எம். ஜி. ஆர்; ஒரு பெண் சிறுத்தை கொடுத்திருக்கிறார்கள். இந்த இரண்டும் ஆணும் பெண்ணும் கூடிக் கலந்து, குடும்பம் நடத்தி (சிரிப்பு) குட்டிகள் கூடப் போட்டிருக்கிறது.
I am serious. I am not joking.
அப்படியிருக்கும்போது, இந்தக் காதலர்களைப் பிரித்து, ஆண் சிறுத்தையை அங்கேயே அடைத்து வைத்துவிட்டு, பெண் சிறுத்தையை மட்டும் கூண்டில் வைத்து வீதிகளில் 'Presented by M.G.R.' என்று போட்டுக்கொண்டு போகிறார்களே, நான்

கொடுத்த ஆண் சிறுத்தையை அங்கேயே வைத்து, நான் கொடுத்தது என்கிற பலகையைக்கூட எடுத்துவிட்டு இருக்கிறார்கள். இதனால், ஆண் சிறுத்தை தவித்துக் கொண்டு இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** திரு. வினாயகம் அவர்கள் ஒரு ஆண் சிறுத்தை கொடுத்திருப்பது உண்மைதான், நான் கூடப் பார்த்திருக்கிறேன். ஆனால், அதனால் இப்பொழுது நடக்கக்கூட முடியவில்லை. (பலத்த ஆரவாரம்) தீனி வாங்கிக் கொடுக்கக் கூட கனம் அங்கத்தினர் தன் சம்பளத்தில் ஒரு பகுதி கொடுக்க வேண்டும் என்ற நிலையில் இருப்பதைத் தெரிந்து கொண்டு இருப்பார்கள்.

**திரு. கே. வினாயகம் :** சார், நான் கொடுத்த ஆண் ஒரு வேளை வயதாகியிருக்கலாம். எம். ஜி. ஆர். கொடுத்த பெண் படுத்தே விட்டது, அதற்கு 70 வயதாகிறது. ஆகவே, புதிதாகத் தூண்டுதல் கொடுக்க யோசனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நான் பதிலுக்கு எம். ஜி. ஆர். சிறுத்தை பற்றிச் சொல்ல வேண்டும் . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இதிலே சம்பந்திகளே கூடிப் பேசிக் கொண்டால் (பலத்த ஆரவாரம்) நலமாக இருக்கும்.

### அரிசன நலத்துறை உயர்நிலைப் பள்ளிகள்

*371 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1967-68-ம் கல்வியாண்டில் இம் மாநிலத்தில் ஹரிஜன நல இலாக்காவால் எத்தனை உயர்நிலைப் பள்ளிகள் எங்கெங்கு திறக்கப் பட்டுள்ளன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** 1967-68 கல்வி ஆண்டில் ஹரிஜன இலாகாவால் புதியதாக ஹரிஜனங்களுக்காகத் தனிப்பட்ட உயர்நிலைப்பள்ளி எங்கும் திறக்கப்படவில்லை. ஆனால் கீழ்க்கண்ட மூன்று பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாக மாற்ற உத்திரவிடப்பட்டது :—

(1) அரிசன நல இடைப்பள்ளி—வட கரை—செங்கல்பட்டு மாவட்டம்.

(2) அரிசன நல ஆரம்பப்பள்ளி, அஜீஸ்நகர் குடியிருப்பு, ஊமங்கலம் அஞ்சல், விருத்தாசலம் தாலுக்கா, தென் ஆர்க்காடு மாவட்டம்.

(3) அரிசன நல உயர்நிலைப்பள்ளி—ராஜதானி கிராமம், மதுரை மாவட்டம்.





**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிகள் திறந்த இடங்களில் எல்லாம் சரியான முறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைப் போடவில்லை, பள்ளிகளுக்குப் போதுமான உபகரணங்கள் இதுவரையில் கொடுக்கப்படவில்லை என்பவைகள் எல்லாம் அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? இந்தக் கல்வி ஆண்டிலாவது பள்ளிகள் திறக்கப்படுவதற்குள் பள்ளிகளின் தேவைகள் பூர்த்தி செய்து கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கேள்வி 1967-68-ம் கல்வி ஆண்டில் எத்தனை புதிய பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன என்பதுதான். அங்கங்கே குறைபாடுகள் இருக்கின்றன, சலுகைகளைத் தர வேண்டும் என்ற கேள்வி இல்லை. குறைபாடுகள் இருப்பதைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால், விவரம் அளிக்கப் படும்.

### அரசு வழக்குரைஞர் முதலியவர்கள்

*372 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1962 முதல் 1967 வரையில் சர்க்கார் வழக்கறிஞர்கள் **Government Pleaders** பப்ளிக் பிராஸிகூட்டர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டனர், மாவட்டவாரியாக ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரசாங்க வழக்குரைஞர்களும், அரசாங்கக் குற்ற விசாரணை வழக்குரைஞர்களும் நிலை ஆணைகளின்படி நியமிக்கப்படுகின்றனர். அந்த நிலை ஆணைகளுடன் கீழ்க்கண்டவைகளும் குறிப்பிடப்படுகின்றன. உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞராகப் பதிவு செய்து கொண்டு ஏழு ஆண்டுக் காலத்திற்குக் குறையாது வழக்குரைஞராகப் பணியாற்றியுள்ளவர்களிலிருந்து, ஒவ்வொரு செஷன்ஸ் கோட்டத்திற்கும் அரசாங்க வழக்குரைஞர் ஒருவரும் அரசாங்கக் குற்ற விசாரணை வழக்குரைஞர் ஒருவரும் நியமிக்கப்பட வேண்டும். பணி நீட்டிப்புக் காலம் ஒரு முறைக்கு மூன்று ஆண்டுகள் மட்டுமே இருக்க வேண்டும் என்ற பணிமுறை அடிப்படையில் இவர்கள் நியமிக்கப்பட வேண்டும். 1962-லிருந்து 1967 வரையில் நியமிக்கப்பட்ட அரசாங்க வழக்குரைஞர்கள், அரசாங்கக் குற்ற விசாரணை வழக்குரைஞர்கள் குறித்தும் இந்த நிலை ஆணைகளே பின்பற்றப் பட்டன.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, இந்த ஸ்டாண்டிங் ஆர்டர்படி அவர்கள் எத்தனை வருடம் சர்வீஸ் செய்தார்கள் என்பதை மட்டும் பார்த்தால் போதுமா ? அவர்களுடைய தகுதியையும், திறமையையும் கணக்கில் எடுத்துக் கொண்டு நியமிக்கப்பட்டால் வழக்குகளே இல்லாதபடி பார்த்துக்

கொள்ள முடியும். அந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையா? ஆகவே, அரசு, இந்த ஸ்டாண்டிங் ஆர்டரைத் திருத்தியமைக்க ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, ஏழு ஆண்டுகள் வழக்குரைஞராகப் பணியாற்றியிருக்க வேண்டுமென்பது பல விதிகளுள் ஒன்று, கனம் உறுப்பினர், அதைவிட திறமையையும், தகுதியையும் பார்க்க வேண்டும் என்று கூறுகிறார். அது இப்பொழுது செய்யப்பட்டிருக்கிறது. எட்டு ஆண்டுகள், 10 ஆண்டுகள், 15 ஆண்டுகளாக இருந்தாலும், திறமையானவர் என்று மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்ட நீதிபதியும் சிபாரிசு செய்தவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஏழு ஆண்டுகளுக்குக் குறைந்திருந்தாலும், தகுதியும் திறமையும் இருக்கிறதென்று அரசு கருதினால் இந்த விதியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு, நியமிக்கப்படுகிறார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, இந்த அரசு பதவிப் பொறுப்பை ஏற்றபோது ஹைகோர்ட்டின் அட்வகேட் ஜெனரலாக இருந்த திரு. மோகன்குமாரமங்கலம் அவர்களைத் தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டதா? அல்லது இவருக்குப் பின்னால் நியமனம் செய்யப்பட்டிருக்கும் திரு. நாராயணசாமி முதலியார் அவர்கள் திரு. மோகன்குமாரமங்கலம் அவர்களைவிடத் திறமை வாய்ந்தவர் என்ற காரணத்தால் நியமிக்கப்பட்டிருக்கிறாரா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கும், மூலக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. அரசாங்கம், யாரை திறமை வாய்ந்தவர் என்று கருதுகிறதோ, அவரை நியமிக்க உரிமை பெற்றிருக்கிறது.

DR. H. V. HANDE: Sir, nobody disputes the fundamental right of the Government to appoint whomsoever they like. Is the Minister aware of the fact that as far as the appointment of Public Prosecutor, Government Pleader and Advocate-General is concerned, there is a sense of dissatisfaction among the public as well as among Government Departments?

MR. SPEAKER: You should be good enough to put the question.

DR. H. V. HANDE: The Law Demand was guillotined. We were not allowed to say a single word on the Law Demand.

MR. SPEAKER: That portion will be expunged.

DR. H. V. HANDE: You can expunge me too.

MR. SPEAKER: You cannot make personal allegation against anybody. Only the question portion will form part of the proceedings. The other statements are irrelevant and need not form part of the question.

DR. H. V. HANDE: I am in an unfortunate situation. I will put the question.



MR. SPEAKER: You should only put the question.

DR. H. V. HANDE: The Minister is a lawyer and he is able to understand my question.

MR. SPEAKER: I understand only questions during Question Time. The other things I am not permitted to understand. Do you understand that?

DR. H. V. HANDE: * * * Will the Government revise the method of appointing the Advocate-General?

MR. SPEAKER: I can understand a question, only when a question is put? As you very rightly said I understand only questions during question hour.

DR. H. V. HANDE: Will the Government be pleased to appoint as Public Prosecutors proper men who will be able to argue cases properly and protect Government's interests?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, கேள்வி கேட்கும்போது, யாரையும் தாக்கியோ, இன்சுனிவேஷன் செய்தோ கேட்கக் கூடாது என்று விதிகள் இருக்கின்றன. கனம் உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலே எவ்வளவு தாக்குதல்கள், இன்சுனிவேஷன்கள் இருக்கின்றன என்பதைப் பார்த்து நீங்களே தீர்ப்பு கூற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கனம் உறுப்பினர் அவர்களை 68 (3) (iii) விதியைப் படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: These are not insinuations. I can prove the facts provided I am given a chance. After I saw this question in the list of questions for to-day, I sent somebody and brought the file. I can prove the facts. You are severely curtailing my right to speak.

MR. SPEAKER: This is question hour. You can only put questions permitted by the Rules.

DR. H. V. HANDE: Then why did you guillotine the Law Demand?

THE HON. THIRU C. N. ANNADURAI: I would plead with Dr. Hande that whatever information he has got about certain officers appointed by the Government, he will get ample opportunities to discuss about it and he can place all this information then. Therefore I would request him not to throw in much of heat as he is attempting to throw. As a matter of fact the procedure of guillotine has been adopted for many years and accepted by everyone. Therefore it is not as if the House wanted not to discuss any particular Demand.

MR. SPEAKER: All the portions which infringe Rule 68 (3) (ii) will be expunged. A question "shall not contain arguments, inferences, ironical expressions, imputations or defamatory statements". What else can I do?

---

* Expunged as ordered by the Chair.

Dr. H. V. HANDE : Sir, on a point of order. Now that you have expunged that question, will I be permitted to reconstruct the question? Will I be denied that fundamental right?

The Hon. Thiru S. MADHAVAN : Sir, I will answer the question which is not expunged and then the hon. Member may put another question.

Thiru K. VINAYAKAM : Sir, you have already expunged it.

Mr. SPEAKER : Yes. I have already expunged it, except the portion about revising procedure.

Thiru K. VINAYAKAM : Then how can the Hon. Minister answer it when the Chair has already expunged it?

Dr. H. V. HANDE : Why do you fear this question?

The Hon. Thiru C. N. ANNADURAI : Sir, as far as I understand, the Speaker's ruling is that that portion of Dr. Hande's question which comes under the particular rule that he has quoted, is not to be taken into consideration when the Minister gives the answer. If I remember aright, in the last portion of the question, Dr. Hande has asked whether the Government will reconsider the process of appointment of the Advocate-General and the Government Pleader. That portion does not come under the rule that the Speaker has quoted and the Minister is at liberty to answer that question, if he wants.

Thiru K. VINAYAKAM : What is the ruling of the Chair? He has expunged the entire thing.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பேரவை நடவடிக்கைக் குறிப்பை எடுத்துப் பார்த்தால் தெரியும்.

Thiru K. VINAYAKAM : I am interested in the observance of the correct procedure. I distinctly remember what the Hon. Speaker has stated. He has stated, 'I am expunging such portion of the question that comes under a particular rule'.

Mr. SPEAKER : Expunction is done by me. Now the question that remains is, whether the Government will reconsider the appointment of law officers.

## 2. நடைமுறைக் கேள்விகள்

### (1) பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்றப்பட்ட பகுதிகள் குறித்து அறிவித்தல்.

*திரு. க. இராமமூர்த்தி :* ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர். தாங்கள் எக்ஸ்பன்ஜ் செய்கிறபோது எந்தப் பகுதி நீக்கப் படுகிறது என்பதைச் சொன்னால் தான், அந்தப் பகுதியை நீக்கி விட்டு, நீக்கப்படாத பகுதியைக் கேள்வியாகச் சேர்த்துப் போட முடியும், ஆகவே தாங்கள் எக்ஸ்பன்ஜ் பண்ணிய பகுதியைச் சொல்ல வேண்டும். எக்ஸ்பன்ஜ் பண்ணுகிற பகுதி எது என்பதையும் சொல்ல வேண்டும்.



*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அவை எல்லாவற்றையும் எப்படி நினைவுபடுத்திச் சொல்ல முடியும் ?

According to Rule 235, anything grossly disorderly or anything against the rules shall be expunged. I say that that portion of the question which infringes this rule, will be expunged. Now I cannot remember all the things that he has stated against the Rules.

Thiru T. MARTIN : Sir, on a point of order.

Thiru K. RAMAMOORTHY : Sir, on a point of order.

(Thiru K. Vinayakam rose.)

Mr. SPEAKER : I shall allow the senior.

Thiru K. VINAYAKAM : I am also a senior. I had been a Member in 1952 also.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* நான் 'சீனியர்' என்றது யார் முதலில் எழுந்து நின்றாரோ, அவரைச் சொன்னேன்.

Dr. H. V. HANDE : Sir, on a point of order. Since you expunged practically the entire question of mine, at least I should be given the right to reframe the question so that it comes within the rules. That is my fundamental right. I request the Hon. Speaker to allow me to put that question and if that is out of order, you can expunge it.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* நான் கனம் உறுப்பினருடைய கேள்வியில் உள்ள ஆட்சேபகரமான பகுதி நீக்கப்படும் என்று த்ான் சொன்னேன்.

Thiru K. RAMAMOORTHY : Now the confusion is, which portion is expunged.

Mr. SPEAKER : How can I remember every word?

Thiru K. RAMAMOORTHY : What the Hon. Speaker expunges, I do not know and I may infer that my portion is not expunged.

Mr. SPEAKER : Your portion is not expunged!

Thiru K. RAMAMOORTHY : I mean the portion of the question put by the hon. Member.

The Hon. Thiru C. N. ANNADURAI : As far as I understand the hon. Member is pleading that if certain portions are expunged and certain other portions are not expunged and when the question is being raised, that portion which is expunged should be told to the House so that the unexpunged portions ca be put in the form of a question. That is what the hon. Member means.

Mr. SPEAKER : I will see all the portions which are against the rules and I will expunge such portions which are to be expunged under the rules.

**திரு. சா. மெய்யப்பன் :** சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். டாக்டர் ஹாண்டே சொன்னபோது தாங்கள் கேள்வியாகப் போடுங்கள் என்று குறுக்கிட்டீர்கள். அவர் மறுபடியும் கேள்வி போடும் போது குறுக்கிட்டீர்கள். இப்படி இரண்டு மூன்று தடவை நடந்தது. அவர் போட்ட கேள்வியில் ஆட்சேபகரமானது எது என்பதைப் படித்துக் காட்டி அதை எக்ஸ்பன்ஜ் பண்ணினால் நீக்கப்படாத பகுதி எது என்று தெரியும். அவர் எதற்கு பதில் சொல்லப் போகிறார் என்று தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், நீக்கப்பட்ட பகுதி எது, நீக்கப்படாத பகுதி எது என்று தெரிவிக்கும்படி கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீக்கப்பட்ட எல்லாவற்றையும் மனதில் வைத்தே சொல்லச் சொல்கிறீர்களா ? நீக்கப்படாதது எது என்று சொல்லியாகிவிட்டது.

All those words which contain arguments, inferences, ironical expressions, imputations or defamatory statements against the law officers mentioned by the hon. Member, Dr. Hande are expunged. That portion of the question in which it is stated, " will the Government revise their procedure in selecting the law officers ?" will stand.

THIRU S. MEYYAPPAN : What are those portions which are to be expunged by the Hon. Speaker, is the question now.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதி 235-இன்படி ஆட்சேபகரமான பகுதி நீக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, will you permit me a question and I will allay the fears.

DR. H. V. HANDE : Sir, may I request the Hon. Speaker to permit me to reframe the question in such a manner that it would not come under the rule relating to expunction.

THIRU T. MARTIN : Sir, on a point of order.

**திரு. எஸ். முருகையன் :** **

(Hon. Members belonging to the Congress party rose.)

MR. SPEAKER : That will be expunged.

THIRU K. VINAYAKAM : Sir, it is insulting to us. This is not a market place or a bazaar or a fish market. It is he who should get out. I move—

'That this House expel the Member from the House'.

THIRU P. G. KARUTHIRUMAN : He should withdraw from the House. If he does not withdraw, we will walk out.

THIRU K. VINAYAKAM : He should tender an unconditional apology.

** பேரவைத் தலைவரின் கட்டளைக்கிணங்க நீக்கப்பட்டது.





(Then the hon. Members belonging to the Congress Party walked out.)

THIRU K. VINAYAKAM : You may expunge that portion. I have moved it.

MR. SPEAKER : While you are walking out, please do not make noise.

MR. K. VINAYAKAM : It is the privilege of members to make noise. You cannot be dictating like this.

**திரு. எஸ். முருகையன்:** தலைவர் அவர்கள் எழுந்து பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது எழுந்ததன் காரணமாக அது தவறு என்று சொல்கிற வகையில் நான் ** என்று சொன்னேன். நான் யாரையும் புண்படுத்துவதற்காகச் சொல்லவில்லை, தவறாக இருந்தால் அதை நான் வாபஸ் பெற்றுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : It is too late now. I have already expunged it.

### 1. வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி.

DR. H. V. HANDE : Will the Minister for Law be pleased to state when the Medical College admission case was brought before the High Court, why the Government thought it necessary to appoint an advocate of distinction to argue their case, namely Mr. M. K. Nambiar? Is it because the Government thought ** that Mr. M. K. Nambiar was required to strengthen their case? What is the reason for the Government thinking that the Advocate-General will not be in a position to discharge his duty and why did the Government appoint another person? In the matter of the appointment of the Public Prosecutor and Pleader in Nagapattinam, did the Government take into consideration the fact that the incumbent was staying in the village of Thoothukudi, having practice in Tiruvarur and had no direct contact with the court in Nagapattinam and in view of this, will the Government give a categorical answer that they will review at least for the future the method of appointment of Public Prosecutor so that the appointment may be done on a proper basis which will give satisfaction to the Government Departments as well as the people?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, முதலிலே கேட்கப்பட்ட கேள்வி முழுவதுமாக எடுக்கப்பட்டுவிட்டதாக யூகிக்கிறேன். அப்படி என்றால் அந்தப் போர்ஷன்களுக்குப் பதில் சொல்ல வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். முதலிலே தாங்கள் ஸச் அண்டு ஸச் போர்ஷன்ஸ் என்று சொன்னீர்கள், அவர்கள் புதிதாக கேள்வி கேட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அரசினர் சட்ட அதிகாரிகளை நியமிப்பதிலே ஏதாவது புது முறைகளைக் கையாள்வார்களா என்பதைப் பற்றிக் கேட்டார்கள்.

** Expunged as ordered by the Chair.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முதலிலே கேட்ட கேள்வியிலே பல கேள்விகள் அடங்கியிருக்கின்றன. அவர்கள் இப்பொழுது சொன்னதற்கு பதில் சொல்லலாமா அல்லது அதற்கும் பதில் சொல்லலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலில் கேட்டதற்கும் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அட்வகேட்-ஜெனரல், பப்ளிக் பிராசிக்யூட்டர் இவர்களை எப்படி நியமிக்கவேண்டும் என்பதிலே விதிகள் இந்த அரசாங்கம் வந்து போட்டவை அல்ல. ஏற்கனவே இருந்த விதிகளைத்தான் பின்பற்றி வருகிறோம். ஆகவே, யாருக்காகவும் அஞ்ச வேண்டியதில்லை. எந்தக் கேள்விக்கும் பயப்படவில்லை. நாகப்பட்டினத்திலே இருப்பதுபற்றிக் கேட்டார்கள், பப்ளிக் பிளீடர் பற்றிக் கேட்டார்கள். அப்படி ஒரு போஸ்டும் இல்லை. பப்ளிக் ப்ராஸிகியூடர் என்றுதான் இருக்கிறது. அந்தப் பதவியிலே திரு. கல்யாணம் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர்தான் நியமிக்கப்பட வேண்டுமென்று மாவட்ட நீதிபதி அவர்கள் சிபார்சு செய்தார்கள். (இத் தருணத்தில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பேரவைக்குத் திரும்பினர்.) அந்தச் சிபார்சை அரசு ஏற்றுக் கொண்டது. என்ன என்ன இது சம்பந்தமாகப் பார்க்க வேண்டுமென்று பார்த்துத்தான் அவர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள். அவர்கள் மிகவும் திறமையானவர் என்று சொல்லியிருக்கிறார்கள். மாவட்ட செஷன்ஸ் கேஸ்களிலே அவர் தன்னுடைய திறமையை நிலைநாட்டியிருக்கிறார் என்று அறிக்கையிலே கொடுத்திருக்கிறார். மாவட்ட நீதிபதி என்பவர் இண்டிபெண்டன்ட் ஜூடிஷியல் சிஸ்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் சிபாரிசு செய்வதை தவறு என்று சொல்ல முடியாது. விதிகளுக்கு முரணாக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று எந்த விதமான தகவலும் அவர்கள் சுட்டிக்காட்டுவார்களானால் அதைப் பரிசீலிக்க நிச்சயமாக அரசாங்கம் தயாராக இருக்கிறது. உயர்நீதி மன்றத்தில் மருத்துவக் கல்லூரி இடங்கள் பற்றி அரசாங்கச் சார்பில் வாதாடியதைப்பற்றிச் சொன்னார்கள். அரசாங்க அட்வகேட்-ஜெனரல்தான் வாதாட வேண்டுமென்று அரசாங்கம் சொல்லியது. ஆனால் அந்த வழக்கிலே அரசாங்கத்திற்குச் சம்பந்தப்படாத தனிப்பட்டவர்களின் நிலையும் வாதாடப்பட வேண்டுமென்ற காரணத்தாலே திரு. எம். கே. நம்பியார் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் அவரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். "அரசாங்கத்திற்காக வேறு ஒருவர் வாதாடலாம், எங்களுடைய இன்டக்ரிட்டியைச் சந்தேகித்து இருக்கிறார்கள். ஆகவே அதற்காக வாதாடுவதற்கு தனிப்பட்ட ஒரு வழக்கறிஞரை நியமிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள், இன்னாரை நியமிக்க வேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்தது, அதைப் பரிசீலிப்பதற்கு அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது, ஆகவே பரிசீலனை செய்து சட்ட விதிகளுக்கு





உட்பட்டுத்தான் அவரை நியமித்தோம். வழக்கறிஞரைப் பொறுத்தவரையில் திறமையுள்ளவரா, இல்லையா என்பதில் ஒவ்வொருவரும் அவரவர்களுடைய கருத்தை வைத்துக் கொள்ளலாம். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நியமிக்கப்படும்பொழுது அவர் விதிகளுக்குட்பட்டவராக இருக்கிறாரா என்பதைப் பார்க்கிறோம். அந்த விதிகளை எல்லாம் மீறாமல் இருக்கக்கூடிய முறையைத்தான் பின்பற்றி இருக்கிறோம். ஆகவே திறமை இருக்கிறதா இல்லையா என்பது எல்லாம் அவரவர்களுடைய ஒபினியன். மிகத் திறமையானவர்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய அபிப்பிராயம்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் இங்கே பேசுகின்றபொழுது என்னுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர், ** என்று சொன்னது முறையற்றது என்று இந்த அவையின் முன்னாலே தாம் அப்படிச் சொன்னதற்காக வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு அந்த வார்த்தையைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டீர்கள். இதற்குள் எதிர்க் கட்சியிலே உள்ள உறுப்பினர்கள் வெளியே சென்றுவிட்டதாலே இந்த நிகழ்ச்சியைத் தெரிவிக்க விரும்புகிறேன். அவைத் தலைவர் அவர்களுக்குத்தான் ** என்று சொல்கின்ற உரிமை இருக்கிறதே தவிர, ஒரு உறுப்பினர் மற்றொரு உறுப்பினரை ** என்று சொல்வது முறையற்றது. அதற்காக என்னுடைய கட்சி உறுப்பினர் அவர்கள் வருத்தத்தைத் தெரிவித்தார்கள், நானும் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. பி. ஜி. கருத்திருமன் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச வேண்டுமா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பெருந்தன்மையோடு முதலமைச்சர் அவர்கள் கனம் உறுப்பினருடைய கூற்றை பொறுப்பற்றது என்று மிகவும் நல்ல முறையிலே சொல்லியதற்காக நாங்கள் எங்களுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இந்தச் சட்டசபை கண்ணியமாக நடத்தப்படவேண்டுமானால் எல்லா உறுப்பினர்களும் ஒழுங்காகவும் கண்ணியமாகவும் நடந்து கொள்ளவேண்டும். நடந்துவிட்ட சிறு சம்பவத்தை மறந்துவிட்டு இனிமேல் கண்ணியமான முறையிலே நடப்பதற்கு முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. விநாயகம்:** அண்ணா அவர்கள் அரசியல் சம்பந்தப்பட்ட வரையிலும் எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்று சொல்பவர்கள். அந்த முறையிலே அவர்களுடைய தொண்டர்களைத் தயார் செய்திருக்கிறார்கள். கப்பல் கவிழ்ந்தாலும் கன்னத்தில் கை வைக்கக் கூடாது. அப்படியிருக்க அண்ணா அவர்களின் சிஷ்யர்கள் இப்படிச் செய்வதால்தான் எதிர்க்கட்சியின

---

** பேரவைத் தலைவரின் கட்டளைக்கிணங்க நீக்கப்பட்டது.

ராகிய எங்களுக்கு வருத்தம். இனியும் இந்த மாதிரி நடக்காமல் இருப்பதற்கு அவர்கள் உத்திரவாதன் தர முடியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடந்த காரியத்தை விட்டு விடுங்கள். கடைசி நாள் இன்று. இதற்கு முற்றுப்புள்ளி வைப்பது மிகவும் நல்லது.

அடுத்த கேள்வி.

2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

முற்பகல் 10-30

(1) பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்றப்பட்ட பகுதிகள் குறித்து அறிவித்தல்—தொடர்ச்சி.

THIRU T. MARTIN: Mr. Speaker, Sir, I was attempting to raise a point of order, but was abruptly stopped. Therefore I crave your indulgence and permission to raise the point of order. Assembly Reporters and also Press Reporters take down questions as and when they are put. Now the Speaker has said that certain portions are hit by a rule and they have to be expunged under Rule 235. Then difficulty will arise not only for the Member but also for the Press Reporters. They do not know what portions the Hon. Speaker has disallowed. Without knowing that, if the Press publishes the questions as put by the Member, that will land the Press into difficulties. Therefore I request the Hon. Speaker, that whenever a question is put in the Assembly and if the Hon. Speaker finds that certain portions are hit by a rule and have to be expunged under Rule 235, then and there a decision should be given so that it will be helpful to the members and also to the Press.

MR. SPEAKER: It is not a point of order. The hon. Member is pleading on behalf of the Press Reporters. I can say that the Press Reporters are well aware of what is defamatory and what is not. They know it very well and they are also conversant with the law of libel. They know what to omit and what not to omit.

1. வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மெடிகல் கல்லூரி தேர்வுக் குழுவில் இரண்டு ஓய்வு பெற்ற நீதிபதிகள் இருந்தார்கள். அந்த நீதிபதிகள் நமது அட்வகேட்-ஜெனரல் போதாது என்ற கருத்தைத் தெரிவித்தார்களா? அதன்பேரில் வேறு வழக்குரைஞரை அரசு நியமித்ததா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி அவர்கள் அவர்களுக்கென்று தனி வழக்குரைஞர் வேண்டுமென்று சொன்னார்கள். அட்வகேட்-ஜெனரல் அரசாங்கத்திற்காக வாதிட்டார் "எங்களைப் பற்றி அஃபிடவிட்டில் சொல்லியிருப்பதால், எங்களுடைய நடவடிக்கையைப்பற்றி, எங்களுடைய இன்டக்ரிடியைப் பற்றிச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருப்பதால் பிரத்தியேகமான வழக்குரைஞர் வேண்டும்" என்று கேட்டார்கள். அவர்கள் கேட்பது நியாயமானது என்று கருதிய காரணத்தால் அதற்கு உரிமை வழங்கப்பட்டது.

(Thiru A. Chidambaranatha Nadar rose.)



MR. SPEAKER: Can we not leave this matter at this stage?

(Thiru A. Chidambaranatha Nadar rose.)

MR. SPEAKER: Thiru Chidambaranatha Nadar .. ..

திரு. எ. சிதம்பரநாத நாடார்: அப்படியானால் அந்த பிரதிவாதி கேசில் தனியாக எம். கே. நம்பியாரை நியமித்ததில் சர்க்கார் பணம் கொடுத்ததா அல்லது அவர்களே பணம் கொடுத்தார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அரசாங்கம் அவர்களை நியமித்தது. அரசாங்கத்திற்காக அவர்கள் சில வேலைகளை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கு ஆற்றிய பணிகளைப் பொறுத்து வழக்குப் போடப்பட்ட காரணத்தால் அவர்களுக்காக வாதிடுகின்ற வழக்குரைஞருக்கும் அரசாங்கம் பொறுப்பேற்று உரிய உதவியைக் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

THIRU K. VINAYAKAM: Sir, while I do not mean any insinuation to the person under reference and whereas he happened to be my senior at the court and whereas I have got absolute faith in his capacity to conduct the case of the Government, how are the Government justified in deputing a person like Thiru Nambiyar and Thiru Chatterjee at the Supreme Court to take up 'vakkalaths' on behalf of the Government in the 'M. R. Radha Shooting case'? What is the amount which the Government have incurred in paying to Thiru Nambiyar at Madras and Thiru Chatterjee at Delhi and what is the total amount involved in all these transactions?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் இப்போது இரண்டு கேள்விகளைக் கேட்கிறார்கள். குழப்பம் என்று சொன்னால் வருத்தப்படுவார்கள் என்பதால் சொல்லவில்லை. மெடிகல் காலேஜ் அட்மிஷன் சம்பந்தமான வழக்கில் எம். கே. நம்பியார் நியமிக்கப்பட்டார். அதற்காக அவருக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது என்ற தகவல் இல்லை. அவர் சொன்னதுபோல் எம். ஆர். ராதா கேசில் எம். கே. நம்பியாரை . . .

THIRU K. VINAYAKAM: He has tried to miss the question.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எம். ஆர். ராதா கேஸ் சுப்ரீம் கோர்ட்டுக்கு அனுப்பப்பட்டது. அதிலே கான்ஸ்டிடியூஷன் பாயின்ட் இருந்த காரணத்தால், இந்த மாநில அரசாங்கத்தின் அதிகாரத்தை கேட்கக் கூடிய, குவெஸ்டின் செய்யக்கூடிய காரணத்தால், இதைத் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டுமென்று கருதியது. அதைப் பொறுத்தவரை சுப்ரீம் கோர்ட்டுக்கு அனுப்பப்பட்ட காரணத்தால் இங்கிருந்து ஒருவரை அனுப்புவதற்குப் பதிலாக அங்கேயுள்ள வழக்குரைஞரைப் போடுவது என்று முடிவு செய்யப்பட்டது. டெல்லியிலேயே ஒரு வழக்குரைஞரை அமர்த்துவது என்ற முடிவின்படி திரு. என். ஜி. சாட்டர்ஜி அவர்கள் அமர்த்தப்பட்டார்கள்.

[1968 மார்ச் 30

## வடார்க்காடு மாவட்டக் கூட்டுறவு ஸ்டோர்ஸ்

* 373 வினு.—திரு. வி. கே. கோதண்டராமன் : } மாண்புமிகு
திரு. எஸ். ஜே. இராமசாமி : }
சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடார்க்காடு மாவட்டக் கூட்டுறவு ஸ்டோரின் வரவு செலவுக்கான வருடாந்திர ஆடிட் ரிபோர்ட் எந்த ஆண்டு முதல் சர்க்காருக்கு கிடைக்கவில்லை ?

(இ) அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) இது குறித்து சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) வடார்க்காடு மாவட்ட மொத்தக் கூட்டுறவு பண்டகசாலையாக பணியாற்றும் வடார்க்காடு மாவட்டக் கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கத்தின் 1964-65-வது ஆண்டுக்குரிய முடிவான தணிக்கை அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை.

(இ) இச்சங்கத்தின் குடியாத்தம், ஆரணி கிளைகளின் கணக்குகள் பூர்த்தியாக எழுதப்பட்டிருக்காததால் சங்கத்தின் 1964–65-வது ஆண்டுக்குரிய தணிக்கை இன்னும் முற்றுப் பெறவில்லை.

(உ) கணக்குகளைப் பூர்த்தியாக எழுதும்படி சங்கத்திற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : 1964-ம் ஆண்டு முதல் இது வரையில் கணக்குகளைத் தணிக்கை செய்யாது விட்டது மாத்திரமல்ல, இப்போது தணிக்கை செய்ததில் 1964-65-ம் ஆண்டில் மட்டும் எத்தனை லட்சக்கணக்கான ரூபாய் ஊழல் ஏற்பட்டுள்ளது என்பதைப் பற்றிக் கனம் அமைச்சர் அவர்களுக்கே நன்ருகத் தெரியும். இதுபோல் கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைடி மீது ஏன் உடனடியாகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை ? இனியாகிலும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இங்கே 1964-65-ம் ஆண்டுக் கணக்குகளைத் தணிக்கை செய்வதில் காலதாமதமாகியுள்ளது. குடியாத்தம், ஆரணி கிளைகளின் கணக்குகள் பூர்த்தியாக எழுதப்படாததுதான் காலதாமதத்திற்குக் காரணம். இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் விரைவாகத் தணிக்கை செய்யப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் தனியாக சீஃப் ஆடிட்டரை அனுப்பி அவர் கீழ் வேலை வேகமாக நடந்து 1964-65-ம் வருஷ கணக்குகளின் தணிக்கை முடிவடையும் தறுவாயில் இருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஸ்பெஷல் ஆடிட் ரிப்போர்ட் ஏதேனும் வந்திருக்கிறதா ?



1968 மார்ச் 30]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது ஆடிட் நடந்து வருகிறது, ஸ்பெஷல் ஆடிட் அல்ல. கனம் அங்கத்தினர் அவர்களும் வேறு சிலரும் இந்த நிறுவனத்தைப் பற்றிய பல குற்றச் சாட்டுகளைத் தந்திருக்கிருர்கள். அவைகளைப்பற்றியெல்லாம் விசாரிக்கும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது.

## *Extension Officers (Industries)*

* 374 Q.—Thiru R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any promotions to the cadre of Block Development Officers have been made from the category of Extension Officers (Industries) in 1966–67 by relaxing the relevant service rules;

(*b*) if so, the reasons therefor;

(*c*) whether any appeal has been preferred by the affected and aggrieved persons; and

(*d*) if so, the action taken on appeal petitions?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) விதிகளைத் தளர்த்த வேண்டியிராத நேர்வுகளில் மட்டும் (தொழில்கள்) வளர்ச்சி அதிகாரிகளுக்கு தற்காலிகப் பதவி உயர்வுகள் அளிக்கப்பட்டன.

(இ) இவ்வினு எழவில்லை.

(உ) ஆம்.

(எ) அவற்றைக் குறித்து கிராம வளர்ச்சித்துறை இயக்குநர் ஆலோசித்து வருகிருர்.

Thiru R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Minister the number of appeals that are now pending with the Government?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தள்ளி வைக்கப்பட்ட வினு 359 இப்போது எடுத்துக் கொள்ளப்படும்.

Thiru K. VINAYAKAM : Sir, on a point of order. In the list of questions placed on the table of the House, the questions are properly put in the order of the Cabinet rank. The first question concerns the Hon. Chief Minister, the second the Hon. Minister for Education, the third the Hon. Minister for Works and the last the Hon. Minister for Local Administration. But on no day our Hon. Chief Minister comes in time to the House. Every day his question is postponed till the end and I do not say that he has no respect for the House. It is the duty of every Chief Minister to be present when the House commences its sitting

and that has been the practice from the days of 1937. I had watched Thiru Rajagopalachariar, Thiru Omandur Ramaswami Reddiar, Thiru Prakasam, Thiru Kumaraswami Raja and then again Thiru Rajagopalachariar, Thiru Kamaraj and Thiru Bhaktavatsalam. It is the duty of the Chief Minister to be present right in time and answer our questions. (Interruption.) I am armed sufficiently well. I know our Chief Minister. He is not worried about all these small technicalities. He does not even worry about the time and date. I have known him much more than anybody else in this House from the days of our studentship in the Pachaiyappa's College. In the corridors of the College we used to be discussing about world politics, munching pakoda and kadalai. (Interruption.) You must allow me to make my point. The Chief Minister is very happy about my narration of the reminiscences. His only weakness is that he will take cups and cups of coffee. He does not worry about personal embellishment. I think sister-in-law is taking a little interest in him.

THIRU A. BALASUBRAMANYAN: On a point of order.

THIRU K. VINAYAKAM: If you are purchasing trouble from me, I am game for it. But I am not yielding. I must make my point of order and then our Friend can speak. (Interruption.) Sir, it is my look out. Is this the way you allow the business of the House to be carried on?

MR. SPEAKER: You are very much on the border line between ironical and complimentary statements.

THIRU K. VINAYAKAM: I can cut jokes for every member here.

MR. SPEAKER: Of course, I will allow you, but not when you are raising a point of order. There is a time for it.

THIRU K. VINAYAKAM: Mr. Speaker, Sir (Interruption). You are presiding and nobody else is presiding. You can pull me up, but not the other members. Even the Ministers have no power to pull me up, when I go wrong.

In the interest of the Chief Minister I am saying this. Punctuality is one of the greatest virtues which the Britisher has left. That is the only thing he has left. Our Chief Minister is going to America. He cannot go late by one or two hours for lunch, convocation address, etc.

MR. SPEAKER: A member making a point of order must confine himself to stating the point. That is rule 83.

THIRU K. VINAYAKAM: You find how our Chief Minister enjoys my jokes. He has cut a lot of jokes at me. Once he said that I was a corpulant man and that I was strong enough



to defend the Government. Like the traditional skylark of the Wordsworth's time he can sing and jolly well walk. In the interest of the proper proceedings of the House will the question list be so framed as to provide that the questions relating to the Chief Minister are included at the end and not in the beginning? This is the point worthy to be considered by the Chair.

THE HON. THIRU C. N. ANNADURAI: My question being taken up at the end is not done with any intention. He has himself said how my life has been arranged and he has given me a suggestion that I should be very punctual. I am thankful to him for the suggestion. But human weakness being what it is, particularly my own weakness, I may fail in this. He will be pleased to put up with me. I will keep that suggestion in mind and try to be punctual. Since he has given me one suggestion, I have got a right to give him another suggestion. He has suggested that punctuality is the one good trait that the Britisher has left to us. The Britisher has left another good trait to come to the point and not to be verbose.

*Government employees not permitted to marry*

* 359 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state the categories of Government employees Gazetted and Non-Gazetted who are not permitted to marry?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: ஒருவருமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கூட கெஸட்டட் ஆபீசர்கள்தான் என்று நினைக்கிறேன். இப்போது அவர்கள் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லையா என்பதுதான் கேள்வி. அப்படியில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஐ.ஏ.எஸ். படித்த பெண்கள் திருமணம் செய்து கொள்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை என்று சொல்லப்படுவது உண்மையா? அப்படியென்றால் அதற்கான காரணங்கள் என்ன? அப்படி செய்து கொள்வதற்கான ஏற்பாடுகள் என்ன?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: நான் அளித்த பதிலில் ஐ.ஏ.எஸ். பெண் அதிகாரிகளும் உட்படுகிறார்கள். அவர்கள் திருமணம் செய்து கொள்வதற்கு அனுமதி மறுக்கப்படுவதில்லை. அப்படி யாருக்காவது அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் அங்கத்தினர் அவர்களிடம் இருந்தால் அவர்கள் அதைக் கொடுக்கலாம். அவருடைய நினைவிற்காக, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருக்கிற ஆரணங்குகள் திருமணம் செய்து கொண்டு தாய்மார்களாக இன்றையதினம் இருப்பதைக் கூட நான் அவர்களுக்கு சான்றுகளுடன் அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. முதலமைச்சரின் விளக்க உரைகள்

### (i) சென்னை நகரில் மாணவர்கள்-அரசு போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்கள் கலவரம் பற்றிய விவரங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 82-வது விதியின் கீழ் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு விளக்க உரை அளிக்க இருக்கிறார்கள். அது இரண்டு பகுதிகளாக இருப்பதாக அறிகிறேன். அந்த இரண்டு பகுதிகளையும் விளக்க உரையாக அளிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** தலைவர் அவர்களே, இந்தத் திங்கள் 25, 26-ம் நாட்களில் நடைபெற்ற வருந்தத் தக்க நிகழ்ச்சிகளில் எத்தனை பேர்கள் பாதிக்கப்பட்டார்கள், எத்தனை பேர்கள் காயமடைந்தார்கள், எத்தனை பேர்கள் கைது செய்யப் பட்டார்கள், போலீஸ் நடவடிக்கைகள், துப்பாக்கிப் பிரயோ கங்கள் இவைகள் எல்லாம் எந்தெந்த அளவில் எத்தனை முறைகள் இருந்தன என்பதுபற்றிய தகவல்களை நான் தருவதாகச் சொன் னேன். இப்போது இன்றையதினம் தரப்பட்டிருக்கிறவரையில் வந்த தகவல்களை அவை முன்னால் வைக்கிறேன்.

எத்தனை பேர்கள் இந்த நிகழ்ச்சிகளில் காயப்பட்டார்கள்?—116. அவர்களில் மாணவர்கள் 57, டிரான்ஸ்போர்ட் வொர்க் கெர்ஸ் 54, பொதுமக்கள் 3, போலீஸார்—இன்ஸ்பெக்டர் 1, ஒரு ஹெட் கான்ஸ்டபிள். இவர்களில் எத்தனை பேர்கள் 'இன் பேஷன்ட்ஸ்', எத்தனை பேர்கள் 'அவுட் பேஷன்ட்ஸ்'?—இன் பேஷன்ட்ஸ் 70, அவுட்-பேஷன்ட்ஸ் 46.

இன்-பேஷன்ட்ஸ் எந்தெந்த வகையைச் சேர்ந்தவர்கள்?

இன்-பேஷன்ட்ஸ்—வொர்க்கர்ஸ் 27.

இன்-பேஷன்ட்ஸ்—மாணவர்கள் 40.

இன்-பேஷன்ட்ஸ்—பப்ளிக் 2.

இன்-பேஷன்ட்ஸ்—போலீஸ் 1.

அவுட்-பேஷன்ட்ஸ்—வொர்க்கர்ஸ் 27, மாணவர்கள் 17, பப்ளிக் ஒருவர், போலீஸ் ஒருவர்.

இதில் மரணம் அடைந்தது—ஒரு தொழிலாளி ஜெனரல் ஆஸ்பத்திரியில் 26-ம் தேதி விடியற்காலையில்.

How many were wounded in Police firing?

One student, one attender.

எவ்வளவு பேர்கள் கைது செய்யப்பட்டார்கள்?—41.



மாணவர்கள் ஒருவரும் இல்லை.

தொழிலாளர்கள் எவ்வளவு?—29.

பொதுமக்கள் எவ்வளவு?—12.

How many were released on bail?

All were released on bail in due course.

How many teargas shells were burst?—Ten.

Where?—At the Law College Hostel area.

Lathi charge was made on the crowd gathered before the Law College Hostel area and the Madras Medical College Hostel area.

I will add one other issue. An impression is sought to be created that the Police action at the Madras Medical College Hostel area took place only after the intervention of His Excellency the Governor. This is entirely wrong and none conversant with the Constitution could even entertain such an idea. மு.ப. 11-00

I asked both the Inspector-General of Police and the Commissioner of Police whether they received any message from His Excellency the Governor at any time about Police action. Both the officers informed me that they received no such message from His Excellency.

I had a talk with His Excellency the Governor about this last evening. He informed me that his Private Secretary told him that a telephone message came from a student of the Madras Medical College asking for Police action. The Private Secretary after passing on this information to the Governor, also tried to contact the Inspector-General and the Commissioner and found out that the Commissioner was already at the Madras Medical College Hostel area. So it is utterly wrong on the part of anyone to even imagine that Police protection and action was due to the intervention of the Governor. In fact the Governor told me that he explained to one of the student representatives who met him later, that the Governor acts only through the Chief Minister. It is amazing that such an idea as the intervention of the Governor was entertained at all.

### (ii) மூடப்பட்ட சீரற்ற பஞ்சாலைகளைத் திறத்தல் குறித்த நடவடிக்கைகள்

THE HON. THIRU C. N. ANNADURAI: Sir, I have to make another statement also before the House and that is about the efforts being taken with regard to the textile mills. The Chief Minister, the Minister for Education and Industries and the Minister for Labour met representatives of the managements and Labour Unions of textile mills on 23rd

March 1968 and again on 27th March 1968 and discussed the textile situation. On behalf of the South India Mill Owners' Association, it was represented that in order to alleviate the difficulties felt by the sick and closed mills, it would be necessary for the Central Government to come to their rescue in a big way by abolishing the excise duties on cotton yarn. To press their demand effectively before the Centre, the State Government may also have to make a gesture of effective help by way of reduction of sales tax and electrical charges and by advancing financial assistance wherever necessary. The Labour Unions pointed out that many mills became sick on account of bad management and that the Government should take them over. The management also represented that if powerlooms are encouraged in Tamil Nad, it would be helpful to them. The Chief Minister stated that the question of introduction of power-looms is a larger policy issue requiring careful examination in consultation with the handloom industry. To the suggestion that the Government themselves should take over some of the closed mills under the Industries (Development and Regulation) Act of 1950, the Chief Minister stated that the Government would examine this question with Dr. Lokanathan who went into this question last year and submitted a report. Dr. Lokanathan met the Chief Minister on 28th March 1968 and the Chief Minister asked him to examine this question and state which are the mills that could be taken up under the provisions of the Industries (Development and Regulation) Act of 1950. After getting the legal opinion about the procedure of taking over show-cause notices should be issued to the mills asking them to show cause why the Government should not take over the management of the sick mills. On an appeal from the Chief Minister that the mills which have issued closure notices should not precipitate matters by closing the mills, the managements' representatives gave an assurance that in deference to the Chief Minister's wishes, further action regarding closure would be stayed.

## (iii) ஹவுஸ் சர்ஜன்கள், உதவி சர்ஜன்கள் வேலை நிறுத்தம்

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I have to make another statement also and this is about the strike by the House Surgeons, Assistant Surgeons in Madras and in certain mofussil centres. About that, we have been carrying on talks through the Dean and other medical officers concerned. As soon as you relieve me from this House, I along with the Health Minister will go and meet the House Surgeons and Assistant Surgeons. I am going to have talk with them.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகரவர்களே, முதலமைச்சரவர்கள் 82-வது விதியின் கீழ் விளக்கவுரையளித்ததைத் தொடர்ந்து நான் சில விளக்கங்களைக் கேட்க விரும்புகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கவுரைக்கு விளக்கம் கேட்க முடியாது, பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று வேண்டுமானால் சொல்லுங்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், முதலமைச்சரவர்கள் அன்று வாக்களித்துச் சொன்னதற்கிணங்க 82-வது விதியின்கீழ் . . . .

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I have forgotten to make one other statement. Last night I went to the General Hospital. . . .

THIRU K. VINAYAKAM : We read about it already.

THE HON. THIRU C. N. ANNADURAI : Then it is all right and I do not want to reiterate it.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அவர்கள் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கின்றார்கள். அந்த அறிக்கையில், 28-ஆம் தேதி நாங்கள் சட்டசபையில் எழுப்பிய பிரச்சினைகள் பற்றி விரிவாகக் குறிப்பிடாதது மிகவும் வருந்துதற்குரியது.

முதலாவதாக, மாணவர் இல்லங்களைச் சோதனைபோட உத்தரவிடப்பட்டிருக்கிறதா என்று கேட்டதற்கு அன்று முதலமைச்சரவர்கள் தெரியவில்லை என்றார்கள், அவ்வாறு சோதனையிடப்பட்டிருக்கிறதா? என்ற விவரம் இல்லை, அல்லது இடப்படாது என்ற உத்தரவாதமும் இல்லை.

அடுத்தபடியாக, 26-ம் தேதி, 27-ம் தேதிகளில் வேலை நிறுத்தமிருந்தும் அரசாங்க பஸ்கள் ரோடுகளில் எப்படிப் போகலாம்? வேலை நிறுத்தம் இருந்த சமயத்திலே பஸ்களிலே சிலர் சென்று, ஒவ்வொரு விடுதிக்கும் சென்று மாணவர்களைத் தாக்கியும், அந்த நிலையிலே போலீஸார் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையும் இருந்தது என்றால் எந்த நிலையிலே பஸ் பல இடங்களுக்கும் கொண்டு போகப்பட்டது? துப்பாக்கிச் சூடு பற்றி இப்பொழுது தான் சொல்லியிருக்கிறார்கள். எந்த இடத்திலே நடந்தது, எத்தனை மணிக்கு நடந்தது, என்பது பற்றிய விவரங்கள் இல்லை.

கைது செய்யப்பட்டவர்களில் மாணவர்கள் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இரண்டு நாட்களிலே நான் சுற்றிப் பார்த்த அளவிலே மாணவர்களிடம் பீதி அதிகமாக இருக்கிறது. நேற்றுகூட சமையல் செய்பவர் ஒருவர் மெடிகல் காலேஜிலிருந்து வெளியே வரும்பொழுது தாக்கப்பட்டு, மாணவர்களும் தாக்கப்பட்டு, மாணவர்கள் என்று தெரிந்தும், அவர்கள் சப்தம் போட்டும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதைவிட இன்னொரு விஷயம் என்னவென்றால், மாணவர்களெல்லாம் எந்த ஹால்டல்களில் பார்த்தாலும் பயத்துடனும் இவர்கள் தாக்க வருவார்களோ, அவர்கள் தாக்க வருவார்களோ என்று—இது ஆதாரமற்றதாகவும்கூட இருக்கலாம். ஆனால்—அவர்கள் பீதியடைந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன பாதுகாப்பு என்னும்படியான நிலையைத் தெரிவிக்க வேண்டும்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1963 மார்ச் 30

அடுத்தபடியாக, இப்பொழுதிருக்கும்படியான நிலையில் பல கல்லூரிகளில் மாணவர்கள் படிக்காமல் இருக்கும்படியான நிலைமையில் பரீட்சைகளை 15 நாட்களுக்கு ஒத்திவைக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. நிச்சயமாக அவ்வாறு ஒத்திவைக்க வேண்டும். அதுபற்றிய விவரம் இல்லை.

அடுத்து, மிக முக்கியமான அம்சம் என்னவென்றால், இந்தச் சம்பவங்கள் மின்னல் வேகத்திலே நடந்தன, ஆகவே எந்தவிதமான நடவடிக்கையையும் நாங்கள் எடுத்துக்கொள்ள இயலவில்லை என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். மின்னல் வேகம் என்றால் இரண்டு நிமிஷங்களுக்கு மேல் இருக்க முடியாது, அரை மணி நேரத்திற்கு மேல் இருக்க முடியாது. 19 மணி நேரம், 20 மணி நேரம் பலப்பல இடங்களில் திட்டமிடப்பட்டு மாணவர்கள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். மாணவர்கள் சொல்லும்படியான குற்றச்சாட்டு என்னவென்றால், போலீஸ் பாதுகாப்பு தரவில்லை, மறுத்திருக்கிறார்கள் என்னும்படிதான் குற்றச்சாட்டு இருக்கிறது. மெடிகல் காலேஜிற்கு முன்னால் போலீஸ் நின்றுகொண்டு இருந்தும் கூட எந்தவிதமான நடவடிக்கையும் கிடையாது. எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. போலீசார் கட்டப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பூரண சுதந்திரம் கிடையாது.

நீதி விசாரணை என்று சொல்லியிருக்கிறார்கள். இது 25, 26, 27 தேதிகளில் நடந்தது மட்டுமல்ல. தொடர்ந்து 5, 6 மாதங்களாக பஸ் கண்டக்டர்களுக்கும், பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் நடந்து வந்திருக்கின்றது. அகல் விளக்கு என்று சொன்னார்கள், அதுபோலத் தொடர்ந்து பலப்பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. சமீபத்தில் இன்ஜினியரிங் காலேஜ் மாணவர்கள் தாக்கப்படுவதற்குக் காரணம், ஸ்டான்லி மெடிகல் காலேஜில் நடந்த சம்பவம், இவை பற்றி நீதி விசாரணை செய்ய வேண்டுமென்று சொன்னதற்குக்கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அது தொடர்ந்து பரவி பெரிய அளவிலே ஆகி சமூகத்திலே வெறுப்புணர்ச்சியாக ஆகியிருக்கிறது. "டெர்ம்ஸ் ஆஃப் ரெபரென்ஸ்", நீண்ட நாட்களாக நடந்ததை விசாரிக்கக்கூடிய வகையில் இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இப்பொழுது அமைத்திருக்கும்படியானவரை சாதாரணமாக ஏற்றுக்கொள்ள முடியாது. வேறு மாநிலங்களிலேயிருந்து ஒரு உயர்நீதி மன்ற நீதிபதியைக் கொண்டுதான் இந்த டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் செயல்படுத்தப்பட வேண்டும். ஆகவே முதலமைச்சர் அவர்கள் நாங்கள் கேட்டிருந்த, சட்டசபையிலே எழுப்பின பிரச்சினைகளையெல்லாம் சரியான முறையில் கவனித்ததாக, தகவல் கொடுத்தாகத் தெரியவில்லை. இந்த நிலையில் சட்டசபையை இன்னும் ஒரு வாரம் நீட்டிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். இந்த சட்டசபை நடக்கவில்லையென்றால் அந்த மாணவர் குழந்தைகளுக்கெல்லாம் என்ன



1963 மார்ச் 30] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

நேருமோ ? (ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் சூள் கொட்டினார்கள்). நாக்கை சப்பாதீர்கள். மாணவர்களுக்கெல்லாம் இந்த நிலைமை இருக்குமானால், இதைப் பொறுப்புடன் நடத்துகிறதா, அரசாங்கம் பொறுப்புடன் நடந்துகொள்கிறதா என்பதைக் கவனிக்கும்பொருட்டு ஒரு வாரம் சட்டசபையை நீட்டிக்க வேண்டும். மாணவர்களுககு பூரணமாகப் பாதுகாப்பு இருக்கும் வரைக்கும் நாங்கள் சட்டசபையில் இருக்க வேண்டும்—ஒரு வாரத்திற்கு. இப்பொழுது அவர்கள் இந்தச் சபையிலே கொடுத்த தகவலின் மூலம் சட்டம், அமைதி காக்கப்படவில்லை என்பது தெரிகிறது. போலீஸ் பாதுகாப்பு மாணவர்களுக்குச் சரியாகக் கிடைக்கவில்லை. இந்த நிலையிலே அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்குத் தவறிவிட்டது என்பதைக் கண்டிக்கும் நிலையிலே இருக்கிறோம் என்பதைக் குறித்து நாங்கள் வெளியேறுகிறோம்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.)

## 4. அவையுரிமைக் கேள்விகள்

( ) சென்னை நகரில் மாணவர்கள்—அரசு போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்கள் கலவரம்பற்றி 'நவமணி' நாளிதழில் வந்துள்ள சென்னை நகரக் காவல் துறை ஆணையாளரின் செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பிரிவிலேஜ் மாட்டர்ஸ்—அவை உரிமைக் கேள்விகள். முதலிலே திரு. க. இராமமூர்த்தி ஒன்று கொடுத்திருக்கிறார்கள். அவர் அவையில் இல்லையென்றாலும் நான் வாசிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நானே வாசிக்கவேண்டுமென்று விதி இருக்கிறது. (குறுக்கீடு.) நான் என்ன செய்வது? "When a Member has with the consent of the Speaker raised a matter of privilege, the Speaker shall read the matter to the House and decide whether a *prima facie* case of breach of privilege has been made or not therein." When the Member is present, I am permitting him to read it on my behalf. But now I have got to read it.

"The Commissioner of Police, Madras on the evening of 26th March 1968 in his meeting with the Press Reporters has narrated the reasons for the clash between the Transport employees and the students which has been reported by the newspaper "NAVA MANI", dated Madras 27th March 1968 and mofussil 28th March 1968 under the headings,

"பஸ் டிரைவர் மரணம்: சம்பவம் நிகழ்ந்தது எப்படி? போலீஸ் விளக்கம்"

The copy of the same is herewith enclosed.

The narration of the Commissioner of Police, Madras, as reported alleges certain acts of commission by the students as the cause for the trouble. The statement is one which will affect the course of the judicial enquiry which was announced by the Chief Minister on the floor of the House on the forenoon of 26th March 1968.

Hence I request that this House be pleased to take note of it and refer the same to the Committee of Privileges for breach of privilege".

உறுப்பினர் அவர்களே அவர்களுடைய கடிதத்தில் 'The statement is one which will affect the course of the judicial enquiry' என்று அந்த ஒரே ஒரு காரணம்தான் சொல்லியிருக்கிறார்கள். That being the only reason, it would be for the Judge to take note of contempt, if any, and I do not want to and cannot trespass into the jurisdiction of the Judge who sits on the enquiry. Therefore, no *prima facie* case has been made out under Rule 188.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** தலைவர் அவர்களே, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்துவிட்ட போதிலும் அவர்கள் எழுப்பிய பிரச்சினைகளில் ஒரு விஷயத்தை மட்டும் நான் அவையில் சொல்வதன்மூலம் விளக்கவேண்டுமென்று விரும்புகிறேன். மாணவர்கள் விடுதிகளிலே உள்ள மாணவர்களுக்குப் பொதுவாக தாங்கள் தாக்கப்படக்கூடும் என்ற கலவர உணர்ச்சி, பீதி உணர்ச்சி இருப்பதைக் குறிப்பிட்டு, அவர்களுக்குப் போதுமான அளவுக்குப் பாதுகாப்பு தரப்பட வேண்டுமென்று அவர்கள் சுட்டிக் காட்டியதை நான் முழுக்க முழுக்க வரவேற்கிறேன். மாணவர்கள் தாக்கப்படாமல் இருப்பதற்கு அவர்களுக்குத் தேவையான பாதுகாப்புத் தருவதற்கு எல்லாவிதமான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எந்த ஹாஸ்டலில் எந்த எந்த விதமான நிலைமைகள் இருக்கின்றன என்பதை அவ்வப்பொழுது மாலையிலும் காலையிலும் தொலைபேசி மூலமாகக் கேட்டறிந்து அவ்வப்பொழுது அந்த அந்த இடங்களுக்குப் போதுமான பாதுகாப்பு, போலீஸ் அந்த அந்த இடங்களிலே அமர்த்துவதன்மூலம் போடப்படுகின்றன. அது மட்டுமல்ல, நகர் முழுவதும் ரோந்து வருகிற போலீஸ் படையினரும் ரோந்து சுற்றிக்கொண்டே வருகிறார்கள். ஆகையால், மாணவர்கள் எந்த விதமான பீதியும் இல்லாமல் அவர்கள் ஹாஸ்டலில் வாழ்வதற்குத் தகுந்த எல்லா நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்ற உறுதியினை மாணவர் சமுதாயத்திற்கு இந்த அரசு உறுதியாக அளிக்கிறது.

MR. SPEAKER: Taking note of the additional facts mentioned by the Hon. Chief Minister, I also hold that no *prima facie* case of breach of privilege exists against the newspaper.



**திரு. பி. வேலுசாமி:** ஆன் எ பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன். இந்த மாணவர்கள், தொழிலாளிகள் கைது செய்யப்பட்டதோடல்லாமல், பொதுமக்களும் கைது செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அவர்கள் ஏதாவது அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** பல்வேறு நடவடிக்கைகளில், இதிலே ஈடுபட்டிருந்த பொதுமக்களில் 3 பேர் காயம் அடைந்திருக்கிறார்கள். கைது செய்யப்பட்டவர்களில் 12 பேர் பொதுமக்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் எல்லாம் விடுவிக்கப்பட்டார்கள்.

**திரு. பி. வேலுசாமி:** ஏதாவது அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களா என்ற விவரம் என்னிடம் இல்லை.

## (ii) 'மாலை மணி' நாளிதழில் பேரவை நடவடிக்கை குறித்து வந்துள்ள தவறான செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்குக் கடைசி நாளாக இருப்பதால் அவை உரிமைக் கேள்விகளையெல்லாம் தீர்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து அவை உரிமைக் கேள்வி—பிரிவிலேஜ் மாட்டர்—திரு. க. இராமமூர்த்தி அவர்கள் முன்னறிவிக்கை கொடுத்திருப்பது அதை இப்பொழுது படிக்கிறேன்.

"I hereby give notice of the following under rule 184 of the Madras Legislative Assembly Rules for breach of privilege of this House on the newspaper MALAI MANI, dated Madras, 26th March 1968, mofussil 27th March 1968, for having wantonly and knowingly misquoted and reported the proceedings of this House on 26th March 1968. Under the caption, "புவராகன் குற்றச்சாட்டு : ஆதாரமற்றது : கருத்திருமன் ஒப்புக்கொண்டார்" the newspaper has reported the discussion on District Administration and Miscellaneous in detail wherein at no stage is there any utterance by Hon. Thiru P. G. Karuthiruman accepting the charge by Hon. Thiru G. Bhuvaragan as baseless. This act of the newspaper is purposeful as the headline is certain to tarnish the image of the Hon. Members concerned and the Congress Legislature Party to which they belong in the eyes of the public. Hence I move that this House be pleased to take note of the same and refer the same to the Committee of Privileges for breach of privilege."

I have read the official report of the proceedings and also this newspaper. I have no doubt that the caption is incorrect in the sense that it is not in accordance with the official report of the proceedings. Therefore I am bound to hold that a *prima facie* case of breach of privilege has been made out. But newspaper Editors particularly Editors of dailies have to carry on their profession under great stress and pressure for time and sometimes it might so happen that they do not choose the right words for headlines although they have no malice against anyone. Therefore I propose to write to the Editor concerned and deal further under Rule 189 after receiving his reply, if any.

### (iii) 'நவசக்தி' நாளிதழ் ஒருறுப்பினர் பேச்சுப் பற்றி வந்துள்ள செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டுவந்திருக்கிருர்கள். அதில் ஜனவரி 30-ம் தேதிய நவசக்தி நாளிதழில் எ. பாலசுப்பிரமணியன் (இடது கம்யூனிஸ்டு), " நான் எதிர்க் கட்சித் தலைவனில்லையா ?" என்று 28—3—1968 சட்டப் பேரவைக் கூட்டத்தில் பேசியதுமாதிரிப் பிரசுரித்திருக்கிருர்கள். 28—3—1968-ம் தேதி நடந்த சட்டப்பேரவையின் நடவடிக்கைகளை இது வேண்டுமென்றே திருத்திக் கூறியுள்ளது. இது சபை உரிமையை மீறியதாகும். எனவே இந்தப் பிரச்சனையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுகிறேன். இத்துடன் 30—3—1968 ' நவசக்தி ' நாளிதழை இணைத்துள்ளேன் " என்று குறிப்பிட்டிருக்கிருர்.

அவர்கள் சொல்லியுள்ளபடி இதில் வந்திருக்கும்படியான இந்தச் செய்தியானது நமது நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து வேறுபட்டிருக்குமானல், அது அவையின் உரிமைக் குழுவுக்குப் போகவேண்டிய ஒன்ருக இருக்க முடியும். நான் இன்னும் நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்க்கவில்லை, அதில் அப்படி இருக்கிறதா, இல்லையா என்று பார்த்து, பின்னல் தீர்ப்புக் கூறுவதற்காக இதைத் தள்ளி வைக்கிறேன்.

### (iv) அவதூருன செய்தியைத் துண்டுப் பிரசுரத்தின் மூலம் பிரசுரம் செய்தமை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. சுரேந்திரன் அவர்கள், ஒரு அவதூருன செய்தியைப் பிரசுரம் செய்ததாக ஒரு துண்டுப் பிரசுரத்தைக் கொடுத்து, சபையின் உரிமை பாதிக்கப் பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிருர். அதில் என்னைப்பற்றியும் கூறப்பட்டிருப்பதால் நான் அதுபற்றித் தீர்ப்புச் சொல்வது முறையாகாது. பின்னல் ஒரு நாள் பேரவைத் துணைத் தலைவர் அதன்மீது தீர்ப்புச் சொல்வதற்காக நான் இதைத் தள்ளி வைப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.



### (v) ' மாலே மணி ' நாளிதழில் ஒருறுப்பினர் பேரவையைக் கூட்டவேண்டுமென்று கோரியதுபற்றி விமர்சித்து வந்துள்ள செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, ' மாலே மணி ' என்ற பத்திரிகையைப்பற்றி, திரு. செ. பாலசுப்பிரமணியன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிருர். அதில் " சென்ற மாதம் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது ஏற்பட்ட பதட்ட நிலைபற்றி விவாதிக்கச் சட்டப்பேரவையின் அவசரக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கக் கோரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கோரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். அதுபற்றி என்னைப் பத்திரிகை நிருபர்கள் கேட்டபொழுது, அவ்விதம் கோரப்போவதாகத் தெரிவித்தேன். சட்டசபை அங்கத்தினர் என்ற முறையில் என் கடமையை நான் செய்யும் போது, சென்னையிலிருந்து வெளியாகும் ' மாலே மணி ' என்னும் நாளிதழ் 31—12—1967 தேதிய வெளியீட்டில் நான் அவ்வாறு கோரியதைக் கேவலமாக விமர்சித்தும், என்னைப் பயமுறுத்தியும் விமர்சித்திருக்கிருர்கள். அந்த இதழையும் இத்துடன் அனுப்பி யிருக்கிறேன். குறிப்பிட்ட அக்கட்டுரை சட்டசபை அங்கத்தினரின் உரிமையை மீறியதாகுமென நான் கருதுகிறேன்." என்று குறிப்பிட்டிருக்கிருர். ஆகவே, ' மாலே மணி ' நாளிதழ் ஆசிரியர், வெளியிடுபவர் ஆகியோர்மீது உரிமை மீறல் பிரச்சினை இருப்பதாகச் சொல்கிருர்.

நான் அந்தப் பத்திரிகையில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதைப் படிக்கக் கடமைப்பட்டிருந்தாலும், அதைப் பேரவையில் படிப்பது நன்ருக இருக்காது என்பதினல் நான் வாசிப்பதற்கில்லை. அந்த ஆசிரியருக்கு எழுதி, ஓரளவுக்கு விளக்கம் கேட்டு, என்ன நிலைமையில் அம்மாதிரிப் பிரசுரிக்கப் பட்டது என்று கேட்க இருக்கிறேன். கேட்ட பிறகு, இதை மீண்டும் நாம் எடுத்துக்கொள்ளலாம்.

### (vi) அவிநாசி வட்ட திராவிட பொரி-கடலை உற்பத்தியாளர் முன்னேற்ற சங்கம் வெளியிட்ட துண்டுப் பிரசுரம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்தபடியாக, அவிநாசி வட்ட திராவிட, பொரி-கடலை உற்பத்தியாளர் முன்னேற்றச் சங்கம் என்பவர்கள் மணிவாசகர் அச்சகம், அவிநாசி என்ற அச்சகத்தில் அச்சிட்டு ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டிருக்கிருர்கள். அந்தத் துண்டுப் பிரசுரத்தின் வாசகம் பேரவையின் உரிமையை மீறியிருப்பதாக திரு. செ. பாலசுப்பிர மணியன் குறிப்பிட்டிருக்கிருர்கள். அது பேரவையின் உரிமைகளை மீறியிருப்பதாக இருக்கிறது என்பதிலே எந்தவிதமான ஐயப்பாடும் கிடையாது. ஆனல் இம்மாதிரி ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டவர்மீது இந்தப் பேரவை

நேரத்தையும், காலத்தையும் செலவு பண்ணவேண்டியதில்லை என்ற காரணத்திற்காக, சம்பந்தப்பட்டவர்களுக்கு--அந்த மணிவாசகர் அச்சகத்திற்கும் பொரி-கடலை உற்பத்தியாளர் முன்னேற்ற சங்கத்திற்கும்—அவர்கள் அவையின் உரிமைகளை மீறியுள்ளார்கள் என்பதைக் குறித்து நான் எச்சரிக்கைசெய்து எழுதுவதாக இருக்கிறேன். அதுவே போதும் என்று கருதுகிறேன். ஏனென்றால், 'De Minimus Non C.rat Lex' என்ற கொள்கைக்கு இணங்க, இந்த மாதிரிச் சிறிய காரியங்களைச் சட்டம், சட்டப் பேரவை பொருட்படுத்தக்கூடாது.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : அதை முழுவதும் படித்து விட்டால், அது எப்படி நடந்திருக்கிறது என்பது தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : படிக்கவேண்டாம், நன்றாக இருக்காது.

திரு. பி. வேலுசாமி : இந்தச் சிறிய காரியங்களை வளர விட்டாலும் ரொம்பவும் அதிகமாகப் போய்விடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த முறை எச்சரித்து விடலாம். எத்தனையோ துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப் படுகின்றன. பேரவையின் விலை மதிக்க முடியாத நேரத்தையும், காலத்தையும் இப்படிப்பட்ட காரியங்களில் செலவழிக்கக்கூடாது என்பது என் கருத்து மட்டுமல்ல, நடைமுறையும் அதுவேயாகும்.

### (vii) தலைமைச் செயலகத்திற்கு வருகிறவர்களைக் கட்டுப்படுத்த வெளியிடப்பட்டுள்ள தலைமைச் செயலாளரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் அரசாங்கத் தலைமைச் செயலாளர் (சீஃப் செகரடரி டு கவர்ன்மெண்டு) வெளியிட்ட அறிக்கை இங்கே உள்ளே வருகிறவர்களுக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்திருப்பதால் பேரவையின் உரிமையையும், பேரவைத் தலைவரின் உரிமையையும் மீறியிருப்பதாக எழுதியிருக்கிறார். அதை முற்றிலும் வாசித்துப் பார்த்த பிறகு, பேரவைத் தலைவருடைய அதிகார வரம்பிற்குள் தலைமைச் செயலாளர் பிரவேசிக்க இல்லை. அதில் எந்தவிதமான அவை உரிமைக் கேள்வியும் இல்லை. No prima facie case has been made out என்று தீர்ப்புச் சொல்கிறேன்.

### (viii) பேரவைத் தலைவர்பற்றி ஒரு பத்திரிகையில் வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, நண்பர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் ஒரு பத்திரிகையில் பேரவைத் தலைவரைப்பற்றி ஏதோ எழுதியிருப்பதாகவும், அது உரிமைப் பிரச்சினையின்கீழ் வருவதாகவும் எழுதியிருக்கிறார். அதைத் தள்ளுபடி செய்வதா, இல்லையா என்பதுகூட நான் சொல்ல முடியாது. என்னைப்பற்றி ஏதோ தரக்குறைவாக எழுதியிருக்





கிறார்கள் என்று சொல்கிறார்கள். பேரவைத் துணைத் தலைவர் பின்னால் இதுபற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்று சொல்லி அதைத் தள்ளி வைத்துவிடுகிறேன்.

### (ix) செய்தித் துறை அமைச்சர்மீதான அவையுரிமைக் கேள்வி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்தாற்போல், திரு. கோ. பூவராகன் அவர்கள் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் மீது ஒரு அவை உரிமைக் கேள்வி கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், அதில் எழுதியிருக்கும்படியான வாசகம் இந்தப் பேரவையில் சொல்லக்கூடிய வாசகமாக இல்லாத காரணத்தினால், அதை நான் என்னுடைய அறையிலேயே தள்ளுபடி செய்து விட்டதாக இங்கே அறிவிக்கிறேன்.

### (x) பேரவைத் தலைவர்மீதான அவையுரிமைக் கேள்வி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் என்மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். பேரவைத் தலைவர்மீது உரிமைப் பிரச்னை கொண்டு வருவது எங்கும், எந்த நாட்டிலும் கேள்விப்படாத ஒன்று. அதனுடைய முற்பகுதி பூராவும் என்மீது சொல்லப்படுவதாக இருக்கிறது. ஏதோ சில சில நேரங்களில் நான் அவர்களுக்கு நேரம் கொடுக்கவில்லை, எனவே அது அவை உரிமையை மீறியதாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்த்து என்மீது குற்றங்குறை சொல்வதாக இருந்தால், இந்தப் பேரவையிலே சொல்ல முடியாது. ஏனென்றால் இந்தப் பேரவையில் எனக்கு, விவாதம் செய்ய உரிமை கிடையாது. ஆகையினால், விதிகளின்படி நீங்கள் என்மீது ஏதாவது சொல்லவேண்டுமென்றால், உரிமைக் குழுவிடம் சொல்லி, அவர்கள் அதற்கு தீர்ப்புச் சொல்லவேண்டும். நீங்கள் நன்றாக ஆராய்ந்து பார்த்து, என்ன செய்யவேண்டும் என்று முடிவு செய்வதற்காக வேண்டி உங்களுக்கு அவகாசம் கொடுக்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, I withdraw the Privilege Motion given notice of against the Hon. Speaker.

### (2) நடைமுறைக் கேள்வி—தொடர்ச்சி

### (ii) நீதி விசாரணையிலிருக்கும் பொருள் குறித்து ஆற்றப்படும் உரையின் வரையறைகள்

DR. H. V. HANDE : Now I want to raise a point of order. I would like to get some clarification with regard to the rules of the Assembly. Rule 31 relates to questions and Rule 67 relates to speeches.

MR. SPEAKER : Rule 67 is with regard to speeches and Rule 68 is with regard to motions.

DR. H. V. HANDE : I am saying that Rule 31 is with regard to questions and Rule 67 is with regard to speeches. Rule 31 precludes us from raising matters on which a judicial

decision is pending in a court of law while Rule 67 says that we must not while speaking, refer to any matter on which a judicial decision is pending. In fact Rule 31 and Rule 67 are practically and substantially the same. Rule 31 specifically refers to questions and Rule 67 to speeches. Under both the Rules we have been prevented from raising a matter in respect of which a judicial decision is pending. Therefore, both the rules are the same. If we are to argue that under Rule 67 (i) we should not refer to matters like judicial enquiry—I come to the most important point—then there must be another sub-rule in the same rule dealing with matters coming under *sub judice*. Only in rule 31 relating to questions, this point has been elaborated at greater length hewreas in Rule 67 relating to speeches it has been mentioned only that we should not give our opinion or refer to a matter on which a judicial decision is pending. Now

முற்பகல் 11-30

we have to see whether a judicial enquiry is a matter that comes under the purview of a matter on which a judicial decision is pending and whether both the matters are the same. On this particular point, I would like to have a very clear-cut answer.

After all, I may not take more than five minutes. Let us have the matter cleared so that hereafter we may not have any trouble. What is a judicial enquiry? It is an enquiry carried on under the Commissions of Inquiry Act, 1952. The person presiding over the commission accidentally happens to be a Judge. Just because a Judge happens to head the commission, it does not become a proceeding in a court of law. It is only to facilitate the conduct of the enquiry that he is clothed with the powers under Section 4 of the Act. He can summon witnessess, call for documents and receive evidence on affidavits. On the basis of a finding in a judicial enquiry even a *prima facie* case cannot be made out and the Members cannot be prevented from speaking.

I do not want to take much of the valuable time of the House. The Commissions of Inquiry Act is a Central Act of 1952. Section 3 of the Act reads :

"The appropriate Government may, if it is of opinion that it is necessary so to do and shall, if a resolution in this behalf is passed by the House of the people or as the case may be the Legislative Assembly of the State by notification in the Official Gazette, appoint a Commission of Inquiry for the purpose of an inquiry into any definite matter of public importance." Unless the notification is published in the official gazette, the judicial enquiry does not begin operation. Where a commission is appointed merely to investigate and record its findings and make recommendations without any power to enforce them, the inquiry or the report cannot be looked upon as judicial inquiry in the sense of its being an exercise of judicial function properly so called. [AIR Manual (Civil and Criminal) 2nd Edition, Volume 3]. A fact finding Commission appointed by the



Government and governed by the provisions of this Act is not a Court within the meaning of Contempt of Courts Act, 1952. This is a matter which will be coming up endlessly for another four years. Hence I want the position to be cleared.

Section 4 only clothes the Commission with certain powers of a Civil Court but does not confer on it the status of a Court. It is only under sub-section (4) of section 5 that the Commission is deemed to be a Civil Court and sub-section (5) imparts to the proceeding before it the character of a judicial proceeding. However these provisions only create a fiction which cannot extend the purpose for which it is created.

It would not be correct to contend that the expression "the Commission shall be deemed to be a Civil Court" occurring in Section 5 (4) is full and complete in itself and what follows it only denotes the limitation on the full-fledged status and powers of a Civil Court that the Commission would otherwise have possessed. Regarding the sub-section as a whole it is clear that under the Commissions of Inquiry Act, 1952, the Commission is fictionally a Civil Court only for limited purposes enumerated in the sub-section.

The term "Court" has not been defined in the Contempt of Courts Act, 1952. The Act, however, does contemplate a "Court of Justice" which as defined in Section 20, Penal Code 1860 denotes "a Judge who is empowered by law to act judicially".

The least that is required of a Court is the capacity to deliver a "definitive judgment" and unless this power vests in a tribunal in any particular case, the mere fact that the procedure adopted by it is of a legal character and it has the power to administer on oath will not impart to it the status of a Court.

Judged by this standard, a fact finding Commission appointed by the Government and governed by the provisions of the Commissions of Inquiry Act, 1952 is not a Court within the meaning of the Contempt of Courts Act, 1952.

I have given extensive evidence to prove that these rules which are practically the same do not operate as regards the Contempt of Courts Act. The term 'judicial enquiry' itself is a fiction. It is called a judicial enquiry because a Judge happens to head it. In fact I can give a number of instances where M.L.As. have made statements after a Commission of Inquiry has been appointed. I do not want to make this discussion tedious. Even when there is a judicial enquiry under the Commissions of Inquiry Act, the House must be given full power to discuss so that the feelings of the public can be placed before the House.

Even the Commissioner of Police himself has made a statement after the Commission has been appointed. It is published in 'The Mail' of 28th March 1968.

"Mr. Kuppuswami said that no student was hit by bullets. The Sentry who fired to keep off the crowd in the Vepery Police Station had only pellets in his gun".

Subsequently 'The Mail' issued a contradiction saying that the statement published in 'The Mail' of March 28 in this regard had been wrongly attributed to the Commissioner of Police. If it did not emanate from the Commissioner of Police, it must have emanated from somebody else. Let us not hereafter prohibit the right of member to speak on this issue. Yesterday I was completely denied a chance to say what I wanted to say. I request the Speaker to reconsider his decision. As the Judicial Enquiry under the Commissions of Inquiry Act is not like a proceeding before a Court, we should assert our right to discuss threadbare and decide that the Contempt of Court Act does not apply. I request the Speaker to give a ruling on this point of order.

Mr. SPEAKER: Whether it is a court or a tribunal or a quasi-judicial body, whether its judgment would be a judgment or merely an award, these are things which do not make a very great deal of difference. The sum and substance of what you say is that the judicial enquiry ordered by the Government is not a judicial enquiry. The arguments which you advanced now, are the same arguments which I advanced in the High Court, when there was a charge against me. The argument went on for a day, and ultimately I lost the case. Here also we can argue for one full day and still we will come to the same conclusion. If the hon. Member wants to discuss, we can discuss in my Chamber and not take up the time of the House.

Dr. H. V. HANDE: I do not know what case the Speaker is referring to. Probably the Speaker has not argued as effectively as I argued to-day.

The Chief Minister has got the right to make statements about which we are happy. When the Chief Minister makes a statement, we have got a right to express our views. You are giving extraordinary powers to the Chief Minister which we have not got. A matter on which judicial decision is pending and a matter which is *sub judice* are not the same.

Mr. SPEAKER: As for the first part, the hon. Chief Minister will give the reply. I have got to limit myself within the scope of the rules.



So, the hon. Member need not devoate further time on that aspect of the matter. I will say that I confirm what I have stated, that even when the possibility of enquiry arises we should refrain from making comments on the matter.

Dr. H. V. HANDE: Sir, on a point of order. It is really surprising that in spite of the clear-cut explanation I have given that the matter has not been taken up in a Court of law and it is only referred for a judicial enquiry, you are still holding to your view. Just because you are in the Chair, can you prevent us from expressing our views and can our powers be crippled? Sir, my only request to you is to be considerate to us. I again say that it is not *sub judice* and it is only an ordinary enquiry to get at the facts. The Government want to collect facts and there is no question of adjudication or judicial decision at all. They have appointed more or less a commission to collect the facts and they are the agents of the Government. Therefore, my only request is that you may kindly re-examine the matter. I again point out that a judicial enquiry is not a matter which comes under *sub judice*. The Government have appointed a person and in this case he happens to be a District Judge. Otherwise, he may be a retired High Court Judge and he may be even a High Court Judge. Just because a Judge happens to conduct that enquiry, can we be prevented from speaking on that? So I request you to reconsider the matter.

Mr. SPEAKER: I have allowed a great deal of latitude to the hon. Member. Actually a point of order should be raised only on a matter immediately before the House. This matter is not immediately before the House.

திரு. எம். சுரேந்திரன்: சார், நான் கொடுத்திருக்கிற உரிமைப் பிரச்சினை சம்பந்தமாக, இன்றைக்குச் சட்ட சபை ஒத்தி வைக்கப் படுவதாலும், பிறகு கூடுவதற்கு நாளாகும் என்பதாலும், சபா நாயகர்மீது தவறான முறையில் பிரசுரிக்கப்பட்டு, பரவலாக வினியோகிக்கப்பட்டு இருப்பதால், அந்த உரிமைப் பிரச்சினையை எந்த நாளில் எடுத்துக்கொள்ள முடியும் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமைப் பிரச்சினைபற்றி உரிய நேரத்தில் அறிவிப்புக் கொடுத்து விட்டீர்கள். அதன் மீதான முடிவு உரிய காலத்தில்தான் வழங்கமுடியும். அது என்னைப்பற்றி இருப்பதால், நானே தீர்ப்புச் சொல்வது என்பது சரியாக இருக்காது. உரிய காலத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

## 5. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

### (i) சென்னை நகரில் மாணவர்—அரசு போக்குவரத்துத் துறைத் தொழிலாளர் கலவரத்திற்குப்பின் அமைதியை நிலைநாட்டும் முயற்சியைத் தடுத்தல்

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டப் பேரவையின் 42-வது விதியின்படி கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்கச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கக் கோரி முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன்.

"சென்னை நகரில் மாணவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட குழப்பத்தினால் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டுள்ள இந்தச் சமயத்தில், அமைதியை நிலைநாட்ட தீவிர முயற்சி சர்க்கார் எடுத்து வருவதைத் தடுக்கும் முறையில், சமூக விரோத சக்திகள் தலையிட்டிருப்பதால் ஏற்பட்டுள்ள ஆபத்து".

சார், இன்றைக்கு இரண்டு மூன்று நாட்களாக, இந்த நகரத்திலே மாணவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள, சச்சரவு காரணமாக, அது மேலும் தீவிரமாகப் போகாத அளவிற்குத் தடுத்து, நிறுத்தி, அமைதியை நிலைநாட்டுவதற்காக வேண்டி, இதே அவையில் தீர்மானம் போட்டும், ஏகமனதாக எல்லா அரசியல் கட்சிகளும் ஏற்றுக் கொண்டும், ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் மேலும் அமைதி நிலைத்து விடக்கூடாது என்ற முறையில் அமைதிக்குப் பங்கம் உண்டாக்கும் தன்மையில், கலவரத்தை உண்டாக்கும் தன்மையில், தூண்டிவிடக்கூடிய தன்மையில் இருக்கிறது என்பதை இன்றைக்கு ஒரு சில பத்திரிகைகளைப் பார்க்கும் நேரத்திலேயும் அல்லது இன்றைக்கு ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் வாதங்களிலிருந்தும் உணர்ந்து கொள்ள முடிகிறது. குறிப்பாக, இன்றைக்குச் சொல்ல வேண்டுமென்றால், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் காலையிலிருந்து நடந்து கொண்டுவரும் முறையிலிருந்து, அந்த அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் அளவில் இருக்கிறதே அல்லாது வேறொன்றும் இல்லை. அதற்குத் தகுந்த சக்திகளைத் தூண்டிவிடக்கூடிய தன்மையில் இருந்து வருகிறதேயல்லாது, அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்று நாங்களும் ஒத்துக்கொள்கிறோம் என்று ஒரு பக்கத்திலே சொல்லிவிட்டு, இன்றைக்கு அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தக்கூடிய தன்மையிலேதான் செயல்படுகிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். உண்மையிலேயே, நான் சொல்வேன்,



ஹைதராபாத்தில் போட்ட தீர்மானத்தின் அடிப்படையில், காங்கிரஸ் அல்லாத ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்பதுதான் அவர்களுடைய நோக்கம் (ஆரவாரம்). அமைதிக்குப் பங்கம் உண்டாக்க வேண்டுமென்பதுதான் அவர்களுடைய நோக்கம். ஆகவே, இன்றைய தினம், சர்க்காரைத் தாழ்மையோடு கேட்டுக் கொள்வேன், அமைதியை நிலைநாட்டுவதில் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டும். தீவிரமாகக் கவனம் செலுத்தப்படவேண்டும் என்று சொல்கிற நேரத்தில், இன்றைக்கு அமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும் என்று ஒரு பக்கத்திலே சொல்லுவதும், அதே நேரத்தில் ஒரு பத்திரிகையில் அமைச்சர் திரு. கருணாநிதி ராஜினாமா செய்துவிட்டார் என்பதும், அதை மறுத்து இன்னொரு பத்திரிகையில் வருவதும், இவற்றையெல்லாம் பார்க்கக்கூடிய நேரத்தில், உண்மையிலேயே சர்க்கார் இந்த நேரத்தில், உறுதியாக இருக்கவேண்டும், உறுதியாகச் செயல்படவேண்டும், எதற்கும் அஞ்சக்கூடாது என்பதைத் தாழ்மையோடு (பலத்த ஆரவாரம்) தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு அமைதியை நிலைநாட்டுவதில் சர்க்கார் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்றும், அதற்கு இடையூறாக இருப்பவர்களைக் கண்டுபிடிப்பதில் தீவிரமாக இருக்க வேண்டும், தீவிர முயற்சி எடுக்க வேண்டும். அதற்காக வேண்டி எவ்வளவு பெரிய எதிர்ப்பு வந்தாலும், அதற்கு எவ்வளவு எதிர்ப்புச் சக்திகள், சமூக விரோத சக்திகள் எழுந்தாலும், அத்தனையையும் அழித்துவிட முயற்சி எடுக்க வேண்டும். அரசைக் கவிழ்க்க வேண்டி, இப்படிப்பட்ட சக்திகளைத் தூண்டிவிடுகிறவர்கள், இன்றைக்கு உண்மையிலேயே நியாயமாக, நேர்மையாக, அமைதியாக இருக்கக்கூடிய தொழிலாளர்களையும், மாணவர்களையும், தூண்டிவிடக்கூடியவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் (பலத்த ஆரவாரம்) என்பதை இந்த நேரத்திலே—இப்பொழுது காங்கிரஸ் நண்பர்கள் அவையில் இல்லாமல் போய்விட்டார்களே என்று வருந்தினாலும் கூட—சொல்ல விரும்புகிறேன்.

ஆகவே, இன்றைக்கு அமைதியை நிலைநாட்டுவதில் மிகப் பெரிய பொறுப்பு சர்க்காருக்கு மட்டுமல்ல, எங்களுக்கும்கூட இருக்கிறது. இது வரையில் என்ன பேசிவந்தார்கள், இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி இந்த ஆட்சிக்கு ஆதரவு கொடுப்பதுபோலப் பாசாங்கு செய்து இதைக் கவிழ்க்க சதி செய்கிறார்கள் என்றார்கள். இப்பொழுது தெரிகிறது. 'ஆடு நனைகிறது என்று ஓநாய் கூவி அழுவது என்பதுபோல, இவர்களுடைய வார்த்தைகள், வாதங்கள், போக்குகள் அவ்வளவும் இருக்கின்றன. ஆகவே இன்றைக்கு அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்கிற தன்மையில், நல்ல முறையில் திட்டமிட்டுச் செயல்படவேண்டும் என்பதற்காக இந்தச் சபையில் அலுவல்களை ஒத்திவைத்து விவாதம் நடத்த

வேண்டும் என்றும், அதற்காகச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என்றும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வந்திருக்கின்ற இந்தப் பிரேரணையில், எனது ராஜினாமா பற்றியும் குறிப்பிட்டிருக்கிற காரணத்தால், அதனையொட்டி மாண்புமிகு முதல் அமைச்சர் பதிலளிக்கக் கடமைப்பட்டிருந்தாலும், என்னைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்ற காரணத்தால், நான் அவையின் முதல்வருடைய அனுமதியின் பேரில், பதிலளிக்க முன் வந்திருக்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானத்தில் மாணவர்களைப் பயன்படுத்திக் கொண்டு, சமூக விரோதிகள் இங்கே இருக்கும் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு வேண்டிய சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அது முற்றிலும் புறக்கணிக்கத் தக்க கருத்தல்ல. அப்படிப்பட்ட நிலைகள் உருவாகி வருவதையும் இந்த அரசு கூர்ந்து கவனித்து வருகிறது. என்னென்ன காரியங்கள் நடைபெறுகின்றன, யார் யார் என்னென்ன செய்கிறார்கள் என்பதையெல்லாம் இந்த அரசு கவனிக்காமல் இல்லை. அது பற்றிய தகவல்கள் அரசுக்கு வராமலும் இல்லை. மாணவர்களைப் பயன்படுத்திக்கொண்டு இந்த அரசைக் கவிழ்த்துவிடலாம் என்று எண்ணுவார்களானால், மாணவர்கள் அவ்வளவு ஏமாளிகள் அல்ல என்பதையும் நாம் நன்றாக உணரவேண்டும். இன்றையதினம் ஏற்பட்டிருக்கின்ற விரும்பத்தகாத, அசம்பாவிதமான நிகழ்ச்சிகளின் காரணமாக மாணவ நண்பர்கள் உணர்ச்சிவயப்பட்டிருக்கிறார்கள். பல உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளதைப்போல் மாணவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டிருக்கின்ற தகராறு, மாணவ, தொழிலாளர் சமுதாயத்தினரிடையே மூட்டிவிடப்பட்ட செயலாகும். நண்பர்கள் குறிப்பிட்டதைப்போல் இந்த இரு சமுதாயத்தினரும் ஒருவரையொருவர் தாக்கிக் கொள்கிற சூழ்நிலையை, ஒருவரையொருவர் கண்டித்து வசைமாரி பொழிந்துகொள்கின்ற சூழ்நிலையை மாற்றுவதற்கு அரசியல் தெளிவுபடைத்தவர்கள் நாட்டிலே அமைதியை உண்டாக்க வேண்டுமென்று சொல்வது யாராலும் மறுக்க முடியாத ஒன்று. ஆனால், கடந்த இரண்டு மூன்று நாட்களாக நடைபெற்ற சில பேச்சுக்கள், சில கூட்டங்களிலே என்னைப்பற்றி எடுத்து வைத்து கருத்துக்களைத் திரித்துக் கூறி, பத்திரிகைகளில்—குறிப்பாக காங்கிரஸ் ஏடுகளில்—வெளியிட்டும், துண்டறிக்கைகளை வெளியிட்டும் இருக்கிறார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன் கோட்டை வாயில் வெளிப்புறத்தில் கூடிய தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை முன்வைத்து, அவைகளுக்குத் தீர்வு காண வேண்டும், 'நாங்கள் மாணவர்களால் பாதிக்கப்பட்டிருக்கிறோம்' என்று கூறியபோது, உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும், சட்டமேலவை உறுப்பினர் திரு. எத்திராஜ் அவர்களும் தொழிலாளர்களிடத்திலே முதலில் போய்ப் பேசினார்கள். அதற்குப் பிறகு பொதுப் பணித் துறை அமைச்சர் என்ற முறையில், குறிப்பாக போக்குவரத்துத் துறை அமைச்சர் என்ற முறையில், நான் வந்து தொழிலாளர்களைச் சந்தித்து ஆறுதல் கூற வேண்டுமென்று அவர்கள் சொன்னபிறகு, நான் தொழிலாளர்களிடத்தில் போனேன். நான் அவர்களிடையே பேசிய நேரத்தில் கூறப்பட்ட கருத்துக்கள்தான் இன்று திரித்து வெளியிடப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்கள், "மாணவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறீர்களே, எங்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுகளை விடுகிறீர்களே, இது நியாயமா?" என்று கேட்டார்கள். அதற்குப் பதிலளிக்கையில் நான், "நீங்கள் சரியான தகவலைக் கூறவில்லை. உங்கள்மீது கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டன என்று பேசப்படும் இதே நேரத்தில், மாணவர்கள் மீதும், வேறொரு பகுதியில் ஒரு போலீஸ் ஸ்டேஷனிலே ஏற்பட்ட கலவரத்தின் காரணமாக, துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது" என்ற வார்த்தையை அவர்களிடத்தில் சொன்னேன். ஆனால் மருத்துவத் துறையிலே இருக்கின்ற மாணவர்களின் பெயரால் வெளியிட்ட துண்டறிக்கையில், நான் பேசிய வாசகம் உண்டா? 'தொழிலாளர்கள்மீது தடியடிப் பிரயோகம் செய்யச் சொன்னேன். ஆனால் இப்போது மாணவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படி உத்தரவிட்டிருக்கிறேன்' என்று நான் சொன்னதாக மிகத் தவறான தகவல் தரப்பட்டிருக்கிறது. முதலிலே இந்த இரண்டு ஆணைகளையும் பிறப்பிக்கும் அதிகாரம் எனக்கு இருக்கிறதா என்பதே பிரச்சனைக்குரிய ஒன்று. நான் அந்த அளவில் பேசக்கூடிய இயல்பு படைத்தவன் அல்ல, இந்த அரசும், இந்த அமைச்சரவையும் அப்படிப்பட்ட இயல்பு படைத்தது அல்ல என்பதை மாணவர்கள் இந்த நேரத்தில் உணராவிட்டாலும் காலப்போக்கிலே உணருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



சமூக விரோத சக்திகளைச் சேர்ந்த சிலர், மாணவர்கள் தங்கியிருக்கும் கல்லூரி விடுதிகளுக்குச் சென்று, மாணவர்களைத் தூண்டிவிடுகிற நிலைமைகளின் காரணமாக நாங்கள் நொடித்துப் போய்விடவில்லையென்பதையும் அவர்கள் உணருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அறிஞர் அண்ணா அவர்களின் உருவம் போலவும், என்னுடைய உருவம் போலவும் அமைக்கப்பட்ட கொடும்பாவியை சிலர் எரித்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது. நேற்றையதினம் ஸ்டான்லி மெடிகல் காலேஜியில் பொதுப்பணித்துறை அமைச்சருடைய கொடும்பாவி ஒன்று கொளுத்தப்பட்டது. கொளுத்தப்பட்டது மட்டுமல்ல. என்னுடைய மனைவிபோல மாணவர் ஒருவருக்குப் பெண் வேடம் போட்டு, கொடும்பாவி எரிந்து சாம்பலான பிறகு, பெண் வேடம் போட்ட நண்பர் தாலி அறுக்கின்ற நிகழ்ச்சி நடைபெற்றது.

இதை நான் உள்ளபடியே மகிழ்ச்சியோடு வரவேற்கக் காரணம், இந்தத் தகுதியைவிட சிறந்தது எனக்கு வேறு இல்லை. மாணவர்கள் என்னுடைய பெயரால் கொடும்பாவி கொளுத்துவது மட்டுமல்ல, அவர்கள் உயிரோடு என்னைக் கொளுத்த வேண்டுமென்று விரும்பினாலும்கூட நான் அவர்களிடத்திலே நேராகச் சென்று, அவர்கள் என்னைக் கொளுத்துவதையே சந்தோஷமாக வரவேற்பேன் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இப்படிப்பட்ட செயல்களைத் தூண்டி விடுகின்ற காரணத்தால், இந்த அமைச்சரவையைக் கலைத்து விடலாம், இந்த அரசைக் கவிழ்த்துவிடலாம் என்று சமூக விரோதிகள் கனவு கண்டுகொண்டிருப்பார்களானால் அது நிச்சயமாகப் பலிக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நண்பர் திரு. கோதண்டராமன் போன்ற உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் அப்படிப்பட்ட சந்தேகம் ஏற்படத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் தொழிலாளர்களின் காலில் விழலாமா? அவர்களின் கையைப் பிடித்துக் கொள்ளலாமா—கையை அல்ல, காலைப் பிடித்துக் கொள்ளலாமா? என்று பல வட்டாரங்களில் பேசப் படுகின்றன. அதை வைத்துக் கொண்டு, நான், தொழிலாளர்களுக்கு உதவி செய்து, மாணவர்களைத் தாக்கச் சொன்னேன் என்று தவறான முறையில் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. இந்த மன்றத்திலேயே, ஜனவரி 23-ந் தேதி இந்தி ஒழிப்புத் தீர்மானம் வந்தபோது, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், "மாணவர்கள் சொல்வதையெல்லாம் கேட்பதா?" என்று ஆத்திரத்தோடு கேட்டார்கள். அதற்கு நம்முடைய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், "ஆமாம், மாணவர்களின் பேச்சை நான் கேட்பேன். மாணவர்கள் எங்கள் ரத்தத்தின் ரத்தம், சதையின் சதை" என்று அளித்த பதிலை, இன்றையதினம் கூக்குரல் ஏற்பட்டிருக்கிற காரணத்தால், மாணவர்கள் ஒருவேளை மறந்திருக்கலாம். ஆனால் மாணவர்கள், அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நிச்சயம் மறக்கமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலாளர்கள் அங்கத்தையும், மாணவர்கள் அங்கத்தையும் சரிநிகர் சமானமாக வைத்து இந்த அரசு பாதுகாக்கும், ஒரு தலைப்பட்சமாக நீதியை வழங்காது, சமூகவிரோத சக்திகள் கண்டுபிடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய ராஜினாமாப்பற்றிக் கேட்டார்கள். ராஜினாமா போன்ற நாடகங்கள் ஆடுவதை நான் எப்போதும் விரும்புபவன் அல்ல. அந்த வார்த்தைகள் அவர்களோடு இருக்கட்டும். நான் ராஜினாமா செய்ய வேண்டுமென்று, இந்த அரசேகூட ராஜினாமா செய்ய வேண்டுமென்று தமிழ்ச் சமுதாயம்



விரும்பினால், இந்த அமைச்சரவை ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, நண்பர் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை வலியுறுத்தாமல் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒற்றிவைப்புத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் படுகிறது.

## (ii) சென்னை நகரிலும் மாவட்டத் தலைநகரங்களிலும் டாக்டர்கள், ஹவுஸ் சர்ஜன்கள் வேலைநிறுத்தம்

**திரு. ஆ. கு. சுப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 42-வது விதியின்கீழ், அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த கீழ்க்கண்ட காரியத்தைக் குறித்து விவாதிக்கக் கோரி முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன் :

"சென்னை நகரிலும், மாவட்டத் தலைநகரங்களிலும், டாக்டர்கள், ஹவுஸ் சர்ஜன்கள் வேலைநிறுத்தம் செய்து வருவதால் நோயாளிகள், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் இது பற்றி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அவை முன்னவர் அவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பிரச்சினையைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்வு காண இருக்கிறார்கள். நேற்றும், அதற்கு முன்னாளும் ஹவுஸ் சர்ஜன்களும், அசிஸ்டெண்ட் சர்ஜன்களும் வேலை நிறுத்தம் செய்ததன் காரணமாகப் பொது மக்களுக்குப் பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. முதலமைச்சர் அவர்களும், மருத்துவத் துறை அமைச்சர் அவர்களும் இதில் தீர்வு காண முற்பட்டிருக்கிறார்கள். சிவில் சர்ஜன்கள் அத்தனைபேரும் முழுநேரமும், பல்வேறு அசிஸ்டெண்ட் சர்ஜன்களும் இருந்து எமர்ஜென்சி கேசாக இருந்தால் மட்டும் கவனித்து, சாதாரண கேசுகளை ஒதுக்கி வருகிறார்கள். இப்போது ஹவுஸ் சர்ஜன்களும், மற்றவர்களும் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து வேலையில் ஈடுபட வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக் கொள்வதற்காக, நம்முடைய முதலமைச்சர் அவர்களும், மருத்துவத் துறை அமைச்சர் அவர்களும் அரசாங்கப் பெரிய மருத்துவ மனைக்குச் சென்றிருக்கிறார்கள். தக்க நடவடிக்கைகளை உரிய முறைப்படி மேற்கொள்ள முதலமைச்சர் அவர்களும், மருத்துவத் துறை அமைச்சர் அவர்களும் ஈடுபட்டு, முயன்று வருகிறார்கள். ஆகவே, இதுகுறித்து இந்த அவையில் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையில் இதைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் இதே நேரத்தில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெரிய மருத்துவ மனைக்குப் போய் இருப்பதாகச் சொன்னார்கள். திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை வற்புறுத்த மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

பேரவை அனுமதியுடன் ஒற்றிவைப்புத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

### (iii) சென்னை நகரில் டாக்டர்கள் வேலை நிறுத்தம்

நண்பகல் 12-00

**திரு. க. ர. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 42-வது விதியின்படி கீழ்க்காணும் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைபற்றி விவாதிக்கச் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கக் கோருகிறேன் :—

"சென்னை நகரில் மாணவர் விடுதிகள் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாகி, மாணவர்களுக்குப் பாதுகாப்புக் கோரி டாக்டர்கள் வேலை நிறுத்தம் செய்திருப்பது."

டாக்டர்கள் வேலைநிறுத்தம் செய்திருப்பதைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் இப்போதுதான் அவர்களுடன் விவாதம் நடத்தப் போயிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. நான் அதைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் மாணவர்களைப் பொறுத்தவரையில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நேற்று இரவு நான் இரண்டொரு கல்லூரி விடுதிகளுக்குப் போய் இருந்தேன். அங்கே மாணவர்கள் மிகவும் பயந்து, தங்களைக் காப்பாற்றிக் கொள்ள கையில் தடிகளை வைத்துக்கொண்டு இரவு பூராவும் தூங்காமல் இருப்பதாகச் சொன்னார்கள். குறிப்பாக வெங்கடேசுவரா ஹாஸ்டலில் சர்க்காருக்கு எதிரான போஸ்டர்களை அவர்கள் ஒட்டியிருப்பதாகவும், அதை பக்கத்தில் உள்ள பொதுமக்கள் கண்டிப்பதால் அதை எடுத்துவிடவேண்டுமென்றும், இல்லையென்றால் பாதுகாப்பு கொடுக்க முடியாது என்றும் போலீசார் சொன்னதாகச் சொல்கிறார்கள். இருந்தும் போஸ்டர்களை வைத்திருக்கிறார்கள். அது எப்படி இருந்த போதிலும் நான் இரண்டு பிரச்சினைகளைச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

ஒன்று, மாணவர்கள் மனதில் ஏற்பட்டிருக்கிற பயத்தைத் தீர்த்தாக வேண்டும். அது எப்படி உருவாகியிருக்கிறது, யாரால் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது அல்ல இப்போதுள்ள பிரச்சினை. அவர்கள் மனதில் ஏற்பட்டிருக்கிற பயத்தைத் தீர்த்தாக வேண்டும்.

இரண்டாவதாக 25-ஆம் தேதியிலிருந்து 30-ஆம் தேதிவரை 6 நாட்கள் ஆகிவிட்டன. சகஜ நிலைமை வருவதற்கு இன்னும் பதினைந்து நாட்களாவது ஆகக்கூடும் என்று கருதுகிறேன். இந்த நிலையில் மாணவர்களால் எப்படிப் படிக்க முடியும், எப்படிப் பரிட்சை எழுதப் போகிறார்கள் என்று தெரியவில்லை. ஏப்ரல் 25-ம் தேதி முதல் 30-ம் தேதிக்குள் சர்வகலாசாலைப் பரிட்சைகள் நடைபெற இருக்கின்றன என்று நினைக்கிறேன். இப்போது வீணாகி விட்ட 15 நாட்களை எப்படி ஈடு செய்ய முடியும் என்று தெரியவில்லை. ஆகவே இந்த அரசாங்கமானது பரிட்சை ஆரம்பிக்க இருக்கிற தேதியில் இருந்து ஒரு 15 நாட்கள் ஒத்திவைத்து பரிட்சையைத் தொடங்க ஏற்பாடு செய்தால் அது மாணவர்களுக்கு மிகவும் அனுகூலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதுபற்றி விவாதிக்க இந்த அவை நடவடிக்கையை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல மாணவர்களின் மனதில் ஏற்பட்டிருக்கிற பயத்தைப் போக்க எந்த எந்த வகையில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமோ அந்த அந்த வகையில் பாதுகாப்பு அளிக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. இப்போது இருக்கிற சூழ்நிலை கெடாமல், அமைதியும், ஒழுங்கும் பாதுகாக்கப்படும். பலவிடங்களில் அமைச்சரவையையும், அரசையும் கேவலப்படுத்துகின்ற வகையில் எழுதி வைத்திருக்கிறார்கள் என்றாலும், இரண்டு சாராருக்கும் மோதல் ஏற்படாத அளவுக்குக் காவல் துறையினர் அங்கங்கே பாதுகாப்பாக இருக்கிறார்கள். மாணவர்கள் பஸ்ஸைப் பிடித்து வைத்துக் கொண்டபோதும்கூட, அவர்கள் விருப்பப்படியே, அன்று பூராவும் இருக்கவிட்டு, சமாதானமான முறையில், மறுநாள்தான் எடுத்து வந்திருக்கிறார்கள். அவர்கள் விருப்பத்திற்கிணங்க இரவு முழுவதும் போலீஸ் துறையினர் பாதுகாப்பாக காவல் புரிந்து வருகிறார்கள். அவர்களுடைய பயம் அகற்றப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பரிட்சையை ஒத்திவைப்பது பற்றி பல்கலைக்கழகம்தான் முடிவு செய்ய வேண்டும். இன்று கல்லூரி முதல்வர்களை எல்லாம் அழைத்துப் பல்கலைக் கழக துணைவேந்தர் பேச இருக்கிறார். அவர்களுடன் கலந்தாலோசித்து முடிவு இன்று மாலையில் அறிவிக்கப்படலாம். எப்படி இருந்தாலும் அதுபற்றி அவர்கள் தான் முடிவு செய்யவேண்டுமே தவிர, இந்த அவையை ஒத்தி வைத்து நாம் விவாதிப்பதற்கு ஒன்றும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆ. கு. சுப்பையா, திரு. க. ர. நல்லசிவன், திரு. செ. பாலசுப்பிரமணியன் ஆகியோர் கொடுத்துள்ள ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

### (iv) நெல்லை, இராமநாதபுரம் மாவட்டங்களில் மிளகாய் வற்றலுக்கும், பருத்திக்கும் நியாயமான அடிப்படை விலையை நிர்ணயித்தல்

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 42-வது விதியின்படி கீழ்க்கண்ட அவசரமும் பொது

முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன் :—

“நெல்லை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பிரதான பணப் பயிரும் ஏற்றுமதி மூலமாக சர்க்காருக்கு அன்னியச் செலாவணி சம்பாதித்துக் கொடுக்கும் மிளகாய் வற்றலும், அதி முக்கிய மூலப்பொருளான பருத்தியும் இவ்வாண்டு விலை மிகவும் குறைந்த நிலையிலும் கொள்வாரற்றுக் கிடப்பதால் மேற்கண்ட பொருள்களுக்கு நியாயமான அடிப்படை விலை நிர்ணயித்து சர்க்காரே கொள்முதல் செய்யவேண்டும் என்றும் மார்க்கெட்டிங் சொசைட்டிகளுக்கு மட்டிலுமே மிளகாய் வற்றல் ஏற்றுமதி லைசென்ஸ் வழங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.”

அதோடு, இந்த விஷயம் எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொல்ல விரும்புகிறேன். அந்த இரண்டு வட்டாரத்தையும் பொறுத்தமட்டில் விவசாயிகளுக்கு இந்தப் பணப் பயிர் மூலம் வரக்கூடிய வருவாய் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு ஒரு க்விண்டால் பருத்தி 250 ரூபாய் என்றால் இவ்வாண்டு ரூ. 140, ரூ. 150 ஆகக் குறைந்திருக்கிறது. அதுபோலவே வற்றல் ரூ. 600, ரூ. 700 விற்றது என்றால் இன்றைக்கு பழைய வற்றல் ரூ. 100-க்கும், புதிய வற்றல் ரூ. 140-க்கும் மேல் கேட்கவில்லை. வாங்கக்கூடிய ஆட்களும் வருவதில்லை. கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டி மூலமாக முன்பு வெளிநாடுகளுக்கு அனுப்பினார்கள். இப்போது ஒரு தனி நபருக்கு ஏற்றுமதி லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருப்பதால் அவர் அதிக விலை கொடுத்து வாங்க—போட்டி இல்லாத காரணத்தினால்—முன்வரவில்லை. இந்த இரண்டு பொருள்களுமே பணப் பயிர்களாக இருக்கின்றன. அதுவும் விற்காமல் இருப்பதால் விவசாயிகள் வாங்கியிருக்கக்கூடிய கடனைக்கூடத் திருப்பிக் கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அரசாங்கமே இவற்றை வாங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டும். மில்களுக்குப் பருத்தியைக் கொடுக்க வேண்டும். இதைப்பற்றி விவாதிக்க இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கொண்டுவந்துள்ள காரியம் அரசினரின் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்டதாகையால் அதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

அடுத்து திரு. டி. மார்டின், திரு. கே. விநாயகம் அவர்கள் கொண்டுவந்த தீர்மானங்கள், அவர்கள் இருப்பிடத்தில் இல்லாத காரணத்தினால், பேரவை அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.





(v) இராஜபாளையம் ஜானகிராம் ஸ்பின்னிங் மில் தொழிலாளர்களுக்குச் சம்பளம், உணவு ரேஷன் அளிக்கப்படாமை

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவரவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 42-வது விதியின்கீழ் அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த கீழ்க்கண்ட விஷயத்தைப்பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கையை ஒத்திவைக்கக் கோரி முன்னறிவிக்கை கொடுத்துள்ளேன்:—

“இராஜபாளையம் ஜானகிராம் ஸ்பின்னிங் மில்லில் தொழிலாளர்களுக்குச் சம்பளம் பட்டுவாடா செய்யாமலும், உணவு ரேஷன் போடாமலும் சுமார் 300 தொழிலாளர்களின் குடும்பங்களின் நிலை.”

அதிகாரிகள் தலையிட்டுச் சொல்லியுங்கூட அவர்கள் கேட்கவில்லை. கண்டிப்பான முறையில் நிர்வாகத்தினர் வற்புறுத்தியும் கூட சாதாரண நிர்வாகத்திற்குப் புறம்பாக இப்பேர்ப்பட்ட நிலைமை இருப்பதால் இந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க இந்த அவை நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது அரசின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியம் ஆதலால் அனுமதி மறுக்கப்படுகிறது.

(vi) சென்னை மருத்துவக் கல்லூரி விடுதியில் ஏற்பட்ட சேதம், நட்டம், கால்நடைக் கல்லூரி, சி.என்.டி. இன்ஸ்டிட்யூட் இவற்றில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூடு

DR. H. V. HANDE : Sir, I move—

“That the business of this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely, the damage and loss of property to the Madras Medical College (Men's) Hostel and the shooting that took place in the Veterinary College Hostel and C.N.T. Institute at Vepery on 26th March 1968”.

The whole tragedy is in the Madras Medical College Hostel. The students were absolutely unconnected with the episode. They were living normally. But unfortunately some people came and stayed outside the Hostel. They wanted to take violent action. This was exactly at 10-45 p.m. on 25th March 1968. Buses were mobilised before the hostel students. At 11 p.m. pelting of stones started and two boys were injured. The Police arrived at 11-40 p.m. At that time the strength of the crowd outside the Hostel was only one hundred and in my opinion they could have been easily dispersed. At 12-30 a.m. four students returned from a late show and these were simply beaten. All their clothes were removed and burnt. In the meantime the Sub-Inspector made them get into the Police van and were admitted into the hospital. Between 2 a.m. and 5 a.m. the buses started moving out. We do not know wherefrom they came. At 5-30 a.m. there was sudden pelting of stones. They mobilised all their resources and the buses barricaded the entire area. What the C.I.D. were doing passes my comprehension. The people

[Dr. H. V. Hande] [1968 மார்ச் 30

intruded into the Hostel and an open fight took place and they damaged the entire property of the hostel. The crowd by this time swelled to 2,000. A few students ran for their lives. One student Paraschandmal had a fracture. There was a direct attack on the students within the hostel premises. This went on till about 8 a.m. The only silver lining in the cloud was that all the three conductors who were injured were properly looked after in the Post-Graduate Block. They were given milk and bread. No ambulance could come inside. At 9-30 a.m. the saloon and laundry were set fire to. An unsuccessful attempt to set the transformer on fire was made. Only at 11 a.m. the situation was under control. The students have a feeling that if timely action had been taken, the fight could have been averted. The whole thing has become so complicated. Political parties have began to take charge of the whole situation.

MR. SPEAKER: You should show how this matter falls outside the ordinary administration. You should not make a speech now.

DR. H. V. HANDE: I shall definitely expiain. I will link it up.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கீழே இது எப்படி வருகிறது என்பதைப்பற்றிய காரண காரியங்களைப் பற்றிச் சொல்லாமே தவிர முழுவதையும் பற்றிச் சொல்வது பொருத்தமாக இராது. ஆகவே அந்தக் காரியத்தைப் பற்றி மட்டும் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 50 (viii) )-இல்

The matter to be discussed must involve more than the ordinary administration of the law.

என்று இருக்கிறது பாருங்கள். அதைப்பற்றி மட்டும் சொல்லுங்கள்.

How this matter involves more than the ordinary administration of the law

என்று சொல்லுங்கள். அதற்குரிய காரணங்களைப்பற்றி மட்டும் சொல்லுங்கள்.

I have not yet given my consent.

DR. H. V. HANDE: I abide by the ruling of the Chair. What I want to stress is that this matter should be discussed properly.

MR. SPEAKER: You should make a distinction between the present stage and the discussion after the consent is given. If my consent is given, a time will be fixed for discussing the matter. This is not the time for discussion.



1968 மார்ச் 30]

DR. H. V. HANDE: The political party which objected to the Government not opening fire in Coimbatore when the students expressed their antipathy, persons belonging to the same political party are now asking why action was not taken against the Law College students. There was a feeling expressed by a number of persons in the Congress Party finding fault that the authorities had not opened fire on the Law College students. I was shocked to hear that they object to the Government for not opening fire and for not arresting Law College students. The Congress Party forgets that Law College students are victims and the members of the party are shedding crocodile tears. That is why I say the whole situation has been given a political colour. This is the most important point which I want to place before this House. Some persons found fault with the Government for not rounding up and beating the Law College students. They said this day before yesterday. The students are afflicted here. I cannot accept the Congress party's contention that Law College students should have been beaten. That is what they have been saying on 26th March. I object to that along with my friends. Students are also victims. Therefore I say that we should take a sympathetic attitude towards the students. A number of people have lost their watches and their properties and they cannot get them back. I request the Ministry to intervene and see how best we can make good the loss of property by the students of the Medical College and the Veterinary College. Certain facts placed before this House were not correct. Police people went into the Veterinary College and there were bullet marks. The Chief Minister said that the information he got was incomplete. I contend that it is incorrect. Therefore I request the Speaker to allow this adjournment motion. Then only we can have a healthy discussion to find out the measures by which we can give succour to them.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை பற்றி இந்த மன்றத்திலே பல வகைகளிலும் பல நேரங்களிலும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கலவர சூழ்நிலைபற்றி மாணவர்களுக்குப் பீதியளிக்காத வகையில் அவர்களுக்குப் பாதுகாப்புத் தர அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது, தொடர்ந்து அப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ளும். சேதங்கள் என்ன என்ன ஏற்பட்டன என்பதைப் பார்த்து அதற்கான நஷ்ட ஈடுகள் கொடுக்கப்படும் என்று ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குரிய நீதி விசாரணை நடப்பதன் மூலமாகப் பல்வேறு காரணங்கள், விளக்கங்கள், யார் யார் காரணம், எப்படி எப்படி என்பவையெல்லாம் விசாரணையின் மூலமாக வர இருக்கிற காரணத்தினாலே, அதன்பேரில் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதாலே, மாணவர்களுக்குப்

பாதுகாப்பு அளிக்கப்படும் என்ற காரணத்தாலே, இந்த அவை நடவடிக்கையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கூறிய காரணங்களை ஏற்று நான் அனுமதி மறுக்கிறேன்.

### 6. அரசினர் தீர்மானங்கள்.

#### (i) பேரவை விதி 41 (3) தளர்த்தப்படுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் 17 இருக்கின்றன என்ற காரணத்தாலே விதிகளைத் தளர்த்த வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சட்டப் பேரவையின் விதி 41(3)-ன்படி ஒரே கூட்டத்திலே இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களை எடுத்துக் கொள்வதற்குத் தடையுள்ளதை இன்று தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பு. செ. முத்துச்செல்வன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லை. ஆகையால் கவன ஈர்ப்புத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

### 7. கவன ஈர்ப்பு

#### (i) நெல்லை, இராமநாதபுரம் மாவட்டங்களில் நெசவாளர்களுக்குத் துயர் தணிப்பு

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவரவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசரமும் பொது முக்கியமுமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

“திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள பெரும்பகுதி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் துணித் தேக்கம் ஏற்பட்டு பாங்கில் கடன் வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு நெசவாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையும் அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதும்.”

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள பெரும்பாலான நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சரக்குகள் விற்பனையாகாமல் தேங்கியுள்ளனவென்றும், பெரும்பாலான நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகளிடமிருந்து நடைமுதல் மூலதனக் கடன்களைப் பெற இயலாத நிலையிலுள்ளனவென்றும் அதன் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனவென்றும் மதிப்பிற்குரிய உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார். துயர் தணிப்பு ஏற்பாடுகள் குறித்தும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.





திருநெல்வேலி, இராமநாதபுரம், மாவட்டங்களிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை, உற்பத்தி, விற்பனை, இருப்பு நிலவரம் முதலிய விவரங்களை அடியிற்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

மாவட்டத்தின் பெயர்—திருநெல்வேலி

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை—128.

| திங்கள். | உற்பத்தி. | விற்பனை. | இருப்பு. |
|---|---|---|---|
| | | (ரூ. லட்சத்தில்.) | |
| ஜனவரி 1967 | 7·13 | 8·74 | 10·65 |
| நவம்பர் 1967 | 8·15 | 2·09 | 5·49 |
| டிசம்பர் 1967 | 8·95 | 3·11 | 5·47 |
| ஜனவரி 1968 | 9·42 | 3·93 | 7·61 |

மாவட்டத்தின் பெயர்—இராமநாதபுரம்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை—52.

| திங்கள். | உற்பத்தி. | விற்பனை. | இருப்பு. |
|---|---|---|---|
| | | (ரூ. லட்சத்தில்.) | |
| ஜனவரி 1967 | 13·62 | 22·15 | 18·59 |
| நவம்பர் 1967 | 9·98 | 4·54 | 22·75 |
| டிசம்பர் 1967 | 11·36 | 5·06 | 28·49 |
| ஜனவரி 1968 | 11·97 | 22·26 | 21·06 |

திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நடை முதல் மூலதனத் தேவைகளுக்காக மொத்தம் ரூ. 45 லட்சம் கடன் வழங்கியது. மோசடிகளில் ஈடுபட்ட கடையநல்லூரிலுள்ள 13 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூ. 16 லட்சமும் மேற்சொன்ன 45 லட்ச ரூபாய் மொத்தக் கடன் தொகையில் அடங்கியுள்ளது. இது குறித்த புலன் விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்திய ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ள புதிய சட்ட திட்டங்களின் அடிப்படையில் போதிய ஈடுகாட்ட இயலாததால் 22 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ரொக்கக் கடன் கணக்கில் செயல்பட முடியவில்லை. நடைமுதல் மூலதனம் வழங்கும் இந்திய ரிசர்வ் வங்கி 1—4—1966 முதற்கொண்டு இத்தகைய உதவிக்கான சட்ட திட்டங்களைக் கண்டிப்பாக்கியுள்ளது. இதனையொட்டி, “தறி அடிப்படையில்” இதுவரை நடைமுதல் மூலதன உதவி வழங்கப்பட்டிருக்க, இப்போது “உற்பத்தி அடிப்படையில்” நடைமுதல் மூலதனம் வழங்கப்பட வேண்டுமென மாற்றப்பட்டுள்ளது. இச்சங்கங்களில் உற்பத்தி அளவு வாணிபச் சரக்குகள் கூட்டின் மேல் ரொக்கக் கடன் கணக்கில் விற்று முதல்களைச் செலுத்துதல், நடைமுதல் மூலதனத்தின்கீழ் நிலுவையாயுள்ள தொகைகளுக்கான வரையறைகள் ஆகியவை பற்றி அளவுகோல்கள் நிச்சயிக்கப்பட்டன.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 மார்ச் 30

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவற்றின் நடைமுதல் மூலதனத் தேவைகளுக்கான இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி மொத்தம் ரூ. 57 லட்சம் கடன் உதவி வழங்கியுள்ளது. 57 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் முந்திய ஆண்டுகளில் அவற்றிற்குக் கிடைத்த கடன் உதவி போன்று இந்த ஆண்டில் கடன் வசதி பெற முடியவில்லை. இந்திய ரிசர்வ் வங்கி விதித்துள்ள வண்ணம் கடன்கள் பெறுவதற்குப் போதுமான ஈடுகள் காட்ட அவற்றால் இயலாமையே இதற்குக் காரணமாகும்.

1968, ஜனவரித் திங்களில் இச் சங்கங்களில் அதிக விற்பனை ஆகியுள்ளது என உற்பத்தி விற்பனை அளவு குறித்த புள்ளி விவரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

இந்திய ரிசர்வ் வங்கி உற்பத்தி விற்பனை காரியங்களுக்காக தான் வழங்கும் ரொக்கக் கடன் வசதியை கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்வதற்காகவும், விற்பனை செய்வதற்காகவும் முறையாகப் பயன்படுத்த வேண்டுமென்று வலியுறுத்துகின்றது. எனவே நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வாணிக முறைகளைக் கண்டிப்பாகக் கையாண்டு நடைமுதல் மூலதனம் குறித்து வழங்கப்பட்ட தொகைகளை நிலையான இருப்புகளிலும் நேரடியாகப் பயன்தராத ஏனைய வழிகளிலும் பயன்படுத்துவதைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். ஆயினும் நடைமுதல் மூலதன உதவி குறித்து இந்திய ரிசர்வ் வங்கி விதித்துள்ள கண்டிப்பான சட்டதிட்டங்களைத் தளர்த்த வேண்டுமென்று அரசாங்கம் இந்திய ரிசர்வ் வங்கியைக் கேட்டுள்ளது. ரிசர்வ் வங்கியும் இந்த நிபந்தனைகளில் சிலவற்றைத் தளர்த்தியுள்ளது. நிபந்தனைகள் தளர்த்தப்பட்டதனால் ஏற்படும் பலன்களை அரசாங்கம் விழிப்புடன் கவனித்து வருகின்றது. தகுதி வாய்ந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவியளிக்க மேலும் தக்க நடவடிக்கையெடுக்கப்படும்.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பங்குத் தொகைகளில் அரசாங்கம் நேரிடையாகப் பங்கு எடுத்துக் கொள்வதென தற்பொழுது உத்தரவு பிறப்பித்துள்ளது என்பது மகிழ்ச்சியுடன் அறிவிக்கப்படுகிறது. ரிசர்வ் வங்கி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இதுகாறும் கொடுத்து வந்த நடைமுறை மூலதனத்திற்குப் புதிதாக சமீபத்தில் விதித்துள்ள கட்டுப்பாடுகளினால் ஏற்பட்ட அவதியைத் தவிர்க்கும்பொருட்டு இவ்வுதவியைத் தமிழக அரசு அளிக்க இப்போது தீர்மானித்துள்ளது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் வியாபார நிமித்தம் அத்தியாவசியமான முறைகளில் தங்கள் நிதியை முதலீடு செய்வதை ரிசர்வ் வங்கி கொடுக்கும் நடைமுறை மூலதனத்தை உபயோகிப்பதை ஏற்றுக் கொள்வதில்லை. எடுத்துக் காட்டாக மிகவும் அத்தியாவசியமான கச்சாப் பொருளான நூலை உற்பத்தி செய்து நெசவாளர் சங்கங்களுக்கு விநியோகிக்கும் கூட்டுறவு நூற்பாலைகளின்



1968 மார்ச் 30] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

பங்குகளில் பிரதம நெசவாளர் சங்கங்கள் முதலீடு செய்துள்ள தொகைகளை தான் அளிக்கும் கடனுக்குத் தகுந்த ஆதாரமாக ரிசர்வ் வங்கி எடுத்துக் கொள்ள பலமுறை கூறியும் மறுத்து விட்டது. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இக்கஷ்டத்திலிருந்து நிவாரணம் அளிக்க தமிழக அரசு அக்கறையுடன் சிந்தித்தது. இப்பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ரிசர்வ் வங்கியிலிருந்து போதுமான அளவு ஆதாரம் காட்டி கடன் பெற அரசாங்கமானது அதனுடைய பங்குகளில் நேரிடையாக முதலீடு செய்யவேண்டி ரூ. 4 இலட்சம் தற்போது அளித்திருக்கிறது. வரும் ஆண்டுகளில் இவ்வுதவியை மேலும் அதிகரிக்கும். இந்த நிதி அநேக சங்கங்களுக்கு நிவாரணம் அளித்துக் கடன் பெறும் அளவையும் பெருக்கி உற்பத்தியை அதிகரிக்க உதவும். சில சங்கங்கள் இயங்கவே முடியாமல் இருந்ததையும் மாற்றும். இந்திய உபகண்டத்தில் நம் தமிழக அரசுதான் இத்தகைய உன்னதமான உதவியைக் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு அளித்த தனிப் பெருமைக்குரியதாகும்.

இங்கு மற்றொன்றையும்பற்றிக் குறிப்பிட வேண்டும். சங்கங்கள் பெறும் கடன் உதவிக்கான ஈடுகளைக் கணக்கிடுவதற்காகப் பழைய இருப்புகளின் தேதி வாரியாக அவை மதிப்பிடப்படுகின்றனவென்றாலும், நடைமுதல் மூலதனம் குறித்த கடன் வசதியைப் பயன்படுத்திக்கொண்டு சங்கங்கள் செயல்படுவதற்கான திறனைச் சரக்குகளின் தேக்கம் பாதிக்காது.

மார்ச் திங்கள் 3-ம் நாள் முதல் 17-ம் நாள் வரையில் நடைபெற்று வந்த அனைத்திந்தியக் கைத்தறி வார விழாவில் அரசு வழங்கியுள்ள 10 காசு உயரிய கழிவுத் தொகைத் திட்டத்தை உறுதுணையாகக் கொண்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கணிசமான அளவு கைத்தறித் துணிகளை விற்றிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கைத்தறித் தொழில் வளர்ச்சியில் அரசாங்கம் குறிப்பாக அக்கறை காட்டி வருகிறது. நெசவாளர் தலைமைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றில் இருப்புகள் பெரிய அளவில் தேக்கமடையும்போதெல்லாம், கைத்தறி நெசவாளர்களுக்கு ஏற்படக்கூடிய துயரினைத் தணிக்க அரசாங்கம் தனது நிதி வசதிகளிலிருந்தே அவர்களுக்குத் தாற்காலிக முன் பணங்கள் வழங்கி வந்துள்ளது. நடப்பு நிதி ஆண்டில் நெசவாளர் தலைமைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு (தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்) தாற்காலிக முன் பணமாக அரசாங்கம் 1967, அக்டோபர் திங்களில் ரூ. 50 இலட்சம் வழங்கியது. இச்சங்கத்துடன் இணைந்த நெசவாளர் ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்திசெய்த கைத்தறித் துணிகளை தலைமைச் சங்கம் முனைந்து கொள்முதல் செய்வதற்கு வகைசெய்யும் பொருட்டே இதற்கு முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கம் 1967, மே திங்களில் மாநிலக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 25

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 மார்ச் 30

இலட்சம் வழிவகை முன்பணமாக வழங்கியது. இதைக் கொண்டு மாநிலச் சங்கம் கொள்முதல், விற்பனை காரியங்களுக்காக இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து நடைமுதல் மூலதனத்திற்காகப் பெற்ற கடன் தொகைகளுக்குப் போதிய ஆதாயத்தைக் காட்டி அதன் வாயிலாக நெசவாளர் ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது நெசவாளர் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பளித்து உதவ முடிந்தது.

## (ii) தஞ்சை, இராமநாதபுரம், இராமேஸ்வரம் பகுதிகளில் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமும், உடைந்த ஏரிகள் செப்பனிடுதலும்

**திரு. பெ. மலைச்சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசர, பொது முக்கியம் வாய்ந்த கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"கடந்த டிசம்பர் திங்களில் அதிக மழையாலும், புயலாலும் தஞ்சை, இராமநாதபுரம், இராமேஸ்வரம் பகுதிகளில் மக்கள் பாதிக்கப்பட்டு, பொருள், பயிர், வீடுகள், கால்நடை போன்றவை சேதமுற்று, அவல நிலையில் உள்ளதால் அவர்களுக்கு உடனடி நிவாரணம் அளித்தலும், உடைந்த பல ஏரிகளைத் துரிதமாகச் செப்பனிடுதலும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பராஜா அவர்கள், கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் அளித்த விளக்க உரையின் மீது ஒரு வினா கேட்க அனுமதிக்கிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** அமைச்சர் அவர்கள் அளித்த பதில் மிக விரிவாக இருந்தபோதிலும் ஒரே ஒரு விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன். ரிசர்வ் வங்கியுடன் தொடர்புகொண்டு சட்டங்களைத் தளர்த்தும் முன்பாக சென்னை மாநிலக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து கொடுக்கக் கூடியதில் கடனுகை தொகுதியில் உள்ள அத்தனைபேருக்கும் கடன் கொடுப்பதற்கு வேண்டிய அளவு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தேவையான அத்தனை நிதியையும் வழங்கும் நிலைமை இல்லை. போதுமான அளவு நிதி வசதி இருக்கிறது. நெருக்கடி நிலைமையைப் பார்த்து இயக்குநர் அவர்கள் ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். ரிசர்வ் வங்கி கடன் வசதிகளை அதிகமாக ஆக்கும் அளவுக்கான முறையில் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அரசாங்கம் 4 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறது. எங்கெங்கு கஷ்ட நிலைமை இருக்கிறதோ, அங்கு இதைக் கொண்டு கொடுக்க வழி செய்யப்பட்டிருக்கிறது. இயக்குநர் அவர்கள் இதிலே தீவிர கவனம் செலுத்தி வருகிறார். அதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கமும் ஈடுபட்டிருக்கிறது.



1968 மார்ச் 30]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, இராமநாதபுரம், தஞ்சாவூர் மாவட்டங்களில், 1967-டிசம்பர் இரண்டாவது வாரத்தில் புயல்வீசி பெருமழை பெய்தது. இராம நாதபுரம் மாவட்டத்தில், குறிப்பாக, இராமநாதபுரம், திருவாடானை வட்டங்களில் 18 மணி நேரத்தில் 20 செ.மீ. மழை பெய்தது. தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, திருத்துறைப்பூண்டி வட்டங்களைச் சேர்ந்த கடற்கரைப் பகுதிகளில் அதே கால அளவில் 28 செ. மீ. மழை பெய்தது. குடிசைகளுக்கும், கால்நடைகளுக்கும், பாசன ஏரிகளுக்கும், சாலைகளுக்கும், பெருமளவுக்குச் சேதம் ஏற்பட்டது. இம்மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளில், மாண்புமிகு கூட்டுறவு அமைச்சரும், வருவாய்த் துறைச் செயலாளரும் பார்வையிட்டு புயலாலும், வெள்ளத்தாலும் ஏற்பட்ட சேதம் குறித்து நேரடியாக அறிந்தனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிறைவேற்றவேண்டிய இடர்தணிப்பு, மறுவாழ்வுப் பணிகளைக் குறித்து விவாதிப்பதற்கென துறைத் தலைவர்கள், அரசாங்கச் செயலாளர்கள் ஆகியோரின் மாநாடு ஒன்றை வருவாய்த் துறைச் செயலாளர் கூட்டினர். அம்மாநாட்டில் சில முடிவுகள் எடுக்கப் பட்டன. அம்முடிவுகளை ஒட்டி, புயல் முதலியவற்றால் பாதிக்கப் பட்டவர்களுக்கு இடர் உதவி வழங்க ஆணைகள் பிறப்பிக்கப் பட்டன. கீழ்க்கண்ட இடர் உதவிப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன. பிற்பகல் 12-30

### பாதிக்கப்பட்டவர்களுக்கு ரொக்க உதவி

இராமநாதபுரம் மாவட்டத்தில் 5,000 குடிசைகளும் தஞ்சாவூர் மாவட்டத்தில் 10,000 குடிசைகளும் புயலால் சேதமடைந்தன. இராமநாதபுரம் கலெக்டருக்கு 2 இலட்சம் ரூபாய் செலவிடவும், தஞ்சாவூர் கலெக்டருக்கு 4 இலட்சம் ரூபாய் செலவிடவும் அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. புயலால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரொக்க உதவியாகவும், உடைகள் குறித்த உதவியாகவும், முறையே ரூ. 30, ரூ. 10 என்ற வீதத்தில் வழங்கவேண்டுமென்று ஆணையிடப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு வழங்க ரூ. 27,200 செலவுக்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மேலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் இலவசமாக உணவு வழங்குவதற்கென ரூ. 16,000 செலவிடவும் அனுமதி வழங்கப்பட்டது.

### நெற்பயிருக்குக் கடன்

தஞ்சாவூர் மாவட்டத்தில் 50,000 ஏக்கர் பரப்பளவில் உள்ள தாளடிப் பயிர் நீருக்குள் மூழ்கியது. 20,000 ஏக்கர் நிலத்தில் தாளடிப் பயிர் நாசமாகிவிடுமென்று எதிர்பார்க்கப்பட்டது. மேற்சொன்ன பரப்பளவில் மீண்டும் பயிரிட வேண்டியிருந்தால், தாளடிப் பயிரை மீண்டும் பயிரிடுவதற்காக விதை, உரங்கள்

வடிவில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 60-க்கு மேற்படாத வட்டியில்லாக் கடனை வழங்கும்பொருட்டு, தஞ்சவூர் கலெக்டருக்கு ரூ. 1 இலட்சம் ஒதுக்க அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது.

### நிலத்தைப் பண்படுத்தி மீட்பதற்காகக் கடன்

இராமநாதபுரம் மாவட்டத்தில் சுமார் 4,000 ஏக்கர் பரப்பளவும், தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமார் 500 ஏக்கர் பரப்பளவும் புயல் காரணமாக மண் அடித்துப் போயின. மண் அடித்துப் போன நிலங்களைப் பண்படுத்தி மீட்பதற்காக, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 200-க்கு மேற்படாத கடன்களை வழங்குவதற்கென இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 4 இலட்சமும், தஞ்சவூர் மாவட்டத்திற்கு ரூ. 50 ஆயிரமும் ஒதுக்க, அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள சில வட்டாரங்களில் முழுநிதித் திட்டம் செயல்படுவதாலும், பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு உடனடியாக இடர் உதவி வழங்க வேண்டி இருந்தாலும், பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள வட்டார வளர்ச்சி அதிகாரிகளும், வருவாய்த் துறைப் பணியாளர்களும் முழுநிதித் திட்ட விதித் துறைகளை தளர்த்துவதன்மூலம், நில மேம்பாட்டுக் கடன்கள் சட்டத்தின் கீழும், வேளாண்மைக் கடன்கள் சட்டத்தின் கீழும் கடன்கள் வழங்க அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. புயலால் இழக்கப்பட்ட கால்நடைகளுக்குப் பதிலாக, வேறு கால்நடைகளை வாங்கக் கடன் கொடுப்பது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

### வருவாய்த் துறை சிறப்புப் பணியாளர்களை நியமித்தல்

இடர் உதவிப் பணிகள் அனைத்தையும் கவனித்துக் கொள்வதற்கென இராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு தாசில்தார்களையும், நான்கு வருவாய்த்துறை ஆய்வாளர்களையும், ஆறு ஏவலர்களையும் நியமிக்கவும், தஞ்சாவூர் மாவட்டத்தில் மூன்று தாசில்தார்களையும் மூன்று வருவாய்த் துறை அதிகாரிகளையும், மூன்று ஏவலர்களையும் நியமிக்கவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### மீனவர்களுக்கு இடர் உதவி

இராமநாதபுரம், தஞ்சாவூர் மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 50-50 விகிதத்தில் கடனையும், உதவித் தொகையையும் வழங்குவதற்கென ரூ. 4,95,095 செலவுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. சேதமுற்ற மீன்பிடிப் படகுகளையும், கட்டுமரங்களையும், பருத்தி வலைகளையும், நைலான் வலைகளையும் செப்பனிட அல்லது அவற்றிற்குப் பதிலாக புதியனவற்றை வாங்க அந்த நிதி உதவி வழங்கப்படும். ஒரு குடும்பத்திற்கு ரூ. 50 என்ற வீதத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் 6,600 மீனவர் குடும்பங்களுக்கும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 500 குடும்பங்களுக்கும் ரொக்க மானியம் வழங்குவதற்கென ரூ. 2,55,000 கூடுதல் தொகைக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.



எந்தக் குடும்பங்களின் படகுகளும் வலைகளும் மீண்டும் மீன்பிடிப்பதற்குப் பயன்படாத அளவிற்குச் சேதமுற்றனவோ அக்குடும்பங்களுக்கு மட்டும் இந்த ரொக்க உதவி வழங்கப்படும்.

### உடைப்பெடுத்த ஏரிகளையும், கால்வாய்களையும் செப்பனிடுதல்

இராமநாதபுரம் மாவட்டத்தில் 624 ஏரிகளும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 324 ஏரிகளும் உடைப்பெடுத்தன. ஏரிகள், ஆறுகள், கால்வாய்கள் ஆகியவற்றின் உடைப்புகளை உடனடியாக மூடுவதற்கென தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ரூ. 5,50,000 தொகையையும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 10 இலட்சம் தொகையையும் அனுமதிப்பது குறித்தும், பாசன ஏரிகளை முறையாகச் செப்பனிடுவதற்கென தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ரூ. 26,50,000 தொகையையும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 70 இலட்சம் தொகையையும் அனுமதிப்பது குறித்தும் பொதுப் பணித் துறை ஆலோசித்து வருகிறது. செலவு ஒப்பளிப்புக்கான உறுதியான மதிப்பீடு தலைமைப் பொறியாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஏரிகளையும் இதற்குமுன் 1967 அக்டோபரில் வீசிய புயலால் உடைப்பெடுத்த ஏரிகளையும் சீரமைப்பதற்கென ஐந்து உட்கோட்டங்கள் அடங்கிய ஒரு கோட்டத்தை தேவகோட்டையிலும் ஒரு உட்கோட்டத்தை தஞ்சவூரிலும் நிறுவ அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

### நெடுஞ்சாலைத் துறை ஆளுகையின்கீழ் உள்ள சாலைகள்

இராமநாதபுரம் மாவட்டத்தில் சேதமுற்ற மாநில நெடுஞ்சாலைகளைச் சீரமைக்கும் வேலையை மேற்கொள்ள அரசாங்கத்தின் ஒப்பளிப்பை எதிர்நோக்கி நெடுஞ்சாலைத் துறைத் தலைமைப் பொறியாளர் ரூ. 9 இலட்சம் அனுமதித்துள்ளார். சேதமுற்ற நெடுஞ்சாலைத் துறைச்சாலைகளைச் சீரமைப்பதற்கென ரூ. 20 இலட்சம் செலவிற்கு ஒப்பளிப்பு வழங்கக் கருதப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் சேதமுற்ற சாலைகளைச் செப்பனிடுவதற்கென இரண்டு உட்கோட்டங்களை ஏற்படுத்த ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### ஊராட்சிச் சாலைகளும், ஊராட்சி ஒன்றியச்சாலைகளும்

நடப்பு ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும், ஊராட்சிச் சாலைகளையும் செப்பனிடுவதற்கென ரூ. 1 இலட்சம் அனுமதிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், தலைமைப் பொறியாளரது விரிவான அறிக்கையைப் பெற்ற பிறகு, அடுத்த ஆண்டில் சிறப்பு மானியம் வழங்கவும் கருதப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், தலைமைப் பொறியாளரிடமிருந்து செயற்குறிப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1968 மார்ச் 30] [திரு. கே. ஏ. மதியழகன்]

### இராமேஸ்வரம் நகரியத்திற்கு மானியம்

புயலாலும், வெள்ளத்தாலும் நீர் அதிகம் வரப்பெற்ற தாவைக் கால்வாயிலிருந்து நீரை வெளியகற்றும் பொருட்டு, இராமேஸ்வரம் நகரியத்திற்கு ரூ. 3,000 மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

### (iii) அண்ணாமலைப் பல்கலைக்கழக விடுதித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

**திரு. ஆ. கோவிந்தராசன்:** தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசர, பொது முக்கியம் வாய்ந்த கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழக உணவு விடுதிகளில் வேலை செய்து வரும் தொழிலாளர்கள் சுமார் 300 பேர்கள், பஞ்சப்படி கொடுக்கவில்லை என்ற காரணத்தால் வேலைநிறுத்தம் செய்திருப்பது."

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாணவர் விடுதிகளில் தற்போது 280 பணியாளர்கள் உள்ளனர். அவர்களது சம்பள விகிதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. தலைமைச் சமையற்காரர் ரூ. 60–1–70
2. உதவிச் சமையற்காரர் ரூ. 50–1–60
3. பரிமாறுபவர் (முதுநிலை) ரூ. 44–1–48
4. பரிமாறுபவர்கள் (இளநிலை) ரூ. 37—1--42
5. குப்பை கூட்டுபவர் ரூ. 40–1–45
6. சுத்தம் செய்பவர் ரூ. 40–1–45
7. தோட்டி ரூ. 45–1–50

1—7—1967 முதற்கொண்டு திங்கள் ஒன்றுக்கு ரூ. 35 வீதம் அவர்களுக்கு அகவிலைப்படி வழங்கப்படுகிறது. அதாவது 1—7—1967 முதற்கொண்டு செயலுக்கு வரும் வகையில் 1967 செப்டம்பரில் அகவிலைப்படி வீதம் மாற்றி அமைக்கப்பட்டது. 1—7—1967-க்கு முன்பு வெவ்வேறு வீதங்களில் அவர்களுக்கு அகவிலைப்படி வழங்கப்பட்டது. பணியாளர் செலவுகளுக்கென மாணவர்கள் கொடுக்கும் தொகையிலிருந்து இப்பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகின்றது. அவர்களது சம்பளம் முழுவதும் மாணவர் விடுதி நிதிகளிலிருந்து சரிக்கட்டப்படுகின்றது. தற்போது மாணவர்கள் திங்கள் ஒன்றுக்குப் பணியாளர் செலவுகளுக்கென ரூ. 11-50 வழங்குகின்றனர். ஓராண்டில் 10 திங்கள்களுக்கு இத்தொகை வழங்கப்படுகின்றது. மாணவர்கள் விடுதிகளுக்கென பல்கலைக்கழகம் எந்தத் தொகையையும் வழங்குவதில்லை.



1968 மார்ச் 30] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

பல்கலைக் கழக அலுவலகத்தில் கல்வித் துறைகளிலும் பட்டறைகள் முதலியவற்றிலுமுள்ள பணியாளர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 47 வீதம் அகவிலைப்படி வழங்கப்படுகின்றது. அதாவது ரூ. 90-ம் அதற்குக் குறைவாகவும் சம்பளம் பெறுபவர்களுக்கு அத்தகைய அகவிலைப்படி வழங்கப்படுகின்றது. இந்த விடுதிகளில் எந்த உணவையும் பெற இப் பணியாளர்களுக்கு உரிமை இல்லை. பல்கலைக் கழக நிதிகளிலிருந்து அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகின்றது. பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பிற பணியாளர்களுக்கு வழங்கப்படும் அதே வீதத்தில் தமக்கு அகவிலைப்படி வழங்கப்படவேண்டுமென்று மாணவர் விடுதிகளில் உள்ள பணியாளர்கள் அதிகாரிகளுக்கு அறிவிப்புக் கொடுத்தனர். இம் மாநிலத்தில் உள்ள பல்வேறு விடுதிகளில் அதே நிலைகளிலுள்ள பணியாளர்கள் பெறும் ஊதியங்களுடன் ஒப்பிட்டு நோக்குகையில், அண்ணாமலைப் பல்கலைக் கழக விடுதிப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியங்களே மிக அதிகமானவை. இப்பணியாளர்களுக்குக் குடியிருப்புகள், குறைந்த வாடகைக்கு வழங்கப்படுகின்றன. அவர்களது குழந்தைகட்கு இலவசக் கல்வி வசதி அளிக்கப்படுகிறது. பல்கலைக் கழகப் பணியில் அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. மாணவர்கள் செலுத்தும் தொகைகளிலிருந்தே அவர்களது ஊதியம் வழங்கப்படுவதால், அரசாங்கம் வழங்கும் மானியங்கள் அவர்களுக்குப் பொருந்தாது. துணை வேந்தர் பல்கலைக் கழகத்தின் வெவ்வேறு பாடத்துறைத் தலைவர்களுடன் (Deans of Faculties) மாணவர் விடுதிப் பொறுப்பாளர்களுடனும் பணியாளர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து, தற்போதைய அகவிலைப்படி வீதத்தைப் பல்கலைக் கழகப் பணியாளர்களுக்கு வழங்குவதுபோன்று திங்கள் ஒன்றுக்கு ரூ. 35 லிருந்து ரூ. 47 ஆக உயர்த்துவதன் மூலம் ஏற்படுகின்ற கூடுதல் செலவை ஈடு செய்வதற்கு தேவையான வசதியைப் பெறுவது பல்கலைக் கழகத்திற்கு இயலாது என்று விளக்கினார். மேலும், மாணவர்கள் தற்போது பணியாளர் செலவுகளுக்குச் செலுத்தும் தொகைக்கு மேல் அவர்கள் செலுத்துவதென்பது இயலாது என்றும் விளக்கிக் கூறினார். இம் மாநிலத்தில் பிற விடுதிகளில் வேலையிலுள்ள ஏனைய பணியாளர்களுடன் ஒப்பிடுகையில், அவர்கள் மிக அதிக ஊதியம் பெறுகின்றனர் என்றும், அவர்களது பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி, வேலை வாய்ப்புகள், கல்லூரியில் இட வசதி போன்ற பிற சலுகைகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன என்றும் துணைவேந்தர் எடுத்துரைத்தார். எனினும், விடுதிச் சங்கப் பிரதிநிதிகள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தினர். மார்ச் திங்களில் வழங்கப்படும் பிப்ரவரித் திங்கள் சம்பளத்தை 1—3—1968 முதல் இந்நாள் வரை அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால், எல்லாப் பணியாளர்களும், வேலையிலுள்ளனர். எப்போதும் போல் அவர்கள் தங்கள் பணிகளை ஆற்றி வருகின்றனர்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 மார்ச் 30

இது குறித்துப் பல்கலைக் கழகமும், மாணவர் விடுதி அதிகாரிகளுந்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில் அரசு எந்த வகையிலும் தலையிடுவதற்கில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். ராமச்சந்திர துரை அவர்களும், திரு. கே. சகாதேவக் கண்டர் அவர்களும் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர இருந்த கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், அவர்கள் இருவரும் பேரவையில் இல்லாத காரணத்திஞல், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.

அடுத்து, திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் அவர்கள் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

## (iv) நெல்லை மாவட்டத்தில் பருவமழையின்மையும், வரி வஜாவும், கடன் தவணை ஒத்திவைப்பும்

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** தலைவரவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசர, பொதுமுக்கியம் வாய்ந்த, கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :

"திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில், தென்காசி, செங்கோட்டை, சாத்தான்குளம் வட்டங்களில் சென்ற 1374 பசலி முதல் நாளது 1376 பசலி முடிய பருவமழை பொய்த்துப் போய் விட்டதால் அப்பகுதி விவசாயிகளுக்கு உடனடியாக வரிவஜா, கடன் தவணை ஒத்திவைப்பு, பஞ்ச நிவாரண வேலை முதலியவற்றைத் துரிதமாகச் செய்ய வேண்டும்."

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவரவர்களே, பருவமழை பொய்த்ததிஞல் பாதிக்கப்பட்டுள்ள சங்கரன்கோயில், தென்காசி, செங்கோட்டை, திருச்செந்தூர் வட்டங்களில் குடியானவர் செலுத்த வேண்டிய கடன் தவணை வசூல் ஒத்திவைக்கப்பட வேண்டுமென்றும், நிலவரி வசூல் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும், இவ்வட்டங்களில் பஞ்சத்துயர் தணிப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட வேண்டுமென்றும் நாட்ட ஈர்ப்பு அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1967, அக்டோபர் திங்களில் திருநெல்வேலி மாவட்டத்தில் பரவலாகவும் கடுமையாகவும் மழை பெய்தபோதிலும், சங்கரன்கோவில், தென்காசி, செங்கோட்டை வட்டங்களில் வடகிழக்குப் பருவமழை ஓரளவு தவறிவிட்டது. மேற்சொன்ன வட்டங்களில் உள்ள ஏரிகளில் பாசனத்திற்கான நீர் போதிய அளவிற்குக் கிடைக்கவில்லை. 1967, அக்கோபர், நவம்பர் திங்கள்களில் சிறிதளவு நீர் பெற்ற சில ஏரிகள்கூட வற்றிப் போயின. மழை



1968 மார்ச் 30] [திரு. கே. ஏ. மதியழகன்]

பொய்த்ததன் சீர்கேடான விளைவுகள் இவ்வட்டங்களில் உணரப்படுகின்றன. இந்த வட்டங்களிலுள்ள குடியானவர்களின் பொருளாதார நிலையைக் கருத்தில்கொண்டு, சங்கரன்கோயில், தென்காசி, வட்டங்களில் நடப்பு நில வரியையும், நடப்புக் கடன் தவணைத் தொகைகளையும் மெதுவாக வசூலிக்கும் முறையை மேற்கொள்ளலாமென்று கலெக்டர் பரிவுரை செய்துள்ளார். செங்கோட்டை வட்டத்தைப் பொறுத்தவரையில் நடப்பும் கடன் தவணைத் தொகையைமட்டும் மெதுவாக வசூலிக்கலாமென்று கலெக்டர் பரிவுரை செய்துள்ளார். நிலவரியைப் பொறுத்தவரையில் இந்த வட்டத்தின் நன்செய், புன்செய் நிலங்கள் ஆகிய இரண்டிற்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 2 வீதம் விதிக்கப்படும் நிலவரியை மக்கள் தாமாகவே மனமுவந்து செலுத்தி விடுகின்றனர். இவ்வட்டங்களில் குடியானவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக சிறு பாசனப் பணிகள், சாலைப் பணிகள், பாசனக் கிணறுகளை ஆழப்படுத்தும் பணிகள் போன்ற பஞ்சத்துயர் தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக நிதி ஒதுக்குமாறு கலெக்டர் வேண்டியுள்ளார். கலெக்டர் அனுப்பியுள்ள இச் செயற் குறிப்புகள் அரசாங்கத்தின் ஆய்வில் உள்ளன.

காத்தான்குளம் துணை வட்டத்தில் தாமீரபரணி திட்டத்தின் கீழ் உள்ள பயிர்கள் நல்ல நிலையில் உள்ளன. மணிமுத்தாறு தலைமைக் கால்வாய்த் திட்டத்தின்கீழ் வரும் பயிர்கள் இயல்பான நிலையில் உள்ளன. மழை நீரை நம்பியுள்ள ஏரிகளிலிருந்து, பாசனம் பெற்று வளர்ந்துவரும் பயிர்களும் இயல்பான நிலையில் உள்ளன. பாலக்குளத்தில் நீர் பற்றுக்குறையிஞல் 37.26 ஏக்கர் பரப்பளவில் சாவியாகிவிட்ட நெற்பயிர் நீங்கலாக, மேற்சொன்னவாறு மழை நீரை நம்பியுள்ள ஏரிகளிலிருந்து பாசனம் பெற்று வளர்ந்து வரும் பயிர்களின் அறுவடை வாயிலாக 40 முதல் 60 சதவீதம் வரை விளைச்சல் கிடைக்கும். எலுவைமுக்கி, புதுக்குளம் கிராமங்களில் 50 ஏக்கர் பரப்பளவில் வளர்ந்துவரும் நெற்பயிர் சாவியாகும் நிலையில் உள்ளது. வளர்ந்து வரும் இந்நெற்பயிரைக் காப்பதற்காக, இக்கிராமங்களுக்கு மணிமுத்தாறு நீரை வழங்க வேண்டுமென்று கலெக்டர் பொறியியல் பாசனத் துறையை வேண்டியுள்ளார். சாத்தான்குளம் துணை வட்டம் உட்பட திருச்செந்தூர் வட்டத்தில் 833.89 ஏக்கர் பரப்பளவு, நீர்பற்றுக் குறையிஞல் தரிசாக விடப்பட்டுள்ளது. இவ்வட்டத்தில் பயிர்கள் முழுவதும் சாவியாகப் போகவில்லை. தரிசாக விடப்பட்ட நிலங்களுக்கும், பயிர்கள் சாவியாகப் போன பகுதிகளுக்கும் பருவகால நிலவரித் தள்ளுபடி அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு கல்வித்தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு முக்கியமான காரியத்தை திரு. எம். கண்ணப்பன் அவர்கள் கொண்டு வருவார்கள்.

## கோவை மாவட்டம் உடுமலை வட்டத்தில் மூடப்பட்டுள்ள அமராவதி சர்க்கரை ஆலையைத் திறத்தலும், அபராதத் தொகை வசூலை நிறுத்தி வைத்தலும்

**திரு. எம். கண்ணப்பன் :** சட்டப் பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசர பொது முக்கியம் வாய்ந்த கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"கோவை மாவட்டம் உடுமலை வட்டத்திலுள்ள அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கடந்த சில மாதங்களாக மூடப்பட்டுள்ளதால், அதில் வேலை செய்துவந்த தொழிலாளர்கள் வேலையிழந்து தவிப்பதுடன், கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள் பேரில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அபராதத்தொகை வசூல் செய்யப்பட்டு இன்னலுக்கு ஆளாகியுள்ளதால் மூடியுள்ள ஆலையைத் திறக்கவும், அபராதத் தொகை வசூலிப்பதை நிறுத்தி வைக்கவும் நடவடிக்கை எடுப்பது."

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, 1960, ஜூன் திங்களில் உற்பத்தியைத் தொடங்கிய அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் கரும்பு ஆடும் பருவங்கள் இரண்டு உள்ளன. ஒரு பருவம் நவம்பர் திங்களில் தொடங்கி மார்ச் திங்களில் முடிவுபெறும். இது முதன்மைப் பருவமாகும்; மற்றொன்று ஜூன் திங்களில் தொடங்கி செப்டம்பர் திங்களில் முடிவுபெறும். இது சிறப்புப் பருவமாகும். இந்த ஆலை, இதன் சிறப்புப் பருவத்திற்குக் கரும்பைப் பெற முடிகின்றது. ஆனால் அதனுடைய முதன்மைப் பருவத்திற்குப் போதிய கரும்பைப் பெறுவதற்குப் பெரிதும் தொல்லைப்படுகின்றது.

1968-69-ம் ஆண்டின் முதன்மைப் பருவத்திற்கு (இது 1967 நவம்பர் திங்களில் தொடங்கி 1968 மார்ச் திங்களில் முடிவுறும்) கரும்பு கிடைக்காத காரணத்தினால் இந்த ஆலை கரும்பு ஆட முடியவில்லை. வெல்லத்தையும், பழுப்புச் சர்க்கரையையும் எடுத்துச் செல்ல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளபோதிலும், வெல்லமும் பழுப்புச் சர்க்கரையும் அதிக விலையில் விற்பனையாகின்ற காரணத்தினால், வெல்ல உற்பத்திக்காக இந்த ஆலையின் சுற்றுப்புறப் பகுதிகளில் கரும்பு பெருமளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆலை தன்னுடைய முதன்மைப் பருவத்திற்கு கரும்பைப் பெறுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் வீணாயின. இருந்தபோதிலும், 1968 ஜூன் திங்களிலிருந்து அதாவது, சிறப்புப் பருவத்திலிருந்து கரும்பு ஆடும் பணியினைத் தொடங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த ஆலை, பணியாற்றாத காலத்தில் தற்காலிகத் தொழிலாளர்களுக்குத் தற்காலிகப் பணிவிடுப்பு ( lay off ) அளித்துவிட்டு, நிலையான பணியாளர்களைமட்டும் வைத்துக் கொள்ளும்.



தவிர்க்க முடியாத வகையில் இந்த ஆலை பணியாற்றாதபோது சில தொழிலாளர்களுக்குத் தற்காலிகப் பணி விடுப்பு அளித்திருக்கக் கூடும். இது தவிர்க்க முடியாதவொன்றாகும்.

வெல்லத்தின் விலை அதிகரிக்கும்போதெல்லாம் பதிவு பெற்ற கரும்பு உற்பத்தியாளர்கள்கூட ஆலையின் துணை விதிகளில் அவர்களுக்கு விதித்துள்ள ஆணைப் பொறுப்புகளையும் மீறி வெல்ல உற்பத்திக்குத் தங்கள் கரும்பைப் பயன்படுத்துகின்றனர். இந்த ஆலையின் துணை விதி (33) உறுப்பினரின் பங்கு மூலதனத்தையும் அவர் ஆலைக்குக் கரும்பு வழங்குவதையும் தொடர்புபடுத்துகின்றது. துணை விதியின்படி, கரும்பு உற்பத்தியாளர் ஒவ்வொருவரும் அவர் எடுத்துள்ள ஒவ்வொரு பங்கிற்கும் அவருடைய நிலத்தில் குறைந்தது மூன்றில் இரண்டு ஏக்கரிலிருந்தாவது கரும்பை ஆலைக்கு வழங்கவேண்டும். உற்பத்தியாளர் எவராவது அவ்வாறு செய்யத் தவறினால், வழங்கப்படாத ஒவ்வொரு டன் கரும்பிற்காகவும் ரூ. 25 வீதம் அபராதம் விதிப்பதற்கு (அந்த ஆலையின்) வாரியத்திற்கு அதிகாரம் உண்டு. கரும்பைப் பெருமளவில் வேறு இடங்களுக்கு அனுப்பிவிட்டதன் காரணமாக முதன்மைப் பருவத்தில் இந்த ஆலை கரும்பு ஆட இயலாத நிலை நேரிட்டதை முன்னிட்டு, தொடர்ந்து கரும்பு வழங்காத உறுப்பினர்களுக்கு சிறப்பு அதிகாரி அபராதம் விதித்துள்ளார். இது குறித்து உழவர்களிடமிருந்து முறையீடுகள் வரப்பெற்றதையொட்டிக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அத்தகைய அபராதம் விதிக்க வேண்டாமென அந்தச் சிறப்பு அதிகாரியை வேண்டிக்கொண்டார். அதன்படி, கடமை தவறியவர்கள்மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதை சிறப்பு அதிகாரி நிறுத்தியுள்ளார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பட்டாபி நாயுடு அவர்கள் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்த தீர்மானம், திரு. பட்டாபி நாயுடு அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

**திரு. எம். கண்ணப்பன் :** பேரவைத் தலைவரவர்களே, நான் கொண்டுவந்த காரியம்பற்றி ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். அமராவதி கூட்டுறவுச் சங்கத்திற்குத் தனி அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். அந்தத் தனி அதிகாரியை மாற்றி, அங்கே ஒரு நிர்வாக அதிகாரியை ஏற்படுத்தி, முன்பிருந்தது போல, "போர்டு ஆப் டைரக்டர்ஸ்" குழு அமைத்து சம்பந்தப்பட்ட விவசாயிகளையும் சேர்த்துக்கொண்டால் மீண்டும் இலாபகரமாக இயங்க வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கூட்டுறவுப் பதிவாளர் அவர்கள், எப்படி அமைத்தால் அது சீராகவும், செம்மையாகவும் இருக்கும் என்பதைப்பற்றி பரிசீலித்துக்கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் கூறிய கருத்தும் அவருடைய கவனத்தில் உள்ளது. தக்க நடவடிக்கைகளை விரைவில் எடுக்க கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அவர்கள் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு 41-வது விதியின்கீழ், அவசரப் பொது முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

## (vi) தஞ்சை மாவட்டத்தில் இருபோக தாளடி நிலங்களுக்குத் தண்ணீர்த் தட்டுப்பாடு

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ், அவசரப் பொது முக்கியமான கீழ்க் கண்ட காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"தஞ்சாவூர் மாவட்டத்தில் இரு போகத் தாளடி நிலங்களில் தண்ணீர்த் தட்டுப்பாட்டால் பயிர்கள் காய்ந்து வெடித்துவிட்டதன் காரணமாக விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இனி இவ்வாறு தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படாமல் செய்ய வேண்டிய அவசியம் பற்றி."

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, தென் மேற்கு, வட கிழக்கு ஆகிய இரு கார்க் காலங்களும் இவ்வாண்டு பொய்த்ததன் விளைவால் இம் மாநிலம் இடுக்கண் எய்தியது. இயல்பாக மேட்டூர் நீர்த்தேக்கம் ஜூன் திங்கள் 12-ம் நாளன்று திறந்து விடப்படும். மேற்சொன்ன தேதியன்று நீர்த் தேக்கத்தில் இருந்த நீர் அளவு போதுமானதாக இல்லாத காரணத்தால், தென் மேற்குப் பருவ மழை தவறாது பெய்யும் என்பதற்கான சூழ்நிலைகள் உறுதியான பின்னர் 3—7—1967 அன்றுதான் நீர்த்தேக்கம் பாசனத்துக்குத் திறந்து விடப்பட்டது. காவிரி சங்கமுகப் பகுதியில் வழக்கமாகப் பயிரிடும் குறுவை இரு போகப் பயிர்ப் பரப்பளவைத் தவிர ஒரு போகப் பயிர் நிலங்களில் அதிகப் பரப்பளவில் ஏ.டி.டி. 27 நெல் வகையை முதல் பயிராகப் பயிரிடவும், அதன் பின்னர் பெரும் பரப்பளவில் ஒரு குறுகிய கால நடுத்தரப் பயிரை இரண்டாவது பயிராகப் பயிரிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தென் மேற்குப் பருவ மழை ஜூன் முடிவிலும் ஜூலை தொடக்கத்திலும் காலந் தாழ்ந்து பெய்தது. இயல்பாகப் பெய்யும் அளவிற்கும் குறைவாகவே அதாவது சுமார் 13 சதவிகிதம் குறைவாக இவ்வாண்டு மழை



பெய்தது. இதனால் நீர்த்தேக்கத்திற்கு வருகிற நீரின் அளவு 17 சதவீதம் குறைந்தது. மிகவும் சிக்கனமாகவும், விழிப்போடும் பாசனத்திற்கான நீரை முறைப்படுத்தியதன்மூலம், சங்கமுகப் பகுதியில் குறுவை ஏ.டி.டி. 27 நெல் பயிர் நல்ல வகையில் வளர்ந்து அறுவடையாவதற்கு வகை செய்யப்பட்டது. தென்மேற்குப் பருவக்காலத்தில் இயல்பான அளவிற்குக் குறைவாகவே நீர்த்தேக்கத்தில் நீர் வந்ததால், இரண்டாம் பயிர்க் காலத்திற்குத் தேவையானதும் போதுமானதுமான நீரை மேட்டூர் நீர்த்தேக்கத்தில் தேக்க இயலவில்லை. இத்துடன் காவிரியின் நீர்கோள் பகுதியில் வட கிழக்குப் பருவ மழை பொய்த்து விட்டது. அறுபது சதவீதம் குறைவாக மழை பெய்தது. நீர்த் தேக்கத்தின் வரவோ 65 சதவீதம் குறைந்தது. எனினும், 1967 அக்டோபர் திங்களிலும், 1967 நவம்பர் திங்கள் முதல் பாதியிலும், 1967 டிசம்பர் திங்கள் முதல் பாதியிலும் சங்கமுகப் பகுதியில் பெய்த மழையைப் பயன்படுத்திக்கொண்டு, இக்கால அளவுகளில் மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து நீர் விடுவது குறைக்கப்பட்டது. நீர் விடுவதற்கான முறை மாற்றுத் திட்டம் மூலமும், கால இடையீடுகளில் நீரை மொத்தமாக அனுமதிப்பதன் வாயிலாகவும் முறைப்படுத்தப்பட்டது. இந்த ஏற்பாடுகள் மூலம், சம்பாப் பயிரை வளரச் செய்யவும், அறுவடை செய்யவும் முடிந்தது.

தாளடிப் பயிரைப் பொறுத்தவரையில், மேட்டூர் நீர்த்தேக்கத்தின் நீரின் அளவையும் பயிருக்குத் தேவையான நீரின் அளவு குறித்தும் அரசு அடிக்கடி ஆய்வு செய்தது. 1967 டிசம்பர் பிற்பகுதியில் மழை பெய்யாததாலும், நீர்த்தேக்கத்தில் குறைவான நீர் இருந்ததாலும், நீர் விடுவது கடினமாயிருந்தது. தாளடிப் பயிர் வளரும் 4.6 லட்சம் ஏக்கரில், 2.3 லட்சம் ஏக்கருக்கு 11—2—1968 அன்றைய நிலையின்படி, இரண்டொரு முறை நீர் தேவைப்பட்டது. விளைந்து வருகிற பயிர்களை இயன்ற அளவுக்குப் பாதுகாக்கும்பொருட்டு, மேட்டூர் நீர்த்தேக்கத்தில் உள்ள நீரை 22.05 அடியிலிருந்து 14.55 அடி மட்டத்திற்குக் குறைத்துவிட்டு, சுமார் 205.4 கோடி கன அடி நீர் விடப்பட்டது. காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய் இவற்றிடையே முறை மாற்றுத் திட்டத்தை மேற்கொள்வதன்மூலம் நீர் விடப்பட்டது. வேளாண்மைப் பொறியியல் துறை இயன்ற இடங்களில் கூடுதல் நீரை வழங்கும் பொருட்டு, 86 எண்ணெய்ப் பொறி விசையேற்றங்களையும் டிராக்டர் பொருத்திய 20 விசையேற்றங்களையும் பயனுக்குக் கொணர்ந்தது. வடிமுனைக் குழாய்க் கிணறுகளும் பயன்படுத்தப்பட்டன. கிணறுகளிலிருந்து நீர் இறைப்பது சாத்தியமாயிருப்பதற்கென இயன்ற இடங்களில் விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கும்படி தமிழ்நாடு மின்சார வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டது. சங்கமுகப் பகுதியில் தாளடிப் பயிரைப் பாதுகாப்பதற்கென இவ்வாறெல்லாம், இயன்ற அளவு முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன.

## (vii) மேட்டூர் தொகுதியில் காவிரிபுரம் கிராமத்தில் ஏற்பட்ட லாரி விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு திரு. எம். சுரேந்திரன் அவர்கள் ஒரு அவசரப் பொது முக்கியமான காரியத்தைக் கொண்டுவருவார்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசரமும் பொது முக்கியமுமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"26—2—1968-ல் மேட்டூர் தொகுதி கொளத்தூர் பஞ்சாயத்து யூனியன் பகுதி காவேரிபுரம் கிராமத்தில் சி. கே. எம். விலாசமுள்ள லாரி சுமார் 80 பிரயாணிகளை ஏற்றி வந்து கீழே கவிழ்ந்து இருவர் ஸ்தலத்திலேயே மரணமடைந்தும், 10 பெண்களும், 12 ஆண்களும் படுகாயமடைந்துமுள்ளனர். இவ்வாறு உயிர்களுக்கு அபாயம் உண்டாவதைத் தடுப்பதற்கும் மரணம் அடைந்தவர்களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு வழங்க ஏற்பாடு செய்வது பற்றிய அவசரமும் பொது முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்."

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட விபத்து காவிரிபுரத்திற்கருகே 26—2—1968 அன்று இரவு சுமார் 10 மணியளவில் ஏற்பட்டது. தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அதிகாரி வழங்கிய முதல் அனுமதிச் சீட்டினைப் பெற்றிருந்த MSX 9566 என்னுள்ள சரக்குப் பேருந்து (லாரி) பயணிகளைக் கள்ளத்தனமாக ஏற்றிச் செல்லும்போது இந்த விபத்து ஏற்பட்டது. இந்த விபத்து காரணமாக இரண்டு பேர் விபத்து ஏற்பட்ட இடத்திலேயே இறந்தனர். இருபத்திரண்டு பேர் காயமடைந்தனர். காயமடைந்த 22 பேரில் மேட்டூர் அரசாங்க மருத்துவ மனையில் அகத்துள்ள பிணியாளர்களாக (in-patient) மூவர் சேர்க்கப்பட்டனர்; எஞ்சியவர்கள் புறத்துள்ள பிணியாளர்களாகக் (out-patient) கருதி சிகிச்சையளிக்கப்பட்டனர். எதிரில் வந்து கொண்டிருந்த ஒரு வண்டிக்கு வழிவிடுவதற்காக, இச் சரக்குப் பேருந்து சாலையின் இடக்கோடிக்கு வந்தது. . . இந்தச் சாலை புதிதாகச் செப்பனிடப்பட்ட சாலையாகையால், சாலை ஓரப் பகுதி சரிந்துவிட்டதாகத் தெரிகிறது. இதன் காரணமாகச் சரக்குப் பேருந்து கவிழ்ந்தது.



இறந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் இழப்பீடு கொடுப்பதைப் பொறுத்தவரையில், இச் சரக்குப் பேருந்து அனுமதிச் சீட்டிலுள்ள நிபந்தனைக்கு முரணாகப் பயணிகளைக் கள்ளத்தனமாய் ஏற்றிச் சென்றதால் ஈட்டுறுதி நிறுவனம் (Insurance Company) இழப்பீடு அளிக்க முன்வரும் எனத் தோன்றவில்லை. எனவே, இதற்கு ஆகும் செலவினைச் சரக்குப் பேருந்தின் உரிமையாளரே ஏற்கவேண்டிவரும். இந்த விபத்தில் இறந்தவர்களின் வாரிசுகளுக்கும், காயமடைந்தோருக்கும் இழப்பீடு கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அதிகாரி, சரக்குப் பேருந்து உரிமையாளருக்கு அறிவுரை வழங்கியுள்ளார். இறந்தவர்களின் வாரிசுகள், காயமடைந்தவர்கள் ஆகியவர்களின் பெயரும், முகவரியும் சேலம் வட்டாரப் போக்குவரத்து அதிகாரியிடமிருந்து கிடைத்தவுடன், இழப்பீடு கொடுக்கப்படுவதற்கு நடுவர் நீதி மன்றமாக அமைந்துள்ள மாவட்ட நீதிபதியிடம் அவர்கள் தங்கள் கோரிக்கைகளைக் கொடுக்குமாறு அவர்கட்கு ஆலோசனை கூறப்படும் என்றும் தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அதிகாரி அறிவித்துள்ளார்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த கோயம்புத்தூர், சேலம், தருமபுரி மாவட்டங்களிலிருந்து பல்லாயிரக் கணக்கான யாத்திரிகர்கள் புகழ்பெற்ற மாதேஸ்வரர் ஆலயத்திற்கு ஆண்டுதோறும் சிவராத்திரியின்போது செல்கின்றனர். இந்த ஆண்டிலும் இத் திருவிழாவை முன்னிட்டு சேலத்திற்கும், குளத்தூருக்குமிடையில் கூடுதல் பயணங்களை மேற்கொள்ள 73 பேருந்துகளுக்கு சேலம் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி தற்காலிக அனுமதிச் சீட்டு வழங்கினார். இத் திருவிழாவை முன்னிட்டு குளத்தூரில் மோட்டார் வண்டி உதவி மேற்பார்வையாளர் ஒருவரும், மேட்டூரில் மோட்டார் வண்டி உதவி மேற்பாவையாளர் இருவரும் நியமிக்கப்பட்டனர். இவர்களைத்தவிர போக்குவரத்தினை முறைப்படுத்துவதற்காகவும் சரக்குப் பேருந்துகளில் பிரயாணிகளைக் கள்ளத்தனமாய் ஏற்றிச் செல்வதைத் தடுப்பதற்காகவும் மேட்டூரிலும், குளத்தூரிலும் காவல் துறை அதிகாரிகள் பலர் நியமிக்கப்பட்டனர். சேலம் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி, போக்குவரத்து ஏற்பாடுகளை முறைப் படுத்துவதற்காக 26—2—1968, 27—2—1968 தேதிகளில் மேட்டூரிலேயே தங்கி இருந்தார். இக் கால அளவில் பயணிகளை ஏற்றிச் சென்ற 15 சரக்குப் பேருந்து வண்டிகள் இந்த அலுவலக நேரிடைப் பணியாளர்களிடம் பிடிப்பட்டன.

இத்தகைய முறைகேடுகள் கண்டுபிடிக்கப்படும்பொழுது, கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறும், சந்தைகளின்பொழுதும், திருவிழாக்களின்பொழுதும் சரக்குப் பேருந்துகள் அனுமதியின்றிப் பயணிகளையும் கள்ளத்தனமாக ஏற்றிச்

[திரு. மு. கருணாநிதி] [1968 மார்ச் 30

செல்கின்ற நிகழ்ச்சிகளை அறிவிக்குமாறும், வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுக்குப் போக்குவரத்து ஆணையர் கட்டளை பிறப்பித்துள்ளார். கள்ளத்தனமாகப் பயணிகளை ஏற்றிச் செல்வதை விழிப்புடன் கவனித்துக் கண்டு பிடிப்பதற்காக நேரிடைப் பணியாளர்களைப் போதிய எண்ணிக்கையில் நியமிக்குமாறும் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுக்குக் கட்டளை இடப்பட்டுள்ளது.

சரக்குப் பேருந்து வண்டிகளின் உரிமையாளர்களும், பொது மக்களும் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து, விதிகளைப் பின்பற்றி நடக்கவேண்டும்.

## (viii) வடார்க்காடு மாவட்ட பற்றுக்குறை வட்டங்களில் அரிசி விலை உயர்வு

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசர பொதுமுக்கியம் வாய்ந்த கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :—

"வடார்க்காடு மாவட்டம், குடியாத்தம், வேலூர், திருப்பத்தூர் ஆகிய மூன்று தாலுக்காக்கள் உணவுப் பற்றுக்குறை தாலுக்காக்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால் அங்கு இதரத் தாலுக்காக்களிலிருந்து அரிசி கொண்டுவந்து விற்பனை செய்ய முடியாத அளவுக்குக் கட்டுப்பாடு இருப்பதாலும், போதுமான அளவுக்கு அரிசி கொடுக்காததாலும் அரிசி விலை உயர்ந்துள்ளது".

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** வடார்க்காடு மாவட்டத்தில் வேலூர், குடியாத்தம், திருப்பத்தூர் வட்டங்கள் பற்றுக்குறை வட்டங்கள். எனினும், அங்கு வெளிச் சந்தையில் போதுமான அரிசி நியாய விலைக்குக் கிடைக்கிறது. தற்போது அறுவடை நடைபெறாததால் விலையில் சிறிது ஏற்றம் இருக்கிறது. ஆனால் சென்ற ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவ்விலை ஏற்றம் குறைவாகவே இருக்கிறது. சென்ற ஆண்டு கிச்சிலி சம்பா புழுங்கல் அரிசி வேலூரில் ஒரு படி ரூ. 1-81 காசாகவும், பச்சரிசி ரூ. 1-87 காசாகவும் திருப்பத்தூரில் புழுங்கல் அரிசி ரூ. 1.90 காசாகவும், பச்சரிசி ரூ. 2.10 காசாகவும், குடியாத்தத்தில் புழுங்கல் அரிசி ரூ. 1-80 காசாகவும், பச்சரிசி ரூ. 1-88 காசாகவும், விற்றது. தற்போது வேலூரில் புழுங்கல் அரிசி படி ரூ. 1.50 காசாகவும், பச்சரிசி ரூ. 1-80 காசாகவும், திருப்பத்தூரில் புழுங்கல் அரிசி ரூ. 1-75 காசாகவும், பச்சரிசி ரூ. 1-85 காசாகவும், குடியாத்தத்தில் புழுங்கல் அரிசி ரூ. 1.75 காசாகவும் பச்சரிசி ரூ. 1.87 காசாகவும் விற்கிறது.

இந்த விலை ஏற்றம் சாதாரணமாக வாணிபத் துறையில் ஏற்படக் கூடியதுதான். ஒரு வட்டத்திலிருந்து மற்றொரு வட்டத்திற்கு அரிசி, நெல் எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டிருப்பது தான் காரணம் என்று கூறுவது பொருத்தமற்றது. இவ்வட்டங்



1968 மார்ச் 30]

[திரு. கே. ஏ. மதியழகன்]

களில் கிடைக்கக்கூடிய அரிசியுடன், உபரி வட்டங்களிலிருந்து குறிப்பிட்ட அளவு அரிசி கொண்டுவருவதற்கு வியாபாரிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. மாதம் ஒன்றுக்கு வேலூர், ஆம்பூர், திருப்பத்தூர் ஆகிய இடங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் 300 டன் அரிசியும், வாணியம்பாடிக்கு 200 டன் அரிசியும், குடியாத்தத்திற்கு 100 டன் அரிசியும், பேர்ணம்பட்டிற்கு 50 டன் அரிசியும் எடுத்துச் செல்ல வியாபாரிகளுக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

வெளி வட்டங்களிலிருந்து பற்றுக்குறை வட்டங்களுக்கு எடுத்துச்செல்ல அனுமதித்துள்ள அளவு போதுமானதாக உள்ளது. இதை அதிகப்படுத்த வேண்டும் என்று பொது மக்களிடமிருந்து வேண்டுகோள் ஏதும் வரவில்லை. இங்கு அரிசியின் விலை குறைவாக இருப்பதன் காரணமே வெளி வட்டங்களிலிருந்து குறிப்பிட்ட அளவு அரிசி கொண்டுவர அனுமதிக்கப்பட்டதேயாகும்.

ஒரு வட்டத்திலிருந்து மற்றொரு வட்டத்திற்கு அரிசி, நெல் எடுத்துச் செல்ல உள்ள தடையை நீக்க வேண்டுமென்று கூறப்படுகிறது. இம்மாவட்டத்தில் தற்போது அதிக அளவில் அறுவடை நடைபெறவில்லை. இத்தடை நீக்கப்படுவது கொள் முதல் வேலைகளுக்கு உகந்ததல்ல. மேலும் இது பல வட்டங்களில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள அரிசியை வெளிக் கொணர ஏதுவாயுள்ளது. ஏப்ரல் 15-ம் தேதிக்குப் பிறகு அறுவடை ஆரம்பமாகி விடும். அதற்கிடையில் போக்குவரத்துத் தடையை நீக்குவது சரியல்ல. மேலும் பற்றுக்குறை வட்டங்களிடையே அரிசி எடுத்துச் செல்ல தடை ஏதும் இல்லை. மற்றும் 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ந் தேதி முதல் வேலூரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும், 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ந் தேதி முதல் குடியாத்தத்திலும் குடும்பக் கார்டு முறை இருந்து வருகிறது. மேற்கூறியவற்றிலிருந்து வேலூர், குடியாத்தம், திருப்பத்தூர் வட்டங்களில் அரிசியின் விலை அதிகமான அளவுக்கு உயர்ந்து விடவில்லை என்பது தெளிவு. இப்பொழுது கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது உசிதமுமல்ல.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** மூன்று தாலுகாக்களுக்கும் ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. போதுமான அளவுக்கு பாசன வசதி கிடையாது. ஏறக்குறைய 100 அடி ஆழத்தில் தண்ணீரை இறைத்துதான் அங்கே கரும்பும், வாழையும் பயிராகி வருகிறது. இருபது சத வீதம்தான் நெல் சாகுபடி. அதையும் கொள்முதல் செய்துவிட்டு போதுமான அளவுக்கு அரிசி கொடுக்கவில்லை என்று சொன்னால் அதனால் மக்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். நான் 24-ம் தேதியன்று குடியாத்தத்திற்குச் சென்றிருந்தேன். மட்ட அரிசி விலை ரூபாய் 2, கிச்சிலி சம்பா அரிசி ரூபாய் 2.40, 2.60 விலையில் பி. ப. 1-00

கடையில் விற்கிறது. பொதுமக்களிடமிருந்து எந்தவிமான மகஜரும் வரவில்லை என்று சொல்லப்பட்டது. நானே கொடுத்திருக்கிறேன். பொது மக்களிடமிருந்து வந்த மகஜரைக் கொடுத்திருக்கிறேன். அரசியல் கட்சியினரிடமிருந்து வந்த மகஜரைக் கொடுத்திருக்கிறேன். அரிசி வியாபாரிகளிடமிருந்து வந்த மகஜரை கொடுத்திருக்கிறேன். நானும் எழுதிக்கொடுத்திருக்கிறேன். சுமார் 10, 16 லெட்டர்ஸ் கொடுத்திருக்கிறேன். அப்படியிருந்தும் பொது மக்களிடமிருந்து மகஜர் வரவில்லை என்று சொல்லி அமைச்சருக்கு தவறான செய்தி கொடுக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் எந்த அளவுக்கு உண்மையான ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெரியவருகிறது. தயவுசெய்து, மீண்டும் அதை மறுமுறை பரிசீலனை செய்து போதுமான அளவுக்கு அரிசி கொடுக்கவேண்டும், அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சருக்குத் தவறான செய்தி கொடுக்கப்பட்டுள்ளது என்று சொல்லுங்கள். அதை நடவடிக்கைக் குறிப்பில் அப்படித் திருத்திக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பொதுவாக அங்கிருக்கிற நிலையை மாண்புமிகு உறுப்பினர் அறிவார்கள், மற்றவர்களும் அறிவார்கள். அந்தப் பகுதி தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. அதிக வெள்ளாமை இல்லாத பகுதி என்பதை மறுப்பதற்கில்லை. அது எல்லைப்புறத்தில் இருக்கிறது. அதனையொட்டி ஆந்திரப் பகுதி இருக்கிறது, அங்கிருந்துதான் வருகிறது என்று சொல்வார்கள். மேல் தோற்றத்திற்கு அப்படித் தெரியலாம். ஆனால் அது நெல் விளைகிற ஆந்திரப்பிரதேசம் அல்ல. மேட்டாங்காடான ஆந்திரப் பிரதேசம் அவர்கள் பக்கத்தில் இருக்கிறது. ஆகவே, ஆந்திராவிலிருந்து நெல் வருகிறது என்று சொல்வதற்கில்லை. நான் உண்மையான நிலையைத்தான் சொல்கிறேன். ஏதோ தவறான கருத்துக்களைக் கொடுத்துவிட்டார்கள் என்பது அல்ல. நிலைமைகள் நன்றாகத் தெரியும், மற்ற இடங்களைவிட சிரமங்கள் இருக்கின்றன என்ற காரணத்தினால், போதிய அளவு அரிசி கொண்டு வருவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. மற்ற நிலைமைகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஓரளவுக்கு ஆந்திராவுக்குப் போகிறது, காவல் நிலையங்கள், சோதனைச் சாவடி இவைகளையெல்லாம் மீறி, அம்மாதிரி வியாபாரிகள் செய்கிறார்கள். விலை இறங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. விளைவங் கோடுப் பகுதியில் மலையாள எல்லைப்புறம்போல் அங்குள்ள அருங்குணங்கள் இந்த பகுதியில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையையும் மனதில் கொண்டு கண்டிப்பாக வேண்டிய அளவுக்கு அரிசி கிடைப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைமட்டும் சொல்லிக்கொள்கிறேன்.





## (ix) உதகமண்டலத்தில் குடி தண்ணீர்த் தட்டுப்பாடு.

திரு. ஏ. எம். ராஜா : சட்டப்பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

“நீலகிரி மாவட்டத்தின் தலைநகரமான ஊட்டியில் குடி தண்ணீர் இல்லாமல் மக்கள் பெருத்த கஷ்டப்படுவதுமல்லாமல், கோடை வாசஸ்தலமாகிய இப்பகுதியில் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் இந்தியாவின் பல பகுதிகளிலும் இருந்து ஏராளமான பொது மக்கள் வந்து தங்குவதால், குடிதண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.”

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாக இப்பொருள் பற்றி மிக அக்கறையுடன் அரசு கவனம் செலுத்தி வருகிறது. உதகமண்டலத்தில் நீர் பற்றுக்குறை உள்ளது என்று அரசுக்குத் தெரிந்த உடனே பொதுச் சுகாதாரப் பொறியியல், மற்றும் நகராட்சிப் பணித்துறைத் தலைமைப் பொறியாளர் இதனை ஆய்ந்து அறிக்கையனுப்புமாறு பணிக்கப்பட்டார். அவர் பூர்வாங்க ஆய்வு நடத்தி சற்றேறக்குறைய 36 லட்சம் ரூபாய் செலவில் இரு பகுதிகளாக முடிக்கக்கூடிய ஒரு திட்டத்தைத் தம் பரிந்துரையுடன் அனுப்பியுள்ளார். முதற் பகுதியின் செலவு சுமார் 30 லட்சம் ரூபாயாகும். சில நாட்களுக்கு முன் இங்கு வந்திருந்த நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவருட்பட இதுபற்றி தொடர்புள்ள எல்லா அலுவலர்களுடன் நான் விரிவாக விவாதித்தேன். இத்திட்டத்திற்காகக் கொடுக்கப்படவிருக்கும் கடன் தொகையை அடைப்பது குறித்து உதகமண்டலம் நகராட்சி ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். இத்திட்டத்தை முறைப்படி நகராட்சி மன்றம் ஒப்புக்கொண்டு தனது பரிந்துரையுடன் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பவேண்டுமென்பது இம்மன்றத்துக்குத் தெரிந்ததே. இத்திட்டத்தின் பல்வேறு தொழில் நுட்பக் கூறுகள் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையிலுள்ளன. அதனை மிக விரைவில் முடிப்பதற்கு ஆவன செய்யப்பட்டு வருகிறதென இம்மன்றத்திற்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

1959-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் உதகமண்டலத்திற்கு ஒரு வடிகால் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 2,50,000 ஆகும். இத்திட்டம் 1967ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் முடிக்கப்பட்டது. செப்டம்பர் 14-ம் தேதியன்று திட்டம் உபயோகத்திற்கு கொண்டு வரப்பட்டது. மற்ற இடங்களுக்கு இத்திட்டத்தை விஸ்தரிப்பதற்கான ஆய்வு வேலை நடைபெற்று வருகிறது.

Dr. H. V. HANDE : I am very happy to hear these things. Will the Hon. Minister be able to tell us whether the tourists who will be coming from the next month onwards will be getting enough water and what the source of water supply is?

The Hon. Thiru S. J. SADIQ PASHA : The Collector has been asked to take proper action.

### (x) திருச்சி நகரில் காலரா பரவுதல்

திரு. எம். பூபதி: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசர பொது முக்கியமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஜனத்தொகை கொண்ட திருச்சி நகரில் வாழும் மக்களில் நூற்றுக்கணக்கான பேர்கள் கொடிய நோயான காலராவால் பாதிக்கப்பட்டதால் பலர் இறந்து விட்ட விஷயம்".

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி நகராட்சிப் பகுதி, காலரா பரவலாக ஏற்படும் பகுதியாகும். இப்பகுதியில் நீர் வழங்குவதற்கான வசதி இருந்த போதிலும், அநேகமாக ஒவ்வோர் ஆண்டு முதல் மூன்று திங்களில் இப்பகுதியில் காலரா பரவுகிறது.

திருச்சிராப்பள்ளி நகராட்சிப் பகுதியில் காலரா பரவியிருப்பதாக இந்த ஆண்டு 22—4—1968-ம் தேதியன்று ஐயுறவு ஏற்பட்டது. அது முதற்கொண்டு 16—3—1968 தேதி வரை 263 பேருக்கு காலரா கண்டதாகவும், இதில் 18 பேர் மாண்டதாகவும் தெரிகிறது. குடிசைப் பகுதிகளிலும் வாழ்க்கைத்தரம் குறைந்த ஏனைய பகுதிகளிலிருந்துதான் பெரும்பாலும் காலரா கண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 16—3—1968 தேதி வரை காலரா தடுப்பு ஊசிகள் 1,57,440 பேருக்குப் போடப்பட்டுள்ளன. இப்பணி மேலும் நிறைவேறி வருகிறது. இவ்வாறு காலரா ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டவுடன் சுகாதாரப் பணி—குடும்ப நலத்திட்ட கூடுதல் இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த சுகாதார ஆராய்ச்சி அதிகாரி நிலைமையைச் சரிவரக் கண்டறிவதற்காக 1968 பிப்ரவரி முதல் வாரத்தில் அனுப்பி வைக்கப்பட்டார். அதன் பின்னர் பொதுச்சுகாதார உதவி இயக்குநரும் (S E.D.) திருச்சிராப்பள்ளிக்குச் சென்று நிலைமையை நேரில் பார்வையிட்டார். காலரா தடுப்பு ஏற்பாடுகளும், கட்டுப்பாடு நடவடிக்கைகளும் மேற்கொள்வதற்காக, நகராட்சிச் சுகாதார அதிகாரிக்கும், ஏனைய பொதுச்சுகாதாரப் பணியாளருக்கும் தேவையான உத்தரவுகளைப் பிறப்பித்தார். சூழ்நிலைச் சுகாதாரம் தரம் குறைந்துள்ள பகுதிகளில் சிறப்பாக நாட்டம் செலுத்துமாறும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. உணவகங்களிலும், சிற்றுண்டிச் சாலைகளிலும்,





சுகாதாரத்தையும், தூய்மையையும் மேம்படுத்துவதிலும் சிறப்பாக நாட்டம் செலுத்தப்பட்டுள்ளது. நகராட்சியின் பணியிலுள்ள 16 கோட்ட மேற்பார்வையாளர்களும், காலரா சிகிச்சைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும், சுகாதார உதவியாளர்களிலிருந்து 5 காலரா மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த நகராட்சியின் ஏனைய 11 சுகாதார உதவியாளர்களும், காலரா சிகிச்சைப் பணியையே கவனித்து வருகின்றனர். மேற்கூறிய பணியாளர்களின் பணியினை 4 தேர்வுத்தர சுகாதார மேற்பார்வையாளர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். ஊசி போடுவது தவிர, நீர் நிலையில் குளோரின் கலத்தல், மருந்து தூவி கிருமி நீக்குதல், நோயாளிகளைத் தனிப்படுத்தி சிகிச்சையளித்தல் முதலான கட்டுப்பாடு நடவடிக்கைகளும் முறைப்படி நிறைவேற்றப்பட்டன. மாவட்டச் சுகாதார அதிகாரியும், திருச்சிராப்பள்ளி நகராட்சிச் சுகாதார அதிகாரியும் நிலைமையை விழிப்புடன் கவனித்து வருமாறும், காலரா பீடித்த பகுதிகளிலும், பீடிக்காத பகுதிகளிலும் இயன்ற அளவில் எல்லா மக்களுக்கும் ஊசி போட்டு, காலராவை இயன்ற விரைவில் கட்டுப்படுத்திக் குறைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட பொதுச்சுகாதாரப் பணியாளரின் பணியினைக் கணடிப்புடன் மேற்பார்வையிடுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். உணவகங்களிலும், சிற்றுண்டிச் சாலைகளிலும் தூய்மை பேணப்படும் பொருட்டு, அவற்றைக் குறித்த காலத்திற்கொருமுறை சென்று பார்வையிடும்படி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. நிலைமை தொடர்ந்து விழிப்புடன் கவனிக்கப்பட்டு வருகிறது. காலரா மேலும் பரவுவதைத் தடுப்பதற்காக எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு முதல் அமைச்சர் கவனத்திற்கு திரு. க. இராமமூர்த்தி ஒரு காரியத்தைக் கொண்டு வரவேண்டும். ஆனால், அவர் இடத்தில் இல்லாததால், கவன ஈர்ப்புத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

### (xi) மதுரை மாவட்டத்தில் தண்ணீர் விநியோகம் அடிக்கடி நிறுத்தப்படுதல்.

Thiru M. RAJANGAM : Mr. Speaker, Sir, I call the attention of the Hon. the Minister for Public Health to a matter of urgent public importance, namely, the frequent stoppage of water supply on several occasions in the Combined Water Supply Scheme in Madurai district in areas like Gudalur, Cumbum, Pudupatti, Hanumanthanpatti, Uthamapalayam, Chinnamanur and Kamaya Gounrdanpatti, Markayankottai, etc., and the consequent difficulties experienced by the public in those areas especially ladies on account of drinking of non-protected water available and the necessity to take immediate and urgent steps to solve this problem.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Mr. Speaker, Sir, a Comprehensive Water Supply Scheme for the following places was sanctioned in 1955 at an estimated cost of Rs. 43.75 lakhs. The scheme has been put to beneficial use in 1958 :—

(1) Gudalur;
(2) Cumbum;
(3) Kamaya Goundanpatti;
(4) Pudupatti;
(5) Hanumanthanpatti;
(6) Uthamapalayam;
(7) Markayankottai; and
(8) Chinnamanur.

The source of supply is the tail race from the Periyar Power House. During closure period for attending to repairs to irrigation works there will be little or no flow in the river thus making the water-supply off-take not functioning properly. In order to facilitate the diversion of surface flow of water, a bed dam across Periyar river just below the off-take arrangements is being constructed. Proposals for constructing two stand pipes, one at Gudalur and the other at Uthamapalayam are under preparation. When the works on construction of bed dam and stand pipes are completed, the water-supply to Cumbum and other Panchayats will be maintained without interruption.

*திரு. மா. இராசாங்கம் :* தலைவர் அவர்களே, விவசாயப் பாசனத்திற்கு வசதி செய்து கொடுப்பதற்காக, பொதுப்பணியிலிருந்து வாய்க்கால் வெட்டி, அந்த முறையில் தண்ணீர் தட்டுப்பாட்டைத் தடுக்க நடவடிக்கை நிறைவேற்றுவதுபோல; குடிநீர் வசதிக்கும் வாய்க்கால் வெட்டி தண்ணீர் வசதி செய்து கொடுக்க முயற்சி மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* உறுப்பினருடைய கருத்தையும் மனதில் கொண்டு, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

## (xii) காரைக்குடி முனிசிபல் பகுதியில் உணவில் விஷக் கலப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதிய மருத்துவ வசதி அளிக்கப்படாமை

THIRU S. MEYYAPPAN : Sir, I call the attention of the Hon. the Minister for Public Health to a matter of urgent public importance, namely, " about 120 persons of Meenakshipuram area in Karaikudi Municipal limit were affected by food poisoning on 6th March 1968 and as there was no adequate space and medicine in the Government Hospital they were not able to be given immediate, proper medical aid and the necessity to expedite the proposal to shift the hospital to Gandhi Maligai and provide all medical facilities ".



THE HON. THIRU S. J. SADIQ PASHA : Mr. Speaker, Sir, one hundred persons were affected by food poisoning out of which one boy died in his own house. The remaining 99 persons were brought to the hospital of which 33 persons were treated as out-patients and 66 as in-patients. Of these, one boy died and eight persons were taken at their own request to Government Erskine Hospital, Madurai by Departmental van. The remaining 57 persons continued as in-patients and were progressing well.

The District Medical Officer, Ramanathapuram who visited Karaikudi on 7th March 1968 with a baggage of drugs likely to be essential from the Government Headquarters Hospital, Ramanathapuram, examined all the in-patients there along with the doctors from medical colleges at Madurai and neighbouring institutions. The District Health Officer who was there earlier had help the doctors in-charge with purchase of essential drugs, etc., from his funds. Only one child aged 5 years succumbed to the poisoning, in the hospital in spite of best treatment accorded. Thus, none of the affected persons was prevented from getting medical aid for want of space and medicines in the Government hospital, Karaikudi.

In G.O Ms. No. 1437, Health, dated 23rd August 1964 while sanctioning the provincialisation of the Municipal General Hospital, the Government ordered among other conditions, that the entire Municipal Office building at Karaikudi known as " Gandhi Maligai " and two to three acres of land round about the buildings, equipment, etc., should be made by means of a registhe Municipal Council. It was also ordered that the transfer of buildings, equipment, ec., should be made by means of a registered conveyance deed which should be executed by the Municipal Council.

The Director of Health Services and Family Planning has reported that the Hospital has not yet started functioning in Gandhimaligai as the necessary conveyance deed has not been executed by the Municipality.

*திரு. சா. மெய்யப்பன் :* சார், விளக்கத்திற்கு நன்றி. ஆனால், மாற்றுவதற்கு உத்தரவு போட்டு, ரூபாய் 82,000 தான் அதற்கு அரசினர் சாங்ஷென் செய்திருக்கிறார்கள். ஆகவே, மொத்தம் ரூபாய் 4.5 இலட்சம் கேட்டதற்கு ரூபாய் 82,000 தான் சாங்ஷன் ஆகியிருப்பதால், மாற்றப்படவில்லை. அதற்காகத்தான் நான் இந்த விஷயத்தை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். ஆகையினால், அதைச் சீக்கிரம் மாற்றுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அப்படி மாற்றி விட்டால், மதுரையிலிருந்து 60 மைல் வந்து போகவே பொழுதெல்லாம் போய்விடுகிறது. ஆகவே சீக்கிரமாக இந்த மாற்றம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினர் அவர்களும், இன்னும் அவரைச் சார்ந்தவர்களும் ஏற்கனவே இதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். காந்தி மாளிகைக்கு மாற்ற நடவடிக்கைகள் விரைவாக எடுக்கும்படி, மாவட்ட அதிகாரிக்கு உத்தரவு இடப்பட்டிருக்கிறது. மேற் கொண்டு நடவடிக்கை விரைவாக எடுக்கப்படும்.

### 8. அறிக்கைகள் அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கடந்த ஆண்டுக்கான ஆய்வுக் குழுக்களின் அறிக்கைகள் அவைக்கு அளிக்கப்படுகின்றன. முதலில், பொதுக்கணக்காய்வுக் குழுவின் அறிக்கையை திரு. பெ. மலைச்சாமி அளிக்கிறார்கள்.

**(i) மின்சாரவாரியத்தின் 1962-63-ல் இருந்து 1964-65 வரையுள்ள கணக்குகள் குறித்து பொதுக்கணக்காய்வுக் குழுவின் III அறிக்கை.**

Thiru P. MALAICHAMY : Mr. Speaker, Sir, I beg to present the Report of the Committee on Public Accounts on the Audit Reports on the Accounts of the Madras State Electricity Board for the years 1962–63 to 1964–65.

**(ii) மீனளம் பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் நான்காம் அறிக்கை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை திரு. எஸ். இராமச்சந்திரன் அளிக்கிறார்கள்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் மதிப்பீட்டுக் குழுவின் மீனளம் பற்றிய 4-வது அறிக்கையை வைக்கிறேன்.

**(iii) அரசினர் உறுதிமொழிக் குழுவின் இரண்டாம் அறிக்கை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, அரசினர் உறுதி மொழிக் குழுவின் அறிக்கையை திரு. கே. எஸ். கோதண்ட ராமய்யா அவர்கள் அளிப்பார்கள்.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, on behalf of the Chairman of the Committee on Government Assurances, I present the Second Report of the Committee (Fourth Assembly) for the year 1967–68.

**(iv) சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் இரண்டாம் அறிக்கை**

Thiru R. N. RANGANATHAN : Hon. Speaker, Sir, on behalf of the Committee on Subordinate Legislation, I present the Second Report of the Committee (Fourth Assembly) for the year 1967–68.



**(v) திரு. டி. மார்டின் மீதான அவையுரிமைக் கேள்வி பற்றிய அவையுரிமைக் குழுவின் தாற்காலிக அறிக்கை**

**புலவர் கா. கோவிந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மார்டின் அவர்கள் மீதான உரிமைப் பிரச்சினைபற்றிய அவையுரிமைக் குழுவின் தாற்காலிக அறிக்கையை பேரவைமுன் அளிக்கிறேன்.

### 9. அவையுரிமைத் தீர்மானம்.

**திரு. டி. மார்டின் மீதான அவையுரிமைக் கேள்வி பற்றிய அவையுரிமைக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றல்**

**புலவர் கா. கோவிந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே,

"திரு. டி. மார்டின் மீதான அவையுரிமைக் கேள்விபற்றிய அவையுரிமைக் குழுவின் தாற்காலிக அறிக்கையை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

**புலவர் கா. கோவிந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, "முன் மொழியப்பட்டுள்ள தீர்மானத்தில் கண்டுள்ள பரிந்துரைகளை இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்கிறது." என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, பரிந்துரைகளை பேரவை ஏற்றுக்கொண்டது.

### 10. அறிவிப்புகள்.

**(i) அலுவல் ஆய்வுக் குழுவிற்குத் தேர்தல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டப் பேரவையின் 193 (1) விதியின்கீழ் 1968-69-க்கு பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

1. மாண்புமிகு பேரவைத் தலைவர் . . . (தலைவர்)
2. மாண்புமிகு முதலமைச்சர்.
3. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்.
4. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி.
5. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்.
6. மாண்புமிகு திரு. செ. மாதவன்.
7. புலவர் கா. கோவிந்தன்.
8. திரு. து. ப. அழகமுத்து.
9. திரு. பி. ஜி. கருத்திருமன்.
10. திரு. பி. கே. மூக்கையா தேவர்,

11. திரு. எ. பாலசுப்பிரமணியன்.
12. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
13. டாக்டர் ஹபிபுல்லா பேக்.
14. திரு. க. ர. நல்லசிவன்.
15. திரு. ஆ. கு. சுப்பையா.

(ii) நடைமுறை விதிக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டப் பேரவையின் 229(1)-வது விதியின்கீழ் பின்வரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கின்றேன் :—

1. திரு. வி. எஸ். எஸ். மணி.
2. திரு. இரெ. இளம்வழுதி.
3. திரு. பெ. சீனிவாசன்.
4. திரு. ஜே. எஸ். இராசு.
5. திரு. கி. ஜயராமன்.
6. திரு. அ. ப. சன்முகசுந்தரம்.
7. திரு. க. ந. இராமச்சந்திரன்.
8. புலவர் கா. கோவிந்தன்.
9. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.
10. திரு. ப. மகாதேவன்.
11. திரு. ஆர். கருப்பையா.
12. டாக்டர் எச். வி. ஹாண்டே.
13. திரு. என். வரதராஜன்.
14. திரு. எம். சுரேந்திரன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலுவல் காரணமாக இக் குழுவின் தலைவர் ஆவர்.

(iii) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டப் பேரவையின் 201 (1)-வது விதியின்கீழ் பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்:—

1. திரு. இராம. அரங்கண்ணல்.
2. திரு. ஓ. பி. இராமன்.
3. திரு. பி. என். பரமசிவ கவுண்டர்.
4. திரு. எம். கந்தசாமி.
5. திருமதி வி. ப. பழனியம்மாள்.



6. திரு. எல். கணேசன்.
7. திரு. கே. விநயகம்.
8. திரு. இல. பலராமன்.
9. திரு. பி. கே. மூக்கையா தேவர்.
10. திரு. என். சங்கரய்யா.

சட்டப் பேரவையின் 202-வது விதியின்கீழ் திரு. எம். கந்தசாமி அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(iv) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1968-69-ம் ஆண்டுக்குரிய அவையுரிமைக் குழுவிற்குத் தமிழ்நாடு சட்டப் பேரவையின் பன்னிரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு கீழ்க் கண்ட பன்னிரண்டு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பட்டார்கள் :—

1. திரு. தி. பொன்னுமலை.
2. திரு. எம். இரத்தினசபாபதி.
3. திரு. கே. வி. சுப்பையா.
4. திரு. என். சோமசுந்தரம்
5. திரு. சி. கோவிந்தராசன் (நெல்லிக்குப்பம் தொகுதி).
6. திரு. பா. நாகலிங்கம்.
7. திரு. எஸ். பி. பச்சையப்பன்.
8. திரு. எம். வில்லியம்.
9. திரு. எஸ். இராமலிங்கம்.
10. திரு. வி. கே. இராமராசன்.
11. திரு. கே. எம். இராமசாமி கவுண்டர்.
12. திரு. ஜி. நடராசன்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருப்பதால், 1968-69-ம் ஆண்டு அவையுரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

சட்டப் பேரவையின் 183 (4)-வது விதிக்கிணங்க, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

## (v) அவையினர் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1968-69-ம் ஆண்டுக்கான அவையினர் குழுவிற்கு இப்பேரவையின் பதினொன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினொன்று உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள் :—

1. திரு. கரு. சீமைச்சாமி.
2. திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்.
3. திரு. ஏ. அ. சுப்பராஜா.
4. திரு. எம். சுப்பிரமணிய கவுண்டர்.
5. திரு. இரா. மாணிக்கவாசகம்.
6. திரு. பி. ஜெயராமன்.
7. திரு. சோ. அழகர்சாமி.
8. திரு. பெ. பெரியசாமி.
9. திருமதி எஸ். குப்பம்மாள்.
10. திரு. என். எஸ். வி. சித்தன்.
11. திரு. கொ. இர. ஞானசம்பந்தன்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருப்பதால், 1968-69-ம் ஆண்டு அவையினர் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

பேரவையின் 221 (1)-வது விதிக்கிணங்க :—

1. திரு. கே. சகாதேவக் கண்டர்
2. திரு. சி. நஞ்சன்
3. திரு. ரா. ரா. முனுசாமி
4. திரு. எஸ். கணேசன்

ஆகியவர்களை இக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

பேரவையின் துணைத் தலைவர் அவர்கள், அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவர்.

## (iv) அரசினர் உறுதிமொழிக் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டப் பேரவையின் 214 (1)-வது விதியின்கீழ், பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அரசினர் உறுதிமொழிக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்.

1. திரு. க. மு. இராசகோபால்.
2. திரு. நா. நாச்சிமுத்து.



3. திரு. வி. சின்னசாமி.
4. திரு. ஏ. வெள்ளத்துரை.
5. திரு. தே. கேசவலு.
6. திரு. மு. க. து. நடராசன்.
7. திரு. கே. விநாயகம்.
8. திரு. அ. மாரிமுத்து.
9. திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி.
10. திரு. கே. என். குமாரசாமி.

சட்டப் பேரவை விதிகளைச் சேர்ந்த 215 (1)-வது விதியின் கீழ் திரு. கே. விநாயகம் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

## (vii) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்
## (Committee on Public Accounts.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1968-69-ம் ஆண்டுக்குரிய பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு சட்டப் பேரவையின் பதினைந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, பதினைந்து உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பட்டுள்ளனர். அவர்களின் பெயர்கள் ஆவன :—

1. திரு. கரு. சீமைச்சாமி.
2. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
3. திரு. ஆ. கு. சுப்பையா.
4. திரு. செ. பாலசுப்பிரமணியன்.
5. திரு. என். ராஜாங்கம்.
6. திரு. ஏ. எம். இராஜா.
7. திரு. இரா. நாராயணன்.
8. திரு. டி. மார்டின்.
9. திரு. முனு. ஆதி.
10. திரு. பி. ஜி. கருத்திருமன்.
11. திரு. க. இராமமூர்த்தி.
12. திரு. சி. வீரமணி.
13. திரு. ந. தருமலிங்கம்
14. திரு. ஏ. சி. நரசிம்மன்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1968-69-ம் ஆண்டு பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன். அவர்களோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்களும் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

மேலும், சட்டப் பேரவையின் 174-வது விதிக்கிணங்க, திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

### (viii) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1968-69-ம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இப்பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினான்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள் :—

1. திரு. கே. பி. எஸ். மணி.
2. திரு. எஸ். ராமசாமி நாயுடு.
3. திரு. வி. கே. கோதண்டராமன்.
4. ஹாஜி ம. மு. பீர் முஹம்மது.
5. திரு. எம். பன்னீர்செல்வம்.
6. திரு. எஸ். எம். துரைராஜ்.
7. திரு. எம். கண்ணப்பன்.
8. திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ.
9. திரு. எஸ். சிவசுப்பிரமணியன்.
10. திரு. எஸ். அக்னிராஜு.
11. திரு. ஆ. கோவிந்தராசன்.
12. திரு. ஜே. ஜேம்ஸ்.
13. திரு. ஆ. முனியாண்டி.
14. திரு. அ. பொ. அரசு.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1968-69-ம் ஆண்டு மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன். அவர்களோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பொதுக் கணக்காய்வுக் குழுவின் தலைவர் அவர்களும் அவர்களுடைய அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.



மேலும், சட்டப் பேரவையின் 165-வது விதிக்கிணங்க திரு. எஸ். அக்னிராஜு அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

### 6. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ii) சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் சட்ட மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழுவில் சட்ட மேலவையின் ஐந்து உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான தீர்மானம் ஒன்றை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"1968-69-ம் ஆண்டுக்குரிய சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் சேர்த்துக்கொள்வதற்கென, ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்து, அவ்வாறு நியமனம் செய்த உறுப்பினர்களின் பெயர்களை, பேரவைக்கு அறிவிக்குமாறு, இப்பேரவை, சட்ட மேலவைக்கு பரிந்துரை செய்கிறது."

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

### 11. அரசினர் மசோதாக்கள்

### (i) தமிழ்நாடு 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா (ச. பே. மசோதா எண் 2-68)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அரசினர் மசோதாக்கள். தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா (ச. பே. மசோதா எண். 2/68) வை, மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I beg to move—

"That the Madras General Sales Tax (Second Amendment) Bill *, 1968 (L.A. Bill No. 2 of 1968) be taken into consideration ".

Sir, under item 62 of the First Schedule to the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 199),5 sugarcane was liable to a single point tax of four per cent at the point of last purchase in the State. The Government decided to increase the rate of tax to seven per cent. The increase is expected to fetch an approximate additional revenue of Rs. 21 lakhs per annum to the Government.

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 19th February 1968.

[Thiru K. A. Mathialagan] [1968 மார்ச் 30

In order to give effect to the above decision the Government have issued a notification under sub-section (1) of section 59 of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959), amending item 62 of the First Schedule to the Act. The amendment has come into force on the 25th January 1968. Under sub-section (2) of section 59 of the Act, a Bill to replace the notification has to be introduced during the present session of the Legislature.

The Bill now before the House accordingly contains necessary provisions in this regard. Sir, I commend the motion for the acceptance of the House.

பிற்பகல் 1-30 **திரு. சா. மெய்யப்பன் :** தலைவர் அவர்களே, இந்தப் பொருள்களுக்கு 4 சத விதம் என்று இருந்த வரியை 7 சத விதம் என்று உயர்த்தும்படியான மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். எப்போதுமே வரி உயர்வுக்கு ஓர் அளவு, ஓர் வரையறை இருக்க வேண்டும். நான்கு சத விதம் என்று இருப்பதை ஏழு சத விதம் என்று கிட்டத்தட்ட ஒரு மடங்கு உயர்த்தியிருப்பது சரியல்ல. இதனால் யாருக்கு மிகுந்த கஷ்டம் ஏற்படுகிறது என்று பார்க்க வேண்டும். சர்க்கரை அல்லது சீனி வகையறுக்கள் லக்ஸுரி ஆர்ட்டிகின்ஸ் என்று சொல்ல முடியாது. ஏழை எளியவர்களும் உபயோகிக்கக்கூடிய பொருள். அதுவும் பெரும்பாலும் குழந்தைகளுக்குத் தேவைப்படுவது. ஒருசில இடங்களில் இப்போதே ஒண்ணேமுக்கால் ரூபாய்க்குக் கொடுத்துவிட்டு மற்ற இடங்களில் உள்ளவர்கள் 3, 3½ ரூபாய் கொடுத்து வாங்கும்படியாக விட்டிருக்கிறோம். மூன்றரை ரூபாய் கொடுத்து எப்படி ஏழை எளியவர்களால் வாங்க முடியும்? வியாபாரிகள் இதனால் பாதிக்கப்படாவிட்டாலும் வாங்குபவர்கள் பாதிக்கப்படக்கூடும். இவற்றின்மீது வரியே போடாமல் இருந்தால் நல்லது. போடுகிறது என்கிற போது 7 சத விதம் என்று போடாமல் இப்போது இருப்பது 4 சதவிதம் என்றால் 3½ சத விதம் என்று குறைத்துப்போடும்படியாக நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். இதன் மூலம் 21 லட்சம் வருகிறது என்று கருதாமல் என்னுடையதிருத்த பிரேரணையை ஏற்றுக்கொள்ள அமைச்சர் அவர்கள் புனராலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதை ஒரு பெரிய வரியாகக் கருதக் கூடாது. இந்த மாநில மக்களுக்கு சர்க்கரை கிடைக்க வேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது. இரண்டு ரூபாய் என்று இருப்பதைக் கூட ஒண்ணே முக்கால் என்ற அளவுக்குக் குறைத்து ஓரளவுக்கு எல்லா இடங்களிலும் கிடைக்கும்படியாகச் செய்திருக்கிறது. இதன்மூலம் வருகிற வருமானம் மிகவும் குறைவு. அதையும் கூட கடைசி முனையில் வசூல் செய்துகொள்ளும்படியாக இந்த வரி போடப்படுகிறது. விவசாயிகளுக்கும் பாதகம் இராது, மக்களுக்கும் இராது. எல்லா மாநிலங்களையும் காட்டிலும் நம்



1968 மார்ச் 30] [திரு. கே. ஏ. மதியழகன்]

மாநிலத்தில்தான் சர்க்கரை விநியோகம் நல்லமுறையில் மத்திய சர்க்காருக்கே வழிகாட்டியாக இருந்து வருகிறது. ஆகவே, இதை ஒரு பெரிய வரி இனமாகக் கருதாது திருத்தத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சா. மெய்யப்பன் :** தலைவர் அவர்களே, நான் என்னுடைய திருத்தத்தை வற்புறுத்தவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பிரிவு வாரியாக எடுத்துக் கொள்கிறபோது அதை எடுத்துக் கொள்கிறேன். இப்பொழுது அவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 2/68) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

### பிரிவு—2

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சா. மெய்யப்பன் அவர்களுடைய திருத்தத்தை அவர் வற்புறுத்தவில்லையாதலால் அது பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்படுகிறது. திரு. க. இராமமூர்த்தி அவர்கள் அவையில் இல்லாததால் அவருடைய திருத்தம் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

பிரிவு 2 அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

### 10. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ix) தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இனாம்கள் (துணை) திருத்த மசோதா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1968-ம் ஆண்டு இனாம்கள் (துணை) திருத்த மசோதாவை இப்பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

11. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

**தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இனும்கள் (துணை) திருத்த மசோதா (ச. பே. மசோதா எண் 4-68)**

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Speaker, Sir, I beg to move—

'That the Madras Inams (Supplementary) Amendment Bill* 1968 (L.A. Bill No. 4 of 1968) be taken into consideration.'

Sir, the Madras Inams (Supplementary) Act, 1963 (Madras Act 31 of 1963) provides for the determination of the questions whether any non-ryotwari area is or is not an existing inam estate, a part village inam estate, a minor inam or a whole inam village in the Pudukottai area. The above Act extends to the whole of the State of Madras except the Transferred Territory, viz., Kanyakumari district and the Shencottah taluk of the Tirunelveli district. It is a legislation ancillary to the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963) and the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963). The provisions of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 have been extended to the Transferred Territory by the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Act, 1964 (Madras Act 33 of 1964). The Settlement Officer, Madurai, has reported that some of the inamdars in the Transferred Territory whose lands have been notified under the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, may come up with application for determination of the tenure of the lands and unless the Madras Inams (Supplementary) Act, 1963, is in force in the said territory, no statutory decision can be taken in such disputed cases. The Government have therefore decided to extend the provisions of the Madras Inams (Supplementary) Act, 1963 also to the Transferred Territory. The Bill seeks to give effect to this decision Sir, I have now briefly indicated the object of the legislation. I request the House to accept the motion.

**மாண்புமிகு பேரவைத்தலைவர்:** "அவை முன்னுள்ள கேள்வி: "1968-ம் ஆண்டு இனும்கள் (துணை) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 4/68) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2, பிரிவு 3, பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டன.

*Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 9th March 1968.



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்த மசோதா நிறைவேற்றப்படமென்று கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

10.. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**1968-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மாவட்ட நகராட்சிகள் —ஊராட்சிகள் (திருத்த) மசோதா (ச.பே. மசோதா எண் 5/68).**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1968-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மாவட்ட நகராட்சிகள்—ஊராட்சிகள் (திருத்த) மசோதாவை இப்பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

11. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(iii) 1968-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மாவட்ட நகராட்சிகள்—ஊராட்சிகள் (திருத்த) மசோதா (ச.பே. மசோதா எண் 5/68).

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1968-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மாவட்ட நகராட்சிகள், ஊராட்சிகள் (திருத்த) மசோதாவை* (சட்டப் பேரவை மசோதா எண். 5/68) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

உள்ளாட்சி மன்றங்களுக்குப் பொருந்துகிற சட்டங்களின் தற்போதைய விதித் துறைகளின்படி, அதாவது 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம், 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1958-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் ஆகிய இச் சட்டங்களின் விதித் துறைகளின்படி, தமிழ் நாட்டுச் சட்டமன்றப் பேரவைத் தேர்தல் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்கள், சென்னை மாநகராட்சி மன்றம், நகராட்சி மன்றங்கள், ஊராட்சிகள் ஆகியவற்றின் தேர்தல்களுக்காகப் பின்பற்றப்படுகின்றன. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்கீழ் சட்டமன்ற வாக்காளர் பட்டியல்களை ஆண்டுதோறும் திருத்தும்படி 1966-ம் ஆண்டு வரையில் செயலில் இருந்ததால் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்துவதற்காக நாளது தேதி வரையில் தயாரித்துள்ள வாக்காளர் பட்டியல்கள் எப்போதும் கிடைத்தன. 1950-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 21-வது பிரிவு, 1966-ம் ஆண்டு 47-ம் எண் மத்தியச் சட்டத்தால் திருத்தப் பட்டுள்ளது. திருத்த விதித்துறையின்படி, வாக்காளர் பட்டியல்

*18—3—1968 தேசிய தமிழக சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

[திரு. மா. முத்துசாமி] [1968 மார்ச் 30

கள் ஆண்டுதோறும் திருத்தப்படுவதில்லை. ஒரு சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்கான வாக்காளர் பட்டியல்கள் ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கு முன்பு அல்லது இடைத் தேர்தலுக்கு முன்பு அவ்வாறு திருத்தப்பட வேண்டும் என்று தேர்தல் பொறுப் பாண்மைக் கழகம் கட்டளை இடும்போது திருத்தப்படுகின்றன.

சென்னை மாநகராட்சி மன்றத்திற்கும், நகராட்சி மன்றங் களுக்கும் தேர்தல்கள் அண்மையில் நடைபெறவிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். ஊராட்சிகளுக் கான அடுத்த சாதாரணத் தேர்தல்கள் 1970-ல் நடத்தப்படும். கடைசியாக, தற்போது உள்ள சட்ட மன்றப் பேரவை வாக்காளர் பட்டியல்கள், 1967-ல் மாநில, மத்திய சட்ட மன்றங்களுக்கு நடந்த பொதுத் தேர்தல்களுக்கென 1966-ல் தயாரிக்கப்பட்டவையும், சில இடைத் தேர்தல்களுக்காக 1967-ல் தயாரிக்கப்பட்டவையும் ஆகும். இந்தப் பட்டியல்கள் நாளது தேதி வரையில் திருத்தப்பட்டவை யல்ல. உள்ளாட்சி மன்றத் தேர்தல்களுக்குரிய சட்ட மன்றப் பேரவை வாக்காளர் பட்டியல்களை நாளது தேதிவரையில் திருத்து வதற்காக, அப் பட்டியல்களைத் தனிப்பட்ட முறையில் திருத்தும் பணியைதான் ஏற்கத் தயாராக இல்லை என்று தேர்தல் பொறுப் பாண்மைக் கழகம் இந்த அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளது. ஆனால், சட்ட மன்றப் பேரவை வாக்காளர் பட்டியல்களுக்குப் பொருந்துகிற மாநிலச் சட்டங்களைத் திருத்திக்கொள்ளலாம் என்று தேர்தல் பொறுப்பாண்மைக் கழகம் கருத்து தெரிவித்துள்ளது. உள்ளாட்சி மன்றங்களின் தேர்தல்களை நடத்துவதற்கு முன்பு நாளது தேதி வரையில் திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பது மிகவும் அவசியமாகும். அப்போதுதான் வாக்களிக்கத் தகுதியுள்ள எல்லோரும் தனது வாக்கைப் பதிவு செய்யும் வாய்ப்பைப் பெறுவர்.

இந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு வாக்காளர் பட்டியல்களைத் தனிப்பட்ட முறையில் தயாரிப்பதற்கென அல்லது திருத்துவதற் கென 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திலும், தமிழ் நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திலும், தமிழ் நாடு 1958-ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்திலும் தற்போது எந்த விதித்துறையும் இல்லை. எனவே, உள்ளாட்சி மன்றத் தேர்தல்களுக் கென மாநில அரசாங்கம் அவசியமெனக் கருதும்போதெல்லாம் வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பது, திருத்துவது, மாற்றுவது குறித்து வகை செய்வதற்காக மேற்படி சட்டங்களில் திருத்தங்கள் செய்யக் கருதப்படுகிறது.

தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 75-வது பிரிவைத் திருத்த இந்த வாய்ப்பு பயன்படுத்திக்கொள்ள பட்டுள்ளது. நகராட்சி அலுவலர்களும், பணியாளர்களும் துறை யின் விதிகளை மீறினாலும், அவர்களது கவனக் குறைவிற்காகவும்,



1968 மார்ச் 30] [திரு. மா. முத்துசாமி]

அவர்களுக்குத் தண்டனைகள் விதிக்க நகராட்சியின் நிர்வாக அதிகாரிக்கு மேற்படி 75-வது பிரிவு அதிகாரமளிக்கிறது. ஆனால். நகராட்சி அலுவலரின் அல்லது பணியாளரின் கவனக் குறைவு காரணமாகவோ அசட்டை முதலியவை காரணமாகவோ நகராட்சிக்கு ஏற்பட்ட பண இழப்பு முழுவதையுமோ அதன் ஒரு பகுதியையோ அத்தகைய அலுவலர் அல்லது பணியாளர்களின் சம்பளத்திலிருந்து வசூலிக்க நிர்வாக அதிகாரிக்கு அந்தப் பிரிவு வெளிப்படையாக அதிகாரத்தை வழங்கவில்லை. ஒரு நகராட்சி மன்றத்திற்கு ஏற்பட்ட பண இழப்பை நகராட்சி மன்ற அலுவலரின் சம்பளத்திலிருந்து அல்லது பணியாளரின் சம்பளத் திலிருந்து வசூலிக்கும் தண்டனையை விதிக்க நிர்வாக அதிகாரிக்கு அதிகாரம் இல்லை என்று 1968-ம் ஆண்டு 1108-ம் எண் ரிட் மனுவில் (கே. ராமச்சந்திரன், சேலம் நகராட்சி ஆணையாளரும் மற்றொரு வரும்) சென்னை உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்ததன் விளைவாக, அத் திருத்தம் செய்யப்படுகிறது. எனவே, நகராட்சி மன்றத்திற்கு ஏற்படும் பண இழப்பை நகராட்சி மன்ற அலுவலர், அல்லது பணியாளரின் சம்பளத்திலிருந்து வசூலிக்கும் தண்டனையை விதிக்க நிர்வாக அதிகாரிக்கு அதிகாரமளிக்கும் வகையில், தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 75-வது பிரிவில் குறிப்பான விதித் துறையொன்றை இயற்றக் கருதப்படுகிறது.

இப் பிரேரணையைப் பேரவை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடி ஆக்ட் சம்பந்தப்பட்ட விஷயத்திலே சப் கிளாஸ் 3-க்கு நான் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அது என்னவென்றால்

In sub-clause 3, line 42, delete the words 'or part', and in lines 43–44, after the words "from the pay of", the words "pursue stringent action" shall be added.

என்று இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் என்ன நினைக்கிறேன் என்றால், ஏதாவது ஊழல், பில் கலெக்டர்கள் சம்பந்தபட்ட வரையில் பொருளாதாரப் பிரச்சினையில் ஊழல் இருக்கிறதென்றால் ஆயிரம் அல்லது இரண்டு ஆயிரம் அல்லது 10 ஆயிரம் ரூபாய் அடித்துவிடுகிறார். அவருக்கு புரமோஷன் இல்லாமல் அவருடைய சம்பளத்திலிருந்து ஹோல் அல்லது பார்ட் என்ற முறையில் பிடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கை நடத்த வேண்டும், அதனால் 10, 20 பர்சன்ட் சம்பளத்தில் பிடித்துத்தர வேண்டுமென்று சொல்கிறார்கள். 5,000 ரூபாய் வசூல் செய்ததிலேயோ அல்லது அலுவலகத்திலிருந்த பணத்தை கையாடியோ அந்த நிலைமை ஏற்பட்டால் கொஞ்சம் கொஞ்சம் ஆக சம்பளத்தில் பிடித்துக் கொள்ளலாம் என்ற நிலைமை வந்தால் சில வருடங்களில் அந்த ஊழல் மேலும்

அதிகமாக ஏற்படக்கூடிய அளவுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கக் கூடிய நிலைமை இதில் இருக்கிறது. கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று என்னுடைய திருத்தம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அப்படிச் செய்தால் பொருளாதாரச் சம்பந்தப் பட்ட உத்தியோகத்தில் இருக்கக் கூடாது, ஏதோ எடுபிடியாள் மாதிரி இருக்க வேண்டும், புரமோஷன் கொடுக்கக் கூடாது. அவரிடத்திலே பொருளாதார சம்பந்தமான பிரச்சினை இருக்கக் கூடாது. இது மாதிரிச் செய்தால், சம்பளத்தைப் பிடித்துக் கொண்டு விடுகிறீர்கள், நாம் 10 ஆயிரம் ரூபாய் அடித்து ஒரு சைட் பிஸ்னஸ் ஆரம்பித்து அதன்மூலம் சம்பாதித்துக் கொண்டிருக்கலாம் என்று வரும். ஓப் ஹோல் கொடுக்கக்கூடிய அளவுக்குத்தான் இதிலே பார்க்கும்பொழுது இருக்கிறது. ஆகவே கடுமையான நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு இருக்க வேண்டும் என்ற என் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்

After the words " withhold promotion ", the words " recover the whole or part of any pecuniary loss caused to the municipal council from the pay of " shall be inserted.

என்று Government amendment இருக்கிறது தான் கொடுத்தி ருக்கிற திருத்தத்தில்

In line 42, delete the words ' or part ' and in lines 43-44, after the words " from the pay of " the words " pursue stringent action " shall be added.

என்று இருக்கிறது. கொஞ்சம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது வேலையிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்ற அளவுக்கு இருக்க வேண்டும். கேஸைப் பொறுத்து அது இருக் கிறது. எல்லா கேஸ்களிலும் கண்மூடித்தனமாக அப்படிச் செய்ய வேண்டுமென்று நான் சொல்லவில்லை. படிப்படியாக விதி விலக்குக் கொடுத்து மீண்டும் மீண்டும் ஊழலில் ஈடுபடக்கூடிய அளவுக்கு தெரியக்கூடிய அந்த நபர்களை வேலையிலிருந்து நீக்கக்கூடிய கடுமையான நடவடிக்கை எடுத்துத்தான் ஆகவேண்டும். பில் கலெக்டர்கள் இருக்கிறார்கள் என்றால் 5 ஆயிரம் ரூபாய் கையாடல் செய்துவிட்டால் அவருடைய சம்பளத்திலிருந்து அதற்காகக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிடிக்கலாம் என்ற அளவுக்கு நிலைமை இருக்குமானால் வருஷக்கணக்கில் அது போய்க் கொண்டே இருக்கும். இரண்டு மூன்று வருஷத்தில் 5 ஆயிரம் அடித்தவர் 20 ஆயிரம் ரூபாய் அடிக்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே, இதைச் சிந்தித்துப் பார்த்து திருத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தைக் கொடுத்தற்கான காரணத்தை மாண்புமிகு உறுப்பினர் அறிவார்கள் என்று கருதுகிறேன். ஒரு



நகராட்சி ஆணையாளரும் வேறு ஒருவரும் 1963-ஆம் ஆண்டில் தங்களிடத்திலே தொகையை வசூலிக்கக் கூடாது என்று வழக்கு மன்றத்திலே வழக்குப் பதிவு செய்து அந்த ரிட் மனுவின்மீது உயர் நீதிமன்றம் அவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு அளித்து விட்டதனால் அரசாங்கத்திற்கு அதில் உரிமையைக் கொடுக்க வேண்டுமென்று கோருகிற பிரச்சனையாகும் இது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய நடவடிக்கைகளை இது போன்ற நடவடிக்கைகள் இல்லாமலேயே மேற்கொள்ள அதிகாரம் எப்பொழுதும் அரசாங்கத்திற்கு இருக்கிறது. எடுத்துக் கொண்ட பணத்தை வசூலிப்பதற்கு உத்தியோக சம்பளத்திலிருந்து பெறுவதற்கான வாய்ப்பு இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொடுக்கப்படுகிறது. தவறுகள் செய்தால் தண்டனை வழங்குவதற்கு அவர்கள் கொடுத்திருக்கிற திருத்தத்தை மேற்கொள்ளாமலேயே வாய்ப்புகள் இருக்கிற காரணத்தால் அவர்களுடைய திருத்தத்தை வலியுறுத்திச் சேர்க்க வேண்டு மென்று வற்புறுத்தாமல் இதை நிறைவேற்றித் தருவதற்கு உதவுமாறு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னுள்ள கேள்வி:

"1968-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மாவட்ட நகராட்சி கள்—ஊராட்சிகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 5/68) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

## பிரிவு 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் கொடுத்த திருத்தத்தை வற்புறுத்தவில்லையாதலால், அது பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்ட தாகக் கருதப்படுகிறது.

பிரிவு 3 அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 4 அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இந்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

6. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(iii) 1965-ம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலத்தை ஒப்பேற்றுதல்) விதிகள்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I beg to move—

" That the following amendment to the Madras Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965, published with Revenue Department Notification, S.R.O. No. A. 1240 of 1965, dated the 25th November 1965, at pages 1284-1296 of Part V of the *Fort St. George Gazette,* dated the 1st December 1965, which it is proposed to issue under sub-section (1) of section 94 of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Madras Act 58 of 1961), be approved under the proviso to the said sub-section.

*Amendment.*

In clause (*b*) of rule 2 of the said rules, the words " in the case of Coimbatore district, the Joint Collector, Coimbatore " shall be omitted ".

According to the provisions contained in Rule 3 of these rules, the Authorised Officers have to submit proposals for assignment of surplus lands to the District Revenue Officers for sanction. In Rule 2 (*b*) of these Rules, the term ' District Revenue Officer ' has been defined to mean in the case of Coimbatore District, the Joint Collector, Coimbatore. At the time when the Rules were issued, there was a Joint Collector at Coimbatore, but now there is a District Revenue Officer in the place of the Joint Collector. It is, therefore, proposed to delete the words ' in the case of Coimbatore District, the Joint Collector, Coimbatore ' so that the District Revenue Officer, Coimbatore, may pass orders on the proposals for assignment of surplus lands.

Sir, I request the House to accept the motion.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

12. அரசினர் தனித்தீர்மானம்.

தமிழ்நாடு கூட்டுறவு மத்திய நில அடைமான வாங்கியினால் வெளியிடப்பட்டுள்ள கடன் ஈட்டுறுதி ஆவணங்கள் மீது மாநில அரசு அளிக்கும் உத்திரவாதத் தொகையை அதிகரித்தல்

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவு மத்திய நில அடைமான வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள கடன் ஈட்டுறுதி ஆவணங்கள் குறித்து மாநில அரசு அளிக்கும் அதிக அளவு உத்தரவாதத் தொகையை 1934-ம்



ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் சட்டத்தின் 6-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்கீழ் ரூ. 45 கோடி (ரூபாய் நாற்பத்தைந்து கோடி மட்டும்) மொத்த முக மதிப்பு வரையில் அதிகரிக்கலாமென்று மாநில அரசிற்கு இப் பேரவை பரிவுரை செய்கின்றது. வங்கி அவ்வப்போது மீட்டுக் கொள்ளும் கடன் ஈட்டுறுதி ஆவணங்கள் இதில் அடங்கா. இத்தகைய கடன் ஈட்டுறுதி ஆவணங்கள் அவை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 25 ஆண்டுகளுக்கு மேற்படாத கால அளவுக்கு வெளியிடப்பட்டதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு முறை எழுப்பப்படும் ஈட்டுறுதி ஆவணத் தொகுதி குறித்தும் இந்திய ரிசர்வ் வங்கியினால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள வட்டி வீதத்திற்கு மேற்படாத வட்டி வீதமே இந்தக் கடன் ஈட்டுறுதி ஆவணங்கள் முடிவு செய்யப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்துடன் இன்றய நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. 28—2—1968 அன்று தொடங்கிய கூட்டத் தொடர் இன்றுடன் முடிவடைகிறது. மாண்புமிகு அமைச்சர்கள், உறுப்பினர்கள் எல்லோருக்கும் எனது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒற்றிவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒற்றி வைக்கப்பட்டது.

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள். பிற்

*A. Statutory Rules and Orders.* பக

146. Notification issued with G.O. Ms. No. 2109, Home, dated the 3rd August 1967, exemption from payment of tax, certain vehicles belonging to the Central Electrochemical Research Institute, Karaikudi. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).] 1-5

147. Notification issued with G.O. R. No. 4923, Home, dated the 16th October 1967, exempting from payment of Motor Vehicles Tax the ' Fargo ' van and Chassis used by CARE, Madras, for purpose of testing its durability. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

148. Notification issued with G.O. Ms. No. 3205, Home, dated the 24th November 1967, exemption from payment of Motor Vehicles Tax, UNICEF vehicle bearing registration No. MDT 7928 and assigned to the District Medical Officer, Tirunelveli. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

149. Notification issued with G.O. Ms. No. 2467, Home, dated the 31st August 1967, exempting from payment of Motor Vehicles Tax, Andhra Pradesh based vehicles plying on inter-state route between Madras and Andhra Pradesh and passing through enclaves in Madras State. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

150. Notification issued with G.O. Ms. No. 3026, Home, dated the 4th November 1967, exempting from payment of Motor Vehicles Tax, UNICEF vehicle bearing registration No. MDB 3725 and assigned to the District Medical Officer, Coimbatore. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

151. Notification issued with G.O. Ms. No. 3204, Home, dated the 24th November 1967, exempting from payment of Motor Vehicles Tax, UNICEF vehicles bearing registration Nos. MDF 4538 and MDF 4539 and assigned to the District Health Officer, South Arcot, Cuddalore. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

@ 152. Notification issued with G.O. Ms. No. 1720, Land Acquisition, dated the 21st September 1967, making the rules regarding the issue of licences for storage possession, etc., of explosive and chemicals. *[Laid on the Table of the House under Section 348 (d) of the Madras City Municipal Corporation Act 1919 (Madras Act IV of 1919).]*

@ 153. *Notification issued with G.O. Ms. No. 2065, dated the 25th November 1967, regarding the appointment of special staff for constitution of rent Court. [Laid on the Table of the House under Sections 17 (3), 16 (2) and 61 (2) of the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 (Madras Act XXIV of 1956) Tanjore Pannaiyal Protection Act, 1952 (Madras Act 14 of 1952) and Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 (Madras Act 57 of 1961) respectively.]*

*B. Reports, Notifications and other papers.*

* 98. The Madras Appropriation (No. 3) Bill, 1968 (L.A. Bill No. 7 of 1968).

99. The report of the Committee on Public Accounts on the Audit Reports on the Accounts of the Madras State Electricity Board for the years 1962-63 to 1964-65.

100. The report of the Committee on Estimates on Fisheries.

101. The second report of the Committee on Government Assurances (Fourth Assembly).

@ Laid on the Table of the House on 19th March 1968.

* Despatched to Members on 27th March 1968.





102. The second report of the Committee on Subordinate Legislation (Fourth Assembly).

103. The Interim report of the Committee of Privileges on the matter of previlege against the Hon. Member Thiru T. Martin

## APPENDIX I.

[*Vide* answer to starred Question No. 360 on page 1.]

*A.*—

(a) The Government of India commended for adoption by all State Governments a scheme for the grant of educational concessions to children, adopted children and grand children by predeceased sons of political sufferers subject to the condition that the income of their parents or guardians from all sources does not exceed Rs. 3,600 per annum. This Government have accepted the scheme. The concessions granted under the scheme are as follows :—

(i) Full fee concession.

(ii) Scholarships in high schools and non-professional colleges.

*Residential scholarships—*

| *Name of course.* | * *Boarding and lodging charges:* | *Cost of books and special fees, etc.* | *Total:* |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | RS. | RS. | RS. |
| Standards IX to XI. | 300 | 35 | 335 per annum per pupil. |
| P.U.C. .. | 300 | 85 | 385 Do. |
| Degree Classes— | | | |
| First-year .. | 400 | 125 | 525 Do. |
| Second-year .. | 400 | 50 | 450 Do. |
| Third-year .. | 400 | 40 | 440 Do. |

* This boarding charges should be sanctioned up to a period of 10 months in any one year or for the actual period reckoned whichever is lower at Rs. 30 per mensem for pupils in Standards IX to XI and P.U.C. and at Rs. 40 per mensem in Degree Classes.

*Non-residential scholarships—*

| | RS. | |
|---|---|---|
| Standard IX to XI .. | 35 per annum | per pupil. |
| P.U.C. .. .. .. | 85 | Do. |
| Degree Classes— | | |
| First-year .. .. .. | 125 | Do. |
| Second-year .. .. .. | 50 | Do. |
| Third-year .. .. .. | 40 | Do. |

(iii) Scholarships in professional colleges/institutions and in industrial training schools/centres.

*Non-residential scholarships*—

The value of non-residential scholarships is fixed to cover—

(1) All items of special fees other than University Examination fees and Medical Inspection fees; and

(2) the cost of books purchased for each course, subject to the following **maxima** :—

| | | | |
|---|---|---|---|
| | | Rs. | |
| (a) | M.B.B.S. .. .. | 1,081 | for whole course. |
| (b) | B.D.S. .. .. | 1,087 | Do. |
| (c) | B. Pharm. .. .. | 487 | Do. |
| (d) | B.T. .. .. | .. | .. |
| (e) | Law F.L. .. .. | 51 | for whole course. |
| | B.L. .. .. | 73 | Do. |
| (f) | Engineering .. .. | 550 | Do. |
| (g) | B.V.Sc. .. .. | 1,000 | Do. |
| (h) | B.Sc. (Ag.) .. — | 650 | Do. |
| (i) | Industrial Training Courses. .. | 35 | per annum. |

The book allowance will be paid on the production of relevant bills supported by a certificate of essentiality or it is open to the institution itself to purchase and supply essential books to the scholars. Only text books (and not reference books) which are certified as essential by the heads of the institutions concerned should be purchased.

*Residential scholarships*—

| | |
|---|---|
| (1) Professional Colleges and Polytechnics. | Rs. 40 per mensem for a period of 10 months. |
| (2) Industrial Training Schools. | Rs. 25 per mensem for a period of 10 to 12 months depending upon the duration of the course. |

(b) All children of political sufferers who satisfy the conditions laid down are granted full fee concession.

The total number of scholarships available for each course o study has been fixed. As they are limited in number they cannot be granted to all those who apply for them. If the number of applications exceed the total number of scholarships tenable for a year the applicants' merit ranking besides their poverty is taken into account for the award of scholarships.



(c) Under Government of India Scholarship Scheme (Post-matric) for Backward Classes (Lower Income Group) scholarships are granted on the basis of poverty of the candidates irrespective of the caste, creed and course. The Scholarship for Lower Income Group students will be awarded on the basis of the total annual income from all sources of the parents/guardians of the applicant and not on the basis of caste. For this purpose, the applicant will be divided into 2 slabs one with income up to Rs. 1,500 per annum and the other with income on Rs. 1,500 but not exceeding Rs. 2,000 per annum except in the case of technical degree courses where the limit may be Rs. 2,400 per annum. Students from the first slab will be considered first for the grant of scholarship and if any amount is left over from the allotted funds, students from the second slab may be considered. The scholarships to the eligible students will be awarded on the basis that a student whose parents/guardians income is less gets precedence over the students whose parents/guardians income is more. In the highest slab of income which can be covered only partially with the limited funds at the disposal of the awarding authority, merit test may be applied.

பதில்—

(அ) அரசியல் தியாகிகளின் பிள்ளைகள், சுவீகாரப் பிள்ளைகள் இறந்துபோன பிள்ளைகள் மூலமான பேரப் பிள்ளைகள் ஆகியோருக்கு அவர்களுடைய பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர்களின் ஆண்டு வருமானம் எல்லா ஆதாரங்களிலிருந்தும் ரூ. 3,600-க்கு மேற்படக்கூடாது என்னும் நிபந்தனைக்குட்பட்டு, கல்விச் சலுகைகள் அளிக்கும் ஒரு திட்டத்தை இந்திய அரசு, மாநில அரசுகள் அனைத்திற்கும் பரிந்துரை செய்தது. இந்த அரசு இத் திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் சலுகைகள் பின்வருமாறு :—

(1) முழுச் சம்பளச் சலுகை.

(2) உயர்நிலைப் பள்ளிகளிலும், தொழில் கல்லூரியல்லாத கல்லூரிகளிலும் படிப்பு உதவித் தொகை.

தங்கிப் பயில்வோருக்கு படிப்பு உதவித் தொகை.

| வகுப்பின் பெயர். | *உண்டுறை விடுதிச் செலவுகள். | புத்தகச் செலவு, தேர்வுக் கட்டணங்கள் முதலியன. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ. | ரூ. |
| IX முதல் XI வகுப்புகள் .. | 300 | 35 | மாணவர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 335. |
| கல்லூரிப் புகுமுக வகுப்பு .. | 300 | 85 | மாணவர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 385. |

| வகுப்பின் பெயர். | *உண்டுறை விடு தி. செலவுகள். | புத்தகச் செலவு தனிக் கட்டணங் கள் முதலியன. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ | ரூ | ரூ |
| பட்டப் படிப்பு வகுப்புகள்— | | | |
| முதல் ஆண்டு .. | 400 | 125 | மாணவர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 525. |
| இரண்டாம் ஆண்டு .. | 400 | 50 | மாணவர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 450. |
| மூன்றும் ஆண்டு | 400 | 40 | மாணவர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 440. |

* உண்டிச் செலவுகள், ஓராண்டில் 10 மாத கால அளவு அல்லது கணக்கிடப்பட்ட உண்மையான கால அளவு இவ்விரண்டில் எது குறைவோ அந்தக் கால அளவுக்கு மாதம் ஒன்றுக்கு, IX முதல் XI வரையுள்ள வகுப்பு மாணவர்களுக்கும் கல்லூரி புகுமுக வகுப்பு மாணவர்களுக்கும் ரூ. 30-ம் பட்டப்படிப்பு வகுப்பு மாணவர்களுக்கு ரூ.40-ம் அனுமதிக்கபபட வேண்டும்.

**விடுதியில் தங்கிப் பயிலாத மாணவருக்குப் படிப்பு உதவித் தொகை**

| | | ரூ. |
|---|---|---|
| IX முதல் XI வரையுள்ள வகுபபுகள். | மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு | 35 |
| கல்லூரி புகுமுக வகுப்பு | ,, | 85 |
| பட்டப்படிப்பு வகுப்புகள்— | | |
| முதல் ஆண்டு .. | ,, | 125 |
| இரண்டாவது ஆண்டு .. | ,, | 50 |
| மூன்றுவது ஆண்டு .. | ,, | 40 |

(3) தொழில் கல்லூரிகளிலும் நிறுவனங்களிலும் தொழிற்பயிற்சிப் பள்ளிகளிலும் கூடங்களிலும் படிப்பு உதவித் தொகை.

**தங்கிப் பயிலா மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகை.**

தங்கிப் பயிலா மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிற படிப்பு உதவித் தொகையில் கீழ்கண்டவை அடங்கும்.—

பல்கலைக் கழகத் தேர்வுக் கட்டணம், மருத்துவச் சோதனைக் கட்டணம் அல்லாத சிறப்புக் கட்டணங்கள் அனைத்தும்;



(2) கீழ்க்கண்ட பேரளவுகளுக்கு உட்பட்டு ஒவ்வொரு படிப்புக்கும் வாங்கிய புத்தகங்களின் விலை :—

| | | | ரூ. |
|---|---|---|---|
| (அ) | எம.பி.பி.எஸ். .. | படிப்பு முழுவதற்கும் | 1,081 |
| (ஆ) | பி.டி.எஸ். .. | ,, | 1,087 |
| (இ) | பி. பார்மஸி .. | ,, | 487 |
| (ஈ) | பி.டி. .. | ,, | |
| (உ) | சட்டம்; எப்.எல். .. | ,, | 51 |
| (ஊ) | பி.எல். .. | ,, | 73 |
| (எ) | பொறியியல். .. | ,, | 550 |
| (ஐ) | பி.வி.எஸ்ஸி. .. | ,, | 1,000 |
| (ஒ) | பி.எஸ்ஸி, (வேளாண்மை) .. | ,, | 650 |
| (ஓ) | தொழில் பயிற்சிப் படிபபு. | ஆண்டு ஒன்றுக்கு | 3' |

புத்தகம் இன்றியமையாது தேவைப்படுகிறது என்ற சான்றுடன் புத்தகங்களை வாங்கியதற்கான விலைப் பட்டியல்களை அனுப்புவதன்மேல், புத்தகப்படி அளிக்கப்படும், அல்லது நிறுவனங்களே இன்றியமையா புததகஙகளை வாங்கி மாணவர்களுக்கு வழங்கலாம். நிறுவனங்களின் தலைவர்கள் இன்றியமையாதவை என்று சான்று அளிக்கும் பாடப் புத்தகங்கள் மட்டுமே (மேற்கோள் புத்தகங்கள அல்ல) வாங்கப்பட வேண்டும்.

**தங்கிப் பயில்வோருக்குப் படிப்பு உதவித் தொகை**

| | | |
|---|---|---|
| (1) | தொழில் கல்லூரிகளும் பாலிடெக்னிக்குகளும். | பத்து மாதக் கால அளவுக்கு ரூ. 40. |
| (2) | தொழிற் பயிற்சிப் பள்ளிகள். | படிப்புக் கால அளவைப் பொறுத்து 10 முதல் 12 மாதகால அளவுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 25. |

(இ) விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளையனைத்தையும் பூர்த்தி செய்யும் அரசியல் தியாகிகளின் பிள்ளைகள் அனைவருக்கும் முழுச் சம்பளச் சலுகை அளிக்கப்படுகிறது.

ஒவ்வொரு பாடமுறைக்கும் எத்தனை பேருக்கு உதவித் தொகை கொடுக்கப்படும் என்பது நிர்சயிக்கப்படுகிறது. இந்த எண்ணிக்கை வரையறுக்சப்பட்டிருப்பதனுல், படிப்பு உதவித் தொகை வேண்டுமெனக் கேட்போருக்கெல்லாம் அதைக் கொடுப்பதற்கில்லை, ஓராண்டில் படிப்பு உதவித் தொகை கொடுக்கப்படக் கூடியவர்களை விட அதிக எண்ணிக்கையுள்ளவர்கள் அதற்கு மனுச் செய்து கொண்டால், மாணவர்களின் ஏழ்மை தவிர அவர்களுடைய திறமை-தகுதி கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு, படிப்பு உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

(உ) இந்திய அரசின் படிப்பு உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் பின்னிலை வகுப்பினர்களைச் சேர்ந்த மெட்ரிக படிப்புக்கு மேற்பட்ட படிப்பு படிக்கும் (குறைந்த வருமானப் பிரிவின்படி) மாணவர்களுக்கு இனம், சமயம், வகுப்பு இவற்றைப் பாராமலே ஏழ்மையின் அடிப்படையில் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. குறைந்த வருமானத் தொகுதியைச் சேர்ந்த மாணவர்களுக்கு அவர்களுடைய பெற்றோருக்கு காப்புப் பொறுப்பாளருக்கு அனைத்து ஆதாரங்களிலிருந்தும் வரும் ஆண்டு மொத்த வருமானத்தின் அடிப்படையில் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறதே அன்றி ஜாதி அடிப்படையில் அல்ல. * இதற்காக மனுதாரர்கள்

இரு வகையினராகப் பிரிக்கப்படுகின்றனர். ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 1,500 வரை வருமானம் உடையோர் ஒரு வகையினராகவும்,
ரூ. 1,500-க்கு மேற்பட்டு ஆனால் ரூ. 2,000-க்கு மேற்படாத வருமான
முடையோர் மற்ற வகையினராகவும் பிரிக்கப்படுகின்றனர். ஆனால்
தொழில் நுட்பப் பட்டப்படிப்பைப் பொறுத்தவரையில், இந்த வரையறை
ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2.400 ஆகும். படிப்பு உதவித் தொகை அளிப்ப
தில் முதல் பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு முதலிடம் அளிக்கப்
படும். இவ்வாறு அளித்த பிறகு ஒதுக்கிய தொகையில் நிதி எஞ்சியிருந்
தால், இரண்டாவது பிரிவில் உள்ள மாணவர்களுக்குப் படிப்பு உதவித்
தொகை அளிப்பது குறித்து யோசிக்கப்படும். எந்த மாணவரின் பெற்றோர்
அல்லது காப்புப் பொறுப்பாளரின் வருமானம் மற்றொரு மாணவரின்
பெற்றோர் அல்லது காப்புப் பொறுப்பாளரின் வருமானத்தைவிடக் குறை
வாக உள்ளதோ அந்த மாணவருக்கே படிப்பு உதவித்தொகை முதற்கண்
வழங்கப்படும். படிப்பு உதவித் தொகை அளிக்கும் அதிகாரியிடம்
எஞ்சி இருக்கும் தொகையைக் கொண்டே உயர் வருமானப் பிரிவைச்
சேர்ந்த மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகை அளிக்க இயலும்.
இத் தொகை குறைவாக உள்ளதாலும். அதைக் கொண்டு ஒரு சிலருக்கே
படிப்பு உதவித் தொகை வழங்க முடியுமாதலாலும் இப் பிரிவில் அதிகக்
கல்வித் திறமையுள்ளவர்களுக்கே இந்த உதவித் தொகை வழங்கப்படும்.

# Index to Tamil Nadu Legislative Assembly Debates

THIRD SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

25th, 26th, 27th, 28th and 30th March 1968

Volume XIII (Nos. 1 to 5)

## A

PAGES

ACCIDENT— ...

Lorry, Kaveripuram, Compensation to victims (C.A.) ... ... . . ... ... 592–594

AGRICULTURE—

Agricultural produce, cess ... ... .. . ... 255–257

Agriculturists of Pattukkottai taluk, Remission of land revenue and postponement of recovery of loan (C.A.) ... ... ... ... ... 277–278

ALAGIRISAMY, THIRU S.—

Anti-Hindi agitation, compensation ... ... 29–33

Fixation of fair price for chillies and cotton in Ramanathapuram and Tirunelveli (A.M.) ... 571–572

Ministers, Code of Conduct ... ... ... 272–275

ANNADURAI, THIRU C. N.—

Announcement *re.* portions expunged (point of order) 536–539, 542

Appropriation (No. 2) Bill, 1968 ... ... ... 230, 459–60, 463, 485–497

Appropriation (No. 3) Bill, 1968. ... ... 329, 498

Budget, 1968–69, Voting—

District Administration and Miscellaneous ... 185

Head of State, Ministers and Headquarters staff—

State Legislature. ... ... ... 84–85, 86, 87–88, 89–90, 91, 92, 114–132

PAGES

ANNADURAI, THIRU C. N.—*cont.*
Chief Minister's visit to America, information to House. ... ... ... ... ... 454–455
Clash in Padrivedu Meldarpakkam in Chingleput district (A.M.) ... ... ... ... ... 438–439
D. S. G. (Final), 1967-68—Presentation ... 37–39
G. D. ... ... ... ... 317–321
House Surgeons and Medical Students in the City, strike (A. M.) ... ... ... ... ... 443–444
House Surgeons' strike (St.) ... ... ... 550
Katcha Theevu, ownership (C. A. St.) ... ... 35–36
Law and Order situation (A. M.) ... 448, 449–451
Mr. Speaker, absence from House (Point of order) 431–432
Re-opening of closed textile mills (St.) ... 549–550
Students—Bus Transport workers' clash—Adjournment Motion ... ... ... ... ... ... 452–453
Publication in 'Nava Mani' (Privilege matter) ... 554
(Statement) ... ... 177–181, 548–9
Suppression of facts in the statement made by the Chief Minister (Point of order) ... ... ... 435–436,
... ... ... ... ... ... 437

ANNAMALAI, THIRU S.V.M.—
Budget, 1968-69, Voting—
District Administration and Miscellaneous ... 204–206

ANTI-HINDI AGITATION—
All-India Radio, Hindi relays ... ... ... 25–33
Bus accident near Coimbatore ... ... ... 25–28
Compensation ... ... ... ... ... 29–33

AUTHIMOOLAM, THIRU D.S.—
Appropriation (No. 2) Bill, 1968 ... ... ... 467–474
Budget, 1968-69, Voting—Head of State, Ministers and Headquarters staff, State Legislature ... 77–81
Procurement in Ambasamudram taluk (A. M.) 439–440

B

BALARAMAN, THIRU L.—
Rupee a measure rice ... ... ... ... 404–412



PAGES

BALASUBRAMANIAN, THIRU S—
Budget 1968-69, Voting—
District Administration and Miscellaneous ... 186, 198–200
Clash between transport workers and students (A.M.) ... ... ... ... ... ... 182

BHOJAN, THIRU K—
Clash between transport workers and students (A.M.) ... ... ... ... — ... 182

BHUPATHY, THIRU M—
Cholera in Tiruchirappalli (C.A.) ... ... ... 598
Dharapuram Co-operative Spinning Mills, closure and retrenchment of workers (A.M.) ... ... 441–442

BHUVARAHAN, THIRU G.—
Budget, 1968-69, Voting—
Head of State, Ministers and Headquarters Staff State Legislature ... ... ... ... 81–83, 84, 86–87, 88, 89, 90, 91, 92–98

BILLS—
Appropriation (No. 2) Bill, 1968—
Message from Government, Int ... ... 230
Consid. ... ... ... ... ... 459–497
Passed ... ... ... ... ... 497
Appropriation (No. 3) Bill, 1968—
Message from Governor (Int). ... ... ... 329
Consid ... ... ... ... ... 498
Passed ... ... ... ... 498
City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1968—
Message from Governor
Consid., Consid., Motion ... ... ... ... 613–618
General Sales Tax (Second Amendment) Bill, 1968—
Motion to pass Consid. ... ... ... ... 609–611
Passed ... ... ... ... ... ... 611
Inams (Supplementary) Amendment Bill, 1968—
Message from Governor ... ... ... ... 611
Consid., ... ... ... ... ... ...
Motion to pass ... ... ... ... ... 612–613
Passed ... ... ... ... ... ...

BLOCK DEVELOPMENT OFFICERS—
Extension Officers (Industries), promotion ... 545–547

BRIDGES—
Construction across Manakudy lake ... ... ... 518–519
Kandugulam, widening ... ... ... ... 517–518
Kodamurutti river, widening ... ... ... ...518–519

C.

CALLING ATTENTION—
Agriculturists of Pattukkottai taluk, remission of land revenue and postponement of recovery of loan ... 277–278
Cholera in Tiruchirappalli ... ... ... ... 597–599
Collection of loans under soil conservation schemes, North Arcot district ... ... ... ... 458–459
Damage caused to paddy crops by birds and Tiruthuraipoondi area ... ... ... ... ... 183–184
Drinking water scarcity, Ootacamund ... ... 597–598
Failure of rains, postponement of kist, etc., in Tirunelveli district ... ... ... ... 586–587
Flood relief in Thanjavur district ... ... ... 455–458
Food poisoning treatment of victims ... ... 600–601
Frequest stoppage of water-supply in Madurai district ... ... ... ... ... ... 599–600
Inadequate supply of water to double crop lands, Thanjavur district ... ... ... ... 590–592
Katcha Theevu, ownership ... ... ... ... 35–36
Lorry accident, Kaveripuram, compensation to victims ... ... ... ... ... ... 592
Recovery of loan in Tiruchirappalli district, postponement ... ... ... ... ... 276
Redressal of grievances of weavers in Ramanathapuram and Tirunelveli ... ... ... ... 576–580
Relief to cyclone victims of Thanjavur, Ramanathapuram and Rameswaram and repairs to tanks ... 580–584
Rice in price of rice, Scarcity taluks in North Arcot district ... ... ... ... ... ... 594–596
Strike, Annamalai University students' hostel employees ... ... ... ... ... ... 584–586
Sugar mill, Amaravati, reopening ... ... ... 588–590

CHAIR—
Announcements—
Committee on Estimates, election to ... ... 608–609



CHAIR—cont.
Announcements—cont.
Committee on Govt. Assurances, nomination to 606–607
Committee of Privileges, election to ... ... 605
Committee on Public Accounts, election to ... 607–608
Commitee on Rules, nomination to ... ... 604
Committee on Subordinate Legislation, nomination to ... ... ... ... ... 604–605
House Committee, election to ... ... ... 605–606

RULINGS AND OBSERVATIONS—
Adjournment Motions :
*Clash between students and transport employees in the City* : After the Chief Minister made a statement on the action taken and proposed to be taken in the matter, the Chair held that it was not necessary to adjourn the business of the House to discuss the matter. ... ... ... ... ... 453
Withdrawn with the leave of the House after the Chief Minister made a statement to the House on the subject. ... ... ... ... 179–180
*Clash between the villagers, teachers and students of the High School in Padrivedu Meldarpakkam in Chingleput District* :
Consent was withheld on the ground that the matter did not involve more than the ordinary administration of the law. ... ... 439
*Damage and loss of property to the Madras Medical College (Men's) Hostel and the shooting in the Veterinary College and the C. N. T. Institute at Vepery* : Consent was withheld after the Leader of the House made a statement about the steps taken by the Government to give protection to the students and expressed the willingness of the Government to pay compensation. ... ... 573–576
*Decision taken by the House Surgeons of the General Hospital and the students of Medical Colleges in the City to go on strike* : Consent was withheld on the ground that the matter came under the day to day administration of the Government. ... ... 444

PAGES.

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Adjournment Motions—*cont.*

*Failure of crops in Nambiyur Panchayat area in Gobichettipalayam Taluk*: Consent was withheld on the ground that the subject had already been discussed in the same session. ... ... ... ... ... 441

*Fixation of basic price for chillies and cotton and the need for licensing marketing societies only to undertake their export*: Consent was withheld on the ground that the matter came under the ordinary administration of the Government. ... ... ... ... 571–572

*Law and Order situation in the City*: After a detailed statement made by the Chief Minister on the subject, the Speaker held that there was no necessity to adjourn the business of the House to discuss the matter. 444–451

*Methods adopted by officials in procurement of paddy in Ambasamudram Taluk*: Consent was withheld on the ground that the matter did not involve more than the ordinary administration of the law. ... ... ... 440

*Non-payment of wages and ration rice to workers of Janakiram Spinning Mills, Rajapalayam*: Consent was withheld on the ground that the matter came under the day to day administration of Government. 573

*Outbreak of fire in the houses of Harijans in Vadugakudi Village in Nannilam Taluk*: Consent was withheld on the ground that the matter did not involve more than the ordinary administration of the law. ... 441

*Reference to matters on which decision had been given in Speaker's chamber*: When once a decision had been given by the Chair in his chamber on an adjournment motion, it was not in order for a member to raise it in the House. ... ... ... ... ... 316



PAGES

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—cont.

Adjournment Motions—cont.

*Retrenchment of workers in the Co-operative Spinning Mills, Dharapuram, Coimbatore district*: Consent was withheld on the ground that the matter did not involve more than the ordinary administration of the law. 442

*Situation that had arisen consequent on the anti-social elements trying to prevent the maintenance of Law and Order after the recent clash between students and transport workers in the City*: After the Minister for Public Works made a statement, the member who gave notice of the adjournment motion withdrew it. ... ... ... ... 564–569

*Strike by Doctors and House Surgeons in Madras City and the District Headquarters and the hardships to patients in hospitals*: The Leader of the House stated that the Chief Minister and the Minister for Public Health had just then gone to the General Hospital and were engaged in finding a solution to the problem. Thereupon the member who gave notice of the adjournment motion withdrew it. ... ... ... ... 569–572

*Strike by Doctors to urge protection to students in the hostels which were attacked and the need for postponement of examination*: The Leader of the House stated that the Government had taken steps to remove fear from the minds of the students and afford them protection and that a decision on the postponement of examinations would be announced in consultation with the Vice-Chancellor of the University. Thereupon the member who gave notice of the adjournment motion withdrew it. ... 570–571

*Treatment meted out to subordinates in the office of the Collector of Chingleput*: Consent was withheld on the ground that the matter did not involve more than the ordinary administration of the law. ... ... [illegible]

PAGES

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—cont.

*Catching the eye of the Chair*: It is not in order for a member to go to the Speaker's Chair and request the Speaker to call him to speak. Members should only try to catch the eye of the Speaker. ... ... ... ... 257, 412

Debate—

*Allotment of time*: The allotment of time is decided by the Speaker in his chamber in consultation with the Leader of the House and the Leader of the Opposition. If a member has any complaint in regard to allocation of time, he should discuss it with the leader of his party. ... ... ... ... 103

*Personal matters*: Should not be raised. ... 471

*Relevancy*: Every speech must be strictly relevant to the matter before the Assembly. 473

On a member persisting to speak on a subject which was beyond the scope of the discussion on Supplementary grants, the Speaker reminded the member that he could create a situation in which the member could not speak, should he continue to persist in speaking in the same manner. ... ... ... 286–287

*Repetition*: Repetitions should be avoided. 469

*Scope and limitation*: A debate is intended for exchange of views. Every member is entitled to express his views. However, there was no place for anger in a debate. ... 98

Members cannot discuss in the House the conduct of the President, the conduct of the Governor and the conduct of the Speaker. ... 432

Decorum—

*Accusation*: A member enquired whether it was in order for a Minister to level the accusation that he spoke with the deliberate intention of preventing the proceedings of the House and requested that it should be expunged from the proceedings. Thereupon, the Chair said that when a member presisted in speaking in a particular man-



PAGES

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—cont.

Decorum—*cont.*

*Accusation*—cont.

ner despite the Chair's ruling that he should not speak in that manner, it would be deemed that it was intended to prevent the proceedings of the House and every member had the right to draw the attention of the Chair to it. ... ... ... ... 283–284, 286–287

Anger should be avoided in a debate. ... 98

Business of the House should be conducted without emotion and with patience. ... 400

*Personal reference*: *Reference to matters of* a personal nature should be avoided. ... 100

*Reference to Chair*: A reference made by a member to the Chair was ordered to be expunged from the Proceedings. The Chair rejected the explanation of the member that the expression used by him in Tamil had a particular meaning in English which was not objectionable, on the ground that there was lot of difference in the usage of the expression in Tamil and English. ... 32–33

The office of the Speaker should be respected and the Speaker should not be dragged into the discussion either in appreciation or in depreciation.

Certain references made by a member to the Speaker were ordered to be expunged by the Deputy Speaker. ... ... ... ... 97

*Speaker should not be challenged*: When a Member said that he was prepared to challenge the Speaker on an issue, he was advised not to lose his temper and challenge the Speaker. The Madras expressed his regret and withdrew his remarks .. .. 445

Demands for Supplementary Grants—

*Scope of discussion*: In a general discussion on Demands for Supplementary Grants, the discussion shall be confined to the items constituting the Demands and no discussion shall be raised on the original grant nor

PAGES

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—cont.

Demands for Supplementary Grants—*cont.*

Scope of discussion—*cont.*

the policy underlying it save in so far as it may be necessary to explain or illustrate a particular item under discussion. ... 280, 282 283, 285

Deputy Speaker—

*Powers*: When the Speaker is absent and the Deputy Speaker presides over the House, he shall have the same powers as the Speaker, not a little less than the powers of the Speaker. He has got the fullest powers and that is provided in the rules. ... 432

Expunction—

Rising on a point of order a Member requested that whenever a question is put in the Assembly and if the Hon. Speaker finds that certain portions are to be expunged, the Speaker should then and there specify the portions to be expunged, as that would help the Members and the Press. Holding that it was not a point of order the Chair observed that the Press Reporters were well aware of what was defamatory and what was not and that they were conversant with the law of libel. ... ... ... ... 542

Leader of the Opposition—

After the question hour and before the next item of business is taken up, the Leader of the Opposition may rise on a point of order and ask for any information. ... 433

Matters sub judice—

*Restriction on reference to matters sub judice in speeches*: During the discussion on the Demand "Head of State, Ministers and Headquarters Staff" a Member belonging to the ruling party pointed out that though in regard to a fire accident in Salem prosecution warrants had been issued ten or fifteen days ago, no one was arrested. The Leader of the Opposition and a Member of the Opposition asked how it would be proper to talk about a matter in which the



PAGES

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Matters sub judice—*cont.*

*Restriction on reference to matters sub judice in seeches*—cont.

police were in search of the offenders. Another Member pointed out that the Chair had previously ruled that matters would be deemed to be sub judice whether a case had been filed or was about to be filed. The Chair observed that the Member did not speak about the case and if he did so, he would immediately intervene and ask him not to speak about it. ... ... ... 100-101

On 28-3-68, while a Member was explaining his notice of adjournment motion regarding the clash between the students and transport employees, the Speaker drew his attention to rule 67 (1) which stipulated that a member need not give his opinion about any matter on which a judicial decision was pending.

The Member contended that judicial enquiry was not 'judicial decision'. As the matter could be deemed to be sub judice only when a case had been filed and the decision of the Court was pending, the mere announcement of the appointment of a Judge to enquire into the matter could not be considered as *sub judice*.

Another Member stated that only when the Court was seized of the matter, the question of giving a decision came in, and hence if a matter was not sub judice, no decision could be given. Secondly, inasmuch as the enquiry was with reference to the happenings on a particular day, the happenings on subsequent days could be discussed in the House.

A third Member stated that inasmuch as the appointment of the Judge had not been notified in the *Fort St. George Gazette*, and inasmuch as a matter could be deemed to be *sub judice* only when the terms of reference and the relevent records were sent to him and he started the enquiry, the House was entitled to discuss the matter.

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Matters sub-judice—*cont.*

The Chief Minister explained that a Judge had been appointed and the moment the announcement of his appointment was made, the process of enquiry started.

The Speaker thereupon observed:

The Law of contempt of courts operates not from the moment the case starts, but from the moment the possibility of a judicial enquiry arises. There is difference between the terms 'sub judice' and 'judicial decision'. Because of the expression 'judicial decision is pending' in the relevant rule the Member should not say anything about the matter until that decision is given. The moment the decision is given it is open to him to say anything. A judicial enquiry is the thing contemplated for the purpose of procedure not only in the House of Commons but also in the House. The judicial enquiry now contemplated comes under this rule. ... ... ... ... 445–446

The next day, the Member rose on a point of order by way of seeking some clarification on some rules and stated that rule 31 which dealt with questions and which precluded reference to matters which were under adjudication by any Court of law and rule 67 which dealt with speeches and which precluded reference to matters on which a judicial decision was pending were substantially the same.

He contended that just because a Judge happened to head the Commission, it did not become a proceeding in a Court of law.

The least that is required of a Court is the capacity to deliver a "difinitive judgment" and unless this power vests in a tribunal in any particular case, the mere fact that the procedure adopted by it is of a legal character and it has the power to administer on oath will not impart to it the status of a Court.



CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Matters sub-judice—*cont.*

So, a fact-finding Commission is not a Court within the meaning of the Contempt of Courts Act, 1952.

The Member concluding said that as the judicial Enquiry under the Commissions of Inquiry Act is not like a proceeding before a Court, they should assert their right to discuss the matter threadbare and decide that the Contempt of Court Act did not apply.

The Speaker held: Whether it is a court or a tribunal or a quasi-judicial body, whether its judgment would be a judgment or merely an award, these are things which do not make a very great deal of difference. I will say that I confirm what I have stated that even when the possibility of enquiry arises we should refrain from making comments on the matter.

When the Member, reiterating his earlier contention requested the Chair to reconsider the matter the Speaker observed:

"I have allowed a great deal of latitude to the hon. Member. Actually a point of order should be raised only on a matter immediately before the House. This matter is not immediately before the House." ... ... ... 559–563

Members' Association and Ministers' Denial—

When a member made an accusation and the Minister denied it, the convention and procedure was to accept the denial. A member should make himself responsible for the accuracy of any statement that he made. 85–87

Minister's Statement—

On a statement made by a Minister under Rule 82, members could not seek clarification. ... ... ... ... ... 551

PAGES

**CHAIR—*cont.***

Rulings and Observations—*cont.*

Personal Explanation—

Should relate to the person offering the explanation. ... ... ... ... 102,250, 400

Points of order—

*Absence of Speaker*: On March 29, 1968 a member rose on a point of order and said that the Speaker was away from the House for some days past. Though the business of the House could be carried on by the Deputy Speaker in the absence of the Speaker, under the ordinary circumstances whenever he was absent, the convention in the Lok Sabha and the Tamil Nadu Legislature was to make an announcement to the House about his absence. Quoting Mr. Grahan Cawthorne, the member said that the Speaker was the only man who was indis pensable to the House of Commons. Also quoting from May's Parliamentary Practice, the member said that "When the Speaker is absent, the Serjeant, accompanied by the Chaplain, enters the House with the mace, which he places upon the table. The Clerk informs the House of the Speaker's unavoidable absence". He enquired why the absence of the Speaker was not announced.

The Chair observed that the Rules did not say that an announcement about the absence of the Speaker should be made. The Rules provided that when the Speaker was absent, the Deputy Speaker shall preside. Whether the Speaker was absent or present, they could see by looking at the Chair.

The Chief Minister, however, observed that as an announcement of the sort mentioned by the Member would add to the pep of the House even if the rules did not stipulate an announcement, they could introduce a convention or amend the rules

In reply to certain observations made by another Member about the instructions issued to the Deputy Speaker in the absence of Speaker about motions pending disposal



PAGES

**CHAIR—*cont.***

Rulings and Observations—*cont.*

Points of order—*cont.*

with the Speaker and also the Speaker's participation in party politics, the Speaker observed that the Member could not discuss the conduct of the Speaker just as the conduct of the President and the Governor could not be discussed.

As for the powers of the Deputy Speaker, the Speaker observed "that is provided in Rule 7. When the Speaker is absent and the Deputy Speaker presides over this House, he shall have the same powers as the Speaker, not a little bit less than the powers of the Speaker. He has got the fullest powers and that is provided in the Rules." ... ... ... ...... 429–432

A Member rising on a point of order should confine himself to stating the point. ... 546

*Scope*: A point of order shall relate to the interpretation or enforcement of the rules or such Articles of the Constitution as regulate the business of the House and shall raise a question which is within the cognizance of the Speaker. Members should carefully examine whether what they propose to say came within the scope of point of order. ... ... ... ... ... 255

A point of order was not like a point of law; it should relate to procedure. ... ... 378

Must be raised only on a matter immediately before the House. ... ... ... ... 563

Point of order can be raised only when there is any breach of procedure laid down in the Rules and not about the conduct of a Minister. ... ... ... ... 253

Privilege matters—

*Bit notice published by Avinashi Taluk Dravida Pori Kadalai Urpathiyalar Munnetra Sangam*:

On the matter of privilege raised by the member about a bit notice which was alleged to affect the privilege of the House, the Speaker observed that there was no doubt that the publication affected the privilege of the House,

PAGES

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Privilege matters—*cont.*

Bit notice published by Avinashi Taluk Dravida Pori Kadalai Urpathiyalar Munnetra Sangam—cont.

time and energy of the House were not worth being spent on the matter and so, the parties concerned will be warned, and that would be sufficient. ... ... ... ... ... 558

*Chief Secretary's orders regulating admission of visitors to Secretariat.*—Consent was withheld on the ground that no *prima facie* case of breach of privilege had been made out. 558

*Consideration.*—When a Member has with the consent of the Speaker raised a matter of privilege, the Speaker shall read the matter to the House and decide whether a *prima facie* case of breach of privilege has been made or not. When the Member was present, the Chair permitted him to read it on his behalf but in the absence of the member, the Chair had got to read it. ... ... ... ... ... 552

*Defamatory statements contained in a leaflet.*—On the matter of privilege given notice of by a Member about a leaflet casting reflections, the Speaker observed that since the leaflet contained references to him also, he would leave the matter for decision by the Deputy Speaker. ... 556-563

*Matter of privilege against the Minister for Harijan Welfare.*—On a matter of privilege given notice of by a member against the Minister for Harijan Welfare, the Speaker announced that, as the text of the notice was such that it could not be read in the House, he had disallowed it in his Chamber itself. ... ... ... ... ... ... 559

*Matter of privilege against Mr. Speaker.*—On a matter of privilege given notice of by a member against the Speaker, the Speaker said that if the Member wanted to make any accusations against him, he could not make them in the House because the Speaker had no right to participate in the discussions in the House and the matter would have to be referred to the Committee of



PAGES

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Privilege matters—*cont.*

Matter of privilege against Mr. Speaker—*cont.*

the precious Privileges and that Committee would have to give its decision. The Member, however withdrew the notice of the privilege matter. ... ... ... ... ... 559

*Publication in a newspaper about the Speaker.*—The Speaker observed that as the matter concerned himself, the Deputy Speaker would look into it and take necessary action. ... ... ... 558-559

*Publication in the 'Malai Mani'.*—On a matter of privilege given notice of by a Member about the publication in 'Malai Mani' adversely commenting and threatening him for his request to the Chief Minister to convene a meeting of the Assembly to consider the situation arising out of the anti-Hindi agitation in February 1968, the Speaker observed that he would write to the Editor, get his explanation and then take up the matter. ... ... ... ... ... 557

On a matter of privilege given notice of by a member about the publication in 'Malai Mani' about the proceedings of the House, the Chair observed that the caption given in the newspaper was incorrect as it was not in accordance with the official report of the proceedings and hence he was bound to hold that a *prima facie* case of breach of privilege had been made out. But as the Editors of dailies had to carry on their profession under great stress and pressure sometimes, it so happened that they did not choose the right words for headlines although they had no malice against anyone. Hence, he would write to the Editor and deal further after his reply was received. ... ... ... ... 555-556

*Publication in 'NAVASAKTHI' about the speech of a Member.*—Ruling deferred as the Chair wanted to compare the press report with the official report of the proceedings. . ... ... 556

*Statement of Commissioner of Police regarding clash between Students and Transport Employees published in 'Navamani'.*—On the notice of privilege matter, the Speaker held that inasmuch as the member had stated in the notice that the

PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Privilege matters—*cont.*

Statement of Commissioner of Police regarding clash between students, and Transport Employees published in 'Navamani'—*cont.*

statement would affect the course of the judicial enquiry announced by the Chief Minister, it was for the judge to take note of contempt, if any, and he did not want to and could not trespass into the jurisdiction of the Judge who sat on the enquiry and hence, no *prima facie* case of breach of privilege had been made out. After the Chief Minister explained the action taken by the Government, the Chair also, held that no *prima facie* case of breach of privilege existed against the newspaper also. ... ... ... ... ... 554

Question Hour—

*Extension of one hour time-limit.*—On 28th March 1968, the Chair drew the attention of the Members to the fact that the House had taken about 2 hours and 45 minutes for the answering of questions that day. ... ... ... ... 429

Questions and Answers—

*Supplementary questions*—

*Accusations.*—Members should only put their questions and should not say that the Minister is evading a proper answer to his question as it has been laid down that there should be no accusations during question hour. ... ... ... 173

*Allegations.*—Should not contain personal allegations against anybody. A portion of a question which infringed rule 68 (3) (ii) was expunged. ... 534–535

*Discussion on a paper placed on the table.*—After the Speaker announced that questions and answers were over, a Member stated that he wanted a discussion on a paper placed on the table and put a supplementary question. The Speaker observed that the procedure followed by the Member was not in order. ... ... ... ... ... 275

*Equal opportunities.*—During the one hour set apart for answering of questions it will not be possible to allow too many questions for a single Member. ... ... ... ... ... 517

*Form.*—A supplementary question should be put in the form of a question. ... ... ... ... 410



PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Supplementary questions—*cont.*

Questions and answers—*cont.*

*Ironical questions.*—A supplementary question containing an ironical expression was disallowed under Rule 31 (5). The request of a Member that the entire question be expunged was, however, not acceded to by the Chair ... ... ... ... 408

*Ministers' Answers.*—A Member cannot presume that the Minister has answered his supplementary without understanding it. On the other hand he must presume that the Minister has answered only after understanding the question ... 394

Members should take it that the Minister has answered their questions only after understanding them ... ... ... ... ... ... 522

*Number.*—Only one question and not a series of questions should be asked in one supplementary question ... ... ... ... ... 266

*Opposition Members' right to answer questions.*—A Member of the Opposition had no right to answer questions. He will have that right if and when he occupied the Treasury Benches ... ... 530

*Preambles not permissible.*—Members are to put their supplementaries without preambles ... 506

*Preference.*—It was not laid down that those who had raised their hand first should be given preference in putting supplementaries ... ... 378

*Relevancy.*—Must relate to the main question ... 159, 166

Must relate to the main question and should not be of a general nature which can be dealt with during the discussion on Demands for grants ... 15

*Restriction on number.*—On 28th March 1968 after allowing a number of supplementary questions on the first starred question in the Agenda, the Chair observed that as there were a number of questions on the agenda, even if they allowed only one supplementary question for the Member who had given notice of the main question, the question hour would be exhausted.

PAGES

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Supplementary questions—*cont.*

Questions and Answers—*cont.*

Restriction on number—*cont.*

A Member pointed out that when important questions as the one under consideration by the House just then, were included in the Agenda, the Chair might extend the question hour.

Another Member pointed out that as per rule 38, 'Any member may put a supplementary question for the purpose of further elucidating any matter of fact regarding which an answer has been given to a starred question.'

The Chair observed that when their rules were silent on the matter, they had to follow the procedure adopted in the House of Commons viz., one supplementary question for the Member who asked the main question.

As for Rule 38, the Chair observed that the same rule said that if sufficient or reasonable number of questions had been put, the Speaker might disallow further supplementary questions. In the Mother of Parliaments the sufficient number was regarded as one.

The Chief Minister suggested that as the session was to conclude in a few days, to accomodate the desire of the Members irrespective of party affliations, they might be enabled to put more supplementary questions.

Taking the sense of the House the Chair allowed more supplementary questions.

As the House took nearly 40 minutes for this one question, the Leader of the Opposition rose on a point of clarification and said that the Chair was too liberal in the matter of allowing supplementary questions. He suggested that the Chair should control the number of supplementary questions by reducing the time taken for each question to five to ten minutes.

The Chair requested the Members to act up to the suggestion made by the Leader of the Opposition 376-379; 384



PAGES

—(*cont.*)

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Supplementary questions—*cont.*

Questions and Answers—*cont.*

Restriction on number—*cont.*

Should be brief ... ... ... ... 31;509

Should not be of excessive length. Whether a question is of excessive length or not is a matter for decision by the Speaker ... ... ... 32

*To be in conformity with the rules.*—During question hour a Member should only put questions permitted by the rules ... ... ... 535

SPEAKER—

*Absence.*—See Points of Order.

*See "Debate".*

See "Decorum".

CHEEMAICHAMY, THIRU K—

Government employees, Corruption charges ... 269-271

High Power Committee, report ... ... ... 265-267

Parappalar, Porunthalar Anicut Schemes ... 400-401

Ration shops, Coimbatore ... ... ... 3-9

Rupee a Measure rice ... ... ... 404-412

CHIDAMBARANATHA NADAR, THIRU, A—

Bridge across Manakudy lake ... ... 518-519

High Power Committe, report ... ... ... 265-267

Rupee a measure rice ... ... ... 404-412

CHINNASAMI, THIRU V—

*Budget* 1968-69, *Voting.*—District Administration and Miscellaneous ... ... ... ... 215-216

CHITHAN, THIRU N. S. V.—

ADT 27 Paddy acreage ... ... ... ... 524-531

Bridge near Kandugulam, widening ... ... 517-518

Government employees in Madurai district, retirement ... ... ... ... 267-268

Government Hostels, admission ... ... 257-262

Ministry for Local Administration, black flag demonstration ... ... ... ... 271-272

C—cont.

PAGES

CHITHAN, THIRU N. S. V.—*cont.*
Pavement dwellers in City ... ... ... ... 16–21
Rupee a measure rice ... ... ... 404–412
Sales Tax Appellate Tribunal, Coimbatore, Tiruchirappalli, Tirunelveli ... ... ... 1–2
Workers' Education Scheme ... ... ... 416–417

COLLEGE(S)—
Arts Colleges (new) ... ... ... 384–390
Professional-Admission ... ... ... ... 373–384

COMMITTEES—
Assurances Committee election (Ann.) ... 606–607
Business Advisory Committee, Election (Ann.) 603–604
Estimates Committee, Co-option of Council Members (M) ... ... ... ... ... 609
Election (Ann.) ... ... ... ... 608–609
Report (Fourth) on Fisheries, Presentation ... 602
High Power Committee, report ... ... ... 265–267
House Committee Election (Ann.) ... ... ... 605
Privileges Committee, Election (Ann.) ... ... 605
Interim Report on the matter against Thiru T. Martin, Presentation ... ... ... 603
Report on alleged breach of privilege against Thiru V. George, M.L.A., Presentation ... 36
Report on alleged breach of privilege against Thiru V. George, M.L.A. (M)— ... ... 184–185
Public Accounts Committee, Election (Ann.) ... 607–608
Report on Audit Report of the Madras State Electricity Board for 1962–63 to 1964–65, Presentation ... ... ... ... ... ... 602
Rules Committee, Election (Ann.) ... ... 604
Subordinate Legislation, election (Ann.) ... ... 604–605
Second report (Fourth Assembly) for 1967–68, presentation ... ... ... ... ... 602



C—cont.

PAGES

CO-OPERATIVES—
North Arcot District Co-operative Stores, Audit Report ... ... ... ... ... 544–545
Sugar Mills ... ... ... ... ... 155–160

COURTS—
Office of Sessions Judge, Madurai ... ... ... 172–173
Sub-Magistrate Court in Tirupur ... ... 21–22

CYCLONE—
Relief to victims of Thanjavur, Ramanathapuram and Rameswaram and repairs to tanks (C.A.) ... 580–584

D

DHARMALINGAM, THIRU N.—
Damage caused to paddy crops by birds in Tiruthuraipoondi area (C.A.) ... ... ... ... 183–184

DISEASES—
Cholera in Tiruchirappalli (C.A.) ... ... 598–599

DRAINAGE—
Scheme for Tiruchirappalli ... ... ... 417–418

DRINKING WATER—
Scarcity, Ootacamund (C.A.) ... ... ... 597–598

DURAISAMY, THIRU S.—
N.C.C. Units, reduction ... ... ... ... 570–573
Sub-Magistrate Court in Tiruppur ... ... 21–22

E

EDUCATION—
Craft instruction, abolition— ... ... ... 243–247
Examination system ... ... ... ... 237–243

ELECTRICITY BOARD—
Economy ... ... ... ... ... 160–164

EXPUNCTIONS— 32, 33, 37, 339, 447, 535, 538, 539, 541

F

FAMINE—
Failure of rains, procurement of kist, etc., in Tirunelveli district, (C.A.) ... ... ... ... 586–587

PAGES

FINANCIAL BUSINESS—
Budget 1968–69, Voting—
Administration of Justice ... ... ... ... 229–230
Cinchona ... ... ... ... ... ... 229
Commuted Value of Pensions ... ... ... 228
Compensation to Zamindars ... ... ... 229
District Administration and Miscellaneous ... 185–227
Elections ... ... ... ... ... ... 227
Head of State, Ministers and Headquarters staff, State Legislature ... ... ... ... 39–182
Jails ... ... ... ... ... ... 230
Khadi ... ... ... ... ... ... 230
Loans and Advances by the State Government ... 228
Miscellaneous ... ... ... ... ... 228
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... ... 228
Pensions ... ... ... ... ... 227
Registration Department ... ... ... 229
Stamps Administration ... ... ... ... 229
D.S.G. (Final) 1967–68
Presentation ... ... ... ... 37–39
G.D. ... ... ... ... ... ... 273–321
Voting :
Administration of Justice ... ... ... 323
Agriculture ... ... ... ... ... 324
Animal Husbandry ... ... ... ... 325
Capital Outlay on Industrial Development ... 327328
Capital Outlay on Irrigation ... ... ... 328
Capital Outlay on Public Works ... ... ... 328
Capital Outlay on schemes of Government Trading ... ... ... ... ... 328–329
Cinchona ... ... ... ... ... 325
Community Development Projects, etc. ... 325
Commuted Value of Pensions ... ... ... 328
Co-operation ... ... ... ... ... 325
District Administration and Miscellaneous ... 322–323
Education ... ... ... ... ... 323–324
Fisheries ... ... ... ... ... 324



PAGES

FINANCIAL BUSINESS—*cont.*
D.S.G. (Final) 1967–68—Voting—*cont.*
General Sales tax and other Taxes and Duties Administration ... ... ... ... 322
Head of State, Ministers and Headquarters staff 322
Irrigation ... ... ... ... ... 325–326
Jails ... ... ... ... ... ... 323
Land Revenue ... ... ... ... 321
Loans and Advances by the State Government 329
Medical ... ... ... ... ... 324
Miscellaneous ... ... ... ... 327
Motor Vehicles Acts—Administration ... ... 321
Other Miscellaneous Compensations and assignments ... ... ... ... ... 327
Pensions ... ... ... ... ... 327
Police ... ... ... ... ... 323
Public Health ... ... ... ... 324
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... 326
Public Works—Grants-in-aid ... ... ... 326
Public Works—Works ... ... ... ... 326
Registration Department ... ... ... 322
Road Transport Schemes ... ... ... 326–327
State Legislature ... ... ... ... 322
Stationery and Printing ... ... ... 327

FOODGRAINS—
Hybrid Cumbu, cultivation ... ... ... 412–415
Ration cards in Coimbatore ... ... ... 248–255

FOOD POISONING—
Meenakshipuram, treatment of victims (C.A.) ... 600–607

G

GEORGE, THIRU V.—
Clash in Padrivedu Meldarpakkam in Chingleput district (A.M.) ... ... ... ... ... 438

GINGEE FORT—
Renovation ... ... ... ... ... 165–166

PAGES

GNANASAMBANDAN, Thiru K. R.—
D.S.G. (Final) 1967-68 G.D. ... ... ... 296-298
Fire in Vadugakudi village in Nannilam taluk (A.M.) 441
Rupee a measure rice ... ... ... ... 404-412

GOMATHYSANKARA DIKSHIDAR, Thiru G.—
Anti-Hindi agitation, bus accident near Coimbatore 25-28
Courts, office of Sessions Judge, Madurai ... 172-173
Erskine Hospital, Madurai ... ... ... 264-265
Government Employees, not permitted to marry ... 547
High Power Committee on Economy and Reorganisation of Administration, report ... ... 265-267
N.C.C. Units, reduction ... ... ... ... 570-573
Obscene models, prohibition ... ... ... 427-429
Pavement dwellers in City ... ... ... ... 16-21

GOVERNMENT EMPLOYEES—
Corruption charges ... ... ... ... 269-271
Madurai district, retrenchment ... ... ... 267-268
Not permitted to marry ... ... ... ... 547
Subordinates in Collector's Office, Chingleput district, treatment (A.M.) ... ... ... ... 442-443
*See* ' Services ' also

GOVERNMENT PLEADERS—
Appointment ... ... ... ... ... 533-6, 539-542, 543

GOVINDAN, Pulavar, K.—
Privileges Committee—
Privileges Committee, privilege issue against Thiru T. Martin, Interim Report, presentation ... 603
Privilege issue against Thiru T. Martin, Interim report (M) ... ... ... ... ... 603

GOVINDARAJAN, Thiru C.—
Co-operative Sugar Mills ... ... ... ... 155-160
High Power Committee on Economy and Reorganisation of Administration, report ... ... 265-267



PAGES.

GOVINDARASAN, Thiru A.—
D.S.G. (Final) 1967-68, G.D. ... ... ... ... 310-312
Strike, Annamalai University Students' hostel employees (C.A.) ... ... ... ... ... 584

GOVINDASAMI, Thiru A.—
Collection of loans under soil conservation schemes in North Arcot District (C.A. St.) ... ... 458-459
Damage caused to paddy crops by birds in Tiruthuraipoondi area (C.A. St.) ... ... ... 183-184
Recovery of loan in Tiruchirappalli district, postponement (C.A. St.) ... ... ... ... 276

H

HANDE, Dr. H. V.—
Damage caused to Medical College (Men's) Hostel and shooting in Veterinary College Hostel and C.N.T. Institute (A.M.) ... ... 573-4, 575
Director for Indian Medicine appointment ... ... 22-24
Law and Order situation (A.M.) ... ... 444-448, 449
Mr. Speaker, absence from House (Point of Order) 431-432
Privileges Committee—Alleged breach of privilege against the member, Thiru V. George, report (M) 185
Scope of discussion on matters pending judicial decision ... ... ... ... ... ... 560-2

HARIJANS—
High schools ... ... ... ... ... 582-3
House-sites— ... ... ... ... ... 13-16
Scholarships ... ... ... ... ... 169-172

HOSPITALS AND DISPENSARIES—
Erskine Hospital, Madurai ... ... ... 264-265
Government Ophthalmic Hospital, Madras ... 173-175

HOSTELS—
Government hostels, admission ... ... ... 257-262

PAGES

I—cont.

INDIAN MEDICINE—
Director ... ... ... ... ... 22–24

INDUSTRIES—
Government oil mills for Natham ... ... ... 233–234
Paper mills in Tiruchendur taluk ... ... 234–237
Small Industries Corporation, Madras ... ... 514–7

IRRIGATION—
Parappalar, Porunthalar Anicut Schemes ... 400–401

J

JAMES, THIRU J.—
House Surgeons and Medical students in the City, strike ... ... ... ... ... ... 443

K

KANNAPPAN, THIRU M.—
Re-opening of Sugar Mill, Amaravathi (C.A.) ... 588

KARIAMANICKAM AMBALAM, THIRU K. R.—
D.S.G. (Final) 1967–68—G.D. ... ... ... 291–293

KARUPPIAH, THIRU R.—
Budget, 1968–69, Voting:
District Administration and Miscellaneous .. 203–204

KARUTHIRUMAN, THIRU P. G.—
Budget 1968–69, Voting:
District Administration and Miscellaneous ... 218–220
Head of State, Ministers and Headquarters staff, State Legislature ... ... ... ... 91, 104–114
Clash between Transport workers and students (A.M.) ... ... ... ... ... ... 182
D.S.G. (Final) 1967–68 G.D. ... ... ... 312–317
House Surgeons, strike (St.) ... ... ... 550–553
Student-Bus Transport Workers' clash, suppression of facts in the statement made by the Chief Minister (Point of Order) ... ... 433–434, 437



K—cont.

PAGES

KARUNANIDHI, THIRU M.—
Inadequate supply of water to double crop lands, Thanjavur district (C.A. St.) ... ... ... 590–2
Lorry accident, Kaveripuram, compensation to victims (C.A. St.) ... ... ... ... 592–4
Students-Bus Transport workers' clash—Anti-social activities to prevent restoration of peace (A.M.) ... ... ... ... ... ... 566–9

KASIRAMAN, THIRU N.—
Budget, 1968–69, Voting:
Head of State, Ministers and Headquarters staff, State Legislature ... ... ... ... ... 71–74
Denaturants ... ... ... ... ... 423–426
Language Instruction in High schools ... ... 390–400
Motor Vehicles Taxation Sub-Inspectors, etc., retrenchment ... ... ... ... ... 401–402
Rupee a measure rice ... ... ... ... 404–412
Subway, Mambalam Railway station ... ... 175–177

KEROSENE—
Supply ... ... ... ... ... ... 520–4

KOTHANDARAMAN, THIRU V. K.—
ADT 27 paddy, acreage ... ... ... ... 524–531
Agricultural produce, cess ... ... ... 255–257
Appropriation (No. 2) Bill, 1968 ... ... ... 475–479
Budget 1968–69, Voting:
Head of State, Ministers and Headquarters staff, State Legislature ... ... ... ... 39, 40
City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1968 ... 615–616
Denaturants ... ... ... ... ... 423–426
Electricity Board, Economy ... ... ... 160–164
Examination system ... ... ... ... 237–243
Government Pleaders and Public Prosecutors, appointment ... ... ... ... ... 533–6, 539–542, 543
High Power Committee on Economy and Reorganization of Administration, report ... ... 265–267

PAGES

KOTHANDARAMAN, THIRU V. K.—*cont.*
Hybrid Cumbu, cultivation ... ... ... 412–415
Market Committee employees, Free medical aid ... ... ... ... 415–416
Mill workers, Dearness allowance ... ... 262–264
North Arcot District Co-operative Stores, Audit report ... ... ... ... ... 544–5
Oil and oil seeds, Export ... ... ... ... 10–13
Oil seeds production ... ... ... ... 10–13
Political sufferers' children, concession ... ... 505–510
Rupee a measure rice ... ... ... ... 404–412
Scarcity taluks in North Arcot district, price of rice (C.A.) ... ... ... ... ... ... 594
Small Industries Corporation, Madras ... ... 574–7
Students-Bus Transport workers clash (A.M.) .. 182
Students-Bus Transport workers' clash—Anti-social activities to prevent restoration of peace (A.M.) ... ... ... ... ... 564–6
Subordinates in the Collector's Office, Chingleput district, treatment (A.M.) ... ... ... 442–443

KRISHNASWAMY GOUNDER, THIRU R.—
D.S.G. (Final) 1967–68, General Discussion ... ... ... ... 309–310

KUMARASAMI, THIRU K. N.—
Clash between transport workers and students (A.M.) ... ... ... ... ... 182
D.S.G. (Final) 1967–68, General Discussion ... ... ... ... 302–303

## L

LABOUR—
Mill workers, Dearness allowance ... ... ... 262–264

LAW AND ORDER—
Students-Bus Transport workers' clash .. 177–181
Students-Bus Transport workers' clash (Statement) ... ... ... ... ... ... 548–549



PAGES

LOANS—
Electricity Loan Bonds, etc., Collection ... ... 418–421
Recovery of Loans in Tiruchirappalli district, postponement (C.A.) ... ... ... ... ... 276

## M

MADHAVAN, THIRU S.—
Co-operative Central Land Mortgage Bank, guarantee in respect of debentures (R) ... 618–619

MALAICHAMY, THIRU P.—
Arts Colleges (new) ... ... ... ... 384–390
Craft instruction, abolition ... ... ... 243–247
Groundnut oil mill for Natham ... ... ... 233–234
Harijans House-sites ... ... ... ... 13–16
Public Accounts Committee, Report on Audit Report of Madras State Electricity Board for 1962–63 to 1964–65, presentation ... ... ... 602
Relief to cyclone victims of Thanjavur, Ramanathapuram and Rameswaram and repairs to tanks (C.A.) ... ... ... ... ... ... 580

MANI, THIRU K. B. S.—
Professional Colleges, admission ... ... ... 373–384

MARKET COMMITTEE—
Employees, free medical aid ... ... ... 415–416

MARTIN, THIRU T.—
Announcement re. portions expunged (point of order) ... ... ... ... ... ... ... 537–542
Budget, 1968–69, Voting:
Head of State, Ministers and Headquarters staff, State Legislature ... ... ... ... 41–46
D.S.G. (Final) 1967–68, G.D. ... ... ... 303–306
Municipalities, town buses ... ... ... ... 24–25
Paper mills in Tiruchendur taluk ... ... ... 234–237
Students-Bus transport workers, clash (A.M.). ... 451–452

MARUDACHALAM, THIRU N.—
Budget, 1968–69, Voting:
District Administration and Miscellaneous ... 206–207

PAGES

MATHIALAGAN, THIRU K. A.—
Agriculturists in Pattukkottai taluk, remission of land revenue and postponement of recovery of loan (C.A. St.) ... ... ... ... ... 277–278
Budget, 1968–69, Voting :
District Administration and Miscellaneous ... 220–227
Head of the State, Ministers and Headquarters staff, State Legislature ... ... ... ... 83–84, 113–114
Dairy and Milk Project, Policy note, 1968–69 ... 40
Failure of rains postponement of Kist, etc., in Tirunelveli district (C.A. St.) ... ... ... 586–7
Flood relief in Thanjavur district (C.A. St.) ... 456–458
General Sales Tax (Second Amendment) Bill, 1968 ... ... ... ... ... ... 610–611
Land Reforms (Disposal of surplus land) Rules, 1965, amendment (R) ... ... ... ... 618
Rise in price of rice, scarcity taluks in North Arcot district (C.A. St.) ... ... ... ... ... 594–596

MEIYAPPAN, THIRU S.—
Announcement re. portions expunged (point of order) ... ... ... ... ... ... 538
Food poisoning, Meenakshipuram, treatment of victims (C.A.) ... ... ... ... ... 600–601
General Sales Tax (Second Amendment) Bill, 1968... 610–611

MILLS—
Sugar–Amaravathi, re-opening ... ... ... 588–90
Textile, re-opening (C.A.) ... ... ... 549–50

MINISTER(S)—
Code of conduct ... ... ... ... ... 272–275
Minister for Local Administration, black flag demonstration ... ... ... ... ... 271–272
Name board, removal in former Chief Minister's residence ... ... ... ... ... 35–36

MODELS—
Obscene models, prohibition ... ... ... 427–429



PAGES

MOTIONS—
Ad Motions :
Clash between transport workers and students—withdrawn ... ... ... ... ... ... 181–183
Clash in Padrivedu–Meldarpakkam in Chingleput district, consent withheld ... ... ... ... 438–439
Damage caused to Medical College (Men's) Hostel and shooting in Veterinary College Hostel and C.N.T. Institute, consent withheld ... ... 573–576
Dharapuram Co-operative Spinning Mills, closure and retrenchment of workers, consent withheld ... 441–442
Doctors and House Surgeons' strike, city and districts—withdrawn ... ... ... ... 569–570, 570–571
Failure of crops in Nambiyur Panchayat area, Gobichettipalayam taluk, consent withheld ... ... 440–441
Fire in Vadugakudi village in Nannilam taluk, consent withheld ... ... ... ... ... 441
Fixation of fair price for chillies and cotton in Ramanathapuram and Tirunelveli, consent withheld ... ... ... ... ... ... ... 571–572
House Surgeons and Medical students strike, consent withheld ... ... ... ... ... 443–444
Law and Order situation, consent withheld ... 444–451
Non-payment of pay and rice ration to workers of Janakiram Spinning Mill, Rajapalayam, consent withheld ... ... ... ... ... ... 573
Procurement in Ambasamudram taluk, consent withheld ... ... ... ... ... ... 439–440
Students-Bus transport workers' clash, consent withheld ... ... ... ... ... ... ... 451–453
Students–Bus transport workers clash, anti-social activities to prevent restoration of peace, motion withdrawn ... ... ... ... ... ... 564–566
Subordinates in the Collector's Office, Chingleput district, treatment, consent withheld ... ... 442–443
Privilege :
Allegation against Mr. Speaker, withdrawn ... 559
Privilege Committee :
Alleged breach of privilege against the Member Thiru V. George, report ... ... ... 184–185

PAGES

MOTIONS—*cont.*
Privileges Committee—*cont.*
Privilege issue against Thiru T. Martin, interim report ... ... ... ... ... ... 603
Suspension of Rule ... ... ... ... ... 455–576
Municipalities—
Town buses ... ... ... ... ... ... 24–25

MUNUSWAMY, THIRU R. R.—
Gingee Fort, renovation ... ... ... ... 165–166

MURUGAIYAN, THIRU S.—
Collection of loans under soil conservation schemes in North Arcot district (C.A.) ... ... ... 458

MUTHUSELVAN, THIRU P. S. —
Budget, 1968–69, Voting :
Head of State, Ministers and Headquarters staff, State Legislature ... ... ... ... 53–55

MUTHUSWAMY, THIRU M.—
City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1968 ... ... 613–615, 616–617, 618

## N

NAGASUNDARAM, THIRU R.—
Budget, 1968–69, Voting :
Head of State, Ministers and Headquarters staff, State Legislature ... ... ... ... 66–68

NALLASIVAM, THIRU K. R.—
Appropriation (No. 2) Bill, 1968 ... ... ... 481–482
Budget, 1968–69, Voting :
Head of State, Ministers and Headquarters staff, State Legislature ... ... ... ... 63–66
Doctors and House Surgeons' strike (A.M.) ... 570–571

NARAYANAN, THIRU R.—
D.S.G. (Final) 1967–68 G.D. ... ... ... 289–290
Recovery of loans in Tiruchirappalli district, postponement (C.A.) ... ... ... ... 276



PAGES

NATARAJAN, THIRU E. M.—
Budget, 1968–69, Voting :
District Administration and Miscellaneous ... 217–218

NATIONAL CADET CORPS—
Madras N.C.C. contingent, prizes won ... ... 513–514
Reduction of units ... ... ... ... ... 510–513

NEDUNCHEZHIYAN, THIRU V. R.—
Budget, 1968–69, Voting :
Administration of Justice ... ... ... ... 229–230
Cinchona ... ... ... ... ... ... 229
Commuted value of pensions ... ... ... 228
Compensation to Zamindars ... ... ... 229
Elections ... ... ... ... ... ... 227
Jails ... ... ... ... ... ... 230
Khadi ... ... ... ... ... ... 230
Loans and Advances by the State Government ... 228
Miscellaneous ... ... ... ... 228
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... ... ... 228
Pensions ... ... ... ... ... ... 227
Registration Department ... ... ... ... 229
Stamps Administration ... ... ... ... 229
Damage caused to Medical College (Men's) Hostel and Shooting in Veterinary College Hostel and C.N.T. Institute (A.M.) ... ... ... 575–576
Doctors and House Surgeons' strike (A.M.) ... 570–571
Doctors and House Surgeons' strike—City and districts (A.M.) ... ... ... ... 569–570
Estimates Committee, Co-operation of Five Council Members (M) ... ... ... ... ... 609
*Privileges Committees.*—
Alleged breach of privilege by Member, Thiru V. George, presentation of Report ... ... ... 36
Consideration and passing of Report ... ... 184–185
Redressal of grievances of weavers in Ramanathapuram and Tirunelveli (C.A. St.) ... ... 576–580

PAGES

NEDUNCHZHIYAN, THIRU V. R.—*cont.*
Relief to Cyclone victims of Thanjavur, Ramanathapuram and Rameswaram and repairs to tanks (C.A.St.) ... ... ... ... ... 580–584
Sugar Mill, Amaravathi, re-opening (C.A. St.) ... 588–590
Strike, Annamalai University Students' Hostel Employees (C.A. St.) ... ... ... ... 584–586
Suspension of Rule 41 (3) (M) ... ... ... 455–576

O.

OIL SEEDS—
Oil and Oil Seeds, Export ... ... ... ... 10–13
Production ... ... ... ... ... ... 10–13

OVER-BRIDGE—
Construction, Annamalainagar ... ... ... 519

P

PADDY—
ADT 27, acreage ... ... ... ... ... 524–531
Damage to Crops by birds, Thiruthuraipoondi area (C.A.) ... ... ... ... ... ... 183–184

PANNERSELVAM, THIRU M.—
D.S.G. (Final), 1967–68, G.D. ... ... ... 306–307

PAPERS LAID ON THE TABLE—
Appropriation (No. (2), Bill 1968 ... ... ... 498
Appropriation (No. 3), Bill, 1968 ... ... ... 620
Cinchona Department, Note ... ... ... 332
City Municipal Corporation Act, 1919, Notification ... ... ... ... ... ... 620
Committee of Pivileges—Interim report on the matter of privilege against Member Thiru T. Martin ... 621
Committee on Subordinate Legislation, Second report ... ... ... ... ... 621
Dairy and Milk Project, policy note ... ... ... 232
Demands for Grants for further expenditure, etc. 1967–68 ... ... ... ... 232
Demands for Grants for Irrigation 1968–69, Minister's speech ... ... ... ... ... 132



PAGES

PAPERS LAID ON THE TABLE—*cont.*
District Municipalities Act, 1920, notifications ... 132, 231–232, 330–332
Electricity (Supply) Act, 1948, notification ... 232
Entertainments Tax Act, 1939, notification ... 498
Estimates Committee—Report on Fisheries ... 620
Final Supplementary Estimate for 1967–68, speech of Hon. Chief Minister ... ... ... ... 232
General Sales Tax Act, 1959, notifications ... ... 231, 498
Housing in Madras State ... ... ... ... 332
Khadi and Village Industries Board, policy note, 1968–69 ... ... ... ... ... ... 133, 332
Motor Vehicles Taxation Act, 1931, notification ... 619–620
Notice of Demands for Grants for further expenditure, 1967–68 ... ... ... ... 232
Public Trusts (Regulation of Administration of Agricultural Lands Act, 1961, notification ... 620
Public Works Department, Brochure on reorganisation ... ... ... ... ... ... ... 133
Registration Department, policy note ... ... 133
Registration Department, speech of Hon. Minister ... 232
Report of Privileges Committee ... ... ... 232
Report of the Committee on Public Accounts on Audit reports on the accounts of State Electricity Board for 1962–63 to 1964–65 ... ... ... 620
Review on Irrigation, 1967–68 ... ... ... 133
Second report of Committee on Government Assurances (Fourth Assembly) ... ... ... 620
Stamps Administration, policy note ... ... ... 232
Stamps Administration, speech of Hon. Minister ... 232

PAVEMENT DWELLERS—
Conditions ... ... ... ... ... ... 16–21

P—cont.

PAGES

PEER MOHAMED, HAJI M. M.—
Appropriation (No. 2) Bill, 1968 ... ... ... 479–481

POINTS OF ORDER—
Absence of Speaker, Intimation to House ... 429–432
Appointment of Judge for judicial enquiry into students-bus transport workers clash ... ... 454
Chief Minister's visit to America, information to House ... ... ... ... ... ... 453–455
Portions expunged, announcement re. ... ... 536–539, 542
Scope of discussion on matters pending judicial decision ... ... ... ... ... ... 559–563
Students-Bus transport workers clash, suppression of facts in the statement made by the Chief Minister ... ... ... ... ... ... 433–438

POLICE—
Special Armed Police ... ... ... ... 33–34

POLITICAL SUFFERERS—
Concession to children ... ... ... ... 505–510

PONNAPPA NADAR, THIRU R.—
Appropriation (No. 2) Bill, 1968 ... ... ... 482–485
Extension Officers (Industries)—Promotion as B.D.Os. ... ... ... ... ... ... 545–547
Rupee a measure rice ... ... ... ... 404–412

PRIVILEGES—
Alleged breach of privilege against Member, Thiru V. George, report of Committee of Privileges (M) ... ... ... ... ... ... 36, 184–185

PROHIBITION—
Denaturants ... ... ... ... 423–426

PUBLIC PROSECUTORS—
Appointment ... ... ... ... ... ... 533–536, 539–542, 543



PAGES

R

RAJA, THIRU A. M.—
Rupee a measure rice ... ... ... ... 404–412
Scarcity of drinking water, Ootacamund (C.A.) ... 597

RAJAGOPAL, THIRU K. M.—
D.S.G. (Final) 1967–68 G.D. ... ... ... 293–298

RAJANGAM, THIRU M.—
Water-supply—Frequent stoppage in Madurai (C.A.) ... ... ... ... ... ... 599–600

RAMACHANDRA DORAI, THIRU R.—
Budget, 1968–68, Voting:
Head of State, Ministers and Headquarters staff, State Legislature ... ... ... ... 60–63
Clash between transport workers and students (A.M.) ... ... ... ... ... ... 182

RAMACHANDRAN, THIRU S.—
Budget, 1968–68, Voting:
Head of State, Ministers and Headquarters staff, State Legislature ... ... ... ... 98–102
Estimates Committee, Report (Fourth) on Fisheries, presentation ... ... ... ... ... 602
Government employees, corruption charges ... 269–271
Kerosene, supply ... ... ... ... ... 520–524
Rupee a measure rice ... ... ... ... 404–412

RAMAMOORTHY, THIRU K.—
Appropriation (No. 2) Bill, 1968 ... ... ... 460–467
Budget, 1968–68, Voting:
State Legislature ... ... ... ... 40
D.S.G. (Final) 1967–68, G.D. ... ... ... 278–289
High Power Committee, report ... ... ... 265–267
Mr. Speaker, absence from House ... ... ... 432
Proceedings of House, Announcement re. portion expunged (Point of order) ... ... ... ... 536–539, 542
Professional Colleges, admission ... ... ... 373–384
Students—Bus transport workers clash (A.M.) ... 182

R—cont.

PAGES

RAMASAMI, Thiru E.—
High Schools for Girls in Valparai ... ... ... 247–248

RAMASWAMY, Thiru S. R.—
Budget, 1968–69, Voting :
District Administration and Miscellaneous ... 208–210
North Arcot District Co-operative Stores Audit Report ... ... ... ... ... 544–5

RAMASWAMI GOUNDER, Thiru K. M.—
Budget, 1968–69, Voting :
District Administration and Miscellaneous ... 210–212
Head of State, Ministers and Headquarters staff State Legislature ... ... ... ... ... 51–53
Failure of crops in Naviliyur Panchayat area, Gobichettipalayam taluk (A.M.) ... ... 440–441

RANGANATHAN, Thiru R. N.—
Budget 1968–69, Voting :
District Administration and Miscellaneous ... 191–195
Subordinate Legislation Committee—Second Report (Fourth Assembly) for 1967–68, presentation ... 602

RATION SHOPS—
Ration Shops, Coimbatore ... ... ... 3–9

RESOLUTIONS—
Co-operative Central Land Mortgage Bank, guarantee in respect of debentures ... ... ... 618–619
Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965, amendment ... ... ... ... 618

RICE—
Increase in price, scarcity taluks in North Arcot district (C.A.) ... ... ... ... ... 594–596

RUPEE A MEASURE RICE—
Supply in State ... ... ... ... ... 404–412



S

PAGES

SADIQ PASHA, Thiru S. J.—
Cholera in Tiruchirappalli (C.A. St.) ... ... 598–599
Drinking water scarcity, Ootacamund (C.A. St.) ... 597–598
Food poisoning, Meenakshipuram, treatment of victims (C.A. St.) ... ... ... ... ... 600
Water-supply, frequent stoppage in Madurai (C.A. St.) ... ... ... ... ... ... ... 600

SAHADEVA KANDER, Thiru K.—
Budget, 1968–69, Voting :
District Administration and Miscellaneous ... 212–215

SALES-TAX APPELLATE TRIBUNAL—
Coimbatore, Tiruchirappalli and Tirunelveli ... 1–2

SANKARIAH, Thiru N.—
Budget, 1968–69, Voting :
Head of State, Ministers and Headquarters staff, State Legislature ... ... ... ... 55–60
High Power Committee in Economy and Reorganization of Administration, Report ... ... 265–267

SCHOOLS—
High Schools for girls in Valparai ... ... ... 247–248
High Schools, Language instruction ... ... 390–400

SERVICES—
Draftsman in Public Works Department, extension ... ... ... ... ... ... 403
Government Stenographers, pay revision ... 421–423

SHANMUGAM, Thiru M.—
D.S.G. (Final) 1967–68, G.D. ... ... ... 298–302

SEENIVASAN, Thiru P.—
Budget, 1968–69, Voting :
District Administration and Miscellaneous ... 200–202, 226–227

SIVASAMI, Thiru M. S.—
Budget, 1968–69, Voting :
District Administration and Miscellaneous ... 196–198

PAGES

SIVASUBRAMANIAN, THIRU S. —
Anti Hindi agitation, compensation to the families of students, victims ... ... ... ... 29-33
Draftsman in Public Works Department, extension of service ... ... ... ... ... ... 403
Government Hostels, admission ... ... ... 257-262
Harijan High School ... ... ... ... 532-533
Harijans, scholarship ... ... ... ... 169-172
Over Bridge, Annamalainagar ... ... ... 519

SOUNDARAPANDIAN, THIRU P. —
Special Armed Police ... ... ... ... 33-34
Tanks, Naganallur tank ... ... ... ... 167-168

STRIKES—
Annamalai University students', hostel employees' strike (C.A.) ... ... ... ... ... ... ... 584-586
House Surgeons (St.) ... ... ... ... 550-553

STUDENTS—BUS TRANSPORT WORKERS, CLASH—
*See* Law and Order.

SUBBA RAJA THIRU A. A.—
Budget, 1968-69, Voting :
District Administration and Miscellaneous .. 216-217
Katcha Theevu, Ownership (C.A.) ... ... ... 35
Non-payment of pay and rice ration to workers, Janakiram Spinning Mills, Rajapalayam (A.M.). 573
Redressal of grievances of weavers in Ramanathapuram and Tirunelveli (C.A.) ... ... 576

SUBBIAH, THIRU A. K.—
Anti-Hindi agitation, compensation ... ... 29-33
Budget, 1968-69, Voting :
Head of State, Ministers and Headquarters staff, State Legislature ... ... ... ... 68-71
Doctors and House Surgeons' Strike—City and districts (A.M.) ... ... ... ... ... ... 569
Flood relief in Thanjavur district (C.A.) ... ... 455
High Power Committee on Economy and Reorganization of Administration, Report ... ... ... 265-267



PAGES

SUBBIAH, THIRU A. K.—*cont.*
Inadequate supply of water to double crop lands, Thanjavur district (C.A.) ... ... ... ... 590
Ministers' Code of Conduct ... ... ... ... 272-275
Professional Colleges, admission ... ... 373-384

SUBBIAH MUDALIAR, THIRU A. R.—
Failure of rains, postponement of kist, etc., in Thanjavur district (C.A.) ... ... ... ... 586

SUBRAMANIAM, THIRU A. L.—
D.S.G. (Final) 1967-68 (G.D.) ... ... ... 308-309

**SUB-WAY.**
**Mambalam Railway station ... ... ... 175-177**

SUNDARA BHARATHI, THIRU SOWDI, S.—
**Budget, 1968-69, Voting :**
**District Administration and Miscellaneous ... 195-196**
Head of State, Ministers and Headquarters staff, State Legislature. ... ... ... ... ... 102-104

SURENDRAN, THIRU M.—
Agriculturists in Pattukottai taluk, Remisison of land revenue and postponement of recovery of loan (C.A.) ... ... ... ... ... 277-278
Budget, 1968-69, Voting :
Head of State, Ministers and Headquarters staff State Legislature ... ... ... ... 74-77
Lorry accident, Kaveripuram, Compensation to victims (C.A.) ... ... ... ... ... 592

SWAMINATHAN, THIRU V.
Drainage Scheme, Tiruchirappalli Town ... ... 417-418
Sub-way, Mambalam Railway station ... ... 175-177

T

TANKS—
**Naganallur tank ... ... ... ... 167-168**

**TAXES—**
**Motor Vehicles Taxation Sub-Inspectors, etc., retrenchment ... ... ... ... ... 401-402**

TRANSPORT—
**Municipalities, Town buses ... ... ... 24-25**

PAGES

## V

VARADARAJAN, THIRU N.—
Budget, 1968–69, Voting:
District Administration and Miscellaneous ... 186

VENKATASWAMY, THIRU B.—
Electricity Loan Bonds, etc., Collection ... 418–421
Rupee a measure rice ... ... ... ... 404–412

VEZHAVENDAN, THIRU K.—
Budget, 1968–69, Voting :
Head of State, Ministers and Headquarters staff, State Legislature ... ... ... 46–51

VINAYAKAM, THIRU K.—
Anti-Hindi agitation, A.I.R. Hindi relays ... 28–29
Bridge across Kodamuratti river widening ... 518–9
Budget, 1968–69, Voting :
District Administration and Miscellaneous ... 186–190
Head of State, Ministers and Headquarters Staff. 39
Denatured spirit, Sale ... ... ... ... ... 426–427
D.S.G. (Final) 1967–68 (G.D.) ... ... ... 290–291
Government Stenographers' pay revision ... 421–423
High Power Committee Economy and Reorganization of Administration, report ... ... ... 265–267
Language Instruction in High Schools ... ... 390–400
Name Board at former Chief Minister's residence, removal ... ... ... ... ... 25–26
N.C.C. Madras Contingent, Prize Won ... ... 513–514
N.C.C. Units, reduction ... ... ... ... 510–513
Opthalmic Hospital, Madras ... ... ... 173–175
Points of Order—
Absence of Speaker from House ... ... 429–431
Appointment of Judge for Judicial enquiry into students—Bus Transport Workers clash 454
Information about Chief Minister's visit to America ... ... ... ... ... ... ... 453–454
Professional Colleges, admission ... ... ... 373–384
Ration Cards in Coimbatore ... ... ... 248–255
Wild life week celebration ... ... ... 531–2



PAGES

## W

WALK-OUTS— 539–553

WATER-SUPPLY—
Frequent Stoppage, Madurai (C.A.) ... ... ... 599–650

WEAVERS—
Ramanathapuram—Tirunelveli—Redressal of Grievances (C.A.) ... ... ... ... ... 576–580

WILD LIFE WEEK—
Celebration ... ... ... ... ... 531–2

WORKERS—
Education Scheme ... ... ... ... 416–417

61442

# LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

## IN MADRAS CITY.

Messrs. ACCOUNT TEST INSTITUTE, Egmore, Madras-8.
THE CITY BOOK CO., Mylapore, Madras-4.
Messrs HIGGINBOTHAMS, PRIVATE LIMITED Madras-2.
Messrs NEW CENTURY BOOK HOUSE (PRIVATE) LIMITED, Madras-2.
Messrs. P. VARADACHARI & CO., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, Madras-5.
Sri S. S. SRINIVASARAGHAVAN, Royapettah Madras-14.
THE EDUCATIONAL AGENCIES, BOOK-SELLERS, Madras-1.
THE UNIVERSAL BOOK HOUSE, MOORE MARKET, Madras-3.
Messrs. RUKMANI CORPORATION, Vepery, Madras-7.
Messrs. MOHAN PATHIPAGAM AND BOOK DEPOT, Madras-5.
Messrs. BOOK CORNER, BOOK-SELLERS, No. 2/4. Mount Road, Madras-2.

## IN MUFASSAL OF MADRAS STATE.

Sri E. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
THE ORIENTAL BOOK HOUSE. Madurai.
Messrs. VIVEKANANDA PRESS, PRINTERS, PUBLISHERS AND BOOK-SELLERS, Madurai.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. NATHAN & CO., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & CO., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. KRISHNASWAMY & CO., Tiruchirappalli.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs. NELLAI PUTHAGA NILAYAM, BOOK-SELLERS, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. ARULDOSS, Villupuram Town, South Arcot district.
Sri V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. VASANTHAM STORES, BOOK-SELLERS, Cross Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. JAGANNATHAN, BOOK-SELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district.
Messrs. A. K. CHANDRIAH CHETTIAR & SONS, Salem.
Messrs. MEENAKSHI PATHIPAGAM, Pudukkottai.
Messrs. K. V NARAYANA IYER & SONS, Dindigul, Madurai district.
Messrs. BALAJI BOOK HOUSE, Vellore, North Arcot district.
Messrs. JAYAKUMARI STORES, Nagercoil, Kanyakumari district.
Messrs. BABY STORES, BOOK-SELLERS, Villupuram South Arcot district
Messrs. DINAMANI STORES, Coimbatore-18.
Messrs. BHARATHI PUTHAGA NILAYAM, PUBLISHERS AND BOOK-SELLERS, 1-B, Town Hall Road, Madurai-1.

## IN OTHER STATES.

Messrs. JANATHA AGENCIES, BOOK-SELLERS, Gudur.
Messrs. JAIN BOOK AGENCY, New Delhi-1.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum
Messrs. FIRMA K. L. MUKHOPADHYAY, Calcutta-12.
Messrs. BOOK LINKS CORPORATION, Narayanaguda, Hyderabad-29
Messrs THE BOOKS SYNDICATE, Hyderabad-1.
Messrs. LABOUR LAW PUBLICATIONS, Hyderabad.

---

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE MADRAS LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

126